INDEX TO
TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

SIXTY-FIRST SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

VOLUME CLXXXVIII (Nos. 1 to 5)

25th, 27th, 29th, 30th March and 2nd April 1982

©
GOVERNMENT OF TAMIL NADU
1983

Legislative Council Department
Fort St. George, Madras-600 009.

PRICE *Rupee* : 1

Y2L.82 N82
H83/87
122068

TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES.

SIXTY-FIRST SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

25th, 27th, 29th, 30th March and 2nd April 1982.

VOLUME CLXXXVIII (Nos. 1 TO 5).

TABLE OF CONTENTS.

Thursday, 25th March 1982.

	Pages.
Personnel of the Government of Tamil Nadu	i—v
Principal Officers of the Tamil Nadu Legislative Council	vi
List of Members of the Tamil Nadu Legislative Council with their Constituencies	vii—ix
1. Questions and Answers	1—21
2. Announcement *re*—	
Decision of the Business Advisory Committee ..	21—22
3. Privilege Issue *re*—	
Statement of the Minister for Health *re* selection to the M.S. (Ortho.) Course during the discussion on the Governor's Address	22—25
4. Call Attention Notices—	
(1) Non-sanction of posts of teachers for months together for Dhanmul Sowcar Jain High School at Tiruvannamalai and the consequent hardship caused to students	26—28
(2) Relay fast by the workers of Arasan Cotton Mills at Tuticorin, protesting against their non-registration	28—29
5. Government Motion—	
Discussion on the Note on Industrial Policy and Programmes	29—152
6. Papers laid on the table of the House	152—154

Pages.

Saturday, 27th March 1982.

1. Questions and Answers .. .. 363—372
2. Announcement *re*—
   Nomination of a Member to the Business Advisory Committee 373
3. Call Attention Notice—
   Compulsion and coercive measures adopted by Government Departments in Tiruchirappalli district in the collection of Small Savings from merchants and traders .. .. 373—375
4. Government Motion—
   Discussion on the Policy Note on Labour in Tamil Nadu .. .. 376—482
5. Papers laid on the table of the House .. .. .. 482—483

Monday, 29th March 1982.

1. Questions and Answers .. .. 579—591
2. Announcements—
   (1) Nomination of Members to the Rules Committee. 592
   (2) Message from the Assembly .. .. .. 592—593
3. Call Attention Notices—
   (1) Death of 15 children in a week in Alathur village in Thirumarugal Panchayat Union and widespread prevalence of chicken-pox in Thanjavur District .. .. 593—595
   (2) Hardship caused to patients due to non-availability of X-Ray film in Stanley Hospital, Madras .. 595—597
4. Government Motion—
   Discussion on the Policy Note on Community Development and Municipal Administration .. .. 597—692

Pages.

Friday, 2nd April 1982—cont.

4. Government Resolution—
   Declaration of area covered by Tiruttani Panchayat Union area as Tiruttani Township 877
5. Government Bills—
   (1) The Tamil Nadu General Sales Tax (Second Amendment) Bill, 1982 (L.A. Bill No. 62 of 1981) .. .. 878—905
   (2) The Tamil Nadu Agricultural Pests and Diseases (Amendment) Bill, 1982 (L.A. Bill No. 65 of 1981) .. .. 905—928
   (3) The Tamil Nadu Urban Land (Ceiling and Regulation) Amendment Bill, 1982 (L.A. Bill No. 66 of 1981) .. .. 929—958
6. Papers laid on the table of the House .. .. .. 950—960

INDEX .. .. 983—1026

PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

GOVERNOR OF TAMIL NADU.

THIRU SADIQ ALI.

Members of the Council of Ministers.

1. THE HON. THIRU M. G. RAMACHANDRAN, Chief Minister, in-charge of Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Planning, Molasses and Archaeology.

2. THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN, Minister for Finance, in-charge of Finance, Legislature, Elections, Food, Fisheries, Backward Classes, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. THE HON. THIRU S. RAMACHANDRAN, Minister for Electricity; in-charge of Electricity, Iron and Steel Control.

4. THE HON. THIRU K. A. KRISHNASWAMY, Minister for Rural Industries, in-charge of Rural Industries including Village, Cottage and Small Industries, Milk, Dairy Development Registration and Stamp Act.

5. THE HON. THIRU S. D. SOMASUNDARAM, Minister for Revenue, in-charge of Revenue, Commercial Taxes, Excise and Census.

6. THE HON. THIRU R. M. VEERAPPAN, Minister for Information and Religious Endowments, in-charge of Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph, Act, Hindu Religious and Charitable Endowments, Forests and Cinchona and Grant of Liquor Permits.

7. THE HON. THIRU C. ARANGANAYAGAM, Minister for Education, in-charge of Education including Technical Education Official Language and Handlooms.

8. THE HON. THIRU K. KALIMUTHU, Minister for Agricul- e, in-charge of Agriculture, Agricultural Refinance, Agricul- l Engineering Wing and Agro-Engineering.

9. THE HON. THIRU C. PONNAIYAN, Minister for Co-operation and Law, in-charge of Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. THE HON. THIRU P. KOLANDAIVELU, Minister for Local Administration, in-charge of Municipal Administration, Panchayat and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. THE HON. THIRU S. RAGHAVANANDAM, Minister for Labour, in-charge of Labour, Housing, Slum-Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. THE HON. DR. H. V. HANDE, Minister for Health, in-charge of Health.

13. THE HON. THIRU K. RAJA MOHAMMED, Minister for Irrigation, in-charge of Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

14. THE HON. THIRU S. MUTHUSWAMY, Minister for Transport, in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. THE HON. THIRU S. THIRUNAVUKKARASU, Minister for Industries, in-charge of Large Scale Industries, Mines and Minerals and Textiles.

16. THE HON. THIRU S. N. RAJENDRAN, Minister for Public Works and Khadi in-charge of Khadi, Prohibition excluding grant of liquor permits and passports, Public Works Department and Establishment matters relating to Public Works Department.

17. THE HON. THIRU M. VIJAYASARATHI, Minister for Harijan Welfare, in-charge of Harijan Welfare, Stationery and Printing, Government Press, Newsprint Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18. THE HON. THIRUMATHI GOMATHI SRINIVASAN Minister for Social Welfare, in-charge of Social Welfare includi[ng] Women and Children Welfare, Animal Husbandry, Beggars Hom[es] Orphanages, Indians Overseas, Refugees and Evacuees Correctional Administration.

தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

தமிழ்நாடு ஆளுநர்

திரு. சாதிக் அலி.

அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) கீழ்க் கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்.—

பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்ட துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், கரும்புச் சக்கை மற்றும் தொல்பொருள் இயல்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்.—

நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, மீன் வளம், பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமசந்திரன் (மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

மின்சாரம் மற்றும் இரும்பு எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (ஊரகத் தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

கிராம, குடிசை சிறுதொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பால், பால் பெருக்குத் திட்டம் ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

வருவாய், வணிக வரிகள், ஆயத்துறை மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல். சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா மற்றும் மது அருந்த அனுமதி வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி மற்றும் ஆட்சிமொழி, கைத்தறி.

8. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு மற்றும் அக்ரோ பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு மற்றும் சட்ட அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள்—அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், கம்பெனிகள் பதிவு, கடன் கொடுத்தல், சீட்டுநிதி இனங்கள் பற்றி சட்டம் இயற்றல் உள்ளிட்ட கடன் நிவாரணம் மற்றும் கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் சம்பந்தப்பட்டவை; பூமிதானம், கிராமதானம் மற்றும் நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

தொழிலாளர், வீட்டுவசதி, குடிசைமாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார்—

மக்கள் நல்வாழ்வுத் துறை.

13. மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வக்ப்.

14. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

பெருந்தொழில்கள், சுரங்கமும்-கனிவளமும் மற்றும் நெசவாளர்கள்.

16. மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் கதர் மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

கதர், மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக) மற்றும் பயண இசைவுச் சீட்டு, பொதுப் பணித்துறை மற்றும் பொதுப்பணித்துறை அலுவல்கள் சம்பந்தமாக.

17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (அரிசன நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

அரிசன நலம், எழுதுபொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத்தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பும் பயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூகநலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூகநலம், கால் நடைப் பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம் மற்றும் சீர்திருத்த நிர்வாகம்.

தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்.

டாக்டர் ம. பொ. சிவஞானம்.

மேலவைத் துணைத் தலைவர்.

புலவர் புலமைப்பித்தன்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்.
2. திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி.
3. திரு. ஏ. ஜே. தாஸ்.
4. திரு. சி. இராமலிங்கம்.

செயலாளர்.

திரு. சி. கு. இராமசாமி, பி. ஏ., பி.எல்.

சார்புச் செயலாளர்.

திரு. த. ப. டெல்லிதுரை, பி.எஸ்ஸி., பி.எல்.

விவாதப் பதிப்பாளர்.

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி. எல்., பி. எல்.

தலைமை நிருபர்

திரு. ச. சுவாமிநாதன்.

Pages

Monday, 29th March 1982—cont.

5. Government Bills—
   (1) The Tamil Nadu Municipal Councils (Appointment of Special Officers) Amendment Bill, 1982 (L.A. Bill No. 18 of 1982) .. .. 693—694
   (2) The Coimbatore City Municipal Corporation (Amendment) Bill, 1982 (L.A. Bill No. 19 of 1982) .. .. 694—695
   (3) The Madras City Municipal Corporation (Amendment) Bill, 1982 (L.A. Bill No. 20 of 1982) .. 695—696
6. Papers laid on the table of the House .. .. .. 696—698

Tuesday, 30th March 1982

1. Questions and Answers .. .. 723—744
2. Announcements—
   (1) Message from the Governor 745
   (2) Message from the Assembly 745
   (3) Nomination of Members to the Committee on Government Assurances 745
   (4) Nomination of Members to the Committee of Privileges 747
   (5) Nomination of Members to the House Committee. 747
3. Call Attention Notices—
   (1) Stoppage of supply of mid-day meals to the children of the Panchayat Union School at Sanarpatti and non-payment of subsidy for mid-day meals to the Aided Schools in Aruppukkottai Municipal area .. .. 748—749
   (2) Attack on Adi Dravidar in Konalam village in North Arcot District over the issue of burial of corpse of an Adi Dravidar woman .. .. 750—752

Pages.

Tuesday, 30th March 1982—cont.

4. Government Motions—
   (1) Nomination of Members to serve on the Public Accounts Committee 753
   (2) Nomination of 5 Members to serve on the Committee on Estimates 753
   (3) Nomination of 5 Members to serve on the Committee on Delegated Legislation .. .. 753—754
   (4) Nomination of 5 Members to serve on the Committee on Public Undertakings 754
5. Presentation of the Thirty-sixth Report of the Committee on Government Assurances 754
6. Government Bills—
   (1) The Tamil Nadu Appropriation Bill, 1982 (L.A. Bill No. 22 of 1982) 755
   (2) The Tamil Nadu Appropriation (No. 2) Bill, 1982 (L.A. Bill No. 26 of 1982) .. .. .. 756—836
7. Papers laid on the table of the House 837

Friday, 2nd April 1982.

1. Questions and Answers .. .. 849—873
2. Announcements—
   (1) Message from the Assembly .. .. .. 873—874
   (2) Message from the Governor 873
3. Call Attention Notices—
   (1) Death of 3 persons and injuries to several persons due to bus accident at Teynampet near S.I.E.T. College on 18th March 1982 .. .. .. 874—875
   (2) Slaughter of cows and bulls in Kalavur near Madapalli in Tirupathur Panchayat Union, North Arcot District and transport to adjoining States. 875—877

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும். (1)	தொகுதி. (2)
அருணாசலம், திரு. க. ..	நியமனம்.
ஆறுமுகம், திரு. சோ. ..	மாநிலச் சட்டமன்றப் பேரவை
3 ஆற்காடு வீராசாமி, திரு. நா.	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
4 ஆனந்தம், திரு. வி.வி.வி.	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
5 இராகவானந்தம், திரு. எஸ். (தொழிலாளர் நல அமைச்சர்).	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
6 இராசா முகமது, திரு. கா. (பாசனத்துறை அமைச்சர்)	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
7 இராமமூர்த்தி, திரு. க.	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
8 இராமலிங்கம், திரு. சி.	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
9 இராதா, திரு. எஸ். ஆர்.	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
10 கண்ணப்பன், திரு. காடுவெட்டி.	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
11 சங்கரலிங்கம், திரு. ம.	திருநெல்வேலி-கன்னியாகுமரி ஆசிரியர்கள் தொகுதி.
12 சண்முகம், திரு. ப. உ.	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
13 சந்தோஷம், திரு. த.	தமிழ்நாடு தெற்கு பட்டதாரிகள் தொகுதி.
14 சனார்த்தனம், டாக்டர் இரா.	தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி.
15 சிவஞானம், டாக்டர் ம.பொ. (மாண்புமிகு தலைவர்).	நியமனம்.
16 சித்தாபதி, திரு. ஆர். டி.	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
17 திருமதி சீதாதேவி கிருஷ்ணசாமி.	நியமனம்.
18 சுவாமிநாதன், திரு. ஜி.	தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி.
19 தாமஸ், திரு. பா.ரா.	மதுரை—இராமநாதபுரம் ஆசிரியர்கள் தொகுதி.
20 தாமோதரன், திரு. ஏ. ஆர்.	தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி.
21 தாரா செரியன், திருமதி.	நியமனம்.
22 தாஸ், திரு. ஏ. ஜே.	மாநிலச் சட்டமன்றப் பேரவை.

	தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும்.	தொகுதி
	(1)	(2)
23	துரைசாமி, திரு. ஓ. எஸ்.	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
24	நல்லசிவன், திரு. ஆ. ..	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
25	நீலநாராயணன், திரு. ..	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
26	புலமைப்பித்தன், புலவர் (துணைத் தலைவர்)	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
27	மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி, திருமதி.	நியமனம்.
28	மாணிக்கம், திரு. ப, ..	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
29	மியாகான், திரு. ஜே. எம்.	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
30	மீனாட்சிசுந்தரம், திரு. க.	தஞ்சாவூர்—திருச்சிராப்பள்ளி—புதுக்கோட்டை ஆசிரியர்கள் தொகுதி.
31	முத்து, திரு. எஸ். ..	மாநிலச் சட்டமன்றப் பேரவை
32	முத்துசாமி, திரு. செ. ..	சேலம்—தர்மபுரி—கோயம்புத்தூர்—நீலகிரி ஆசிரியர்கள் தொகுதி.
33	முத்தையா செட்டியார், டாக்டர் எம்.ஏ.	நியமனம்.
34	முனுசாமி, திரு. பி. ..	நியமனம்.
35	லீலாவதி, செல்வி ஆ.	சென்னை—செங்கற்பட்டு ஆசிரியர்கள் தொகுதி.
36	லெட்சுமிகாந்தன், திரு. சி. ரா.	வடஆற்காடு-தென்ஆற்காடு ஆசிரியர்கள் தொகுதி.
37	வசந்த பை, திரு. ஜி.	சென்னை மாவட்டப் பட்டதாரிகள் தொகுதி.
38	வள்ளிமுத்து, திரு. ஈ.வெ.ஆ.	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
39	வீரப்பன், திரு. இராம. (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்).	மாநிலச் சட்டமன்றப் பேரவை,
40	வெங்கடேசன், திரு. ஈ. எஸ்.	நியமனம்.

	தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும்.	தொகுதி.
	(1)	(2)
41	ஹண்டே, டாக்டர் எச்.வி. (மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்).	சென்னை மாவட்டப் பட்டதாரிகள் தொகுதி
42	ஜேப்பியார், திரு. ..	மாநிலச் சட்டமன்றப்பேரவை,
43	வெற்றிடம் ..	தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி.
44	௸	௸
45	௸ ..	சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
46	௸ ..	௸
47	௸ ..	இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி,
48	௸ ..	௸
49	௸ ..	செங்கற்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி.
50	௸ ..	சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி.
51	௸ ..	கோயம்புத்தூர்—நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
52	௸ ..	௸
53	௸ ..	மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி.
54	௸ ..	௸
55	௸ ..	திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
56	௸ ..	௸
57	௸ ..	வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி.
58	௸ ..	௸
59	௸ ..	தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி.
60	௸ ..	௸
61	௸ ..	திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
62	௸ ..	௸
63	௸ ..	கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.

தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

வியாழக்கிழமை, 1982 மார்ச் 25.

பங்குனி 12, துன்மதி, திருவள்ளுவராண்டு—2013.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

சாலைகளின் பெயர்ப் பலகைகள்.

@ * 177 வினா—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1979 ஏப்ரல் மாதத்தில், சென்னையில் உள்ள சாலைகளின் பெயர்ப் பலகைகளில் இருக்கும் சாதிப் பெயர்களை தார்பூசி அழிக்கும் போராட்டத்தில் ஈடுபட்டதற்காக, கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

(இ) இப்போராட்டக் குழுவினர் அரசிடம் இதுபற்றி முன்னரே முறையீடு செய்திருந்தார்கள் என்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு முதலமைச்சர் சார்பில்) : (அ) சென்னை மாவட்ட சோஷலிஸ்ட் பேரவையின் அமைப்பாளரான திரு. தில்லை. என். பழனி மட்டும் சென்னை கீழ்ப்பாக்கம் காவல் நிலையத்தாரால் கைது செய்யப்பட்டார்.

(இ) அரசுக்கு முறையீடு எதுவும் வரவில்லை.

@ 20—3—1982 ஆம் நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப் பட்டது.

திரு. ம. சங்கரலிங்கம் : சாலைகளுக்குப் பெயர் வைப்பது என்பது அரசினுடைய பொறுப்பு அல்லது அந்தந்த இடங்களில் இருக்கக்கூடிய ஊராட்சி ஒன்றியத்தினுடைய பொறுப்பு. ஜாதியற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்ற தத்துவத்தை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். இந்த வகையில் ஜாதிப் பெயரில் சாலைகளின் பெயர் இருந்தால், ஜாதியற்ற பெயராக சாலையின் பெயர் இருக்க இதுவரை இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? அப்படிச் செய்வது நாளாவட்டத்தில் நாட்டில் ஜாதியற்ற ஒரு சமுதாயம் உருவாக உறுதுணை செய்வதாகும். இதுகுறித்து அரசின் கொள்கை என்ன ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதுபோல், தெருக்களுக்கும், சாலைகளுக்கும் இருக்கக்கூடிய ஜாதிப் பெயர்களை நீக்க வேண்டுமென்று இந்த அரசு உத்தரவிட்டிருக்கிறது. அப்படி ஜாதிப் பெயரை நீக்க வேண்டுமென்று நடவடிக்கை எடுக்கும்போது, சில நேரங்களில் தவறான, அபத்தமான அர்த்தங்களில் சாலைகளின் அல்லது தெருக்களின் பெயர் வந்துவிடுகிறது. அந்த வகையில் வெளி இடங்களைப் பொறுத்தவரையில், இதற்கான அதிகாரத்தை மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு வழங்கியிருக்கிறோம். அவர்கள் அப்படி ஜாதிப் பெயரை நீக்கும்போது, ஏதாவது குழப்பங்கள் அல்லது அபத்தமான அர்த்தங்கள் ஆகிவிடுவது போன்ற சம்பவங்கள் ஏற்பட்டால், அரசை அணுகி ஒரு முடிவுக்கு வரலாம். சென்னையைப் பொறுத்தவரையில், சென்னை மாநகராட்சி இதுகுறித்து முடிவெடுக்கலாம் என்று கருதி, அந்த வகையில் உத்தரவு போட்டிருக்கிறோம். இங்கே தனிப்பட்ட ஒருவர் ஜாதிப் பெயர்களை அழிக்கிறேன் என்று சொன்னால், சட்டத்தை அவர்கள் தன் கையில் எடுத்துக்கொள்ள இந்த அரசு அனுமதிக்காது. அந்த வகையில் அவர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஜாதிப் பெயர்களை ஆரம்பக் கட்டமாக நீக்குவது என்பது நல்லதுதான். ‘ ஜாதிகள் இல்லையடி பாப்பா ’ என்று குழந்தைகளுக்கே மகாகவி பாரதியார் சொல்லியிருக்கிறார் என்றால், அதையொட்டி இப்படிப்பட்ட நடவடிக்கையை எடுப்பது நல்லது.

திரு. ம. சங்கரலிங்கம் : இப்படி சாலைகளின், தெருக்களின், ஊர்களின் பெயர்களிலுள்ள ஜாதிப் பெயரை எடுத்து விடும்போது அல்லது மாற்றும்போது அனர்த்தங்கள் ஏற்படுவதை நான் உணர்கிறேன். தனி நபர்களுடைய பெய

ருக்குப் பிறகுகூட, ஜாதிப் பெயர் இருக்கும். அப்படிப்பட்ட நிலையில் ஜாதிப் பெயரை மட்டும் எடுக்கும்போது, விகற்பங்கள் ஏற்படும். அந்த நிலையை மாற்ற—அத்தகைய நிலை ஏற்படாமல் இருக்க அந்தந்தப் பகுதியில் பொறுப்பில் இருப்பவர்களே அதை மாற்ற—அந்தந்த வட்டார மக்களுடைய கருத்தை அறிந்து அவர்களுடைய உணர்வை மதித்து அந்த அடிப்படையில் அவர்களுடைய ஒப்புதலோடு இப்படி ஜாதியின் பெயரை அகற்ற இந்த அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : அதைத்தான் இந்த அரசும் சொல்லியுள்ளது. சென்னையைப் பொறுத்தவரையில், மாநகராட்சி கமிஷனர் இதற்கான நடவடிக்கையை எடுப்பதற்கு முன்பு, அந்தப் பகுதியிலுள்ள மக்களின் கருத்தை அறிய வேண்டும். அதிலே ஏதாவது குழப்பம் ஏற்படுவதாகக் கருதினால், உடனே அரசை அணுகி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறோம்.

THIRU A. R. DAMODARAN : Sir, in dealing with caste names, may I know whether in the name of Subash Chandra Bose Road, the word ‘Bose’ has been removed, leaving the name as ‘Subash Chandra Road’ ? In deciding such matters, such odd things are also happening.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : சில நேரங்களில் தேசியத் தலைவர்களுடைய பெயரில்கூட அப்படி தொடர்ந்து வந்து விடுகிறது. அந்தத் தவறு நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டு இப்போது மீண்டும் சுபாஷ் ரோடு என்று மாற்றப்பட்டிருக்கிறது.

டாக்டர் இரா. சனார்த்தனம் : ஊர்களின் பெயர்களில்கூட ஜாதிப் பெயர் இருக்கிறது. அதையும் அரசு நீக்குமா ? ஜாதியை ஒழிக்க இந்த அரசு என்ன செய்யப் போகிறது ? ‘ குலத் தாழ்ச்சி சொலல் பாவம் ’ என்று பாரதியார் சொல்லியிருக்கிறார். அந்த வகையில் ஜாதிப் பெயரை ஒழிக்க இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : எதை எடுத்தாலும், எதைச் செய்தாலும், மக்களுக்கு ஆபத்து இல்லாமல் எடுக்க வேண்டும், செய்ய வேண்டும்.

தெருப் பெயரில், சாலைப் பெயரில், ஊர் பெயரில் ஜாதிப் பெயரே கூடாது என்று சொன்னால், 'ஆட்களே கூடாது' என்று சொல்லக்கூடிய நிலை வந்து விடக் கூடாது. சிலர் சம்பிரதாயத்திற்காக அப்படி வைத்திருக்கிறார்கள். ஆனாலும் பாரதியார் அவர்கள் முதல் அடியில் 'ஜாதிகள் இல்லையடி பாப்பா' என்று சொல்லிவிட்டு தொடர்ந்து 'குல தாழ்ச்சி சொலல் பாவம்' என்று அடுத்த ஸ்டெப்பில் சொல்லியிருப்பதற்கிணங்க, முதல்படியாக நாம் தெருக்கள், சாலைகள் போன்றவற்றின் பெயரில் இருக்கக்கூடிய ஜாதிப் பெயரை நீக்க உத்தரவிட்டிருக்கிறோம். என்றாலும், இரண்டு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பழக்கமாகிவிட்ட உணர்வுடன் கூடிய ஒன்றாக அது இருக்கிறபடியால்தான், இப்படிப்பட்ட நிலை இருக்கக்கூடாது என்று மகாகவி பாரதியார் பாடியிருக்கிறார். அந்த வகையில்தான் குறைந்தபட்ச நடவடிக்கையாக இப்போது நாம் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறோம். ஆனால் இதில் மிகவும் எச்சரிக்கையாக அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. ம. சங்கரலிங்கம் : இப்போது ஜாதிப் பெயருடன் இருக்கக்கூடிய தெரு அல்லது சாலையின் பெயரை மாற்றம் செய்ய சங்கடம் இருக்குமேயானால், புதிதாகப் பெயரிடும்போது ஜாதியற்ற பெயராகப் போடுவதற்கு தீவிரமாக இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : நிச்சயமாக புதிதாகப் பெயரைச் சூட்டுகிறபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறபடி செய்யப்படும். ஆனாலும் சில நேரங்களில் பழைய தலைவர்களுடைய பெயரை அவர்களுடைய சேவை, தியாகம் காரணமாக பெருந்தகளுக்கு அல்லது இன்ஸ்டிட்யூஷனுக்கு வைக்கும்போது, அந்தப் பெயரை வைத்தால்தான் சரியான மரியாதை வரும் என்கிற முறையில் பிரச்சினைகள் வரலாம். ஆனால் எதற்கும் விதிவிலக்கு உண்டு என்பதையும் நாம் கவனத்தில் கொண்டு செயல்பட வேண்டும்.

Attack on Harijans

@ * 178. Q.—Thiru D. SANTOSHAM : Will the Hon. the Chief Minister be pleased to state :

(a) whether it is a fact that, in the third week of June 1980, the Harijans of Keelacheluvavoor in Mudukulathur Taluk, Ramanathapuram District, were beaten up by some caste Hindus;

@ 20—3—1982 ஆம் நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப்போடப்பட்டது.

(b) whether it is also a fact that the Christian School, where some of the Harijans had taken shelter the previous day, was also damaged by them;

(c) whether the Teacher of the School was also beaten for the sole reason that he had given shelter to some Harijans in the School;

(d) whether the tiles of the C.S.I. Church were also broken during the rampage; and

(e) if so, whether an enquiry will be held and appropriate action taken against the miscreants?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு முதலமைச்சர் சார்பில்) : (அ) இல்லை.

(இ) இல்லை.

(உ) இல்லை.

(எ) இல்லை.

(ஐ) விசாரணை அவசியமில்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம் : கலவரங்கள் வந்த பிறகு, குழுக்கள் அமைக்கப்படுவதைவிட ஜாதிக் கலவரங்கள் வருவதற்கு முன்பே, ஏற்கெனவே இப்படிப்பட்ட கலவரங்கள் வந்த இடங்களையெல்லாம் தெரிந்து வைத்துக் கொண்டு, அதன் அடிப்படையில் அப்படிப்பட்ட இடங்களில் எல்லாம் மக்கள் குழுக்களை அமைக்க இந்த அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : ஜாதிக் கலவரங்கள் வரும் என்று முன்கூட்டியே நினைப்பதுகூட ஒரு தவறாக முடிந்து விடும். மக்கள் குழுக்கள் அமைப்பது என்று சொன்ன உடனேயே, அங்குள்ள இரண்டு பிரிவுகளுக்கு உள்ளே ஜாதி அல்லது மதக் குழப்பம் என்கிற அடிப்படையிலேதான் அது அமைகிறது. 98 சதவிகித இடங்களில் இரண்டு பேருக்குள் ஏற்படுகிற தகராறு

தான் பிறகு இப்படி இன, ஜாதி, மதக் கலவரங்களாக மாறிவிடுகின்றன. இப்படிப்பட்ட நேரத்தில் அங்குள்ள தலைவர்களையெல்லாம் அழைத்துப் பேசி, 'பீஸ் கமிட்டி' என்கிற வகையில் போட்டு, கலவரத்தை அடக்க நடவடிக்கை எடுப்பது என்பதுதான் பொருத்தமான ஒன்று. ஒவ்வொரு இடத்திலும் இப்படி மக்கள் குழுக்களைப் போட்டால், அந்த இடங்களில் கலவரமே வரவில்லை என்று கருதி, குழுவேகூட கலவரத்தை உண்டாக்கலாம். எனவே எதிலும் நாம் எச்சரிக்கையாக இருந்து செயல்பட வேண்டும்.

தலைஞாயிறை துணை வட்டமாகப் பிரித்தல்.

@ *வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) தஞ்சாவூர் மாவட்டம், தலைஞாயிறை துணை வட்டமாகப் பிரிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது எப்போது செயல்படத் துவங்கும்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) மற்றும் (இ) இல்லை.

சிறப்பு நிலை.

* 180 வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம்

திரு. பி. ரா. லெட்சுமிகாந்தன்

செல்வி ஆ. லீலாவதி

மற்றும்

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்:

@ 20—3—1982 ஆம் நாள் வினாப்பட்டியலிருந்து ஒத்திப்போடப்பட்டது.

(அ) மூன்றாவது தமிழ் நாடு ஊதியக் குழுவின் பரிந்துரையின்படி ஆசிரியர்கட்கு அறிவிக்கப்பட்டுள்ள சிறப்பு நிலை (specialgrade) என்பது அவர்கள் பணியில் சேர்ந்த தேதியிலிருந்து இருபது ஆண்டு பணிக்கால அடிப்படையில் தரப்பட வேண்டுமென ஆசிரியர் சங்கங்களிடமிருந்து அரசுக்குக் கோரிக்கைகள் வந்துள்ளன என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அவற்றின் மீது அரசு எடுத்துள்ள முடிவு என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (இ) ஆம். ஆசிரியர் சங்கங்களின் கோரிக்கைகளின் அடிப்படையில் அரசாணை நிலை எண். 1759 கல்வி, நாள் 11—8—1981-ல் தேர்வு நிலையில் 10 ஆண்டு பணிக்காலம் முடிக்கப் பெறாமலிருந்தாலும், 20 ஆண்டு கால பணியின் அடிப்படையில் துவக்க நிலை, இடைநிலை மற்றும் அதே ஊதிய விகிதத்திலுள்ள எல்லா வகை ஆசிரியர்கட்கும் 1—6—1981 முதல் சிறப்பு நிலை வழங்கப்பட்டுள்ளது.

இச்சலுகையினை தங்கட்கும் விஸ்தரிக்கக் கோரி பட்டதாரி ஆசிரியர் கழகம் விடுத்துள்ள வேண்டுகோளின்படி பி.டி. ஆசிரியர்களுக்கும் அதே ஊதிய விகிதத்திலுள்ள பிற ஆசிரியர்களுக்கும் மேற்படி சலுகையை வழங்குவது குறித்து பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துரு கிடைக்கப்பெற்று அந்த அடிப்படையில் தான் அந்தக் கருத்துரு ஏற்கப்பட்டிருக்கிறது.

திரு. பி. ரா. லெட்சுமிகாந்தன்: மூன்றாவது ஊதியக் குழு இவர்களுக்குச் சிறப்பு நிலை தர வேண்டுமென்று சிபாரிசு செய்திருந்தது. மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரையை ஏற்று, 1978 ஆம் ஆண்டு முதல் இந்தப் பரிந்துரையை அரசு அமுல்படுத்தவில்லை. மூன்று ஆண்டுகள் தாமதப்படுத்தப் பட்டிருக்கிறது. 1978 ஆம் ஆண்டிலிருந்து Fixation செய்து அவர்களுக்கு இதை வழங்கியிருக்க வேண்டும். 1—10—1978 முதல் கொள்கை ரீதியாக அரசு இதை ஏற்று அறிவிக்க வேண்டும். குறைந்தபட்சம் பணப் பலன் நடப்பு ஆண்டிலிருந்தோ அல்லது 1—6—1981-லிருந்தோ அவர்கள் பெறும் வகையில் இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அப்படிப்பட்ட யோசனை இல்லை.

(முற்பகல் 9-40)

திரு. செ. முத்துசாமி : உயர் நிலைப் பள்ளி மற்றும் மேல் நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் தலைமையாசிரியர்களுக்கு இத்தகைய சிறப்பு நிலை இதுவரை வழங்கப்படாமல் இருக்கிறது என்பதையும் நடு நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் சிறப்பு நிலை வழங்கப்படுவதில்லை என்பதையும் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அவர்களுக்கும் சிறப்பு நிலை வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன். அதோடு சிறப்பு நிலை வழங்கப்படுவதன் மூலமாக ஆசிரியர்களுக்கு எந்தவிதமான பணப் பயனும் கிடைப்பதில்லை. எனவே சிறப்பு நிலை அல்லது தேர்வு நிலை வழங்கப்படும்போது, அவர்களுக்கு ஒரு இன்கிரிமெண்ட்டாவது கொடுத்து 'காம்பன்செட்' செய்ய வேண்டும் என்று நிதித் துறை ஆணையிட்டிருக்கிறது. அப்படியிருந்தும், இது யாருக்கும் அளிக்கப்படுவதில்லை என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, சிறப்பு நிலை அல்லது தேர்வு நிலை வழங்கும்போது, ஆசிரியர்களுக்குக் கண்டிப்பாக ஒரு ஊதிய உயர்வு அளிக்கப்பட வேண்டும் என்று ஆாணை வெளியிடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : எல்லாவற்றையும் ஆராய்ந்து பரிசிலித்த பிறகே இந்த உத்தரவு போடப்பட்டிருக்கிறது.

திரு. பா. ரா. தாமஸ் : ஏற்கெனவே 1—1—1971 முதல் சதவித அடிப்படையில் தேர்வு நிலை வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் 1—4—1973, 1—4—1974 மற்றும் 1—4—1975 முதல் 10 ஆண்டு பணிக்கால அடிப்படையில் தேர்வு நிலை வழங்கப்பட்டு வருகின்றது. பத்து ஆண்டுத் தேர்வு நிலை அனுபவம் இருந்தால்தான், சிறப்புத் தேர்வு நிலை தரப்பட வேண்டும் என்று ஊதியக் குழு சிபாரிசு செய்தும், மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் அதை மாற்றி 1—6—1981 முதல் 20 ஆண்டுக் காலம் பணியில் இருக்கும் இடைநிலை மற்றும் இளநிலை ஆசிரியர்களுக்குச் சிறப்பு நிலை வழங்கப்பட்டிருக்கிறது. அதே அடிப்படையில் அனைத்துத் தரப்பு ஆசிரியர்களுக்கும், பட்டதாரி ஆசிரியர்களுக்கும் 20 ஆண்டுக் காலம் பணி முடித்திருந்தால், சிறப்பு நிலை வழங்குவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படிப்பட்ட யோசனை இல்லை.

தனியார் உயர் நிலைப் பள்ளிகளின் தற்காலிக ஊழியர்கள்.

@ * 181 வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தனியார் உயர் நிலைப் பள்ளிகளில் பணி புரியும் தற்காலிக ஊழியர்களுக்கு எந்த விடுப்பு சலுகைகளும் தரப்படுவதில்லை என்பது உண்மையா ?

(இ) அவர்களுக்கு விடுப்பு வசதிகள் தரப்பட வேண்டும் என தமிழ்நாடு மானியம் பெறும் பள்ளிகளின் ஊழியர் சங்கத்திடமிருந்து கோரிக்கை 1980 பிப்ரவரி மாதத்தில் அரசுக்கு, வந்துள்ளதா ?

(உ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) தனியார் உயர் நிலைப் பள்ளிகளில் பணி புரியும் தற்காலிக ஊழியர்கட்கு ஈட்டிய விடுப்பு கிடையாது. தற்செயல் விடுப்பு மட்டும் ஆண்டுக்கு 20 நாட்கள் உண்டு. அதுவும் அவர்கள் பணியாற்றுவதற்கு தக்கபடி (அதாவது எத்தனை நாட்கள் பணியாற்றுகிறார்களோ அதற்குத் தக்கபடி) தற்செயல் விடுப்பு அளிக்கப்படுகிறது.

(இ) இல்லை.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தற்போது தனியார் பள்ளிகளில் பணியாற்றும் தற்காலிக ஊழியர்களுக்கு ஈட்டிய விடுப்பு வழங்கப்படுவதில்லை. ஒரு ஊழியர் எத்தனை நாட்களுக்குப் பணியாற்றுகிறாரோ அத்தனை நாட்களுக்கு உரிய விடுப்பை ஈட்டுவதால், அதற்கு ஈட்டிய விடுப்பு என்று பெயர். எனவே தற்காலிக ஊழியர்களுக்கும் வேலை செய்கிற நாட்களுக்கு ஏற்ற அடிப்படையில் ஈட்டிய விடுப்பு வசதியை வழங்குவது குறித்து அரசு பரிசிலனை செய்ய ஏன் முன்வரக்கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அவர்கள் தற்காலிக ஊழியர்களாக இருக்கிற காரணத்தால்தான், அவர்களுக்கு வழங்காமல் இருக்கிறோம். தற்

20-3-82 ஆம் நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப் பட்டது.

காலிக ஊழியர்களாக அவர்கள் ஏன் இருக்கிறார்கள் என்பதை ஆராய்ந்து பார்த்து, அவர்களை நிரந்தரமாக்கும் முயற்சிகளில் நாம் ஈடுபடலாமேத் தவிர, அல்லது அவர்களை நிரந்தரமாக்க வாய்ப்பிருக்கிறதா என்று பார்த்து அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாமேத் தவிர, தற்காலிக ஊழியர்களுக்கும் ஈட்டிய விடுப்பு வசதியைத் தருவது என்று ஆரம்பித்தால், அது இறுதியில் பல் வேறு பிரச்சினைகளை உருவாக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பா. ரா. தாமஸ் : சமீபத்தில் நான்-டீச்சிங் கன்டிஞ்ஜெண்ட் ஸ்டாஃப்-களின் பதவிகளை வரன்முறைப்படுத்தி அரசு அவர்களுக்கும் விடுப்புச் சலுகைகளை வழங்கியிருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் பகுதிநேர கன்டின்ஜெண்ட் ஸ்டாஃப்-களைப் பொறுத்த வரையில், அவர்களுக்கு எந்த விதமான விடுப்பு வசதியும் இல்லாத நிலை இருக்கிறது. எனவே அவர்களுக்கும் இந்தச் சலுகையை அளிக்க அமைச்சர் அவர்கள் ஆணையிடுவாரா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பகுதிநேர ஆசிரியர்களுக்கு அல்லது பகுதிநேர ஊழியர்களுக்கு என்னென்ன சலுகைகள் தரப்பட வேண்டுமோ அவைகளைத்தான் அவர்களுக்குத் தர முடியும்.

பள்ளி ஆசிரியர்கள் பொது மாறுதல் குழு.

@ * 182 வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்

மற்றும்

செல்வி ஆ. லீலாவதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம் :

(அ) அரசுப் பள்ளி ஆசிரியர்கள் பொது மாறுதல் குழுவில், ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளை சேர்க்க வேண்டும் என்று, பட்டதாரி ஆசிரியர் சங்கத்திடமிருந்து 1979 மார்ச் மாதத்தில் கோரிக்கை ஏதும் அரசுக்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

@ 20—3—1982 ஆம் நாள் வினாப்பட்டியலிருந்து ஒத்திப்போடப்பட்டது.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : அரசுப் பள்ளியாசிரியர்களுக்கான பொது மாறுதல் குழுவில் இப்போது அதிகாரிகள் மட்டுமே இருக்கிறார்கள். அதிகாரிகள் மட்டும் சேர்ந்து பொது மாறுதலைக் கவனிக்கும்போது, நடைமுறையில் பல ஒழுங்கீனங்கள் நடக்க வாய்ப்புகள் ஏற்படுகின்றன. அல்லது தவறுகள் நடக்க வாய்ப்புகள் ஏற்படுகின்றன. அது மட்டுமல்லாமல், மாறுதலுக்காகக் கையூட்டு பெறுகிற நிலைகூட வருகிறது. அவை குறித்து அரசாங்கத்திற்கும் பல புகார்கள் வந்திருக்கும். இத்தகைய குறைபாடுகளைக் களைய அந்த மாறுதல் குழுவில் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் இடம் பெற்றால், அது ஓரளவுக்கு உதவியாக இருக்கும். அதன் மூலம் பல முறைகேடுகளும், ஒழுங்கீனங்களும், லஞ்சக் குற்றச்சாட்டுகளும் குறைவதற்கான வாய்ப்பு உண்டு என்ற அடிப்படையில் மாறுதல் குழுக்களின் ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகளில் ஒரு சிலரைப் போட அரசு ஆணை பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கையூட்டுப் பெறுவது என்பது தனிப்பட்டவர்கள் செய்கிற குற்றங்கள். அது எல்லாப் பகுதிகளிலும் இருக்கிறது. அதைக் களைவதற்கான நடவடிக்கைகளை நாம் எடுக்க வேண்டுமே தவிர, அதற்காக மாறுதல் குழுவில் ஆசிரியர்கள் சங்கப் பிரதிநிதிகளைப் போட்டுவிடுவது சரியாகாது. அதன் காரணமாக கையூட்டு வாங்குவது நின்றுவிடாது. அவர்களே அந்தத் தவறைச் செய்ய ஆரம்பித்தால், அதற்குப் பாதுகாப்பு இருக்காது. எனவே இதை நல்ல யோசனையாகக் கருத முடியாது. அது மட்டுமல்லாமல் ஆசிரியர்களுக்கான மாறுதலைச் செய்வது, அல்லது அவர்களுக்குப் பதவி உயர்வு கொடுப்பது, என்பவையெல்லாம் அதிகாரிகள் அதிகாரங்களாகும். அத்தகைய அதிகாரங்களை அவர்கள் மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுகிற நிலை வரும்போது, விரும்பத் தகாத நிலைமைகள் ஏற்படும். இதுதான் கடந்த கால அனுபவமாக இருக்கிறது. இப்போது இருக்கிற நிலைமைகளில் தவறு ஏற்பட்டால். உரிய நபர்களின் கவனத்திற்கு அதைக் கொண்டு வந்து அந்தத் தவறுகளைத் தீர்ப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமே தவிர, வேறு வகையில் மாற்றம் கொண்டுவர வேண்டுமென்று முயற்சித்தால், அதன் காரணமாகச் சிறிய தவறுகளே கூட பெரிய தவறுகளாக ஆகும் வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கருத்தை நான் வரவேற்கிறேன். ஆனால் தற்போது மாறுதல் சம்பந்தமாக அதிகாரிகளுக்குக் கொடுக்கப்படுகிற குறிப்புகள் தெளிவாக இல்லை. அதில் உள்ள நிபந்தனைகள் தெளிவாகவும் விளக்கமாகவும் இல்லாததன் காரணமாக, அதிகாரிகள் தங்களுக்குச் சாதகமான முறையில் பயன்படுத்திக்கொள்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில், அரசு ஆசிரியர்கள் மாறுதல் பெற வேண்டுமென்றால், மிகக் கடுமையான நிபந்தனைகள் அடங்கிய திட்டவட்டமான தெளிவான குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. எனவே அந்த விதிமுறைகள் பல ஆண்டுகளாகச் சரியாகப் பின்பற்றப்படுவதால், கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அதிகமான புகார்கள் வருவதில்லை. அத்தகைய நடைமுறையை ஏன் மற்ற எல்லா மாவட்டங்களுக்கும் கொண்டு வரக்கூடாது? எனவே அரசு இந்தக் கருத்தைப் பரிசிலனை செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதே நடைமுறையைத்தான் மற்ற மாவட்டங்களிலும் நாம் பின்பற்றுகிறோம். எந்த மாவட்டத்திற்குப் போக வேண்டுமென்று கேட்கிறார்களோ அந்த மாவட்டத்தின் பட்டியலை வைத்துக்கொண்டு, சீனியாரிட்டி பிரகாரம் போடுகிற முறைதான் இருக்கிறது. அதில் ஏதாவது விதி விலக்கு போன்ற நிலைமைகள் ஏற்பட்டிருக்கலாம். அதற்காக அப்படிப்பட்ட நடைமுறைகளே இல்லை என்று சொல்லிவிட முடியாது. நான் குறிப்பிட விரும்புவது இதுதான். இதற்கு முன்னால் பொது மாற்றங்கள் என்று அரசின் சார்பில் சொல்லப்பட்டதற்கும் இப்போதுள்ள முறைக்கும் வித்தியாசம் இருக்கிறது. முன்னால் இருந்ததைப் போன்றதல்ல இப்போது இருப்பது. இன்றைக்கு ஏற்படுகிற பொது மாற்றங்கள் என்பவைகூட ஆசிரியர்களாகக் கேட்பவைகள்தான். அல்லது அவர்களை புரமோஷன் மூலம் மாற்றுகிற நிலைமை ஏற்படுகிறது. அல்லது சில ஆசிரியர்கள் இங்கே இருப்பது அந்த ஊருக்கு நல்லதல்ல அல்லது அந்தப் பள்ளிக்கு நல்லதல்ல என்று குறிப்பிட்ட புகார்களைச் சுமத்தாவிட்டாலும் கூட, பொதுமக்களிடமிருந்து புகார்கள் வரும்போது, அப்படிப்பட்டவர்கள் அங்கே இருப்பது பள்ளிக்கு நல்லதல்ல என்ற கருத்தில் சில நேரங்களில் மாற்றங்கள் செய்யப்படுகின்றன. இதற்கு முன்பெல்லாம் பொது மாறுதல் என்றால், 3 வருஷம் ஆன எல்லா ஆசிரியர்களைப் பொறுத்தவரை, யாரை வேண்டுமானாலும் எங்கே வேண்டுமானாலும் மாற்றுவது என்ற

நிலைமை இருந்தது. ஜூன், ஜூலை மாதம் வந்தால், ஒவ்வொரு ஆசிரியரும் தனக்கு மாறுதல் வந்துவிடுமோ என்ற பயத்தில் இருக்க வேண்டிய நிலைமை இருந்தது. ஆனால் நாம் கூடுமான வரை இதைக் குறைத்து அவர்களுக்குப் பாதுகாப்பை அளித்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

செல்வி ஆ. லீலாவதி : தலைமையாசிரியர்கள் சில ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், அவர்கள் இங்கே இருப்பது நல்லதல்ல என்று புகார் கூறும்போது, அத்தகைய ஆசிரியர்கள் மீது அதிகாரிகள் விசாரணையை நடத்தி மாறுதலுக்கான உத்தரவைப் பிறப்பிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாற்றம் என்பது ஒரு தண்டனையல்ல. ஆசிரியாகச் சம்பளத்திற்கு வந்துவிட்ட பிறகு, எந்த இடத்திற்குப் போட்டாலும், போய் வேலை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் அந்தப் பதவிக்கு வரவேண்டும். தண்டனை என்ற நிலைமை வரும்போதுதான், விசாரணை இருக்கும். மாற்றம் என்பது ஒரு அட்ஜஸ்ட்மெண்ட் தான். இவர் அங்கே இருப்பது அந்த ஊருக்கு நல்லதல்ல என்று கருதப்படும்போது, அவரை மாறுதல் செய்கிறோம். அந்த முறையில் சௌகரியமான நிலைமை அங்கே நிலவ வேண்டும் என்று செய்கிறோம். அல்லது பள்ளியின் வளர்ச்சிக்கு ஒரு ஆசிரியர் மாற்றப்படுவது உதவியாக இருக்கும் என்று கருதப்பட்டால், மாற்றுகிறோம். பொதுவாக எனக்குத் தெரிந்தவரை பெரும்பாலும் ஆசிரியர்களின் கோரிக்கைகளின் அடிப்படையில்தான் பெரும்பாலான மாற்றங்கள் நிகழ்கின்றன.

திரு. செ. முத்துசாமி : இப்படிப்பட்ட மாற்றங்கள் நடைபெறும்போது, சரியான விதிமுறைகள்-நார்ம்ஸ் இல்லாமல் இருக்கின்றன. எப்படிப்பட்ட முறையில் மாறுதல் அளிக்க வேண்டும் என்று திட்டவட்டமான முறைகள் எதும் தற்போது இல்லை. மாவட்டத்தை விட்டு மாவட்டம் மாற்றப்படும்போது அல்லது புரமோஷன் கொடுக்கப்படும்போது, மீண்டும் அவர்களை எப்படிக் கொண்டு வருவது, அல்லது புரமோஷனில் செல்லும்போது எம்மாதிரியான நடைமுறையைக் கையாள்வது, கணவன் மனைவியாக இருப்பவர்களை எப்படி மாற்றம் செய்வது போன்றவற்றில் ஒரு சரியான திட்டவட்டமான விதிமுறைகள் இல்லாமல் இருக்கின்றன, எனவே குறிப்பிட்ட திட்டவட்டமான

குறிப்புகளைக் கொடுத்துவிட்டால், இத்தகைய சங்கடங்கள் பெரும்பாலும் நீங்கி விடும் எனவே இத்தகைய திட்டவட்டமான குறிப்புகளைத் தயாரிக்க அதிகாரிகளையும் ஆசிரியர் சங்கத்தைச் சேர்ந்தவர்களையும் அழைத்துப் பேசி ஒரு வரைமுறையை ஏற்படுத்த அரசு கவனம் செலுத்துமா ?

(முற்பகல் 9.50)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்போது எந்தவிதமான முறைகளும் இல்லையென்று சொல்லிவிட முடியாது. காரணம் இல்லாமல் ஆசிரியர்களை மாற்றுவது கூடாது என்ற நிலைமையை இப்போது நாம் உருவாக்கியிருக்கிறோம். அதை அதிகாரிகளுக்குச் சொல்லியிருக்கிறோம். கணவன்-மனைவி என்ற முறையில் ஆசிரியர்கள் மாற்றல் கேட்கிறார்கள். அல்லது பதவி உயர்வு நிலைமை வருகிறது, அல்லது ஆசிரியர்கள் தங்கள் மாவட்டத்திற்குப் போக வேண்டுமென்றால், அவர்களை அவர்களுடைய மாவட்டத்திற்கு அனுப்புவதற்கு அதிகாரிகள் முயற்சி எடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். ஆசிரியர்களுடைய கோரிக்கைகளுக்கு முதலிடம் தந்து அவர்கள் விரும்புகிற இடத்திற்கு கூடுமானவரைக்கும் மாறுதல் தர வேண்டும் என்று அதிகாரிகளுக்குச் சொல்லியிருக்கிறோம். இத்தகைய நடைமுறைகளை வைத்துப் பார்க்கும்போது, பெரும்பாலும் ஆசிரியர் சார்பான நடைமுறையில் தான் நடவடிக்கை எடுக்கப்படுகிறதே தவிர, அவர்களுக்கு எதிரான வகையிலே கருத்தை நாம் அதிகாரிகளிடத்திலே சொல்லவில்லை.

திரு. பா. ரா. தாமஸ் : பொது மாறுதல் விஷயத்தில் அரசின் அணுகுமுறையை வெகுவாகப் பாராட்டுகிறேன். இருந்தாலும் மாவட்டத்திற்குள்ளே பார்க்கும்போது, சில மூலை முடுக்குகளில் பதினைந்து, இருபது வருடங்களாக ஆசிரியர்கள் இருந்துகொண்டு தவித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் சில இடங்களில் வீட்டு வாடகைப் படி, நகர ஈட்டுப் படி வழங்கப்படுவதால் இவர்கள் அதைப் பெற முடியாமல் ஒரு மூலை முடுக்கில் இருந்துகொண்டு வேதனைப்படுகிறார்கள். ஆகவே இத்தகைய சலுகைகள் உள்ள இடத்தில் பணிபுரியும் ஆசிரியர்கள் ஐந்தாண்டுகளுக்கு மேல் அங்கே இருக்கக் கூடாது என்று சொல்லி, அவர்களை வெளியே மாற்றிவிட்டு மூலை முடுக்குகளில் பணி புரியும், ஆசிரியர்களை அங்கு மாற்ற முன்வருவார்களா ? குறிப்பாக மதுரை மாவட்டத்தில் ஆறுவெள்ளியடி, இடைப்பாடி, பொம்மன் போன்ற இடங்களில் ஊருக்குள்ளே காடு வந்து கொல்லக் கூடிய அளவிற்கு நிலைமைகள்

இருக்கின்றன. இப்படிப்பட்ட பகுதிகளில் பணி புரிகிறவர்கள் சலுகை உள்ள இடத்தில் செல்லக் கூடிய வாய்ப்பை அமைச்சர் அவர்கள் உருவாக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : குறிப்பிட்ட பகுதி ஆசிரியர்களுடைய எதிர்ப்பைச் சந்திப்பதற்கு தயாராகிவிட்ட நிலையில், மாண்புமிகு உறுப்பினர் இந்தக் கேள்வியைக் கேட்கிறார் என்று நினைக்கிறேன். கார்ப்பரேஷன் ஏரியாவிலும், மெட்ரோபாலிட்டன் நகர எல்லையிலும் இருக்கின்ற ஆசிரியர்களுக்கு ஏற்படுகிற சில சங்கடங்களைத் தவிர்ப்பதற்காகத்தான் நாம் சில சலுகைகளைத் தருகிறோம் என்று நாங்கள் கருதுகிறோம். அதற்கு அப்பால் இருக்கின்ற ஆசிரியர்களுக்கு அத்தகைய சங்கடங்கள் இல்லையென்று கருதுகிறோம். ஆகவே மொத்தமாக ஆசிரியர்கள் என்று எடுத்துக் கொண்டு, அவர்களுக்குத் தேவைப்படும் என்ற அடிப்படையிலே நாங்கள் தருவதில்லை. ஆகவே எல்லைக்கு அப்பாற்பட்டவர்களுக்கு குறிப்பிட்ட சங்கடங்கள் இருக்காது என்பதால், சலுகைகள் தேவையில்லை என்றும், குறிப்பிட்ட எல்லைக்குள் இருப்பவர்களுக்குத்தான் சங்கடங்கள் இருக்கின்றன. ஆகவே தருகிறோம் என்ற அடிப்படையில் பார்த்தால், இது புரியும். அந்த அடிப்படையிலேதான் நாம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : சில ஆசிரியர்கள் மாற்றல் செய்யும்போது, குடும்ப நன்மையின் காரணமாக போக முடியாது என்று சொல்லுகிறார்கள், சில ஆசிரியர்கள் கடன் தொல்லை காரணமாக ஊரை விட்டுப் போகாமல் இருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். அவர்கள் விஷயத்தில் அரசு கருணையோடு நடந்துகொள்ளுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் கடன் என்கிற வார்த்தையைக் கேட்கும்போது, கொஞ்சம் பயமாக இருக்கிறது. ஆசிரியர்கள் பல வகையான கடன்களைப் பெற்று கடனாளி என்ற பெயரை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்போது இந்தத் துறையில், பாதி நேரத்தை இந்தக் கடன் சம்பந்தப்பட்ட கோப்புகள் எடுத்துக்கொண்டிருக்கின்றன என்ற உண்மை நிலையை இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. சி. இராமலிங்கம் : ஆசிரியர்களை மாறுதல் செய்தால், பல ஆசிரியர்கள் மாற்றப்பட்ட இடத்திற்குப் போய் பணியாற்றுவதில்லை. அப்படிப் போகாத ஆசிரியர்கள் மீது அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்க உத்தேசித்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தங்களுடைய சௌகரியம், தங்களுடைய குடும்ப நன்மை என்ற அடிப்படையிலே, அவர்கள் மாற்றல் செய்யும்போது ஒத்துழைப்புத் தர மறுக்கிறார்கள் என்பது உண்மை. ஆனால் அரசு அதை விரும்பவில்லை. எந்தப் பகுதியிலே போட்டாலும், அங்குள்ள மக்களும் நம்முடைய மக்கள், நம்முடைய சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள்' அவர்களுக்குப் பாடுபட வேண்டுமென்ற உணர்வு அவர்களுக்கு இருந்தால், இந்தப் பிரச்சினைக்குச் சுமுகமான தீர்வு காண முடியும். அந்த உணர்வை நாம் வளர்க்க வேண்டும். இப்போது அத்தகைய உணர்வு வளர்ந்து கொண்டிருக்கிறது. பல்வேறு கிராமப்புறங்களிலுள்ள ஆசிரியர்கள் அந்த ஊர்களில் இருந்து நல்ல முறையிலே பணியாற்றி மாணவர்களிடத்திலும், மக்களிடத்திலும் நல்ல பெயர் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நல்ல முறையில் ரிசல்ட் வந்திருக்கிறது. ஆகவே அந்த உணர்வுகள் அதிகம் ஆக ஆக இத்தகைய குறைபாடுகள் குறைந்துவிடும்.

Transfer of Panchayat Union Teachers

@ * 183. Q.—THIRU S. MUTHUSWAMY : Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether it is a fact that the Panchayat Union Teachers have been transferred from the control of the Panchayat Union Councils to the control of the Director of School Education;

(*b*) if so, under what authority, they were transferred to the control of the Director of School Education; and

(*c*) whether there is any legislative sanction for such a transfer?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) & (உ) : 23—5—1981 நாளிட்ட கல்வித் துறை அரசாணை எண் 857 மூலம் ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் 1—6—1981 முதல் அரசு ஊழியர்களாக்கப்பட்டு, அவர்களது 'பணி' நிர்வாகம்' ஊராட்சி ஒன்றிய கட்டுப்பாட்டிலிருந்து நீக்கப்பட்டு பள்ளிக் கல்வித் துறைக்கு மாற்றப்பட்டது. இதனையொட்டி சட்ட ரீதியாக 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள்

@ 20—3—1982 ஆம் நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்

சட்டத்திற்கு செய்ய வேண்டிய திருத்தங்கள், முதலில் 31—5—1981-ந் தேதி வெளியிடப்பட்ட அவசரச் சட்டம் மூலம் செய்யப்பட்டன. பின்னர், இவ்வவசர சட்டத்திற்குப் பதிலாக, முறையான சட்டம் சட்டசபையின் அனுமதியுடன் இயற்றப்பட்டுள்ளது. சட்ட எண் 55/1981.

திரு. செ. முத்துசாமி : இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில், பஞ்சாயத்து யூனியன் கட்டுப்பாட்டில் இருந்து ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாக ஆக்கப்படுகிறார்கள் என்று இருக்கிறதே தவிர, யார் இந்த ஆசிரியர்களை நிர்வகிப்பது, நியமனம் யார் செய்வது, மாறுதல்களை யார் செய்வது, அவர்களுடைய பணி விதிகள் என்ன என்பவை இந்தச் சட்ட விதியில் சேர்க்கப்படவில்லை என்பதால், பல்வேறு சிக்கல்கள் உருவாகி யிருக்கின்றன. அரசு நல்ல நோக்கத்தோடு செய்ய முன் வந்திருந்தாலும், சட்டரீதியாக பல்வேறு பிரச்சினைகள் எழுந்திருக்கின்றன. சட்டரீதியாக ஆசிரியர்கள் ஏ.ஈ.ஓ.க்களின் கீழ் மாற்றப்படவில்லை என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, இவைகளையெல்லாம் உள்ளடக்கி ஒரு சட்டம் கொண்டுவரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : எனக்குத் தரப்பட்டிருக்கிற விவரக் குறிப்பில், ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர்கள் உட்பட அடிப்படைப் பணியாளர்கள் அரசு ஊழியர்களாக மாற்றப்படுவதன் விளைவாக, அவர்களுடைய பணிகளை முறைப்படுத்த விதிகளை இயற்ற மாநில அரசுக்கு அதிகாரம் கொடுக்கிறது என்றுதான் தந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் இந்த மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. அரசு ஊழியர்களாக ஆனதற்குப் பிறகு, மற்றவர்களுக்கு உள்ள நியமன விதிகள் அவர்களுக்குப் பொருத்தமுடையதாக இருக்கும். அந்த நடைமுறைக்கேற்ப பணி விதிகள் வகுக்கப்படும்.

திரு. செ. முத்துசாமி : இதற்கு முன்னால் கன்னியாகுமரி மாவட்டத்திலே இருந்த ஆரம்பப் பள்ளிகளை அரசே ஏற்றுக்கொண்டு அவர்களை அரசு ஊழியர்களாக அரசு ஆக்கியிருக்கிறது. அவர்கள் கல்வித் துறையில் தற்போது இருக்கிறார்கள். அவர்களுக்கென்று தமிழ் நாடு அரசு சபார்டினேட் சர்வீஸ் விதிகள் என்று தனியாக இருக்கிறது. அத்தகைய பணி விதிகளை இவர்களுக்கும் விரிவுபடுத்தும் எண்ணம் அரசுக்கு இருக்கிறதா? அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டுள்ள பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்களுக்காக

தனி விதிகளை ஏற்படுத்த என்ன ஆலோசனையை அரசாங்கம் வைத்திருக்கிறது என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தனி விதிகளை ஏற்படுத்த செயற்குறிப்பை அனுப்புமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

திரு. பா. ரா. தாமஸ் : இவ்வாறு ஊராட்சி ஒன்றிய பள்ளிகளையெல்லாம் கல்வித் துறை எடுத்துக்கொண்ட பிறகு, அதன் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுள்ள அசிஸ்டென்ட் எஜுகேஷனல் ஆஃபிசரின் கீழ் வேலை செய்ய வேண்டிய எழுத்தர்கள் இன்னும் மாவட்ட ஆட்சித் தலைவரின் கட்டுப்பாட்டில் தான் இருக்கிறார்கள். ஆகவே முழுவதுமாக ஒத்துழைப்புக் கொடுத்து நிர்வாகம் சீராகச் செயல்பட முடியவில்லை. அந்த எழுத்தர்களை முழுமையாகக் கல்வித் துறையின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரக்கூடிய அளவிலே சட்டத்தை மாற்றக்கூடிய குறிப்பை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்கியதன் விளைவாக பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. அதைப்பற்றி அரசு தனித்தனியாக ஆராய்ந்து, தக்க முடிவுகளை எடுத்துக் கொண்டிருக்கிறது.

திரு. செ. முத்துசாமி : ஏ.ஈ.ஓ. க்களை நியமனம் செய்ததைப் பற்றி பட்டதாரி ஆசிரியர்கள் இடையில் பிரச்சினைகள் இருக்கின்றன. ஏ.ஈ.ஓ. க்கள் தலைமையின் கீழ் பணியாற்றக் கூடிய எழுத்தர்களை கன்ட்ரோல் செய்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கூடிய அதிகாரம் ஏ.ஈ.ஓ. க்களுக்கு இல்லை. அது மட்டுமல்லாமல், "கன்டக்ட்ரஸ்" என்று சொல்லக்கூடிய நடத்தாக்கியர்கள் இன்னும் இவர்கள் கட்டுப்பாட்டிற்குள் வரவில்லை. பல ஆசிரியர்கள் மத்தியில் கையில் உள்ளதைப் பயன்படுத்தி நடத்தாக்கியர் ஒருவர் அடித்தார் என்பதற்காக அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொன்னால், மாவட்ட ஆட்சியாளர்களிடம்தான் அதிகாரம் இருக்கிறது, ஏ.ஈ.ஓ. விற்கு இல்லையென்று அவர் சொல்லுகிறார். கமிஷனரைக் கேட்டால் கூட, என்னிடம் கன்ட்ரோல் இல்லையென்று

சொல்லுகிறார்: இப்படி நடவடிக்கை எடுக்கப்படாத நிலை இருக்கிறது மோகனூர் பஞ்சாயத்தில். ஆகவே யார் கட்டுப்பாட்டில் இந்த நடத்தாக்கியர்கள் இருக்கிறார்கள் என்பதையும், அடிப்படை ஊழியர்கள் யார் கட்டுப்பாட்டில் இருக்கிறார்கள் என்பதையும் முறைப்படுத்த அரசு விரைந்து உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10.00)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நடத்தாக்கியர்கள் அல்லது எழுத்தர்கள் இதுபோன்ற பிரச்சினை பற்றி அரசு ஆராய்ந்து தக்க முடிவுகளை மேற்கொள்ளும். மோகனூர் பஞ்சாயத்து யூனியன் பற்றிச் சொன்னார்கள். அதைக் குறித்து நான் துறையின் மூலமாக விசாரிக்கச் சொல்கிறேன். அங்கே இருக்கின்ற அதிகாரிகள் வரம்பு மீறி நடந்தது போல கருத்துச் சொல்லப்பட்டது. அதைக் குறித்து அரசு பரிசீலிக்கும்.

Teachers Service Council

@ * 184. *Q.*—THIRU S. MUTHUSWAMY : Will the Hon. Minister for Education be pleased to state :

(*a*) whether the Chief Educational Officer, Coimbatore, had convened and presided over a meeting of Teachers Service Council recently;

(*b*) if so, under what authority he had convened such a meeting, when the Government have not yet constituted the Teachers Service Council either at State or District level; and

(*c*) the number of organisations which were invited for that meeting, and the names of organisations which participated in the said meeting?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(இ) மற்றும் (உ) : வினாக்களுக்கு இடமில்லை.

திரு. செ. முத்துசாமி : பத்திரிகையிலே அறிவிப்பு வந்திருந்தது. இரண்டு சங்கத்தினர் அழைக்கப்பட்டனர். அவர்களுக்கு பணி மேல் விடுப்பு

@20—3—1982 ஆம் நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப் பட்டது.

தந்திருக்கிறார்கள். ஆனால் விடை சொல்கின்றபோது, அப்படி இல்லை என்று சொல்கிறார்கள். பத்திரிகையிலே அறிக்கையைத் தந்துவிட்டு, பணிமேல் விடுப்பு அளிப்பது பற்றிப் பேசிவிட்டு, இந்த முறை இல்லாதது போல தகவல் அறிவிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தவறாகச் சொல்லவில்லை. அவர்களுடைய இன்டென்ஷன் நல்ல இன்டென்ஷன். ஆனால் இது நடந்ததற்கு மாறாக இருக்கிறது. அதைப் பற்றி அமைச்சர் அவர்கள் 'என்குயரி' செய்து முடிவெடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அரசு அதிகாரிகள் தவறாக நடப்பதாகப் புகார்கள் வருகின்றன. அது குறித்து விசாரிக்க அரசு தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. இந்தப் பிரச்சினையைப் பற்றி நாம் விசாரிக்கிறோம். ஆனால் அரசுக்கு வந்திருக்கின்ற விவரப்படி, மாதந்தோறும் வழக்கமாக நடைபெறும் எல்லா ஆசிரியர்கள் சங்கப் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளக்கூடிய கூட்டம் தான் நடைபெற்றது. அதிலே தான் அங்கீகாரம் பெற்ற இரு ஆசிரியர்கள் சங்கத்தினரும் கலந்து கொண்டார்கள் என்ற விவரத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி : அப்படி ஒவ்வொரு மாதமும் ஆசிரியர்கள் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஒரு கூட்டம் நடத்தப்பட்டு வந்திருக்குமானால், இந்த ஒரு புதிய பிரச்சினையை ஆசிரியர்கள் பிரதிநிதி என்ற முறையில் நான் எழுப்பவேண்டிய அவசியம் இருந்திருக்காது. அது அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். இந்த இலாகாவில் இருக்கக்கூடிய நடைமுறைகள் என்ன என்று தெரியும். அந்த சர்வீஸ் கண்டிஷன் பிரச்சினை இருக்கிறது. சமீபத்திலே ஒரு மேடையிலே ஒரு அறிவிப்பு வருகிறது. அந்த அதிகாரிகள் ஏற்றிருக்கக்கூடிய அந்த நடைமுறையைப்பற்றி நான் அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதை மீண்டும் புனராலோசனை செய்ய வேண்டும். நான் அந்தப் புகாரை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இதன் மீது சரியான 'என்குயரி' செய்து நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற விவரப்படி, அங்கே கூட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அங்கே சங்கப் பிரதிநிதிகள் வந்திருக்கிறார்கள். அங்கீகாரம் பெற்ற சங்கப் பிரதிநிதிகள் கலந்துகொண்டு சில பிரச்சினைகள்பற்றிப் பேசி

யிருக்கிறார்கள் என்று தெரிகிறது. அதிலே எந்தவிதமான உண்மைக்குப் புறம்பானதும் சொல்லவில்லை. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கூறுவது சரி என்றுதான் இந்த விவரங்களிலேயிருந்து தெரிய வருகிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்விகளுக்கு பதில் சொல்லும் போது, நான் சொல்ல விரும்புவது, உறுப்பினர் அவர்கள், சில குறிப்பிட்ட சங்கத்தினருக்கு மாத்திரம் அந்த வாய்ப்பைத் தந்து மற்றவர்களுக்குத் தர வில்லை என்பது போலத்தான் அவர் கேள்வி இருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமை இல்லை என்பதை இந்த விவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

2. அறிவிப்பு.

அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகள் முடிவு செய்யப்பட்டன :—

27-3-1982 (சனிக்கிழமை)	—	தமிழ்நாட்டில் தொழிலாளர்கள் நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம்.
28-3-1982 (ஞாயிற்றுக்கிழமை)	—	விடுமுறை
29-3-1982 (திங்கட்கிழமை).	—	1. சமுதாய வளர்ச்சி மற்றும் நகர நிர்வாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம். 2. (1) தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 18/82) (2) 1982 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/82) (3) 1982 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 20/82)

30—3—1982 (செவ்வாய்க்கிழமை)		மாலை நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவுகளை ஆய்வு செய்தல்.
31—3—1982 (புதன்கிழமை)	}	கூட்டம் இல்லை
1—4—1982 (வியாழக்கிழமை)	}	
2—4—1932 (வெள்ளிக்கிழமை)	—	அரசின் சட்டமுன்வடிவுகளை ஆய்வு செய்தல்.
3—4—1982 (சனிக்கிழமை)	—	தனி உறுப்பினர் அலுவல்
4—4—1982 (ஞாயிற்றுக்கிழமை)	—	விடுமுறை.
5—4—1982 (திங்கட்கிழமை)	—	அரசின் சட்டமுன்வடிவுகளை ஆய்வு செய்தல்.
6—4—1982 (செவ்வாய்க்கிழமை)	—	மகாவீர் பிறந்த தினம் விடுமுறை.
7—4—1932 (புதன்கிழமை)	—	அரசின் சட்டமுன்வடிவுகளை ஆய்வு செய்தல்.

தேவையிருப்பின் ஏப்ரல் 8 ஆம் தேதியும் மேலவை கூடும்.

மேலவை வழக்கம் போல் காலை 9.30 மணிக்குக் கூடும்.

3. உரிமைப் பிரச்சினை.

ஆளுநர் உரை மீதான விவாதத்தின்போது எம். எஸ். ஆர்த்தோ தேர்வு குறித்து மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கூறிய கூற்று குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு திரு. ம. சங்கரலிங்கம் அவர்கள் எழுப்பிய உரிமைப் பிரச்சினைமீது என் தீர்ப்பு :

மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சங்கரலிங்கம் 20—2—1982 அன்று ஒரு உரிமைப் பிரச்சினையை இவ்வவையில் எழுப்பினார். அது வருமாறு :—

" 9—2—1982-ல் சட்டமன்ற மேலவையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் ஆளுநர் உரைமீது நடைபெறும் விவாதத்தில் பேசிக்கொண்டிருக்கும்போது (எம். எஸ். ஆர்த்தோ) தேர்வு பற்றி உச்ச நீதிமன்றம் தந்த தீர்ப்பினை சுட்டிப் பேசினார்கள். அப்போது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் " திரு. பார்த்தசாரதி என்பவரிடம் நேர்முகத் தேர்வுக்கு 'ஹாங்காங்' ஆப்பரேஷன் பற்றிக் கேட்கப் பட்டது. அவர் அதற்கு சரியாக பதில் சொல்லவில்லை. ஒரு கேள்விதான்

கேட்கப்பட்டது. பதில் சரியில்லாததால் ' 0 ' மார்க் கிடைத்தது. கேம்பெல்ஸ் ஆபரேஷன் ஆர்த்தோபேடிக்ஸ்—பெய்லி அன்டு லவ் புத்தகங்களில் கொடுக்கப் பட்டிருக்கிறது " என்றார். இவை உண்மைக்கு மாறான செய்தியாகும். அவையை திசை திருப்ப வேண்டுமென்றே திட்டமிட்ட செயலாக அமைவதால் இவ்வவையின் உரிமையைப் பாதிப்பதாகும். மேலும் 15—2—1982 அன்று இதுபற்றி ஆதாரங்களோடு விளக்கியும் அமைச்சர் அவர்களின் பதில் மேலும் அவையை திசை திருப்ப வேண்டுமென்ற நிலையிலே அமைந்துள்ளது.".

அன்று மாண்புமிகு திரு. சங்கரலிங்கம் அவர்களும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் தங்கள் விளக்கங்களைத் தந்தனர்.

சட்டமன்ற மேலவை விதி 161-ன்படி மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் போது, இதில் அவை உரிமை மீறிய பிரச்சினை அடங்கியுள்ளதா என்று நான் தீர்மானிக்க வேண்டும்.

திரு. சங்கரலிங்கம் அவர்கள் எழுப்பிய பிரச்சினை இருவகையானதாகும் :

(1) திரு. பார்த்தசாரதி என்பவரிடம் நேர்முகத் தேர்வுக்கு 'ஒரே கேள்விதான் கேட்கப்பட்டது. அதற்கு அவர் சரியாகப் பதில் சொல்லவில்லை' என்று அமைச்சர் 8—3—1982 அன்று பேசும்போது கூறினாரா ?

(2) 'கேம்பல் ஆப்பரேஷன் ஆர்தோபேடிக்ஸ் ,பெய்லி அன்டு லவ்' புத்தகங்களில் கொடுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் கூறியது உண்மைக்கு மாறானதா ?

அமைச்சர் 'ஒரே கேள்விதான் கேட்கப்பட்டது' என்று பேசியதாக எழுந்துள்ள பிரச்சினையை முதலில் எடுத்துக்கொள்கிறேன்.

9—2—1982 அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமிக்கு பதில் அளித்த அமைச்சர் கீழ்க்கண்டவாறு கூறியுள்ளார் :—

" நானேகூட இதைப்பற்றி விசாரித்தேன். அவர் ஒரு கேள்விக்கும் பதில் சொல்லவில்லை என்று சொன்னார்கள். இதைப் பற்றி சுப்ரீம் கோர்ட் தீர்ப்பில்கூட சொல்லியிருக்கிறார்கள். 'ஹாங்காங்' ஆப்பரேஷன் பற்றிக் கேட்டார்கள். அதற்கு, பதில் ஏதும் சொல்லவில்லை. அதைப் பற்றி ஜஸ்டிஸ் பத்மநாபன் அவர்களே எழுதியிருக்கிறார்."

ஆளுநர் உரை மீதான விவாதத்தின்போது எம்.எஸ். ஆர்த்தோ தேர்வு குறித்து மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கூறிய கூற்று குறித்து

1982 மார்ச் 25]

[மாண்புமிகு மேலவைத் தலைவர்]

மீண்டும் 15—2—1982 அன்று திரு. சங்கரலிங்கம் அவர்கள் பேசும்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு,

"பார்த்தசாரதிக்கு ஏன் கிடைக்கவில்லை என்றால் ஒரு பர்டிகுலர் காலத்திலே அவர் சைஃபர் வாங்கியிருக்கிறார். 'பர்டிகுலர் காலம்' என்பது 'அந்த குறிப்பிட்ட பகுதியிலே' என்பதாகும். 'ஹாங்காங்' ஆப்பரேஷன் என்றால் என்ன? என்று கேட்டிருக்கிறார்கள். அவர் தெரியாது என்று சொல்லியிருக்கிறார். கேட்ட கேள்விகளுக்கெல்லாம் தெரியாது, தெரியாது என்றே சொல்லியிருக்கிறார் என்று சொல்லுகிறார்கள்" என்று கூறியுள்ளார்.

மீண்டும், திரு. சங்கரலிங்கம் அவர்கள் பார்த்தசாரதியிடம் ஒரே கேள்வி கேட்கப்படவில்லை, பல கேள்விகள் கேட்கப்பட்டன என்பதை விளக்க, பார்த்தசாரதி அவர்கள் கொடுத்த அபிடவிட்டில் இருந்து மேற்கோள் காட்டிப் பேசியபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு. "எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எப்படியெல்லாம் கோர்ட்டிலே அபிடவிட்டிலே இருக்கிறதென்று எடுத்துச் சொன்னார்கள். அது அவர்களுடைய வாதம். இப்படியெல்லாம் கேள்விகள் கேட்கப்பட்டன என்பது கேண்டிடேட்டினுடைய வாதம். அதற்குப் பதில் சொல்லியிருக்கிறார்கள். நான் ஒரே ஒரு கேள்வி கேட்டார்கள் என்று சொல்லவில்லை. ஒரு சிம்பிள் கொஸ்சனுக்கு பதில் சொல்லவில்லை என்றுதான் சொன்னேன்" என்று கூறியிருக்கிறார்கள்.

இதிலிருந்து பார்க்கும்போது, அமைச்சர் அவர்கள் "ஒரே கேள்விதான் கேட்கப்பட்டது" என்று குறிப்பிடவில்லை என்பது தெளிவாகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்களே 20—2—1982 அன்று பேசும்போது, "எத்தனை கேள்வி கேட்டிருந்தாலும் அவர் ஒரு கேள்விக்கும் பதில் சொல்லவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எனவே நான் தவறாகப் புரிந்துகொண்டு, ஒரு கேள்விதான் என்று சொன்னபோது அமைச்சர் அவர்களின் விளக்கத்தின் அடிப்படையில் நான் என்னைத் திருத்திக் கொண்டேன். . ." என்று கூறியுள்ளார்கள். எனவே இதில் உரிமை மீறல் பிரச்சினை ஏதும் எழவில்லை என்று கருதுகிறேன்.

இரண்டாவது, "ஹாங்காங்" ஆப்பரேஷன் பற்றியதாகும். 9—2—1982 அன்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுகுறித்து கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்கள் ;—

ஆளுநர் உரை மீதான விவாதத்தின்போது எம்.எஸ். ஆர்த்தோ தேர்வுகுறித்து மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கூறிய கூற்று குறித்து

1982 மார்ச் 25] [மாண்புமிகு மேலவைத் தலைவர்]

"ஹாங்காங்" ஆப்பரேஷன் என்பது மிகச் சாதாரணமான ஒன்று. வைத்தியக் கல்லூரி மாணவர்கள் பொதுவாக தெரிந்திருக்கக்கூடியது. "பெய்லி அண்டு லவ்" என்ற மருத்துவப் புத்தகத்தில் அதைப்பற்றி நிறைய எழுதியிருக்கிறார்கள்."

இதுபற்றி உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் கருத்து தெரிவிக்கையில்; கேம்பல்ஸ் ஆப்பரேஷன் ஆர்த்தோபெடிக்ஸ் மற்றும் பெய்லி அண்டு லவ் புத்தகத்தில் இருக்கிறது என்று அமைச்சர் கூறுகிறார். ஆனால், இதுபற்றி அதில் 'ஸ்டெப்-பை ஸ்டெப்பாக சொல்லவில்லை. . . . பிரின்சிபிள் தவிர வேறு ஒன்றுமில்லை . .' என்று குறிப்பிட்டார். 9—2—1982 அன்று பேசும்போது அமைச்சர் அவர்கள் கேம்பல்ஸ் புத்தகம் பற்றிக் குறிப்பிடவில்லை. இருப்பினும், 20-2-1982 அன்று பேசும்போது அமைச்சர் அவர்கள் கேம்பல்ஸ் ஆப்பரேஷன் ஆர்த்தோபிடிக்ஸ் வால்யூம் 2, பக்கம் 2075-ல் இது குறித்து ஸ்டெப்-பை-ஸ்டெப் ஆக படங்களுடன் விளக்கியுள்ளது என்று கூறினார். மேலும் "பெய்லி அண்டு லவ் புத்தகத்தில் 220-வது பக்கத்தில் இது குறித்து இருக்கிறது" என்று அந்தப் புத்தகத்திலிருந்து படித்துக்காட்டி விளக்கினார். 9-2-1982 அன்று பேசும்போது அமைச்சர் அவர்கள் "'பெய்லி அண்டு லவ்' என்ற மருத்துவப் புத்தகத்தில் அதைப்பற்றி நிறைய எழுதியுள்ளார்கள்" என்றுதான் குறிப்பிட்டுள்ளார்கள். ஸ்டெப்-பை-ஸ்டெப் என்று அவர் குறிப்பிடவில்லை.

"பெய்லி அண்டு-லவ்" புத்தகத்தில் பிரின்சிபிள்தான் சொல்லப்பட்டு இருக்கிறதா அல்லது ஸ்டெப்-பை-ஸ்டெப் ஆக விளக்கப்பட்டிருக்கிறதா என்பது மருத்துவ நிபுணர்கள் முடிவு செய்யவேண்டிய ஒன்று. என்னைப் பொறுத்தவரை அந்தப் புத்தகத்தில் இதுகுறித்து குறிப்பிடப்பட்டுள்ளதா இல்லையா என்பதுதான். அமைச்சர் குறிப்பிட்ட விளக்கங்களிலிருந்து பெய்லி அண்டு லவ் புத்தகத்திலேயும் இதுபற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது.

ஆகவே, இதில் உரிமைப் பிரச்சினை எதும் எழவில்லை என்று தீர்ப்பளிக்கிறேன்.

(முற்பகல் 10-10)

4. கவன ஈர்ப்பு.

(1) திருவண்ணாமலை தன்முல் சௌகார் ஜெயின் உயர்நிலைப் பள்ளிக்கு அங்கீகாரம் அளித்துப் பல மாதங்களாகியும் ஆசிரியர்கள் பதவிகள் வழங்காததால், மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் குறித்து.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

"திருவண்ணாமலை தன்முல் சௌகார் ஜெயின் உயர்நிலைப் பள்ளிக்கு அரசு அங்கீகாரம் அளித்து பல மாதங்களாகியும் இதுவரை ஏழு ஆசிரியர்களுக்கான பதவிகளை கல்வித் துறை வழங்காததால் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் குறித்து"

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவரவர்களே, ஒரு விவர அறிக்கை @ அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

* **திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவரவர்களே, ஜெயின் உயர்நிலைப் பள்ளிக்கு அங்கிகாரம் அளிக்கப்பட்டு, 22-6-1981 முதல் சிறப்பாக அப்பள்ளிக்கூடம் நடைபெற்று வருகிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிக்கையிலே குறிப்பிட்டுள்ளவாறு, இந்தப் பள்ளிக்கு 5 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களையும், ஒரு கைத்தொழில் ஆசிரியர் பணியிடத்தையும், விதி முறைகளின்படி கூடுதலாகச் சேர்க்கப்பட்ட மாணவர்களுக்காக ஒரு பட்டதாரி ஆசிரியர் பணியிடத்தையும் இதுவரை கொடுக்காததால், அவர்களே ஆசிரியர்களை நியமித்து, மாணவர்களின் கல்வி நலன் பாதிக்கப்படாமல் இருக்க தற்காலிக ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். இருந்தாலும் கல்வி இயக்குநர் ஆணைகள் மூலம் அனுமதி அளித்திருக்கிறார்களே, அந்தப் பதவிகளைக் கொடுத்தால்தான், பிரச்சினை தீரும். இது போன்று பல பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன என்று அமைச்சரவர்கள் அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அரசு ஒரு பள்ளிக்கு அங்கிகாரம் அளிக்கும்போது, குறைந்த பட்சம் தேவையான பதவிகளையும் சேர்த்துக்கொடுத்தால்தான்,

---

@162 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

பள்ளிக்கூடம் நடத்த முடியும். கட்டிடம் கட்ட ஒரு லட்சம் ரூபாய் என்று ஒதுக்கிவிட்டு, செங்கல், சிமெண்ட் இல்லை என்றால், கட்டிடம் கட்ட முடியாது. இந்தப் பள்ளியைப் பொறுத்தவரையில், அந்தப் பணியிடங்களைக் கொடுக்க அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, உயர் நிலைப் பள்ளிக்கூடமென்பது, உயர் தொடக்கப் பள்ளியாக இருந்த நிலையில், அதற்கு மேல் சில பணியிடங்களைத் தந்து, உயர் நிலைப் பள்ளியாக்கும் வழக்கம் பொதுவாக இருக்கிறது. கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் சம்பந்தப்பட்ட பள்ளி, முழுமையான அளவிற்குப் புதிய பள்ளியாக இருப்பதால், இது போன்ற பிரச்சினை உருவாகியிருக்கிறது. ஆசிரியர்கள் தராமல், வெறும் அங்கிகாரம் தந்திருக்கின்ற பள்ளிகள் வேறு சில இருக்கின்றன. ஆகவே இதை ஒரு பொதுப் பிரச்சினை என்று சொல்கிறோம். ஆண்டுதோறும் 1000 பணியிடங்கள், 1,500 பணியிடங்கள் தரும்போது, மாவட்டந்தோறும், யூனியன்தோறும் பிரித்துத் தரும் நிலையில் பல்வேறு சிரமங்கள் ஏற்படுகின்றன. அந்தக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டுத்தான் பதவியிடங்கள் தருகிறோம். குறிப்பிட்ட இந்தப் பள்ளிக்குக்கூட மேற்கண்ட பணியிடங்களைத் தராததற்குக் காரணம் அரசிடம் பணியிடங்கள் இல்லை என்பதுதான். அடுத்த ஆண்டு இது போன்ற பள்ளிகள் முன்னுரிமையோடு பரிசிலிக்கப்படும்.

* **திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** பொதுவாகப் பள்ளிக்கூடங்களில் மாணவர்கள் அதிகமாகச் சேருவதன் காரணமாகக் கூடுதல் பதவியிடங்கள் தேவைப்படுகின்றன. புதிய பள்ளிகள் திறப்பதாலும், கூடுதல் பதவியிடங்கள் தேவைப்படுகின்றன. ஒதுக்கீடு செய்யும்போது, பொதுவாக குறிப்பிட்ட எண்ணிக்கை வைத்து, இத்தனை பணியிடங்கள் என்று ஒதுக்கிவிடுவதால், பிரித்துக் கொடுப்பதில் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. இனிமேல் எத்தனை பள்ளிகளுக்கு அங்கிகாரம் அளிக்கிறோமோ, அந்தப் பள்ளிகளுக்குத் தேவையான பணியிடங்களை தனி ஒதுக்கீட்டின் மூலமும், மாணவர்களை அதிகமாகச் சேர்ப்பதன் மூலமாகத் தேவைப்படும் பணியிடங்களைத் தனி ஒதுக்கீட்டின் மூலமும் அளித்தால், சிறப்பாக இருக்கும். அந்த முறையை வருகிற ஆண்டுகளில் பின்பற்ற அரசு முன்வருமா ?

[1982 மார்ச் 25

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அங்கீகாரம் தருவது என்பதுபற்றி நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்கிறபோது, அரசு கையிலே இருக்கிற அதிகாரத்தை வைத்துக்கொண்டு, அங்கீகாரம் தருகிறதென்ற பொருளிலே மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேள்வி கேட்கிறார்கள். அரசு விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் அங்கீகாரம் தரும் நிலைமைகள் இருந்து வருகின்றன. சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் பள்ளி ஆரம்பித்தால், அங்கீகாரம் தர வேண்டுமென்ற நிலை இருந்து வருவதால், மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வதை ஏற்றுக்கொண்டால், அரசுக்கு மிகப் பெரிய சங்கடம் ஏற்படும்; இன்றைய சூழ்நிலையில் சில பள்ளிகளுக்கு அங்கீகாரம் தரும் சூழ்நிலை ஏற்படுவதால், பதவிகள், பணம், மானியம் தருவதை அரசு கையிலே வைத்திருந்தால், சில கட்டுப்பாடுகளோடு கல்வித் துறையிலே சில நிலைமைகளைச் சந்திக்க முடியும். இல்லையென்றால், அங்கீகாரம் தந்த பள்ளிகளுக்குப் பணத்தைத் தர வேண்டுமென்றால், எதையும் கட்டுப்படுத்த முடியாது. அங்கீகாரம் தருவது அரசின் கையிலே இல்லாமல் இருக்கிறது. அங்கீகாரமும் தந்து, பணமும் தந்தால், அரசுக்குக் கட்டுப்படுத்த இயலாத நிலைமை ஏற்படும். அதையும் மனதிலே கொள்ள வேண்டும். நம்மைப் பொறுத்த வரையில், புதிய பள்ளிகளுக்குப் போதுமான பணியிடங்களைத் தர வேண்டுமென்று முயற்சி எடுக்கிறோம். இதைப் போல வேறு சில பள்ளிகளும் இருக்கின்றன. அங்கீகாரம் தந்து, பணியிடங்கள் தராத பள்ளிகள் இருக்கின்றன. இதை முறையாகப் பரிசீலித்து, தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(2) தூத்துக்குடி, அரசன் பஞ்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்களைப் பதிவு செய்யாததை ஆட்சேபித்து, தொழிலாளர்கள் தொடர் உண்ணாவிரதம் இருந்தது குறித்து.

திரு. பா. ரா. தாமஸ் (திரு. ஆ. நல்லசிவன் சார்பில்) : மாண்புமிகு தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

“ தூத்துக்குடி, அரசன் பஞ்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்கள் சுமார் 5 முதல் 10 ஆண்டுகள் வேலை செய்திருந்தும் இதுவரை யாரையும் பதிவு செய்யாததை ஆட்சேபித்து மார்ச் 2-வது வாரம் முதல் தொழிலாளர்கள் தொடர் உண்ணாவிரதம் இருந்தது குறித்து ”.

1982 மார்ச் 25] [திரு. பா. ரா. தாமஸ்]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, விவர அறிக்கை @ அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. பா. ரா. தாமஸ் : தலைவரவர்களே, விவர அறிக்கையிலே 5 முதல் 10 ஆண்டுகள் தொழிலாளர்கள் பணியாற்றியிருந்தும்கூட, அந்தத் தொழிலாளர் பெருமக்கள் நிரந்தரமாக்கப்படாமலும், நியாயமான சலுகைகள் வழங்கப்படாத நிலையிலும் இத்தனை ஆண்டுகளாக இருக்கிறார்கள் என்பது தெரிகிறது. உடனடியாக தொழிலாளர் நல அமைச்சரவர்கள் முனைந்து, பேச்சு வார்த்தைகள் மூலம் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்றாலும், ஆவன செய்து, தொழிலாளர் பெருமக்களுக்கு நன்மை செய்வார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, டி.சி.எல்., திருநெல்வேலி, இதைப்பற்றிப் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்கள் தொடர் உண்ணாவிரதத்தைத் தற்காலிகமாகத் தள்ளிப் போட்டிருக்கிறார்கள். பேச்சு வார்த்தை சுமுகமாக நடந்து ஓர் ஒப்பந்தம் ஏற்படுமென்று நாமெல்லாம் எதிர்பார்க்கலாம்.

5. அரசின் தீர்மானம்.

தொழிற் கொள்கையும், திட்டங்களும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம்.

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : தலைவரவர்களே,

“ சட்டமன்ற மேலவையின் முன்வைக்கப்பட்டுள்ள தொழில் கொள்கையும், திட்டங்களும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு * பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் ”

@ 153-154 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

£15 -352 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள தொழில் கொள்கையும் திட்டங்களும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

THIRU A. R. DAMODARAN : On a point of order, Sir. We are discussing the Policy Note on Rural Industries as well as Heavy Industries. This has been intimated long ago. May I know where the Minister for Rural Industries and Small Industries is, Sir, because he does not appear to be in the House?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : அவர்கள் வந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் இலாக்கா சம்பந்தமான விவரங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது, நானே குறிப்பு எடுத்துக்கொண்டு, அவரிடம் கொடுத்து, அவர்கள் பதில் சொல்ல இருக்கிறார்கள். அவர்கள் விரைவில் வர இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN : Sir, this is not a very satisfactory state of affairs because, while the Hon. Minister may be able to take down notes, I think it will be very difficult for the other Minister to read the notes and then reply to us. I would request the Hon. Chairman to insist that when Policy Notes are taken up, the Hon. Minister should be in the House and should not accept outside functions.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : பெருவாரியாக அமைச்சர்கள் அவையில் இருக்கிறார்கள். ஒரு சந்தர்ப்பம் இப்போது ஏற்பட்டுவிட்டது.

மாண்புமிகு திரு. சு திருநாவுக்கரசு : தலைவரவர்களே, அவர்கள் சட்டமன்றப் பேரவையில் இருக்கிறார்கள். விரைவில் வருவார்கள்.

(முற்பகல் 10.20)

THIRUMATHI TARA CHERIAN : Hon. Chairman, Sir, I am thankful to you for giving me this opportunity to speak on the Policy Note on Industries. I do not want to take up a detailed study because, as I grow old, I have a feeling that I am unable to concentrate.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

However, after going through the Notes and after talking with some of the people who are in the industries, I felt I could talk in a general way.

Sir, it is not out of place to say that Thiru R. Venkataraman who is the present Defence Minister will be specially thought of on a day like this because it was he who put Tamil Nadu on the industrial map of India. The several industries in the State owe their existence to him and they have to be grateful to him for having found for Tamil Nadu a proper place in the industrial map of India. At that time, Thiru Venkataraman headed a High Power Committee set up for the starting of new industries and some industrialists also were asked to be on that Committee. Sir, I do not think that we can put a seal on the dawn of the day. If we study the experience of industrialists, it will be of great help in our efforts. In view of our previous experience and in view of the fact that some of our Corporations are already in the red, I hope that we will not be in a hurry to start new Corporations. As I said a few days ago, some of our corporations are in the red and we have to set them right before we think of starting new Corporations. But, this does not deter me from saying that the TIIC and other organisations are playing a very important role in the development of industries in our State. They are doing good work in the matter of providing raw materials, etc. and, therefore, we have to appreciate the work that is being done by them. I hope that the Hon. Minister will take note of the Corporations that are not working very well and see that they are made to work well. I have always been wondering whether some of these Corporations are run in a businesslike fashion. With due respect to our administrative officers. I have to state that their know-how is more bureaucratic than technical. Some Corporations

have been going on launching schemes like the manufacture of almirahs, cycles, mopeds, etc. and this has resulted in losses to those Corporations. When they find that the mopeds manufactured by them are not satisfactorily working, they start undertaking repairs to those mopeds. It appears that there is some red-tapism in such Corporations and that they approach things with a bureaucratic attitude. I hope that the Hon. Minister will take notice of all these things. If necessary, the running of some of these Corporations may be entrusted to really good industrialists for a period of five years or so and we may see how they run them. Let them make the organisations work at a profit and then hand them back. Let not these organisations be allowed to be always in the red. In recent days, we have seen so many projects like the manufacture of television sets coming into being in the private sector. The private entrepreneurs do not stand on their toes but they stand on their toe-nails, so to say, before they go and capture the market for their products. But, our Government organisations are not functioning in that way and, therefore, it is necessary to have a re-thinking in the matter. For instance, the granite-stone industry is a very old industry where the private people are doing wonderfully well and are making exports. Instead of giving them the necessary technical know-how, if the Government are going to take over the industry, I do not know how much profit the Government are going to get. We have started many polytechnics and we have got many educational institutions, including Engineering Colleges and we are turning out very brilliant children after training and they have technical know-how. We must encourage them to start private business of their own and we must give them all the facilities, instead of the Government taking them and runing the units themselves. Sir, I feel that so many things go together. If we do not get people from other States to start new industries here, it is because of the power supply. We had a long discussion the other day and the power supply has got to improve. Having been a member of one of the Boards, I know the coal position is very bad. The coal has to be brought by rail and there is so much pilferage on the railway. We have not got enough wagons to bring them to the places where we need them. Not only that, we are paying private agents and commercial people who them-

selves are robbing half of them. It is not due to any particular way of like now. Therefore SIPCOT and others have got to think on lines as how the business people are running it. If they could get the coal to the destinations and also at cheaper cost, why should we not be able to do it? This is a very important sector which has got to be strengthened, viz., power supply, coal and other things.

(முற்பகல் 10-30)

Then, if we simplify the levy of commercial tax and other taxes in our State, it may make more industrialists from outside come to this State and set up new establishments. I think we have to find out a method by which we can give a place of importance to our industrialists who belong to our State. I hope I will not be misunderstood if I say that our industrialists and our entrepreneurs feel that the Government are not giving the respect due to them and they are not taking their advice. I hope I will not be misunderstood. The Hon. the Chief Minister is not here and I have seen during the last two years that a lot of family quarrel is going on here and the political tension is such that the Chief Minister is spending so much of his time on it. I find he is not able to have rapport and personal touch with the business community and it is necessary because it is they who hold the key and who can say how we can prosper in the industrial field. We have the nice Industries Ministere here with us. I know the policy of the Government and nothing can be done without the sanction of the Hon. the Chief Minister as well as the Cabinet. That is the correct procedure also, because for failures and successes, the whole Cabinet has got to take the blame and responsibility. Therefore, I suggest that there must be a kind of better rapport with Chambers of Commerce and the highly qualified industrialists who run their organisations on business-like scale. Even in the matter of starting new industries, I have a feeling that some promises that have been made have not been kept up. For instance, the cement industry is a very important industry. For the industry, the raw materials have to be mined. If the private industrialists are given mining licences for short periods of one year or so, they will not have the confidence needed for the starting of new industries. Therefore, the Government may

have to think in terms of giving licences for longer periods. I hope that I will not be misunderstood that I am speaking for the cause of industrialists. Our administrative officers, with their efficiency, dedication and close contact with their counterparts in other places, will be able to get things done at the level of the Government of India. But it is our industrialists who will be able to project a proper picture of the position of industries in Tamil Nadu for the people from other States to come and set up new industries here. Incidentally, I would like to say that there is the problem of language also in this. I again hope that I will not be misunderstood when I say this. I am no less an enthusiast of the Tamil language than any this. I am no less an enthusiast of the Tamil language than any other hon. Member including the Leader of the Opposition. But we should not give the impression that we are a small lonely group because that will not help us. We should show some leniency in all these matters. I hope that the Hon. the Minister for Industries will convey to the Hon. the Chief Minister my earlier request that both the Hon. the Chief Minister and the Hon. the Minister for Industries may have to have better rapport with the industrialists. Nowadays, we are talking in terms of having large public sector enterprises in Tamil Nadu. Perhaps, in a way, it is right. But some of these enterprises may have their own teething troubles and they may grow into major problems later. Therefore, in my own little way of thinking, I would suggest that the private industrialists may be invited to come and set up their industries in our State.

Sir, the Indian Oil Corporaion is going to become a very big enterprise in the public sector. By itself, it can have so many subsidiaries. I think the time has come when the Government have to think over the matter and see that at least two or three petro-chemical units are started and run efficiently and profitably so that more employment opportunities may be provided to our young people. There is a pharmaceutical industry at Ennore. It is working at a loss because several assurances by the Government have not been kept up. I think that too much of bureaucracy has come into the picture. I hope that I will not be misunderstood when I talk about this.

Coming to the end, there need not be any brain drain. Our students are bright and they are brighter than the students of other countries. Please make use of them and keep them satisfied. Don't give them Rs. 50 or ask them to start a kiosk and all that. Let the Industries Minister think as to how best he can utilise them. They should be helped to have their own units. Their business acumen and their ability and qualifications should be seen and they should be helped to start small industries so that they may not go out of the country and that is very, very necessary. Our theoretical expertise alone is not enough. Very often we have got brilliant men in places like the Planning Commission with theoretical knowledge alone. They will have to have practical experience also. I attended an international conference of women entrepreneurs in Delhi last year and I am so happy to tell you that there are a number of women entrepreneurs from third world countries and from the developing countries and they come forward with beautiful ideas. But, I do not see even one or two women entrepreneurs in Guindy and other places. I think a time will come when you will have to encourage women entrepreneurs. The women who are well up in their domestic management properly, profitably and economically will be able to do well in the industrial field also. Sir, the rural and small industries are doing well and they are given all encouragement. There should not be any middle-man profit and marketing evaluation should be done. I have been to some of the slum areas where the people are very, very enthusiastic but many people are ignorant of the beautiful products. Even in the Social Welfare Directorate, people do not know where they can get advice and where they can get help. The nationalised banks must be praised for the amount of work they are doing. If only more encouragement is given, the position will improve.

I have been to Ennore and there is a small village and slum where good work is being done but they need much more moral support, much more technical know-how and much more co-operation from the Government so that small industries, without bottle-necks, can go on.

I will just finish, Sir, with a mention about women's organisations. In Coimbatore the Welfare Board through the District members, has started a beautiful unit where only women are working. They are doing good work and all things are properly assessed. The Inspector who comes and sees says that everything is perfect. There is no middle-man. The women are happy and I have talked to them. If every woman is made to stand on her own legs, there will not be any complaint of cruelty on women and 100 men will come for one woman. They will be only glad for their earnings instead of being sold to them.

(முற்பகல் 10.40)

I find that some Inspectors of Factories are doing their work with a humanitarian approach. I am not mentioning about all of them. But some of them are too rigid. Therefore, I feel that there must be relaxation especially in respect of certain factories which are run by women for the benefit of those who are below the poverty-line. I hope that the Hon. Minister will be able to do that.

Sir, the Handicrafts Development Corporation is doing good work. But, there are so many poor people who are skilled in doing so many things. If the Social Welfare Directorate, the Social Welfare Board and its Members in every district are all brought into the picture, I am sure that we will be able to provide employment for the poor women and also to see that each woman employed in the handicrafts earns at least Rs. 200 a month. In this we want the co-operation of the Hon. the Minister for Small Industries and also the co-operation of the Hon. the Minister for Heavy Industries.

Sir, a certain proportion of jobs have to be set apart for the physically handicapped persons. We have so many physically handicapped people who want to live on their own efficiency and

not on charity. I would like to know, by the 31st March 1983, how many of the physically handicapped persons have been provided with jobs, in industries. The Hon. the Minister for Labour is here. The physically handicapped people can be provided jobs through the labour unions also. We have to provide 3 per cent of the jobs to the physically handicapped persons. I request the Hon. Minister to go all out and see that this percentage is achieved. Thank you.

THIRU J. M. MIAKHAN : Respected Deputy Chairman, I thank you for giving me this opportunity. Sir, I congratulate the Government on having allocated sufficient funds for industries and industrial development. But I find on a perusal of the material given to me that much of the funds allocated go in the form of wages and salaries and what percolates to the actual manufacturer is very little. This has to be rectified and it has to be seen that the funds allocated reach the industrialists. Moreover I find that our Government do not have much rapport with the industrialists. Somehow they are looked upon with suspicion and they are not treated properly. If they are given the help, they will produce more and they will help the country and our State. They are capable of producing very many things. The technical know-how is not lacking in our country. Even the capital is not lacking. They will somehow manage the capital, technical know-how and other things. If the Government give them some encouragement and inducement, they will do better. As I have been talking earlier and as my hon. Friend Thiru Damodaran has been saying, there is great difficulty in getting an industry started and there are very many handicaps and impediments in the way. There are very many things that have to be done and very many palms have to be greased before we get these started. This has to be ended. That is why I suggested that all the things that are necessary for starting an industry may be made obtainable from one and the same place. Then at least the small entrepreneurs will be able to go there and get things done. They will be able to get proper guidance from the people there as to how to apply,

where to apply and all these things. The people who are really enthusiastic and who have got real talent will come forward and their talent will not be wasted and they would not migrate to other States. What happens now is that they go to other States or abroad where they try to get a living. After spending huge amounts on technical education, if we do not utilise them properly, what is the use of giving education? It is a total loss to our State. Therefore, I request the Government to bestow some attention on the matter and see that these people are given proper opportunity to start industries and they are given proper incentives and proper facilities to start industries. There are very many things in our country.

As far as our State is concerned, we do not have enough coal. If an industry has to be started, we require power, either electric power or some other power. We are mostly using coal. We do not have much coal and it has to come from either U.P., Bengal or A.P. and we find there are several bottlenecks in obtaining coal. Even for our thermal units we are not getting enough coal and they are living from hand to mouth everyday. Wagons are inadequate and somehow or other we are not able to get proper supply of coal. Therefore, I request the Government to examine the feasibility of using lignite which is available in plenty here. If necessary, another mine-cut may be opened and if they are processed like leeco, it can be utilised for many of our industries.

Another thing as far as the industries are concerned is that when they start an industry, there is often power cut, and unauthorised power cut. For example, in Virudhunagar and in and around Chengalpattu district in Pallavaram and other places, we find there is power cut all of a sudden. The industries which

(முற்பகல் 10-50)

are engaged in the continuous manufacturing process have suffered a great deal. If prior intimation is given to them, they will plan

their manufacture and there will not be damages to machine-parts, etc. Therefore, I request the Hon. Minister and the Electricity Board to look into the matter and see that these industries are supplied power. Perhaps, there may be a reduction in the total quantity of electricity generation in the State. But the supply that is available may be suitably staggered and supplied to these industries. These industries may be informed beforehand that during such and such hours they may not get supply of electricity or that they will get supply only at reduced loads. If that is done, the crisis that is faced now can be tided over.

Sir, there are very many agro-based industries. For instance, there is the industry for producing concentrates from flower-essences. There is very great demand for this concentrate not only in our country but also in other countries abroad. If we start manufacturing the flower-concentrate in a big way, the foreign firms will come and stand in a queue to buy it. This industry can be easily started with a capital of Rs. 10 lakhs and with 100 acres of land. All the 100 acres of land need not be around the factory. The people around the factory area will co-operate by growing flowers on their own lands and bring them to the factory. The factory may have to have only a few machineries and several kg. of concentrate can be produced in a day. If such a factory is started, it will be of much benefit to Tamil Nadu.

As far as the electronics industry is concerned, our State is in a backward state. The States like Kerala, Punjab and Haryana are in the forefront and they are able to produce very many sophisticated electronic goods. We too can manufacture such goods. We are having the required materials and we are having the required know-how and genius. Therefore, I request the Government to see that more electronic industries are started in our State, not only to manufacture ordinary things like calculators but also to produce sophisticated computers, etc. that are required for different industries in various parts of the country.

So also, toys can be manufactured in our State. When I say this, it may appear childish. But, toys are liked not only by children but also grown-up people. If you go to Japan, you will find different types of toys and you will find toys that speak, dance and do so many things. They are all very beautiful and colourful. Similarly, in India also, with our rich cultural heritage, we can manufacture very many good toys, especially toys that are electronically operated. If that industry is started, it will grow very fast and will not only bring joy to the homes of our people but will also earn the much-needed foreign exchange for our country.

Sir, another industry that can be started and profitably run is the industry for the manufacture of locks, padlocks, hinges, etc. These things are required in the manufacture of iron safes, trunk-boxes, etc. The locks, etc., that we get from Ludhiana and other places are of an inferior quality. Unlike the locks manufactured in foreign countries like Germany, these locks last only for a month or two and then get broken. I do not know why we are not able to manufacture locks of good quality. If you rip open a lock, you will find the mechanism to be very simple. In appearance also, the locks manufactured in our country and those manufactured in foreign countries look alike. We must look into this and see that the quality of the locks manufactured in our country is improved. We should see that we manufacture good quality locks to meet at least our own requirements. Now, there are many people who manufacture leather-goods and export them to foreign countries. There is a very good demand for leather-goods in the foreign countries. The manufacturers of these leather-goods find it very difficult to get good quality zips, fasteners, locks, etc., required for the manufacture of leather-goods. Of course, the Government of India have given them some incentive. Now, they are permitted to import zips, etc., to a value equivalent to 10 per cent of the value of the goods exported by them. But the difficulty, the small snag is that there are a few people whose export value may not exceed 4 to 5 lakhs and the quota that will be available to them will be Rs. 5,000 to Rs. 20,000. With this amount they cannot get any import because for this small amount

no seller abroad is willing to send the goods. They may be requiring several things though the total value will be only in thousands. The seller abroad requires bulk orders for 3 or 4 crores of rupees. Now, what is happening is that the Marwadi people—let me not be misunderstood, they are also in a way helping us—collect these licences for a premium and they import the goods and then sell them at a much larger profit. Sometimes they earn a profit of 200 to 300 per cent. This can be avoided. The Government Department themselves can collect these licences from the manufacturers or entrepreneurs and import these things in bulk and supply them to these people. The cost will also be lower. Till we can manufacture these things here, this arrangement may be made. The Government can explore the possibility of making some arrangement to collect these licences from the people who are willing to give them and import and supply to them for the face value of their quota and they need not exceed that amount. This will go a long way in bringing down the cost of production and in bringing more foreign exchange to our country.

Another fruitful industry that we can try is the manufacture of bulbs, tube lights, etc. Of course, there are big companies manufacturing them. What happens now is this. Our local bodies like Municipalities and Panchayat boards require large quantities of tube lights, bulbs, electrical equipments like switches, gears, etc. They have to go to a contractor and the supplies made to them or even to Government Departments are of very poor quality because the contractors have to compete with big manufacturers. If we are able to pay something more in the market, we get better quality products and the tube lights we get burn for 6 months and even for a year or two. The tube lights supplied to Government and local bodies burn only for five or six hours. Therefore, I say that the Government can start industries for manufacture of such tube lights, etc. As one hon. Member said, some of the things produced by consumer industries are not marketable. It is true. If we take the mopeds and furniture, they are not marketable, because of the high cost and overhead

charges. In TANSI sofa-cum-bed costs Rs. 5,000, whereas sofa-cum-bed of a private manufacturer costs only Rs. 1,500 or 2,000 rupees. The people will have proper lighting arrangements and they will be incurring losses. But in the case of bulbs, etc., we have a great demand from our local bodies and it will be profitable and useful for the exchequer and the people also will be benefited. The local people will have proper lighting arrangements and they will be going around in bright light rather than in darkness.

(முற்பகல் 11.00)

The other thing which I want to mention is about the manufacture of standard drugs. There are very many people who run pharmaceutical industries and who charge very exorbitant prices for their products. For example, the cost of production of a calcium tablet may not be even one paisa. But these people manufacture the tablets, pack them in attractive packets, give a brand name and sell the tablets at exorbitant prices. It will be better if the Tamil Nadu Government start their own organisation for the manufacture of basic drugs that have got to be supplied to the Government hospitals. On earlier occasions, I have been telling the Hon. the Health Minister that the drugs and other materials supplied to the Government hospitals are of poor quality. In the capsules given in the Government hospitals you will find only some flour and sometimes the capsules may be empty. Only inferior and sub-standard drugs are being supplied to the Government institutions now. Then, why not the Government start their own industrial unit for the manufacture of such basic drugs? The Government are itching to snatch the industries that are run well by private individuals. Then, why do they not start their own industry for the manufacture of basic drugs and run it profitably so that it may be of help to the State and also to the country ?

Sir, I would like to suggest more innovations though I do not know how far they will be feasible. Nowadays, we see auto-

rickshaws fitted with 3.5 H.P. engines and they are working very well. I do not know whether it will be possible to manufacture, with the same type of engine, a four-wheeler so as to make it appear like a small car. The consumption of petrol by such a car may be 25 to 28 km. per litre. In the manufacture of such a car, something about Rs. 20,000 may have to be spent on body-building and the total cost of production will come to something like Rs. 25,000 including all taxes. In that case, it can be marketed at Rs. 30,000 or Rs. 35,000. Now, the price of the standard makes of cars in our country has almost reached Rs. 1,00,000. Therefore, I request the Government to explore the possibility of manufacturing cars of the type mentioned by me. The engines are even now available and only the body-building has to be done. If it is found to be a complicated job, it can be entrusted to private entrepreneurs. If such cars are manufactured, they will be of much use to the middle-class people in our State. The use of such cars will also have only a light effect on the purses of the middle-class people because the petrol consumption by such cars will be around 28 km. per litre.

டாக்டர் இரா. சனார்த்தனம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கார்கள் தயாரிப்பதற்கு மத்திய அரசின் அனுமதி வேண்டியிருக்கின்றது. இங்கே நாம் செய்யக்கூடியது 'புகார்' தான். ஆனால் அது மத்திய அரசு அனுமதிக்க வேண்டிய காரியம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Thiru J. M. MIAKHAN : That is why I suggested that the possibility could be explored. What I suggest is not the manufacture of cars as such in full but to assemble a car using these auto-rickshaw chassis which are built here. There is no difficulty or ban on it. Different types of bodies can be built on the chassis and the engine that is given. Why should we not have a 4-wheeler? It need not be called a car but it may be called by some other name, if there is a ban. If the same is manufactured, it will be useful to the people. Even the local entrepreneurs like our hon. Members here will definitely come forward to manufacture a car provided there are no obstacles in the way.

[Thiru J. M. Miakhan] [1982 மார்ச் 25

Similarly, I said some time ago that the alternative sources of power must be explored. We can use lignite because it is difficult to get coal from other States. The other source of energy to be explored is the wind-mill. A small wind-mill, if it is placed on a small hillock, can supply energy to a whole village, if there is no obstruction to the wind. I have seen in small houses in Aminjikarai and other places small wind-mills which are able to meet the domestic requirements of power, except the very heavy ones like electric fans, heater, etc. In a car battery it is stored and it can provide lighting. If encouragement is given, the Engineers and the Graduates who have no work will come forward to manufacture wind-mills. As a matter of fact, the other day I met a few students of the Madras Institute of Technology and they said they had got a useful wind-mill that could be beneficially used. They require a little publicity which they cannot afford. The Government must take it up and if the Government take some interest, they can produce something. There will be a lesser drag on the load on the electric power of our country, which is in great demand **now**.

Similarly in industries also some of the procedures can be changed. In some countries like Japan and Switzerland there are very big industries and even car industries, in which the small parts like windscreen are made outside and the factories are mere assembling units. If such parts and spare parts are allowed to be manufactured by private people or small units it will be beneficial. There are small things like washers which can be manufactured even in houses. They can take it home and manufacture. In the case of making dresses, the cloth can be cut and given and the stitching can be done in homes. The women who cannot go for full-time employment can use stitching machines in their houses and earn money by working for 2-3 hours a day and they can bring the stitched garments to the factory. They will be able to stitch some garments in their houses and bring them. Things like stitching, pasting, etc. can be distributed to the local people and after the things

1982 மார்ச் 25] [Thiru A. R. Damodaran]

Madurai, Ramanathapuram and Tiruchirappalli and other growth centres in Tamil Nadu, so that he may be in constant touch with the industrial community, because problems may be changing from day to day with the change of policy of the Government of India and there is need for us to have very much closer rapport with the industrial community. I am not an industrialist myself and whateer I say is only because, as I am a student of other policy notes, I am a student in this matter and if, as I said, I refer to some aspects, it is only with the genuine hope that the Government will attend to these matters in the interest of industrial development and promotion of employment opportunities in our State.

The Hon. the Minister for Heavy and Medium Industries has mentioned about the lack of Central Sector industries in Tamil Nadu. Sir, the development of Central sector industries in Tamil Nadu as also the development of State industries depend to a very great extent on the development of what is termed as infra-structural facilities in our State. One of the areas which has been neglected to a considerable extent is the development of railway lines in our State. Not only that; the conversion of what we have termned as narrow gauge in our railway system to Broad Gauge has also been neglected. I have been a legislator for 15 or 16 years and I am yet to receive a comprehensive note from any department of the Government regarding a comprehensive plan for the development of railway lines in Tamil Nadu. We have discussed it in bits and parts whenever a controversy arose between the Government of India and Government of Tamil Nadu regarding the extension of broad gauge line from Karur to Dindigul and to Tuticorin. We have not had a comprehensive discussion on what exactly the Tamil Nadu Government want in the field of railway line development in our State. I would like to remind the Hon. Minister that almost 50 years ago when we had only the Main Line running from Madras to Madurai via Cuddalore and Thanjavur and before the Chord Line was introduced between Ulundurpet and Vridhachalam, the entire hinterland in Vridhachalam-Ulundurpet area was totally undeveloped and it was the establishment of a new

railway line that helped that area to get developed. Today Kallakurichi does not have rail facilities and in the deep South we find very many requests made particularly by the Madurai-Ramanathapuram Chambers of Commerce which has taken a great deal of interest in the development of railway line in the South. Perhaps because of the feeling that railway is a Central subject, they do not apprise the legislators of what is required in this regard. But, may I point out to them that although 39 Members belonging to Tamil Nadu are in the Lok Sabha, we have not been able to drive home the salient point that development of railway communication is one important infra-structural development required in our State? If we are not able to throw away all the narrow and metre gauge that exists in our State, and if we are not able to convert our metre gauge railway into broad gauge, let us at least double the tracks between Madras and Madurai, so that a larger number of railway wagons may be moved and the problems in the transportation of raw materials and finished goods can be solved to a certain extent. While we have a coast-line and sea transport is possible, it is feasible only to a limited extent and sea transport is becoming more and more costly. I would plead with the Hon. Minister that when he includes, next year, the details of certain developments in the industrial field, he may also give us a note on the Railway development that is required as an infra-structural development for the development of industries in our State. We have a State Planning Commission which is now an intermediate bus-stop for displaced politicians and disgruntled bureaucrats. I only wish that the State Planning Commission would be activated and such developments as Railway-line development would be entrusted to this Commission so that they may give us an idea of what is required in our State. This is one of the important functions of a Planning Commission because if you plan now, you are going to get a Railway line seven years later and this Ministry may not or may be able to see it. I am mentioning a period of seven years which assumes that they may be elected for a second time or a third time. I would only plead that the State Planning Commission should be entrusted with this task

Sir, as far as Power is concerned, we have already referred to it in the debate on Power and I shall not refer to it. But, a reference has been made that for all new industries the power cut would not be applicable. It is a very satisfactory assurance from the Hon. the Minister for Power couched in very careful, legal and precise language. We will have no power cut but we can have load-shedding which may cut off power completely for ten hours and we can have a power breakdown which may totally break down the power supply. So, it is small satisfaction to say that we are not going to have a power cut when there is no power at all in certain areas for continuous periods of the day. I am not blaming the Minister because this is all due to accumulated lack of development in the field of power generation. If at all I stress this aspect, it is only to express the hope that our generating capacity will keep pace with the increasing requirements of industry for Power. Some friends said that the lack of power might be a disincentive. It is true, but, I would like to remind my friends that Karnataka today has a very high power cut of 35% to 40%. The only State that is comfortably placed in so far as power is concerned is Kerala and Kerala has other problems which may prevent the industrialists from migrating to that area. But, nonetheless, we must lay stress on adequate power development, water-supply development, industrial complexes and, far more important, the financial requirements of small-scale industrialists who need finance in time to start their projects.

Sir, I shall now refer to the Central sector industries. The Hon. Minister has given a detailed note on the industries that exist in our State and he has voiced a very legitimate complaint that Tamil Nadu is not getting its legitimate share of Central sector industries in this State. While raising this subject in the Policy Note, I wish the Hon. Minister had also mentioned all the various Central sector industries that have been permitted or which have come into operation over a period of three years, for example, from 1979 to 1982. He could have indicated where they have been located in India and how we have suffered in

this direction. It is possible for us to speak for fifteen minutes on general issues and accuse the Central Government of being partial in this regard. But our arguments would have greater validity and greater force if we could pinpoint and say, "While you have located a Rs. 1,000 crore project in Korba in Orissa, you have not located even a Rs. 250 crore project in Tamil Nadu". May I request the Industries Department to do a little bit of sincere researching of the licences and the letters of intent that have been granted by the Government of India over a period of three years, analyse where these industries are being located or already have been located, to indicate the project cost and the capital investment so that we may have a clearer picture of how far Tamil Nadu, Kerala and other States may be discriminated against in the matter of allocation of funds for Central sector industries?

One significant development which we must accept and for which all of us in this State are thankful is that the Neyveli Lignite Corporation has had its second mine cut and we will have more Leco, briquetted lignite and we will have more power and more fertiliser. These are the basic things that this project will give us and in view of power shortage, we acknowledge this help with gratitude. But that will not prevent us from asking for more and more defence industries to be located in Tamil Nadu because Tamil Nadu will be the safest place for the location of such strategic industries.

The Hon. Minister has mentioned about two important projects which the State wanted to have and for which obstacles have been placed by the Government of India, rather unnecessarily, in my opinion. These are the two projects which TANCEM has envisaged—Palayam Cement project at a cost of 32 crores of rupees and the Asbestos Pressure Pipe Project at a cost of Rs. 7.5 crores. On 28th November 1980, the Government of Tamil Nadu have been given the concurrence of the Government of India for starting a 4-lakh ton cement production

unit in Tamil Nadu. On the 23rd March 1981 the Government of Indian withdrew the concurrence on the ground that the Railway Ministry has raised the objection that coal could not be transported to this place. This is rather very unfair in the sense that the railway development is in the hands of the Government of India, the allocation of coal and the movement of coal are in the hands of the Government of India. To strangle an industrial project of the Government of Tamil Nadu by offering an excuse that coal cannot be transported under the Government Railways is only an attempt, deliberate attempt, to see that the cement factory does not come up in Tamil Nadu but it goes somewhere else for a private industrialist. I make this charge because in the case of cement projects and fertiliser projects, the Government of Tamil Nadu have my unreserved support because these are the two areas where I feel we have the expertise, the skills, the resources to start new units and produce enough of these commodities for the benefit of the consumers in Tamil Nadu. I find that even in October 1981, the Government of India have stated that they will not permit this four lakh ton production unit in cement in Tamil Nadu. The whole country is suffering from shortage of cement and we are importing one and a half million tonnes of cement from other countries paying one and a half times the production cost in our factories.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

I cannot understand this attitude. The Government of Tamil Nadu should not be unduly soft. The Hon. the Minister for Heavy Industries should put his heavy weight on the Central Minister—whoever may be in charge of this subject and it may be Dr. Chanana or probably there will be some other Minister for Industries and probably the new Minister may be more amenable to the reasonable request of the Government of Tamil Nadu. We must have this factory and we must have not only one cement factory. The Hon. Minister must ask for five lakh ton cement factory every year for the next five years not merely to satisfy the requirements of Tamil Nadu but for satisfying

those of the entire country which is starved of cement. I congratulate the Government on starting the Asbestos Pressure Pipe Factory which is indeed a very good scheme and I hope they will succeed in this.

So far as the Paper plant is concerned. I think the controversy in this regard should be stilled. Originally we did have some doubts about the 150-crore project but now that the World Bank has come forward to give 100 million dollars, which is equal to Rs. 90 crores and the World Bank is not an authority that will sanction projects so easily without going deep into the question of the feasibility of such a project. I would like the Government of Tamil Nadu to go ahead with this bagasse paper factory and to see that it is implemented in as short a time as possible because if it is delayed by another year, the cost will go up by 50 or 60 crores of rupees and the Government will not have the necessary finance evey to start this project. I hope that, in view of the World Bank's approval of the loan of a hundred million dollars that has been promised, the Government of Tamil Nadu will process this scheme speedily and ensure that it comes up as early as possible and also set a time schedule by which it can work.

Sir, may I now pass on to the rural and small industries sector and congratulate the Government once again on a decision that they have taken regarding the continuance of the District Industries Centres ? Soon after the Janata Government left office and the new Congress Government took charge in the Centre, a theory was propounded that because these District Industries Centres were propagated by my friend Thiru George Fernandes these District Industries Centres should be wound up. I insisted, two years ago, in this House that the District Industries Centres must not only not be wound up but the Government of Tamil Nadu should take up the scheme as their own State scheme if Plan assistance was refused by the Government of India. I am glad to find that the Government of India have now revised their notion, perhaps not substantially but at least in a manner that is satisfactory to us, and have permitted

the development of the District Industries Centres. I, however, find that while in the Revised Estimates for 1981-82 an allocation of Rs. 170 lakhs was made for the District Industries Centres, in 1982-83 only Rs. 154 lakhs have been provided for the purpose in spite of the fact that new District Industries Centres are programmed to come up in The Nilgiris and one or two other districts where District Industries Centres do not exist. These District Industries Centres are the nuclei for further development of the small-scale and rural industries in our districts. I would request the Government to strengthen these District Industries Centres to the maximum extent possible and to ensure that they are activated to the maximum extent so that the industrial entrepreneurs in the remotest parts of Tamil Nadu could be encouraged.

Sir, referring to the performance of the District Industries Centres, while I would like to compliment the South Arcot District Industries Centre, because I hail from that district, on their having been able to arrange for the issue of 218 permanent S.S.I. certificates and 1018 temporary certificates I would like to point out that the Bank finance arranged by the South Arcot District Industries Centre is the lowest throughout the State. Only five entrepreneurs have been able to get a loan assistance of Rs. 1.19 lakhs as against 1,900 in the entire State who have obtained Rs. 477 lakhs. South Arcot has the lowest record in the arrangement of Bank finance and I mention this because there is probably some weakness in that Centre and I want the Hon. Minister to find out why Bank finance is not being arranged for more and more small-scale industrialists in that district. Otherwise, all these District Industries Centres have done well and the only suggestion that I would like to make is that the project profiles that are prepared in the District Industries Centres should be updated every year because the cost of the scheme is going up year after year. There is no point in these District Industries Centres preparing their profiles in 1979 and giving them to entrepreneurs in 1982 because the cost of the projects has been increased due to a variety of economic factors. Therefore, there is need for the

divisions in charge of the preparation of project profiles, either in the District Industries Centres or in the headquarters in Madras, to prepare up-dated project profiles which will give the up-to-date costing of these projects.

Sir, as far as TANSI's working is concerned, I know the Hon. Minister is having a lot of difficulty in trying to ensure the profitability of the enterprise but we have a number of divisions of TANSI. I would like to plead with him that in view of the very heavy cost of wooden furniture, windows, doors, etc., we can take up the line of manufacture of steel windows, doors, aluminium windows and aluminium fittings which we are now getting from States like Bombay from private industries. TANSI could profitably investigate whether their furniture division can go into these lines, and consider whether it could manufacture aluminium fittings. Although aluminium is a little more expensive, in view of the fact that wood has assumed prohibitive costs, the TANSI units will have to be looked into very carefully because each of these units is capable of doing better. I have not gone into a detailed study of the subject. Probably as a member of the Public Undertakings Committee next year, I may have a better chance of studying these units. I would like to suggest to the Hon. Minister that the Furniture Division of the TANSI may investigate the possibility of manufacture of this particular item that I mentioned.

Sir, SIDCO should develop a larger number of developed plots and build a larger number of sheds and workshops for areas nearer the growth centres. I do not know on what basis the sheds are being put up for small scale industrialists. But I would like to request the Hon. Minister to see that in the distribution of sheds amongst various districts, allocation by political consideration is not there, in the sense that pressures should not be allowed to be built up for requiring 5 sheds in Panruti and 5 sheds in Nellikuppam. The planning of sheds should not be done in that fashion. In the location of sheds, the Government must be able to identify the growth centres in each district and find out whether these sheds could be profitably utilised by industrial entrepreneurs in that district.

I hope that more and more sheds and workshops with power facilities will be provided because small scale industrialists cannot afford or find time to put up structures of their own.

One significant achievement of the Directorate of Industries and Commerce is this. I refer to this because 2 years ago we complained that there was a lot of delay in sanctioning and in getting various licences from various authorities. My hon. Friend Thiru Miakhan also referred to that. The Note contains a mention about 11 steps that have been taken by the Directorate of Industries and Commerce—very welcome decisions that they have taken —to see that the obtaining of licences is made as easy as possible in so far as small scale industries are concerned. I mentioned in the past that we had to run to about 10 or 15 authorities to get licences and the small scale industrialist who is the works manager and sales manager of his project does not have the time to do all these things. I am glad that these innovations have been made in the Directorate of Industries and Commerce and I would only plead that in so far as raw materials are concerned, we should be able to maintain certain raw material storage, dumps or godowns or yards where we would be able to stock enough raw materials for satisfying the requirements of small scale industries and even medium industries. In Cuddalore, for example, the Southern Railway has a storage yard for stocking coal where we could stock about 1½ lakh tons of coal. This is absolutely empty now because the Southern Railway does not bring coal. In view of the fact that the Hon. the Minister for Heavy Industries has mentioned about the lack of availability of coal for so many units, may I suggest to him that the Southern Railway coal yard can be taken on lease by the Tamil Nadu Government and we can create a dump of coal to the extent of 1½ lakh or 2 lakh tons and Cuddalore having a harbour, we can get steamers from Calcutta, provided coal is available there ? This will go a long way in helping to maintain the supply of coal to some of the units in the local sector. Sir, these are some of the interesting ideas that could be investigated. The supply of cement is

likely to be easier and in regard to supply of materials like copper and other raw materials that are required for small-scale industries, the Hon. Minister is making an attempt. But, I would like to request him to see that the stocking yards are also dispersed in various centres in Tamil Nadu so that the transportation costs do not increase to a large extent.

Sir, I would like to compliment both the Hon. Ministers on the interest that they are taking in the development of small-scale and heavy industries. But, there is one thing which I would like to mention. It is that the Hon. the Minister for Heavy Industries must try to ensure better rapport with the industrialists in our State. Now, they do not have an opportunity and many of them do not know how to lobby also in the Legislature because 99% will be antagonistic to industrialists on the ground that they are all rich people who do not deserve sympathy. While all the legislations introduced by the Hon. the Minister for Labour would be followed by industrialists, in certain matters they require the active help and assistance of the Hon. the Minister for Industries. Therefore, I would request him, and I would end with the plea, that he should have specialised councils of industrialists drawn from Chambers of Commerce. The list of industrialists to serve on those councils should not be drawn from too narrow a sector because personal advantages should not play a part. He should ensure that he draws persons from as broad a list as possible. While it should not be made too big a body, there may be at least fifteen persons to advise the Hon. Minister on the development in the industrial field so that Tamil Nadu can establish its rightful place in the industrial map of India. Thank you.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிற் கொள்கைகளையும் திட்டங்களையும் குறித்து நடைபெறுகிற விவாதத்தில் பேசுகிற வாய்ப்பு கொடுத்தமைக்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதற்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் தொழிற் கொள்கைகளைக் குறித்து ஆங்கிலத்தில் தங்களுடைய கருத்துக்களை

மிக அருமையாகத் தெரிவித்திருக்கிறார்கள். நான் என்னுடைய கருத்துக்களில் ஒன்றிரண்டை எடுத்துச் சொல்ல வேண்டும் என்று ஆசைப்படுகிற நேரத்தில், எனக்கு வருகிற கவலையெல்லாம், தமிழகத்தின் மொத்த வருவாயில் எந்த அளவுக்கு நாம் தொழிலுக்காகச் செலவிடுகிறோம் என்பதுபற்றித்தான். பொதுவாக, தமிழகத்தின் மொத்த வருவாயில் பெரும் பகுதியான தொகை பல்வேறு செலவுகளுக்காகப் பயன்படுத்தப்படுகிறதே தவிர, தொழிலுக்காக மிகக் குறைவான அளவுக்குத்தான் செலவிடுகிறோம். ஏதோ ஒரு மாநில சர்க்காரின் கீழ் இருக்கிற ஒரு நகராட்சி அதற்கான திட்டங்களையெல்லாம் போட்டு, தன்னுடைய வருவாயை சம்பளம் மற்றுமுள்ள பிற காரியங்களுக்காகச் செலவு செய்துவிட்ட பிறகு, முக்கியமான காரியங்களுக்குச் செலவிட பணம் இல்லை என்ற நிலை உருவாவதைப்போல், மாநில அரசு பெரிய தொழிற்சாலைகளை இங்கே தொடங்க வேண்டும், பல கோடிக்கணக்கான ரூபாய்களை நாம் தொழிலுக்காக முதலாகப் போட வேண்டும் என்று விரும்பினாலும், அன்றாடச் செலவுகளுக்கே அதன் நிதி சரியாக இருக்கும்போது, தொழிலுக்காக அது ஒதுக்கும் தொகை மிகக் குறைந்த அளவுக்குத்தான் இருக்கிறது என்பதை நாம் ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழகத்தில் நாம் எந்த அளவுக்குத் தொழிற் துறையில் முன்னேறியிருக்கிறோம் என்று சிந்திக்கும்போது, அரசியலில் பெரும் தலைவராக இருக்கக் கூடிய ஒருவர் ஒரு முறை ஒரு கருத்தைத் தெரிவித்தார். அதாவது கடந்த பத்து ஆண்டுக் காலத்தில் தமிழ் நாடு தொழிற் துறையில் மிகவும் பின்தங்கி விட்டது என்ற கருத்தை அவர் சொன்னார். அவருடைய பெயரை இங்கே குறிப்பிடுவது தவறல்ல என்றுதான் நான் கருதுகிறேன். அவர் இங்கே தமிழகத்தில் நிதியமைச்சராக இருந்து, பின்னர் மத்திய அரசிலும் நிதியமைச்சராக இருந்த திரு. சுப்பிரமணியம் அவர்கள்தான். அவர் இந்தக் கருத்தைச் சொல்லும்போது இன்னொன்றையும் குறிப்பிட்டார். அதாவது "தமிழகத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகுதான், தமிழகத்தில் தொழில் வளம் குன்றிவிட்டது என்று சொல்ல மாட்டேன். காரணம், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் போதிருந்தே தமிழகத்தில் தொழில் முன்னேற்றம் குன்றி, தமிழகம் தொழில் துறையில் பின் தள்ளப்பட்டுவிட்டது" என்ற குற்றச்சாட்டைச் சொன்னார். அவர் அவ்வாறு குறிப்பிட்டபோது, என்னுடைய சிந்தனையெல்லாம், எந்த அளவுக்கு தொழில்

[திரு. எஸ். ஆர். இராதா] [1982 மார்ச் 25

துறையில் வளர்ந்திருக்க வேண்டிய தமிழகம் எந்த அளவுக்குப் பின்தங்கி விட்டது என்பதைப் பற்றியும், இதற்கு உண்மையிலேயே யார் காரணம் என்பதைப்பற்றியும் சென்றது. அந்த அடிப்படையில் நான் இங்கே தரப்பட்டிருக்கிற கொள்கைக் குறிப்புகளையும் பார்த்தேன். மத்திய அரசின் சார்பில் தமிழகத்தில் எந்தெந்தத் தொழிற்சாலைகளைத் தொடங்கியிருக்கிறார்கள் என்ற குறிப்பை நான் அவற்றில் பார்த்தேன். அதுபற்றிய சில குறிப்புகளை நான் இங்கே பார்த்தேன். அந்த வகையில் சுமார் 11 தொழில்களைக் குறிப்பிட்டு, இவைகள் அனைத்தும் மத்திய அரசின் சார்பில் தமிழகத்தில் தொடங்கப்பட்டவைகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(முற்பகல் 11-30)

அதிலே பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய்களை மூலதனமாகப் போட்டு ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்குகிற காரியங்களை மத்திய சர்க்கார் செய்திருக்கிறது என்ற விவரத்தை உன்னிப்பாக கவனிக்க ஆரம்பித்தேன். எந்தெந்த ஆண்டில் எந்தெந்த பெரிய தொழில்களை ஆரம்பித்திருக்கிறது என்று பார்த்தேன். தமிழ்கத்திலே ஆரம்பிக்கப்பட்ட தொழில்கள் அத்தனையும் 1965 ஆம் ஆண்டு, 1966 ஆம் ஆண்டுக்கு முன்னால் தான் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதே தவிர, 1967 ஆம் ஆண்டிலே புரட்சி ஏற்பட்டு இருபது ஆண்டுக் காலமாக இருந்த காங்கிரஸ் ஆட்சியை ஒழித்துவிட்டு புதிய அரசாங்கத்தை பேரறிஞர் அண்ணா அவர்கள் அமைத்ததற்குப் பிறகு, தமிழகத்திலே ஏதாவது தொழில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதா என்றால், சேலத்திலே ஆரம்பிக்கப்பட்ட இரும்பு உருக்காலையையும், சென்னையிலே ஏற்பட்ட உரத் தொழிற்சாலையையும் தவிர மற்ற ஒன்றும் இல்லை. மற்ற அத்தனையும் 1967 ஆம் ஆண்டுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்டிருக்கின்ற தொழில்கள் என்றால், மத்திய அரசு ஓரவஞ்சனை செய்கிறது என்று நான் சொல்லும்போது, என்னைக் கேட்பதற்கு ஆள் இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது. அதற்காக நான் பரிதாபப்படுகிறேன், வருத்தப்படுகிறேன். மத்திய அரசுக்காக வாதாட மாண்புமிகு உறுப்பினர் திரு. தாஸ் அவர்கள் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். 1967 தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்ற நேரத்தில், பேரறிஞர் அண்ணா அவர்கள், "மத்திய அரசுக்கு எந்த அளவிற்குத் துணை செய்ய வேண்டுமோ அந்த அளவிற்குத் துணை செய்வோம்" என்று சொல்லி மத்திய அரசுக்கு பாதகம் இல்லாமல் அவர் ஆட்சியில் இருக்கும் நாள் வரை

1982 மார்ச் 25] (திரு. எஸ். ஆர். இராதா)

நடத்து வந்தார். அதற்குப் பிறகும் எந்தக் காலத்திலும் தமிழக அரசு மத்திய அரசுக்கு விரோதமாகச் செயல்பட்டதா என்றால், இல்லை என்பதை துணிந்து சொல்லுவேன். காங்கிரஸ் அல்லாத சர்க்கார் தமிழகத்திலே இருக்கிறது என்ற நிலை இருக்கிறதே தவிர, மத்திய சர்க்காரை எதிர்க்கிற சர்க்காராக இருந்ததாகத் தெரியவில்லை. கலைஞர் ஆட்சியாக இருந்தாலும் சரி, அதற்குப் பிறகு ஏற்பட்டிருக்கிற புரட்சித் தலைவர் ஆட்சியாக இருந்தாலும் சரி, மத்திய சர்க்காரை எதிர்க்கிற சர்க்காராக இல்லை. மத்திய சர்க்காருடைய எல்லாக் கொள்கைகளையும் ஆதரித்திருக்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சியினராக இருந்தால், "உங்கள் கட்சி மத்திய சர்க்காரை அந்த அளவிற்கு ஆதரிக்கிறது" என்று வருத்தப்படுவார்கள். அந்த அளவிற்கு மத்திய சர்க்காரின் கொள்கைக்குத் துணையாக இருக்க வேண்டுமென்று நாங்கள் சொல்லுவதற்குக் காரணம், "திராவிட நாடு" கேட்டவர்கள் என்ற சந்தேகம் அவர்களுக்கு வந்துவிடும் என்பது. அதனாலே மிகவும் எச்சரிக்கையோடு மத்திய சர்க்காரை ஆதரித்து வருகிறோம். இப்படிப்பட்ட நிலையிலும் 1967 ஆம் ஆண்டுக்குப் பிறகு ஒரு தொழிலைக்கூட, ஒரு பெருந்தொழிலைக்கூட மத்திய அரசு இங்கே ஆரம்பிக்காமல் ஓரவஞ்சனையாக இருக்கிறது என்ற குற்றச்சாட்டு சாதாரண ஏழையெளிய மக்களிடையிலே இருக்கிறது என்றால் அதை எந்தக் காங்கிரஸ்காரரும் மறுத்துச் சொல்லிவிட முடியாது. 1967-க்குப் பின்னாலே திருமதி இந்திரா காந்தி அல்லது வேறு யார் பிரதம அமைச்சராக இருந்தாலும், அவர்களையெல்லாம் முழுவதும் ஆதரித்து வருகிறோம். திரு. காமராஜ் போன்றவர்கள்கூட திருமதி இந்திரா காந்தி அவர்களை எதிர்த்த போது, நாங்கள் ஆதரித்திருக்கிறோம். அதற்குப் பின்னாலேயாவது மத்திய சர்க்கார் கருணை வைத்து, உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், மராட்டியத்திற்குப் போகிற தொழில்களில் ஒரு நான்கு தொழில்களையாவது தமிழ் நாட்டில் மத்திய அரசு ஏற்படுத்தியிருக்கிறதா என்றால் இல்லை என்றுதான் இங்கே சொல்ல வேண்டும்.

ஆகவே இங்கே இருக்கின்ற அரசியல் கட்சிகள் அத்தனையும் தங்களுடைய எல்லா உணர்வுகளையும் மறந்துவிட்டு, நமக்குள்ளே ஆயிரம் வேறுபாடுகள் இருந்தாலும், அவை இந்த மாநிலத்திற்குள்ளே இருக்கும் என்று எண்ணிக் கொண்டு மத்திய அரசோடு போராடி, வாதாடி பெற வேண்டிய தொழில்களைப் பெற வேண்டும் என்று சொல்லும்போது, திரு. சங்கரலிங்கம் அவர்

களைப் பொறுத்த வரையில், இந்தக் கொள்கையில் தீவிரமாக இருப்பார்கள். யார் தடுத்தாலும் ஒத்துக்கொள்ளமாட்டார்கள். தமிழகத்திற்காக வாதாட வேண்டும் என்பதிலே நிச்சயமாகத் துணை இருப்பார். அதே போல மற்ற கட்சிகளும் நிச்சயமாகத் துணை இருக்கும் என்று கருதுகிறேன். அந்த உணர்வோடு . . .

* திரு. சோ. ஆறுமுகம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா அவர்கள், தமிழகத்திலே பெருந் தொழில்களை மத்திய அரசாங்கம் ஆரம்பிக்க வேண்டும் என்பதற்காக அனைத்துக் கட்சிகளும் ஒருமுகமாக குரல் எழுப்ப வேண்டும் என்று கூறி, எங்களுடைய கட்சித் தலைவர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் அந்த உணர்வில் இருப்பார் என்று அவரை மட்டும் குறித்துச் சொன்னார். திராவிட முன்னேற்றக் கழகமே அந்த உணர்விலேதான் இன்றைக்கு இருக்கிறது. அப்படிப் பட்ட உணர்வு இருந்த காரணத்தினாலேதான், பேறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது சேலம் இரும்பாலைக்காக "எழுச்சி நாள்" கொண்டாட அனுமதித்தார்கள். அண்ணாவிற்குப் பிறகு டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சர் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, "சேலம் இரும்பாலை வராவிட்டால், ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தையே ஏற்றுக் கொள்ளமாட்டோம்" என்று டில்லியில் நடந்த தேசிய அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசி வெளிநடப்புச் செய்ததன் விளைவாகத் தான் சேலம் இரும்பாலையே வந்தது. அப்படி இந்த அரசு இப்போது பெரிய தொழில் திட்டத்திற்காக குரல் கொடுத்தால், திராவிட முன்னேற்றக் கழகமும் மத்திய அரசோடு வாதாடத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நண்பர் திரு. ஆறுமுகம் அவர்கள் என்னுடைய பேச்சிலே குறுக் கிட்டு அவர் பேச்சைப் பேசியிருக்கிறார். அதிலே எனக்கு மகிழ்ச்சிதான். நான் பேசும்போது அவர் ஒரு சில நிமிடங்களுக்குப் பேசுகிறார் என்றால், என்னாலே அவருக்குப் பேச வாய்ப்பு உருவாக்க முடிகிறது என்றால், அதிலே எனக்கு மகிழ்ச்சிதான். நான் திரு. சங்கரலிங்கம் அவர்கள் பெயரை மட்டும் குறிப்பிட்டேன். மற்றவர்கள் பெயரைக் குறிப்பிடவில்லை என்று சொன் னார்கள். அந்தக் கட்சியின் தலைவர் என்ற முறையில் அப்படிக் குறிப்பிட்

டேன். இந்த அவையில் இருக்கின்ற திரு. சித்தாபதி, திரு. ஆறுமுகம், திரு. நீலநாராயணன் ஆகிய திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் அதே வேகத்தோடு இருப்பார்கள் என்பதிலே நான் மிகுந்த நம்பிக்கை வைத்திருக் கிறேன். எனக்கிருக்கும் கவலையெல்லாம், இந்த வேகம் இங்கிருந்து போன நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கிறதா என்பதுதான். அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைப்பற்றித்தான் நான் சிந்திக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் எப்படி இங்கே எழும்புகிறார்களோ அதைப்போல நாடாளுமன்றத்திலே அவர்கள் எழும்புவார்களேயானால், நாடாளுமன்றமே கலகலக்கிற நிலைமை வரக்கூடும். அவர்கள் கவலையெல்லாம் . . .

* திரு. சோ. ஆறுமுகம் : திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழகத்திலே பெரிய தொழில்கள் ஆரம்பிக்கப் பட வேண்டும் என்றும், இன்னும் சொல்லப் போனால் திருநெல்வேலி மாவட்டத் திலேயிருந்த இரயில்வே டிவிஷனை திருவனந்தபுரத்திற்கு மாற்றியபோது, அதைக் கடுமையாக எதிர்த்து அந்தக் கோட்டத்தை தமிழகத்திலுள்ள திருநெல்வேலி மாவட்டத்திலேயே வைக்க வேண்டும், மாற்றக் கூடாது என்றும் குரல் எழுப்பியிருக்கிறார்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கே இருக்கிறார்கள். அவர்கள் என்ன செய்து கொண் டிருக்கிறார்கள் என்பதையும் அவர் சொன்னால், நன்றாக இருக்கும்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் ஒரு பிரச்சினையைச் சொன் னார்கள். இரயில்வே கோட்டத்திற்காக நாங்கள் போராடினோம் என்று சொன்னார்கள். தமிழகத்திலே பெரிய தொழில்களை மத்திய சர்க்கார் ஏன் வைக்கவில்லை என்று அங்கே அந்த 16 பேர் ஏன் வாதாடவில்லை என்று கேட்டால், என்றைக்கோ இருந்த இரயில்வேக்காக வாதாடியிருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் இரண்டு பேர்தான் இருக்கிறார்கள். 16 பேர் போடுகிற சத்தம்தான் அதிகமாகக் கேட்குமே தவிர, இந்த இரண்டு பேர் சத்தம் கேட்காது. அந்த இரண்டு பேர் வருகிறார் களா, இல்லையா என்பதைப் பின்னாலேதான் பார்க்க வேண்டும்.

திரு. ஆர். டி. சித்தாபதி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் நான் குறுக்கிடுவதற்காக

தவறாகக் கருதிக்கொள்ள வேண்டாம். எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழகத்திற்காக வாதாடுகின்ற பேச்சுக்களைப் படிக்காமல் பேசுகிறார் என்று கருதுகிறேன். எல்லாத் துறைகளிலும் வாதாடியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் எதையும் விட்டுக் கொடுக்காது. அப்படிப் பேசியிருக்கிறார்கள் என்பதை மாத்திரம் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தாபதி அவர்கள் பேசுகிற நேரத்தில், ஒரு குற்றச்சாட்டு மாதிரி, நான் படிக்கிறேனா இல்லையா என்று சொல்லியிருக்கிறார்கள்.

திரு. ஆர். டி. சீத்தாபதி : துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய பத்திரிகையை அவர் படிக்கிறாரா என்று தெரியவில்லை. அவர் படிக்கவே இல்லையென்று நான் சொல்லவில்லை.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தாபதி அவர்கள், "எங்களுடைய பத்திரிகை" என்று சொல்லியிருக்கிறார்கள். படிப்பதாக இருந்தால், அந்தப் பத்திரிகையைத்தான் படிப்பேனே தவிர, மற்ற பத்திரிகைகளையெல்லாம் பின்னாலேதான் பார்ப்பேன். காரணம், அதிலேதான் பல அக்கப்போர்கள் வருகின்றன என்பதைப் பார்த்திருக்கிறேன். திராவிடர் இயக்கத்தின் உணர்ச்சிதான் தமிழகத்தின் வளர்ச்சி என்ற உணர்விலே சொல்லுகிறேன். மத்திய சர்க்காரை ஏன் எதிர்க்கக் கூடாது என்று கேட்கமாட்டேன். அந்த நிலை வேறு. இந்த உணர்வுகளை வளர்க்க வளர்க்க, மத்திய அரசின் உதவிகளைப் பெறுவதில் நாம் முன்னேற முடியும். மத்திய அரசிலிருந்து அனுமதியை வாங்க காலதாமதம் ஆவதால், அமைச்சர்கள் அங்கே போய் உட்கார்ந்து அங்கேயுள்ள அமைச்சர்களிடம் பேசி கையெழுத்து வாங்கி எடுத்து வருகிற நிலைமை இருக்கிறது. அதற்கு அடிப்படைக் காரணம் இங்கே எழுப்பப்படுகிற குரல்கள் மத்திய அரசின் காதில் போய் விழாமல் போய்விட்டதுதான். ஒன்று குரல் எழுப்பாமல் இருந்திருக்க வேண்டும், அல்லது அவர்களுக்கு விழாத அளவிற்கு காங்கிரஸ்காரர்கள் தடுத்திருக்க வேண்டும். இந்த இரண்டையும் திருத்தினாலொழிய, நம்மாலே நிச்சயமாகத் தமிழகத்திலே மூலதனம் உள்ள பெரிய தொழில்களை வளர்க்க முடியாது என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

Thiru A. R. DAMODARAN : May I request the hon. Member not to provoke political controversies in the matter of industrial development, because all of us are anxious that industries should come to this State? The main point is only whether we should not get the help of political parties in pleading for more industries in our State.

(முற்பகல் 11-40)

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் திரு. தாமோதரன் அவர்கள் அழகாக ஆங்கிலத்திலே சொன்னார்கள். நான் அவருடைய கருத்துக்களை முழுமையாக ஏற்றுக் கொள்கின்றவன். அவர்களது ஆங்கிலப் பேச்சைக் கேட்ட பின்னர், இந்த மன்றம் எந்த அளவுக்குப் பயன்படுகிறது என்று நான் எண்ணுவேன். அவர் அவருடைய பாணியிலே எந்தக் குற்றச்சாட்டைச் சொல்வதாக இருந்தாலும், அவர் பேசும்போது, 'ஆனரபில், சர்' என்று ஆரம்பித்துச் சொல்வார்கள். அப்படிச் சொல்கின்றபோது அவர் சொல்கின்ற 'சர்' தான் மனதிலே நின்றுவிடுகிறது, அவர் சொல்லும் குற்றச்சாட்டு தப்பித்துவிடுகிறது. அவர் பாணியை நான் முழுமையாக வரவேற்கிறேன். அதைத்தான் நான் பின்பற்றுகிறேன். அது அவருடைய தமிழ் பண்பாட்டோடு அமைந்திருக்கின்ற பாணியாகும். நாம் எந்தக் காரியத்தையாவது நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்று போகும்போது, எலுமிச்சம் 'பழம் கொண்டு போய் கொடுப்போம். அப்படிக் கொடுத்த பின்பு, அவர்கள் எலுமிச்சம் பழம் பெற்றுக்கொண்டதற்காகவாவது அந்தக் காரியத்தைச் செய்து முடிக்க வேண்டும் என்று நினைப்பார்கள். அந்த உணர்வு பல பேர்களுக்கு வருகிறது. நான் தமிழகத்திலே உள்ள திராவிட முன்னேற்றக் கழகம் மீதோ கம்யூனிஸ்ட் கட்சியின் மீதோ குற்றச்சாட்டு சொல்லி, அதிலே தகராறு ஏற்பட்டு, அதனால் பெரிய தொழில்கள் வருவது தடுக்கப்பட்டுவிடுமோ என்று திரு. தாமோதரன் அவர்கள் நினைக்கத் தேவையில்லை என்று சொல்லிக் கொள்கிறேன். இதிலே நிச்சயமாக எங்களுக்குள்ளே கருத்து வேறுபாடு இல்லை. அப்படி எங்களுக்குள்ளே கருத்து வேறுபாடு இருக்கிறது என்று சொன்னால், அந்தக் கருத்து வேறுபாடு யார் முன்னாலே செல்வது, யார் அதைச் செய்வது என்றுதான் இருக்குமே தவிர, இதிலே இரண்டு பேர்களுமே தீவிரமாகத்தான் இருக்கிறோம். யார் சண்டையை ஆரம்பிப்பது, யார் போர்

ஆரம்பிப்பது என்றுதான் போகிறோமே தவிர, இரண்டு பேர்களுமே மத்திய அரசிடத்திலே யார் கேட்பது, யார் வாதாடுவது என்றுதான் இருக்கிறோம். அந்தக் கருத்து வேறுபாடுதான் இருக்கிறதே தவிர வேறல்ல. அதற்கும் காரணம் என்னவென்றால் நாங்கள் திராவிட இயக்கத்திலிருந்து வந்தவர்கள். அந்தக் காலத்திலே அப்படி வளர்க்கப்பட்டவர்கள். அந்தக் கொள்கையிலே சிந்தனையிலே ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

எங்களைப் பொறுத்தவரையில், ஒரு காலத்திலே ஒரு சாமான் எந்த இடத்திலேயிருந்து வருகிறது என்று பார்த்துவிட்டுத்தான் அதைப்பற்றிச் சிந்தித்துவிட்டுத்தான் வாங்குகின்ற நிலைமையிலே இருந்தோம். நான் உதாரணத்திற்குச் சொல்கின்றேன். நம் தமிழகத்திலே தொழில்கள் நடக்கின்றன என்றாலும், நாட்டின் வெளி மாநிலங்களிலிருந்து வருகின்ற பொருள்கள், சாமான்கள்தான் அதிகமாக இருக்கின்றன. சாதாரணமாக சோப்பிலேயிருந்து பெரும்பாலான பொருள்கள் வெளி மாநிலங்களிலேயிருந்துதான் வருகின்றன. நான் நம் தமிழகத்திலே தயாரிக்கின்ற சோப்பு போன்ற சாமான்களைத்தான் வாங்க வேண்டும் என்ற உணர்வோடு இருப்பவன். இதற்கு உதாரணம் சொல்கின்றேன். நான் சுற்றுலா வாரியத் தலைவனாக இருக்கும்போது கோளாவிற்குப் போகிறேன். அங்கே அவர்கள் நடத்துகின்ற சுற்றுலா விடுதியிலே தங்குகிறேன். அந்தச் சுற்றுலா விடுதியிலே பார்த்தேன். அங்கே கோளாவிலே தயாரிக்கின்ற சோப்பு வைத்திருந்தார்கள். நான் அவர்களைக் கேட்கிறேன். " ஏன் இந்த சோப்பு வாங்குகின்றீர்கள். ஏன் ஹமாம் போன்ற சோப்பு வாங்குவதில்லை? " என்று கேட்டேன். அந்த அதிகாரிகள், " கோளாவிலே தயாரிப்பதைத்தான் பயன்படுத்துகிறோம். வெளி மாநிலங்களின் பொருள்களைப் பயன்படுத்துவதில்லை. தவிர்க்க முடியாத நிலை இருந்தால்தான், வாங்குவோம், இல்லாவிட்டால் வாங்கமாட்டோம் " என்று சொன்னார்கள். நான் நம்முடைய சுற்றுலா விடுதிக்குச் சென்று பார்த்தேன். அவர்கள் அங்கே ஹமாம் சோப்பு வாங்குகிறார்கள். நான் அதிகாரிகளைக் கூப்பிட்டேன். " இந்த சோப்பை ஏன் வாங்க வேண்டும்? தமிழ் நாட்டிலே யார் சோப்பு தயாரிக்கின்றார்களோ அந்த சோப்பை வாங்குங்கள் " என்று சொன்னேன். அதற்குப் பிறகு அவர்கள், காந்தி கிராமத்தில் தயாரிக்கப்படுகின்ற சோப்பைப் பயன்படுத்தினார்கள். இன்றைக்கும் அதைத்தான் அவர்கள் வாங்கி வருகிறார்கள். அந்த உணர்விலேதான் அரசாங்கத்தை

நடத்திக் கொண்டிருக்கின்றோமே தவிர வேறல்ல. அதற்குக் காரணம் இருக்கிறது. மத்திய சர்க்கார் மீதோ, வட நாட்டிலே இருக்கின்றவர்கள் மீதோ நமக்கு வெறுப்புணர்ச்சி இல்லை. தமிழகம் முன்னேற வேண்டும். அதுபோல மற்ற மாநிலங்களும் முன்னேற வேண்டும். நம்முடைய முன்னேற்றம் மற்ற மாநிலங்களின் முன்னேற்றத்திற்கு இணையாக இருக்க வேண்டும். அவர்கள் முன்னேறி நாம் அவர்கள் கீழே பணியாற்றுகின்ற நிலை வரக்கூடாது என்ற அளவிலேதான் நாம் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

இன்றைக்கு இங்கே சர்க்கரை ஆலை இல்லை, சிமெண்ட் ஆலை இல்லை என்று சொல்கிறார்கள். திரு. தாமோதரன் அவர்கள் அந்த ஆலைகளை இங்கே ஏன் வைக்கக்கூடாது என்று வாதாடினார்கள். அப்படி வாதாடுகின்ற நேரத்திலே ஒன்றைச் சொல்கின்றேன். இன்றைக்கு தமிழ்நாட்டிலே இருக்கின்ற நிலைமை என்ன தெரியுமா ? சர்க்கரை ஆலை இல்லாத காரணத்தினாலேயே, கரும்புப் பயிர் செய்கின்றவர்கள் இன்றைக்கு வேதனைப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் வேதனைக்குரல் எழுப்பிக்கொண்டிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் விளைகின்ற கரும்பை வாங்குவோர் அற்று இருக்கிறார்கள். அதை விலையாக்க முடியாத அளவிலே இருக்கின்றார்கள். அதை வாங்கி வெல்லமாக்கி, சர்க்கரையாக்கி விற்க முடியாத நிலையில் விலை கிடைக்காத நிலையிலே இருக்கின்றார்கள். ஆயிரக்கணக்கான ரூபாய்களைப் போட்டுச் செலவு செய்து, உற்பத்தி செய்தவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற நிலைமை இன்றைக்கு அங்கே வந்திருக்கிறது. தேவையான அளவுக்கு அங்கே சர்க்கரை ஆலைகள் இல்லை. அவர்கள் செலவு செய்து உற்பத்தி செய்த கரும்பைக் கொளுத்தி விடுகின்ற நிலையில் இருக்கின்றார்கள். வட மாநிலத்திற்குக் கொண்டுபோய் அந்தக் கரும்பை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னால், அது முடியாது என்று சொல்கின்றார்கள். அவர்கள் மறுத்துவிடுகிறார்கள். ஆனால் இன்றைக்கு கரும்பு விலை போகாது என்ற நிலையிலே தஞ்சை மாவட்டத்திலே இருக்கின்றார்கள். ஒரு ஏக்கர் நிலம் வைத்திருக்கின்ற ஏழை விவசாயிகள் அந்தக் கரும்பைப் பயிர் செய்துவிட்டு தான் பயிர் செய்த கரும்பை தானே அழிப்பதற்காகச் சொல்லிக்கொண்டிருக்கின்ற நிலைமைதான் இருக்கின்றது. அந்த நிலைமைகளை நாம் மாற்ற வேண்டும். அந்த நிலைமைகளை மாற்ற வேண்டுமென்றால், அந்தக் கரும்பை சர்க்காரே எடுத்துக்கொண்டு சர்க்கரை ஆக்கி அல்லது வெல்லமாக்கி அது விலை

போகின்ற காலத்தில் விற்றுக் கொடுக்க வேண்டும். அந்த அளவுக்கு இந்த அரசு செய்ய வேண்டும் என்பதிலே நான் மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறேன். அதைச் செய்தால்தான், விவசாயிகளுக்கு பல்வேறு உதவிகளைச் செய்வதை விட, அவர்கள் பாதிக்கப்படுகின்ற நேரத்திலே, தவிக்கின்ற நேரத்திலே அவர்களுக்கு நல்ல உதவி செய்ததாக இருக்கும். இன்னொன்றைச் சொல்வேன். இன்றைக்கு தொழில் துறையைப் பொறுத்தவரையில், ஒரு சமுதாயக் கண்ணோட்டத்திலே சொல்கின்றேன். ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினர் பெரிய தொழில்கள், சிறு தொழில்கள் இவைகளில் எல்லாம் மூலதனம் போட்டுச் செய்வார்கள். ஆனால் சாதாரண ஆதி திராவிடர்கள் என்று சொல்லப்படுகின்றவர்கள் தொழில் துறையிலே இன்றைக்கு வளர முடியாத நிலையில் இருக்கின்றார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பு அல்லது பள்ளிக்கூடங்களில் முன்னுரிமை அளிப்பது என்ற அளவில்தான் நிலைமை இருக்கிறது. அவர்கள் பெரிய தொழில்கள் ஆரம்பிப்பதில்லை. அவர்களுக்கு அந்த வாய்ப்பு இல்லாத நிலை இருக்கிறது. குறிப்பிட்ட துறைகளில்தான் அவர்களுக்குச் சலுகைகள் கொடுக்கப்படுகின்றன. எல்லா இலாக்காக்களிலும், எல்லாத் துறைகளிலும் ஆதி திராவிடர்களுக்கு முன்னுரிமை தந்து அவர்களை நாம் வளர்க்க வேண்டும். இதை நான் சொல்கின்றபோது, திரு. இராமமூர்த்தி அவர்கள் இல்லை. அவர்கள் சொல்வார்கள். அரிசனங்கள், அரிசனங்கள் என்று திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அந்த வார்த்தையை ஏமாற்றுவதற்காகப் பயன்படுத்துகின்றார்கள் என்று சொல்கிறார்கள். இந்த மன்றத்திலே கேபினெட் ரேங்கிலே மூன்று சாமிகள் இருக்கிறார்கள். ஒரு சமூகத்திற்கு ஹரிஜனங்களுக்கு என்று ஒரு சாமி ஆக ஒருவரை ஆக்கிவிட்டார்கள். அதிலே இரண்டு சாமிகளை ஒன்றாக்கிவிட்டு, ஓரவஞ்சகமாக ஒரு சாமியை ஆக்கி விட்டார்கள். அந்த சாமியை இன்றைக்குக் கவனிக்கவில்லை. அவர்களை கவனிக்க வருகின்றார் என்றால் அந்த சாமியை கவனிக்க ஆள் இல்லாத நிலை இருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : கேபினெட் ராங்கில் சாமிகள் என்றால் என்ன என்று தெரியவில்லை.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் கேட்பதாலே சொல்கின்றேன். கேபினெட் ரேங்க் என்று சொல்லும்போது இந்த மதத்திலே அந்த மூன்று சாமிகள் முக்கியமான சாமிகள்.

அதற்குப் பின்னால் இருக்கின்ற சாமிகள் எல்லாம் எம்.எல்.ஏ., எம்.எல்.சி.க்கள் போல. இவர்கள் அதிகாரம் இல்லாத சாமிகள். அதனாலே நான் சொல்கிறேன். அவர்களுக்கு எல்லா வகையிலும் முன்னுரிமை கொடுத்தால்தான், அந்தச் சமுதாயத்திலே ஒரு பெரிய மறுமலர்ச்சியை ஏற்படுத்த முடியும். ஒரு முன்னேற்றத்தை உண்டாக்க முடியும். இன்றைக்கு வெளி மாநிலத்திலேயிருந்து பல்வேறு பெரிய பொருள்கள் இங்கே வந்து விற்பனை ஆகின்றன. அதைப் பார்க்க வேண்டுமென்றால், நம்முடைய மாநிலத்திலே நமது மாண்புமிகு அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் சிறு தொழில்கள் அமைச்சராக இன்றைக்கு பட்டுத் தொழில் வளர்ச்சிக்காக, உற்பத்தி அதிகமாகின்ற அளவுக்கு வேகமாகப் பணியாற்றுகின்றார்கள். நம் தமிழ் மாநிலத்திலேதான் பட்டுத் துணி அதிகமாக உற்பத்தியாகின்றது. அந்தப் பட்டுத் துணிக்குத் தேவையான பட்டை வெளிமாநிலத்திலேயிருந்து வாங்குகின்றார்கள். அந்தப் பட்டு சரிகையை சூரத்திலேயிருந்து, குஜராத்திலேயிருந்துதான் வாங்க வேண்டும். அதனால் கோடிக்கணக்கான ரூபாய் கொடுத்து வாங்கிக்கொண்டிருக்கின்றார்கள். அப்படி மாதா மாதம் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். இந்தத் தொழிலை இங்கே ஆரம்பிக்க முடியாதா என்று சொல்லி, அந்தத் தொழிலிலே இருக்கின்றவர்களைக் கேட்கிறோம். அந்தத் தொழிலிலே பல பேர்கள் இருக்கின்றார்கள். அதிலே அனுபவம் உள்ளவர்கள் இருக்கின்றார்கள். ஆனால் அவர்களுக்கு முறையே கிடையாது. நான் அவர்களை "அந்தப் பட்டை இங்கே உற்பத்தி பண்ண முடியாதா ? என்று கேட்டேன். அவர்கள் "பெங்களூரிலேதான் அந்த 'கிளைமேட்' இருக்கிறது" என்று சொன்னார்கள். அவர்கள் அங்கே போகின்றபோது எதையோ பார்ப்பார்களே தவிர இந்த விஷயத்தைப்பற்றி கவனிக்க மாட்டார்கள். ஆனால் இன்றைக்கு கும்பகோணத்திலே, சேலத்திலே, குற்றாலத்திலே, மதுரையிலே இந்தப் பட்டு உற்பத்தியாகிறது. அது மைசூரிலேயிருந்து கர்நாடகத்திலேயிருந்து, பிறகு ஓசூருக்கு வந்திருக்கிறது. ஓசூரிலே வளர்கிறது என்று சொன்னால், அங்கே அந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு வேண்டிய பணத்தைக் கொடுக்கிறார்கள். அவர்கள் அந்தப் பணத்தை வைத்துக் கொண்டு அங்கே திருப்தியாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 11-50)

அதுபோல சரிகை முழுக்க முழுக்க சூரத்திலிருந்து வருகிறது கோடிக்கணக்கான ரூபாய்க்கு. அதைத் தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப் பார்க்

கிறார்களா என்றால் இல்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள் காஞ்சிபுரத்தில் இருந்த காரணத்தாலே, எப்படியாவது அங்கே சரிகைத் தொழிற்சாலையை உருவாக்க வேண்டுமென்று பெரிய முயற்சி எடுத்து, காஞ்சிபுரத்திலே அந்தத் தொழிற்சாலையை வைத்தார்கள். அதுகூட நடக்க முடியாத நிலை ஏற்பட்டு இன்றைக்கு அதற்கு உயிர் கொடுத்து, அங்கே உற்பத்தி செய்யும் சரிகையை வாங்க வேண்டுமென்று சொல்லி, வாங்கிக் கொண்டிருக்கிறோம், வேறுவழியில்லாத காரணத்தால். குஜராத்தில் இருக்கும், சூரத்தில் இருக்கும் யாரையாவது பிடித்து, ஜாயின்ட் செக்டாராக இந்தத் தொழிற்சாலையை இங்கே துவங்கத் தயாராக உள்ளோம். உங்கள் சரிகையை நாங்கள் வாங்குகிறோமென்று சொல்லியிருந்தால், பல சரிகைத் தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் வந்திருக்கக்கூடும். இன்றைக்கு கோடிக் கணக்கில் சூரத்திற்குப் போகிறது. அந்த வசதி வாய்ப்பை யாரும் கவனிக்கவில்லை.

தமிழ்நாட்டுக்குத் தேவையான மருந்துகள் வெளி மாநிலங்களிலிருந்து வருகின்றன. அதை மாற்ற வேண்டுமென்ற உணர்வு யாருக்காவது வருகிறதா என்றால், இல்லை. எந்த மாத்திரை என்றுகூடப் பார்க்காமல், வியாதி போனால் பரவாயில்லை என்று மாத்திரைகளை விழுங்குகிறார்கள். இன்றைக்கு, இந்த அரசு ஏற்பட்ட பிறகு, ஒரு சிந்தனையே வருகிறது. எந்த மாத்திரை சாப்பிட்டாலும், தமிழ்நாட்டு மாத்திரையா, பம்பாய் மாத்திரையா என்று பார்த்து, வாயில் போட ஒரு சிந்தனை வருகிறது. தமிழ்நாட்டில் மருந்துகளைத் தயாரிக்க ஊக்கம் கொடுத்து கூட்டுறவுத் துறையில் தயார் செய்தால் அவற்றை விற்பதற்கு உத்தரவாதம் தருகிறோமென்று சொல்லி, அந்தத் தொழிலை வளர்க்க முன் வந்திருக்கிறார்கள்.

சேலத்தில் வெள்ளி கொலுசு தயாரிக்கும் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் குடிசைத் தொழில் போன்று அந்தத் தொழிலைச் செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் செய்யும் வெள்ளி கொலுசுகளை உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் விற்கிறார்கள். வெள்ளியோடு, செம்பையும் கலந்து செய்கிறார்கள். அங்கேயுள்ள வருமான வரி அதிகாரிகள் அந்தத் தொழிலை நடத்தவிடாமல் செய்ய என்ன வழியோ, அதைத் தங்களுக்கு வருமானம் கிடைக்கும் வழியில், செய்கிறார்கள். அதைக் குடிசைத் தொழிலாக்க வேண்டுமென்று முன் முயற்சி எடுத்து, அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்து, அந்தத் தொழிலை வளர்த்தால், சேலம் மாவட்டத்தில் பல்வேறு

தாலுக்காக்களில் பிரச்சினைகளே இல்லாத அளவிற்கு வட நாட்டுக்குத் தேவையான கொலுசுகளைத் தயாரித்து, அந்தத் தொழிலை வளர்க்க முடியும்.

நெய்வேலியில்—யாரும் கோபித்துக்கொள்ளக் கூடாது—வீராணம் திட்டத்திற்காகப் பெரிய பெரிய குழாய்கள் தயாரிக்கப்பட்டு, பயன்படுத்த முடியாமல் இருக்கிறது. அந்த விவகாரத்திற்குள் போகவில்லை. ஊழல் என்று ஆரம்பித்தாலே சண்டை வரும். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் சொன்னதால், அதை விட்டுவிடுகிறேன். அவர் பாணியைப் பின்பற்ற வேண்டுமென்பதற்காக, அந்தப் பிரச்சினைக்குப் போகாமல், என் சிந்தனையைச் சொல்லுகிறேன். பெரிய தொழிற்சாலை வைக்க வாய்ப்பு இருக்கிறது. அங்கே பெரிய சிமென்ட் பைப் தயாரிக்கும் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டது. அதை நவீனப்படுத்தி, வீட்டுக்கு வேண்டிய பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலையாக்க முடியுமா என்று சிந்தனை செய்தால் நெய்வேலியில் வாங்கிப் போடப்பட்டுள்ள இயந்திரங்கள், கருவிகள் மற்றவைகளைப் பயன்படுத்த வாய்ப்பு இருக்கிறது. அவற்றைப் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வளருகிற தொழில்கள் என்று சொல்கிற நேரத்தில், விஞ்ஞான முறையில், விஞ்ஞான அடிப்படையில் அந்தத் தொழில்களை வளர்க்க வேண்டும். "பழைய காலத்தில், 100 ஆண்டுகளுக்கு முன் என்ன செய்தார்கள் ; தாத்தா காலத்தில் குடுமி வைத்திருந்தார்கள், நானும் குடுமி வைப்பேன்" என்று அந்தக் காலத்திற்குப் போவதைவிட, வளரும் விஞ்ஞான காலத்திற்கேற்ப வேகமாக முன்னேற வேண்டும். பஞ்சாப், அரியானாவில் என்ன செய்கிறார்கள் என்றால், கார் கம்பெனி ஆரம்பிக்க வேண்டுமென்று சொல்லும்போதே, அதற்கான 'பார்ட்ஸ்' செய்ய ஆரம்பிக்கிறார்கள். கார் கம்பெனி 100 ரூபாய்க்கு 'பார்ட்ஸ்' விற்றால், இவர்கள் 50 ரூபாய்க்கு விற்கிறார்கள். அந்த அளவிற்கு வளருகிறார்கள் என்றால், அங்கே பெரிய சிந்தனை இருக்கிறது. அந்தச் சிந்தனை தமிழகத்திற்குத் தேவை என்பதை இந்த நேரத்தில் வலியுறுத்திக் கூறுகிறேன். இங்கே சிறிய தொழிலானாலும், பெரிய தொழிலானாலும், உற்பத்தி செய்யப்படும் பொருள்களை விற்க அரசாங்கம் ஒரு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதைக் கொஞ்சம் கவனிக்க வேண்டும். தொழில்களை ஆரம்பிக்கிறார்கள். பொருள்களை உற்பத்தி செய்கிறார்கள். அந்த நிறுவனத்தினுடைய தவறு அல்லது வேறு காரணங்களாலே பாதிக்கப்படும் நேரத்தில் அந்தத் தொழிலே பாதிக்கப்பட்டு, அந்தத் தொழில்களுக்கு உதவி செய்கிறோமென்று கொள்கைக் குறிப்பிலே போடு

கிறோம். என்னென்ன பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன, அந்தப் பொருள்களுக்கு எந்தெந்த வெளி மாநிலங்களில் மார்க்கெட் இருக்கிறது, அதை விற்க என்ன செய்ய வேண்டுமென்று கவனிக்க அரசில் மிகுந்த முனைப்பான ஒரு துறை இருக்க வேண்டும். அந்தத் துறை மூலமாக தமிழ் நாட்டிலே தயாரிக்கும் பொருள்களை வெளி மாநிலங்களில் விற்க வசதிகளைச் செய்ய வேண்டும். அம்பத்தூரில் தயாரிக்கப்படுகிற ஒரு பெயின்ட்டை இன்றைக்கு தமிழகத்தில் விற்க முடிகிறதென்றால், அதே பெயின்டை உத்தரப் பிரதேசம், அரியானா மாநிலங்களில் விற்க வசதிகளை அரசே செய்ய வேண்டும். வெளி மாநிலங்களில் தயாரிக்கும் பெயின்டைத்தான் வாங்குவோம் என்ற நிலை மாறி, இங்கே தயாரிக்கும் பெயின்ட் வெளி மாநிலங்களில் விற்கிறது, அதற்கு அரசு உத்தரவாதம் தருகிறதென்ற நிலைமையை உருவாக்கினால், நிச்சயமாகத் தொழில் துறையில் முன்னேற வசதி, வாய்ப்பு ஏற்படும்.

அடுத்து, சேலத்திலே கற்களை வெட்டியெடுத்து, அதை ஏற்றுமதி செய்து, பல கோடிக் கணக்கான ரூபாய்களைச் சம்பாதித்தார்கள். அரசு அதைக் கவனித்து, இன்று அந்தத் தொழில் அரசுத் துறையில் இருக்க வேண்டும். தனி மனிதர்கள் கொள்ளையடிக்க அனுமதிக்கக் கூடாது என்று சொல்லி, அதுவே புதிய தொழிலாக வளர்க்கப்பட்டு, இன்றைக்கு வெளி நாட்டுக்குப் போகிற கனி வளங்களைக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வந்து, இன்றைக்கு அனுப்புகிறோம்.

அடுத்து, இன்னொன்றைச் சொல்ல வேண்டும். இந்த அரசு ஒவ்வொரு தொழிலுக்கும் எப்படி உதவிகள் செய்கிறதோ அதைப்போல மத்திய அரசு சில உதவிகள் செய்ய கார்ப்பரேஷன்கள் இருக்கின்றன. என்.எஸ்.ஐ.சி. என்ற கார்ப்பரேஷன் இன்டஸ்டிரீசுக்கு உதவி செய்ய இருக்கிறது. அரசை ஒன்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் என்னென்ன செய்கிறார்கள், யார் யாருக்குக் கடன் கொடுக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். யார் யாருக்குத் தர வேண்டுமென்று எண்ணுகிறோமோ அவர்களுக்குத் தர நமக்கு நிதி வசதி இல்லையென்றாலும், அதை வாங்க மத்திய அரசிடம் சொல்லி, குறைகள் போடுவதாக இருந்தால், நம்முடைய அரசுப் பிரதிநிதி அங்கிருந்து தேவையான உதவிகளைச் செய்ய வழிவகை காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு இந்த அளவிற்குத் தொழில்கள் வளர்ச்சி ஏற்படும்போது, மின்சார வளர்ச்சி இருந்தால்தான், இந்தத் தொழில்கள் வளர பெரிய மூலதனமாக

இருக்க முடியும். ஒரு கணக்கு எனக்குத் தெரிவித்தார்கள். 1967 ஆம் ஆண்டில் 3,750 மில்லியன் யூனிட்டுகள் தயாரிக்கப்பட்டுப்போய், 1969-76-ல் 4,000 மில்லியன் யூனிட்தான் உற்பத்தி செய்ய முடிந்தது என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு நம்முடைய அரசு வந்ததற்குப் பின்னர், 7,600 மில்லியன் யூனிட்டுக்கு மேல் போய், ஏறத்தாழ 3,000 மில்லியன் யூனிட்டுகள் அதிகமாக மின்சார உற்பத்தி செய்யும் முனைப்பு இருக்கிறதென்று சொல்லும்போது, இன்றைக்கு மின்சாரம் அந்த அளவிற்குத் தேவையான ஒன்றாக இருக்கிறதென்று தெரிவித்துக்கொள்கிறேன். அதனால் மின்சார வளர்ச்சியைக் கவனிக்கிறோம். இதைக் குற்றச்சாட்டாகச் சொல்லாமலிருப்பதற்குக் காரணம், திரு. தாமோதரன் அவர்கள் என்னைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதுதான். நான் சொன்னால் குற்றமாகிவிடும் என்று பயப்படுகிறேன். குற்றம் சொல்லாதீர்கள். இந்த அரசுக்கு யோசனை சொல்லுங்கள். அதைச் செய்ய அரசு தயாராக இருக்கிறது. அந்த வகையில் தொழில்கள் வளர வேண்டுமென்று நான் கேட்டு, மேலும் துணைத் தலைவரவர்களுக்குத் தொல்லை தரக்கூடாதென்பதால், இத்துடன் என்னுடைய உரையை முடிக்கிறேன்.

திரு. ஏ. ஜே. தாஸ் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் பேசும்போது, நான் குறுக்கிடக்கூடாதென்று இருந்தேன். ஏதோ மத்திய அரசு தமிழகத்தில் ஒன்றும் செய்யவில்லை என்பது போன்று குற்றச்சாட்டு சொல்லிக்கொண்டிருந்தார்கள். இருந்தாலும், நடு நடுவே குறுக்கிடுவது அவ்வளவு உசிதமல்ல என்று இருந்தேன். தொழிற் கொள்கை குறித்து சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். சேலம் ஸ்டீல் பிராஜக்டுக்கு ரூபாய் 150 கோடி பெறப்பட்டது. நெய்வேலிக்கு 260 கோடி ரூபாய் பெறப்பட்டது . . .

(நண்பகல் 12-00)

மணலியில் ரிபைனரி ஆலையிருக்கிறது. அதுபோல் பொம்பூரில் ரெயில் பெட்டித் தொழிற்சாலை இருக்கிறது.

டாக்டர் இரா. சனார்த்தனம் : சேலத்தில் நாம் எதிர்பார்த்தது உருக்கு ஆலை. ஆனால் வந்திருப்பது உருட்டு ஆலை. அது நம்மை இன்றையதினம் உருட்டிக்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்களா? (சிரிப்பு)

திரு. ஏ. ஜே. தாஸ் : உருக்கு ஆலை வந்தாலும், உருட்டு ஆலை வந்தாலும் நமக்கு நன்மைதான். உருட்டு ஆலை வந்திருப்பதன் மூலமாகக்கூட நமக்குப் பல நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன. இன்றைக்கு எவர்சில்வர் தகடுகளை நாம் ஜப்பான் நாட்டிலிருந்து எதிர்பார்க்கக்கூடிய சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல், இது உருட்டு ஆலையாக இருந்தால்கூட, நாம் ஜப்பான் நாட்டை எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய சூழ்நிலை மாறியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் பேசும்போது தமிழகத்திற்கு என்று பெரிய தொழிற்சாலை ஒன்றையும் மத்திய அரசு கொடுக்கவில்லை என்று சொன்னார்.

திரு. எஸ். ஆர். இராதா : நான் பேசியதை மாண்புமிகு உறுப்பினர் திரு. தாஸ் அவர்கள் தவறாக நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் வழியிலேயே பதில் சொல்கிறேன். தமிழகத்திலே தொழிற்சாலைகள் வருவதற்கு நாம் அத்தனை பேரும் கட்சி வேறுபாடின்றி மத்திய அரசிடம் போராட வேண்டும். காரணம் 1966-67-க்குப் பின்னாலே தமிழகத்திலே மாற்றுக் கட்சி ஆட்சி அமைந்துவிட்ட நிலையில், அதற்குப் பிறகு இரண்டே இரண்டு தொழிற்சாலைகள்தான் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அதற்கான ஆதாரங்கள், புள்ளிவிவரங்கள் எல்லாம் என்னிடத்தில் இருக்கின்றன. அதற்காக நாங்கள் மத்திய அரசை வலியுறுத்தும்போது, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாஸ் அவர்களும் எங்களோடு நின்று வாதாட வேண்டும், போராட வேண்டும். அப்போதுதான் மத்திய அரசு செய்யும். உங்களை என்றைக்கும் நாங்கள் ஆதரிப்போம்.

திரு. ஏ. ஜே. தாஸ் : 'உங்களை எப்போதும் ஆதரிப்போம்' என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்லியதற்கு நன்றி. தமிழகம் தொழிலில் முன்னேற இந்த அரசு எடுக்கும் எல்லா முயற்சிகளுக்கும் எங்கள் கட்சி துணை நிற்கும், ஒத்துழைப்பு கொடுக்கும். குறிப்பாக இன்றைக்கு திருச்சியில் இருக்கக்கூடிய 'பெல்' நிறுவனம் பெரிய சாதனை புரிந்து வருகிறது. அதே போல் பெரம்பூரில் இருக்கக்கூடிய ரெயில் பெட்டித் தொழிற்சாலையும் நல்ல சாதனை புரிந்து வருகிறது. இன்றைக்கு தமிழகத்தில் இருக்கக்கூடிய அந்தத் தொழிற்சாலையிலிருந்து உற்பத்தி செய்யக்கூடிய ரெயில் பெட்டிகளை பல வெளி நாடுகள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றன. தமிழகத்தில் ஓரளவு தொழில்கள் எல்லாம் முன்னேறிக் கொண்டு வந்தாலும், அதிலுள்ள நடைமுறை

காரணமாக சில தொல்லைகளும் தொழில் முனைவர்களுக்கு இருக்கத்தான் செய்கின்றன என்பதை நான் இங்கு சுட்டிக்காட்டுகிறேன். சிறு தொழில்களை ஆரம்பிக்க நடைமுறையில், தமிழகத்தைப் பொறுத்தவரையில், பல கட்டுப்பாடுகள் இருக்கின்றன. அதனால்தான் தமிழகத்தில் பல சிறிய தொழில்கள் முன்னேற முடியவில்லை. இதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தமிழகத்திலே சிறு தொழில்கள் செய்ய பல சங்கடங்கள் இருக்கின்றன என்று நான் ஏற்கெனவே இந்த அவையில் குறிப்பிட்டிருக்கிறேன். அதில் குறிப்பாக தொழில்களை மாற்றம் செய்ய 'சேஞ்ச் ஆஃப் கான்ஸ்டிட்யூஷன்' செய்வதில் சிரமம் இருக்கிறது. ஒருவர் ஒரு தொழிலை இன்னொருவரிடமிருந்து வாங்கி நடத்த வேண்டுமென்று சொன்னால், நடைமுறையில் அதற்கு சிரமம் இருப்பதால், அவர்கள் தொழிலை நடத்த முடியாத சூழ்நிலை இருக்கிறது. இந்த இலாகா நடைமுறைகளை மிகக் கடுமையாக வைத்திருப்பதன் காரணமாகத்தான், இப்படி சாதாரணமாக ஒரு தொழிலை மாற்றம் செய்ய அப்ளிகேஷன் அனுப்பினால்கூட, உடனே செய்வதில்லை. இதனால் தொழில் முனைவர்கள் தொழிலை விட்டே ஓடக்கூடிய நிலை இருக்கிறது. சிறிய தொழில்களை நம்முடைய மாநிலத்தில் முன்னேற்ற வேண்டுமென்று நினைக்கிறோம். பஞ்சாப், அரியானா போன்ற மாநிலங்களிலும், டெல்லிக்கு அப்பாலும் சென்று பார்ப்போமேயானால், அங்கெல்லாம் சிறு தொழில்கள் முன்னேறியிருக்கின்றன. சாதாரண மக்கள்கூட அன்றாடம் வேலை செய்து அங்கு தினசரி 50 ரூபாய் வரை சம்பாதிக்க முடிகிறது. இன்றையதினம் நம்முடைய மாநிலத்தில் அப்படிப்பட்ட நிலை இல்லை. ஆகவே நம்முடைய மாநிலத்தில் சிறு தொழில்களுக்கு இருக்கக்கூடிய நடைமுறைச் சிக்கல்களை மாற்றியமைக்க வேண்டும். இதிலுள்ள நடைமுறைகளை எளிதாக்க வேண்டுமென்று இந்த மன்றத்திலேயே நான் பலமுறை வலியுறுத்தியிருக்கிறேன். இதை இந்த அரசு இதுவரை கவனிக்கவில்லை. இதை ஒரு குறையாக நான் சுட்டிக்காட்டி, இனிமேலாவது இந்த நடைமுறைகளை எளிதாக ஆக்கி, தமிழகத்தின் எல்லா சிறு தொழில்களும் முன்னேறுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் சொன்னதைப்போல, தமிழகத்தின் தொழில் முன்னேற்றத்துக்கு எந்தெந்தத் தொழில்களுக்கு மத்திய அரசு லைசென்ஸ் வேண்டுமென்று கேட்கிறதோ அவற்றுக்கெல்லாம் உங்களோடு சேர்ந்து நாங்களும் ஒத்துழைப்போம், கட்சி வேறுபாடு இல்லாமல் துணை நிற்போம் என்று கூறி அமர்கிறேன்.

(திரு. செ. முத்துசாமி) [1982 மார்ச் 25

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள தொழில் கொள்கையும் திட்டங்களும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புமீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய மகிழ்ச்சியை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். இந்திய நாட்டினுடைய தொழில்கள் அல்லது எந்த ஒரு நாட்டினுடைய தொழில்கள் முன்னேற வேண்டுமானாலும் அது அந்த நாட்டினுடைய மின்சார உற்பத்தியைப் பொறுத்திருக்கிறது, அங்கே வெட்டி எடுக்கக்கூடிய நிலக்கரியைப் பொறுத்திருக்கிறது, அந்த நாட்டில் கிடைக்கிற பெட்ரோலியத்தைப் பொறுத்திருக்கிறது. இப்படி மேற்கண்ட ஒவ்வொரு பொருளுக்கும் தொழில் முன்னேற்றத்திற்கும் தொடர்பு இருக்கிறது. இந்தியாவில் இன்றைக்கு தொழில்கள் வர வேண்டுமானால், அதற்கு முக்கியமாக இருக்கக்கூடிய பொருள்கள் மின்சாரமும் நிலக்கரியும்தான். மின்சார உற்பத்தி குறைவாக இருக்கிறது. நிலக்கரி கிடைக்கவில்லை என்ற குறைபாடு இருக்கிறது. நிலக்கரியை ஏன் வெட்டி எடுக்கவில்லை என்று கேட்டால், மின்சாரம் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். ஏன் நிலக்கரி வரவில்லை என்று கேட்டால், ரயில்வே வசதி சரியில்லை என்கிறார்கள். ரயில்வே ஏன் சரியில்லை என்று கேட்டால், சரியாக வாகன் வசதி இல்லை என்கிறார்கள். இப்படியாக நிர்வாக நடைமுறையில் பல சங்கடங்கள், தொழில் துறையைப் பொறுத்தவரையில் இருக்கின்றன. இப்படிப்பட்ட சிக்கல்களிலிருந்து நம்முடைய தொழில் துறை விடுபட்டாக வேண்டும். இப்படிப்பட்ட சிக்கல்கள் நம்முடைய தொழில் வளர்ச்சியை பாதித்துக்கொண்டிருக்கின்றன. நம் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான மூலப்பொருள்கள் நம்முடைய நாட்டிலே கிடைக்கவில்லை. பல தொழில்கள் நம்முடைய நாட்டில் வளர்ச்சியடையாமல் இருப்பதற்குக் காரணம் நமக்குத் தேவையான மூலப்பொருட்கள் சரியாகக் கிடைக்காததுதான். ஆனால் அதேநேரத்தில் அவற்றுக்கெல்லாம் ஒரு தவிர்ப்பாக ஜப்பான் நாட்டில் இன்றைக்கு மூலப்பொருள்களே இல்லாமல், நிலக்கரி உற்பத்தி இல்லாமல், இரும்பு உற்பத்தி இல்லாமல், பெட்ரோலிய உற்பத்தி இல்லாமல் எல்லாவற்றையும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து அவர்களுடைய தொழிலை அறிவு பூர்வமாக, ஆற்றல் பூர்வமாக, ஆக்க பூர்வமாக வெற்றிகரமாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். நாட்டை முன்னேற்ற வேண்டுமென்ற நோக்கத்தோடு சுறுசுறுப்போடு, அரசியல் ரீதியாக நடைமுறையில் அனைவரும் ஒன்றுபட்டு உழைத்து, இன்றைக்கு அவர்கள் தொழில் துறையிலே உலகத்திலேயே முதலாவதாக முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள்.

1982 மார்ச் 25 (திரு. செ. முத்துசாமி)

இத்தனைக்கும் அவர்களுடைய நாட்டில் தொழில்களுக்குத் தேவையான மூலப்பொருள்களே இல்லை. அத்தனையையும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துதான் தொழில்களைச் செய்ய வேண்டியிருக்கிறது. முன்பு தொழில் வளர்ச்சியில் முதலாவதாக மேற்கு ஜெர்மனி நாடு இருந்தாலும்கூட, இன்றைக்கு அதையும் மிஞ்சி அமெரிக்காவுடன் போட்டி போடக்கூடிய அளவுக்கு ஜப்பான் தொழிலிலே வளர்ச்சியடைந்திருக்கிறது. நல்ல தரமான உயர்ந்த ரக உருக்கு உற்பத்தியில் அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக இன்றைக்கு ஜப்பானின் உருக்கு இருக்கிறது. அந்த அளவுக்கு அவர்கள் தரமான உருக்கை உற்பத்தி செய்கிறார்கள். இதை நான் சமீபத்தில் ஒரு விவாதத்தின் மூலம் காண முடிந்தது.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், பெரிய அளவில் மின்சாரம் உற்பத்தி செய்யக் கூடிய அளவு கனரகத் தெர்மல் ஸ்டேஷன்கள் இல்லை. இது சம்பந்தமாக மேற்கு வங்கத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசோடு கடிதத் தொடர்பு வைத்திருந்தார்கள். நான் ஒருமுறை அங்கு சென்றிருந்தபோது, அவர் எழுதிய கடிதத்தை என்னிடம் படிக்கத் தந்தார்கள். ஒவ்வொரு தொழிலுக்கும் வேண்டி அந்தந்த மாநிலத்திலுள்ளவர்கள் கட்சி வேறுபாடு இல்லாமல் மத்திய அரசிடம் வாதாடுகிறார்கள். கேரளாவில் மற்றும் பல மாநிலங்களில் இன்றைக்கு கட்சி வேறுபாடு இல்லாமல், அனைவரும் ஒன்று சேர்ந்து, இந்த இந்தத் தொழில்கள் எங்களுடைய மாநிலத்திற்கு வேண்டுமென்று வாதாடுகிறார்கள். தங்கள் பகுதிதான் தொழிலில் முன்னேற வேண்டுமென்று ஒவ்வொருவரும் விரும்புகிறார்கள். இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுப்பதில்லை. இந்த விஷயத்தில் கட்சிக் கண்ணோட்டம் பார்க்காமல், மாநிலத்தில் இருக்கிறவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, மத்தியில் ஆட்சியில் இருப்பவர்களிடம் சண்டை போட்டுப் பெறுகிறார்கள். யார் ஆளுகிறார்கள் என்பதல்ல பிரச்சினை. நம்முடைய அரசு மத்திய அரசிடத்தில் சண்டை போட்டாவது நம்முடைய தமிழகத்தின் தொழில் வளர்ச்சி கருதியும், வேலைவாய்ப்பு கருதியும் நிறைய தொழில்களைப் பெற்றாக வேண்டும். இதை நாம் போராடியாவது, வாதாடியாவது பெற வேண்டும். இதைப் பெறுவதில் நமக்குள் 'எந்தவிதமான கட்சி மாறுபாடுகளும் இருக்கக்கூடாது. அப்படி இருக்கவும் முடியாது. மற்ற மாநிலங்களில் தொழில்கள் வர வேண்டுமென்று விரும்பினால், உடனே அனைவரும் ஒன்றுபட்டுச் செயல்படுகிறார்கள்.

(திரு. செ. முத்துசாமி) [1982 மார்ச் 25

சமீபத்தில் தஞ்சையில் வேதாரண்யம் பகுதியில் பெட்ரோலியக் கிணறுகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. விரைவில் அங்கு பெட்ரோலிய உற்பத்தி ஆரம்பிக்கப்படும் என்று மத்திய பெட்ரோலிய அமைச்சர் அவர்கள் சமீபத்தில் கருத்து வெளியிட்டிருக்கிறார்கள். மூன்றாவது ஆழ் கிணறை வட மாநிலங்களிலிருந்து இயந்திரத்தைக் கொண்டு வந்து அதை போட ஆரம்பித்திருக்கிறார்கள். அது வெட்டப்பட்டால், நாள் ஒன்றுக்கு 1,500 பீப்பாய் மண்ணெண்ணெய் நமக்குக் கிடைக்கும். இப்படி நான் சொல்லவில்லை. மத்திய பெட்ரோலிய அமைச்சர் திரு. சிவசங்கர் அவர்கள் இதைத் தெரிவித்திருக்கிறார்கள். வேதாரண்யத்திலுள்ள மூன்றாவது எண்ணெய்க் கிணற்றிலிருந்து உற்பத்தி ஆரம்பித்த பின், நம் இந்திய நாட்டினுடைய பொருளாதாரம் மிக உயர்ந்து விடும் என்று அவர் சொல்லியிருக்கிறார். வேதாரண்யம் தமிழகத்தில்தான் இருக்கிறது. வேதாரண்யம் பகுதியில் மிகப் பெரிய பெட்ரோலிய ஊற்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிற இந்த நேரத்திலாவது பெட்ரோ கெமிக்கல் தொழிற்சாலை ஒன்று அங்கு பெரிய அளவில் ஆரம்பிக்கக்கூடிய சூழ்நிலை இருப்பதால், இப்பொழுதே அங்கே பெரிய அளவில் ஒரு தொழில் காம்ப்ளெக்சை அமைக்க எல்லாவித முயற்சிகளையும் இந்த அரசு மேற்கொள்ள வேண்டும். போராட வேண்டிய நிலை வந்தால் போராடி, மத்திய அரசிடம் அங்கு மிகப் பெரிய அளவில் பெட்ரோலிய உற்பத்திக்கான சாத்தியக் கூறுகள் இருப்பதை எடுத்துக்கூறி, உடனே அங்கே பெரிய அளவில் பெட்ரோ கெமிக்கல் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டும். இது பற்றி மக்களுக்கும் இந்த அரசு தெரிவிக்க வேண்டும்.

அடுத்து, கனரகத் தொழில்களைப் பொறுத்தவரையில், பெரிய தொழில்களைப் பொறுத்தவரையில், தொழில்கள் இயந்திரமயமாவதைப் பொறுத்தவரையில், ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். இது பாராளுமன்றத்தில் சொல்ல வேண்டிய கருத்து என்றாலும், மாநில அரசும் இதில் கவனத்தைச் செலுத்த வேண்டும். இன்றைக்கு சிறு தொழில்கள் ஓரளவுக்கு வளர்ச்சி அடைந்திருக்கின்றன. சிறிய தொழில்களை நாட்டிலே பரவலாக நிறைய அமைக்க வேண்டும். பெரிய பெரிய தொழிற்சாலைகளாக, ஆட்டோமேஷன் தொழிற்சாலைகளாக வர வர ஒரு முதலாளிகளுக்குத்தான் நன்மை. அதில் பங்கு பெற்று உழைக்கக்கூடிய மக்களுக்கு அதனால் ஒருவித நன்மையும் ஏற்படாது. இப்படிச் செய்வதன் மூலம் வேலையில்லாத் திண்டாட்டத்தால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் மக்கள், உழைக்கக்கூடிய மக்கள் பெறும் வேலை

1982 மார்ச் 25] (திரு. செ. முத்துசாமி)

வாய்ப்பு இல்லாமல் கஷ்டப்பட வேண்டியிருக்கும். அதோடு மாத்திரமல்லாமல் இன்னொரு பக்கத்திலே 'பாரின் எக்சேஞ்ச்'-ஐ எதிர்பார்த்துக்கொண்டிருக்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. இப்படி பெரிய கனரகத் தொழில்கள் வருவதன் வாயிலாக உற்பத்தியில் ஈடுபட்டிருக்கிற மக்களுக்கும், வேலைவாய்ப்பில்லாமல் தவித்துக்கொண்டு, துன்பப்பட்டுக் கொண்டிருக்கிற மக்களுக்கும் எந்தவிதமான நல்ல நிலையும் ஏற்படப் போவதில்லை.

(பிற்பகல் 12-10)

இன்னொரு அடிப்படை விஷயம் குறித்தும் சிந்திக்க வேண்டும். இந்த நாட்டில் விவசாய உற்பத்தியிலிருந்தும், மலைபடு பொருள்களிலிருந்தும் உற்பத்தியாகும் பொருள்களிலிருந்தும்தான் இந்த நாட்டில் ஏராளமான தொழில்கள் உருவாகின்றன. ஆனால் இந்த வகையில் விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கும் காட்டுப் பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்கும் நாம் விலை எதும் நிர்ணயிப்பதில்லை. இப்படி ஒரு பக்கம் மற்ற விலைகள் உயரும்போது, இந்தப் பொருள்களுக்கு விலை உயர்த்தாமல் இருப்பது என்ற நிலைக்கு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அண்மையில் எஸ்டிமேட்ஸ் கமிட்டியின் சார்பில் பாலக்காடு கூட்டுறவு சர்க்கரை ஆலைக்குச் சென்றிருந்தேன். 30 சதவீதச் செலவில் அங்கே ஒரு வடி சாராய ஆலையை அமைக்க முடியும் என்று சொல்லி, அதற்கான அனுமதியை அந்தக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை கேட்டிருக்கிறது. ஆனால் அதற்கான அனுமதியை ஓராண்டுக் காலத்திற்கு நிறுத்தி வைத்திருப்பதாக அரசாங்கத்திலிருந்து பதில் அனுப்பப்பட்டிருக்கிறது. தற்போது தமிழ் நாட்டில் வடிசாராயம் வடிப்பது போதவில்லை என்ற நிலை இருக்கிறது. அதற்கான முறையில் பல்வேறு அறிக்கைகள், ஸ்டேட்மெண்ட்டுகள் எல்லாம் வருகின்றன. பாலக்காடு கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் வடிசாராயத்தைத் தயாரிப்பதன் மூலம் 30 சதவீதம் செலவில் மிச்சப்படும் என்ற நிலை இருக்கிறது. அங்கேயிருக்கிற பகுதிகளைப் பயன்படுத்தி 30 சதவீதம் நிர்வாகச் செலவில் மிச்சப்படுத்த முடியும் என்று சொல்லுகிறார்கள். எனவே அந்தத் தொழிலை அரசு அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தொழிலமைச்சர் அவர்களும், சிறு தொழில் மற்றும் ஊரகத் தொழில் அமைச்சர் அவர்களும் இங்கே இருக்கிறார்கள். கூட்டுறவுத்

துறையை ஊக்குவிக்கும் வகையில் இதற்கான அனுமதியை அரசு கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் பல்வேறு இடங்களில் கனிமங்களும் மற்ற ரசாயனப் பொருள்களும் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. பூமியிலிருந்து வெட்டி எடுக்கப்படும் கற்களிலிருந்து ரசாயனப் பொருள்களைத் தயாரிக்கும் நிலையும் இருக்கிறது. ஆனால் அது முழு அளவில் இல்லை. எனவே இந்த வகையில் கூட அரசு கவனம் செலுத்தி முனைப்போடு செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாவட்டங்களில் தொழில் மையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அங்கே சென்று தொழில்களைப்பற்றிக் கேட்கும்போது, அங்கே உட்கார்ந்து கொண்டு ஆலோசனை வழங்குகிறவர்கள் ஐந்து அல்லது ஆறு ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த டெக்னாலஜி, பீசிபிலிட்டி-அதாவது சாத்தியக்கூறுகளைப் பற்றித்தான் சொல்லுகிறார்கள். இப்படி ஏழு, எட்டு ஆண்டுகளுக்கு முன்னால் தயாரிக்கப்பட்ட புள்ளிவிவரங்களைத் தந்தால், எப்படி தொழில் முனைவர்கள் அதைப் பயன்படுத்த முடியும்? எப்படி அரசு அவர்களை ஊக்குவிக்க முடியும்? தொழில் துறையில் இன்றைக்கு பம்பாய்தான் இந்தியாவிலேயே முதலிடம் வகித்துக் கொண்டிருக்கிறது. எந்தத் தொழிலானாலும் சரி, அது மருந்துத் தொழிலானாலும் சரி, அதுதான் தலைமை வகிக்கிறது. அங்கே தான் பணத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒருமுறை பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் தேர்தல் கூட்டம் ஒன்றில் பேசுவதற்காக எங்கள் பகுதிக்கு வந்திருந்தார். அப்போது நான் மாணவனாக இருந்தேன். அப்போது அவர் சொன்ன கருத்து இன்னும் என் நினைவில் நீங்காமல் இருக்கிறது. "பம்பாயில்தான் பணம் தூங்கு தூங்கிறேன். கொரட்டைச் சத்தம் கேக்கு தூங்கறேன். அதற்குக் கால்வாய் வெட்ட வேண்டாமா? அது எல்லாப் பகுதிக்கும் வரவேண்டாமா?" என்று அவர்கள் குறிப்பிட்ட கருத்துக்கள் என் நினைவில் இன்னும் பசுமையாக இருக்கின்றன. ஆக, பம்பாய் தொழில் வளர்ச்சியை எய்தியதைப்போல் தமிழகம் இன்றைக்குத் தொழில் வளர்ச்சியை அடைய வேண்டும் என்று நான் விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர்கள் இருவரும் இங்கே இருக்கிறார்கள். அவர்கள் இருவரும் இந்தத் துறையில் மிகுந்த முனைப்பைக் காட்ட வேண்டும். அதன் மூலம் தமிழகத்தை ஒரு பஞ்சாப் போல், ஹரியானா போல் சிறு தொழில் துறையில் முன்னேற்ற

வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் சிறு தொழில் துறையில் உற்பத்தியாகும் பொருள்களை இங்கே பயன்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். வெளி மாநிலங்களிலிருந்து கொண்டு வருவதன் மூலம் வரி அதிகமாகும். இங்கேயே உற்பத்தியாகிற பொருள்களை இங்கேயே அரசுத் துறையிலும் மற்ற துறைகளிலும் வாங்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்தால், அதன் மூலம் தொழில்களை நல்ல முறையில் ஊக்குவிக்க முடியும் என்று சொல்லி, வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : துணைத் தலைவரவர்களே, தமிழக அரசின் தொழிற் கொள்கை மீது என்னுடைய கருத்தைத் தெரிவிப்பதற்கு முன்னால், தமிழகத்தில் தொழில் வளர்ச்சியின் மூலமாகத்தான் தமிழ் மக்களுடைய எதிர்கால வாழ்வு வளமுடையதாக ஆகும் என்பதில் யாருக்கும் இருவேறு கருத்துக்கள் இருக்க முடியாது. எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும், தமிழ் நாடு தொழில் மயமாக வேண்டும், தமிழ் நாட்டு மக்கள் வேலைவாய்ப்பு பெற்று தேவையான பொருள்களையெல்லாம் வேண்டிய அளவுக்குப் பெற்றால் தான், அவர்கள் வாழ்வு வளம் பெறும் என்பதுதான் அனைவரின் கருத்தாகும். அதில் யாருக்கும் இரண்டு கருத்துக்கள் இருக்க முடியாது என்பதை நான் அழுத்தந்திருத்தமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனவே ஆளுகிற கட்சியும் எதிர்க் கட்சியும் இந்த உணர்வோடு தங்கள் கருத்துக்களை எடுத்து வைத்து, தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சிக்குத்தான் தங்களுடைய அரிய தொண்டினைச் செய்கிறார்கள் என்ற உணர்வை வளர்த்துக்கொள்ள வேண்டும். தமிழகத்தில் தொழில் துறை எந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது, அந்த வளர்ச்சிக்கு எந்தெந்தக் கால கட்டங்கள் எவ்வாறு உதவியிருக்கின்றன என்று ஆராய்வதற்கு முன்னால், நாம் ஒரு உண்மையைப் புரிந்துகொள்ள வேண்டும். தமிழ் நாட்டு மக்களைப் பொறுத்தவரை, அவர்கள் பிற மாநிலங்களில் உள்ள மக்களைவிட அமைதியாக வாழ விரும்புகிறவர்கள் என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வார்கள். தொழில் துறையில் ஈடுபடுகிறபோது, அதில் ஏற்படுகிற சிக்கல்களைச் சமாளிக்கிற, அல்லது அந்தச் சவாலை ஏற்றுக்கொள்ளுகிற மனநிலையைவிட, அமைதியாக, மருத நிலப் பகுதிகளில் வாழும் வளத்தைப் பெற்று, நிலத்தை உழுது, கிடைக்கிற தானியத்தை வைத்துக்கொண்டு இன் புற்று, போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து என்று வாழ்ந்து வரும் மனநிலையைப் பெற்றவர்கள் நாம்.

அந்தப் பின்னணியில் பார்க்கும்போது, தொழிலுக்கு வருகிறவர்கள் மிகக் குறைவாகத்தான் இருக்கிறார்கள். எனவே தொழிலில் ஊக்கத்தோடு ஈடுபடுகிற மனநிலையை தமிழக மக்களிடம் உண்டாக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். இளைய சமுதாயத்தினர், கற்றவர்கள், பண வசதி உடையவர்கள் மற்றும் பண வசதியில்லை என்றால் அரசாங்கம் நிறுவியிருக்கும் தொழில் ஊக்க அமைப்புகள் கொடுக்கிற பண வசதியைப் பெற்று, தொழிலில் ஈடுபட்டு, பலருக்கும் வேலைவாய்ப்பைக் கொடுக்க வேண்டும் என்ற உணர்வைப் பெற வேண்டும். இந்த நாட்டுக்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்வதும், இந்த நாட்டில் தொழில் வளத்தைப் பெருக்குவதும் நமது கடமை என்று எண்ணுகிற உணர்வை இந்த நாட்டுச் சிறுவர்களுக்கு 10 வயதிலிருந்தே உருவாக்க வேண்டியது அரசின் கடமையாகும். அத்தகைய உணர்வை நாம் 1947 ஆம் ஆண்டில் சுதந்திரம் பெற்றதற்குப் பிறகுதான் உருவாக்கிக்கொண்டு வருகிறோம். அந்தப் பணியில் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களும், ஆட்சிப் பொறுப்பில் இருக்கிறபோது அவர்களால் ஆன பணியைச் செய்திருக்கிறார்கள் என்ற எண்ணம் நமக்கு வேண்டும். அதில் சிலர் வெற்றி பெற்றிருப்பார்கள். சில காலகட்டங்களில் தோல்விகூட ஏற்பட்டிருக்கலாம். அதன் காரண காரியங்களை ஆராய்ந்து இனி நாம் தோல்வி இல்லாமல், நமது முயற்சிகளில் தொய்வு இல்லாமல் வெற்றி பெறுவதற்கு அது உதவியாக இருக்கும் என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், இங்கே பெரிய தொழில்கள் என்பவை மத்திய அரசின் முதலீட்டின்மீதுதான் தொடங்கப்பட வேண்டியிருக்கின்றன. அதில் 1967 ஆம் ஆண்டுக்குப் பிறகு ஒரு பெரிய தொய்வு ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் சுட்டிக்காட்டுவது தவறல்ல. யார் மீதும் குற்றம் சாட்டுகிற சூழ்நிலை இல்லாமல், தமிழகத்தில் பெரிய தொழிற்சாலைகள் 1965 ஆம் ஆண்டுக்குப் பிறகு அதிகமாகத் தொடங்கப்படவில்லை. 1967 ஆம் ஆண்டில் பேரறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாகவும், தமிழகம் முழுவதும் திரண்டெழுந்ததன் காரணமாகவும் சேலத்தில் இரும்பு உருக்குத் தொழிற்சாலை கொண்டுவரப்பட்டது. ஆனால் அந்தத் தொழிற்சாலைகூட நாம் எல்லோரும் குறிப்பிடுகிற வகையில் ஒரு இரும்பு உருக்காலையாக இல்லாமல், இரும்பு உருட்டாலையாக (ஸ்டீல் ரோலிங் மில்லாக) மாறிக்கொண்டிருக்கிறது. அதிலேயும் அக்கறை காட்டி, மத்திய அரசோடு வாதாடி அந்தத் தொழிற்சாலை எந்த எண்ணத்தோடு தொடங்கப்பட்டதோ, எந்த

எண்ணத்தின் அடிப்படையில் திட்டமிடப்பட்டதோ அந்த நிலையில் அங்கே இயங்க வேண்டும் என்று வற்புறுத்த வேண்டும். இரும்புத் தாதுக்களை எடுத்து இரும்பாக மாற்ற வேண்டும். அந்தப் பகுதிகளின் கனி வளத்தைச் சிறக்கச் செய்ய வேண்டுமே தவிர, பிற நாடுகளிலிருந்து, பிற மாநிலங்களிலிருந்து கொண்டுவருகிற இரும்பை "ஷீட்" ஆக்கும் வேலையைச் செய்ய அனுமதிக்கக் கூடாது. உண்மையிலேயே சேலம் இரும்பு உருக்காலை, உருக்காலையாகச் செயல்படும் நிலையை உருவாக்க வேண்டும். சூழ்நிலைக்கு ஏற்ப மாற்றிக்கொள்ளும் நிலைக்கு நாம் போய்விடக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுத் துறையில் சிறு தொழில்களைத் துவக்குவதற்குத் தொழில் முனைவர்களுக்கு ஊக்கம் கொடுத்து உதவிடவும் அரசு பல அமைப்புகளை ஏற்படுத்தியிருக்கிறது. அப்படிப்பட்ட அமைப்புகள் முறையாகச் செயல்பட்டு, அவைகள் எந்த நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்டனவோ அவைகளுக்காகத்தான் செயல்படுகின்றனவா என்பதையும் அரசு கண்காணிக்க வேண்டும். அவைகளைப் பற்றி நான் சொல்லுகிற கருத்து உண்மையாக இருந்தால், நான் இருக்கிற இடம் காரணமாக ஏதோ குறை சொல்ல வேண்டும் என்ற எண்ணத்தில் சொல்லப்படுகிறது என்று விட்டுவிடக் கூடாது. என்னுடைய கருத்தாக இருந்தாலும், அதில் உண்மை இருக்கிறதா இல்லையா என்று பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

கழிந்த சில ஆண்டுகளாக தொழில் ஆரம்பிக்கிறவர்கள் தமிழகத்தை விட்டு, தென்னிந்தியாவில் இருக்கின்ற பிற மாநிலத்தில் தொழில் ஆரம்பிக்க ஏற்ற சூழ்நிலை அமைகிறது என்று கருதுகிறார்கள் என்று நான் சொன்னால், ஒரு வேளை எதிர்க் கட்சி வரிசையிலிருந்து சொல்லுகிறார்கள் என்ற எண்ணம் ஏற்படுவதற்கு வாய்ப்பு ஏற்படும். இதை ஆளும் கட்சியோடு தொடர்பு வைத்துக்கொண்டு நல்ல தெரிந்த தொழிலதிபராக இருந்து இப்போதும் தொழிலதிபராக இருந்து இந்த அவையில் உறுப்பினராக இருந்த திரு. சித்ரா நாராயணசாமி அவர்கள் சொன்னதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

"I think I have a suspicion that quite a few Tamil Nadu entrepreneurs have already made some plans, and in some cases

several blueprints, for the purpose of establishing industries in the neighbouring States because the conditions there appear to be better in that Governments as such in those States have shown a great deal of enthusiasm and interest in inviting these entrepreneurs to their States. This is not a bad thing by itself. . . . "

என்று திரு. சித்ரா நாராயணசாமி அவர்கள் "அநாட்டமி ஆஃப் இண்டஸ்ட்ரியல் ஸ்டேக்னேஷன்" என்ற தலைப்பில் "ஈஸ்டர்ன் எக்கானமிஸ்ட்" என்ற பத்திரிகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : துணைத் தலைவர் அவர்களே, அதே திரு. சித்ரா நாராயணசாமி அவர்கள்தான் என்னைக் கண்டு 'தமிழ் நாட்டில்தான் இண்டஸ்ட்ரியல் பீஸ் அதிகமாக இருக்கிறது. அந்த ஆஸ்பெக்டில் நிரம்பத் தொழிற்சாலைகளை ஆரம்பிக்கலாம்" என்று சொன்னார்கள்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : துணைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒரு புத்தகத்திலே வந்திருக்கிற கருத்தைப் படிக்கிறார்கள். ஆனால் அமைச்சர் அவர்கள் தனிப்பட்ட முறையில் சொன்னதாகச் சொல்லுகிறார்கள். வெளிப்படையாக உலகத்திற்கு அறிவித்திருக்கிற கருத்தைத்தான் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தனிப்பட்ட முறையில் தனிப்பட்ட ஆளிடத்திலே சொல்லவில்லை. ஒரு அமைச்சரிடத்திலேதான் அப்படிச் சொல்லியிருக்கிறார். ஆனால் நான் பெரிய ஆள் இல்லை.

Thiru A. R. DAMODARAN : Sir, there is no conflict between what the Leader of the Opposition said and the Hon. Minister. Thiru Chitra Narayanaswamy was referring to industrial relations. As far as industrial relations is concerned he has complimented the Hon. the Minister for Labour. But there are other constraints to which my hon. Friend will refer. So, there is no conflict at all.

திரு. ம. சங்கரலிங்கம் : தொழில் தொடங்க வருகிறவர்கள் இப்படிக் கருதுகிறார்கள் என்று அவர் சொன்னதை நான் சொல்லியிருக்கிறேன். தொழிலாளர் உறவு சரியாக இருக்கிறது என்று அவர் சொல்லியிருக்கிறார் என்றால், ஒருவேளை மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் சொன்

னதைப்போல, "எலுமிச்சம் பழம்... கொடுப்பதைப் போல" இருக்குமோ என்னவோ. ஆகவே எலுமிச்சம் பழமா ... என்பதைப் பரிசீலனை செய்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும்,

"By contrast, amongst the four Southern States, Tamil Tamil is the only State which appears still unconducive to entrepreneurs"

என்பது அவருடைய கருத்து. இது சரியா, தப்பா என்ற விவாதத்திற்குள் நான் போக விரும்பவில்லை. அமைச்சர்தான் யோசனை செய்து பதில் சொல்ல வேண்டும். அவர் ஒரு தொழில் நிபுணர், தொழில் ஆரம்பிக்க வேண்டுமென்று என்றுகிறவர். அவருடைய கருத்தே இப்படி இருக்குமானால்,—அது உண்மையான கருத்தாக இருந்தாலும் சரி, பொய்யான கருத்தாக இருந்தாலும் சரி—புதிதாகத் தொழிலைத் தொடங்க நினைப்பவர்கள், இதைப் படித்துப் பார்த்துவிட்டு, தமிழ் நாட்டை விட்டுவிட்டு தென்னகத்தில் உள்ள வேறு மாநிலங்களுக்குப் போக நினைப்பார்களா இல்லையா? ஆகவே இதற்கு ஒரு மறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறதா? மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் சொன்ன மாதிரி, தொழில் உறவு நன்றாக இருக்கிறது என்றாலும், தொழில் ஆரம்பிக்க வேண்டி எல்லாச் சூழ்நிலைகளையும் உருவாக்கித் தர வேண்டியது நம்முடைய கடமையல்லவா என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அப்படி என்ன தொல்லை நம்முடைய தமிழகத்திலே இருக்கிறது என்று பல பேர் கேட்பார்கள். புதிய தொழிற்சாலைகள் ஆரம்பிப்பதுபற்றி ஒரு கருத்தரங்கு நடந்திருக்கிறது. மாண்புமிகு சிறு தொழில் வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் அந்தக் கருத்தரங்கிற்குத் தலைமை தாங்கியிருக்கிறார்கள். அதிலே தொழில் நுட்பப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். அவர் தொழில் முனைவர்களைப்பற்றிச் சொல்லியிருக்கிறார் :

"Mr. P. Sivalingam said that invariably the entrepreneur had to fritter away valuable time in going from pillar to post for meeting officials and getting this and that".

தொழில் தொடங்குவதற்கு தமிழகத்திலுள்ள நிலை என்னவென்றால், pillar to post செல்ல வேண்டியிருக்கிறது. நடைமுறையில் இருப்பதைத்தான் அவர் சொல்லுகிறார். ஒரு தொழிலைத் தொடங்க வேண்டு

மென்றால், ஒரு தூணிலிருந்து துரும்பு வரை ஓட வேண்டியிருக்கிறது, கடைசியில் தூக்கில் போய் மாட்டிக் கொள்ள வேண்டியிருக்கிறது என்று நினைக்கிறார்கள். அது சரிதானா என்பதைப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பெரிய தொழிற்சாலைகள் பல நஷ்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. இதை நான் சொல்லவில்லை. ஆடிட்டர்-ஜெனரல் ரிப்போர்ட்டில் சொல்லியிருக்கிறார்கள். அதற்குக் காரணம் என்னவென்பதைப் பின்னாலே சொல்லுகிறேன். 1979-80 ஆம் ஆண்டு ஆடிட்டர்-ஜெனரல் ரிப்போர்ட்டில் தமிழகத்திலே இருக்கக்கூடிய பல பெரிய ஆலைகளைப்பற்றிச் சொல்லி, அதிலே ஏற்பட்டிருக்கக்கூடிய நஷ்டங்களுக்கான காரணங்களைப்பற்றிச் சொல்லுகிறபோது "The cumulative loss up to 1979–80 amounted to Rs. 149.86 lakhs which works out to 121.30 per cent." என்று சொல்லியிருக்கிறார்கள். 100 ரூபாய் முதல் போட்டிருந்தால் ரூபாய் 120.30 நஷ்டம் வந்திருக்கிறது. 149 கோடி ரூபாய் முதலீடு செய்து ஆரம்பிக்கப்பட்ட பெரிய தொழிற்சாலைகளில் எல்லாம் இப்போது நஷ்டம் 120.31 கோடி ரூபாய் என்ற அளவிற்கு உயர்ந்திருக்கிறது. இப்போது ஆரம்பிக்கப்பட்ட பெரிய தொழிற்சாலைகள் எல்லாம் எந்த நிலையிலே ஓடிக்கொண்டிருக்கின்றன என்பதற்கு அவர்கள் பல காரணங்களைச் சொல்லியிருக்கிறார்கள். ஒவ்வொரு தொழிற்சாலையைப் பற்றியும் ஆராய்ந்து அறிக்கை வைத்திருக்கிறார்கள். உதாரணமாக, விருத்தாசலத்தில் உள்ள செராமிக் ஃபாக்டரியைப் பற்றிச் சொல்லும்போது, 1975-76-ல் ரூபாய் 3.54 இலட்சம் இலாபத்தில் ஓடியிருக்கிறது. 1976-77-ல் 11.34 இலட்சம் நஷ்டத்திலே இருக்கிறது. 1977-78-ல் ரூபாய் 15.20 இலட்சம் நஷ்டம். 1978-79-ல் ரூபாய் 8.31 இலட்சம் நஷ்டம்.

THIRUMATHI TARA CHERIAN : What the Leader of the Opposition is saying is very true. But the one point that I would like to point out here is that these losses were inherited when the organisation was taken over. At the time of take-over, there were losses running to several lakhs of rupees. That point also has got to be considered.

திரு. ம. சங்கரலிங்கம் : 1975-76-ல் இலாபத்தில் ஓடியது அதற்குப் பிறகு நஷ்டத்திலே வந்திருக்கிறது. குறை சொல்லுவதற்காக நான் இதைச் சொல்ல

வில்லை. நஷ்டம் வராமல் பார்த்துக்கொள்ள நாம் கடமைப்பட்டிருக்கிறோம். ஏன் அப்படி வந்தது?

அதே ரிப்போர்ட்டில் பக்கம் 40-ல் ஸ்டோன்பைப்ஸ், விருத்தாசலம், பற்றிச் சொல்லும்போது 1974-75-ல் ரூபாய் 1.81 இலட்சம் இலாபம், 1975-76-ல் 2.86 இலட்சம் ரூபாய் இலாபம், 1976-77-ல் 1.33 இலட்சம் ரூபாய் நஷ்டம், 1977-78-ல் ரூபாய் 3.56 இலட்சம் நஷ்டம், 1978-79-ல் ரூபாய் 0.23 இலட்சம் இலாபம், 1979-80-ல் ரூபாய் 3.18 இலட்சம் நஷ்டம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏன் இந்த நிலை ஏற்படுகிறது என்பதைப் பார்க்க வேண்டும். தொழிலை ஆரம்பிக்கிறவர்களுக்கு ஊக்கம் கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஆரம்பித்த தொழில்கள் நஷ்டம் இல்லாமல் ஓடினால்தானே, புதிதாகத் தொழில் முனைவர்கள் தொழிலைத் துவக்க ஊக்கம் வரும். அரசாங்கத்தின் சார்பில் உள்ள தொழில்களே இவ்வளவு நஷ்டத்தில் ஓடுகிறதென்றால், நாம் ஏன் இதிலே இறங்க வேண்டும் என்று நினைப்பார்கள். அந்த நிலை வராமல் நஷ்டத்தைப் போக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை. நான் இதையெல்லாம் இந்த அரசினுடைய ஆட்சியில் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லலாம். ஆனால் நான் அப்படிச் சொல்ல விரும்பவில்லை. ஏன் ஏற்பட்டிருக்கிறது என்று அரசு பரிசீலனை செய்ய வேண்டிய பொறுப்பில் இருக்கிறது என்பதை மாத்திரம் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

இந்த மாநிலத்தில் மட்டும்தான் இப்படி ஏற்பட்டதா என்று கேட்கலாம். தொழில் முன்னணியில் இருக்கக்கூடிய ஆறு மாநிலங்களில் பல புதிய தொழில்களில் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அதைப்பற்றி ஆராய்ந்து, தொழில் வல்லுநர்களை வைத்து, நான்கைந்து நாள் செமினார் வைத்து ஆராய்ந்துவிட்டு, பிறகு காபினெட் கூடி முடிவு எடுத்து, உண்மைகளை அறிவதற்காக மூன்று பேர் காபினெட் சப்-கமிட்டி போட்டு அவர்கள் ஆராய்ந்து சில ஆலோசனைகளைத் தந்திருக்கிறார்கள். அந்த ஆலோசனையில் ஒன்று, தொழில் நிறுவனங்களுக்குப் பெரிய அதிகாரிகளை அரசாங்கத் துறையில் இருப்பவர்களை அதிகமாக நியமித்து ஓவர்ஹெட் சார்ஜ் அதிகமாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்றும் அதை மாற்றுவதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இன்று விவாதம் முடியும் வரை அவையின் அனுமதியோடு அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

[திரு. ம. சங்கரலிங்கம்] [1982 மார்ச் 25

(பிற்பகல் 12-30)

"The Committee is considering a proposal to regenerate each unit by entrusting the management in each case to experienced professional personnel and not to mere bureaucrats as hitherto."

என்று முடிவெடுத்திருக்கிறார்கள். அமைச்சரவை, தொழில் அமைச்சர் அவர்களுடைய சிபாரிசோடு, தொழில் வல்லுநர்களுடைய சிபாரிசோடு, கேபினெட் சப்-கமிட்டியினுடைய முடிவுப்படி இவ்வாறு இருக்கின்ற தொழில்களை அந்தத் தொழிலிலே அனுபவம் உள்ளவர்கள் கையிலே ஒப்படைப்பது, இதுவரை இருந்து வந்ததான பிரோகிரோட்களிடமிருந்து விடுவிப்பது என்றுதான் முடிவெடுத்திருக்கிறார்கள். அந்த முடிவைத்தான் நாமும் எடுத்திருக்கிறோம்.

21—10—1980-லே பத்திரிகையிலே வந்ததைத்தான் நான் வாசித்தேன். நம்முடைய தமிழ் நாட்டிலே suggestion to improve possible sector unit என்று நாம் முடிவெடுத்திருக்கிறோம். அதற்குப் பின்னாலே செமினார்கள் நடந்திருக்கின்றன. அந்த செமினாரில் இந்த அமைச்சர்கள், தொழில் வல்லுநர்கள் எல்லாம் இருந்திருக்கிறார்கள். அவர்கள் எடுத்த முடிவு என்ன என்றால்

"Some of them were: raising the status of the Bureau of Public Enterprises to that of a National Commission to make it more effective."

இப்போது நிர்வகிக்கக்கூடிய பப்ளிக் சர்விசில் இருக்கின்ற பிரோகிராட்ஸ், ஐ.ஏ.எஸ். ஆபீசர்கள் தரத்தை உயர்த்தி, நேஷனல் கமிஷன் அளவுக்கு உயர்த்திக்கொண்டு, அதன் மூலம் தங்களுடைய பதவியை உயர்த்திக்கொள்வது என்று இருக்கிறார்கள். இந்த இரண்டும் எவ்வளவு டையாமெட்ரிக்கலி ஆப்போசிட்டாக இருக்கிறது என்பதற்காகத்தான் சொல்கிறேன். அதே நேரத்திலே ஏற்பட்டிருக்கின்ற நஷ்டத்தையும் நாம் பார்க்க வேண்டும். ஆகவே இந்தத் தொழிலில் அனுபவம் உள்ளவர்கள் இருந்தால், அவர்கள் படிக்காதவர்களாக இருந்தாலும், பட்டம் பெறாமல் இருந்தாலும், அவர்கள் தொழில் நடத்தி அனுபவம் உள்ளவர்களாக இருந்தால், அவர்களை நியமித்து அவர்களிடம் பொறுப்பைக் கொடுக்க வேண்டும். இந்த அமைப்புகள் எல்லாம் அரசாங்கத்திலேதான் இருக்கும். அவர்கள் வேண்டுமானால் சேர்மனாக,

1982 மார்ச் 25] [திரு. ம. சங்கரலிங்கம்]

மேனேஜிங் டைரக்டராக, டெக்னிக்கல் ஆபீசராக இருப்பார்கள். ஆனால் நான் என்ன நினைக்கிறேன் என்றால், இங்கே இருக்கக்கூடியவர்களை நேஷனல் கமிஷன் அளவுக்கு உயர்த்திவிட வேண்டும் என்று நினைக்கிறார்கள். நான் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலமாக அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இப்போது இருக்கக்கூடிய அமைப்புகளிலே, சிட்கோ அமைப்பிலே இருக்கக்கூடிய அலுவலகங்களை நாம் போய்ப் பார்க்க வேண்டும். அமைச்சர்கள் அறைகூட அப்படி இல்லை. அவர்களை நான் குறைசொல்வதாக நினைக்க வேண்டாம். மக்களுடைய பிரதிநிதிகள் என்ற அளவில் இரண்டு மணி நேரம் பேசிக்கொண்டிருக்கிறோம். நமக்குக்கூட அப்படி ஏர் கண்டிஷன் ரூம் இல்லை. அந்தப் பேரவையில் நடக்கின்ற சத்தம் இங்கேயும் கேட்டுக்கொண்டிருக்கிறது. இந்த சிட்கோ அமைப்பிலே போய்ப் பார்த்துவிட்டு வந்தால், அது தெய்வலோகம் போல் அமைந்திருக்கிறது என்று தெரிகிறது. அமெரிக்காவிலே இருக்கின்ற மாதிரி இருக்கிறது. பர்னிச்சர்க்கு என்று ரூபாய் 1,30 ஆயிரம் அளவுக்குச் செலவு செய்யப்பட்டிருக்கிறது. அது பற்றிய புள்ளிவிவரங்கள் இருக்கின்றன. ரெக்கார்டிலே இருக்கிறது. இந்த அமைப்புக்குள்ளே போய் வந்தாலே நம்முடைய தொழில் துறைக்கு வருகின்ற முனைவர்கள் எப்படி இருப்பார்கள் என்பதைப் பார்க்கலாம், என்ன முறையைப் பின்பற்றுகிறார்கள் என்று பார்க்கலாம். தொழிற்சாலை வருவதற்கு முன்னாலே அப்படிச் செலவு செய்கின்றார்கள். இன்றைக்கு அவர்கள் அதற்கு மேல் போனாலும் போகலாம். அவர்களுக்கு வலியூட்டுகின்ற நிலையிலே தான் இருக்கிறது. நாட்டு மக்களுடைய வரிப் பணம் அப்படிச் செலவழிக்கப் படுகிறது. இதையெல்லாம் நான் ஆதாரத்தோடுதான் பேசுகிறேன். நான் சொல்வதைத் தவறாக எண்ணிக்கொள்ளக் கூடாது. நம்முடைய தொழில் முனைவர்களுடைய முயற்சிகளை ஊக்குவிக்க நிரம்ப நடவடிக்கைகள் எடுக்கப் படுகின்றன என்று சொன்னார்கள். அப்படி எடுத்ததாக இருந்தால், நான் அதைப் பாராட்டுகிறேன். அப்படி எடுக்கப்படுகிறதா? ஒவ்வொரு இடத்திலும் தொழில் மையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்றால், அங்கே இருப்பவர்கள் எல்லாம் தொழில் மையங்களாகத்தான் இருக்கின்றனவே தவிர, அங்கே இருக்கின்ற அதிகாரிகளுக்கு அந்தத் தொழில்பற்றித் தெரியாத நிலை இருக்கிறது. அவர்கள் சொல்வதுபோல், ஏழு, எட்டு வருடங்களாக அவர்கள் யாரோ கொடுத்த ரிப்போர்ட்டை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதை வைத்துக்கொண்டு அவர்களால் சரியாக வழிகாட்ட முடியவில்லை. வழிகாட்டு

இன்ற டிரெயினிங் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு ஏர் கன்டிஷன் ரூம், ஏர் கன்டிஷன் கார் என்பது அவசியமில்லை. அவர்களுக்கு டெக்னிக்கல் நோ-ஹவ் தெரியும் அளவுக்கு டிரெயினிங் கொடுக்கவேண்டும். அப்படி டிரெயினிங் கொடுத்த பிறகு அவர்களை மாற்றக்கூடாது. இன்றைக்கு மேனேஜிங் டைரக்டராகப் போடப்பட்டு கொஞ்ச நாட்கள் கழித்து அவரே சோஷல் வெல்பேர் டைரக்டராக இருப்பார். அங்கே இருந்து ஒருவர் வருகிறார். இங்கேயிருந்து ஒருவர் திடீரென்று போகிறார். இந்தத் துறைக்கு என்று நல்ல ஆபீசர்களுக்கு, தொழில் நுட்பம் உள்ளவர்களை, தகுதியுள்ளவர்களை, இன்டஸ்ட்ரியல் பெண்ட் ஆஃப் மைன்ட் இருப்பவர்களை வைத்துக் கொண்டு டிரெயினிங் கொடுத்துச் செய்ய வேண்டும். தவறு செய்கின்றவர்களை மாற்றலாம். இப்போது மேனேஜிங் டைரக்டரை சேர்மேன் சந்திப்பதில்லை. அவர் இருந்தல், இவர் இருக்கமாட்டார், இவர் இருந்தால் அவர் இருக்க மாட்டார். இது நடக்கிறதா இல்லையா என்பது அமைச்சர் அவர்களுக்கும் தெரியும் அவர்கள் மாமியார் மருமகள் விளையாட்டு விளையாடிக்கொண்டிருக்கிறார்கள். இது என்ன விளையாட்டா ? வரிப்பணத்திலே இப்படி விளையாடினால் எந்தக் காரியத்தை நடத்த முடியும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்பற்றியெல்லாம் விவரமாகச் சொல்வதாக இருந்தால், இந்த அவையில் நன்றாக இருக்காது. இந்த இன்டஸ்ட்ரிஸ் இப்படிப்பட்ட நிலைமைகளிலே இருக்கின்றன. இப்படி அமைக்கப்பட்ட நிறுவனங்களிலே சேர்மன் வந்தால், மேனேஜிங் டைரக்டர் வருவதில்லை. மேனேஜிங் டைரக்டர் வந்தால், சேர்மன் வருவதில்லை. அவரவர்களுடைய தனிப்பட்ட விரோதங்கள் காரணமாக இந்தத் தொழில்கள் பலியாவதா ? அதற்கு அனுமதிப்பதா ? இன்னும் புதிதாக வரக்கூடிய தொழில் முனைவர்களுக்கு உதவுவதற்குத் தயாராக இருக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். இதற்கு இரண்டு உதாரணங்கள் நான் சொல்கின்றேன்.

கன்னியாகுமரி மாவட்டத்திலே கல்குளம் தாலுக்காவில், ஈச்சங்காடு என்ற இடத்திலே 'குமரி மினரல் அன்டு கெமிகல்ஸ்' என்று ரூபாய் 5 லட்சத்தில் ஒரு பிராஜெக்ட் போடப்பட்டிருக்கிறது. அது போடப்பட்டு முதலில் லைசென்ஸ் கொடுத்தார்கள். அங்கே லைசென்ஸ் கொடுத்த பிறகு டி.ஐ.சி.யில் கடன் கேட்டார்கள். கடன் ரூபாய் 2.75 லட்சம் சேங்ஷன் ஆயிற்று. அந்தக் கடன் சாங்ஷன் ஆயிற்று என்றாலும், நிதி உதவி கொடுக்கிறார்கள். அவர்கள் அந்த பிராஜெக்டைப் பரிசீலனை செய்து, அந்த பிராஜெக்ட் தகுதியுள்ளது,

அது ஏற்றுக்கொள்ளத்தக்கது, அதற்கான சூழ்நிலைகள் எல்லாம் இருக்கின்றன என்று தெரிந்துதான் கொடுக்கிறார்கள். அதற்கு முன்னாலேயே அந்த நபர் சுமார் ஒரு லட்சம் ரூபாய் வரையில் செலவு செய்துவிட்டார். கட்டிடங்கள் கட்டினார்கள். கிணற்றை வெட்டி எடுத்திருக்கிறார்கள். மண் அடித்திருக்கிறார்கள். இப்படி ஒரு லட்சம் ரூபாய் செலவாகிவிட்டது. அவருக்கு 20,000 ரூபாய் வரையில் கடன் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் ரூபாய் 1.50 லட்சம் வரையில் செலவு செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு அனுமதி 1979-லே கொடுத்தது. 1981-லே அவர்களிடம் போய் ஹெல்த் டிப்பார்ட்மெண்ட் அனுமதி கொடுக்கவில்லை. முதலிலே அனுமதி தருவதாகச் சொன்னார்கள். எந்தக் காரணத்தினாலேயோ இப்போது அனுமதி இல்லை என்று சொல்லிவிட்டார்கள். அதிலே இவ்வளவு தொகையை அவர்கள் செலவு செய்திருக்கிறார்கள். அதிலே 'பிசிபிலிட்டி' இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். டெக்னிக்கல் நோ-ஹவ் என்ற அளவில்கூட அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொழில் பூச்சி மருந்து தயாரிப்பதற்கு வேண்டிய ஒரு மூலப் பொருள் தயாரிப்பது. அதைத் தடைப்படுத்த வேண்டும் என்று சொல்கின்றார்கள். அப்படிச் சொன்னதற்குப் பிறகு அந்தத் துறையினர் அந்த ரூபாய் 20,000-ஐ திரும்பக் கேட்டிருக்கிறார்கள். அதுவும் 34,000 ரூபாய் என்று கேட்டிருக்கிறார்கள். வட்டியுடன் சேர்த்துக் கேட்கிறார்கள். வசூலிக்க வேண்டும் என்று சொல்கின்றார்கள். அந்த அதிகாரிகள் ஏர் கன்டிஷன் ரூமிலே இருந்துகொண்டு கேட்கிறார்கள். சாதாரண ஓட்டலில் சென்று சாப்பிடுவதானால், ரூபாய் ஒன்று ஆகிறது என்றால், ஏர் கன்டிஷன் ஓட்டலிலே ரூபாய் மூன்று என்று ஆகும். அந்தச் செலவுகள், வட்டி எல்லாம் சேர்த்து அவர்களிடம் ரூபாய் 34 ஆயிரம் வசூல் செய்யச் சொல்லியிருக்கிறார்கள். இதிலே இரண்டு பிரச்சினைகள் இருக்கின்றன. இதைப் பரிசீலனையில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

முதலிலே கடன் கொடுப்பது, சாங்ஷன் செய்வது, பிறகு கேட்பது என்பது இந்த இலாகா சரியாக செயல்படவில்லை என்பதைக் காட்டுகிறது. அவர் அரசியல் காரணங்களுக்காகத் தடுப்பது தப்பு என்று சொல்கின்றார். அவர்கள் அந்த இடத்திலே வேறு என்ன புராஜெக்ட் ஆரம்பிக்கலாம் என்று கேட்கிறார்கள். திரு. ரத்னராஜ், எம்.எல்.ஏ. அவர்கள் கேட்கின்றார்கள். அவர் எம்.ஏ. படித்தவர். அவர் இப்போதும் இருக்கிறார். அவர் இப்போதும்

கேட்கிறார். அந்த இடத்தில் என்ன தொழிலை ஆரம்பிக்கலாம் என்று கேட்டிருக்கின்றார்கள். அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக நடந்தது என்றால், அதுவும் தப்புதான். தொழில் நுட்ப அதிகாரிகள் கவனிக்காமல் இப்படிச் செய்துவிட்டார்கள் என்றாலும் தப்புதான். இரண்டும் தப்புதான். நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால், அந்த பிராஜெக்ட்டிலே இருக்கக்கூடியது ஒரு பிளாண்ட்தான், பெரிய தொழில் அல்ல. ரூபாய் ஐந்து லட்சத்திலே தொழில் என்றால் மிகச் சிறிய தொழில்தான். ஐந்து லட்ச ரூபாய் என்றால் சிறு தொழில்தான். 50 லட்சம் ரூபாய் வரையில் சிறிய தொழில் என்று தான் சொல்லியிருக்கிறார்கள். ஆக ரூபாய் ஐந்து லட்சம் என்று சொல்லும் போது அது 10-ல் ஒரு பங்குதான். சின்னச் சின்ன தொழில்தான். அந்தத் தொழிலிலே ஒரு பிளாண்ட்தான் இருக்கிறது. அந்தத் தொழிலிலே வரக் கூடிய வேஸ்ட் ஆசிட்டாக வருகிறது, சாயில் எல்லாம் ஆசாக இருக்கிறது. அது வெளியே வந்து கலந்தால், குடிநீர் கெட்டுவிடும் என்று சொல்கிறார்கள். அதற்கு அந்த முதல் வேஸ்ட் ஆசிட் திரும்பவும் பயன்படுத்தப்படுகிறது. அவர் இரண்டு ஏக்கர் நிலம் வைத்திருக்கின்றார். அந்த நிலத்தில் தொட்டிகள் கட்டி தேக்கிக்கொள்கிறேன் என்றார்கள். அதற்கும் அவர்கள் ஒரு இரண்டு ஆண்டுகள் கழித்து வெளியேற்றும்போது, குடிநீரில் கலந்துவிடும் என்று சொல்கின்றார்கள். அதை வாரி வைத்தாவது வெளியேற்றிக் கொள்ளலாம் என்று சொல்லியிருக்கலாம். இது தொழில் துறையில் இருப்பவர்களை ஊக்குவிப்பதாக இருக்காது. இதில் கட்சி பார்க்கக்கூடாது. அரசு முறையாக உதவி செய்யவில்லை என்றுதான் சொல்லிக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

இன்னொன்று, சென்னையிலே திருவேணி ஸ்டீல் பிரைவேட் லிமிடெட், அம்பத்தூரில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அது உற்பத்தி செய்வது, கார்பன், அல்லாய் ஸ்டீல், ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் ஷீட் போன்றவை யாகும். அந்தத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு 15 டன் சிமெண்ட் கேட்டிருக்கிறார்கள். முதலிலே 7½ டன் கொடுத்தார்கள். 'பர்னஸ்' எல்லாம் வந்தாகிவிட்டது. 'எரக்ஷன்' ஆகவில்லை. அடுத்த 7½ டன் சிமெண்ட் கொடுக்கவில்லை. பல மாதங்களாக அவர்கள் 'பர்னசை' வைத்துக்கொண்டு, விழித்துக்கொண்

" We have been allotted 15 tonnes of cement by the Collector of Chengalpattu district in his Proceedings Ref No. ... ... dated 12th June 1981, in which the Tahsildar, Saidapet has issued initial permit for 7.5 tonnes in the month of June 1981. This is intended for the erection of furnace oil tank and the tank which has arrived in the month of June 1981 for that purpose is kept unused and is rusting. The factory is suffering for want of production due to this. "

அவர் சொன்னாரே from pillar to post ஓடிக்கொண்டிருக்கிறார்கள் என்று, அதைப்போல கலெக்டர், தாசில்தார், ஆர்.ஐ. என்று தானே ஓடிக்கொண்டிருக்கிறார். from pillar to post என்று இல்லாமல் from Collector to Tahsildar என்று அதை மாற்றிக்கொள்ளலாம். டெக்னிக்கல் எடுகேஷன் யுனிவர்சிட்டி வைஸ் சேன்சலர் அனுபவத்தோடு சொல்லியிருக்கிறார்கள். பல அதிகாரிகள் சொல்லுகிறார்கள். பல தொழில் முனைவர்கள் சொல்லுகிறார்கள். தொழிற்சாலைகளை ஆரம்பிக்க உதவிகளைச் செய்கிறார்களா என்று பார்த்தால், ஒரு இடத்திலும் உதவி செய்யவில்லை என்பது நாம் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டிய ஒன்று என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, தொழில் மையங்கள் ஆரம்பித்துள்ள நிலையில், ஒரு தொழிலை ஆரம்பிக்கிறேன் என்று ஒருவர் சொன்னால், அதிகாரிகள் அவரை விடாமல் தொடர்ந்து போக வேண்டும். எப்படியாவது ஊக்கம் கொடுத்து, தைரியம் கொடுத்து, நல்ல தொழில்தான் என்று தெரிந்து, அவருக்குச் சொல்லி, அவர் அந்தத் தொழிலை ஆரம்பிக்கும் வகையில் தொழில் முனைவர்களுக்கு உதவும் வகையில் இலாக்கா அமைக்கப்பட வேண்டுமென்றும், செயல்பட வேண்டுமென்றும் இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். மைய அரசினுடைய நிதி ஒதுக்கீட்டில், முதலீட்டில் பெரிய தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். அதை உண்மையிலேயே ஏற்றுக் கொள்கிறோம். ஆரம்பிக்க வேண்டுமென்று சொல்லுகிறோம். எல்லோரும் அதை ஒப்புக்கொள்வதன் மூலம் தமிழ் நாட்டில் தொழில் வளம் பெருக வேண்டும், அதற்கு மத்திய அரசு உதவ வேண்டுமென்று சொல்வதில் தவறில்லை. எங்களுடைய கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு.

ஆறுமுகம் அவர்கள் அதைப் பல முறை வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். யார் முதலிலே செய்வது என்றால், நீங்கள்தான் செய்ய வேண்டும். நாங்கள் எதிர்க் கட்சியில் இருக்கிறோம். நீங்கள் செய்தால், நாங்கள் அதை ஆதரிக்கலாம். நீங்கள் அரசு பிரதிநிதி என்ற முறையில், அமைச்சர் என்ற முறையில் அவர்களைச் சந்திக்கிறீர்கள். நீங்கள் முன்வந்து செய்யும்போது, நாங்கள் துணையாக இருக்கிறோம். எங்கேயாவது இடையூறாக இருக்கிறோமென்றால், திருத்திக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர், பேராசிரியர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வேன், யார் இதிலே முன்னாலே செய்வது என்பதிலே நிச்சயமாக நமக்குள்ளே கருத்து வேறுபாடு இருக்கக்கூடாது. ஆனால் வாடிக்கையாக எதிர்க் கட்சியினர் கேட்க ஆரம்பிக்கிறார்கள் என்று சொன்னால்தான், ஆளுங் கட்சியில் இருக்கிறவர்கள் அதைச் செய்வோமென்ற நிலைக்கு வரக்கூடும். அந்த வகையில் எதிர்க் கட்சிக்காரர்கள் பலமாகக் கேட்கிறார்கள் என்று சொன்னால், நாங்களும் மத்திய அரசிடம் அதைப்பற்றி பலமாகக் கேட்க வாய்ப்பாக இருக்கும். அதற்கு பேராசிரியர் அவர்கள் வழிகாட்ட வேண்டும்.

திரு. ம. சங்கரலிங்கம் : துணைத் தலைவரவர்களே, நாங்கள் வற்புறுத்திக் கொண்டே இருக்கிறோம். எங்களுடைய தலைவர்களும் வற்புறுத்திக்கொண்டிருக்கிறார்கள். நாங்களும் இங்கே பேசுகிறோம். இவைகளை எடுத்துப் பயன்படுத்தி, அதைக் கேட்கிறபோது, மேலும் நாங்கள் ஊக்கத்தோடு ஒத்துழைக்கிறோமென்று சொல்லி, அந்தப் பணியில் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜேப்பியார் : துணைத் தலைவரவர்களே, எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சார்ந்திருக்கிற கன்னியாகுமரி மாவட்டத்தில், குளச்சல் என்ற பகுதியில் ஒரு ஹார்பர் கட்ட வேண்டுமென்று நீண்ட நாட்களாகப் பேசி வருகிறார்கள். ஆனால் அவர்கள் இந்தச் சபையில் அதைப்பற்றிப் பேசாமல் இருக்கிறார்கள் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : துணைத் தலைவரவர்களே, அதைப்பற்றி நான் பேச இருந்தேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்கள்

அதை நினைவுபடுத்தியதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். ... இது அவருக்கல்ல, எனக்கும் அல்ல. தமிழ் நாட்டுக்காக.

திரு. எஸ். ஆர். இராதா : துணைத் தலைவரவர்களே, இரண்டு பேரும் சேர்ந்து கன்னியாகுமரி மாவட்டத்திற்காகச் செய்யும் வேலையாகத் தெரிகிறது.

திரு. ம. சங்கரலிங்கம் : துணைத் தலைவரவர்களே, எல்லோரும் கன்னியாகுமரி என்று தனியாக நினைக்கிறார்களே என்றுதான் வருத்தம். அது தமிழ் நாட்டினுடைய ஒரு பகுதி. தமிழ் நாட்டின் தெற்கு எல்லை. உலகம் முழுவதிலிருந்து வந்து பார்க்கும் ஒரு பகுதி என்று நீங்கள் எல்லாம் பெருமை கொள்ளத் தயங்குவது 25 ஆண்டுகளுக்குப் பிறகும் இருக்கிறதென்பதுதான் குறை.

மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். உதவி கொடுக்கிறோம், ஆனால் நாம் அளிக்கும் டெக்னிகல் உதவி சரியாக இல்லை என்று சொல்வேன். பண உதவி கொடுக்கிறோம். வட்டியில்லாக் கடன் கொடுக்கிறோம். உதவித் தொகையைக் கூட்டியிருக்கிறோம். அது மாத்திரம் போதாது. உற்பத்தி செய்கிற பொருள்களை விற்பனை செய்யும் பொறுப்பை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு அவர்களே மார்க்கெட் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றால், அவர்களால் முடியாது. அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதோடு, இன்னும் ஒன்றை அரசு செய்ய வேண்டும். சிறு தொழில்களைப் பொறுத்தவரையில், அங்கே உற்பத்தியாகும் பொருள்களுக்கு ஐந்து ஆண்டுகளுக்கு விற்பனை வரி இருக்கக்கூடாது. பாண்டிச்சேரி மாநிலத்தில் அப்படி வைத்திருக்கிறார்கள். அங்கே ஒரு ஸ்டீல் சேர் 100 ரூபாய்க்கு விற்கப்படுகிறதென்றால், கடலூரில் நம்முடைய அரசு உதவி பெற்று, தொழிற்சாலை அமைத்து, ஸ்டீல் சேர் செய்தால், 110 ரூபாய்க்குதான் விற்க வேண்டும். ஏனென்றால் 10 சதவிகிதம் விற்பனை வரி நாம் வைத்திருக்கிறோம். இந்த நிலையில் அவர்கள் எப்படி போட்டி போட முடியும்? பாண்டிச்சேரியில், தமிழ் நாட்டைச் சேர்ந்த 10 பேர் ஸ்டீல் பர்னிச்சர் உற்பத்தி செய்கிறார்கள், தொழிற்சாலைகளை ஆரம்பித்திருக்கிறார்கள். இங்கே அந்தச் சலுகை இருந்தால், பிற மாநிலங்களிலிருந்தும் இங்கே வருவார்கள். அதைத்தான் அன்று எடுத்துச் சொன்னேன். அப்படி பல வசதிகளைச் செய்ய வேண்டும்.

[திரு. ம. சங்கரலிங்கம்] [1982 மார்ச் 25

நம்முடைய நாட்டில் கனி வளம் மிகுதியாக இருக்கிறது. மண்ணுக்கு அடியில் உள்ள கனி வளத்தைத் தோண்டிப் பல்வேறு தொழில்களுக்கு மூலப் பொருள்களாக்குவதோடு, அதைத் தோண்டி எடுத்துக்கொண்டு வரும் தொழிலையும் ஊக்குவிக்க வேண்டும். அதை ஊக்குவிக்கிறோம். கருங்கல்லை வெட்டி எடுப்பதில் பெரும் லாபமிருக்கிறது என்று அதை அரசு ஏற்று நடத்துகிறதென்று சொன்னார்கள். தனியார் முதலிலே இதிலே ஈடுபட்டு, பெரும் லாபம் கொண்டுவர முடியுமென்று காட்டிய பிறகுதான், அரசு எடுத்துக் கொண்டது. எனவே இந்தத் துறையில் தனியார் ஈடுபட்டால், நாம் ஊக்கம் கொடுக்க வேண்டும். பின்னால் லாபம் வந்தால் அரசு ஏற்றுக்கொள்ளலாம். அதற்கு சட்டம் இருக்கிறது. முதலில் அவர்களை ஊக்குவித்தால்தான் நல்லது. உதாரணத்திற்குச் சொல்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் நிரம்ப மானோசைட் இருக்கிறது. மணவாளக்குறிச்சியில் தோரியம் இருக்கிறது. பல இடங்களில் கந்தகம் இருக்கிறது. காக்கா பொன் என்று சொல்லக்கூடிய உலோகம் இருக்கிறது. சிவகங்கைக்குப் பக்கத்தில் க்ராபைட் இருக்கிறது. ரப்பர் அதிகமாக இருக்கிறது. எனவே இவற்றையொட்டி பல தொழிற்சாலைகளை அந்த மாவட்டத்தில் கொண்டுவருவதற்கு முயற்சி எடுக்க வேண்டும். அதற்குரிய தொழில் நுட்ப ஆலோசனைகளை முனைவர்களுக்குக் கொடுக்க வேண்டும். தொழில் செய்ய முன் வருபவர்களுக்கு உதவ வேண்டும். ஆனால் நேர்மாறாக கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டுமென்று, கூட்டுறவுத் துறையில் ரெஜிஸ்டர் பண்ணி, நான்கு ஆண்டுகள் ஆகியும் இன்னும் ஆலோசனை, அனுமதி கிடைக்கவில்லை. இப்போது அனுமதி வழங்கலாமென்று சொல்லப்பட்டிருக்கிறது. முதலிலே அவர்களுக்குச் சொல்லப்பட்டது, அரசுத் துறையிலே, பப்ளிக் செக்டாரில் நாங்கள் ஆரம்பிக்கப் போகிறோம், ஆகவே கூட்டுறவுத் துறையில் வேண்டாமென்று சொல்லப்பட்டது. இப்போது, நீங்கள் ஆரம்பிக்க ஆலோசனை தருகிறோமென்று சொல்லப்பட்டதாகச் சொன்னார்கள். நம்முடைய நாட்டில் நீண்ட கடற்கரை இருக்கிறது. அதில் கிடைக்கும் பல பொருள்களை வைத்து தொழிற்சாலைகளை ஆரம்பிக்கலாம். சிப்பிகள், ஓடுகள், உமைகள் இவற்றை வைத்து பல தொழிற்சாலைகள் ஆரம்பிக்கலாம். தூத்துக்குடி துறைமுகத்தை விரிவுபடுத்திக் கொண்டிருக்கிறோம். குளச்சல் துறைமுகத்தையும் விரிவு படுத்தினால்தான், அந்தப் பகுதியில் தொழில்கள் வளர்வதற்குப் பயன்படும். அது இயற்கையாக மேற்குக் கடற்கரையில் உள்ள ஒரு துறைமுகம். அதற்குக் கொஞ்சம் நிதி ஒதுக்கியிருப்பதாக அறிகிறேன். அது போதுமானதல்ல

1982 மார்ச் 25] [திரு. ம. சங்கரலிங்கம்]

என்பதைச் சொல்லிக்கொண்டு, இவ்வாறு பலவிதமான தொழில்களை ஊக்குவித்து, தமிழகத்தைத் தொழில் மயமாக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தில் கருத்துக்களைச் சொல்லும் நேரத்தில், ஒன்றைச் சொல்லி முடிக்கிறேன். சிமெண்ட் விநியோகம்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். எந்தெந்த முறையிலே சிமெண்ட் விநியோகிக்கப்படுகிறதென்று சொன்னார்கள். இந்தியத் துணைக் கண்டத்தில் சிமெண்ட் விநியோகம் பற்றிப் பேசாத மாநிலங்களே இல்லை. மராட்டிய மாநிலத்தில் மந்திரி சபையை மாற்றி அமைத்திருக்கிறார்கள். அதிலே முதல் அமைச்சர் பதவியை விட்டு விலகி, வேறொரு மந்திரி சபை வந்திருக்கிறது.

(பிற்பகல் 12-50)

சிமெண்ட் விநியோகத்தைப் பொறுத்தவரையில், அதில் தவறு நடந்தால் அரசே மாறக்கூடிய, ஆட்சியே விலகக் கூடிய அளவுக்கு நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. அந்த அளவுக்கு இது மிகப் பெரிய பிரச்சினைக்குரியது. இதிலே யாருக்கும் இரண்டு வித கருத்துக்கள் இருக்க முடியாது. இதிலே ஊழலே இருக்கக் கூடாது. விநியோகம் செய்வதிலே தவறு இருக்கக் கூடாது. ஏழை யெளிய மக்களுக்குக் குறைந்த விலையில் சிமெண்ட்டை அரசு கொடுக்க வேண்டும். மத்திய அரசு அறிவித்திருக்கிற முறைப்படி தனியாரை அதிக அளவில் ஊக்குவித்தால், அவர்கள் இஷ்டத்திற்கு விலையை ஏற்றிவிடுவார்கள் என்ற எங்கள் கருத்தை வலியுறுத்துகிற நிலையில், அவர்கள் இன்றைக்கு 68 ரூபாய் என்று சொல்லிவிட்டு, இப்போது 70 ரூபாய் வரை விற்கிறார்கள். அதுபோல் 58 ரூபாய்க்கு விற்றதை இப்போது 60 ரூபாய்க்கு விற்றுக்கொண்டிருக்கிறார்கள். கன்ட்ரோல் விலை 37 ரூபாய் என்று இருக்கும்போது, வெளி விலையை வேண்டுமானால் 40 ரூபாய் என்று உயர்த்தியிருக்கலாம். ஆனால் இப்போது வெளி விலை அதிக அளவில் உயர்த்தி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இந்த அரசு சாதாரண மக்களிடத்தில் எவ்வளவு அக்கறை காட்டுகிறது என்பதற்கு இது ஒரு அறிகுறி. இந்த விலை உயர்வை மத்திய அரசுடன் இந்த அரசு தொடர்பு கொண்டு குறைக்க வேண்டும். சிமெண்ட் விநியோக முறை மாற்றப்பட்டிருக்கிறது. உற்பத்தியில் மூன்றில் இரண்டு பங்கை மாநில அரசு விநியோகம் செய்கிறது. அப்படி இரண்டு பங்கை மாநில அரசு விநியோகம் செய்யும்போது அதைச் சரியாகச் செய்கிறதா என்கிற அச்சம் என்னைப் போன்றவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அதற்கு எடுத்துக்காட்டாக, மாண்புமிகு

துணைத் தலைவர் அவர்களே, உங்கள் அனுமதியோடு ஆதாரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். 10—10—1981 அன்று கோயம்பேடு என்ற இடத்தில் உள்ள ஒருவர் சிமெண்ட் வேண்டி 'அப்ளை' பண்ணுகிறார். பிறகு அவருக்கு சிமென்டை எடுக்க கார்டு வருகிறது. இவ்வளவு சிமெண்ட் 'அலாட்' ஆகியிருக்கிறது, இவ்வளவு நாளைக்குள் வந்து எடுங்கள் என்று அதில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அந்த நபர் கார்டில் குறிப்பிட்ட அட்ரசில் இல்லை. ஆகவே அந்த கார்டு 'ரிட்டர்ன்' ஆகிறது. அங்கு கார்டில் குறிப்பிட்டிருந்த ஆள் இல்லை. அடுத்து, திரு. வி. இராமநாதன், நம்பர் 26, கதீட்ரல் ரோடு, சென்னை-86 என்ற முகவரிக்கு 'சிமெண்ட் ரெடியாக இருக்கிறது. வந்து பெற்றுக்கொள்ளவும்' என்று கார்டு வந்திருக்கிறது. அங்கும் ஆள் இல்லை. அந்தக் கார்டு திரும்ப வந்திருக்கிறது. ஆனால் சிமென்ட்டை மறுநாளே எடுத்துப் போயிருக்கிறார்கள். 15—10—1981 அன்று சிமென்டை எடுத்துப் போயிருக்கிறார்கள். அதுபோல கோமதி என்பவர் பெயருக்கு 16, வெங்கடேச நாயக்கன் ஸ்டிரீட் என்கிற அட்ரசுக்கு சிமெண்ட் தயாராக இருக்கிறது என்று சொல்லி கார்டு அனுப்பியிருக்கிறார்கள். அந்த கார்டில் "you must take delivery within seven days on payment of cost. Assistant Manager, Civil Supplies Corporation, Gopalapuram Godown" என்று அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அங்கும் ஆள் இல்லை. இந்த கார்டு கோபாலபுரம் கோடவுனிலிருந்து அனுப்பப்பட்டிருக்கிறது. போஸ்டல் துறையிலிருந்து No such addressee என்று எழுதப்பட்டு திரும்ப வந்திருக்கிறது. ஆனால் சிமெண்ட் எடுக்கப்பட்டிருக்கிறது. 19—10—1981 அன்று திரு. எ. ஆர். கிருஷ்ணமூர்த்தி, பிளாட் 23, மோபரீஸ் ரோடு, சென்னை என்கிற முகவரிக்கு ஒரு கார்டு அனுப்பப்பட்டிருக்கிறது. அதுவும் ஆள் இல்லையென்று சொல்லி திரும்ப வந்திருக்கிறது. ஆனால் சிமெண்ட் மறுநாள் எடுக்கப்பட்டிருக்கிறது. அது போல் 9—1—1982-ல் ஒரு நபருக்கு அனுப்பப்பட்ட கார்டு திரும்பவும் அனுப்பியவர்களுக்கே வந்திருக்கிறது. ஆனால் சிமெண்ட் மறுநாள் எடுக்கப்பட்டிருக்கிறது. இப்படி வேண்டுமானால் எல்லாவற்றையும் பேசுகிறேன். என் கையில் கிடைத்தது இப்படியாக இன்னும் நிறைய இருக்கின்றன. மற்ற இடங்களிலும் இம்மாதிரி நடைபெற்றிருக்கின்றன. அவற்றையெல்லாம், அந்த சம்பந்தப்பட்ட ரெக்கார்டுகளை எல்லாம் நான் இந்த அவையில் கொண்டு வந்து காட்ட முடியாது. ஆனால் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுடைய அனுமதியோடு இவற்றின் எண்ணிக்கையைத் தந்து விடுகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் இங்கே குற்றச்சாட்டுகளைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அது குற்றச்சாட்டு இல்லையென்றால்கூட, தவறுகள் நடைபெற்றால் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டியதுதான். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இந்தக் கார்டுகள் வந்திருக்கின்றன என்றால், அதேசமயத்தில் சிமென்டும் எடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், அது எப்படி நடைபெறும்?

திரு. ம. சங்கரலிங்கம் : உங்களை ஆளுகிற பொறுப்பில் மக்கள் அமர்த்தியிருக்கிறார்கள். ஆட்சி இயந்திரத்தை அப்படிப்பட்ட நிலையில் நடத்திக் கொண்டு போகிறீர்கள். எங்கள் கண்ணுக்குக் கிடைத்ததை, சாதாரண மக்களிடத்தில் இருக்கும் குறையை எங்களிடத்தில் வைக்கும்போது, அதை நாங்கள் இந்த அவையில் வைக்கிறோம். அவர்கள் சொல்லும் பணியை நாங்கள் செய்கிறோம். உங்களுக்கு மாலையைப் பெறவும், எலுமிச்சம் பழம் பெறவும்தான் தெரியும். நான் சொன்ன ஆட்களின் பெயர்களுக்கு அனுப்பப்பட்ட கார்டுகள் எல்லாம் சிவில் சப்ளைஸ் கோடவுனுக்குத் திரும்ப வந்திருக்கின்றன. ஆனால் அதே சமயத்தில் சிமென்டு எடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கான ஆதாரம் இருக்கிறது. எங்களுக்கு எப்படி வந்தது என்று கேட்பது அவசியமில்லாதது. நடக்கின்ற கொடுமைகளைச் சொல்கிறோம். 'இப்படி சொன்னால் போதுமா? ஆதாரம் வேண்டாமா' என்று கேட்கிறார்கள். அதனால் ஆதாரத்துடன் சொல்கிறோம். சிமெண்ட் எடுக்கச் சென்றவர்களிடம் கார்டைக் கொண்டு வாருங்கள், அப்போதுதான் சிமெண்ட் தருவோம் என்று சொல்லியிருக்க வேண்டாமா?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : இதற்கு நான் விளக்கமாகப் பதில் சொல்கிறபோது சொல்கிறேன் என்றாலும்கூட, முன்னாலேயே சில விவரங்களைத் தெரிந்துகொள்ள மாண்புமிகு உறுப்பினரிடத்தில் ஒன்றிரண்டு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் சிவில் சப்ளைஸ் கோடவுனிலிருந்து கார்டு போயிருக்கிறது. ஆனால் ஆள் இல்லை என்று சொல்லி, கார்டு திரும்ப வந்திருக்கிறது. எங்கிருந்து கார்டு அனுப்பப்பட்டதோ அங்கேதான், அதாவது சிவில் சப்ளைஸ் கோடவுனுக்குத்தான் அது திரும்ப வந்திருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். எப்படி உறுப்பினர் கைக்கு வந்திருக்கிறது என்று கேட்டால், 'எப்படியோ வந்திருக்கிறது' என்று சொல்கிறார். அப்படி என்றால், அந்த

ஆளே உயிரோடு இல்லை என்று சொல்கிறாரா? அல்லது வழங்கப்பட்ட கார்டுதாரருக்குரிய சிமென்டை வேறு யாரோ வந்து எடுத்துப் போயிருக்கிறார் என்று சொல்கிறாரா? இதுகுறித்து விவரமாகச் சொன்னால் எனக்கு பதில் சொல்ல வாய்ப்பாக இருக்கும்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : விண்ணப்பங்கள் போலியாகத் தயாரிக்கப்பட்டு, போலியாக சிமென்ட் வேண்டி விண்ணப்பிக்கப்பட்டிருக்கின்றன என்பதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அங்கேயிருந்து 'டெஸ்பாச்' செய்யப்பட்டதற்குப் பிறகு தபால் இலாகாவினரால் சம்பந்தப்பட்டவர் அந்த விலாசத்தில் இல்லை என்று சொல்லி அதை ஒரு வாரகாலம் வைத்திருந்து விட்டு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. சிவில் சப்ளைஸ் கோடவுனிலிருந்து அனுப்பப்பட்டு அங்குதான் திரும்பவும் அந்த கார்டு வந்திருக்கிறது. ஆனால் இன்றைக்கு கார்டில் குறிப்பிடப்பட்டிருக்கிற அளவுக்கு சிமென்டை, செல்வாக்கு படைத்தவர்கள் எடுத்துப் போயிருக்கிறார்கள் என்பதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே திட்டவட்டமாகச் சொல்கிறார்கள். வேண்டுமானால் மாண்புமிகு அமைச்சர் அவர்களே 'குறிப்பிட்ட பெயர்களுக்கு சிவில் சப்ளைஸ கோடவுனிலிருந்து கார்டுகள் அனுப்பப்பட்டிருக்கின்றனவா? கார்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் தான் சிமென்டை எடுத்துச் சென்றார்களா?' போன்ற விவரங்களைக் கேட்டு அறிந்துகொள்ளலாம். இப்படிப்பட்ட முறைகேடுகள் நடந்துகொண்டிருக்கின்றன என்பதைத்தான் இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேற்கோள் மூலம் எடுத்துக்காட்டிச் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. எஸ். ஆர். இராதா : இந்த கார்டுகள் அந்த அலுவலகத்திற்குத்தான் வந்திருக்கின்றன. அந்த அலுவலகத்தில் இருப்பவர்கள்தான் இவர்களிடத்தில் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே அங்கே இருக்கிற, இவர்களுக்கு வேண்டியவர்கள்தான் இந்தத் தவறைச் செய்திருப்பார்கள். அவர்கள் யார் என்பதை இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்ல வேண்டும்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : இந்த அரசு நிர்வாகம் செய்வதற்குத் தகுதியில்லை என்று சொன்னால், நாங்கள் அதை ஏற்றுக்கொண்டு பெயர்களைச் சொல்கிறோம். ஆனால் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் 'இவர்களுக்கு வேண்டியவர்கள்தான் இவர்களிடத்தில் கொடுத்திருப்பார்கள்' என்று

சொன்னால், நான் உள்ளபடியே சொல்கிறேன், கார்டுக்கு உரியவர்கள் அல்லாமல் வேறு யாராவது அங்கிருந்து சிமென்டை எடுத்துப் போயிருந்தால், அவர்கள் மீது கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி இல்லாமல் 'யார் கார்டுகளைக் கொடுத்தது?' என்று கேட்பது ஆட்சியில் இருப்பவர்கள் ஆட்சியில் இருப்பதற்கே தகுதியில்லாதவர்கள் என்பதை நிரூபிப்பதற்கு வாய்ப்பாக அமைந்துவிடுகிறது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சில விவரங்களைச் சொன்னார்கள். மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் அதனைப் பரிசீலனை செய்து யார் குற்றவாளிகளோ அவர்கள்மீது நிச்சயமாக நடவடிக்கை எடுப்பார்கள். ஆனால் நான் இங்கே ஒரு விவரத்தைச் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் பேசுகிறபோது, இந்த ஆட்சி 'நிர்வாகம் செய்ய இயலாக்கு இல்லை' என்பதை இது காட்டுகிறது என்று சொன்னார்கள். ஆனால் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வருகிறேன். பல்லாயிரக்கணக்கான அலுவலர்கள் இருக்கின்ற நிர்வாகத்தில் காட்டிக் கொடுக்கின்ற சில துரோகிகளும் அரசாங்கத்திலே இருக்கிறார்கள் என்பதைத்தான் இந்த சம்பவம் எடுத்துக்காட்டுகிறது என்பதை நான் இந்த அவைக்கு நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : அரசாங்க நிர்வாகத்திலே துரோகிகள் இருக்கிறார்களா இல்லையா என்பதல்ல பிரச்சினை. இந்த அரசின் சிமென்ட் விநியோக முறையிலே தவறு நடந்திருப்பதாக இங்கே குற்றச்சாட்டு சொல்லப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : இதுபற்றி அரசு கவனிக்கும் என்று ஆரம்பத்திலேயே நான் சொல்லியிருக்கிறேன். இப்படிப்பட்ட விவரங்கள் எல்லாம் எப்படி உறுப்பினர்களுக்கு வருகின்றன? நிர்வாகத்தில் இருப்பவர்கள் இன்றையதினம் எப்படி இருக்கிறார்கள் என்பதைச் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களைப் போன்றவர்களுக்கு வேண்டியவர்கள் இன்னும் அரசாங்கத்திலே இருக்கிறார்கள். அவர்களிடத்தில் நாங்கள் மிகுந்த எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதைத்தான் இந்தச் சம்பவம் எடுத்துக்காட்டுகிறது.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : எதிர்க் கட்சிகளுக்கு விவரங்கள் கிடைப்பது என்பது இப்போது மட்டும் நடைபெற்றிருக்கிறது என்பதல்ல. இந்தியாவில் இருக்கக்கூடிய எத்தனையோ எதிர்க் கட்சிகளுக்கு எத்தனையோ சுவடுகள், ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றன. இப்படி கிடைத்த ஆதாரங்களை வைத்து பாராளுமன்றத்தில் எத்தனையோ முறை விவாதங்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன. ஆனால் நல்ல அனுபவம் வாய்ந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நடைபெற்ற சம்பவங்களை நாங்கள் ஆதாரத்துடன் சொல்கிற காரணத்தாலே, அந்த விவரத்தைத் தருகிறவர்களை 'துரோகிகள்' என்று சொன்னால், அப்படிப்பட்ட பட்டத்தைப்பற்றி எங்களுக்குக் கவலையில்லை. ஆனால் முறைகேடு நடந்திருக்கிறதா இல்லையா என்பதுதான் இங்கே பிரச்சினை. விவரத்தைக் கொடுத்தவர்கள் துரோகிகளா இல்லையா என்பதல்ல இங்கே பிரச்சினை. தவறு நடந்திருக்கிறதா இல்லையா என்பதற்குத்தான் பதில் சொல்ல வேண்டும். விவரத்தைக் கொடுத்தவர்கள் 'துரோகிகள்' என்று சொல்வது முறையல்ல.

திரு. ஜெப்பியார் : சில கார்டுகளை இங்கே காண்பித்தார்கள். ஆள் இல்லையென்று திரும்ப அனுப்பப்பட்டிருந்தால், அதை அனுப்பிய அந்த இலாகாவுக்குத்தான் வந்திருக்க வேண்டும். ஆனால் இவர்கள் அதை 'பைலைத் திருடியதுபோல் திருடி, களவாடிக் கொண்டு வந்திருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். அப்படி இல்லையென்றால், இது போலியாகத் தயாரிக்கப்பட்டு கொண்டுவரப்பட்டிருக்கும் என்று நான் உறுதியாகக் கூறுகிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : கார்டுகளைப்பற்றி இங்கே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதை வைத்து நடவடிக்கை எடுப்பதாகவும் இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதன் மூலம் பொது மக்களுக்குப் பயங்கரமான ஒரு பயம் ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. "தபாலில் அனுப்பப்படுகிற கார்டுகள் முறைப்படி தபால் இலாகா மூலம் போய்ச் சேருமா? திருப்பி அனுப்பப்பட்டால், அது திரும்பவும் அனுப்பியவருக்கே வந்து சேருமா?" என்று சந்தேகிக்கின்ற அளவுக்கு, பயம் ஏற்படுகின்ற அளவுக்கு ஒரு பயங்கரமான விவகாரம் இங்கே இந்த 'கார்டு' பிரச்சினையின் மூலம் உருவாகிக் கொண்டிருக்கிறது என்பதை நான் அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(பிற்பகல் 1-00)

திரு. ம. சங்கரலிங்கம் : இதுபற்றி ஒரு காரசாரமான விவாதம் நடந்திருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். ஏனென்றால் நான் ஒரு துறையில் இப்படிப்பட்ட தவறு நடைபெற்றிருக்கிறது என்று இங்கே சுட்டிக்காட்டுகிறேன். பொறுப்பான அவையிலே அதைத் தெரிவிப்பதன் மூலம் அதற்கான பொறுப்பை நான் ஏற்கிறேன். அதைப்பற்றிக் கவலைப்படாமல், "இது எப்படி உங்கள் கையிலே கிடைத்தது?" என்று கேட்டுக்கொண்டிருப்பதில் பயனில்லை. எப்படி இது என்னுடைய கையிலே கிடைத்தது என்ற உணர்வு ஆட்சியில் உள்ளவர்களுக்கு வருவதற்கு முன்னால், இந்தத் தவறு நடந்திருக்கிறதா, அவ்வாறு நடப்பது சரியா என்ற உணர்வுதான் வர வேண்டும். யார் ஆட்சிப் பொறுப்பில் இருந்தாலும், இத்தகைய உணர்வுதான் வர வேண்டும். இத்தகைய முறைகேடு நடந்திருப்பது சரியா? அப்படி நடைபெற்றிருந்தால், அதை விடுவது நல்லதுதானா என்ற உணர்வுதான் ஆட்சியில் இருப்பவர்களுக்கு வர வேண்டும். அப்படிப்பட்ட உணர்வு ஆட்சியில் உள்ளவர்களுக்கு வந்தால்தான், அதிகாரிகளுக்கும் பயம் ஏற்படும், அவர்கள் தவறு செய்யாமலும் இருப்பார்கள். அதற்கு மாறாக இது உங்கள் கையில் எப்படி வந்தது என்று கேட்கும் உணர்வு மேலோங்கினால், அதிகாரிகளைப் பொறுத்தவரையில், "சரி, நம்மைப் பாதுகாக்க ஆட்கள் இருக்கிறார்கள்" என்பது போன்ற பாதுகாப்பு உணர்ச்சி ஏற்பட்டுவிடும். நம்மைப் பாதுகாக்க ஆட்கள் இருக்கிறார்கள் என்று இன்னும் அதிகமான தவறுகளைச் செய்வார்கள். ஜனநாயகத்தில் இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளைச் சொல்லும்போது ஒட்டுமொத்தமாக இப்படிச் சொன்னால் எப்படி? ஆதாரத்தோடு பேசுங்கள் என்று ஆட்சியில் இருப்பவர்கள் சொல்கிறார்கள். எனவேதான் நாங்கள் ஆதாரம் கிடைக்கிற வரை பொறுத்திருந்து, இப்போது அவையில் அதைத் தெரிவிக்கிறோம். இது நடந்தது அக்டோபர் 1981-ல். இருந்தாலும் 25—3—1982 வரை காத்திருந்து ஆதாரங்களைப் பெற்று இங்கே பேசுகிறோம். இதைப்பற்றி விசாரணை செய்யுங்கள் என்றுதான் சொல்கிறேன். வேண்டுமானால் அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டால் இதற்காக அவையின் குழு ஒன்றையேகூட நியமித்து என்னிடம் விசாரணை செய்யலாம். சம்பந்தப்பட்டவர்களையும் வரவழைத்து விசாரிக்கலாம். அதற்கான பொறுப்பை, மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தங்களிடம் விட்டுவிடுகிறேன். விசாரணை செய்து நான் சொன்னது தவறாக இருக்குமானால், என்மீது என்ன நடவடிக்கை எடுத்

122068

வேண்டுமோ அதை எடுத்துக் கொள்ளுங்கள். தவறு இல்லை என்றால், ஆதாரத்தைத் தந்தவர்களைப் பாராட்டக்கூட வேண்டாம், துரோகிகள் என்று சொல்லாமல் இருந்தாலே போதும். இதில் அமைச்சர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று நான் சொல்லவில்லை. அமைச்சரவை இதில் ஈடுபட்டிருக்கிறது என்றுகூட நான் சொல்லவில்லை. எனவே அமைச்சர்கள் இதில் ஆத்திரப்படத் தேவையில்லை. ஆளும் கட்சி ஈடுபட்டிருக்கிறது என்றுகூட நான் சொல்லவில்லை.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலையிடுவதற்காக மன்னிக்க வேண்டுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்கு இதைக் கொண்டு வந்திருக்கிற அங்கேயிருக்கிற பணியாளர் இதையே மேலதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு போயிருக்க வேண்டும். அதன்மீது தக்க நடவடிக்கை எடுக்கலாம். அதை விட்டுவிட்டு வெளியே இருப்பவர்களிடம் காட்டி, இதை அரசியலாக்கக்கூடாது என்றுதான் சொல்ல விரும்புகிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : ஒரு அதிகாரி தவறு செய்யும்போது அதைப்பற்றி மேலதிகாரிகளிடம் முறையிட்டு, அவர்களும் அதற்கு உடந்தையாகப் போய்விட்டால், பிறகு இந்தத் தவறுகள் வெளியே வரவே வராது. ஜனநாயகத்தில் இத்தகைய அவைகளின் மூலமாகத்தான் நாம் அதற்குப் பாதுகாப்பை தேட வேண்டியிருக்கிறது. இந்தத் தகவல்களையெல்லாம் மேல் அதிகாரியிடம் சொல்லி அதன் மூலம் அவர் பழிவாங்கப்படும் நிலை வந்துவிடும் என்ற காரணத்தால், இதற்கெல்லாம் இந்த அவைதான் முறையான பாதுகாப்பாக அமைகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மேலதிகாரிகளிடம் சொன்னால், முறையான பாதுகாப்பு கிடைக்காது என்று நினைத்தால், எங்களைப் போன்று, பொறுப்பில் உள்ளவர்களிடமாவது தெரிவித்திருந்தால், சரியாக இருந்திருக்கும்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : இதில் யார் கொடுத்தார்கள் என்பதல்ல பிரச்சினை. ஒரு அதிகாரியை மீறி அமைச்சர் அவர்களைப் பார்க்கக்கூடிய அளவுக்கு இந்த அரசாங்கத்தில் அரசாங்க ஊழியர்களுக்குப் பாதுகாப்பு இருக்கிறதா என்பதுதான் பிரச்சினை.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : நிச்சயமாக இருக்கிறது. மிகையாக எதையும் சொல்லக்கூடாது என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : இப்படிச் சொன்னதன் காரணமாக எத்தனை அதிகாரிகள் பழி வாங்கப்பட்டிருக்கிறார்கள் என்ற விவரத்தை என்னால் சொல்ல முடியும். அமைச்சர்களிடம் தகவல்களைச் சொல்ல வந்ததன் காரணமாக, எப்படி Head of the Department permission இல்லாமல் அமைச்சரைச் சந்தித்தாய் என்று பார்த்த அதிகாரிகளுக்கு மெமோ கொடுக்கப்பட்டு பழி வாங்கப்பட்ட சூழ்நிலை நிறைய இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குப் பணிவோடு ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சிவில் சப்ளைஸ் இலாக்காவில் தவறு நடந்திருக்கிறதா இல்லையா என்று பரிசிலனை செய்யப்பட வேண்டும். அதுதான் முக்கியம். நான் இங்கே ஆதாரத்தோடு சொல்கிறேன். ஆதாரம் இல்லாமல் சொல்லவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். இத்தகைய உணர்வை ஆட்சியாளர்கள் வளர்த்துக்கொண்டால், இன்னும் அதிகமான தவறுகள்தான் நடைபெறும். தவறு நடைபெற்றிருக்கிறது என்று சொன்னால், அதை விசாரிப்பதற்கான உணர்வை ஆட்சியில் இருப்பவர்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும். மேலதிகாரிகளிடம் சொல்லியிருக்கலாமே என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படித் தெரிவித்தால் அது எப்படி முடியும் என்பதற்கும் நான் ஆதாரம் வைத்திருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்படி கேட்பார் என்பது எனக்குத் தெரியும்.

"சீனியர் ரீஜனல் மேனேஜர், தமிழ் நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் என்பவர் தவறு செய்தவர் ஒருவர்மீது நடவடிக்கை எடுத்திருக்கிறார். என்ன தவறு என்றால் சிமின்ட் விநியோகம் செய்யும்போது, ஒரு முறைகேடு நடைபெற்றிருக்கிறது. சிமின்டில் உள்நாட்டு சிமிண்டு என்றும் வெளிநாட்டு சிமிண்டு என்றும் இரண்டு வகை இருக்கின்றன. பல்க் ஆர்டர் கேட்கும்போது, 50 சதவீதம் உள்நாட்டு சிமிண்டும் 50 சதவீதம் வெளிநாட்டு சிமிண்டும் கொடுக்க வேண்டும் என்று புரசிடிங்ஸ் போட்டு அரசாங்க ஆணையே பிறப்பித்திருக்கிறார்கள். ஒருவர் 100 மூட்டை சிமிண்டு கேட்டால், அவருக்கு உள்நாட்டு சிமிண்ட் 50 மூட்டையும் வெளிநாட்டு சிமிண்டு 50 மூட்டையும் கொடுக்க வேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும் வெளிநாட்டு சிமிண்டு 50 சதவீதத்திற்கு மேல் கொடுக்கப்படக்கூடாது. உள்நாட்டு சிமிண்டு வேண்டு

யானால் அந்த 50 சதவிகிதத்திற்கு மேலும் கொடுக்கலாம். ஆனால் பேர்மிட் நெம்பர் 997810J-ல் திரு. சோகன்லால் மிலா சந்த்—யில், நெம்பர் 696135—என்பவருக்கு வெளிநாட்டு சிமிண்டு 130 மூட்டையும் உள்நாட்டு சிமிண்டு 20 மூட்டையும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த மாதிரி 10 கேஸ்களில் ஒருவர் கொடுத்திருக்கிறார். வள்ளி, திரு. மனியன், திரு. பி. எம். முருகேசன், திரு. அஜீஸ், திரு. ஏ. ரங்கசாமி, திரு. அப்துல் கரீம், திரு. குருமூர்த்தி, திரு. தங்கமணி ஆகிய இவர்கள் ஒவ்வொருவருக்கும் உள்நாட்டு சிமிண்டு எந்த அளவுக்குக் கொடுக்கப்பட்டதோ அதைவிட நான்கு மடங்கு அதிகமாக வெளிநாட்டு சிமிண்டு கொடுத்திருக்கிறார்கள். ஆனால் 50 சதவீதத்திற்கு மேல் கொடுக்கக் கூடாது என்று அரசாணை இருக்கிறது. இது அதிகாரிகளின கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு, இது பெரிய தவறு என்று சொல்லப்பட்டு அவர்மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. கடைசியாக என்னவாயிற்று என்றால், இத்தகைய குற்றங்களையெல்லாம் சொல்லி அவரை எச்சரித்து விட்டு விடுகிறார்கள். இதுதான் மேலதிகாரிகளுக்குத் தெரிவித்ததால் ஏற்பட்ட விளைவு. அவர் ஏன் சஸ்பெண்டு செய்யப்படவில்லை? அவர்மீது ஏன் சரியான நடவடிக்கை எடுக்கப்படவில்லை? எதற்காக இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், இப்படித் தவறுகள் நடைபெறும்போது அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், இறுதியில் என்ன நடக்கிறது என்பதைத் தெரிவிக்கத்தான் இதைச் சொல்கிறேன். சஸ்பெண்டு செய்யப்பட்ட வேண்டியவர் மன்னித்து விடப்பட்டிருக்கிறார் என்றால், தகவல் கொடுத்தவர் என்ன பாடு பட்டிருப்பார், எந்த அளவுக்கு அவர் பாதிக்கப்பட்டிருப்பார், ' என்னென்ன எக்ஸ்பிளனேஷனுக்கு ஆளாகியிருப்பார் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஜனநாயக முறைப்படி, ஜனநாயக நெறிப்படி, தவறு செய்கிறார்கள் என்று தெரிந்தால், அவர்கள்மீது தயவு தாட்சண்யம் காட்டாமல் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தத் தகவலைத் தந்தவர்கள் யார், இந்தக் குற்றச்சாட்டு திராவிட முன்னேற்றக் கழகத்தவர் வழியாக வந்திருக்கிறதா என்பதையெல்லாம் எண்ணிப் பாராமல், எதிர்க் கட்சியினரும் குற்றச்சாட்டுக்களைச் சொல்ல உரிமை உள்ளவர்கள் என்ற உணர்வோடு தவறுகளைக் கண்டுபிடித்து களைந்தால்தகான், இனி எதிர்காலத்தில் இப்படிப்பட்ட தவறுகள் நடைபெறாமல் இருக்கும்.

அதுமட்டுமல்ல, தமிழகத்தில் சென்னை நகரில் "பார்சன் பில்டர்ஸ்" என்ற பம்பாயைச் சேர்ந்த நிறுவனம் ஒன்று இருக்கிறது. அவர்கள் சென்னை

யில் மட்டும் 700 வீடுகளையும் 230 கடைகளையும் கட்டியிருக்கிறார்கள். ஹாஸ்பிடல் கட்டியிருக்கிறார்கள். ஜி. என். செட்டி ரோடுக்குப் பின்புறம் ராம் அபார்ட்மெண்ட்ஸ், பார்சன் அபார்ட்மெண்ட்ஸ் என்று பல்வேறு இடங்களில் கட்டியிருக்கிறார்கள். இவர்களெல்லாம் சிமிண்டுக்கு ' அப்ளை ' செய்து எந்தக் காலதாமதமும் இல்லாமல் அதுவும் வேகமாகவும் ஒழுங்காகவும் பல லட்சக்கணக்கான மூட்டை சிமிண்டைப் பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்கு ஏற்பட்ட நிலை சாதாரண மக்களுக்கு இருக்க வேண்டாமா? அதைத்தானே கேட்கிறோம்.

இந்த மாதம் பத்திரிகையில் ஒரு செய்தி வந்திருக்கிறது. "விக்டிம் ஆப் சிமிண்ட் ரேக்கட்" என்று பத்திரிகையில் செய்தி போட்டிருக்கிறார்கள். சென்னையைச் சார்ந்த மகாலட்சுமி என்பவர் அதில் எழுதியிருக்கிறார். அதில் அவர் சொல்லுகிறார்: ' I am one of the applicant who has been tossed from pillar to post, நான் pillar to post க்கு தள்ளப்பட்டேன் என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். மாண்புமிகு அமைச்சர்களுக்கு அத்தகைய நிலைமை இல்லை. pillar to post க்குப் போகாமல் ஒழுங்காகக் காரில் போய்க்கொண்டிருக்கிறார்கள். ஆனால் மற்றவர்களெல்லாம் அலைந்து கொண்டிருக்கிறார்கள். அவர் இன்னும் தெளிவாகச் சொல்லுகிறார்

I am a victim in this game of money openly played by the Tahsildar.

அதில் எல்லா விவரத்தையும் சொல்லியிருக்கிறார். எந்தத் தேதியில் நான் அப்ளிகேஷன் கொடுத்தேன், எந்த நாளில் தாசில்தாரைப் போய்ப் பார்த்தேன், எப்போது கலெக்டரைப் போய்ப் பார்த்தேன், அதெல்லாம் என்னவாயிற்று என்று பத்திரிகையில் விவரமாக அவர் எழுதியிருக்கிறார். பார்சன் அபார்ட்மெண்ட் பில்டர்களுக்கு லட்சக்கணக்கான மூட்டைகள் ஒழுங்காகக் கிடைக்கும் போது—அதுவும் கார்டு போட்டுக்கூட அல்ல—அவர்கள் கேட்ட உடனே அவர்களுக்கு சிமிண்டு கிடைத்திருக்கிறது, இந்த அம்மையாருக்கு சிமிண்ட் கிடைக்கவில்லை. இதையெல்லாம் இந்த அரசு செய்வதாக நான் சொல்லவில்லை. ஆனால் அதிகாரிகள் இதைச் செய்கிறார்கள். நீங்கள் ஏமாற்றப்படுகிறீர்கள் என்றுதான் சொல்லுகிறேன். அல்லது அவர்களுக்கு நீங்கள் உடந்தையாக இருக்கிறீர்களோ என்று எண்ணத்தக்க வகையில் நீங்கள் நடந்து கொள்கிறீர்கள். அந்த வகையில் இனியும் நீங்கள் உங்கள் வாதங்களை எடுத்து வைக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். இதைச் சொல்ல

தருகுக காரணம் நீங்கள் அந்துலே மாதிரி அல்ல என்றாலும், அடுத்த மாதத் திறகும் இத்தகைய நிலைமைகள் தொடராமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக இந்த அவையில் இவ்வளவு நேரம் தொழில் கொள்கையின்மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பு தந்தமைக்கு நன்றி கூறி அமைகிறேன்.

(பிற்பகல் 1-10)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தொழில் கொள்கை அறிக்கையின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் ஆறு பேர் தங்களுடைய மேலான கருத்துக்களையெல்லாம் அரசினுடைய பார்வைக்காகவும், பரிசீலனைக்காகவும், மிக அழுத்தமான உணர்வுகளோடு வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு முதற்கண் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டு, அவர்கள் தங்களுடைய பேச்சுக்களின் இடையிலே சொன்ன அனைத்து உணர்வுகளுக்கும் முடிந்த அளவிற்கு இங்கே சில விவரங்களைச் சொல்லிவிட்டு, மற்ற கருத்துக்களின்மீது தொடர்ந்து உரிய நடவடிக்கைகளை எடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த விவாதம் தொடங்குகிற நேரத்தில் கண்ணியமிக்க இந்த மன்றத்தில் இருக்க வேண்டிய நான் அப்போது இருக்க முடியாத நிலை இருந்தது. பேரவையில் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே இருந்த காரணத்தாலே, அது விரைவாக முடிந்துவிடும், முடிந்தவுடன் இங்கே வந்து கடமையாற்றலாம் என்று கருதிக் கொண்டிருக்கிற நேரத்தில் சற்று காலதாமதமாகி விட்டது. எனவே உரிய நேரத்தில் இங்கே வந்து இருக்க முடியாததற்காக மாண்புமிகு உறுப்பினர்கள் பொருத்தருள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே மதிப்பிற்குரிய தலைவர் திரு. சங்கரலிங்கனார் அவர்கள் பல நல்ல கருத்துக்களையெல்லாம், தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சி கருதியும், ஒட்டுமொத்தமாக தமிழகம் விரைவாக வேகமாக தொழில் வளம் பெற்று இங்கே இருக்கிற இல்லாமை பேதங்கள், ஏற்றத்தாழ்வுகளையெல்லாம் போக்க வேண்டுமென்ற நல்ல உணர்வோடும் பல கருத்துக்களை இங்கே எடுத்துச் சொன்னார்கள்.

குறிப்பாக அதற்கு முன்னோடியாக அவருடைய கவனத்திற்கு ஒரு உணர்வைச் சொல்லிவிட்டு பார்வைக்கு, பரிசீலனைக்கு சில உணர்வுகளை நான் வைக்க விரும்புகிறேன். எனது அன்பிற்கும், அருளுக்கும் உள்ள மாண்புமிகு முதல்வர், புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, சிறு தொழில்கள், ஊரகத் தொழில்கள் என்று கருதப்படுகிற அந்தப் பிரிவு அளப் பரிய நல்ல பல தொடர் விளைவுகளை, விரிவாக்கக் கூடிய பணிகளை ஆற்றி யிருக்கிறது என்பதை பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதற் கான விவரங்களை, விளக்கங்களை, தேவைப்பட்ட புள்ளிவிவரங்களைத் தொடர்ந்து அவ்வப்போது எடுத்துக்காட்டவிருக்கிறேன்.

முதற்கண் 1977 ஆம் ஆண்டு மக்களுடைய ஒப்புதலோடும், மக்களுடைய அங்கீகாரத்தோடும், இரண்டாவது முறையாக மூன்று ஆண்டுகளில் கோட் டைக்கு வந்து பொறுப்பேற்ற பிறகு மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1977 ஆம் ஆண்டிலிருந்து இந்த முனையில், இந்தத் துறையில் ஒரு மாற்றத்தை, வேகத்தை உருவாக்க வேண்டுமென்ற அடிப்படையில் பல நடவடிக்கைகளை, பல வசதிகளை, பல ஊக்கங்களை, பல ஆர்வங்களை உருவாக்கியதன் காரண மாக, சிறு தொழில் என்பது அகில இந்திய மட்டத்திலே உள்ள 22 மாநிலங் களில் தமிழ் மாநிலம் முன்மாதிரியான மாநிலமாக இருக்கிறது என்று சொல்லத் தக்க அளவிற்கு இன்றையதினம் நிலைமைகள் வளர்ந்திருக்கின்றன. மத்திய அரசு அண்மையில் ஒரு அறிக்கையை வெளியிட்டிருந்தது. தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், 324 மாவட்ட மையங்கள்—டிஸ்ட்ரிக்ட் இன்டஸ்ட்ரியல் சென்டர்ஸ்—இருக்கின்றன. இந்த மாவட்ட மையங்கள் எப்படி பணியாற்று கின்றன, எத்தனை பேருக்கு வேலை வாய்ப்பு உருவாக்கித் தந்திருக்கின்றன, வங்கிகளிலிருந்து எவ்வளவு பணத்தைப் பெற்றுத் தந்திருக்கின்றன, எப்படி சீரான காரியங்கள் தொடர்ந்து தொய்வு இல்லாமல் நடைபெற்றிருக்கின்றன என்பதை அறிவதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழு பரிசீலனை செய்து, 22 மாநிலங்களில் உள்ள மையங்களைப்பற்றி வெளியிட்ட அறிக்கையில் தன்னுடைய கருத்தைத் தெரிவித்திருக்கிறது. நான் ஏற்கெனவே தொடக்கத் திலே சொன்னதுபோல கடந்த ஆண்டுக் காலத்திலே கூடுதல் வேலைவாய்ப்பு களை விரிவாக்குவதற்காக, நிலத்தைக் கொடுத்து அங்குள்ள நலிந்த மக்கள் மத்தியிலே புதிய எழுச்சியை உருவாக்குவதற்காக தொடர்ந்து தொய்வு இல்லா மல் பல முறைகளை, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் பேச்சுக்களில் எடுத்துச் சொன்னதைப்போல, செய்து தந்திருக்கிறோம். மத்திய அரசு

(திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி) [1982 மார்ச் 25]

அதனை தன்னுடைய அறிக்கையின் வாயிலாக குறிப்பிட்டிருக்கிறது. வேலை வாய்ப்பைப் புதியதாக உருவாக்கிய மாநிலங்களில் தமிழ் நாடு முதன்மையாக நிற்கிறது என்ற விவரத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

The additional employment generated per DIC during 1980-81 was the highest in the case of Tamil Nadu

இதுவரையில் நமக்கு இருந்த உணர்வு என்னவென்றால், குஜராத் தான் தொழிலில் முன்னணியில் இருந்தது, மகாராஷ்டிரா தான் முன்னணியில் இருந்தது, ஒரிசா தான் முன்னணியில் இருந்தது என்று சில நிலவரங்களை வைத்துச் சொல்லுவது வழக்கமாக இருந்தது. இன்றைக்கு சிறு தொழிலைப் பொறுத்த வரையில், நான்கு ஆண்டுக் காலத்திலே வேலைகளை உருவாக்குவதிலே, குஜராத், பஞ்சாப், ஒரிசா போன்ற மாநிலங்களைவிட 1980-81 நிதியாண்டில் தமிழ் நாடு முன்னணியில் இருந்தது என்ற விவரத்தைச் சொல்லியிருக்கிறார்கள். தமிழ் நாட்டில் 5,920 பேருக்கும், குஜராத்தில் 5,406 பேருக்கும், பஞ்சாபில் 5,372 பேருக்கும், ஒரிசாவில் 5,363 பேருக்கும் என்ற விவரத்தைச் சொல்லியிருக்கிறார்கள்.

அதைப்போலவே வங்கிகளின் மத்தியிலிருந்து இன்ஸ்டிடியூஷனல் கிரடிட்டைப் பெற்றுக்கொள்வதில் தமிழகம் கணிசமான அளவிற்கு இன்றையதினம் வெற்றி பெற்றிருக்கிறது என்ற விவரத்தையும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

The amount advanced per D.I.O. during 1980-81 was the highest in the case of Gujarat closely followed by Tamil Nadu.

குஜராத்தும், தமிழகமும்தான் இன்றைக்கு வங்கிகளின் மத்தியிலிருந்து இன்ஸ்டிடியூஷனல் கிரடிட்டை சிறு தொழில் முனைவர்களுக்காக வாங்கித் தருவதில் முன்னணியில் இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள்.

புதியதாக தொழிலை ஆரம்பிக்கிறவர்களுக்கு உற்சாகத்தை ஊட்டி அவர்களுக்குத் தேவைப்பட்ட புராஜெக்ட் ரிப்போர்ட் கொடுத்து, மற்ற வசதிகளைக் கொடுத்து அவர்களை ஊக்குவிக்கிற நேரத்தில் அடையாளம், இனம் காண்பதில் தமிழ் நாடு முன்னணியில் இருக்கிறது என்ற விவரத்தையும் சொல்லியிருக்கிறார்கள்.

In terms of the number of entrepreneurs identified, the performance per DIC during 1980-81 was the highest in respect of Tamil Nadu

1982 மார்ச் 25] [திரு. கே. ஏ கிருஷ்ணசாமி]

என்று சொல்லி அதற்கடுத்து குஜராத் போன்ற மாநிலங்கள் வந்திருக்கின்றன என்ற விவரத்தை, இதற்காக மத்திய அரசு நியமித்த குழு சொல்லியிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே சென்ற ஆண்டு, 1981 ஆம் ஆண்டு டில்லியில் All India Small Scale Industries Board என்ற வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு மாநிலமும் சிறு தொழிலை எப்படி வளர்க்கிறது, மேலும் என்ன வசதிகளைச் செய்து கொடுத்து ஊக்குவிக்க வேண்டும் என்பதைக் கண்டறிவதற்காக மத்திய சர்க்காரில் இருக்கின்ற அந்தக் குழு தொழில் அமைச்சர் தலைமையில் நடப்பது வாடிக்கை. சென்ற முறை, நான்கைந்து மாதங்களுக்கு முன்பு டில்லியில் மாண்புமிகு திரு. திவாரி அவர்கள் தலைமையில் நடைபெற்றபோது, இன்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. தாஸ் அவர்களும், மற்ற உறுப்பினர்களும் குறிப்பிட்டதைப்போல, உரிமங்கள் வழங்குவதில், அரசுத் தரப்பிலே உரிமங்கள் வழங்குவதில் உள்ள சிரமங்களைப் பற்றியெல்லாம் விவரமாக எடுத்துச் சொன்னார்கள்.

(பிற்பகல் 1-20)

அந்த வகையிலே இங்கே நாம் நம் மாநிலத்தைப்பற்றிக் குறைகள் சொல்லிக் கொண்டிருக்கிறோம், சில சிக்கல்கள் இருக்கலாம், ஆனால் ஒட்டுமொத்தமாகப் பார்க்கின்ற நேரத்திலே தமிழ் நாட்டிலே, நம் மாநிலத்திலே கையாளப்படுகின்ற முறைகளைத்தான் மற்ற மாநிலங்கள் முன்மாதிரியாகக் கொண்டு இருக்க வேண்டும் என்று கருதுகிறார்கள். அப்படி அவர்களுக்குக் கருத்து அனுப்புகின்ற அளவுக்கு நாம் ஒரு நம்பிக்கையை வளர்த்திருக்கிறோம் என்று சொல்லிக்கொள்கிறேன். அவர்கள் சொல்கின்றார்கள்,

"the steps taken by the Government of Tamil Nadu regarding screening of tiny units for obtaining approval from various Departments should be recommended to all the States"

என்ற வகையிலே, மற்ற மாநிலங்களிலேகூட, சின்னஞ்சிறு தொழில்கள், ரூரல் ஏரியாக்களிலே உருவாக்குகின்றபோது, இந்த முறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள்.

அடுத்து, நம்முடைய மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒரு விவரத்தைப் படித்துக் காண்பித்தார்கள். திரு. சித்ரா நாராயணசாமி என்ற ஒரு தொழில் முனைவர் தமிழ் நாட்டிலே இருக்கின்றதாகச் சொல்லப்படுகின்ற ஒரு நிலவரத்தைப்பற்றி கடந்த ஆண்டு 'ஈஸ்ட்டர்ன் எகானமிஸ்ட்' என்ற பொருளாதாரப் பத்திரிகையில், அக்டோபர் மாதத்தில் தமிழ் நாட்டைப் பற்றித் தனிச் சிறப்பிதழாக ஸ்பெஷல் சப்ளிமெண்ட் அக்டோபர் 1981-ல் வெளியிட்ட அளவிலே, அந்தப் பத்திரிகையில் அவர்கள் எழுதியுள்ள கட்டுரை பற்றிச் சொன்னார்கள். ஒரு பகுதியை எடுத்துக்காட்டி "இங்கே இருக்கின்ற தொழில் முனைவர்கள் எல்லாம் தமிழ் நாட்டை விட்டு பிற பகுதிகளுக்கு, தென் பகுதிக்கு, கேரளா போன்ற பகுதிகளுக்குப் போகின்றார்கள், கர்நாடகம் போன்ற பகுதிகளுக்குப் போகின்றார்கள். அதனால் தொழில்கள் வெளி மாநிலத்திற்குப் போகின்ற சூழ்நிலைகள் இருக்கின்றன" என்று எடுத்துக் காட்டி "அனாட்டமி அஃப் இன்டஸ்ட்ரியல் ஸ்டேக்னேஷன்" என்ற வகையிலே தலைப்பிட்ட ஒரு கட்டுரையைச் சுட்டிக்காட்டினார்கள். அதே சிறப்பு வெளியீட்டில் வேறு இரண்டு வகையான அறிஞர்களும் எழுதியிருக்கிறார்கள். இன்று எப்படி திரு. சித்ரா நாராயணசாமி அவர்கள் ஒரு தொழில் முனைவரோ அதுபோன்ற ஒருவர், இன்றைக்கு ராம்கோ சிமெண்ட்ஸ் என்ற சிமெண்ட் நிறுவனத்தை நடத்திக்கொண்டிருக்கின்ற திரு. பி. ஆர். ராமசுப்ரமணிய ராஜா என்பவர். இந்தக் கட்டுரைக்கு முன் கட்டுரை அவர் எழுதியிருக்கிறார். "இன்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் அஃப் தமிழ் நாடு" என்ற வகையில் அவர் வேறு ஒரு கோணத்திலே பரிசீலனை செய்திருக்கிறார்கள். திரு. சித்ரா நாராயணசாமி அவர்கள் ஒரு கோணத்திலே சில முடிவுகளைச் சொல்லியிருக்கிறார்கள். திரு. ராமசுப்ரமணிய ராஜா அவர்கள் அவர் கோணத்திலே ஆராய்ந்து சில முடிவுகளைச் சொல்லியிருக்கின்றார்கள். அதற்குப் பிறகு டாக்டர் நடராஜன் அவர்கள் எழுதியிருக்கிறார்கள். அவர் ஒரு பொருளாதாரக் கண்ணோட்டத்தில் கட்டுரை எழுதியிருக்கிறார்கள். அவர் நாகர்கோவிலைச் சேர்ந்தவர். டாக்டர் நடராஜன் அவர்கள் வேறு கோணத்திலே தமிழ் நாட்டிலே தொழில்கள் எப்படி வளர்ந்திருக்கின்றன, வளர்ந்து கொண்டிருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். அவர் வேறு கோணத்திலே பார்க்கிறார்கள். ஆக இந்தச் சிறப்பு இதழிலே பல்வேறான கருத்துக்கள் இருக்கின்றன. அதிலே ஒரு கருத்துதான் திரு. சித்ரா நாராயணசாமி அவர்கள் சொல்லியிருக்கின்ற கருத்து. அது மட்டுமல்ல. அவர்கள்

அந்தக் கருத்து சொன்னார்கள். அதை நாம் ஒரு கருத்தாகத்தான் எடுத்துக் கொள்கிறோம். அதில் எவ்வளவு கட்டுப்பாடு இருப்பதால் அதைப்பற்றிய சில கருத்துக்களை நானும் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அந்த "இன்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் ஆஃப் இந்தியா" என்ற கட்டுரையில், அதே "ஈஸ்ட்டர்ன் எகானமிஸ்ட்" என்ற பத்திரிகையிலே திரு. பி. ஆர். ராமசுப்ரமணிய ராஜா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் :

"The last two appeared slightly different from the earlier eight years in the sense that the State Government had taken upon itself a major programme of industrialisation."

கடந்த இரண்டு ஆண்டுகளாக ஒரு தேக்கம் இல்லாமல் வேகமாக விரைந்து தொழில்கள் வளர்வதற்கான பல நடவடிக்கைகளை இந்த அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு எடுத்து வருகிறது என்று சொல்லியிருக்கிறார்கள்.

"The establishment of many sugar factories, a cement factory, Tuticorin Alkaline Chemical, Electronics Industrial Estate, Home Industrial complex are all indicative of this development" என்று சொல்லியிருக்கிறார்கள்.

இவற்றையெல்லாம் சொல்லிய பிறகு, தூத்துக்குடியிலே ஆல்கலி கெமிகல்ஸ், ஹொசூரிலே இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் இப்படி பல தொழில்கள், சிமெண்ட் பேக்டரிகள் என்று கடந்த இரண்டு மூன்று நான்கு ஆண்டுகளில் உருவாகியிருக்கின்றன. இது தொழில் வளர்வதற்கான அறிகுறிகள். அவைகளை நிறைவேற்றுவதற்கான . . .

திரு. ஆற்காடு நா. வீராசாமி : நான்கு ஆண்டுகள் இல்லை.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : 1977-லே நீங்கள் போட்ட குப்பைக்கூளங்களைக் களைவதற்கே 2, 3 ஆண்டுகள் ஆகியிருக்கின்றன.

திரு ஆற்காடு நா. வீராசாமி : ஒரு அமைச்சர் அவர்களே இப்படிப் பேசுகின்றார்கள் என்றால் எப்படி? யார் குப்பைக்கூளங்களைப் போட்டார்கள் என்று பேச ஆரம்பித்துவிட்டால் எப்படி? அப்படி இல்லை என்று சொல்கின்றார். அதற்கு உறுப்பினர்கள் ஒரு விளக்கம் கேட்கிறார்கள். இந்தக் கட்டுரையைப் படித்துவிட்டு 1980லிருந்து என்று சொல்கின்றார்கள்.

ஆனால் கட்டுரையைப் படித்துவிட்டு அடுத்த வரியிலே " 4 ஆண்டுகளிலே புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியிலே. . ." அமைச்சரவர்கள் எதை வேண்டுமானாலும் பேசிக்கொள்ளலாம், நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். நான் கேட்பது அவர்கள் எந்த வருடத்திலே என்று சொன்னார்கள் என்பதுதான். அதற்கு 1977-லே ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு குப்பைக் கூளங்களைக் களைவதாகச் சொன்னார்கள். ஆத்திரத்தோடு பேசுகிறார்கள். நாங்கள்கூட அப்படிப் பேசுவதற்குத் தயார்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, 4 ஆண்டுகளில் என்ன வந்திருக்கிறது என்று அவர் சொல்லியிருக்கிறார்.

" The establishment of District Industries Centres in every district has accelerated the growth of small scale industries during the last two years "

என்று அவர் சொல்லி, இதை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் வந்த பிறகு முயற்சி எடுத்து இந்தத் தொழில்கள் வளர்ந்திருக்கின்றன, வேகமாக இருக்கின்றன என்ற விவரத்தைச் சொல்கின்றார்கள். டாக்டர் நடராசன் அவர்கள் அப்படிச் சொல்லியிருக்கிறார்கள். திரு. சித்ரா நாராயணசாமி அவர்கள் புள்ளிவிவரங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பின்னாலே டாக்டர் நடராசன் அவர்கள் இப்படிச் சொல்லியிருக்கிறார்கள். இங்கே அடிக்கடி சொல்வதுபோல, மத்திய அரசின் முதலீடு இல்லாததாலே இங்கே ஒரு தேக்கம் ஏற்பட்டிருக்கிறது, ஒரு தொய்வு ஏற்பட்டிருக்கிறது, ஒரு வெற்றிடம் ஏற்பட்டிருக்கிறது. 1967 வரையில் மத்திய அரசினுடைய உதவி இருந்ததுபோல, அதற்குப் பிறகு இல்லை. 1977-க்குப் பிறகு நாம் குறிப்பாக சிறு தொழில்கள் ஊரகத் தொழில்கள் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு எடுத்த முயற்சிகளின் காரணமாக ஒரு மாறுதல் ஏற்பட்டிருக்கிறது என்பதை, நான் சொல்லவில்லை, உறுப்பினர் சொல்கின்ற திரு. சித்ரா நாராயணசாமி போன்ற ஒரு பொருளாதார நிபுணர் இன்றைக்குச் சொல்கின்றார். " வெற்றிடம் இருந்தது. அந்த வெற்றிடம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி தோன்றிய பிறகு நிரப்பப்பட்டுள்ளது. இது என்னுடைய உணர்வுகள், என்னுடைய கருத்துக்கள் " என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், மிக அழகாகச் சொல்லியிருக்கிறார்கள்.

" the vacuum created by the declining Central investment was appreciably made good by the resilience of the small units sector and a more active role by the State Government "

" the middle units continued their buoyancy in respect of numbers, output and employment "

" In employment especially they ranked first among the States of India accounting for about 15% of the all-India total. The growth of the Industrial co-operatives too was impressive during the period. The State Government has also set up a number of financial and other agencies like the SIPCOT, SIDCO, THC and TIDCO to promote new activities "

இந்த நான்கு ஆண்டுகளாக ஒரு வெற்றிடம் ஏற்பட்டிருந்தது. தொய்வு ஏற்பட்டிருக்கிறது. அந்தத் தொய்வு, அந்தத் தேக்கம் இந்த 4 ஆண்டுகளில் சிறு தொழில்கள் வளர்ச்சி ஏற்படுத்தியதின் காரணமாக நீக்கப்பட்டிருக்கிறது. அந்த வெற்றிடம் நீக்கப்பட்டிருக்கிறது. அது மீண்டும் உயிர்ப்பிக்கப் பட்டிருக்கிறது என்ற விவரத்தைச் சொல்லியிருக்கிறார்கள். என்று சொல்லி அந்த நிறுவனத்தின் வாயிலாக இன்றைக்கு வெற்றிடம் நிரப்பப்பட்டிருக் கின்றது என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் நிர்வாகத்திலே சிறு தொழில் விரிவாக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. 1977-லே பொறுப்புக்கு வந்த நேரத்திலே, நம்மிடம் உள்ள விவரப்படி, 18 ஆயிரம் சிறு தொழில்கள் மட்டும் இருந்தன. அந்த நான்கு ஆண்டுகளில் அந்த வெற்றிடம் ஏறத்தாழ நிரப்பப்படுகின்ற வகையில் 41 ஆயிரம் சிறு தொழில்கள் என்ற அளவுக்கு வந்திருக்கிறது. 23 ஆயிரம் சிறு தொழில்கள் 4 ஆண்டுகளில் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அதன் காரண மாக அடிஷனல் எம்ப்ளாய்மெண்ட் 3 லட்சம் பேர்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது, ஏற்கெனவே 2 லட்சம் பேர்கள் அதை நம்பிக்கொண்டிருக் கிறார்கள், இன்றையதினம் 1982-வது ஆண்டில், இந்த முயற்சிகளின் காரணமாக ஏறத்தாழ 5 லட்சம் பேர்களுக்கு ஒரு 'அஸ்யூர்ட் எம்ப்ளாய்மெண்ட்' அல்லது பாதுகாக்கப்பட்ட வேலை சிறு தொழில்கள் வாயிலாகக் கொடுக்கப் பட்டிருக்கிறது என்பதை மிகப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி) [1982 மார்ச் 25

அடுத்து, இன்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் சில விவரங்களைச் சொன்னார்கள். அதுகுறித்து சில கருத்துக்களைச் சொல்லிவிட்டு நான் அதை அவர்கள் பரிசீலனைக்கு விட்டுவிட நினைக்கிறேன்.

குறிப்பாக தொழிற்பேட்டைகள் அமைக்கின்ற வகையில் கடந்த நான்கு ஆண்டுகளில் ஒரு நல்ல திருப்புமுனையை உருவாக்கியிருக்கிறார்கள். கடந்த 19 ஆம் தேதி பேரவையில் நடைபெற்ற விவாதத்தின்போது, ஒரு கொள்கை அறிவிக்கப் பட்டது. குறிப்பாக 15 ஆண்டுகளாக தொழிற்பேட்டைகள் தொழில் முனைவர்களுக்குக் கிடைக்காது இருப்பதால் அந்த வசதியைச் செய்து கொடுக்க வேண்டும். ஆகவேதான் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் 19 ஆம் தேதி ஒரு அரசாணையை வெளியிட்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், திரு. ஆர். வெங்கட்டராமன் அவர்கள் அன்றையதினம் தமிழ்நாட்டில் தொழில் அமைச்சராக இருந்தபோதுதான், நம்முடைய தமிழ் நாட்டிற்குப் பெருமையாக இருக்கின்ற கிண்டி தொழிற்பேட்டை உருவாகி வந்தது. அப்போது நம்முடைய மதிப்பிற்குரிய பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களால் 1958-லே அந்தத் தொழிற்பேட்டை திறக்கப்பட்டது. 1958-லே தான் தொழிற்பேட்டை 'கான்செப்ட்' என்று தமிழ்நாட்டிலே முதன் முதலாக வந்தது. 1958-வது ஆண்டிலே அவரால் தொடங்கப்பெற்று 1973-வது ஆண்டு வரையில் 15 ஆண்டுகளாக அரசாங்கமே ரெண்டல் பேசிசில், வாடகை அடிப்படையிலே கட்டிக்கொடுத்து வந்தது. ஏறத்தாழ 783 தொழிற்

(பிற்பகல் 1.30)

பேட்டைகளை 15 ஆண்டுகளில் கட்டி முடித்தார்கள். ஆனால் 1973-க்குப் பிறகு 'சிட்கோ' நிறுவனம் தோன்றியதால், தொழில் முனைவர்களுக்குச் சொந்தமாகும் முறையில், 'ஹையர் பர்ச்சேஸ்'—தவணை முறை அடிப்படையில் தொழிற்பேட்டைகள் கட்டும் முறை வந்தது. 1973-லிருந்து 1982 வரை அந்த முறைதான் இருந்து வருகிறது. இதுவரை, 15 ஆண்டுகளாக யார் வாடகைக்கு இருந்தார்களோ, அவர்கள் 19-3-1982 முதல் தவணை முறையில் உரிமையாளர்களாகிறார்கள். 783 பேர்களுக்கு அந்த உரிமைகளை வழங்கும் அரசு ஆணையை மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு வழங்கியிருக்கிறது. 1958-லிருந்து 23 ஆண்டுகளாக தொழில் செய்பவர்கள், தொழிற்பேட்டைகளில் தொழில் முனைவர்களாக, 5 லட்சம், 10 லட்சம் ரூபாய் என்று முதல்

1982 மார்ச் 25] (திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி)

போட்டிருக்கிற 783 பேர்களுக்கு இன்றைய தினம் தவணை முறையில், 'ஹையர் பர்ச்சேஸ் ப்ரோகராம்' என்ற முறையில் உரிமைகள் கடந்த 19 ஆம் தேதியிலிருந்து வழங்கப்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

783 தொழிற்கூடங்கள் 33 இடங்களில் இன்றைக்கு அமைந்திருக்கின்றன. தமிழ்நாட்டில் அம்பத்தூர், கிண்டி போன்ற 33 இடங்களில் 783 தொழிற் கூடங்கள் வாடகை இடங்களில் அமைந்துள்ளன என்ற நிலையை மாற்றி, 'ஹையர் பர்ச்சேஸ்' என்ற வகையிலே இன்று உருவாக்கித் தந்திருக்கிறார்கள். 1958-லிருந்து 1978 வரையில் 19 ஆண்டுகளில் 1,098 தொழிற்கூடங்கள் மட்டுமே கட்டப்பட்டன. 1979-லிருந்து 1981 வரையில் 1,641 தொழில் கூடங்கள், இன்குளுடிங் டைனி செக்டார் என்ற முறையில் உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஏறத்தாழ 1 லட்சம் பேருக்கு இன்டஸ்டிரியல் எஸ்டேட் வாயிலாக வேலை வாய்ப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, ஒவ்வொரு தொழிலுக்கும் ஒரு தொழிற்கூடம் என்ற வகையிலே பனியன் தொழிலுக்கு திருப்பூரில் ஒரு தொழிற்பேட்டை, இன்டஸ்டிரியல் காம்ப்ளெக்ஸ் உருவாக்கப்பட்டிருக்கிறது. தாராபுரத்தில் பட்டுப்பூச்சி வளர்ப்பதற்கு செரிகல்ச்சர் காம்ப்ளக்ஸ் உருவாக்கப்பட்டிருக்கிறது. உதகையில் இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் அடிப்படையாக வைத்து ஆன்சலைசேஷன் யூனிட் ஒன்றை 6 மாதங்களில் மிக விரைவாக உருவாக்கி யிருக்கிறார்கள். கோவையில் டெக்ஸ்டைல் மெஷினரிக்காக பங்க்ஷனல் எஸ்டேட் விரைவிலே துவங்கும். லஷ்மி மில்ஸ் என்று தனியார் நிறுவனம் இருக்கிறது. அவர்களுக்கு, அவர்களைப் போல நண்பர்களுக்கு உதவியளிப் பதற்கு பங்க்ஷனல் எஸ்டேட் உருவாகியிருக்கிறது. ஏற்கெனவே மாதவரத்தில் தோலுக்காக தொழிற்பேட்டை இருக்கிறது. விரைவில் அம்பத்தூரில் தொழிற் பேட்டை உருவாக இருக்கிறது. அடையாரில் இன்றைக்கு எலக்ட்ரானிக் தொழிற்பேட்டை இருக்கிறது. தொடர்ந்து இந்த ஆண்டு கோவை போன்ற பகுதிகளில் ஏற்படுத்தப்படும். இப்படி தொழிற்பேட்டைகளை வளர்ப்பதில் மிகுந்த கண்ணும் கருத்துமாக அரசு இருந்து வருகிறது.

குறிப்பாக நான் ஒன்றைப்பற்றி இரண்டு மூன்று முறை பேரவையில் சொல்லியிருக்கிறேன். மருந்துத் தொழிலுக்காக ஏறத்தாழ 100 தொழி லதிபர்களுக்காக மகாபலிபுரம் போகும் வழியில், போரூருக்குப் பக்கத்தில்

விரைவிலே ஒரு தொழிற்கூடத்தை உருவாக்க இருக்கிறோமென்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், குறிப்பாக வட ஆற்காடு மாவட்டத்தில், தோல் தொழிலை நம்பி ஒரு லட்சம் பேர்களுக்கு மேலே இருக்கிறார்கள். அவர்கள் நலிந்த இனத்தைச் சேர்ந்தவர்களாக, பின் தங்கிய பகுதியைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். அந்தத் தொழில் 400 கோடி ரூபாய் அளவிற்கு அன்னியச் செலாவணி ஈட்டும் தொழில் என்பதால், அந்தத் தொழிலுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று கடந்த 6 மாதங்களாக நல்ல முயற்சி எடுத்து, இன்று கணிசமான அளவிற்கு அதில் இந்த அரசு வெற்றி கண்டிருக்கிறது. குறிப்பாக பாரத லெதர் கார்ப்பரேஷன் என்று மத்திய அரசு நிறுவனம் தொடங்கிய நாளிலிருந்து இங்கு மண்டல அலுவலகமோ அல்லது கிளையோ இல்லாமல் இருந்தது. இந்த அரசு அதை எடுத்துச் சொன்ன பிறகு 10, 15 நாட்களில் பாரத லெதர் கார்ப்பரேஷன் என்ற மத்திய அரசு நிறுவனம் தொடங்குமென்றும், ஒரு கோடி ரூபாயில் அண்ணா திருவுருவச் சிலை இருக்கும் அந்தப் பகுதியில் பாரத லெதர் கார்ப்பரேஷன் ஒரு எம்போரியத்தை உருவாக்க இருக்கிறதென்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அதன் காரணமாக நம்முடைய தொன்மைத் தொழிலாகிற தோல் தொழிலைப் பொறுத்தவரையில், மேலும் பல படவும் இருக்கின்ற தேவைகளை நிறைவேற்றும் நிலைமைகள் இருக்கின்றன. வட ஆற்காடு மாவட்டத்தில் இருக்கின்ற தோல் தொழிலில் உள்ள பிரச்சினை, கழிவு நீர் பிரச்சினைதான். பல ஆண்டுகளாக இருக்கும் அந்தப் பிரச்சினையை விரைவாகத் தீர்க்க வேண்டுமென்ற எண்ணத்தோடு, மத்திய அரசை நாடிக் கொண்டிருக்கிறோம். அதற்காக இருக்கும் பாரத லெதர் கார்ப்பரேஷன் இதற்கு உதவி செய்ய வேண்டுமென்று தமிழ்நாடு அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது. அதற்காக 2 மாதங்களுக்கு முன்பு அரசு சார்பாக ஒரு குழு போட்டு, அரசு அதிகாரிகள், தொழில் முனைவர்கள் எல்லாரையும் அதில் போட்டு, கழிவு நீர் பிரச்சினையைப் போக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கிறோம். அதற்காக உயர் மட்டக் குழு போட்டிருக்கிறோம். ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷனில் 7 கோடி ரூபாயை நம்முடைய மாநிலத் திலேயிருந்து வரியாகப் பெற்றிருக்கிறார்கள். அவற்றைத் திரும்பப் பெற இன்றையதினம் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். ஏற்கெனவே நான் சொன்னதுபோல், ஒரு அறிவிப்பை பேரவையிலே 19 ஆம் தேதி செய்தேன்.

தமிழ் நாட்டுக்கு என்று 'லெதர் டெவலப்மென்ட் கார்ப்பரேஷன்' என்று 10 கோடி ரூபாய் முதலீடு செய்து, இன்றைக்கு ஒரு நிறுவனத்தை தமிழ் நாடு அரசு உருவாக்கியிருக்கிறது. அதை வைத்துக்கொண்டு, தமிழ் நாட்டுத் தோல் தொழிலுக்கு என்னென்ன வசதிகள் வேண்டுமோ, என்னென்ன காரியங்கள் வேண்டுமோ அவற்றையெல்லாம் செய்ய தமிழ்நாடு அரசு இன்றைக்கு முனைந்து கொண்டிருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், தோல் தொழில் நல்ல அடிப்படையோடு இருக்கிறது. சென்ட்ரல் லெதர் ரிசர்ச் இன்ஸ்டிடியூட் மாண்புமிகு திரு. டி.டி.கே அவர்கள் காமர்ஸ் மினிஸ்டராக இருந்தபோது, 25 ஆண்டுகளுக்கு முன்பு—அந்த ஆராய்ச்சிக் கூடத்தை—உருவாக்கினார்கள். 25 ஆண்டுகளாக உலக மெங்கும் உள்ள தோல் தொழிலுக்காகப் பாடுபட்டு வருகிறது. நார்வே—ஸ்விடன் துணையோடு, டென்மார்க் துணையோடு ப்ரோடோ டைப் டெவலப்மென்ட் மற்றும் ட்ரெயினிங் சென்டர் இன்றையதினம் தோல் தொழிலுக்குத் தேவைப்படும் இயந்திரங்களைத் தயாரிப்பதற்கான ஆலை இருக்கிறது. அதைப்போல பல வசதிகள் வாய்ப்புகள் மற்ற மாநிலங்களில் இல்லாத அளவிற்கு நம்முடைய மாநிலத்தில் இருப்பதால், ஒரு லட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்புக்கு உறுதி செய்யும் தொழிலாக இருக்கிறது. ஆகவே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் 10 கோடி ரூபாய் அளவில் லெதர் டெவலப்மென்ட் கார்ப்பரேஷனில் முதலீடு செய்யும் திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். அது அடுத்த ஆண்டு புதிய திருப்பத்தை, புதிய உத்வேகத்தை தமிழ் நாட்டு தோல் வளர்ச்சியில் நிச்சயமாக ஏற்படுத்தும்.

இன்றையதினம் திண்டுக்கல்லைப் பொறுத்தவரையில் மத்திய அரசு அறிவித்த கொள்கை அடிப்படையில் நியூக்ளியஸ் பிளான்ட் என்று ஒரு லெதர் காம்ப்ளக்ஸ் வர இருக்கிறது. 70 கோடி ரூபாய் முதலீட்டில் பல தொழில்களை அவர்கள் செய்ய இருக்கிறார்கள். அந்த காம்ப்ளெக்ஸ் வரும்போது, இந்தத் தோல் தொழில் அதிக அளவிற்கு வளர வாய்ப்பு இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் பேசும்போது, செரிகல்சர்—பட்டுப் புழு வளர்ப்பு பற்றிச் சொன்னார்கள். 4 ஆண்டுகளுக்கு முன்புவரையில், அவர்கள் சொன்னதுபோல, இது மலைப் பகுதிகளிலேதான் வளருமென்ற நிலை இருந்தது, குறிப்பாக சேலம் பகுதி, கர்நாடகத்தை

(திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி) [1982 மார்ச் 25

ஒட்டியுள்ள ஹோசூர் போன்ற பகுதிகளில் வளருமென்று கருதிக்கொண்டிருந்தார்கள். இன்றைக்கு தமிழகத்தில் எல்லாப் பகுதிகளிலும் வளரும் அளவிற்கு இந்தத் தொழில் இருக்கிறது. அதுமட்டுமல்ல. ஒரு 4 லட்சம் பேர்களுக்கு 6 ஆம் ஐந்தாண்டுத் திட்டம் முடிவதற்குள் வேலை வாய்ப்பு உருவாக்க வேண்டுமென்ற மனப்பான்மையோடு இந்த அரசு பாடுபட்டுக் கொண்டிருக்கிறது. 22 கோடி ரூபாயை 6 ஆம் திட்டத்தில் இதற்காக ஒதுக்கியுள்ளது. சென்ற ஆண்டு கணிசமான அளவிற்குப் பணியாற்றி, இப்போது இரண்டாம் ஆண்டில் குறிப்பாக 2 கோடியே 80 லட்சம் ரூபாயைச் செலவிட்டு, புதிதாக விரிவுபடுத்த இருக்கிறோம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல. இன்றையதினம் பக்கத்திலே இருக்கும் கர்நாடக மாநிலத்திலே உலக வங்கியிடத்தில் இதற்காக நிதி பெற்று, அந்தத் தொழிலை வளர்த்துக்கொண்டிருக்கிறார்கள். தமிழக அரசும் குறிப்பாக மத்திய அரசு வாயிலாக உலக வங்கியிலிருந்து நிதியைப் பெற்று, நம்முடைய பட்டுப் புழு வளர்க்கும் தொழிலை வளர்க்க வேண்டுமென்று இன்றைய தினம் 70 கோடி ரூபாய் அளவிற்கு ஒரு திட்டத்தை தீட்டி, ஒருங்கிணைந்த பட்டுப் புழு வளர்ப்புத் திட்டம் என்று உருவாக்கி, உலக வங்கியினுடைய கடனுதவி கோரி, 1981ல் மத்திய அரசுக்கு தமிழக அரசு அனுப்பியுள்ளது. நான் ஏற்கெனவே சொன்னதுபோல, தமிழக அரசு தன்னுடைய நிதி ஆதாரத்தில் 22 கோடி ரூபாயைச் செலவு செய்து கொண்டிருக்கிறது. உலக வங்கியிடமிருந்து 70 கோடி ரூபாய் உதவி வரும்போது, ஊரகப் பகுதிகளில் உள்ள அந்தத் தொழில் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், நல்ல முறையில் வளரும். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் சொன்னதுபோல, இன்றையதினம் ஏறத்தாழ 1 லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் பட்டுத் தொழிலை நம்பிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பாதுகாக்கும் வகையிலும், அவர்களுக்கு கச்சாப் பட்டினைக் கொடுக்கும் வகையிலும் இந்த முயற்சிகள் இருக்குமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த ஆண்டு விவாதம் நடைபெற்றபோது,

(பிற்பகல் 1.40)

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் ஒன்றை இந்த அவையிலே குறிப்பிட்டார். அதுபற்றி நான் சில விளக்கங்களைச் சொல்கிறேன். அப்போது நான் மரவள்ளிக் கிழங்கு உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படும் என்று சொன்னேன். இன்றைக்கு ஒரு மாதத்திற்கு முன்பு

1982 மார்ச் 25] (திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி)

[illegible] ஈடுபட்டிருக்கின்றவர்களுக்கு 10 கோடி ரூபாய் செலவில் ஒரு திட்டத்தை ஆரம்பித்திருக்கிறோம். 400, 500-க்கு மேல் புராதன ஆடை என்கிற வகையில் ஆடைகளை ஏற்படுத்தி ஜவ்வாது, [illegible] போன்றவற்றை அதிலிருந்து உற்பத்தி செய்யக்கூடிய அளவில் அவை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்திருக்கிறோம். கடந்த 30, 40 ஆண்டுகளாக அவர்களுக்குப் பாதுகாப்பற்ற நிலை இருந்து வந்தது. [illegible] எண்ணக்கூடிய பேர் அவர்களுக்குத் தொழிலைக் கொடுத்து வந்தார்கள். இந்த [illegible] எண்ணக்கூடியவர்களிடமிருந்து இவர்களுக்குப் பாதுகாப்பு தர வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில், 10 தினங்களுக்கு முன்பு அவர்களுக்காக தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. 40 ஆண்டுகளாக அவர்களுடைய பிரச்சினை நீக்கப்படாமல் இருந்து வந்தது. ஒரு லட்சம் விவசாயிகளுக்கு, மரவள்ளி உற்பத்தி செய்கின்றவர்களுக்கு இன்றையதினம் இதன் மூலம் பாதுகாப்பு தந்திருக்கிறோம். அடுத்த ஆண்டு தர்மபுரியிலும் இம்மாதிரி தொழில் கூடம் ஏற்படுத்த அதற்குரிய நிதி ஆதாரத்தைக் கொடுத்திருக்கிறோம். இன்றையதினம் சேலத்தில் ஆத்தூர், தலைவாசல் போன்ற பகுதிகளிலும், அதேபோல தர்மபுரியில் பொம்முடியிலும், தர்மபுரியிலும் சிட்கோ போன்றவற்றின் தொழில் கூடங்கள் அமைக்க வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு 'தான் டிரடிசனல்' என்கிற அடிப்படையில் அது உருவாகிக் கொண்டிருக்கிறது. பெரிய தொழில் நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்படுவது போல், இங்கேயும் தரமான தீப்பெட்டிகளை, பெரிய தொழிற்சாலைகளில் உற்பத்தியாகக் கூடிய தீப்பெட்டிகள் எந்த அளவுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு பெற்றிருக்கின்றனவோ அதே அளவுக்கு செல்வாக்குடன் கூடிய தீப்பெட்டிகளை, இந்தச் சிறிய தீப்பெட்டித் தொழிற்சாலைகள் மூலம் தயாரித்திருக்கிறோம். இவற்றிற்கு இன்றைக்கு ஒரு பண்டிலுக்கு 1 ரூபாய் 60 காசு என்று கலால் வரியை நிர்ணயித்திருக்கிறோம். ஆனால் பெரிய தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யக்கூடிய தீப்பெட்டிகளுக்கு 4 ரூபாய் 50 காசு என்கிற விகிதத்தில் கலால் வரி, எக்ஸைஸ் டியூட்டி இருக்கிறது. இது கூடாது, என்று 300க்கு மேற்பட்டவர்கள் குறைக்கச் சொல்லி இந்த மாநில அரசுக்கு பாதகமான ஒரு சூழ்நிலையை உருவாக்கினார்கள். அப்படி அவர்கள் குறைக்கச் சொல்லியபோது, திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் மத்திய அரசில் நிதியமைச்சராக இருந்தார்கள். அப்போது

(திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி) [1982 மார்ச் 25

உடனடியாக அவர்கள் அதற்குப் பொறுப்பேற்று சுப்ரீம் கோர்ட்டில் தடை வாங்கினார்கள். அப்படி அவர்கள் செய்ததன் மூலம், நம்முடைய பட்ஜெட்டில் ஒரு பாதுகாப்பை நமக்கு ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள். குறிப்பாக தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் என்று வைத்திருக்கிறார்களே, அவர்களுக்கெல்லாம் கலால் வரியை 1 ரூபாய் 60 காசு என்று உருவாக்கியிருக்கிறோம். அப்படிப்பட்ட ஒரு நிலையை ஏற்படுத்திக் கொடுத்ததற்காக திரு. ஆர். வி. அவர்களுக்கு இன்றைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆக, இன்றைக்கு பெரிய செக்டாரை வைத்துக்கொண்டிருப்பவர்கள் கூட நமக்கு பாதகத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பதையும் நான் இந்த அவைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். சிறிய தொழில்களாக யார் ஆரம்பித்தாலும், அவர்களுக்கு நாம் இப்படிக் கொடுக்கின்ற சலுகையை பெரிய தொழிற்சாலை வைத்திருப்பவர்களும் வேண்டுமென்று கேட்கிறார்கள். சிறிய தொழில்களுக்கு இப்படி நாம் கலால் வரியில் சலுகையை அளித்து வாய்ப்பளித்திருப்பது அவர்களை ஊக்குவிப்பதற்காக. இன்றைக்கு மத்திய நிதியமைச்சராக இருக்கின்ற திரு. பிரணாப் முகர்ஜி அவர்களுக்கு இதுபற்றி எழுதினோம்.

"Dear Shri Krishnaswami,

I have received your letter dated the 11th March regarding concessional rate of Excise Duty on cottage match industry. I am having the matter looked into.

With regards,

Yours sincerely,"

என்று இன்று அவர்களிடமிருந்து தபால் வந்திருக்கிறது. அதுபற்றி ஆய்ந்து கொண்டிருக்கிறோம் என்று டெல்லியிலிருந்து நமக்குத் தகவல் தந்திருக்கிறார்கள். இதில் 1½ லட்சம் பேர் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு புரட்சித் தலைவர் முதலமைச்சர் அவர்களுடைய அரசு எல்லா விதமான முயற்சிகளையும் எடுத்துக்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு பல விவரங்களை இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் தனித் தனியாகப் பிரித்து,

1982 மார்ச் 25] [திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

தேவைப்பட்ட விவரங்களுக்கு மட்டும் இங்கே பதில் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களில் சிலர் மேதகு கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி தாரா செரியன் அவர்கள் பேசுகின்றபோது பல கருத்துக்களை குறிப்பாக டான்சி நிறுவனம் பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். இந்த நிறுவனம் தொடங்கிய காலத்திலேயிருந்தே நஷ்டத்தில்தான் இயங்கிக்கொண்டு வந்தது. சென்ற ஒன்றிரண்டு ஆண்டுகளாகத்தான் போதுமான லாபம் வரவில்லை என்று சொன்னாலும் கூட, லாபம் வருகிறது என்று சொல்லக்கூடிய அளவுக்கு சில லட்சம் நமக்கு வந்து கொண்டிருக்கிறது. அதில் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்கள் மக்களுக்குத் தரமான பொருள்களாகக் கிடைக்க வேண்டுமென்று எண்ணிக் கொண்டு செயல்பட்டுக்கொண்டிருக்கும் அதே வேளையில் அதை லாபத்தில் செயல்படுத்துவதற்கு என்னென்ன முயற்சிகளைச் செய்ய வேண்டுமோ அந்த முயற்சிகளையும் செய்துகொண்டிருக்கிறோம். 1976 ஆம் ஆண்டு ஜனாதிபதி ஆட்சி அமுலில் இருந்தபோது, இன்றைக்கு பாதுகாப்பு அமைச்சராக இருக்கின்ற திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் தலைமையில் பப்ளிக் அன்டர் டேக்கிங்ஸ் கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டது. தமிழ் நாட்டிலே இருக்கக் கூடிய தொழிற்சாலைகளில் எவை எவை லாபத்தில் இயங்குகின்றன, எவை எவை நஷ்டத்தில் இயங்குகின்றன, நஷ்டத்தில் இயங்குகின்றன என்றால் அந்த நஷ்டத்தைப் போக்க என்ன செய்ய வேண்டும் என்பதுபற்றி எல்லாம் ஆராய திரு. ஆர். வி. அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அவர்கள் சொல்லியிருக்கிற பரிந்துரைகளின் அடிப்படையில் இந்த அரசு சில நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது.

டான்சி நிறுவனம் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். டான்சி நிறுவனத்தை முதன் முதலில், ஐந்தாண்டுத் திட்டத்தின்போது, டிரெயினிங் கொடுக்க ஆரம்பித்தார்கள். இப்படி பயிற்சி கொடுத்து தொழிலில் பின்தங்கிய பகுதிகளில் தொழிலை வளர்ச்சி அடையச் செய்ய டான்சி ஆரம்பிக்கப்பட்டது. பிறகு ஒரு காலக் கட்டத்தில் அதை 'புரடக்ஷன் யூனிட்' ஆக ஆரம்பித்து விட்டார்கள். தொழில் முனைவர்களுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்திற்காகத்தான் இது ஆரம்பிக்கப்பட்டது. இன்றைக்கு அதில் தொழிலுக்குரிய இலக்கணம் இல்லாததால் 'புரடக்ஷன் யூனிட்' என்கிற வகையில் அதைக் கொண்டு வந்ததற்குப் பிறகு கூட நஷ்டங்களும் சிரமங்களும்

ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. இதையெல்லாம் கருதித்தான் திரு. ஆர். வி. அவர்கள் குழு இதுபற்றிப் பரிசீலனை செய்ததற்குப் பிறகு "நஷ்டம் ஏற்படக் கூடிய தொழில்களாக இருந்தால், நஷ்டத்தைப் போக்க முயலுங்கள். அப்படிச் செய்ய முடியாவிட்டால், நல்லமுறையில் செய்யக்கூடிய தொழில் முனைவர்கள் இருந்தால், அவர்கள் முன்வந்தால், பொதுமக்களுக்கு சேதாரம் ஏற்படுத்தாமல், நஷ்டம் ஏற்படுத்தாமல், தொழிற்சாலைகளை நடத்த முன்வாருங்கள்" என்று சொல்லி யிருக்கிறார்கள். தொழில் முனைவர்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் தான் திரு. ஆர். வி. அவர்கள் தொழில் அமைச்சராக 1963ல இருந்தபோது இங்கே கிண்டியில் கிளாஸ பேகடரி என்கிற நிறு வனத்தை உருவாக்கினார்கள். பள்ளிகளுக்குச் செல்கிற பிள்ளைகளுக்குத் தேவைப்பட்ட கண்ணாடிகளை உருவாக்க அது ஆரம்பிக்கப்பட்டது. இன்றையதினம் அது வளர்ந்து வளர்ந்து 'ஈகிள் பிளாஸ்க்' தயாரித்துக் கொடுக்கிறார்கள். அங்கு தயாரிக்கப்படுகின்ற ஈகிள் பிளாஸ்க் சோவியத் ரஷ்யா போன்ற நாடுகளுக்கெல்லாம் ஏற்றுமதியாகக் கூடிய நிலை ஏற்பட்டி ருக்கிறது. நாள் ஒன்றுக்கு 10 ஆயிரம் பிளாஸ்குகள் உற்பத்தி செய்யக்கூடிய அளவுக்கு அது வளர்ந்திருப்பதாக இன்றைக்கு பத்திரிகைகளில் செய்தி வந்திருந்ததை நாம் எல்லாம் பார்த்தோம். இதன்மூலம் 300 பேர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. பொருளும் தரமாகச் செய்யப்படுகிறது. ஏற்கெனவே அங்கு 'பர்னேஸ்' போன்ற கருவிகள் இருக்கின்றன. அந்தத் தொழிலுக்கு மட்டும் அது பயன்படும் என்பதால்தான், சட்டபூர்வமாக அங்கு ஈகிள் பிளாஸ்க் தொழிற்சாலை கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதுபோல் மொபட் என்ற நிறுவனம். அது நஷ்டத்தில் இருந்தது. அதையும் சரி செய்ய வேண்டும். இல்லையென்றால் அதைச் சரி செய்ய நாங்கள் தயார் என்று முன்வருகின்ற தொழில் முனைவர்களுக்கு அதைக் கொடுக்க வேண்டும். ஆகவே தொழிலை வளர்க்க நாங்கள் முயற்சி செய்து கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோல் டான்சியில் பல தொழில்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் ஆராய்ந்து திரு. ஆர். வி; அவர்கள் தலைமையிலான கமிட்டியினுடைய பரிந்துரைகளின் அடிப்படையில் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும், மக்களுடைய பணம் சேதாரம் ஆகாமல் தடுக்கவும், நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் நிலையைப் போக்கி லாபத்தில் அதைக் கொண்டு வரவும் ஆன முயற்சிகளை இந்த அரசு செய்துகொண்டிருக்கிறது. பெண் தொழில் முனைவர்களுக்கு

முன்னுரிமை கொடுத்து, அவர்களுக்கு உற்சாகம் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திருமதி தாரா செரியன் கூறினார். கிண்டியில் தொழிற்பேட்டையில் டிரெயினிங் சென்டர் கட்டிக்கொண்டிருக்கிறோம். '25 Class exdusively for women என்ற அடிப்படையில் சொல்லியிருக்கிறோம். கிண்டி தொழிற்பேட்டையில் சிறு தொழில் கூடங்கள் கட்டப்பட்டு வருவதில் 25 சதவிதம் பெண்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. ஆகவே விமன் என்டர்பிரினார்ஸ-க்கு வாய்ப்பு கொடுப்பதுபற்றி சிட்கோ போன்ற நிறுவனங்கள் முடிவெடுத்திருக்கின்றன. எலெக்ட்ரானிக் தொழிலைப் பொறுத்தவரையில், 'எக்ஸ்குளுசிவ்லி' என்று தான் இருக்கிறது. திருவான்மியூர் போகிற பகுதியில் அவர்களுக்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு மேலும் நூற்றுக்கணக்கான தாய்மார்களுக்கு 'எலெக்ட்ரானிக்' போன்ற தொழிலில் பயிற்சி கொடுக்க மாண்புமிகு புரட்சித் தலைவர், முதலமைச்சர் அவர்கள் முயன்று கொண்டிருக்கிறார்கள்.

அடுத்து, மின்சாரத் துறையைப் பொறுத்தவரையில், ஒன்றே ஒன்றைச் சொல்கிறேன். குறிப்பாக எத்தனையோ ஆண்டுகளாக 'பீக் அவர்ஸ் ரெஸ்ட் ரிக்சன்' என்கிற ஒரு தொல்லை இருந்து வந்தது. அதைப் போக்குகின்ற முயற்சியில், இந்த அரசு ஈடுபட்டிருக்கிறது என்பதை அனைவரும் அறிவார்கள். அதனையும் இங்கே நான் மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்கு வைக்கிறேன்.

(பிற்பகல் 1-50)

நான் எற்கெனவே தொடக்கத்தில் குறிப்பிட்டதைப்போல், பல முனைகளில் இணைந்து, சின்னஞ்சிறு தொழில்கள், ஊரகத் தொழில்கள் ஆகியவற்றின் மூலம் குறைந்த முதலீட்டில் அதிக அளவில் வேலை வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்கிற விழுமிய நோக்கத்தோடு செயல்பட்டுக்கொண்டிருக்கிறோம். தமிழ் நாட்டில் பெரிய தொழில்கள் உருவாகவில்லை என்றாலும், அந்த வெற்றிடத்தை நிறைவு செய்யும் வகையில், கடந்த 4, 5 ஆண்டுக் காலத்தில் இந்த நிலைமைகளை உருவாக்கியிருக்கிறோம். இந்த நம்பிக்கையின் அடிப் படையில் இதே வேகத்தோடு செயல்பட்டு எதிர்காலத்தில் ஒரு சுமுகமான சூழ்நிலையை உருவாக்க மாண்புமிகு உறுப்பினர்களின் மேலான கருத்துக்கள் பயன்படும் இங்கே தெரிவிக்கப்பட்ட சில கருத்துக்களுக்கு மட்டுமே நான்

அரசுத் தரப்பில் சில உணர்வுகளைத் தெரிவித்தேன் என்றாலும் மற்ற கருத்துக்களை மனதில் வைத்துக்கொண்டு, அவற்றின் மீதான உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைப் பணிவன்போடு எடுத்துச் சொல்லி இந்த அளவில் முடித்துக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் வாசித்த புத்தகத்தின்—ஈஸ்டர்ன் எகானமிஸ்ட்—வேறு பகுதியிலிருந்து ஒரு தொழில் முனைவரும் ஒரு பொருளாதார நிபுணரும் தெரிவித்த கருத்துக்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அதற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் குறுக்கிட்டு தெரிவித்த கருத்தைப்பற்றிக் குறிப்பிடும்போது, மிகுந்த ஆத்திரத்தோடு "குப்பை" என்றெல்லாம்கூட அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படிப்பட்ட வார்த்தையை இந்த அவையில் பயன் படுத்துவது மரபா இல்லையா என்பதெல்லாம் ஒருபுறம் இருந்தாலும், அது உண்மையா இல்லையா என்பதையும் நாம் பார்க்க வேண்டும். 'இன்டஸ்ரியல் டெவலப்மெண்ட் இன் தமிழ்நாடு' என்பதில் திரு. ராமசுப்பிரமணிய ராஜா அவர்களின் கட்டுரையிலிருந்து ஒன்றை நான் இங்கே வாசித்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர் சொல்கிறார். "தமிழகத்திற்கு மத்திய அரசின் நிதி உதவி குறைவாக இருந்த காலத்தில் வளர்ச்சி அதிகமாக இருந்திருக்கிறது" என்று குறிப்பிடப்பட்டிருக்கும் பகுதியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே படித்துக் காட்டினார். அதையொட்டி பின்னால் அதே கட்டுரையில் அதே ஆசிரியர் இன்னொன்றையும் தெரிவிக்கிறார். 1970ஐத் தொடர்ந்த ஆண்டுகளில் எப்படிப்பட்ட நிலைமை இருந்தது என்பதைப் பற்றிச் சொல்லும்போது கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

"This period witnessed the establishment of cement, paper, aluminium, viscose, rubber, fertilisers, petro-chemical and electronic engineering industries on a large scale giving the State a sound basis for accelerated growth during the seventies.

அதுமட்டுமல்ல, 1960-லிருந்து 1975 வரை தமிழகம் தொழில் உற்பத்தியில் இருமடங்கை எய்த முடிந்தது என்றும் குறிப்பிடுகிறார்.

During the period of 1960-75, industrial production in Tamil Nadu doubled.

இதில் 1967 காங்கிரஸ் ஆட்சி நடைபெற்ற காலம். 1975 என்று குறிப்பிடுவது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெற்ற காலம். இந்தக் கால கட்டத்தில் தொழில் உற்பத்தி இரு மடங்காக உயர்ந்தது என்பது ஒருவேளை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக் குப்பையாகத் தோன்றலாம். அப்படி இதையெல்லாம் அமைச்சர் அவர்கள் குப்பையாகக் கருதினால், அதற்கு நாட்டு மக்கள்தான் தீர்ப்பு சொல்ல வேண்டும். அமைச்சர் அவர்கள் இங்கே வாசித்த கட்டுரையின் பிற்பகுதியில் அவர் இன்னொரு கருத்தையும் சொல்கிறார்:

"Tamil Nadu has been among the pioneers in small industries; Ambattur and Guindy Industrial Estates being standing examples of it. In 1972, it stood first in India in the number of units and second in value of produce manufactured".

இதில் 1972 என்பது டாக்டர் கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலம். இதெல்லாம் குப்பையாக அந்த நிபுணருக்குத் தெரியவில்லை. நல்லதாகத் தான் அவர் கருதியிருக்கிறார். ஆனால் அமைச்சர் ஏன் அப்படிக் கருதுகிறாரோ தெரியவில்லை. அடுத்து, திரு. ராம சுப்பிரமணியராஜா கட்டுரையில் உள்ளதையே தெரிவிக்க விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, பொருளாதார மேதையான டாக்டர் பி. நடராஜன் அவர்கள் 'இன்டஸ்டிரியல் அவுட்லுக் ஃபார் தமிழ்நாடு' என்ற கட்டுரையில் ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட அதிலுள்ள ஒரு பகுதியைப் படித்துக் காட்டி, வேக்குவத்தை இந்த அரசு எடுத்துக்கொண்ட முயற்சியின் மூலம் சரி செய்துள்ளது என்ற கருத்துள்ள பகுதியைப் படித்துக் காட்டினார். அந்த ஆசிரியர் மேலும் சொல்லுகிறார்:

"The annual index of Industrial production of the State peaked during 1974 and since then has fluctuated sharply."

1974-ல் உச்ச கட்டத்தை அடைந்த தமிழ்நாடு அதற்குப் பிறகு உற்பத்தித் திறனில் பின் நோக்கிச் செல்ல ஆரம்பித்துவிட்டது என்று குறிப்பிட்டிருக்கிறார். பிளக்சுவேஷன் என்றால் மாற்றங்கள்தான் என்றாலும்கூட, உச்ச கட்டத்தை அடைந்துவிட்ட பிறகு, அதில் மாற்றம் ஏற்படுவது என்றால், பின்நோக்கிச் செல்கிறது என்றுதான் பொருள்படும். அது கீழே வருகிறது என்றுதான் பொருள்படும்

"In 1974 it reached the peak and then fluctuated towards a lower level."

அதுமட்டுமல்ல. அவர் மேலும் சொல்லுகிறார் :

" In 1979 it stood at a rather discomforting level-fluctuates towards a discomforting level of 171 compared to 180 in 1974."

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கொஞ்சம் காது கொடுத்து கேட்க வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : நான் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: அப்படி 180-லிருந்தது 171 ஆகக் குறைந்து விட்டது என்று சொல்லுகிறார். இந்த நிலைமையை ஈடுகட்டுவதற்கு இந்த அரசு முயற்சித்தது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். இவைகளில் சிட்கோ, சிப்காட், டிட்கோ ஆகியவை எல்லாம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது உருவானவை என்பதையும் டி.ஐ.ஐ.சி. மட்டும் காங்கிரஸ் ஆட்சியின்போது தொடங்கப்பட்டது என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. அவர் அந்தக் கட்டுரையில் மேலும் சொல்லுகிறார்:

" In 1975–76, the State cornered 142 industrial licences secondmost among the States. In 1978–79 it could get only 31 licences."

இவைகளெல்லாம் அமைச்சர் அவர்களுக்கு குப்பையாகக் காட்சியளித்தால், அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்வதற்கில்லை. நான் இங்கே குற்றசாட்டுகளைத் தெரிவிக்கும்போதுகூட, இதில் அமைச்சர்களோ அமைச்சரவையோ ஈடுபட்டிருக்கிறது என்று எண்ணத்தக்க வகையில் குறிப்பிடவில்லை. ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஆத்திரம் வந்துவிட்டது. அது தவறு என்று சொல்லவில்லை, ஆனால் அது நியாயமா என்றுதான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிற் துறையின் கொள்கைக் குறிப்புகள் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் எழுவர் தங்களுடைய மேலான கருத்துக்களைத்

தெரிவித்திருக்கிறார்கள். இப்போதே மணி இரண்டை நெருங்கிக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் நான் எவ்வளவு நேரம் பேச வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் எதிர்பார்க்கிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. இருந்தாலுங்கூட நான் வேகமாகவும், அதே நேரத்தில் மிகக் குறைவாகவும், சுருக்கமாகவும் முடிந்தவரை மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே எழுப்பிய பிரச்சினைகள் குறித்து மட்டும் என்னுடைய பதிலைச் சொல்லி மற்ற பிரச்சினைகள் ஏற்கெனவே சட்டமன்றத்தில் விவாதிக்கப்பட்டு எடுத்து வைக்கப்பட்டிருக்கிற காரணத்தால், அவைகளைக் குறித்து ஓரளவுக்குள் கட்டுப்படுத்திக் கொள்ளலாம் என்றுதான் நினைக்கிறேன்.

முதலில், மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது, தெரிவித்த ஆலோசனைகளுக்கு நான் அரசின் சார்பிலும், என்னுடைய சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சொல்லப்பட்ட விவரங்களைச் சில வகைகளாகப் பிரித்துப் பார்க்கும்போது, மாண்புமிகு உறுப்பினர் திருமதி தாரா செரியன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்களும் குறிப்பிட்ட கருத்தைப்பற்றி ஒன்றைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதாவது இந்த அரசு அல்லது அமைச்சர்கள் அல்லது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொழில் அதிபர்களை அதிகமாகச் சந்திப்பதில்லை என்றும், இவர்களைச் சந்திக்க அதிகமாக வாய்ப்புகள் இருப்பதில்லை என்றும் சொல்லப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்கு நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நானாக இருந்தாலும் சரி, மாண்புமிகு ஊரகத் தொழிற் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்களானாலும் சரி, நேரம் காலம் என்று பாராமல், எந்த நேரத்தில் யார் வந்தாலும், எந்தத் தொழில் அதிபர் வந்தாலும், அவர்களைப் பார்த்து அரசின் சார்பில் அவர்களின் பிரச்சினைகளைக் கனிவோடு கேட்டு எங்கள் அதிகாரத்திற்குட்பட்டு அவர்களின் இன்னல்களைக் களைவதில் அக்கறை காட்டிக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி தாரா செரியன் : இது என்னுடைய அபிப்பிராயம் அல்ல. ' பிசினஸ் கம்யூனிட்டி ' மற்றும் ' சேம்பர் ஆப் காமர்ஸ் ' ஆகியவற்றின் அபிப்பிராயத்தைதான் நான் இங்கே குறிப்பிட்டேன்.

1982 மார்ச் 25] [திரு. சு. திருநாவுக்கரசு]

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பொறுத்தவரை, விளம்பரப்படுத்தி தொழில் அதிபர்களை ஒட்டு மொத்தமாக அழைத்து வைத்துக்கொண்டு, ஒரே இடத்தில், அவர்களைச் சேர்த்து அதில் ஒரு சிலரைப் பேச வைத்து அதற்குப் பிறகு அரசின் சார்பில் கவனிக்கிறோம் என்று பதில் சொல்வதில்லை. விளம்பரத்திற்காகத் தொழில் அதிபர்களைக் கொண்ட கூட்டங்கள் நடத்தப்படவில்லையே தவிர, விவரமான கூட்டங்கள் நடத்தப் பட்டிருக்கின்றன என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 2-00)

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களை, அவருடைய இல்லத்திலே, அலுவலகத்திலே தொழிலதிபர்கள் சந்தித்துவிட்டுத்தான் போகிறார்கள். அப்படி அவர்கள் சந்திக்க முடிகிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அது மட்டுமல்லாமல், சேம்பர் ஆஃப் காமர்ஸ் போன்ற அமைப்புகளில் கலந்து கொண்டு பேசுகின்றபோது, அவர்கள் கொடுக்கிற ரெப்ரெசென்டேஷன் போன்றவற்றை உரிய முறையில் கவனிக்கிறோம், பரிசீலிக்கிறோம், முறையான பதில் அனுப்புகிறோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருமதி தாரா செரியன் அவர்கள் சொல்லுகிறபோது, 'பிசினஸ் கம்யூனிட்டி' சொன்னதாகச் சொன்னார்கள். அவர்களிடத்திலே சொன்னால், இனிமேல் அவர்களை நேரிடையாக எங்களிடம் அனுப்பி வைத்தால், அவர்களையும் எந்த நேரத்திலும் சந்திக்கத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் பொதுவான கருத்து, அமைச்சர்களையும், அதிகாரிகளையும் சந்திப்பது சுலபமானது என்பதை அத்தனை பேரும் ஒத்துக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். வேண்டுமானால் சொன்னதற்கு எவ்வளவு செய்து கொடுத்தீர்கள் என்று கேட்டால், நாங்கள் பதில் சொல்லுவதற்குத் தயக்கம் காட்டலாம். ஒருவேளை உங்களுக்குத் திருப்தி இல்லாமல் இருக்கலாம். ஆனால் அதிகாரத்திற்குட்பட்டு திட்டங்களைத் தீட்டுவதிலும், அதில் உள்ள குறைகளை நீக்குவதற்கு முயற்சி எடுப்பதிலும் எந்த அளவிலும் குறையவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1982 மார்ச் 25] [திரு. சு. திருநாவுக்கரசு]

அது மட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் ஆலோசனை வழங்குவதற்காக ஒரு குழு வேண்டுமென்று சொன்னார்கள். அந்தக் குழு அமைக்கப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதிலே சட்டமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் எவ்வளவு பேர் இருப்பார்கள் என்பதல்ல பிரச்சினை. தொழில் வல்லுநர்கள், தொழில் நுட்ப அறிவு பெற்றவர்கள் கொண்டு அந்தக் குழு அமைக்கப்பட வேண்டும். அந்தக் குழுவிலே அவ்வப்போது ஆலோசனைகள் பெற இருக்கிறோம். அதற்கு முன்னோடியாக தனியாக தனிப்பட்டவர்களைச் சந்தித்து, புரிந்துகொண்டு, செய்கிறோம். ஏற்கெனவே நான் சொன்னதைப் போல, நாங்கள் விளம்பரப்படுத்திக் கொள்ளவில்லை. அவ்வளவுதான்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்றபோது, மற்ற மாநிலங்களில் இருக்கின்ற சேல்ஸ் டாக்சை விட அதிகமாக இந்த மாநிலத்திலே சில பொருள்களுக்கு இருக்கிறது என்று சொன்னார்கள்.

DR. M. A. MUTHIAH CHETTIAR: Mr. Deputy Chairman, in this Legislature from 1920 onwards till 1960 or some time earlier we had advisory committees attached to every Minister. It was composed of Members of the Legislative Council and then of both the Houses. I hope the Hon. Ministers will consider seriously the advisability of having one committee of outsiders and another advisory committee of Members of both Houses to advise the Ministers. Their decisions may not be mandatory and the Ministers may consider them. Such Committees may meet 3 or 4 times every year.

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் பாதுகாப்பு அமைச்சராக இருக்கின்ற திரு. வெங்கட்ராமன் அவர்கள் தலைமையில் ஒரு ஆலோசனைக் குழு இருந்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட தொழில் வல்லுநர்களைக் கொண்ட ஆலோசனைக் குழு இருந்ததாகத் தெரியவில்லை. இல்லை என்பதுதான் உண்மையான நிலைமை. இப்போது குழு அமைக்கிறபோது, சட்டமன்ற உறுப்பினர்கள் சிலர் அதிலே வர வேண்டுமென்றால், தொழில் அதிபர்கள், தொழில்பற்றித் தெரிந்திருப்பவர்கள் இருப்பார்கள் என்று சொல்லும்போது, சட்டமன்ற உறுப்பினராக]

மேல்வை உறுப்பினராக அவர்கள் இருக்கிறார்கள் என்ற அந்தக் காரணத்திற்காக நிராகரிக்கப்பட மாட்டார்கள் என்பதை மாத்திரம் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சேல்ஸ் டாக்சைப் பொறுத்த வரையில், திருமதி தாரா செரியன் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் திரு. சங்கரலிங்கம் அவர்களும் சொன்னார்கள். பாண்டிச்சேரியோடு ஒப்பிட்டு ஸ்டீல் ஃபேர்நிச்சருக்கு இங்கே சேல்ஸ் டாக்ஸ் அதிகமாக இருக்கிறது, அங்கே குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். அது நாங்கள் போட்டதில்லை. ஏற்கெனவே இருந்து வருவது. இப்படி இருந்து வருகிற சேல்ஸ் டாக்சைப்பற்றி அந்தத் துறையைச் சார்ந்த தொழிலதிபர்கள் யாராவது முன்வந்து . . .

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, முன்னால் 5 சதவீதமாக இருந்தது, பிறகு 8 சதவீதமாக மாறி இப்போது பத்து சதவீதமாக உயர்த்தியிருக்கிறோம். அங்கே சிறு தொழில்களில் உற்பத்தியாகும் பொருள்களுக்கு முதல் ஐந்து வருஷத்திற்கு அந்த வரியிலிருந்து விலக்கு கொடுத்திருக்கிறார்கள். இப்போது எங்கள் கட்சி ஆட்சிக்கு வந்த பிறகு, அதை விலக்கியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : அதைத்தான் நான் சொல்ல வந்தேன். இப்படி கொஞ்சம் கொஞ்சமாக உயர்த்தப்பட்டு வருகிற சேல்ஸ் டாக்ஸ் பற்றி ஏதாவது ஒரு அமைப்பின் மூலமாக 'ரெப்ரசென்டேஷன்' வந்து, அதற்காக தொழில் நுட்ப ரீதியாக ஐந்து ஐ.ஏ.எஸ். அதிகாரிகளின் முடிவிற்கு விட்டு, அவர்கள் பரிந்துரை செய்து, அதற்குப் பின்னாலே அமைச்சரவையில் வைத்து விவாதித்து முடிவு செய்து 'எக்சம்ஷன்' கொடுத்தால் கூட, அதிலே ஊழல் இருக்கிறது என்று சட்டமன்றத்திலே பேசிய விவரம் எல்லாம் இங்கே இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், அது அருமைச் சகோதரர் திரு. வீராசாமி அவர்களுக்கே கூட தெரியும். அவரும் பத்திரிகையிலே எழுதிக் கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றி எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சட்டமன்றப் பேரவையிலே பேசினார்கள்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : நான் எழுதுவதில்லை. அந்தப் பத்திரிகைக்கு மேனேஜிங் டைரக்டராக இருக்கிறேன். எழுதுபவர்கள் ஆசிரியர்கள் குழு.

தெரியாமல் எழுதப்படுகிறது. அது பத்திரிகையில் வந்திருக்கிறது. தவறு

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : அப்படியென்றால், உறுப்பினருக்கு

நடந்திருக்கிறது. உறுப்பினருக்கே தெரியாமல் வந்திருக்கிறது என்றால் பரவாயில்லை. ஆனால் அவருடைய கட்சித் தலைவர் சட்டமன்றப் பேரவையிலேயே பேசும்போது சொன்னார்கள். இந்தக் குழுவில் ஐந்து ஐ.ஏ.எஸ். உயர் மட்ட அதிகாரிகள் பரிந்துரை செய்து அறிக்கையைக் கொடுத்தார்கள். மற்ற மாநிலத்தில் ஸ்டீல் ரோலிங் மில்லுக்குக் குறைவாகவும், தமிழ் நாட்டில் அதிகமாகவும் இருப்பதால், மூடப்பட வேண்டிய நிலை ஏற்பட்டதால் சலுகை அளிக்க வேண்டுமென்று சொல்லப்பட்டதற்குப் பின்னாலே எடுத்த முடிவைக் கூட விமர்சனம் செய்யும் நிலை இருக்கிறது.

* திரு. சோ. ஆறுமுகம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஸ்டீல் ரோலிங் மில்லுக்கு சேல்ஸ் டாக்ஸை நீக்கியதுபற்றி எங்களுடைய கட்சித் தலைவர் பேரவையிலே எடுத்துச் சொன்னதை இங்கே நோடிட்டுக் காண்பிக்கிறார்கள். நானும் ஸ்டீல் ரோலிங் மில் வைத்திருக்கிறேன். எப்படி கோரிக்கை வைக்கப்பட்டது, அதிலே ஊழல் நடைபெற்று இருக்கிறது என்பது கூட அல்ல. எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் பேசியது . . . .

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : please sit down உட்காருங்கள், தயவுசெய்து . . . .I am not yielding

திரு. ஆர். டி. சீத்தாபதி : துணைத் தலைவர் அவர்களே, please sit down என்று அமைச்சர் சொல்லுவது சரியில்லை.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : தயவு செய்து என்று தானே கேட்டிருக்கிறார்கள்.

திரு. சோ. ஆறுமுகம் : அவர் ஆதாரம் இருக்கிறது, வேண்டுமானால் நிரூபிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். இதிலே தவறுகள் இருக்கின்றன என்பதை நானும் வலியுறுத்தித் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்

Thiru A. R. DAMODARAN : This House cannot discuss what has been discussed in the lower House. If we go on passing comments we may attract a motion of privilege also from the Lower House.

1982 மார்ச் 25]

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : சிறு தொழிலாக இருந்தாலும், பெருந்தொழிலாக இருந்தாலும் பசிக்காகத்தான். ஆகவே கூடுமான வரையில் குறுக்கிட வேண்டாம். பசி நேரம்.

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திலே பேசியதைச் சொன்னார்கள். அதைப்பற்றிக் குறை சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே பேசுகின்றபோது, தவறு நடந்திருக்கிறது என்ற சந்தேகம் இருக்கிறது என்று சொன்னார்கள். பழக்கதோஷத்திலே சந்தேகப்படுகிறார்கள் என்று சொன்னால், கோபப்பட்டு பிரயோஜனம் இல்லை. தைரியத்தோடு அங்கேயும் உங்களால் சொல்ல முடியாது, இங்கேயும் சொல்ல முடியாது. பிரச்சினைகள் வரும்போது பார்த்துக்கொள்வோம். இப்படி ஒன்றைச் செய்கிறபோது அதிலே குறை கண்டுபிடித்து களங்கம் ஏற்படுத்துகிற நிலைமை இருக்கிறது என்பதைச் சொல்லத்தான் இதைச் சுட்டிக்காட்டுகிறேன். குறைகள் சொல்லுகிறார்கள் என்பதற்காக விடப்போவதில்லை. "போற்றுபவர்கள் போற்றட்டும், புழுதிவாரி தூற்றுபவர்கள் தூற்றட்டும்". ஒப்பிட்டுப் பார்த்து எது நியாயம் என்று தெரிகிறதோ அதைத் தொடர்ந்து செய்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'ஃபினான்ஷியல் எக்ஸ்பிரஸ்' கெமிக்கல் இண்டஸ்ட்ரியில் சேல்ஸ்டாக்ஸ் பற்றி ஆய்வு செய்து இரண்டு நாட்களுக்கு முன்பு எழுதியிருந்தார்கள். மற்ற மாநிலத்தைவிட இங்கே அதிகமாக இருக்கிறது என்பதையும், அந்த அசோசியேஷனுடைய ரெப்ரசென்டேஷனையும் 'பப்ளிஷ்' பண்ணியிருக்கிறார்கள், இப்படி சில பொருள்களுக்கு சேல்ஸ் டாக்ஸ் அதிகமாக இருக்கும்போது தொழிலதிபர்கள் இங்கே வர முடியாது என்று சொல்லி, வேறு மாநிலத்திற்குப் போனால், நஷ்டம்தான். தொழில் இருந்தால்தான் உற்பத்தி இருக்கும் உற்பத்தி இருந்தால்தான் சேல்ஸ் டாக்ஸ் வர முடியும். அதையெல்லாம் கவனத்திலே கொண்டு இந்த அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது, அவ்வப்போது தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 2-10)

அதுபோலவே இதை ஒட்டியே மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சங்கலிங்கம் அவர்கள் பேசுகின்றபோது, "தொழிற்சாலைகளில் நஷ்டம் வந்தால்

[திரு. சு. திருநாவுக்கரசு] [1982 மார்ச் 25

வெளியிலே இருக்கின்ற தொழில் வல்லுநர்களை வைத்துக் கொண்டு அவர்கள் நிர்வகிக்கின்றார்கள். ஆனால் இங்கே பொதுத்துறையிலே இருக்கின்ற ஆலைகளில், உயர் மட்ட அதிகாரிகளைப் போடுகிறார்கள்" என்று சொல்கின்றார்கள். சட்டமன்றத்திலே கேட்கின்றார்கள். "திரு. விஸ்வநாதன் அவர்களை நியூஸ்பிரிண்ட் கார்ப்பரேஷனுக்குத் தலைவராகப் போடுகின்றீர்களே, அங்கே போடுவதற்கு ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி கிடைக்கவில்லையா ?" என்று கேட்கிறார்கள் என்பதையும் நான் இங்கே சொல்லிக்கொள்கிறேன். அவர்களுக்கு அனுபவம் இருக்கிறது. தொழில் ரீதியாக ஆற்றல் பெற்றிருக்கின்றார், அனுபவமும் பெற்றிருக்கின்றார். அதனாலேதான் ரூபாய் 191 கோடி முதலீட்டுக் கழகத்திற்குத் தலைவராக இருக்கட்டும், டெக்னிகல் அட்வைஸ் கொடுப்பவராக இருக்கட்டும் என்று சொல்கிறோம். அந்த நேரத்தில் ஒரு தனி நபருக்கு வசதி செய்து கொடுப்பதற்காக இந்தப் பெரிய பொறுப்பை அவர்களுக்குக் கொடுத்திருக்கின்றார்கள் என்று குறை சொல்கின்றார்கள். இந்த நிலைமைகள்தான் இருக்கின்றன.

அதற்கு அடுத்ததாக பொதுத்துறையிலே, ஜாயிண்ட் செக்டாரிலே நடத்தப்படுகின்ற தொழில்கள் நஷ்டத்திலே நடத்தப்படுகின்றன என்ற குற்றச்சாட்டு சொல்லப்பட்டது. அதற்கு நான் தொழில்வாரியாக லாப நஷ்டம் பற்றிய விவரங்களைச் சொல்கின்றபோது, 1977-க்கு முன்னாலே எந்தெந்த நிறுவனங்களிலே நஷ்டம் இருந்தது, அதற்குப் பின்னர் எப்படி படிப்படியாக நஷ்டம் குறைக்கப்பட்டு வந்திருக்கிறது என்பதுபற்றியும், எந்தெந்தத் துறையிலே லாபம் வந்திருக்கிறது என்பது பற்றியும் விவரங்களைச் சட்டமன்றத்திலே சொல்லியிருக்கிறேன். ஒன்றிரண்டை நான் பேசுகின்றபோது சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்கு அடுத்தாற்போல், மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் பேசுகின்றபோது, "அடிப்படை வசதிகள் தமிழகத்திலே அதிகப்படுத்தப்பட வேண்டும், 'இண்டஸ்ட்ரியல் காம்ப்ளெக்ஸ்' போன்றவைகள் அதிகமாக்கப்பட வேண்டும், போக்குவரத்திற்காக ரெயில்வே லைன்ஸ் அதிகமாக்கப்பட வேண்டும் என்று மத்திய அரசை வற்புறுத்திக் கேட்க வேண்டும். பிளானிங் கமிஷன் அதைப் பற்றி குறிப்புகளை தயாரித்து அனுப்ப வேண்டும்" என்ற ஆலோசனையை வழங்கினார்கள். அதையெல்லாம் இந்த அரசு கவனத்திலே எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பரவலாக மத்திய அரசினுடைய இன்வெஸ்ட்மென்ட் தொழில் துறையிலே, தமிழகத்திலே குறைந்துகொண்டே வருகிறது என்பதையும், அதுபோலவே பொதுத் துறையில் தொழிற்சாலைகள், நிறுவனங்கள் குறைந்திருக்கின்றன என்பதையும் எல்லா உறுப்பினர்களும் ஒத்துக் கொண்டார்கள். அதற்காக மத்திய அரசை வற்புறுத்த வேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்தார்கள். நான் ஏற்கெனவே சொல்லியிருப்பதுபோல, தொடர்ந்து மைய அரசை வற்புறுத்திக்கொண்டிருக்கிறோம். இனிமேலும் தொடர்ந்து வற்புறுத்தி வருவோம். என்னவெல்லாம் தேங்கியிருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லி இவற்றிற்கெல்லாம் வெகு விரைவிலே லைசென்ஸ் வழங்கவேண்டும் என்று வற்புறுத்தி வருகிறோம். நாங்கள் அவ்வப்போது டெல்லிக்குச் சென்று அமைச்சர்களைச் சந்தித்தும், முதலமைச்சர் அவர்கள் மூலமாகவும், கடிதங்கள் எழுதியும் நெருக்கமான தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டு லைசென்ஸ் பெறுகின்ற முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறோம் என்பதைச் சொல்வதிலே மகிழ்ச்சியடைகிறேன்.

பொதுவாகச் சொல்லப்பட்ட உணர்வுகளை நான் உணர்ந்து இப்போது சொல்கிறேன். தொழில் துறையிலே 1977-க்குப் பின்னாலே, தமிழகத்தில் புரட்சித் தலைவர் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே, எப்படி சிறு தொழில்கள், வளர்ந்திருக்கின்றன என்பதைப் பற்றி மாண்புமிகு ஊரகத் தொழில் வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டினார்கள். அதுபோலவே நடுத்தர, பெரிய தொழில்கள் தமிழகத்திலே அதிகமாக வந்திருக்கின்றன என்பதை நான் சில புள்ளிவிவரங்களோடு சொல்லிக்கொள்வதிலே மகிழ்ச்சியடைகிறேன். இந்தியாவினுடைய சராசரி தொழில் உற்பத்தி பரவலாக 5.5 சதவிகிதமாக இருக்கின்றபோது. 1980-81-ல் அது தமிழகத்திலே 10.5 சதவிதமாக உயர்ந்திருக்கிறது. அதுபோல பின் தங்கிய பகுதிகளில் தொழில் தொடங்குகின்றபோது, கடன் வாங்குவதிலேயும் ஐ.டி.பி.ஐ. என்கின்ற இந்திய தொழில் வளர்ச்சி நிறுவனத்தில் கடன் வாங்குவதிலேயும், தொழிற்சாலைகள் ஆரம்பிக்க உதவிகள் பெறுவதிலேயும், 1980-81-லே தமிழ் நாடு சுமார் ரூ. 250 கோடி பெற்று இருக்கிறது. மொத்தமாக வழங்கியுள்ளது ரூ. 1,600 கோடி. அதிலே இது சுமார் 17 சதவிகிதமாகும். அதுபோலவே பின் தங்கிய பகுதிகளிலே தொழில் தொடங்குகின்றபோது; சென்ட்ரல் சப்சிடி பெறுவதிலே தொடர்ந்து 5 ஆண்டுகளாக தமிழ் நாடு முதலிடத்திலே இருக்கிறது என்பதைத் சுட்டிக்காட்டுகிறேன். 1978 வரை சுமார் ரூ. 6 கோடிக்கு இருந்தது, 1982 பெப்ரவரி வரை ரூ. 12 கோடியாக உயர்ந்திருக்கிறது. சென்ட்ரல்

கேபிடல் சப்சிடி பெறுவது உயர்ந்திருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அதுபோலவே ஐ.டி.பி.ஐ இடமிருந்து, பின் தங்கிய இடங்களில் தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு என்று கடன் வாங்குவதில், தமிழ் நாட்டில் தான் மொத்தமாக அதிகமாக இருக்கிறது. பின்தங்கிய பகுதிகளில் தொழில்கள், ரூ. 154 கோடி வரை பெற்றிருக்கின்றது. அதில் தமிழ் நாடு முதலிடத்திலே இருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப் போலவே, வேலைவாய்ப்பைப் பொறுத்தவரை, தொழிலாளர்களுடைய எண்ணிக்கை 1980-லே 5.13 லட்சமாக இருந்தது, 1981-லே 5.50 லட்சமாக உயர்ந்திருக்கிறது. இந்த உயர்வு விகிதம் 7 சதமாகும், என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையிலே, மைய அரசு அனுமதியில்லாமலேயே, தேவையில்லாத டி லைசென்ஸ்ட் செக்டாரிலே, நடுத்தர, பெரிய தொழில்கள் 1977-லேயிருந்து 1981 வரை, 193 தொழில்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. 1977 முதல் 1981 வரை, பரிந்துரைக்கப்பட்டிருக்கின்ற மனுக்கள் சுமார் 300. அவைகள் மத்திய அரசிலே இருக்கின்றன என்பதையும், 1955-க்கு லெட்டர் ஆஃப் இன்டென்ட் கொடுத்திருக்கிறது என்பதையும் 146-க்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். 1976-77-லே தொழிற்சாலைகள் பயன்படுத்துகின்ற மின்சாரத்தின் அளவு 3,050 யூனிட்டுகள், 1979-80-லே 3,250 யூனிட்டுகள் என்று உயர்ந்திருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுபோலவே 1970ஆம் ஆண்டு முடிய தொழிற்சாலைகள் சட்டப்படி தொடங்கப்பட்ட தொழிற்சாலைகள் எண்ணிக்கை 6 ஆயிரம் என்று இருக்க, 1981 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகள் எண்ணிக்கை சுமார் 9 ஆயிரம் ஆக உயர்ந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோலவே, இந்த மாநிலத்தினுடைய வருவாயிலே தொழிற்துறையினுடைய பங்கு 1970-71-லே 20 சதவிகிதமாக இருந்தது. 1980-81-லே அது 26 சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் பேசுகின்றபோது, பத்திரிகையைச் சுட்டிக்காட்டி அதிலே பல்வேறு அதிபர்கள் சொல்லி

[திரு. சு. திருநாவுக்கரசு] [1982 மார்ச் 25

யிருக்கின்ற விவரங்களை எடுத்துச் சொன்னார்கள். அதிலே ஒருவருக்கொருவர் மாறுபாடுகளைச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொல்லிய புள்ளிவிவரங்களில் மாறுபாடுகள் இருக்கின்றன. நான் அந்தந்த இலாக்காக்கள் மூலமாக, மத்திய அரசுக்குச் சொந்தமான அந்தந்த வங்கிகள் கொடுத்த தகவல்கள், மத்திய அரசுத் துறைகளில் கொடுத்த புள்ளிவிவரங்களை வைத்து சுட்டிக்காட்டினேன். மாநிலத்தைப் பொறுத்தவரையில், தமிழ் நாடு என்பது மட்டுமல்ல, எந்த மாநில அரசாக இருந்தாலும், மாநில அரசு நிதியிலிருந்து பெரிய, நடுத்தரத் தொழிற்சாலைகளை அவர்கள் அதிகமாகத் தொடங்க முடியாது என்பதையும் மைய அரசு உதவி இருந்தால்தான் பெரிய தொழில்கள் வளர முடியும் என்பதையும், பெரிய தொழில்கள் அதிகமாக வந்தால்தான், சிறு தொழில்கள் அதிகமாக வர முடியும் என்பதையும் அங்கத்தினர்கள் எல்லாம் ஏற்றுக்கொள்வார்கள். மாநில அரசினுடைய அதிகாரத்திற்கு, மாநில அரசினுடைய நிதி ஆதாரங்களுக்குட்பட்டு எவ்வளவு செய்திருக்கிறோம் என்பதைத்தான் மாண்புமிகு அங்கத்தினர் கவனத்திலே கொண்டு அரசினுடைய முயற்சியைக் கணக்கிட வேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான வேண்டுகோள். மகாராஷ்டிராவைப் பாருங்கள், குஜராத்தைப் பாருங்கள் என்று சொன்னால், அங்கே ஒட்டுமொத்தமாக உற்பத்தியினுடைய அளவு அதிகமாக இருப்பதற்கு, தொழில் பெருக்கத்திலே அதிகமான அளவுக்கு முதல் தரம், இரண்டாவது தரம் என்று சொல்வதற்குக் காரணம் அங்கே வருகின்ற மத்திய அரசின் இன்வெஸ்ட்மெண்ட்தான். குஜராத்திலே பெட்ரோ கெமிக்கல் காம்ப்ளெக்ஸ் ரூபாய் ஆயிரம் கோடியில் இருக்கிறது. அந்த ரூபாய் ஆயிரம் கோடியை மாநில அரசு முதலீடு செய்வதாக இருந்தால், ஆண்டுக்கு ரூபாய் 50 கோடி என்று ஒதுக்கி 20 ஆண்டுகள் ஆகிவிடும். அப்படித்தான் தமிழ் நாடு அரசு பொதுத் துறைக்குச் செலவு செய்ய முடியும். எந்த மாநில அரசாக இருந்தாலும், அப்படித்தான். எனவே மைய அரசு உதவி செய்ய வேண்டும். மைய அரசு இன்வெஸ்ட்மெண்ட் செய்கின்ற பணத்தின் அளவு நான்கு சதவிகிதமாகக் குறைந்துகொண்டே வருகிறது. அதை அதிகப்படுத்த வேண்டும். அதுபோலவே, பொதுத் துறைகளில் தொழில்கள் அதிகரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையைத் தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டிருக்கிறோம். இங்கே மாநில வரம்பிற்குட்பட்டு மாநில அரசு ஒதுக்குகின்ற பணத்தைக் கொடுப்பதற்கு நாம் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் என்று வைத்திருக்கிறோம். அதற்கு என்று சில நிதிகளை வைத்திருக்கிறோம், சிட்கோ, டிட்கோ போன்ற நிறுவனங்கள்

1982 மார்ச் 25] (திரு. சு. திருநாவுக்கரசு)

தமிழக அரசின் சார்பிலே, அரசுக்குச் சொந்தமாக நடத்தப்படுகின்ற நிறுவனங்கள். இந்த நிறுவனங்களுடைய நிதிநிலை எப்படி இருக்கிறது என்பதைப் பற்றி விவரங்களை எல்லாம் நான் சொல்ல ஆரம்பித்தால் முடியாது. அதற்கு நேரம் அதிகமாகிவிடும். இருந்தாலும்கூட, நான் அவர்கள் பெற்ற அளவைப் பற்றி மட்டும் சொல்கிறேன். 1977-78-லே கொடுத்த கடன் 12 கோடி ரூபாய்; 1981-82-லே ரூ. 40 கோடி. இந்த இன்வெஸ்ட்மெண்ட் அளவை நாம் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

(பிற்பகல் 2-20)

அதைப்போலவே சிப்காட் மூலமாக எடுத்துக்கொண்டால், டேர்ம் லோன்ஸ்—தவணைக் கடன்கள்—1979-80-ல் சுமார் ரூ. 3 கோடி, 1981-82-ல் அது ரூ. 12 கோடி. சீட் கேபிடல் அசிஸ்டன்ஸ் கொடுத்தது 1977-78-லே ரூ. 5 லட்சம், 1980-லே ரூ. 100 லட்சம். அதைப் போல 1977 முதல் 1981 வரையில் 150 தொழில்களுக்கு நிதி உதவிகள் செய்யப்பட்டிருக்கின்றன. துவங்கிய நாளிலிருந்து வட்டியில்லாத விற்பனை வரிக் கடன்—'இன்ட்டரஸ்ட் ப்ரீ சேல்ஸ் டாக்ஸ் லோன்'—1977 வரை கொடுக்கப்பட்டது சுமார் ரூ. 3 கோடி, அதற்குப் பின்னாலே 1977 முதல் 1981 வரையில் சுமார் ரூ. $8\frac{1}{2}$ கோடி. டிட்கோ சார்பில் பொதுத் துறையிலே தொழிற்சாலைகள் துவங்கப்படுகின்றன. அதோடு மட்டுமல்ல. கூட்டுத் துறையில் தொழில் முனைவர்கள் இருந்தால், அவர்களையும் சேர்த்துக்கொண்டு தொழில்கள் துவங்கப்படுகின்றன. இப்படி கூட்டுத் துறையில் டிட்கோ மூலமாகத் துவங்கப்பட்டது ஏறக்குறைய 38 தொழிற்சாலைகள்—1977-க்குப் முன்னாலே 15 தொழிற்சாலைகள், மற்றது 1977-க்குப் பின்னாலே. டிட்கோ மூலம் 18 ஜாயின்ட் செக்டார் தொழில்களுக்கு சுமார் 170 கோடி ரூபாய் அளவிலே உதவிகள் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதைப் போல டிட்கோ சார்பிலே தமிழ் நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் மூலமாக அரியலூரில் சுமார் 30 கோடி ரூபாய் அளவிலே $1\frac{1}{2}$ ஆண்டிலே சிமெண்ட் தொழிற்சாலை கட்டி முடிக்கப்பட்டது. சர்க்கரை நிறுவனத்தின் சார்பிலே எறையூரில் $1\frac{1}{2}$ ஆண்டுக் காலத்திற்குள் சர்க்கரை ஆலை நிர்மாணிக்கப்பட்டது, துவக்கப்பட்டது. அதைப்போல ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் தயாரிக்கும் தொழிற்சாலை சிமெண்ட் கார்ப்பரேஷன் மூலம் ஆரம்பித்து, ஓராண்டிலே பணியைத் துவக்கியது. புதிய நிறுவனங்களை இந்த அரசு துவக்கியதா என்று கேட்

டார்கள். இருக்கிற நிறுவனங்கள் சிறப்பாக, செம்மையாகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றன. புதிய நிறுவனங்கள் என்று சொல்லும்போது, புரட்சித் தலைவர் ஆட்சியிலே எத்தனையோ நிறுவனங்களைத் துவக்கியிருக்கிறார்கள். தமிழ் நாடு கனிம நிறுவனம்—டாமின், தமிழ் நாடு மாக்னசைட் நிறுவனம் சேலத்திலே ; எலக்ட்ரானிக் தொழிலிலே தமிழ் நாடு பின் தங்கியிருக்கிறதென்பதால், எலக்ட்ரானிக் தொழில்களை உற்சாகப்படுத்துவதற்கு தமிழ் நாடு எலக்ட்ரானிக் கார்ப்பரேஷன் என்ற பெயரிலே தனியாக நிறுவனம். மேலும் சிப்காட்டில் இல்லாத பிரிவுகளைப் புதிதாகத் துவக்கியிருக்கிறோம். வெளி நாட்டிலுள்ள இந்தியர்கள் முதலீட்டைப் பெற ஸ்பெஷல் விங். இப்படி இருப்பவற்றில் மாறுதல்கள், விரிவாக்கங்கள். அதைப்போல புதிய நிறுவனங்கள்—1977-க்குப் பின்னாலே 3 ஆண்டுகளில் 4, 5 நிறுவனங்கள்—தமிழ் நாடு நியூஸ்பிரின்ட் நிறுவனம் போன்றவை—புரட்சித் தலைவர் ஆட்சியில் நிறுவப்பட்டிருக்கின்றன. தனிக் கார்ப்பரேஷன்கள் நிறுவப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நிறுவியதோடு மட்டுமல்ல. அப்படி நிறுவி, 3 ஆண்டுகளுக்குள்ளே, 4 ஆண்டுகளுக்குள்ளே அவை லாபகரமாக நடக்கிற அளவிற்கு, வெற்றிகரமாக நடக்கும் அளவிற்கு வந்திருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் கடன் வழங்குவது அல்லது புதிய சலுகைகளை அறிவித்து தொழில் துவங்க வருபவர்களை ' அட்ரேக்ட் ' செய்வது போன்ற பணிகளில் எவ்வளவோ மாறுதல்களை இந்த அரசு செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்து, அங்கே இன்சென்டிவ் எவ்வளவு கொடுக்கிறார்கள், எவ்வளவு உதவிகள் செய்கிறார்கள் என்பதையெல்லாம் நம்முடைய அரசு அலுவலர்கள் சென்று பார்த்தார்கள். அமைச்சர்கள் என்ற முறையில் நாங்களும் சென்று அந்த மாநில அமைச்சர்களோடு பேசி, ஒப்பிட்டுப் பார்த்து, அதற்கேற்ப மாற்றங்களைச் செய்திருக்கிறோம், விரிவாக்கங்களைச் செய்திருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்திருப்பார்கள் என்று நம்புகிறேன். எற்கெனவே ' இன்ட்ரஸ்ட் ப்ரி சேல்ஸ் டாக்ஸ் லோன் ' ரூ. 48 லட்சமாக இருந்தது. அந்த லோன் ஒரு கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டது. 10 ஆண்டுகளாக இருந்த சீலிங் அது. விரிவாக்கம் ரூ. 15 லட்சமாக இருந்தது. இப்போது ரூ. 50 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், பின் தங்கிய பகுதி என்று சில பகுதிகளை அறிவிக்கிறோம். மத்திய அரசு அறிவிக்கிறது, மாநில அரசும் அறிவிக்கிறது. ஆனால் அந்தப் பகுதிகளில் தொழில்கள் வருவ

தில்லை. எனவே எங்கே வசதி, வாய்ப்பு இருக்கிறதோ அங்கேயெல்லாம் தொழில்கள் வரவேண்டுமென்பதால், டிரக்ஸ் & பார்மசியூடிகல்ஸ், எலக்ட்ரானிக்ஸ் போன்ற தொழில்கள், ஆட்டோ மோபைல் ஆன்சிலரிஸ் போன்ற தொழில்கள் தமிழ் நாட்டில் எங்கே துவங்கப்பட்டாலும், அது பார்வேர்ட்-ஆக இருந்தாலும் சரி, பேக்வார்ட்-ஆக இருந்தாலும் சரி, அதற்கு 10 சதவிகிதம் ' கேபிடல் சப்சிடி ' உண்டு, மற்ற சலுகைகளும் உண்டு என்று அறிவித்திருக்கிறோம். இப்படி பலவற்றைச் சொல்ல முடியும். பின் தங்கிய பகுதிகளில் தொழில்கள் துவங்க என்று, மத்திய அரசு 33 தாலுக்காக்களை அறிவித்திருக்கிறது. மாநில அரசு 24 தாலுக்காக்களை அறிவித்திருக்கிறது. அது தவிர 6 தாலுக்காக்களை அறிவித்திருக்கிறது. எற்கெனவே அறிவித்த தாலுக்காக்களில் சிறு தொழில்களுக்குத்தான் முன்னாலே கடன் கொடுத்திருக்கிறோம். இப்போது அதை நடுத்தர பெருந்தொழில்கள் என்று மாற்றக் கருதியிருக்கிறோம். தமிழ் நாட்டில் இன்டஸ்ரியல் இன்வெஸ்ட்மென்ட் கார்ப்பரேஷன்—'டிக்'—சென்னையிலேயுள்ள ஹெட் ஆபிசிலேதான் கடன் கொடுத்தது. அதைப் பரவலாக்கி, சிறு தொழில்கள் அதிகமாக வர வேண்டுமென்பதால், ஒவ்வொரு பிராஞ்சிலும் 25,000 ரூபாய் வரை தரலாமென்று உத்தரவிட்டோம். 25,000 ரூபாய் போதாது என்று, இப்போது அதை ஒரு லட்சமாக உயர்த்தி, உத்தரவிட முடிவு செய்திருக்கிறோம். எனவே ஒவ்வொரு பிராஞ்சிலிருந்தும் லட்சம் ரூபாய் வரை கொடுக்கலாம். இப்படி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், எற்கெனவே இருந்த நிலைமைகளிலிருந்து மாற்றங்களைக் கொண்டு வந்து, பல்வேறு விதமான மாற்றங்கள், வளர்ச்சிகள், விரிவாக்கங்கள், புதிய நிறுவனங்கள் புரட்சித் தலைவர் ஆட்சியில் உண்டாகியிருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும், மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள், பொதுவாகப் பேசியவர்கள் யாவரும் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களைத் தவிர, எதுவுமே நடக்கவில்லை என்று சொல்லவில்லை. அவர்கள் அப்படிச் சொல்ல முடியாது. அவர்கள் நிலைமைக்கேற்ப, அவர்கள் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். பொதுத் துறை நிறுவனங்கள் எவ்வளவு நஷ்டத்தில் நடக்கின்றன என்று சொன்னார்கள். நாடு முழுவதும் இருக்கிற பொதுத் துறை நிறுவனங்கள் ஒழுங்காக நடத்தப்பட வேண்டும், அதிலே முழுமையான அளவிற்கு உற்பத்தி அதிகரிக்கப்பட வேண்டுமென்பது போன்ற கோஷங்கள் எழுப்பப்பட்டு, உற்பத்தி ஆண்டாக இந்தியா எங்கும் கொண்டாடப்படுகிறது. தமிழ் நாட்டில் எற்கெனவே நஷ்டத்தில் இயங்கிக்

கொண்டிருந்த பொதுத் துறை நிறுவனங்கள், கூட்டுத் துறை நிறுவனங்கள் இப்போது லாபத்தில் இயங்க ஆரம்பித்திருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். டிட்கோ மூலம் ஜாயின்ட் செக்டாரில் 15 தொழில்கள் நடக்கின்றன. அதிலே 10 தொழில்கள் இப்போது லாபமடைந்து, வெற்றிகரமாக நடக்கின்றன. வருகிற ஆண்டில் மீதமுள்ள 5 தொழில்களும் லாபம் பெறும் சூழ்நிலை இருக்கிறது. நிதி நிறுவனங்கள்கூட தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்—'டிக்'ஐப் பொறுத்தவரையில், 1981-82-ல் 1 கோடியே 25 லட்சம் நஷ்டத்தில் இருந்தது, இப்போது லாபம் பெறும் நிலையை அடைந்திருக்கிறது. இப்போது 125 லட்சம் ரூபாய் லாபம் அடைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சிப்காட்—தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் 1976-77-லே ரூ. 4 லட்சம் நஷ்டத்தில் இருந்தது. 1980-81-லே ரூ. 120 லட்சம் அந்த நிறுவனத்திற்கு லாபம் என்பதைச் சொல்லிக் கடமைப்பட்டிருக்கிறேன். டிட்கோ நிறுவனம் 1975—76-ல் 190 லட்சம் ரூபாய் நஷ்டத்தில் இருந்தது. இப்போது 29 லட்சம் ரூபாய் லாபத்தில் இருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதைப்போன்று 'டேமின்' நிறுவனம் இருக்கிறது. இது போன்று 19'6 க்குப் பின்னால் புதிதாக ஆரம்பிக்கப்பட்டவை எல்லாம் லாபத்தில் நடக்கின்றன. புள்ளிவிவரங்கள் சொன்னால் நேரமாகும். எனவே 'லாபம்' என்று சொல்லிக்கொண்டு நிறுத்திக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நஷ்டத்தில் இயங்கிக்கொண்டிருந்த கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் எல்லாம்—5 சர்க்கரை ஆலைகளிலும்—சேர்த்து, 3½ கோடி ரூபாய் லாபத்தில் இயங்குகின்றன. பொதுத்துறையில் நடக்கும் சர்க்கரை ஆலைகள் 2 லாபத்தில் நடக்கின்றன. மீதமுள்ள கூட்டுறவு ஆலைகள் 5-ல் நஷ்டம் குறைந்து வருகிறது. வருகிற ஆண்டுகளில் அவற்றிலும் லாபம் வருமென்று எதிர்பார்க்கப்படுகிறது. நூற்பு ஆலைகளை ஒட்டுமொத்தமாக எடுத்துக் கொண்டால், 'ப்ராபிட்' என்ற அளவில் இருக்கிறது. இந்தக் காரணங்களால்தான் மாண்புமிகு உறுப்பினர் வேறு எதையும் சொல்லாமல், சிராமிக் இன்டஸ்ட்ரி குறித்து சுட்டிக் காட்டினார்கள். அதுதான் நஷ்டத்தில் இருக்கிறது. அரசாங்கம் நடத்துகிற பொதுத் துறை, கூட்டுத் துறை நிறுவனங்களில் நஷ்டத்தில் இயங்குவது அது ஒன்றுதான். 1974-ல் ஆரம்பிக்கப்பட்டது அது. ஆரம்பித்தபோது 70 லட்சம் ரூபாய் முதலீடு செய்து, இயந்திரங்களைப் பொருத்தினார்கள், கல் சுடுவதற்கென்று. வெளியிலே தொழி

லாளி விற்கிறான், அவன் செங்கல் சுட்டு, லாபத்தில் விற்கிறான். இவ்வளவு அதிகமான அளவிற்கு, 70 லட்சம் ரூபாய் அளவிற்கு பணத்தை இன்வெஸ்ட் செய்து, தொழிற்சாலை அமைத்தால், 18 லட்சம் கற்கள் உற்பத்தி செய்யலாம் ஓராண்டுக்கு என்று எஸ்டிமேட் போட்டு, ஆரம்பித்தார்கள். ஆனால் உண்மையான உற்பத்தி 4 லட்சம் தான். அதற்கு மேலே அந்த இயந்திரங்களால் உற்பத்தி செய்ய முடியவில்லை. அதனால்தான் அந்த நிறுவனம் இப்போது நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. மற்றபடி எல்லா நிறுவனங்களும் நிச்சயமாக லாபத்தில் நடக்கின்றன. ஒன்றிரண்டு நஷ்டத்தில் இருந்தால், ஆண்டுக்காண்டு மாறிக்கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசு அதிகாரிகள், ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இப்படிப்பட்ட நிறுவனங்களில் இருந்தாலும், அவர்களுக்குக் கீழே தொழில் நுட்ப அலுவலர்களை வைத்துக் கொண்டுதான் காரியங்கள் செய்கிறார்கள். பணிகள் முறையாக நடக்கின்றன என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, கூட்டுறவுத் துறையிலே திருத்தணியில் சர்க்கரை ஆலை துவங்க, 4, 5 நாட்களுக்கு முன்பு—20 ஆம் தேதி—மத்திய அரசு லைசன்ஸ் கொடுத்திருக்கிறது. 'மகிழ்ச்சியான செய்தி. மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் சொன்னதுபோல இன்னமும் இருக்கிற சிமெண்ட் பற்றாக்குறை இருக்கும் காலகட்டத்தில், சிமெண்ட் தொழிற்சாலைக்கு லைசன்ஸ் வராமல் இருப்பது வருத்தத்திற்குரியது.' அதற்குச் சொல்லப்படும் காரணங்கள் விநோதமானது, வருத்தப்படுவதற்குரியது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 2-30)

முதலில் ரெயில்வே லைன் பற்றி சுட்டிக் காட்டப்பட்டது. அதற்குப்பின்னால் நிலக்கரிப் பற்றாக்குறை இருக்கிறது என்று நமக்குக் கடிதம் வந்திருக்கிறது. இதையெல்லாம் எண்ணிப்பார்த்துத்தான், இப்படிப்பட்ட காரியங்கள் குறித்து மத்திய அரசிடம் நாம் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் பேசும்போது தஞ்சை மாவட்டத்தில் வேதாரண்யத்தில் தினசரி 1,500 பீப்பாய் அளவிற்கு எண்ணெய்

ஆழ் கிணற்றிலிருந்து எடுக்க முடியும் என்று கண்டுபிடித்திருப்பதாக இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். இப்படி தினசரி 1,500 பீப்பாய் எண்ணெய் ஆழ் கிணற்றிலிருந்து எடுக்கப்பட்டால், இந்தியாவில் தொழில்கள் வெற்றிகரமாக ஏராளம் அமையும் என்று பத்திரிகைகளில் செய்தி வந்துகொண்டிருக்கிறது. அதற்கு இப்பொழுதே ரிபைனரி தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டும். அப்படி ஆரம்பித்தால்தான், ஓராண்டு அல்லது ஈராண்டுகளில் எண்ணெய் எடுக்க ஆரம்பிக்கும்போது, அந்த எண்ணெயை இந்த சுத்திகரிப்பு ஆலையின் மூலம் நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ள வாய்ப்பு ஏற்படும். அந்த முறையில் இதுபற்றியும் மத்திய அரசை வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

சேலம் இரும்பாலையைப் பற்றிச் சொன்னார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பே இதுபற்றி எழுச்சிக் கூட்டம் நடத்தியிருக்கிறார்கள். சேலம் உருட்டாலையில் இப்போது நிர்ணயிக்கப்பட்டிருக்கும் தகடுகளின் உற்பத்தி அளவு போதாது என்றும், இன்னும் 50 கோடி ரூபாய் கூடுதலாகச் செலவு செய்தால், 70 ஆயிரம் டன் உற்பத்தி செய்யக் கூடிய வாய்ப்பு இருப்பதால், அதற்குரிய இன்வெஸ்ட்மென்டைச் செய்ய வேண்டுமென்றும் நான் மத்திய அமைச்சரிடம் சொன்னேன். 'இம்மீடியட்' ஆக அதைச் செய்யுங்கள் என்று சொன்னேன். அவர்களும் அதைக் கவனிக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதுபோல் கஞ்சமலையிலுள்ள இரும்பு தாதில் 35 பெர்சன்ட் தான் இரும்பு 'கன்டென்ட்' இருப்பதாகவும், ஆகவே அங்கு இரும்பு தயாரிக்க முடியாது என்றும் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு ஸ்பான்ச் மெதட்-ல் 10 பெர்சென்ட், 15 பெர்சென்ட் இரும்பு 'கன்டென்ட்' இருக்கக்கூடிய பகுதிகளில் எல்லாம் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டு இரும்பு எடுக்கக்கூடிய சூழ்நிலையில், சேலத்தில் 35 பெர்சன்ட் இரும்பு 'கன்டென்ட்' இருப்பதால் கட்டாயம் இரும்பு ஆலை அமைத்து, இரும்பை உற்பத்தி செய்ய வேண்டுமென்று நாங்கள் சுட்டிக்காட்டியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் இதை ஆரம்பிக்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்திருப்பதுபோல், நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதை ஆரம்பிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இந்த அரசும் இதை வலியுறுத்திக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படி இதுதொடர்பாக பல்வேறு புது தொழிற்சாலைகள் வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்து வைத்த அநேகமாக எல்லா கருத்துக்களுக்கும் நான் இங்கு பதில் சொல்லியிருக்கிறேன். இன்னும் அதிகமாகச் சொல்லிக்கொண்டிருந்தால் நேரம் அதிகமாகும். மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் பேசுகின்றபோது, சிமென்ட் பற்றிச் சொன்னார்கள். அவர்கள் அதுபற்றி ஆரம்பிக்கிறபோதே ஒரு 'துப்பறியும் கதை' போல் ஆரம்பித்தார்கள். சிமென்ட் பிரச்சினை என்பது எவ்வளவு பயங்கரமானது என்பதையும், அதன் மூலம் ஆட்சி மாற்றம் கூட ஏற்படுகிறது என்பதையும் இங்கே சொன்னார்கள். இதுசம்பந்தமாக மற்ற மாநிலங்களில் என்ன அதிகாரம் இருக்கிறதோ அதே அளவு அதிகாரம் தான் முதலமைச்சர் என்கிற வகையில் மாண்புமிகு முதலமைச்சருக்கும், தொழில் அமைச்சர் என்கிற வகையில் எனக்கும் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த சிமென்ட் விநியோகக் குற்றச்சாட்டிலே நாங்கள் எந்த வகையிலும் ஆட்படவில்லை என்பதை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். டிஸ்கிரிஷனரி கோட்டாவைப் பொறுத்தவரையில், தமிழகத்தைப் பொறுத்த வரையில், அதற்கான அனுமதியை நாங்கள் யாருக்கும் கொடுக்கவில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களோ அல்லது நானோ இந்த டிஸ்கிரிஷனரி கோட்டாவைப் பயன்படுத்தி யாருக்கும் ஒதுக்கீடு செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த விஷயத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : டிஸ்கிரிஷனரி கோட்டாவை யாருக்கும் ஒதுக்கவில்லை என்று மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒரு சாதாரண சிறு தொழில் ஆரம்பிக்கக் கூட 15 டன் சிமென்ட் கிடைக்கவில்லை. ஆனால் 700 வீடுகள் கட்ட பார்சன் கம்பெனிக்கு மட்டும் ஆயிரக்கணக்கான மூட்டை சிமென்ட் ஒதுக்குகிறார்கள். இப்படி ஆயிரக்கணக்கான மூட்டை சிமென்டை ஒரு நிறுவனத்திற்கு ஒதுக்குவதற்குரிய பொறுப்பு, அதிகாரம் இன்றைக்கு யாரிடம் இருக்கிறது? யாரால் இப்படி ஒதுக்கப்பட்டிருக்கிறது? இந்த அரசுக்கு இதில் சம்பந்தமே இல்லையா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். பார்சன் காம்ப்ளக்ஸ் ஆக இருந்தாலும் சரி, இன்னும் கோடிக்கணக்கான மூலதனத்தில் கட்டப்படுகிற நிறுவனமாக இருந்தாலும் சரி, இந்த அரசு மொத்தமாக, டிஸ்கிரிஷனரி கோட்டாவைப் பயன்படுத்தி யாருக்கும் ஒதுக்கீடு செய்யவில்லை. அப்படி கட்டுபவர்கள் சம்பந்தப்பட்ட தாசில்தார், கலெக்டர் அலுவலகம் இப்படி

தொடர்புடையவர்களிடம் அதற்குத் தேவையான 'புளு பிரின்ட்' போன்றவற்றைச் சமர்ப்பித்து, சட்டப்படி சிமென்ட் பெற்றிருக்கலாம். அப்படி சிமென்டைக் கொடுக்கும்போது, இரண்டு மூன்று தவணைகளில் தான் கொடுப்பார்கள். ஒவ்வொரு தடவையும் அதிகாரிகள் இன்ஸ்பெக்ஷன் செய்த பிறகு தான், அதை ஏற்றுக்கொண்ட பிறகு தான், பெர்மிட் கொடுப்பார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு வேண்டிய ஒருவருக்கு 15 டன் சிமென்ட் கிடைக்கவில்லை என்பதற்காக தமிழகத்திலே யாருக்கும் ஒதுக்கப்படவில்லை, கொடுத்துள்ள அத்தனையும் தவறாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்வது சரியல்ல. தாசில்தார்களுக்கு ஒரு குறிப்பிட்ட அளவு சிமென்ட்டுக்கு பெர்மிட் வழங்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மேல் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அதிகாரம் இருக்கிறது. பெர்மிட் வழங்கிய பிறகு, சம்பந்தப்பட்டவர்கள் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கோடவுனிலிருந்து சிமென்டை எடுத்துச் செல்ல வேண்டும். ஆகவே இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், அரசால் எந்தவிதமான தவறும் செய்யப்படவில்லை. அரசாங்கம் நேரடியாக எந்தவிதமான அலாட்மென்டையும் கொடுக்கவில்லை. அப்படி அரசாங்கம் 'அலாட்' பண்ணியிருந்தால் அல்லவா குற்றச்சாட்டு வர முடியும்? ஆனால் அப்படி அரசாங்கம் 'அலாட்' பண்ணவில்லை என்பதை நான் மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : அமைச்சர் சொல்வதையெல்லாம் நாங்கள் ஒப்புக்கொள்ள வேண்டும் என்பதில்லை. ஆனால் நாங்கள் சொல்கின்ற குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரங்கள் இருக்கின்றன. சிவராஜ் என்கிற ஒருவருக்கு மட்டும் ஒரே பெர்மிட்டில் 2 ஆயிரம் மூட்டை சிமெண்ட் வழங்கப்பட்டிருக்கிறது. அதுபோல் கோபிச்சன், பார்சன் போன்றவர்களுக்கு தலா 1,800 மூட்டை என்றும், 2,000 மூட்டை என்றும் எண் 103/82 மற்றும் எண் 255/82 நாள் 20—2—1982-ல் வழங்கப்பட்டிருக்கிறது. யாராவது தனிப்பட்ட ஒரு தமிழருக்கு இப்படி ஒரே பெர்மிட் மூலம் 2 ஆயிரம் மூட்டை சிமென்ட் வழங்கியிருக்கிறார்களா? இவர்களுக்கு மட்டும் எப்படி கிடைத்தது? இதற்கு யார் பொறுப்பு?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : அதைத் தான் நானும் சொன்னேன். அரசு பிரத்தியேகமாக தனியாக யாருக்கும் பெர்மிட் ஒதுக்கீடு செய்யவில்லை. மற்ற மாநிலங்களில் எல்லாம் ஒதுக்கீடு செய்தது போல், நாங்கள் ஒதுக்கீடு செய்யவில்லை. எந்த ஒரு ஹவுசிங் காம்பிளக்சுக்காகவும் இந்த அரசு

மொத்தமாக ஒதுக்கவில்லை. ஆனால் அதற்குப் பதிலாக கட்டிடத்தைக் கட்டுகிறவர்கள் அது சம்பந்தமாக அனுப்ப வேண்டிய 'புளு பிரின்ட்' போன்றவற்றைத் தயார் செய்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்புகிறார்கள். அதிகாரிகள் அதைப் பரிசீலனை செய்து அதற்கான பெர்மிட்டுகளை வழங்கிய பிறகு, அதன் பேரில் சிமென்ட் விநியோகம் செய்கின்ற முறை இருக்கிறது. அந்த வகையில் அவர்கள் விண்ணப்பித்து, பெற்றிருப்பார்கள்.

திரு. ம. சங்கரலிங்கம் : கலெக்டர் லெவலில் இத்தனை டன் வரை பெர்மிட் வழங்கலாம் என்று அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. அதுபோல் இன்டஸ்ட்ரீஸ் டிப்பார்ட்மென்டைப் பொறுத்தவரையில், இத்தனை டன்னுக்கு மேல் இவர்களுக்கு அதிகாரம் என்று வைத்திருக்கிறோம். தாசில்தார் அளவில் 50 டன் வரையும், கலெக்டர் அளவில் 200 டன் வரையும் வழங்கலாம் என்று நான் கருதுகிறேன். இப்போது இதுபற்றிய குறிப்பு மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் இல்லாவிட்டாலும் கூட, இலாகாவிலிருந்து இது சம்பந்தமான குறிப்பைப் பெற்று இங்கே வைத்தால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 2,000 மூட்டை என்று சொன்னார்கள். அந்த அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இருக்கிறது. அவர் பெர்மிட் வழங்கிய பிறகு, அதற்கான சிமென்டை விநியோகிக்கின்ற பொறுப்பு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனிடம் இருக்கிறது. அவர்களுடைய கோடவுனில் தான் சிமென்ட் ஸ்டாக் செய்து வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அவரவர்களுடைய அதிகாரத்திற்கு உட்பட்டு தான், அந்த அளவுக்குத் தான் அவர்களால் ஒதுக்க முடியும். அந்த வகையில் இவர்களும் பெற்றிருப்பார்கள்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் இங்கே சில கார்டுகளைக் காண்பித்தார்கள். நானும் அந்தக் கார்டுகள் எங்கிருந்து வந்திருக்கின்றன என்று பார்த்தேன். எல்லாக் கார்டுகளும் கோபாலபுரத்திலிருந்து வந்திருக்கின்றன. கோபாலபுரம் கிடங்கிலிருந்துதான் அவை அனுப்பப்பட்டிருக்கின்றன. கோபாலபுரத்தில் அமைந்திருக்கக் கூடிய கோடவுனிலுள்ள அலுவலருடைய கையெழுத்து தான் அதில் இருக்கிறது. ஆகவே தவறு கோபாலபுரத்தில் நடந்திருக்கிறது.

திரு. ம. சங்கரலிங்கம் : கோபாலபுரத்தில் தவறு நடந்துள்ளது என்று சொல்வது சரியல்ல. கோபாலபுரம் சிவில் சப்ளைஸ் அலுவலகத்தில் நடந்துள்ளது என்று சொல்லுங்கள். (சிரிப்பு)

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : அதைத்தான் நானும் சொல்கிறேன். கோபாலபுரத்தில் தான் தவறு நடந்திருக்கிறது என்று திருப்பியும் சொல்கிறேன். கோபாலபுரத்திலிருந்து இந்த கார்டுகள் விநியோகிக்கப்பட்டிருக்கின்றன. கோபாலபுரத்திலுள்ள சிவில் சப்ளைஸ் அலுவலகத்திலுள்ளவர்கள். 'உங்களுக்கு சிமென்ட் அலாட்மென்ட் வந்திருக்கிறது, உடனே வந்து டெலிவரி எடுத்துக்கொள்ளுங்கள்' என்று சொல்லி கார்டுகளை அனுப்பியிருக்கிறார்கள்.

அவர்கள் இருப்பது ஒரு ஏஜென்சி போல்தான். அந்த வகையில் அவர்கள் உரியவர்களுக்குக் கார்டு அனுப்புவார்கள். ஆனால் அதற்குரிய பெர்மிட்டை தாசில்தார் தான் கொடுத்திருக்க வேண்டும். பெர்மிட் கொடுத்த தாசில்தார் கோபாலபுரம் பகுதியைச் சேர்ந்தவர். அந்தத் தாசில்தார் தான் பெர்மிட்டைக் கொடுத்திருக்க வேண்டும். அப்படி தாசில்தார் பெர்மிட் கொடுக்க வேண்டுமென்றால் கூட, விடு ரிப்பேர் பார்க்க என்றால், ஹவுஸ் டாக்ஸ் கட்டிய ரசீதைக் கொடுக்க வேண்டும். அதுபோல் புதிய கட்டடம் கட்டுவதாக இருந்தால், 'புளு பிரின்ட்' போன்றவற்றைக் கொடுக்க வேண்டும். இதில் ஒன்றிரண்டு சந்தேகங்கள் நமக்கு ஏற்படுகின்றன ஒன்றில் பினாமியாக முகவரி கொடுத்து சிமென்ட் வேண்டி அப்ளை பண்ணியவர்களுக்கு தாசில்தார் பெர்மிட் கொடுத்திருப்பாரா, இல்லை தாசில்தாரே இதில் தவறு செய்திருப்பாரா என்பது. அல்லது தாசில்தார் பெர்மிட் கொடுக்காமலேயே சிவில் சப்ளைஸ் கோடவுனில் இருப்பவர்கள் இப்படி கார்டு எழுதி அனுப்பியிருக்கலாமா என்பது. காரணம் இந்தக் கார்டுகளில் 'குவான்டிட்டி' பற்றி ஒன்றும் இல்லை. சாதாரணமாக கார்டுகளில் 'குவான்டிட்டி' குறிப்பிடப்பட்டிருக்கும். 'டெலிவரி எடுக்க வாருங்கள்' என்று மட்டும் தான் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே ஒருவேளை அவர்களே இப்படி எழுதியிருப்பார்களோ என்கிற சந்தேகம் கூட ஏற்படுகிறது. இது நமக்கு அவசியம் தெரியப்பட வேண்டிய ஒன்று. அவர்களால் அனுப்பப்பட்ட கார்டுகள் திரும்ப வந்திருக்கின்றன: அனுப்பப்பட்டவர்களுடைய அட்ரஸ் அந்தக் கார்டுகளில் இருக்கின்றது. அப்படி என்றால், உள்ளபடியே சம்பந்தப்பட்டவர் அந்த அட்ரசில் இருந்தால், அவரிடம் தான் இந்தக் கார்டு சென்றிருக்க வேண்டும் அப்படியே ஆள் அந்த அட்ரசில் இல்லையென்றால், அது திரும்ப சிவில் சப்ளைஸ் கோடவுனுக்குத் தான் வந்திருக்க வேண்டும். ஆனால் அது இப்போது உங்கள் கையில் வந்திருக்கிறது. இதற்கு இரண்டு வழிகள் தான் உண்டு. ஒன்றில் அங்கு பணியாற்றுகின்றவர்களில் யாராவது ஒருவர் இதைக்

கொண்டு வந்து கொடுத்திருக்க வேண்டும், அல்லது இவர்களே இதைத் திருடி வந்திருக்க வேண்டும். அது எப்படி வந்தாலும் பாவாயில்லை. வந்து

(பிற்பகல் 2-40)

சேர்ந்திருக்கிறது. அதைப் பார்க்கின்றபோது, இன்னொரு சந்தேகமும் வருகிறது. யாரோ ஒருவர் முகவரி போட்டு கார்டு போகிறது. ராம் என்ற பெயரில் போகிறது. அந்த நபர் இல்லை என்று அது திரும்ப வருகிறது. வந்த பிறகு அதே ராமுக்கு அதே பெர்மிட்டில், அதே கார்டு நம்பரில் அதே பெயருக்கு சிமிண்டு கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று ஆய்வு செய்யப்பட வேண்டும். இதே பெயருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதா இல்லையா என்று எனக்குத் தெரியவில்லை.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : கார்டு திரும்பி வந்த பிறகு, அதே நம்பருக்கு அங்கே சிமிண்டு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று நான் சொல்லியிருக்கிறார்கள். அதுதான் குற்றச்சாட்டு, இல்லையென்றால் அது குற்றச்சாட்டே இல்லை. முதலில் யார் பெயருக்குப் பெர்மிட் வழங்கப்பட்டதோ அவர் பெயரிலேயே சிமிண்டு எடுக்கப்பட்டிருக்கிறது. அதிலேதான் தவறு நடந்திருக்கிறது என்று சொல்லுகிறோம்.

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : ஒவ்வொரு கடைக்கும் இவ்வளவு என்று சிமிண்டு ஒதுக்கப்படுகிறது. ஒதுக்கப்பட்ட அளவுக்குக் கொடுக்கப்பட வேண்டும். இதே நம்பரைப் போட்டு, இதே பெயரைப் போட்டு இதே நபர் பெயரால் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று பார்க்க வேண்டும். அப்போதுதான் அது பினாமியாகக் கொடுக்கப்பட்டது. . .

திரு. ம. சங்கரலிங்கம் : அதே ஆள் பெயரில் அதே நம்பரில் தான் சிமிண்டு வழங்கப்பட்டிருக்கிறது. இந்த ஆள் இல்லை என்று அடுத்த ஆளுக்கு 'நெக்ஸ்ட் பிரையாரிட்டி' உள்ள ஒருவருக்கு 'பிரபரன்ஸ்' கொடுத்து 'அலாட்' செய்திருந்தால், அதைத் தவறு என்று சொல்லவில்லை. ஆனால் இல்லாத நபருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது இதைக் குறித்து சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனே தாசில்தார் எப்படி பெர்மிட் கொடுத்தார் என்று விசாரணை நடத்தியிருக்க வேண்டும். இது 10/81-ல் வந்தது. தாசில்தார் எப்படி அலாட்மெண்ட் செய்தார் என்பதைக் குறித்து சிவில் சப்ளைஸ் இலாக்காவே நடவடிக்கை எடுக்க வேண்டும். அது என்னவாயிற்று ? அதற்கான விளக்கம் இப்போதில்லை என்றாலும், பின்னாலாவது அவைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : அதனால்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அமைச்சர் அவர்களோ "நாங்களோ, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோ எந்த விதமான அதிகாரத்தையும் எடுத்துக்கொண்டு விநியோகிக்கவில்லை" என்கிறார். ஆனால் இங்கே முறைகேடு நடந்திருக்கிறது. அதை விசாரிக்க வேண்டும் என்றுதான் கேட்கிறோம். தமிழ் நாட்டில் சிமிண்டு விநியோகத்தில் எங்கெங்கே தவறுகள் நடைபெற்றிருக்கின்றன என்று விசாரிக்க வேண்டும். அமைச்சர் அளவில் ஒரு குழு நியமித்தால், அந்தக் குழுவில் இதுபோன்ற முறைகேடுகள் எங்கெங்கே நடைபெற்றிருக்கின்றன என்பதைக் குறித்து தகவல்களைத் தெரிவிக்கத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் என்மீது கொண்டிருக்கிற நம்பிக்கைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சொல்வதற்கும் மாண்புமிகு திரு. சங்கரலிங்கம் அவர்கள் சொல்வதற்கும் வித்தியாசம் இருக்கிறது. இதே பெயருக்கு இதே பெர்மிட் நம்பருக்கு இதே அளவு சிமிண்டு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சொல்கிறார். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் பேசும்போது, அப்படி உறுதியாகச் சொல்லவில்லை. 'பிரிபான்ஸ்' கொடுத்து 'அலாட்' செய்திருப்பார்கள் என்று சொல்லுகிறார். கார்டு இஷ்யூ செய்யப்பட்டிருக்கிறது. அவர் எடுக்காத காரணத்தால், 'பிரையாரிட்டி' கொடுத்து அடுத்தவருக்குக் கொடுத்திருக்கலாம் என்று குறிப்பிடுகிறார்கள். . . .

திரு. ம. சங்கரலிங்கம் : அடுத்தவருக்குக் கொடுத்திருந்தால் தவறு இல்லை. அப்போது நாங்கள் வந்து முறையிட்டிருக்க மாட்டோம். இந்தக் குற்றச்சாட்டையே சொல்லியிருக்க மாட்டோம். ஆனால் இங்கே நடந்திருப்பது அதே ஆளுக்கு அதே பெர்மிட்டில் அதே அளவு சிமிண்ட் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதுதான். அதனால்தான் இது குற்றமாகிறது என்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : இதில் பல சந்தேகங்கள் வருகின்றன. ஒன்று சிவில் சப்ளைஸ் அலுவலகத்திலேயே இருக்கிற அதிகாரிகள் பெர்மிட் இல்லாமல் நம்பர் போட்டு அவர்களே கொடுத்திருக்கிறார்களா? அல்லது தாசில்தார் தவறாக பெர்மிட் இஷ்யூ செய்ததன் பேரில் இவர்கள்

போனபடியாக கார்டு போட்டிருக்கலாம். அதற்குப் பின்னாலே 'ரியல் அலாட்மெண்ட்' இருக்கிறது என்று சொல்லுகிற காரணத்தால், தாசில்தார் அளவில் அல்லது அவருடைய அலுவலகத்தில் உள்ள அசிஸ்டெண்ட் அளவில் ஏதோ தவறு நடந்திருக்கிறது. 'ரியல் அலாட்மெண்ட்' இல்லை என்றால் கூட, கார்டு போனதே தவறு என்று ஒப்புக்கொள்கிறேன். தாசில்தார் பெர்மிட் போட்டுக் கொடுத்திருந்தாலும் சரி அல்லது தாசில்தார் பெர்மிட் இல்லாமல் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் அலுவலகத்தில் கொடுத்திருந்தாலும் சரி, இது தவறு என்று ஒப்புக்கொள்கிறேன். இதற்காக சிவில் சப்ளைஸ் மூலம் எஸ்.பி. யைக் கொண்டு இந்த கார்டு பற்றியும், இந்த (அட்ரஸ்) விலாசத்தைப் பற்றியும் இன்னும் இடத்தைப்பற்றியும் விசாரிக்கப்படும். தாசில்தார் விசாரிக்கப்படுவார், அவருடைய அலுவலகம் விசாரிக்கப்படும். இவ்வாறு விசாரிக்கப்பட்டு தவறு நடந்திருந்தால், நிச்சயமாக தவறு செய்தவர் சஸ்பெண்டு செய்யப்பட்டு அவர் மீது உரிய நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் ஏற்கெனவே சொன்னதைப்போல், எங்களுக்கு மடியில் கனமில்லை. இதில் மேல்மட்ட அதிகாரிகளுக்குக்கூட சம்பந்தம் இருக்காது என்றுதான் நான் நம்புகிறேன். அமைச்சரவர்களோ, மாண்புமிகு முதலமைச்சரோ கூட அல்ல, மேல்மட்ட அதிகாரிகள்கூட இதில் சம்பந்தப்பட்டிருப்பதற்கு எந்த முகாந்திரமும் கிடையாது. இந்தத் தவறு ஒருவேளை ஜூனியர் அசிஸ்டெண்ட் அல்லது அசிஸ்டெண்ட் அளவில் நடந்திருக்கலாம். என்றாலுமகூட தவறு நடைபெற்றிருந்தால், அது கண்டுபிடிக்கப்பட்டு களையப்படும் என்று சொல்லிக் கொள்வதோடு, தவறு செய்தவர்கள் மீது உரிய நடவடிக்கையும் எடுக்கப்படும் என்பதையும் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இது குறித்து நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொன்னதை நான் வரவேற்கிறேன். அந்தக் கார்டுகளையெல்லாம் இந்த அவையின் சொத்துக்களாக இருக்கிற காரணத்தால், அவைகள் முறைப்படி இங்கே பதிவு செய்யப்பட்டு அவற்றின் மீது தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் பயப்பட வேண்டியதில்லை. இந்தக் கார்டுகளை நான் கொண்டு போக வேண்டியதில்லை. எனக்கு அது அவசியம்கூட அல்ல,

உறுப்பினர் அவர்களே மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலமாகதான் இவைகளை அவையில் கொடுத்திருக்கிறார். எனவே இங்கே இவைகள் முறையாகப் பதிவு செய்யப்பட்டு அதிகாரிகளால் பெற்றுக் கொள்ளப் பட்டு விசாரிக்கப்பட்டு அதன்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படிப் பல்வேறு துறைகளின் சார்பில், நிறுவனங்கள் சார்பில் மற்றும் கார்ப்பரேஷன்கள் சார்பில் நடைபெற்றிருக்கிற பணிகளையெல்லாம் நான் இங்கே எடுத்துக் கூறியுள்ளேன். இந்த அரசு ஏற்பட்ட பிறகு நடைபெற்ற பணிகளையும் நான் சுட்டிக்காட்டியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் ஒரு நல்ல கருத்தை இங்கே தெரிவித் தார்கள். மின்சாரத்தைப் பொறுத்த வரையில், ஏற்கெனவே இருந்த கெபா சிட்டி 2,929 மெகா வாட்தான், அதாவது ஏறக்குறைய 3,000 மெகா வாட் தான் இருந்தது. ஐந்தாண்டுத் திட்டத்தில் அதற்காக சுமார் 1,200 கோடி ரூபாய் வில் 4,879 மெகா வாட் அளவுக்கு எட்டுவதற்குப் பணிகள் நடைபெற்று வரு கின்றன. 1983-84 க்குள்ளாவது இந்தப் பணிகள் மத்திய அரசின் உதவி யோடு முடிவடையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தொழில் வளர்ச்சிக்கு மின்சார உற்பத்தி முக்கியமான ஒரு அடிப்படைத் தேவையாக இருக்கிறது. இந்த வகையில்தான் மின் சக்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு, டிட்கோ சார்பில் சில புதிய தொழிற்சாலைகள் தமிழகத்தில் வர விருக்கின்றன என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். வட ஆற்காடு மாவட்டத்தில் ரூ. 20 கோடி செல வில் ஒரு வெடிமருந்து தயாரிக்கும் தொழிற்சாலை வர இருக்கிறது. தமிழ் நாடு சிமிண்டு கார்ப்பரேஷன் மூலமாக ரூ. 8 கோடி செலவில் சிமிண்டு பைப்பு களைத் தயாரிக்கும் தொழிற்சாலை உருவாகவிருக்கிறது. அதைப் போலவே ஆட்டோமேட்டிக் கேஸ்டிங்ஸ் ரூ. 20 கோடி செலவில் புதுக்கோட்டை மாவட் டத்தில் அமைய இருக்கிறது. மதுரை மாவட்டத்தில் உள்ள பாளையம் சிமிண்டு தொழிற்சாலை ரூ. 40 கோடி செலவில் விரிவாக்கப்படுவதற்கான உரிமம் வழங்கப்படவிருக்கிறது. அதைப் போலவே மிகப் பெரிய திட்டமான 190 கோடி ரூபாய் செலவில் அமைய இருக்கும் திட்டம்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அதைக் குறித்து பலரும் சந்தேகம் எழுப்பும்போது ஒன்றைச் சொன்னார்கள்.

மத்திய அரசும் உலக வங்கியும் சாதாரணமாக ரூ. 90 கோடி கடன் கொடுப்பது என்றால், அவ்வளவு சுலபமாகக் கொடுக்க மாட்டார்கள். உலக வங்கியைப் பொறுத்தவரை, எந்தத் திட்டமானாலும் அதில் "பீசிபிலிட்டி" இருக்கிறதா என்று பார்த்துத்தான் தருவார்கள். வெற்றிகரமாக, லாபகரமாக அமையுமா என்று பார்க்காமல், அவர்கள் கொடுக்க மாட்டார்கள் என்பதை அவர் தெளி வாகக் குறிப்பிட்டார். முழுமையான ஆய்வுகளுக்குப் பிறகுதான் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்கிறது. 1984 ஜனவரி வாக்கில் அது உற்பத்தியைத் தொடங்கக் கூடிய அளவுக்குப் பணிகள் இப்போது வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள் கிறேன்.

அதைப் போலவே டெக்ஸ்டைலைப் பொறுத்த வரையில், ரூ. 36 கோடி செலவில் புதிய தொழிற்சாலைகளும் விரிவாக்கங்களும் வரவிருக்கின்றன என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி இந்த அரசின் வரம்புக்குட் பட்டு இயங்குகிற கழகங்கள் அதிகமான அளவில் கடன் கொடுத்து, விரை வாகப் பணம் கொடுத்து பணிகளைச் செய்கின்றன. அரசுத் துறையானாலும் சரி, தனியார் துறையானாலும் சரி, கூட்டுத் துறையானாலும் சரி, அவை களுக்கெல்லாம் உதவிகள் வழங்கப்பட்டு தொழில்கள் உருவாகிக் கொண்டிருக் கின்றன. இவ்வளவுக்கும் மேலாக மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சுட்டிக் காட்டியதுபோல் "தமிழகம் இன்றைக்கு 3 வது அல்லது 4 வது இடத்தில் இருக்கிற நிலைமை மாறி, இந்தியாவில் தொழில் வளர்ச்சியில் முதல் அல்லது இரண்டாவது இடத்தைப் பெற வேண்டுமென்றால், அதற்கான வழிமுறைகள் மத்திய அரசிடம்தான் இருக்கின்றன. சென்ட்ரல் செக்டார் பிராஜெக்ட் மற்றும் சென்ட்ரல் இன்வெஸ்ட்மெண்ட் இங்கே அதிகமான அளவில் இருந் தால்தான், அதைப் பெற முடியும். அந்த அளவுக்கு தமிழகம் முதலிடத் தைப் பெறுவதற்கான சூழ்நிலை மிகவும் பிரகாசமாக இருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு இங்கே தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே தெரி வித்திருக்கும் ஆலோசனைகளுக்காக நான் நன்றியைத் தெரிவித்து விடை பெறுகிறேன். வணக்கம்.

திரு. ம. சங்கரலிங்கம் : இந்தக் கார்டுகள் அனைத்தும் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் வழியாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே ஆபீசில் பதிவு செய்யப்பட்டு அவர்களுக்கு அனுப்பப்பட வேண்டும். இந்தக் கார்டுகள் மாறிவிடக்கூடாது என்பதற்காக நான் இதைத் தெரிவிக்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : நான் ஏற்கெனவே இதைக் குறிப்பிட்டேன். இதில் சந்தேகம் வர வேண்டியதில்லை. மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலமாக இவைகள் அனைத்தும் பதிவு செய்யப்பட்டு விவரங்கள் அனைத்தும் குறிக்கப்பட்டு எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று மீண்டும் அவை 17—3—1982 அன்று காலை 9-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 2-49 மணி.)

A. *Statutory Rules and Orders.*

139. Notification issued with G.O. Ms. No. 1362, Housing and Urban Development, dated the 17th October 1980 regarding approval of the Detailed Development Plan for Nandanam Area. [Laid on the table of the House under section 123(2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

140. Notification issued with G.O. Ms. No. 1423, Housing and Urban Development, dated the 27th October 1980 regarding approval of the Detailed Development Plan for Mylapore-Santhome Area—Map No. 4. [Laid on the table of the House under section 123(2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

141. Notification issued with G.O. Ms. No. 1437, Housing and Urban Development, dated the 30th October 1980 regarding approval of the Detailed Development Plan for Karneeswarapuram. [Laid on the table of the House under section 123(2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

B. *Reports, Notifications and Other Papers.*

* 126. Eighth Interim Report of Justice Thiru N. S. Ramaswami, B.A., B.L., Retired Judge of the Madras High Court, One-Man Commission appointed to inquire into the Excesses committed during the pre-emergency period between 1st January 1972 and 31st January 1976. (Tamil).

127. Policy Note on Community Development and Municipal Administration, 1982–83. (Tamil and English).

128. Performance Budget on Community Development, 1982–83. (Tamil and English).

129. Policy Note on Road Transport Services and Shipping and Capital Outlay on Road Transport Services and Shipping, 1982–83. (Tamil and English).

130. Note on Review of Performance of Transport and Shipping Corporations, 1982–83. (Tamil and English).

131. Performance Budget on Tamil Nadu Port Department, 1982–83. (Tamil and English).

இணைப்பு I

[26 ஆம் பக்கத்தில் 4 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

திருவண்ணாமலை, தன்மூல் சௌகார் ஜெயின் உயர்நிலைப்பள்ளி, இவ்வாண்டு புதிதாகத் திறக்கப்பட்டு, அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. எல்லாப் பள்ளிகளுக்கும் வழங்குவது போல், இப்பள்ளிக்கும், கீழ்க்கண்ட பணியிடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

(1) தலைமை ஆசிரியர்—1

(2) பட்டதாரி ஆசிரியர்—1.

(3) மொழி ஆசிரியர்—1

(4) உடற்பயிற்சி ஆசிரியர்—1.

* Laid on the table of the House on 24th March 1982.

ஐந்து இடைநிலை ஆசிரியர் பணியிடங்களும், ஒரு கைத்தொழில் ஆசிரியர் பணியிடமும் திருவண்ணாமலை மாவட்டக் கல்வி அலுவலரால் வழங்கப்பட வேண்டும். அப்பணியிடங்கள், மேற்படி மாவட்டக் கல்வி அலுவலரிடம் கைவசம் இல்லாததால், மேற்கண்ட ஆறு பணியிடங்கள் அப்பள்ளிக்கு வழங்க இயலவில்லை. ஏழாவது பணியிடம் பற்றி தகவலேதும் இல்லை. பல பள்ளிகள், குறிப்பாக, உயர்நிலைப் பள்ளிகள் புதிதாகத் திறக்கப்பட்டு, அரசு ஆணை வழங்கியபோதிலும், நிதிப் பற்றாக்குறை காரணமாக ஆசிரியர்கள் பணியிடங்கட்கு அனுமதி வழங்க இயலவில்லை. இது ஒரு பொதுப்பிரச்சினையாக உள்ளது. எனினும், வரும் கல்வி ஆண்டில் இந்தப் பள்ளிக்கு கொடுக்கப்பட்ட பணியிடங்களை கணக்கில் கொண்டு, மேலும் பணியிடங்கள் பகிர்ந்து அளிக்கப்படும்.

இணைப்பு II

[29 ஆம் பக்கத்தில் 4-(2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

தூத்துக்குடி அரசன் பஞ்சாலையில் சுமார் 225 தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர், இத்தொழிலாளர்கள், அரசன் மில் தொழிலாளர் சங்கம் (தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை) மற்றும் தூத்துக்குடி வட்டார பொதுத் தொழிலாளர் சங்கம் (சி.ஐ.டி.யூ.) ஆகிய தொழிற் சங்கங்களால் பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றனர். தூத்துக்குடி வட்டார பொதுத் தொழிலாளர் சங்கம், நிர்வாகத்தினர் மீது வேலைப் பளு, தொழிலாளர்களை நிரந்தரமாக்குதல், சில தொழிலாளர்களின் வேலை நீக்கம், ஈ.எஸ்.ஐ., இ.பி.எப்., சலுகைகளை அளித்தல், டைம் கார்டுகள் வழங்குதல், சிற்றுண்டிச் சாலை, மிதிவண்டி வைக்குமிடம், கழிப்பிடம் ஆகியவை அமைத்தல், சம்பளச் சீட்டு வழங்குதல் மற்றும் பல பிரச்சனைகள் சட்டப்படி சலுகைகள் வழங்குதல் ஆகியவற்றின் மீது கோரிக்கைகள் விடுத்தனர். இக்கோரிக்கைகள் மீது திருநெல்வேலி, தொழிலாளர்துறை துணை ஆணையராலும், திருநெல்வேலி, தொழிலாளர்துறை அலுவலராலும் நடவடிக்கை எடுக்கப்பட்டு, பேச்சு வார்த்தைகள் மேற் கொள்ளப்பட்டன. தொழில் சங்கத்தினரை நேரடி நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாமென திருநெல்வேலி தொழிலாளர் துறை துணை ஆணையர் அறிவுறுத்தியுள்ளார். தொழில் சங்கமும் தனது தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை ஒத்தி வைத்திருப்பதாக அறிவித்துள்ளது.

இணைப்பு III

(29ஆம் பக்கத்திலுள்ள இனம் 5க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

தொழில்துறை கொள்கை விளக்கக் குறிப்பும் திட்டமும்

(பெரும் தொழில்கள்)

வேலை வாய்ப்பினை பெருமளவில் உருவாக்கவும் நமது மாநிலத்தில் ஒரு பகுதியில் தொழில்கள் பெருகியும், மற்றொரு பகுதியில் குறைந்தும் இருப்பதைப் போக்கி, எல்லாப் பகுதிகளிலும் தொழில்கள் சீராக அமைந்திடவும் நடவடிக்கை எடுப்பது தான் தமிழ்நாடு அரசு பின்பற்றிவரும் தொழில்துறைக் கொள்கையின் இரு நோக்கங்கள் ஆகும். அதே நேரத்தில் சிறு தொழில்கள் துறையோடு தொடர்பை ஏற்படுத்தவும் இன்றியமையாத் துறைகளின் உற்பத்திக்கும், முக்கியத் துறைகளின் உற்பத்திக்கும் உதவி செய்யவும் இம்மாநிலத்தில் தொழிலுக்கான அடிப்படை வசதிகளை மேலும் பெருக்கும் நோக்கத்துடன் பெரிய, நடுத்தர தொழில்களும் இணைந்து சீரான முறையில் வளர்ச்சி பெறச் செய்வதிலும் கவனம் செலுத்தப்படுகிறது. திட்டமிட்ட வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு பார்த்தால், பெருந் தொழில்களும், சிறு தொழில்களும் ஒன்றுக்கொன்று துணையாக இயங்கும் வகையில் மாநிலப் பொருளாதார வளர்ச்சிக்கு உதவக்கூடிய அளவிற்கு அவற்றை முடுக்கி விடுவதிலும் பெருந் தொழில்களுக்கும் சிறு தொழில்களுக்கும் உரிய இடம் அளிக்கப்பட்டுள்ளது. இம் மாநிலத்தில் தனியார் தொழில் முனைவர்களின் திறனை ஊக்குவிப்பதில் அரசு அதிக நாட்டம் செலுத்தி வருகிறது. ஆனால், சமூக நீதியை நிலைநாட்டவும், தொழில் நுட்ப உத்திகளைப் புதிதாகக் கண்டு பிடிக்கவும், நலம் பயக்கும் அளவிற்கு வருமான வாய்ப்புக்களை பகிர்ந்தளிக்கவும் அவசியமாயிருக்கிற உற்பத்திப் பிரிவுகளில் மட்டுமே அரசு நேரடியாகத் தலையிடும். அரசு உள்ளூர் வள வாயில்கள், மூலப் பொருள்கள், மனித ஆற்றல் போன்ற வகையில் இம்மாநிலத்தில் கிடைக்கக்கூடிய இயற்கை வள வாயில்களை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளும்,

தனித்தியங்க வல்ல திட்டங்கள் எவை எவை என்பதைக் கண்டறிந்து கட்டுபடியாகும் திட்டங்களைத் தீட்டி, அடிப்படை வசதிகளுக்கு வகை செய்தல், செயலூக்கம் அளித்தல், கடன் வசதி, ஏனைய இடுபொருட்கள் ஆகியவற்றை வழங்குதல், பயிற்சி வசதிகளுக்கு ஏற்பாடு செய்தல், சிறு தொழில் நுட்ப உத்திகளைப் பயன்படுத்துதல், உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்தல், ஏற்றுமதி செய்தல் போன்றவற்றில் உதவி செய்வதன் வாயிலாக அவற்றை உற்பத்தியைப் பெருக்கும் வளங்களாக மாற்றிட வேண்டும்.

2. ஒரு மாநிலத்தில் தொழில் வளர்ச்சி, மத்திய அரசுத் துறைத் திட்டங்களில் செயல்படும் முதலீடுகளின் அளவைப் பொறுத்து அமைகிறது. தமிழ்நாட்டில் மத்திய அரசு செய்துள்ள முதலீடு கடந்த சிலஆண்டுகளில் பெரிதும் குறைந்துள்ளது. அதிகமான பொதுத்துறைத் திட்டங்களை நம் மாநிலத்தில் ஏற்படுத்த மாநிலஅரசு தீவிரமாக முயன்று வருகிறது. ''பெல்'' நிறுவனத்தின் புதிய பிரிவு ஒன்றை இராணிப்பேட்டையில் தொடங்குவதற்கு மத்திய அரசு அனுமதியளிக்க முன் வந்துள்ளது. மேலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் தீவிர சோதனைப் பிரிவு ஒன்றையும் நிறுவ மத்திய அரசு அனுமதியளிக்க முன் வந்துள்ளது. இனிவரும் ஆண்டுகளில் இம்மாநிலத்திற்கு இப்படிப்பட்ட திட்டங்கள் பலவற்றிற்கு அனுமதி வழங்கப்படும் என்று நம்பப்படுகிறது.

3. பெரிய, நடுத்தரத் தொழில்களின் மேம்பாட்டிலும், வளர்ச்சியிலும் மாநில அரசுக்குள்ள பெரும் பொறுப்பு, தனியார் துறையில் முறையான வளர்ச்சிக்குத் தேவைப்படும் அடிப்படை வசதிகள், நிதி உதவி, ஏனைய உதவிகள் ஆகியவற்றை மேம்படுத்துவதேயாகும். இக் குறிக்கோளை எய்துவதற்காக பல கழகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்கழகங்கள் அரசிடமிருந்து தேவையான நிதி உதவியும், நிர்வாக உதவியும் பெறுவதுடன் இப்பணிகளுக்காக நிதி உதவும் நிறுவனங்களிடமிருந்து பெருமளவிற்கு நிதி உதவியும் பெறுகின்றன. போர்த்திற நோக்கங் கொண்ட காரணங்கள் சிலவற்றிற்காக, தெரிந்தெடுக்கப்பட்ட சில பகுதிகளில் நேரடியாக உற்பத்தியில் ஈடுபடும்படி சில கழகங்களுக்கு கட்டளை இடப்பட்டுள்ளது.

4. பொதுத்துறையில் பெரிய, நடுத்தர தொழிற்சாலைகள் சிலவற்றை அமைத்து நிருவகிக்கும் பணியும் தனியார் தொழில் முனைவோர்களின் உடனுழைப்புடன் கூட்டுத்துறையில் தொழிற் பிரிவுகளை உருவாக்கும் பணியும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்திடம் (டிட்கோ) ஒப்படைக்கப்பட்டுள்ளன. தற்போது, அரக்கோணத்தில் உருக்காலை ஒன்றையும், ஆலங்குளம், அரியலூர் ஆகிய இடங்களில் சிமெண்ட் தொழிற்சாலைகளையும் டிட்கோ நிறுவனம் நிருவகித்து வருகிறது. இப்பிரிவுகளை விரிவு படுத்துவதோடு வெடி மருந்து தயாரிக்கும் திட்டம் உட்பட பொதுத் துறையில் புதிய திட்டங்கள் சிலவற்றை நிறுவி டிட்கோ நிறுவனம் செம்மையாக செயல்பட இருக்கிறது. அரக்கோணத்தில் உள்ள உருக்கு உருளை ஆலையில் 7 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் உருக்குத் தகடுகள், கம்பிகள் தயாரிக்கும் ஆலையம் நிறுவுவதும் மேற்படி பணியில் அடங்கும்.

5. தமிழ்நாடு தொழில் ஆக்கத் கழகத்திற்கு (சிப்காட்) தனியார் துறையில் பெரிய நடுத்தர தொழில்களை மேம்படுத்துதல், நமது மாநிலத்தில் போதிய அளவு வளர்ச்சி அடையாத பகுதிகளில் தொழிற்சாலைகளை அமைக்கும் பணியை விரைவு படுத்துதல் ஆகிய இரு பொறுப்புக்கள் உள்ளன. இக்கழகம் ஊக்கத் திட்டங்கள் பலவற்றைச் செயல்படுத்துகிறது. இந்திய தொழில் வளர்ச்சி வங்கி மறுநிதி உதவித் திட்டத்தின் கீழ் தொழிற்சாலைகளுக்கு நிதி உதவி அளிப்பதோடு தொழில் முனைவோருக்கு பல்வேறு துணைப் பணிகளையும் செய்து தருகிறது. மாநிலத்தில் பல இடங்களில் தொழில் மையங்களை உருவாக்கி எளிய நிபந்தனைகளின் பேரில் தொழிற்சாலைகளுக்கு மேம்பாடு செய்யப்பட்ட மனைகள் கிடைக்க வகை செய்கிறது. இந்த ஊக்கத் திட்டங்களில் மத்திய அரசின் உதவித் தொகையும் மாநில அரசு வழங்கும் வட்டி இல்லா விற்பனை வரிக்கடனும் அடங்கும். மாநிலத்தில் தொழில்கள் விரைந்து வளர்ச்சி பெற மேலும் பல புதிய தொழில் பிரிவுகளை ஏற்படுத்துவதற்கு தொழில் முனைவோரைக் கவரும் வகையில் தனித் திட்டங்களும் ஊக்கத் திட்டங்களும் அண்மையில் வகுக்கப்பட்டுள்ளன. மேலும், தொழில் வளர்ச்சிக்கு தனிச் சலுகைகள் பலவற்றையும் அரசு அறிவித்துள்ளது. தொழிற்சாலைகளுக்கு தற்போது அனுமதித்துள்ள வட்டியில்லா விற்பனை வரிக்கடனுக்கான உச்சவரம்பினை ரூபாய் 50 இலட்சத்திலிருந்து ரூபாய் 1 கோடியாக உயர்த்தியுள்ளது. கடலூர், புதுக்கோட்டை, மானாமதுரை ஆகிய இடங்களில் தொழிற் பேட்டைகள் உருவாகி வருகின்றன. தூத்துக்குடி, கும்மிடிபூண்டி ஆகிய இடங்களில் உள்ள புதிய தொழிற் பிரிவுகள் முதல் ஐந்தாண்டுகளுக்கு மின்வெட்டிலிருந்து விலக்கு பெறும். மின் அணுவியல், மருந்துகள், மோட்டார் வண்டி துறைத் தொழில்கள் ஆகிய துறைகளில் புதிய தொழில்களை உருவாக்க உதவித் தொகையும் அளிக்கப்படுகிறது.

6. 1949-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (டி.ஐ.ஐ.சி.) தமிழ்நாட்டில் மாநில நிதி உதவி கழகமாகச் செயல்பட்டு வருகிறது. நடுத்தரக்கால கடன்கள் வழங்குதல், இயந்திரங்கள் வாங்கியதற்கான தொகையை காலம்

தாழ்த்திச் செலுத்த உத்திரவாதம் அளித்தல், பொது மக்கள் வாங்காத மூலதனப் பங்குகளையும், முன்னுரிமைப் பங்குகளையும் வாங்குதல் ஆகிய வழிகளில் புதிய தொழில் பிரிவுகளை ஏற்படுத்தவும் ஏற்கெனவே உள்ள தொழில் பிரிவுகளை விரிவு படுத்தி நவீனப்படுத்தவும் இது உதவுகிறது. மேலும், தொழில் நுட்ப வல்லுநர்கள், கிராமப்புற மருத்துவர்கள், போக்குவரத்துப் பணியை நடத்துபவர்கள், ஆகியோருக்கும், ஓட்டல்களுக்கும் குறைந்த வட்டிக் கடன் திட்டங்கள் மூலம் நிதி உதவி வழங்குதல், தொழில் நுட்ப வினைஞர் தொழிலில் முனைவோருக்கான திட்டங்கள் முதலியவற்றின் கீழ் கடனுதவி அளித்தல் போன்ற தனித் திட்டங்களையும் இக்கழகம் செயல்படுத்தி வருகிறது. அதிக அளவில் வேலைவாய்ப்புக்களை உருவாக்கக்கூடியனவும், குறிப்பாக பின்தங்கிய, கிராமப் புறப் பகுதிகளில் அமைக்கப்படுவனவும் சிறப்பாக சமுதாயத்தில் பொருளாதார ரீதியில் நலிந்துள்ளவர்களுக்கு ஏற்ற வகையில் வடிவமைக்கப்பட்டவையுமான தொழில்களுக்கு முன்னுரிமை அளித்து, வருங்காலத்தில், இவற்றிற்காக அதிக உதவியளிக்க இக்கழகம் கருதியுள்ளது.

7. நீண்டகடற்கரையையும், கதிரவனின் ஒளியையும் பெருமளவில் பெறும் பேறுபெற்றுள்ள தமிழ்நாடு, உப்பு உற்பத்தியில் நாட்டிலேயே இரண்டாம் இடத்தை வகிக்கிறது. உப்புத் தொழில் ஏராளமான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் தொழில்களில் ஒன்றாகும். இதனால், கடற்கரையிலோ மாவட்டங்களிலோ உள்ள உழவுத் தொழிலாளர்களுக்கு அந்தந்தக் காலங்களில் வேலை வாய்ப்பும் கிடைக்கிறது. உப்பு உற்பத்தியைப் பெருக்குவதற்கும் உப்பை அடிப்படையாகக் கொண்ட இரசாயனத் தொழில்களை நிறுவுவதற்கு ஊக்கமளிப்பதிலும் மாநில அரசுக்கு தமிழ்நாடு உப்பு—உப்பு சார்ந்த இரசாயனங்கள் வாரியம் ஆலோசனை நல்கி வழங்குகிறது. அண்மையில் பொதுத் துறை நிறுவனமாக அமைக்கப்பட்ட உப்பு கழகத்திடம், புதுப் புது இடங்களில் உப்பளங்கள் தொடங்குதல் உப்பை அடிப்படையாகக் கொண்ட இரசாயனத் தொழில்களை ஏற்படுத்துதல் ஆகிய பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. தற்போது இக்கழகம், இராமநாதபுரம் மாவட்டத்தில் மறையூர் வாலிநோக்கம் என்னுமிடத்தில் ஒன்றும், தஞ்சாவூர் மாவட்டத்தில் அரவக்காடு—வடக்காடு என்னுமிடத்தில் ஒன்றுமாக இரு பெரும் உப்பளத் திட்டங்களை தொடங்கியுள்ளது. இக்கழகம் புதிய இடங்களில் உப்பு உற்பத்தியை தொடங்கி சிறு உற்பத்தியாளர்களுக்கு நிதி உதவியும் விற்பனை வசதியும் செய்து கொடுக்கும். கடல் இரசாயனங்கள் தயாரிப்புக்கான தொழிற்சாலைகளை நிறுவவும் நடவடிக்கை எடுக்கும்.

8. சர்க்கரைத் தொழில், வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட ஒரு தொழிலாகும். கிராமப் பொருளாதாரத்தில் இது

முக்கிய அங்கம் வகிக்கிறது. சர்க்கரைத் துறை இயக்குநர் அலுவலகமும், பொதுத் துறையில் சர்க்கரை ஆலைகளை அமைப்பதற்காக 1974 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட தமிழ்நாடு சர்க்கரை கழகமும் 1982–83 ஆம் ஆண்டிலும் அடுத்து வரும் ஆண்டுகளிலும் பல புதிய திட்டங்களை நிறைவேற்றுவதற்கான செயற்குறிப்புகளும் உள்ளன. பொதுத் துறையும் கூட்டுறவுத் துறையும் சர்க்கரை ஆலைகளை அமைக்க முன் வராவிட்டால் கரும்பு கிடைக்கக்கூடிய பகுதிகளில் தற்போது சர்க்கரை ஆலைகள் இருப்பின் அவற்றின் நலனுக்கு குந்தகம் விளைவிக்காமல் சர்க்கரை ஆலைகளை புதிதாக அமைக்கத் தனியார் துறையினருக்கு ஊக்கமளிக்கலாம் என்று அரசு கொள்கை அளவில் முடிவு செய்துள்ளது. இந்த வகையில் சர்க்கரை ஆலை நிறுவ அனுமதி கேட்டு ஐந்து விண்ணப்பங்கள் வந்தன. அவை அரசின் பரிசீலனையில் உள்ளன.

9. தமிழ்நாடு மட்பாண்டத் தொழில் நிறுவனம் (டேஸல்) திருமழிசையில் இயந்திர செங்கற்களை ஒன்றையும் சென்னையிலும் விருத்தாசலத்திலும் மட்பாண்டப் பிரிவுகளையும் நடத்தி வருகிறது. இந்நிறுவனம் தனது தொழிற் பிரிவுகளில் உற்பத்தியை பெருக்குவதற்கான திட்டங்களில் கவனம் செலுத்தி கிராமப் புறங்களில் குயவர்களுக்கும் தொழில் முனைவோருக்கும் உதவுவதற்கான திட்டங்களை மேற்கொள்ளும்.

10. இம்மாநிலத்தில் மின்னணுத் தொழில் வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் நோக்கத்துடன் அரசானது தமிழ்நாடு மின்னணுத் தொழில் நிறுவனத்தை அமைத்தது. பொதுத்துறையிலும், கூட்டுத் துறையிலும் நவீன மின்னணுத் தொழிற்சாலைகளை அமைக்கும் பொறுப்பு இந்நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இந்நிறுவனம் தொலைக்காட்சி பெட்டிகள், எலெக்ராலிட்டிக் கெப்பாசிட்டர்கள் முதலியன தயாரிக்க தொழிற்சாலைகளை நிறுவ நடவடிக்கைகளை எடுத்துள்ளது. ரெசிஸ்டர்கள் உற்பத்தி செய்தல், கதிர் மின் கருவிகளை உற்பத்தி செய்தல், முதலான கூட்டுத் துறை திட்டங்களை செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன இம்மாநிலத்தில் மேலும் பல மின்னணுத் தொழிற்சாலைகளை அமைக்க ஊக்கமளிக்கும் வகையில் இம்மாநிலம் முழுவதும் அமைக்கப்படும் புதிய மின்னணுத் தொழிற்சாலைகளுக்கு '' மாநில மானியத் திட்டத்தை '' அரசு அறிவித்துள்ளது.

11. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் புகளூரில், ஆண்டுக்கு 50,000 டன் பத்திரிகைக் காகிதங்களையும் 40,000 டன் எழுது தாள்களையும் அச்சிடுவதற்கான தாள்களையும் உற்பத்தி செய்ய ரூ. 50 கோடி அனுமதி பெற்ற பங்கு மூலதனத்துடன் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு சுமார் 190 கோடி ரூபாய் நடை மூலதனத்தையும் சேர்த்து செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு தமிழ்நாடு அரசு, இந்திய நிதி உதவி நிறுவனங்கள், வங்கிகள், உலக வங்கி ஆகியவை நிதி உதவி செய்யும். இத்திட்டத்திற்கு 100 மில்லியன் அமெரிக்க டாலர் கடன் வழங்க உலக வங்கி ஒப்புக் கொண்டுள்ளது. இதற்காக உலக வங்கியுடனும் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியுடனும் இந்த நிறுவனம் ஒப்பந்தம் செய்து கொண்டு அதற்கான பத்திரங்களில் கையெழுத்திட்டுள்ளது. திருச்சிராப்பள்ளி மாவட்டம் புகலூரில் அமைய இருக்கும் இத்திட்டம் நாட்டில் ஒரு புதுவகையான தொழில் நுட்பவியலுக்கு முன்னோடியாக அமையும். இது தற்போது சர்க்கரை ஆலைகளில் எரிபொருளாகப் பயன்படுத்தப்பட்டு வரும் கரும்புச் சக்கையை முக்கிய மூலப் பொருளாகப் பயன்படுத்தும்.

12. மாநிலத்தில் கனிம தொழில் வளர்ச்சியில் அரசு தனிக் கவனம் செலுத்தும். சேலத்தில் உள்ள மாக்னசைட் கனிமங்கள் சிலவற்றை நடத்துவதற்காக 1979-ல் நிறுவப்பட்ட தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம் (Tanmag) கனிம வேலைகளை விரிவாக்கியும் கரிந்த மாக்னசைட் (Dead Burnt Magnesite) உற்பத்திக்கான தொழிற் பிரிவு ஒன்றை ரூ. 4.93 கோடி செலவில் ஏற்படுத்தியும் தனது பணியை விரிவுபடுத்தும். தற்போது கரும்பாறைகளை வெட்டி எடுத்து ஏற்றுமதி செய்யும் தமிழ்நாடு கனிம நிறுவனம், கரும்பாறைகளை மெருகேற்றும் நவீன தொழிற்சாலை ஒன்றை நிறுவும். இம்மாநிலத்தில் உள்ள கிராபைட் படிவங்களை வெட்டி சுத்தப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றையும் இந்நிறுவனம் நிறுவ உத்தேசித்துள்ளது.

மத்திய அரசுத் துறைத் திட்டங்கள்.

தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து முக்கிய அம்சங்களும் எதிர்காலத்தில் அவற்றை விரிவுபடுத்த மத்திய அரசு என்னென்ன செயற் குறிப்புகள் வைத்துள்ளது என்பனவெல்லாம், பின்வரும் பத்திகளில் சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளன :—

சேலம் உருக்காலை.

மத்திய அரசு நிறுவனமான ஸ்டீல் அத்தாரிட்டி ஆப் இந்தியாவின் ஒரு பிரிவுதான் சேலம் உருக்காலை. வாங்கப்பட்ட உருக்கு பட்டைகளை கொண்டு முதல் கட்டமாக இவ்வுருக்காலை, திட்டமிட்டபடி 13–9–1981-ல் உற்பத்தியைத் தொடங்கியது. முதலில் இவ்வுருக்காலை எளிதில் துருப்பிடிக்காத உருக்கு எவர் சில்வர் கம்பிச் சுருள்கள், தகடுகள் ஆகியவற்றை ஆண்டுக்கு 32,000 டன் உற்பத்தி செய்யும் திறன் கொண்டிருந்தது.

1981–82 ஆம் நிதி ஆண்டில் நல்ல தரமான, துருப் பிடிக்காத உருக்குக் கம்பிச் சுருள்கள், தகடுகள் சுமார் 3,200 டன் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது. சேலம் உருக்காலையில் உற்பத்தியான பொருள்கள் ஏற்கெனவே அங்காடியில் விலைக்கு வந்துள்ளன. இறக்குமதி செய்யப்பட்ட பொருள் போன்று தரம் வாய்ந்த பொருளாக இருக்கிறது என அதனை வாங்குபவர்கள் பாராட்டுகின்றனர். 1982–83-ல் நேர்த்தியான உருக்குக் கம்பிச் சுருள்கள் தகடுகள், 11,000 டன் உற்பத்தி செய்யப்படக்கூடும்.

இவ்வுருக்காலை அமைக்கப்படும் பணி மும்முரமாக நடைபெற்று வந்தபோது சுமார் 4,000 முதல் 6,000 தொழிலாளர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டனர். பயிற்சி பெறுவோர் உட்பட, சுமார் 1,000 தொழிலாளர்கள் பணியாளர் பட்டியலில் உள்ளனர். அவர்கள், உருக்காலையின் செயல்முறை, பராமரிப்பு, பொது நிர்வாகப் பணி, கட்டுமானப்பணி, ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளனர். முதல் கட்டப் பணிக்கு சுமார் 1,200 பேர் அமர்த்தப்பட்டுள்ளதாக இப்போது மதிப்பிடப்பட்டுள்ளது. நிர்வாகப் பணி நீங்கலாக மற்றெல்லாப் பணிகளுக்கும், சேலத்திலுள்ள வேலை வாய்ப்பகம் மூலம் ஆட்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த உருக்காலைக்கு அருகாமையில் 9.6 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் நவீன நகரியம் ஒன்று விரைவாக உருவாகி வருகிறது. இந்த உருக்காலை அமைப்பின் முதல் கட்டமாக, 785 வீடுகள் கட்டுவதென்று திட்டமிடப்பட்டிருந்தது. 293 வீடுகள் கட்டுவது, 25 படுக்கைகள் கொண்ட பொது மருத்துவமனை, நல நிலையம், தொடக்கப்பள்ளி ஆகியவற்றை அமைப்பது போன்ற பொதுவான வசதிகள், ஏனைய வெளியிட வசதிகள் செய்து கொடுப்பது ஆகியவை முதலில் மேற்கொள்ளப்பட்டன. நகரிய அமைப்பின் முதல் கட்டப் பணி விரைவில் முடிக்கப் பெறும் ; எஞ்சிய பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சேலம் உருக்காலைத் திட்டத்தின் முதல் கட்டப் பணிக்கு மூலதனச் செலவாக மொத்தம் 167.51 கோடி ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது ; அதில், 1981 டிசம்பர் வரை, 142.9 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

இந்த உருக்காலையில் சுய உற்பத்தித் திறனை உயரளவு பயன்படுத்திக் கொள்வதற்காக 42.8 கோடி ரூபாய் முதலீட்டைக் கொண்டு, உருக்கிக் குளிர வைக்கும் முறையில் உற்பத்தித் திறனை இரு மடங்காக்கும் திட்டமொன்று, மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

[1982 மார்ச்25

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம்.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் 14–11–1956-இல் அமைக்கப்பட்டது. இது பல தொழிற்சாலைகள் ஒருங்கே அமைந்துள்ள ஒரு தொழிற்பகுதியாகும்.

(அ) திறந்த வெளி பழுப்பு நிலக்கரி சுரங்கம்.		ஆண்டுக்கு 6.5 மில்லியன டன்.
(ஆ) அனல்மின் நிலையம்	..	600 மெகாவாட்.
(இ) ரெசாயன ஆலை	..	ஆண்டுக்கு 1,52,000 டன் யூரியா.
(ஈ) நிலக்கரி கட்டி தயாரிப்பு கரிம ஆலை.		ஆண்டுக்கு 3,27,000 டன் லிகோ.
(உ) களிமண் சுத்திகரிப்பு ஆலை.		ஆண்டுக்கு 6,000 டன் களி மண்.

பழுப்பு நிலக்கரிச் சுரங்கத்தில் வெட்டியெடுக்கப்படும் பழுப்பு நிலக்கரியானது, அனல் மின் நிலையத்திற்கும், பி.சி. ஆலைகளுக்கும் இரசாயன உரத் தொழிற்சாலைகளுக்கும் நிலக்கரிக் கட்டி தயாரிப்பு—கரிம ஆலைக்கும் தேவையான நீராவியை, உற்பத்தி செய்யவும் மூலப் பொருளாகப் பயன்படுகிறது. அனல் மின் நிலையத்தில் உற்பத்தியாகும் மின் சக்தியானது, நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் மின் சக்தித் தேவையை நிறைவு செய்த பிறகு தமிழ்நாடு மின் வாரியத்தின் மின் சக்தி வழங்கு அமைப்புக்குக் கொண்டு செல்லப்படுகிறது. களிமண் சுத்திகரிப்பு ஆலையானது, இச்சுரங்கத்தில் வெட்டியெடுக்கும் வெள்ளைக் களிமண்ணைப் பதப்படுத்தி, அதில் ஒரு பகுதியை அறைவை செய்து ஆலைகளில் பயன் படுத்துவதற்கென விற்பனை செய்கிறது. தொழிற்சாலைக்குத் தேவைப்படும் பதப்படுத்தப் பட்ட எரிபொருளான பழுப்பு நிலக்கரியும் (லிக்கோ) கல்கரியும் (கோக்) இந்நிறுவனத்தினால் விற்பனை செய்யப்படுகின்றன.

பழுப்பு நிலக்கரிக் கட்டி தயாரிப்பு கரிம ஆலையைச் சேர்ந்த தார்ப் பொருள் உற்பத்திப் பிரிவிலிருந்து கீழ்க்காணும் துணைப் பொருள்களும் கிடைக்கின்றன.

1982 மார்ச் 25]

நிறுவனத் திறன்.

1. தார்	..	..	ஆண்டுக்கு 49,100 டன்.
2. நியூட்ரல் எண்ணெய்		..	ஆண்டுக்கு 4,820 டன்.
3. கார்பாலிக் அமிலம்		..	ஆண்டுக்கு 1,470 டன்.
4. ஆர்தோ கிரிசல்	..	..	ஆண்டுக்கு 200 டன்.
5. எம். பி. கிரிசல்	..	..	ஆண்டுக்கு 990 டன்.
6. சைலினால்	..	..	ஆண்டுக்கு 220 டன்.
7. எம். வி. பினால்	..	..	ஆண்டுக்கு 480 டன்.

மூலதன முதலீடு (31–12–1981) நிலவரப்படி :—

		(ரூபாய் இலட்சத்தில்.)
பங்குகள்	.. ..	35,140.22
மத்திய அரசிடமிருந்து பெற்ற கடன்	..	5,394.17
தமிழ்நாடு அரசிடமிருந்து பெற்ற கடன்	..	78.89

31–12–1981 நிலவரப்படி வேலை வாய்ப்புகள் :—

		பேர்கள்.
முறையான பணியாளர்கள்	.. ..	8,880
தொழிலாளர்கள்	.. ..	10,047
மொத்தம்	..	18,927

தொழிற் பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி பெறுபவர்களும் இதில் அடங்குவர்.

நடப்பாண்டுச் சாதனையும் அடுத்த ஆண்டுத் திட்டமும்.

பொருள். (1)	1981 கணக்குகள். அளவு. (2)	1981 கணக்குகள். மதிப்பு. (3) (ரூபாய் இலட்சத்தில்.)	1982 திட்டம். அளவு. (4)	1982 திட்டம். மதிப்பு. (5) (ரூபாய் இலட்சத்தில்.)
பழுப்பு நிலக்கரி	55.69 இலட்சம் டன்.	5,607.37	55.98 இலட்சம் டன்.	5,536.49
மின்சக்தி—				
(அ) பழுப்பு நிலக்கரி மூலம் ..	2,668 மில்லியன். யூனிட்.	6,448.83	2,790	6,757.08
(ஆ) எரி எண்ணெய் மூலம் ..	206 மில்லியன் யூனிட்.	1,768.99	..	..
யூரியா	1,18,969 டன்.	3,188.20	1,08,500	2,927.33
லீக்கோ	1,18,505 டன்.	604.08	1,23,500	759.53
சுத்திகரிக்கப்பட்ட களிமண் (டன்னில்.)	2,660 டன்.	10.89	2,975	12.50
பி.வி. களிமண்	229 டன்.	1.12	500	2.63
		17,629.48		15,995.56

விரிவுபடுத்தும் திட்டங்கள்—

கீழ்க்காணும் புதிய திட்டங்கள் தொடர்பான பணி மேற்கொள்ளப்பட்டு நடந்தேறி வருகிறது :—

(அ) ஆண்டுக்கு 4.7 மில்லியன் டன் பழுப்பு நிலக்கரி கிடைக்கும் வகையில் இரண்டாம் சுரங்கம் வெட்டுதல்.

(ஆ) 630 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட இரண்டாம் அனல் மின் நிலையம் அமைத்தல்.

இரண்டாம் சுரங்கம்—

சுரங்கம் தோண்டுவதற்குரிய சிறப்பு வகைச் சாதனங்களின் துணைப் பாகங்களுக்கு முன்பு தேவைக் குறிப்புகள் கொடுக்கப்பட்டன. அவை இப்பொழுது சுரங்கம் தோண்டுமிடத்திற்கு வந்து கொண்டிருக்கின்றன.

நிலக்கரி பரப்புச் சாதனங்கள்—

நிலக்கரியை எடுத்துச் செல்லும் சாதனச் சட்டங்களை நிறுவுதல் முதலிய பணிகள் நடைபெற்று வருகின்றன. பொருள்களைக் கொட்டும் இயந்திரம், பரம்பு பொறிகள், மண்வாரி இயந்திரங்கள் துணை வரப்பெற்று சுரங்கம் தோண்டுமிடத்தில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. முதல் சுரங்கம் தோண்டுவதற்குரிய நவீன சாதனம் அமைப்பதற்கு மேம்பாட்டுப் பணிகள் நடந்தேறி வருகின்றன. பொருள்களை கொட்டி வைக்கும் இடத்திற்கும், இரண்டாம் சுரங்கத்தையும், இரண்டாம் அனல் மின் நிலையத்தையும் இணைக்கும் தாழ்வாரத்திற்கும் வேண்டிய நிலம் கையகப்படுத்துவதில் ஏற்பட்ட சிக்கல்கள் தீர்க்கப்பட்டு விட்டன.

இரண்டாம் அனல் மின் நிலையம் :—

ஒவ்வொன்றும் 210 மெகாவாட் திறனுள்ள நீராவி மூலம் மின் உற்பத்தி செய்யும் மூன்று இயந்திரங்களையும் அவை தொடர்பான துணைப் பாகங்களையும் வழங்கி, நிறுவுவதற்கான ஒப்பந்தங்கள் அங்கேரியிலுள்ள திருவாளர்கள் டிரான்ஸெலக்ட்ரோ நிறுவனத்திற்கும் இந்தியாவிலுள்ள திருவாளர்கள் வினய் இன்ஜினியரிங் கம்பெனிக்கும் சூழல் தட்டு மின் உற்பத்தி இயந்திரம் வழங்கி நிறுவுவதற்குமான ஒப்பந்தம் இத்தாலியிலுள்ள திருவாளர்கள் பிராங்கோ டோசி நிறுவனத்திற்கும் வழங்கப்பட்டன. பெரும்பான்மையான கட்டுமானப் பணிகளுக்கான ஒப்பந்தங்கள் முடிவு செய்யப்பட்டு விட்டன. ஏனையவற்றிற்குரிய ஒப்பந்தப் புள்ளிகள் ஆராயப்படுகின்றன.

சுரங்கம் தோண்டுமிடத்தில் சேமிப்புக் கிடங்குகள் சுவிட்சு கட்டுப்பாட்டு அறை, நிருவாக அலுவலகக் கட்டிடம், சிற்றுண்டிச் சாலைக் கட்டிடம் முதலியன கட்டுதல் போன்ற தொடக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன. கொதிகலன் நிறுவ அடித்தளம், எரிபொருள் வைக்குமிடம், கட்டுப் பாட்டு அறைப்பகுதி, குளிரூட்டுக் கூண்டுகள் முதன்மை நிலையக் கட்டிடத்தின் பகுதிகள் ஆகியவற்றிற்குரிய மண்வேலைகள் நடைபெற்று வருகின்றன.

சென்னை எண்ணெய் தூய்மைப்படுத்தும் ஆலை :

சென்னை, மணலி எண்ணெய் தூய்மை ஆலை 1965 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டு 1969ஆம் ஆண்டில் உற்பத்தியைத் தொடங்கியது. இவ்வாலை பெர்சியன் வளைகுடாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் தூய்மையாகாத கலங்கல் எண்ணெய்யை நவீன முறையில் தூய்மைப்படுத்துகிறது.

இவ்வாலை தொடங்கிய நாள் முதற்கொண்டு இம்மாநிலத்திற்குத் தேவைப்படும் பெட்ரோலிய பொருள்கள் அனைத்திலும், மோட்டார் ஸ்பிரிட், மண்ணெண்ணெய், உயர் வேக டீசல், இலகுவான வண்டி, டீசல் எண்ணெய், தார், எரி அடுப்பு எண்ணெய், 'லுபே' எண்ணெய், சமையலுக்குப் பயன்படும் எரிவாயு, 'நாப்தா' போன்ற பெட்ரோலியப் பொருள்கள் இங்கு தயாரிக்கப்படுகின்றன.

இவ்வாலையின் நிறுவுதிறன் 2.5 மில்லியன் டன்னாக இருந்தது. உற்பத்தித் திறனை உயர்த்துவதற்குத் தடையாக இருந்த செயல் முறைகளை நீக்கி சமநிலைப் படுத்தும் சாதனங்களை நிறுவியதன் மூலம் இவ் உற்பத்தித் திறன் அண்மையில் 2.8 மில்லியன் டன்களாக உயர்த்தப்பட்டுள்ளது. இவ்வாலையின் உற்பத்தித் திறனை இருமடங்காக அதாவது ஆண்டொன்றுக்கு 5.6 மில்லியன் டன்னாக உயர்த்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், ஆண்டொன்றுக்கு 20,000 டன்கள் வீதம் பாரபின் மெழுகு உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை நிறுவவும் திட்டமிட்டுள்ளது. 1982 ஆம் ஆண்டின் இறுதிக்குள் பாரஃபின் மெழுகுத் தயாரிப்புத் தொழிற்சாலையை நிறுவும் பணியும் 1984 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதிக்குள் எண்ணெய்த் தூய்மை ஆலையை விரிவாக்கும் பணியும் முடிவடைந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எண்ணெய் தூய்மை ஆலை இங்கு இயங்குவதால் இம்மாநிலத்திற்கு அதிக வருவாய் கிடைக்கிறது. கடந்த 12 ஆண்டுகளில் இவ்வாலையில் தயாரிக்கப்பட்ட பெட்ரோலியப் பொருள்களின் விற்பனை மீதான விற்பனை வரித்தொகை வாயிலாக இம்மாநிலத்திற்கு ரூ. 164.6 கோடி வருவாய் கிட்டியுள்ளது. தற்போதுள்ள விலை வீதத்தில், இக்கணக்கின் படி ஆண்டொன்றுக்கு ரூ. 3 கோடி வருவாய் கிட்டுமென மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இம்மாநிலத்திலுள்ள தொழிற்சாலைகளுக்கும், ஏனைய நுகர்வோருக்கும், பெட்ரோலியப் பொருட்கள் தொடர்ந்தும், ஒரே சீராகவும் வழங்குவதற்கு வழி வகை செய்கிறது ; இதனால் இம்மாநிலப் பொருளாதார நடவடிக்கை சீரான நிலையில் இருந்து வருகின்றது.

தமிழ்நாட்டில் இந்த எண்ணெய்த் தூய்மை ஆலையை நிறுவியது பெருமளவில் பல்வேறு துணைத் தொழிற்சாலைகள் அமைய தூண்டுகோலாக அமைந்தது. மேலும் இதனை அடுத்துள்ள அப்பகுதிகளில் இயங்கும் இரசாயன உரத் தொழிற்சாலை, பெட்ரோலிய இரசாயனப் பொருள்கள் உற்பத்தி தொழிற்சாலை போன்றவற்றிற்கு மூலப் பொருள்களை வழங்கும் நிறுவனமாகவும் இந்த ஆலை விளங்குகிறது. இத்தொழிற்சாலைகளில் சென்னை உரத் தொழிற்சாலை நிறுவனம், 'லூபே' எண்ணெய் வீதாச்சார அடிப்படையில் கலக்குதல், பீப்பாய்கள் தயாரித்தல் போன்ற தொழில்களை மேற்கொண்டுள்ள இந்திய எண்ணெய்க் கழகம், மெட்ராஸ் பெட்ரோலியம் லிமிடெட்டின் மின் அழுத்தமாற்றி எண்ணெய் தயாரிப்புத் தொழிற்சாலை போன்ற நிறுவனங்கள் குறிப்பிடத்தக்கவையாகும். இத்தொழிற்சாலைகளின் வாயிலாக, நேரடியாகச் சுமார் 1,500 பேருக்கும், மறைமுகமாக 3,000 பேருக்கு மேலாகவும் வேலை வாய்ப்பு கிடைக்கிறது.

பாரத திண்நிலை மின் சாதனம் தொழிற்சாலை :

திருச்சிராப்பள்ளியிலுள்ள பாரத திண்நிலை மின் சாதனத் தொழிற்சாலை, உயரழுத்தக் கொதிகலன் தொழிற்சாலையாகும். இது 1965 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இத்தொழில் செக்கோஸ்லோவாகிய நாட்டு உதவியுடன் ஆண்டு ஒன்றுக்கு 750 மெகாவாட் திறன் கொண்ட கொதிகலன்களைத் தயாரிப்பதற்கு ரூ. 24.5 கோடி தொடக்க முதலீட்டுடன் தொடங்கப்பட்டது. தற்போது, இத்தொழிற்சாலையின் திறன் ஆண்டொன்றுக்கு 2,500 மெகாவாட்டாக உயர்ந்துள்ளது. 1981-82 இல் ரூ. 284 கோடி மதிப்புள்ள 450 மெகாவாட் திறன் கொண்ட கொதிகலன்களைத் தயாரித்துள்ளது. இத்தொழிற்சாலையின் மொத்த மதிப்பீடு ரூ. 133.25 கோடியாகும். இத்தொழிற்சாலையில் சுமார் 14,500 பேர் பணி புரிகின்றனர். அதே நேரத்தில், பாரத திண்நிலை மின் சாதன தொழிற்சாலை சிறந்த பொறியியல் ஆய்வமைப்பாகவும் அதனுடைய உற்பத்தியிலும், பணிகளிலும் அனைத்து நாட்டுத் தரத்திற்கு நிகரான ஒரு தரத்தை எட்டியுள்ளது.

தற்போது செயற்படுத்தப்பட்டு வரும் விரிவாக்கத் திட்டத்தின் மூலம் தற்போதைய திறன் ஆண்டொன்றுக்கு 2,500 மெகாவாட்டிலிருந்து 1984—85 ஆம் ஆண்டுக்குள் 4,000 மெகாவாட்டாக உயரும். ரூ. 22 கோடி முதலீட்டில் மின் விசிறிகள், காற்றைச் சூடாக்கும் சாதனம், எலக்ட்ரோஸ்டேடிக் பிரசிபிடேட்டர்கள் போன்ற கொதிகலன் துணை சாதனங்கள் தயாரிப்பதற்கு தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டமான வட ஆர்க்காட்டிலுள்ள இராணிப்பேட்டையில் தனித் தொழிற்சாலை தொடங்குவதும் இவ்விரிவாக்கத் திட்டத்தில் அடங்கும்.

ரூ. 58.2 கோடி மூலதனச் செலவில் திருச்சிராப்பள்ளியில் அமைக்கப்பட்ட பாரத திண்நிலை மின் சாதனத் தொழிற்சாலையில் உருக்குக் குழாய் தொழிற்சாலை ஆண்டொன்றுக்கு 40,000 டன் கொதிகலனுக்கேற்ற உருக்குக் குழாய்களை உற்பத்தி செய்யும் வகையில் அமைக்கப்பட்டதாகும். மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த 'டீமாக் மீர்'' என்கிற நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற எந்திரங்கள் நிறுவப்பட்ட இத்தொழிற்சாலை உயர் அழுத்தக் கொதிகலத் தொழிற்சாலையின் தேவையை ஈடு செய்வதற்காகவும் இந்தியாவிலுள்ள மற்ற நிறுவனங்களுக்குக் குழாய் வழங்குவதற்காகவும் அமைக்கப்பட்டது.

ஐக்கியநாடு வளர்ச்சித் திட்ட நிதி உதவியுடன் அமைக்கப்பட்ட திருச்சிராப்பள்ளி ''பாரத திண்நிலை மின் சாதனத் தொழிற்சாலை''யின் பற்றவைப்பு ஆராய்ச்சி நிறுவனம் தொழில் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளது. தொழில் சார் நோய் மருத்துவப் பணிகளுக்காக தேசீய மைய அமைப்பு ஒன்றை ஏற்படுத்தவும் இத் தொழிற்சாலை ஆய்ந்து வருகிறது.

இத்தொழிற்சாலை, திருச்சிராப்பள்ளியை சுற்றிலும், அதற்கருகிலுள்ள மாவட்டத்திலும் சிறு தொழிற்சாலைகளை மேம்படுத்த எல்லா முயற்சிகளையும் எடுத்து வருகிறது. ஏறத்தாழ 320 சிறு நடுத்தரத் தொழிற்சாலைகள் ஆண்டொன்றுக்குச் சுமார் 50,000 மெட்ரிக் டன் கொதிகலன் துணைப் பாகங்களை வழங்குகின்றன. இச் சிறு தொழில் பிரிவுகள் 10,000-க்கு மேற்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து வருகிறது. இராணிப்பேட்டையில் புதிய தொழிற்சாலை ஏற்படுத்துவதுடன் சுமார் 45 சிறு தொழிற்சாலைகளை மேம்படுத்துவதற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பல துணைத் தொழில்கள் வளர்ச்சியடைவதற்கு இத் தொழிற்சாலை மிகவும் உறு துணையாக அமைந்துள்ளது.

படைக்கலக் கருவிகள் தயாரிப்புத் தொழிற்சாலை, திருச்சிராப்பள்ளி.

திருச்சிராப்பள்ளி, படைக்கலக் கருவிகள் தயாரிப்புத் தொழிற்சாலை 1966 ஜூலை 3 ஆம் நாளன்று தொடங்கப்பட்டது. 2×10 மணி நேர முறை மாற்றுப் பணி திங்களில் 5,000 சிறு படை கலன்களை உற்பத்தி செய்வதே இதன் நிறுவு திறனாகும். ரூ. 8.24 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலையிலும் அதனைச் சார்ந்த நிறுவனங்களிலும் தற்போது அதிகாரிகள், பணியாளர்கள், தொழிலாளர்கள் உட்பட 2,746 பேர் பணிபுரிகின்றனர். 31—3—1981 ஆம் நாளுடன் முடிவடையும் ஆண்டில் முழு உற்பத்தியை இத்தொழிற்சாலை எய்தியுள்ளது. 31—3—1980 ஆம் நாளுடன் முடிவடையும் ஆண்டு உற்பத்தியின் மொத்த மதிப்பு ரூ. 3.44 கோடியாகும். இராணுவ வண்டிகளை (Infantry Combat Vehicle) தயாரிப்பதற்கான தொழிற்சாலையை அமைக்கும் இடம் குறித்து செயற்குறிப்புகள் தயாரிக்கப்பட்டுள்ளன. மத்திய அரசின் பரிசீலனையிலுள்ள பல்வேறு இடங்களுள் திருச்சிராப்பள்ளியில் படைக்கலக் கருவிகள் தயாரிப்புத் தொழிற்சாலை உள்ள இடமும் ஒன்றாகும்.

இரயில் பெட்டித் தொழிற்சாலை (ஐ.சி.எப்.).

பெரம்பூரில் இரயில் பெட்டித் தொழிற்சாலை 1955 ஆம் ஆண்டில் வெளிநாட்டுத் தொழில் நுட்ப ஒத்துழைப்புடன் அமைக்கப்பட்டது. இதன் உற்பத்தித் திறன் ஆண்டு ஒன்றுக்கு வசதிகள் செய்து தரப்படாத 350 அகல இருப்புப் பாதை இரயில் பெட்டிக் கூடுகளாகும். இரயில் பெட்டித் தொழிற்சாலை இன்றைக்கு ஆசியாவிலேயே மிகப் பெரிய இரயில் பெட்டித் தயாரிப்புத் தொழிற்சாலையாகும். இதன் ஆண்டு உற்பத்தித் திறன் பல்வேறு வகை வடிவமைப்புகள், பாதைகளுக்கான 750 இரயில் பெட்டிகளாகும். அனைத்து வசதிகளுடன் கூடிய முழுமையான இரயில் பெட்டித் தொழிற்சாலை, இரயில் பெட்டிக் கூடு தொழிற்சாலைக்கு இணைப்பாக 1962ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இத் திட்டம் முழுவதற்குமான மொத்தச் செலவு ரூ. 12.85 கோடியாகும்.

1981 டிசம்பர் அன்றுள்ளபடி தொழிற்சாலையின் மொத்த உற்பத்தி 13,205 இரயில் பெட்டிகளாகும். இத் தொழிற்சாலை 14,485 பேருக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளது.

நடப்பாண்டு உற்பத்தித் திட்டம் (1981-82) :

நடப்பாண்டில் (1981 ஏப்ரல் முதல் 1982 மார்ச் வரையில் 720 இரயில் பெட்டிகளைத் தயாரிக்கத் திட்டமிடப்பட்டு உள்ளது. இவற்றுள் 8 பெட்டிகள் கல்கத்தா பெருநகர் இரயில்

போக்குவரத்து அமைப்புக்காக தயாரிக்கப்பட்டவை. அவை கல்கத்தாவில் சோதனை ஓட்டம் விடப்பட்டன. 55 இரண்டாம் வகுப்பு சீர்வளி, படுக்கை வசதியுடன் கூடிய இரயில் பெட்டிகளும் ராஜதானி விரைவு இரயிலுக்கான பெட்டிகளும் தயாரிக்கப் பட்டன. இத்திட்டத்தின் முக்கியக் கூறு நைஜீரியாவுக்காக 32 இரயில் வண்டித் தடுப்புப் பொறி (Biake van) அமைக்கப்பட்ட பெட்டிகளைத் தயாரிப்பதாகும். இப்பெட்டிகள் தயாரிக்கப் பட்டு வருகின்றன. நடப்பாண்டின் 720 இரயில் பெட்டிக்கான மொத்த உற்பத்தி மதிப்பு ரூ. 53.71 கோடியாகும்.

அடுத்த ஆண்டு உற்பத்தித் திட்டம் (1982—83) :

அடுத்த ஆண்டில் 750 இரயில் பெட்டிகளைத் தயாரிக்க இரயில் பெட்டித் தொழிற்சாலை திட்டமிட்டுள்ளது. இதில் சாதாரண வசதிகளுடன் கூடிய இரயில் பெட்டிகளைத் தவிர சீர்வளி படுக்கை வசதிகளுடன் கூடிய 70 இரயில் பெட்டிகளும் அடங்கும். 10 சீர்வளி இரண்டாம் வகுப்பு படுக்கை வசதியுடன் கூடிய இரயில் பெட்டிகள் மீட்டர் இரயில் பாதைக்காக தயாரிக்கப்பட உள்ளன. ஆண்டின் உற்பத்தி மதிப்பு ரூ. 68.60 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது.

ஏற்றுமதித் துறையில் எய்திய சாதனை :

இரயில் பெட்டித் தொழிற்சாலை தாய்லாந்துக்கு மீட்டர் இரயில் பாதை இரயில் பெட்டிகள் இரண்டை வழங்குவதன் மூலம் 1967-ல் ஏற்றுமதி விற்பனையில் அடி எடுத்து வைத்தது. பர்மா, தைவான், தாய்லாந்து, ஜாம்பியா, டான்சானியா, பிலிப்பைன்ஸ், உகாண்டா, வியட்நாம் ஆகிய நாடுகளுக்குப் பல் வேறுஅளவுகளில் பல வடிவமைப்புக் கொண்ட நவீனவசதிகளுடன் கூடிய தரமான 359 இரயில் பெட்டிகளையும், 266 முழுமையான வசதிகள் கொண்ட இரயில் பெட்டிகளையும், இரயில் பெட்டித் தொழிற்சாலை ஏற்றுமதி செய்தது. அதன் மூலம் அனைத்துலகப் புகழ் பெற்றுள்ளது. 32 இரயில் வண்டி தடுப்புப் பொறி அமைக்கப்பட்ட பெட்டிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இவை 1982; பிப்ரவரியில் அனுப்பப்படும். இது வரை ஏற்றுமதி செய்யப்பட்ட இரயில் பெட்டிகளின் மொத்த மதிப்பு ரூ. 22.28 கோடியாகும். 1981—82 ஆம் ஆண்டில் ரூ. 2.94 கோடி மதிப்பு உடைய இரயில் பெட்டிகளை ஏற்றுமதி செய்யக் கருதப்பட்டு உள்ளது.

வருங்காலத்தில் இத்தொழிற்சாலையை விரிவுபடுத்துதல்:

இரயில் பெட்டி உற்பத்தித் திறனை அண்மையில் உயர்த்த இரயில் பெட்டித் தொழிற்சாலை உத்தேசிக்கவில்லை. எனினும் இரயில் பெட்டித் தொழிற்சாலையிலேயே உருவாக்கப்படும்

பணித் திட்டங்கள் மூலமாக மேலும் பல சீர்வளி இரயில் பெட்டிகளைத் தயாரிப்பதற்கு (ஆனால் ஆண்டு ஒன்றுக்கான வரம்பு 750 இரயில் பெட்டிகள்) ரூ. 2.28 கோடி செலவில் இரயில் பெட்டித் தொழிற்சாலை வசதிகளைச் செய்து வருகிறது.

சீர்வளி வசதி இரயில் பெட்டிகள், மோட்டார் இரயில் பெட்டிகள் முதலியவற்றிற்காக இரயில்வே துறைக்குத் தேவைப்படும் மிகப் பெரிய கூடுதல் இரயில் பெட்டிகளைத் தயாரிக்க தனிப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தும் பொருட்டு ரூ. 48.00 இலட்சம் செலவிலான செயற் குறிப்பு ஒன்று, 1981-82 ஆம் ஆண்டு பணித் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

இரயில் பெட்டித் தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் இரயில் பெட்டிகளுக்குத் தேவைப்படும் கம்பிச் சுருள்களைத் தயாரிப்பதற்காக சிறந்த வசதிகளுடன் அமைக்கப்பட்ட நவீன கம்பிச் சுருள் பட்டறை ஒன்று உள்ளது. மண்டல இரயில்வேக்களின் கம்பிச் சுருள் தேவையை நிறைவு செய்ய ரூ. 22.73 இலட்சம் செலவில் இப்பட்டறையில் கம்பிச் சுருளை 25 சதவீதம் அதிகமாகத் தயாரிப்பதற்கான விரிவாக்கத் திட்டம் ஒன்று வகுக்கப் பட்டு வருகிறது.

இந்துஸ்தான் புகைப்படச் சுருள் தயாரிப்பு நிறுவனம் :

இந்துஸ்தான் புகைப்படச் சுருள் தயாரிப்பு நிறுவனம் 1960 ஆம் ஆண்டில் திருவாளர்கள் பாவ்செட் (பிரான்சு) நிறுவன உடனுழைப்புடன் நிறுவப்பட்டது. திரைப்படத் தொழிலுக்கான கச்சா திரைப்படச் சுருள், தேசிய சுகாதாரப் பணிகளுக்கான கதிர் படச் சுருள்கள், தொழில் சார்ந்த, தொழில் சாரா புகைப் படக் கலைஞர்களுக்கான புகைப்பட தேவைப் பொருட்கள் ஆகியவற்றைத் தயாரிப்பதில் தன்னிறைவு அடைய வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும்.

இந் நிறுவனத்தின் தொடக்க மூலதனம் ரூ. 6.32 கோடி ஆகும். இது 1975-ல் ரூ. 16.32 கோடியாக உயர்த்தப்பட்டது. இந் நிறுவனத்தின் பங்குத் தொகை முழுவதும் இந்திய அரசால் வழங்கப்பட்டது,

இந் நிறுவனத்தின் நிறுவு திறன் 6.15 மில்லியன் சதுர மீட்டர் ஆகும், இந்நிறுவனம் 1967-ல் வணிக உற்பத்தியைத் தொடங்கியது. இந்நிறுவனத்தின் தற்போதைய தயாரிப்பை (அ) ஒருங்கிணைந்த தயாரிப்பு, (ஆ) ஐம்போ தயாரிப்பு என்று இரு வகைப்படுத்தலாம். ஒருங்கிணைந்த தயாரிப்பில், பாசிடிவ் திரைப்படச் சுருள் (வெண்மை மற்றும் கருப்பு), மருத்துவ எக்ஸ் கதிர் சுருள்கள், நெகடிவ் திரைப்படச் சுருள்கள், புகைப்படத்

தாள்கள் ஆகியவை அடங்கும். ஐம்போ தயாரிப்பில் கலர் பாசிடிவ் திரைப்படச் சுருள்கள் கலைப் படச் சுருள் (Art film) தொழில் எக்ஸ் கதிர் படச் சுருள்கள் ஆகியவை அடங்கும். இந் நிறுவனம் உதகமண்டலத்தில் ஒரு தொழில் பிரிவும், சென்னை அம்பத்தூரில் ஒரு தொழில் பிரிவும் ஆக இரண்டு தொழில் பிரிவுகளைத் தற்போது நடத்தி வருகின்றது.

1980—81ஆம் ஆண்டில் உற்பத்தியின் அளவு 11.083 மில்லியன் சதுர மீட்டராகும். இதன் மதிப்பு ரூ. 6,604 இலட்சம் ஆகும். 1980—81 ஆம் ஆண்டில் நிறுவனத்தில் மொத்த வியாபாரத் தொகை ரூ. 5,972 இலட்சம். இதனால் இந்நிறுவனத்திற்கு கிடைத்த ஆதாயம் ரூ. 363 இலட்சம். இந்நிறுவனத்தின் 1981—82 ஆம் ஆண்டிற்குரிய உற்பத்தி இலக்கு 12 மில்லியன் சதுர மீட்டர் என்றும், இதன் மதிப்பு ரூ. 78,03 இலட்சம் என்றும், மதிப்பிடப்பட்ட மொத்த வியாபாரத் தொகை ரூ. 7,540 இலட்சம் என்றும் திட்டம் கொண்டுள்ளது. இந் நிறுவனம் மொத்தம் 2,914 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கிறது. அத்தொழிலாளர்களில் 471 ஆதி திராவிடர்களும், 53 பழங்குடியினரும், 65 உடல் ஊனமுற்றோரும் அடங்குவர்.

தற்போதுள்ள புகைப்படச் சுருள் தயாரிப்பு பொருள்களின் அதிகத் தேவையை நிறைவாக்கும் பொருட்டும், அமெச்சூர் புகைப்படச் சுருள்களைத் தயாரிக்கும் பொருட்டும் ரூ. 200 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் இத் தொழிற் பிரிவில் 4 முதல் 5 மில்லியன் சதுர மீட்டர் அளவுக்கு வண்ணம் பூசும் திறனை கூடுதலாக உருவாக்குவதற்குரிய திட்டமொன்றுக்கு மத்திய அரசு ஏற்கனவே அனுமதியளித்துள்ளது. இத் திட்டத்தின் கட்டுமானப் பணி ஏற்கனவே தொடங்கப்பட்டு விட்டது; இத் திட்டம் அனுமதிக்கப்பட்ட இரண்டாண்டு கால அளவிற்குள் முடிவுறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ரூ. 257 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் அனைத்து வசதிகளுடன் கூடிய ஆராய்ச்சி-வளர்ச்சி நிலையத்தை அமைப்பதற்குரிய இந்நிறுவனத்தின் செயற்குறிப்பு மத்திய அரசின் ஆய்வில் உள்ளது.

சினிமா வண்ண பாசிடிவ் சுருள்களைத் தயாரிக்கும் பணியை மேற்கொள்ளும் பொருட்டு புகழ் வாய்ந்த அனைத்து நாட்டு நிறுவனங்களுடன் சேர்ந்து சிறந்த தொழிலுத்தியைக் கையாண்டு திரைப்படச் சுருள் தயாரிப்புப் பொருள்களைத் தயாரிக்க இந் நிறுவனம் முயன்று வருகின்றது. இதன் பொருட்டு இந் நிறுவனம் மத்திய அரசிடமிருந்து "அனுமதிக் கடிதத்தை" ஏற்கெனவே பெற்றுள்ளது.

சென்னை இரசாயன உரத் தொழிற்சாலை நிறுவனம்.

சென்னைக்கு அருகில் மணலியில் சென்னை இரசாயன உரத் தொழிற்சாலை நிறுவனம் அமைந்துள்ளது. இது ஆண்டொன்றுக்கு 1,53,000 மெட்ரிக் டன் யூரியாவும், 5,40,000 மெட்ரிக் டன் என். பி. கே. உரமும் கொண்டு விற்பனை செய்யத்தக்க இரசாயன உரங்களை உற்பத்தி செய்யும் திறன் உடையது. இது 1971 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 1 ஆம் நாள் வணிக அளவில் உற்பத்தியைத் தொடங்கியது. 1980—81 ஆம் ஆண்டில் சென்னை இரசாயன உரத் தொழிற்சாலை நிறுவனம் 7.06 இலட்சம் டன் அளவிற்கு எல்லா வகையான இரசாயன உரங்களையும் உற்பத்தி செய்வதால், அதன் உற்பத்தித்திறன் முந்தைய ஆண்டுகளைக் காட்டிலும் சிறப்பாக அமைந்தது. பயன்பாட்டுத் திறன் பற்றிக் கூறப்போனால் வரையறுத்தத்திறனால் அமோனியா 93 சதவீதம், யூரியா 99 சதவீதம்; என்.பி.கே. உரம் 103 சதவீதமாகும்.

1981 ஏப்ரல்—நவம்பர் திங்களில் சென்னை இரசாயன உரத் தொழிற்சாலை நிறுவனத்தின் உற்பத்தி 1981 டிசம்பர் முதல் 1983 மார்ச்சு வரை உற்பத்தி செய்ய இலக்கிடப்பட்ட அளவு ஆகியவை குறித்த விவரம் வருமாறு :—

இரசாயன உரத்தின் பெயர்.	1981 ஏப்ரல் முதல் நவம்பர் வரை கணக்குகள்.	இலக்கு. 1981 டிசம்பர் முதல் 1982 மார்ச்சு வரை (மெட்ரிக் டன்னில்).	இலக்கு. 1982—83.
(1)	(2)	(3)	(4)
யூரியா	75,612	32,068	1,37,000
காம்ப்ளக்ஸ் ..	3,89,216	1,82,174	5,40,000

உலகெங்கிலும், கடும் போட்டிக்கு இடையே சென்னை இரசாயன உரத் தொழிற்சாலை நிறுவனம் ஸ்ரீலங்கா யூரியா தயாரிப்புத் திட்டத்தைத் தொடங்கி வைத்துச் செயலாக்கும் பொருட்டு, கொழும்புவிலுள்ள மாநில இரசாயன உர உற்பத்திக் கழகத்திடமிருந்து ரூ. 3.5 கோடி மதிப்பிற்கு நிருவாக ஒப்பந்தத்தைப் பெற்றது. சென்னை ரசாயன உரத் தொழிற்சாலை நிறுவனம் 1980 மே திங்களிலிருந்து இவ்வொப்பந்தத்தைச் செயலாக்கத்

தொடங்கியது. ஸ்ரீலங்கா யூரியா திட்டத்திற்கென்று சென்னை இரசாயன உரத் தொழிற்சாலை நிறுவனம் ஆற்றிய பணிகுறித்து அத்திட்டத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் பாராட்டு தெரிவித்தனர்.

1980—81 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் 5,66,200 மெட்ரிக் டன் விஜய் காம்ப்ளக்ஸ் உரமும், 1,46,900 மெட்ரிக் டன் விஜய் யூரியா உரமும் விற்பனை செய்துள்ளது.

உழவர்களுக்கு மேம்பட்ட வேளாண்மை பயிர் உற்பத்தி நடைமுறைகள் பற்றிக் கற்றுக் கொடுப்பதற்கென்று சென்னை இரசாயன உரத் தொழிற்சாலை நிறுவனம், எண்ணற்ற வேளாண்-தகவல், வேளாண்—பணித் திட்ட நிகழ்ச்சியை நடத்துகின்றது.

சென்னை இரசாயன உரத் தொழிற்சாலை நிறுவனத்தின் பணியாளர் பெயர்ப் பட்டியலில் 1982 சனவரி 1 ஆம் நாள் இருந்தபடி மொத்தம் 1,141 தொழிலாளர்கள் உள்ளனர்.

இந்தியன் டிரக்ஸ் அண்டு ஃபார்மக்யூடிகல்ஸ் லிமிடெட் நிறுவனம்

சென்னையிலுள்ள இந்தியன் டிரக்ஸ் அண்டு ஃபார்மக்யூடிகல்ஸ் நிறுவனம் ரூ. 500 இலட்சம் மூலதனத்துடன் 1965 செப்டம்பரில் தொடங்கப்பட்டது. பொது அறுவைச் சிகிச்சை, மகப்பேறு—மகளிர் நோய் இயல் அறுவைச் சிகிச்சை, முடநீக்கியல் அறுவைச் சிகிச்சை, நரம்பியல் அறுவைச் சிகிச்சை, பல் நோய், கண் நோய் அறுவைச் சிகிச்சை, காது, மூக்கு, தொண்டை நோய் அறுவைச் சிகிச்சை, குரல்வளையில் செய்யப்படும் நுண்ணிய அறுவைச் சிகிச்சை, குடும்ப நல அறுவைச் சிகிச்சை, பிரிக்கக்கூடிய அறுவைக் கத்திகள், செயற்கைக் கை, கால் உறுப்புகளுக்குத் தேவைப்படும் கைப்பிடிகள், உறுப்புகள் ஆகியவகையில் 2·5 மில்லியன் அறுவைச் சிகிச்சை கருவிகளைத் தயாரிக்கும் பணியில் இந்நிறுவனம் தற்போது ஈடுபட்டுள்ளது. தற்போதுள்ள அடிப்படை வசதிகளைப் பயன் படுத்திய பின்னர் அறுவை கத்திகள் உட்பட ஆண்டொன்றுக்கு தயாரிக்கப்படும் அறுவைக் சிகிச்சைக் கருவிகளின் உற்பத்தித் திறனளவு 10,00,000 ஆகும்.

தற்போதுள்ள அடிப்படை வசதிகளை முழுவதும் பயன் படுத்துவதன் வாயிலாக இந்நிறுவனம் தனித்தியங்கி ஆதாயம் ஈட்டும் நோக்கத்துடன் இந்திய மருந்துகள் மருந்தாக்கியல் நிறுவனத்தின் (ஐ.டி.பி.எல்.) துணைத் தொழிற்சாலைகளில், இரசாயனப் பொருள் தயாரிப்புச் சாதனங்களை வாங்கி இணைக்கும் பணியை பலதிறப்படுத்த முற்பட்டுள்ளது. இத்துடன், இந்திய மருந்துகள்—மருந்தாக்கியல் நிறுவனத்தின் இரசாயனப் பொருள் தயாரிப்புச் சாதனங்களுக்குத் தேவைப்படும்

பல்வகை கை வால்வுகளை இயக்கி இணைக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தொழிற்சாலைக் கருவிகளுக்கு தேவைப்படும் சில இனங்களும், உற்பத்தி செய்யப்படுகின்றன. இந் நிறுவனம் புதிய '' பால் வால்வு '' (B l valv) தயாரிக்கும் பணியையும் மேற்கொண்டுள்ளது. கருவிகள் இணைப்புப் பிரிவு 120 மெட்ரிக் டன் எடையுள்ள துருப்பிடிக்காத மென் உருக்குப் பாகங்களைத் தயாரிக்கும் திறனுடையது. வால்வு தயாரிப்புப் பிரிவு ஆண்டொன்றுக்கு 3,000 வால்வுகளைத் தயாரிக்கிறது.

அடிப்படை வசதிகளை மேலும் பல திறப்படுத்தும் பொருட்டு ரூ. 100 இலட்சம் முதலீடு செய்வதென மத்திய அரசு முடிவெடுத்துள்ளது. இதன் காரணமாக மருந்து தயாரிக்கும் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டது. இப்பிரிவு 1978—79 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டிலிருந்து வணிக அளவில் உற்பத்தியைத் தொடங்கியது. தற்போது மாத்திரைகள், உரை மாத்திரைகள், உண்ணும் நீர் மருந்துகள், பொடி மருந்து, நீர்ம ஊசி மருந்துகள் ஆகியவை தயாரிக்கப்பட்டு வருகின்றன. இப்பிரிவு ஆண்டொன்றுக்கு ரூ. 500 இலட்சம் மதிப்புள்ள மருந்துகளைத் தயாரிக்கும் திறன் கொண்டுள்ளது.

1980—81 ஆம் ஆண்டில் அறுவைச் சிகிச்சை கருவிகள் தயாரிப்புப் பிரிவு, பொதுப் பொறியியல் பிரிவு, மருந்து தயாரிப்புப் பிரிவு ஆகியவற்றின் உற்பத்தி குறித்த விவரம் வருமாறு. மேலும் 1981—82 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யக் கருதப்பட்ட அளவு 31—1—1982 வரையில் செய்த சாதனை (1981—82), 1982—83-ம் ஆண்டில் செய்யக் கருதப்பட்டுள்ள திட்ட இலக்கு ஆகியவை குறித்த விவரங்கள் வருமாறு :—

தொடர் எண்ணும், பிரிவும்.	1980—81 ஆண்டில் நடைபெற்ற பணி.	1981—82 ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பு.	1981—82 ஆண்டு 31—1—1982 வரையிலான சாதனை.	1982—83 ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பு.
(1)	(2)	(3)	(4)	(5)
	(ரூபாய் இலட்சத்தில்.)			
1. அறுவை மருத்துவக் கருவிகள் பிரிவு.	74.16	198.00	122.99	280.00

(1)	(2)	(`)	(4)	(5)
				(ரூபாய் இலசத்தில்.)
2. பொதுப் பொறியியல் பிரிவு.	88.39	102.73	57.88	162.00
3. மருந்துகள் தயாரிப்புப் பிரிவு.	207.09	349.40	221.14	438.75
4. இன்ட்ராக்	124.52	145.90	109.63	170.24
மொத்தம்	494.16	796.03	511.64	1,050.99

சென்னை, திருவாளர்கள் இன்ட்ராக் பார்மாசூட்டிகல்ஸ் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து சென்னை இந்திய மருந்து மருந்தாக்கியர் நிறுவனம் (ஐ. டி. பி. எல்.) ஆண்டொன்றுக்கு ரூ. 170 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள ஊசி மருந்துப் பொடி கொண்ட குப்பிகளை (Pc we injectcb'c vials) தயாரிப்பதற்கு தற்காலிகள் (கடன்) உரிமம் பெற்றிருக்கிறது. இம் மருந்து—மருந்தாக்கியல் நிறுவனம் (ஐ. டி. பி. எல்.) 41 அதிகாரிகள், 53 மேற்பார்வையாளர்கள், 1,042 தொழிலாளர்கள் அடங்கிய 1,136 பணியாளர்களைக் கொண்டுள்ளது. இந்திய மருந்து—மருந்தாக்கியல் லிமிடெட், நிறுவனம் (ஐ. டி. பி. எல்.) அதன் வளாகத்தில் அறுவை மருத்துவக் கருவிகளை விற்பனை செய்யும் அமைப்பு ஒன்றையும் கொண்டுள்ளது.

திரவச் சோதனை வசதி நிலையம், மகேந்திர கிரி வனம்.

கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த மகேந்திர கிரி வனத்தில் நீர்மச் சோதனை நிலையத்தை நிறுவுவதற்கான திட்டத்திற்கு இந்திய அரசின் விண்வெளி ஆராய்ச்சி துறை ஒப்புதல் அளித்துள்ளது. மேற்கண்ட திட்டத்திற்கு வேண்டிய நிலங்களை அதாவது பட்டா நிலங்கள், புறம்போக்கு நிலங்கள் ஆகியவற்றை இந்திய அரசிடம் இலவசமாக ஒப்படைக்கத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் லிமிடெட்.

1960ஆம் ஆண்டு நிறுவப்பட்ட திருவாளர்கள் இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவனம் இத்தாலியைச் சேர்ந்த இங்க் ஒலிவாட்டி நிறுவனத்துடன் டெலிபிரிண்டர்ஸ் மற்றும் அதன்

துணைக் கருவிகள் உற்பத்தியை செய்ய ஒத்துழைப்பு உடன்படிக்கை செய்து கொண்டது. 1964 ஆம் ஆண்டு ஆரம்ப கட்டமாக ஆண்டொன்றுக்கு 1,500 டெலிபிரிண்டர்ஸ் உற்பத்தியை எட்டியது. நிறுவனத்தின் திறன் முன்னேற்றம் அடைந்து தற்போதைய அதன் உற்பத்தித் திறன் ஆண்டொன்றுக்கு 8,000 எண்ணிக்கையை எட்டியுள்ளது. இந்தியாவிலேயே டெலிபிரின்டர்ஸ் மற்றும் துணைக் கருவிகள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள ஒரே நிறுவனமாகிய இந்நிறுவனம் தபால் மற்றும், தந்தி பாதுகாப்புப் பணி, இரயில்வே, விமானப் போக்குவரத்து, செய்தி ஏஜென்சி போன்ற எல்லாத் துறைகளின் முழுத் தேவையையும் பூர்த்தி செய்கிறது. நிறுவனத்தின் வழங்கப்பட்ட மூலதனத் தொகை ரூ. 123 இலட்சம். இதில் ரூ. 82 இலட்சம் மத்திய அரசினால் வழங்கப்பட்டது. இந்நிறுவனத்தில் முதலீடு செய்யப்பட்டுள்ள மொத்த மூலதனம் சுமார் 827 இலட்சம்.

உற்பத்தி

நிறுவனத்தின் குறிக்கோளான உற்பத்தியாகிய 8,000 எண்ணிக்கைக்கு எதிராக நிறுவனம் 1980—81-ல் மிக உயர்ந்த அளவான 8,318 எண்ணிக்கை உற்பத்தியை எட்டியது.

1981—82-ம் ஆண்டில் நிறுவனத்தின் உற்பத்தி இலக்கு 8,500 டெலிபிரிண்டர்களும் மற்றும் துணைக் கருவிகளும் மற்றும் ரூ. 100 இலட்சம் மதிப்புள்ள உதிரி பாகங்களை உற்பத்தி செய்வதாகும். 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் டிசம்பர் முடிய 7,318 கருவிகளையும் ரூ. 92 இலட்சம் மதிப்புடைய உதிரிகளையும் உற்பத்தி செய்துள்ளது. எனவே 1982 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் அதன் இலக்கை எட்டிவிட முடியும் என்று நிறுவனம் எதிர் பார்க்கின்றது,

வருங்கால திட்டம் :

மாற்றுப்பணித் திட்டத்தின் ஒரு பகுதியாக நிறுவனம் மின் தட்டச்சு எந்திரங்கள், எலக்ட்ரானிக் டெலிபிரிண்டர்ஸ் மற்றும் கம்யூட்டர் பெரிபெரல்ஸ் முதலியவற்றை உற்பத்தி செய்யக் கருதியுள்ளது.

இந்நிறுவனத்திற்கு கிண்டியிலுள்ள அதன் தொழிற்சாலையில் ஆண்டொன்றுக்கு 15,000 மின் தட்டச்சு எந்திரங்கள் செய்ய ஒரு இசைவுக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது. இந்த உற்பத்தியை

மேற்கொள்ள நிறுவனம் இத்தாலியைச் சேர்ந்த ஒலிவாட்டி நிறுவனத்துடன் தொழில் ஒத்துழைப்புக் கொள்ளும். இதற்கான எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு விட்டன. உற்பத்தி வெகு விரைவில் தொடரும் என்று எதிர் பார்க்கப் படுகிறது.

ஓசூரிலுள்ள நிறுவனத்தின் புதிய தொழிற்சாலையில் எலக்ட்ரோ மெகானிகல் டெலிபிரிண்டர்ஸ் உற்பத்திக்குப் பதிலாக எலக்ட்ரானிக் டெலிபிரிண்டர்ஸ் உற்பத்தியை மேற்கொள்ள நிறுவனம் கருதியுள்ளது. உலக வங்கியின் நிதி உதவியுடன் இத் திட்டம் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. தொழில் ஒத்துழைப்புக் கொள்ள தகுந்த நிறுவனத்தை தேர்ந்தெடுப்பது குறித்து நிறுவனம் பரிசிலனை செய்து வருகிறது.

ஆண்டொன்றுக்கு 2,500 எண்ணிக்கையிலான பிளாபி டிஸ்க் டிரைவ் என்ற பொருளை உற்பத்தி செய்ய நிறுவனத்திற்கு இசைவுக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கான தொழில் ஒத்துழைப்புக் கொள்ள நிறுவனம் நடவடிக்கைகள் மேற்கொண் டுள்ளது.

இந்நிறுவனத்திற்கு, 500 எண்ணிக்கை டேட்டா மாடங்களை உற்பத்தி செய்ய பதிவு வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பொருள்களைச் செய்வதற்கான தொழில் நுணுக்கம் இந்நிறு வனம் மேற்கொண்டது. உற்பத்தி விரைவில் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்,

1. நோக்கங்கள்—

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) 1965 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஆலங்குளத்தில் ஆண்டுக்கு நான்கு இலட்சம் டன் சிமெண்ட் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையையும் வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள அரக்கோணத்தில் ஆண்டுக்கு 36,000 டன் உருக்கு உற்பத்தி செய்யும் தொழிற்சாலையையும் நடத்துவது இந்நிறுவனத்தின் நோக்கமாகும். 1969 ஆம் ஆண்டு முதல் 1971 ஆம் ஆண்டு வரை குறுகிய காலத்திற்குள் நலிவுற்ற சில தொழில் பிரிவுகளின் பங்கு மூலதனத்தில் பங்கேற்றும் கடனைத் திருப்பிக் கொடுத்தும் டிட்கோ அவற்றிற்கு நிதியுதவி அளித்துள்ளது.

1970 ஆம் ஆண்டில் மத்திய அரசு கூட்டுத்துறை கொள்கைகளை வகுத்தது. அரசு வகுத்த வழிமுறைகளை செயல்படுத்தும் பொருட்டு கூட்டுத்துறை கொள்கையை வகுத்தது. அரசு வகுத்த வழிமுறைகளை செயல்படுத்தும் பொருட்டு கூட்டுத்துறையில் தொழில்களை உருவாக்கும் பொறுப்பு டிட்கோவிடம் ஒப்படைக் கப்பட்டது. கூட்டுத்துறைத் திட்டங்களின் மூலதனப் பங்குகளை வாங்குவதன் மூலம் டிட்கோ நிதியுதவி அளிக்கிறது. அதன் விவரம் வருமாறு :—

விவரம்.	டிட்கோ வாங்கும் மூலதனப் பங்குகள்.
(1)	(2)
ரூ. 100 இலட்சத்திற்கு மேல் செலவாகும் திட்டங்கள்.	மூலதனப் பங்குகளில் 26 சத வீதம்.
ரூ. 50 இலட்சமும் அதற்கு மேலும் ரூ. 100 இலட்சம் வரை செலவாகும் திட்டங்கள்.	மூலதனப் பங்குகளில் 15 சத வீதம்.

தனியார் தொழில் முனைவோருக்கு 25 சதவீதம் மூலதன பங்கு கள் வழங்கப்படுகின்றன. எஞ்சியுள்ள மூலதனப் பங்குகள் பொது மக்களுக்கு விற்கப்படுகின்றன. நிதியுதவி நிறுவனங்களிடமிருந் தும் வங்கிகளிடமிருந்தும் காலக் கடன்களும் வாங்கப்படுகின்றன.

2. ஆலங்குளத்திலுள்ள சிமெண்ட் தொழிற்சாலையை நிரு வகிக்க 1976 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் அமைக்கப்பட்டது. இது டிட்கோவிற்குச் சொந்த மான கிளை நிறுவனமாகும். புதிய சிமெண்ட் தொழிற்சாலை திட்டங்கள் 1–4–1976 அன்று இந்நிறுவனத்தின் நிருவாகப் பொறுப்பிற்கு மாற்றப்பட்டன.

2. நிதியுதவி.

தமிழ்நாடு அரசு டிட்கோவிற்குப் பங்கு மூலதனத்திற்குத் தொகை வழங்கியும் கடன்கள் வழங்கியும் நிதியுதவி அளிக்கிறது இது தவிர உத்திரவாதம் பெற்ற கடனீட்டுறுதிப் பத்திரங்களைத் திரட்டவும் அரசு உத்தரவாதம் அளிக்கிறது. டிட்கோ பொது

மக்களிடமிருந்து வைப்புத் தொகைகளையும் பெறுகிறது. 31-3-1981 அன்றுள்ளபடி டிட்கோவிற்கு அனுமதி பெற்ற மூலதனம் 30 கோடி ரூபாயாகும். 1981-82 இல் இது 40 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டது. 31-3-1981 வரை திரட்டப்பட்ட நிதி 1981-82 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டின்படி திரட்ட உத்தேசித்துள்ள நிதியின் விவரம் வருமாறு :—

விவரம்.	31-3-1981 வரை திரட்டப் பட்ட தொகை.	1981—82 ஆம் ஆண்டு திருத்த மதிப் பீட்டின் படி திரட்டக் கருதியுள்ள தொகை	1982—83 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட் டின்படி திரட்ட உத்தேசித் துள்ள தொகை.
(1)	(2)	()	(4)
	(ரூபாய் கோடியில்.)		
அரசு வழங்கியுள்ள பங்கு மூலதனத் தொகை.	28.23	5.00	7.00
அரசு வழங்கிய கடன் ..	7.02	0.90	..
பிணையத்துடன் கூடிய கடனீட்டுறுதிப் பத்திரங்கள்.	11.50	0.83	1·00
குறித்தகால வைப்புத் தொகைகள் (நிகரம்).	2.71	(—) 0.50	(—)0.80
மொத்தம் ..	49.46	6.23	7.8

3. முதலீடுகள்.

பொதுத் துறை, கூட்டுத் துறை திட்டங்கள் பலவற்றில் 31—3—1981 வரை டிட்கோ முதலீடு செய்துள்ள தொகையும் 1981—82 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டின்படியும் 1982 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டின்படியும் முதலீடு செய்யக்கூடிய தொகையும் வருமாறு :—

முதலீடு செய்துள்ள விவரம்.	31—3—1981 வரை டிட்கோ முதலீடு செய்துள்ள தொகை (ஈடு செய்த கடன் உட்பட.)	1981—82 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டின்படி டிட்கோ முதலீடு செய்யக் கூடிய தொகை.	1982—83 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி டிட்கோ முதலீடு செய்யக்கூடிய தொகை.
	(ரூபாய் கோடியில்.)		
பொதுத்துறை திட்டங்கள் (பதிவுப் பெற்ற அலுவலக நிலையான சொத்துக்கள் உட்பட).	24.63	2.65	4.62
கூட்டுத் துறை திட்டங்கள்	22.27	6.17	4.25
நிதியுதவி பெறும் தொழிற் சாலைகள்.	0.60	..	..
மொத்தம் ..	47.50	8.82	8.87

பொதுத் துறை, கூட்டுத்துறை திட்டங்களில் திட்டம் வாரியாக முதலீடு செய்துள்ள விவரம் இணைப்பு 1, 2 இல் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1981—82 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டின்படியும் 1982—83 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டின்படியும் நிதிவாயில்கள், நிதிகளைப் பயன்படுத்திய விவரமும் இணைப்பு 3-இல் கொடுக்கப்பட்டிருக்கிறது.

4. தொழில் திட்டங்கள்.

1. பொதுத் துறை தொழில் திட்டங்கள்.

பொதுத் துறையில் 11 தொழிற் திட்டங்கள் உள்ளன. அவற்றின் விவரம் வருமாறு :—

விவரம்.	தொழில் திட்டங்களின் எண்ணிக்கை.	திட்டச் செலவு (ரூபாய் இலட்சத்தில்.)	உற்பத்தி செய்து வரும் தொழில் திட்டங்களில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளவர்களும் பிற தொழில் திட்டங்களில் வேலை வாய்ப்பும்.
(1)	(2)	(3)	(4)
உற்பத்தி செய்து வரும் தொழில் திட்டங்கள்.	4	4,534·91	3,387
செயல்படுத்தப்படும் தொழில் திட்டங்கள்.	1	301·00	..
செயல்படுத்த மேற்கொள்ளவிருக்கும்—பரிசீலனையில் இருக்கும் தொழில் திட்டங்கள்.	6	4,411·60	1,150
	11	9,247·52	4,537

உற்பத்தி செய்து வரும் தொழில் திட்டங்களுள் ஒரு தொழிற்சாலை (கல்நார் சிமெண்ட் அட்டை தயாரிப்புத் தொழிற்சாலை) 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் உற்பத்தியைத் தொடங்கியுள்ளது. இத் தொழிற்சாலையை நிறுவ ரூ. 247 இலட்சம் செலவாயிற்று. இங்கு 203 பேர் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர்.

மற்றொரு தொழிற்சாலை ரூ. 301 இலட்சம் செலவில் (ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலையை நவீனப் படுத்துதல்) நிறுவப்பட்டு வருகிறது. 1982 ஆம் ஆண்டு மார்ச்சு திங்களில் நிறுவப்பட்டுவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் ஆண்டுதோறும் கூடுதலாக 50,000 டன் சிமெண்ட் உற்பத்தி செய்ய முடியும். இரு தொழிற்சாலைகள் உற்பத்தி செய்து வருகின்றன. ஒரு தொழிற்சாலை நிறுவப்பட்டு வருகிறது. இதற்காகும் செலவு ரூ. 1,234 இலட்சம் இதனால் 1,840 பேருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும். இத்தொழிற்சாலைகள் மாநிலத்தில் தொழில் துறையில் பின் தங்கியிருக்கும் பகுதியில் அமைந்திருக்கின்றன.

1. கூட்டுத் துறை தொழில் திட்டங்கள்.

கூட்டுத் துறையில் 37 தொழில் திட்டங்கள் உள்ளன. அவற்றின் விவரம் வருமாறு :—

விவரம்.	திட்டங்களின் எண்ணிக்கை	திட்டச் செலவு (ரூபாய் இலட்சத்தில்).	தொழில் திட்டங்களில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளவர்களும் பிற தொழில் திட்டங்களில் வேலை வாய்ப்பும்.
(1)	(2)	(3)	(4)
உற்பத்தி செய்து வரும் தொழில் திட்டங்கள்.	15	13,305·18	4,931
செயல்படுத்தப்படும் தொழில் திட்டங்கள்.	13	13,541·37	3,600
செயல்படுத்த மேற்கொள்ளவிருக்கும் பரிசீலனையில் இருக்கும் தொழில் திட்டங்கள்.	9	12,150·00	4,700
	37	38,996·55	13,231

[1982 மார்ச் 25

1981–82 ஆம் ஆண்டில் உற்பத்தியைத் தொடங்கியுள்ள அல்லது 1981–82 ஆம் ஆண்டு இறுதிக்குள் உற்பத்தியைத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிற தொழில் திட்டங்களின் விவரம் வருமாறு :—

தொழில் திட்டத்தின் பெயர்.	திட்டச் செலவு. (ரூபாய் இலட்சத்தில்.)	வேலை வாய்ப்புப் பெறுபவர்களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)
1. கங்கப்பா பேப்பர் மில்ஸ் லிமிடெட்.	544·00	326 (பேர் வேலைக் கமர்த்தப் பட்டுள்ளனர்).
2. அசிட்டிலின் அண்ட் இண்டஸ்ட்டிரியல் கேஸ் சிலிண்டர்ஸ் லிமிடெட்.	61·30	80
3. சதர்ன் அக்ரியூரேன் இண்டஸ்டிரீஸ் லிமிடெட்.	939·00	180
4. ஆசியன் பேரிங்ஸ் லிமிடெட்.	1,637·57	650
5. மெட்ராஸ் ஷூ பேப்ரிக்ஸ் லிமிடெட்.	96·50	300
6. வானவில் டைஸ் அண்டு கெமிகல்ஸ் லிமிடெட்.	406·00	180
7. தூத்துக்குடி அல்கலி கெமிக்கல்ஸ் அண்டு பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்.	5,320·00	490
8. மல்லாடி ட்ரக்ஸ் அண்டு பார்மசுட்டிகல்ஸ் லிமிடெட்.	134.00	100
	9,138.37	2,306

1982 மார்ச் 25]

1982–83 ஆம் ஆண்டில் உற்பத்தியைத் தொடங்கும் என எதிர் பார்க்கும் தொழில் திட்டங்கள் வருமாறு :—

தொழில் திட்டத்தின் பெயர்.	திட்டச் செலவு.	வேலை வாய்ப்பு பெறுபவர்கள் எண்ணிக்கை.
(1)	(2)	(3)
	(ரூபாய் இலட்சத்தில்)	
1. சிப் ஸ்டீல்ஸ் (இந்தியா) லிமிடெட்	50.00	250
2. சுமர் கெமிக்கல்ஸ் அண்ட் இண்டஸ்டிரீஸ் லிமிடெட் ..	196.60	60
	246.00	310

உற்பத்தி செய்துவரும், நிறைவேற்றப்பட்டு வரும் 28 தொழில் திட்டங்களுள் 13 தொழில் திட்டங்கள் பின்தங்கிய பகுதிகளில் அமைந்துள்ளன. அவற்றின் விவரம் வருமாறு :—

விவரங்கள்	திட்டங்களின் எண்ணிக்கை.	திட்டச் செலவு.	உற்பத்தியிலுள்ள தொழிற்சாலைகளில் பணிக்கமர்த்தப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கையும் பிற திட்டங்களின் வேலை வாய்ப்பு அளவும்.
(1)	(2)	(3)	(4)
		(ரூபாய் இலட்சத்தில்)	
உற்பத்தியிலுள்ள திட்டங்கள்.	7	1,554.43	1,426
நிறைவேற்றப்பட்டு வரும் திட்டங்கள்.	7	4,865.07	1,970
	14	6,419.50	3,396

5. ஆதாய இழப்பு விவரம்.

31—3—1980 வரை டிட்கோவிற்கு மொத்தம் ரூ. 631.94 இலட்சம் இழப்பு ஏற்பட்டுள்ளது. 1980—81-ல் ரூ. 29.61 இலட்சம் நிகர ஆதாயம் கிட்டியது. 31—3—1981 வரை ஏற்பட்ட இழப்பு குறித்த தொழி பிரிவு வாரியான விவரம், அதற்கான காரணங்கள் ஆகியவை தனித் தனியே கொடுக்கப்பட்டுள்ளது.

1. ஆலங்குளம் சிமென்ட்ஸ் நிறுவனம்.

31—3—1976 வரை இத் தொழிற்பிரிவு 'டிட்கோவின்' கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. 1—4—1976-லிருந்து இது, தமிழ்நாடு சிமின்ட்ஸ் நிறுவனத்திற்கு (டிட்கோவின் கிளை நிறுவனம்) மாற்றப்பட்டது. தண்ணீர், நிலக்கரி, மின்சக்தி ஆகியவை பற்றாக்குறை ஏற்பட்டதன் காரணமாக, 31—3—1976 வரை ரூ. 169.39 இலட்சம் இழப்பு ஏற்பட்டது.

8. தமிழ்நாடு ஸ்டீல்ஸ், அரக்கோணம்.

இந்நிறுவனம், 1973—74 இல் ரூ. 12.34 இலட்சம் 1980—81-ல் ரூ. 43.22 இலட்சம் ஆதாயத்தில் செயல்பட்ட போதிலும் 31—3—1981 வரையிலான கால அளவில் ரூ. 412.33 இலட்சம் இழப்பு ஏற்பட்டுள்ளது. இத்தொழிற்சாலைக்கான பெருமளவு மூலதனச் செலவு உயரளவு மின் கட்டணம், அரசுத் துறைகளுக்கு நிறுவனங்களுக்கு இரும்புக்கம்பி, பட்டை முதலியவற்றை ஆலை வாயில் விலைக்கே வழங்குதல் (இது உற்பத்திச் செலவு, வெளி அங்காடி விலையைக் காட்டிலும் குறைவு) ஆகியவற்றின் காரணமாகவே இத்தொழிற் பிரிவிற்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. உற்பத்திச் செலவு. பங்குத் தொகைக்கு நியாயமான ஆதாயம் ஆகியவற்றின் அடிப்படையில் உருக்கு பொருள்களை விலையிட தமிழ்நாடு ஸ்டீல்ஸ் நிறுவனத்திற்கு இயலும் வகையில் அரசு 1979 டிசம்பரில் ஆணைகள் பிறப்பித்துள்ளது. 1981—82, 1982—83-இல் இத்தொழில்பிரிவு ஆதாயத்தில் செயல்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

3. வளர்ச்சிப் பிரிவு.

அரசிடமிருந்து கடனாகப் பெற்ற தொகைகளை முதலீடு செய்ததும், பல்வேறு கூட்டுத்துறை பொதுத்துறை தொழிற்சாலைகளின் மூலதனப் பங்கில் கடனீட்டுறுதிப் பத்திரங்கள் வெளியிடுதல் ஆகியவற்றின் காரணமாக 31—3—1981 வரை ரூ. 20.61 இலட்சம் இழப்பு ஏற்பட்டுள்ளது. 'டிட்கோ' மேற்கு கொண்ட தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில் அவற்றின்

வளர்ச்சிக்கால அளவு நீட்டதாய் உள்ளதும் இழப்பிற்குக் காரணமாகும். இம்முயற்சியின் பயனாய், 1981—82, 1982—83 ஆகிய ஆண்டுகளில் சிறு அளவு ஆதாயம் கிட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

4. கூட்டுத்துறைத் தொழிற்சாலைகள்.

உற்பத்தியிலுள்ள 15 கூட்டுத்துறைத் தொழிற்சாலைகளில் பின்வரும் தொழிற்சாலைகள் முந்தைய கணக்காண்டில் ஆதாயத்தில் செயல்பட்டன :

(அ) சதர்ன் பெட்ரோகெமிக்கல்ஸ் இன்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்.

(ஆ) பாண்டியன் கெமிக்கல்ஸ் லிமிடெட்.

(இ) தமிழ்நாடு தாதா பார்மசூடிகல்ஸ் லிமிடெட்,

(ஈ) டைனாவிசன் லிமிடெட்.

(உ) ஏசியா டொபாக்கோ கம்பெனி லிமிடெட்.

(ஊ) கிரேட் சி டிராலர் பில்டிங் யார்டுமண்டபம் லிமிடெட்,

(எ) அரக்கோணம் கேஸ்டிங்ஸ் அண்டு போர்ஜிங்ஸ் லிமிடெட்.

(ஏ) இன்டர் கான்டினென்டல் லெதர்ஸ் லிமிடெட்.

(ஐ) தமிழ்நாடு கெமிகல் பிராடக்ஸ் லிமிடெட்.

எஞ்சியுள்ள தொழிற்சாலைகளும் ஆதாயத்தில் செயல்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

6. மாநிலத்திற்கு திட்டப் பயன்கள்.

ரூ. 316.82 கோடி மூலதனச் செலவில் பொதுத்துறையிலும் கூட்டுத்துறையிலும் 33 தொழிற்சாலைகள் வளர டிட்கோ ஒரு சாதனமாய் அமைகிறது. மேலும், நடுத்தர, சிறு தொழில்கள்

குடிசைத் தொழில்கள் ஆகியவற்றிற்குப் பெரிதும் தேவைப்படக் கூடிய மூலப் பொருள்களை வழங்குவதற்காக, இம்மாநிலத்திலுள்ள இயற்கை வாயில்களைப் பயன்படுத்தும் நோக்கத்துடன் ரூ. 172.42 கோடி கூடுதல் செலவில் பொது, கூட்டுத்துறையின் கீழ் மேலும் 18 தொழிற்சாலைகளுக்கு நிதியுதவி அளித்திடவும் கூடுதல் வேலைவாய்ப்பளிக்க இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்தவும் கருதப்பட்டுள்ளது. விற்பனை வரி வசூல் வாயிலாக மாநிலக் கருவூலத்திற்குக் கணிசமான தொகை கிடைக்கிறது. இவை தவிர, டிட்கோவின் தொழிற்சாலைகள் ஆயத்தீர்வை வசூல், வருமான வரி முதலியவற்றின் வாயிலாகத் தேசிய கருவூலத்திற்கும் தொகை அளிக்கின்றன. சில பொருள்கள் இறக்குமதி செய்யப்படுவதும் இதனால் குறைந்துள்ளது. டிட்கோவின் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் சில பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படுவதன் மூலம் அந்நியச் செலாவணியையும் ஈட்டித் தருகிறது.

7. வேலை வாய்ப்பு.

டிட்கோ, சுமார் 10,298 பேருக்கு நேரடி வாய்ப்பு கிட்டச் செய்ததன் மூலம் வெற்றி கண்டுள்ளது. விவரம் வருமாறு :

விவரங்கள். (1)	எண்ணிக்கை. (2)
31–3–1981 முடிய உற்பத்தி தொடங்கிய தொழிற்சாலைகளில் வேலைவாய்ப்பு	7,992
1981–82-இல் உற்பத்தி தொடங்குமென எதிர்பார்க்கப்படும் தொழிற்சாலைகளில்	2,306
	10,298

நிறைவேற்றப்பட்டுவரும் திட்டங்கள், பரிசீலனையில் உள்ள திட்டங்கள் ஆகியவற்றில் 7,470 பேருக்கு வேலைவாய்ப்பளிக்கவும் டிட்கோ கருதியுள்ளது.

8. வருங்கால திட்டங்கள்.

பொது, கூட்டுத்துறையில் தொழில்களை நிறுவுவதில் டிட்கோ கணிசமான அளவிற்கு அனுபவம் பெற்றதன் காரணமாக, தமிழக அரசிடமிருந்தும் நிதியுதவி நிறுவனங்களிடமிருந்தும் நிதியுதவி

பெறுவதன் மூலம் தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்த பெரிய அளவிலான தொழிற்சாலைகளை நிறுவ, டிட்கோ தற்போது கருதி வருகிறது. புதிய தொழில்களை நிறுவக் கருதும் தொழில் முனைவர்களுக்கு சிக்கனச் செலவிலும், பலனளிக்கத்தக்க வகையிலும் ஆலோசனை, தொழில் நுட்பப் பணிகளை நல்குவதன் மூலம் தனது நடவடிக்கைகளைப் பல்திரப்படுத்தவும் டிட்கோ கருதிவருகிறது. இவ்வாறாக, மாநிலத்தின் விரைவான தொழில் வளர்ச்சிக்கு டிட்கோ தனது பங்கை ஆற்றுகிறது.

இணைப்பு—1.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் பொதுத் துறைத் தொழிற்சாலைகள் குறித்த விவரங்களைக் காட்டும் அட்டவணை.

தொடர் எண்.	தொழிற்சாலையின் பெயர், அது அமையும் இடம் முடிவு செய்யப் பட்டிருப்பின் அது உற்பத்தி தொடங்கிய நாள் உற்பத்தி தொடங்கப்பட்டிருப்பின்)	உற்பத்திப் பொருளின் பெயர், ஆண்டு உற்பத்தித்திறன் (முடிவு செய்யப்பட்டிருப்பின்) உற்பத்திப்பிரிவுகளைப் பொறுத்த வரையில் 1980–81-ல் அதன் உற்பத்தி.	திட்டச் செலவு.	ஈடுசெய் கடன் உட்பட 31–3–1981 வரை டிட்கோவின் முதலீடு.	1981–82 திருத்த மதிப்பீடு 1982–83 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு ஆகியவற்றிற்கிணங்க டிட்கோவின் மூலதனச் செலவு. — 1981–82 திருத்த மதிப்பீடு.	1982–83 வரவு–செலவு திட்ட மதிப்பீடு.	உற்பத்தியிலுள்ள தொழிற்சாலைகளில் வேலைக் கமர்த்தப்பட்டு உள்ளவர்களின் எண்ணிக்கை பிற தொழிற்சாலைகளில் வேலை வாய்ப்புத்திறன்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
			(ரூபாய் இலட்சத்தில்).	(ரூபாய் இலட்சத்தில்)	(ரூபாய் இலட்சத்தில்).	(ரூபாய் இலட்சத்தில்)	
1.	உற்பத்தியிலுள்ள தொழிற்சாலைகள்.—						
1.	தமிழ்நாடு ஸ்டீல்ஸ், அரக்கோணம் (1972 ஜூலையில் உற்பத்தி தொடங்கப்பட்டது).	உருக்குப் பாலங்கள் ஆண்டுக்கு 36,000 டன் (1980–81 ல் உற்பத்தி 27,511 டன்) 1981–82 1982–83 முறையே உற்பத்தி 30,000 டன், 32,000 டன் எதிர்பார்க்கப்படுகிறது.	712.96	666.54	65.00	..	840
2	தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் சிமெண்ட் தொழிற்பிரிவு ஆலங்குளம்* (1970 ஜூலையில் உற்பத்தி தொடங்கப் பட்டது).	சிமெண்ட்ஸ், ஆண்டிற்கு 4 இலட்சம் டன் (1980–81-ல் உற்பத்தி— 301, 148 டன், 1981–82-ல் 3,10,000 டன், 1982–83 ல், 3,50,000 டன் உற்பத்தி எதிர்ப் பார்க்கப்படுகிறது.	686.00	1,633.87	..	..	1,637
3	தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் சிமெண்ட் தொழிற் பிரிவு அரியலூர் (1979 ஆகஸ்டில் உற்பத்தி தொடங்கப்பட்டது.)	சிமெண்ட் ஆண்டிற்கு 5 லட்சம் டன் (1980–81-ல் உற்பத்தி 2,46,733 டன், 1981–82 ல் 3,20,000 டன், 1982–83-ல் 4,25,000 டன் உற்பத்தி எதிர் பார்க்கப்படுகிறது.	2,888.95	..	..	..	[illegible]07
4	தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் கல்நார் தகடுத் தொழிற்பிரிவு—கல் நார் தகடு தயாரிப்புத் தொழிற்சாலை, ஆலங்குளம் (1981 செப்டம்பரில் உற்பத்தி தொடங்கப்பட்டது).	கல்நார் சிமெண்ட் தகடு—ஆண்டிற்கு 36,000 டன் (1981–82 ல் 8,000 டன் 1982–83-ல் 30,000 டன் உற்பத்தி எதிர்பார்க்கப்படுகிறது.	247.00	62.00	7.00	..	203
	நிறைவேற்றப்பட்டுவரும் தொழிற்சாலைகள்:						
1	தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் சிமெண்ட் தொழிற் பிரிவுகளை நவீன படுத்துதல், ஆலங்குளம் (1982 மார்ச்சில் முடிக்கப்பெறுமென எதிர் பார்க்கப்படுகிறது.)	நவீனப்படுத்துதல்.	301.00	87.00	..	..	..

மேற்கொள்ளப்பட உள்ள பரிசீலனையிலுள்ள தொழிற் பிரிவுகள்;

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
1	மக்னீசியம் மெட்டல் பிராஜெக்ட்ஸ் மரியூர், இராமநாதபுரம் மாவட்டம் (1983–84ல் உற்பத்தித் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.).	மக்னீசியம் உலோகம் ஆண்டிற்கு *600 டன் (விமானம் தயாரித்தல், கட்டுமான. அலுமினியம் விண்வெளி ஆராய்ச்சி உலோகவியல் துறை ஆகியவற்றில் பயன்படுத்தப்படுகிறது.	450.60	4.14	15.00	50.0(	200
2	ஒயர் ராடு மில் பிராஜெக்ட், அரக்கோணம் (1983–84ல் உற்பத்தி தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.	ஸ்டீல் கம்பி முதலியன. ஆண்டிற்கு 25,000 டன்.	400.00	0.02	50.00	45.00	100
3	தமிழ்நாடு ஸ்டீல்ஸ், அரக்கோணம் விரிவாக்கம் (கூடுதல் உலை அமைத்தல்) (1983–84-ல் உற்பத்தி தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.)	எக்கு குண்டுகள்—ஆண்டுக்கு 50,000 டன்.	500.00	..	5.00	50.00	100
4	தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம்—கல்நார் பைப் தொழிற்சாலை—அரியலூர் (1983–84ல் உற்பத்தி தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.)	கல்நார் குழாய்கள்—ஆண்டிற்கு 36,000 டன்.	700.00	..	10.00	90.00	300
5	தொழிற்சாலை வெடிமருந்துத் திட்டம், பனமாதங்கி ஓதுக்கக்காடு, காட்பாடிக்கு அருகே (1983–84ல் உற்பத்தியைத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.)	தொழிற்சாலை வெடி மருந்துகள்—10,000 (சுரங்கப்பணி- கிணறு தோண்டுதல் சுரங்கப் பாதை அமைத்தல் முதலிய கட்டுமானப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது).	1,986.00	4.29	100.00	150.00	300
6	வெடிமருந்துகள்—வெடிமருந்து வத்திகள் திட்டம் (1983–84-ல் உற்பத்தியைத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.)	வெடிமருந்துகள்—40 மில்லியன் வெடிமருந்து வத்திகள்—10 மில்லியன் மீட்டர்கள்.	375.00	..	10.00	75.00	150
			9,247.51	2,457.86	262.00	460.00	4,537

* இத்திட்டங்கள் பின்தங்கிய பகுதிகளில் அமைந்துள்ளன.

இணைப்பு

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் கூட்டுத்துறைத் திட்டங்களின் 2. விவரங்களைக் காட்டும் அட்டவணை :

தொடர் எண்ணும், திட்டத்தின் பெயர், அதன் அமைவிடம் முடிவு செய்யப்பட்டுவிட்டால் அந்த அமைவிடம், உற்பத்தி தொடங்கிவிட்டால், அவ்வாறு உற்பத்திப் தொடங்கிய நாள்.	உற்பத்திப் பொருளின் பெயர், உற்பத்தித் திறன் முடிவு செய்யப்பட்டுவிட்டால், ஆண்டு உற்பத்தித் திறன், உற்பத்திப் பிரிவுகள் 1980-81-ல் செய்த உற்பத்தி.	திட்டச் செலவு (இலட்சம் ரூபாயில்.)	"டிட்கோ" வின் பொறுப்பு (இலட்சம் ரூபாயில்)	ஈடுசெய் கடன் உட்பட "டிட்கோ" 31—3—1981 வரை செய்த முதலீடு (இலட்சம் ரூபாயில்)	1981—82 திருத்த மதிப்பீடு 1982—83 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு ஆகியவற்றின்படி டிட்கோவின் முதலீடு (இலட்சம் ரூபாயில்). 1981—82 திருத்த மதிப்பீடு.	1982—83 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு.	உற்பத்தியை தொடங்கிவிட்ட திட்டங்களில் பணிபுரியும் ஆட்களின் எண்ணிக்கையும் பிற திட்டங்களில் வேலைவாய்ப்பும்.	1980—81-ல் ஈட்டிய நிகர இலாபம் (இலட்சம் ரூபாயில்)
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
1. உற்பத்தி தொடங்கிவிட்ட பிரிவுகள் :								
1 ஸ்தர்ன் பெட்ரோகெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் கார்ப்பொரேஷன் லிமிடெட், தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டம் (1975 ஜூனில் உற்பத்தி தொடங்கியது).	யூரியா-5, 12,000 TPA, DAP—73,600 கந்தக அமிலம்—1,50,000 TPA பாஸ்பரிக் அமிலம்—52,800 TPA 1980–81-ல் உற்பத்தி : யூரியா—4,38,450 டன் TPA —1,39,135 டன்.	10,508.00	500.00	725.00	..	..	2,079	1,463·00
2 தமிழ்நாடு குரோமேட்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட், ராணிப்பேட்டை, வட ஆற்காடு மாவட்டம் (1975 அக்டோபரில் உற்பத்தி தொடங்கியது).	பி.சி.டி. தூள்—3,300 டன் சோடியம்-டை-குரோமேட்—4,315 டன், இவை தோல் பதனிடுதல், காகிதம் தயாரித்தல், மற்றும் சலவை சோப்புகள் தயாரித்தல் ஆகியவற்றுக்குப் பயன் படுத்தப்படுகின்றன ; (1980–81-ல் ஆன உற்பத்தி : பி.சி.டி. தூள்—1,482 டன் சோடியம் குரோமேட்—631 டன் ; சோடியம் சல்பேட்—3,400 டன்).	191.35	10.40	10.40	40.00	25.00	554 (தனித்தியங்கும் திறமையை மேம்படுத்துவதற்காக நவீனப்படுத்தும் திட்டம் ஒன்றை இந் நிறுவனம் வகுத்து வருகிறது.)	நட்டம் ஏற்பட்டது.
3 பாண்டியன் கெமிக்கல்ஸ் லிமிடெட், நரசிங்கப்பட்டி கிராமம், மதுரை மாவட்டம் (1975 ஜூலையில் உற்பத்தி தொடங்கியது) இந்நிறுவனத்தின் ஒரு துணை நிறுவனமான திருவாளர்கள் தமிழ்நாடு குளோரேட்ஸ் லிமிடெட் 1982 மார்ச்சில் உற்பத்தி தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.	பொட்டாசியம் குளோரேட்—4,825 டன் (தீக்குச்சி தயாரிப்பு தொழிலில் மூலப் பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது) (1980–81-ல் உற்பத்தி 2,236 டன்),	91.95	6.24	6.24	..	..	152	29.79

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
4 தமிழ்நாடு தாதா பார்ம ஸீடிகல்ஸ் லிமிடெட், பல்லாவரம் செங்கல்பட்டு மாவட்டம் (தற்போது செயல்பட்டு வரும் நிறுவனம் 24-3-73-ல் எடுத்துக் கொள்ளப்பட்டது).	மருந்துகள், மருந்து தயாரிப்பதற்கான பொருள்களும் (1980-81-ல் உற்பத்தி ரூ. 535 இலட்சம்).	244.91	23.40	33.40	..	..	503	3.01
5 சதர்ன்போராக்ஸ் லிமிடெட் நச்சூர் கிராமம், செங்கல்பட்டு மாவட்டம் (1976 ஜனவரியில் உற்பத்திதொடங்கியது).	போராக்ஸ்-15,000 டன், போரிக் அமிலம்-3,000 டன் (கண்ணாடி, மட்பாண்டம், இழைக் கண்ணாடி, மருந்துப் பொருள் நுண் சத்துணவு தயாரிப்பிலும் பயன்படுத்தப்படுகிறது. (1980-81-ல் ஆன உற்பத்தி: போராக்ஸ் 2,210 டன், போரிக் அமிலம் 108 டன்.)	124.15	12·18	50.18	2.78	..	69	நட்டம் ஏற்பட்டது (ஆதாயத்தை பெருக்குவதற்காக இந் நிறுவனம் பலதிறப்படுத்தும் திட்டத்தை மேற்கொண்டு செயல்படுத்தி வருகிறது.)
6 டயனாவிசன் லிமிடெட், அடையாறு, சென்னை (1975 ஜூனில் உற்பத்தி தொடங்கியது).	தொலைக்காட்சிப் பெட்டிகள் ஆண்டு ஒன்றுக்கு 20,000 (1980-ல் ஆன உற்பத்தி 20,922).	75.00	10.00	13.50	3.00	(—)6.50	362	16.08
7 ஆசியா டொபாக்கோ அண்டு கோ லிமிடெட், மூக்கான்டபள்ளி, தருமபுரி மாவட்டம் (1973 ஜூனில் உற்பத்தி தொடங்கியது).	சிகரெட்டுகள்—450 மில்லியன்	154.13	25.80	29.80	(—) 2.74	(—)4.00	268	13.00
8 தமிழ்நாடு ஆல்கலைன் பேட்டரீஸ் லிமிடெட், தொழிற்பேட்டை, அம்பத்தூர், சென்னை (1976 ஜனவரியில் உற்பத்தி தொடங்கியது).	நிக்கல் காட்மியம் பேட்டரீஸ் 50 இலட்சம் ஆம்பயர் மணி (பாதுகாப்புத்துறையிலும், இரயில்வே துறையிலும் பயன்படுத்தப்படுகிறது).	114.69	16.00	29.34	10.79	..	26	நட்டம் ஏற்பட்டது (இந்நிறுவனத்தின் புத்துயிரூட்டும் திட்டம் 1982 மார்ச்சில் நிறைவு பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது).
9 கிரேட் சி ட்ராலர் பில்டிங் யார்டு மண்டபம் லிமிடெட், மண்டபம், இராமநாதபுரம் மாவட்டம் * (முதல் கட்ட உற்பத்திப் பணி 1976 ஜனவரியில் தொடங்கியது).	மீன்பிடி இழு படகுகள்—16	21.00 (முதல் கட்டம்.)	1.88	2.89	(—) 1.10	5.00 (இரண்டாவது கட்டம்)	56	3.96
10 மார்த்தி கிரிஸ்டல் சால்ட் கம்பெனி லிமிடெட், திருப்போரூர், செங்கல்பட்டு மாவட்டம் (1976 ஜனவரியில் உற்பத்தி தொடங்கியது).	தொழிற்சாலை உப்பு 1,20,000 டன்.	65·00	6.50	12.08	..	..	72	நட்டம் ஏற்பட்டது.
11 அரக்கோணம் காஸ்டிங்ஸ் அண்டு போர்ஜிங் லிமிடெட், அரக்கோணம், வட ஆற்காடு மாவட்டம் (1977 ஏப்ரலில் உற்பத்தி தொடங்கியது).	கனரக வார்ப்புகள், 1000 TPA (இயந்திரங்களில் துணைப் பாகங்களாகப் பயன்படுத்தப்படுகிறது).	75.00	17.50	17.80	..	..	68	7.03

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
12 தமிழ்நாடு கெமிக்கல் புராடக்ஸ் லிமிடெட், காலனிவாசல் கிராமம், இராமநாதபுரம் மாவட்டம் (1977 டிசம்பரில் உற்பத்தி தொடங்கியது).	சோடியம் ஹைடிரோ சல்பேட்-3,300 டன் திரவ சல் பர்டைட்-ஆக்ஸைடு-4,950 டன் (துணித் தொழிலில் சலவை, சாயமிடுதல், பட்டை போடுதல் போன்ற காரியங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது) (1980–81-ல் ஆன உற்பத்தி சோடியம் ஹைடிரோ சல்பேட்-2,764 டன் திரவ சல் பர்-டை ஆக்ஸைடு 2,834 டன்).	756.00	51.30	103.30		..	243	ஆதாயம் ஈட்டியது.
13 இன்டர் காண்டினென்டல் லெதர் லிமிடெட், சிப்காட் தொழில்பேட்டை, ராணிப்பேட்டை, வட ஆற்காடு மாவட்டம் *(1979 ஜூனில் உற்பத்தி தொடங்கியது).	வேலை நிறைவுபெற்ற தோல்கள் 9 இலட்சம்.	120.00	10.40	10.40	.	..	92	20.69
14 சதர்ன் ஹைடிரோ கார்பன்ஸ் லிமிடெட், கொளத்தூர் கிராமம், புதுக்கோட்டை மாவட்டம்* (1980 மார்ச்சில் உற்பத்தி தொடங்கியது).	அசிட்டிக் அன்ஹைடிரைடு-1,000 டன், அசிட்டிக் விமி அமிலம் 1,000 டன் (சாயப் பொருள்களிலும். பிளாஸ்டிக் மருந்துகள், மருந்துப் பொருள்கள் முதலியன தயாரிக்கவும் பயன்படுத்தப் படுகிறது).	220.00	15.60	97.2[illegible]	..	..	61	நட்டம் ஏற்பட்டது.
15 கங்கப்பா பேப்பர் மில்ஸ் லிமிடெட், வடகுட்டு கிராமம், தென் ஆற்காடு மாவட்டம் (1982 ஜனவரியில் உற்பத்தியை தொடங்கியது).	அச்சுக் காகிதங்களும் எழுதும் காகிதங்களும் ஒரு நாளைக்கு 10,000 டன்.	544·00	43.00	42.90	30.0	0. 0	326	தற்போது தான் உற்பத்தியை தொடங்கியுள்ளது.
	செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள்							
1 அசிட்லைன் அன்டு இன்டஸ்டிரியல் கேஸ் சிலிண்டர்ஸ் லிமிடெட், தொழிற்பேட்டை, அம்பத்தூர், சென்னை (1982 மார்ச்சில் உற்பத்தியை தொடங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது).	அசிட்லைன் கேஸ் சிலிண்டர்கள் ஓராண்டிற்கு 25,000.	61.30	6.50	19.50	..	...	80	..
2 சதர்ன் அக்ரிபர்ன் இன்டஸ்டிரீஸ் லிமிடெட், முன்டியம்பாக்கம், தென் ஆற்காடு மாவட்டம் (1982 மார்ச்சில் உற்பத்தியை தொடங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது)	பர்பூரல் - ஆண்டொன்றுக்கு 3,000 டன் (எண்ணெயை சுத்திகரிக்கவும் பிசின் தயாரிக்கவும் பெயிண்ட் தயாரிக்கவும் பயன்படுத்தப் படுகிறது).	939.00	63.75	47.94	15.86	..	180	..

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
3. ஆசியன் பேரிங்ஸ் லிமிடெட், பகலூர் கிராமம், தருமபுரி மாவட்டம் (1982 மார்ச்சில் உற்பத்தியை தொடங்குமென்று எதிர் பார்க்கப்படுகிறது.)	பல்வேறு வகையிலான பேரிங்குகள்-ஆண்டொன்றுக்கு 4.2 மில்லியன் துண்டுகள்.	1,637.57	130.00	65.22	64.78	..	650	..
4 மதராஸ் ஷூ பேபிரிக்ஸ் லிமிடெட், வாலாஜாபேட்டை வட ஆற்காடு மாவட்டம் (1982 மார்ச்சில் உற்பத்தியை தொடங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது).	ஆண்டொன்றுக்கு 6 இலட்சம் ஷூ ஜோடிகள் (ஏற்று மதிக்காக).	96.50	8.45	3.76	7.56	..	300	..
5 தமிழ்நாடு ப்ளோரின் அண்டு அலைடு கெமிக்கல்ஸ் லிமிடெட், மணலூர் கிராமம், இராமநாதபுரம் மாவட்டம்* (1983–84-ல் உற்பத்தியை தொடங்குமென்று எதிர் பார்க்கப்படுகிறது).	அலுமினிய ப்ளோரைடு—ஆண்டொன்றுக்கு 6,000 டன் (அலுமினியம் தயாரிக்கப் படுகிறது).	1,609.00	164.00	159.15	9.22	..	310	..
6. ஏசியா கார்பன் லிமிடெட், சிப்காட் தொழில் தொகுதி, ஓசூர், தருமபுரி மாவட்டம்* (1983–84-ல் உற்பத்தியை தொடங்குமென்று எதிர் பார்க்கப்படுகிறது).	கார்பன் துண்டுகள்—ஆண்டொன்றுக்கு 10,400 டன் (பல்வேறு தொழில்களில் பயன் படுத்தப்படுகிறது).	1,142	110.50	17.39	40.00	47.61	300	..
7 வானவில் டைஸ் அண்டு கெமிகல்ஸ் லிமிடெட், கூடைக்காடு கிராமம், தென்னாற்காடு மாவட்டம் (1982 மார்ச்சில் உற்பத்தியை தொடங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது).	நெப்தால்ஸ் அண்டு கலர்-சாயங்கள் ஆண்டொன்றுக்கு 450 டன் (துணி, தோல், பேப்பர், பிளாஸ்டிக் முதலிய தொழில்களில் பயன்படுத்தப் படுகிறது).	406.00	41.60	89.06	82.57	..	180	..
8 தூத்துக்குடி ஆல்கலி கெமிகல்ஸ் அண்டு பெர்டிலைசர்ஸ் லிமிடெட், தூத்துக்குடி திருநெல்வேலி மாவட்டம் (1982 மார்ச்சில் உற்பத்தியைத் தொடங்குமென்று எதிர் பார்க்கப்படுகிறது).	சோடா ஆஸ்—ஆண்டொன்றுக்கு 66,000 டன் அம்மோனியம் குளோரைடு, ஆண்டொன்றுக்கு 66,000 டன் (கண்ணாடி, காஸ்டிக் சோடா சோடியம் சிலிகேட் துணிகள், பேப்பர், மரக்கூழ் போன்ற பல தொழில்களில் சோடா ஆஸ் பயன் படுத்தப்படுகிறது. அம்மோனியம் குளோரைடு முக்கியமான உரமாக பயன் படுத்தப்படுகிறது).	5,320.00	789.00 (ரூபாய் கடன் உள்பட).	563.35	175.65	50.00	490	..

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
9. ஷிப் ஸ்டீல்ஸ் (இந்தியா) லிமிடெட், வளைநோக்கம், இராமநாதபுரம் மாவட்டம்—* (1982-83-ல் உற்பத்தி தொடங்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.)	கப்பல்களை உடைத்து இரும்பு, இரும்பல்லாத பொருள்களை பிரித்தல்-ஓராண்டிற்கு 4 கப்பல்கள்.	50.00	5.20	0.97	4.23	..	250	..
10. மல்லாடி டிரக்ஸ் அண்டு பார்மாசுடிகல்ஸ் லிமிடெட் சிப்காட் தொழில் தொகுதி, இராணிப்பேட்டை, வட ஆற்காடு மாவட்டம்* (1982 மார்ச்சில் உற்பத்தி தொடங்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.)	இப்ஹறின் அஹட்ரோ குளோரைடு ஆண்டொன்றுக்கு 33 டன் (காச நோய் சம்பந்தமான சிகிச்சைக்கு இன்றியமையாத மருந்தாகும்).	134.00	12.00	13.17	12.06	..	100	..
11. ஆடோமோடிவ் காஸ்டிங்ஸ் லிமிடெட், புதுக்கோட்டை (1985-86-ல் உற்பத்தியைத் தொடங்குமென்று எதிர் பார்க்கப்படுகிறது.)	கிரே இரும்பு வார்ப்புகள் ஆண்டொன்றுக்கு 20,000 வார்ப்புகள் (மோட்டார் தொழில்களுக்கு பயன்படுத் தப்படுகிறது.)	1,800.00	156.00	1.34	25.27	57.34	400	..
12. கமார் கெமிகல்ஸ் அண்டு இண்டஸ்டிரிஸ் லிமிடெட், சிப்காட் தொகுதி, இராணிப் பேட்டை, வட ஆற்காடு மாவட்டம்— (1982-83ல் உற்பத்தியைத் தொடங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது).	சல்பூரிக் ஆசிட் ஆண்டொன்றுக்கு 33,000 டன் (உரங்கள் பெட்ரோலிய இரசாயன பொருட்கள் சின்தடிக் டிடர்ஜண்ட் முதலியவற்றிற்குப் பயன்படுத்தப்படுகிறது.)	196.00	15.50	..	15.50	..	60	..
13. பைபர் பைப்ஸ் இந்தியா லிமிடெட், விழுப்புரம் அருகே, தென்னாற்காடு மாவட்டம் (1983-84-ல் உற்பத்தியைத் தொடங்குமென்று எதிர் பார்க்கப்படுகிறது.)	பிச்பைபர் டியூப்கள் ஆண்டொன்றுக்கு 6,220 டன்.	150.00	15.60	..	..	..	306	..
3. செயல்படுத்த எடுத்துக்கொள்ளப்பட வேண்டியுள்ள பரிசிலனையிலுள்ள திட்டங்கள்.—								
1. இரசாயன சாதனங்கள் திட்டம்.	தனிப்பொருட்களுடன் இரசாயன சாதனங்களை நிறுவுதலும், கட்டுதலும்.	100.00	10.00	0.01	5.00	4.33	400	..
2. பென்டாயரிதிரோடல் திட்டம்.	பென்டயரிதிரோடல் ஆண்டொன்றுக்கு 3,000 டன், சோடியம் பார்மோட் ஆண்டொன்றுக்கு 1,800 டன்.	1,200.00	120.00	0.32	2.66	50.20	400	..

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
3. பேட்டி அமிடு திட்டம்.	பேட்டி அமிடு ஆண்டொன்றுக்கு 12,000 டன், ஸ்டெரிக் அமிடு ஆண்டொன்றுக்கு 4,500 டன், கிளைசிரின் ஆண்டொன்றுக்கு 900 டன்.	450.00	40.30	0.20	10.00	30.10	150	..
4. ரிப்ராகட்டரிஸ் திட்டம்.	ரிப்ராகட்டரிஸ் ஆண்டொன்றுக்கு 1,20,000 டன்.	1,500.00	150.00	5.65	17.06	45.00	900	..
5. மூக்குக் கண்ணாடிப் பொருட்கள் தயாரிக்கும் திட்டம்.	ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் பொருட்கள்.	200.00	20.00	0.34	0.98	18.68	300	..
6. கைக்கடிகாரம் தயாரிக்கும் திட்டம்.	கடிகாரங்கள் ஆண்டொன்றுக்கு 20 இலட்சம்.	3,50,00.00	350.00	0.68	1.00	25.00	1,200	..
7. 2-எதில் அக்ஸனால் திட்டம்.	2-எதில் அக்ஸனால் ஆண்டொன்றுக்கு 1,000 டன்.	1,300.00	180.00	0.30	15.00	25.00	500	..
8. அமோனியம் நைட்ரேட் அன்டு நைட்ரிக் அமிடு திட்டம்.	அம்மோனியம் நைட்ரேட் ஆண்டொன்றுக்கு 24,000 டன்-நைட்ரிக் அமிடு (ஆடர் கடைசளாக்கப்பட்டது) ஆண்டொன்றுக்கு 24,000 டன்.	1,100.00	184.00	..	20.00	50.00	200	..
9. ப்ரோபைலின் அடிப்படையிலான இரசாயனப் பொருள்திட்டம்.	ஐசோப்ரோபைல் ஆல்கஹால் ஆண்டொன்றுக்கு 10,000 டன், ப்ரோபைலின் ஆக்சைடு ஆண்டொன்றுக்கு 10,000 டன்—ப்ரோபைலின் கிளைகோல்ப்லோயிலஸ் ஆண்டொன்றுக்கு 12,500 டன்.	2,300.00	253.00	..	..	2.00	650	..
10. ஏனைய திட்டங்கள் (6-வது பத்தியில் உள்ள இலக்கங்கள் தமிழ்நாடு ரப்பர் நிறுவனம் தமிழ்நாடு, இன்டர் நேஷனல் எலட்ரானிக் நிறுவனம், முதலியன உள்ளிட்டவையாகும்.)	..	..	..	54.72	3.25	30.00	..	..
	மொத்தம் ..	33,996.55	3,575.60	2,226.75	617.39	425.42	132.31	..

*இத்திட்டங்கள் பின்தங்கிய பகுதிகளில் உள்ளன.

1981-82 திருத்த மதிப்பீடு, 1982-83 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு ஆகியவற்றின்படி நிதி ஆதாரங்களும் நிதி செலவிடப் பட்டமையும் குறித்த விவர அறிக்கை.

விவரங்கள்.	1981-82 திருத்த மதிப்பீடு.	1982-83 வரவு-செலவுத்திட்ட மதிப்பீடு.
(1)	(2)	(3)
	(ரூபாய் இலட்சத்தில்.)	
நிதி ஆதாரங்கள்—		
ஏப்ரல் 1 ஆம் நாள் நிலவரப்படி தொடக்க இருப்பு (குறுகிய கால நிகர முதலீடுகள் உள்பட)	313.82	8.67
அரசிடமிருந்து மூலதனப் பங்குத்தொகை.	500.00	700.00
அரசிடமிருந்து கடன் ..	.. 90.00	..
உத்தரவாதக் கடனீட்டுப் பத்திரங்களின் உயர்வு.	82.50	100.00
தமிழ்நாடு சிமெண்ட் கழகம் குறுகிய காலம் கடனைச் திருப்பிச் செலுத்தியது.	150.00	100.00
நிறுவனத்திற்குள்ளேயே திரட்டப்பட்டமை நடைமுறை மூலதனத்தில் குறைவு.	110.00	12.00
	1,246.32	920.67
நிதிகள் பயன்படுத்தப்பட்டமை—		
பதிவு அலுவலகம்-நிலைச் சொத்துக்களில் சேர்க்கப் பட்டமை.	2.50	2.00
பொதுத் துறை நிறுவனங்களுக்குக் கொடுத்துள்ள தொகை.	262.00	460.00
கூட்டுத்துறை நிறுவனங்களுக்கு கொடுத்துள்ள தொகை.	617.39	425.42
	881.89	887.42

அரசுக்கு வழிவகை முன்பணம் திருப்பிக் கொடுக்கப்பட்டமை.	300.00	..
அரசுக்கு கடன் திருப்பிக் கொடுக்கப்பட்டமை.	5·26	5·26
குறித்த கால வைப்பீடுகள் (நிகரம்) திருப்பிக் கொடுக்கப் பட்டமை.	50.00	20.00
தள்ளிவைக்கப்பட்ட அன்னிய கடன் திருப்பிக் கொடுக்கப் பட்டமை.	0.50	..
மார்ச் 31 ஆம் நாள் நிலவரப் படி இறுதி இருப்பு.	8.67	7.99
	1,246.32	920.67

தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம்.

பொது :

1.1. தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனமானது தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தினரால் (டிட்கோ) அதனுடைய முழுதும் உடைமை ஆக்கப்பட்ட ஒரு கிளையாக 1976 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11 ஆம் தேதி பதிவு செய்யப்பட்டது.

1.2. அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனமாகப் பத்துக்கோடி ரூபாய்களுடன் துவங்கப்பட்ட இக்கம்பெனியின் பங்கு மூலதனம் 1977 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் பதினோரு கோடிக்கு உயர்த்தப்பட்டது. மேலும் 1980 ஆம் ஆண்டு சனவரியில் பன்னிரண்டரைக் கோடிக்கு அதிகரிக்கப்பட்டது. இந்தப் பங்கு மூலதனத்தில் ரூ. 11·81 கோடிகள் இது வரையில் மூலதனமாகச் செலுத்தப்பட்டுவிட்டன.

1.3. தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் தன்னுடைய வாணிபத்தை 1-4-1976 முதல் செயல்படுத்தத் தொடங்கியது. இக் கம்பெனியின் முக்கிய நோக்கம் சிமெண்டைத் தயாரித்தல், அதனை விற்பனை செய்தல் மற்றும், சுண்ணாம்பு சுண்ணாம்

புக்கல் கிளிஞ்சல் சிமெண்ட் ஆஸ்பெஸ்டாஸ் மற்றும் அது சம்பந்தப்பட்ட சிமெண்ட்டு தயாரிப்பதற்குத் தேவையான வேறுவகைப் பொருட்களில் ஈடுபட்டு வருதலுமாகும். இக்கம்பெனி நிறைவேற்றிவரும் நோக்கங்கள் பின்கண்டவாறு விவரிக்கப்பட்டுள்ளன :—

2. இந்த ஆண்டின்போது வாணிப உற்பத்தி துவக்கப்பட்ட ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட்டு ஷீட் ஆலை உள்ளடங்கலாகத் தற்போது பின்வரும் மூன்று ஆலைகள் தமிழ்நாடு சிமெண்டு நிறுவனத்தால் நடத்தப்பட்டு வருகின்றன.

	உற்பத்திப் பொருள்.	ஆண்டொன்றுக்கு அமைக்கப்பட்ட திறன்.
(1) சிமெண்ட்டு ஆலைகள்—		
1. ஆலங்குளம் சிமெண்ட்டு ஆலை.	சிமெண்ட்டு	4 லட்சம் டன்கள்.
2 அரியலூர். சிமெண்ட்டு ஆலை.	சிமெண்ட்டு	5 லட்சம் டன்கள்.
(2) ஆஸ்பெஸ்டாஸ் ஆலை—		
1. தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ்.	ஆஸ்பெஸ்டாஸ் ஷீட்டுகள் மற்றும் துணைப் பொருள்கள்.	36, 000 டன்கள்.

2.1. இவற்றோடு, தமிழ்நாடு சிமெண்டு நிறுவனம் தூத்துக்குடி மற்றும் பாண்டிச்சேரி துறைமுகங்களில் இறக்குமதி செய்யப்பட்ட சிமெண்டைக் கையாண்டு வருகின்றது.

2.2. தமிழ்நாடு சிமெண்டு நிறுவனம் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆலங்குளத்தில் உள்ள சிமெண்டு ஆலையை நவீனப்படுத்துதல் மற்றும் அதன் மேம்பாட்டுத் திட்டத்தையும் நிறைவேற்றிவருகிறது.

2.3. மேலே கூறப்பட்ட திட்டங்களைத் தவிர, தமிழ்நாடு சிமெண்ட்டு நிறுவனம் பின்வரும் திட்டங்களையும் மேற்கொள்ள உத்தேசித்து உள்ளது :—

(1) மதுரை மாவட்டத்திலுள்ள பாளையத்தில் பெரிய ஒரு சிமெண்ட்டு ஆலைத் திட்டம்.

(2) ஆஸ்பெஸ்டாஸ் அழுத்தக் குழாய்கள் திட்டம்.

3. ஆலங்குளம் சிமெண்டுத் தொழிற்சாலை:—

3.1. ஆலங்குளம் சிமெண்ட்டு தொழிற்சாலையானது 1964 ஆம் ஆண்டின்போது அப்போதைய தமிழ்நாட்டு அரசாங்கத்தின் தொழில் துறையில் தொடங்கப்பட்டது. இந்த ஆலையானது 1970 ஆம் ஆண்டின்போது வாணிப உற்பத்தியில் ஈடுபட்டது. இந்த ஆலை ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் டன்கள் சிமெண்ட்டு உற்பத்தி செய்யும் திறனுடையது. தமிழ்நாடு சிமெண்ட்டு நிறுவனம் இந்த ஆலையை டிட்கோவிடமிருந்து 1–4–1979 அன்று ரூ. 666 இலட்சம் நிகரக் கணக்கு மதிப்புக்கு எடுத்துக் கொண்டது. இப்போது ஆலங்குளம் ஆலை தனது 12 ஆண்டு பணியை நிறைவு செய்துள்ளது.

3.2. நடைமுறையில் செயற்படுத்தப்படுவதிலிருந்து, பல் வேறுபட்ட காரணங்களின் நிமித்தம், ஆலங்குளம் சிமெண்ட்டு ஆலை திட்டமிட்டபடி தன் உற்பத்தியை எட்ட முடியவில்லை. மேலும், இந்த ஆலைக்காக நிர்ணயிக்கப்பட்ட இருத்தி வைப்பு விலையும் கூட போதுமானதாக இல்லை. இதன் விளைவாக, ஆரம்ப இரண்டு ஆண்டுகளில் ஈட்டிய சொற்ப இலாபத்தைத் தவிர, இத்தொழிற்சாலை தொடர்ந்து இழப்பில் இருந்திருக்கிறது. இந்த ஆலையின் சம்பந்தமான உற்பத்தி மற்றும் விற்பனை விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

ஆண்டு. (1)	ஆண்டின்போது உற்பத்தி. (2)	ஆண்டின்போது விற்பனை. (3)
	(எண்ணிக்கை மெட்ரிக் டன்னில்.)	
1970–71	89,621	80,837
1971–72	3,06,093	3,08,063
1972–73	2,93,525	2,98,581
1973–74	2,80,382	2,78,980
1974–75	2,00,070	2,02,264
1975–76	2,62,729	2,58,032
1976–77	3,38,445	3,33,294
1977–78	3,09,105	3,01,067

1978–79	..	..	3,19,277	3,20,379
1979–80	..	..	2,74,400	2,77,655
1980–81	..	..	3,01,148	3,06,614

3.3. நாடளாவிய நிலக்கரிப் பற்றாக்குறை, மின்சாரத்தின் மீதான உயர்ந்தபட்சத் தேவையிலான தடை, உடர் மின்சக்தி நுகர்பவர்கள் மீது கொண்டுவரப்பட்ட மின்வெட்டு, ரெயில்வே வண்டிகளில் குறைவிநியோகம் ஆகியவையே இந்தத் தொழிற்சாலையின் தாழ்மட்ட உற்பத்திக்குப் பெரும் புறக் கட்டுப்பாடுகளாக இருக்கின்றன. நிறுவனத்தினால் எடுக்கப்பட்டுள்ள தொடர் முயற்சிகளின் விளைவாக, 1981 ஜூலை முதல் நிலக்கரி விநியோகம் முன்னேற்றமடைந்துள்ளது.

3.4. 1981–82 என்னும் நடப்பு ஆண்டின்போது ஆலங்குளம் சிமெண்ட்டு ஆலையானது 3,11,200 மெட்ரிக் டன்கள் சிமெண்ட்டு உற்பத்தி செய்வதற்குத் திட்டமிட்டுள்ளது. முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது நடப்பு ஆண்டின் உற்பத்தி 10,000 மெட்ரிக் டன்கள் வரை அதிகமாக இருக்கும். நடப்பு ஆண்டின் முதல் காலாண்டின்போது ஏற்பட்ட பற்றாக்குறை இல்லாது இருந்திருக்குமானால், சிமெண்டு உற்பத்தி இன்னும் அதிகமாக இருந்திருக்கும். இந்த ஆலை 1982–83 ஆம் ஆண்டின்போது 3,65,000 மெட்ரிக் டன்களை உற்பத்தி செய்யத் திட்டமிட்டுள்ளது.

3.5. இந்தப் பிரிவானது பிற்படுத்தப்பட்ட பகுதியில் 1,637 ஆட்களுக்கு நேரடி வேலை நியமனத்துக்கு வகைசெய்து கொண்டிருக்கிறது. மேலும், கச்சாப் பொருள்கள், உற்பத்தி செய்யப்பட்ட சரக்குகள் முதலியவற்றை ஏற்றிச் செல்வதற்கான நேரடியில்லாத வேலை நியமனத்துக்கும் பெருமளவில் வகைசெய்து கொண்டிருக்கிறது.

4. அரியலூர் சிமெண்ட்டு ஆலை :

4.1. அரியலூர் சிமெண்ட்டு தொழிற்சாலையானது உலர் செய்முறை ஆலை (Lay Proces Plans) ஆகும். அது 2,876 இலட்சம் ரூபாய் மொத்தச் செலவில் டிட்கோவால் ஆதியில் துவங்கப்பெற்றதாகும். அது ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் டன்கள் நிறுவன உற்பத்தித் திறனுக்காக ஏற்படுத்தப்பட்டது. அந்தத் திட்டமானது, டிட்கோவிலிருந்து சம பங்களிப்புத் தொகையாக (Equity Contribution) ரூ. 575 இலட்சமும்

அனைத்து இந்திய நிதி நிறுவனங்களிடமிருந்து கடன நிதி உதவியாக ரூ. 1,800 இலட்சமும் ஐந்து வணிக வங்கியிடமிருந்து ரூ. 501 இலட்சமும் பெற்றுத் துவக்கப்பட்டதாகும். தமிழ்நாடு சிமெண்ட்டு தொடங்கப்பட்டதன் விளைவாக அரியலூர் சிமெண்ட்டு ஆலைத் திட்டமானது செயற்படுத்தப்பட்டது.

4.2. அந்தத் திட்டப்பணி அரியலூரில் 1977 ஆம் ஆண்டு சனவரியில் தொடங்கப்பட்டது. சிமெண்ட்டு உற்பத்தியானது 1–8–1979 இல் தொடங்கப்பட்டது. அரியலூர் சிமெண்ட்டு பணியானது குறிப்பிட்ட காலத்தில் அரைமில்லியன் டன் திட்டத்தினை நிறைவு செய்ததோடு அல்லாமல் அந்த ஆலைக்கு அடிக்கல் நாட்டி 30 மாதங்களுக்குள் வாணிக உற்பத்தியையும் தொடங்கிவிட்டது.

4.3. 1980–81 ஆம் ஆண்டின்போது இந்தத் தொழிற்சாலை 2,46,733 டன்கள் சிமெண்டு உற்பத்தி செய்தது. இந்த ஆலை செயல்படத் தொடங்கிய முதலாண்டின்போது புறக்கட்டுப்பாடுகளான நிலக்கரிப் பற்றாக்குறை, மின்சக்தியைப் பயன்படுத்துவதிலான தடைகள், நிலக்கரியைக் கொண்டு வருவதற்கும் சிமெண்டைக் கொண்டு செல்வதற்குமான இரயில்வே வண்டிகளின் பற்றாக்குறைகள் முதலியவற்றுடன் இயந்திர இயக்கங்களின் கோளாறுகளையும் சமாளிக்க வேண்டியதாயிற்று. அந்த இயந்திர இயக்கங்களின் கோளாறுகள் ஏறத்தாழ சரி செய்யப்பட்டுவிட்டன. புறக்கட்டுப்பாடுகளைச் சமாளிப்பதற்கும், தொடர் முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. இப்போது, நிலக்கரி விநியோக நிலைமை 1981ஆம் ஆண்டு ஜூலை மாதத்திலிருந்து மேம்பாடுற்றுள்ளது.

4·4. நடப்பு ஆண்டான 1981 82-இல் அரியலூர் சிமெண்ட்டு ஆலை 3,05,000 மெட்ரிக் டன்கள் சிமெண்டை உற்பத்தி செய்யத் திட்டமிட்டுள்ளது. நடப்பு ஆண்டின்போதுதான் உற்பத்தியை முந்திய ஆண்டோடு ஒப்பிடுகையில், 58,000 மெட்ரிக் டன்களுக்கும் அதிகமாக இருக்கும். 1982–83 ஆம் ஆண்டின்போது 4·5 இலட்சம் டன்கள் சிமெண்டை உற்பத்தி செய்யத் திட்டமிட்டுள்ளது. அது ஆலையின் உற்பத்தித்திறன் விகிதத்தில் 90 சதவீதமாகும்.

4·5. இந்த ஆலையானது 907 ஆட்களுக்கு நேரடி வேலை நியமனத்துக்கு வகை செய்துள்ளது; மேலும் கச்சாப் பொருள்களையும், உற்பத்தி செய்யப்பட்ட சரக்குகளையும் கொண்டு செல்வதற்கெனப் பெருமளவில் நேரடியில்லாத வேலை நியமனங்களையும் அளிக்க வகை செய்துள்ளது.

தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ் :

5·1. பல்வகைப் படுத்தும் பொருட்டு முதற்படியாக தமிழ் நாடு சிமெண்ட்டு அனைத்து இந்திய நிதி நிறுவனங்களின் நிதி உதவியுடன் ஆண்டு ஒன்றுக்கு 36,000 டன்கள் அளவு ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட்டு தகடுகளை உற்பத்தி செய்வதற்கு ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட்டு ஷீட் திட்டத்தினை அமைத்துள்ளது. இந்த ஆலை ரூ. 250 இலட்சம் செலவில் ஆலங்குளம் சிமெண்ட்டு ஆலைப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆலை அதன் வாணிப உற்பத்தியை 1—10—1981-ல் தொடங்கிற்று.

5·2. நடப்பு ஆண்டின்போது, தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ் 9,200 மெட்ரிக் டன்கள் ஆஸ்பெஸ்டாஸ் தகடுகளையும் துணைப் பொருட்களையும் உற்பத்தி செய்யத் திட்டமிட்டுள்ளது. 1982-83 ஆம் ஆண்டின்போது ஆஸ்பெஸ்டாஸ் தகடுகள் மற்றும் அதன் துணைப் பொருட்களின் உற்பத்தி சுமார் 27,000 மெட்ரிக் டன்களாக இருக்கும்.

5·3. இந்த ஆலை 203 ஆட்களுக்கு நேரடி வேலை நியமனத்துக்கு வகை செய்துள்ளது; மேலும் கச்சாப் பொருள்களையும், உற்பத்தி செய்யப்பட்ட சரக்குகளையும் அது போல் பிறவற்றையும் கொண்டு செல்வதற்கெனப் பெருமளவில் நேரடியில்லாத வேலை நியமனங்களையும் அளிக்க வகை செய்துள்ளது.

6. இறக்குமதி செய்யப்பட்ட சிமெண்டைக் கையாளுதல் :

31—3—1981-ல் முடிவடையும் ஆண்டின்போது, தமிழ்நாடு சிமெண்ட்டு நிறுவனம் சென்னைத் துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்பட்ட 2,84,887 மெட்ரிக் டன்கள் சிமெண்டையும், தூத்துக்குடி துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்பட்ட 2,29,976 மெட்ரிக் டன்கள் சிமெண்டையும் கையாண்டுள்ளது. தமிழ்நாடு சிமெண்ட்டு நிறுவனம் இதனுடன் தொடர்புடைய அனைவருடைய தேவைகளையும் திருப்திகரமான வகையில் கையாண்டுள்ளது நடப்பு ஆண்டின்போது தமிழ்நாடு சிமெண்ட்டு நிறுவனம் இறக்குமதி செய்யப்பட்ட சுமார் 3,40,000 மெட்ரிக் டன்கள் சிமெண்டைக் கையாளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

7. ஆலங்குளம் ஆலையின் மேம்பாட்டுத் திட்டமும் நவீனப் படுத்தும் திட்டமும் :

ஆலங்குளத்திலுள்ள ''எலக்ட்ரோ—ஸ்டேடிக் ப்ரசிபிடேட்டர்ஸ்'' மற்றும் வேறு ''சமப்படுத்தும் கருவிகளை'' பொருத்தும் பணி அமைப்பானது முன்னேறிக் கொண்டிருக்கிறது. இந்தத்

திட்டத்தின் முதல் கட்டத் திட்டமானது நிறைவு செய்யப்பட்டு உள்ளது. இதன்படி சுழல் பேக்கர் மற்றும் சிமெண்ட்டு ஆலை இ.எஸ்.பி. பொருத்தப்பட்டுள்ளது. சூட்டடுப்புகளின் (Kiln) இ. எஸ். பி. அமைப்புக்களும் மற்றும் தொடர்பான பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளது. இந்தத் திட்டத்தை எல்லா வகையிலும் 1982 ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் வாக்கில் நிறைவு செய்ய முடியும்

7·2. இந்தத் திட்டத்தைச் செயற்படுத்துவதானது ஆலங்குளம் சிமெண்ட்டு ஆலைப் பகுதியில் காற்று அசுத்தத்தைக் குறைப்பதுடன் சிமெண்ட்டு உற்பத்தியின் அளவினைப் கூட்டுவதற்கும் உதவும். இந்தத் திட்டம் நிறைவடைகிற காலத்தில் ஆலங்குளம் சிமெண்ட்டு ஆலை ஆணடுக்கு 4·5 இலட்சம் டன்கள் சிமெண்ட்டு உற்பத்தியின் அளவினை எட்டும்.

8. பாளையம் சிமெண்ட்டு திட்டம்:

8·1. தமிழ்நாடு அரசாங்கமானது எண். 50896/எம்.ஐ.இ 11/80 தேதியிடப்பட்ட கடிதத்தில் மதுரைப் மாவட்டப் பகுதியிலுள்ள பாளையத்தில் ஆண்டொன்றுக்கு நான்கு இலட்சம் டன்கள் திறனுடைய ஆலை ஒன்றினை அமைப்பதற்கான தம் ஒத்திசைவினைத் தெரிவித்துள்ளது. தமிழ்நாடு சிமெண்ட்டு நிறுவனம் தனக்கு வேண்டுதலுக்கான இசைவாணையை (Letter of Intent) வழங்குவதற்காக இந்திய அரசாங்கத்துக்கு விண்ணப்பத்தை அனுப்பியுள்ளது.

8.2. ஆயினும், இந்திய அரசாங்கமானது தமது ஆர். 1719/(80–81) ஐ. எல். 23—3—1981 தேதியிடப்பட்ட கடிதத்தில் இரயில்வே அமைச்சகம் தமிழ்நாடு சிமெண்டு நிறுவனத்தின் விண்ணப்பத்தை போக்குவரத்து நிலையில் இருந்து 'அனுமதிக்கவில்லை என்று தெரிவித்தது எனினும் விவரங்களை எடுத்து உரைத்த பின்பு, தென் இரயில்வே வாரியத்திற்கு அனுப்பிய தமது கடிதத்தில், கரூரிலிருந்து திண்டுக்கல் வரையில் உத்தேசிக்கப்பட்ட புதிய பிராட்கேஜ் (அகன்ற இருப்புப்பாதை) தடத்தின் வழியாக, பாளையத்தில் அமைக்கப்படவிருக்கும் புதிய சிமெண்ட்டு ஆலைக்காக எதிர்ப்பார்க்கப்பட்ட கூடுதல் போக்குவரத்தினைக் கையாளுவதற்கு கஷ்டம் எதுவும் இருக்காது என்று அறிவித்தது.

8.3. எவ்வாறாயினும், இந்திய அரசாங்கம் 16–10–1981 தேதியிடப்பட்ட தமது கடிதத்தில், நிலக்கரி துறையானது, உத்தேசிக்கப்பட்ட சிமெண்ட்டு ஆலையின் தேவைக்கு வழங்குவதற்கான நிலக்கரி கிடைப்பதின்பேரிலான தடைகள் 1989–1990 வரை தொடர்ந்திருக்கும் என்று சுட்டிக் காட்டியுள்ளதனால்,

ஏற்கனவே தெரிவிக்கப்பட்ட தமது முடிவினை மறு ஆய்வு செய்ய இயலாமல் உள்ளது என்று தெரிவித்தது. தமிழ்நாடு அரசு, இந்திய அரசாங்கத்திடம் அவர்களது முந்திய முடிவினை மறு பரிசீலனை செய்யுமாறும், பாளையத்தின் அருகில் புதிய சிமெண்ட்டு ஆலை ஒன்றினை அமைப்பதற்கான இசைவாணையை வழங்குமாறும் இந்த விஷயத்தை வலியுறுத்தியுள்ளது.

8·4. இந்திய அரசாங்கத்திடம் இருந்துவரும் ''வேண்டுதலுக்கான இசைவாணையை'' பெறுவதற்கு உட்பட்டு, இந்தத் திட்டமானது 1982–1983 ஆம் ஆண்டின்போது செயலுக்கு எடுக்கப்பட முடியும் என்றும் 3 முதல் 4 ஆண்டு காலத்தில் நிறைவு செய்யப்பட முடியும் என்றும் எதிர்ப்பார்க்கப்படுகிறது. இந்தத் திட்டத்துக்கு ரூ. 32 கோடி துல்லியமாக செலவாகும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது; மேலும் செயல்படுத்தப்படும் போது சுமார் 1,000 பேர்களுக்கு வேலை நியமனத்துக்கு வகை செய்வதுடன் கணிசமான அளவில் நேரடியல்லாத வேலை நியமனத்துக்கும் வகை செய்வதாய் இருக்கும் என்றும் எதிர்ப்பார்க்கபடுகிறது.

9. ஆஸ்பெஸ்டாஸ் அழுத்தக் குழாய்கள் திட்டம் :

ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்டு ஸீட் திட்டத்தினை வெற்றிகரமாக செயற்படுத்தியதன் மூலம் ஊக்கம் அளிக்கப்பட்டு ஆண்டொன்றுக்கு 36,000 டன்கள் திறனுள்ள ஆஸ்பெஸ்டாஸ் அழுத்தக் குழாய்கள் திட்டத்தை அமைப்பதற்கு உத்தேசிக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்திற்குத் துல்லியமாக ரூ. 750 இலட்சம் செலவாகும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. இது சம்பந்தமாக, தமிழ்நாடு சிமெண்ட்டு நிறுவனம் இந்திய அரசாங்கத்திடமிருந்து அவசியமான வேண்டுதலுக்கான இந்திய இசைவாணையைப் பெற்று உள்ளது. இந்தத் திட்டத்தின் மீதான பணி விரைவில் தொடங்கப்படும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. இந்தத் திட்டம் துவங்கப்பட்டு 30 மாதங்களில் நிறைவு செய்யப்பட இயலும், இந்தத்திட்டம் செயற்படுத்தப்படும்போது, ஏறக்குறைய 300ஆட்களுக்கான நேரடி வேலை நியமனங்களுக்கு வகை செய்வதுடன் மட்டுமின்றி அதிக அளவில் நேரடியில்லாத வேலை நியமனங்களுக்கும் வகை செய்ய முடியும்.

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம்.
(சிப்காட்).

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) 1971 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 25 ஆம் தேதி முதல் தமிழக அரசிற்கே முழுவதும் சொந்தமாக வரையறுக்கப்பட்ட பொது நிறுவனமாக துவங்கப்பட்டு, தமிழகத்தில் பெரிய மற்றும் நடுத்தர

தொழில் வளர்ச்சிக்கான பணியினை தனது முக்கிய குறிக்கோளாகக் கொண்டு இந்த நிறுவனம் 1972 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 4 ஆம் தேதி முதல் செய்யப்பட்டு வருகிறது. இந்நிறுவனம் துவங்கி கடந்த 10 ஆண்டுகளில் தமிழகத்தில் பெரிய மற்றும் நடுத்தர தொழில்களின் வளர்ச்சிக்கும், விரிவாக்கத்திற்கும் ஒரு தூண்டுகோலாகவும், இம்மாநிலத்தில் பின்தங்கிய மற்றும் தொழில் வளர்ச்சியடையாத பகுதிகளில் விரைந்து தொழில் மயமாக்கும் நிறுவனமாகவும் செயல்பட்டு வருகிறது. 1981 ஆம் வருடம் டிசம்பர் திங்கள் 31 ஆம் தேதிவரை இந்நிறுவனம் பல்வேறு திட்டங்களின்கிழ் மொத்தம் ரூபாய் 8,651 இலட்சம் உதவித் தொகையாக வழங்க ஒப்புதல் அளித்துள்ளதுடன், இதன் மூலம் 53,000 பேருக்கு மேல் மொத்த நேரடி வேலைவாய்ப்புக்கு வகை செய்துள்ளது. சிப்காட் நிறுவனம் தொழில் வளர்ச்சிக்கும், அதற்குரிய நிதியுதவிக்கும் கீழ்க்கண்ட திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

1. தொழில் முனைவோர்கள் பயனடையும் வகையில் ஊக்கச் சலுகைத் திட்டங்களைச் செயல்படுத்துதல்.

2. இம்மாநிலத்தின் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டங்களின் தொழில் வளர்ச்சிக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களிலுள்ள தொழில் பகுதிகளை மேம்படுத்தி நிலங்களை வழங்குவது.

3. இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் மறுநிதி வழங்கும் திட்டத்தின்கீழ் நடுத்தர மற்றும் பெரிய தொழில்களுக்கு நிதி உதவி அளிப்பது.

4. தொழில் முனைவோர்களுக்கு பல்வேறு துணையுதவிப் பணிகள் செய்தல்.

முதல் பத்தாண்டுகளில் தமிழகத்தில் தொழில் வளர்ச்சியினை துரிதப்படுத்த சிப்காட் தமிழக அரசின் உதவியுடன் பல்வேறு புதிய முறைகளைக் கையாண்டது. சிப்காட், இந்தியத் தொழில் வளர்ச்சி நிறுவனத்தினரால் மறுநிதி உதவித் திட்டத்தின்கீழ் 1976 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் அங்கீகரிக்கப்பட்டதால் இந்நிறுவனத்தின் தவணைக் கடன் திட்டம் மாபெரும் வளர்ச்சியினைக் கண்டது.

தவணைக் கடன் ஒப்புதல் அளிக்கும் வகையில் 1979–80 ஆம் ஆண்டில் மாதம் ரூபாய் 50 இலட்சமாக இருந்தது. இதே வகையில் கடந்த இரண்டு ஆண்டுகளில் இந்தத் தொகை மாதம் ரூபாய் 150 இலட்சமாக உயர்ந்துள்ளது. 1979–80 ஆம் ஆண்டில் வழங்கிய தவணைக் கடன் ரூபாய் 296 இலட்சமாகும். 1980–81 ஆம் ஆண்டில் வழங்கிய தவணைக் கடன் முந்தைய

ஆண்டைவிட இரண்டு மடங்குக்கு மேலாக 786.52 இலட்சமாக உயர்ந்துள்ளது. தவணைக் கடனுக்கு ஒப்புதல் அளித்து வழங்கும் வகையில் படிப்படியான முன்னேற்றத்தை அடைந்து வருவதற்கு மேற்கூறிய புள்ளி விவரங்களே சிறந்த சான்றாகும். தவிர, 1981–82 ஆம் ஆண்டில் தவணைக் கடன் வழங்குவதில் சாதனை ஏற்படுத்தும் நோக்கத்துடன் சுமார் ரூபாய் 1,500 இலட்சம் வரை வழங்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. 1979–80 ஆம் ஆண்டுகளில், 27 நடுத்தர மற்றும் பெரிய தொழில்கள் ரூபாய் 580.50 இலட்சம் தவணைக் கடனாகப் பெற்றது. ஆனால் 1980–81 ஆம் ஆண்டுகளில் 57 தொழில் நிறுவனங்கள் ரூபாய் 1,958.10 இலட்சத்தை இத்திட்டத்தின்கீழ் பெற்றது. இந்த நிதியாண்டில் வழங்கவிருக்கும் தொகை மேலும் உயர்வடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏனெனில், 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாளுக்குள்ளாகவே 38 தொழில் நிறுவனங்களுக்கு ரூபாய் 1,410·75 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

மத்திய மற்றும் மாநில அரசுகளால் அறிவிக்கப்பட்ட ஊக்கத் திட்டங்களான மத்திய மானியம் மற்றும் வட்டியில்லா விற்பனை வரிக்கடன், இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் மறு முதலீட்டுத் திட்டத்தின்கீழ் அறிவிக்கப்பட்ட பின்தங்கிய பகுதிகளுக்கான சலுகைகளும் சிப்காட் நிறுவனத்தினரால் பின்தங்கிய பகுதிகளில் தொழில் வளர்ச்சிக்காக முழுவதுமாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

உண்மையிலேயே சிப்காட் நிறுவனம் தொடங்கிய நாள் முதல் ஒப்புதல் அளித்து வழங்கிய உதவி தொகைகளில் 85 விழுக்காட்டிற்கு மேலாக பின்தங்கிய மாவட்டங்களில் தொடங்கப் பெற்ற தொழில் நிறுவனங்களுக்கே வழங்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் நிலையான முதலீட்டின் மீது வழங்கப்படுகின்ற மானியத்தைப் பெறுவதில் மற்ற மாநிலங்களை விட தமிழ்நாடே தொடர்ந்து முன்னிலை வகித்து வருகின்றது. சிப்காட் நிறுவனம் மத்திய அரசிடமிருந்து மாநில அரசிற்கு இம்மானியத்தைப் பெற்றுத் தரும் அதிகார பூர்வமான பொறுப்பைத் திறம்பட செயல்படுத்துவதே இந்நிலைமைக்கு முக்கிய காரணமாகும்.

இராணிப்பேட்டை, மற்றும் ஒசூர் தொழில் இணையங்களில் கிடைத்த வெற்றியின் ஊக்கத்தில் சிப்காட் புதிய 5 தொழில் இணையங்களை கும்முடிப்பூண்டி, தூத்துக்குடி, கடலூர், புதுக்கோட்டை மற்றும் மானாமதுரையில் நிறுவுவதற்கு இப்பொழுது முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. புதுக்கோட்டை மற்றும் மானாமதுரையில் உள்ள தொழில் இணையங்களில் ஏற்கனவே நிலம் ஒதுக்கும் பணிகளை ஆரம்பித்தாகிவிட்டது. மேலும் கும்முடிப்பூண்டி, கடலூர், தூத்துக்குடி ஆகிய தொழில் இணையங்களில் நிலங்களை கையகப்படுத்தும் பணியினை மிக விரைவில் ஏற்று செயல்படுத்த இருக்கிறது. 1981 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 3 ஆம் நாள் தமிழக அரசால் அறிவிக்கப்பட்ட, தளர்த்

தப்பட்ட ஊக்கச் சலுகை முனைப்பு திட்டங்கள், அறிமுகப்படுத்தப்பட்ட கவரக்கூடிய உதவித்தொகை திட்டங்களினால் சிப்காட் வருகிற ஆண்டுகளில் தன்னுடைய திட்டங்களை பல மடங்காக அதிகரிக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த ஆண்டு முதல் இரண்டு புதிய திட்டங்களின்கீழ் சிப்காட் நிறுவனம் நலிவுற்ற தொழில் நிறுவனங்களை, இந்திய மறு கட்டுமான நிறுவனத்தின் (IRCI) ஐ ஊக்க உதவியுடன் மறுமலர்ச்சி செய்யவும், அயல் நாடுகளில் உள்ள இந்தியர்கள் தங்களது சேமிப்பை தமிழகத்தில் உள்ள தொழில் அமைப்புகளில் முதலீடு செய்யவும் தக்க பணிகளை ஏற்று நடத்தி வருகிறது.

சிப்காட் நிறுவனம் தன்னுடைய ஆரம்ப காலத்திலிருந்து ஆற்றிய பல்வேறு முக்கிய பணிகளும் 1982–83 ஆம் ஆண்டில் மேற்கொள்ளவிருக்கும் பல்வேறு பணிகளும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது :—

3. சிப்காட் செயல்படுத்தி வரும் பல்வேறு உதவித் திட்டங்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(அ) ஊக்க சலுகை முனைப்புத் திட்டம்.—தொழில் தொடங்கும் ஆய்வுக்கு உதவித் தொகை ஆதாயமளிக்கும், தொழில் திட்டங்களைக் கண்டறிவதற்கான வாய்ப்புக் கூறுகள் பற்றிய ஆய்வுகளை, சிப்காட் தொழில் முனைவோர்களுக்குச் சலுகை விலையில் அளிக்கிறது.

1981 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 31 ஆம் நாள் வரையில் 41 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு இவற்றில் 30 அறிக்கைகள் தொழில் முனைவோருக்கு வழங்கப்பட்டன. 1980–81 (டிசம்பர் 1981 வரை) ஆண்டுகளில்தான் முன் முதலீட்டு ஆய்வுகள் தொடங்கப்பட்டன. மேற்கண்ட ஆய்வுக்காக 1981–82 ஆம் ஆண்டில் ரூபாய் 2.50 இலட்சம் வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஆ) வட்டியில்லா விற்பனை வரிக் கடன்.—ஊக்கச் சலுகை தீவிரத் திட்டத்தின் முக்கிய அங்கமாய் வட்டியில்லா விற்பனை வரிக் கடனை மாநில அரசின் சார்பில் சிப்காட் நிறுவனம் வழங்கி வருகிறது. இம் மாநிலத்தின் பின்தங்கிய 9 மாவட்டங்கள் ஏதாவது ஒன்றிலும் செங்கற்பட்டு மாவட்டத்தில் மறைமலை நகர் தொழில் இணையத்திலும், மற்றும் குன்னத்தூர் வட்டாரத்திலும் (ஒரு இலட்சமும் அதற்கு மேலேயும் மக்கள் தொகை உள்ள நகரங்கள் மற்றும் மதுரை, திருச்சிராப்பள்ளி, நகர்ப் பகுதி தவிர) தொடங்க இருக்கும் நடுத்தர அல்லது பெரிய தொழில் நிறுவனங்களுக்கு இத் திட்டத்தின் கீழ்கடன்கள் வழங்கப்படும்.

இத் திட்டம் 1981 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 3 ஆம் தேதியிலிருந்து சுலபமாக்கப்பட்ட இரு பகுதிகளைக் கொண்டதாகும். முதல் பகுதியின் திருத்தி அமைக்கப்பட்ட திட்டத்தின் கீழ் தற்போது செயல்படும் தொழில் நிறுவனம் கணிசமான அளவுக்கு தொழிலை விரிவுபடுத்தும்போதோ, வேறு பிரிவுகளாகப் பெருக்கும்போதோ, இச் சலுகை கிடைக்கும். அத் தொழிற்சாலைகள் கடன் கோரி விண்ணப்பம் செய்து கொள்ளும் ஆண்டுக்கு முந்திய மூன்றாண்டுகளுக்குச் செலுத்திய விற்பனை வரித் தொகை அளவுக்கோ விரிவுபடுத்தப்படும், அல்லது பல பிரிவுகளாகப் பெருக்கப்படும். திட்டத்தில் நிலையான இருப்பு களில் 25 சதவீதத்துக்கோ அல்லது ரூபாய் 50 இலட்சத்துக்கோ நடுத்தர, பெரிய தொழில்களுக்கும், சிறிய தொழிலிலிருந்து நடுத்தர தொழிலாக விரிவுபடுத்தும் போது ரூபாய் 7.50 இலட்சத்துக்கோ (எந்தத் தொகை குறைவோ அந்தத் தொகைக்கு மேற்படாமல்) விற்பனை வரிக் கடன் தொகை உதவி அளிக்கப் படுகிறது. கடன் தொகை வழங்கப்பட்ட தேதியிலிருந்து 6 ஆண்டுகள் முடிந்தப்பிறகு 3 ஆண்டுத் தவணைகளில் சம தொகை களாக வட்டிஇன்றி இந்தக்கடன் தொகைகளைத் திருப்பியடைக்க வேண்டும்.

புதிய தொழில் இணையங்களை ஏதேனும் பின் தங்கிய மாவட்டங்களில் அமைத்திடவும், மற்றும் மறைமலை நகர், செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள குன்னத்தூர் இணையத்தில் நிறுவப்படும் புதிய தொழில்கள் இரண்டாம் பகுதித் திட்டத்தின் கீழ் வரும். இத் திட்டத்தின்கீழ் நிறுவப்பட உள்ள புதிய தொழிற் கூடங்களுக்கு அவை உற்பத்திப் பணிகளை மேற்கொள்ளும் முதல் ஆறு ஆண்டு காலத்திற்கு ஆண்டு தோறும் வட்டியில்லா விற்பனை வரிக் கடன் முந்திய ஆண்டில் செலுத்திய விற்பனை வரித் தொகைக்கு சமமானதாகவும் நிலையான இருப்புகளில் 20 சதவீத அளவுக்கோ அல்லது ரூபாய் 20 இலட்சத்திற்கோ எந்தத் தொகை குறைவோ அந்தத் தொகைக்கு அதிகப்படாமல் அளிக் கப்படும். இந்தக் கடன் கால் ஆண்டுக்கு ஒரு முறை என்ற அடிப் படையில் வழங்கப்படும். இத் திட்டத்தின் கீழ் 24 காலாண்டிற் கும் வழங்கப்படும் தொகையின் உயர்மட்ட அளவு ரூபாய் 1 கோடி ஆகும் கடன் வழங்கப்பட்ட 9 ஆண்டுகளுக்குப் பிறகு ஆறு சம ஆண்டுத் தவணைகளில் வட்டி எதுவுமின்றி திருப்பிச் செலுத்தப்பட வேண்டும்.

வட்டியில்லா விற்பனை வரிக் கடன் வழங்கும் ஊக்கச் சலுகைத் திட்டத்தின் கீழ் இந் நிறுவனம் துவங்கியதிலிருந்து 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் தேதி வரை 116 தொழில் நிறுவனங்களுக்கு மொத்தம் ரூபாய் 1,162·20 இலட்சத் துக்கு ஒப்புதல் அளித்து அதில் ரூபாய் 1,083·01 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த எட்டு ஆண்டுகளில் ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகையும் வழங்கப்பட்ட தொகையும் பின்வருமாறு :—

ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை.

ஆண்டு.	முதல் பிரிவு.	இரண்டாம் பிரிவு.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
	(ரூபாய் இலட்சத்தில்.)		
1972–73	79·19	..	79·19
1973–74	57·72	..	57·72
1974–75	73·63	..	73·63
1975–76	2·10	0·72	2·82
1976–77	49·13	29·72	78·85
1977–78	52·60	58·88	111·48
1978–79	59·19	94·00	153·19
1979–80	105·52	140·26	245·78
1980–81	88·79	143·55	232·34
1981–82 (டிசம்பர் 1981 வரை),	20·79	106·41	127·20
மொத்தம் ..	588·66	573·54	1,162·20

[1982 மார்ச் 25

வழங்கப்பட்ட தொகை.

ஆண்டு. (1)	முதல் பிரிவு. (2)	இரண்டாம் பிரிவு. (3)	மொத்தம். (4)
	(ரூபாய் இலட்சத்தில்.)		
1972–73	12·19	..	12·19
1973–74	31·56	..	31·56
1974–75	91·48	..	91·48
1975–76	57·60	..	57·60
1976–77	48·32	30·26	78·58
1977–78	35·19	56·04	91·23
1978–79	56·80	96·24	153·04
1979–80	47·26	137·74	185·00
1980–81	85·53	144·91	230·44
1981-82 (டிசம்பர் 1981 வரை).	46·10	105·79	151·89
மொத்தம் ..	512·03	570·98	1,083·01

மாநில அரசிடமிருந்து பெறப்பட்ட நிதி ஆண்டு வரிசையாக :

ஆண்டு (1)	தொகை. (2) (ரூபாய் இலட்சத்தில்.)
1972–73	23·18
1973–74	40·00
1974–75	74·66
1975–76	75·00
1976–77	75·00

1982 மார்ச் 25]

ஆண்டு. (1)	தொகை. (2) (ரூபாய் இலட்சத்தில்.)
1977–78	100·00
1978–79	150·00
1979–80	180·00
1980–81	250·00
1981-82 (டிசம்பர்-வரை)	160·00

1982–83 ஆம் ஆண்டிற்கான ஒப்புதல் வழங்குவதற்கான குறியீடு முறையே ரூபாய் 300 இலட்சமும், ரூபாய் 300 இலட்சமுமாகும்.

(இ) நிலையான இருப்புகள் மீது உதவித் தொகை.— மத்திய அரசின் நேரடி மானியம் அல்லது உதவித் தொகை வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தும் பொறுப்பு 1972 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் சிப்காட்டிடம் ஒப்படைக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் இம்மாநிலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 33 பின்தங்கிய வட்டங்களில் நிறுவப்படும் எந்த ஒரு தொழிற் பிரிவு அதன் நிலையான முதலீட்டில் (நிலம் கட்டிடங்கள் மற்றும் இயந்திரங்கள்) 15 சதவீதத்தை நேரடி மானியமாக அல்லது மானியமாக பெற தகுதியுள்ளதாகும். தொழில் முன்னேற்றம் அடைந்த பகுதியிலிருந்து முன்னேற்றம் காணாத முன்பு கூறப்பட்ட பகுதிகளுக்கு கருவிகள் தளவாடங்கள் மாற்றப்பட்ட போதிலும், அந்தத் தொழில் பிரிவுகள் கூட 15 சதவீத உதவித் தொகை பெறத் தகுதியுடையதாகும். ஒவ்வொரு தொழிற் பிரிவு பெறத்தக்க மானியத்தின் உச்ச வரம்பு ரூபாய் 15 இலட்சம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உற்பத்தி தொடங்குவதற்கு முன்பாக மானியத்தின் 85 சதவீதத் தொகையும் உற்பத்தி துவங்கிய பின்பு மீதித் தொகையும் வழங்கப்படும்.

மத்திய அரசின் நேரடி மானியம் அல்லது உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் மத்திய அரசிடமிருந்து ஈட்டுத் தொகை பெறுவதில் மற்ற மாநிலங்களைவிட தமிழ்நாடே தொடர்ந்து முன்னிலை வகித்து வருகிறது.

சிப்காட் நிறுவனம் தொடங்கிய நாள் முதல், இத்திட்டத்தின் கீழ் 2,384 சிறுதொழில் நிறுவனங்களுக்கு ரூபாய் 699.30 இலட்சமும், 350 பெரிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு ரூபாய் 2,324.96 இலட்சமும் மானியமாக 1981 ஆம் ஆண்டு

டிசம்பர் 31 ஆம் தேதி முடிய வழங்கப்பட்டுள்ளது. 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் நிலவரப்படி ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட தொகை, வழங்கப்பட்ட தொகை மற்றும் மத்திய அரசிடமிருந்து பெற்ற ஈட்டுத் தொகை பற்றிய விவரங்கள் இணைப்பு 1-ல் கொடுக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டு 1981—82-ல் ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட தொகை, வழங்கப்பட்ட தொகை மற்றும் மத்திய அரசிடமிருந்து பெற்ற ஈட்டுத் தொகை ஆகியவற்றின் தனி இலக்குகள் ரூபாய் 250 இலட்சமாகும்.

மாநில அரசின் நேரடி மானியம் அல்லது உதவித் தொகை வழங்கும் திட்டம்.

இத்திட்டத்தின் கீழ் மத்திய அரசின் மானிய திட்டங்களின் கீழ் வராத இடங்கள் இராமநாதபுரம் மாவட்டம் தூத்துக்குடி, தென் ஆற்காடு மாவட்டம், கடலூர் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட 24 வட்டங்களில் நிறுவப்படும் எந்த தொழிற் பிரிவும் அதன் நிலையான முதலீட்டில் 15 சதவீதம் மானியத்தின் இணையான தொகையோ அல்லது 15 இலட்சம் உதவித் தொகையோ இரண்டில் எது குறைவோ அதை பெறும் வகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் சிறிய, நடுத்தர மற்றும் பெரிய தொழில்கள் பயன்பெறும்.

குறிப்பிட்ட தொழில்களுக்கு மானியத் திட்டம்.

சில குறிப்பிட்ட தொழில்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் தமிழக அரசு இம்மானியத் திட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மின் அணு, மருந்துகள் தயாரிப்பு மற்றும் மோட்டார் வாகன உபரி தொழில்கள் அடங்கும். மேலே கூறப்பட்ட தொழில்கள் மத்திய மற்றும் மானியத் திட்டத்தின் கீழ் வராத தமிழகத்தின் எந்த பகுதியில் நிறுவப்படும் எந்த ஒரு நிறுவனமும் அதன் நிலையான முதலீட்டில் 10 சதவீதம் மானியமாகவோ அல்லது ஒரு நிரந்தர ஊழியருக்கு ரூபாய் 20,000 அல்லது ரூ. 10 இலட்சம் ரூபாய் என்ற இந்த மூன்று வகையான திட்டத்தில் எது குறைவோ அதை பெறலாம். இத்திட்டம் பாரதத்தின் எந்த பகுதியிலும் இதுவரை செயல்படுத்தப்படாத ஈடு இணையற்ற தமிழக அரசின் திட்டமாகும். இத்திட்டம் 1981 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 3 ஆம் நாள் முதல் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது.

(ஈ) நேரடி நிதி உதவி.—(1) தவணைக் கடன்—கடந்த ஒன்பது ஆண்டில் சிப்காட் ஒப்புதல் அளித்த தவணைக் கடன் மற்றும் வழங்கிய தவணைக் கடன் உதவி கீழ்க்கண்ட அட்டவணைகளில் காணலாம்:—

ஆண்டு.	ஒப்புதல் அளிக்கப் பட்டது.	ரத்து செய்யப் பட்டது.	நிகர செல்லுபடியாகத் தக்கது.	வழங்கப் பட்டது.
(1)	(2)	(3)	(4)	(5)
		(ரூபாய் இலட்சத்தில்.)		
1972—73	108.50	..	108.50	26.11
1973—74	197.89	7.55	190.34	33.90
1974—75	191.28	7.99	183.29	117.61
1975—76	27.08	7.25	19.83	162.87
1976—77	140.75	47.25	93.50	82.1[illegible]
1977—78	340.55	69.48	271.[illegible]7	12[illegible]2
1978—79	233.96	10.00	223.96	141.85
1979—80	580.56	12.74	567.76	296.61
1980—81	1,958.10	27.86	1,930.24	786.52
1981—82	1,410.75	..	1,410.75	1,018.76
மொத்தம்	5,189.36	190.12	4,999.24	2,790.20

1981—82 ஆம் ஆண்டுக்கான ஒப்புதல் அளித்தல் மற்றும் வழங்குவதற்கான குறியீடு முறையே 2,500 இலட்சம் மற்றும் 1,500 இலட்சம் ரூபாய் ஆகும்.

1975—76 ஆம் ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் 1976—77 ஆம் ஆண்டு முதல் அளிக்கப்பட்ட நிகர ஒப்புதல் கணிசமான முன்னேற்றம் அடைந்துள்ளது என மேலே உள்ள அட்டவணையிலிருந்து வெளிப்படையாக தெரியவருகிறது. ஒப்பளிப்பு மற்றும் வழங்குதல் ஆகியவற்றில் 1982—83 ஆம் ஆண்டிற்கான குறியீடு முறையே ரூபாய் 3,000 இலட்சம் மற்றும் ரூபாய் 2,000 இலட்சம் என திட்டமிடப்பட்டுள்ளது. இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் மறுநிதியுதவி திட்டத்தின் கீழ் சிப்காட்டின் வரையரையான ரூ. 2,000 இலட்சத்தில் 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நிலவரப்படி ரூபாய் 1,866.98 இலட்சத்தை எட்டி விட்டது.

நீண்டகால நிலுவைத் தொகையை திரும்பப் பெறுதல் என்ற நிலை 1981–82 தொடக்கத்தில் இருந்த 67.52 சதவீதத்தை விட படிப்படியாக அதிகரித்து, 1981 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15 ஆம் நாள் நிலவரப்படி 70.71 சதவீதமாக உயர்ந்துள்ளது. சிப்காட் நிர்வாக குழுவின் துணைக்குழு அவ்வப்போது கூடி நிலுவை பார்வைக் கூட்டங்களில் நிலுவைகளை பரிசீலனை செய்து நடவடிக்கை எடுத்ததாலும் மற்றும் தொழில் நிறுவனங்களின் ஒத்துழைப்பினாலும் கணிசமான முன்னேற்றம் அடைய முடிந்தது. 1980 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15 ஆம் நாள் நிலவரப்படி நிலுவைத் தொகை வசூல் ரூபாய் 224.26 இலட்சம் என்பது மொத்தம் நிலுவைத்தொகை ரூபாய் 2,177.15 இலட்சத்தில் 10.9 சதவீதம் ஆகும்.

உத்திரவாதமளித்தல் நேரடி சந்தா :— பொறுப்புகளுக்கு உத்திரவாதம் அளித்ததின் விளைவாக அல்லது நேரடி சந்தா வாயிலாக கடந்த எட்டு ஆண்டுகளில் அனுமதிக்கப்பட்ட உத்திரவாத வசதிகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டவை. எடுத்துக் கொள்ளப்பட்ட பங்குகள் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

ஆண்டு.	ஒப்புதல் அளிக்கப் பட்டது.	ரத்து செய்யப் பட்டவை.	பொது மக்களுக்கு வழங்கப் பட்டவை.	நேரடி சந்தாவுக்கு கோரிக்கை பங்குகள்.
(1)	(2)	(3)	(4)	(5)
		(ரூபாய் இலட்சத்தில்.)		
1972–73	23.20	..	..	..
1973–74	24.30	..	26.70	..
1974–75	5.00	..	2.50	0.55
1975–76	16.50	..	3.00	1.29
1976–77	11.00	18.50	2.00	2.00
1977–78	16.00	13.30	1.50	1.13
1978–79	5.00	3.50	5.00	0.37
1979–80	6.20	2.50	13.00	1.55
1980–81	24.40	..	21.20	12.29
1981–82	10.25	..	..	..
மொத்தம் ..	141·85	37·80	74·90	19·18

1982–83 ஆம் ஆண்டிற்கான ஒப்புதல் குறியீடு ரூபாய் 50 இலட்சமாகும்.

(3) இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் ஆரம்ப மூலதன நிதியுதவித் திட்டம்—ஆரம்ப மூலதன நிதியுதவித் திட்டத்தின்கீழ் தங்களது முதல், நடுத்தர தொழிலை நிறுவும் தொழில் நுட்ப, தொழில் அனுபவ, தொழில் முனைவோர்களுக்கு இந்திய தொழில் வளர்ச்சிகளின் முதல், நடுத்தர தொழில் திட்டத்திற்கு வங்கியானது, திட்டச் செலவில் 10 சதவீதம் வரையில் நிதியுதவி அளிக்கிறது. சிப்காட் நிறுவனம் இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் பிரதிநிதி என்ற முறையில் 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் அன்று ரூபாய் 33.58 இலட்சம் அளவுள்ள தொகையை ஆறு தொழில் நிறுவனங்களுக்கு ஏற்கனவே அனுமதி அளித்துள்ளது. 1982–83 ஆம் ஆண்டில் ரூபாய் 60·00 இலட்சம் ஒப்புதல், அளிக்கவும் ரூபாய் 50.00 இலட்சம் வழங்கவும் குறியீடாக வரையறுக்கப்பட்டுள்ளது.

வருகின்ற 1981–82 ஆம் ஆண்டில் ஒப்பளிப்பு தொகை ரூபாய் 60.00 இலட்சமாகவும், வழங்கும் தொகை ரூபாய் 50.00 இலட்சமாகவும் குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1979 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 29 ஆம் நாள் முதல் தவணைக் கடன் ஒப்புதல் அளிக்கப்பட்ட நிறுவனங்களில் ஆரம்ப மூலதன நிதியுதவி பெற தகுதியுள்ள நிறுவனங்களிடமிருந்து ஆய்வுத்தொகை ஏதும் இனி பெற வேண்டியது இல்லை என்று சிப்காட் நிர்வாக குழு தீர்மானித்துள்ளது.

இச்சலுகையினால் பொறியியல் வல்லுனர்களும் மற்றும் தொழில் திறமை வாய்ந்தவர்களுக்கும் பெரும் உதவியாக இருப்பதுடன் தங்களின் முதல், நடுத்தர தொழில் தொடங்கவும் முடியும். இத்திட்டத்தின் கீழ் ஒப்புதல் அளித்தலிலும், வழங்குதலிலும் அடைந்த முன்னேற்றம் கீழ்க்கண்ட அட்டவணையின் மூலம் அறியலாம்:—

ஆண்டு.	ஒப்புதல் அளிக்கப் பட்ட தொகை.	வழங்கப் பட்ட தொகை.
(1)	(2)	(3)
	(ரூபாய் இலட்சத்தில்.)	
1977–78	4.00	..
1978–79	9.15	4.00

ஆண்டு.	ஒப்புதல் அளிக்கப் பட்ட தொகை.	வழங்கப் பட்ட தொகை.
(1)	(2)	(3)
	(ரூபாய் இலட்சத்தில்)	
1979–80	12.90	21.47
1980–81	26.50	16.29
1981–82	33.58	20.10
மொத்தம் ..	86.13	61.86

இத்திட்டத்தின் கீழ் 1981–82 ஆம் ஆண்டுக்கு ரூபாய் 50 இலட்சம் ஒப்புதல் அளிக்கவும், ரூபாய் 40 இலட்சம் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தாழ்த்தப்பட்ட மற்றும் மலைச்சாதி வகுப்பைச் சேர்ந்த தொழில் முனைவோர்க்கு அளிக்கப்படும் சலுகைகள்.—தாழ்த்தப்பட்ட மற்றும் மலைச்சாதி வகுப்பை சேர்ந்த தொழில் முனைவோர்க்கு 1979 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29 ஆம் நாள் முதல் கீழ்க்கண்ட சலுகைகள் வழங்கி ஊக்குவிக்க சிப்காட் நிறுவனம் முடிவுசெய்துள்ளது :—

(அ) மாநிலத்தில் எந்த இடத்தில் தொழில் ஆரம்பித்தாலும் தொழில் முனைவோர் தொழிற்சாலை ஆரம்பிக்க ஆகும் மொத்த செலவில் 15 சதவீதத்தை தங்களது மூலதனமாக கொண்டு வந்தால் போதுமானதாகும். (இதுவே முன்பு பின் தங்கிய பகுதிகளில் 17.5 சதவீதமாகவும், முன்னேறிய இடங்களில் 20 சதவீதமாகவும் இருந்தது.)

(ஆ) உத்திரவாதமளித்தல் நேரடி சந்தா ஆகிய நிதி உதவிகளையும் மேற்படி தொழில் முனைவோர்களின் திட்டங்களுக்கு முடிந்த அளவு அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(இ) பின்தங்கிய பகுதிகளில் ஆரம்பிக்கப்படும் தொழிற்சாலைகளுக்காக வழங்கப்படும் கடன் தொகைக்கு ஆண்டொன்றுக்கு 11 சதவீதம் வட்டியும், ஏனைய பகுதிகளில் ஆரம்பிக்கப்படும் தொழிற்சாலைகளுக்கு 12.5 சதவீத வட்டியும் வசூலிக்கப்படும். இவ்வட்டிச் சலுகை ஆண்டொன்றுக்கு சுமார் 1½ சதவீதமாகும்.

(ஈ) தாழ்த்தப்பட்ட மற்றும் மலைச்சாதி வகுப்பைச் சேர்ந்த தொழில் முனைவோர்கள் தங்கள் தொழில் பற்றிய முன் முதலிட்ட ஆய்வு அறிக்கை பெற 25 சதவீதம் மட்டுமே முன்பணமாக செலுத்தினால் போதுமானது. இதுவே மற்ற தொழில் முனைவோர்களுக்கு 50 சதவீதமாகும்.

வளர்ச்சி மையங்கள்.	1981 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் தேதி வரை முன்னேற்றம்.		ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் எதிர்பார்க்கப்படும் முன்னேற்றம்.		
	மேம்படுத்தப்பட்ட பரப்பு.	மூலதனச் செலவு.	மேம்படுத்தப்பட்ட பரப்பு.	மூலதனச் செலவு.	
				மொத்தம்.	நிகரம்.
	ஏக்கர்.	(ரூபாய் இலட்சத்தில்.)	ஏக்கர்.	(ரூபாய் இலட்சத்தில்)	
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
(1) இராணிப்பேட்டை ..	729·78	115·61	275·04	100·00	59·00
(2) ஒசூர்	1,071·97	153·91	69[illegible]·88	150·00	99·00
(3) மானாமதுரை	489·00	22·06	..	145·00	110·00
(4) புதுக்கோட்டை	..	8·26	919·00	100·00	50.00
(5) கும்மிடிப்பூண்டி	..	..	1,001·00	270·00	120·00
(6) கடலூர்	..	..	517·00	125·00	7[illegible]·00
(7) தூத்துக்குடி	..	..	1,355·78	250·00	200·00

(1) இராணிப்பேட்டை :

அரசு 729·78 ஏக்கர் நிலத்தினை கையகப்படுத்தி அதை சிப்காட் நிறுவனத்திற்கு கொடுத்து ஒதுக்கப்படுவதற்காக இருந்த நிலப்பகுதி 480·68 ஏக்கர் ஆகும். அதில் 93 மனைகள் இருந்தன. அதில் 447.94 ஏக்கர் பரப்பளவு கொண்ட 89 மனைகள் 65 தொழில் முனைவோர்களுக்கு ஏற்கெனவே ஒதுக்கப்பட்டுள்ளன. ஒதுக்கப்பட்டதில் 36 தொழில் நிறுவனங்கள் தங்கள் கட்டுமான வேலைகளை முடித்து உற்பத்தியை துவங்கிவிட்டன. மிஞ்சிய 29 தொழில் நிறுவனங்கள் பல்வேறு கட்டுமான நிலைகளில் உள்ளன.

(2) ஒசூர் :

1,153 ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்கள் அரசினரால் கைப் பற்றப்பட்டு சிப்காட்டுக்குக் கொடுக்கப்பட்டது. 1,022·47 ஏக்கர் அமைந்துள்ள 155 மனைகள் ஒதுக்கீடு செய்வதற்காக கிடைத்துள்ளன. அதில் 872 ஏக்கர் பரப்புள்ள நிலம் 109 தொழில் முனைவோர்க்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 37 தொழில் நிறுவனங்கள் தங்கள் கட்டுமான வேலைகளை முடித்து உற் பத்தியை துவங்கி விட்டன. மிஞ்சிய 38 தொழில் நிறுவனங் கள் பல்வேறு கட்டுமான நிலைகளில் உள்ளன.

உட்புறச்சாலைகள் மற்றும் இணைப்பு சாலைகள் எல்லாம் முடிவடைந்து விட்டதால் தொழில் முனைவோர் தங்கள் தொழில் தொடங்க எந்த மனைப் பிரிவை வேண்டுமானாலும் தேர்ந் தெடுத்துக் கொள்ளும் வாய்ப்புள்ளது. தற்போது சுமார் 50 ஏக்கர் பரப்புள்ள மனையை கோரி வந்துள்ள 21 ஆரம்ப விண்ணப்பங்கள் சிப்காட்டில் பார்வையில் உள்ளது.

புதிய தொழில் இணையங்கள்.

மானாமதுரை மற்றும் புதுக்கோட்டை.

இராமநாதபுரம் மாவட்டத்தில் மானாமதுரையிலும், புதுக் கோட்டை மாவட்டத்தில் நத்தம்பண்ணை கிராமத்திலும் புதிய தொழில் இணையங்கள் துவங்க அரசு ஏற்கெனவே அனுமதியளித் துள்ளது. ஏனைய தொழில் இணையங்களுக்கான நிலம் கையகப் படுத்தும் பணி அரசின் அனுமதியுடன் துவங்கப்பட்டு மேல் நடவடிக்கைகள் எடுக்க, அந்தந்த மாவட்ட ஆட்சியாளர்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இன்னும் சுமார் மூன்று மாத காலத்திற்குள் புதுக்கோட்டையைப் பொறுத்தவரை நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு 'சிப்காட்' நிறுவனத்துடன் ஒப்படைக்கப்பட்டுவிடும். புறம்போக்கு நிலம் சுமார் 40

ஏக்கர் ஏற்கெனவே சிப்காட்டினால் எடுத்துக் கொள்ளப்பட்டு மேம்படுத்தும் பணி நடந்து கொண்டிருக்கிறது. மானாமதுரை தொழில் இணையத்தில் 353 ஏக்கர் நிலம் 137 மனைப்பிரிவுகளாக பிரிக்கப்பட்டு அதில் 6 தொழில் முனைவோர்க்கு 29·77 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு விட்டது.

தூத்துக்குடி.

சிப்காட்டின் தலைவர், மற்றும் உயர் அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டும், நேரிடையாகப் பார்வையிடப்பட்டும் தொழில் மையத்திற்கான இடம் தூத்துக்குடியில் தெரிவு செய்யப்பட்டு விட்டது. அங்கு நிலம் கையகப்படுத்தும் பணி அரசினால் துவக்கப்பட்டு விட்டது. தூத்துக்குடியில் சிப்காட் தொழில் மையம் தொடங்குவதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. சிப் காட் மேல் நடவடிக்கை எடுத்து நிலங்களை கையகப்படுத்தும் பணியில் முனைப்பாய் உள்ளது.

கடலூர்.

இரசாயனத் தொழில்களுக்கென்று தனியே ஒரு தொழில் மையம் அமைக்கும் சிப்காட்டின் திட்டத்திற்கு, கடலூருக்கருகில் அமைக்க அரசின் அனுமதி பெறப்பட்டு விட்டது. இங்கு கிடைக்கும் மிகுதியான தண்ணீர் வசதியும், கழிவு நீரகற்றும் வசதியும் மிகவும் அருமையாக அமையப் பெற்றிருப்பதால் கடலூர் தொழில் இணையம் விரையில் பிரபலமடைவது உறுதி. இங்கு நிலம் கையகப்படுத்தும் பணியும் மேற்கோள்ளப்பட் டுள்ளது.

கும்மிடிப்பூண்டி.

தமிழ்நாடு அரசு செங்கை மாவட்டத்தில் கும்மிடிப்பூண்டியில் ஒரு தொழில் இணையம் அமைக்க ஒப்புதல் அளித்துள்ளது. இவ்விணையத்திற்காக சுமார் 1,000 ஏக்கர் பரப்புள்ள நிலம் கையகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணிக்கான அலு வலர்கள் அமர்த்தப்பட்டு பணியும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 28 ஆம் நாள் முதல் இங்கு திட்ட அலுவலகம் செயல்பட்டு வருகிறது. மதுரை மாவட்டத்திலும் ஒரு தொழில் இணையம் துவங்க ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன.

மாநில அரசின் நிதியுதவி.

1981–82 ஆம் ஆண்டிற்கு (டிசம்பர் 1981 வரையில்) மாநில அரசு ரூபாய் 200·00 இலட்சம் சம பங்கு மூலதனமாகவும் 300 இலட்சம் வட்டியில்லா விற்பனை வரிக்கடன் திட்டத்திற்காகவும் ஒதுக்கியுள்ளது.

பணியின் முடிவுகள்.

1980–81 ஆம் நிதியாண்டில் எல்லா செலவினங்களும் தேய்மானங்களும் போக நிகர் இலாபம் ரூபாய் 21.28 இலட்சம்.

இணைப்பு இரண்டில்

திட்டவாரியான நிதியுதவிகள் பற்றிய விபரங்கள்.

1. 1981–82ஆம் ஆண்டில் ஒப்புதல் அளித்தல் மற்றும் வழங்குதலில் கண்ட முன்னேற்றம்.

2. 1982–83 ஆம் ஆண்டில் ஒப்புதல் அளித்தல் மற்றும் வழங்குதல் பற்றிய திட்டக் குறிப்பீடுகள்.

வேலை வாய்ப்பு.

1981ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31ஆம் தேதி முடிய சுமார் 53,000 பேர்கள் சிப்காட்டில் நிதியுதவி பெற்ற நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள் என கணக்கிடப்பட்டுள்ளது. இதுவரை ஏற்படுத்திய வேலை வாய்ப்புகளும், இனி ஏற்படுத்த இருக்கும் வேலை வாய்ப்புகளும் ஆண்டு வாரியாக:-

ஆண்டு.	வேலை பெற்றவர்களின் எண்ணிக்கை.
(1)	(2)
1979–80	6,800
1980–81	9,400
1981–82	4,600

இணைப்பு 1.

மத்திய மூலதன உதவித் தொகைத் திட்டம்.

(அ) ஒப்புதல் (நிகரம்).

(ரூபாய் இலட்சத்தில்.)

ஆண்டு.	பெரிய மற்றும் நடுத்தர தொழில்கள்.		சிறு தொழில் நிறுவனங்கள்.		மொத்தம்.	
	எண்.	தொகை.	எண்.	தொகை.	எண்.	தொகை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1978 மார்ச் 31 வரையில்	154	975.89	749	179.47	903	1,155.36
ஏப்ரல் 1978 முதல் மார்ச் 1979 வரை.	46	284.04	181	62.85	227	346.89
ஏப்ரல் 1979 முதல் மார்ச் 1980 வரை.	52	332.72	406	78.86	458	412.58
ஏப்ரல் 1980 முதல் மார்ச் 1981 வரை.	69	528.42	637	218.26	706	746.68
ஏப்ரல் 1981 முதல் டிசம்பர் 1981 வரை.	29	202.89	411	159.86	440	362.75
மொத்தம்	350	2,324.96	2,384	699.30	2,734	3,024.26

(ஆ) வழங்குதல்.

ஆண்டு.	நடுத்தர மற்றும் பெரிய தொழில்கள்.	சிறு தொழில் நிறுவனங்கள்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
	(ரூபாய் இலட்சத்தில்.)		
1978 மார்ச் 31 வரை ..	618.43	151.62	770.05
ஏப்ரல் 1978 முதல் மார்ச் 1979 வரை.	178.27	30.09	208.36
ஏப்ரல் 1979 முதல் மார்ச் 1980 வரை.	232.26	41.78	274.04
ஏப்ரல் 1980 முதல் மார்ச் 1981 வரை.	319.09	109.33	428.42
மொத்தம் ..	1,348.05	332.82	1,680.87

(இ) மத்திய அரசிடம் திரும்பப் பெற்றது.

ஆண்டு.	சிப்காட்.	ஏனையவை.
(1)	(2)	(3)
1978 மார்ச் 31 வரை	501,83	613.59
ஏப்ரல் 1978 முதல் மார்ச் 1979 வரை	161.50	229.63
ஏப்ரல் 1979 முதல் மார்ச் 1980 வரை	125.54	165·57
ஏப்ரல் 1980 முதல் மார்ச் 1981 வரை	301.91	425.35
ஏப்ரல் 1981 முதல் டிசம்பர் 1981 வரை.	199.90	346.76
மொத்தம்..	1,290.68	1,780.90

இணைப்பு.

1981–82ஆம் ஆண்டிற்கான ஒப்புதல் மற்றும் வழங்குதல் பற்றிய விபரங்கள்—1982–83ஆம் ஆண்டிற்கான திட்டங்களின் குறியீடுகள் :—

	1981–82.		1982–83
	முன்னேற்ற விபரம்.	செலவு மதிப்பீடு.	செலவு மதிப்பீடு.
(1)	(2)	(3)	(4)
	(ரூபாய் இலட்சத்தில்.)		
1. பகுதிக் கடன்—			
ஒப்புதல்	1,410.75	2,500.00	3,000,00
வழங்குதல் ..	1,018.76	1,500.00	2,500.00
2. உத்திரவாதமளித்தல்/ நேரடிச்சந்தா—			
ஒப்புதல்	10.25	40.00	50.00
3. வட்டியில்லா விற்பனை வரிக்கடன்—			
ஒப்புதல்	127.20	300.00	300.00
வழங்குதல் ..	151.89	250.00	300.00
4. மத்திய உதவி (சிப்காட் தனியாக)—			
ஒப்புதல்	176.45	250.00	250.00
வழங்குதல். ..	213.86	250.00	250.00
திரும்பப் பெறுவது	199.90	250.00	250.00
5. முக்கிய மூலதனத் திட்டம்—			
ஒப்புதல்	3.58	50.00	60.00
வழங்குதல் ..	20.10	40.00	50.00

தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம்.

1. முன்னுரை.—நம் நாட்டிலேயே மாநில அளவில் நிதி உதவி அளிக்கும் நிறுவனங்களில் முதல் நிறுவனமாகத் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், கம்பெனிகள் சட்டத்தின்படி, 1949 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதும், விரைவுபடுத்துவதும் இதன் முக்கிய நோக்கமாகும். இந்த நிறுவனத்தின் அதிகார வரம்பு மத்திய அரசின் நேரடி ஆட்சியின் கீழ் வரும் புதுச்சேரிக்கும் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் மாநில நிதி நிறுவனமாக இது செயற்படுகிறது. இந்திய ரிசர்வ் வங்கியையும், இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியையும் கலந்தாலோசித்த பின்னர் இந்திய அரசால் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள் வாயிலாக 1951 ஆம் ஆண்டு மாநில நிதியுதவி நிறுவனச் சட்டத்தின் சில முக்கியமான விதித்துறைகள், தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்திற்குப் பொருந்தும்படியாகச் செய்யப்பட்டிருக்கின்றன.

2. அலுவல்களும் நோக்கங்களும்.—இந்நிறுவனத்தின் முக்கிய அலுவல்களும் நோக்கங்களும் வருமாறு :—

(அ) முக்கியமாக நிலம், கட்டிடம், இயந்திரங்கள் போன்ற நிலையான சொத்துக்களை வாங்குவதற்காக தொழில் நிறுவனங்களுக்கு நீண்டகால, நடுத்தரக்காலக் கடன்களை வழங்குவது.

(ஆ) இயந்திரங்களை வாங்குவதற்காகத் தொழில் நிறுவனங்கள் செய்து கொள்ளும் காலம் தாழ்த்தித் தொகையைத் திருப்பிச் செலுத்துவதற்கான ஒப்பந்தங்களுக்கு (Deferred Payment Contract) உத்தரவாதம்/மேல் உத்தரவாதம் அளிப்பது.

(இ) வங்கிகள்/ஈட்டுறுதி நிறுவனங்கள் பொது மக்களிடம் இருந்து பெறும் கடன்கள் முதலியவற்றின் வாயிலாக தொழில் நிறுவனங்கள் பெறும் கடன்களுக்கு உத்தரவாதம் அளிப்பது.

(ஈ) தொழில் நிறுவனங்கள் வெளியிடும் பங்குகள், கடனீட்டுறுதிப் பத்திரங்கள் ஆகியவற்றை வாங்குவது, அவற்றுக்கு உத்தரவாதமளிப்பது.

(உ) மத்திய அரசு ஒப்பளிக்கும் உதவித் தொகையை ஒட்டி அத்தொகையை தொழில் நிறுவனங்களுக்கு முன் கூட்டியே கடனாக வழங்குவது.

3. உதவியின் அளவும் விவரமும்.—தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் வழங்கும் நிதி உதவியின் அளவு வருமாறு:—

(அ) கடன்கள்—

குறைந்த அளவு	ரூபாய் 2,000.
உயர் அளவு	ரூபாய் 30 இலட்சம் (தனி நபர் உரிமையிலுள்ள தொழில் நிறுவனங்களுக்கும் பங்குதாரர் உரிமையிலுள்ள தொழில் நிறுவனங்களுக்கும் உயர் அளவு ரூ. 15 இலட்சமாகும்).
(ஆ) காலம் தாழ்த்தித் தொகை செலுத்துவதற்கான உத்தரவாதம்.	ரூ. 30 இலட்சம்.
(இ) பொதுக் கடன் வெளியீட்டுப் பங்கிற்கு உத்தரவாதமளிப்பது / நேரடியாகக் கலந்து கொள்வது.	ரூ. 25 இலட்சம் (உயர் அளவு), பொதுக் கடன் வெளியீட்டில் 25 சதவீதம் அல்லது தொழிலதிபர் முதலீடு செய்யும் தொகைக்கு நிகரான ஒரு தொகை இவற்றில் எது குறைவோ அது.

இருப்பினும், மேற்கூறிய மூவகைக் கடன்களைப் பொறுத்த மட்டில், தொழில் பிரிவு ஒன்றுக்கு வழங்கப்படும் மொத்த உதவி ரூ. 65 இலட்சத்திற்கு மேற்படக் கூடாது.

சிறு தொழில், நடுத்தரத் தொழில் துறைகளில் (அ) புதிய தொழில் பிரிவுகளை நிறுவுவதற்கும் (ஆ) ஏற்கனவே உள்ள தொழில் பிரிவுகளை விரிவுபடுத்துவதற்கும், வேறு துறைகளில் ஈடுபடுவதற்கும் (ஈ) தற்போதுள்ள தொழில் பிரிவுகளை நவீனமாக்குவதற்கும் இந்நிறுவனம் நிதியுதவி அளிக்கிறது. சிறு தொழில் துறையிலும், சின்னஞ்சிறு தொழில் துறையிலும் தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதை ஊக்குவிப்பதற்கும் பெருமளவில் வேலைவாய்ப்பினை உருவாக்கவும் இந்நிறுவனம் பல சிறப்புத் திட்டங்களை உருவாக்கியுள்ளது. குறைந்த வட்டி வீதம் கடன் திருப்பிச் செலுத்தத் தொடங்குவதற்கு நீண்ட கால அவகாசம் கடனைத் திருப்பிச் செலுத்த நீண்ட காலக்கெடு குறைந்த பிணையத் தொகை போன்ற தாராளமான எளிய நிபந்தனைகளில் இந்நிறுவனம் கடனுதவி அளிக்கிறது.

அதிக அளவில் வேலைவாய்ப்பினை உருவாக்கவும் எந்த ஒரு பகுதியிலும் தொழில் வளம் குறைந்து தோன்றாவண்ணம் தொழில் வளர்ச்சியை மேம்படுத்தவும், தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய பகுதிகளில் உள்ள தொழில் நிறுவனங்களுக்கு, அதிலும் குறிப்பாக கிராமப் பகுதிகளிலுள்ள தொழில் நிறுவனங்களுக்கு உதவி அளிப்பதற்கும் முதலிடம் தரப்படுகிறது. வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளில் உள்ள தொழில் நிறுவனங்களுக்கு, குறைந்த வட்டி, கடனைத் திருப்பித் தர நீண்டகாலக் கெடு ஏனைய பல சலுகைகளின் அடிப்படையில் நிதி உதவி அளிக்கப்படுகிறது. கிராமப்புறங்களிலும் தொழில் வளர்ச்சி பின்தங்கிய பகுதிகளிலும் ஏற்படுத்தப்பட்டு வருகின்ற சிறு சின்னஞ்சிறு தொழில் பிரிவுகளுக்கு இன்னும் பெருமளவில் உதவி புரியும் நோக்கத்துடன், போக்குவரத்துக் கடனாக இருப்பின் 75,000 ரூபாய் வரையிலும் பிற வகைக் கடனாக இருப்பின் 25,000 ரூபாய் வரையிலும் கடனுதவி அளிப்பதற்குரிய அதிகாரங்களை மேற்படி நிறுவனத்தின் வட்டார கிளை அதிகாரிகளுக்கு இந்நிறுவனம் வழங்கியுள்ளது. சிறு, நடுத்தரத் தொழில் துறைகளில் நிறுவப்பட்டுள்ள பல்வேறு பிரிவுகளுக்கும் தொழில் வளர்ச்சி பின்தங்கிய பகுதிகளில் உள்ள தொழில் பிரிவுகளுக்கும் இந்நிறுவனத்தால் விதிக்கப்படும் வட்டி வீதம் பின்வருமாறு :—

விவரம்.	மறுநிதி உதவி அளிக்கப்படும் போது ஆண்டொன்றுக்கு சதவீதம்.
(1)	(2)
சிறு தொழில் துறை—	
1 தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதி ..	12.50
2 தொழில் வளர்ச்சியில் பின்தங்கியுள்ள பகுதி அல்லாத பிற பகுதிகள்.	13.50
3 தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதி அல்லாத பிற இடங்களில் உள்ள தொழில் நுட்ப வல்லுநர்கள்.	13.50
4 தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளில் உள்ள தொழில் நுட்ப வல்லுநர்கள்.	12.00
5 ஆதி திராவிடர்கள், பழங் குடியினர், மிகவும் பின்தங்கிய வகுப்பினர் (குறைந்த அளவுக் கடன்).	11.25*

* குறித்த காலத்தில் தொகை செலுத்துவதற்கு ஒரு சதவீத தள்ளுபடி அளிக்கப்படுகிறது.

விவரம்.	மறுநிதி உதவி அளிக்கப்படும்போது ஆண்டொன்றுக்கு சதவீதம்.
(1)	(2)
நடுத்தரத் தொழில் துறை—	
தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதியும், அல்லாத ஏனைய பகுதிகளும்.	14.00
போக்குவரத்துக் கடன்	14.50**

4. நிதி வாயில்கள்.—முக்கியமாக தமிழ்நாடு அரசு இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி அளிக்கும் பங்கு மூலதனம், இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் மறு நிதியுதவி கடனீட்டுறுதி பத்திரங்கள் வைப்புத் தொகைகள், நிதி முதலியவை இந்நிறுவனத்தின் வாயில்களும், 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் அன்றுள்ளவாறு இந்நிறுவனத்தின் நிதி வாயில்களின் நிலவரம் வருமாறு :—

	1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் அன்றுள்ளபடி.
(1)	(2)
	(ரூபாய் இலட்சத்தில்.)
1 பங்கு மூலதனம்	1,449.56
2 கடன் பத்திரங்கள்	1,676.00
3 இந்திய தொழில் வளர்ச்சி வங்கியிடமிருந்து மறுநிதி உதவி.	4,252.80
4 பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட குறிப்பிட்ட கால வைப்பீட்டுத் தொகைகள்.	236.55
5 நிறுவனத்தின் ரொக்க நிதி	127.16
	7,742.16

** குறித்த காலத்தில் தொகை செலுத்துவதற்கு இரண்டு சதவீத தள்ளுபடி அளிக்கப்படுகிறது.

3. இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியிடமிருந்து பெரும் மறு நிதி உதவி.—இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி, குறைந்த வட்டி வீதத்தில் தாராளமாக தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்திற்கு மறுநிதி உதவி அளிக்கிறது. தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்தில் செலுத்தப்பட்ட மூலதனமும் இலவச ஒதுக்கீடுகளும் சேர்ந்து எவ்வளவு தொகை வருமோ அதைப் போல் மூன்று மடங்கு வரை இந்திய தொழில் வளர்ச்சி வங்கி மறுநிதி உதவி அளிக்கிறது. 1980–81 ஆம் ஆண்டில் இந் நிறுவனம் ரூபாய் 8.92 கோடி மறுநிதி உதவி பெற்று உள்ளது. 1981–82-ல் (1981 டிசம்பர் வரை) ரூ. 12.8 கோடி மறுநிதி உதவி பெற்றுள்ளது. மேலும் 1980–81 ஆம் ஆண்டில் (1980 டிசம்டர் 31 வரையில்) இந்திய தொழில் வளர்ச்சி வங்கிக்கு ரூபாட் 3.82 கோடியும் 1981–82-இல் (1981 டிசம்பர் வரை) ரூ. 4.41 கோடிதான் செலுத்தப்பட்டது. ஆனால் 1980-ஆம் ஆண்டு டிசம்பர் இறுதியிலும், 1981 ஆம் ஆண்டு டிசம்பர் 31 இறுதியிலும் நிலுவையாக உள்ள மறுநிதி உதவித் தொகைகள் முறையே ரூபாய் 36.90 கோடியும் ரூபாய் 50·26 கோடியும் ஆகும்.

இந்திய தொழில் வளர்ச்சி வங்கியிடமிருந்து மறு நிதி உதவி பெற்று அசலையும் வட்டியையும் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் எப்பொழுதும் காலந்தாழ்த்தாமல் திரும்பச் செலுத்தி வந்துள்ளது.

1980–81, 1981–82 (ஆம் ஆண்டுகளில்) (1981 டிசம்பர் வரையில்) இந்நிறுவனத்தின் செயலாக்க ஆய்வு.—1981–82ஆம் ஆண்டில் (1981 டிசம்பர் வரை) இந்நிறுவனத்தின் செயலாக்கம் முந்தைய ஆண்டின் செயலாக்கத்தோடு ஒப்பிடுகையில் போற்றத் தகுந்த முன்னேற்றத்தைப் பெற்றுள்ளது. தமிழ்நாடு அரசின் தொழிற் கொள்கைக்கிணங்க, இந்நிறுவனம் வேலை வாய்ப்பினைப் பெருமளவில் ஏற்படுத்த வேண்டுமென்ற முக்கிய நோக்கத்துடன், சிறு, மற்றும் சின்னஞ் சிறு தொழில் துறைகளிலுள்ள தொழில் நிலையங்கள் அதிலும் குறிப்பாக கிராமம் ஓரளவு நக ப்பாங்குள்ள பகுதிகளில் அமைக்கப்படுகின்ற தொழில் நிலையங்களை ஊக்குவிப்பதில் சிறப்பு முன்னுரிமை அளித்து வருகிறது. பொருளாதார நிலையில் பின்தங்கி நலிந்துள்ள மக்கள், தொழில் நிலையங்கள் அமைப்பதை ஊக்குவிப்பதற்காகவும் மற்றும் தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை மேம்படச் செய்யவும் பல்வேறு புதிய திட்டங்களும் சலுகைகளும் கொண்டு வரப்பட்டுள்ளன.

(4) **உதவி அளிக்கப்பட்ட தொழில் நிலையங்களின் எண்ணிக்கை.**—1980–81 (1980 டிசம்பர் 31 வரை) 1981–82 ஆம் (1981 டிசம்பர் 31 வரை) ஆண்டுகளில் இந்நிறுவனத்தின் செயலாக்கத்தினால், நிறுவனத்திடமிருந்து உதவி பெற்ற தொழில் நிலையங்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்து உள்ளது. இவ்வாண்டுகளில் இந்நிறுவனத்தினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதி உதவி விவரங்களின் சுருக்கம் வருமாறு :—

(ரூபாய் இலட்சத்தில்.)

	1980–81 (31–12–1980 வரை)		1981–82 (31–12–1981 வரை)	
	எண்ணிக்கை.	தொகை.	எண்ணிக்கை.	தொகை.
(1)	(2)	(3)	(4)	(5)
ஒப்புதல் அளிக்கப் பட்டவை.	2,765	2,377.91	3,799	3,118.49

இவற்றில் பெரும்பாலானவை இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய பகுதிகள் கிராமப் பகுதிகளிலுள்ள சிறு மற்றும் சின்னஞ்சிறு துறைகளைச் சார்ந்த தொழில் நிலையங்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். முன்பே தெரிவித்துள்ளவாறு 1980ஆம் ஆண்டு செப்டம்பரில் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்தின் வட்டார கிளை அலுவலகங்களுக்கு கடன் வழங்கும் அதிகாரமளித்ததன் மூலம் அந்த ஆண்டில் இந் நிறுவனத்திடமிருந்து பெருமளவிலான சிறு மற்றும் சின்னஞ்சிறு துறைகளைச் சார்ந்த தொழில் நிலையங்கள் நிதியுதவி பெற்றுள்ளன.

இந்நிறுவனம் தொடங்கப்பட்டதிலிருந்து ஒப்புதலளிக்கப்பட்ட மொத்தத் தொகை, வழங்கப்பட்ட தொகை, நிலுவையாகவுள்ள தொகை பற்றிய விவரங்கள் பின்வருமாறு :—

	எண்ணிக்கை.	தொகை.
(1)	(2)	(3)
		(ரூபாய் இலட்சத்தில்.)
ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை—		
31–12–1980 வரை ..	7,438	16,327.40
31–12–1981 வரை ..	13,338	20,828.66

வழங்கப்பட்ட தொகை—

31–12–1980 வரை	.. ..	12,928.98
31–12–1981 வரை	.. ..	15,976.93

நிலுவையாகவுள்ள தொகை—

31–12–1980 வரை	.. ..	7,714.86
31–12–1981 வரை	.. ..	10,358.10

(i) வேலை வாய்ப்புகள்.—இந்த நிறுவனத்தினால் உதவி அளிக்கப்பட்ட தொழில் நிலையங்களின் எண்ணிக்கை குறிப்பாக சிறு, சின்னஞ்சிறு தொழில் துறைகளில் உயர்ந்துள்ளதால், வேலை வாய்ப்புகள் பெருமளவில் உயர்ந்துள்ளன. இந்நிறுவனம் வழங்கிய நிதி உதவியால் இவ்வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. இவற்றினால் சமுதாயத்தில் நலிந்துள்ள மக்களில் பெரும் பாலானவர்கள் பலன் அடைந்துள்ளனர்.

(ii) இந்நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட வேலை வாய்ப்பு விவரங்கள் பின்வருமாறு :—

		எண்ணிக்கை.
1980–81 (1980 டிசம்பர் வரை)	..	24,079
1981–82 (1981 டிசம்பர் வரை)	..	28,340

(iii) சிறு தொழில்களுக்கு நிதியுதவி.—ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி, இந்நிறுவனம் சமுதாயத்தில் பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள பெரும்பாலோருக்கு பயன்படுகின்ற வகையில் சிறு தொழில் துறைக்கு அதிக அளவில் நிதி உதவி அளித்து வருகிறது. இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் வருமாறு :—

நிதி உதவியின் அளவு	குறைந்த அளவு ரூபாய் 2,000 உயர் அளவு ரூபாய் 20.00 இலட்சம். இதைத் தவிர காலந்தாழ்த்தி, தொகையைத் திருப்பிச் செலுத்துவதற்கான ஒப்பந்தங்களுக்கு உத்தரவாதம் அளிப்பது தொழில் நிறுவனங்கள் வெளியிடும் பங்குகளை வாங்குவது போன்ற உதவிகள்.
வட்டி வீதம்	தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய பகுதியிலுள்ள புதிய தொழில் பிரிவுகளுக்கு ஆண்டொன்றுக்கு 12.50 சதவீதம். தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய பகுதியில் தற்போதுள்ள தொழில் பிரிவுகளுக்கும் இதர பகுதியிலுள்ள தொழில்களுக்கும் ஆண்டொன்றுக்கு 13. 50 சதவீதம்.
திரும்பச் செலுத்தும் காலம்.	தொழில் திட்டங்களின் தன்மைகளுக்கேற்ப 10 முதல் 16 வரையிலுள்ள அரை ஆண்டுத் தவணைகளில் திரும்பச் செலுத்தத் தக்கதாகும்.

இந்நிறுவனம் தொடக்கப்பட்டதிலிருந்து இத்தொழில் நிலையங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதி உதவிகளின், விவரங்கள் வருமாறு :—

(ரூபாய் இலட்சத்தில்.)

	1980–81 (31-12-1980 வரை)		1981–82 (31-12-1981 வரை)	
	எண்ணிக்கை.	தொகை.	எண்ணிக்கை.	தொகை.
(1)	(2)	(3)	(4)	(5)
சிறு தொழில்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை.	2,788	1,662.97	3,770	2,615.91
ஒப்புதல் அளிக்கப்பட்ட மொத்தத் தொகை.	2,765	2,377.91	3,799	3,118.49

(iv) தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய பகுதிகளில் தொழில் நிறுவனங்களுக்கு நிதி உதவி.—இம்மாநிலத்தின் கிராம, ஓரளவு நகரப் பாங்குள்ள பகுதிகளில் தொழில் வளர்ச்சியினை ஊக்குவிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய பகுதிகளில் உள்ள தொழில் நிலையங்களுக்கு இந்நிறுவனம் பெருமளவில் நிதி உதவி அளித்து வருகிறது.

உதவிகளின் முக்கிய அம்சங்கள் பின் வருமாறு எளிய நிபந்தனைகளின் பேரில் ரூபாய் 30 இலட்சம் வரை கடன்கள்.

புதிய சிறு தொழில் நிலையங்களுக்கும் தொழில் நுட்ப வல்லுநர்களால் தொடங்கப்படும் தொழில்களுக்கும் ஆண்டொன்றுக்கு 12.50 சதவீத வட்டி வீதம் தொழில் அமைந்துள்ள பகுதியின் தன்மையைக் கருத்தில் கொள்ளாது நடுத்தரத் தொழில்களுக்கு 14 சதவீதமும்.

கடன்களைத் திரும்பச் செலுத்தத் தொடங்குவதற்குரிய அவகாச காலம் 2 ஆண்டுகள் வரை.

கடன்களைத் திரும்பச் செலுத்தும் காலம் கடன்களைத் திரும்பச் செலுத்தத் தொடங்குவதற்குரிய காலம் உட்பட 7 முதல் 10 ஆண்டுகள் வரை.

காப்புத் தொகையாக கடன் வாங்குவோர் கொண்டு வர வேண்டிய நிதி கோருவதில் இணக்கமான அணுகு முறை.

இதைத் தவிர தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய பகுதிகளென அறிவிக்கப்பட்ட பகுதிகளில் ஏற்படுத்தப்படும் தொழில் பிரிவுகளுக்கும், அவற்றின் நிலையான இருப்பில் 15 சதவீதம் வரை மத்திய அரசு உதவித் தொகை அளிக்கப்படுகிறது. மேலும் மாநில அரசால் அறிவிக்கப்பட்ட 25 வட்டங்களும், மாநில அரசு அளிக்கும் உதவித் தொகையைப் பெறத் தகுதியுடையவையாகும்.

தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய பகுதிகளில் உள்ள தொழில் நிலையங்களுக்கு இந்நிறுவனத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதி உதவிகளின் விவரங்கள் பின் வருமாறு :—

(ரூபாய் இலட்சத்தில்.)

	1980—81 (31—12—1980 வரை).		1981—82 (31-12-1981 வரை).	
	எண்ணிக்கை	தொகை.	எண்ணிக்கை.	தொகை.
(1)	(2)	(3)	(4)	(5)
தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளில் உள்ள தொழில் நிலையங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை.	1,477	1,306.60	2,045	1,640.62

(v) தொழில் நுணுக்க வல்லுநர்கள் : தொழில் நுணுக்க வல்லுநர்களுக்கு அதாவது தொழில் நுணுக்கவியல் பட்டம், தகுதிப் பட்டயம், சான்றிதழ்கள் பல்வேறு தொழிலியல் தயாரிப்புகளில் முன் அனுபவம், திறன் கொண்டவர்கள் தாங்களாகவே தொழில் நிலையங்கள் அமைப்பதை ஊக்குவிப்பதற்காக இந்நிறுவனம் இத்திட்டத்தை ஏற்படுத்தி உள்ளது. இத்திட்டத்தின் முக்கிய அம்சங்களாவன :—

ரூபாய் 3 இலட்சம் வரை கடன்கள் வழங்குதல்.

தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளில் உள்ள புதிய தொழில் நிலையங்களுக்கு சலுகையாக ஆண்டொன்றிற்கு 12.00 சதவீத வட்டி வீதமும் இதர பகுதிகளில் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளில் ஏற்கனவே உள்ள தொழில்களுக்கும் ஆண்டொன்றுக்கு 13.50 சதவீத வட்டி வீதமும், ரூபாய் 2 இலட்சம் வரை கடன் வாங்குவோர் காப்புத் தொகை செலுத்த வேண்டியதில்லை. கடன் ரூபாய் இரண்டு இலட்சத்திற்கு மேல் காப்புத் தொகை 10 சதவீதம் கட்ட வேண்டும்.

கடன் தொகையைத் திரும்பச் செலுத்தத் தொடங்குவதற்கு நீண்ட அவகாசக் காலமும் திரும்பச் செலுத்த வேண்டிய கால அளவும், அதிகமானதாகும். இத்திட்டத்தின் கீழ் இந்நிறுவனத்தினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதி உதவி விவரங்கள் வருமாறு :—

(ரூபாய் இலட்சத்தில்.)

	1980—81 (31—12—1980 வரை.)		1981—82 (31—12—1981 வரை.)	
	எண்ணிக்கை.	தொகை.	எண்ணிக்கை	தொகை.
(1)	(2)	(3)	(4)	(5)
தொழில் நுணுக்க வல்லுநர்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை.	30	41.72	46	45.23

(vi) போக்குவரத்து உரிமையாளர்களுக்கு உதவி : மோட்டார் பொருத்தப்பட்ட ரிக்ஷாக்கள், ஆட்டோ ரிக்ஷாக்கள், சுற்றுலா வாடகைகார்கள், லாரிகள், ஆட்டோ டிரெய்லர்கள், டிரக்குகள், டெம்போக்கள், வான்கள் போன்ற போக்குவரத்து

வண்டிகளை வாங்க உதவும் வகையில் இந்நிறுவனம் ஒரு தனித் திட்டத்தை வகுத்துள்ளது. இந்த உதவியின் முக்கிய கூறுகள் வருமாறு :—

(உரிமையாளரே ஓட்டுவது.)

வட்டி விதம் :	14.50 சதவீதம் ஒழுங்காகத் தொகையைத் திருப்பிச் செலுத்துபவர்களுக்கு வட்டியில் 2 சதவீதம் தள்ளுபடி அளிக்கப்படுகிறது.
கடன் உதவி	வண்டியின் விலையில் 85 சதவீதம் வரை.
கடனைத் திருப்பி செலுத்தும் காலம்.	மாதத் தவணைகளில் நான்காண்டு காலத்தில் திருப்பிச் செலுத்த வேண்டும்.

உதவி பற்றிய விவரங்கள் பின்வருமாறு :—

	1980—81 (31-12-1980 வரை.)		1981—82 (31-12-1981 வரை.)	
	எண்ணிக்கை	தொகை.	எண்ணிக்கை	தொகை,
(1)	(2)	(3)	(4)	(5)
		(ரூபாய் இலட்சத்தில்.)		
போக்குவரத்து வண்டி உரிமையாளர்களுக்கு அளித்த கடன் தொகை.	427	142.43	349	199.91

இத்திட்டத்தின் கீழ் முக்கியமாக பயன் அடைந்தவர்கள் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளைச் சார்ந்த ஒற்றை வழிப் போக்குவரத்து வண்டி (Single Track) உரிமையாளர்களே ஆவார்கள். சாலைப் போக்குவரத்து வண்டி சிறு உரிமையாளரிடமிருந்து அதிக கோரிக்கைகள் வந்துள்ளதால் 1981—82 ஆம் ஆண்டில் அவர்களை ஊக்குவிக்க இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

(vii) மின் உற்பத்தி இயந்திரங்களை வாங்குவதற்கு உதவி மின் வெட்டுக் காலங்களில் ஏற்படும் இடையூறுகளைக் களைவதற்கு மின் உற்பத்தி இயந்திரங்களையும் டீசல் இயந்திரங்களையும் வாங்கவும், தொழில் நிறுவனங்களுக்கு தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் இத்திட்டத்தின் கீழ் கடனுதவி அளிக்கிறது.

உதவி வழங்குவதற்கான நிபந்தனைகள் பின்வருமாறு :—

கடனுதவி	ரூ. 5 இலட்சம் வரை (தகுதி அடிப்படையில் கடன் தொகை உயர்த்தப்படும்.)
திருப்பிச் செலுத்தும் காலம்	3 முதல் 5 ஆண்டுகள் வரை, கடன் பெற்றுக் கொண்ட நாளிலிருந்து 6 திங்கள் கழித்து கடனைத் திருப்பிச் செலுத்தத் தொடங்கலாம்.
கடன் பெறுவோர் போட வேண்டிய காப்புத் தொகை.	25 சதவீதம் நடுத்தரத் தொழிலாளர்களுக்கு 13 சதவீதம் சிறு தொழில்களுக்கு.
வட்டி வீதம்	தொழிற்சாலை அமைந்துள்ள இடத்தைப் பொறுத்து ஆண்டொன்றுக்கு 12.50 சதவீதம் முதல் 14.00 சதவீதம் வரை.

இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதி உதவியின் விவரம் பின்வருமாறு :—

	1980—81 (31-12-1980 வரை.)		1981—82 (31-12-1981 வரை.)	
	எண்ணிக்கை.	தொகை.	எண்ணிக்கை.	தொகை.
(1)	(2)	(3)	(4)	(5)
		(ரூபாய் இலட்சத்தில்.)		
மின் உற்பத்தி இயந்திரங்கள் வாங்குவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட கடன்கள்.	69	174.95	17	20.99

இத்திட்டம், தமிழ்நாட்டிலுள்ள தொழில் பிரிவுகள் அனைத்திற்கும் அவை தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்திடமிருந்து நிதியுதவி பெற்றிருந்தாலும் சரி இல்லாவிடினும் சரி பொருந்தும்படி செய்யப்பட்டுள்ளது.

(viii) உலக வங்கி அளிக்கும் கடனுதவியைப் பெற்றுத் தருதல்.—தமிழ்நாடு தொழில் நிறுவனம் வெளிநாடுகளிலிருந்து இயந்திரங்கள், கூட்டு உறுப்புகள், முதலியவற்றை இறக்குமதி செய்தல், தொழில் நுட்ப அறிவுத் திறனைப் பெறுதல் முதலிய வற்றிற்காக உலக வங்கி வழங்கும் அந்நிய செலாவணிக் கடன் உதவியைப் பெற்றுத் தரும் நிறுவனமாக இம்மாநிலத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய கூறுகள் பின்வருமாறு:—

கடனுதவி	ரூ. 30 இலட்சம் வரை.
வட்டி வீதம்	சிறு தொழில் பிரிவுகளுக்கும் பின்தங்கிய பகுதிகளில் உள்ள எல்லாத் தொழில் பிரிவுகளுக்கும் ஆண்டொன்றுக்கு 12.50 சதவீதம் பின்தங்கிய பகுதிகளல்லாத பிற பகுதிகளில் உள்ள தொழில் பிரிவுகளுக்கு ஆண்டொன்றுக்கு 14.00 சதவீதம்.
கடனைத் திரும்பச் செலுத்த தொடங்க அனுமதிக்கப்படும் காலம்—	2 முதல் 4 ஆண்டுகள் வரை
திருப்பிச் செலுத்தும் காலம்.	கடன் செலுத்தாமலிருக்க அனுமதிக்கப்படும் காலம் உட்பட 7 ஆண்டு முதல் 14 ஆண்டுகள் வரை.

இத்திட்டத்தின் கீழ் 1981–82-ல் வழங்கப்பட்ட நிதி உதவியின் அளவு பின்வருமாறு கணிசமான அளவுக்கு உயர்ந்துள்ளது.

	1980–81 (1980 டிசம்பர் 31 ஆம் நாள் வரை.)		1981–82 (1981 டிசம்பர் 31 ஆம் நாள் வரை.)	
	எண்ணிக்கை.	தொகை.	எண்ணிக்கை.	தொகை.
(1)	(2)	(3)	(4)	(5)
		(தொகை ரூபாய் இலட்சத்தில்.)		
உலக வங்கி கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்ட கடன்கள்.	24	268.52	30	..

(ix) எளிய நிபந்தனையில் கடன் வசதி :—எளிய நிபந்தனையில் கடன் வழங்கும் தொடக்க முதலீட்டு உதவி வழங்கும் திட்டத்தின்கீழ், மிகச் சிறிய, சிறு தொழில்களுக்கும் மிகச் சிறிய தொழில்களுக்கும் நிதி உதவி அளிக்கும் திட்டத்தை இந்நிறுவனம் வகுத்துள்ளது. தொழில் திட்டத்திற்குத் தேவையான மூலதனத்தில் தொழில் முனைவோர் செலுத்த இயலும் மூலதன பங்கு போக, பாக்கி தேவைப்படுகின்ற மூலதனத்தைப் பெறுகின்ற வகையில் இந்நிதியுதவி அளிக்கப்படுகிறது. தகுதிவாய்ந்த தொழில் நுட்பத்திறன் படைத்த வல்லுநர்களாக உள்ள தொழில் முனைவர்களை ஊக்குவிக்கும் வகையில் குறிப்பாக, தமிழ்நாட்டில் கிராமப் பகுதிகளிலும் தொழில் துறையில் பின்தங்கிய பகுதிகளிலும், தொழில்களை நிறுவ தெரிந்தெடுத்து உதவுகின்ற அடிப்படையில் இத்திட்டத்தின்கீழ் உதவி அளிக்கப்படுகிறது.

தனி உரிமையாளர் மற்றும் பங்குதாரர் தொழில் நிறுவனங்களுக்கு இந்த உதவியானது குறைந்த வட்டிக் கடனுதவி வடிவில் ஆண்டொன்றுக்கு ஒரு சதவீத வட்டி வீதத்தில் அளிக்கப்படுகிறது. வரையறுக்கப்பட்டுள்ள நிறுவனங்களைப் பொறுத்த வரை (Limited Companies) இந்த நிதி உதவியானது சேர்ந்துவரும் முன்னுரிமைப் பங்குகள் வடிவில் (Cumulative Preference Shares) வழங்கப்படும்.

இத்திட்டத்தின்படி இந்நிறுவனம் வழங்கியுள்ள உதவி பின்வருமாறு.—

(தொகை ரூபாய் இலட்சத்தில்.)

	1980–81 (1980 டிசம்பர் 31 வரை.)		1981–82 (1981 டிசம்பர் 31 வரை.)	
	எண்ணிக்கை.	தொகை.	எண்ணிக்கை	தொகை.
(1)	(2)	(3)	(4)	(5)
எளிய நிபந்தனை கடன் வழங்கும் தொடக்க முதலீட்டு உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்ட கடன்கள்.	236	15.51	22	1.95

இத்திட்டத்தின் சிறப்புக் கூறுகள் பின்வருமாறு :—

கடன் தொகையின் அளவு ..	ரூ. 2 இலட்சம் (அல்லது) தொழில் திட்டத்தின் செலவில் 20 சதவீதம் (இவற்றில் எது குறைவோ அது).
வட்டி வீதம்	ஒரு சதவீதம்.
கடன் தவணைத் தள்ளிவைப்பு கால அளவு.	ஒவ்வொரு தொழில் தகுதியைப் பொறுத்து 5 ஆண்டுகள் வரை.

(x) சிறிய அளவில் வழங்கும் கடன்/கூட்டுக் கடன் திட்டம்:— சமூகத்தில் பொருளாதார நிலையில் பின்தங்கியவர்கள் பெரும் அளவில் பயனடையும் பொருட்டு முன்னரே குறிப்பிட்டுள்ளது போல் சிறிய அளவில் கடன் வழங்கும் திட்டத்தை இந்நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் தனித்தியங்க வல்ல தொழில் பிரிவுகளுக்கு ரூ. 5,000 முதல் 25,000 வரை கடன் அளிக்கப்படுகிறது. முன்னரே குறிப்பிட்டுள்ளபடி வட்டார/கிளை அலுவலகங்கள் தற்போது ரூ. 25,000 வரை கணிசமான அளவுக்குக் கடன் வழங்குகின்றன. முன்னரே குறிப்பிட்டுள்ளபடி, முக்கியமாக, கிராமப் பகுதிகளிலும் தொழிலில் பின்தங்கிய பகுதிகளிலும் உள்ள தொழில்களை மேம்படுத்துவதற்கும் பெரும் அளவில் வேலை வாய்ப்பினை தோற்றுவிப்பதற்கும் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கூட்டுக் கடன் திட்டத்தின் கீழ் நிலையான இருப்புகளை ஏற்படுத்தவும், நடைமுறை மூலதனக் கடன் வசதிக்கும் நிதி உதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் இந்நிறுவனம் வழங்கும் இந்த உதவியைப் பற்றிய விவரங்கள் பின்வருமாறு :—

(தொகை ரூபாய் இலட்சத்தில்.)

	1980–81 (31–12–1980 வரை).		1981–82 (31–12–1981 வரை.)	
	எண்ணிக்கை.	தொகை.	எண்ணிக்கை.	தொகை.
(1)	(2)	(3)	(4)	(5)
சிறிய அளவில் வழங்கும் கடன்/கூட்டுக் கடன் திட்டத்தின் கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்ட கடன்கள்.	1,735	313.84	2,404	438.98

வட்டி வீதம்	ஆதி திராவிடர்கள்/பழங்குடியினர், மிகவும் பின்தங்கிய வகுப்பினர் ஆகியோர் உரிய காலத்திற்குள் கடனைத் திருப்பிச் செலுத்தி விட்டால் 1 சதவீதம் வட்டி சிறப்புத் தள்ளுபடியுடன் வட்டி வீதம் ஆண்டு ஒன்றுக்கு 11.25 சதவீதம். ஏனையோருக்கு, உரிய காலத்தில் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு 1 சதவீத வட்டி சிறப்புத் தள்ளுபடியுடன் 13.50 சதவீதம்.
கடனைத் திருப்பிச் செலுத்தாமலிருக்க அனுமதிக்கப்படும் கால அளவு.	6–12 திங்கள் வரை.
திருப்பிச் செலுத்த வேண்டிய கால அளவு பிணையக் காப்புத் தொகை.	பத்தாண்டு கால அளவில் (நிலையான சொத்துக்களில் 10 சதவீதத்திலிருந்து 20 சதவீதம் வரை) எளிய தவணைகளில்.

(xi) ஏனைய திட்டங்கள்.—தொழில் கொட்டகைகள் வாங்குதல், நவீன அரிசி ஆலைகள் அமைத்தல், உணவு விடுதிகள் கட்டுதல் முதலியவற்றிற்குக் கடன் வழங்குதல் போன்ற ஏனைய நிதியுதவித் திட்டங்களைத் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் செயல்படுத்துகிறது.

7. இவ்வாண்டில் கொண்டுவரப்பட்ட புதிய திட்டங்கள்/சலுகைகள்.

(i) கடன் கணக்குகள் வட்டி விதித்தல்—சில நடைமுறை மாற்றங்கள்.—கடன் தவணை வசூல் நிறுத்தி வைக்கப்பட்ட நாளுக்கும் கால அளவிற்கும் அரையாண்டு வட்டி செலுத்த வேண்டிய நாளுக்கும் இடைப்பட்ட காலத்தில் அசல் தவணைத் தொகைகளைச் செலுத்த வேண்டிய நாளன்று முறையாகச் செலுத்துவதற்கு வட்டித் தொகையைத் தள்ளிவிடுவதற்கு இந்நிறுவனத்திற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. இதில் மேற்கூறிய திருத்தம் இந்நிறுவனத்தின் 1980–81 ஆம் ஆண்டுக் கணக்குகளுக்குப் பொருந்தும். 1980 ஆம் ஆண்டு செப்டம்பர்

திங்கள் 30 தேதியுடன் முடிவடையும் அரையாண்டுக்கு வட்டித் தொகையைக் கணக்கிடுகையில் இது கடன் கணக்கில் சரிக்கட்டப்படும்.

(ii) பத்திரம் எழுதிக் கொடுத்தல்—திருத்தப் பத்திரம் எழுதுதல்.—இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி போன்ற ஏனைய நிதியுதவி நிறுவனங்கள் பின்பற்றி வருகிற நடைமுறையைக் கருத்திற் கொண்டு இயந்திரங்களை மாற்றியமைப்பதற்குத் திருத்தப் பத்திரங்கள் எழுத வேண்டுமென வலியுறுத்த வேண்டாமென தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் முடிவு செய்துள்ளது.

(iii) கடன்கள் (சிறு தொழில்கள் உத்தரவாதம்) திட்டம் 1980-81.—மத்திய அரசு சிறு தொழில்களுக்குக் கடன் உத்தரவாத திட்டத்தை நிறுத்திவிட்டாலும் வைப்பீடு காப்புறுதிக் கடன் உத்தரவாத நிறுவனம் 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து உத்தரவாதக் கடன்களைத் தொடர்ந்து அளிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதாலும், நிறுவனம் புதிய திட்டத்தின்கீழ் உத்தரவாதக் கடன்களை வைப்பீடு காப்புறுதி கடன் உத்தரவாத நிறுவனத்திடம் தேவையான .உத்தரவாதக் கடன்களைக் கோருவதற்கு அதிகாரம் பெற்றுள்ளது.

(iv) புதிய பிரிவுகளைப் பதிவு செய்யத் தடையும் தற்போதுள்ள பிரிவுகளை விரிவாக்குதலும்.—இந்திய அரசினால் பதிவு செய்யத் தடை விதிக்கப்பட்ட அல்லது இந்திய அரசு விரும்பாத விண்ணப்பங்களை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வதில்லை என நிறுவனம் முடிவு செய்துள்ளது.

இருப்பினும், ஒரு குறிப்பிட்ட தொழிற்சாலை அல்லது தொழிற்பிரிவைப் பொறுத்தமட்டில் அதனுடைய தகுதிகளை வைத்து நிதி உதவி அளிப்பது நியாயம் எனத் தோன்றும்போது நிறுவனம் அந்த இனத்தை மாவட்ட தொழில் மையத்தைக் கலந்தாலோசிக்கலாம்.

(v) உடல் ஊனமுற்றோர் நலனுக்காக சில திட்டங்களை நிறைவேற்றுதல்.—அரசின் கட்டளைகளுக்கிணங்க, உடல் ஊனமுற்றோரில் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களுக்கு எளிய நிபந்தனைகளின் பேரில் குறைந்த வட்டி வீதத்தில் நிதி உதவி அளிக்க, நிறுவனம் ஒரு திட்டத்தை நிறைவேற்ற முடிவு செய்துள்ளது.

(vi) நிறுவனத்தின் ஆண்டுக் கணக்குகள்—வணிகஞ்சார்ந்த கணக்கு முறையிலிருந்து ரொக்க அடிப்படைக்கணக்கு முறைக்கு மாற்றுவது குறித்த செயற்குறிப்பைப் பரிசீலித்தல்,—1980-81 ஆம் கணக்கு ஆண்டிலிருந்து நிறுவனம் தன்னுடைய கணக்கு

முறையை வணிகஞ்சார்ந்த அடிப்படையிலிருந்து ரொக்க அடிப்படைக்கு மாற்றிக் கொண்டுள்ளது. இந்த மாற்றத்தினால் 1980-81 ஆம் ஆண்டுக்குரிய கணக்குகளை நிறுவனம் மீண்டும் எழுத வேண்டியுள்ளது. கணக்குகளை முடிப்பதற்கும் தணிக்கைக்கும் மேலும் சற்று காலமாகும்.

(vii) செலுத்தத் தவறிய தொகைகள் மீது இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி வட்டி விதித்தல்.—கூடுதல் வட்டி விதிப்பு தற்போது பணம் செலுத்தத் தவறியவர்கள் மீண்டும் கடன் வாங்கும் விருப்பத்தைக் குறைக்கும் என்பதாலும் சில தொழில் முனைவர்களுக்கு உண்மையான இடர்பாடுகள் ஏற்படும் பொழுது இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி கூடுதல் வட்டி விதித்தால் அது நிறுவனத்திற்கு நிதி நெருக்கடியை ஏற்படுத்தும் என்பதாலும், இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியை கூடுதல் வட்டி விதிப்பு தொடர்பாக அதனுடைய நிலைமையை மறு ஆய்வு செய்யும்படி கேட்டுக் கொள்ள நிறுவனம் முடிவு செய்துள்ளது.

(viii) புதிய தொழில் முனைவர்களுக்கு, இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் தொடக்க மூலதன உதவித் திட்டம்.—தமிழ்நாட்டில் மேற்கூறிய திட்டத்தை இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் சார்பாகச் செயல்படுத்த நிறுவனம் அதிகாரம் பெற்றுள்ளது.

(ix) வட்டார/கிளை மேலாளர்களுக்கு ஒப்புதலளிக்கும் அதிகாரத்தை அதிகப்படுத்துதல்.—போக்குவரத்துக் கடனுதவி வழங்க ஒப்புதலளிக்க உரிமை பெற்ற வட்டார/கிளை மேலாளர்கள், மேலாளர்கள், உதவி மேலாளர் (திட்டம்) ஆகியோர் ஒப்புதல் அளிப்பதற்கான தற்போதுள்ள அளவு 50,000 ரூபாயிலிருந்து 75,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

(x) உலக வங்கி கடனுதவித் திட்டத்தின்கீழ் கடன் ஒப்பளிப்பு திட்டம்.— இயந்திரங்களை இறக்குமதி செய்வதாக இருந்தாலும், சாதாரண திட்டத்தின்கீழ் கடனுதவிக்கு ஒப்புதலளிக்க நிறுவனம் அதிகாரம் பெற்றுள்ளது. இத்திட்டம் சாதாரணத் திட்டத்தின்கீழ் ஒப்புதலளிக்கப் பெற்றிருந்தாலும் தேவைப்பட்டால், பின்னொரு நாளில் உலக வங்கி கடனுதவித் திட்டத்தின் ஒப்புதலளிக்கப்பட்டதாக மாற்றிக் கொள்ளலாம் என்ற நிபந்தனைக்குட்பட்டு, கடனுக்கு ஒப்புதலளிக்கப்பெறும் இம்மாற்றத்திற்கு மறுப்பேதும் இருக்கக் கூடாது.

8. கடன் வசூல்.— மின்வெட்டு, நிலக்கரி, கட்டை கரி, இன்றியமையா மூலப் பொருட்கள் முதலியன கிடைக்காமை போன்ற இடர்பாடுகளால் கடனுதவி பெற்ற பிரிவுகளின் உற்பத்தியும் இலாபமும் பாதிக்கப்பட்டிருந்தாலும், அவைகளிடமிருந்து நிறுவனம் பெருமளவிற்கு கடன் வசூல் செய்துள்ளது. கடந்த 2 ஆண்டுகளில் நிறுவனம் செய்துள்ள வசூல் பின்வருமாறு :—

1980-81 (80 டிசம்பர் வரை.)	1981-82 (81 டிசம்பர் வரை.)
(ரூபாய் இலட்சத்தில்.)	
6,21.73	8,00.69

வட்டியைச் செலுத்துவதற்கு காலத்தை நீட்டித்தல், கடனின் அசல் தொகையைத் திருப்பிச் செலுத்தும் தவணையை மாற்றி அமைத்தல், வட்டி, அசல் தொகைகளைச் செலுத்தவேண்டிய தவணைகளைத் தள்ளி வைக்க அனுமதித்தல் முதலியவற்றிற்கு அனுமதி வழங்குவதன் வாயிலாக இடர்பாடுக் கொண்டிருக்கும் தொழிற்பிரிவுகளிடம் நிறுவனம் தாராளமாகவும் நீக்குப் போக்கான முறையிலும் நடந்து வருகிறது.

9. நிதி முடிவுகள்.— ஏற்கெனவே கூறியவாறு, 1980-81 ஆம் ஆண்டில் நிறுவனம் கணக்கு முறையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. வாராக் கடன்களைக் கணக்கிலிருந்து தள்ளி விடுவதற்கு முன்பாக ஆதாயம் (வரி செலுத்துவதற்கு முன்னதாக) 1980-81, 1981-82 ஆம் ஆண்டுகளுக்கு பின் வருமாறு கணக்கிடப்பட்டுள்ளது :

1981-82 (1982 மார்ச் வரை)	ரூபாய் 125.00 இலட்சம்.
1981-82 (1982 மார்ச் வரை மதிப்பீடு).	ரூபாய் 175.00 இலட்சம்.

10. வட்டார/கிளை அலுவலகங்கள்.— தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் தற்போது கோயம்புத்தூர், மதுரை ஆகிய இரண்டு இடங்களில் வட்டார அலுவலகங்களும், கடலூர், தர்மபுரி, ஈரோடு, நாகர்கோயில், புதுக்கோட்டை, சேலம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, வேலூர் ஆகிய பத்து இடங்களில் கிளை அலுவலகங்களையும், சென்னையில் தலைமை அலுவலகத்தையும் நிறுவியுள்ளது.

மேற்கூறியவற்றிலிருந்து, தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்தின் 1981-82 ஆம் ஆண்டின் (1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரை) செயல்திறன் 1980-81 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது பெருமளவில் வளர்ச்சியடைந்துள்ளது என்பதைக் காணலாம்.

தமிழ்நாடு உப்பு நிறுவனம்.

தமிழ்நாடு உப்பு நிறுவனம் 1974 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் நிறுவப்பட்டு 1975 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 22 ஆம் நாள் முதல் இயங்கத் தொடங்கியது. அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் மற்றும் செலுத்தப்பட்ட மூலதனமும் முறையே ரூ. 100 இலட்சம், ரூ. 70 இலட்சமாகும். இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கம் உப்பு, உப்பைச் சார்ந்த இரசாயனப் பொருட்கள் மற்றும் உபபொருட்கள் ஆகியவற்றைத் தயாரிப்பது ஆகும்.

மாரியூர்-வாலிநோக்கம் உப்புத் திட்டம்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் வேறு எந்தத் தொழிலும் ஆரம்பிக்க முடியாததும் மிகவும் பின்தங்கிய பகுதியில் உள்ளதுமான மாரியூர்-வாலிநோக்கத்தில் உள்ள 5,617.66 ஏக்கராக்கள் பரப்பளவில் இந்த உப்பு திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ரூ. 145 இலட்சம் மதிப்பீட்டில் மேற்குறிப்பிட்ட பகுதியில் 1975 ஆம் ஆண்டு முதல் வளர்ச்சிப் பணிகள் தொடங்கப்பட்டது. இத்திட்டத்திற்கு ரூ. 50 இலட்சங்கள் பங்கு மூலதனமாகவும் ரூ. 38 இலட்சங்கள் கடனாகவும் ரூ. 5 இலட்சங்கள் வழிவகை முன்பணமாகவும் அரசு வழங்கியுள்ளது. உப்பு நிறுவனம் 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முடிய தமிழ் நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்திடமிருந்து ரூ. 30 இலட்சமும் கனரா வங்கியிடமிருந்து ரூ. 10 இலட்சம் கடனாகவும், மற்றும் மத்திய மூலதன உதவித் தொகை வகையில் ரூ. 7.79 இலட்சமும் பெற்றுள்ளது. 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முடிய இந்த திட்டத்திற்காக ரூ. 130 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. மேம்பாட்டு பணிகளுடன் இத்திட்டம் 1976 ஆம் ஆண்டு முதல் உப்பு உற்பத்தியைத் தொடங்கியது. ஒவ்வொரு ஆண்டிலும் உற்பத்திச்செய்யப்பட்ட அளவு பின்வருமாறு :—

ஆண்டு.	மெட்ரிக் டன்கள்.
1976	550
1977	3,400
1978	6,500
1979	22,630
1980	29,047
1981	25,600

1981ஆம் ஆண்டில் உப்பு உற்பத்தி குறைப்பாட்டிற்கான காரணம் அந்த ஆண்டு ஜூன் மற்றும் ஜூலை திங்களில் பெய்த இடைமழையும் மற்றும் செப்டம்பர் திங்களிலேயே ஆரம்பித்த பருவ மழையுமே ஆகும்.

இந்நிறுவனம் 1981ஆம் ஆண்டில் தொழிற்சாலைகளுக்குத் தேவையான தரமான 25,600 டன்கள் உப்பை உற்பத்தி செய்துள்ளது. தவிர தூள் உப்பை சிறிய பைகளிலும், நசுக்கிய உப்பையும் இந்த உப்பு திட்டத்தில் தயாரிக்கப்படுகிறது. பிரதம குழாய் ஏற்றங்களை இயங்கச் செய்ய 1981ஆம் ஆண்டு ஜூன் திங்கள் முதல் உயர் அழுத்த மின்சாரம் பெறப்பட்டது. இதனால் பயன் படுத்தப்படும் எரிசக்தி செலவு குறைந்துள்ளது. 1980ஆம் ஆண் டிசம்பர் திங்கள் 31ஆம் நாள் முடிய ரூ. 53.63 இலட்சம் சேர்ந்த இழப்பை உப்பு நிறுவனம் அடைந்துள்ளது.

இத்திட்டம் பின்தங்கிய பகுதியில் உள்ளதால் துறைமுகம் மற்றும் இருப்புப்பாதை பக்க நிலையங்கள் போன்ற வசதிகள் இல்லை. அதனால் நிறுவனத்திற்கு உற்பத்தி செய்த உப்பை விற்பனை செய்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. இருப்பினும் உப்பு நிறுவனம் உப்பை விற்பனை செய்வதற்கான எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது. மேலும் வாலிநோக்கத்தில் சிறிய துறைமுகம் ஒன்றினை ஏற்படுத்தும் படியும் அரசை நிறுவனம் கேட்டுள்ளது.

1982-ஆம் ஆண்டில் உப்புத் தொழிற்சாலை 70,000 டன்கள் அளவிலான உப்பை உற்பத்தி செய்யும். தூள் உப்பு மற்றும் நசுக்கிய உப்பு முதலியவைகளும் உற்பத்தி செய்யப்படும். இந்த ஆண்டில் ரூ. 15 இலட்சம் செலவில் பணியாளர்களுக்கான குடியிருப்பு கட்டித்தரப்படும். இதைத்தவிர தொழிற்கூட கட்டிடம், கழிவிடம், போன்றவைகளும் பணியாளர்களுக்கு கட்டித்தரப்படும்.

இந்த உப்புத் தொழிற்சாலையில் சுமார் 600 பேர்களுக்கு பருவகால வேலைவாய்ப்பும், 50 பேர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பும் உப்பை ஏற்றுதல், இறக்குதல் ஆகியவை மூலம் மறைமுக வேலைவாய்ப்பும் அளிக்கப்படுகிறது.

மரவக்காடு-வடக்காடு உப்புத் திட்டம் :

1979 ஆம் ஆண்டு முதல் ரூ. 120 இலட்சம் மதிப்பீட்டில் மரவக்காடு-வடகாடு கிராமங்களில் உள்ள 4,092.33 ஏக்கராக்கள் பரப்பளவில் உப்பு உற்பத்தி செய்வதற்கான வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ரூ. 120 இலட்சம் மதிப்பீட்டிலான விரிவான திட்டங்கள் அறிக்கைக்கு அரசு தனது ஒப்புதலை அளித்துள்ளது. இத்திட்டம் அரசின் பங்கு மூலதனம் மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் கடன் உதவி தொகை ஆகியவற்றின் மூலம் நிறைவேற்றப்படும். தற்பொழுது சுற்று அணைக்கரை மற்றும் உள்கரை போடும் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இத் திட்டத்திற்காக, அரசு பங்கு மூலதன வகையில் ரூ. 20 இலட்சமும் தவணை கடனாக ரூ. 5 இலட்சமும் வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் வளர்ச்சிப் பணிகளுக்காக 1981ஆம் ஆண்டு டிசம்பர் வரை ரூ. 9.05 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

1982ஆம் ஆண்டில் சுற்று அணைக்கரை, கால்வாய்கள், சாலைகள் போடுதல் மற்றும் 200 உப்புப் பாத்திகள் அமைத்தல் வேலைகளுக்காக ரூ. 17.84 இலட்சம் செலவிடப்படும். வாகனங்கள், இயந்திரங்கள் போன்றவைகளை வாங்குவதுடன் திட்ட அலுவலகமும் கட்டப்படும். 1982ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முதல் உப்பு உற்பத்தி தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. முதல் ஆண்டில் சுமார் 10,000 டன்கள் அளவிலான உப்பு உற்பத்தி செய்யப்படும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம் 400—500 நபர்களுக்கு பருவகால வேலைவாய்ப்பும், 20 நபர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பும் தவிர, மறைமுக வேலைவாய்ப்பும் அளிக்கப்படும். இத்திட்டம் முழுமையாக செயல்பட்டபின் 100 நபர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பும், 1,000 நபர்களுக்கு பருவகால வேலைவாய்ப்பும், தவிர, மறைமுக வேலைவாய்ப்பும் அளிக்கும்.

வேதாரண்யம் பகுதியில் இயற்கை சமநிலை (ecology) பாதிக்கப்படாத வகையில் உப்பு உற்பத்தி செய்வதை எவ்வளவு பரப்பளவில் மேற்கொள்ளலாம் என ஆராய்ந்து அறிக்கை தரும் படி பம்பாய் இயற்கை வரலாற்றுச் சங்கத்தை அரசு கேட்டுக் கொண்டது. அதன்படி சங்கமும் ஒரு அறிக்கையை அரசுக்குத் தந்துள்ளது. இந்த அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

புதிய திட்டங்கள்.

செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள வடசெம்மஞ்சேரி பகுதியில் உள்ள 540 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ. 20 இலட்சம் முதலீட்டில் உப்பு உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 20 நபர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பும், 300 நபர்களுக்கு பருவகால வேலைவாய்ப்பும் கிடைக்கும்.

தென்னாற்காடு மாவட்டம், கழுவேலி சதுப்பு நிலப்பகுதியான கண்டாடு கிராமத்திலுள்ள 1,588 ஏக்கர் பரப்பளவில் உப்பு உற்பத்தி செய்வதற்கான புலனாய்வை இந்நிறுவனம் மேற்

கொண்டுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 50 இலட்சமாகும். இத்திட்டத்தின் மூலம் 40 நபர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பும், 600 நபர்களுக்கு பருவகால வேலைவாய்ப்பும் கிடைக்கும்.

மாரியூர்-வாலிநோக்கத்தில் உற்பத்தி செய்யப்படவிருக்கும் கனிக்களிலிருந்து (Gypsum) மருத்துவ சிகிச்சைக்குப் பயன்படும் கனிக்கல் தூள் (Planting Pars) மற்றும் எப்சம் உப்பு (Epsum Salt) ஆகியவை தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பு ரூ. 15 இலட்சமாகும். இத்திட்டத்தின் மூலம் 20 நபர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பு கிடைக்கும்.

மேற்குறிப்பிட்டுள்ள திட்டங்கள் பற்றிய விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு அத்திட்டங்கள் 1982–83ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும்.

திட்ட உதவிகள் :

1982–83ஆம் ஆண்டில் தற்பொழுது செயல்படுத்தப்பட்டு கொண்டிருக்கும் திட்டங்கள் மற்றும் புதிய திட்டங்கள் ஆகியவற்றின் செலவிற்காக பங்கு மூலதனம்/கடன் வகையில் ரூ. 50 இலட்சம் ஒதுக்கும்படி அரசிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

1982ஆம் ஆண்டில்அதிக அளவிலான உப்பு உற்பத்தி செய்யப்படுவதன் மூலம் அந்த ஆண்டு பண இழப்பு தவிர்க்கப்பட்டு, வரும் ஆண்டுகளில் நிறுவனம் நல்ல முன்னேற்றத்தை அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சர்க்கரைத் தொழில்.

முன்னுரை :

நெசவுத் தொழிலுக்கு அடுத்து சர்க்கரைத் தொழில் தான் முறைப்படுத்தும் தொழில்களில் மிகப் பெரிய தொழிலாக விளங்குகிறது. இத்தொழில் வேளாண்மையை மையமாகக் கொண்ட தொழிலாக இருப்பதால் மிக முக்கிய இடத்தை வகித்து இந்திய கிராமப் பொருளாதார வளர்ச்சியில் பெரும்பங்கு வகிக்கிறது. சர்க்கரையை அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதின் மூலம், இந்நாட்டிற்கு அந்நிய செலாவாணியை ஈட்டித்தரும் தொழில்களின் வரிசையில், சர்க்கரைத் தொழிலும் ஒரு முக்கிய இடத்தை வகித்தது.

1.2. கடந்த இரண்டு பத்தாண்டுகளில் தமிழ்நாட்டில் சர்க்கரைத் தொழிலின் வளர்ச்சி குறிப்பாகக் கூட்டுறவுத் துறையில் அடைந்த வளர்ச்சி போற்றத்தக்க வகையில் உள்ளது

அபரிமிதமான கரும்பு உற்பத்தியினால் தமிழ்நாடு, நாட்டில் ஒரு முக்கியமான சர்க்கரை உற்பத்தி செய்யும் மாநிலமாக விளங்குகிறது. தமிழ்நாடு சர்க்கரை தொழிலுக்கு புதியதாக இருந்தபோதிலும் அதன் சாதனை தொடர்ந்து நன்முறையில் அமைந்துள்ளது. முதலாவது ஐந்தாண்டுத் திட்ட கால தொடக்கத்தில் இம்மாநிலத்தில் நான்கு சர்க்கரை ஆலைகளே இருந்தன. ஆனால் ஐந்தாண்டு திட்ட காலங்களில் இத்தொழில் சீரான வளர்ச்சி ஏற்பட்டு 1980–81ஆம் ஆண்டு இறுதியில் 21 சர்க்கரை ஆலைகள் இருந்தன. இவற்றில் 8 ஆலைகள் தனியார் துறையிலும், 10 ஆலைகள் கூட்டுறவுத் துறையிலும் 2 ஆலைகள் பொதுத் துறையிலும் எஞ்சிய ஒரு ஆலை மத்திய அரசு நிர்வாகத்தின் கீழும் உள்ளன. இந்த ஆய்வில் 1980–81 சர்க்கரை ஆண்டிற்கான (அக்டோபர் 80முதல் செப்டம்பர் 81வரை) சாதனைகள் முந்தைய ஆண்டில் (1979–80) சாதனைகளுடன் ஒப்பிட்டு விளக்கப்பட்டுள்ளதுடன் 1981–82ஆம் சர்க்கரை ஆண்டிற்கான திட்டங்கள் பற்றிய குறிப்பும் கொடுக்கப்பட்டுள்ளது.

சர்க்கரை துறை இயக்ககம்.

2.1. அரசு 1969ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் சர்க்கரைத் துறை இயக்ககத்தை தோற்றுவித்தது. இவ்வியக்ககம் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை ஒருங்கிணைந்து செயல்படச் செய்தல், இந்த ஆலைகளை மேற்பார்வையிடுதல் ஆகிய பணிகளை கவனித்து வருகிறது. கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் சார்புடைய பணிகளை மேற்பார்வையிடும் பொருட்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டத்தின் கீழ் கூட்டுறவு பதிவாளரின் அனைத்து அதிகாரங்களும் சர்க்கரை இயக்குநருக்கு அளிக்கப்பட்டுள்ளன.

2.2. தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகளின் உரிமம் வழங்கப்பட்ட உற்பத்தித்திறன் அளவு மற்றும் நிறுவிய உற்பத்தித் திறன் அளவு ஆகிய விவரங்களை இணைப்பு 1-ல் காணலாம்.

3. தமிழ்நாடு சர்க்கரை ஆலைகளின் செயல் முறை :

3·1. தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகளின் முன்னேற்றம் போற்றத்தக்க நிலையிலுள்ளது. இம்மாநிலம் சர்க்கரை உற்பத்தி தொழிலுக்கு புதிதாக இருந்தாலும், கரும்பு பயிரிடும் பரப்பளவை பொருத்தமட்டில் உத்திரப்பிரதேசம், மகாராஷ்டிரம், அரியானா மாநிலங்களுக்கு அடுத்து நான்காவது இடத்தைப் பெற்றுள்ளது. ஆயினும் கரும்பு உற்பத்தியை பொறுத்தமட்டில் மூன்றாவது இடத்தை வகிக்கிறது. கரும்பு விளைச்சலைப் பொறுத்த மட்டில் அதாவது ஏக்கர் மகசூலில் தமிழகம் முதலிடத்தை வகிக்கிறது. தமிழ்நாட்டில் சர்க்கரைத்

தொழிலின் சீரான செயல்பாட்டிற்கு கரும்பு உற்பத்தியாளர்களுக்கும் சர்க்கரை ஆலைகளுக்குமிடையே நிலவும் நல்லுறவே காரணமாகும்.

3.2. தமிழ்நாட்டில் கரும்பு உற்பத்தி மற்றும் சர்க்கரை ஆலைகள் பயன்படுத்திய கரும்பின் அளவு முதலிய விவரங்களை கீழ்க்கண்ட அட்டவணையில் காணலாம்.

ஆண்டு.		கரும்பு பயிரிடப்பட்ட பரப்பளவு (1,000 ஹெக்டேரில்).	உற்பத்தி செய்யப்பட்ட கரும்பின் அளவு (1,000 டன்களில்).	ஆலைகளில் பயன்படுத்தப்பட்ட கரும்பின் அளவு (1,000 டன்களில்).	மொத்த உற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட கரும்பின் அளவு (சதவிகிதத்தில்).	ஹெக்டேருக்கு சராசரி விளைச்சல் (டன்களில்).
(1)		(2)	(3)	(4)	(5)	(6)
1977–78	..	167	17,238	5,466	32	103.22
1978–79	..	154	15,431	5,768	37	100.20
1979–80	..	149*	15,059*	4,078	27	101.00
1980–81	..	136**	13,549**	4,954	37	100.00
1981–82	..	172	18,920	6,424	34	110.00
1982–83	..	175	19,600	..	..	112.00

* இறுதியாக மாற்றப்பட்ட புள்ளி விபரம். தோராய மதிப்பீடு.

** இறுதியான முன்னறிவிப்பு. **இலக்கு.

3.3. கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகளில் அரவை செய்யப்பட்ட கரும்பின் அளவும் உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரை அளவு முதலியவைகளும் மற்றும் 1981–82-ம் ஆண்டிற்கான மதிப்பீடும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

தொடர் எண்ணும் சர்க்கரை ஆண்டும்.		அரவை செய்யப் பட்ட கரும்பு (இலட்சம் டன்களில்).	சர்க்கரை உற்பத்தி (இலட்சம் டன்களில்).	சர்க்கரை கட்டுமானம் (சதவிகிதத்தில்).	உற்பத்தித் திறன் பயன் படுத்தியது (சதவிகிதத்தில்).
(1)		(2)	(3)	(4)	(5)
1. 1977–78	..	54.66	4.68	8.57	79
2. 1978–79	..	57.68	4.92	8.52	84
3. 1979–80	..	40.78	3.67	9.00	59
4. 1980–81	..	49.54	4.30	8.60	69
5. 1981–82*	..	64.24	5.57	8.67	90

* தோராய மதிப்பீடு மட்டும்.

சென்ற அரவைப் பருவத்தைக் காட்டிலும் 1981–82 அரவைப் பருவத்திற்கு கரும்பு பெருமளவில் சர்க்கரை ஆலைகளுக்குக் கிடைக்கக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு 1981–82 பருவத்திற்கு ஆதாயமுள்ள கரும்பு விலை தமிழக அரசால் அறிவிக்கப்பட்டமையும் மேலும் வெல்ல விலையில் சரிவும் காரணங்களாகும். இதன் காரணமாக சர்க்கரை உற்பத்தி சென்ற ஆண்டைவிட அதிக அளவு இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. மேற்கண்ட பட்டியலிலுள்ள விவரங்களை காணும்போது சர்க்கரை ஆலைகளின் உற்பத்தித் திறன் சீரான அளவில் உயர்ந்து வருவது தெரியவரும். 1979–80 ஆம் ஆண்டில் உற்பத்தித் திறனில் சிறிதளவு குறைவு ஏற்பட்டதற்கு, எதிர்பாராத விதமான வறட்சி நிலையும் வெல்ல உற்பத்திக்கு கரும்பு திருப்பிவிடப்பட்டதுமே காரணங்களாகும். இருப்பினும் 1980–81-ல் உற்பத்தித் திறன் அளவில் உயர்வு ஏற்பட்டது. 1981–82 அரவைப் பருவத்தில் மேலும் உயர்வு ஏற்பட்டு உற்பத்தித் திறனில் ஏறத்தாழ 90 சதவிகிதம் பயன்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

3.4. கடந்த ஐந்தாண்டுகளில் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் செயல் திறன் பற்றிய விவரங்கள் கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

தொடர் எண்ணும் ஆண்டும்.		அரவை செய்யப் பட்ட கரும்பு அளவு.	உற்பத்தி செய்யப் பட்ட சர்க்கரை அளவு.	சர்க்கரை கட்டுமானம்.	பயன் படுத்திய உற்பத்தித் திறன்.
(1)		(2) (இலட்சம் டன்களில்).	(3)	(4) (சதவிகிதத்தில்).	(5)
1. 1976–77	..	14.86	1.33	8.95	71
2. 1977–78	..	23.35	2.09	8.94	89
3. 1978–79	..	24.27	2.13	8.78	90
4. 1979–80	..	14.81	1.39	9.40	55
5. 1980–81	..	16.96	1.53	9.04	58

சென்ற ஆண்டை விட 1981—82 அரவை பருவத்தில் தமிழ் நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகளின் செயல் திறனில் நல்ல முன்னேற்றம் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆண்டு அகில இந்திய அளவில் சர்க்கரை உற்பத்தி 65 முதல் 70 இலட்சம் டன்கள் வரை இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகள் சுமார் 5.57 இலட்சம் டன்கள் சர்க்கரையை உற்பத்தி செய்யுமென எதிர்பார்க்கப் படுகிறது. இது 1980—81 ஆம் ஆண்டு உற்பத்தியைவிட 30 சதவீதம் அதிகமாகும். கடந்த மூன்றாண்டுகளில் அதாவது 1978—79, 1979—80 மற்றும் 1980—81 ஆண்டுகளில் சர்க்கரை ஆலைகளின் செயல் திறன் பற்றிய விவரங்களை இணைப்பு இரண்டில் காணலாம்.

4. கரும்பு விலை :

4.1. 1980—81 ஆம் ஆண்டு அரவைப் பருவத்துக்கு 8.5 சதவீதம் அல்லது அதற்கு குறைவான சதவிகித சர்க்கரை சத்துடைய கரும்பின் குறைந்த அளவு விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 13 என மத்திய அரசு நிர்ணயம் செய்தது. 8.5 சதவிகித சர்க்கரை சத்துக்கு அதிகமாக கிடைக்கும் 0.1 சதவிகிதம் ஒவ்வொன்றிற்கும் குவிண்டால் ஒன்றுக்கு 15.2941 பைசா வீதம் அதிகமாக கொடுக்கப்பட வேண்டுமெனவும் நிர் ணயம் செய்யப்பட்டது. கரும்பு உற்பத்திச் செலவு அதிகரித் துள்ளதால் கரும்பிற்கு மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ள குறைந்த அளவு விலை ஆதாயமற்றதென முறையீடுகள் எழுந்தன. நியாயமான மற்றும் ஆதாயமான விலை கரும்பு உற்பத்தியாளர்களுக்கு கொடுக்கப்படவேண்டுமென்ற எண் ணத்தில் தமிழ்நாடு அரசு சர்க்கரை ஆலைகளை கரும்பிற்கு அதிகப்படியான விலையை வழங்கும்படி அறிவுறுத்தியது. அதற் கிணங்க 1980—81 ஆம் ஆண்டு அரவைப் பருவத்திற்கு 8.5 சத விகிதம் அல்லது அதற்குக் குறைவான சர்க்கரை சத்துடைய கரும்புக்கான விலை டன் ஒன்றுக்கு ரூ. 175 எனவும் சர்க்கரை சத்து 8.5 சதவிகிதத்திற்கு மேற்படும்பொழுது ஒவ்வொரு 0.1 சதவிகிதத்திற்கும் குவிண்டால் ஒன்றுக்கு 15.2941 பைசா விற்குப் பதிலாக 20.5882 பைசா எனவும் தமிழ்நாடு சர்க்கரை ஆலைகள் வழங்கின.

4.2. 1980—81 ஆம் ஆண்டில் கரும்பிற்கு நிர்ணயித்த விலை யான குவிண்டாலுக்கு ரூ. 13 என்பதையே 1981—82 ஆம் ஆண்டு அரவைப் பருவத்திற்கும் 8.5 சதவீத சர்க்கரைச் சத்துடைய கரும்பிற்கு குறைந்தபட்ச விலையாக மத்திய அரசு நிர்ணயம் செய்தது. கரும்பு சாகுபடி செலவு அதிகரித்திருப்பதையும் சர்க்கரை ஆலைகளின் கொடுக்கக்கூடிய சக்தியினையும் கருத்திற் கொண்டு, தமிழ்நாடு அரசு 1981—82 ஆம் ஆண்டு அரவைப்

பருவத்திற்கு 8.5 சதவீதம் அல்லது அதற்குக் குறைவான சர்க் கரைச் சத்துடைய கரும்பிற்குக் குறைந்த அளவு விலை, டன் ஒன்றுக்கு ரூ. 165 எனவும் சர்க்கரைச் சத்து 8.5 சதவீதத்திற்கு மேற்படும் பொழுது ஒவ்வொரு 0.1 சதவீதத்திற்கு குவிண்டால் ஒன்றுக்கு 19.4117 பைசா வீதமும் வழங்க சர்க்கரை ஆலை களை அறிவுறுத்தியது.

4.3. மத்திய அரசு நிர்ணயித்த கரும்பு விலையும் தமிழ் நாட்டில் உள்ள சர்க்கரை ஆலைகள் வழங்கிய கரும்பு விலை களின் விவரங்களையும் இணைப்பு மூன்றில் காணலாம்.

4.4. கரும்பு பயிரிடப்படும் பரப்பளவை நிலைப்படுத்துவ தாலும் ஒவ்வொரு சர்க்கரை ஆலைக்கும் வரையறுக்கப்பட்ட கரும்புப் பகுதிகளில் கரும்பு பயிரிடுதலை முழுமையடையச் செய்வ தாலுமே ஆலைகளுக்கு எவ்வித ஏற்றத்தாழ்வும் இல்லாமல் சீரான கரும்பு விநியோகத்தை உறுதிப்படுத்த இயலும். தற்போது நடைமுறையில் உள்ளது போல் ஆலைகளின் அரவைப் பருவம் தொடங்கும்போது கரும்பு விலையை அறிவிக்காமல் கரும்பு நடும் பருவத்திற்கு முன்னதாகவே கரும்பு விலையை அறிவித்தலின் மூலமே இது சாத்யமாகும். இதனால் தற்போது சர்க்கரை உற்பத்தியில் ஏற்பட்டு வரும் ஏற்றத் தாழ்வு நீக்கப்படுவது மட்டு மல்லாமல் சர்க்கரை உற்பத்தியை அதிகரிக்கவும் முடியும்.

5. சர்க்கரை விலை :

5.1. மத்திய அரசு சர்க்கரை விற்பனை மற்றும் விநி யோகத்தின் மீது பகுதிக் கட்டுப்பாடு முறையை செயல்படுத்தி யுள்ளது. இதன்படி மொத்த உற்பத்தியில் 65 சதவீத சர்க் கரையை லெவி சர்க்கரையாக மத்திய அரசு எடுத்துக்கொள்ளும். எஞ்சியுள்ள 35 சதவிகித சர்க்கரை மட்டுமே சர்க்கரை ஆலை களால் வெளிச் சந்தையில் விற்க அனுமதிக்கப்படும்.

5.2. 1980-81 ஆம் ஆண்டு அரவைப் பருவத்திற்கு மத்திய அரசு லெவி சர்க்கரையின் விலையை குவிண்டாலுக்கு ரூ. 297.22 ஆக (இ. 30 ரகத்திற்கு) நிர்ணயம் செய்தது. (ஆயத்தீர்வை நீங்கலாக).

5.3. மத்திய அரசு பல்வேறு மண்டலங்களுக்கான, 1981-82 ஆம் ஆண்டுக்கான லெவி சர்க்கரையின் விலையை அறிவித் துள்ளது. அதன்படி தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி மண்ட லத்திற்கு லெவி சர்க்கரையில் விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 302.13 ஆக (இ. 30 ரகத்திற்கு) நிர்ணயம் செய்துள்ளது (ஆயத்தீர்வை நீங்கலாக).

6. கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டம் :—

6.1. சர்க்கரைத் துறை இயக்குநர், கரும்பு ஆணையர் என்ற முறையில் சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு பயிரிடப்படும் பகுதிகளை நிர்ணயிப்பதுடன் சர்க்கரை ஆலைகளை சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள சாலைகளை மேம்படுத்தும பணிகளையும் கவனித்து வருகின்றார். இதற்காக பொறியியல் பணியாளர்கள் இவ்வியக்கத்தின் கீழ் பணிபுரிந்து வருகின்றனர். கரும்பு சாலை அபிவிருத்திக்கான செலவு சர்க்கரை ஆலைகளிடமிருந்து வசூலிக்கப்படும். கரும்பு செஸ் நிதியிலிருந்து செலவிடப்படுகிறது கரும்பை வெட்டிய பின் தடங்கலின்றி உடனுக்குடன் ஆலைகளுக்கு எடுத்துச் செல்ல நல்ல பராமரிக்கப்பட்ட சாலைகள் அவசியமானதால் அதிகம் கரும்பு விளையும் பகுதிகளுக்கும் சர்க்கரை ஆலைகளுக்கும் இடையே புதிய சாலைகளை அமைக்க அரசு ஆர்வம் காட்டி வருகிறது.

6.2. கடந்த ஆண்டுகளில் இத்திட்டத்திற்கென செலவிடபட்ட தொகைகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

ஆண்டு.			(ரூபாய் இலட்சத்தில்.)
1978-79	..	..	109.92
1979-80		..	150.00
1980-81	..	..	180.41
1981-82	..	..	230.00 (திட்ட ஒதுக்கீடு.)

7. சர்க்கரை ஆராய்ச்சி நிறுவனம்:

7.1. தமிழ்நாட்டில் சர்க்கரை தொழிலின் விரைவான வளர்ச்சியால், இத்தொழிலுக்குத் தேவையான அனுபவமிக்க தொழில் நுட்ப பணியாளர்கள் போதுமான அளவு இல்லாத காரணத்தினால் அதனை ஈடு செய்யும் பொருட்டு 1979 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு சர்க்கரை ஆராய்ச்சி நிறுவனம் ஒன்றை ஏற்படுத்தியது. இந்த நிலையம் சர்க்கரை ஆலைகளின், உற்பத்தி பணியாளர்களுக்கு தொழில் நுட்ப பயிற்சி அளித்து வருகிறது.

8. தமிழ்நாடு கரும்பு பண்ணைக் கழகம்:

8.1. தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு 41 ஆவது சட்டத்தால் திருத்தப்பட்ட, தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்த்திருத்தங்கள் (நில உச்ச வரம்பை நிர்ணயித்தல்) சட்டத்தை செயல்படுத்திய

தன் விளைவாக, அரசால் எடுத்துக்கொள்ளப்பட்ட உபரி நிலங்களில் பயிரிடும் நோக்கத்துடன் தமிழ்நாடு அரசு 22—2—1974 அன்று கரும்பு பண்ணைக் கழகத்தை நிறுவியது. நில உரிமையாளர்களிடம் திருப்பிக் கொடுக்கப்பட்ட குத்தகை நிலங்கள் நீங்கலாக கரும்பு பண்ணைக் கழகத்திடம் தற்போது 3,996 ஏக்கர் நிலங்கள் உள்ளது. இக்கழகத்தின் முக்கிய நோக்கம் மேற்படி நிலங்களில் கரும்பு, நெல் மற்றும் இதர பயிர்களை பயிரிடுவதேயாகும். சட்டரீதியான கடமைப்பாட்டின் படி இங்கு பயிரிடப்படும் கரும்பு முழுவதும் வடபாதி மங்கலத்தில் உள்ள திரு. ஆரூரான் சர்க்கரை ஆலைக்கு அளிக்கப்படுகிறது. இங்கு விளையும் நெல் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கும் மற்றும் இதர வியாபாரிகளுக்கும் விற்கப்படுகிறது. கரும்பு பண்ணைக் கழகத்தின் நிலங்களில் கரும்பு சாகுபடியை அதிகரிக்கச் செய்வதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய அரசு ஒரு நிபுணர் குழுவினை நியமித்துள்ளது. இக்குழுவின் அறிக்கை அரசின் ஆய்வில் உள்ளது.

8.2. இந்நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 2 கோடி ஆகும். இதில் ஒரு கோடி ரூபாய் வழங்கப்பட்ட பங்கு மூலதனமாகும், இதுவரை இந்நிறுவனத்தில் தமிழ்நாடு அரசு ரூ. 27·50 இலட்சம் பங்கு முதலீடு செய்துள்ளது; மேலும் ரூ. 15 இலட்சம் நீண்ட கால கடனாகவும் ரூ. 10 இலட்சம் வழிவகை முன் பணமாகவும் அளிக்கப்பட்டுள்ளது. 30—6—1980 வரையில் இக்கழகத்தின் திரண்ட இழப்புத் தொகை ரூ. 56.04 இலட்சமாகும். 1980-81 ஆம் ஆண்டில் (30—6—1981) இக்கழகம் ரூ. 13.68 இலட்சம் நிகர லாபமாக ஈட்டியுள்ளது. தவிர இக் கழகம் 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 8.19 இலட்சம் இலாபம் ஈட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

9. தமிழ்நாடு சர்க்கரை நிறுவனம் :

9.1. அரசு 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு சர்க்கரை நிறுவனத்தை நிறுவியது. அதன்படி இக்கழகம் தஞ்சாவூர் அருகிலுள்ள குருங்குளம் கிராமத்தில் ஒன்றும் திருச்சிக்கு அருகிலுள்ள எறையூர் கிராமத்தில் ஒன்றும் ஆக இரண்டு சர்க்கரை ஆலைகளை பொதுத்துறையில் நிறுவியுள்ளது.

9.2. பொதுத் துறையிலேயே புதிய சர்க்கரை ஆலைகள் நிறுவப்பட வேண்டும் என்ற கொள்கையினை மாற்றி புதிய ஆலைகள் கூட்டுறவுத் துறையில் நிறுவப்பட வேண்டுமென 1977—ல் அரசு முடிவு செய்தது. அதன்படி தென்னாற்காடு மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டத்தில் சர்க்கரை ஆலை நிறுவுவதற்காக பெறப்பட்ட உரிமம் கூட்டுறவு முறையில்

சர்க்கரை ஆலை நிறுவும் பொருட்டு மாற்றப்பட்டது. ஆயினும், இந்த ஆலையின் நிர்மாணப் பணி தமிழ்நாடு சர்க்கரை நிறுவனத்தாரால் மேற்கொள்ளப்பட்டு அரவை தொடங்கியவுடன் அதனை அவ்வாலையினரிடம் ஒப்படைக்கும்படி அரசு அறிவுறுத்தியது. அதன்படி தமிழ்நாடு சர்க்கரை நிறுவனம், அந்த ஆலையின் நிர்மாணப்பணியினை 18 மாதங்களுக்கும் குறைவான கால அளவில் செய்து முடித்தது. அவ்வாலை 1980 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் அதன் அரவையினை தொடங்கியது.

9.3. நாள் ஒன்றுக்கு 1,250 டன் கரும்பு அரைக்கும் திறன் கொண்ட இரு புதிய கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை செங்கல்பட்டு மாவட்டம் திருத்தணி வட்டத்தில் ஒன்றும் தஞ்சாவூர் மாவட்டம் மாயூரம் வட்டத்தில் ஒன்றும் அமைக்க மத்திய அரசிடம் உரிமம் கோரப்பட்டுள்ளது. திருத்தணி திட்டத்திற்கான உரிமம் மத்திய அரசினரால் விரைவில் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சிறிய சர்க்கரை ஆலை:

9.4. 1,250 டன் கரும்பு அரைக்கும் திறன் சர்க்கரை ஆலைகளை நிறுவுவதைத் தவிர நாள் ஒன்றுக்கு 500 டன் கரும்பு அரைக்கும் சிறிய சர்க்கரை ஆலைகளை, கரும்பு குறைவாகக் கிடைக்கும் பகுதியில் நிறுவும் திட்டம் பரிசீலனையில் உள்ளது. மத்திய அரசு உரிமம் வழங்கினால் ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இரண்டு சிறிய சர்க்கரை ஆலைகளை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

10. காகிதத் தொழிற்சாலை :

சர்க்கரை ஆலைகளில் கிடைக்கும் உபரி கரும்புச் சக்கையை பயன்படுத்தி நாள் ஒன்றுக்கு 10 முதல் 15 டன் வரை காகிதம் உற்பத்தி செய்யும் சிறிய அளவிலான தொழிற்சாலை அமைக்க உத்தேசிக்கப்பட்டது. இதன்படி மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலைப் பகுதியில் கூட்டுறவு முறையில் ஒரு சிறிய காகிதத் தொழிற்சாலை அமைக்க அரசு அனுமதி அளித்துள்ளது. இதற்காக ரூ. 30 இலட்சம் பங்கு மூலதனமாக அரசு அளித்துள்ளது. இக்காகித ஆலையை நிறுவும் பொறுப்பு தமிழ்நாடு சர்க்கரை நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் தோராய மதிப்பு சுமார் 360 இலட்சமாகும். இத்திட்டத்திற்கான தொடக்க வேலைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இச்சிறிய சர்க்கரை ஆலையின் செயல் திறனைப் பொறுத்து பிற சர்க்கரை ஆலைப் பகுதிகளிலும் இது போன்ற சிறிய காகித ஆலை அமைப்பது பற்றி பரிசீலிக்கப்படும்.

11. இயந்திரங்கள் பழுது பார்க்கும் தொழில் கூடம் நிறுவுதல்,

சர்க்கரை ஆலைகளில் உள்ள கரும்பு பிழியும் உருளைகளின் மேற்பரப்பிலுள்ள உருக்குப் பகுதியினை ஆண்டுதோறும் புதுப்பிக்க போதுமான வசதிகள் தமிழ்நாட்டில் இல்லை. எனவே, மேற்குறிப்பிட்ட வேலைகளைச் செய்வதை முதன்மையாகக் கொண்டும், மேலும் சர்க்கரை ஆலை இயந்திரங்களுக்கு தேவைப்படும் சிறிய உட்பொருட்களை தயார் செய்வதற்கு ஒரு தொழிற்கூடம் அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள மறைமலை நகரில் 5.5 ஏக்கர் நிலப்பரப்பு சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தினால் (எம்.எம்.டி.ஏ.) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்த நிலத்தின் விலையில் 25 சதவீதமான ரூ. 1,03,125 முன் பணமாக கொடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீடு சுமார் ரூ. 50 இலட்சமாகும். இதில் அரசின் மூலதனப் பங்கு ரூ. 20 இலட்சமாகும்.

12. சர்க்கரைத் தொழிலில் வேலை வாய்ப்பு :

சர்க்கரைத் தொழில் நேரடியாகவும் மற்றும் மறைமுகமாகவும் அதிகப்படியான நபர்களுக்கு குறிப்பாக கிராமப் புற மக்களுக்கு வேலை வாய்ப்புக்கு வகை செய்கிறது. சர்க்கரைத்தொழில் நேரடியாக சுமார் 18 ஆயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது. தவிர, இத்தொழிலை சார்ந்துள்ள இதர தொழில்களான விவசாயம், போக்குவரத்து மற்றும் பிற தொழில்களின் மூலமாக பல இலட்சம் பேர்களுக்கு மறைமுகமாக வேலை வாய்ப்புக் கிடைக்கிறது.

13. பொதுத் துறையிலோ அல்லது கூட்டுறவுத் துறைலோ புதிய சர்க்கரை ஆலைகளை அமைக்க முயற்சி மேற்கொள்ளப்படாத இடங்களில், கரும்பு கிடைப்பதைப் பொறுத்தும் ஏற்கனவே இயங்கி வரும் பிற சர்க்கரை ஆலைகளின் செயல்பாடுகளுக்கும் ஊறு நேரா வண்ணமும் சர்க்கரை ஆலைகள் அமைக்க தனியார் துறைக்கு ஊக்கமளிக்கலாம் என்று அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. இவ்விஷயம் தொடர்பாக ஐந்து விண்ணப்பங்களும் ஆலையின் நிறுவிய திறனை விரிவாக்கம் செய்வது பற்றி இரு விண்ணப்பமும் பெறப்பட்டு அவைகள் அரசின் ஆய்வில் உள்ளன.

இணைப்பு—1

தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகளின் உரிமம் வழங்கப் பட்ட உற்பத்தித்திறனளவு மற்றும் நிறுவிய உற்பத்தித் திறனளவு ஆகியவற்றின் விவரங்கள்:—

தொடர் எண்ணும் சர்க்கரை ஆலையின் பெயரும்.	நாளது நாள் வரையிலான உரிமம் வழங்கப் பட்ட உற்பத்தித் திறன்.	நாளது நாள் வரையிலான நிறுவிய உற்பத்தித் திறன்.
(1)	(2)	(3)
	(நாளொன்றுக்கு டன்களில்)	
கூட்டுறவுத் துறை—		
1. ஆம்பூர்	2,200	2,200
2. மதுராந்தகம்	1,750	1,750
3. அமராவதி	2,000	2,000
4. சேலம்	2,500	2,500
5. கள்ளக்குறிச்சி	2.000	2,000
6. நேஷனல்	1,500	1,500
7. தர்மபுரி	1,250	1,250
8. வேலூர்	1,250	1,250
9. திருப்பத்தூர்	1,250	1,250
10. உளுந்தூர்பேட்டை ..	1,250	1,250
மொத்தம் ..	16,950	16,950

தொடர் எண்ணும் சர்க்கரை ஆலையின் பெயரும்.	நாளது நாள் வரையிலான உரிமம் வழங்கப் பட்ட உற்பத்தி திறன்.	நாளது நாள் வரையிலான நிறுவிய உற்பத்தி திறன்.
(1)	(2)	(3)
தனியார் துறை—		
11. இஐடி பாரி	4,000	4,000
12. காவேரி*	1,000	1,250
13. டெக்கான்	2,000	1,850
14. சவுத் இந்தியா	1,500	2,700
15. சக்தி	4,000	4,000
16. அருணா	4,000	4,000
17. மதுரா	1,100	600
18. கோத்தாரி	4,000	1,500
19. திரு. ஆரூரான்	2,000	2,000
மொத்தம் ..	23,600	21,900
பொதுத் துறை—		
20. தஞ்சாவூர்	1,250	1,250
21. பெரம்பலூர்	1,250	1,250
மொத்தம் ..	2,500	2,500
சுருக்கம் —		
கூட்டுறவுத் துறை	16,950	16,950
தனியார் துறை	23,600	21,900
பொதுத் துறை	2,500	2,500
மொத்தம் ..	43,050	41,350

* இந்த ஆலை பிப்ரவரி 1979 முதல் மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ் உள்ளது.

127—6—35

இணைப்பு 2

தமிழ்நாடு சர்க்கரை ஆலைகள் அரைவை செய்த கரும்பின் அளவு சர்க்கரை உற்பத்தி மற்றும் சர்க்கரை கட்டுமானம் குறித்த விவரங்கள்.

தொடர் எண்ணும் சர்க்கரை ஆலைகளின் பெயரும்.	1978-79			1979-80.			1980-81*		
	அரைவை செய்த கரும்பின் அளவு. (டன்களில்)	உற்பத்தி செய்யப் பட்ட சர்க்கரை.	சர்க்கரை கட்டு மானம். (சதவீதத்தில்)	அரைவை செய்த கரும்பின் அளவு. (டன்களில்)	உற்பத்தி செய்யப் பட்ட சர்க்கரை.	சர்க்கரை கட்டு மானம். (சதவீதத்தில்)	அரைவை செய்த கரும்பின் அளவு. (டன்களில்)	உற்பத்தி செய்யப் பட்ட சர்க்கரை.	சர்க்கரை கட்டு மானம். (சதவீதத்தில்).
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)
1 கூட்டுறவுத் துறை.—									
1 ஆம்பூர் ..	317,336	29,426	9.28	119.194	12,344	10.36	900,21	8,177	9.08
2 மதுராந்தகம்	269,332	23,583	8.76	148.968	13,897	9.33	209,083	19,336	9.25
3 அமராவதி ..	236,147	20,391	8.63	70.080	5,654	8.07	176,135	15,967	9.07
4 சேலம் ..	460,959	38,878	8.43	367.956	32,608	8.36	300,212	26,684	8.89
5 கள்ளக்குறிச்சி ..	265,532	20,455	7.70	151.294	13,700	9.05	203,464	17,327	8.52
6 நேஷனல் ..	239,274	20,298	8.48	184.780	17,232	9.33	200,700	18,300	9.12
7 தர்மபுரி ..	275,731	26,457	9.60	193.309	19,590	10.15	213,402	20,750	9.72
8 வேலூர் ..	185,698	15,953	8.61	133.967	12,524	9.35	122,590	10,981	8.96
9 திருப்பத்தூர் ..	177,491	17,667	9.95	111.304	11,674	10.49	100,796	9,346	9.27
10 உளுந்தூர் பேட்டை.	..	..	..	..	..	..	79,616	6,504	8.17
கூட்டுறவுத் துறை மொத்தம் ..	2,427,400	213,108	8.78	1,480.852	139,223	9.40	1,696,019	153,372	9.04
2. தனியார் துறை—									
11 இஐடி பாரி	442,783	34,621	7.82	391,971	31,731	8.10	449,899	35,560	7.90
12 காவேரி* ..	169,183	12,096	7.50	172,386	13,539	7.85	221,596	17,890	8.07
13 டெக்கான்	392,802	32,509	8.28	245,498	21,220	8.64	327,085	27,938	8.54
14 சவுத் இந்தியா	276,540	21,962	7.94	194,431	16,569	8.55	253,985	20,843	8.21
15 அருணா ..	325,380	29,275	9.00	273,373	25,824	9.45	465,670	40,891	8.78
16 சக்தி ..	801,653	66,528	8.30	590,589	52,451	8.88	648,514	57,256	8.83
17 மதுரா ..	107,818	8,457	7.84	103,321	8,154	7.89	151,731	10,360	6.83
18 கோத்தாரி ..	234,507	19,695	8.40	210,726	18,830	8.94	223,622	18,957	8.4[illegible]
19 திரு ஆரூரான்	219,084	18,972	8.66	133,180	12,870	9.66	172,542	16,762	9.71
தனியார்துறை மொத்தம். ..	2,969,750	244,715	8.24	2,315,475	201.278	8.69	2,914,644	246,437	8.45
3. பொதுத் துறை—									
20 தஞ்சாவூர்	183.349	16.794	9.16	127,511	11.813	9·26	202,790	17,770	82.76
21 பெரம்பலூர் ..	187.497	16.923	9.03	154-337	14.744	9·55	140,211	12,615	9,00
பொதுத்துறை மொத்தம் ..	370.846	33.717	9.09	281,848	26.557	9·42	343,001	30,385	8,85
தமிழ்நாடு பெரு மொத்தம் ..	5,767.996	491.540	8.52	4,078,175	367.058	9·00	4,953 646	430,194	8.68

* இந்த ஆலை 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் முதல் மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ் உள்ளது.

இணைப்பு—3.

கரும்பு விலை.

(டன் ஒன்றுக்கு விலை-ரூபாயில்).

தொடர் எண்ணும் சர்க்கரை ஆலையின் பெயரும்.	1980–81. மத்திய அரசு நிர்ணயித்த சட்டபூர்வ குறைந்த அளவு. கரும்பு விலை.	1980–81. தமிழ்நாடு அரசு பரிந்துரைத்த விலை.	1980–81. ஆலைகள் கொடுத்த விலை.	1981–82. மத்திய அரசு நிர்ணயித்த சட்டபூர்வ குறைந்த அளவு கரும்பு விலை.	1981–82. தமிழ்நாடு அரசு பரிந்துரைத்த விலை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
கூட்டுறவுத் துறை—					
1 ஆம்பூர்	159.10	214.10	214.10	139.20	176.60
2 மதுராந்தகம்	146.80	197.60	197.60	145.30	184.40
3 அமராவதி	130.00	175.00	175.00	139.20	176.60
4 சேலம்	140.70	189.40	189.40	137.60	174.70
5 கள்ளக்குறிச்சி	140.70	189.40	189.40	131.50	166.90
6 நேஷனல்	143.80	193.50	193.50	143.80	182.50
7 தர்மபுரி	157.50	212.10	212.10	154.50	196.10
8 வேலூர்	146.80	197.60	197.60	139.20	176.60
9 திருப்பத்தூர்	160.60	216.20	216.20	142.20	180.50
10 உளுந்தூர்பேட்டை	139.20	189.40	189.40	130.00	165.00
தனியார் துறை—					
11 இஐடி பாரி	136.10	183.20	183.20	130.00	165.00
12 காவேரி *	137.60	185.30	185.30	131.50	166.90
13 டெக்கான்	134.60	181.20	186.50	134.60	170.80
14 சவுத் இந்தியா	131.50	177.10	177.10	130.00	165.00
15 அருணா	148.40	199.70	199.70	140.70	178.60
16 சக்தி	140.70	189.40	225.00	140.70	178.60
17 மதுரா	130.00	175.00	180.00	130.00	165.00
18 கோத்தாரி	142.20	191.50	191.50	136.10	172.10
19 திரு ஆரூரான்	151.40	203.80	203.80	152.90	194.10
பொதுத்துறை—					
20 தஞ்சாவூர்	145.30	195.60	195.60	140.70	178.60
21 பெரம்பலூர்	148.40	199.70	199.70	140.70	178.60

குறிப்பு:—1980–81 ஆம் ஆண்டிற்கான கரும்பின் சட்டபூர்வ இறுதி விலை, மத்திய அரசிடமிருந்து "எல்" மதிப்பு கிடைக்கப்பெற்ற பின்னர் நிர்ணயிக்கப்படும்.

* இந்த ஆலை 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் முதல் மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ் உள்ளது.

தமிழ்நாட்டு பீங்கான் நிறுவனம்.

தொழில்துறை மற்றும் டான்சியின்கீழ் செயல்பட்டு வந்த இயந்திர செங்கல் தொழிற்சாலை மற்றும் இதர பீங்கான் தொழிலகங்களை ஒருங்கிணைத்து இயக்கவும், மாநிலத்தில் பீங்கான் தொழிற்சாலை விரிவுபடுத்தவும், செயல் திறனில் முன்னேற்றம் காணவும் டாசல் பீங்கான் நிறுவனம் 1973 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 14 ஆம் நாளில் நிறுவப்பட்டது. ரூபாய் 200 இலட்சம் அதிகார மூலதனத்துடன் 1974 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 15 ஆம் நாள் முதல் இந்நிறுவனம் செயல்பட்டு வருகிறது. தற்போதைய செலுத்தப்பட்ட மூல்தனம் ரூபாய் 129·79 இலட்சங்களாகும்.

டாசல் நிறுவனத்தின்கீழ் விருத்தாசலம், திருமழிசை, ஓமலூர், பெரம்பூர் ஆகிய இடங்களில் இயங்கி வரும் தொழிலகங்களைக் கீழ்க்கண்டவாறு தொகுக்கலாம் :—

வணிக அடிப்படையிலான பிரிவுகள் :—

டாசல் பீங்கான் தொழிற்சாலை, விருத்தாசலம்.

டாசல் உப்பு மெருகிட்ட கற்குழாய் தொழிற்சாலை, விருத்தாசலம்.

டாசல் இயந்திர செங்கல் தொழிற்சாலை, திருமழிசை.

வளர்ச்சி நோக்கு பிரிவுகள் :—

டாசல் பீங்கான் பணி வசதி நிலையம், விருத்தாசலம்.

பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பு அடிப்படையிலான பிரிவுகள் :—

டாசல் பீங்கான் கலை நிலையம், விருத்தாசலம்.

டாசல் பீங்கான் கலை நிலையம், பெரம்பூர்.

டாசல் பீங்கான் தொழில் மையம், ஓமலூர்.

பீங்கான் துப்புரவு சாமான்கள், பீங்கான் கோப்பை, தட்டு வகை, குறைந்த மின் அழுத்த தடைகள், உப்பு மெருகிட்ட கற்குழாய்கள், பீங்கான் கலை பொருட்கள் மற்றும் ஜாடிகள் ஆகியவை இந்நிறுவனத்தின் உற்பத்திப் பொருட்களாகும். பீங்கான் தொழில் வளர்ச்சிக்காக மூலப் பொருட்களை பதப்படுத்திக் கிடைக்கச் செய்தல் மற்றும் குளையிடுதல் வசதிகள்

அமைந்த தனி தொழிற்பேட்டையை இயக்குவதும் டாசல் நடவடிக்கைகளில் அடங்கும். டாசல் பீங்கான் தொழிற்சாலை பல தரப்பட்ட பீங்கான் பொருட்களை மாதம் ஒன்றுக்கு சுமார் 100 டன்கள் வீதம் உற்பத்தி செய்கிறது. டாசல் உப்பு மெருகிட்ட கற்குழாய் தொழிற்சாலை பொது சுகாதாரத்திற்கு அவசியமான கற்குழாய்களை சுமார் 500 டன்களுக்கு உற்பத்தி செய்கிறது. பீங்கான் கலை நிலையங்கள் ஆண்டிற்கு சுமார் ரூபாய் 9 இலட்சம் மதிப்புள்ள பீங்கான் கலைப் பொருட்களை உற்பத்தி செய்கின்றன. மேலும், பீங்கான் பொருள் உற்பத்தியில் சுமார் 25 பேருக்கு தொழில் நுட்ப பயிற்சி அளிக்கப்படுகிறது. மாதம் ஒன்றுக்கு ரூபாய் 50 ஆயிரம் பெறுமான நல்ல தரமான ஊறுகாய் ஜாடிகள் ஓமலூரிலுள்ள பீங்கான் தொழில் மையத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

மாதம் ஒன்றுக்கு 18 இலட்சம் செங்கற்களை உற்பத்தி செய்யும் திறனுடைய இயந்திரச் செங்கல் தொழிற்சாலை தொழில் நுட்ப சிக்கல்களாலும், பெரிய அளவில் பழுதடைந்துள்ள பழைய இயந்திரங்களாலும் சுமார் 4 இலட்சம் செங்கற்களைத்தான் உற்பத்தி செய்கிறது. இத் தொழிற்சாலையின் எதிர் கால அமைப்பு அரசின் பரிசிலனையில் உள்ளது.

எல்லா தொழிலகங்களின் மொத்த ஆண்டு உற்பத்தி சுமார் ரூபாய் 170 இலட்சங்களாகும். சுமார் 1,100 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது. இந்நிறுவனத்தின் உற்பத்தி பொருட்கள் தரத்திற்கும், மலிவான விலைக்கும் பெயர் பெற்றவையாகும். பணி வசதி நிலையத்துடன் கூடிய தொழிற்பேட்டை பீங்கான் சிறு தொழில் முனைவர்களுக்கு சிறந்த முறையில் பணி வசதி அளித்து மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக விளங்குகிறது. இவ்வசதிகளினால் சுமார் 500 பேர்களுக்கு மறைமுக வேலை வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

டாசல் நிறுவனம் அண்மையில் தமிழ்நாட்டிலுள்ள கிராமப்புற மட்பாண்ட தொழிலாளர்களின் நிலைமைகள், தேவைகள் மற்றும் அவர்களின் வாணிப சம்பந்தப்பட்ட புள்ளி விவரங்களை கணக்கெடுத்து முடித்துள்ளது. முக்கியத் தேவையான களிமண் கிடைக்காதது மற்றும் செய்த பொருட்களை சந்தைக்கு கொண்டு செல்வது மட்பாண்ட தொழிலாளர்களின் முக்கிய பிரச்சினைகள் ஆகும். அவர்களுக்கு உதவி செய்யும் பொருட்டு, தரமான உற்பத்திப் பொருட்களை மேம்படுத்தும் வகையில், நவீன கருவிகள் மற்றும் தொழில் நுட்ப ஆலோசனைகள் வழங்குவதற்காக தகுந்த பணி வசதி நிலையங்கள் அமைக்கும் நிலையில் உள்ளன. மேலும் விருதாசலத்திலும், ஓமலூரிலும் பீங்கான் சாமான்கள் மற்றும் குறைந்த மின் அழுத்தத் தடைகள் செய்வதில் சுமார் 20 பேருக்கு தொழில் நுட்ப பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

நிறுவனம் 1982—83 ஆம் ஆண்டில் உப்பு மெருகிட்ட கற்குழாய் தொழிலகத்திலுள்ள மேலும் இரண்டு பழுதடைந்த சூளைகளை ரூபாய் 4 இலட்சம் செலவில் புதுப்பிக்க உத்தேசித்துள்ளது. இதனால் அந்த சூளைகள் முழுத் திறனுடன் இயங்க இயலும். இது தவிர, ஆண்டொன்றுக்கு 8,000 டன் திறன் கொண்ட உப்பு மெருகிட்ட கற்குழாய்களை உற்பத்திச் செய்யும் தொழிற்சாலை ஒன்று ரூபாய் 92·50 இலட்சம் மொத்த செலவில் அமைக்க இந்நிறுவனம் உத்தேசித்துள்ளது. இத்தொழிற்சாலை பின்தங்கிய ஏதாவது ஒரு மாவட்டத்தில் அமைக்கப்பட்டு சுமார் 200 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும்.

தமிழ்நாடு மின்னணுத் தொழில் நிறுவனம்.

தமிழ்நாடு மின்னணுத் தொழில் நிறுவனம், தமிழ்நாடு அரசுக்கு முழுதும் சொந்தமான தனியார் நிறுவனமாக அமைக்கப்பட்டது. கூட்டுத் துறைத் திட்டங்களில் பங்குகொள்வது உட்பட மின்னணுவியல் துணை தொழில்களை வளர்ச்சியுறச் செய்வதும், மேம்படுத்துவதும் இந்நிறுவனத்தின் நோக்கமாகும். இந்நிறுவனம், 1980—81—ல் தன்னுடைய பணிகளைத் தொடங்கியது. இது பரிசீலனை செய்வதற்காக சில திட்டங்களை எடுத்துக் கொண்டது. தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதியான ஓசூரில் '' அலுமினியம் எலக்ட்ரானிலிட்டிக் கெப்பாசிட்டர்கள் '' தயாரிக்கும் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக எடுத்துக் கொண்டது. ஜப்பானிய நிறுவனம் இயந்திரங்களை வழங்க ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுள்ளது. ஓசூரில் உள்ள தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவன இணையத்தில் கட்டப்பட்ட தொழிற்கூடம் ஒன்று கையகப்படுத்தப்பட்டுள்ளதால் இயந்திரங்கள் வந்து சேர்ந்தவுடன் அடுத்த ஆண்டு தொடக்கத்திலேயே வணிக அளவில் உற்பத்தி தொடங்கப்படும். இத் திட்டத்திற்கான மூலதனச் செலவு ரூ. 163 இலட்சமாகும். இது ஆண்டொன்றுக்கு 50 மில்லியன் எலக்ட்ராலிட்டிக் கெப்பாசிட்டர்களை உற்பத்தி செய்யும் திறன் கொண்டது. தொழில் நுட்பப் பிரிவிலும், தொழில் நுட்பம் அல்லாத பிரிவிலும், நிர்வாக ஏனைய வகைகளில் 150 முதல் 200 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்திடமிருந்தும், தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்திடமிருந்தும் இத்திட்டத்திற்கு கால வரம்புக் கடனாக ரூ. 90 இலட்சம் பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

2. ரூ. 19 இலட்சம் மூலதனச் செலவுடன் ஆண்டொன்றுக்கு 50,000 டிஜிட்டல் மின்னணுவியல் கைக் கடிகாரங்களைத் தயாரிக்கும் மற்றொரு திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது. இத் திட்டத்திற்கு ஜப்பானிலிருந்து தொழில் நுட்ப

ஆலோசனை பெற்று வரும் திருவாளர்கள் '' செமி கண்டக்டர் காம்ப்ளக்ஸ் '' சண்டிகார் என்கிற நிறுவனம் தொழில் நுட்ப உதவி அளிக்கும்.

3. செயல்படுத்துவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட தொலைக் காட்சிப் பெட்டிகள் தயாரிக்கும் திட்டம் 1982—83-ல் உற்பத்தியைத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

4. இந்நிறுவனம் தேவைக்கேற்ப தளவாடங்கள் உற்பத்தி செய்யும் திட்டத்தின் கீழ், கருவிகளை வழங்க ஒப்புக்கொண்டுள்ளது. இந்நிறுவனம் மின்னணு ஒலி பெருக்கியைத் (Electronic Megaphone) தயாரித்து அங்காடியில விற்பனைக்குக் கொண்டு வந்துள்ளது. இக்கருவியை பாதுகாப்புத் துறை, இரயில்வே, தபால்-தந்தித் துறைகளுக்கு வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கு ஆதரவாக ஆராய்ச்சி மேம்பாட்டுப் பிரிவு ஒன்றும் அமைக்கப்படும்.

5. ரூ. 100 இலட்சம் மூலதனச் செலவுடன் '' டிரான்ஸ் ரிசிவர்கள் '' (Trans receivers) தயாரிக்கும் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு தொழில் நுட்ப உதவிக்காக இங்கிலாந்திலுள்ள புகழ் பெற்ற ஒரு நிறுவனத்துடன் பேச்சு வார்த்தை நடைபெற்றுவருகிறது.

6. தொலைபேசி கருவிகளைத் தயாரிக்கும் மற்றொரு பெரு முயற்சிக்கு மத்திய அரசின் கொள்கை இசைவு எதிர் பார்க்கப்படுகிறது.

7. மேற்சொன்னவற்றின் அடிப்படையில் அடுத்த ஆண்டில் நிறுவனத்தின் விற்று முதல் (Turn over) ரூ. 300 இலட்சமாக அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

8. மின்னணுவியல் தொழிலானது வளர்ச்சியடையக்கூடிய ஒன்றாக இருப்பதால் இந்நிறுவனம் தானே சொந்தமாக தொழில் பிரிவுகளைத்தொடங்குவதுடன் தகுதி வாய்ந்த தனியார் தொழில் முனைவோர்களின் கூட்டு முயற்சிக்கும் உதவி செய்ய திட்டமிட்டுள்ளது. கார்பன் மெட்டல் பிலிம் ரெசிஸ்டர்கள் (Carbon Metal Film Resistors) சிறு கணக்கிடு பொறிகள் (Mini Computors), கதிர் மின் மருத்துவ சாதனங்கள் (X-ray Medical Equipments) பிரிண்டட் சர்க்கியூட் போர்டுகள் (Printed Circuit Boards), வீடியோ பிளேயர்ஸ் (Video Players) ஆகியவைகளைத் தயாரிக்கும் திட்டங்கள் இந்நிறுவனத்தின் பரிசீலனையில் உள்ளன. இத்திட்டங்கள் கைகூடுமாயின் மூலதனச் செலவு சுமார் ரூ. 302 இலட்சமாக இருக்கும். ஆனால் இதுகூட்டு முயற்சியில் பங்கு கொள்ள முன்வரும் தகுதியான தொழில் முனைவர் கிடைப்பதை பொறுத்துள்ளது.

9. எந்த ஒரு திட்டத்தையும் செயல்படுத்துவதற்கு அரசின் ஒப்புதலும், இசைவும் பெற வேண்டுமாதலால் மேற்கூறப்பட்ட திட்டங்கள் தவிர, மேற்கொண்டும் இந்நிறுவனம் கீழ்க்கண்ட தொழில்களுக்காக தொழில் முன்னுரிமம் கோரி விண்ணப்பித்து அவற்றிற்கு அனுமதியும் பெற்றுள்ளது.

திட்டம்.	திறன்.	மூலதனச் செலவு. (ரூபாய் இலட்சத்தில்.)
(1)	(2)	(3)
தொலைபேசிக் கருவிகள்	2	600.00
சிறு கணக்கிடு பொறிகள்	50	100.00
டெர்மினல்கள்	2,000	
நடுத்தர அழுத்த மற்றும் உயர் அழுத்த எக்ஸ் கதிர் அமைப்பு.	100	60.00
குறைவழுத்த எக்ஸ் கதிர் அமைப்பு ..	150	
டிரான்ஸ் ரிசீவர்கள் (மதிப்பு) ..	ரூ. 1 கோடி	100.00
மெட்டல் பிலிம் ரெசிஸ்டர்கள் 50 மிலியன்.	..	55.00
கார்பன் பிலிம் ரெசிஸ்டர்கள் 250 மிலியன்.	..	

10. எதிர்கால மேம்பாட்டிற்காக, ஒசூரில் உள்ள நிலம் மற்றும் கட்டிடம் நீங்கலாக, இந்நிறுவனம் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்திடமிருந்து ஒசூரில் மேலும் 35 ஏக்கர் நிலத்தையும் தொழில் வணிகத் துறை இயக்கத்திடமிருந்து திருவான்மியூரில் 5 ஏக்கர் நிலத்தையும் கையகப்படுத்தியுள்ளது.

தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்.

ஆண்டு ஒன்றுக்கு 50,000 டன் செய்தித்தாள் காகிதத்தையும் 40,000 டன் அச்சிடும்தாள் எழுதுதாளையும் தயாரிப்பதற்காக ரூ. 50 கோடி அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனத்துடன் (தற்போது ரூ. 70 கோடியாக உயர்த்தக் கருதப்பட்டுள்ளது) மிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தை திருச்சி

மாவட்டம் புகலூரில் அமைக்கக் கருதப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ரூ. 190 கோடி செலவாகும் (நடைமுறை மூலதனத்தையும் சேர்த்து) அரசு உடைமையாக்கப்பட்ட நிறுவனங்களுடன் சேர்த்து மாநில அரசு இத்திட்டத்திற்கான மொத்த பங்கு மூலதனமாக ரூ. 66·5 கோடியில் ரூ. 34 கோடி வழங்கும். உலக வங்கியும் இந்திய தொழில் வளர்ச்சி வங்கியும் இத்திட்டத்திற்கு மீதமுள்ள பங்கு மூலதனத்தையும், ரூ. 113.5 கோடி வரை கடனும் வழங்கும்.

2. நிறுவனம் தேவையான நிதி ஒப்புதலையும் தேவையான இறக்குமதிக்கான ஒப்புதலையும் இந்திய அரசிடமிருந்து பெற்றுள்ளது.

3. உலக வங்கி இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

மேலும் இத்திட்டத்திற்கு இந்திய அரசு இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி ஆகியவற்றின் மூலம் 100 மில்லியன் டாலர் கடனுதவி அளிக்கவும் ஒப்புக் கொண்டுள்ளது. பொதுக் கடன் ஒப்பந்தம் ஒன்றையும் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியிடமிருந்து உதவித் தொகையாக ரூ. 31 கோடியும் ரூ. 101·5 கோடிக்கு மேற்படாத ரூபாய் காலக் கடனும் இந்தியத் தொழில் நிதியுதவிக் கழகத்திடமிருந்து ரூ. 6 கோடி காலக் கடனும், இந்தியத் தொழில் கடன் முதலீட்டுக் கழகத்திடமிருந்து ரூ. 6 கோடியும் நிதியுதவி பெறுவதற்கான நேரடிக் கடன் ஒப்பந்தம் ஒன்றையும் இந்நிறுவனம் எழுதிக் கொடுத்துள்ளது.

4. மரக்கூழ்த் தயாரிப்பு இயந்திரங்களை வழங்கவும், அடிப்படை பொறியியல் பணி ஏனைய பணிகளை அமெரிக்காவிலுள்ள பெலாய்ட் ஜோன்ஸ் டிவிசன் இங்கிலாந்திலுள்ள ரீட் இண்டர்நேஷனல் கன்ஸல்ட்டண்ட்ஸ் லிமிடெட் ஆகியவற்றின் உடனுழைப்புடன் மேற்கொள்ளவும் திரு-வாளர்கள் பெலாய்ட் வாம்ஸ்லி லிமிடெட்டுடன் இந்நிறுவனம் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. திருவாளர்கள் பெலாய்ட் வாம்ஸ்லி நிறுவனம் ரீட் இண்டர்நேஷனல் கன்ஸல்டண்ட் நிறுவனம் ஆகியவற்றுடன் நிறுவனம் செய்து கொண்ட ஒப்பந்த நிபந்தனைகளின்படி இதுவரையில் உடனடியாகவும் படிப்படியாகவும் சுமார் ரூ. 18.48 கோடி வழங்கியுள்ளது.

5. தமிழ்நாடு வனக் கழகத்திடமுள்ள இருப்பிலிருந்து 70,000 டன் கலப்பின நீலகிரி மரத்தை வன-மீன்துறை இந்நிறுவனத்திற்கு ஒதுக்கியுள்ளது. முக்கிய மூலப் பொருளாக இத்திட்டத்திற்குத் தேவைப்படும் கரும்புச் சக்கையை வழங்கு

வதற்காக சர்க்கரை ஆலைகளுடன் தமிழ்நாடு சர்க்கரை கழகத்துடனும் ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப் பட்டுள்ளன.

6. 1983—84-ம் ஆண்டிலிருந்து தமிழ்நாடு மின்வாரியம் 110 கே.வி. விதத்தில் புகலூரிலுள்ள நிறுவனத்திற்கு 30,000 கே.வி.ஏ. மின்சக்தியை வழங்க நிறுவனம் தேவையான ஏற்பாடுகளைச் செய்து அதற்கு அரசிடமிருந்து ஆணை பெற்றுள்ளது. இத்திட்டத்திற்கு நாள் ஒன்றுக்கு 30 மில்லியன் காலன் நீர் என்ற வீதத்தில் காவிரி ஆற்றிலிருந்து நீர் எடுத்துக் கொள்ளவும் தமி நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கு அரசு அனுமதி வ ங்கியுள்ளது. கரூர் வட்டம், புஞ்சை புகலூர், திருக்காட்டுத்துறை கிராமங்களின் 6,78.63 ஏக்கர் நிலத்தையும் அக்கிராமங்களிலுள்ள 31·01 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலங்களையும் கையகப்படுத்துவதற்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அரசுத் தலைமையின் ஆய்வாளரின் ஒப்புதலுக்குட்பட்டு 17.5 மெகாவாட் திறன் கொண்ட சுழல் மின் உற்பத்தி இயந்திரத்தை நிறுவ தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தை தமிழ்நாடு மின்வாரியம் அனுமதித்துள்ளது. இந்நிறுவனம் தாமே தயாரிக்கும் மின்சக்திக்கு உற்பத்தி வரி விதிப்பினின்று விலக்களிக்கப்படுகிறது.

7. செய்தித்தாள் காகிதம், அச்சிடும்தாள், எழுதுத்தாள் ஆகியவற்றை (குறைந்தது 75 சதவீத கரும்புச் சக்கையைப் பயன்படுத்தி) தயாரிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட தொழிற்சாலை எதுவும் அதற்காக இறக்குமதி செய்யப்படும் சாதனங்கள் அனைத்திற்கும் 30 சதவீதம் என்ற குறைந்த வீத சுங்கவரி விதிக்கப்படுவதற்குத் தகுதியுடையதாகும் என்று மத்திய அரசு நிதி அமைச்சகத்தின் வருவாய்த்துறையிலிருந்து இந்நிறுவனத்துக்குக் கடிதம் வந்துள்ளது. இத்திட்டம் தொழிற்சாலை இந்தக் குறைந்த வீத இறக்குமதித் தீர்வையைப் பெறத் தகுதியுடையதாகிறது.

8. இந்நிறுவனம் 1,90,000 டன் நிலக்கரி பெற கோல் இந்தியா லிமிடெட்டுடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. கோல் இந்தியா நிறுவனம் 1983 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் 48,000 டன் நிலக்கரியை வழங்கத் தொடங்கும் சிங்கரேணி நிலக்கரி சுரங்க நிறுவனம் 1983 ஜூன் திங்களிலிருந்து இந் நிறுவனத்திற்கு ஆண்டுதோறும் 15,000 டன் மென்கரி (Slack Coal) வழங்க ஒப்புக் கொண்டதை உறுதி செய்துள்ளது. மேலும், நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் 1983 ஆம் ஆண்டிலிருந்து ஆண்டுதோறும் 6,000 டன் சாதாரண சார்பைன்ஸ் (Charfines) வழங்க இசைவு தெரிவித்துள்ளது. இவ்வாறாக எரிபொருளின் தேவை நிறைவு செய்யப்பட்டுள்ளது.

9. இத்திட்டத்தை மூன்றாண்டுகளுக்குள் நிறைவேற்றி செயல்படத் தொடங்க எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம் (டான்மாக்).

தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம் முன்பு தனியார் நிறுவனமாக சேலம் மாக்னசைட் ப்ரைவேட் நிறுவனம் இயக்கிய சுரங்கங்களை மேற்கொண்டு மாக்னசைட் கனிப் பொருளை வெட்டி எடுக்க 17—1—1979 இல் நிறுவப்பட்டது. இந்நிறுவனத்தின் ஒப்பிய பங்கு மூலதனம் ரூ. 200 லட்சம் ஆகும். டான்மாக் நிறுவனம் 2,400 பேர்களுக்கு வேலை அளிக்கிறது.

2. கடந்த மூன்று ஆண்டுகளில் இதன் செயலாற்றல் சிறந்ததாகும். 1981—82-ம் ஆண்டில் (டிசம்பர் 81 வரை) இந் நிறுவனத்தின் செயல்திறன் பின்வருமாறு :—

கச்சா மாக்னசைட் உற்பத்தி (டிசம்பர் 81 வரை).	..	1,03,917 மெட்ரிக்டன்,
கச்சா மாக்னசைட் விற்பனை	..	1,00,688 மெட்ரிக்டன்
விற்பனை வரவு	..	ரூ. 410 லட்சம்.
அகற்றப்பட்ட கழிவுகள்	..	21,17,155 மெட்ரிக்டன்

தொடங்கப்பட்ட முதல் ஆண்டிலேயே ரூ. 60.64 லட்சமும் இரண்டாவது வருடம் ரூ. 30.79 லட்சமும் டான்மார்க் நிறுவனம் நிகர லாபமாக ஈட்டியுள்ளது. இவ்வருடத்தில்—அதாவது 1981—82-ல் தேய்மானங்களுக்காக ஒதுக்கிய ரூ. 40·37 லட்சம் போக, இந்நிறுவனம் ரூ. 81·22 லட்சம் நிகர லாபமாக ஈட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிறுவனம் ரூ. 1.50 லட்சம் ஊதிய பங்காக (Dividend) அரசுக்கு செலுத்தியுள்ளது.

3. டான்மாக் நிறுவனம் வரும் ஆண்டுகளில் தனது பணிகளை விரிவாக்க உத்தேசித்துள்ளது. கச்சா மாக்னசைட்டை சுத்தப்படுத்தவும், கரிந்த மாக்னசைட் மற்றும் சிறந்த தரமான மாக்னசைட் செங்கற்களை உற்பத்தி செய்யவும் தொழிற்சாலை (Benification—cum—Refractory Projec) ஒன்றை நிறுவ உள்ளது. இதன் முதல் கட்டமாக சுழலும் சூளை (Rotary Kiln) ஒன்றை ரூ. 4.93 கோடி செலவில் நிறுவும். இதற்கான திட்ட அறிக்கை வரப்பெற்று இது

அரசின் பரிசிலனையில் உள்ளது. இத்திட்டத்தினால், நிறுவனத்தில் லாபம் அதிகரிப்பதுடன், வேலை வாய்ப்பும் பெருகும்.

தமிழ்நாடு மாக்னசைட் பிராடக்ட்ஸ் லிமிடெட்.

1979ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் திருவாளர்கள் சேலம் மாக்னசைட் (பிரைவேட்) லிமிடெட்டிற்கு முன்பு சொந்தமான ஆலையை இயக்க தமிழ்நாடு மாக்னசைட் லிமிடெட்டும், சேலம் மாக்னசைட் (பிரைவேட்) லிமிடெட்டும் இணைந்து தமிழ்நாடு மாக்னசைட் பிராடக்ட்ஸ் லிமிடெட் என்ற நிறுவனம் கூட்டுத்துறையில் துவக்கப்பட்டுள்ளது. இது டான்மாக் நிறுவனம் விநியோகிக்கும் கச்சா மாக்னசைட்டிலிருந்து கால் சைன்ட் மற்றும் கரிந்த மாக்னசைட்டை உற்பத்தி செய்கிறது.

தமிழ்நாடு கனிம நிறுவனம். (டாமின்).

தமிழ்நாடு கனிம நிறுவனம் தமிழகத்திலுள்ள தொழிற்சார்ந்த கனிவளத்தை வணிக ரீதியில் நன்கு பயன்படுத்திக் கொள்ளவும், கரும்பாறைகளை வெட்டி எடுத்து ஏற்றுமதி செய்யவும் 1978ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ரூ. 100 லட்சம் ஒப்பிய பங்கு மூலதனத்துடன் நிறுவப்பட்டது. இதுவரை ரூ. 57.50 லட்சம் பங்கு மூலதனமாகவும், ரூ. 20 லட்சம் கடனாகவும் அரசு அளித்துள்ளது.

2. டாமின் நிறுவனம் 1981–82ஆம் ஆண்டில் (டிசம்பர் 1981 வரை) உற்பத்தி மற்றும் விற்பனை செய்த கனிமங்களின் விவரம் வருமாறு :—

	உற்பத்தி. அளவு.	உற்பத்தி. மதிப்பு. (ரூபாய் இலட்சத்தில்.)	விற்பனை. அளவு.	விற்பனை. மதிப்பு. (ரூபாய் இலட்சத்தில்.)
கருப்புக்கல்—	1,280 கனமீட்டர்.	25·60	760 கனமீட்டர்.	38·74
சாம்பல்கல்	346 கனமீட்டர்.	1·73	568 கனமீட்டர்.	14·16
பெரும் கனிமங்கள்.	14,912 டன்கள்.	5·96	9,733 டன்கள்.	7·01

3. டாமின் நிறுவனம் தனது மூன்றாவது வருடத்தில் ரூ. 68.60 லட்சம் மதிப்புள்ள கனிமங்களை விற்பனை செய்துள்ளது. இதனால் ரூ. 24.82 லட்சம் நடைமுறை லாபமாக கிடைத்துள்ளது இதனால் முந்திய வருடங்களில் அடைந்த நட்டத்தை சரிக்கட்டியதுடன். இந்நிறுவனம் முதலமைச்சர் நிவாரண நிதி மற்றும் '' தாரா '' திட்டங்களுக்கு நன்கொடை அளித்தல் போன்ற சமூக நலத் தொண்டுகளிலும் பங்கு கொண்டது. 1982–83 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் இன்னும் அதிக லாபத்தை ஈட்டும். என்றும், பல சமூக நலத் தொண்டுகளில் பங்கேற்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் நடப்பு ஆண்டில் விற்பனை ரூ. 176.25 லட்சம் ஆக அதிகரிக்கும் என்றும், இன்னும் 900 பேர்களுக்கு வேலை வாய்ப்பும் அளிக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது இந்நிறுவனம் சுமார் 1,600 பேர்களுக்கு வேலை அளிக்கிறது.

(4) (i) சிவகங்கை கிராபைட் திட்டம்.—1982–83 ஆம ஆண்டில் கிராபைட் கனிமத்தை வெட்டி எடுக்கும் சுரங்கப் பணிகள் முழு அளவில துவங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சுத்திகரிப்புப் பணிகள் சிவகங்கையில் கிராபைட் சுத்திகரிப்புத் தொழிற்சாலை அமைத்த பின்னர் மேற்கொள்ளப்படும்.

(ii) கரும்பாறைகளை அறுத்து மெருகேற்றும் தொழிற்சாலை.— சென்னைக்கு அருகில் ரூ. 152 லட்சம் மூலதனத்தில் கரும்பாறைகளை அறுத்து மெருகேற்றும் தொழிற்சாலை ஒன்றை நிறுவ டாமின் நிறுவனம் உத்தேசித்துள்ளது. இதற்கான இடம் தேர்ந்தெடுக்கப்பட உள்ளது. வெளிநாட்டு நிறுவனங்களிலிருந்து இயந்திரங்களின் விலைப்பட்டியல்கள் சேகரிக்கப்பட்டு அவை பரிசீலனையில் உள்ளன.

1982–83-ல் கரும்பாறைகளை தேக்கி வைக்க ரூ. 20 லட்சம் செலவில் சேமிப்பு கிடங்கு ஒன்றை அமைக்கவும் டாமின் நிறுவனம் உத்தேசித்துள்ளது.

நலிவுற்ற தொழில் நிறுவனங்களுக்கு உதவி அளித்தல்.

நலிவுற்ற தொழில் நிறுவனங்கள் புத்துயிர் பெற்று மீண்டும் இயங்குவதற்கு உதவும் வகையில் அரசு 1969 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிவாரண உதவி பெறுகின்ற நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) சட்டத்தின் விதிகளின் கீழ் அந்நிறுவனங்களை கலைப்பதற்கான நடவடிக்கைகளை தவிர்க்கும் பொருட்டும், தொழிலாளர்களுக்கு தொடர்ச்சியாக வேலை வாய்ப்பு

அளிப்பதற்காகவும் உதவி அளித்து வருகின்றது. இத்தகைய பாதுகாப்பை தற்பொழுது பின்வரும் நிறுவனங்கள் அனுபவித்து வருகின்றன:—

(1) ஓமேகா கேபிள்ஸ் லிமிடெட், சென்னை.

(2) தர்மபுரி ஸ்டீல் காஸ்டிங்ஸ் லிமிடெட் (முன்னாள் லாஸ்கோ ஸ்டீல்ஸ் லிமிடெட்), தர்மபுரி.

(3) இந்தியா மீட்டர்ஸ் லிமிடெட், சென்னை.

(4) சதர்ன் ஸ்விட்ச் கியர்ஸ் லிமிடெட், சென்னை.

(5) சௌத் இந்தியா கிளாஸ் அண்டு இனாமல் தொழிற்சாலை, சேலம்.

(6) பிரிமியர் பெர்டிலைசர்ஸ் லிமிடெட், சென்னை.

(7) தமிழ்நாடு எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட், ஓசூர்.

(8) மதராஸ் மெஷின் டூல்ஸ் லிமிடெட், கோயமுத்தூர்.

(9) அருணா லெதர்ஸ் அண்டு எக்ஸ்போர்ட் லிமிடெட், சென்னை.

(10) காவேரி ஸ்பின்னிங்ஸ் அண்டு வீவிங்ஸ் மில்ஸ், புதுக்கோட்டை.

(11) சோமசுந்தரம் சூபர் ஸ்பின்னிங் மில்ஸ், இராமநாதபுரம்.

(12) மீனாட்சி மில்ஸ் லிமிடெட், மதுரை.

பின்வரும் நிறுவனங்களுக்கு அவற்றின் நடைமுறை மூலதனத்திற்காக வங்கிகள் வழங்கிய கடன்களுக்கு மாநில அரசு உத்திரவாதம் அளித்துள்ளது:—

(ரூபாய் இலட்சத்தில்.)

1.	சவுத் இந்தியா கிளாஸ் அண்டு இனாமல் ஒர்க்ஸ் லிமிடெட் சென்னை.	14.36
2.	பிரிமியர் பெர்டிலைசர்ஸ் லிமிடெட், சென்னை.	20.00
3.	மது ஸ்பின்னிங் அண்டு வீவிங்ஸ் மில்ஸ், கோயம்புத்தூர்.	30.00
4.	மீனாட்சி மில்ஸ், மதுரை	55.00
5.	பின்னி லிமிடெட், சென்னை	100.00
6.	இந்தியா மீட்டர்ஸ் லிமிடெட், சென்னை ..	47.00

1976–77-ஆம் ஆண்டு நடைமுறை மூலதனத்திற்காக வங்கிகள் வழங்கியுள்ள கடன்களுக்கு மாநில அரசு உத்தரவாதம் அளித்த பத்து நலிவுற்ற நூற்பாலைகளில் ஏழு நூற்பாலைகளுக்கு கொடுத்த கடன் உத்தரவாதம் திரும்பப் பெறப்பட்டுள்ளது. திருவாளர்கள் மது ஸ்பின்னிங் மில்ஸ் மற்றும் மீனாட்சி மில்ஸ் இவைகளுக்காக கொடுக்கப்பட்ட உத்தரவாதத்தை திரும்பப் பெற அரசு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது.

நலிவுற்ற தொழிற் பிரிவுகள் விற்பனை வரி டக்கிகளையும் பயன்படுத்திய மின்சாரத்திற்கான கட்டணங்களையும் சுலபத் தவணைகளில் கட்டவும் அரசு அனுமதி வழங்குகிறது. இத்தொழிற் பிரிவுகள் உற்பத்தி செய்யும் பொருள்களை மத்திய, மாநில அரசு நிறுவனங்கள் முதலியவற்றிற்கு விற்பனை செய்ய அரசு சம்மந்தப்பட்ட நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு உதவி செய்கிறது. மேற்கூறிய உதவிகள் மூலம் நீண்ட காலமாக மூடிக்கிடந்த தொழிற் பிரிவுகள மீண்டும் திறக்கப்பட்டுள்ளன,

டிராக் தொழிற்சாலை.

இந்த கம்பெனியின் தொழிற்சாலை 12—1—1980 முதல் முடப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலையை மீண்டும் திறப்பதற்காக நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் முதலானவைகளுடன் அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் ஏதும் பலனளிக்கவில்லை.

சௌத் இந்தியா கிளாஸ் அண்டு இனாமல் ஓர்க்ஸ் லிமிடெட், சேலம்.

கண்ணாடி குவளைகள், கூஜாக்கள், விளக்கு பாகங்கள் போன்றவற்றை உற்பத்தி செய்து வந்த இந்நிறுவனம் 10-12-76 முதல் நிதி இடர்பாடுகள் காரணமாக மூடப்பட்டது. இதனால் 500 தொழிலாளர்கள் வேலை இழந்தனர். அரசு இந்நிறுவனத்தை ஒரு நிவாரணம் தேவைப்படும் நிறுவனமாக 14–10–1977 முதல் ஓர் ஆண்டுக்கு அறிவித்து பிறகு அதன் காலவரையை 13–4–1982 வரை நீடித்துள்ளது. இந்நிறுவனத்திற்கு தொழிற்சாலையை திறப்பதற்கு மூலதன வகையில் இந்தியன் வங்கி வழங்கியுள்ள ரூ. 14.35 இலட்சத்திற்கு மாநில அரசு உத்திரவாதம் அளித்துள்ளது. அரசு மேற்கொண்ட முயற்சிகளின் பலனாக தொழிற்சாலை 20–10–1980 தேதியன்று மீண்டும் திறக்கப்பட்டது. ஆனால் நிதி இடர்பாடுகள் காரணமாக தொழிற்சாலை மறுபடியும் 6–3–1981 தேதி முதல் மூடப்பட்டுள்ளது. தொழிற்சாலையை மீண்டும் திறக்கும் பொருட்டு தமிழ்நாடு தொழில்

முதலீட்டு நிறுவனம் (ஐ. ஒ. சி.) வங்கியுடன் கலந்து நிறுவனத்தின் பொருளாதார மற்றும் வியாபார ரீதியான சாத்தியக் கூறுகளை ஆராய ஒரு கன்சல்டன்டை நியமிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

பிரிமியர் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட், சென்னை.

நிதி இடர்பாடுகள் காரணமாக சல்பூரிக் ஆஸிட் மற்றும் சூப்பர் பாஸ்பேட் போன்ற பொருட்களை உற்பத்தி செய்து வந்த கடலூரிலுள்ள இந்நிறுவனத்தின் தொழிற்சாலை 19-8-1976 தேதி முதல் மூடப்பட்டுள்ளது. மேற்கொண்டு நிதி இழப்பை தவிர்க்கும் பொருட்டு நிறுவனம் மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட் தயாரிக்கும் விவசாய உரங்கள் மற்றும் யூரியா போன்றவைகளை விற்பனை செய்வதில் தற்போது ஈடுபட்டுள்ளது. இந்நிறுவனத்தை 1974 ஆம் ஆண்டு நவம்பர் முதல் அரசு ஒரு நிவாரணம் தேவைப்படும் நிறுவனமாக அறிவித்தது. அதன் காலவரை 29-4-1982 வரை நீடிக்கப்பட்டுள்ளது. நிறுவனத்தின் சார்பாக அரசு 1974 ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் இந்திய வங்கிக்கு ரூ. 20 இலட்சத்திற்கு உத்திரவாதம் கொடுத்துள்ளது. மேற்குறிப்பிட்ட ரூ. 20 இலட் சத்தில நிறுவனம் இதுவரை வங்கிக்கு ரூ. 19 இலட்சம் வரை திருப்பிச் செலுத்தியுள்ளது. இந் நிறுவனத்தின் தொழிற் சாலையை மீண்டும் திறக்க அரசு மேற்கொண்ட முயற்சிகள் ஏதும் பலனளிக்கவில்லை. ஆகையால் நிறுவனம் தனது தொழிற் சாலையை விற்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

இந்தியா மீட்டர்ஸ் லிமிடெட்.

கம்பெனி சட்டம் 1956 விதிகளின்படி 1963 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 15-ம் நாள் முதல் பொது நிறுவனமாக நிர்மாணிக்கப்பட்டது. 1966-67-ல் இந்த நிறுவனம் உற்பத்தியைத் தொடங்கியது. செயல்பட முடியாமல் ஏற்பட்ட சில சிரமங்கள் காரணமாய் இந்த நிறுவனம் 14-9-1974-ல் உற்பத்தி நிறுத்தப்பட்டது. தமிழக அரசின் ஆதரவாலும், தமிழ் நாடு மின்வாரியம், நிதி நிறுவனங்கள் இந்திய தொழில் புனர மைப்புக் கழகம் (Industrial Reconstruction Corporation of India) இவற்றின் நல்ல ஒத்துழைப்பினால் இந்த நிறுவனம் தனது உற்பத்தியை 8-12-1977 முதல் மீண்டும் துவங்கியது. திருவாளர்கள் பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் நிறுவனம் இதற்கு நிர்வாகம் உதவி தருகிறது. தமிழ்நாடு அரசு இதை ஒரு நலிவுற்ற நிறுவனமாக அறிவித்துள்ளது. இந்தக் காலவரம்பு தற்பொழுது 24-9-1982 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

திருவாளர்கள் சதர்ன் ஸ்விட்ச் கியர் லிமிடெட்.

திருவாளர்கள் சதர்ன் ஸ்விட்ச் கியர் லிமிடெட் 1965-ம் ஆண்டு தொடங்கி அம்பத்தூரில் உயர் அழுத்த, குறைந்த அழுத்த முள்ள ஸ்விட்ச் கியர்களைத் தயாரித்து வந்தது. அதிக நஷ்டம் காரணமாக இந்தத் தொழிற்சாலை 14-3-1978-ல் மூடப் பட்டது. இது ஒரு நலிவுற்ற நிறுவனமாக அரசு 9-11-1978-ல் அறிவித்தது. இந்த காலவரம்பு நீட்டிக்கப்பட்டுள்ளது. இதில் சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தி, பாரத் ஸ்டேட் வங்கி நிறுவனத்தை புனரமைக்கப்படவேண்டிய நிதி நிலையை அரசுக்கு தந்தது. இந்த நிறுவனம் சம்பந்தப்பட்டவர்களின் ஒத்துழைப்புடன் மீண்டும் உற்பத்தியைத் தொடங்கியது.

தற்பொழுது தொழிற்சாலையில் பணியாற்றுவோர் எண்ணிக்கை 610 ஆகும். 31-12-1981 உடன் முடியும் 16 மாதங்களில் இந்த நிறுவனம் ஈட்டிய லாபம் ரூ. 99 இலட்சமாக இருக்கும் என்று மதிப்பிடப்படுகிறது. இது இந் நிறுவனத்தின். மொத்த நட்டத்தை கணிசமான அளவு குறைக்கும் என்று எதிர்ப் பார்க்கப்படுகிறது. வருகிற வருடங்களில் இந்த நிறுவனம் நன்கு இயங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சிமெண்ட் விநியோகம்.

28-2-1982 முதல் சிமெண்டின்மீது இருந்த கட்டுப்பாட்டை மைய அரசு தளர்த்தியுள்ளது. சிமெண்ட் விநியோகத்தின் புதிய முறைப்படி சிமெண்ட் தொழிற்சாலைகள் அவர்களுடைய. உற்பத்தி திறனில் மூன்றில் இரண்டு பாகம் உள்ள உற்பத்தியாகும் சிமெண்ட்டை கட்டுப்பாடான விலைக்கு அரசுக்கு லெவி சிமெண்டாக கொடுக்க வேண்டும். இதற்கு மேல் உற்பத்தியாகும் சிமெண்டை வெளிச்சந்தையில் எந்தவிதமான விலை அல்லது விநியோகக் கட்டுப்பாடு இல்லாமல் விற்கலாம். சிறிய சிமெண்ட் ஆலைகள் அதாவது நாள் ஒன்றுக்கு 200 டன்கள் அல்லது ஆண்டு ஒன்றுக்கு 66,000 டன்கள் சிமெண்ட் உற்பத்தி செய்பவை, லெவி சிமெண்ட்டாக ஏதும் அரசுக்கு கொடுக்க வேண்டியதில்லை. அவைகளுடைய முழு உற்பத்தியும் விலை அல்லது விநியோகக் கட்டுப்பாடு ஆணையின்கீழ் வராது.

2. சிமெண்ட் விநியோகத்தின்மீது மையஅரசு கட்டுப்பாட்டை தளர்த்தியுள்ளதால் மாநில அரசு இப்போதுள்ள தமிழ்நாடு சிமெண்ட் விநியோகம் (உரிமம் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) 1978 ஆணையை ரத்து செய்துவிட்டு புதிதாக தமிழ்நாடு லெவி சிமெண்ட் விநியோகம் (உரிமம் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) ஆணை பிறப்பித்துள்ளது. இந்த புதிய ஆணையின் முக்கிய அம்சங்கள் கீழே தரப்பட்டுள்ளன :—

3. முன் உரிமை பகுதிக்கும், சமூகத்தில் நலிந்த பிரிவின ருடைய தேவைகளை நிறைவு செய்வதற்காக லெவி சிமெண்ட் உபயோகப்படுத்தப்படும். இப்போது போலவே மாநிலங்கள் ஒவ்வொரு காலாண்டுக்கும் மைய அரசிடமிருந்து சிமெண்ட் ஒதுக்கீடுகளை பெறும். இந்த ஒதுக்கீடுகளை கொண்டு கீழே குறிப்பிட்டுள்ள இனங்களின் தேவைகள் நிறைவு செய்வதற்காக பயன்படுத்தப்படும்.

(1) அரசுத்துறைகள், அரசு சார்பு நிறுவனங்கள், மற்றும் உள்ளாட்சி அலுவலகங்கள்.

(2) ஆலைக்கட்டடம் கட்டுவதற்காக சிறு தொழில் நிறுவனங்கள், சமூக மேம்பாட்டிற்காக அமைந்துள்ள கிராமங்களில் வீடு கட்டுதல், குடிசை வாழ் மக்கள், ஆதி திராவிடர்கள், ஆதிவாசிகள், சமூகத்திலுள்ள ஏழை எளிய மக்களுக்கு வீடு கட்டுதல், கிராமங்களுக்கு தண்ணீர் வழங்கும் திட்டம், மேலும் புதிய 20 அம்ச திட்டத்தில் அடங்கிய எல்லா இனங்கள்.

(3) 80 சதுர மீட்டருக்கு மேற்படாமல் தரைமட்டம் அமையும் வீடுகள் கட்டுதல் ;

(4) குடியிருப்பு வீடுகளுக்கு பழுது பார்த்தல்.

(5) நீர்ப்பாசனம், மின்சாரத் திட்டங்கள்.

(6) திரை அரங்குகள், சிற்றுண்டிச்சாலைகள், வங்கிகள், பல மாடி அடுக்குக் கட்டிடங்கள், வியாபாரகட்டிடங்கள், 80 சதுர மீட்டர் தரைமட்டம் மேலுள்ள கட்டிடங்கள் ஆகியவைகளுக்கு லெவி சிமெண்ட் வழங்கப்படமாட்டாது. மேலும் சிமெண்ட்டை மூலப் பொருளாகக் கொண்டு இயங்கி வரும் தொழில்களுக்கு லெவி சிமெண்ட் வழங்கப்படமாட்டாது. அவர்கள் தங்களுடைய தேவைகளை வெளிச்சந்தையிலிருந்துதான் வாங்கிக்கொள்ள வேண்டும்.

(7) புதிய கட்டுப்பாடு ஆணையின்படி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் மட்டுமே லெவி சிமெண்ட்டை விற்பனை செய்வதற்காக உரிமம் வழங்கப்படுவார்கள்.

(8) அரசுத்துறைகள், அரசு சார்பு நிறுவனங்களுக்கு, லெவிசிமெண்ட்டை தொழில் மற்றும் வணிகத்துறை இயக்குநரால் பகிர்ந்து அளிக்கப்படும். ஆலை கட்டிடங்கள் கட்டுவதற்கான சிறிய தொழில் தேவைகளுக்கு தொழில் வணிகத்துறை

இயக்குநரோ அல்லது அவரால் நியமிக்கப்பட்ட வேறு ஒரு அலுவலரோ அனுமதிச் சீட்டுகள் வழங்குவார். இந்த அதிகாரம் மாவட்ட தொழில் மையத்தின் பொது மேலாளர்களுக்கும் வழங்கப்படும்.

(9) 80 சதுரமீட்டர் தரைமட்டம் மேற்படாமல் கட்டடம் கட்டும் நபர்களுக்கும், வீடுகளை பழுது பார்ப்பதற்கான தேவைகளை நிறைவு செய்ய மாவட்ட ஆட்சித் தலைவரோ, அல்லது அவரால் நியமிக்கப்பட்ட வேறு ஒரு அலுவலரோ அனுமதிச் சீட்டுகள் வழங்கலாம். தற்போது அனுமதிச் சீட்டுகள் வழங்கும் அதிகாரிகளான வட்டாட்சித் தலைவர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் ஆணையர்களுக்கு இனிமேல் அதிகாரம் கிடையாது. ஆனால் கோட்ட ஆட்சித் தலைவர்கள் கோட்ட வளர்ச்சி அதிகாரிகள் அல்லது சென்னையில் உள்ள மாவட்ட ஆட்சித் தலைவருடைய நேர்முக உதவியாளர்கள் மூலமே அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படுவதற்கான அதிகாரம் அளிக்கப்படும்.

(10) லெவி சிமெண்ட்டை பெற தகுதியுடையவர்களின் அனுமதிச் சீட்டுகள் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு அந்த சிமெண்ட்டை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமோ அல்லது கூட்டுறவு நிறுவனங்கள் மூலமோ பெறலாம். மற்றவர்கள் வெளிச் சந்தையிலிருந்துதான் சிமெண்ட்டை பெற வேண்டும்.

தொழிற்துறைக் கொள்கை விளக்கக் குறிப்பும் திட்டங்களும்
கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும்.

சிறிய மற்றும் ஊரகத் தொழில் துறையில் கிராமப் பகுதிகளில் தொழில்களை உருவாக்குவதும் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துவதும் மாநில அரசு பின்பற்றி வரும் தொழிற் கொள்கையின் இரு நோக்கங்களாகும். இதற்காக சிறு தொழில், குடிசைத் தொழில், மிகச் சிறிய தொழில், வீட்டுத் தொழில் ஆகியவற்றைப் பரவலாக வளர்ச்சி அடையச் செய்வதில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. இதனால் வேலைவாய்ப்பேற்று இருப்பவர்களும், போதிய வேலைவாய்ப்பின்றி ஏதோ ஒரு வேலையில் இருப்பவர்களும் நாளடைவில் உரிய வேலையினைப் பெற்று பயனடைவர்.

2. இந்நோக்கங்களைக் கருத்தில் கொண்டு இப்போதுள்ள தொழில்களுக்கு ஊக்கமளிக்கவும், சிறு தொழில் துறையிலும், கிராமத் தொழில் துறையிலும் புதிய தொழில்கள் தொடங்கவும் தனித் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க நிதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. நலிவுற்ற தொழில் பிரிவுகளை மீண்டும் செயல்படச் செய்ய நிதி

உதவி அளிக்கப்படுகிறது. நிதி, நிருவாகம், விற்பனை ஆகிய வகையிலும் உதவி அளிக்கப்படுகிறது. வளர்ச்சி நிலையங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. இத்துறைக்குத் தேவைப்படும் வசதிகளைச் செய்து கொடுக்க தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகமும், சிட்கோவும் தமிழ்நாடு அரசின் சிறு தொழில் பணி நிலையமும் நாட்டுடமையாக்கப்பட்டுள்ள வங்கிகளும் பொறுப்பேற்க இருக்கின்றன. பொதுவாக இத்துறையில் திட்டங்களைக் தீட்டி, செயல்படுத்தும் பொறுப்பை தொழில் வணிக இயக்குநர் அலுவலகம் நிறைவேற்றி வருகிறது. தொழில் வளர்ச்சிக்கு முன்னோடியாக விளங்கும் மாவட்ட தொழில் நிலையங்களையும் தொழில் கூட்டுறவுச் சங்கங்களையும் இது நிருவகித்து வருகிறது. கிராமத் தொழில்களை மேம்படுத்துவதில் சிறு தொழில் முனைவோருக்கு உதவி செய்வதிலும் நேரிட முகவர் அமைப்புகளாகச் செயல் படுவதில் மாவட்ட தொழில் நிலையங்கள் பெருமளவில் வெற்றி கண்டுள்ளன. இந்நிலையங்களைப் பெரிதும் திறனுடையவையாகவும் பயனளிப்பவையாகவும் செய்திட இவற்றை வலுப் படுத்துவதற்கு அரசு முயன்றுள்ளது. தொழில் வளர்ச்சிக்கும் வேலைவாய்ப்புக்கும் கணிசமான அளவிற்கு வாய்ப்பளிக்கக்கூடிய தீப்பெட்டித் தொழில், தேயிலைத் தொழில், தென்னை நார்த் தொழில் போன்ற தொழில் துறைகளை மேம்படுத்த அதிக வாய்ப்புள்ளதாய் அவற்றிற்கு தொழில் கூட்டுறவு சங்கங்கள் அமைப்பதில் தொழில் வணிக இயக்குநர் அலுவலகம் கவனம் செலுத்தும்.

3. பட்டுப்புழு வளர்க்கும் தொழில், தொழிலாளர்களுக்குப் பெருமளவில் வேலைவாய்ப்பளிக்கக்கூடிய கிராமத் தொழிலாகும். ஆனால், இதற்காக முதலீடு செய்யவேண்டிய மூலதனத் தொகையோ மிகக் குறைவு. பட்டுப்புழு வளர்ப்புத் துறை, முசுக்கொட்டை மரங்கள் பயிரிடப்படும் பரப்பளவை அதிகரிப்பதோடு, விதைப் பண்ணைகள், பட்டுப் புழுக் கூடு அங்காடிகள், செய்முறை விளக்கப் பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றை மேம் படுத்துதல், பட்டு நூல் சுற்றும் தொழில் கூடங்களை அமைத்தல், மாவட்ட பட்டுப்புழு வளர்ப்பு நிலையங்களை அமைத்தல் போன்ற துறைகளிலும் கவனம் செலுத்துகிறது. பட்டு நூல் சுற்றல், பட்டு நூல் முறுக்கேற்றுதல் கழிவு கட்டு நூல் சுற்றல், துணைப் பொருட்கள் தொழில் பிரிவு போன்ற புதிய தொழில் பிரிவுகளையும் நிறுவுவதில் இத்துறை கவனம் செலுத்துகிறது.

4. இம்மாநிலத்தில் 1973 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட தமிழ்நாடு கைவினை தொழில் வளர்ச்சிக் கழகம் கைவினைத் தொழில்களுக்கு உதவி செய்து அவற்றை மேம்படுத்தி வளர்ச்சி பெறச் செய்யும் பொறுப்பேற்றுள்ளது. கிராமங்களில் வேலை வாய்ப்பற்று இருக்கும் கைவினைஞர்களுக்குப் பயனுறும் வகையில் வேலைவாய்ப்பளித்தல், உள்ளூரில் கிடைக்கக் கூடிய வள

வாயில்களைப் பயன்படுத்துதல் ஆகியவற்றிற்காக பயிற்சி நிலையங்களை ஏற்படுத்தவும் புதிய திட்டங்களை வகுக்கவும், புதிதாக விற்பனை நிலையங்களைத் தொடங்கவும் கைவினை தொழில் கழகம் திட்டமிட்டுள்ளது. கைவினைப் பொருள்களின் ஏற்றுமதி வரும் ஆண்டுகளில் கணிசமான அளவு உயரும்.

5. தமிழ் நாடு சிறு தொழில் வளர்ச்சி கழகம் (சிட்கோ) ஆலமரம் போல் வேருன்றி நின்று சிறு தொழில்களுக்குத் தொடர்ந்து உதவியளித்து வருகிறது. சிறு தொழில்களுக்குச் கொட்டகைகள் அமைத்துக் கொடுத்தல், 33 பழைய தொழிற் பேட்டைகளிலும் மேம்பாடடைந்த மனைகளில் அமைந்துள்ள 5 தொழிற் பேட்டைகளிலும் சிறு தொழில்களுக்கு அடிப்படை வசதிகளுடன் கொட்டகைகளையும் அமைத்துக் கொடுக்கிறது. இயந்திரங்கள் வழங்குதல் இன்றியமையா மூலப் பொருள்களை வாங்கி வழங்குதல் விற்பனை வசதிகளுக்கு வகை செய்தல், வட்டியில்லா விற்பனை வரிக்கடன் வழங்குதல் நொடித்த தொழிற் பிரிவுகளை இயங்க வைக்க தொடக்கச் செலவுத் தொகை வழங்குதல். மத்திய அரசு வழங்கும் முதலீட்டு உதவித் தொகையை வாங்கிக் கொடுத்தல் ஏனைய செயலுக்காக உதவிகளை நல்குதல் ஆகியவை உட்பட சிறு தொழில்களுக்கு பல வகையில் தொடர்ந்து உதவியளித்து வருகிறது. சிறு தொழில் துறைக்கு மேலும் பெருமளவில் உதவி செய்ய வேண்டுமென்ற நோக்கில் வரும் ஆண்டுகளில் இக்கழகம் தனது பணிகளை கணிசமான அளவிற்குப் பெருக்கிக் கொள்ளும்.

6. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (டி.ஐ.ஐ.சி.) புதிய தொழிற் பிரிவுகளை ஏற்படுத்தவும், விரிவு படுத்தவும், உட்பகுப்பு செய்தல் ஏற்கெனவே உள்ள பிரிவுகளை நவீனப் படுத்தவும், நீண்டகால நடுத்தரக்கால கடன்களை வழங்குவதன் மூலமும், இயந்திரங்களை வாங்கியதற்கான தொகையைக் காலந்தாழ்த்தி செலுத்துவதற்கான உத்திரவாதங்களை அமைத்தும் முன்னுரிமைப் பங்கு மூலதனப் பங்குகளை வாங்குவதற்கான முன்வைப்புப் பண உதவி போன்றவற்றைப் புரிந்து வருகிறது. சிறுதொழிற்துறைக்கும் கிராமப்புற மற்றும் பின் தங்கிய பகுதிகளில் தொழிற் பிரிவுகளை அமைக்கவும் உதவியை இந்நிறுவனம் அதிகரித்துள்ளது. 31—12—1981 வரை 3,799 தொழிற் பிரிவுகளுக்கு ரூபாய் 3,118.49 இலட்சத்தை நிதி உதவியாக ஒப்பளித்துள்ளது. இதில் ரூபாய் 2,515.91 இலட்சம் சிறுதொழில் துறைக்கு ஒப்பளித்துள்ளது. இதனைப் போன்ற பின்தங்கிய பகுதிகளில் 2,045 தொழிற் பிரிவுகளுக்கு ரூபாய் 1,640.42 இலட்சம் நிதியுதவி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. தொழில் வல்லுனர்கள், கிராமப்புற மருத்துவ பயிற்சியாளர்கள், போக்குவரத்து பணியை நடத்துபவர்கள் முதலானோர்க்கும்

உணவகங்களுக்கும் உதவியளிக்க இந்நிறுவனம் சிறப்பு திட்டங்களை செயலாக்கி வருகிறது. குறைந்த வட்டி விகிதம் கொண்ட கடன் திட்டங்கள் மூலமாக இத்துறையில் அதிகவேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டு இந்நிறுவனம் உதவியளிக்கிறது.

இந்நிறுவனம் வரும் ஆண்டுகளில் வேலை வாய்ப்புகளை அதிகரிக்கும் சாத்தியகூறு கொண்ட இத்துறையில் உள்ள தொழிற் பிரிவுகளுக்கு நிதி உதவியை அதிகமாக வழங்க முனைந்துள்ளது.

7. தமிழ்நாடு சிறு தொழில் கழகம் (டான்சி) 56 உற்பத்தி நிலையங்களைக் கொண்டுள்ளது. இக்கழகம் பல திட்டங்களைச் செயல்படுத்த உள்ளது. இத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டால் உற்பத்தி கணிசமான அளவிற்கு அதிகரிக்கும் என்பதோடு தற்போதுள்ள அரசுத் துறைகளுக்கும் பொதுத் துறை நிறுவனங்களுக்கும் அது ஆற்றிவரும் பணிகளும் சீரடையும்.

தொழில் வணிக இயக்குநரகத்தின் கொள்கை குறிப்பு.

1982—83.

தொழில் வளர்ச்சித்துறையில் மாநில அரசின் அடிப்படை நோக்கங்கள் இரண்டாகும். தொழில் வளர்ச்சியின் வேகத்தினைத் துரிதப்படுத்துவது முதலாவதாகும். இரண்டாவதாக, துறை வாரியாகவும், வட்டார வாரியாகவும் சீரான முறையில் தொழில்களை வளர்ச்சியுறச் செய்வதாகும். அரசினரது தொழில் கொள்கைகளை, தொழில் துறையில் செயலாக்குவதில் முக்கிய அமைப்பாகத் திகழும் தொழில் வணிக இயக்குநரகம், அது மேற் கொண்டுள்ள பல முயற்சிகளும் பின்வருகின்ற சில முக்கிய நடவடிக்கைகள் மூலம் மேற்கண்ட நோக்கங்களை நிறைவேற்றுவதில் ஈடுபட்டுள்ளது.

1. மாவட்ட தொழில் மையங்களின் வாயிலாக, குறிப்பாக மாநிலத்திலுள்ள பின்தங்கிய பகுதிகளில் தொழிலியல் நடவடிக்கைகளைத் தோற்றுவிப்பது, அதற்காக ஊக்குவிப்புக் கருத்தரங்குகள் நடத்துவது, தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுவது உதவி மற்றும், ஏற்கெனவே உள்ள தொழில் நிலையங்களை வலுப்படுத்துவது.

2. மின்னணுவியல், இரசாயனம் போன்ற தனிப்பட்ட தொழில் துறைகளில் அத்தொழில்களின் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கு அமைப்பு ரீதியான உதவி செய்தல்.

3. மாநிலத்தில், குறிப்பாக பின் தங்கிய பகுதிகளில், சில குறிப்பிட்ட கிராமத் தொழில்களை, வளர்ச்சியடையச் செய்வதற்கு ஒரு முக்கிய கருவியாக தொழிற் கூட்டுறவுத் துறையினை பயன்படுத்தி அரசு நேரடியாக ஈடுபடுவது.

மேற்கண்ட செயல்களை நிறைவேற்றுவதில் தொழில் வணிக இயக்குநரகம் எந்த அளவுக்கு வெற்றி அடைந்துள்ளது என்பதனைச் சுருக்கமாக கீழே கூறப்பட்டுள்ளது.

1. தொழில் நடவடிக்கையைத் தோற்றுவிப்பது—

மாவட்ட தொழில் மையங்கள் அமைக்கப்படுவதற்கு முன், நாடி வந்த தொழில் முனைவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளையும், அபிவிருத்தி உதவிகளையும் வழங்குவதை மட்டுமே இந்த இயக்குநரகம் அதன் நடவடிக்கைகளைக் கொண்டிருந்தது. ஊக்குவிப்பு கருத்தரங்குகள் போன்ற நேரடியாக தொழில் மேம்பாட்டு நடவடிக்கைகள் ஒரு சிலவே மேற்கொள்ளப்பட்டன. மேலும், இதுமாதிரியான கருத்தரங்குகள் நீண்டகால இடைவெளிக்குப் பிறகுதான் நடைபெறும். மாவட்ட தொழில் மையங்கள் அமைக்கப்பட்ட பிறகு, அவற்றின் அன்றாட செயற்பாடுகளில் தொழில் முனைவர் வளர்ச்சித் திட்டங்கள் ஒரு முக்கிய அம்சமாக அமைந்து விட்டன். கடந்த மூன்றாண்டுகளில் 475 ஊக்குவிப்புக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு உள்ளன. இவற்றில் 24,000-க்கும் மேற்பட்ட ஆர்வமுள்ள தொழில் முனைவர்கள் கலந்து கொண்டனர். மற்றுமொரு முக்கிய பயனுள்ள அம்சம் யாதெனில், புதிய தொழில் நிலையங்களுக்கு வழங்கப்பட்ட தற்காலிகச் சான்றிதழ் மீது தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டதன் விளைவாக, பெருமளவில், தொழில் நிலையங்கள் துவங்கப்பட்டுள்ளன.

மாவட்ட தொழில் மையங்கள் அமைக்கப்பட்ட பிறகு, உரிமங்கள் பெறுவதற்குரிய நடைமுறைகளை எளிமையாக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், மூன்றாவது முக்கிய செயலாகும். உள்ளாட்சி எல்லைகளுக்கு உட்பட்ட தொழில் பகுதிகளில் அமைகின்ற சிறு தொழில்களைப் பொறுத்த வரை.

(அ) குறிப்பிட்ட 14 வகைத் தொழில்களைத் தவிர, எந்த ஒரு சிறு தொழிலும் உள்ளாட்சி அமைப்பிடம் உரிமம் பெறுவதற்கு, முன் சுகாதாரத்துறையிடமிருந்து முன அனுமதி ஏதும் பெறத் தேவையில்லை.

(ஆ) சுகாதாரத் துறையினது முன் அனுமதி தேவை என்று கூறப்பட்டுள்ள 14 தொழில்களில்கூட, அவற்றின் பொருள் தயாரிப்பில் கழிவுகள் இருக்க வாய்ப்பில்லை என்பதை தெளி

வாக்கும் வகையில் தயாரிப்பு முறை விளக்கப்படத்தைச் சான்றாக வைத்து தொழில் நிலையம் உறுதியளித்தால், மாவட்ட தொழில் மையத்தின் பொது மேலாளரது சிபாரிசின் பேரில் சுகாதார துறையின் அனுமதி இல்லாமலேயே, அத்தகைய தொழில்கள் உரிமம் பெறத் தகுதி பெற்றவையாகும்.

(இ) 25 குதிரைத் திறனுக்கு மேற்படாமல் மின்சக்தியைப் பயன்படுத்தும் தொழில்களாயிருந்தால், தொழிற் கூடங்களைக் கட்டுவதற்குரிய விண்ணப்பங்களை, நகரமைப்பு இயக்குநரது ஆய்விற்கு அனுப்பி வைக்கத் தேவையில்லை.

(ஈ) 25 குதிரைத் திறன் வரை மின்சாரம் பயன்படுத்தும் தொழில்கள், தொழில் பகுதிகள் என வரையறுக்கப்படாத இடங்களில் அமைக்கப்பட்டால், மாவட்ட தொழில் மையத்தின் பரிந்துரையின் பேரில், நகரமைப்பு இயக்குநரது ஆய்விற்கு உட்படாமலேயே, சில நிபந்தனைகளுக்குட்பட்டு, உள்ளாட்சி அமைப்பினுடைய உரிமம் பெறத் தகுதியுடையனவாகும்.

(உ) கிராமங்களில் தொழில்களை நிறுவுவதற்கு ஊராட்சி மன்றங்கள் உரிமங்களை வழங்குவதற்கு முன் சுகாதாரத்துறை மற்றும் நகரமைப்புத் துறைகளின் முன் அனுமதியைப் பெற வேண்டியதில்லை.

(ஊ) தொழிற்சாலைப் பகுதிகள் அல்லாத இடங்களில் உள்ள, (ஆனால் குடியிருப்பு பகுதிகளைத் தவிர) 50 குதிரைத் திறன் மின்சக்தி அமைப்புக்கு மேற்படாத தொழில் நிலையங்களுக்கு உரிமங்கள் வழங்குவதற்கு, உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

(எ) அய்ந்து குதிரைத் திறனுக்கும் மேற்படாமல் மின் சக்தியைப் பயன்படுத்தக்கூடிய ஒரு குடிசைத் தொழிலை, சுகாதாரத் துறையின் அனுமதி இல்லாமலேயே குடியிருப்புப் பகுதியில் நிறுவலாம்.

(ஏ) மின் சக்தியைப் பயன்படுத்தி 10 பேருக்கு குறைவாக தொழிலாளர்களைக் கொண்ட தொழிற்சாலைகள் அல்லது மின் சக்தியைப் பயன்படுத்தாமல் 20-க்கும் குறைவாக தொழிலாளர்களைக் கொண்ட தொழிற்சாலைகளுக்கு, தொழிற்சாலைத் துறையின் அனுமதியின்றியே உள்ளாட்சி மன்றம் உரிமம் வழங்கலாம்.

(ஐ) 100 பணியாளர் வரை வேலையளிக்கவிருக்கும் தொழிற்சாலைகளின் வரை படங்களை ஒப்புதலளிப்பதற்கு அந்தந்த மண்டலத்திலுள்ள துணைத் தலைமை தொழிற்சாலை ஆய்வாளர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

(ஒ) வழங்கப்பட இருக்கும் மின் இணைப்பு மின் வாரியத்திற்கு இலாபகரமானதாய் இராது என்றாலும் அனைத்து வகைத் தொழிற்சாலைகளுக்கும் மின்சாரம் வழங்க வேண்டுமென நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அனுமதிகளை துரிதப்படுத்துவதற்காக மின் வாரியத்தின் வட்டார அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டு உள்ளது. தொழில் நிலையத்தை முன்பு நடத்தி வந்தவர் மின் வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை எவ்வளவாயினும் சரி, அந்த நிலையத்தைப் புதிதாக நடத்த வந்துள்ளவரை அது பாதிக்காது. அவர் மின் இணைப்புப் பெறத் தகுதியுள்ளவராவார். மின்சாரம் வழங்குவதற்கு முன் நகராட்சி/ஊராட்சி உரிமம் பெற்றிருக்க வேண்டும் என்ற முன் நிபந்தனை இல்லை.

சிறு தொழில் நிலையங்களுக்கு, அனுமதிகளைத் துரிதமாகப் பெற்றுத் தருவதில் மூன்று நிலைகளில் அமைந்த குழுக்கள் பேருதவியாய் அமைந்துள்ளன. 9 மாவட்ட தொழில் மையங்கள் சேகரித்த தகவலின்படி, 1980–81 மற்றும் 1981–82 ஆம் ஆண்டுகளில் (நவம்பர் 1981 வரை) 6,000-க்கும் மேற்பட்ட சிறு தொழில்களுக்கு உள்ளாட்சி அமைப்புக்கள் அனுமதி அளித்துள்ளன. இதில் பெருமளவு, சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பப்படாமல், மாவட்ட தொழில் மையங்களின் பரிந்துரையின் பேரிலேயே உள்ளாட்சி அமைப்புகள் அனுமதியளித்துள்ளன.

நான்காவதாக, கடந்த மூன்று ஆண்டுகளில் தகுதிவாய்ந்த தொழில் நிலையங்களுக்கு பெருமளவில் நிதியுதவி வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்க அபிவிருத்தியாகும். 1978–79 முதல் 1981–82 (டிசம்பர் 1981 வரை)-ஆம் ஆண்டுகளில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து சுமார் 9,000 தொழில் நிலையங்கள் ரூபாய் 19 கோடி கடனுதவி பெற மாவட்டத் தொழில் மையங்கள் உதவி புரிந்துள்ளன.

மாவட்ட தொழில் மையங்கள் மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளின் பயனாக, சிறுதொழில் துறையின் வளர்ச்சி துரிதமடைந்திருப்பது மட்டுமின்றி, வளர்ச்சி குன்றிய பகுதிகளுக்கும் இத் தொழில் வளர்ச்சி பரவியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. 31—3—1978-இல் 18,789 ஆக இருந்த நிரந்தரமாகப் பதிவு செய்யப்பட்ட சிறுதொழில் நிலையங்களின் எண்ணிக்கை 1980-ஆம் ஆண்டு மார்ச்சு மாத இறுதியில் 28,642 ஆக உயர்ந்தது; இது, 1981 ஆம் ஆண்டு அக்டோபர் இறுதியில் 39,875 ஆக உயர்ந்தது. தருமபுரி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், தென்னாற்காடு, இராமநாதபுரம் போன்ற பின்தங்கிய பகுதிகளில் நிரந்தரமாகப் பதிவு செய்யப்பட்ட தொழில் நிலையங்களின் எண்ணிக்கை 100 சதவீதம் அதிகரித்திருப்பது குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும். 1978–79 முதல் 1981 டிசம்பர்

வரை மற்றும் ஏப்ரல் 1981 முதல் டிசம்பர் 1981 வரையில்,
மாவட்ட தொழில் மையங்கள் அடைந்துள்ள முன்னேற்றத்தினைக்
காட்டும் இரு அட்டவணைகள் இணைப்பில் தரப்பட்டுள்ளன.

மாவட்ட தொழில் மையங்கள், மேற்கொண்ட பயனுள்ள
கூட்டு நடவடிக்கைகளின் காரணமாக, தீவிர கிராம வளர்ச்சித்
திட்டம் மற்றும் கிராம இளைஞர் சுய வேலை வாய்ப்புப் பயிற்சித்
திட்டங்களின் கீழ் ஏப்ரல்—நவம்பர் 1981-க்கு உள்ளிட்ட காலத்
தில் சுமார் 12,000 பேருக்கு பயிற்சி வசதி அளிக்கப்பட்டது.

அபிவிருத்தி ஆணையாளர் (சிறு தொழில்கள்), அனைத்து
இந்திய அளவில் மாவட்ட தொழில் மையங்களின் நடவடிக்கை
கள் பற்றி மேற்கொண்ட 1980—81-ஆம் ஆண்டின் கணிப்பின்படி,
முன்னேற்றம் பற்றிய குறிப்பிட்ட சில குறியீடுகளை அடிப்படை
யாக வைத்துப் பார்க்கும்பொழுது தமிழ்நாடு, அடைந்துள்ள முன்
னேற்றம் அனைத்திந்திய அளவில் சராசரி முன்னேற்றத்தைக்
காட்டிலும், அதிகமாகவே உள்ளது. ஒரு மாவட்ட தொழில்
மைய அளவில் கூடுதலாக வேலை வாய்ப்பினைத் தோற்று
வித்திருப்பது என்ற அடிப்படையில் பார்த்தால், மாநிலங்களி
லேயே தமிழ்நாடுதான் முதலாவதாகத் திகழ்கிறது என்று குறிப்
பிடப்பட்டுள்ளது. நிதியுதவி அளித்ததில், தமிழ்நாடு இரண்
டாவது இடத்தை வகிக்கிறது. 1979—80 மற்றும் 1980—81
ஆம் ஆண்டுகளில் மாநிலத்தில் அமைந்திருந்த கைவினைத்
தொழில்கள் மற்றும் சிறுதொழில்களுள், 78·45 சதவீத கை
வினைத் தொழில்களும், 80·78 சதவீத சிறுதொழில் நிலையங்
களும் நகர்ப்புறமல்லாத பகுதிகளில் அமைந்திருந்தன என்று
அக்கணிப்பில் காட்டப்பட்டுள்ளது. சில மாநிலங்களின் ஒப்பீட்டு
விவரங்களைக் காட்டும் அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.—

மாநிலம்.	நகர்ப்புறம் அல்லாத பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள கைவினைத் தொழில் மற்றும் சிறு தொழில் நிலையங்களின் சதவீதம்:	
	1979—80.	1980—81
தமிழ்நாடு	78.45	80.78
ஆந்திரப் பிரதேசம் ..	96.00	91.78
குஜராத்	56.99	53.83
அரியானா	48.76	52.47
கர்நாடகம்	71.02	79.50
கேரளா	88.40	78.24
மகாராஷ்டிரா	75.11	71.06
பஞ்சாப்	57.54	59.41

மூலம்—புது டெல்லி அபிவிருத்தி ஆணையாளர் (சிறு தொழில்
கள்) வெளியிட்டுள்ள மாவட்ட தொழில் மையங்களின் சாதனை
கள் பற்றிய தொகுப்பு.

நகர்ப்புறம் நீங்கலான பகுதிகளில் தொழில் வளர்ச்சியைப்
பரவச் செய்வதில் வெகுவாக முன்னேறியுள்ள மாநிலங்களில்
தமிழ்நாடு ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது என்பதனை மேற்
கண்ட அட்டவணை குறிப்பிடுகிறது. நெஞ்சிற்கு நிறைவு தரும்
மற்றொரு அம்சம் யாதெனில், 1979—80ஆம் ஆண்டில் அடைந்த
குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டிலும் 1980—81ஆம்
ஆண்டில் அதிக முன்னேற்றம் காணப்பட்டதாகும். ஆனால்
சில மாநிலங்களில் 1980—81-ல் இந்த முன்னேற்றம் குறைந்
துள்ளது.

எதிர்காலத் திட்டங்கள் :

மாவட்ட தொழில் மையங்கள் திட்டம் மேலும் தொடர்ந்து
நீடிப்பதற்கு, மைய அரசிடமிருந்து அனுமதி பெறப்பட்டுள்ளது.
வளர்ந்து வரும் நடவடிக்கைகளைச் சிறப்பான முறையில் மேற்
கொள்ளக்கூடிய வகையில் மாவட்ட தொழில் மைய அமைப்பிற்கு
ஒரு இறுதி வடிவம் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு
வருகிறது. பொதுவாக தொழில் வளர்ச்சியினைத் துரிதப்படுத்து
வதற்கும், மாநிலத்தில் தொழில்களே இல்லாத புதிய பகுதி
களிலும், தொழில் வளர்ச்சி குன்றிய பகுதிகளிலும் தொழில்
அபிவிருத்தியைப் பரப்புவதற்கும், அதிலும் புதிய தொழில்களைப்
பரப்புவதற்கும், மேலும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.
இயக்குநகரத்தின் இதர பிரிவுகளின் வளர்ச்சி நடவடிக்கைகள் :

மின் மற்றும் மின்னணுத் தொழில்—

அடிப்படை வசதிகளை அமைத்துத்தருவது ; திட்டத்
தொகுப்புகள் தயாரிப்பதில் உதவி ; பொருள் விற்பனை வசதி
கள் ; இயந்திர சாதனங்கள், இயந்திர பாகங்கள் முதலியவற்
றிற்குப் போதுமான சோதனை வசதிகள் போன்ற பல்வேறு
நடவடிக்கைகளை மேற்கொண்டு, மாநிலத்தில் மின் மற்றும்
மின்னணுத் தொழில்களின் வளர்ச்சியை இத்துறை பேணி
ஆதரித்து வருகிறது.

சென்னை, அடையாறிலுள்ள டாக்டர் விக்ரம் சாராபாய் மின்னணுத் தொழிற்பேட்டையில் 78 தொழில் நிலையங்கள் நன்முறையில் செயல்பட்டு வருகின்றன. இது போலவே, உயர் தரமான மின்னணுச் சாதனங்களைத் தயாரிப்பதில் ஒசூரிலுள்ள மின்னணுத் தொழிற் பேட்டையிலுள்ள தொழில் நிலையங்களின் பங்கு மகத்தானதாகும். இந்த இரு தொழிற் பேட்டைகளும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவையாக உள்ளன. இதர மாநிலங்களிலும் இவை போன்ற அமைப்பினைக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற நோக்குடன், அம்மாநிலங்கள், அவற்றின் பிரதிநிதிகளை இத்தொழிற் பேட்டைகளுக்கு அனுப்புகின்றன. திருச்சிராப்பள்ளி, காக்களூர், கோயமுத்தூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களிலுள்ள தொழிற் பேட்டைகள் வேகமாக முன்னேற்றமடைந்து வருகின்றன.

சென்னை-41-ல் உள்ள மின்னணுவியல் தொழில் வளாகத்தில் அமைந்திருக்கும் மகளிர்க்கான மின்னணுவியல் தொழில்கூடத் தொகுதியில் ஏற்கனவே 26 தொழிற்கொட்டகைகள் கட்டப்பட்டு தகுதிவாய்ந்த மகளிர் தொழில் முனைவர்களுக்கு ஒதுக்கப்பட்டு விட்டன. இந்த மேன்மையான திட்டம் மகளிர் தொழில் முனைவர்களுக்கு மட்டுமே உரிய பிரத்தியேகமான திட்டமாகும். மேற்கண்ட தொழில் வளாகத்திலுள்ள மகளிர்க்கான மின்னணுவியல் தொழிற்கூடத் தொகுதியில் சிறிய தொழிற்கூடக் கொட்டகைகளுக்கான தேவை அதிகரித்து வருவதால், மகளிர் பலனடையும் வகையிலும் மகளிருக்கான வேலைவாய்ப்பினை அதிகரிக்கும் வகையிலும் மின்னணுவியல் தொழில் வளாகத்திலுள்ள மகளிருக்கான மின்னணுவியல் தொழிற்கூடத் தொகுதியில் கூடுதலாக 'கியூ' வரிசையை சேர்ந்த சிறப்புத் தன்மை வாய்ந்த இரு தொழில் கொட்டகைகளை ஒரே வரிசையில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அடையாறு, ஒசூர் மற்றும் காக்களூர் (திருவள்ளூர்) ஆகிய தொழிற் பேட்டைகளில் மொத்தம் 112 தொழிற் கூடங்களை இத்துறை அமைத்துள்ளது. ஒரு சில நிலையங்களைத் தவிர, ஏனையவனைத்தும், முழுமையாக உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. 14 தொழிற் கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. 1982–83 ஆம் ஆண்டில் மேலும் 10 தொழிற் கூடங்கள் கட்டப்படும்.

தொழிற் கூடங்களைத் தவிர, பல்வேறு தொழிற் பேட்டைகளில், மின் மற்றும் மின்னணுத் தொழில்களுக்காக 184 அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. மேலும் 171 அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகளை ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வருகின்ற ஒன்றிரண்டு ஆண்டுகளில், செப்பனிட்ட மனைகள் அதிகமாகத் தேவைப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, அத்தேவையினை நிறைவேற்றும் பொருட்டு, சென்னை, திருப்போரூர் சாலையில் பெருங்குடியில் ஏற்கனவே உள்ள செப்பனிட்ட மனைகள் தொழிற்பேட்டைக்கருகில் மேலும் நிலங்களை கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பாதுகாப்புச் சாதனங்கள், அச்சிட்ட மின்வடிவு அட்டைகள், காப்புத் தடைகள், '' கபாசிட்டர்கள் '' '' ஜி. எல். எஸ். '' விளக்குகளுக்குரிய மின்னிமைக் கம்பிகள் மருத்துவ மின்னணுச் சாதனங்கள் , '' ஆசிலாஸ்கோப் '' பற்றவைக்கும் மின்னணுச் சாதனங்கள் ; மின்னணு கைக்கடிகாரங்கள் மற்றும் சுவர்க் கடிகாரங்கள், மின்னணு ஒலிச் சங்குகள் முதலிய உயர்தரமுள்ள பொருள்களைத் தயாரிப்பது உட்பட, தொலைக்காட்சிக் கருவிகள், '' வீடியோ '' ஒலிப்பதிவு நாடாக்கள் போன்ற நுகர்வு மின்னணுப் பொருள்கள், இத் தொழிற்பேட்டைகளில் தயாரிக்கப்படுகின்றன. நமது மாநிலத்தில் சிறு தொழில் துறையில் தயாரிக்கப்படுகின்ற தொலைக்காட்சிப் பெட்டிகள் வெளி மாநிலங்களில் நன்மதிப்பைப் பெற்றுள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மின்னணுச் சாதனங்களின் ஏற்றுமதியை மேலும் ஊக்கப்படுத்துவதற்காக, மாநிலத்தில், '' தடையில்லா வர்த்தகப் பகுதி '' (Free Trade zone) ஒன்றை ஏற்படுத்துவதற்கு கோரிக்கைகள் அனுப்பப்பட்டுள்ளன. மின்னணுத் தொழிலின் வளர்ச்சி, நல்ல நிலையினை அடைந்துள்ளது. ஆதலால், அடுத்த ஓரிரு ஆண்டுகளில், இத்தொழில் வியத்தகு முன்னேற்றம் அடையுமென எதிர்பார்க்கலாம்.

மின்னணுக் கருவிகளையும், மின்னணு பாகங்களையும் மிக நுட்பமாக சோதனை செய்வதற்குரிய வசதிகள் அனைத்தும் அமைந்துள்ளன. அடையாறிலுள்ள மின்னணுச் சோதனை மற்றும் வளர்ச்சி நிலையம், மின்னணுப் பொருள்களின் தரத்தை மேலும் மேம்படுத்துவதில் பெரும் பங்கு வகிக்கிறது. சென்னை நகரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள சிறு தொழில் மின்னணுத் தொழில்கள் அனைத்தும், இந்த நிலையத்தால் பயன் பெற்றுள்ளன.

மின்சரகத் தொழில்கள் :

மின்னணுத் தொழிலின் வளர்ச்சியுடன் இணைந்தாற்போல் மின்சாரத் தொழிலும் சீரான வளர்ச்சியை அடைந்துள்ளது. தயாரிக்கப்படும் வீட்டு உபயோக மின்சாரச் சாதனங்களின் தரத்தை மேம்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் வீட்டு உபயோக மின்சார சாதனங்கள் (தரக்கட்டுப்பாடு)ஆணை 1981 என்பதனை, தொழில் வணிக இயக்குநரகம் செயலாக்கி வருகிறது.

கதக்களூரிலுள்ள மைய மின் ஆய்வுக் கூடம் மேற்கொண்டு வரும் அநேக மின்சார சோதனை முறைகளுக்கு இந்திய தர நிர்ணய நிறுவனம் அங்கீகாரம் அளித்துள்ளது. மேலும் பலவற்றிற்கு அங்கீகாரம் வர வேண்டியுள்ளது.

அரசு மருத்துவ மனைகளின் மின் மருத்துவ சாதனங்களை செப்பனிட்டுப் பராமரித்தல் :

கிண்டி, தஞ்சாவூர், கோயமுத்தூர், மற்றும் மதுரை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட நான்கு மின் மருத்துவச் சாதனங்கள் செப்பனிடு நிலையங்கள், இந்த ஆண்டும் பயனுள்ள வகையில் பணியினை நிறைவேற்றி வந்துள்ளன. இந்த நிலையங்கள் மொத்தம் 2,600 மின் மருத்துவச் சாதனங்களை செப்பனிட்டு பழுதுபார்த்துள்ளன. இவற்றில் பெரும்பாலானவை, உயிரைக் காப்பாற்றுவதற்கு பயன்படுத்தக்கூடியவைகளாகும். 1981—82 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் டிசம்பர் முடிய 9 மாத காலத்தில் மின் மருத்துவச் சாதனங்களைச் செப்பனிட்டு பழுது பார்த்ததற்கான வருவாய் ரூ. 9·2 லட்சமாகும்.

இரசாயனத் தொழில்கள் :

பெரிய எரிபொருள் இரசாயனம் மற்றும் கனரக இரசாயனத் தொழில்கள் முதல், வர்ணம், சாயப் பொருள் மற்றும் நுண் இரசாயனப் பொருள்கள் போன்றவற்றைத் தயாரிக்கும் சிறு தொழில்கள் வரை, பல்வேறு வகையான தொழில்கள் இரசாயன தொழில்களில் அமைந்துள்ளன.

மகாராஷ்டிரா, குஜராத், மற்றும் மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்களோடு ஒப்பிடுகையில், தமிழ் நாட்டில் இரசாயனத் தொழில்கள் சமீப காலத்தில்தான் வளர்ச்சியடையத் துவங்கின. எனினும், கடந்த இருபதாண்டுகளில், இத் தொழில் குறிப்பிடத் தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது. தென் மாநிலங்களில், சிமிட்டி, '' காஸ்டிக் சோடா '' '' நைட்ரேஜினல்'' மற்றும் '' பாஸ்பாட்டிக் '' இரசாயன உரங்கள் போன்ற தொழிற்சாலைகளில் நிறுவப்பட்டுள்ள உற்பத்தித் திறனில் பெருமளவு, தமிழ்நாட்டில்தான் உள்ளது. தென்னிந்திய மாநிலங்களில் தமிழ்நாடு முன்னணியில் திகழ்கிறது. இரசாயன உரங்கள், கன இரசாயனப் பொருட்கள், சிமிட்டி, சர்க்கரை காகிதம், ''ஆல்கஹால் '', '' இரயான் '' நுன்னிழை '' பிவிசி'' போன்ற இரசாயனப் பொருள்களைத் தயாரிப்பதில், குறிப்பிடத் தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம், சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, சென்னை இரசாயன உரத் தொழிற்சாலை,''இந்தியன் ஆர்கானிக் கெமிக்கல்ஸ்'' '' சதர்ன் பெட்ரோ கெமிக்கல்ஸ் '', '' மேட்டூர் கெமிக்கல்ஸ் ''

போன்ற பெரிய தொழிற்சாலைகள், மாநிலத்தில் இரசாயனத் தொழில்களின் வளர்ச்சிக்குத் துணை புரிந்துள்ளன. கூட்டுத் துறையின் கீழ், தமிழ்நாடு அரசு, பல நடுத்தரப் பெரிய தொழிற்சாலைகளை அமைத்து, மாநிலத்தின் பல்வேறு இரசாயனத் தொழில்களுக்குத் தேவையான '' சோடியம் டை குரோமைட் '', அடிப்படை '' குரோமியம் சல்பேட் '', '' சோடியம் ஹைடிரோ சல்பைட் '' மற்றும் '' யூரியா '' போன்ற இரசாயனப் பொருள்களை தயாரித்து அளிக்கிறது. நெசவாளர்களின் தேவைகளையும், துணி ஆலைகளின் தேவைகளையும் நிறைவேற்றுவதற்காக கூடலூரில் சாயப் பொருள்களைத் தயாரிக்கின்ற நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. பெருரகத் தொழில் துறையில் '' சோடா ஆஷ் '' தயாரிக்கக் கூடிய தொழிற்சாலை ஒன்றும், தூத்துக்குடியில் நிறுவப்பட்டு வருகிறது.

1980—81-இல் தென் மண்டலத்திலிருந்து சுமார் ரூபாய் 30 கோடி அளவுக்கு இரசாயனப் பொருள்கள் ஏற்றுமதி ஆயின. இதில் தமிழ்நாட்டின் பங்கு ரூபாய் 14 கோடியாகும் ; கர்நாடகத்தின் பங்கு ரூபாய் 9.6 கோடி ; கேரளாவின் பங்கு ரூபாய் 4.6 கோடி ; மற்றும் ஆந்திரப் பிரதேசத்தின் பங்கு 1.2 கோடி.

தமிழ்நாட்டில், நிறுவனத்துறையில், வேறு பல இரசாயனத் தொழில்களுக்கு, அதிலும் குறிப்பாக '' ஆல்கஹால் '' அடிப்படையிலான தொழில்கள், வேளாண்மை அடிப்படையானத் தொழில்கள், கனிம அடிப்படையானத் தொழில்கள், அடிப்படை மருந்துப் பொருள் தொழில்கள் பூச்சிக் கொல்லி இரசாயனத் தொழில்கள் போன்ற தொழில்களின் வளர்ச்சிக்கு, நல்ல வாய்ப்புகள் உள்ளன.

சிறு தொழில் துறையிலும் இரசாயனத் தொழில்கள் வளர்ச்சி அடைந்திருக்கும் பாங்கினைக் கீழ்க்கண்ட அட்டவணையிலிருந்து அறியலாம்.—

சிறு தொழில் துறையில் பதிவு செய்யப்பட்ட இரசாயனத் தொழில்கள் மற்றும் அவற்றைச் சார்ந்த தொழில்களின் எண்ணிக்கை :

தொழிலின் பெயர்.	30—12—78இல்	31—12—79இல்	31—12—80இல்	30—6—81இல்
(1)	(2)	(3)	(4)	(5)
1 இரசாயனப் பொருள்கள் ..	2,746	3,243	5,455	6,248
2 உணவுப் பொருள்கள் ..	1,698	1,968	2,990	3,530

3	ஊட்டச்சத்துப் பொருள்கள் புகையிலைப் பொருட்கள் ..	171	200	268	312
4	காகிதப் பொருட்கள் ..	1,887	2,228	2,837	3,109
5	" இரப்பர் " மற்றும் " பிளாஸ்டிக் "	1,254	1,354	1,680	1,807
6	உலோகமல்லாத கனிமப் பொருட்கள் ..	1,091	1,496	2,006	2,204
	மொத்தம் ..	8,847	10,489	15,236	17,210

1978-இல் இருந்த இரசாயனத் தொழில்கள் மற்றும் சார்புத் தொழில்களின் எண்ணிக்கையோடு ஒப்பிடுகையில் 1981-ல் முதல் அரை ஆண்டிலேயே கிட்டத்தட்ட இரட்டிப்பாகியுள்ளது. இது ஒரு குறிப்பிடத்தக்க வளர்ச்சியாகும். 30—6—1981-இல் தொழில் வணிக இயக்குநரகத்தில் நிரந்தரமாகப் பதிவு செய்யப்பட்ட தொழில்களின் எண்ணிக்கை 37,840-ஆக இருந்தது. இவற்றில், இரசாயனத் தொழில்கள் 6,248 ஆகவும், இரசாயனம் சார்புடைய தொழில்களின் எண்ணிக்கை 10,962 ஆகவும் இருந்தன. மைய அரசு மற்றும் மாநில அரசு அளித்து வரும் தொழில் நுட்ப உதவி மற்றும் ஊக்குவிப்புப் பணியின் மூலம், இப்படி பலவிதமான சிறு தொழில்களை அமைக்க முடிந்தது. இந்த தொழிலதிபர்களில் பெரும்போலார் இரசாயனத் துறையிடம் உயர் கல்வித் தகுதியுடையவர்கள் அல்லது அனுபவமிக்க தொழில் நுட்பவியலாளர் அல்லது இரசாயனப் பொருள் வியாபாரிகள் ஆவர். இவர்கள் அரசு அளித்து வரும் சலுகைகளையும் உதவிகளையும் பயன்படுத்திக் கொண்டுள்ளனர். இதன் விளைவுகள், நல்ல பயனை அளித்துள்ளன. இருப்பினும், சோப்புகள், மருந்து கலவைப் பொருள்கள், வாசனைப் பொருட்கள், " பிளாஸ்டிக் " பொருள்கள் தயாரித்தல், இரப்பர் பொருள்கள் தயாரித்தல், வர்ணங்கள், மற்றும் சாயப் பொருள்கள், உயிரியல் சாய நுண் பொருட்கள், சாயங்கள், சாய இடை நிலைப் பொருள்கள், சனிம அடிப்படை இரசாயனப் பொருள்கள், தொழிலியல் இரசாயனப் பொருள்கள் போன்ற சில இரசாயனம் மற்றும் அதன் சார்புத் தொழில்களை சிறு தொழில் துறையில் அபிவிருத்தியடையச் செய்வதற்கு, இம்மாநிலத்தில், மேலும், வாய்ப்புக்கள்

உள்ளன. குறைந்த மூலதனம், எளிய தொழில் நுட்பம் இவற்றைக் கொண்டு அதிகமான வேலை வாய்ப்பு அளிக்கக் கூடிய தொழில்களாவன ;—(1) வாசனைத் திரவியத் தொழிலுக்காக, மலர்களிலிருந்து எடுக்கக் கூடிய எண்ணெய், எலுமிச்சை, புல்லின் எண்ணெய், இஞ்சி வகை எண்ணெய் போன்றவை ; (2) வண்ணம் மற்றும் அச்சு மைத் தொழிலுக்குரிய " யூரியா பார்மால்டிஹைடு ", " பினால் பார்மால்டிஹைடு பசை ; (3) "குளோரினேட்டு கனசலால் ", (4) " ஸ்பிக் " மற்றும் இதரத் தொழில் நிறுவனத்திலிருந்து கிடைக்கின்ற அமிலங்களிலிருந்து பாஸ்பேட்டுகள் " ; (5) அச்சு மற்றும் புத்தகக்கட்டுத் தொழிலுக்குரிய அட்டைகள் ; (6) தானியங்கி மற்றும் பஞ்சாலைத் தொழிலுக்குரிய ஓ' வளையங்கள், எண்ணெய் அடைப்புக்கள் ; (7) பாத அணித் தொழிலுக்குரிய இரப்பர் அடிப்படையில் தயாரிக்கப்படும் ஒட்டுவதற்குரிய பசை ; (8) தண்ணீர் பக்குவப்படுத்துவதற்குரிய படிகாரம் ; (9) ''வெர்மிகுலைட்'' எடுத்தல் ; (10) அக்ரிலிக் சீட்டுகள் ; (11) ''பால் பாய்ண்ட் பேனா மை''; (12) அரிப்பைத் தடுக்கும் இரசாயனப் பொருட்கள் மற்றும் துருப்பிடிப்பதைத் தடுக்கும் இரசாயனப் பொருட்கள்; (13) முந்திரி ஓட்டினால் தயாரிக்கக்கூடிய பசை மற்றும் இதரப் பொருட்கள்; (14) துணி கட்டுமானச் சாமான்கள் ; (15) வடிகட்டும் பொருள்கள் ; (16) ஆய்வுக் கூட இரசாயனப் பொருட்கள் முதலியன ஆகும்.

திருவாளர்கள் ' " இந்துஸ்தான் ஆர்கானிக் கெமிக்கல்ஸ், குஜராத் அரோமேட்டிக்ஸ் லிமிடெட் ", ராஷ்டிரிய கெமிக்கல் மற்றும் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடட் " போன்ற பெருரகத் தொழிற்சாலைகள் உற்பத்தி செய்யும் பல்வேறு மூலப் பொருட்களைப் பயன்படுத்தி, பல்வேறு வகையான புதிய இரசாயனப் பொருட்களைத் தயாரிக்கத் துவங்கலாம்.

இரசாயனப் பிரிவின் நடவடிக்கைகள் :—

தமிழ் நாட்டிலுள்ள இரசாயனத் தொழில்களின். வளர்ச்சியை துறையின் இரசாயனப் பிரிவு கவனித்து வருகிறது. இப்பிரிவின் நடவடிக்கைகளாவன :—

1. சோதனை வசதிகள் அளிப்பது.

2. முன்னோடித் திட்ட ஆய்வுகளுக்குரிய வசதிகளை அளிப்பது.

3: தேவையின் பேரில், இரசாயனத் தொழிலில் தொழில் நுட்ப ஆலோசனை, சாத்தியக்கூறு அறிக்கைகள், மற்றும் திட்ட தொகுப்புக்களை அளிப்பது.

4. கிடைப்பதற்கரிய இரசாயனப் மூலப் பொருள்களை சிறு தொழில் நிலையங்களுக்குக் கிடைக்கச் செய்வதில் உதவியளிப்பது.

இரசாயனப் பிரிவிலுள்ள ஆய்வுக் கூடங்கள் அளித்து வரும் சோதனை வசதிகளால் பயனடைந்த தொழிற் சாலைகளின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது:—

ஆய்வுக்கூடத்தின் பெயர்.	1981–82-ஆம் ஆண்டில் பயன்பெற்ற தொழிற்சாலைகளின் எண்ணிக்கை. (30–11–81 வரை).
(1)	(2)
1 இரசாயனச் சோதனை மற்றும் பகுப்பாய்வுக் கூடம், கிண்டி	860
2 வட்டார ஆய்வுக்கூடம், மதுரை	1,378
3 வட்டார ஆய்வுக்கூடம், கோயம்புத்தூர் ..	391
4 சவ்வரிசி ஆய்வுக்கூடம், சேலம்	147
5. உப்பு, கடல்படு இரசாயனப் பொருள்களுக்கான மாநில ஆராய்ச்சிக்கூடம், தூத்துக்குடி	54
மொத்தம் ..	2,830

இந்த இயக்குநரகத்தின் இரசாயனப் பிரிவு, தொழில் வணிகத் துறையில் பதிவு செய்யப்பட்டுள்ள சிறு தொழில் நிலையங்கள்யாவும் '' பாரபின் '' மெழுகு, தீக்குச்சி மெழுகு, இறைச்சிக் கொழுப்பு, உயர்வேக '' டீஸல் '' எண்ணெய் போன்ற மூலப் பொருள்களைப் பெறுவதில், உதவியளிக்கிறது. 1980–81 மற்றும் 1981–82 ஆம் (30–11–1981 வரை) ஆண்டுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்ட, கிடைப்பதற்கரிவதாயுள்ள மூலப் பொருள்களின் அளவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.—

	1980–81	1981–82 (30-11-1981 வரை.)
	மெட்ரிக் டன்	மெட்ரிக் டன்.
'' பாரபின் '' மெழுகு	4,913	3,848
தீக்குச்சி மெழுகு	3,519	2,760
இறைச்சிக் கொழுப்பு	647.5	219.3

மேற்கண்டவை தவிர, இத்துறையில் பதிவு பெற்றுள்ள சிறு தொழில்கள், வெள்ளை சிமிட்டி, ''டிட்டேனியம் டை ஆக்ஸைடு'' சூடம் முதலிய பொருள்களைப் பெறக்கூடிய வகையில் இரசாயனப் பிரிவு சிறு தொழில்களின் தேவைக் கோரிக்கைகளை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்குப் பரிந்துரை செய்கிறது.

தொழிற்சாலைகளின் உபயோகத்திற்காக உலைக்கள எண்ணெய், '' இன்டேன் வாயு '' ஆகியவற்றை வழங்குவதற்கும் வீரியமற்ற சாராய உரிமம் வழங்குவதற்கும், சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு, இரசாயனப் பிரிவு பரிந்துரை செய்கிறது. பூச்சிக் கொல்லி மருந்துகள் தயாரிக்கும் சிறு தொழில் நிலையங்கள், உள்நாட்டில் கிடைக்கக்கூடிய மூலப் பொருள்களையும், இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருள்களையும் ஒதுக்கீட்டின் மூலம் பெறுவதற்கு வழி வகுக்கும் வகையில், இப்பிரிவு அவற்றின் உற்பத்தித் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கிறது. இவ்வாறு, உதவியளிக்கப்பட்ட சிறுதொழில் நிலையங்களின் எண்ணிக்கை பின்வருமாறு :—

	1980-81	1981–82 (30-11–82 வரை)
1. வீரியமற்ற சாராயம்	20	25
2. உற்பத்தி திட்டம் ஒப்புதலளித்தல்.	30	26
3. உலைக்கள எண்ணெய்	108	80

இரசாயனத் தொழில் தகவல் களஞ்சியம்:

புள்ளி விவரங்களைச் சேகரித்து வைப்பது, தொழில் நுட்ப ஆலோசனை அளிப்பது ஆகிய செயல்களை வலுப்படுத்தும் பொருட்டு, அடிப்படை புள்ளி விவரங்களைச் சேகரிப்பதற்கும்,

இரசாயனத் தொழில் திட்டக் குறிப்புகளைத் தயாரிப்பதற்கும்
மாநிலத்தில் சிறு தொழில் துறையில், ஆர்வமுள்ள தொழில்
முனைவர்கள் இரசாயனம் மற்றும் அதன் சார்புத் தொழில்
களை அமைப்பதற்கு தொழில் நுட்ப ஆலோசனை அளிப்பதற்
கும், இரசாயனப் பிரிவில் ஒரு தகவல் களஞ்சியம் நிறுவப்பட்
டுள்ளது. இத் தகவல் களஞ்சியம் துவக்கப்பட்ட 1975 ஆம்
ஆண்டு டிசம்பர் மாதத்திலிருந்து 31–12–1981 வரை, 6,424
இரசாயனப் பொருள்களைப் பற்றிய விவரங்கள் சேகரிக்கப்பட்
டுள்ளது. இவை பற்றிய புதிய விவரங்களையும், தொடர்ந்து
சேகரிக்கப்பட்டு வருகிறது. 1975 ஆம் ஆண்டிலிருந்து இதுநாள்
வரையில், 274 திட்டத் தொகுப்புகள் தொழில் முனைவர்
களுக்கு வழங்கப்பட்டுள்ளன. 1980 மற்றும் 1981 ஆம் ஆண்டு
களில் தகவல் சேகரிப்பு முறைகளும், அவற்றைப் பயன்படுத்தக்
கூடிய முறைகளும், சீர்திருத்தப்பட்டுள்ளன. இப்பிரிவு வழங்கிய
தகவல்களின் பயன் பற்றி, 1979 ஆம் ஆண்டு ஜூன் முதல்
31–12–1981 முடிய, 132 பாராட்டுக் கடிதங்கள் வந்துள்ளன.
இத்தகவல் களஞ்சியம் வழங்கிய திட்டத் தொகுப்புகளைப் பெற்ற
சுமார் 45 இரசாயனம் மற்றும் அதன் சார்புத் தொழில் நிலை
யங்கள், பல்வேறு நிலைகளில் செயல்பட்டு வருகின்றன.

இ. மாநில புவியியல் பிரிவு :

தொழில் துறையின் புவியியல் பிரிவு, மாநிலத்திலுள்ள
கனிம வளங்களை ஆய்வு செய்யும் பணியினை, தொடர்ந்து
மேற் கொண்டு வருகிறது. கடந்த 24 ஆண்டுகளில் இப்பிரிவு
மேற்கொண்ட குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளின் விளைவாக,
சிமிட்டி தொழிற்சாலைகள், சுண்ணாம்பு அடிப்படையிலான
இரசாயனத் தொழில்கள், '' அலுமினியம் '' மற்றும் எஃகு
தொழிற்சாலைகள் (சேலம் மாவட்டம்), கண்ணாடி, மட்
பாண்டத் தொழில்கள் முதலியவை அமைக்கப்பட்டுள்ளன. தக்க
இயந்திர சாதனங்களையும், தகுதி வாய்ந்த பணியாளர்களையும்
கொண்டுள்ள இப்புவியியல் பிரிவு மேற்கொண்ட கள ஆய்வுகளின்
மூலமாகத் தெரிய வந்த கனிப் பொருள் படிமங்களைப் பயன்
படுத்தி அபிவிருத்தி அடைந்துள்ள பல அரசு நிறுவனங்களுள்,
தமிழ்நாடு சிமிட்டி நிறுவனம், தமிழ்நாடு மட்பாண்டத் தொழில்
நிறுவனம், தமிழ்நாடு கனிப் பொருள் நிறுவனம், தமிழ்நாடு
'' மாக்னசைட் '' நிறுவனம் ஆகிய சிலவற்றைக் குறிப்பிடலாம்.

இப்பிரிவு மேற்கொண்ட முக்கியமான கனிப் பொருள் ஆய்வு
விவரங்கள் பின்வருமாறு :—

1. கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாலா வட்டத்தில்
வைடூரியம் என்னும் '' கிரைசோபெரில் '' பற்றிய விவரமான
ஆய்வு தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. இதுவரையில்
கிடைத்த முடிவுகள், நல்ல தரமுடைய மணிகற்களை கண்டறி
வதற்கு மேலும் ஆய்வினை மேற்கொள்ள வேண்டுமென்பதை

உறுதிப்படுத்துகிறது. மேலும், மாணிக்கக்கல், நில மணிக் கல்
பளிங்கு பளிக்கல், முத்துப் போன்ற வெளிக்களிக்கல் ஆகிய
விலை மதிப்பு மிக்க ஆபரண கற்களைப் பற்றிய ஆய்வுகளை
திருச்சி மாவட்டத்தில் சின்னதாராபுரம்-கரூர்-குளித்தலை பகுதி
களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆபரணக் கற்கள் படிமங்
களைக் கண்டறியும் ஆய்வு அடுத்த ஒன்றிரண்டு ஆண்டுகளுக்குத்
தொடர்ந்து நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2. கரூருக்கு அருகில் புலியூரில் ஏற்கெனவே உள்ள சிமிட்டி
தொழிற்சாலைக்குத் தேவையான சுண்ணாம்புக்கல் படிமங்களை
கண்டறியும் பொருட்டு, மதுரை மாவட்டம், வேடசந்தூர் வட்
டத்தில், சுண்ணாம்புக்கல் படிமம் பற்றிய விவரமான ஆய்வும்
மேற்கொள்ளப்பட்டது. குத்தகைக்கு விடப்பட்ட பகுதிகளிலும்
குத்தகைக்கு விடப்படாத பகுதிகளிலும் மொத்தம் சுமார் 20
'' மில்லியன் டன் '' சுண்ணாம்புக்கல் படிந்துள்ளதாக மதிப்
பிடப்பட்டுள்ளது.

3. தஞ்சாவூர் மாவட்டத்தில் வேதாரண்யத்திற்கு அருகில்
சிலிகா மண் படிந்துள்ளது பற்றிய துவக்க ஆய்வுகள் முடிக்கப்
பட்டுள்ளன. இந்த மணற் படிமங்கள் நல்ல தரமுடையவை
என்றும், கண்ணாடி செய்வதற்குத் தகுதி வாய்ந்தவை என்றும்,
கிரியைக்குப் பிறகு வார்ப்படத் தொழிற்சாலைக்கும் பயன்படும்
என்றும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. கனிமப்படிமங்கள் பற்றிய
தோற்றப்பணி மேற்கொள்ளப்பட்டது.

4. கோலார் தங்க சுரங்கத்தில் தங்கம் படிந்துள்ள பாறை
கள், தெற்கு நோக்கி தர்மபுரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி
வட்டத்திலுள்ள மகாராஜாகடை காட்டுப் பகுதியினுள் பரவி
இருப்பதாகத் தெரிகிறது. தற்போது, தங்கத்தின் விலை மிகவும்
உயர்ந்துள்ளதால், இந்திய புவியியல் துறை மற்றும் '' பாரத்
தங்கச் சுரங்கம்'' ஆகிய நிறுவனங்களின் கூட்டுடன், மகாராஜா
கடைப்பகுதியில் அமைந்துள்ள தங்க படிமப் பாறைகளின் விவர
மான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

5. கிழக்கு இராமநாதபுரத்தில் முதுகுளத்தூர் வட்டத்தில்
உள்ள கோக்கடி, குருவாடி, அவந்தண்டி கிராமங்களில் 'ஜிப்சம்'
படிந்துள்ளது பற்றி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த
'' ஜிப்சம் '' படிமங்கள், பூமியின் மண்படிமப் பகுதிகளில் மட்டும்
படிந்துள்ளன என்றும், சிமிட்டித் தொழிலுக்கு சராசரி தரம்
வாய்ந்ததாக சுமார் 5,20,000 டன் '' ஜிப்சம் '' எடுக்க முடியும்
என்றும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

6. திருநெல்வேலி மாவட்டத்தில் தூத்துக்குடிக்கும் பாளை
யன்காயலுக்கும் இடைப்பட்ட கடற்கரையோரப் பகுதியில்,
கிளிஞ்சல் படிமத்தை கண்டறிய மேற்கொண்ட முன் ஆய்வின்படி

[1982 மார்ச் 25

பூமியின் கருமண் பகுதியில் ஒரு மீட்டர் பருமனில் கிளிஞ்சல் சுண்ணாம்பு பாளமாக படிந்திருப்பது தெரியவந்தது. கிளிஞ்சல் சுண்ணாம்பிலிருந்து சுண்ணாம்பு அடிப்படையிலான இரசாயனத் தொழில்களுக்கு உபயோகப்படும் உயர்தரமுடைய சுண்ணாம்பு கிடைக்கும். இந்த ஆய்வு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

7. கோயம்புத்தூர் மாவட்டத்தில், காரமடைக்கருகில், கத்தானி மலையில் மேற்கொள்ளப்பட்ட '' பெல்ட்ஸ்பார் '' ஆய்வின் மூலம், அப்பகுதியில் கருங்கல் பாறைகளுடன் சுமார் 45,000 டன் '' பெல்ட்ஸ்பார் '' படிந்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

8. புதுக்கோட்டை மாவட்டத்தில் கனிவள ஆய்வு தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. எருச்சி கிராமத்திற்கருகில் மட்பாண்டத் தொழிலுக்குத் தகுதியான வெள்ளைக் களிமண் படிந்திருப்பது காணப்பட்டது. களிமண் படுகைகளைப் பற்றிய ஆய்வு மேலும் தொடரப்பட்டு வருகிறது. தச்சாங்குறிச்சிக்கரு கில் படிந்துள்ள சுண்ணாம்புக்கல் சுத்தமற்றதாகவும், சிமிட்டி தயாரிப்பதற்குத் தகுதியற்றதாயும் இருப்பதாகக் கண்டு பிடிக்கப் பட்டது. ஆனால், இது உள்ளூர் சுண்ணாம்புச் சூளைக்குப் பயன்படக் கூடியதாகும்.

9. நீலகிரி மாவட்டத்தில் நிலச் சரிவுகள் பற்றிய புவியியல் ஆய்வுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. பல்வேறு நிவாரண நடவடிக்கைகளும் பரிந்துரைக்கப்பட்டன. குறிப்பாக மேட்டுப்பாளையம் மற்றும் உதகமண்டலத்திற்கிடையேயுள்ள மலைப்பகுதி இருப்புப் பாதை பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தென் பிராந்திய '' இரயில்வே '' கேட்டுக் கொண்டதன் பேரில் கர்நாடக மாநிலத்திலுள்ள '' ஹாசன்—மங்களூர் '' பாதையிலுள்ள மலைப்பகுதி இருப்புப் பாதையைப் பற்றி இதுபோன்ற ஆய்வும், சிறப்பு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது.

கனிப்பொருள் நிர்வாகம்:

கனிமச் சலுகைகள் வழங்குவது, கனிப் பொருள் வருவாயை உயர்த்துவதற்குத் தக்க கொள்கைகளை வகுப்பது மற்றும் கனிப் பொருள் நிர்வாகத்தை சீர்படுத்துவது ஆகிய தொழில் நுட்பம் சம்பந்தப்பட்ட செயல்களில் அரசுக்கு உதவியாக இப் புவியியல் பிரிவு இருந்து வருகிறது. காஞ்சிபுரம், கடலூர், சேலம், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள வட்டார சுரங்க அலுவலகங்கள், உரிமை ஊதியத் தொகை மற்றும் இதர கனிப் பொருள் வருவாயினை நிலைப்படுத்துவதற்குரிய தொழில் நுட்ப ஆலோசனைகள் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு வழங்கி வருகின்றன. கனிப்

1982 மார்ச் 25]

பொருள் சலுகைகள் கோரி வரும் விண்ணப்பதாரர்களின் தொழில் திட்டங்களையும் இவை சரிபார்க்கின்றன. 1980—81 ஆம் ஆண்டு கனிப் பொருள் வருவாய் ரூபாய் 411.48 இலட்சமாகும். இவற்றில் ரூபாய் 238.58 இலட்சம் சேலத்திலுள்ள அரசு சுரங்கத்தில் '' மாக்னசைட் '' விற்பனையிலிருந்து பெறப்பட்டதாகும். எஞ்சியுள்ள தொகை உரிமை ஊதியம் மற்றும் இதர கனிப் பொருள் வரிகள் மூலம் வசூலிக்கப்பட்டதாகும்.

மாநிலத்தின் கனிப் பொருள் நடவடிக்கைகளைத் தீவிரப் படுத்துவதற்கும், மாவட்டங்களில் கனிப்பொருள் நிர்வாகத்தினை சீராக்குவதற்கும் தனியாக ஒரு புவியியல் மற்றும் சுரங்கவியல் இயக்குநரகத்தை அமைக்க அரசு கருதியுள்ளது. தொழில் நுட்ப உதவியளித்தும் தொழில் முனைவர்களுக்கு உதவியளித்தும், கனிப் பொருள் அடிப்படையான தொழில்களின் வளர்ச்சிக்கு, இந்தப் புதிய இயக்குனரகம் ஒரு முக்கிய அமைப்பாகத் திகழும். சுரங்கங்களில் முறையான ஆய்வுகளை மேற்கொள்ளுதல், உற்பத்தியைக் கணித்தல், கனிப்பொருள் வருவாயை வசூலித்தல் மற்றும் கனிமப் படிவங்களை தவறுதலாக எடுப்பதால் ஏற்படுகின்ற உரிமைத் தொகை இழப்பினைத் தடுத்து உரிமைத் தொகையை வசூலித்தல், ஆகிய செயல்களில் இத்துறை தீவிரமான முறைகளைச் செயல்படுத்தும்.

சிறு தொழில் நிலையங்களுக்குரிய தொழில் தொடர்பு உதவி:

அரசு கொள்முதல் திட்டத்தில் சிறு தொழில் நிலையங்கள் பங்கு பெறும்பொருட்டு, பொருள் விற்னை வழங்கல் தலைமை இயக்குனருடன் இணைந்து அத் தொழில் நிலையங்களுக்கு உதவியளிப்பதற்காக 1972 ஆம் ஆண்டில் இயக்குநரகத்தில் தொழில் தொடர்பு பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இப்பிரிவின் நடவடிக்கை சமீபத்தில் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. சமீப காலத்தில் அரசு கொள்முதல் திட்ட அடிப்படையில், பல்வேறு ஆணைகளின்படி அரசு வழங்கும் பல்வேறு சலுகைகளின் முழுப் பயனும் சிறு தொழில்களுக்குக் கிடைக்கச் செய்வதை உறுதிப்படுத்தும் வகையில் நடவடிக்கை எடுப்பதும், அரசு கொள்முதல் திட்டத்தில் கலந்து கொள்ளும் பொருட்டு சிறு தொழில்களின் ''ஒரு முனைப் பதிவு'' மேற்கொள்வதிலும், இப்பிரிவு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. சிறு தொழில் நிலையங்களிடமிருந்து பெறப்படுகின்ற அரசாணைகளை மீறி நடந்ததாகப் பெறப்படும் புகார்களை, உடனுக்குடன் கொள்முதல் நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து பிரச்சினைகள் தீர வழி வகுக்கப்படுகின்றது. அரசினது கொள்முதல் திட்டத்தில் இருக்கின்ற நலன்களைத் தெளிவாக எடுத்துச் சொல்லும் பொருட்டு, மாவட்ட சிறு தொழிலதிபர்கள் சங்கங்கள் மற்றும் மைய அரசின் கொள் முதல் நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளுக்கிடையே, அவ்வப்போது கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.

இந்த நடவடிக்கைகளுக்கு இது ஒரு ஆரம்ப நிலையே ஆகும். மாநிலத்திலுள்ள சிறு தொழில் நிலையங்கள் மைய மற்றும் மாநில அரசுகளின் கொள்முதல் திட்டங்களின் பெரும்பங்கினை பெறும் பொருட்டு, இப்பிரிவு மேலும் நன்கு பயன்படுத்தப்படும்.

தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்:

மாநிலத்தில் சிறு தொழில்கள் மற்றும் குடிசைத் தொழில்களை மேம்பாடடையச் செய்வதிலும், குறிப்பாக கிராமப் பகுதிகளில் வேலை வாய்ப்பினைப் பெருக்குவதிலும் தொழிற் கூட்டுறவுத் துறை ஒரு முக்கிய அங்கமாகத் திகழ்கிறது.

நடப்பு ஆண்டில், இத்துறையில் போற்றத்தக்க அளவுக்கு வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. 1978 ஆம் ஆண்டு மார்ச்சு இறுதியில் 297 ஆக இருந்த தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 1981 ஆம் ஆண்டு டிசம்பர் இறுதியில் 799 ஆக உயர்ந்துள்ளது. மகளிரின் நலனுக்காக 320 சங்கங்களும், ஆதிதிராவிடர்களுக்காக 47 சங்கங்களும், பின்தங்கியவர்களுக்காக 5 சங்கங்களும் உள்ளன. கடந்த நான்காண்டுகளில் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் வர்த்தக நடவடிக்கைகள் பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

வரிசை எண்.	ஆண்டு.	தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை.	மகளிர் சங்கங்கள்.	ஆதிதிராவிடர் சங்கங்கள்.	பின்தங்கியவர்களுக்கான சங்கங்கள்.	உற்பத்தி.	விற்பனை.
						(ரூபாய் இலட்சத்தில்.)	
1	1977–78	297	51	21	3	1,509.20	1,762.07
2	1978–79	380	72	23	5	1,813.70	2,035.33
3	1979–80	559	217	23	5	2,489.33	2,874.25
4	1980–81	702	271	47	5	3,377.06	3,748.06
5	1981–82 (30–9–1981 வரை)	748	322	47	5	1,730.62	1,916.06

முக்கியமான தொழில்களின் வளர்ச்சி பற்றிய விவரங்கள் சுருக்கமாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள்:

நீலகிரியில் 13 தேயிலைத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இச்சங்கங்களில் 6,629 சிறு தேயிலைப் பயிரிடுவோர் உறுப்பினர்களாக உள்ளனர். அவர்களுக்கு 13,535 ஏக்கர் நிலப்பரப்பு தேயிலைத் தோட்டம் சொந்தமாக இருக்கிறது. இச் சங்கங்கள் 39,000 பேருக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலை அளிக்கின்றன. தற்பொழுது தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் மொத்த தேயிலையில் 9 சதவிகிதம் இந்த கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளில் உற்பத்தியாகின்றன.

தேயிலையின் ஏல விற்பனை விலையில் அதன் விலைக் குறைவு மற்றும் உற்பத்திச் செலவு அதிகரிப்பு ஆகிய சிக்கல்கள் 1977 ஆம் ஆண்டிற்குப் பிறகு, கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலைகளுக்கு ஏற்பட்டன. நடப்பாண்டிலும் இச்சிக்கல் எழுந்துள்ளது. சிறு தேயிலை விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தமிழக அரசு கோயம்புத்தூர் மற்றும் கூனூரில் உள்ள விற்பனைக் கூடங்களில் விற்கப்படும் தேயிலையில் விற்பனை வரியை 5 சதவிகிதத்திலிருந்து 2½ சதவீதமாகக் குறைத்துள்ளது. மேலும் உர மானியம் வழங்குவதற்கும் தேயிலை மீதுள்ள கலால் வரியைக் குறைப்பதற்கும் இவ்வரசு மத்திய அரசைக்கேட்டுக் கொண்டது. நீலகிரியில் பகுதி IV—ன் கீழ் வருகின்ற இடங்களிலுள்ள (கூடலூர் தவிர) கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலைகளால் உற்பத்தி செய்யப்படுகின்ற தேயிலைக்கு கிலோ ஒன்றுக்கு சுங்க வரியை ரூ. 1.10 லிருந்து 0.60 பைசாவாக இந்திய அரசு குறைத்துள்ளது. பகுதி I—ல் (கூடலூர் பகுதி) உள்ள கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு, ஒரு கிலோவுக்கு ரூ. 0-40 என்ற சுங்க வரியிலும் 10 சதவிகிதம் சலுகை அளிக்கப்பட்டுள்ளது. 1981 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் டெல்லியில், தேயிலைத் தொழில் பற்றி தேசிய அளவில் நடைபெற்ற கூட்டத்தின் முடிவின்படி அத்தொழிலின் பிரச்சினைப் பற்றி விவாதிக்க சென்னையில் 26 டிசம்பர் 1981 அன்று உயர்மட்டக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் தேயிலைத் தொழிலின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். அரசு தொடர் நடவடிக்கை எடுத்து வருகிறது. தேயிலைத் தொழிலின் பிரச்சினைகளை அடிக்கடி விவாதிக்க ஒரு ஆலோசனைக் குழு அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

முக்கியமாக, குன்னூர் மற்றும் கொச்சி ஆகிய இடங்களில் நடைபெற்ற ஏலத்தில் தேயிலை விற்கப்பட்டது. 1980 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் கோயம்புத்தூரில் புதிய ஏல விற்பனை

நிலையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. ஏலத்தில் விற்பதற்கு முன்பாக, தேயிலை தனியார் கிடங்குகளுக்கு அனுப்பப்பட்டன. அனைத்து கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலைகளுக்கும் '' இன்கோசெர்வ் '' என்றழைக்கப்படுகின்ற நீலகிரி சிறு தேயிலை பயிரிடுவோர் தொழிற் கூட்டுறவுச் சங்கம் என்பது, மைய சங்கமாக உள்ளது. இச் சங்கம் அதற்குச் சொந்தமாக குன்னூரில் ரூ. 15 இலட்சம் மதிப்பில் ஒரு கிடங்கையும், கொச்சியில் ரூ. 10 இலட்சம் மதிப்பில் மற்றொரு கிடங்கையும் அமைத்து பண்டகசாலை வசதிகளை அளித்து வருகிறது.

விற்பனை வசதி:

தேயிலைத்தூள் மற்றும் தேயிலையை 10 கிராம், 250 கிராம், 500 கிராம் பொட்டலங்களாக அடைத்து, '' அரைக்கப்பட்ட தேயிலை'' விற்கும் பணியினை ''இன்ட்கோசெர்வ்'' மேற்கொண்டுள்ளது. ''இண்ட்கோ'' தேயிலையின் விற்பனையை அதிகரிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன், ''சூப்பர் மார்கெட்டுகள்'', கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் யாவும் அவற்றின் தேயிலைத் தேவைகளை ''இண்ட்கோசெர்வ்;' விடமிருந்து பெறவேண்டுமென, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அறிவுறுத்தியுள்ளார்.

மலைப்பகுதி வளர்ச்சித் திட்டத்தின் கீழ், கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளுக்கும், ''இண்ட்கோசெர்வ்'' என்ற மையச் சங்கத்திற்கும் 1980–81 ஆம் ஆண்டில் ரூ. 20 இலட்சம் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் சிறு தேயிலைப் பயிரிடுகின்ற உறுப்பினர்களுக்கு சலுகை முறையில் உரங்கள் வழங்கப்பட்டன. இந்தச் சலுகை வீதத்தின் காரணமாக ஆகும் செலவினை கல்கத்தாவிலுள்ள தேயிலை வாரியம் ஏற்றுக்கொண்டது. நீண்டகாலமாக இந்த சலுகை வீத முறை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. 1981–82 ஆம் ஆண்டில்தான் மலைப் பகுதி வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 15 சதவீதம் சலுகை விலையில் உரங்கள் வழங்கும் திட்டத்திற்கு புத்துயிரூட்டப்பட்டது.

பிரச்சினைகள் மற்றும் அவற்றின் தன்மைகளைக் கணித்து கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதற்காக, கூட்டுறவுத் துறையில் சிறு தேயிலை பயிரிடுபவர்களின் கருத்தரங்கு ஒன்று 1981 ஆம் ஆண்டு சூன் திங்களில் நடததப்பட்டது. அக்கருத்தரங்கில் உருவான குறிப்புகள் மற்றும் பரிந்துரைகளின் மீது தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தற்போது தேயிலை விற்பனை நிலவரத்தில் சிறிது முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. தேயிலைத் தொழில் முன்னேற்றமடைந்து, இதுவரையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை களைய

முடியும் என்ற நிலை உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. தேயிலைக்கென அமைந்திருக்கின்ற சுங்க வரி, விற்பனை வரி போன்றவற்றிலுள்ள சலுகைகள் தேயிலைத் தொழிலை முன்னேற்றப்பாதையில் நடத்திச் செல்லும்.

தயாரித்து முடிக்கப்பட்ட தேயிலையை ஏலத்தில் விற்க வேண்டும் ; எனவே அதனை அனுப்புவதற்கு, தேயிலைத் தொழிற்சாலைக்கு பெட்டிகள் தேவைப்படுகின்றன. இவை தனியாரிடமிருந்து வாங்கப்படுகின்றன. இவற்றைப் பெறுவதில் சிரமங்கள் உள்ளன. இவற்றின் விலையும், தரமும், அவ்வப்போது மாறுபடுகின்றன. சுய தேவையைப் பூர்த்தி செய்வதற்கும், ஏகவசமுள்ள சந்தை வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்வதற்கும், நியாயமான விலையில் உரிய நேரத்தில் பெட்டிகளை வழங்குவதற்காக, தமிழ்நாடு 'ஃபிளைவுட்-வெனியர்ஸ்'' தொழிற் கூட்டுறவுச் சங்கம் ஒன்றினை நீலகிரி மாவட்டத்தில் அமைப்பதற்காக, பதிவு செய்யப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலை, ஓரிரண்டு ஆண்டுகளில் உற்பத்தியைத் துவக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

தீக்குச்சி தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் :

1963 ஆம் ஆண்டில், முதலாவதாக தீக்குச்சி தொழிற் கூட்டுறவு பணிச் சங்கம் அமைக்கப்பட்டது. 1976–77 ஆம் ஆண்டு இறுதியில் இதுபோன்ற 11 சங்கங்கள் இருந்தன. இச் சங்கங்கள் இராமநாதபுரம், திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் வட ஆற்காடு மா்வட்டங்களில் செயல்பட்டு வந்தன.

கையினால் தயாரிக்கின்ற தீக்குச்சி தொழிலானது, அதிக வேலை வாய்ப்பினை அளிக்கவல்லதாயிருப்பதால், மாநிலத்தில் இத் தொழில்கள் இல்லாத பகுதிகளில் கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்துவதற்காக, இவ்வகைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதற்கு அரசு ஒப்புதலளித்தது. இதன் பயனாக, 30—9—1981 வரை மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும், 100 தொழிற் கூட்டுறவு தீக்குச்சி பணிச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. இவற்றின் செயலாக்கம் பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :—

வரிசை என் மற்றும் விவரங்கள்.	1976–77 வரை.	31-3-1981	—30-9-1981 (அரையாண்டு)
(1)	(2)	(3)	(4)
1 தீப்பெட்டி பணிச் சங்கங்களின் எண்ணிக்கை.	11	85	100

(1)	(2)	(3)	(4)
2 உறுப்பினர் தீப்பெட்டி நிலையங்கள்.	847	5,354	6,953
	(ரூ. இலட்சத்தில்.)		
3 (அ) உறுப்பினர்களின் பங்கு மூலதனம்.	32.28	152	196
(ஆ) அரசு மூலதனப் பங்கு.	2.75	11.25	11.25
4 தமிழ்நாடு மாநிலத் தொழிற் கூட்டுறவு வங்கியினால் வழங்கப்பட்ட கடனுதவி.	38.79	208	262
5 தீப்பெட்டிகளின் உற்பத்தி மதிப்பு.	243.50	1,376	689
6 தீப்பெட்டிகளின் விற்பனை மதிப்பு.	263	1,541	735
7 வேலை வாய்ப்பு ..	16,000	55,000	1,50,000

மேற்கண்ட விவரங்களிலிருந்து, கடந்த நான்காண்டுகளில், தொழிற் கூட்டுறவுகளின் கீழுள்ள கையினால் தயாரிக்கப்படும் தீப்பெட்டித் தொழிலின் வளர்ச்சியானது குறிப்பிடத்தக்கதாக உள்ளது என்பதனை அறியலாம். கூட்டுறவின் கீழ் வருகின்ற தீப்பெட்டி குடிசைத் தொழிற் சாலைகளுக்கு இந்திய அரசு வழங்கிய சுங்கவரிச் சலுகையின் காரணமாக, அத்தொழிற் சாலைகள் குறிப்பிடத்தக்க அளவுக்கு வளர்ச்சி அடைந்துள்ளன. பல்வேறு வகைப்பட்ட தீப்பெட்டி தொழிற்சாலைகளுக்குரிய சுங்கவரி அமைப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

வரிசை எண்ணும் தீப்பெட்டி தொழிற்சாலையின் வகை. (1)	ஒரு ''குரோசுக்குரிய'' பழைய சுங்க வரி வீதம். (2)	ஒரு ''குரோசுக்குரிய'' புதிய சுங்க வரி வீதம். (3)
1 இயந்திர அடிப்படையில் அமைந்த தொழிற்சாலை.	ரூ. 4.60	ரூ. 7.20
2 இயந்திரமல்லாத நடுத்தர துறையிலுள்ள தீப்பெட்டி தொழிற்சாலை.	4.30	4.50
3 கூட்டுறவு மற்றும் கதர் கிராமத் தொழில் குழுவின் கீழுள்ள குடிசைத் தொழில்கள்.	3.20	1.60

இத் தொழிலின் முக்கிய அம்சம் யாதெனில், தீப்பெட்டியின் மேல் பெட்டி, அடிப்பெட்டி செய்தல் மற்றும் தீக்குச்சி சிம்பு அடுக்குதல் ஆகிய வேலைகளை குழந்தைகளாலும், முதியவர்களாலும் வீட்டிற்குள்ளேயே செய்ய முடியும் என்பதாகும். கிராமங்களில், அதிக அளவில் மகளிர் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

தீப்பெட்டி பணிச் சங்கங்களுக்கு அரசினது உதவி :

1. ஒவ்வொரு சங்கத்திற்கும் ரூ. 25,000 பங்கு மூலதனமாக வழங்குகிறது.

2. ஒவ்வொரு சங்கத்திற்கும், உறுப்பினர்கள் பங்கு மூலதனம் செலுத்துவதற்கு ரூ. 2,000 மூலதனக் கடனாக வழங்குகிறது.

3. முதல் மூன்றாண்டுகளுக்கு இலவசமாக பணியாளர்களை வழங்குகிறது. அதற்கடுத்துள்ள மூன்றாண்டுகளுக்கு அப்பணியாளர்களின் சம்பளத்தில் முறையே 75 சதவீதம், 50 சதவீதம், 25 சதவீதத் தொகைகளை அரசு வழங்குகிறது.

இதர நிறுவன உதவிகள்:

1. நடைமுறை மூலதனத்திற்கு 4 சதவீதம் வட்டி சலுகைத் தொகையை கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் வழங்குகிறது.

2. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம், தீப்பெட்டி தொழிற்சாலைகளை அமைப்பதற்கு தொழிற்கூடங்களை வழங்குகிறது.

3. கருவிகள் மற்றும் சாதனங்களை வாங்குவதற்கு, தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் கடன் வழங்குகிறது.

4. தமிழ் நாடு மாநிலத் தொழிற் கூட்டுறவு வங்கி, நடைமுறை மூலதனக் கடன் கொடுக்கிறது.

தீப்பெட்டி தயாரிப்பதற்காக, உறுப்பினர் தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப் பொருள்கள் அனைத்தையும், இந்தத்தீப்பெட்டி தொழிற் கூட்டுறவு பணிச் சங்கங்கள் கொள்முதல் செய்து நியாய விலையில் வழங்குகின்றன. இச் சங்கங்கள் சுங்க வரியைச் செலுத்தி, உறுப்பினர் தொழிற்சாலைகளின் தீப்பெட்டிகளை விற்பனைக்காக எடுத்து கொள்ளுகின்றன.

ஏற்கனவே உள்ள தொழிற் கூட்டுறவு தீப்பெட்டிப் பணிச் சங்கங்களில், சிவகாசியில் ஆதிதிராவிடர்களுக்கென்றே ஒரு சங்கம் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது 100 குடும்பங்களுக்கு உதவியளிக்கிறது. 1981–82 ஆம் ஆண்டில் ஐந்து தொழிற் கூட்டுறவு தீப்பெட்டி பணிச் சங்கங்கள் அமைப்பதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் 300 ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு உதவியளிக்கும் வகையில், மூன்று சங்கங்கள் பதிவு செய்யப்படவிருக்கின்றன.

II தீப்பெட்டி பணியாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்:

1976–77 ஆம் ஆண்டு வரை, மாநிலத்தில் 25 தீப்பெட்டி பணியாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. ஒவ்வொரு சங்கமும் 20 பேருக்கு வேலையளித்து ஏழ்மையான மக்களுக்கு உதவி புரிய வேண்டுமென்ற நோக்கத்துடன், 1977–78 ஆம் ஆண்டு முதல் அதிக அளவில் இச்சங்கங்கள் பதிவு செய்யப்பட்டன. 31—3—1981 இறுதியில் 335 சங்கங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன. மகளிர் பலர் இச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு, அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. 30—9—1981 இல் இச் சங்கங்களின் எண்ணிக்கை 359 ஆகும். 1981–82 ஆம் ஆண்டில் இருபது தீப்பெட்டி பணியாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதற்கு அரசு ஒப்புதலளித்துள்ளது. இவற்றில், 15 சங்கங்கள் ஆதிதிராவிடர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ளன.

தீப்பெட்டித் தொழிலுடன் இணைந்த இதர திட்டங்கள்;

(அ) தொழிற் கூட்டுறவின் கீழ், தீப்பெட்டிக்கு வேண்டிய முகப்பு சீட்டுகளை அச்சிடுவதற்கு, ஒரு அச்சுக்கூடம் சிவகாசியில் இயங்கி வருகிறது. இந்த கூட்டுறவு அச்சகம், ஆண்டொன்றுக்கு ரூ. 50.00 இலட்சம் மதிப்புள்ள முகப்பு சீட்டுகளை அச்சிடுகிறது. மேலும் ஒரு அச்சகம் கோவில்பட்டியில் அமைப்பதற்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இதுவரையில் முகப்பு சீட்டுகளை அச்சிடத் துவங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

(ஆ) 1981–82 ஆம் ஆண்டில் தீப்பெட்டி தயாரிப்பதற்குத் தேவையான ''பொட்டாசியம் குளோரேட்' தயாரிப்பதற்காக ஒரு தொழிற் கூட்டுறவுச் சங்கத்தை அமைப்பதற்கு அரசு ஒப்புதலளித்தது. இச்சங்கம், குன்றக்குடியில், பதிவு செய்யப்பட்டுள்ளது. ரூ. 35 இலட்சம் செலவில் அமைக்கப்படவிருக்கின்ற இந்த தொழிற் கூட்டுறவுச் சங்கம், அடுத்த ஒரு ஆண்டில் உற்பத்தியைத் துவங்குமெனவும், நாளொன்றுக்கு இது ஒரு மெட்ரிக் டன் ''பொட்டாசியம் குளோரேட்'' தயாரிக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

(இ) திருநெல்வேலி, கன்னியாகுமரி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் தீக்குச்சி சிம்புகள் தயாரிக்கும் 5 தொழிற்சாலைகளை அமைப்பதற்கு, சாத்தூரிலுள்ள தீப்பெட்டி கூட்டுறவு இணையத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. திருநெல்வேலி மாவட்டம் வைப்பார் என்னுமிடத்தில், ரூ. 5.00 இலட்சம் செலவில் ஒரு தொழிற்சாலை அமைக்கப்பட்டது. இது 20-1-1982 முதல் செயல்படத்துவங்கியுள்ளது. தமிழ்நாடு தீப்பெட்டி பணிச் சங்கங்களுக்குத் தேவையான தீக்குச்சி சிம்புகளின் ஒரு பகுதியை, இத் தொழிற்சாலை தயாரிக்கும். அரசின் கீழுள்ள வனப் பகுதியில் கிடைக்கின்ற மென்மையான மரங்களை, சாத்தூரிலுள்ள தீப்பெட்டி கூட்டுறவு இணையத்தால் அமைக்கப்பட்ட தீக்குச்சி சிம்பு தொழிற்சாலைகளுக்கு வழங்க, அரசு ஆணையிட்டுள்ளது.

(ஈ) சேவைச் சங்கங்களின் கீழுள்ள தீப்பெட்டி தொழிற்சாலைகளுக்குத் தேவையான நீலக் காகிதம் தயாரிப்பதற்கு, ரூ. 125 இலட்சம் மதிப்பில் சின்னஞ்சிறு காகிதத் தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்கு அரசு ஒப்புதலளித்துள்ளது. இத் தொழிற்சாலை தொழிற் கூட்டுறவுத் துறையில் விரைவில் அமைக்கப்படும்.

1982–83 ஆம் ஆண்டுக்குரிய திட்டங்கள் :

மாநில அரசின் தீவிர உதவியினால், எப்படி வேலை வாய்ப்பை மட்டுமே முக்கியமாகக் கொண்ட கிராமத் தொழில்கள் குறுகிய காலத்தில் குறிப்பிடத்தக்க அளவுக்கு முன்னேற்றமடைய முடிந்தது என்பதனை, மேலே உள்ள விவரங்கள் தெளிவாக்குகின்றன. தீப்பெட்டித் தொழிற்சாலைகளே இல்லாத புதிய பகுதிகளில் இத்தொழிலில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியேற்பட்டிருப்பது மேலும் சிறப்பு வாய்ந்த அம்சமாகும்.

ஐந்து தீப்பெட்டி தொழிற் கூட்டுறவுப் பணிச் சங்கங்களும், 20 தீப்பெட்டிப் பணியாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களும் அமைப்பதற்குரிய கருத்துரு, அரசின் பரிசீலனையில் உள்ளது. இச்சங்கங்களை அமைப்பதன் மூலம், மேலும் 10,000 பேருக்குக் கூடுதலாக வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

கயிறு தொழில்.

உலகிலேயே தேங்காய் உற்பத்தி செய்யும் நாடுகளில் இந்தியா மூன்றாவது இடத்தை வகிக்கின்றது. தமிழ்நாடு இந்தியாவில் இரண்டாம் இடத்தை வகிக்கின்றது. மேலும் ஹெக்டேருக்கு அதிக அளவில் தென்னை உற்பத்தி செய்கின்றது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை பழுப்பு நிற கயிற்றினை நம்பியே கயிறு தொழில் உள்ளது. தற்போது 231 தென்னை நார் பிரித்தெடுக்கும் நிலையங்கள் தமிழ்நாட்டில் உள்ளன. இதுவரை உற்பத்தியில் ஈடுபடாத சுருள்நார், கயிறு, பாய் வகைகள், ரப்பர் கலந்த கயிறு வகைகள் போன்ற இனங்களில், இனி கயிறு தொழிலின் உற்பத்தி மற்றும் வளர்ச்சியில் கவனம் செலுத்தப்படும்.

1979–80-ல் 10 கயிறு கூட்டுறவு சங்கங்களே இருந்த தமிழ்நாட்டில் தற்போது அது பெருகி 42 சங்கங்கள் என்ற அளவிற்கு வளர்ந்துள்ளது. பல இடங்களில் தரமான இருபிரி கயிறு உற்பத்தி செய்ய பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சி திட்டத்தின்கீழ் கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் 500 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

உற்பத்தி செய்யப்பட்ட பழுப்பு நிற நார், அங்காடியில் தேங்கிடாமல், உடனுக்குடன் பயன்படுத்திட 1982–83 ஆம் ஆண்டு திட்டப்பணியில் சுமார் 600 ... டன் பழுப்பு நாரினை பயன்படுத்தும் திறனுள்ள இரண்டு சுருள் நார் கயிறு சங்கங்களை ஒவ்வொன்றும் ரூ. 8.57 இலட்சம் செலவில் அமைக்கப்பட உள்ளது. மேலும் மூடப்பட்டுள்ள ஈத்தாமொழி கயிறு பயிற்சி பள்ளியை புதுப்பிக்கும் பொருட்டும், பயிற்சியாளர்களுக்கு மறு வாழ்வு அளிக்கவும் அங்கு ஒரு கயிறு, பாய் வகைகள் தயாரிக்கும் சங்கம் ரூ. 5.40 இலட்சம் செலவில் அமைத்திட உத்தேசிக்கப்பட்டு உள்ளது.

தமிழ்நாட்டில் பழுப்பு நிற நார் முன்னேற்றத்திற்காக கயிறு வாரியம், ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தினை துவக்கிட முன்வந்துள்ளது. மேற்கண்ட நிலையம், ஏற்படுத்தப்பட்ட பிறகு மேலும் 4 கிளை நிலையங்கள், மாநிலத்தின் பிற பகுதிகளில்

அமைக்கப்பட்டு கயிறுபாய், சுருள்நார், ரப்பர் கயிறு தயாரிப்பு போன்ற சொகுசு பொருட்கள் தயாரிப்பில் பயிற்சி அளிக்கப்படும்.

1982–83 திட்டப்பணியில் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள இரண்டு சுருள்நார் கயிறு சங்கங்கள் மற்றும் ஒரு கயிறு பாய்கள் தயாரிக்கும் சங்கத்தின் மூலமாக கூடுதலாக 183 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு கிடைக்கும்.

சவ்வரிசி மற்றும் மாவுப் பொருள் தயாரிப்பாளர்கள் தொழிற் கூட்டுறவு பணிச் சங்கங்கள்.

தமிழ்நாட்டில், சுமார் 25,000 கிராம மக்களுக்கு வேலையளிக்கக் கூடிய மற்றொரு தொழில், இந்த சவ்வரிசித் தொழிலாகும். தமிழ்நாட்டில் 50,000 ''ஹெக்டேர்'' நிலப்பரப்பில் மரவள்ளிக் கிழங்கு பயிரிடப்படுகிறது. இதில், 28,000 ''ஹெக்டேர்'' நிலங்கள், சேலம், தர்மபுரி மாவட்டங்களிலுள்ளன. இம்மாவட்டங்களிலுள்ள, சிறு அளவில் அமைந்துள்ள சவ்வரிசி மற்றும் மாவு தயாரிப்பாளர்களிடையே இப்பொருள்களை இருப்பு வைத்துக்கொள்வதற்கு போதுமான வசதியின்மையால் இந்தப் பொருள்களை சந்தையில் கிடைத்த விலைக்கு உடனுக்குடன் விற்க வேண்டிய நிலை உள்ளது. இதன் காரணமாக, உற்பத்தியாளர்கள், இப்பொருள்களுக்குறிய நல்ல விலையினைப் பெற இயலுவதில்லை. மரவள்ளிக் கிழங்கு பயிரிடுகின்ற நிலப்பரப்பை அதிகமாக்கும் பொருட்டு, உள்ளூர் விவசாயிகளுக்கு, போதுமான சலுகைகள் இல்லை என்பதாலும், சவ்வரிசி மற்றும் மாவுப் பொருள்களைத் தயாரிப்பவர்களுக்குத் தரக்கூடிய விலை நிரந்தரமில்லாதிருத்ததாலும், அவர்கள் தங்கள் உற்பத்தியை விற்பதற்கு சில வியாபாரிகளை மட்டுமே நம்பியுள்ளனர்.

மரவள்ளிக் கிழங்குப் பொருள்களுக்கு அதிக விலை அளித்து, பயிரிடுகின்ற நிலப்பரப்பை அதிகமாக்கும் நோக்கத்துடன், 1981–82 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் சவ்வரிசி மற்றும் மாவுப் பொருள் தயாரிப்பாளர்களின் தொழிற் கூட்டுறவுப் பணிச் சங்கம் போன்ற சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. இது போன்ற சங்கம் ஒன்றை, 1982–83 ஆம் ஆண்டில், மாவுப் பொருள் தயாரிப்பாளர்களுக்காக தர்மபுரி மாவட்டத்தில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

பயிற்சி வசதிகள்: கிண்டியிலுள்ள தொழில் நுட்பப் பயிற்சி நிலையம், இதுவரையில், இயந்திரங்களை இயக்குதல், அச்சு வார்த்தல், கருவிகள் செய்தல், உலையில் காய்ச்சி அடித்துப் பக்குவப் படுத்துதல் போன்ற ''சான்றிதழ் பாடமுறைகளில்''

பயிற்சி அளித்து வந்தது. 1981—82 ஆம் ஆண்டில் பிரிவு II திட்டங்களின்கீழ் இப்பாட முறைகள், ''கருவி பொறியியல் தகுதிப் பட்டய பாட முறையாக'', மாற்றப்பட்டுள்ளது. இந்த நிலையத்தில் இப்பாடமுறை நவம்பர் 1981—லிருந்து துவக்கப் பட்டது. இதனோடு, மின்னணுக் கருவியில் மற்றும் குளிர் சாதனப் பொறியியல் ''சான்றிதழ் பாட முறை'' வகுப்புக்களை மாற்றுவதற்கும் அரசு ஒப்புதலளித்துள்ளது. இந்தத் தகுதிப் பட்டயப் பாட முறைகள் அடுத்த ஆண்டு ஆரம்பிக்கப்படும். மேற்கண்ட பாட முறைகள் தவிர, அச்சு வார்த்தல் மற்றும் கருவிகள் செய்வதில் தகுதிப்பட்டய மேற்படிப்பும் இரப்பர் தொழில் நுட்பவியலில் சான்றிதழ் வகுப்பும் இந்த நிலையத்தில் நடத்தப்படுகின்றன.

கருவிகள், அச்சு வடிவமைப்பு பயிற்சி நிலையம், திண்டுக்கல் :

கருவிகள் அச்சு வடிவமைப்பதில் ஏற்கெனவே இருந்து வந்த ''சான்றிதழ் பாட முறைகள்'', 1981—82ஆம் ஆண்டு பிரிவு II திட்டத்தின்கீழ், ''கருவி— பொறியியல் தகுதிப் பட்டய பாட முறையாக'' மாற்றப்பட்டுள்ளது. இந்தப்பாட முறை, அடுத்த ஆண்டில் ஆரம்பிக்கப்படும்.

கிராமப் பணி ஆதார நிலையங்கள் :

அம்பாசமுத்திரம் மற்றும் தென்காசியிலுள்ள கிராமப்பணி ஆதார நிலையங்களில், பொருத்துதல், கடைசல் பிடித்தல் மற்றும் பற்ற வைத்தல் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

முடிவுரை.—தமிழகத்தை தொழில்மயமாக்கும் முயற்சியில் சிறு தொழில் வளர்ச்சிக்கு என அமைந்த எந்த திட்டமும் இது வரையில், வளர்ச்சி குன்றிய பகுதிகளில் சிறு தொழில் சீராக வளர்வதற்கு வழி செய்தாக வேண்டும். இந்தச் செயலை நிறை வேற்றும் பொருட்டு, ''வளர்ச்சி மையங்கள்'' என்ற கொள் கைக் கோட்பாட்டுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. இதன்படி, தீவிர அபிவிருத்திக்கு வேண்டிய வளங்களைக் கொண்டுள்ள பகுதிகளைத் தேர்ந்தெடுத்து அங்கெல்லாம் அடிப் படை வசதிகள் அமைத்துக் கொடுக்கப்படும். இந்த அடிப் படையில்தான் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்தங்கிய பகுதிகளில் பெரிய, நடுத்தர மற்றும் சிறு தொழில்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்காக இந்திய அரசு அறிவித்துள்ள தொழில் மைய பகுதி'' (Nucle s Complex Concept) கோட்பாட்டினை, மாநில அரசு வரவேற்றிருக்கிறது. தமிழ்நாட்டினைப் பொறுத்தவரை, இதுபோன்ற தொழில் மையப் பகுதிகளை அமைப்பதற்கு புதுக்கோட்டையும், திண்டுக்கல்லும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இந்திய அரசின் உதவியுடன் இத்திட்டங்களைச் செயலாக்க வேண்டிய விவரமான நடவடிக்கைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

மாவட்ட தொழில் மையங்களின் முன்னேற்ற அறிக்கை.

(1)	1978—79. (2)	1979—80. (3)	1980—81. (4)	1981—82. 4/81 முதல் 12/81 முடிய. (5)	1981—82. மொத்தம். (6)
1. வழங்கப்பட்ட நிரந்தரமான சிறு தொழில்கள் சான்றிதழ்கள்.	1,560	5,632	6,692	4,282	18,166
2. வங்கியின் மூலம் நிதியுதவி சிறு தொழில் நிலையங்களின் எண்ணிக்கை.	1,709	3,486	2,713	1,900	8,808
ரூபாய் இலட்சத்தில் ..	146.187	482.54	770.36*	477.01	1,876.78
கைவினைஞர்களுக்கு நிதி யுதவி எண்ணிக்கை ..	2,757	5,095	..	..	7.852
ரூபாய் இலட்சத்தில் ..	14.72	84.23	..	..	98.95
3. வங்கிகளால நேரடியாகவும் மாவட்ட தொழில் மையங் களின் பரிந்துரைகளின் பேரிலும் (கைவினைஞர் கள் உட்பட) வழங்கப் பட்ட நிதியுதவி எண் ணிக்கை	..	..	13,668	5,596	19,264
ரூபாய் இலட்சத்தில் ..	..	..	1,253.10	601.05	1,854.15
4. வேலை வாய்ப்பு	18,428	67,584	88,477	57,550	2,320,39

* கைவினைஞர்களுக்கு வழங்கப்பட்ட உதவியும் உள்ளிட்டதாகும்.

மாவட்ட தொழில் மையங்களின் முன்னேற்ற அறிக்கை.

ஏப்ரல் 1981—டிசம்பர் 1981.

மாவட்ட தொழில் மையங்கள்.	வழங்கப்பட்ட சிறு தொழில் சான்றிதழ்கள். நிரந்தர மானவை.	வழங்கப்பட்ட சிறு தொழில் சான்றிதழ்கள். தற்காலிக மானவை.	வேலை வாய்ப்பு.	உற்பத்தியை துவங்கிய கைவினைத் தொழில்கள் மற்றும் கைத்திறத் தொழில்கள்.
(1)	(2)	(3)	(4)	(5)
1. செங்கற்பட்டு	503	1,153	5,400	156
2. தருமபுரி	225	685	2,700	244
3. கன்னியாகுமரி	68	240	850	345
4. புதுக்கோட்டை	166	593	2,000	209
5. இராமநாதபுரம்	361	845	4,400	314
6. சேலம்	776	1,398	9,300	145
7. தென் ஆற்காடு	218	1,018	2,600	211
8. திருநெல்வேலி	220	692	2,500	..
9. கோயம்புத்தூர் ..	659	2,039	7,900	244
10. வட ஆற்காடு	239	1,052	2,800	577
11. மதுரை	228	1,145	2,700	477
12. பெரியார்	224	493	2,600	116
3. தஞ்சாவூர்	132	516	1,600	60
14. திருச்சிராப்பள்ளி	263	931	3,000	164
மொத்தம் ..	4,282	12,280	50,350	3,262

மாவட்ட தொழில் மையங்களின் முன்னேற்ற அறிக்கை—தொடர்ச்சி.

ஏப்ரல் 1981—டிசம்பர் 1981—தொடர்ச்சி.

வட்ட தொழில் மையங்கள்.	வேலை வாய்ப்பு.	எண்ணிக்கை.	மாவட்ட தொழில் மையங்கள் மூலமாக வங்கி தொகை.	தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் தேசிய சிறு தொழில் நிறுவனம், கதர் வாரியம், சிட்கோ போன்றவை மூலம் நிதியுதவி. எண்ணிக்கை.	தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் தேசிய சிறு தொழில் நிறுவனம், கதர் வாரியம், சிட்கோ போன்றவை மூலம் நிதியுதவி. தொகை.
(1)	(6)	(7)	(8)	(9)	(10)
			(ரூபாய் இலட்சத்தில.)		(ரூபாய் இலட்சத்தில்.)
1. செங்கற்பட்டு	584	279	82.34	1	0.44
2. தர்மபுரி	732	39	16.11	231	39.45
3. கன்னியாகுமரி	428	106	12.93	283	8.33
4. புதுக்கோட்டை	282	34	16.35	14	0.97
5. இராமநாதபுரம்	409	185	51.26	378	123.43
6. சேலம்	579	124	86.77	274	33.58
7. தென் ஆற்காடு	422	5	1.19	606	35.34
8. திருநெல்வேலி	..	325	41.84	72	7.89
9. கோயம்புத்தூர்	372	170	60.54	1,826	138.56
10. வட ஆற்காடு	2,023	222	35.23	1,322	80.88
11. மதுரை	507	63	22.81	57	26.55
12. பெரியார்	276	163	19.82	41	13.78
13. தஞ்சாவூர்	258	55	13.58	190	33.19
14. திருச்சிராப்பள்ளி	328	130	16.23	301	58.66
மொத்தம் ..	7,200	1,900	477.01	5,596	601.05

பட்டு வளர்ச்சி இயக்குனரகம்.

வேலை வாய்ப்பினை அதிக அளவில் பெருக்குவது அரசின் கொள்கைகளில் ஒன்றாகும். அந்த வகையில் அதிக வேலை வாய்ப்பு திறனுள்ள கிராமத் தொழிலாக சிறப்புறும் பட்டுத் தொழிலை கடந்த நான்கு ஆண்டுகளாக அரசு கிராமப்புற மேம் பாட்டிற்காக அமல்படுத்துகிறது. அரசின் சீரிய முயற்சி களினால் முசுக்கொட்டைச் செடி பயிரிடப்படும் பரப்பளவு 47,042 ஏக்கர் அளவிற்கு கடந்த டிசம்பர் 1981-ல் அதிகப்படுத் தப்பட்டுள்ளது.

மானிய உதவிகள்—

நடப்பு ஆண்டில் கூடுதலாக 7,058 ஏக்கரில் முசுக்கொட்டைச் செடி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கும் திட்டத்தின்மூலம் 2,935 விவசாயிகளுக்கு மூன்று மாதத்திற்கு பயிற்சியும், பயிற்சி காலத்தில் மாதம் ரூ. 150 பயிற்சி உதவித் தொகையும் அளிக்கப்படும். மேலும் பயிற்சி முடிந்தபின் ரூ. 300 மதிப்புள்ள புழு வளர்ப்பு உபகரணங்களில் 50 சதவீதம் மானியமும் வழங்கப்படும். மேற்கண்ட பயிற்சி திட்டமட்டுமின்றி விவசாயிகளுக்கு நடப்பு ஆண்டில் புழு வளர்ப்பு கருவிகள் விலையில் 25 சதவீதம் மானியம் ரூ. 375, புழு வளர்ப்பு மனை கட்ட 25 சதவீதம் மானிய தொகையான ரூ. 750-ம் வழங்கப்படுகின்றது. தேசியமயமாக்கப்பட்ட வங்கி மற்றும் நிதி உதவி கழகங்களில் தேவையான கடன் பெற, பட்டு வளர்ச் சித் துறை தீவிர நடவடிக்கை எடுக்கிறது.

அடிப்படை வசதிகள்.—அரசின் தீவிர நடவடிக்கைகளின் பய னால் பட்டுக்கூடு அங்காடிகள், பட்டுப்புழு வளர்ப்பு மையங் கள் வித்தகப் பண்ணைகள், மாவட்ட பட்டு வளர்ப்பு மையங்கள் போன்ற அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டு தற்போது 150 லட்சம் நோயற்ற பட்டு முட்டைகளை உற்பத்தி செய்ய வழி செய்யப்பட்டுள்ளது. பட்டு நூற்புத்திறனை அதி கரிக்க வேண்டி, ரூ. 5.50 லட்சம் செலவில் (ஒரு பேசினுக்கு 50 சதவீதம் மான்யம் ரூ. 1,100 என்ற அளவில்) 500 பேசின் களை நிறுவ அரசு அனுமதி வழங்கி உள்ளது. கூட்டுறவுத் துறையில், குக்கிராமங்களில் உள்ள விவசாயிகள் பயன் பெறத் தக்கவகையில் விவசாயிகளை அங்கத்தினர்களாகக் கொண்ட 26 பட்டு நூற்பகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேற்படி சங் கத்தின் அங்கத்தினர்கள் ஒரு நாளைக்கு 400 முதல் 500 கிராம் பட்டினை நூற்கும் திறன் பெற்றவர்களாக உள்ளனர்.

நடப்பு ஆண்டில் முதல் முறையாக பட்டுப்புழு வளர்ப்பு வசதிகளை விவசாயிகளுக்கு வழங்கிட, 25 கிராமப் பட்டுப் புழு வளர்ப்பு நிலையங்கள் பல்வேறு மாவட்டங்களில் ஏற்படுத்தப்

பட்டுள்ளன. மேலும் நியாயமான விலையில், தங்களின் பட்டுக் கூடுகளை, விவசாயிகள் விற்பதற்கு வசதியாக, மேலும் இரண்டு பட்டுக்கூடு அங்காடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஈரிபட்டுப் புழு வளர்ச்சி : ஆத்தூரில் ஈரி பட்டுப் புழு வளர்ச்சிக்காக ஒரு ஈரி பட்டுப் புழு முன்மாதிரி நிலையம் அமைக் கப்பட்டு, ஈரி பட்டுப் புழு வளர்த்தலில் 200 விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்படும். மேற்கண்ட நிலையத்தினை அமைக்கும் பொருட்டு, பயிற்சி, மானியம் போன்றவற்றிற்காக ரூ. 6,35 லட்சம் 1982–83-ல் வழங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வளர்ச்சி—இந்தாண்டு, பைவோல்டின் இன பட்டுப் புழு வளர்ப்பில் தனிக் கவனம் செலுத்த அரசு முடிவு செய்துள்ளது. இதன் பொருட்டு பட்டு வளர்ச்சித் துறையின் மூத்த இரண்டு அலுவலர்கள், ஜப்பான் நாட்டில் பட்டு வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள புதிய முறைகளை அறிந்து செயல்படுத்த அனுப்பப்பட்டனர். பட்டு வளர்ச்சியில் திறன்பெற்ற விஞ்ஞானியின் பரிந்துரையின் பேரில், சோதனை பட்டு வளர்ப்பு முறைகள் கடைபிடிக்கப் பட்டுள்ளன. அதன் பயனாக, வடாற்காடு, சேலம், கோயம் புத்தூர், தர்மபுரி மற்றும் பெரியார் மாவட்டங்களில் பைவோல் டின் இன பட்டு வளர்ப்பினை 5000 பட்டு விவசாயிகள் நடை முறைப்படுத்துகின்றனர்.

தடுப்பு நடவடிக்கை.—தமிழ்நாட்டின் சில மாவட்டங்களில் காணப்படும் ஊசி பூச்சிகளின் (Usi fly) விளைவாக பட்டு வளர்ச்சியில் பாதிப்பு ஏற்படாமல் தடுக்க திட்டமிடப்பட்டு மேற்படி பூச்சியினை ஒழித்திட நைலான் வலைகளை வாங்கிட, தமிழக அரசின் பங்காக மானியம் வழங்க ரூ. 10 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சிறப்பு பயிற்சிகள்.—1981–82ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் 40 பட்டதாரிகளுக்கு பட்டு வளர்த்தலில் 11 மாத பயிற்சி அளிக்கவும், மாதமொன்றுக்கு பயிற்சி உதவித் தொகை ரூ. 150 வழங்கிடவும் அரசு அனுமதி அளித்துள்ளது.

பட்டுத் தொழிலின் எதிர்காலம்.—தீவிரமாக அமல்படுத்தப் படும் பட்டு வளர்ச்சிப் பணிகள் வருங்காலத்திலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

எம் 5 வகை முசுக் கொட்டைச் செடியினை எல்லா மாவட்டங் களிலும் விரிவுபடுத்த 1982–83ஆம் ஆண்டிலும் உத்தேசிக்கப் பட்டுள்ளது. இவ்வாண்டில் மேலும் கூடுதலாக 8,000 ஏக்கர் நிலங்களில் முசுக்கொட்டைப் பயிர் சாகுபடி செய்யவும், இச்

செடியினைப் பயிர் செய்வதற்கான உதவித் தொகை, விவசாயி களின் பயிற்சி திட்டம், புழு வளர்ப்பு உபகரணங்கள் வாங்க மற்றும் புழு வளர்ப்புக் கொட்டகைகள் கட்ட முதலான வற்றிற்கு இதுகாறும் வழங்கப்படும் உதவித் தொகை ஆகிய வற்றை தொடர்ந்து வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற் காக ரூ. 90 லட்சங்கள் ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. ரூ. 5.5 லட்சங்கள் செலவில், 500 குடிசைப் பட்டு நூற்பகங்கள் நிறுவவும், 40 கிராம மட்ட இளம் பட்டுப்புழு வளர்ப்பு மையங் களை பல்வேறு மாவட்டங்களில் ஆரம்பிக்கவும், திண்டுக்கல்லில் மாவட்ட பட்டு வளர்ப்பு மையம் ஒன்றினை ஏற்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் பயிற்சிக்கென கூடுத லாக இரண்டு செயல் விளக்க மற்றும் பயிற்சி மையங்களைத் துவக்கவும், பைவோல்டின் இனப் பட்டுப் புழு வளர்ப்புக்கென தேவையான அடிப்படை வசதிகள் ஏற்படுத்தும் பொருட்டு, ஓர் பைவோல்டின் வித்தகப்பண்ணை ஆரம்பிக்கவும் உத்தேசிக்கப் பட்டுள்ளது.

மேற்கண்ட பல்வேறு திட்டங்களின் வாயிலாக, 1982–83ஆம் ஆண்டின் இறுதியில் தமிழ்நாட்டில் முசுக்கொட்டை செடி சாகுபடி பரப்பு 56,000 ஏக்கர் அளவிற்கு அதிகரிக்குமென எதிர் பார்க்கப்படுகிறது. அதேபோன்று பட்டு உற்பத்தி 250 டன்னுக்கு உயரும் எனவும் கூடுதலாக 40,000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்குமெனவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கைத்திறன் வளர்ச்சி இணையகம், சென்னை-6.

தமிழ்நாடு கைத்திறன் வளர்ச்சி இணையகம் அரசின் தொழில் துறையினரால் நடத்தப்பட்டு வந்த விற்பனை நிலையங்களின் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் மற்றும் சென்னை மாவட்ட கைத்திறன் கூட்டுறவு சங்கத்தின் வாணிக விற்பனைப் பொருட்களையும் ஏற்றுக் கொண்டு அரசுக்கு சொந்தமான பொது நிறுவனமாக 1973ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல் நாள் முதல் இயங்கி வருகிறது. தொழிற் துறையினரால் நடத்தப்பட்டு வந்த பயிற்சி நிலையங்களையும் மற்றும் உற்பத்தி நிலையங்களை யும் இந்நிறுவனம் மேற்கொண்டுள்ளது. கைத்திறன் பொருட் களுக்கென தனிப்பட்ட ஓர் இணையகத்தைத் துவக்கப்பட்டதன் குறிக்கோள் கைத்திறன் பொருட்களின் வளர்ச்சிக்குத் தேவையான வழிமுறைகளை ஆராயவும் மற்றும் கைவினைஞர்களுக்கு பல வழிகளில் உதவி புரிவதுமேயாகும்.

கைவினைஞர்கள் எதிர் நோக்கியுள்ள மிக முக்கியமான பிரச்சினை விற்பனையேயாகும். இதற்காகவே இந்நிறுவனம் மாநிலத்தின் எல்லா பகுதியிலும் மற்றும் வெளி மாநிலங்களில் மூன்று விற்பனை நிலையங்களையும் துவக்கியுள்ளது. இந்நிறு வனத்தின் முயற்சிகளினால் ஆண்டு தோறும் கைத்திறன் பொருட் களின் விற்பனை அதிகரித்து வருகிறது. இதன்படி 1980–81-ல் ரூ. 143 லட்சமாக இருந்த விற்பனை 1981–82-ல் ரூ. 175 லட்சமாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் 1981–82 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப் பட்டுள்ள வாணிபத் தொகை இலக்கை எட்டிவிட முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது. சென்ற ஆண்டின் கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளபடி இந்நிறுவனம் இவ்வாண்டில் ரூ. 5 இலட்சம் இலாபம் ஈட்டும் என நம்பிக்கை கொண்டுள்ளது. இவ்விணையகம் 1982–83ஆம் ஆண்டின் வாணிபத் தொகையை ரூ. 200 இலட்சமாக அதிகரித்து அதிக லாபத்தை ஈட்ட இயலும் என நம்பிக்கை கொண்டுள்ளது. 1981–82ஆம் ஆண்டில் இந் நிறுவனம் புதிய விற்பனை நிலையங்கள் அல்லது கிளை விற்பனை நிலையங்களை சிதம்பரம், கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடியில் துவக்கியுள்ளது. இந்நிறுவனத்தின் விற்பனை நிலையங்கள் இல்லாத பெரு நகரங்களிலும் விற்பனை நிலையங்களை துவக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வாணிபத்தை பெருக்குவதும் இந்நிறுவனத்தின் நோக்க மாதலால் ஏற்றுமதி வருமானத்தை அதிகரிக்க தனிப்பட்ட கவனம் செலுத்தி வருகிறது. 1981–82-ல் இந்நிறுவனம் மற்ற ஏற்றுமதிப் பொருட்களை தவிர சிறப்பு வாய்ந்த கோயில் இரதத்தினை கோலாலம்பூருக்கும், வியன்னாவிலுள்ள அணு சக்தி துறை அலுவலகத்தை அலங்கரிக்க இரண்டு பெரிய மர சிற்ப வேலைப்பாடுகள் அமைந்த பலகைகள் மற்றும் கல்லினாலான எண்கரங்கள் கொண்ட ஆஞ்சநேயர் சிலையை கோலாலம்பூருக்கும் ஏற்றுமதி செய்துள்ளது. இலண்டனுக்கு பனை ஓலைப் பொருட் களும் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. மேலும் ஏற்றுமதியை அதிகரிக்க தொடர்ந்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிறுவனம் கைவினைஞர்களிடமிருந்து நேரிடையாக கொள் முதல் செய்யும் பொருட்களைத் தவிர இதன் உற்பத்தி நிலையங் களில் உற்பத்தி செய்யப்பட்டு வரும் பொருட்களையும் தனது விற்பனை நிலையங்கள் மூலமாக விற்பனை செய்து வருகிறது. 1981–82ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட தனிப்பட்ட முயற்சிகளி னால் சென்ற கொள்கை விளக்க குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள உற்பத்தி குறியீடான ரூ. 50 இலட்சத்தினையும் கடந்து ரூ. 65 இலட்சத்தை எட்டக்கூடுமென எதிர் பார்க்கப்படுகிறது. 1982–83-ல் உற்பத்தியின் மதிப்பு ரூ. 70 இலட்சமாக இருக்கு மென எதிர்பார்க்கப்படுகிறது.

நம் முன்னோர்களால் பரம்பரையாக கட்டிக் காத்துவந்த கலைத்திறனை காப்பதை தன் முக்கிய பணியாக கொண்டுள்ள இவ்விணையகம், அறிவியல் பூர்வமான வழிகளில் பயிற்சி அளிப்ப தன் மூலம் பழைய கலையை அழியாமல் பாதுகாத்து வருகிறது.

1980–81 ஆம் ஆண்டுவரை 690 நபர்களுக்கு இந்நிறுவனம் பல்வேறு கலைகளில் பயிற்சியளித்துள்ளது. 1981–82 ஆம் ஆண்டில் 222 நபர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள். 1982–83 ஆம் ஆண்டிலும் இப்பயிற்சி தொடர்ந்து நடைபெறும். இந்நிறுவனத்தின் மூலம் பயிற்சியை முடித்த நபர்களில் சுமார் 265 நபர்களுக்கு வேலை வாய்ப்பினை அளித்துள்ளது.

கைவினைப் பொருட்கள் பரம்பரை பரம்பரையாக வந்த கலைத்திறனை எடுத்துக் காட்டுகிறது. இந்நிறுவனம் பயிற்சி நிலையங்களை நடத்துவதன் மூலம் இதனை அழியாமல் பாதுகாத்து வருகிறது. கிராமக் கைவினைஞர்களின் திறன்களை இந்நிறுவனத்தின் பல்வேறு விற்பனை நிலையங்கள் மூலமாக வெளிக் கொணரப்படுகின்றன. இந்நிறுவனத்தின் ஏற்றுமதி முயற்சிகளின் மூலமாக இத்திறன்களுக்கு பரந்த விளம்பரமும் வாணிபமும் கிடைக்குமென நம்பப்படுகிறது. இதனை கருத்தில் கொண்டு தமிழகத்தின் கைவினைப் பொருட்களுக்கென தனிப் பட்ட பொருட்காட்சிகளை பெங்களூர் மற்றும் பம்பாய் போன்ற நகரங்களில் நடத்தியதன் மூலம் தமிழகத்திலுள்ள வியாபாரிகளும் மற்றும் ஏற்றுமதியாளர்களும் இக்கலைகளை அறிந்து கொள்ள வழி செய்கிறது. இம்முயற்சிகள் வெற்றியளித்துள்ளதால் மேலும் தொடரப்படும்.

கைத்திறன் பொருட்கள் வளர்ச்சி அடைய வேண்டும் என்பதே இவ்விணையகத்தின் எண்ணமும் நோக்கமும் ஆகும். கைவினைஞர்களுக்கு மூலப் பொருட்கள், எரிபொருள் எண்ணெய் போன்ற பிற பொருட்களையும் கிடைக்கச் செய்தல், மாவட்ட தொழில் மையங்கள் மூலமாக தேவையான நேரத்தில் கடனுதவி பெற உதவி புரிதல், பொருட்களை விற்பனை செய்ய தேவையான உதவிகள் வழங்குதல், பண்டைய கைவினைஞர்களின் திறமைகளை அழியாமல் பாதுகாத்தல் போன்றவற்றால் தான் மேற்சொன்ன குறிக்கோளை அடைய முடியும். ஆகவே பயிற்சிக்கு முக்கியத்துவம் அளித்தல், விற்பனையில் உதவிபுரிதல், ஏற்றுமதிக்குத் துணைபுரிதல், மூலப்பொருட்கள் வழங்க உதவி புரிதல் ஆகியவை இதன் முக்கிய எண்ணங்களாகும். 1982-83-ல் கீழ்க் கண்ட புதிய திட்டங்களை அசற்கெதிரே குறிப்பிட்டுள்ள மதிப்பீட்டுச் செலவில் செயல்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது.

(ரூபாய் இலட்சத்தில.)

1. இரத்தினம் மற்றும் வைரங்கள் பட்டை தீட்டும் பயிற்சி நிலையம், திருச்சிராப்பள்ளி.	4.70
2. விற்பனை நிலையங்கள் புதுப்பித்தல்	3·00

3. மண் மற்றும் காகிதக் கூழ் பொருட்களுக்கான பொது வசதிக் கூடம், சென்னை.	2.50
4. மர சிற்பங்களுக்கான மூலப் பொருள் கிடங்குகள்.	1.00
5. பனை ஓலைகளுக்கு இரசாயன சாயமிடும் நிலையம், மணப்பாடு.	0.28
6. புதிய விற்பனை நிலையங்கள் துவங்குதல் ..	2.00
7. ஏற்றுமதி அபிவிருத்தி திட்டம்	1.00

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ).

1. தோற்றுவாய் :

"சிட்கோ" என்று அழைக்கப்படும் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் ஒரு தனியார் நிறுவனமாக 1970-ம் ஆண்டு மார்ச் திங்கள் 23-ம் நாள் நிறுவப்பட்டு பின்னர் 1971-ம் ஆண்டு ஜனவரி 20-ம் நாள் அன்று ஒரு பொது நிறுவனமாக மாற்றி அமைக்கப்பட்டது. இந்நிறுவனத்தின் முக்கிய குறிக்கோள் தமிழகத்தில் சிறு தொழில்கள் மற்றும் குறுஞ்சிறு தொழில்களின் வளர்ச்சியை மேம்படுத்துவதும் அதை துரிதப்படுத்துவதுமாகும். இவ்விஷயத்தில் இந்நிறுவனம் சமீப காலத்தில் ஒரு சீரான முன்னேற்றம் அடைந்துள்ளது.

2. சிட்கோவின் பணிகள் :

சிட்கோ இப்போது மாநில அரசின் ஒரு பெரும் முகவராக, கீழ்க்கண்ட சிறு தொழில் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுக்காக பின்வரும் பணிகளை ஆற்றி வருகிறது:—

(அ) தொழிற்பேட்டைகளின் அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

(ஆ) சிறு தொழில் பிரிவுகளுக்குத் தேவையான இன்றியமையா மூலப்பொருட்களை கொள்முதல் செய்து விநியோகித்தல்.

(இ) சிறு தொழில் பிரிவுகளின் உற்பத்தி பொருட்களுக்கு விற்பனை வசதி செய்து தருதல்.

(ஈ) மேலும், 15 சதவீதம் மத்திய மூலதன மானியம் மற்றும் மாநில அரசு மானியம் வழங்குதல், நலிவுற்ற சிறு தொழில்களுக்கு புனரமைப்புத் தொகை உதவி, சின்னஞ்சிறு தொழில்களுக்கு துவக்கப் பணம் மற்றும் விற்பனை வரியை ஈடு செய்ய வட்டியில்லா கடன் உதவி, குறைந்தழுத்த மின்சாரத்தை உபயோகிக்கும் சிறு தொழில்களுக்கு மானியத் தொகை உதவி போன்ற ஒருமித்த திட்டங்களையும் நிறைவேற்றி வருகிறது.

3. பொருளாதாரம் :

சிட்கோவில அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் தற்போது 5 கோடிகளாகும். இதில் அரசினால் செலுத்தப்பட்ட மூலதனம் ரூபாய் 4.55 கோடி ; ஆயினும் இந்நிறுவனத்திற்கு அரசு வழங்கி வரும் மூலதனப் பங்குத் தொகை ஆறாவது ஐந்தாண்டு திட்ட காலத்திற்குள் ரூபாய் 10 கோடியையும் தாண்டிவிடும் நிலை உள்ளதால் , இந்நிறுவனத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதன உயர்வுக்கு ஏற்ற வகையில் அதன் அங்கீகரிக்கப்பட்ட மூதலனத்தை ரூபாய் 5 கோடியிலிருந்து ரூபாய் 10 கோடியாக உயர்த்துவதற்கு மாநில அரசு அனுமதியளித்துள்ளது. இதைத் தவிர, மற்ற நிதி நிறுவனங்களிடமிருந்தும் இந்திய தொழில் வளர்ச்சி வங்கியில் மறுநிதி வழங்கும் திட்டத்தின் கீழும் (IDBI Refinance Scheme) பொது மக்களிடமிருந்து பெறப்படும் சேமிப்பு நிதியின் மூலமும் தனதிட்டங்கள் நிறைவேற்றுவதற்கு தேவையான நிதி வசதியை பெருக்கிக் கொள்கிறது.

4. தொழிற்கூட அடிப்படை வசதித் திட்டங்கள் :

(அ) தொழிற்பேட்டை மனைகளை நிர்வகித்தல் :

சிட்கோவிற்கு மாற்றப்பட்டு தமிழ் நாட்டில் பல இடங்களிலும் பரவி அமைந்துள்ள 783 தொழிற் கூடங்களடங்கிய 33 வழங்கப்படியான தொழிற்பேட்டைகளை சிட்கோ, தமிழக அரசின் சார்பில் அதன் முகவராக ஏற்று தொடர்ந்து நிர்வகித்து வருகிறது.

(ஆ) சீர் அமைக்கப்பட்ட மனைகள் :

கிண்டி, அம்பத்தூர், துவாகுடி, கப்பலூர் மற்றும் மேட்டூர் போன்ற இடங்களில் எல்லா அடிப்படை வசதிகளும் கொண்ட சீரமைக்கப்பட்ட மனைகளை கிடைக்க வழி செய்கிறது. புதிய தொழில்களை துரிதமாக தொடங்கும் பொருட்டு கட்டப்பட்ட மொத்தமுள்ள 991 சீர் அமைக்கப்பட்ட மனைகளில் 837 மனைகள் வழங்கப்பட்டு விட்டன. அம்மனைகளில் சட்ட

ரீதியான விதிகளுக்கேற்ப ஒவ்வொரு தனிப்பட்ட தொழில்களுக்கும் தேவையானபடி தொழில் முனைவர்கள் தொழிற்கூடங்களைக் கட்டி வருகின்றனர். இதன் மூலமாக சுமார் 46,000 முதல் 48,000 நபர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தி வருகிறது.

(இ) சிட்கோவின் தொழிற்பேட்டைகள் :

சிட்கோ, அதன் துவக்கம் முதற்கொண்டு 1978-79 ஆம் ஆண்டு வரை சுமார் 514 தொழிற்கூடங்களை தவணைமுறைத் திட்டத்தின் கீழ் அம்பத்தூர், இராணிப்பேட்டை, ஒசூர், நாமக்கல் குறிச்சி முதலான இடங்களில் கட்டி வழங்கியுள்ளது. 1979-80 ஆம் ஆண்டு 58 தொழிற் கூடங்கள் அம்பத்தூர், இராணிப்பேட்டை, புதுக்கோட்டை முதலான இடங்களில் கட்டப்பட்டன. 1980-81 ஆம் ஆண்டு சுமார் 250, தொழிற் கூடங்கள் வில்லிவாக்கம், கொடுங்கையூர், ஒசூர், மறைமலை நகர், இராணிப்பேட்டை, புதுக்கோட்டை, கப்பலூர், சேலம், பரமக்குடி மற்றும் திருப்பூர் முதலான இடங்களில் கட்டப்பட்டு வழங்கப்பட்டன. 1981-82 ஆம் ஆண்டு ரூபாய் 500 இலட்சம் மொத்த முதலீட்டில் சுமார் 400 தொழிற்கூடங்களை கட்ட உத்தேசித்து அதில 300 தொழிற்கூடங்கள கட்டிமுடிக்கப் பட்டுள்ளது. மேலும் மலைப் பகுதி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மத்திய அரசு உதவியுடன் ஊட்டியில் இந்துஸ்தான் புகைப் பட பிலிம் நிறுவனத்திற்கு அருகில் ஒரு தொழிற்பேட்டை அமைத்து மேலும் 40 தொழிற்கூடங்கள் கட்டுவதற்கும் இந் நிறுவனம் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் நடப் பாண்டில் 20 சின்னஞ்சிறு தொழிற் கூடங்கள் கட்டுவதற்கு ரூபாய் 5 இலட்சம் கூடுதல் பங்கு மூலதனத்தை மலைப்பகுதி மேம்பாடு வளர்ச்சி திட்டத்திற்காக மத்திய அரசு அளித்துள்ள நிதியிலிருந்து மாநில அரசு வழங்கியுள்ளது.

(ஈ) 1982-83 ஆம் ஆண்டு தொழிற்கூடங்கள் :

1982-83 ஆம் ஆண்டு தோல் பொருள் முன்னேற்றத்திற்காக பிரத்தியோகமாக 2 தொழிற்கூடங்கள் ஈரோட்டிலும், ஆம்பூரிலும், 1 தொழிற்கூடம் மருந்துகளை உற்பத்தி செய்யும் தொழில முன்னேற்றத்திற்காக செங்கற்பட்டு மாவட்டத்தில் ஆலந்தூர் கிராமத்திலும், மற்றும் 5 தொழிற் கூடங்கள் பொறியியல் மற்றும் பொது சேவை தொழிற்சாலைகளுக்காக கும்மிடிபூண்டி, வெள்ளக் கோயில், கோபிசெட்டிபாளையம், நெற்குன்றம் மற்றும் கதிர்வேடு ஆகிய இடங்களிலும், மற்றும் தற்போது உள்ள தொழிற்கூடங்களை விரிவு படுத்தி மற்றும் அம்பத்தூர், மாதவரம், கப்பலூர், இராணிப்பேட்டை மற்றும் ஒசூர் ஆகிய இடங்களில் கூடுதலாக பல (சுமார் 400) தொழிற்

கூடங்கள் கட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது. பொருளாதார ரீதியாக தாழ்ந்தவர்களுக்காக சின்னஞ்சிறு தொழில் கூடங்கள் கிராமப் புறங்களில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1981-82 ஆம் ஆண்டு 533 தொழிற்கூடங்கள் கட்டி முடிக்கப்படும்; 1982-83 ஆம் ஆண்டு 500 சின்னஞ்சிறு தொழிற்கூடங்கள் சுமார் ரூ. 75 இலட்சம் செலவில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

(உ) உலக வங்கி திட்டத்தின்கீழ் சுமார் 100 தொழிற்கூடங்கள் நெற்குன்றம், மற்றும் முகப்பையூர் ஆகிய இடங்களில் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளன.

5. சிறு தொழில்களுக்கான ஊக்குவிப்பு திட்டங்கள் :

(அ) மத்திய அரசு மூலதன மானியம் :

நடப்பு ஆண்டு 1981-82-ல் 372 நிறுவனங்களுக்கும், டிசம்பர் 1981 வரை மொத்தமாக சுமார் ரூ. 141.78 இலட்சம் வரையிலும் மானிய உதவி வழங்கப்பட்டுள்ளது. இதில் சென்ற ஆண்டுபோல விறுவிறுப்பான நிலைமை தொடர்ந்து வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1982-83 ஆம் ஆண்டு 450 சிறு தொழில் நிறுவனங்களுக்கு சுமார் ரூபாய் 150 இலட்சம் வரை மேற்படி மானிய உதவி தரப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய மானிய உதவித் திட்டத்தின் உதவித் தொகை விநியோகிக்கும் பொறுப்பில் இந்நிறுவனம் இந்தியாவிலேயே முதன்மை இடம் பெற்றுள்ளது என்றால் அது மிகையாகாது.

(ஆ) மாநில அரசு மூலதன மானியம் :

மத்திய மூலதன உதவி திட்டத்தின் கீழ் வராத 8 மாவட்டங்களிலுள்ள 24 வட்டங்கள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவதாக அமைந்துள்ளது. தொடக்கத்தில் இத்திட்டத்தின் கீழ் அதிகமான கோரிக்கை வராமல் இருந்தாலும் அண்மையில் பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள தொழிற்சாலை பிரிவுகளிலிருந்து மேலும் மேலும் விண்ணப்பங்கள் பெறக்கூடிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு அதிகமான தேவையைக் கருதி இந்நிறுவனம் இந்த திட்டத்தை டிசம்பர் 1981 முதல் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு நீட்டிக்க அரசுக்கு சிபாரிசு செய்துள்ளது; இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

நடப்பு ஆண்டு டிசம்பர் 1981 வரை சுமார் ரூ. 16·86 இலட்சங்கள் மதிப்புள்ள உதவித் தொகை 96 நிறுவனங்களுக்கு வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. 1981—82 ஆம் ஆண்டு முழுவதற்கும் சுமார் 25 இலட்சமாக உதவித் தொகை அனுமதி வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

1982—83-ல், மேலும் 350 சிறு தொழில் பிரிவுகளுக்கு சுமார் ரூ. 50 இலட்சம் செலவில் இந்த உதவித் தொகை அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

(இ) மற்ற திட்டங்கள் :

மற்ற பிற உதவி திட்டங்களைப் பொறுத்தவரை 1981—82 ஆம் ஆண்டுக்கான தாற்காலிகமான சாதனை விவரங்களும், 1982—83-க்கான குறிக்கோள் அளவு விவரமும் வருமாறு :—

வரிசை எண்ணும் திட்டமும்.	31—12—1981 வரையில் சாதனை விவரம்.		1981—82 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் சாதனை.		1982—83-ல் எதிர்பார்க்கப்படும் இலக்கு.	
	எண்ணிக்கை.	பண மதிப்பு.	எண்ணிக்கை.	பண மதிப்பு.	எண்ணிக்கை.	பண மதிப்பு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
		(ரூபாய் இலட்சத்தில்.)		(ரூபாய் இலட்சத்தில்.)		(ரூபாய் இலட்சத்தில்.)
1 நலிவுற்ற தொழில்களுக்கான புனரமைப்பு திட்டத்தின் கீழ் முன் வரம்பு தொகை உதவி.	9	9·13	15	20·00	65	25·00
2 சின்னஞ்சிறு தொழில்களுக்கு மானிய உதவி.	297	9·14	450	25·00	425	20.00
3 வட்டியில்லா விற்பனை வரிக் கடன்	13	7·68	15	10·00	71	10·00
4 குறைந்த அழுத்த மின்சார உதவி மான்யம்.	135	0·81	150	1·00	440	10·00

1982 மார்ச் 25]

6. இன்றியமையா மூலப் பொருட்களின் விநியோகம் :

துவக்கத்தில் சிட்கோ இரும்பு எஃகு மூலப் பொருட்களை மட்டும் கொள்முதல் செய்து விநியோகித்து வந்தது. 1974—75 மற்றும் 1975—76 ஆம் ஆண்டுகளில் மற்ற மூலப் பொருட்களான கல் கரி, தீப்பெட்டி மெழுகு, பாரபின் மெழுகு, பொட்டாசியம் குளோரேட் மற்றும் பல பொருட்களின் விநியோகத்தையும் படிப்படியாக அது மேற்கொண்டது. 1979—80 ஆம் ஆண்டு வரை இம் மூலப் பொருட்கள் (சென்னை, கோயம்புத்தூர், மதுரை போன்ற முக்கிய இடங்களில் மட்டும் விநியோகிக்கப்பட்டு வந்தது. எனினும் பாரபின் மெழுகு, தீப்பெட்டி மெழுகு, பொட்டாசியம் குளோரேட் முதலான மூலப் பொருட்கள் சிறு தொழில் முனைவோர்களுக்கு அண்மையிலேயே கிடைக்குமாறு சாத்தூர், சிவகாசி, கோவில்பட்டி, குடியாத்தம் முதலான இடங்களில் துணைக் கிடங்குகள் நிறுவப்பட்டன. 1980—81 ஆம் ஆண்டு சேலத்திலும் ஒரு துணைக் கிடங்கு துவக்கப்பட்டுள்ளது. கிண்டி மூலப் பொருட் கிடங்கிலிருந்து மூலப் பொருட்களை விநியோகிப்பதில் ஏற்படும் சிரமத்தையும், நெரிசலையும் தவிர்க்க மேலும் ஒரு கிடங்கு அம்பத்தூரில் 1981—82 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டு உள்ளது. அம்பத்தூர் கிடங்கில், இரும்பு எஃகு பொருட்கள் மட்டுமல்லாமல் துத்தநாகம், ஈயம், கல்கரி போன்ற மூலப் பொருட்களும் சிறு தொழில் முனைவோருக்கு வழங்கப்பட்டு வருகின்றன. 1982—83 ஆம் ஆண்டு திருச்சி, புதுக்கோட்டை, தர்மபுரி மற்றும் பல மாவட்டத் தலைநகரங்களில் மேலும் சில மூலப் பொருள் விநியோகக் கிடங்குகள் நிறுவி, இதன் மூலமாக சிறு தொழில் முனைவோருக்கு தங்கள் மாவட்ட எல்லைகளுக்குள்ளேயே மூலப் பொருட்கள் கிடைக்கும் வாய்ப்பை ஏற்படுத்தும் திட்டங்களும் படிப்படியாக நிறைவேற்றப்படவிருக்கின்றன. மூலப் பொருள் விநியோகத்தில் சிட்கோ முந்திய ஆண்டின் சாதனையான ரூபாய் 18 கோடியை விட அதிக அளவான சுமார் ரூ. 24 கோடி விநியோகத்தை 1981—82 ஆம் ஆண்டில் நெருங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 1982—83-ல் இது சுமார் ரூ. 30 கோடியாக உயரும் என்றும், இனி வரும் ஆண்டுகளில் இது மேலும் சிறப்பாக இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

(அ) இடைக்கால சேமிப்பு கிடங்கு :

இரும்பு எஃகு பொருட்களுக்காக, ஓர் இடைக்கால சேமிப்புக் கிடங்கை அமைக்க 5 ஏக்கர் பரப்புள்ள மனையை சிட்கோ இவ்வாண்டு தேசிய சிறு தொழில் நிறுவனத்திற்கு ஒதுக்கியுள்ளது. இக்கிடங்கு தெற்கு மாநிலங்களான கேரளம், கர்நாடகம் முதலியவற்றின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக தேசிய சிறு

தொழில் நிறுவனத்தின் சார்பில் சிட்கோவினால் நிர்வகிக்கப்படும். இவ்வழியில் மற்ற மாநிலங்களுக்கு ஒரு வழிகாட்டியாக தமிழகம் விளங்குகிறது.

(ஆ) கல்கரி கிடங்கு :

கோயம்புத்தூரில் கல்கரியை ''கோல் இந்தியா லிமிடெட்'' நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் இரும்பு வார்ப்படத் தொழிற்சாலைகளுக்கு சிட்கோ மூலம் விநியோகிக்க ஒரு கிடங்கு நிறுவப்பட்டுள்ளது. அம்பத்தூரிலும், அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் உள்ள சிறு தொழில் நிறுவனங்கட்கு உலை எண்ணெய் விநியோகிக்கும் திட்டமும் நிறைவேற்றப்படும் நிலையில் உள்ளது.

(இ) இரும்பு எஃகு மூலப் பொருட்கள் :

இரும்பு எஃகு பொருள்களைப் பொறுத்தமட்டில் 1981—82 ஆம் ஆண்டு தமிழ் நாட்டிற்கான ஒதுக்கீடு சுமார் 32,000 மெட்ரிக் டன் என்றாலும், இவ்வாண்டின் முதல் 9 மாதங்களில் 16,367 மெட்ரிக் டன்கள் ஒதுக்கீடுதான் சிட்கோவிற்குக் கிடைக்கப்பட்டுள்ளது.

தற்போது இரும்பு மற்றும் எஃகு தொழில்கள் முன்னேற்றத்தில் இதுவரை எதிர்பாராத ஒரு மந்த நிலை ஏற்பட்டுள்ளது. இந்த மந்த நிலை இப்பொருள்களின் தேவையில் ஏற்பட்ட பெரும் மாறுபாடு எதுவும் இந்த மந்த நிலைக்குக் காரணமன்று. இது பொதுவான வெளிப்படை உரிமம் (O.G.L.) என்ற முறையின்படி ஏராளமான இறக்குமதி மேற்கொள்ளப்பட்டதுதான் காரணம். எஃகு 1981—82 ஆம் ஆண்டு அதிக விலை ஏற்றம் அடைந்தது. எம்.எஸ். ரவுண்டு, கம்பிச் சுருள்கள் முதலியவை விலைக் கட்டுப்பாட்டிலிருந்து நீக்கப்பட்டு விட்டன. ஏப்ரல் 1981-ல் இருந்தே, தளர்த்தப்பட்ட இறக்குமதி கொள்கையின் காரணமாக C.R. தகடுகள் மற்றும் M.S. தகடுகளை வணிகர்களும், உண்மையில் உபயோகிப்பவர்களும் இறக்குமதி செய்து நாட்டில் குவித்து விட்டனர். உலக எஃகு தொழில்கள், இந்தியாவின் தளர்த்தப்பட்ட இறக்குமதி கொள்கையை அனுகூலமாக கொண்டு நாட்டில் எஃகு பொருட்களை குவிக்க முனைந்தனர். அதன் காரணமாக, இறக்குமதியான C.R. ஷீட்டிற்கும் உள் நாட்டு C.R. ஷீட்டிற்கும் உள்ள விலையானது ஒரு டன்னுக்கு சுமார் ரூ. 1,000 முதல் ரூ. 1,500 வரை வித்தியாசப்பட்டது. மேற்பட்ட நிலை சிட்கோ போன்ற மற்ற எல்லா இந்திய நிறுவனங்களுக்கும் ஒரு இக்கட்டான நிலையை ஏற்படுத்தி விட்டது. வெளி அங்காடியில் என்ன விலைக்கு விற்கப்படக் கூடுமோ அந்த விலையை நிர்ணயிக்க முக்கிய எஃகு உற்பத்தியாளருக்கு அனுமதி வழங்கப்பட்டதன் மூலம் இந்த நிலைமை மேலும் மோசமாகி விட்டது. அதனால் எஃகு

ஆலைகளின் கூட்டு இணையமானது விலைக் கட்டுப்பாடற்ற எஃகுப் பொருட்களை தயாரித்து, மாநில ஒதுக்கீட்டு அமைப்பின் கீழ் அந்த பொருட்களை சிட்கோவிற்கு விற்க முயற்சித்தன. 1981—82 ஆம் ஆண்டு கடைசி பகுதியில் மேற்படி மந்த நிலை சீரடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஈ) கல்கரி :

முந்தைய ஆண்டை விட 1981—82ஆம் ஆண்டில் சிட்கோ கல்கரி விநியோகத்தை நல்ல முறையில் விநியோகித்துள்ளது. கல்கரியை '' கோல் இந்திய லிமிடெட் '' நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் இரயில்வே வேகன்கள் கிடைக்காத சமயத்திலும் லாரிகள் மூலம் கொண்டு வரும்படியான ஏற்பாட்டை செய்ததால் இவ்வதிகப்படியான விற்பனை சாத்தியமாயிற்று.

தமிழ்நாட்டில் கோயம்புத்தூரில் உள்ள கல்கரி சேமிப்புக் கிடங்கு திறக்கப்பட்டு டிசம்பர் 1981 வரையில் சுமார் 14,521 டன் கல்கரி விற்கப்பட்ட பிறகும் இந் நிறுவனம் வருகின்ற மாதங்களில் ஏற்படும் தேவைக்கேற்ப கல்கரி வழங்கும் திருப்திகரமான கையிருப்பு நிலைமையில் உள்ளது.

(உ) துத்த நாகமும், ஈயமும் :

உதயபூர், ஹிந்துஸ்தான் துத்தநாக நிறுவனத்தின் விநியோகிப்பாளராக இந்நிறுவனம் துத்தநாகம், மற்றும் ஈயம் விநியோகத்தை மேற்கொண்டுள்ளது. 1981 டிசம்பர் மாதம் வரையில் இந்நிறுவனம் சுமார் ரூபாய் 95 இலட்சம் மதிப்புள்ள 638 டன் அளவுள்ள இப்பொருள்களை விநியோகித்துள்ளது.

(ஊ) மாட்டுக் கொழுப்பு—

சோப்புத் தயாரித்தலுக்காக மாநில வர்த்தக நிறுவனத்தால் (S.T.C.) வழங்கப்பட்ட சுமார் 215 டன் கட்டி அமிலம் (Faty acid) 1981 டிசம்பர் முடிய இந்நிறுவனத்தால் சிறு தொழில் நிறுவனங்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

7 (அ) சிறு தொழில் நிறுவனங்களுக்கு விற்பனை வசதி :

சிட்கோ, சிறு தொழில் நிறுவனங்களின் பொருள்களுக்கான விற்பனைகளை முகவர் என்ற முறையில், நடப்பு ஆண்டு (1981-82) சுமார் ரூ. 150·76 இலட்சம் மதிப்புள்ள ஆண்டு பொருட்களுக்கு விற்பனை வசதி பெற்றுத் தர கோரிக்கைகள் பெற்றுள்ளது இவற்றுடன் 1—4—1981 தேதி வரையில் நிலுவையிலுள்ள சுமார் ரூ. 142·53 இலட்சம் மதிப்புள்ள பொருட்களுக்கான

கோரிக்கைகளையும் சேர்த்து 31—12—1981ம் தேதி வரை மொத்தமாக சுமார் ரூ. 293·29 இலட்சம் பெறுமான பொருட்களை சிறு தொழில் நிறுவனங்களிடமிருந்து சிட்கோ பெற்றுள்ளது, இதில் சுமார் 118·70 இலட்சம் மதிப்புள்ள பொருட்கள் 31—12—1981 வரை விற்பனை செய்யப்பட்டுள்ளன.

நடப்பு நிதியாண்டில், 31 அரசு துறைகள் மற்றும் நிறுவனங்களின் தேவைகளுக்கு இணங்க (1981–82) சுமார் 83 சிறு தொழில் நிறுவனங்களுக்கு மேற்படி விற்பனை வசதி அளிக்கப்பட்டது. 1981ஆம் ஆண்டு 150 நிறுவனங்களிடமிருந்து சுமார் ரூ. 300 இலட்சம் மதிப்புள்ள பொருட்களை 75 நிறுவனங்களுக்கு விற்பனைக்காக கொள் முதல் செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் சுமார் 830 பேர்கள் வேலை வாய்ப்பை பெறக் கூடும் எனக் கருதப்பட்டுள்ளது.

(ஆ) சிட்கோ அடியில் குறிப்பிட்டபடி பொருள்களை வாங்குவோர் விற்போர் சந்திப்புகளை ஏற்படுத்தி சிறந்த பொருட்களை அடையாளம் கண்டு அவைகளை அரசு சார்பு நிறுவனங்களுக்கு விநியோகிக்கவும் முற்பட்டுள்ளது.

1. 16—9—1981-ல் திரவ நிலையிலுள்ள பெட்ரோலிய வாயு அடுப்புப் பற்றி விவரங்களுக்கான சந்திப்பு (கோயம்புத்தூர்).

2. 27—9—1981-ல் சிறு தொழில் முனைவோர் சங்கத்தின் ஏற்றுமதி 81 பொருட்காட்சி (சென்னை தேனாம் பேட்டையில்).

3. 16—12—1981-ல் கடல் சம்பந்தப்பட்ட பொருட்காட்சி (சென்னை துறைமுகப் பொறுப்பு).

மத்திய அரசின் விநியோகம், மற்றும் பட்டுவாடா துறையின் (D.G.S. அண்டு D.) பொது இயக்குநரது ஒப்பந்தப்புள்ளிகளில் சிட்கோ மேற்கொண்ட பங்கு மிகவும் திருப்தியளிப்பதாக உள்ளது. கடந்த 12 மாதங்களாக அவ்வதிகாரியிடமிருந்து சுமார் 22 இலட்சம் மதிப்புள்ள விநியோக உத்தரவு பெற்று தரப்பட்டுள்ளது. வரும் 12 மாதங்களில் சுமார் ரூ. 200 இலட்சங்களுக்குரிய உத்தரவு பெறப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

(இ) விற்பனைக்கான பொது ஆய்வு நடத்தும் திட்டத்தின் கீழ் 31—12—1980 தேதி வரையில் தொழில் வணிகத் துறையில் பதிவு செய்யப்பட்ட 33,883 தொழில் நிறுவனங்களடங்கிய கையேடு ஒன்றை சமீபத்தில் அச்சிட்டு வெளியிட தொழில் வணிகத் துறையினருக்கு பெரும் அளவில் இந்நிறுவனம் உதவியுள்ளது.

(ஈ) 1982–83ஆம் ஆண்டுக்கான திட்டங்கள் :—

1982–83ஆம் ஆண்டில் 1—1—1982 தேதி வரை பதிவு செய்துள்ள சிறு தொழில் நிறுவனங்களில் 2 சதவிகிதம் குறைவில்லாமல் சிட்கோவின் விற்பனை உதவி திட்டத்தின் கீழ் கொண்டு வர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதனால் தற்போதும் அண்மையிலுள்ள எதிர் காலத்திலும் தேவை மிகுதியாக உள்ளவை தெரிந்தெடுக்கப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்ய அந்நிறுவனங்களுக்கு சிட்கோ உதவ முடிகிறது. மேலும் அதில் 50 சதவிகிதம் நிறுவனங்களாவது சீரான விற்பனை உத்தரவுகளை பெற முடியும். இவ்வாறு 1982–83ம் ஆண்டில் அளிக்கப்பட்டுள்ள விற்பனை உதவியின் மதிப்பு ரூ. 6·50 கோடிகளாகும். மேலும் 1982–83ம் ஆண்டில் கூடுதலாக 500 சிறு தொழில் நிறுவனங்களாவது இத்திட்டத்தின் பயனை அடைய வாய்ப்பு ஏற்படும் என்றும், இதனால் சுமார் 5,000 பேர்களுக்கு தமிழ்நாட்டில் வேலை வாய்ப்பு கிட்டும் என்றும் எதிர் பார்க்கப்படுகிறது.

மேலும் 1982–83ஆம் ஆண்டில் அரசு துறை மற்றும் அரசு சார்புள்ள நிறுவனங்களுக்கு சிறு தொழில் நிறுவனங்களின் பொருள்களை அளிப்பதற்கு உதவியாகவும், அப் பொருள்களின் விற்பனை தேவை பற்றிய விவரங்களை அந்நிறுவனங்களுக்கு அளிப்பதற்காகவும் இரண்டு விற்பனை தகவல் நிலையங்கள் மதுரையிலும், கோயம்புத்தூரிலும் நிறுவுவதற்கு சென்னையில் ஒரு வர்த்தக நிலையம் நிறுவுவதற்கும், உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1982–83ம் ஆண்டுக்கான சிட்கோவின் பல்வேறு திட்டங்களுக்கான நிதி முதலீடு மற்றும் அவைகளை அடைவதற்கான நிதிவாயில்கள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

முதலீட்டு திட்டங்கள்.	தொகை. (ரூபாய் இலட்சத்தில்.)
1. தொழிற் கூடங்களில் அடிப்படை வசதிகள் அளிப்பது மற்றும் சென்னை பெருநகர் வளர்ச்சி நிறுவனம் (உலக வங்கி திட்டம் இணைந்தது)	615
2. மத்திய முதலீட்டு மானிய திட்டம்	150

முதலீட்டுத் திட்டங்கள்.	தொகை. (ரூபாய் இலட்சத்தில்.)
3. மாநில முதலீட்டு மானிய திட்டம்	50
4. நலிவுற்ற தொழில் புனரமைப்பு திட்டத்தின் கீழ் முன் வரம்புத் தொகை உதவி	25
5. சின்னஞ்சிறு தொழில்களுக்கான துவக்க நிதி உதவி (Seed money)	20
6. வட்டியில்லா விற்பனை வரிக் கடன் ..	10
7. குறைந்த அழுத்த மின்சார உதவி மானியம்.	10
மொத்தம் ..	880

நிதி வாயில்கள்.

1. அரசின் பங்கு மூலதனம் மற்றும் கடன் ..	220
2. மத்திய அரசு நிதி	150
3. தமிழ் நாடு சிறு தொழில் மூலதன நிறுவனம் சின்னஞ்சிறு கூடங்களுக்கு வழங்கும் கடன் ..	75
4. நிதியுதவி நிறுவனங்கள், வங்கி மற்றும் சிட்கோவிற்கு திருப்பியளிக்கப்படும் கடன் தொகை வரவு	435
மொத்தம் ..	880

9, சிட்கோ கடந்த நான்கு ஆண்டுகளாக லாபத்தில் இயங்கி வந்துள்ளது. 1980–81-ல் அது ரூபாய் 23 இலட்சம் நிகர இலாபத்தை அடைந்துள்ளது. அதன் மூலம் 31—3—1981 வரை அடைந்துள்ள தொடர் இழப்புத் தொகை ரூ. 26·86 இலட்சமாக குறைந்துள்ளது. 1981–82-ம் ஆண்டில் இந்நிறுவனம் நிகர இலாபத்தை அடைய முயன்றதாலும் எஃகு பொருள்கள் விற்பனையில் இதுவரை கண்டிராத மந்த நிலை ஏற்பட்டதன் காரணமாக 30—9—1981 வரை முடிந்துள்ள முதல் அரை ஆண்டில் ரூ. 10.84 இலட்சம் நிகர இழப்பை இந்நிறுவனத்தின் இயக்கம் அடைந்துள்ளது. இருந்த போதிலும் 1982–83-ம் ஆண்டு இந்நிறுவனத்தின் இபக்கம் ஓரளவு இலாபத்தை கொடுக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு தொழில் முதலீடு நிறுவனம் கொள்கை விளக்க குறிப்பு.

1. முன்னுரை.—நம் நாட்டிலேயே மாநில அளவில் நிதி உதவி அளிக்கும் நிறுவனங்களில் முதல் நிறுவனமாகத் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், கம்பெனிகள் சட்டத்தின்படி 1948 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதும் விரைவுபடுத்துவதும் இதன் முக்கிய நோக்கமாகும். இந்த நிறுவனத்தின் அதிகார வரம்பு மத்திய அரசின் நேரடி ஆட்சியின் கீழ் வரும் புதுச்சேரிக்கும் விரிவு படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் மாநில நிதி நிறுவனமாக இது செயற்படுகிறது. இந்திய ரிசர்வ் வங்கியையும் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியையும் கலந்தாலோசித்த பின்னர் இந்திய அரசால் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள் வாயிலாக 1951 ஆம் ஆண்டு மாநில நிதியுதவி நிறுவனச் சட்டத்தின் சில முக்கியமான விதித்துறைகள், தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்திற்குப் பொருந்தும்படியாகச் செய்யப்பட்டிருக்கின்றன

2. அலுவல்களும் நோக்கங்களும்.—இந்நிறுவனத்தின் முக்கிய அலுவல்களும் நோக்கங்களும் வருமாறு :—

(அ) முக்கியமாக நிலம், கட்டடம், இயந்திரங்கள்போன்ற நிலையான சொத்துக்களை வாங்குவதற்காக தொழில் நிறுவனங்களுக்கு நீண்டகால, நடுத்தரகாலக் கடன்களை வழங்குவது.

(ஆ) எந்திரங்களை வாங்குவதற்காகத் தொழில் நிறுவனங்கள் செய்து கொள்ளும் "காலம் தாழ்த்தித் தொகையை திருப்பிச் செலுத்துவதற்கான ஒப்பந்தங்களுக்கு (Deferred payment contract) உத்தரவாதம் மேல் உத்தரவாதம் அளிப்பது.

(இ) வங்கிகள் ஈட்டுதவி நிறுவனங்கள் பொது மக்களிடம் இருந்து பெறும் கடன்கள் முதலியவற்றின் வாயிலாக தொழில் நிறுவனங்கள் பெறும் கடன்களுக்கு உத்தரவாதம் அளிப்பது.

(ஈ) தொழில் நிறுவனங்கள் வெளியிடும் பங்குகள், கடனீட்டுறுதிப் பத்திரங்கள் ஆகியவற்றை வாங்குவது. அவற்றுக்கு உத்தரவாதமளிப்பது.

(உ) மத்திய அரசு ஒப்பளிக்கும் உதவித் தொகையை ஒட்டி இத்தொகையை தொழில் நிறுவனங்களுக்கு முன் கூட்டியே கடனாக வழங்குவது.

3. உதவியின் அளவும் விவரமும் : தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் வழங்கும் நிதி உதவியின் அளவு வருமாறு :—

(அ) கடன்கள் :

குறைந்த அளவு	ரூபாய் 2,000
உயர் அளவு	ரூபாய் 30 இலட்சம் (தனி நபர் உரிமையுள்ள தொழில் நிறுவனங்களுக்கும் பங்குதாரர் உரிமையுள்ள தொழில் நிறுவனங்களுக்கும் உயர் அளவு ரூ. 15 இலட்சமாகும்.
(ஆ) காலம் தாழ்த்தி தொகை செலுத்துவதற்கான உத்தரவாதம்.	ரூ. 30 இலட்சம்.
(இ) பொதுக் கடன் வெளியீட்டு பங்கிற்கு உத்தரவாதமளிப்பது?நேரடியாகக் கலந்து கொள்வது.	ரூ. 25 இலட்சம் (உயர் அளவு பொதுக் கடன் வெளியீட்டில் 25 சதவீதம் அல்லது தொழிலதிபர் முதலீடு செய்யும் தொகைக்கு நிகரான ஒரு தொகை இவற்றில் எது குறைவோ அது.

இருப்பினும், மேற்கூறிய மூவகை கடன்களைப் பொறுத்த மட்டில் தொழில் பிரிவு ஒன்றுக்கு வழங்கப்படும் மொத்த உதவி ரூ. 65 இலட்சத்திற்கு மேற்படக்கூடாது.

சிறு தொழில் , நடுத்தர தொழில் துறைகளில் (அ) புதிய தொழில் பிரிவுகளை நிறுவுவதற்கும் (ஆ) ஏற்கெனவே உள்ள தொழில் பிரிவுகளைவிரிவுபடுத்துவதற்கும், (இ) வேறு துறைகளில் ஈடுபடுத்துவதற்கும் (ஈ) தற்போதுள்ள தொழில் பிரிவுகளை, நவீன மாக்குவதற்கும் இந்நிறுவனம் நிதியுதவி அளிக்கிறது. சிறு தொழில் துறையிலும் சின்னஞ்சிறு தொழில் துறையிலும், தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதை ஊக்குவிப்பதற்கும், பெருமளவில் வேலைவாய்ப்பினை உருவாக்கவும் இந்நிறுவனம் பல சிறப்பு திட்டங்களை உருவாக்கியுள்ளது. குறைந்த வட்டி வீதம் கடனைத் திருப்பிச் செலுத்தத் தொடங்குவதற்கு நீண்ட கால அவகாசம், கடனைத் திருப்பிச் செலுத்தத் நீண்ட காலச்கெடு, குறைந்த பிணையத் தொகை போன்ற தாராளமான எளிய நிபந்தனைகளில் இந்நிறுவனம் கடனுதவி அளிக்கிறது.

அதிக அளவில் வேலைவாய்ப்பினை உருவாக்கவும் எந்த ஒரு பகுதியிலும் தொழில் வளம்குறைந்து தோன்றாவண்ணம் தொழில் வளர்ச்சியை மேம்படுத்தவும் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளில் உள்ள தொழில் நிறுவனங்களுக்கு அதிலும் குறிப்பாக கிராமப் பகுதிகளில் உள்ள தொழில் நிறுவனங்களுக்கு உதவி அளிப்பபதற்கும் முதலிடம் தரப்படுகிறது. தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய பகுதிகளில் உள்ள தொழில் நிறுவனங்களுக்கு குறைந்த வட்டி, கடனைத் திருப்பித் தர நீண்ட காலக் கெடு, ஏனைய பல சலுகைகளின் அடிப்படையில் நிதி உதவி அளிக்கப்படுகிறது. கிராமப்புறங்களிலும் தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய பகுதிகளிலும் ஏற்படுத்தப்பட்டு வருகின்ற சிறு, சின்னஞ்சிறு தொழில் பிரிவுகளுக்கு இன்னும் பெருமளவில் உதவிபுரியும் நோக்கத்துடன் போக்குவரத்துக் கடனாக இருப்பின் 75,000 ரூபாய் வரையிலும் பிறவகைக் கடனாக இருப்பின் 25,000 ரூபாய் வரையிலும் கடனுதவி அளிப்பதற்குரிய அதிகாரங்களை மேற்படி நிறுவனத்தின் வட்டார கிளை அதிகாரிகளுக்கு இந்நிறுவனம் வழங்கியுள்ளது சிறு நடுத்தர தொழில் துறைகளில் நிறுவப்பட்ட பல்வேறு பிரிவுகளுக்கும் தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய களில் உள்ள தொழில் பிரிவுகளுக்கும் இந்நிறுவனத்தால் பகுதிகளில் உள்ள தொழில் பிரிவுகளுக்கும் இந்நிறுவனத்தால் விதிக்கப்படும் வட்டி வீதம் பின்வருமாறு :—

விவரம்.	மறுநிதி உதவி அளிக்கப்படும் போது ஆண்டொன்றுக்கு சத வீதம்.
(1)	(2)
சிறு தொழில் துறை :	
(1) தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதி.	12.50
(2) தொழில் வளர்ச்சியில் பின் தங்கியுள்ள பகுதி அல்லாத பிற பகுதிகள்.	13.50
(3) தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய பகுதி அல்லாத பிற இடங்களில் உள்ள தொழில் நுட்ப வல்லுநர்கள்.	13.59
(4) தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளில் உள்ள தொழில் நுட்ப வல்லுநர்கள்.	12.00

(5) ஆதி திராவிடர் பழங்குடியினர், மிகவும் பின் தங்கிய வகுப்பினர் (குறைந்த அளவுக் கடன்).	11.25
நடுத்தரத் தொழில் துறை :	
தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய பகுதியும், அல்லாத ஏனைய பகுதிகளும்.	14.00
போக்குவரத்துக் கடன்கள்	14.90

* குறித்த காலத்தில் தொகை செலுத்துவதற்கு ஒரு சதவீதத் தள்ளுபடி அளிக்கப்படுகிறது.

* குறித்த காலத்தில் தொகை செலுத்துவதற்கு இரண்டு சதவீத தள்ளுபடி அளிக்கப்படுகிறது.

4. நிதி வாயில்கள்.— முக்கியமாக தமிழ்நாடு அரசு, இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி அளிக்கும் பங்கு மூலதனம், இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் மறு நிதியுதவி கடனீட்டுறுதிப் பத்திரங்கள் வைப்புத் தொகைகள், நிதி முதலியவை இந்நிறுவனத்தின் நிதி வாயில்களாகும். 1981—ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31ஆம் நாள் அன்றுள்ளவாறு இந்நிறுவனத்தின் நிதி வாயில்களின் நிலவரம் வருமாறு:—

(1)	(ரூபாய் இலட்சத்தில்) 1981ஆம் ஆண்டு டிசம்ப திங்கள் 31ஆம் நாள் அன்றுள்ளபடி (2)
1. பங்கு மூலதனம்	1,449.56
2. கடன் பத்திரங்கள்	1,676.00
3. இந்திய தொழில் வளர்ச்சி வங்கியிடமிருந்து மறு நிதி உதவி.	4,25.280
4. பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட குறிப்பிட்ட கால வைப்பீட்டுத் தொகைகள்.	236.55
5. நிறுவனத்தின் ரொக்க நிதி	127!1
	7,742!07

5. இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியிடமிருந்து பெறும் மறுநிதி உதவி :—இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி, குறைந்த வட்டி வீதத்தில் தாராளமாக தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்திற்கு மறுநிதி உதவி அளிக்கிறது. தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்தில் செலுத்தப்பட்ட மூலதனமும் இலவச ஒதுக்கீடுகளும் சேர்த்து எவ்வளவு தொகை வருமோ அதைப் போல் மூன்று மடங்கு வரை இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி மறுநிதி உதவி அளிக்கிறது. 1980—81-ஆம் ஆண்டில் இந்நிறுவனம் ரூபாய் 8·92 கோடி மறுநிதி உதவி பெற்று உள்ளது. 1981—82-ல் (1981 டிசம்பர் வரை) ரூ. 12·18 கோடி மறுநிதி உதவி பெற்றுள்ளது. மேலும் 1980—81-ஆம் ஆண்டில் (1980 டிசம்பர் 31 வரையில்) இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கிக்கு ரூபாய் 3.82 கோடியும் 1981—82-ல் (1981 டிசம்பர் வரை) ரூ. 4·41 கோடிதான் செலுத்தப்பட்டது. ஆனால் 1980-ஆம் ஆண்டு டிசம்பர் இறுதியிலும், 1981-ஆம் ஆண்டு டிசம்பர் 31 இறுதியிலும் நிலுவையாக உள்ள மறுநிதி உதவித் தொகைகள் முறையே ரூபாய் 36·90 கோடியும் ரூபாய் 50·26 கோடியும் ஆகும்.

இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியிடமிருந்து மறுநிதி உதவி பெற்று அசலையும் வட்டியையும் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் எப்பொழுதும் காலந்தாழ்த்தாமல் திரும்பச் செலுத்தி வந்துள்ளது.

1980—81, 1981—82-ஆம் ஆண்டுகளில் (1981 டிசம்பர் வரையில்) இந்நிறுவனத்தின் செயலாக்க ஆய்வு:—1981—82-ஆம் ஆண்டில் (1981 டிசம்பர் வரை) இந்நிறுவனத்தின் செயலாக்கம் முந்தைய ஆண்டில் செயலாக்கத்தோடு ஒப்பிடுகையில் போற்றத் தகுந்த முன்னேற்றத்தைப் பெற்றுள்ளது. தமிழ்நாடு அரசின் தொழிற் கொள்கைக் கிணங்க, இந்நிறுவனம் வேலை வாய்ப்பினைப் பெருமளவில் ஏற்படுத்த வேண்டுமென்ற முக்கிய நோக்கத்துடன், சிறு மற்றும் சின்னஞ்சிறு தொழில் துறைகளிலுள்ள தொழில் நிலையங்கள் அதிலும் குறிப்பாக கிராமம் மற்றும் ஓரளவு நகர்ப் பாங்குள்ள பகுதிகளில் அமைக்கப்படுகின்ற தொழில் நிலையங்களை ஊக்குவிப்பதில் சிறப்பு முன்னுரிமை அளித்து வருகிறது. பொருளாதார நிலையில் பின்தங்கி நலிந்துள்ள மக்கள், தொழில் நிலையங்கள் அமைப்பதை ஊக்குவிப்பதற்காகவும் மற்றும் தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை மேம்படச் செய்யவும் பல்வேறு புதிய திட்டங்களும் சலுகைகளும் கொண்டு வரப்பட்டுள்ளன.

(1) உதவி அளிக்கப்பட்ட தொழில் நிலையங்களின் எண்ணிக்கை.—1980—81 (1980 டிசம்பர் 31 வரை) 1981—82-ஆம் (1981 டிசம்பர் 31 வரை) ஆண்டுகளில் இந்நிறுவனத்தின் செய

லாக்கத்தினால், நிறுவனத்திடமிருந்து உதவி பெற்ற தொழில் நிலையங்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்து உள்ளது. இவ்வாண்டுகளில் இந்நிறுவனத்தினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதி உதவி விவரங்களின் சுருக்கம் வருமாறு :—

	1980–81 (31–12–1980 வரை)	
	எண்ணிக்கை.	தொகை.
(1)	(2)	(3)
		(ரூபாய் இலட்சத்தில்.)
ஒப்புதல் அளிக்கப்பட்டவை ..	2,765	2,377.91

	1981–82 (31–12–1931 வரை)	
	எண்ணிக்கை.	தொகை
	(4)	(5)
		(ரூபாய் இலட்சத்தில்.)
ஒப்புதல் அளிக்கப்பட்டவை ..	3,799	3,118!49

இவற்றில் பெரும்பாலானவை இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகள் கிராமப் பகுதிகளிலுள்ள சிறு மற்றும் சின்னஞ்சிறு துறைகளைச் சார்ந்த தொழில் நிலையங்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். முன்பே தெரிவித்துள்ளவாறு 1980-ஆம் ஆண்டு செப்டம்பரில் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்தின் வட்டார/கிளை அலுவலகங்களுக்கு கடன்வழங்கும் அதிகாரமளித்ததன் மூலம் அந்த ஆண்டில் இந்நிறுவனத்திடமிருந்து பெருமளவிலான சிறு மற்றும் சின்னஞ்சிறு துறைகளை சார்ந்த தொழில் நிலையங்கள் நிதியுதவி பெற்றுள்ளன.

இந்நிறுவனம் தொடங்கப்பட்டதிலிருந்து ஒப்புதலளிக்கப்பட்ட மொத்தத் தொகை, வழங்கப்பட்ட தொகை, நிலுவையாகவுள்ள தொகை பற்றிய விவரங்கள் பின்வருமாறு :—

		எண்ணிக்கை.	தொகை.
(1)		(2)	(3)
			(ரூபாய் இலட்சத்தில்.)
ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை :—			
31—12—1980 வரை	..	7,438	16,327.40
31—12—1981 வரை	..	13,338	20,828.66
வழங்கப்பட்ட தொகை :—			
31—12—1980 வரை	..	..	12,928.99
31—12—1981 வரை	..	..	15,976.93
நிலுவையாகவுள்ள தொகை :—			
31—12—1980 வரை	..	..	7,714.86
31—12—1981 வரை	..	..	10,358.10

(i) வேலை வாய்ப்புகள்.—இந்த நிறுவனத்தினால் உதவி அளிக்கப்பட்ட தொழில் நிலையங்களின் எண்ணிக்கை குறிப்பாக சிறு சின்னஞ்சிறு தொழில் துறைகளில் உயர்ந்துள்ளதால், வேலை வாய்ப்புகள் பெருமளவில் உயர்ந்துள்ளன. இந்நிறுவனம் வழங்கிய நிதி உதவியால் இவ்வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. இவற்றினால் சமுதாயத்தின் நலிந்துள்ள மக்களில் பெரும்பாலானவர்கள் பலன் அடைந்துள்ளனர்.

இந்நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட வேலைவாய்ப்பு விவரங்கள் பின்வருமாறு :—

		எண்ணிக்கை.
1980–81 (1980 டிசம்பர் வரை)	..	24,079
1981–82 (1981 டிசம்பர் வரை)	..	28,346

(ii) சிறு தொழில்களுக்கு நிதியுதவி.—ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளபடி, இந்நிறுவனம் சமுதாயத்தில் பொருளாதார நிலையில் பின்தங்யுகிள்ள பெரும்பாலானோருக்குப் பயன்படுகின்ற

வகையில் சிறு தொழில் துறைக்கு அதிக அளவில் நிதி உதவி அளித்து வருகிறது. இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் வருமாறு :—

நிதி உதவியின் அளவு	குறைந்த அளவு ரூபாய் 2,000 உயர் அளவு ரூபாய் 2,000 இலட்சம். இதைத் தவிர காலந்தாழ்ந்த தொகையை திருப்பிச் செலுத்துவதற்கான ஒப்பந்தங்களுக்கு உத்தரவாதம் அளிப்பது தொழில் நிறுவனங்கள் வெளியிடும் பங்குகளை வாங்குவது போன்ற உதவிகள்.
வட்டி வீதம்	தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதியிலுள்ள புதிய தொழில் பிரிவுகளுக்கு ஆண்டொன்றுக்கு 12.50 சதவீதம்.
	தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதியில் தற்போதுள்ள தொழில் பிரிவுகளுக்கும் இதர பகுதியிலுள்ள தொழில்களுக்கும் ஆண்டொன்றுக்கு 13.50 சதவீதம்.
திரும்பச் செலுத்தும் காலம்.	தொழில் திட்டங்களின் தன்மைகளுக்கேற்ப 10 முதல் 16 வரையிலான அரை ஆண்டுத் தவணைகளில் திரும்பச் செலுத்தத்தக்கதாகும்.

இந்நிறுவனம் தொடங்கப்பட்டதிலிருந்து இத் தொழில் நிலையங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதி உதவிகளின் விவரங்கள் வருமாறு :—

	1980–81 (31—12—1980 வரை) எண்ணிக்கை.	1980–81 (31—12—1980 வரை) தொகை.
(1)	(2)	(3) (ரூபாய் இலட்சத்தில்.)
சிறு தொழில்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை.	2,788	1,662.97
ஒப்புதல் அளிக்கப்பட்ட மொத்த தொகை.	2,765	2,377.91

	1981–82. (31—12—1981 வரை) எண்ணிக்கை.	1981–82. (31—12—1981 வரை) தொகை.
	(4)	(5) (ரூபாய் இலட்சத்தில்.)
சிறு தொழில்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை.	3,770	26,15.91
ஒப்புதல் அளிக்கப்பட்ட மொத்த தொகை.	3,799	31,18.49

(iv) தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளில் உள்ள தொழில் நிறுவனங்களுக்கு நிதி உதவி —

இம்மாநிலத்தின் கிராம, ஓரளவு நகரப் பாங்குள்ள பகுதிகளில் தொழில் வளர்ச்சியினை ஊக்குவிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளில் உள்ள தொழில் நிலையங்களுக்கு இந்நிறுவனம் பெருமளவில் நிதி உதவி அளித்து வருகிறது.

உதவிகளின் முக்கிய அம்சங்கள் வருமாறு :

எளிய நிபந்தனைகளின் பேரில் ரூபாய் 30 இலட்சம் வரை கடன்கள்.

புதிய சிறு தொழில் நிலையங்களுக்கும் தொழில் நுட்ப வல்லுநர்களால் தொடங்கப்படும் தொழில்களுக்கும் ஆண்டொன்றுக்கு 12.50 சதவீத வட்டி வீதமும் தொழில் அமைந்துள்ள பகுதியின் தன்மையைக் கருத்தில் கொள்ளாது நடுத்தரத் தொழில்களுக்கு 14 சதவீதம்.

கடன்களை திரும்பசெலுத்த தொடங்குவதற்குரிய அவகாச காலம் 2 ஆண்டுகள் வரை; கடன்களைத் திரும்பச் செலுத்தும் காலம் கடன்களைத் திரும்பச் செலுத்தத் தொடங்குவதற்குரிய காலம் உட்பட 7 முதல் 10 ஆண்டுகள் வரை.

காப்புத் தொகையாக கடன் வாங்குவோர் கொண்டு வர வேண்டிய நிதி கோருவதில் இணக்கமான அணுகு முறை.

இதைத் தவிர தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளென அறிவிக்கப்பட்ட பகுதிகளில் ஏற்படுத்தப்படும் தொழில் பிரிவுகளுக்கும், அவற்றின் நிலையான இருப்பில் 15 சதவீதம்

வரை மத்திய அரசு உதவித் தொகை அளிக்கப்படுகிறது. மேலும் மாநில அரசால் அறிவிக்கப்பட்ட 25 வட்டங்களும், மாநில அரசு அளிக்கும் உதவித் தொகையைப் பெறத் தகுதியுடையவையாகும்.

தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய பகுதிகளில் உள்ள தொழில் நிலையங்களுக்கு இந்நிறுவனத்தால் ஒப்புதல் அளிக்கப் பட்ட நிதி உதவிகளின் விவரங்கள் பின் வருமாறு :—

	1980–81 (31–12–1980 வரை).		1981–82 (1981 டிசம்பர் வரையில்).	
	எண்ணிக்கை.	தொகை.	எண்ணிக்கை.	தொகை.
	(ரூபாய் இலட்சத்தில்.)			
தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளில் உள்ள தொழில் நிலையங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை.	1,477	13,06.60	2,045	16,40.62

(v) தொழில் நுணுக்க வல்லுநர்கள் :—தொழில் நுணுக்க வல்லுநர்களுக்கு அதாவது தொழில் நுணுக்கவியல் பட்டம்/தகுதிப் பட்டயம்/சான்றிதழ்கள் பல்வேறு தொழிலியல் தயாரிப்புகளில் முன் அனுபவம், திறன் கொண்டவர்கள் தாங்களாகவே தொழில் நிலையங்கள் அமைப்பதை ஊக்குவிப்பதற்காக இந்நிறுவனம் இத்திட்டத்தை ஏற்படுத்தி உள்ளது. இத்திட்டத்தின் முக்கிய அம்சங்களாவன :

ரூபாய் 3 இலட்சம் வரை கடன்கள் வழங்குதல்.

தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளில் உள்ள புதிய தொழில் நிலையங்களுக்குச் சலுகையாக ஆண்டொன்றுக்கு 12 சதவீத வட்டி வீதமும் இதர பகுதிகளில் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளில் ஏற்கனவே உள்ள தொழில்களுக்கும் ஆண்டொன்றுக்கு 13.50 சதவீத வட்டி வீதமும், ரூபாய் 2 இலட்சம் வரை கடன் வாங்குவோர் காப்புத் தொகை செலுத்த வேண்டியதில்லை. கடன் ரூபாய் இரண்டு இலட்சத்திற்கு மேல் காப்புத் தொகை 10 சதவீதம் கட்ட வேண்டும்.

கடன் தொகையைத் திரும்பச் செலுத்தத் தொடங்குவதற்கு நீண்ட அவகாச காலமும் திரும்பச் செலுத்த வேண்டிய

கால அளவும், அதிகமானதாகும். இத்திட்டத்தின் கீழ் இந்நிறுவனத்தினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதி உதவி விவரங்கள் வருமாறு :—

	1980–81 (31–12–1980 வரை).		1981–82 (1981 டிசம்பர் வரை).	
	எண்ணிக்கை.	தொகை.	எண்ணிக்கை.	தொகை.
(1)	(2)	(3)	(4)	(5)
	(ரூபாய் இலட்சத்தில்.)			
தொழில் நுணுக்க வல்லுநர்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை.	30	41.72	46	45.23

(vi) போக்குவரத்து உரிமையாளர்களுக்கு உதவி.—மோட்டார் பொருத்தப்பட்ட ரிக்ஷாக்கள், ஆட்டோரிக்ஷாக்கள், சுற்றுலா வாடகை கார்கள், லாரிகள், ஆட்டோ டிரெய்லர்கள், டிரக்குகள், டெம்போக்கள், வான்கள் போன்ற போக்குவரத்து வண்டிகளை வாங்க உதவும் வகையில் இந்நிறுவனம் ஒரு தனித் திட்டத்தை வகுத்துள்ளது. இந்த உதவியின் முக்கிய கூறுகள் வருமாறு :

(உரிமையாளரே ஓட்டுவது).

வட்டி வீதம்.—14.50 சதவீதம். ஒழுங்காக தொகையைத் திருப்பிச் செலுத்துபவர்களுக்கு வட்டியில் 2 சதவீதம் தள்ளுபடி அளிக்கப்படுகிறது.

கடனுதவி.—வண்டியின் விலையில் 85 சத வீதம் வரை.

கடனைத் திருப்பிச் செலுத்தும் காலம்.—மாதத் தவணைகளில் நான்காண்டுக் காலத்தில் திருப்பிச் செலுத்த வேண்டும்.

உதவி பற்றிய விவரங்கள் பின்வருமாறு :—

	1980–81 (31–12–1980 வரை.)		1981–82 (31–12–1981 வரை.)	
	எண்ணிக்கை.	தொகை.	எண்ணிக்கை.	தொகை.
(1)	(2)	(3)	(4)	(5)
	(ரூபாய் இலட்சத்தில்.)			
போக்குவரத்து வண்டி உரிமையாளர்களுக்கு அளித்த கடன்தொகை.	427	1,42.43	349	1,99.91

இத்திட்டத்தின் கீழ் முக்கியமாக பயன் அடைந்தவர்கள் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளைச் சார்ந்த ஒற்றை வழிப் போக்குவரத்து வண்டி (Single Track) உரிமையாளர்களே ஆவார்கள். சாலைப் போக்குவரத்து வண்டி சிறு உரிமையாளர்களிடமிருந்து அதிக கோரிக்கைகள் வந்துள்ளதால் 1981–82 ஆம் ஆண்டில் அவர்களை ஊக்குவிக்க இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

(vii) மின் உற்பத்தி இயந்திரங்கள் வாங்குவதற்கு உதவி; மின் வெட்டுக் காலங்களில் ஏற்படும் இடையூறுகளைக் களைவதற்கு மின் உற்பத்தி எந்திரங்களையும் டீசல் எந்திரங்களையும் வாங்கவும், தொழில் நிலையங்களுக்கு தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் இத்திட்டத்தின் கீழ் கடனுதவி அளிக்கிறது.

உதவி வழங்குவதற்கான நிபந்தனைகள் பின்வருமாறு :—

கடனுதவி :—ரூ. 5 இலட்சம் வரை (தகுதி அடிப்படையில் கடன் தொகை உயர்த்தப்படும்).

திருப்பிச் செலுத்தும் காலம்:—3 முதல் 5 ஆண்டுகள் வரை; கடன் பெற்றுக் கொண்ட நாளிலிருந்து 6 திங்கள் கழித்து கடனைத் திருப்பிச் செலுத்தத் தொடங்கலாம்.

கடன் பெறுவோர் போட வேண்டிய காப்புத் தொகை :—25 சதவீதம்—நடுத்தர தொழிலாளர்களுக்கு, 13 சதவீதம்—சிறு தொழில்களுக்கு.

வட்டி வீதம் :—தொழிற்சாலை அமைந்துள்ள இடத்தைப் பொறுத்து ஆண்டொன்றுக்கு 12.50 சதவீதம் முதல் 14.00 சதவீதம் வரை.

இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதி உதவியின் விவரம் பின்வருமாறு :—

	1980–81 (1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரை).		1981–82 (1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரை).	
	எண்ணிக்கை.	தொகை.	எண்ணிக்கை.	தொகை.
(1)	(2)	(3)	(4)	(5)
	(ரூபாய் இலட்சத்தில்.)			
மின் உற்பத்தி இயந்திரங்கள் வாங்குவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட கடன்கள்.	69	1,74·95	17	20·99

இத் திட்டம், தமிழ் நாட்டிலுள்ள தொழில் பிரிவுகள் அனைத்திற்கும் அவை தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்திடமிருந்து நிதியுதவி பெற்றிருந்தாலும் சரி இல்லாவிடிலும் சரி பொருந்தும்படி செய்யப்பட்டுள்ளது.

(viii) உலக வங்கி அளிக்கும் கடனுதவியைப் பெற்றுத் தருதல்:—தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் வெளி நாடுகளிலிருந்து இயந்திரங்கள், கூட்டு உறுப்புகள் முதலியவற்றை இறக்குமதி செய்தல், தொழில் நுட்ப அறிவுத் திறனைப் பெறுதல் முதலியவற்றிற்காக உலக வங்கி வழங்கும் அந்நிய செலாவணி கடன் உதவியைப் பெற்றுத் தரும் நிறுவனமாக இம்மாநிலத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முக்கியக் கூறுகள் பின்வருமாறு :—

கடனுதவி	ரூபாய் 30 இலட்சம் வரை.
வட்டி வீதம்	சிறு தொழில் பிரிவுகளுக்கும் பின் தங்கிய பகுதிகளில் உள்ள எல்லாத் தொழில் பிரிவுகளுக்கும் ஆண்டொன்றுக்கு 12.50 சதவீதம். பின்தங்கிய பகுதிகளல்லாத பிற பகுதிகளில் உள்ள தொழில் பிரிவுகளுக்கு ஆண்டொன்றுக்கு 14·00 சதவீதம்.
கடனைத் திரும்பச்செலுத்த தொடங்க அனுமதிக்கப்படும் காலம்.	2 முதல் 4 ஆண்டுகள் வரை.
திரும்பிச்செலுத்தும் காலம்	கடன் செலுத்தாமலிருக்க அனுமதிக்கப்படும் காலம் உட்பட 7 ஆண்டு முதல் 14 ஆண்டுகள் வரை.

இத்திட்டத்தின் கீழ் 1981–82-ல் வழங்கப்பட்ட நிதி உதவியின் அளவு பின் வருமாறு கணிசமான அளவுக்கு உயர்ந்துள்ளது:—

(1)	1980–81 (1980 டிசம்பர் 31-ஆம் நாள் வரை.) எண்ணிக்கை. (2)	தொகை. (3)	1981–82 (1981 டிசம்பர் 31-ம் நாள் வரை). எண்ணிக்கை. (4)	தொகை. (5)
	(ரூபாய் இலட்சத்தில்.)			
உலக வங்கி கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்ட கடன்கள்.	24	268.52	30	..

(ix) எளிய நிபந்தனையில் கடன் வசதி.—எளிய நிபந்தனையில் கடன் வழங்கும் தொடக்க முதலீட்டு உதவி வழங்கும் திட்டத்தின் கீழ், மிகச் சிறிய சிறு தொழில்களுக்கும் மிகச் சிறிய தொழில்களுக்கும் நிதி உதவி அளிக்கும் திட்டத்தை இந்நிறுவனம் வகுத்துள்ளது. தொழில் திட்டத்திற்குத் தேவையான மூலதனத்தில் தொழில் முனைவோர் செலுத்த இயலும் மூலதன பங்கு போக, பாக்கி தேவைப்படுகின்ற மூலதனத்தைப் பெறுகின்ற வகையில் இந்நிதியுதவி அளிக்கப்படுகிறது. தகுதி வாய்ந்த தொழில் நுட்பத்திறன் படைத்த வல்லுநர்களாக உள்ள தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் வகையில் குறிப்பாக, தமிழ்நாட்டில் கிராமப் பகுதிகளிலும் தொழில் துறையில் பின் தங்கிய பகுதிகளிலும் தொழில்களை நிறுவ தெரிந்தெடுத்து உதவுகின்ற அடிப்படையில் இத்திட்டத்தின் கீழ் உதவி அளிக்கப்படுகிறது.

தனி உரிமையாளர் மற்றும் பங்குதாரர் தொழில் நிறுவனங்களுக்கு இந்த உதவியானது குறைந்த வட்டிக் கடனுதவி வடிவில் ஆண்டொன்றுக்கு ஒரு சதவீத வட்டி வீதத்தில் அளிக்கப்படுகிறது. வரையறுக்கப்பட்டுள்ள நிறுவனங்களைப் பொறுத்த வரை (Limited Companies) இந்த நிதி உதவியானது சேர்ந்து வரும் முன்னுரிமைப் பங்குகள் வடிவில் (Cumula ive Preference Share) வழங்கப்படும். இத் திட்டத்தின்படி இந்நிறுவனம் வழங்கியுள்ள உதவி பின் வருமாறு—.

(1)	1980–81 (1980 டிசம்பர் 31 வரை). எண்ணிக்கை. (2)	தொகை. (3)	1981–82 (1981 டிசம்பர் 31 வரை). எண்ணிக்கை. (4)	தொகை. (5)
	(தொகை ரூபாய் இலட்சத்தில்.)			
எளிய நிபந்தனைக் கடன் தொடக்க முதலீட்டு உதவி வழங்கும் இத் திட்டத்தின் கீழ் ஒப்புதல் அளிக்கப் பட்ட கடன்கள்.	236	15.51	22	.1.95

இத்திட்டத்தின் சிறப்புக் கூறுகள் பின்வருமாறு;—

கடன் தொகையின் அளவு.	ரூ. 2 இலட்சம் (அல்லது) தொழில் திட்டத்தின் செலவில் 20 சதவீதம் (இவற்றில் எது குறைவோ அது).
வட்டி வீதம்—ஒரு சதவீதம்.	
கடன் தவணைத் தள்ளி வைப்பு கால அளவு.	ஒவ்வொரு தொழில் தகுதியைப் பொறுத்து 5 ஆண்டுகள்வரை.

(x) சிறிய அளவில் வழங்கும் கடன் / கூட்டுக் கடன் திட்டம்.—சமூகத்தில் பொருளாதார நிலையில் பின் தங்கியவர்கள் பெரும் அளவில் பயனடையும் பொருட்டு முன்னரே குறிப்பிட்டுள்ளதுபோல் சிறிய அளவில் கடன் வழங்கும் திட்டத்தை இந்நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. இத் திட்டத்தின் கீழ் தனித்தியங்கவல்ல தொழில் பிரிவுகளுக்கு ரூ. 5,000 முதல் 25,000 வரை கடன் அளிக்கப்படுகிறது. முன்னரே குறிப்பிட்டுள்ளபடி வட்டார/கிளை அலுவலகங்கள் தற்போது ரூ. 25,000 வரை கணிசமான அளவுக்குக் கடன் வழங்குகின்றன, முன்னரே குறிப்பிட்டுள்ளபடி, முக்கியமாக, கிராமப் பகுதிகளிலும் தொழிலில் பின்தங்கிய பகுதிகளிலும் உள்ள தொழில்களை மேம்படுத்துவதற்கும் பெரும் அளவில் வேலை வாய்ப்பினை தோற்றுவிப்பதற்கும்

இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கூட்டுக்கடன் திட்டத்தின் கீழ் நிலையான இருப்புகளை எற்படுத்தவும் நடைமுறை மூலதனக் கடன் வசதிக்கும் நிதி உதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் இந்நிறுவனம் வழங்கும் இந்த உதவியைப் பற்றிய விவரங்கள் பின்வருமாறு.

(1)	(31—12—1980 வரை). எண்ணிக்கை. (2)	தொகை. (3)	(31—12—1981 வரை.) எண்ணிக்கை (4)	தொகை (5)
	(தொகை ரூபாய் லட்சத்தில்.)			
சிறிய அளவில் வழங்கும் கடன் கூட்டுக் கடன் திட்டத்தின் கீழ் ஒப்புதல் அளிக்கப் பட்ட கடன்கள்.	1,735	313,84	2,404	438,98
வட்டி விதம் ..	ஆதி திராவிடர்கள், பழங்குடியினர், மிகவும் பின்தங்கிய வகுப்பினர் ஆகியோர் உரிய காலத்திற்குள் கடனைத் திருப்பிச் செலுத்தி விட்டால் 1 சதவீதம் வட்டி சிறப்புத் தள்ளுபடியுடன் வட்டி வீதம் ஆண்டு ஒன்றுக்கு 11.25 சதவீதம். ஏனையோருக்கு, உரிய காலத்தில் கடனைத் திருப்பிச் செலுத்து வதற்கு 1 சதவீத வட்டி சிறப்புத் தள்ளுபடியுடன் 13.50 சதவீதம்.			
கடனைத் திருப்பிச் செலுத் தாமலிருக்க அனுமதிக்கப்படும் கால அளவு.	6—12 திங்கள் வரை.			
திருப்பிச் செலுத்த வேண்டிய கால அளவு பிணையக் காப்புத் தொகை.	பத்தாண்டு கால அளவில் (நிலையான சொத்துகளின் 10 - சதவீதத்திலிருந்து 20 சதவீதம் வரை) எளிய தவணைகளில்			

(xi) ஏனைய திட்டங்கள்.—தொழில் கொட்டகைகள் வாங்குதல், நவீன அரிசி ஆலைகள் அமைத்தல், உணவு விடுதிகள் கட்டுதல் முதலியவற்றுக்குக் கடன் வழங்குதல் போன்ற ஏனைய நிதியுதவித் திட்டங்களைத் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக்கழகம் செயல்படுத்துகிறது.

7. இவ்வாண்டில் கொண்டு வரப்பட்ட புதிய திட்டங்கள்—சலுகைகள்.

(i) கடன் கணக்குகள் வட்டி விதித்தல்—சில நடை முறை மாற்றங்கள்.

கடன் தவணை வசூல் நிறுத்தி வைக்கப்பட்ட நாளுக்கும் கால அளவிற்கும் அரையாண்டு வட்டி செலுத்த வேண்டிய நாளுக்கும் இடைப்பட்ட காலத்தில் அசல் தவணைத் தொகை களைச் செலுத்த வேண்டிய நாளன்று முறையாகச் செலுத்து வதற்கு வட்டித் தொகையைத் தள்ளி விடுவதற்கு இந்நிறுத் வனத்துக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. இதில் மேற் கூறிய திருத்தம் இந்நிறுவனத்தின் 1980—81-ஆம் ஆண்டுக் கணக்கு களுக்குப் பொருந்தும். 30—9—1980-வுடன் முடிவடை யும் அரையாண்டுக்கு வட்டித் தொகையைக் கணக்கிடுகையில் இது கடன் கணக்கில் சரிக்கட்டப்படும்.

(ii) பத்திரம் எழுதிக் கொடுத்தல்—திருத்தப் பத்திரம் எழுதுதல்—இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி போன்ற ஏனைய நிதியுதவி நிறுவனங்கள் பின்பற்றி வருகிற நடை முறையைக் கருத்திற் கொண்டு இயந்திரங்களை மாற்றியமைப் பதற்குத் திருத்தப் பத்திரங்கள் எழுத வேண்டுமென வலியுறுத்த வேண்டாமென தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் முடிவு செய்து உள்ளது.

(iii) [சிறு கடன்கள் (சிறு தொழில்கள்) உத்தரவாதம்] திட்டம் 1980—81.—மத்திய அரசு சிறு தொழில்களுக்குக் கடன் உத்தரவாத திட்டத்தை நிறுத்தி விட்டதாலும் வைப்பீடு காப்பு உறுதி கடன் உத்தரவாத நிறுவனம் 1—4—1981ஆம் நாளிலிருந்து உத்தரவாதக் கடன்களைத் தொடர்ந்து அளிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டு உள்ளதாலும் நிறுவனம் புதிய திட் டத்தின் கீழ் உத்தரவாதக் கடன்களை வைப்பீடு காப்புறுதி கடன் உத்தரவாத நிறுவனத்திடம் தேவையான உத்தரவாதக் கடன்களை கோருவதற்கு அதிகாரம் பெற்றுள்ளது.

(iv) புதிய பிரிவுகளைப் பதிவு செய்யத் தடையும் தற் போதுள்ள பிரிவுகளை விரிவாக்குதலும்.—இந்திய அரசினால் பதிவு செய்யத் தடை விதிக்கப்பட்ட அல்லது இந்திய அரசு விரும்பாத விண்ணப்பங்களை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளு வதில்லை என நிறுவனம் முடிவு செய்துள்ளது.

இருப்பினும், ஒரு குறிப்பிட்ட தொழிற்சாலை அல்லது தொழிற் பிரிவை பொறுத்த மட்டில் அதனுடைய தகுதிகளை வைத்து நிதி உதவி அளிப்பது நியாயம் எனத் தோன்றும்போது நிறுவனம் அந்த இனத்தை மாவட்ட தொழில் மையத்தைக் கலந்தாலோசிக்கலாம்.

(v) உடல் ஊனமுற்றோர் நலனுக்காக சில திட்டங்களை நிறைவேற்றுதல்.—அரசின் கட்டளைகளுக்கிணங்க, உடல் ஊன முற்றோரில் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களுக்கு எளிய நிபந் தனைகளின்பேரில் குறைந்த வட்டி விதத்தில் நிதி உதவி அளிக்க, நிறுவனம் ஒரு திட்டத்தை நிறைவேற்ற முடிவு செய்து உள்ளது.

(vi) நிறுவனத்தின் ஆண்டுக் கணக்குகள்.—வணிகஞ் சார்ந்த கணக்கு முறையிலிருந்து ரொக்க அடிப்படைக் கணக்கு முறைக்கு மாற்றுவது குறித்த செயற் குறிப்பைப் பரிசிலித்தல்.—1980–81 ஆம் கணக்கு ஆண்டிலிருந்து நிறுவனம் தன்னுடைய கணக்கு முறையை வணிகஞ் சார்ந்த அடிப்படையிலிருந்து ரொக்க அடிப் படைக்கு மாற்றிக்கொண்டுள்ளது. இந்த மாற்றத்தினால் 1980–81 ஆம் ஆண்டுக்குரிய கணக்குகளை நிறுவனம் மீண்டும் எழுத வேண்டியுள்ளது. கணக்குகளை முடிப்பதற்கும் தணிக் கைக்கும் மேலும் சற்று காலமுமாகும்.

(vii) செலுத்தத் தவறிய தொகைகள் மீது இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி கூடுதல் வட்டி விதித்தல்.—கூடுதல் வட்டி விதிப்பு தற்போது பணம் செலுத்தத் தவறியவர்கள் மீண்டும் கடன் வாங்கும் விருப்பத்தைக் குறைக்கும் என்பதாலும் சில தொழில் முனைவர்களுக்கு உண்மையான இடர்பாடுகள் ஏற்படும்பொழுது இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி கூடுதல் வட்டி விதித்தால் அது நிறுவனத்திற்கு நிதி நெருக்கடியை ஏற் படுத்தும் என்பதாலும், இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியை கூடுதல் வட்டி விதிப்பு தொடர்பாக அதனுடைய நிலைமையை மறு ஆய்வு செய்யும்படி கேட்டுக்கொள்ள நிறுவனம் முடிவு செய்துள்ளது.

(viii) புதிய தொழில் முனைவர்களுக்கு, இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் தொடக்க மூலதன உதவித் திட்டம்.—தமிழ் நாட்டில் மேற்கூறிய திட்டத்தை இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் சார்பாகச் செயல்படுத்த நிறுவனம் அதிகாரம் பெற்று உள்ளது.

(xi) வட்டார/கிளை மேலாளர்களுக்கு ஒப்புதலளிக்கும் அதிகாரத்தை அதிகப்படுத்துதல்.—'' போக்குவரத்துக் கடன் உதவி '' வழங்க ஒப்புதலளிக்க உரிமை பெற்ற வட்டாரகிளை மேலாளர்கள், மேலாளர்கள், உதவி மேலாளர் (திட்டம்) ஆகி

யோர் ஒப்புதல் அளிப்பதற்கான தற்போதுள்ள அளவு 50,000 ரூபாயிலிருந்து 75,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

(x) உலக வங்கி கடனுதவித் திட்டத்தின் கீழ் கடன் ஒப் பளிப்பு.—திட்டம் இயந்திரங்களை இறக்குமதி செய்வதாக இருந் தாலும், சாதாரண திட்டத்தின் கீழ் கடனுக்கு ஒப்புதலளிக்க நிறுவனம் அதிகாரம் பெற்றுள்ளது. இத் திட்டம் சாதாரணத் திட்டத்தின் கீழ் ஒப்புதலளிக்கப் பெற்றிருந்தாலும் தேவைப் பட்டால், பின்னொரு நாளில் உலக வங்கி கடனுதவித் திட்டத் தின் ஒப்புதளிக்கப்பட்டதாக மாற்றிக் கொள்ளலாம் என்ற நிபந் தனைக்குட்பட்டு கடனுக்கு ஒப்புதளிக்கப் பெறும். இம்மாற்றத் திற்கு மறுப்பேதும் இருக்கக்கூடாது.

8. கடன் வசூல்: மின் வெட்டு, நிலக்கரி, சுட்ட கரி இன்றி யமையா மூலப் பொருட்கள் முதலியன கிடைக்காமை போன்ற இடர்பாடுகளால் கடனுதவி பெற்ற பிரிவுகளின் உற்பத்தியும் இலாபமும் பாதிக்கப்பட்டிருந்தாலும், அவைகளிடமிருந்து நிறு வனம் பெருமளவிற்கு கடன் வசூல் செய்துள்ளது. கடந்த 2 ஆண்டுகளில் நிறுவனம் செய்துள்ள வசூல் பின்வருமாறு :

1980–81.	1981–82.
(1)	(2)
(1980 டிசம்பர் வரை).	(1981 டிசம்பர் வரை.)
(ரூபாய் இலட்சத்தில்.)	
621·73	800.69

வட்டியைச் செலுத்துவதற்கு காலத்தை நீட்டித்தல் கடனின் அசல் தொகையைத் திருப்பிச் செலுத்தும் தவணையை மாற்றி அமைத்தல்' வட்டி, அசல் தொகைகளைச் செலுத்த வேண்டிய தவணைகளைத் தள்ளி வைக்க அனுமதித்தல் முதலியவற்றிற்கு அனுமதி வழங்குவதன் வாயிலாக இடர்பட்டுக் கொண்டிருக்கும் தொழிற் பிரிவுகளிடம் நிறுவனம் தாராளமாகவும் நீக்குப் போக்கான முறையிலும் நடந்து வருகிறது.

9. நிதி முடிவுகள்.—ஏற்கனவே கூறியவாறு, 1980–81 ஆம் ஆண்டில் நிறுவனம் கணக்கு முறையில் ஒரு மாற்றத்தை ஏற் படுத்தியுள்ளது. வாராக் கடன்களைக் கணக்கிலிருந்து தள்ளி விடுவதற்கு முன்பாக ஆதாயம் (வரி செலுத்துவதற்கு முன்னதாக 1980 81, 1981–82 ஆம் ஆண்டுகளுக்கு) பின்வருமாறு கணக் கிடப்பட்டுள்ளது :—

1981–82 (1982 மார்ச் வரை) .. ரூபாய் 125·00 இலட்சம்.

1981–82 (1982 மார்ச் வரை மதிப்பீடு) ரூபாய் 175·00 இலட்சம்.

10. வட்டார கிளை அலுவலங்கள்.—தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் தற்பொது கோயம்புத்தூர், மதுரை

ஆகிய இரண்டு இடங்களின் வட்டார அலுவலங்களும், கடலூர், தர்மபுரி, ஈரோடு, நாகர்கோவில், புதுக்கோட்டை, சேலம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, வேலூர் ஆகிய பத்து இடங்களில் கிளை அலுவலங்களையும் சென்னையில் தலைமை அலுவலகத்தையும் நிறுவியுள்ளது.

மேற்கூறியவற்றிலிருந்து, தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்தின் 1981—82 ஆம் ஆண்டின் (31—12—1981 வரை) செயல்திறன் 1980—81ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது பெருமளவில் வளர்ச்சியடைந்துள்ளது என்பதைக் காணலாம்.

தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்.

(டான்சி.)

தொழில் வணிகத் துறையின் கீழிருந்த சிறு தொழிற்சாலைகளை ஏற்று வணிக முறையில் நடத்தும் பொருட்டு 1965 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி), அத்தொழிற்சாலைகளை 1965 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1 ஆம் நாள் முதல் ஏற்றுக்கொண்டது. இந்நிறுவனத்திற்கு மாற்றப்பட்ட தொழிற்சாலைகளின் இருப்புகளின் மதிப்பில் ரூபாய் 400 இலட்சம் அரசால் செலுத்தப்பட்ட பங்குமூலதனமாகவும், எஞ்சிய தொகை அரசிடமிருந்து பெறப்பட்ட கடனாகவும் கருதப்பட்டது.

தற்போதுள்ள சில தொழிற்சாலைகளை விரிவுபடுத்தும் திட்டம் உட்பட இந்நிறுவனம் மேற்கொள்ளும் பல புதிய திட்டங்களை செயற்படுத்துவதற்கு, நிலையான மூலதனச் செலவை ஏற்கும் பொருட்டு, இந்நிறுவனத்திற்கு தேவையான நிதி உதவியை, பங்கு மூலதனமாகவோ அல்லது கடனாகவோ அரசு இந்நிறுவனத்திற்கு அளித்து உதவி வருகிறது. புதிய திட்டங்களுக்கான உதவியாக 1981—82 ஆம் ஆண்டில் ரூபாய் 25,00 இலட்சம் பங்கு மூலதனமாக இந்நிறுவனத்திற்கு அரசு அளிக்க உத்தேசித்துள்ளது. 1981—ம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் தேதியில் உள்ளபடி டான்சியின் பங்கு மூலதனம் மற்றும் கடன் வடிவம் கீழே தரப்பட்டுள்ளது :—

		(ரூபாய் கோடியில்)
(1) அங்கீகரிக்கப்பட்ட மூலதனம்	..	10·00
(2) செலுத்தப்பட்ட பங்கு மூலதனம்	..	7·75
(3) அரசிடமிருந்து வாங்கிய கடன்	..	8·81

2. தொழிற்சாலைகளிடையே செயற்படுத்தப்பட்ட சீரமைப்பின் விளைவாக தற்போது இந்நிறுவனத்தில் 56 உற்பத்தித் தொழிற்சாலைகள் உள்ளன. அவைகளை கீழ்க்குறிப்பிட்டவகைகளாக பிரிக்கலாம் :—

(1) கட்டுமான/வடிவமைப்புத் தொழிற்சாலைகள்.
(2) கருவிகள் உற்பத்தித் தொழிற்சாலைகள்.
(3) பொறியியல் தொழிற்சாலைகள்.
(4) இரும்புப் பொருட்கள் வடிவமைப்பு/உற்பத்தித் தொழிற்சாலைகள்.
(5) தச்சுத் தொழிற்சாலைகள்.
(6) தோல் தொழிற்சாலைகள்.
(7) பல்வகை மற்றும் சிறப்பு வகைத் தொழிற்சாகைலள்.

டான்சி நிறுவனத்தின் பெரும்பாலான தொழிற்சாலைகள் தனியார் நிறுவனங்களிடமிருந்து கிடைக்கும் குறிப்பிட்டபணிகளை ஏற்றுமுடிப்பதோடு மட்டுமல்லாமல், அரசுத் துறைகள் மற்றும் இரயில்வே, மின்சார வாரியம், தபால் தந்தித் துறை குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் போன்ற அரசு சார்புடைய நிறுவனங்களிடமிருந்து கிடைக்கும் பணிகளையும் ஏற்று நிறைவேற்றி வருகின்றன.

3. இந்நிறுவனத்தின் தொழிற்சாலைகளில் 1965–66 ஆம் ஆண்டில் ரூபாய் 389 இலட்சமாக இருந்த உற்பத்தியானது, 1980–81ஆம் ஆண்டில் ரூபாய் 2,060 இலட்சமாக சீராக அதிகரித்துள்ளது. 1978–79 ஆம் ஆண்டில் ரூ. 1,537 இலட்சமாக இருந்த உற்பத்தி, 1979–80 ஆம் ஆண்டில் ரூபாய் 1,835 இலட்சமாகவும், மீண்டும் 1980–81 ஆம் ஆண்டில் ரூபாய் 2,060 இலட்சமாகவும் உயர்ந்துள்ளது. இந்த இரண்டாண்டுகளில் உண்டான உற்பத்தியில் வளர்ச்சி மட்டும் 34 விழுக்காடுகள் ஆகும். 1980–81 ஆம் ஆண்டில் அடைந்த ரூபாய் 2,060 இலட்சம் உற்பத்தியானது. இந் நிறுவனம் ரூபாய் 31·60 இலட்சம் இலாபத்தை ஈட்டச் செய்துள்ளது. 1981–82 ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தின் உற்பத்தி ரூபாய் 2,400 இலட்சம் அளவு இருக்குமென எதிர்ப்பார்க்கப்படுகிறது. 1982–83 ஆம் ஆண்டிற்கான உற்பத்தி இலக்கு ரூபாய் 2,760 இலட்சமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

4. இந்நிறுவனத்தின் கீழ் உள்ள தொழிற்சாலைகளின் செயல்களில் சில முக்கிய அம்சங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

கருவி அறைகள் மற்றும் அதனை ஒத்த தொழிற்சாலைகள் ;

கிண்டி.யிலுள்ள கருவி தொழிற்சாலை, பாதுகாப்புத் துறைக்குத் தேவையான உதிரி உறுப்புகளை வழங்குவதற்கான பெருமைப்படத்தக்க ஆணைகளைப் பெற்று முடித்துத் தந்துள்ளது.

இவ்வகை உற்பத்தியில் பெரிய அளவில் ஈடுபடுவதற்கு முன்
பரிசோதனையாக சில வளர்ச்சிப் பணியினைச் செய்ய
வேண்டியிருந்தது. இத்தொழிற்சாலை, சமூக நலத்துறையின் சத்
துணவுத் திட்டத்திற்கு தேவையான குழந்தைகள் எடைத் தராசு
களின்உற்பத்திற்காக மாதிரியினை உருவாக்கி, முதல் தொகுப்பாக
100 எண்ணிக்கைகளை உற்பத்தி செய்து வழங்கியுள்ளது.

அம்பத்தூரிலுள்ள டான்சி இயந்திரக் கருவி தொழிற்சாலை
ஆவடியிலுள்ள டாங்கித் தொறிற்சாலைக்கு தேவையான இயந்
திரக் கடைசல் செய்யப்பட்ட பொருட்களை வழங்கியுள்ளது.

கிண்டியிலுள்ள டான்சி தகடு அழுத்த இயந்திரத் தொழிற்
சாலை, ''விசயந்தா'' டாங்கிக்குத் தேவையான உதிரி உறுப்பு
களை செய்து வழங்கி வருகிறது.

பொதுத் துறை நிறுவனம் என்ற முறையில் டான்சி அரசின்
வறட்சி நிவாரணப் பணிகளில் பயனுள்ள ஒரு பங்கினை
ஏற்றது. 'டான்சி இந்தியா மார்க் II ஆழ் கிணறு நீரேற்றுக்
குழாய்'' (Tanci Incia Mark II deep well hand pump)
என்ற பெயரில் ஒரு திட்டம் 1981 ஏப்ரல் திங்களில் தமிழகத்தில்
நிலவிய கொடிய வறட்சி நிலைமையினைச் சமாளிக்க, ஆரம்பிக்
கப்பட்டது. யூனிசெப் (UNICEF) நிறுவனம் அளித்த
வரைபடங்களுக்கொவ்வ, இந்திய தரக்கட்டுப்பாடு நிலையத்தின்
விதிகளுக்கிணங்க, டான்சியால் இந்த நீரேற்றுக் குழாய்கள்,
வெற்றிகரமாக உற்பத்தி செய்யப்பட்டன. ரூ. 23.00 இலட்சம்
மதிப்புள்ள 1,000 எண்ணிக்கைகள் உற்பத்திக்கான பணியினை
திருச்சிராப்பள்ளியிலுள்ள கருவி அறைகள் மற்றும் பொறியியல்
தொழிற்சாலை மேற்கொண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரி
யத்திற்கு வழங்கியது. ''யூனிசெப்'' நிறுவனத்தால் அங்கீகரிக்
கப்பட்ட பன்னாட்டு ஆய்வு நிறுவனமான பெங்களூரிலுள்ள
திருவாளர்கள் கிரௌன் ஏஜன்சிஸ்-ஆல் கடுமையான தர சோத
னைக்குப்பின் இக்குழாய்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

யூனிசெப் நிறுவனத்திடமிருந்து மேற்கொண்டு வந்த 24,000
டாலர்கள் பெறுமான, முழுவதும் மூலாம் பூசப்பட்ட நீரேற்றுக்
குழாய்களைத் தயாரிப்பதற்கான ஆணையும் பெறப்பட்டு அந்
நிறுவனத்தின் முழு திருப்தியுடன் வெற்றிகரமாகக் செயல்படுத்
தப்பட்டது. ''யூனிசெப்'' க்காக மேற்கண்ட குழாய்கள் தயா
ரிக்கும் மற்றுமொரு ஒப்பந்தம் ஏற்பட்டு ஆரம்பத்தில் 70,200
டாலர் மதிப்புள்ள பணிகளுக்கான ஆணை பெறப்பட்டு அதற்
கான வேலைகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன.

இராணிப்பேட்டையிலுள்ள டான்சி இயந்திரக் கருவிகள்
தொழிற்சாலை, 200 எம்.எம். திறன் கொண்ட இரும்பு அறுவை
இயந்திரங்களின் உற்பத்தியோடு, 300 எம். எம். திறன் கொண்ட
இரும்பு அறுவை இயந்திரங்களின் உற்பத்தியையும் மேற்கொண்டு
உற்பத்திச் செய்துள்ளது. மேலும், 6 எம். எம். மற்றும் 9

எம். எம். திறன் கொண்ட பெஞ்சுத் துளைக் கருவிகளின் உற்பத்தியையும் மேற்கொண்டுள்ளது. இந்நிறுவனத்தில் 144 நபர்களுக்கு வேலை வாய்ப்பு உள்ளது ; அதில் 103 நபர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டுள்ளது.

தோல் தொழிற்சாலைகள் :

பெரம்பூரிலுள்ள டான்சி தோல் தொழிற்சாலை ரூ. 1·5 இலட்சம் மதிப்புள்ள ''மெகாசின் காலணி'' களை ஆஸ்திரேலியா நாட்டுக்கு ஏற்றுமதி செய்துள்ளது.

21–8–1981 முதல் துவக்கி வைக்கப்பட்ட மாதவரத்திலுள்ள டான்சி ஆடைத் தோல் தொழிற்சாலை பாரத வர்த்தக நிறுவனத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற ரூ. 1.25 இலட்சம் மதிப்புள்ள 10,000 ச. அடி சுவெட் (Suede) தோலிற்கான பரீட்சார்த்த ஆணையினை நிறைவேற்றியது. பாரத வர்த்தக நிறுவனத்திடமிருந்து செம்மறியாடு நப்பா தோலிற்கான (Sheep n'pp.) ஆடைகள் மற்றும் பாரத தோல் நிறுவனத்திடமிருந்து வெள்ளாடு மேல் தோல் (Goat upper) சுவெட் மற்றும் செம்மறியாடு நப்பா தோல் ஆகியவற்றிற்காக கிடைக்கப்பெற்ற அடையாள ஆணைகளையும், இத்தொழிற்சாலை ஏற்றுக் கொண்டுள்ளது.

பல்வகை மற்றும் சிறப்புவகை தொழிற்சாலைகள் :

கிண்டியிலுள்ள, வார்ப்பட தொழிற்சாலை, 625 விசைச் செக்குகளை உற்பத்தி செய்து கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்திற்கு 1980–81-ல் வழங்கியுள்ளது. மேலும், 400 விசைச் செக்குகள் உற்பத்திச் செய்யப்படுகின்றன. மேலும் ரூபாய் 20 இலட்சத்திற்கான பணி ஆணை இத்தொழிற்சாலைகளால் பெறப்பட்டுள்ளது.

உதகமண்டலத்திலுள்ள டான்சி, கைக்கடியார இணைப்புத் தொழிற்சாலை, கடந்த ஆண்டில் அடைந்த ரூ. 12·14 இலட்சம் உற்பத்தியை 1980–81 ஆம் ஆண்டில் ரூ. 18·03 இலட்சத்திற்கு உயர்த்தியுள்ளது. இத்தொழிற்சாலை, முழு உறுப்புகளையும் இணைக்கும் பணியில் ஒரு நாளக்கு 1,000 கைக்கடியாரங்களை உருவாக்கும் திறனை அடைந்துள்ளது. இத்தொழிற்சாலையில் 1)4 பேர் பணி புரிகின்றனர். அவர்களில் 85 பேர்கள் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அம்பத்தூரிலுள்ள டான்சி ''பாலிஷ்'' தொழிற்சாலை, கடந்த ஆண்டில் அடைந்த ரூ. 23·52 இலட்சம் உற்பத்தியை 1980–81 ஆம் ஆண்டில் ரூபாய் 28·69 இலட்சமாக உயர்த்தியுள்ளது. இத்தொழிற்சாலை, பிரெஞ்சு பாலிஷ், டிரான்ஸ்ப்ரண்ட் பாலிஷ் (Transparent Polsh) பட வார்னிஷ், தின்னர், ஜி. பி. தின்னர், என். சி. தின்னர், (N.C. Thinner) காஸ்கெட் ஷெல்லாக் என். சி. லேக்கர் (N. C. Lacquar) போன்ற பொருட்களை உற்பத்தி செய்கிறது. இரண சிகிச்

சைக்கு பயன்படக்கூடிய சாராவி (Surgical sprit) தயாரிப்பதற்காக இத்தொழிற்சாலையை விரிவுபடுத்தும் ஒரு திட்டம் உருவாக்கப்பட்டு, தற்பொழுது செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்தொழிற்சாலையில் மேற்கொண்டு பலவிதமான பொருட்களை உற்பத்தி செய்யும் பொருட்டு, சாலைகளில் அடையாள குறிகள் இடுகின்ற மஞ்சள் மற்றும் வெள்ளை நிற வர்ணம் தயாரிக்கும் திட்டத்தின் சாத்தியக் கூறுகள் பரிசிலனையில் உள்ளது. ரெட் ஆக்ஸைடு (Red Oxide) மற்றும் எனாமல் வர்ணங்களைத் தயாரிக்கும் ஒரு திட்டமும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. 44 பேர்கள் வேலை வாய்ப்பு பெறும் இத்தொழிற்சாலையில் இது வரை 30 பேர்கள் வேலையில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

5. கீழ்க்கண்ட சில புதிய திட்டங்களும் ஆய்வில் உள்ளன.

(1) பெரம்பூரிலுள்ள தோல் தொழிற்சாலையை விரிவாக்கும் திட்டம்.

(2) ஜி.எல்.எஸ். விளக்குகள் உற்பத்தித் தொழிற்சாலை.

6. 6,000 நபர்களுக்கு டான்சி நேரிடையாக வேலை வாய்ப்பினை அளித்து வருகிறது. இந்நிறுவனம் அதனது பணியாளர்களுக்காக (தொழிலாளர்கள் தவிர) தொழிலாளர் வைப்பு நிதித் திட்டத்திற்குப் பதிலாக ஓய்வூதிய திட்டம் ஒன்றை உருவாக்கியுள்ளது. இத் திட்டம் அமுலாக்கப்படும்போது இந்நிறுவனத்தில் நிரந்தரமாக சேர்க்கப்பட்ட அரசு பணியார்கள் மற்றும் அவர்களையொத்த ஏனைய நிறுவனப் பணியாளர்கள் பணியிலிருந்து ஓய்வு பெறும்போது மாதந்தோறும் ஓய்வூதியம் பெறுவர்.

7. டான்சியின் கிளை நிறுவனமான தமிழ்நாடு மொபெட் நிறுவனம் 19–8–1977 முதல் செயல்பட்டு வருகிறது. ஏற்கனவே தயாரித்து அளித்து வந்த ''மயூரம் டிலக்ஸ்'' என்ற பெயருள்ள வாகனத்திற்குப் பதிலாக ''மயூரம் ஸ்போர்ட்ஸ்'' என்ற பெயருடன் ஒரு புதிய மாதிரியான வாகனத்தை இப்போது இந்நிறுவனம் தயாரித்து வழங்கி வருகிறது. அதில் இரட்டை அமருமிடம், பெரியளவிலான பெட்ரோல் தொட்டி, தனியான முன் பலகை, அதிர்ச்சி உட்கொள்ளும் சாதனங்கள் முதலிய தொழில் நுட்ப அம்சங்கள் உள்ளன. 1979–80 மற்றும் 1980–81-ல் இந்நிறுவனம் முறையே 1,610 மற்றும் 1,654 மோபெட் வாகனங்களை உற்பத்தி செய்தது. 1981 ஜனவரி திங்கள் முதல் மோபெட் விற்பனையில் நலிவுறும் போக்கு ஏற்பட்டுள்ளதால் குறிப்பிட்ட அளவு மோபெட் உற்பத்தியுடன் ஏனைய பணிகளுக்கான ஆணைகளையும் ஏற்பது என இந்நிறுவனம் முடிவெடுத்து (1) இயந்திரங்கள் தொகுதி, (2) கருவி அறை மற்றும் (3) மோபெட் இணைத்தல் மற்றும் உலோகத் தகடு வடிவமைப்பு வேலை தொகுதி ஆக, மூன்று பிரிவுகளைக் கொண்டு 1–7–1981 முதல் இந்நிறுவனம் செயல்படுகிறது. பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் ஆக 250 நபர்களுக்கு இந்நிறுவனம் வேலையளித்து வருகிறது.

தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

சனிக்கிழமை, 1982 மார்ச் 27.

பங்குனி 14, துன்மதி—திருவள்ளுவராண்டு 2013.

சென்னை, செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்ற மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில், மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

பாலக்கோட்டில் கலவரம்.

* 209 வினா.—திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தர்மபுரி மாவட்டம், பாலக்கோட்டில் 1979 ஆகஸ்டு மாதத்தில் நடந்த கலவரத்தில் இறந்தவர்கள் எத்தனை பேர்?

(இ) அவர்களுடைய குடும்பத்தினருக்கு அரசு அளித்த உதவிகள் யாவை ?

(உ) கலவரம் சம்பந்தமாக அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை ?

(எ) அதே இடத்தில், அதற்குச் சில மாதங்களுக்கு முன் கலவரம் நடந்தது என்பது உண்மையா ?

(ஐ) ஆம் எனில், மீண்டும் அதே இடத்தில் கலவரம் ஏற்படாமல் தடுக்க அரசு எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு முதலமைச்சர் சார்பில்) : (அ) ஐந்து பேர்.

(இ) முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து, இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு, தலா ரூ. 5,000 வழங்கப்பட்டுள்ளது.

[1982 மார்ச் 27

(உ) அமைதிக் குழு ஏற்படுத்தப்பட்டு, இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையே சுமுக நிலைமை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக துப்பாக்கி உரிமங்களும், வெடி மருந்து உரிமங்களும் தற்காலிகமாக நீக்கம் செய்யப்பட்டன காவல் துறைத் தலைவர், மாவட்ட ஆட்சித் தலைவர் போன்ற உயர் அதிகாரிகள் முகாமிட்டு நிலைமைகளைக் கவனித்தனர். அமைதிக் குழுக் கூட்டங்களை நடத்தினர். அதிக அளவில் காவல் துறை பாதுகாப்பு போடப்பட்டது.

(எ) ஜூன் 1979-ல் சில சம்பவங்கள் நடந்தன.

(ஐ) பலத்த காவல் துறை பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. தொடர்ந்து நிலைமை கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

திரு. ம. சங்கரலிங்கம்: அங்கு அமைதி இருக்க வேண்டும் என்று எண்ணுவதால் நான் அந்தப் பிரச்சினைக்குள் போக விரும்பவில்லை. மேலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இறந்தவர்களின் குடும்பத்திற்கு ஐந்தாயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய குடும்பத்தில் வேலை பார்க்கத் தகுதியுடையவர்கள் யாராவது இருந்து விண்ணப்பம் செய்தால், அதை அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: அது குறித்து அரசு பரிசீலனை செய்யும்.

பெண்களை உயிரோடு கொளுத்துதல்.

*210 வினா.—**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1980ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம் முதல் வாரத்தில், சேலம் மாவட்டத்தில் தாதர்பட்டி கிராமத்தில் ஒரு பெண் உயிரோடு கொளுத்தப்பட்டாள் என்பது உண்மையா?

(இ) தர்மபுரி மாவட்டத்திலும் இதேபோன்று ஒரு பெண் உயிரோடு எரிக்கப்பட்டாள் என்பதும் உண்மையா?

(உ) ஆம் எனில், இத்தகைய கொடுமைகளில் இருந்து தனிப்பட்ட மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு முதலமைச்சர் சார்பில்): (அ) ஆம்.

(இ) ஆம்.

1982 மார்ச் 27]

(உ) குற்றம் நடைபெற்ற பகுதிகளிலும் மற்ற இடங்களிலும் காவல் துறையினர் பொதுமக்களிடமிருந்து ஆதாரமற்ற பீதியைக் களைவதற்கும் "குழந்தைகளைக் கடத்துபவர்கள்" என்று கூறப்படும் கூட்டத்தினர் தமிழ் நாட்டில் இல்லையென்பதை விளக்கியும் காவல்துறையின் செய்திக் குறிப்புகள் வெளியிட்டு நடவடிக்கை எடுத்துள்ளனர்.

திரு. ம. சங்கரலிங்கம்: தலைவர் அவர்களே, பல அநீதியான சம்பவங்கள், இத்தகைய பொய்ச் செய்தியை விரைவிலே பரப்புவதன் மூலம் ஏற்படுகின்றன. இந்தச் சம்பவத்தில் கூட 35 வயதுடைய பெண் தீயிட்டுக் கொளுத்தப்பட்டிருக்கிறார். அதற்கு முன்னால் ஏற்காடு மலையடிவாரத்தில் பலரால் தாக்கப்பட்டு அந்தத் தாக்குதலிலிருந்து தப்பி இந்தப் பகுதிக்கு வந்தபோது கொளுத்தப்பட்டிருக்கிறார். இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறுகிறபோது, பொய்ச் செய்தி எவ்வளவு வேகமாகப் பரவுகிறதோ அதைவிட வேகமாக காவல் துறையினர் செய்திகளை மக்களிடத்திலே பரப்ப முன்னேற்பாடான நிலையில் நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: ஆவன செய்யப்படும்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: இப்படி செய்தித்தாள்களில் பரபரப்பாகச் செய்திகளைத் தெரிவிப்பதால்தான் குழப்பங்கள் நேரிடுகின்றன. ஆகவே செய்தித்தாள்களுக்கு நல்ல அறிவுரையை இந்த அரசாங்கம் வழங்குமா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: செய்தித்தாள்கள் செய்திகளைப் போடுவதற்காகத்தான் இருக்கின்றன. செய்திகளைப் போடுகிறவர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதுதான் இதனுடைய அர்த்தம்.

ஓவிய ஆசிரியர்கள் சங்கத்தின் கோரிக்கைகள்.

*211 வினா.—**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் & செல்வி ஆ. லீலாவதி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) ஓவியத்தில் பட்டயதாரர் தேர்ச்சி பெற்ற ஓவிய ஆசிரியர்களுக்குப் பட்டதாரி ஆசிரியர் ஊதியமும், "குரூப் சர்டிபிகேட்" பெற்ற ஓவிய ஆசிரியர்களுக்கு தேர்வுநிலை, இடைநிலை ஆசிரியர் ஊதியம் வழங்குமாறு தமிழ்நாடு ஓவிய ஆசிரியர் சங்கத்திடமிருந்து 1980 பிப்ரவரி-மார்ச் மாதங்களில் அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட முடிவு என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இல்லை,

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு ஓவிய ஆசிரியர்கள் சங்கத்திடமிருந்து இப்படிப்பட்ட கோரிக்கைகள் பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அனுப்பப்பட்டுள்ளன. ஆனால் வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். அப்படி இல்லாவிட்டாலும், நான் இப்போது சொல்லுகிறேன். ஓவிய ஆசிரியர்களில் மூன்று விதமான கல்வித் தகுதிகளைப் பெற்றவர்கள் இருக்கிறார்கள். ஒரு சிலர் சான்றிதழ் பெற்றிருக்கிறார்கள், வேறு சிலர் குரூப் சான்றிதழ் பெற்றிருக்கிறார்கள். மற்றும் சிலர் பட்டயம் பெற்றிருக்கிறார்கள். உடற் கல்வி ஆசிரியர்களில் சான்றிதழ் பெற்றுள்ள ஆசிரியர்களுக்கு ஒரு ஊதியமும், டிப்ளமா, பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஒரு ஊதியமும் நிர்ணயிக்கப்பட்டு இப்போது வழங்கப்படுகிறது. அதைப்போலவே ஓவிய ஆசிரியர்களில் பட்டயம் பெற்றவர்களுக்கு, பட்டதாரி ஆசிரியர்களின் ஊதிய விகிதத்தைத் தர அரசு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஓவிய ஆசிரியர்கள் சங்கத்தினர் பல்வேறு கோரிக்கைகளை வைத்துள்ளனர். ஆனால் இந்த வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள கோரிக்கை பெறப்படவில்லை. எல்லாப் பள்ளிகளிலும் ஒவ்வொரு ஓவிய ஆசிரியர் இருக்க வேண்டுமென்ற கோரிக்கையை அவர்கள் வைத்திருக்கிறார்கள். இதற்கான கருத்துருவை அரசுக்கு அனுப்புமாறு சார்நிலை அலுவலகத்திடமிருந்து கேட்டு விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன என்று பள்ளிக் கல்வி இயக்குநர் அறிவித்துள்ளார். கல்வித் தகுதியைப் பெறுவதால், அத் தகுதியுடையவர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் அவர்களுக்கும் அளிப்பது என்பது இயலாத காரியம். வேண்டுமானால் பதவி உயர்வு அளிப்பதுபற்றி ஆலோசிக்கலாம்.

திரு. பா. ரா. தாமஸ்: அண்டையிலுள்ள ஆந்திர மாநிலத்தில் இவ்வாறு ஆர்ட்ஸ் மாஸ்டர்கள் குரூப் சர்டிபிகேட் பெற்றிருந்தால், பட்டதாரி முதல் நிலை மொழி ஆசிரியருக்கான ஊதியம் வழங்கி வருகிறார்கள். அந்த அடிப்படையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்ய முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அந்த அடிப்படையிலேதான் பதவி உயர்வு அளிப்பதுபற்றி அரசு ஆலோசிக்கலாம் என்று தெரிவித்திருக்கிறேன். அதிகக் கல்வித் தகுதியைப் பெற்றதாலே ஒருவர் சம்பள உயர்வு பெற

முடியாது. பதவி உயர்வு பெற்று பதவி உயருமானால் சம்பளம் பெறலாம். ஆகவே அவர்களுக்குப் பதவி உயர்வு அளிப்பதுபற்றி ஆலோசிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: அவர்களுக்குப் பதவி உயர்வு தரலாம் என்ற கல்வியமைச்சர் அவர்களின் கருத்தை வரவேற்கிறேன். இப்படி பதவி உயர்வு தர வேண்டுமென்றால், அதற்கான பதவிகள் அங்கே இருக்க வேண்டும். ஒன்பதாவது, பத்தாவது வகுப்புகளில் ஓவிய ஆசிரியர்கள் ஓவியம் நடத்துகிறார்கள், அதிலே சர்டிபிகேட் பெற்றவர்கள் நடத்துகிறார்கள், டிப்ளமா பெற்றவர்கள் நடத்துகிறார்கள். ஆகவே டிப்ளமா பெற்றவர்கள் அதிக ஊதியத்தைப் பெறக்கூடிய அளவிற்கு பதவிகளை உருவாக்கினால்தான், அவர்களுக்குப் பதவி உயர்வு வாய்ப்புகள் கொடுக்கப்படும். இந்த இரண்டு கருத்தையும் இணைத்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதைத்தான் நான் துவக்கத்திலேயே கூறியிருக்கிறேன். எல்லாப் பள்ளிகளிலும் ஓவிய ஆசிரியர்கள் வேண்டும் என்பது சங்கத்தினுடைய கோரிக்கை. அதை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டிருக்கிறோம். பள்ளிக் கல்வி இயக்குநர் விவரத்தைச் சேகரித்து அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

இரண்டாம் நிலை தமிழாசிரியர்களுக்குப் பதவி உயர்வு.

* 212 வினா—திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கல்வித்துறையின் 17—1—1974 நாளிட்ட அரசு ஆணை நிலை எண் 63-ன்படி பத்து ஆண்டுகள் பணிக் காலத்தை முடித்த இரண்டாம் நிலை தமிழாசிரியர்கள், பொதுக் கல்வித் தகுதி இல்லாமல் இருந்தாலும், முதல்நிலை தமிழாசிரியராக பதவி உயர்த்தப்படலாமென்ற விதி, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள எல்லா பள்ளிகளிலும் அமல் நடத்தப்படவில்லை என்று அரசுக்கு முறையீடு ஏதும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், எத்தனை ஆசிரியர்களுக்கு இந்த அரசாணையின் விதிப்படி 15—6—1980 நாளன்றுள்ளபடி முதல்நிலைப் பதவிகள் வழங்கப்படவில்லை ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இல்லை,

(இ) இக்கேள்விக்கு இடமில்லை

சாரண ஆசிரியர்களுக்கு ஆண்டுப்படி.

* 213 வினா—செல்வி ஆ. லிலாவதி மற்றும் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) சாரண ஆசிரியர்களுக்கு 'ஆண்டுப்படி' தரப்படாதது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: இந்தக் கோரிக்கை குறித்து இந்தக் கேள்வியின் மூலமாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதாகக் கருதி, அதை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

பள்ளிக்கூடங்களிலே என்.சி.சி. ஆசிரியர்கள் இருக்கிறார்கள், என்.எஸ்.எஸ். ஆசிரியர்கள் இருக்கிறார்கள். என்.சி.சி., என்.எஸ்.எஸ். ஆகியவற்றில் ஈடுபட்டிருக்கிற ஆசிரியர்களுக்குத் தனியாக படி தரப்படுகிறது. சாரண இயக்கத்தினுடைய முக்கியத்துவம் இன்று நம்மாலே உணரப்படுகிறது. மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் அகில இந்திய ரீதியில் நம்முடைய மாநிலத்தில் தலைவராக இருக்கிறார். சாரணர் இயக்கத்தில் தமிழ்நாடு முன்னணியில் இருக்கிறது என்று கருதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குக் கூட மிகச் சிறந்த வெள்ளி யானை பரிசு கொடுக்கப்பட்டது. இவ்வாறு தமிழ்நாடு பெருமையைத் தட்டிக்கொண்டிருக்கிறது. இப்படி பல்வேறு முறைகளிலே உதவி செய்கின்ற தமிழ்நாடு அரசு, சாரண இயக்கத்திலே ஈடுபட்டிருக்கிற ஆசிரியர்களுக்கு ஆண்டுப் படி கொடுப்பதுபற்றி பரிவோடு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: சாரண, சாரணியர் இயக்கத்தினுடைய தமிழ்நாட்டு அவைக்குத் தலைவராக இருக்கிறேன். அகில இந்தியத் தலைவராக இல்லை.

மாண்மிகு மேலவைத் தலைவர்: அப்படி ஒரு காலம் வரட்டுமே என்று அவர் நினைக்கிறார்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: சாரணர் இயக்கத்தில் தமிழ் நாடு இந்தியாவிலேயே முன்னணியில் இருக்கிறது. மொத்தம் ஐந்து இலட்சம் பேர் இருக்கின்ற சாரணர் இயக்கத்தில் ஒன்றேகால் இலட்சம் பேர் தமிழ் நாட்டில் இருக்கிறார்கள். இன்னும் மேற்கொண்டு நல்லபடியாக நடத்த வேண்டும், ஐந்து இலட்சம் பேரை சாரணர் இயக்கத்திலே சேர்க்க வேண்டும் என்பதுதான் நம்முடைய நோக்கமாகும். மாணவர்களுக்கு அதிக அறிவை போதிப்பதோடு, ஒழுக்கத்தை வளர்ப்பது, புத்திக் கூர்மையை ஏற்படுத்துவது, எந்தப் பிரச்சினையையும் சந்தித்து அதைச் சமாளிக்கும் திறனை வளர்ப்பது, பிரச்சினைகளைத் தீர்ப்பதில் வெற்றிகரமாக மீளுவது என்ற உயரிய ஆற்றல்களை வளர்க்க இந்த இயக்கம் பயன்படும் என்று கருதுகிறேன். அந்த அடிப்படையிலே உருவாக்குவதற்கு அரசு திட்டமிட்டிருக்கிறது அந்த அடிப்படையிலே இந்த சாரண, சாரணிய ஆசிரியர்களுக்கு நூறு ரூபாய் ஆண்டுப் படி அளிப்பதற்கான திட்டத்தை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

(முற்பகல் 9.40)

திரு. பா. ரா. தாமஸ்: சாரண ஆசிரியர்களுக்கு ஆண்டுக்கு 40 ரூபாய் என்று உடைக்காக படி வழங்கப்படுகிறது. இந்தக் காலத்திலே 40 ரூபாய் என்பது எவ்வளவு குறைவாக இருக்கிறது ? அது தையல் கூலி கொடுக்கக் கூட காணாதுபோல் இருக்கின்றது. இந்த உடைக்குரிய பணத்தை உடனடியாகக் கொடுத்தால், அந்த இயக்கம் வளர வாய்ப்பாக இருக்கும். இந்த கேவெட்ஸ், சாரணர்களிடமிருந்து 50 காசுகள் என்று வாங்குகின்றார்கள். இந்த ஆசிரியர்களுக்கு சீருடைக்கு வேண்டிய பணத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அந்தப் பிரச்சினையை எல்லாம் வைத்துத்தான் இந்த ஆண்டுப் படி கொடுக்கப்படுகிறது. இந்தப் பிரச்சினையைப்பற்றி ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். இதை ஆண்டுக்கு 100 ரூபாய் என்று அதிகரித்து அளிக்கின்ற ஒரு திட்டத்தை நாம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். அது பரிசீலனை செய்து முடிகிறபோது, ஒரு நல்ல உதவியை இந்த சாரண ஆசிரியர்களுக்குத் தர முடியும் என்று கருதுகிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: உடைக்காக அவர்களுக்குப் பணம் கொடுக்கின்றதைவிட அவர்களுக்கு உடையையே தைத்துத் தருகின்ற முறையை அரசு மேற்கொள்ளுமா? அந்த சாரணர் இயக்கம் வளர, அடிக்கடி மூகா

பிடுவது போன்ற நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு முன்னதைக் காட்டிலும் அவர்கள் அதில் அதிக ஊக்கம் செலுத்துகின்ற அளவுக்குச் செய்யும் எண்ணம் அரசுக்கு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: நாம் தைத்துத் தருவது அல்லது அவர்களே தைத்துக்கொள்வது என்பதில் வேறுபாடு இல்லை. அவர்களே தைத்துக்கொள்வதிலே எந்தப் பிரச்சினையும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒருவேளை தையல் கூலி அதிகமாக இருக்கிறது என்பதற்காகச் சொல்கிறார் போலிருக்கிறது. மற்றபடி அவர்களுக்கு ஊக்கம் தருகின்ற வகையிலே அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

உதவி பெறும் பள்ளி ஆசிரியர்களின் மனைவியருக்கு குடும்ப ஓய்வூதியம்.

* 214 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1—4—1964-க்கு முன் பணியிலிருந்து ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களின் மனைவியருக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்க வகை செய்யும் நிதி (ஊதியக் குழு) துறையின் 26—5—1979 நாளிட்ட அரசாணை எண் 748-ன்படி, 1—4—1964-க்கு முன் ஓய்வு பெற்ற உதவிபெறும் பள்ளி ஆசிரியர்களின மனைவியர் அச்சலுகையைப் பெற வழியில்லை என்பதை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், அச்சலுகை அவர்களுக்குப் பொருந்துமாறு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (இ) குறிப்பிட்டுள்ள நிதித் துறையின் அரசாணையில் வழங்கப்பட்ட குடும்ப ஓய்வு ஊதிய சலுகைகள் 1—4—1964-க்கு முன் ஓய்வு பெற்ற உதவி பெறும் பள்ளி ஆசிரியர்களின் மனைவியருக்கும் பொருந்துமாறு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

திரு. பா. ரா. தாமஸ்: இந்த ஆசிரியர்களுடைய குடும்பத்திற்கு குடும்ப ஓய்வு ஊதியம் வழங்குவதில் அக்கவுண்டண்ட்-ஜெனரல் அவர்கள் ஒரு மாத ஊதியத்தைக் கட்டினால்தான் 1964-லிருந்து 1970 வரை ஓய்வு பெற்ற குடும்பங்களைச் சார்ந்தவர்களுக்கு ஓய்வு ஊதியம் வழங்க முடியும் என்று சொல்கின்றார்கள். அந்தக் காலத்திலே ஓய்வு பெற்ற தலைமையாசிரியர்கள் கூட, ரூ. 500, 250 என்றுதான் ஊதியம் வாங்கியிருக்கிறார்கள். இன்றைக்குத்தான் குறைந்தபட்ச ஊதியம் என்று சொல்லி அந்த ஓய்வூதியத்தை உயர்த்தியிருக்கிறார்கள். 1964 முதல் 1969 வரை ஓய்வு பெற்ற ஆசிரியர்களுடைய குடும்பங்

களுக்கு அக்கவுண்ட்டன்ட்ஜெனரல் சொல்கின்றபடி, ஒரு மாத ஊதியத்தைக் கட்ட வேண்டுமென்பதைத் தவிர்க்க வேண்டும் என்று சொல்ல வேண்டும். முன்பு ஓய்வு பெற்றவர்கள் குடும்பங்களுக்கு இந்த நிபந்தனை இருக்கிறது. அதற்கு அரசு அக்கவுண்டண்ட்-ஜெனரல் அவர்களுக்கு ஒரு விளக்கம் கொடுத்து, அந்த ஒரு மாத கால ஊதியத்தைத் தவிர்த்து, அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கச் சொல்லுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அது குறித்து அரசு பரிசிலிக்கும்.

Vacation Salary to Apprentice Teachers

*215 Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether it is a fact that Teachers appointed under the Apprentice Teachers Scheme, were not paid their vacation salaries during their period of service as Apprentice Teachers; and

(b) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) வேலை வாய்ப்பின்றி இருந்தவர்களுக்கு முறையான ஆசிரியர் பதவிகள் தருவதற்கு முன் ஓரளவு ஊதியம் தர வகை செய்வதற்குத்தான் தொழில் பழகு ஆசிரியர் திட்டம் 1970-73 ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்டதே தவிர, அவர்களை முறையான ஆசிரியர்களாகக் கருதும் நோக்கம் அத்திட்டத்தில் கிடையாது. எனவே தொழில் பழகு ஆசிரியர்களாக பணி செய்தவர்களுக்கு 1971, 1972 மற்றும் 1973 ஆகிய ஆண்டுகளில் கோடை விடுமுறைச் சம்பளம் தரப்படவில்லை. இம்முடிவில் இந்த காலக் கட்டத்தில் மாற்றம் எதுவும் தேவை என கருதப்படவில்லை.

திரு. பா. ரா. தாமஸ்: தொடர்ந்து ஒரு கல்வி ஆண்டிலே குறைந்தது 8 மாதம் பணியாற்றி இருந்தால், அந்த அலுவலர்களுக்கு ஒரு விடுமுறை ஊதியம் பெற உரிமை கிடைக்கிறது. அந்த அடிப்படையிலே மீண்டும் அந்தப் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்குக் குறைந்தது ஒரு மாதத்திற்கு 125 ரூபாய் வருகிறது. 2 மாதத்திற்கு ரூபாய் 250 என்று ஆகிறது. அந்த அளவிலே கொடுக்கப்படுகின்ற சமயத்திலே இவர்கள் அப்பரண்டிசாகப் பணியாற்றிய காலத்தைச் சேர்த்துக்கொண்டு தேர்வு நிலை வழங்கக்கூடிய குறிப்பு அரசிடம் இருக்கிறதா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: வேலை பழகுகின்ற இந்தக் காலத்தை இதற்கு எடுத்துக்கொள்வது என்பது அரசினுடைய கருத்து அல்ல.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: இந்தப் பள்ளியிலே, எந்தத் துறையிலே பணியாற்றினாலும் அந்த ஆசிரியர்களுடைய பணிக்காலத்தைச் சேர்த்து தேர்வு நிலை வழங்க வேண்டும் என்று திட்டம் இருந்தது. பிரேக் ஆஃப் சர்வீஸ் இருந்தாலும் அது வழங்கப்பட்டு வந்தது. இந்தத் தொழில் ஆசிரியர்கள்கூட முழுத் தகுதி பெற்றவர்கள். சாதாரணமாக விடுமுறை நாட்களிலேகூட பணியாற்றிக்கொண்டிருக்கின்றார்கள். அதற்குப் பின்னால் அவர்கள் பணியில் நிரந்தரம் ஆக்கப்படும்போது, அப்படிப் பணியாற்றிய காலத்தையும் சேர்த்துக் கொண்டு தேர்வு நிலை வழங்கப்பட வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைப் பற்றிப் பரிசிலிக்க வேண்டும் பல ஆசிரியர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதால், மீண்டும் அமைச்சர் அவர்கள் அவருடைய கொள்கையை மாற்றிக்கொள்ளும் வகையிலே பரிசிலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அவர்கள் ஆசிரியர் பணியாற்றுவதற்கு வேலை பழகினார் என்றுதான் இங்கே எடுத்துக்கொள்ள வேண்டும். பி.எ., பி.டி., படித்தவர்களுக்கு ரூ. 175 என்றும், செகண்டரி கிரேடுக்கு ரூ. 125 என்றும், ஹையர் கிரேடுக்கு ரூ. 100 என்றும் ஒரு குறிப்பிட்ட தொகையை அவர்கள் தந்திருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையிலே நாம் ஒரு முடிவு எடுத்தால், இப்போது அரசு சொல்கின்றதற்கு மாறாக இருக்குமானால், இது வேறு பல துறைகளில் இருக்கின்றவர்களுக்கு பல முடிவுகளை எடுப்பதற்காக முன் மாதிரியாக அமைந்துவிடும். ஆகவே அரசு இந்தப் பிரச்சினையில் இப்போது எடுத்திருக்கின்ற முடிவுதான் சிறந்தது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினா எண் 216 ஒத்தி வைக்கப்படுகிறது.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

2. அறிவிப்பு.

அலுவல் ஆய்வுக் குழுவிற்கு உறுப்பினர்கள் நியமனம் குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மேலவை விதி 166-ன்படி 1982-83 ஆம் ஆண்டுக்கான அலுவல் ஆய்வுக் குழுவிற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்களை நான் நியமித்துள்ளேன் :—

1. மாண்புமிகு மேலவைத் தலைவர் (தலைவர்)
2. திரு. ம. சங்கரலிங்கம்
3. திரு. த. சந்தோஷம்
4. திரு. க. இராமமூர்த்தி
5. திரு. ஜெ. எம். மியாகான்
6. திரு. எ. ஆர். தாமோதரன்
7. திரு. ப. மாணிக்கம்
8. திரு. ஆ. நல்லசிவன்
9. திரு. வி. வி. வி. ஆனந்தம்.

மாண்புமிகு முதல் அமைச்சர், மாண்புமிகு நிதி அமைச்சர், மாண்புமிகு மேலவை முன்னவர், மாண்புமிகு துணைத் தலைவர், மேலவைக் கொறடா ஆகியோர் நிரந்தர அழைப்பாளர்களாக இக்குழுவில் அங்கம் வகிப்பர்.

3. கவன ஈர்ப்பு.

திருச்சி மாவட்டத்தில் சிறு சேமிப்பு வசூலின்போது அரசுத் துறைகள் பலவந்தம், வலுக்கட்டாய முறைகளைப் பின்பற்றி வணிகர்களிடமும் வியாபாரிகளிடமும் வசூல் செய்தது குறித்து.

THIRU A. R. DAMODARAN: Sir, I wish to call the attention of the Hon. the Minister for Finance to a matter of urgent public importance, namely, the compulsion and coercive attitude adopted by the various Government Departments in Tiruchirappalli District in the collection of Small Savings from merchants and traders, the resultant hardship caused to them and the need to stop such coercive methods.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

@ 484 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது

THIRU A. R. DAMODARAN: Sir, in the last paragraph of the Hon. Minister's statement, it has been stated that no compulsion and coercive attitude is being adopted and that all officers have been instructed by the Collector to ensure that investments are made voluntarily without any compulsion. May I invite the attention of the Hon. Minister to a letter addressed by the Tahsildar of a Taluk in Tiruchirappalli district which reads as follows:—

"அவசர உத்தரவு, மாவட்ட ஆட்சித் தலைவரின் உத்தரவுப்படி, சிறு சேமிப்புத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு பெட்ரோல் பங்க்கு உரிமையாளரும் தலா ரூபாய் இரண்டாயிரம் இரண்டு வருடத் தவணையாக சம்பந்தப்பட்ட தபால் அலுவலகத்தில் செலுத்தி மேற்படி பதிவுப் புத்தகத்தை தாசில்தார் அவர்களிடம் காண்பிக்க வேண்டும். இதில் எந்தவிதமான காலதாமதமும் இருக்கக்கூடாது" என்று.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: தமிழில் அருமையாகப் படிக்கிறார்களே. அப்படியே தொடர்ந்து தமிழில் பேசினால் எப்படி இருக்கும்.

Thiru A. R. DAMODARAN: Sir, this was issued by the Tahsildar of a taluk in Tiruchirappalli district. May I ask the Hon. Minister. . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இப்போது என்னமோ மாதிரி இருக்கிறது, தமிழிலே படித்துச் சொல்வதிலேயிருந்து மாறியதைப் பார்க்கும் போது.

THIRU A. R. DAMODARAN: Sir, I do not blame the Tahsildar. It is the district authority which should hold the responsibility. The Small Savings movement is a voluntary movement. I would request the Hon. Minister to take cognizance of such letters and see that the pressure that is being exercised is prevented. Secondly, members of the Departments like the Commercial Taxes Department and the Food and Civil Supplies Department which are inspecting the merchants and traders should be prevented from doing this work.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் இங்கே கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மூலமாகக் கூறியிருக்கின்ற கருத்து

சிறு சேமிப்பு பற்றியது. சிறு சேமிப்பு குறித்து அகில இந்திய அளவிலே ஓரளவுக்குத் திரட்ட வேண்டுமென்று மத்திய அரசு ஒரு இலக்கு விதிக்கிறது. மாநிலங்கள் ஒவ்வொன்றும் இவ்வளவு திரட்ட வேண்டும் என்று இலக்கு விதிக்கிறது. மாநிலமும் ஒவ்வொரு மாவட்டமும் இவ்வளவு திரட்ட வேண்டும் என்றும் இலக்கு விதிக்கிறது.

(முற்பகல் 9-50)

அந்த அடிப்படையிலே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பொறுப்பு ஏற்று நடத்துகிறார்கள். அவர்களுக்கு அரசு சார்பாகத் தரப்பட்டிருக்கிற அறிவுரைகள் எல்லாம், பொதுமக்களையும், மற்றவர்களையும் கட்டாயப்படுத்தாமல், கூடுமானவரையில் அவர்களுடைய விருப்பத்தின் அடிப்படையிலே, சிறு சேமிப்பைத் திரட்டுவதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டுமென்றும், இதில் கூடுதலான வட்டி இருக்கிறது என்று பிரச்சாரங்கள் செய்து, அதன் மூலம் பெற வேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. பொதுத் தொண்டில் ஈடுபட்டவர்கள், ஆசிரியர்கள், பள்ளிகள் மற்றவர்கள் ஓரளவிற்குத் திரட்டிக் கொண்டிருக்கிறார்கள். மாவட்டங்களுக்கு என்று இலக்கு வைத்துவிடுவதால், அதிகாரிகள் மூலமாகத் திரட்டும் பொறுப்பை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். விற்பனை வரி இலாக்காவைச் சேர்ந்தவர்களை இதில் ஈடுபடுத்த வேண்டாமென்று பொதுவாகச் சொல்லியிருக்கிறார்கள். தாசில்தார், மற்றவர்கள் செய்யும்போது, மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் கேட்கும்போது, யாரிடத்திலிருந்தும் அப்படிப்பட்ட புகார்கள் வரவில்லை என்று எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் படித்துக் காட்டியதிலிருந்து எழுத்து மூலமாகக் கட்டாயப் படுத்தி, கட்டாயம் வசூலித்தே தீர வேண்டுமென்று வரி மாதிரி, ஒரு பங்காகச் செலுத்த வேண்டுமென்று கேட்டிருப்பது முறையல்ல. அதுபற்றி தக்க நடவடிக்கை எடுக்கப்படும். விருப்பத்தின் அடிப்படையிலே கேட்டுக் கொள்ளலாம். திருப்பித் திருப்பிக் கேட்டு, அவர்களைச் செய்யச் சொல்லலாம். இப்படி அதிகார தோரணையில் இருக்கக்கூடாதென்பதை ஒப்புக்கொள்கிறேன். இது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவரவர்களுக்கும், மற்றவர்களுக்கும் அறிவுரை நல்கி, பொதுத் தொண்டில் ஈடுபட்டவர்களின் ஒத்துழைப்பின் பேரில், சிறு சேமிப்புத் திட்ட இலக்கை வெற்றிகரமாக அடைய ஆவன செய்வோமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒத்தி வைக்கப்படுகிறது.

[1982 மார்ச் 27

4. அரசின் தீர்மானம்.

தமிழ் நாட்டில் தொழிலாளர்கள் நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு குறித்து.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள தமிழ் நாட்டில் தொழிலாளர்கள் நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு@ பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள தமிழ் நாட்டில் தொழிலாளர்கள் நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

மேலவை உறுப்பினர்களுக்கு ஒரு வேண்டுகோள். இது தொழிலாளர் நலத் துறை சம்பந்தமான கொள்கைக் குறிப்பின் மீதான விவாதம். அதனால் அரசியல் கட்சிகளுக்கு, குறிப்பாக தொழிற் சங்கங்களை வைத்து நடத்துகிற அரசியல் கட்சி உறுப்பினர்களுக்கு இதில் பேசுவதற்கு அதிக நேரம் ஒதுக்க வேண்டுமென்று நேற்றைய முன்தினம் கேட்டார்கள். எங்களுக்கு அதிக வாய்ப்பு கொடுங்கள் என்று கேட்டார்கள். எனவே மற்ற உறுப்பினர்கள் சுருக்கமாகப் பேசினால், அவர்களுக்கு அதிக நேரம் தருவதோடு மட்டுமல்லாமல், குறித்த நேரத்தில் விவாதத்தை முடிக்க உதவி செய்ய முடியுமென்று கூறிக்கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, 1982-83 ஆம் ஆண்டு தொழிலாளர் நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின் அடிப்படையில், தலைவரவர்கள் குறிப்பிட்ட ஆணைக்கிணங்க, மிகச் சுருக்கமாக என்னுடைய கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இதிலே எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு பேசுவதற்கு நேரம் இல்லாததால், குறிப்பிட்ட ஒரு பிரிவினர் பற்றி மாண்புமிகு அமைச்சரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். கட்டிடத் தொழிலாளர்கள் இன்றையதினம் நம் நாட்டிலே சங்கம் அமைத்து, அவர்களுடைய கோரிக்கைகளையெல்லாம் நம்முடைய அரசுக்கு அனுப்பி, எங்களை

@ 485-578 ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1982 மார்ச் 27] [திரு க. மீனாட்சிசுந்தரம்]

அழைத்துப் பேசுங்கள், எங்களுடைய குறைகளைக் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள், தெரிந்துகொண்டு உங்களால் இயன்ற அளவிற்குச் செய்யுங்கள் என்று வேண்டுகோள் விடுத்தும், அரசு இதுநாள்வரை அவர்களை அழைத்துப் பேசாததால்—கோரிக்கைகளை நிறைவேற்றுவது ஒருபுறம் இருந்தாலும்—அழைத்துப் பேசுவதையே செய்யாத காரணத்தால், அவர்கள் மறியல் போராட்டம் செய்து, சிறைக்குச் சென்று, அதற்குப் பின்னாலே மேலும் போராட்டத்தைத் தொடர்ந்துகொண்டிருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியும். அவர்கள் வறுமைக்கோட்டுக்குக் கீழே தாங்கள் இருப்பதாகக் கருதுகிறார்கள். அதை ஓரளவிற்கு உயர்த்த, அரசு முயற்சி செய்ய வேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: வறுமைக் கோடு என்றால் என்ன, அதற்குக் கீழே என்றால் என்ன என்பதை விளக்கினால், நன்றியுடையவனாக இருப்பேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தலைவரவர்களே, அமைச்சரவர்களே அதை விளக்கியிருக்கிறார்கள். நேரம் இல்லாததால் நான் அதைப்பற்றிச் சொல்லவில்லை. அந்த வகையில் அவர்களை அழைத்துப் பேச வேண்டுமென்று கேட்கிறார்கள். இந்தச் சமுதாயத்திலே இருக்கக்கூடிய எந்தப் பிரிவினரானாலும், அந்தப் பிரிவினர் தங்களுடைய கோரிக்கைகளை எடுத்துச் சொல்லக்கூட வாய்ப்பு அளிக்கக்கூடாதா இந்த அரசு? கோரிக்கைகளை நிறைவேற்றுங்கள், இல்லாவிட்டால் போங்கள். அதைப்பற்றிப் பரவாயில்லை. அவர்களை அழைத்துப் பேசக்கூடாதென்று கௌரவம் பார்த்துக்கொண்டு, அந்த மக்கள் பாதிப்புக்கு இலக்காகும் சூழ்நிலைக்கு விடுகிறீர்களே, இது நியாயம்தானா என்று கேட்க விரும்புகிறேன். அவர்கள், கைது செய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்படவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். சிமெண்ட் பற்றாக்குறை காரணமாக வேலை கிடைக்கவில்லை. ஏறத்தாழ 30 கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அவர்களை அழைத்துப் பேசி, 36 கோரிக்கைகளை நிறைவேற்ற முடியாது, பின்னால் பார்க்கிறேன் என்று சொல்லலாம். அவர்களை அழைத்துப் பேசாததால், 29—3—82 அன்று அரசியல் சட்டத்தை எரித்து, கோட்டைமுன் கொடும்பாவி எரிப்பதாகத் தீர்மானித்து, விளம்பரம் செய்திருக்கிறார்கள். அரசு அணுகுமுறை சரியாக இல்லாததால், நாட்டிலே போராட்டங்களை அதிகப்படுத்தும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லி, அவர்களை அழைத்து வைத்துப் பேசுங்கள் என்ற வேண்டுகோளை தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் என்ன பெரிய வேண்டுகோளை வைத்திருக்கிறார்கள். தமிழ்நாடு முழுவதும் குறைந்தபட்ச ஊதியம்

[திரு க. மீனாட்சிசுந்தரம்] [1982 மார்ச் 27

வேண்டுமென்று கேட்கிறார்கள். இங்கேயே சொல்லியிருக்கிறீர்கள். குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயம் செய்வது பற்றி 26 ஆம் பக்கத்தில் நான்காம் பாராவில், 'கட்டிடங்கள் கட்டுதல், கற்களை உடைத்தல், கல்களைத் தூள் செய்தல், சாலை போடுதல், சாலை பராமரிப்பு' ஆகிய பணிகளில் வேலை செய்பவர்களுக்குக் குறைந்த அளவு ஊதிய விகிதங்களை நிர்ணயிக்க ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன என்று சொல்லியிருக்கிறீர்கள். குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயம் செய்வதைப் பொறுத்தவரையில், அவர்கள் 25 ரூபாய் வேண்டுமென்று கேட்கிறார்கள். முடியவில்லை என்று சொல்லி, அவர்களை அழைத்துப் பேசலாம். அழைத்துப் பேசாமல் எப்படிச் செய்வது? பணிக் காலத்தில் இறந்துவிட்டால், மற்றவர்களுக்குத் தருவதுபோல் 10,000 ரூபாய் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். அதிலே பல சட்டச் சிக்கல்கள் உண்டு. பணிப் பாதுகாப்பிற்கு சட்டம் தேவை என்று கேட்கிறார்கள். அமைச்சரவர்கள் ஒரு குறிப்பிலே சொன்னதாக நினைவு இருக்கிறது. அதற்காகத் தனிச் சட்டம் வருகிறதென்று சொன்னதாக நினைவு. அப்படி வர இருக்கிறது என்று கூறி அவர்களை அழைத்துப் பேசினால் என்ன? நிரந்தர வேலை வேண்டுமென்று கேட்கிறார்கள். கூட்டுறவு முறையில், தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து, காண்ட்ராக்ட் எடுத்து பணியாற்ற வாய்ப்பு தாருங்கள் என்று கேட்கிறார்கள். சிறு தொழில் நடத்த கடன் வசதி கேட்கிறார்கள். வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து, அதன்மூலம் வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தாருங்கள் என்று கேட்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் கட்டிட அபிவிருத்தித் திட்டங்களை ரத்து செய்யாமல் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்கிறார்கள். அங்கே ரத்து செய்யப் போவதாகக் கேள்விப்பட்டு, அப்படிச் செய்தால், தங்களுக்குப் பாதிப்பு வருமென்று அஞ்சி, அதைக் கேட்கிறார்கள். தஞ்சை மாவட்டத்திற்கு அதிக சிமெண்ட் ஒதுக்கி, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அவர்கள் கட்டிடம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள், பல அடுக்கு மாடிக் கட்டிடத்தில் வேலை செய்கிறார்கள். அப்போது கீழே விழுந்து அல்லது வேறு தவறுகளால் அவர்கள் உடல் ஊனமுற்றால், அரசு உதவித் தொகை தர வேண்டுமென்று நியாயமாகக் கேட்கிறார்கள். வீடு கட்டிக்கொள்ள மானியம் தாருங்கள் என்று கேட்கிறார்கள். வீடுகள், மாளிகைகள், அழகிய பங்களாக்கள் கட்டும் தொழிலாளர்களுக்கு வீடில்லை. உணவு உற்பத்தி செய்பவர்களுக்கு உணவில்லை என்று சொல்வதுபோல, வீடு கட்டுபவர்களுக்கு வீடில்லை என்ற நிலை இருக்கிறது. எனவே வட்டியில்லாத கடன் அல்லது மானியம் தாருங்கள் என்று கேட்கிறார்கள். அவர்களை ஏமாற்றும் பல ஏஜன்சிகள் இருக்கின்றன, அவற்றை ரத்து செய்யுங்கள் என்று சொல்லுகிறார்கள். அரபு போன்ற வெளி நாடு

1982 மார்ச் 27] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

களுக்கு கட்டிடத் தொழிலாளர்களை வேலைக்கு அழைக்கிறார்கள். அப்படி வெளி நாடுகளுக்கு அனுப்புவதைக்கூட, வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்ய அனுமதித்து, அந்த அலுவலகம் மூலமாக அனுப்ப ஏற்பாடு செய்யுங்கள் என்று கேட்கிறார்கள். நியாயமான இவ்வளவு கோரிக்கைகளையும் பரிசிலித்து, ஆவன செய்ய வேண்டும். 29 ஆம் தேதி போராட்டம் நடைபெற இருக்கிறது. அதைத் தவிர்க்கும் வகையில் அவர்களை அழைத்துப் பேசி, அரசால் இயன்றதைச் செய்து, போராட்டத்தைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சைக்கிள் ரிக்ஷா தொழிலைப் பொறுத்தவரையில், இந்த நாட்டிலே ஏறத்தாழ 15,000 தொழிலாளர்கள் அந்தத் தொழிலிலே ஈடுபட்டு, குடும்பம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். 26 ஆம் பக்கத்தில் அத்தியாயம் 4-லே பிரிவு 3 (1)-ல் 'டாக்சிகள், ஆட்டோ ரிக்ஷாக்கள் ஓட்டுவதில் வேலை' என்று இருக்கிறது. அதில் சைக்கிள் ரிக்ஷா சேர்க்கப்படவில்லை. அதில் சைக்கிள் ரிக்ஷாவையும் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சைக்கிள் ரிக்ஷாக்களில் மோட்டார் பொருத்த வேண்டுமென்று ஆணையை அரசு இட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். போக்குவரத்து காவல்துறை வாடகை வண்டிப் பிரிவு ஆய்வாளர், சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு மோட்டார் பொருத்தினால்தான், இந்த ஆண்டு பதிவு செய்யப்படுமென்று வாடகை வண்டிப் பிரிவு அலுவலகத்தில் தகவல் பலகையில் அறிவிப்பு செய்திருக்கிறார்.

(முற்பகல் 10-00)

திடீரென்று இப்படி அறிவித்திருக்கிறார்கள். சைக்கிள் ரிக்ஷா வைத்திருப்பவர்கள் பணக்காரர்கள் அல்ல. 3 ஆயிரம் பேர் இன்றைக்கு உரிமையாளர்களாக இருக்கிறார்கள். 6 ஆயிரம் வண்டிகள் இருக்கின்றன. மாலையில் ஒருவர், காலையில் ஒருவர் என்று 12 ஆயிரம் பேர் ரிக்ஷா ஓட்டுகிறார்கள். தினசரி அவர்கள் 4 ரூபாய் கூலி பெறுகிறார்கள். 15 ஆயிரம் பேர்களுடைய குடும்பங்கள் இன்றைக்கு இதை நம்பி வாழ்ந்துகொண்டிருக்கின்றன. இதன் விலை 2 ஆயிரம் ரூபாய். ஆனால் 3 ஆயிரம் ரூபாய்க்கான மோட்டாரைப் பொருத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பணத்திற்கு அவர்கள் எங்கே போவார்கள்? 2 ஆயிரம் ரூபாய் கொடுத்து ரிக்ஷா வாங்கவே கஷ்டப்படக்கூடியவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். வேறு வேலை இல்லாத காரணத்தால், இளைஞர்களும், வயதானவர்களும் இந்தப் பணியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். இப்படி 3 ஆயிரம் ரூபாய்க்கு மோட்டார் வாங்கி பொருத்த வேண்டுமென்று சொல்வதனால் அவர்களுக்குக் கஷ்டமாக இருக்கிறது

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1982 மார்ச் 27

(மாற்றுத் தலைவர் திரு. பி. ரா. லெட்சுமிகாந்தன் தலைமை)

இந்த நாட்டிலே முந்தைய தி.மு.க. அரசு கை ரிக்ஷாக்களை ஒழிக்க வேண்டுமென்று சொல்லி அதற்குரிய மாற்று ஏற்பாட்டைச் செய்து ஒழித்தார்கள். ஆகவே இந்த அரசைப் பொறுத்தவரையிலும், உள்ளபடியே அவர்களுக்கு உதவ வேண்டுமென்ற நல்லெண்ணம் இருந்தால், இப்படி உத்தரவு போடுவதை விட உதவி செய்திருக்க வேண்டும். இந்த மோட்டார் வாங்க தேவையான பணத்தை உதவித் தொகையாக, மானியமாகக் கொடுத்திருக்க வேண்டும். அப்படி கொடுக்க முடியாதென்றால், வட்டியில்லாத கடனாவது வழங்கியிருக்க வேண்டும். இப்படி இரண்டுமே செய்யாமல் உத்தரவு போட்டு மோட்டார் பொருத்த வேண்டுமென்று சொல்வது பொருத்தமாக இல்லை. அப்படிப் பொருத்தினால்தான், ஓட்டுவதற்குரிய உரிமை தரப்படும் என்று இந்த ஏழை யெளியவர்களைப் பார்த்துச் சொல்வது நியாயம்தானா ? இந்த உத்தரவு 15 ஆயிரம் குடும்பங்களைப் பாதிக்கக்கூடிய ஒன்றாக இருக்கிறது. அவர்களுக்கு அரசு மானியம் அல்லது வட்டியில்லா கடன் தர வேண்டும். அந்த வகையில் இந்தப் பிரச்சினைக்கு முடிவு கண்டு அவர்களைத் திருப்திப்படுத்த வேண்டும். சைக்கிள் ரிக்ஷா தொழிலாளர்களுடைய கோரிக்கையை இந்த அரசு பரிவுடன் கவனிக்க வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன்.

* திரு. காடுவெட்டி கண்ணப்பன்: மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் தொழிலாளர்கள் நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு மீது பேசுகின்ற வாய்ப்பை எனக்குக் கொடுத்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வளர்ந்து வருகிற இந்த சமுதாயத்திலே, வளர்ந்து வருகிற நிலைமைகளுக்கு ஏற்ப சில அணுகுமுறைகளை அரசு மாற்ற வேண்டும். போராட்டம் தான் முடிந்த முடிவு என்ற எண்ணத்தை மாற்றி வாதாடியும் பெறலாம் என்கிற முடிவுக்கு இன்றைக்கு தமிழக தொழிலாளர்கள் வந்திருக்கிறார்கள். அந்த வகையில் போராட்ட உணர்வு குறைக்கப்பட்டுள்ளது. வாதாடியும் பெறலாம், தொழிலாளர்களுடைய நலனைப் பாதுகாக்கலாம் என்கிற ஒரு முடிவுக்கு கழக அரசு ஒரு முன்னோடியாகத் திகழ்கிறது. அப்படி நான் சொன்னால், அது மிகையாகாது. இதுவரை போராட்டம்தான் எல்லா நிலைமைகளுக்கும் தீர்வு காணக்கூடிய ஒன்று என்று இருந்தது. அந்த நிலைமையை மாற்றி போராட்டங்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டுள்ளது. அந்த உணர்வு மாற்றப்பட்டிருக்கிறது. வாதாடி அரசிடமிருந்து பெற வேண்டுமென்ற உணர்வு தமிழ்நாட்டில் இன்றைக்கு இருக்கிறது. அதற்குக் காரணம் நம்முடைய கழக அரசின் அணுகுமுறை, செம்மையான செயல்கள் என்று சொன்னால், அது மிகையாகாது.

1982 மார்ச் 27] [திரு. காடுவெட்டி கண்ணப்பன்]

இதுவரை எங்காவது தொழிலாளர் தகராறு என்றால், அதன் காரணமாக பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் தொழில் நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டுமென்றால், அரசின் அனுமதி பெற்றுத்தான் செல்ல வேண்டிய நிலைமை இருந்து வந்தது. இந்தியத் துணைக் கண்டம் பூராவும் உள்ள நிலைமை இதுதான். ஆனால் இன்றைக்கு உழைப்பவர்கள் தான் உயர்ந்தவர்கள் என்கிற உன்னதமான லட்சியத்தை, தத்துவத்தைத் தாங்கி ஆட்சி புரிந்து கொண்டிருக்கிறது இந்த அரசு. அந்த வகையில் தொழிலாளர்களுக்கு முழு சுதந்திரம், முழு உரிமை, முழு பாதுகாப்பு தர வேண்டுமென்ற அடிப்படையில் தொழில் தகராறு காரணமாக தகராறைத் தீர்க்க தொழிலாளர்கள் கோர்ட்டுக்குப் போக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால், தாமாக, சுதந்திரமாகப் போகலாம் என்கிற ஒரு வான்முறையை இந்தியத் துணைக் கண்டத்திலேயே எங்கும் இல்லாத அளவுக்கு தமிழ் நாட்டிலே முன்னோடித் திட்டமாக இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது. ஏனோ அதற்கு மத்திய அரசு அனுமதி தராத ஒரு சூழ்நிலை இருக்கிறது. இன்று போராட்ட உணர்வை விட்டுவிட்டு வாதாடக்கூடிய உணர்வு வந்திருக்கிறது. இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகத்திலேதான் உழைப்பவர்களுடைய உரிமை நிலை நாட்டப்பட்டிருக்கிறது. அவர்களுடைய நலன் பாதுகாக்கப்படும் என்கிற கொள்கைக்கு, லட்சியத்திற்கு மத்திய அரசு விரைவாக அனுமதி தரவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் மத்திய அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

எதற்கு எடுத்தாலும் இன்றைக்குப் போராட்டம் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் இங்கு குறிப்பிட்டார். நான் இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினருக்குப் பணிவோடு ஒன்றைச் சொல்கிறேன். போராட்டம், போராட்டம் என்று சொல்லி போராட்டத்தின் மூலமாக தன்னை வளர்த்துக் கொள்கிற 'திரும்பிப்பார்' கதாநாயகர்கள் இன்றைக்குத் தமிழகத்தில் இருக்கிற சூழ்நிலையில் இப்படிப்பட்ட போராட்ட உணர்வுகளை வேண்டாம் என்று சொல்லி, பேசி, வாதாடித் தீர்த்துக்கொள்கிற நிலைமையில் தொழிலாளர்களுடைய நலனுக்குப் பாதுகாப்பு அளிக்க இந்த அரசு ஒரு நல்ல முடிவினை எடுத்திருக்கிறது. அதே நேரத்தில் தொழிலாளர்களுடைய உணர்வுகள் பாதிக்காத வகையில், நாட்டின் உற்பத்தி எந்த விதத்திலும் பாதிக்காத அளவு மிகவும் கடமை உணர்வோடு இந்த அரசு செயல்படுகிறது. அது மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டத்திற்கே தமிழ் நாடு ஒரு வழிகாட்டியாக இருக்கிறது. 7, 8 ஆண்டுக் காலம் வேலை செய்தும், அவர்கள் நிரந்தரமாக்கப்படாமல் கொத்தடிமைகளாக இருக்கிற நிலையை இந்த அரசு மாற்றியிருக்கிறது. 480 நாட்கள் வேலை செய்திருப்பவர்கள் நிரந்தரமாக்கப்படுவார்கள் என்கிற திட்டத்தைக் கொண்டுவந்திருப்பது உள்ளபடியே ஒரு

முன்னோடித் திட்டமாக இருக்கிறது. 480 நாட்கள் தொழிற்சாலைகளில் அல்லது வேறு இடங்களில் பணியாற்றினால், அவர்களும் நிரந்தரமாக்கப்பட வேண்டுமென்ற கொள்கையை கழக அரசு தான் கொண்டு வந்திருக்கிறது என்று சொன்னால், அது மிகையாகாது. மேழி ஓட்டுகிறவர்கள், ஏற்றம் இறைக்கிறவர்கள், கலப்பை பிடிக்கிறவர்கள், ஏர் உழுகிறவர்கள், காடு வெட்டு கிறவர்கள் இப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் புரட்சிகரமான திட்டங்களைக் கொண்டு வந்திருப்பது இந்தியாவிலேயே புரட்சித் தலைவர் அவர்கள்தான், புனிதமான தலைவர் அவர்கள்தான் என்று சொன்னால், அது மிகையாகாது. இது இந்தியாவுக்கே எடுத்துக்காட்டாக அமைகிறது. பல ஆண்டுகளாக பல்லாயிரக்கணக்கான மக்கள் மூலதனம் இல்லாமல், உழைப்பையே மூலதன மாகக் கொண்டு, இந்தியத் துணைக் கண்டம் பூராவும் உள்ளவர்கள் வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருக்கக்கூடிய நிலை இருந்தது. இன்றைக்கு நெசவாளர்களுடைய வாழ்க்கைக்கும் உத்தரவாதம் தரப்பட்டிருக்கிறது. வாழ்க்கையில் ஒரு பிடிப்பு இல்லாமல் இருந்தவர்களுக்கெல்லாம் கூட்டுறவு இயக்கத்திலே பங்கு அளித்திருக்கிறார்கள். அவர்கள் வாழ்க்கையை வளமாக ஆக்க இந்த அரசு உத்தரவாதம் தந்திருக்கிறது என்றால், அது மிகை யாகாது. அதுபோல் விவசாயத் தொழிலாளர்கள் காலையிலிருந்து மாலை வரை கழனியிலே வேலை செய்து, 2 ரூபாய், 3 ரூபாய் சம்பளம் பெற்றுக் கொண்டு, வாழ்நாள் பூராவும் கொத்தடிமைகளாக வாழ்ந்துகொண்டிருந் தார்கள். அவர்களுடைய வாழ்க்கையைச் செம்மைப்படுத்த முடியாத, நிரந்தரமாக வாழ்க்கைக்குத் தேவையான வசதியை பெற முடியாத நிலை இருந்தது. அவர்களுக்கு வேலைவாய்ப்பற்ற, பாதுகாப்பற்ற நிலை இருந்தது. என்னைப் பொறுத்தவரையில், பெருமையோடு ஒன்றைச் சொல் வேன். 4, 5 ஆண்டுகளுக்கு முன்பு நான் ஒரு விவசாயக் கூலிக்காரன். என்னுடைய தொழிலில் உள்ள கஷ்டத்தை நான் அறிந்தவன். என்னைப் பொறுத்தவரையில், கரும்பு மேட்டிலே, வயல் வெளியிலே, வரப்பு ஓரத்திலே வேலை செய்துகொண்டிருந்தவன் என்று சொல்வதிலே பெருமைப்படுகிறேன். இந்தியத் துணைக் கண்டத்திலேயே விவசாயிகளுடைய கஷ்டத்தை நன்றாக உணர்ந்தது நம்முடைய அரசு. இன்றைக்கு அவர்களுடைய நன்மைக்காக ஒரு முன்னோடித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. இன்றைக்கு நாட்டிலே போராட்டத்தைத் தூண்டிவிட்டுக் கொண்டிருக்கிறார்கள். வருகிற எப்ரல் 12 ஆம் தேதி அனைவரையும் ஒருமுகப்படுத்திக் கொண்டு விவசாயி களைப் பின்னணியாக வைத்துக்கொண்டு போராட்டத்தை நடத்த இருப்ப தாக அறிவிப்புகள் வந்து கொண்டிருக்கின்றன. நான் சொல்கிறேன், விவசாயி என்றால், அது கூலித் தொழிலாளியைத்தான் குறிக்கும். அவன்

தான் வரப்பு வெட்டி, மேழி ஓட்டி, ஏர் பிடித்து, பயிரிட்டு உழைப்பவன். அவனுக்கு இருக்கிற உணர்வுகள் எல்லாம் அவனுக்கு நியாயமான ஊதியம் கிடைக்கவில்லை, அவனுடைய தொழில் நிரந்தரம் ஆக்கப்படவில்லை என்பவை. முன்பு ஆட்சியில் இருந்தவர்கள் 1972-73 ஆம் ஆண்டில் என்று கருதுகிறேன்—இந்த நாட்டிலே உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்கிற மசோதாவைக் கொண்டு வந்து நிறைவேற்றி அதை டெல்லிக்கு அனுப்பி னார்கள். ஆனால் என்ன காரணத்தாலோ அனுப்பிய கையோடு அதைத் திரும்ப வாபஸ் வாங்கி விட்டார்கள். இதை இந்த நாடு மறந்திருக்காது. உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்று சொல்லிவிட்டு, அதே சமயத்தில் அதற்கு எதிராகச் செயல்பட்டுக் கொண்டிருந்தவர்கள் தான் இன்றைக்கும் நாட்டிலே போராட்டங்களைத் தூண்டி விட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(முற்பகல் 10-10)

அப்படிப்பட்ட நிலைமைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து, விவசாயக் கூலித் தொழிலாளர்கள், ஓய்வு பெற்ற பிறகு, ஓரளவுக்காவது வசதியாக வாழ்வதற்கு அவர்களுக்கு ஓய்வுகால ஊதியத்தை இந்த அரசு அறிவித்திருக்கிறது.

கடந்த வாரத்தில் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களோடு ஒரு பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. தமிழகத்தில் ஏறத்தாழ 21 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. அந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஆலைத் தொழிலாளர்கள் தாங்கள் கேட்கிற ஊதியம் கிடைக்குமா என்று ஏங்கி, அதற்காகப் போராடித்தான் பெற வேண்டும் என்று எல்லாத் தொழிற் சங்கத் தலைவர்களும் ஓரணியாகச் சேர்ந்து மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களோடு பேச்சுவார்த்தை தொடங்கினார்கள். மத்திய அரசு மூன்றாவது "வேஜ் போர்டை" அமைத்தாலும், அமைக்காவிட்டாலும், தமிழகத்தைப் பொறுத்த வரையில், இங்கிருக்கும் சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுக்காக மட்டும் ஒரு வசதியான சூழ்நிலையை நான் உருவாக்கித் தருகிறேன் என்று மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தொழிற்சங்கத் தலைவர்களை அழைத்துப் பேச்சு வார்த்தைகளைத் தொடங்கினார். தொழிற்சங்கத் தலைவர்கள் அனைவரும் போராடித்தான் ஊதிய உயர்வைப் பெற முடியும் என்று எண்ணிக் கொண்டிருந்தபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்தத் தொழிற் சங்கத் தலைவர்களையெல்லாம் பார்த்து, போராடித்தான் ஊதிய உயர்வைப் பெற வேண்டுமென்ற தத்துவத்தை மாற்றி,

[திரு. காடுவெட்டி கண்ணப்பன்] [1982 மார்ச் 27

இந்த நாட்டுக்குப் புதிய தத்துவத்தை உருவாக்கித் தாருங்கள் என்று கேட்டார். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கருத்தை அந்தத் தொழிற்சங்கத் தலைவர்கள் ஏற்க மறுத்து, அதை ஏதோ ஏனோ தானோ என்று தள்ளிவிட்டார்கள். இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு மாதத்திற்கு முன்பே சொன்னார். "இடைக்கால நிவாரணமாக நான் ஒரு தொகையை அறிவிக்கிறேன். அதையாவது சர்க்கரையாலைத் தொழிலாளர்கள் சார்பில் நீங்கள் ஏற்றுக்கொள்ளுங்கள்' என்று தொழிற் சங்கத் தலைவர்களிடம் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் வேண்டினார்கள். எங்கள் கட்சியைச் சார்ந்த தொழிற் சங்கத் தலைவர்களும், இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கத்தின் தொழிற் சங்கத்தைச் சார்ந்த தலைவர்களும் இதற்கு ஒப்புதல் தெரிவித்தும், மற்றவர்கள் அதிலும் குறிப்பாகப் போராட்ட உணர்வைப் படைத்தவர்கள், "இல்லை, இல்லை, இதை நாங்கள் ஏற்க முடியாது, நாங்கள் இதைப் பேசித் தீர்த்துக்கொள்கிறோம்' என்று சொல்லிவிட்டார்கள். அதில் எங்களுக்குக் கருத்து வேறுபாடில்லை. ஆனால் அவர்கள் போராடிப் பெறுவோம் என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அறிவிப்பு வருகிறது. அதாவது சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களின் ஊதியத்தை உயர்த்தி புரட்சித் தலைவர் அரசு ஓர் அறிவிப்பை வெளியிட்டது.

இந்தியாவிலேயே எந்த ஒரு மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு, சர்க்கரை ஆலைத் தொழிலாளி அதிகமான ஊதியத்தைப் பெறும் வகையில் அந்த அறிவிப்பு செய்யப்பட்டது. 1—1—1982 அன்று மற்ற மாநிலங்களில் சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட ஊதியத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தமிழகத்தில் உள்ள சர்க்கரை ஆலைத் தொழிலாளிக்கு இன்றைய தினம் அதிகமான ஊதியம் கிடைக்கிறது. கருநாடக மாநிலத்தில் உள்ள தொழிலாளி ரூ. 565.10 காசு பெறுகிறான். ஆந்திரத்தில் உள்ள சர்க்கரை ஆலைத் தொழிலாளி ரூ. 539.10 காசு பெறுகிறான். அதே நேரத்தில் உத்தரப் பிரதேசத்தைச் சார்ந்த சர்க்கரை ஆலைத் தொழிலாளி ரூ. 548.95 காசு பெறுகிறான். மகாராட்டிரத்தில் உள்ள சர்க்கரை ஆலைத் தொழிலாளியோ ரூ. 294.97 காசு பெறுகிறான். இந்தியாவில் மராட்டியம் என்று வழங்கப்படும் பம்பாய் மாநிலத்திலுள்ள சர்க்கரை ஆலைத் தொழிலாளிதான் அதிகமான ஊதியத்தைப் பெற்று வந்தான். ஆனால் அந்த நிலையை மாற்றும் வகையில் இன்றையதினம் தமிழ் நாட்டில் உள்ள சர்க்கரை ஆலைத் தொழிலாளிக்கு ரூ. 602.10 காசு ஊதியமாக வழங்கப்படுகிறது. இதன் காரணமாகத் தொழிலாளர் தலைவர்களையெல்லாம் பேச்சுவார்த்தைக்கு அழைத்து இருபக்கமும் சுமுகமான சூழ்நிலையை உருவாக்கி,

1982 மார்ச் 27] [திரு. காடுவெட்டி கண்ணப்பன்]

போராட்ட உணர்வைத் தவிர்த்து, வாதாடிப் பெறுகிற சூழ்நிலையை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் உண்டாக்கியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, சென்னைக்கு வருகிற பல்வேறு தொழிற் சங்கத் தலைவர்கள் வசதியாகத் தங்குவதற்கு இன்றையதினம் ஜீவா இல்லம் ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. பல்வேறு பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதற்காக பல்வேறு தொழிற் சங்கத் தலைவர்கள் அடிக்கடி சென்னை நகருக்கு வர வேண்டியிருக்கிறது. தமிழ் நாட்டின் பல்வேறு பகுதியிலிருந்தும், மற்றும் வட பகுதியிலிருந்தும் வருகிற தொழிற்சங்கத் தலைவர்கள் வசதியாகத் தங்குவதற்கு என்று இங்கே ஒரு இல்லம் தேவைப்பட்டது. மற்ற மாநிலங்களில் இத்தகைய வசதி இருக்கிறதோ இல்லையோ இன்றையதினம் சென்னை நகரில் தொழிற் சங்கத் தலைவர்கள் வந்து வசதியாகத் தங்குவதற்காக என்று "ஜீவா இல்லம்" ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. பல்வேறு பிரச்சினைகளைப் பேசித் தீர்த்துக்கொள்வதற்காக சென்னைக்கு வருகிற தொழிற் சங்கத் தலைவர்கள் ஜீவா இல்லத்தில் எல்லா வசதிகளோடும் வந்து தங்குகிற சூழ்நிலை இன்றைக்கு உருவாக்கப்பட்டிருக்கிறது. வெளியில் லாட்ஜுகளில் தங்கினால், நாள் ஒன்றுக்கு ரூ. 20 அல்லது ரூ. 30 வாடகையாகக் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆனால் ஜீவா இல்லத்தில் தங்குகிற தொழிற் சங்கத் தலைவர்கள் நாளொன்றுக்கு ரூ. 5 மட்டும் வாடகையாகக் கொடுத்தால் போதும். அங்கே வந்து தங்குகிற சில தொழிற் சங்கத் தலைவர்களை அழைத்து மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் "அங்கே இருக்கும் வசதி வாய்ப்பு போதுமா?" என்று கேட்டார்கள். இதுவரை எங்கேயும் இல்லாத அளவுக்கு வசதிகள் தமிழ் நாட்டில் செய்து தரப்பட்டிருக்கின்றன என்று சொல்லி அவர்கள் தங்கள் திருப்தியைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த அளவுக்குத் தொழிலாளர்களுக்காகப் பரிந்து பல நன்மைகளைச் செய்கிற அரசாக இது இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக்கிறது. தொழிலாளர்களுடைய உணர்வை மதிக்கிற அரசாக இது இயங்கிக் கொண்டிருக்கிறது.

அதைப்போலவே போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கும் நெசவாளர் தொழிலாளர்களுக்கும் குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயம் செய்து அவர்கள் வாழ்க்கையில் ஒளிவிளக்கை ஏற்றியிருக்கிறது இந்த அரசு. போராட்டத்தின் காரணமாக வேலை இழந்தவர்களுக்கு அவர்களுடைய வாழ்க்கையில் ஒரு பாதுகாப்பைத் தேடித் தர வேண்டும் என்றும் பல நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால்,

பி அண்டு சி மில்லில் கதவடைப்பு ஏற்பட்டதன் காரணமாக, பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலையில்லாமல் வேதனைப்பட்டார்கள். அந்த மில் திறக்கப்படுமா என்று அவர்கள் ஏங்கினார்கள். அந்தத் தொழிற்சாலை மத்திய அரசால் மேற்கொள்ளப்பட்டு விரைவில் திறக்கப்பட வேண்டும் என்று மாநில அரசு வேண்டுகோள் விடுத்தது. ஆனால் அந்தத் தொழிற்சாலையை மத்திய அரசு எடுத்துக்கொள்கிற சூழ்நிலை இல்லை என்று தெரிவிக்கப்பட்டதும், மாநில அரசு தன் பொறுப்பிலேயே அந்த மில்லை எடுத்துக்கொள்ள முன்வந்ததோடு, அதில் பணியாற்றும் 13,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு நபர் ஒன்றுக்கு ரூ. 200 வீதம் ரூ. 26 லட்சத்தை கருணை நிதியாக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்கள். அந்த அளவுக்கு உழைப்பவர்களே உயர்ந்தவர்கள் என்று அவர்களுக்கு இந்த அரசு உதவி செய்து வருகிறது. உழைப்பவர்கள்தான் உயர்ந்தவர்கள் என்ற சூழ்நிலையை தமிழ் நாட்டில் இந்த அரசு உருவாக்கியிருக்கிறது. அதுமட்டுமல்ல. உழைப்பவர்கள் மட்டும்தான் எதிர்காலத்தில் வாழ முடியும் என்ற கொள்கையையும் எங்கள் புரட்சித் தலைவர் நாட்டு மக்களுக்கு இன்றைய தினம் உணர்த்தி வருகிறார்.

அடுத்து, தமிழகத்தில் தேசிய மயமாக்கப்பட்ட போக்குவரத்துத் தொழிலாளர்கள் நல்ல ஊதியம் பெறுகிறார்கள் என்றாலும்கூட, தனியார் துறையில் உள்ள போக்குவரத்துத் தொழிலாளர்கள் இன்னும் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தனியார் பஸ் முதலாளிகளிடம் பணியாற்றும் போக்குவரத்துத் தொழிலாளர்கள் இன்னும் அடிமைகளைப்போல், கொத்தடிமைகளைப்போல் நடத்தப்படுகிறார்கள். நிர்ணயிக்கப்பட்ட குறைந்த பட்ச ஊதியம்கூட அவர்களுக்கு அளிக்கப்படுவதில்லை என்ற சூழ்நிலையில் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியத்தை அறிவித்தது மட்டும் போதாது, அரசு போக்குவரத்துத் துறை ஊழியர்களுக்குக் கொடுக்கப்படும் அதே அளவு ஊதியம் தனியார் துறையில் பணியாற்றும் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் அந்தத் தொழிலாளர்களும் இதே வேலையைத்தான் செய்கிறார்கள். இருவர் செய்யும் வேலையும் ஒன்றாக இருக்கும்போது, அவர்களுக்குக் கொடுக்கப்படும் ஊதியத்தில் மட்டும் வேறுபாடு இருப்பது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும். கொத்தடிமைகளைப்போல் நடத்தப்படும் நிலை உடனடியாக மாற்றப்பட வேண்டும். தனியார் பஸ் முதலாளிகள்

வேண்டுமென்றால், அவர்களுக்கு வேலை கொடுப்பதும், வேண்டாம் என்று நினைத்தால் வேலை இல்லை என்று சொல்லுவதுமான நிலை இருப்பதை மாற்றியாக வேண்டும். அவர்கள் இஷ்டம்போல் தொழிலாளர்களை வேலையை விட்டு நீக்குகிற நிலையை மாற்ற வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

போக்குவரத்துத் துறையை நாங்கள் தேசியமயமாக்கிவிட்டோம் என்று சொல்லிக் கொள்பவர்கள் பதவிக்கு வரும்போது, தமிழகத்தில் சுமார் 300 பஸ் முதலாளிகள்தான் இருந்தார்கள். ஆனால் அவர்கள் ஆட்சியிலிருந்து போகும்போது, அந்த பஸ் முதலாளிகளின் எண்ணிக்கை 1000-க்கும் மேற்பட்டு விட்டது. இதிலிருந்து அவர்கள் தேசியமயமாக்கும் கொள்கையை எந்த அளவுக்குப் பின்பற்றினார்கள் என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும். எனவேதான் தேசியமயமாக்கப்படாத போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கும் அரசு போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுவதைப் போன்ற ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: இப்போது தேசியமயமாக்கப்படும் கொள்கை முழுமையாகக் கடைப்பிடிக்கப்படும் நிலையில் தமிழ் நாட்டில் எத்தனை பஸ் முதலாளிகள் இருக்கிறார்கள் என்ற எண்ணிக்கையையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தந்தால், புரிந்துகொள்வதற்கு வசதியாக இருக்கும். அதாவது அந்த எண்ணிக்கை வளர்ந்திருக்கிறதா அல்லது குறைந்திருக்கிறதா என்று தெரிந்துகொள்ள உதவியாக இருக்கும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இன்றைக்காவது 1 அல்லது 1½ மணிக்கு சாப்பிடப் போக வேண்டும் என்று விரும்புகிறோம்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: தேசியமயமாக்கப்படும் கொள்கை சரியாக செயல்படுத்தப்படவில்லை என்பதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. காடுவெட்டி கண்ணப்பன் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

திரு. க. இராமமூர்த்தி: அதனால்தான் நான் கேட்கிறேன். நீங்கள் பதவிக்கு வந்த பிறகு எப்படி செயல்படுத்துகிறீர்கள் என்று புரிந்துகொள்வதற்கு இந்தத் தகவலைக் கொடுக்க வேண்டும் என்று கேட்கிறேன்.

திரு. காடுவெட்டி கண்ணப்பன்: அவர்கள் காலத்தில் 300 ஆக இருந்தவர்களின் எண்ணிக்கை 1300-க்கும் மேலே போய்விட்டது என்றால், தேசியமயமாக்கும் கொள்கை எந்த முறையோடு போயிருக்கிறது என்பதால்

[திரு. காடுவெட்டி கண்ணப்பன்] [1982 மார்ச் 27

அர்த்தம். மின்சார வாரியத்தில் மிகுந்த நட்டம் ஏற்படுகிற காரணத்தால், அதை யாரேனும் தனியார் லாபகரமாக எடுத்து நடத்த முன்வந்தால், அதற்கான அனுமதி அளிக்கத் தயார் என்று நாங்கள் சொன்னபோது, "தேசியமயமாக்கும் கொள்கை, அண்ணா அவர்களின் கொள்கை எங்கேயோ அடகு வைக்கப்பட்டுவிட்டது" என்று குற்றஞ்சாட்டினார்கள். எனவேதான் அவர்கள் ஆட்சியில் இருந்தபோது தேசியமயமாக்கும் கொள்கை எந்த அளவுக்குப் பின்பற்றப்பட்டது என்பதற்காக நான் இதைச் சொல்கிறேன்.

(முற்பகல் 10-20)

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்றையதினம் நம்முடைய கார்ப்பரேஷன் பஸ்ஸில் வேலை செய்கிறவர்கள், மற்ற மாநிலங்களில் இருப்பவர்களைவிட அதிகமாக, சிறப்பான ஊதியத்தைப் பெறுகிறார்கள். அவர்கள் வேலைத் திறனும், தனியார் பேருந்துகளில் வேலை செய்பவர்களின் வேலைத் திறனும் ஒன்றுதான். ஆகவே தனியார் துறையில் வேலை செய்கின்றவர்களுக்கு, நாம் நிர்ணயித்திருக்கின்ற அளவிற்கு ஊதியம் கிடைக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும். அந்த ஊதியத்தைக் கொடுக்க நம்முடைய அரசு முனைப்பாக இருக்க வேண்டும். மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் அதில் ஈடுபடுவார்கள் என்று கருதுகிறேன். நிச்சயமாகச் செய்வார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது, செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் நாட்டில் வீட்டு வசதி வாரிய ஊழியர்களுக்கு 1978-79 ஆம் ஆண்டிலிருந்து போனஸ் வழங்க வேண்டுமென்று சொல்லி, அதிலே நம்முடைய முதல்வர் அவர்களும் தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும் முனைப்பாக இருந்து செயலாற்றுகிற உணர்வை நம்மாலே பார்க்க முடிகிறது.

நேற்று முன் தினம் என்று கருதுகிறேன். சங்கம் வைத்துக்கொள்ள முடியாதவர்கள், சங்கத்தை உருவாக்கிக்கொள்ள வாய்ப்பு இல்லாதவர்கள், உடல் உழைப்புத் தொழிலாளர்கள், ஆகியவர்களைப் பாதுகாக்க ஒரு சட்டத்தை அறிமுகம் செய்திருக்கிறார்கள். உப்பளத்திலே வேலை செய்கிறவர்கள், மூட்டை தூக்குபவர்கள் ஆகிய உடல் உழைப்பால் அனைத்துக் காரியங்களையும் ஆற்றுகிறவர்கள் தங்களுக்கென்று சங்கத்தை வைத்துக்கொள்ள முடியாதவர்கள். சங்கத்தையே பார்க்காதவர்கள் ஆகியவர்களுக்கெல்லாம் ஒரு பாதுகாப்புச் சட்டத்தை, குறைந்த ஊதியத்தை நிர்ணயம் செய்யும் சட்டத்தை மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் அறிமு-

1982 மார்ச் 27] [திரு. ஆ. நல்லசிவன்]

கிறார்கள். தமிழ் நாட்டின் உயிர்நாடியான தொழில்களே இந்தப் பஞ்சாலையும், என்ஜினியரிங் தொழிலும்தான். இதிலே உள்ள ஒரு இலட்சத்து 30 ஆயிரம் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று கணக்குச் சொல்லுகிறது.

1980 ஆம் ஆண்டு மொத்த வேலை நாட்கள் இழப்பு 35 இலட்சம்தான். ஆனால் 1981 ஆம் ஆண்டிலே 41¼ இலட்சம் என்று அரசிலேயே கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். 1980-ஐவிட 1981 ஆம் ஆண்டில் 6¼ இலட்சம் வேலை நாட்கள் இழப்பு அதிகமாக ஏற்பட்டிருக்கிறது. அப்படி இருக்கும்போது, எப்படி அந்தப் பகுதியிலே தொழில் அமைதி, தொழில் உறவு நல்ல முறையில் இருக்கிறது என்று எழுதியிருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. "Statistics about the disputes settled amicably and reduction in loss of mandays" 41,26,000 நாட்கள் என்று கடைசிப் பக்கத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆறேகால் இலட்சம் நாட்கள் இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்றால், அதில் reduction in loss of mandays. எவ்வளவு என்று பார்த்தால், 1980 ஆம் ஆண்டில் 293 நாட்கள், 1981-ல் 288 நாட்கள்தான். ஐந்து நாட்கள் குறைவாகவே இருக்கின்றன. இப்படிப்பட்ட நிலையில் உற்பத்தி எவ்வளவு பாதிக்கப்பட்டிருக்கும்? ஸ்டிரைக், லாக்-அவுட் அந்த வருஷத்தில் அதிகமாக இருந்தது என்றால், இண்டஸ்ட்ரியல் ரிலேஷன்ஸ் சரியாக இருந்தது என்று எப்படி அர்த்தமாகும்? ஆறேகால் இலட்சம் வேலை நாட்கள் இழப்பு என்று குறிப்பிட்டிருக்கும்போது, reduction in loss of mandays என்று சொல்லியிருப்பதைப் பார்க்கும்போது, அதை மறுப்பதாக இருக்கிறது. அந்த வருஷத்திலே பஞ்சாலை, என்ஜினியரிங் போன்ற தொழில்களில் பே ரிவிஷன் கோரிக்கை வரவில்லை. அப்படி வராத நேரத்தில், முக்கியமான கோரிக்கைகள் முன்பே செட்டில் ஆகியிருக்கும் நேரத்தில் 1981 ஆம் ஆண்டில் ஆறேகால் இலட்சம் மேன்டேஸ் லாசாகியிருக்கும்போது, பேச்சுவார்த்தையில் உண்மையிலேயே ஆர்வம் காட்டவில்லை என்பதை அது காட்டுகிறது. 1980 ஆம் ஆண்டைவிட 1981 ஆம் ஆண்டில் அதிகமாக தொழிலாளர்கள் ஸ்டிரைக் பண்ண வேண்டிய அவசியம் என்னவென்பதைக் காட்டவில்லை. பேச்சுவார்த்தை மூலமாக முடிக்கலாம் என்பதற்கு அரசு காட்டியிருக்கிற புள்ளிவிவரங்களே துணையாக இல்லை என்பதை முதலில் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், அரசினுடைய 'ஆட்டிடியூட்' எப்படி இருக்கிறதென்றால், ஆர்கனைஸ்ட் லேபருக்கு எதிராக அன்-ஆர்கனைஸ்ட் லேபரைத் தூண்டிவிடும் போக்கு இருக்கிறது.

[திரு. ஆ. நல்லசிவன்] [1982 மார்ச் 27

(முற்பகல் 10-30)

ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். இந்த ஆர்கனைஸ்ட் லேபர்கள் போனஸை உயர்த்த வேண்டும், சம்பளத்தை உயர்த்த வேண்டும் என்று கேட்டால் அரசுக்கு கிராமத்திலே இருக்கின்றவர்களைக் காரணம் காட்டுவது வழக்கமாக இருக்கிறது. கிராமப்புறத்திலே இருக்கின்ற விவசாயக் கூலிகளுக்கு சம்பளம் குறைவாக இருக்கிறது என்று சொல்கின்றார்கள். கிராமப்புறங்களில் இருப்பவர்களையும் நகர்ப்புறங்களில் இருப்பவர்களையும் ஏன் ஒப்பிட வேண்டும்? அதற்கு நகர்ப்புறங்களில் இருப்பவர்கள் என்ன பண்ண முடியும்? சர்க்கார் ரூ. 7.20 காசு என்று கொடுக்க வேண்டும் என்று நிர்ணயித்திருக்கிறது. அந்த அளவுக்குக் கூலி கொடுத்தால்தான், கிராமப்புறங்களில் இருப்பவர்கள் வாழ்க்கை நடக்கும். கிராமப்புறங்களில் 2½ ரூபாய், 3 ரூபாய் வாங்குகின்றவர்கள் இருக்கின்றார்கள். அந்த கிராமப்புறங்களில் இருக்கும் கூலியாட்கள் ரூ. 7.20 காசு பெறுவதற்கு லேபர் டிப்பார்ட்மெண்டும், ரெவின்யூ டிப்பார்ட்மெண்டும் விரைவான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். நகர்ப்புறத்திலே இருப்பவர்கள் பஞ்சப்படி கொடுங்கள் என்று கேட்கின்றார்கள். இங்கே இருக்கின்ற விலைவாசிப்படி பஞ்சப்படி வேண்டும் என்று கேட்கிறார்கள். அரசாங்க அதிகாரிகள் உங்கள் கையிலே இருக்கின்றார்கள். இந்த ரூ. 7.20 காசு என்று அந்த விவசாயக் கூலிகளுக்குக் கொடுக்கக்கூடாது என்று யாரும் தடையாக இல்லை. ரெவின்யூ டிப்பார்ட்மெண்ட், லேபர் டிப்பார்ட்மெண்ட் மூலம் அதை அமுல்படுத்தினைத்து, கிராமப்புறங்களில் இருக்கின்ற விவசாயக் கூலிகளுக்கு ரூ. 7.20 காசு என்று கொடுத்தால், நகர்ப்புறத் தொழிலாளர்கள் குறுக்கே நிற்கவில்லை. இந்த ஆர்கனைஸ்ட் செக்டார், அன் ஆர்கனைஸ்ட் செக்டார்களைத் தாண்டிக்கொண்டிருக்கின்றார்கள். அரசாங்கம்தான் முக்கிய பொறுப்பு ஏற்க வேண்டும். மினிமம் வேஜஸ் ஆக்டிலே ரூ. 7.20 என்று நிர்ணயித்த பிறகும், இன்றைக்கு அதைக் கொடுக்க வேண்டியதற்கான ஏற்பாடுகளைச் செய்யவில்லை. அந்த நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. அது ரெவின்யூ டிபார்ட்மெண்டிலேதான் இருக்கின்றது. லேபர் டிப்பார்ட்மெண்டிலேதான் இருக்கிறது. இதிலே நகர்ப்புறங்களிலே இருக்கின்ற தொழிலாளர்களைச் சுட்டிக் காட்டவேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அரசாங்கத்தினுடைய பேச்சுகள் இப்படித்தான் இருக்கின்றன. மூன்று சட்டங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள். அதிலே சிக்கல்கள் இருக்கின்றன. மத்திய அரசிலிருந்து அங்கீகாரம் வரவில்லை என்று சொன்னார்கள் தொழிலாளர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டால், தொழில் கோர்ட்டுக்கு நேரடியாகப் போவதற்கு அவர்களுக்கு உரிமை இருக்க வேண்டும் என்ற நிலைமையை

1982 மார்ச் 27] [திரு. ஆ. நல்லசிவன்]

மாநில அரசு சட்டமாக இயற்றியிருக்கிறது. மத்திய அரசு அதிகாரம் தரவில்லை. அதை நான் ஒப்புக்கொள்கிறேன். மாநில அரசு இந்தமாதிரி சட்டத்தைப் போட்ட பிறகு 'டிஸ்மிசல்' உத்தரவு போட்ட கேஸ்களிலே சாதாரணமாக தொழில் இலாகா மூலமாகப் போக வேண்டுமென்று இருந்தால்கூட, சுப்ரீம் கோர்ட்டிலே இது குறித்து ஒரு தீர்ப்பு இருக்கிறது. சுப்ரீம் கோர்ட்டிலே 11 ஏ என்ற ஒரு ஷரத்தைச் சொல்லி மத்திய அரசு இண்டஸ்ட்ரியல் டிஸ்பியூட்ஸ் ஆக்டில் 11-ஏ ஷரத்தைச் சேர்த்திருக்கிறார்கள். 'டிஸ்மிசல் கேஸ்கள் என்று சொல்லும்போது, இதை 'கேபிடல் பனிஷ்மெண்ட்' என்றுதான் சொல்வார்கள். இப்படி 'கேபிடல் பனிஷ்மெண்ட்' என்ற நிலைமை ஏற்படுகின்றபோது, 'எக்ஸ்ட்ராவகண்ட் சர்கம்ஸ்டன்சஸ்' என்கின்ற அளவில், அவர்களுக்கு 'டிஸ்மிசல்' கூடாது என்று அவர்கள் நீதிமன்றத்திலே கேட்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதே நேரத்தில் அவர்கள் அப்படி நீதிமன்றத்தில்தான் கேட்க முடியும். ஆகவே 'டிஸ்மிசல்' என்று பார்க்கின்றபோது, லேபர் இலாகாவில் அந்தத் தவறை கம்பெனியில் உள்ள மேனேஜ்மெண்ட் செய்திருக்கின்றதா அல்லது தொழிலாளர்கள் செய்திருக்கின்றார்களா என்பதை கோர்ட் மூலமாகத்தான் தெரிந்துகொள்ள முடியும். ஆகவே அந்த மாதிரியான கேஸ்களை எல்லாம் கோர்ட்டுக்கு விடுவது நல்லது. இன்றைக்கு இருக்கின்ற சட்டத்தின் பிரகாரம், இந்தக் கேஸ்களையெல்லாம் தொழில் இலாகாமூலம்தான், அவர்கள் பார்த்துத்தான் கோர்ட்டுக்கு விடவேண்டும் என்ற நிலை இருக்கிறது. அப்படி இருந்தாலும், தொழிலாளர்கள் 'டிஸ்மிசல்' பற்றி சுப்ரீம் கோர்ட்டு 'அட்வைஸ்' இருக்கிறது. "அது அவர்களுக்கு 'கேபிடல் பனிஷ்மெண்ட்'டாக இருப்பதால் அப்படிப்பட்ட கேஸ்களை நீங்களே தொழில் நீதிமன்றங்களுக்கு விட்டுவிடுங்கள். அதற்குப் பிறகு ஒர்க்கரே தப்பு செய்திருந்தால்கூட, அதற்கு ஏற்ற தண்டனை, ஒரு அபராதம் மாதிரி போட வேண்டும். அவர்களுக்குக் கொடுக்கின்ற தண்டனை ஒரு ஜுடிஷியல் மைண்டோடு இருக்கக்கூடியதாக இருக்க வேண்டும்". இதுபற்றி லேபர் டிப்பார்ட்மெண்ட் அதிகாரிகளுக்கும் தெரியும். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் அதுபற்றித் தெரியும். அவர் அதைக் கரைத்துக்குடித்தவர்கள். இந்த 'டிஸ்மிசல்' கேஸ்களை எல்லாம் அடமாடிக்காக ஏன் 'ரெபர்' பண்ணக்கூடாது? அதற்கு சட்டம் குறுக்கே நிற்கவில்லையே. ஜனாதிபதி அங்கீகாரம் பெற்றிருக்கிறது. லேபர் ஆபிசருக்கு வராமலேயே கோர்ட்டுக்குப் போகலாம். அடமேடிக்காக 'ரெபர்' பண்ணலாம் என்ற நிலைமை இருக்கிறது. இதை சுப்ரீம் கோர்ட்டு சொல்லியிருக்கிறது. ஏன் இதைச் செய்யாமல் இருக்கிறார்கள்? திராவிட முன்னேற்றக் கழகம் எவ்வளவு செய்தது, இப்போது எவ்வளவு செய்கிறோம் என்று, 'நான் இவ்வளவு, நீ இவ்வளவு செய்திருக்கிறோம்' என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

[திரு. ஆ. நல்லசிவன்] [1982 மார்ச் 27

'டிஸ்மிசல்' செய்வதை 'ரெபர்' பண்ணுவதற்கு சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பு இருக்கிறது. அதை உபயோகப்படுத்தாமல் இருக்கின்றார்கள். தனியார் துறையில் 'டிஸ்மிசல்' என்பது சாதாரணமான ஆயுதமாக இருக்கிறது. ஆனால் அவர்கள் நேரடியாகக் கோர்ட்டுக்குப் போகக்கூடாது என்ற அளவிலே இருக்கிறார்கள். இந்த சர்க்காரிலே அப்படி இருக்கின்றார்கள். சென்ட்ரல் கவர்ன்மென்ட்டிலே எதிர்த்திருக்கிறார்கள். அப்படி இருந்தால், அந்தத் தொழிற் சங்க ஊழியர்களுக்குப் பாதுகாப்பு இருக்கும். அப்படி இருப்பதால், இங்கே அதை முடியாது என்று அதற்குக் கடுமையாக எதிர்ப்பு சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். இந்த நிலைமைகள் இருக்கின்றன. இந்த நேரத்தில் அந்தச் சட்டத்திற்கு மத்திய அரசில் அங்கீகாரம் தரவில்லை என்று சொல்கின்றார்கள். இங்கே அந்தச் சட்டத்தை உருவாக்க முடியாத நிலை இருக்கிறது என்று சொல்கின்றார்கள். அதற்குக் காரணம் காட்டுகிறார்கள். இப்படி சட்டம் இருக்கும்போது, ஆட்டபேடிக்காக ஏன் 'ரெபர்' பண்ண மாட்டார்கள் என்று சொல்கிறேன். "நீங்கள் விரும்பாத தொழிற் சங்கங்கள் வளரக்கூடாது என்பதற்காக இப்படிச் செய்கிறீர்களா?" ஆட்டபேடிக்காக ஏன் சிபாரிசு பண்ணக்கூடாது என்பதை "எக்ஸ்பிளைன்" பண்ணுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு விஷயம். இந்த அரசு போராட்டத்தை எப்படி நீடிக்க வைக்கிறது என்று பார்க்க வேண்டும். பேச்சு வார்த்தையில் விவகாரங்களை முடிக்கலாம் என்று சொல்கின்றார்கள். நண்பர் திரு. கண்ணப்பன் அவர்கள் கூட படித்துச் சொல்கின்றார்கள். அந்த ஸ்ட்ரைக்குகளை நீடிக்க வைத்தே 'லாக் அவுட்' பண்ணுகின்றார்கள். அந்த லைனில்தான் முயற்சிகள் இருக்கின்றன. இன்னொன்று போலீசை உபயோகப்படுத்துவது. இண்டஸ்ட்ரியல் டிஸ்பியூட்டிலே போலீசை உபயோகப்படுத்துகின்ற முறை இருக்கிறது. சில உதாரணங்களைச் சொல்கிறேன். கடலூர் சேஷசாயி மில்லிலே ஸ்டிரைக் நடந்தது. 600 ஒர்க்கர்கள் 160 நாட்கள் ஸ்டிரைக் பண்ணினார்கள். என்ன கோரிக்கைக்காக ஸ்டிரைக் பண்ணினார்கள்? 20 பர்சென்ட்டுக்கு மேலே போனஸ் கேட்டார்கள். சட்டத்திலே 20 பர்சென்ட் போனஸ் என்று இருந்தாலும், தமிழ் நாட்டிலே அதிகமான லாபம் வரக்கூடிய நிறுவனங்களில், தொழிற் சங்கம் முதலாளி இவர்களுக்கு இடையே ஒரு அக்ரிமென்ட் ஏற்பட்டு, அதற்கு மேலேயோ ஒரு 'எக்ஸ் கிரேஷியா பேமெண்ட்' என்ற அளவிலே கொடுக்கலாம். அதிகமாக லாபம் வருகின்ற இடத்திலே அப்படிச் செய்யலாம். போனஸ் என்று போடக்கூடாது. ஆனால் 'எக்ஸ்-கிரேஷியா' என்று போடலாம். அப்படி இந்த மாதிரி பெரிய தொழிற்சாலைகள் நடக்கின்றன.

1982 மார்ச் 27] [திரு. ஆ. நல்லசிவன்]

'நேஷனல் டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன்', மத்திய அரசுக்குச் சொந்தமான 12 ஆலைகள் தமிழ் நாட்டிலே இருக்கின்றன. அவர்கள் அதிகமான போனஸ் தரமாட்டோம் என்று சொன்னார்கள். அவர்கள் கொடுக்க முடியாது என்று சொன்னபோது, அதிலே ஸ்ட்ரைக் வந்தது. அப்போது தமிழ் நாடு கவர்ன்மென்ட் சென்ட்ரல் கவர்ன்மென்டுக்கு, 20 பர்சென்ட்டுக்கு மேலே கொடுக்கலாம் என்று சிபாரிசு பண்ணி, அந்த அக்ரிமென்ட் செட்டில்மென்ட் ஆகியிருக்கிறது. சென்ட்ரல் கவர்ன்மென்ட் அமைப்பிலே, என். டி. சி.க்கு நீங்கள் சிபாரிசு பண்ணலாம். ஆனால் இந்த தனிப்பட்ட முதலாளிக்கு ஏன் சிபாரிசு பண்ணக்கூடாது? அவர்களுக்குப் பீங்கான் தொழிற்சாலை இருக்கின்றது. அதிலே அவருக்கு அதிகமான லாபம் இருக்கிறது. அது மோனோபலியாக இருக்கிறது. தமிழ் நாட்டில் இரண்டு நிறுவனங்கள் அப்படி இருக்கின்றன. ஒன்று நெய்வேலியில் இருக்கின்ற நெய்வேலி செராமிக்ஸ் நிறுவனம். அது அரசினுடையது. அடுத்தது, இந்தத் தனிப்பட்ட முதலாளியினுடையது. அதிலே லாபம் அதிகமாகக் கிடைக்கிறது. இதிலே டிப்பார்ட்மென்ட் தலையிடவில்லை. அமைச்சர் அவர்களிடம் நானும் சங்கத் தலைவர் திரு. கோவிந்தராசன் அவர்களும் சென்று கேட்டோம். அவர்கள் அந்த முதலாளி பிடிவாதக்காரர் என்று சொல்கின்றார்கள். தரமாட்டார் என்று சொன்னார்கள். இதைவிட பிடிவாதக்கார முதலாளிகள் எல்லாம் கொடுத்திருக்கிறார்கள். ஏன் அவரை சர்க்கார் நிர்ப்பந்தம் செய்யக்கூடாது என்று கேட்கிறேன். அமைச்சர் அவர்கள் "சரி, பார்ப்போம்" என்றார்கள். அவர் யார் என்று கேட்டால், அந்த 160 நாட்கள் ஸ்டிரைக்குக் காரணமான சிம்கோ முதலாளிதான். பள்ளிபாளையம் பேப்பர் மில்லிலே உள்ளவர்தான், இந்த அரசாங்கத்தினுடைய புகளூர் மில்லிலே உள்ள, 118 கோடி ரூபாய் திட்டத்தில் உள்ள, ஜாயின்ட் செக்டாரிலே உள்ள அந்த முதலாளிதான் இங்கே தகராறு செய்கிறார்.

(முற்பகல் 10-40)

அவர் கொடுக்கமாட்டேன் என்று சொல்கிறார். நேஷனல் டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் வைத்திருக்கும் மத்திய அரசு, ஆக்டைவிட அதிகமான போனஸ் கொடுக்க வேண்டுமென்று நம்முடைய லேபர் டிப்பார்ட்மென்ட் சிபாரிசு செய்யும். இவர் மத்திய அரசை மிஞ்சியவர், இவருக்குச் சிபாரிசு பண்ணக்கூடாது. பண்ணால் கொடுக்க மாட்டார்கள். அந்த முதலாளி அவருடைய லீகல் ரெப்ரசன்டேடிவ் டி.சி.எல்.-ஐ மிரட்டுகிறார். சேஷசாயி லிமிட்டெட் லீகல் அட்வைசர் டெபுடி கமிஷனரை மிரட்டு

கிறார். அப்படியெல்லாம் மிரட்டுகிற தைரியம் உள்ள அந்த முதலாளியிடம் லேபர் மினிஸ்டர் சொல்லியும் நடக்காததால், சீஃப் மினிஸ்டரிடம் போனோம். சீஃப் மினிஸ்டர், லேபர் மினிஸ்டர், எங்களையெல்லாம் அழைத்துப் பேசி, 750 ரூபாய் கொடுக்கச் சொல்கிறேன், வாங்கிக் கொள்ளுங்கள் என்றார்கள். அந்தப் பணத்தைத் திரும்பப் பிடிக்கக்கூடாதென்று சொன்னபோது, இப்போதே அதைப்பற்றிச் சொல்ல முடியுமா, நீங்கள் வாங்கிக்கொள்ளுங்கள், வாங்கிய பணத்தை திருப்பியா கொடுக்கப் போகிறீர்கள், பிறகு பார்க்கலாமென்று சீஃப் மினிஸ்டர், லேபர் மினிஸ்டர் முன்னாலேயே சொன்னார்கள். சீஃப் மினிஸ்டர் சொன்ன பிறகும், லேபர் மினிஸ்டர் அவர்களை வற்புறுத்தவில்லை. சீஃப் மினிஸ்டர் சொல்லி ஒரு மாதம் கழித்து, பேரவையில் எங்களுடைய சி.ஐ.டி.யூ.ஐச் சேர்ந்த எம்.எல்.ஏ., திரு. உமாநாத் அவர்களுக்கும், அமைச்சரவர்களுக்கும் தர்க்கம் ஏற்பட்டு, மனஸ்தாபமான வார்த்தைகளைப் பரிமாறிக்கொண்ட பிறகு, அந்த முதலாளியைக் கூப்பிட்டு, 2 நாட்களுக்குள் 'அக்ரிமென்ட்' போட்டு, 750 ரூபாய் கொடுக்கப்பட்டது. சீஃப் மினிஸ்டர் சொல்லியும் 1½ மாதம் ஆகியிருக்கிறது. அந்தக் காலத்தில் புதிய கோரிக்கைகளைச் சொல்லவில்லை. 1½ மாதத்திற்குப் பிறகு பேரவையில் தகராறு ஏற்பட்ட பிறகு, 3 நாட்களில் 750 ரூபாய் கொடுத்து, வேலைக்குப் போகச் சொல்லுங்கள் என்று சொல்லப்பட்டது. 160 நாட்கள் போராடியிருக்கிறார்கள். சீஃப் மினிஸ்டர் தலையிட்டு, 1½ மாதங்களுக்குப் பிறகு நடக்கிறது. எப்படி நடக்கிறதென்றால், இழுத்தடிக்கப்படுகிறது. இனிமேல் ஸ்டிரைக்குக்குப் போககூடாதென்ற நிலையை உருவாக்க வேண்டும் அந்த 'ஆட்டிடியூட்' இருக்கிறது.

அடுத்தபடியாக, இன்னொரு விஷயம். இப்போது சீஃப் மினிஸ்டர் கொடுத்த வாக்குறுதியை மீறி பணத்தைப் பிடிக்கிறார்கள். அப்போதே சீஃப் மினிஸ்டரிடம் கேட்டோம். அக்ரிமென்டில் அப்படி இல்லை. இப்போது பிடிக்கிறார்கள். 600 தொழிலாளர்கள் 160 நாட்கள் வேலை நிறுத்தம், யாரோ ஒரு நபர் சொல்கிறான் என்று செய்வார்களா? பிரச்சினையில் அவ்வளவு அழுத்தமான கருத்து இல்லாமல் போனால் செய்வார்களா? ஒரு நபர் சொன்னான் என்று ஸ்டிரைக் செய்வார்களா ? போலீஸ் தலையீடு வேறு இருக்கிறது. ஹோசூரில் அசோக் லேலன்ட் தொழிலாளர்கள் 100 நாட்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். ஸ்டிரைக் நடந்தது. 2,500 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அதில் 1,500 பேர்கள் ஐ.டி.ஐ. படித்தவர்கள். அவர்களுக்கு சம்பளம் மிகவும் குறைவு. அதை 'மேக்கப்' செய்ய கேன்டீன் வசதி செய்து கொடுத்தார்கள். கேன்டீன் வசதியைப் பெருக்க வேண்டுமென்

பதற்காக, அந்தக் கேன்டீனை கான்ட்ராக்டரிடம் விட்டு, கான்ட்ராக்டரின் ஆட்கள் தொழிலாளர்களுடன் தகராறு பண்ணி, அதைக் காரணமாக வைத்து முதலாளி கதவடைப்பு செய்தார். 17—11 வரைக்கும் கிட்டத்தட்ட 3 மாதம் —100 நாட்கள் அந்தத் தொழிற்சாலை மூடிக்கிடந்தது. என்ன வேடிக்கை என்றால், குறிப்பிட்ட பிரச்சினையில் லேபர் டிப்பார்ட்மென்ட் தலையிட்டு, 12 ஆம் தேதி 'லாக்கவுட்' ஏற்படுவதற்கு முன்பு, தொழிலாளர்கள் சம்பளத்தை சட்ட விரோதமாகப் பிடித்தது தப்பு, அதைத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று ஆலோசனை கூறி, அதை அவர்கள் மீற, 12 ஆம் தேதி 'லாக்கவுட்' செய்து, 100 நாட்கள் கழித்து மில் திறக்கப்பட்டு, தொழிலாளர்கள் வேலைக்குப் போகிறார்கள், தொழிற் சங்கத்துடன் உடன்படிக்கை பண்ணாமல், 2500 பேர்கள் வேலை செய்ய பேக்டரிக்குப் போகும்போது, 1000 போலீஸ்காரர்கள் ஹோசூரில் இருந்தார்கள். கம்பெனி கொடுத்த லிஸ்ட்படி, கொடுத்தது கம்பெனி. அவர்களைக் கைது செய்து, போலீஸ் கேஸ் போட்டு அவர்கள் ஆட்களைக் கைது செய்தார்கள். 220 பேர்களுக்கு லிஸ்ட் கொடுத்தது கம்பெனி. அவர்களைக் கைது செய்து, போலீஸ் கேஸ் போடுகிறது. 1,000 போலீஸ்காரர்கள் சென்று, திறக்கிறார்கள். 2,500 பேர்கள் வேலை பார்க்கும் பேக்டரி அது, அதைத் திறக்க ஆயிரம் போலீஸ் வேண்டுமா என்று கேட்கிறார்கள். அதை நியாயப்படுத்த, ஹோசூரில் நக்சல்பாரிகள் தொழிலாளர்களுடன் புகுந்துவிட்டார்கள் என்று ஸ்டேட்மென்ட் விடுகிறார்கள். 2,500 பேர்கள் வேலை பார்க்கும் கம்பெனியைத் திறக்கும்போது, 1,000 போலீஸ்காரர்கள் வேண்டுமா என்றால், நக்சல்பாரிகள் போய்விட்டார்கள், என்கிறார்கள். நக்சல்பாரிகளை வேட்டையாட ஒரு டி.ஐ.ஜி. இருக்கிறார்கள். அவர், தொழிலாளர்களுடன் நக்சல்பாரிகள் போய்விட்டார்கள் என்பது உண்மையல்ல என்று சொல்லுகிறார். நாய்க்கு வெறி பிடித்துவிட்டால், அது கடித்தால் விஷமென்று, கண்டவர்களும் அதை அடிப்பார்கள். அதேபோல அரசுக்கு ஏதாவது சங்கடம் வந்தால், உடனே 'நக்சல்பாரி' என்று சொல்ல வேண்டியது. அந்தத் தொழிற்சாலையில் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன்களுக்கு வேண்டிய வண்டிகளுக்கு ஆர்டர் செய்கிறோம். அங்கே வேலை செய்பவர்களுக்கு மிகக் குறைவான சம்பளம். கல்யாணமாகாதவர்களை வேலையில் வைக்கிறார்கள். அவர்களுக்கு சாப்பாடு போட கேன்டீன் திறந்திருக்கிறார்கள். அங்கே சாப்பாடு நன்றாக இல்லை என்று தகராறு ஏற்பட்டது. இந்தத் தகராறுக்குப் பிறகு ஸ்டிரைக் 3 மாதம் நீடிக்கிறது. 1 வருடம், 1½ வருடம் அனுபவமுள்ள பையன்கள். யார் சொன்னாலும், அவர்கள் கேட்க மாட்டார்கள். நிரந்தரமாகாத ஆட்கள், கேன்டீனில் சாப்பாடு வேண்டுமென்று கேட்டதில் ஏற்பட்ட தகராறு. 3 மாத காலம் ஸ்டிரைக் நடந்து, பேக்டரியைத் திறக்கும்போது, 1,000 போலீஸ்காரர்கள்

[திரு. ஆ. நல்லசிவன்] [1982 மார்ச் 27

போகிறார்கள். ஏன் போனார்கள் என்றால், நக்சல்பாரிகள் உள்ளே நுழைந்து விட்டார்கள் என்று சொல்லுகிறார்கள். வட ஆற்காடு மாவட்டம், தர்மபுரி மாவட்டம் ஆகிய மாவட்டங்களில் உள்ள நக்சல்பாரிகளை ஒடுக்க போலீஸ் அதிகாரி இருக்கிறார். அவர், நக்சல்பாரிகள் இதில் இல்லை என்று சொல்லியிருக்கிறார். இதில் எப்படிப்பட்ட ஆட்டிடியூடைக் கையாள்கிறார்கள் என்பதற்காகச் சொல்லுகிறேன்.

அடுத்து, 'அன்-ஆர்கனைஸ்டு லேபர்' பற்றிச் சொல்லுகிறார்கள். 'அன்-ஆர்கனைஸ்டு லேபர்' கிராமங்களில் எப்படிக் கஷ்டப்படுகிறார்கள் என்று கண்ணீர் விடுகிறார்கள். காடம்பாறையில் வேலை செய்தவர்கள் அன்ஆர்கனைஸ்டா, ஆர்கனைஸ்டா ? காடம்பாறையில் தண்ணீர் கொண்டு வர கல்லை, பாறையைக் குடைகிறார்கள், 400 பேர்கள். காண்ட்ராக்ட் எடுத்தது பெரிய கம்பெனி. சர்வதேச காண்ட்ராக்ட் கம்பெனி. இந்துஸ்தான் கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி. அவர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் ஏற்பட்ட தகராறில் அந்தப் போராட்டத்தை எப்படி 'மீட்' பண்ணினார்கள் என்பதைச் சொல்கிறேன். 110 ஆண்கள், 30 பெண்கள், 14 சிறுவர்கள்—154 பேரை ஜெயிலில் வைத்தார்கள் 7 மாதம். 'அன்-ஆர்கனைஸ்ட் லேபர்' பற்றி அதிகமாகப் பேசுகிறார்கள். அவர்களுக்கு நிரந்தரமான சங்கம் கிடையாது. 'அன் ஆர்கனைஸ்ட் லேபர்' 154 பேரை—300 பேர்கள் ஸ்டிரைக் பண்ணினார்கள். அதில் 110 ஆண்கள், 30 பெண்கள், 14 சிறுவர்கள்—154 பேரை 7 மாதம் சிறையில் வைத்தார்கள். வறுமைக் கோடு பற்றிப் பேசுகிறார்கள். அதற்குக் கீழே இருக்கிறவர்கள் இவர்கள். ஏழு மாதங்கள் அவர்கள் உள்ளே இருந்தார்கள். மன்னிப்பு எழுதிக் கொடுத்து சிலர் வெளியே வந்தார்கள் . .

(முற்பகல் 10-50)

இதே வழக்கில் உண்ணாவிரதம் இருந்தவர்களுக்கு 3 மாத சிறைத் தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது. பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டுமென்று இந்த அரசு சொல்லுகிறது. அதே சமயத்தில் உண்ணாவிரதம் இருந்ததற்காக தொழிலாளர்கள் கைது செய்யப்பட்ட மாநிலம் இந்தியாவிலேயே தமிழகந்தான் என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பல விஷயங்களில் 'பர்ஸ்ட் கிளாஸ்' எடுத்திருக்கிற இந்த அரசு இந்த விஷயத்திலும் 'பர்ஸ்ட் கிளாஸ்' எடுத்திருக்கிறது. அது மட்டுமல்ல, தம்முடைய அரசே இந்த வழக்கை நடத்தியது. உண்ணாவிரதம் இருந்ததற்கு 3 மாத தண்டனையும், மறியல் செய்ததற்கு 3 மாத சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டிருக்கிறது, அதுவும் பெண்கள் குழந்தைகள்

1982 மார்ச் 27] [திரு. ஆ. நல்லசிவன்]

உட்பட தண்டனை பெற்றிருக்கிறார்கள். 'அன்ஆர்கனைஸ்ட் லேபர்' என்று சொல்லி, இப்படிச் செய்திருக்கிறார்கள். அதுபோல் இந்துஸ்தான் கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனியைப் பொறுத்தவரையிலும், பிரச்சினை. அவர்கள் 16 கோடி ரூபாய், 18 கோடி ரூபாய் என்று பெரிய பெரிய கன்ஸ்ட்ரக்ஷன் வேலையை எடுப்பவர்கள். மெட்ரோவில் கூட இன்றைக்கு இவர்கள் காண்டிராக்ட் எடுத்திருக்கிறார்கள். பொதுப்படையாக 'அன்ஆர்கனைஸ்ட்' என்று அரசு சொன்னால் எப்படி ? இப்படி பல பேர் போராடுகிறார்கள். போராடும் போது 154 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்றால், எப்படி ? யாருக்கு எதிராக இன்றைக்கு இதைச் செய்திருக்கிறார்கள் ? கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனிக்கு ஆதரவாக இதை அரசு செய்திருக்கிறது. அதுபோல் 20 ஆயிரம் தொழிலாளர்கள் ஒரு தொழிற்சாலையில் ஸ்டிரைக் செய்தார்கள். கன்சிலியேஷன் நடக்கிற இடத்தில் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் போய் உட்கார்ந்திருக்கிறார். கன்சிலியேஷனில் சர்க்கார் ஆட்கள், மேனேஜ்மெண்ட் ஆட்கள் மற்றும் தொழிலாளர்கள் இருப்பார்கள். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து தொழிலாளர்கள் சப்-இன்ஸ்பெக்டரை வெளியே போகச் சொன்னால், அவர் போகவில்லை. அதற்காக அவர்கள் அன்றைக்கு 'வாக் அவுட்' செய்தார்கள். அதுபோல் எலெக்ட்ரானிக் கம்பெனியிலும் பிரச்சினை. அங்கும் ஸ்டிரைக் நடந்தது. அங்கிருந்த பொருட்களை வெளியே எடுத்துச் செல்லக்கூடாது என்று தொழிலாளர்கள் 'ஸ்டே' வாங்கினார்கள். ஆனால் முதலாளிக்கு அங்கிருந்த டி.ஐ.ஜி. உதவி செய்தார். பொதுவாகவே போலீஸ் அதிகாரிகள் முதலாளிக்கு ஆதரவாகத்தான் செயல்படுகிறார்கள். அப்படி போலீஸ் அதிகாரிகள் முதலாளிகளுக்கு ஆதரவாக நடந்துகொள்வது சரியல்ல. சாமான்களை வெளியே கொண்டுபோகக் கூடாது என்று முன்சீப் கோர்ட்டில் 'ஸ்டே' வாங்கியதற்கு எதிராக முதலாளி அங்குள்ள போலீஸ் அதிகாரியின் உதவியோடு சாமான்களை வெளியே கடத்திப் போயிருக்கிறார். நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக இப்படி சாமான்களைக் கடத்துகின்ற முதலாளிக்கு ஒரு போலீஸ் அதிகாரி உதவி செய்வது நியாயந்தானா? நடைமுறையில் அது சரிதானா ?

அடுத்து, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் கட்டிடத் தொழிலாளர்களுடைய பிரச்சினைகள்பற்றிப் பேசினார்கள். இன்றைக்கு கட்டிடத் தொழிலாளர்கள் 'ஆர்கனைஸ்ட்' ஆக மாநிலம் பூராவும் பரவலாக இருக்கிறார்கள். அவர்கள் எந்த அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களாகவும் இருக்கலாம். இன்றைக்கு அவர்கள் மாநிலம் பூராவும் வளர்ந்துள்ள நிலையில் இருக்கிறார்கள், அவர்களுக்கென்று பத்திரிகைகூட நடத்துகிறார்கள்,

கிறார்கள். அவர்களுடைய பிரச்சினைகளை அவர்கள் அரசுக்குச் சொல்லக் கூடாதா? 'அன்ஆர்கனைஸ்ட் லேபர்'ஐ ஏன் இந்த அரசு எதிர்க்க வேண்டும் என்று எனக்குப் புரியவில்லை. அதுபோல் தொழிலாளர்களை அடக்க எப்படி எப்படி எல்லாம் போலிசைப் பயன்படுத்துகிறார்கள்? இன்றைக்கு விவாதம் 1 மணிக்குள் முடிந்து சாப்பாட்டுக்குப் போக வேண்டியிருப்பதால் சுருக்கமாகப் பேச வேண்டுமென்று மாண்புமிகு துணைத் தலைவரவர்கள் கருதுகிறார்கள் என்று எண்ணுகிறேன். (சிரிப்பு)

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் மணியடித்தார்.)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: ஒவ்வொரு நாளும் பிற்பகல் 3 மணிக்கு விவாதம் முடிகிறது.

திரு. ஆ. நல்லசிவன்: இன்றைக்கு சீக்கிரம் முடிந்து விடும். அதுபோல் அசோக் லேலண்ட் தொழிலாளர் பிரச்சினை. தொழிலாளர்கள் மீது கேஸ் போடுகிறார்கள். பொதுவாக ஒரு தொழிலாளர் போராட்டம் நடைபெறுகிறது என்று சொன்னால், பிறகு பேச்சுவார்த்தையின் மூலம் போராட்டம் முடிந்து வேலையிலும் சேர்ந்து விடுகிறார்கள் என்று சொன்னால், அதற்குப் பிறகு வழக்கை வாபஸ் வாங்குவதுதான் முறை. ஆனால் பல ஆண்டுகள் ஆனாலும் வழக்குகளை வாபஸ் பெறுவதில்லை. இதற்கு நான் பல உதாரணங்களைச் சொல்ல முடியும். ஐந்து வருடங்களாக வழக்குகள் வாபஸ் ஆகாத நிலைமை கூட இருக்கிறது. இந்த அரசு 1977 ஜூன் மாதம் ஆட்சிக்கு வந்தது. இப்போது மார்ச் 1982 நடக்கிறது. ஐந்து மாதம் ஸ்டிரைக் நடந்தது. பிறகு சமரசம் ஏற்பட்டு, தொழிலாளர்கள் வேலைக்குப் போய்விட்டார்கள். இன்றைக்கு 900 பேர்கள் மீது கேஸ் நடக்கிறது. 34 வழக்குகள் அவர்கள் மீது போடப்பட்டுள்ளன. ஐந்து வருடம் ஆகியும் இன்னும் அந்த வழக்குகளை இந்த அரசு வாபஸ் பெறவில்லை சி. ஐ. டி. யு யூனியன் தலைவர் திரு. ரமணி இதுபற்றிக் கேட்டபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவாதம் கொடுத்தார்கள். ஆனால் அந்த உத்தரவாதப்படி, இன்னும் வழக்கு வாபஸ் ஆகவில்லை. இன்றைக்கும் அது கோர்ட்டிலே இருக்கிறது. பல்லாண்டு காலமாக இப்படிப்பட்ட வழக்குகளை இந்த அரசு நடத்திக்கொண்டிருக்கிறது. போராட்டம் நடந்து, சமரசம் ஏற்பட்டு, அவர்கள் வேலையில் சேர்ந்த பிறகும், 5 ஆண்டுகளாக இப்படி வழக்கை அரசு நடத்திக்கொண்டிருப்பது முறை தானா? இதை நான் தனியாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சொல்லவில்லை, பொதுவாக இது அரசுக்கும் தெரியும்.

அடுத்து, இந்த அரசு தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் மட்டும் தான் இப்படி நடக்கிறது என்றில்லை. அரசு ஊழியர்களை எப்படி நடத்துகிறது என்பதற்கும் ஒரு உதாரணத்தை இங்கே குறிப்பிடுகிறேன். டிரஷரி எம்பிளாயீஸ் ஒரு மறியல் போராட்டம் நடத்தினார்கள். அவர்கள் மீது கேஸ் போட்டு பின்பு 'சஸ்பெண்ட்' செய்தார்கள். பொதுவாக அரசின் 'பாலிசி' என்ன என்பதுபற்றித் தெரிந்துகொள்வதற்காகத்தான் நான் இதைச் சொல்கிறேன். அமைச்சருக்கு நான் இதைச் சொல்லவில்லை. 68 பேர்கள் மீது வழக்கு போடப்பட்டு, பிறகு அது தள்ளுபடி ஆயிற்று. "அவர்கள் மன்னிப்பு கேட்டால்தான் பணியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள், இல்லாவிட்டால் பணியில் சேர்த்துக்கொள்ள முடியாது" என்று அதிகாரிகள் சொல்லிவிட்டார்கள். அப்படி மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுக்க முடியாது என்று அரசு ஊழியர்கள் சொல்லிவிட்டார்கள். அப்படியானால் வேலை தர முடியாது என்று சொல்லிவிட்டார்கள். உடனே ஊழியர்கள் ரிட்டுக்குப் போனார்கள். மன்னிப்புக் கடிதம் எழுதி வாங்காமல் அவர்களை உடனே வேலைக்கு எடுங்கள் என்று தீர்ப்பு சொல்கிறார்கள். திருப்பி வேலைக்கு எடுக்கிறார்கள். ஆனால் புதிதாக 'சஸ்பென்ஷன் ஆர்டர்' ஒன்றைத் திரும்பவும் கொடுத்து விடுகிறார்கள். மறியல் போராட்டம் பண்ணிய அந்த ஊழியர்களுடைய பிரச்சினை இன்னமும் முடியவில்லை. 1¾ வருடமாக அவர்களுடைய பிரச்சினை இழுத்தடிக்கப்படுகிறது இது அரசின் 'ஆட்டிட்யூட்' இல்லையா? அப்படி என்றால், அரசு ஊழியர்கள் எந்த வகையிலும் கிளர்ச்சிகளில் ஈடுபடக் கூடாது என்கிற எண்ணத்தில் இந்த அரசு இருக்கிறது என்றுதானே பொருள்? பஞ்சப் படி வேண்டுமென்று கேட்பது குற்றமா? விலைவாசி குறைந்தா இருக்கிறது? வரியையும் உயர்த்திக்கொண்டே போகிறார்களே. ஆக, சர்க்கார் சிப்பந்திகளுக்கே கூட அரசு பாடம் கற்பித்துக் கொண்டிருக்கிறது. இன்னொரு விஷயம்.

அரசினர் அன்-ஆர்கனைஸ்டு செக்டார்' என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். சிவகாசியில் 30 பேர் பட்டாசு தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது, விபத்து நடந்து இறந்தார்களே, அவர்களுடைய பிரச்சினைபற்றி ஒன்று சொல்கிறேன். அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய நஷ்ட ஈடு பற்றிச் சொல்கிறேன். எந்த முதலாளி தொழிலாளர்களுக்கு அதிக நஷ்ட ஈடு பெற்றுக் கொடுக்க வேண்டுமோ அந்த அதிகாரியே முதலாளிகளிடம் குறைந்தபட்ச நஷ்ட ஈடு கொடுத்தால் போதும் என்று சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. உதாரணத்திற்கு ஒன்று சொல்லுகிறேன். 100 ரூபாய் ஒருவர் அங்கே சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தார் என்றால், அவருக்கு நஷ்ட ஈடு கொடுப்பதைப் பொறுத்தவரையில், 20 ஆயிரம் ரூபாய்வரை கொடுக்க வேண்டி

[திரு. ஆ. நல்லசிவன்] [1982 மார்ச் 27

யிருக்கும். ஆனால் அந்த அதிகாரி முதலாளிகளிடம் போய் "நீங்கள் 400 ரூபாய் சம்பளம் என்று சொல்லாதீர்கள், 80 ரூபாய், 90 ரூபாய் என்று சொன்னால் போதும்" என்று சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. சம்பந்தப்பட்டவர்களுடைய உறவினர்களை இந்த முதலாளிகள் உடனே இப்படித்தான் சம்பளத்தைச் சொல்ல வேண்டுமென்று நிர்பந்திக்கிறார்கள். இதன் காரணமாகக் கோர்ட்டுக்குப் போனால்கூட அவர்கள் 10 ஆயிரம் ரூபாய்க்கு அதிகமாகப் பெற முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இது பற்றி கலெக்டர் மீதே புகார் இருக்கிறது. அவர் கூட இந்தப் பிரச்சினை சம்பந்தமாக சீக்கிரம் முடிவெடுக்க இந்த முறையைக் கடைப்பிடிப்பதாகச் சொல்லப்படுகிறது. இப்படி 30 பேர் உயிரை விட்டார்களே, இவர்கள் எல்லாம் ஆர்கனைஸ்டா இல்லை அன்-ஆர்கனைஸ்டா? எங்களைப் போன்று 'ஆர்கனைஸ்ட் லேபர்' வைத்திருப்பவர்களுக்குத்தான் அரசாங்கம் ஆதரவு அளிக்கவில்லை. ஆனால் அதே சமயத்தில் அன்ஆர்கனைஸ்ட் லேபரையும் மறைமுகமாக சங்கங்களுக்கு எதிராக அமைக்க ஆதரவு தருகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் பிறகு சங்கம் வைத்து, யூனியன் வைத்து அதன் அடிப்படையில் முதலாளிகளிடம் கோரிக்கை வைத்தால், அது முதலாளிகளிடம் வரும்போது அவர்களுக்காவது ஆதரவாக இருக்கிறார்களா என்றால், அது தான் இல்லை. தொழிலாளர்களுக்குக் கொடுக்கக்கூடாது என்று முதலாளிகளிடம் நிர்ப்பந்திக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஒரு தொழில் சிறப்பாக இருக்கலாம் அல்லது பெரிய தொழிலாக இருக்கலாம். ஆனால் 'அன்ஆர்கனைஸ்ட்' ஆக இருப்பவர்கள் எல்லாம் 'ஆர்கனைஸ்ட்' ஆக ஆகும்போதுதான் சிக்கல் ஏற்படுகிறது.

(முற்பகல் 11-00)

இதனால்தான் கடந்த 1981 ஆம் ஆண்டில் 41¼ லட்சம் மனித நாட்கள் இழப்பு ஏற்பட்டிருக்கின்றது என்று நான் குறிப்பிட்டேன் போராடுகிற ஊழியர்களுக்கு எதிராக, அரசு ஊழியர்களுக்கு எதிராக, பப்ளிக் செக்டார் ஊழியர்களுக்கு எதிராக, பிரைவேட் செக்டார் ஊழியர்களுக்கு எதிராக, போலீசையும், ஜெயிலையும், கோர்ட்டுகளையும் பயன்படுத்துகிறார்கள். எங்களுடைய அகராதியில் போலீஸ், ஜெயில், கோர்ட்டு என்றால் இவைகள் எல்லாம் உழைக்கும் மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தும் சாதனங்கள் என்றுதான் அர்த்தம். இவைகளெல்லாம் "என்ஜின்ஸ் ஆஃப் ரிப்ரெஷன்", உழைக்கும் வர்க்கத்திற்கு எதிராகப் பயன்படுத்துவதற்காக உள்ள சாதனங்கள். இதுதான் எங்களுடைய "அண்டர்ஸ்டாண்டிங்".

1982 மார்ச் 27] [திரு. ஆ. நல்லசிவன்]

இப்படி போலீஸ் துறையின் அடக்குமுறைகளின் உச்சகட்டம்தான் கடந்த ஜனவரி 19 ஆம் தேதி போராட்டத்தில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகங்கள். இதைப்பற்றி இங்கேயே நான் பேசியிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமும் பேசியிருக்கிறேன். பேரவையிலும் பேசியிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள்கூட பதில் சொல்லும்போது, "துப்பாக்கிப் பிரயோகம் என்பது ஒரு அரசுக்குச் சில சமயங்களில் அதிலும் மக்கள் தகராறுகளைச் செய்யும்போது, உருவாகிவிடுகிறது. இதன் காரணமாக அரசுக்கு களங்கம் ஏற்படுகிறது" என்றார்கள். அது தவிர்க்க முடியாததுதான். ஆனால் அதற்காக "நீங்கள் மேற்கு வங்கத்தில் சுடவில்லையா, அப்படி இருக்கும்போது இங்கே மட்டும் சுடுவதை ஏன் குறை சொல்லுகிறீர்கள்?" என்று கேட்கிறார்கள். அதற்குத்தான் நான் பதில் சொல்ல விரும்புகிறேன்.

19 ஆம் தேதி நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகச் சம்பவம் என்பது ஒரு தற்செயலாக ஏற்பட்ட சம்பவம் அல்ல. எப்படி தொழில் தகராறுகளில் முதலாளிக்கு ஆதரவாக, தொழிலாளர்களுக்கு எதிராக இந்த அரசு போலீசை வைத்துக்கொண்டு போராட்டத்தை ஒடுக்க, தொழிலாளர்களை அடக்க முனைகிறது என்பதைப் பார்த்துத்தான், அதைத் தொடர்ந்து போலீஸ் துறையைச் சார்ந்தவர்கள் 19 ஆம் தேதி துப்பாக்கிப் பிரயோகத்தைத் தங்களுக்குச் சாதகமாகச் செய்து கொண்டார்கள். நாட்டில் இருக்கிற சூழ்நிலையைத் தங்களுக்குச் சாதகமாக அவர்கள் பயன்படுத்திக் கொண்டார்கள் என்பது தான் உண்மை. துப்பாக்கிப் பிரயோகத்திற்கு அரசுத் தரப்பில் விளக்கம் சொல்லப்பட்டது. அதாவது போராடுகிற மக்கள் ரோடில் பஸ்சை மறித்து மறியல் செய்தார்கள், கல் எறிந்தார்கள், அதனைத் தடுப்பதற்காக போலீஸ் சுட வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்று சொல்லப்பட்டது. இதில் உண்மை என்னவென்றால், துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்ற திருமெய்ஞானம் என்கிற கிராமம் மெயின் ரோடிலிருந்து மூன்று மைல் தள்ளி இருக்கிறது. அந்த கிராமத்திற்குள் காரும் போக முடியாது, பஸ்சும் போக முடியாது. வரப்புகளின் வழியாகத்தான் போக முடியும். அந்த அளவுக்கு மெயின் ரோடை விட்டு உள்ளே தள்ளியிருக்கிற கிராமம் திருமெய்ஞானம் என்கிற அந்தக் கிராமம். ஆனால் பஸ் போக முடியாத இடத்தில், கார் போக முடியாத இடத்தில்தான் போலீஸ்காரர்கள் தொழிலாளர்களை விரட்டிச் சென்று துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கிறார்கள். இந்தச் சம்பவம் குறித்து எப்.ஐ.ஆர். போடும்போது அதில் என்ன சொல்லுகிறார்கள்? பஸ்சை மறியல் செய்த தொழிலாளர்கள் ஓடினார்கள். அதைப் பார்த்த போலீஸ் அவர்களை விரட்ட ஆரம்பித்தது. அப்படித் தொழிலாளர்களை விரட்டிக்கொண்டே போனபோது, தொழிலாளர்கள் ஓடிக்

[திரு. ஆ. நல்லசிவன்] [1982 மார்ச் 27

கொண்டே இருந்தார்கள். தொழிலாளர்கள் ஓடிப் போய் திருமெய்ஞானம் கிராமத்திற்குச் சென்று விட்டார்கள். அங்கேதான் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது. இதைத்தான் சொல்லியிருக்கிறார்கள். நான் கேட்கிறேன். எதற்காகத் திருமெய்ஞானம் கிராமத்திற்குள் சென்று துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டும்? எந்தக் காரியத்திற்காக போலீஸ் அங்கே போனது? மறியல் செய்கிற தொழிலாளர்களைக் கலைத்து, போக்குவரத்திற்கு இடைஞ்சல் இல்லாமல் செய்து ரோட்டைக் 'கிளியர்' செய்வதற்காகத்தானே போலீஸ் அங்கே போனது. அப்படி இருக்கும்போது, போலீஸ் விரட்டியதன் காரணமாக அந்தத் தொழிலாளர்கள் மெயின் ரோட்டை விட்டு விலகி ஓடிப் போன பிறகு, எதற்காக அவர்களைத் துரத்திக்கொண்டு போய் 3 மைல் தள்ளியிருக்கும் திருமெய்ஞானம் கிராமத்திற்குள் சென்று சுட வேண்டும்? இதுதானே உண்மை? அவர்கள் கல் எறிந்தார்கள் என்றால், மெயின் ரோடில்தானே அதைச் செய்திருக்க வேண்டும். அதற்காக 3 மைல் தள்ளிப் போய் சுட வேண்டுமா? இதுதானே அங்கே நடைபெற்றது.

19 ஆம் தேதி ஸ்டிரைக் நடக்காமல் செய்ய வேண்டும் என்பதற்காக இந்த மாநில அரசு தமிழ் நாடு முழுவதும் ஏறக்குறைய 10,000 பேர்களை முதலிலேயே கைது செய்துவிட்டார்கள். எனவேதான் சொல்லுகிறேன் அங்கே திருமெய்ஞானத்திலிருக்கும் விவசாயத் தொழிலாளர்கள் மீது ஏற்கெனவே போலீசுக்கு இருந்த வஞ்சத்தை இந்தச் சந்தர்ப்பத்தில் தீர்த்துக்கொண்டார்கள். ஏற்கெனவே அங்கே இருக்கும் நிலச் சொந்தக்காரர்களுக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கும் இடையே இருந்த சிக்கலில் போலீஸ் நிலச் சொந்தக்காரர்களுக்கு ஆதரவாக இருந்து வந்தது என்பது எல்லோருக்கும் தெரியும். அந்தச் சூழ்நிலையைச் சாதகமாக்கிக்கொண்டு போலீஸ் அந்தக் கிராமத்திற்குள் சென்று விவசாயத் தொழிலாளர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தது என்பதுதான் உண்மை.

செம்பனார் கோயில் சப்-இன்ஸ்பெக்டர் நடராஜன் என்பவர் இந்தத் தொழிலாளர்கள் மீது ஏற்கெனவே கோபம் கொண்டிருந்தார், அதன் காரணமாகத் தான் இந்தச் சமயத்தில் நாம் எதைச் செய்தாலும் தப்பித்துக் கொள்ளலாம் என்று கருதி, இந்தத் துப்பாக்கிச் சூட்டிற்கு அவர் ஏற்பாடு செய்துவிட்டார். இதுதான் உண்மை என்றால், அப்படிக் கொல்லப்பட்ட 3 விவசாயக் குடும்பத்தைச் சார்ந்த தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு இந்த அரசு உதவித் தொகை ஏதாவது கொடுக்க வேண்டாமா? அதுதான் இல்லையென்றால், ஒரு நீதி விசாரணையாவது வைக்க வேண்டாமா? அதைத்தானே நாங்கள

1982 மார்ச் 27] [திரு. ஆ. நல்லசிவன்]

கேட்கிறோம். நிதி உதவியைக்கூட நாங்கள் பார்த்துக்கொள்கிறோம். என்ன நடந்தது என்பதற்கு ஒரு நீதி விசாரணை வேண்டாமா? இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெற்றிருக்கும்போது, அரசாங்கம் இதையெல்லாம் நியாயப் படுத்தலாமா?

போலீசார் மறியல் செய்த தொழிலாளர்கள்மீது அவர்கள் கல் எறியும் போது சுட்டார்களா? அல்லது ரோடில் மறியல் செய்யும்போது சுட்டார்களா அல்லது 3 மைல் தள்ளியிருக்கும் கிராமத்திற்குள் தூக்கிச் சென்று அங்கே அவர்களைச் சுட்டார்களா? இதையெல்லாம் கேட்டால், "உங்கள் ஆட்சியில் அங்கே நடைபெறவில்லையா, இங்கே நடைபெறவில்லையா?" என்று கேட்டுக் கொண்டிருப்பதில் நியாயமில்லை. நான் எதற்காக இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், 19 ஆம் தேதி பொது வேலை நிறுத்தத்தை இந்த அரசு எப்படி முரட்டுத்தனமாக 'டீல்' செய்கிறது என்பதைப் பார்த்த அந்தப் போலீஸ் அதிகாரி தனக்குச் சாதகமாக அதைப் பயன்படுத்திக்கொண்டு திருமெய்ஞானம் கிராமத்தில் இருந்த விவசாயத் தொழிலாளர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்வதற்கு ஏற்பாடு செய்து விட்டார். அதை இல்லை, இல்லை என்று அமைச்சர்களும் ஆளும் தரப்பிலும் இருப்பவர்களும் சொல்லலாம். ஆனால் பொது வாழ்க்கையில் கடந்த 40 ஆண்டுக் காலமாக ஈடுபட்டிருக்கிற நான் சத்தியமாகச் சொல்லுகிறேன், இது வேண்டுமென்றே தொழிலாளர்கள் மீது செய்யப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம். இதை நான் என்னுடைய தொண்டைக் குரல்வளையில் சத்தம் வரும்வரை சொல்லிக் கொண்டுதான் இருப்பேன். உழைப்பைத் தவிர வேறு எதுவுமில்லாத அந்தத் தொழிலாளிகள் மீது வேண்டுமென்றே இந்தத் துப்பாக்கிச் சூடு நடைபெற்றிருக்கிறது. அந்தத் தொழிலாளர்கள் 4, 5 குழந்தைகளை விட்டு விட்டு இறந்திருக்கிறார்கள். அவர்களுக்கு நாங்கள் நஷ்டஈடு கூட கேட்கவில்லை. அதை எங்கள் இயக்கத்திலிருந்து பார்த்துக் கொள்கிறோம் ஆனால் போலீஸ் நடந்துகொண்ட முறை சரிதானா என்றும், இது நியாயம்தானா என்றும்தான் கேட்கிறோம். அதை ஒப்புக்கொள்ளாமல் வெஸ்ட் பெங்காலில் நடக்கவில்லையா என்று கேட்பது எப்படி நியாயமாகும் என்றுதான் கேட்கிறேன்.

அதுமட்டுமல்ல, 19 ஆம் தேதி துப்பாக்கிப் பிரயோகத்தை இங்கே இருக்கிற சில அமைச்சர்கள் அரசியல் ரீதியாக நியாயப்படுத்திப் பேசுகிறார்கள். அதுதான் வேடிக்கை. 1975 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25 ஆம் தேதி இந்தியாவில் பெரிய புரட்சியைச் செய்து, சட்டபூர்வமாக அமைந்திருந்த ஆட்சியை அகற்றுவதற்காக திரு. ஜே. பி. அவர்கள் செய்தமாதிரி இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது என்று இங்கே இருக்கிற சில

அமைச்சர்கள் அதைக் குறிப்பிட்டு, எவ்வளவு துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்று நியாயப்படுத்திப் பேசுகிறார்கள். தயவுசெய்து சரித்திரத்தைப் 'டிஸ்டார்ட்' செய்யாதீர்கள் என்று நான் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அமைச்சர்கள் அப்படிப் பேசியதாக நான் பத்திரிகைகளில் படித்தேன். நான் கேட்கிறேன் 1975 ஆம் ஆண்டு ஜுன் 25 ஆம் தேதி என்ன நடந்தது? இந்திரா காந்தி அம்மையார் பார்லிமெண்ட் உறுப்பினராகக் கூட இருக்க முடியாது என்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்த பிறகு, சம்பளம் வாங்காமல், ஓட்டுப் போடாமல் வேண்டுமானால் இருக்கலாம் என்று சொன்ன பிறகும், அவர் தொடர்ந்து இந்தியாவின் பிரதம மந்திரியாக இருப்பது சரியில்லை என்பதை திரு. ஜெயப்பிரகாஷ் நாராயன் அவர்கள் மற்ற அரசியல் கட்சித் தலைவர்களையும் அழைத்து வைத்துக் கொண்டு பொது மக்களிடம் சொன்னார். இது தான் நடைபெற்ற சம்பவம். பின்னாலே நடைபெற்ற சம்பவங்களும் இதைத்தான் நிரூபித்தன. அதன் காரணமாகத்தான் திரு. ஜெ. பி. அவர்களும் மற்றவர்களும் கைது செய்யப்பட்டார்கள். பின்னாலே நடைபெற்ற என்கொயரி கமிஷன்களில் கூட இது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்கும், இந்த நாட்டை சர்வாதிகாரத்திலிருந்து தடுப்பதற்காகவும் திரு. ஜெ. பி. அத்தகைய முயற்சியை மேற்கொண்டார். இதுதானே உண்மை. இதையா நாங்கள் 19 ஆம் தேதி போராட்டத்தில் செய்தோம்? எங்களுடைய போராட்டத்தை ஒடுக்குவதற்காக எதற்காக நீங்கள் சரித்திரத்தையே டிஸ்டார்ட் செய்கிறீர்கள்? சர்க்காரை எதிர்த்து திரு. ஜெ. பி. அவர்கள் 1975 ஜுன் 25 ஆம் தேதி இப்படிப்பட்ட போராட்டமா நடத்தினார்? சர்வாதிகாரத்தை எதிர்த்தல்லவா அவர் குரல் கொடுத்தார். அப்போதுதான் உங்களுக்கு அது புரியவில்லை என்றாலும், "பின்னால் 1980 ஆம் ஆண்டு பிப்ரவரியில் உங்களை எந்தவிதமான காரணமும் காட்டாமல், உங்களுக்குச் சட்ட சபையில் மெஜாரிட்டி பலம் இருக்கும்போதே உங்களை டிஸ்மிஸ் செய்தார்களே, அப்போதுகூடவா உங்களுக்கு அவர்களுடைய சர்வாதிகாரம் புரியவில்லை? எந்தவிதமான காரணமும் காட்டாமல் உங்கள் ஆட்சி அன்றைக்குக் கலைக்கப்படவில்லையா? அப்போது நீங்கள் என்ன சொன்னீர்கள்? அது சர்வாதிகாரமான செயல் என்று சொல்லவில்லையா?" இந்த சர்வாதிகாரத்தை எதிர்த்துத்தான் 1975 ஆம் ஆண்டு திரு. ஜெ. பி. அவர்கள் போராடினார்கள் என்று சொல்லவில்லையா? சுதந்திரத்திற்குப் பிறகு வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத முறையில் "உங்களுக்கு சட்டசபையில் மெஜாரிட்டி இருக்கும்போதே உங்களை

அவர்கள் கலைக்கவில்லையா?" இதைத்தானே அன்றைக்கே திரு. ஜெ. பி. அவர்கள் தீர்க்கதரிசனமாகச் சொன்னார். இது ஒரு சர்வாதிகார ஆட்சி. இதை மாற்ற வேண்டுமென்று அன்றைக்கே அவர் சொல்லவில்லையா? சரி, அப்போதுதான் உங்களுக்குத் தெரியாமல் போய்விட்டது என்றால், 1980 ஆம் ஆண்டு பிப்ரவரியில் உங்கள் ஆட்சியைக் கலைத்தபோது கூடவா தெரியவில்லை? உங்களுக்கே சொந்தமாக ஓர் அனுபவம் ஏற்பட்ட பிறகும் கூடவா உங்களுக்குப் புரியவில்லை? இது உங்களுடைய கட்சியின் கொள்கையா அல்லது, தனிப்பட்ட அமைச்சர் ஒருவருடைய கொள்கையா? இப்படி அரசியல் ரீதியாக ஒரு கருத்தைப் பிரகடனம் செய்ய அந்த அமைச்சருக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏதேனும் அதிகாரம் கொடுத்திருக்கிறாரா என்று அறிய விரும்புகிறேன். அப்படி இல்லை என்றால், அமைச்சரவையில் இருக்கும் வேறு யாராவது ஒருவர் இதை "டிபெண்டு" செய்ய வேண்டாமா? 1975 ஆம் ஆண்டு திரு ஜெ. பி. செய்ததைப்போல், 19 ஆம் தேதி போராட்டத்தை நீங்கள் செய்தீர்கள் என்று சொல்வது முறையா?

1980 ஆம் ஆண்டு டிஸ்மிஸ் செய்யப்பட்டதும் இதைத்தானே மக்களிடத்தில் போய்ச் சொன்னீர்கள்? சர்வாதிகாரமான முறையில் எங்களைக் கலைத்தது தவறு என்று சொல்லி, அதற்கு எதிராகத்தானே மக்களிடம் ஓட்டுக் கேட்டீர்கள். அப்படி ஓட்டுக் கேட்டுவிட்டு இப்போது எங்கள் போராட்டத்தை நசுக்குவதற்கு அன்றைய சம்பவத்தைப்பற்றி இப்படிப் பேசுவது நியாயமா?

திரு. எஸ். ஆர். இராதா : ஓட்டுக் கேட்டோம் என்றால், நீங்களும் சேர்ந்துதான் கேட்டீர்கள்.

திரு. ஆ. நல்லசிவன்: உங்களோடுதான் சேர்ந்து நாங்களும் ஓட்டுக் கேட்டோம். ஆனால் இப்போது இப்படித் திரும்பிவிடுவீர்கள் என்று எங்களுக்கு அப்போது தெரியாதே. இப்படி சரித்திரத்தையே 'டிஸ்டார்ட்' செய்வீர்கள் என்று எங்களுக்குத் தெரியாதே.

இதில் இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். நாங்கள் நடத்தியது ஒரு நாள் அடையாள பொது வேலை நிறுத்தம். திரு. ஜெ. பி. அவர்கள் நடத்தியதைப் போன்ற போராட்டம்கூட அல்ல. விலைவாசி உயர்வை எதிர்த்து, விவசாயப் பொருள்களுக்கு நியாயமான விலை நிர்ணயத்தைக் கோரி, வேலை நிறுத்தத்தைத் தடை செய்யும் போக்கை எதிர்த்து, போனஸ வழங்கப்பட வேண்டுமென்று, விவசாயிக்குக் கட்டுப்படியாகிற கூலியைக் கோரி, ஒரு நாள் வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது.

இப்படிப்பட்ட முறையில் பொருளாதாரக் கொள்கைகளின் அடிப்படையில் எங்கள் போராட்டம் அமைந்திருக்கிறது. அது ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தமே தவிர, காலவரையறையற்ற வேலைநிறுத்தம் அல்ல. நிலைமை இவ்வாறு இருக்கும்போது, இந்தப் போராட்டத்தை, அடையாள உண்ணாவிரதத்தை எப்படி திரு. ஜே பி அவர்களின் போராட்டத்தோடு ஒப்பிடுகிறீர்கள் என்றுதான் கேட்க விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, திரு ஜே பி அவர்களின் போராட்டத்தைப் பற்றி அந்த அம்மையாரே கூட நீங்கள் கூறுவதைப் போல் சொல்லவில்லை. அப்படி இருக்கும்போது எதற்காக நீங்கள் "Why are you more royal than the king? அதனால்தான் கேட்கிறேன். எப்படி நீங்கள் திரு. ஜே பி யின் போராட்டத்தையும் எங்கள் ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தையும் ஒன்றாக இணைக்கிறீர்கள் ?

எல்லாவற்றிற்கும் அரசியல் போர்வையைப் போர்த்திவிடுவது என்பது சரியல்ல. நான் "ஸ்பெசிபிக் இஷ்யூக்களைச் சைட்" பண்ணிப் பேசும்போது, சம்பந்தமில்லாத முறையில் பேசுவது என்பது நியாயமில்லை. இந்தக் கருத்தைச் சொல்லும்போது, போலந்து பற்றியும் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

(முற்பகல் 11-10)

போலந்தைப் பற்றி என்ன சொல்கிறேன் என்றால், போலந்து கவர்ன்மென்ட்

திரு. க. இராமமூர்த்தி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவைகளையெல்லாம் இங்கே பேசக்கூடாது. 'இன்டர்நேஷனல் பாலிடிக்ஸ்' தெளிவாகப் பேச வேண்டுமென்றால் முன்பே சொல்லியிருக்கலாம். நாங்களும் படித்துவிட்டு வந்திருப்போம். இப்படி திடீரென்று off haud ஆகப் பேசுவது சரியல்ல.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இந்த விவாதத்தை மூன்று நாட்களுக்கு நாம் வைத்துக்கொள்ளவில்லை. ஒரு நாள்தான்.

திரு. ஆ. நல்லசிவன்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி புரிந்து கொள்ள முடியவில்லை என்றால் . . .

* THIRU K. RAMAMOORTHY: The hon. Member wants this body to be converted into Parliament or something else for which we are not prepared. Is this the forum. . .

திரு. ஆ. நல்லசிவன்: நான் சவாலுக்கு வரவில்லை.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவைக்கு நேரமில்லை.

திரு. ஆ. நல்லசிவன்: தொழிலாளர் நலப் பிரச்சினைகள் வரும்போது, அந்தப் பிரச்சினையும் வருகிறது. போலந்து பற்றி நான் இழுக்கவில்லை. போலந்து பிரச்சினையைப் பற்றி இழுத்தது அமைச்சர்தான். போலந்தில் தொழிலாளிகள் எந்த முதலாளியையும் எதிர்த்து ஸ்டிரைக் பண்ணவில்லை. சாலிடாரிட்டி இயக்கத்தைப் பொறுத்தவரையில், அரசியல் அத்துமீறல்கள் நடக்கின்றன, ஆகவே போலந்து அரசாங்கம் செய்வதை வரவேற்கிறேன் என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இங்கே நீங்கள் அத்து மீறிப் போகிறீர்கள், அரசு அத்து மீறிப் போகிறது. ஆகவே உங்களுக்கு எதிராக நடப்பவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டியிருக்கிறது. போலந்தில் தொழிலாளிகள் முதலாளிகளை எதிர்த்துப் போராட எங்கேயும் எந்த முதலாளியும் இல்லை. சாலிடாரிட்டி இயக்கமும், அமெரிக்க ஏகாதிபத்திய இயக்கமும் சேர்ந்துகொண்டு செய்கிறார்கள்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, போலந்துக்குப் போய்க் கொண்டிருக்கிற உறுப்பினர் அவர்கள் இரயிலுக்குப் போக வேண்டியவர். ஆகவே போலந்திலிருந்து சென்னைக்கு வந்தால் சரியாக இருக்கும்.

திரு. ஆ. நல்லசிவன்: அமைச்சர் அவர்கள் போலந்துக்குப் போகாமல் இந்தியாவிற்குள்ளே, சென்னையிலே இருந்துகொண்டு பேசியிருந்தால் பரவாயில்லை. அதைப்பற்றி இன்னொரு நாள் இங்கே பேசப்போகிறார்கள். ஆகவே முன்கூட்டியே நான் பேசுகிறேன். இப்போது நாம் இருப்பது 1917 ஆம் ஆண்டில் அல்ல. 1982 ஆம் ஆண்டில் இருக்கிறோம். ஆகவே இப்போது போராட்டம் தேவையில்லை என்று சொல்லுவதைவிட இன்டெலிஜென்டாக முதலாளிகளை 'கார்னர்' பண்ண கற்றுக்கொள்ள வேண்டும். அப்படி இன்டெலிஜென்டாகச் செய்யவில்லை. உலகம் பூராவும் நடைபெறுகிற தொழிலாளர் இயக்கத்தை, தொழிலாளர்களுக்காக அவர்கள் மேலும் மேலும் முன்னேற உள்ள இயக்கத்தைக் குறுகிய கண்ணோட்டத்தோடு பார்க்காமல் பேச வேண்டும் என்பதற்காகத்தான் போலந்து ஹிஸ்டரியைப்பற்றி நாங்களே அழமாகப் பேச வேண்டியிருக்கிறது. போலந்தைப் பற்றி இவர்கள் சொல்லுவதைப் பார்த்தால், உண்மையிலேயே இவர்கள் சோஷலிஸ்டுகள்தானா என்ற சந்தேகம் வருகிறது. ஆகவே அப்படிப்பட்ட பிரச்சினைகளுக்குள்ளே போகாமல் நம் நாட்டிற்குள் இருந்து பேசுகிறபோது, இந்த அரசு தன் கையில்

[திரு ஆ. நல்லசிவன்] [1982 மார்ச் 27

உள்ள அதிகாரத்தை கோர்ட்டின் மூலமாக, போலீஸ் மூலமாக, அதிகாரிகள் மூலமாக, முதலாளிகளுக்கு ஆதரவாகப் பயன்படுத்துகிறார்கள் என்று சொல்லுகிறேன். காடம்பாறையில் உள்ள தொழிற்சாலையை மூடிவிட்டதால், கிட்டத்தட்ட 150 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படித் தொழிலாளர்களை நசுக்குவதால், பிறகு வெறுவிதமாக 'டெவலப்' ஆகும் போது தொழிலாளர்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து நிலைமைகள் வரும் போது, இன்றைக்கு உங்களுக்குள்ள அதிகாரத்தை வைத்து அஞ்சாவிட்டாலும், அதைச் சமாளித்துவிட்டாலும்—பிறகு வரக்கூடிய நிலைமைக்கு அஸ்திவாரமாக அது அமையும் என்பதை ஞாபகப்படுத்தி தொழிலாளர் விரோதப் போக்கை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* THIRU A. R. DAMODARAN: Hon. Deputy Chairman, Sir, I am glad in a way that I am following my good friend Thiru Nallasivan in this discussion on the Labour policy of the Government of Tamil Nadu. I realise that this is a very sensitive area and rendered more senstive by the fact that the entire field of industrial relations today indicates not only certain stresses and strains that exist in the field of industrial relations between management and labour but rendered more complicated by the fact that political parties have assumed this to be a free-for-all area to settle their political disputes. We have had many discussions in the past about the multiplicity of trade unions in this field and complications have arisen because one majority union accepts an agreement and various minority unions do not. In Tamil Nadu we have had the other spectacle of witnessing various political combinations from 1967 to 1982 the phrase that was used by an hon. Member yesterday when he said that such affiliations had a fluctuating character. The ruling party had an alliance with C.P.I. Left in 1967, in 1971 they had an affiliation with the C.P.I. and in 1979, by a happy combination of circumstances, both the Communist Parties found themselves in agreement with the ruling party and again in 1980 there was a combination of the political parties, which today seems to be in considerable disarray as my hon. Friend Thiru Nallasivan has pointed out. I do not wish to comment, Sir, on this political affiliation because that is not strictly the subject-matter of my discussion today. I would like to express certain thoughts because the difficulties experienced in the field of industrial relations are highlighted only from one particular angle and one particular aspect and the difficulties

1982 மார்ச் 27] [Thiru A. R. Damodaran]

experienced by thousands of industries which are maintaining good industrial relations in Tamil Nadu are rarely highlighted in the debates in both the Houses. I am emboldened in my approach by the statement that has been made by the Hon. Minister in his note that the Labour Department in this State is working to ensure an atmosphere of industrial harmony wherein the workers get their due rights recognised and the management have the freedom to plan and work for the development of industry in the larger interests of society. This, in my opinion, is a very healthly and constructive approach. While I do not wish to controvert some of the details that may have been given by my hon. Friend Thiru Nallasivan who has very rightly espoused the cause of the workers whom he represents, may I point out that employers also have their difficulties in resolving many disputes that arise in the arena of industrial relations?

(மாற்றுத் தலைவர் திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி தலைமை)

According to the figures furnished by the Hon. Minister, he has pointed out that in 1981, 41 lakh man-days have been lost due to strikes and lock-outs as against 36 lakh man-days in 1980. He has also given details of the various industrial establishments where strikes and lock-outs have contributed to loss of man-hours. One significant factor that seems to emerge is that most of the major disputes in Tamil Nadu have arisen, not on ground of wage revision, but on grounds of bonus payment. When the late lamented Labour Minister in the Government of India, Thiru Khadilkar, who is no more, enunciated his philosphy of minimum borus, it was pointed out by employers even at that time that the Bonus Act would result in considerable disputes in the industrial field because certain well-established criteria had not been recognised in the legislation. It has been stated, much to my dismay, that bonus is considered to be a deferred wage. If bonus is considered to be a deferred wage, then I am afraid I am not able to understand what minimum wage, need-based wage or the fixation of wages in industrial establishments means. There are many private sector establishments even in Tamil Nadu where the wages are linked to the cost of living index and there is an automatic increase in the payment of dearness allowance because of an increase in the cost of living. It must be accepted that, while the concept of minimum bonus has come to stay, these disputes regarding bonus, where

[Thiru A. R. Damodaran] [1982 மார்ச் 27

claims are made for 50 per cent, 60 per cent and 70 per cent bonus, if allowed to accumulate in our State, will only result in more and more industrial disputes.

(முற்பகல் 11-20)

As I said, this is a sensitive area. But I would like to suggest to my hon. colleague Thiru Nallasivan as well as to the Hon. Minister that we should settle this with some degree of finality by having consultatives with both management and employees and arrive at some mean which would prevent the frequent exposure of industries to such closures resulting in loss of man-hours as well as in considerable suffering to the employees of such establishments. South Arcot has witnessed particularly in 1981 ugly dispute which have resulted in closure of industrial establishments—Particularly in Vadalur, a few days in the Neyveli Lignite Corporation which disputed has happily been settled, various textile mills which have also been closed due to such bonus disputes. I would like to say that when we have come to some measure of agreement regarding wages, regarding dearness allowance regarding norms of work, regarding productivity bonus which is a good concept, these endless disputes are causing a great deal of disturbance in the industrial field. I hope that it will be possible for the Hon. the Labour Minister to do it. Although he has been attacked in a very vehement fashion by my friend Thiru Nallasivan that he is anti-labour, I think, in my opinion, the Labour Minister is far from being anti-labour and he is extremely pro-labour as seen from the very instances that have been brought to our notice. In other areas, because of the conflict among trade unions, there is bound to be a conflict between the ruling party union and the D.M.K. union or the C.P.M. Union and this may reflect in the criticism of the Labour Minister as such. But I do not think the Government as such have adopted any firm anti-Labour policy. If at all they can be accused of, it is that they lack certain decisive policies and that they keen changing their policies from time to time according to the changing circumstances that exist. That perhaps may be a legitimate criticism.

I would like to deal next with the administration of the Employees Provident Fund Act. I had occasion to refer to the difficulties of employees because of the lack of proper administration of the Employees Provident Fund Act. The Hon. the Labour

1982 மார்ச் 27] [Thiru A. R. Damodaran]

Minister says that he is not in charge of this. But I would like to bring it to his notice because I think there are representatives of the department of labour in the Provident Fund Board that has been established. From the statistics given, it has been noted that as against 60,593 claims pending as on 1—1—1981, 46,743 claims have been settled but 8,937 claims have been returned for rectification of defects. Many employees have represented that their claims for settlement of provident fund dues are being delayed because these claims are being returned for rectification of very minor defects—nominations are not supposed to be in order or some certificate has not been produced from some local authority and this is causing a great deal of hardship to those who legitimately expect that their E.P.F. dues will be settled promptly. Similarly, in the application of the Employees' Family Pension Scheme, the Government has mentioned in this Note that out of 46,911 claims pending as on 1—1—1981, 32,463 claims have been settled and that 9,899 claims have been returned for rectification of defects. A similar parallel exists in the implementation of the Employees' Deposit-linked Insurance Scheme, where out of 3,921 claims pending as on 1—1—1981, 2,041 claims have been settled and 1,232 claims have been returned for rectification of defects. It has been pointed out to me by many employees that the return of these claims is being done on extremely minor matters. I would like the Hon. the Minister for Labour, through his representative on these Boards, to make a through study of why such claims are being returned and what are the rectifications that are sought to be made. We would like a procedure to be evolved by which such return of claims could be minimised and reduced. When a person applies for Family Pension, it means that the wage-earner has died and the person who applies for this pension is in very dire need of economic aid which is being delayed because of such return of claims. I only mention this because the Hon. Minister has mentioned in his Note that the Family Pension has been raised from Rs. 40 to Rs. 60 in the year 1981 and that the Insurance amount payable in the case of such of those employees who die while in active service has also been revised from Rs. 1,000 to Rs. 2,000. I welcome this because in these days of inflation this is absolutely necessary. I would plead with the Hon. the Labour Minister to increase the minimum Family Pension to Rs. 100 per month and to raise the amount of Life Insurance payable to the survivors of employees who die in service from Rs. 2,000 a minimum of Rs. 5,000. The payments are to be

[Thiru A. R. Damodaran] [1982 மார்ச் 27

made promptly. I would also like to point out tha many of these claims are being returned because of the nomination-defects which have been pointed out by the authorities. I believe that much of the delay that exists in this office is becauce of the manual operation that is being effected. I would plead with the Government to investigate whether a certain degree of data-processing—I shall not use the word computerisation because it will immediately raise bogies of unemployment—is necessary because the number of contributions under this scheme is well over 13 lakhs in Tamil Nadu alone.

One point has been mentioned in paragraph 8(12) of the Policy Note that it is the policy of this Government to provide one job for each family. May I point out that in many of our organised industrial establishments the exact opposite is happening under the pressure of various groups? All jobs go to the same family because of the pressure that is being brought to bear upon managements. I would plead with the Hon. Minister to ensure that jobs in such big industrial establishments are not cornered by those who are already working in such establishments. In fact, in every sector, the plea is made that preference should be given to those who are already working in such establishments. I think that, when we are aiming to see that employment is diversified and spread over as large a section of the population as possible, it should be the conscious endeavour of the Government to ensure that jobs are given also to those who are not related to those already employed in that factory.

An important policy is sought to be introduced by the Hon. Minister and that has also been published in the *Tamil Nadu Gazette*. Reference has also been made by various Members to certain aspects of unorganised labour. It seams that a Bill has also been introduced.

The Bill is called the Tamil Nadu Manual Workers Regulation of Employment and Conditions of Work Bill, 1981.

VICE-CHAIRMAN (THIRUMATHI Mandakini Krishnamurthi) : Sir, the hon. Member"s time is up

1982 மார்ச் 27]

THIRU A. R. DAMODARAN : It refers to the de-casualisation of labour in various ....

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு மேலவை மாற்றுத் தலைவர் அவர்களே, இதுபற்றி மேலவையில் விவாதத்திற்கு வரப் போகிறது. பேரவையில் அறிமுகப்படுத்தியிருக்கிறேன் அப்போது விரிவாகப் பேசினால், அது உபயோகமாக இருக்குமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN : I only want to mention briefly that if this Bill is somewhat like the Athimari Bill in Kerala and if the Government want to de-casualise the various operations in markets, shops and shandies, the Hon. Minister will land himself in greater trouble than he is in today. I do not mind if it is a case of the construction workers being recognised but if the Government are going to lay down conditions for unloading and loading operations, as has been mentioned in the Bill, I shall speak later when the Bill comes before this House. But, then the Hon. Minister must realise that it may be too late, because it will be moved on the last day of the session and I only wanted to mention this today itself, so that if any corrections were possible, he might do so at an early stage.

Only two more minutes, Madam. Minimum wages legislation—I shall speak in a telegraphic language, because my time is up. Everybody has advocated minimum wages in agriculture. Minimum wage has been introduced and now the Hon. Minister has a proposal to raise the minimum wages for agriculture. Sir, in industries, if we raise the wages, if we pay the bonus and if we pay other benefits to labour, in the next year, the cost of labour inputs is taken into account and the cost of the end product goes up. In agriculture, the real danger lies in the fact that when we raise the wages for agricultural labour—I am not opposing it, because inflation may require such rise in wages—if the Government are prepared to accept as a matter of principal that the labour component of the cost is growing, for example, one quintal of paddy is about 33 or 35 per cent and if the Government announce simultaneously an increase in the procurement price of paddy, then I am perfectly willing to accept any increase that the Government announce in the agricultural labour wages. But if the Government merely announce that wages will go up by

Rs. 3 a day and fail to compensate all types of landowners by raising the price of this produce, the procurement price which is the basic price of their produce, then trouble arises. The entire cost structure of agricultural operations is upset and I would plead with the Hon. Minister that when he lays down conditions of minimum wage, he should also realise that simultaneous increase must be given in the cost of end product. They do this in the case of industrial establishments where wages, bonus, etc. increase year after year and the price of the end product also goes up. That is why a claim has been made by those involved in agriculture that parity between agricultural prices and industrial prices is not being maintained resulting in a lot of difficulty to those involved in agriculture.

One more subject which I shall deal with very briefly, Madam, and I shall end is about the Weights and Measures Department which also comes under the control of the Hon. the Minister for Labour. Mention has been made in this Note about various inspections that have been carried out in the petrol trade and in the cement industry and how these measures have resulted in some improvement. May I point out that whether it is a verification of Indane gas cylinders, whether it is a verification of the cement bags in dealers' godone, whether it is a verification of petrol and diesel measures in pumps, it has been pointed out in the Note itself that these defects are found even at the manufacturers' end. For example, in the cement industry, it was found that when they weighed certain number of bags at the despatching centre itself, the percentage of defective weight was found to be as much as 22 to 25 per cent and when they came to the dealers' end, it was also found that this existed.

(முற்பகல் 11-30)

My plea is that in the cement industry, you will not get rid of this complaint unless you introduce a system of polythene packing, as you have done in the case of fertilisers. In the fertiliser industry, whether it is urea or other costly fertilisers, the packing that has been adopted has helped in the consumer getting his due quantity. I would plead, as I pleaded at the meeting that was held in the Weights and Measures Department, that the Hon. the Minister for Labour who is in charge of this particular enactment should also ensure that the manufacturers do their packing well so that we may not lose in the bargain.

As far as petrol pumps and diesel pumps are concerned, I would like to mention that the procedures prescribed in Schedule VI of the Weights and Measures Act regarding the quality of the verification measures and the manner in which the verification should be done are not followed, not by members of the Weights and Measures Department, but by various other Departments which have taken upon themselves the responsibility of verifying the measures in these areas. I would like to mention to the Hon. the Minister for Laboux that if a verification should be made, it should be made by an officer of the Weights and Measures Department and not by any Police officer or any official of the Revenue Department who goes to the market, takes a measure from the market and does the verification. These market measures are not expected to be used for verification of deliveries at petrol pumps. I wanted to mention this because a particular mention has been made in the Policy Note that a drive in Madras City resulted in 351 petrol pumps being inspected and 60 petrol pumps being found to deliver short measures. Unfortunately, in this Note, it is not mentioned that another 100 pumps out of these 351 were delivering excess measures. It is not fair to the trade to single out and say that 60 measures were found to be short when you found 100 measures delivering excess. It all depends upon the manner in which these mechanical contraptions work and that is why certain tolerances have been prescribed in the Act. I only wanted to mention this because false impressions may be created about the trade by giving undue publicity only to one particular aspect and neglecting to mention that other things have also been found during inspection. I would also plead that when they stop delivery at a pump, immediately, the Weights and Measures Department itself should, on collection of the fee prescribed, standardise the measure in that pump on the same day. Now what happens is that they go on a Saturday afternoon and inspect the pump and they find some defect which is due to certain tolerances. The seal is intact and the dealer is not responsible because the pump belongs to the Oil Company, and the seal is placed by the Weights and Measures Department. If there is something defective in these mechanical contrivances, they say, 'You should not effect sales'. Then, the dealer has to wait till Monday or Tuesday before the pump can be sealed again. I would plead with the Hon. Minister that where there has been no malpractice and where the seal is intact, a procedure should be adopted whereby

immediately the pumps are re-sealed on payment of the prescribed fee. This will help many dealers who are not responsible for the behaviour of these pumps which belong to the Oil Company. I would also mention that prosecution should not be launched where seals are found intact. This has been accepted by High Courts. But, I wish to bring to the Hon. Minister's notice that in the locality formerly known as George Town, in the First Line Beach, one particular petrol dealer has been taken to Court unnecessarily in this regard and the matter is still pending in Court. I would plead with him to call for the file and see for himself whether any malpractice has been done by this particular dealer. If he finds that the dealer is not responsible for it, suitable action may be taken to withdraw the case from the Court.

I would only end with the plea that in the administration of the Shops and Establishments Act also the coercive process should not be adopted. I remember that once in Thirukkoilur or Vriddhachalam, for the non-maintenance of forms like Form III or Form V that are prescribed in the Act, more than thirty shop-keepers were taken to Court needlessly and fined Rs. 25. If it is a serious offence under the Payment of Minimum Wages Act, etc., I can understand such coercive action. But, non-maintenance of forms should not result in needless prosecution of shop-keepers and such harassment should be avoided. In fact, in one Note it was mentioned that as far as possible the Department was adopting a process by which they tried to have the shop-keepers rectify these defects before the next inspection. I hope that this wholesome principle will be adopted in the administration of the various enactments under the Act. Thank you, Madam.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, தொழிலாளர் நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின் மீது ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். தொழிலாளர் நலனுக்காக மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரவர்களும், தமிழக அரசும் எடுத்தவரும் ஆக்கபூர்வ நடவடிக்கைகளை நான் வரவேற்கும் சமயத்தில் ஒருசில ஆலோசனைகளையும் மாண்புமிகு அமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அறிக்கையிலே வரைமுறைப்படுத்தாத தொழில்களில் ஈடுபட்ட தொழிலாளர்கள் நிலைமை பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

(மாற்றுத் தலைவர் திருமதி சீதாதேவி கிருஷ்ணசாமி)

(முற்பகல் 11-40)

அதிலே சேர்க்க வேண்டிய ஒரு பிரிவினர்களாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் இங்கே குறிப்பிட்டதுபோல், கட்டிடத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய நலன் குறித்தும் இந்த அரசு ஆக்கபூர்வமாகப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சென்ற ஆண்டு நான் குறிப்பிட்டதுபோல், இப்போதும் ஒன்றைக் குறிப்பிடுகிறேன். மாநிலம் முழுவதும் இன்றைக்கு மாணவர்களுக்காக என்று விடுதிகள் இருக்கின்றன. இவை தனியாரால் நடத்தப்படுகின்றன; பிற்பட்டோர் நலத் துறையால் நடத்தப்படுகின்றன, ஆதி திராவிடர் நலத் துறையால் நடத்தப்படுகின்றன, பல்கலைக் கழகங்களால் நடத்தப்படுகின்றன, கல்லூரிகளால் நடத்தப்படுகின்றன, பள்ளிகளால் நடத்தப்படுகின்றன, மற்றும் தனியார் துறைகளாலும் நடத்தப்படுகின்றன. ஆனால் இந்த விடுதிகளில் பணியாற்றக்கூடிய தொழிலாளர்களுடைய நிலைமை திருப்திகரமாக இல்லை. அவர்களுக்குப் பணிப் பாதுகாப்பு இல்லை. 10 மாதங்கள் கல்விக்கூடங்கள் திறந்திருக்கின்றன. பிறகு 2 மாதம் கோடை விடுமுறை என்று சொல்லி மூடப்படுகின்றன. இந்தச் சமயத்தில் அங்கு வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள் வீட்டுக்கு அனுப்பப்படுகிறார்கள். மறுபடியும் கல்விக்கூடங்கள் திறந்ததும், அவர்களை வேலைக்கு எடுக்கிறார்கள். இதன் காரணமாகப் பல்லாண்டுகளாக, 10, 15, 20 ஆண்டுகளாக அவர்கள் தற்காலிகப் பணி நிலைமையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் குறைந்த பட்ச ஊதியம் இல்லை. இதை நான் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இந்த நேரத்தில் கொண்டு வருகிறேன். அவர்களுக்குப் பணிப் பாதுகாப்பு, குறைந்தபட்ச ஊதியம், இதர பாதுகாப்புகள் போன்றவற்றை அளிக்க சட்டம் கொண்டுவர வேண்டும். அவர்களுடைய எண்ணிக்கை குறைவாக இருக்கலாம். நடைமுறைச் சட்டங்களின் கீழ் அவர்கள் வர முடியவில்லை. இதன் காரணமாக சமீபத்தில் நாம் பார்த்தோம். அண்ணாமலை நகரில் இப்படி வேலை செய்துகொண்டிருந்த ஒருவர் வேலை இழந்ததன் காரணமாக, வேலை அவருக்குத் தரவில்லையாதலால்; தற்கொலை செய்துகொண்டார். இதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அறிந்திருப்பார்கள். இப்படிப்பட்ட பரிதாபகரமான நிலைமைகள் இந்தத் தொழிலாளர்களுக்கு இருக்கின்றன.

அதுபோல் மளிகைக் கடைகள், இதர ஷாப்புகள் போன்றவைகளில் பணி புரிந்துகொண்டிருக்கிறவர்களுக்குப் பணி புரிகின்ற வேலை நேரம் போன்றவற்றை சட்டப் பூர்வமாக நாம் தெளிவாக்கியிருந்தாலும், நடைமுறையில் அது

பின்பற்றப்படுவதில்லை. வேலை நேரத்தைப் பொறுத்தவரையில், கால அளவு வரையறை இல்லாமல் அவர்கள் பணி புரிந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் பணிப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். ஊதியம் தர வேண்டும். அதற்குத் தகுந்தபடி சட்ட முன்வடிவுகளைக் கொண்டுவர வேண்டும்.

இன்னொன்றையும் நான் குறிப்பிடுகிறேன். ஒரே வேலை செய்கின்ற, ஒத்த வேலை செய்கின்ற ஆண்களுக்கும் பெண்களுக்கும் கூலி விகிதங்களில், சம்பள விகிதங்களில் ஏன் வேறுபாடு, ஏற்றத்தாழ்வு இருக்க வேண்டும்? இதை அகற்ற இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று நான் அறிய விரும்புகிறேன். ஒத்த வேலை செய்கின்ற ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரே விகிதத்தில் கூலியை, சம்பளத்தை நிர்ணயிக்க சட்டம் கொண்டுவர வேண்டும். இந்த அறிக்கையிலேயே கூட பின்னி, இந்தியன் எக்ஸ்பிரஸ் போன்றவற்றில் ஏற்பட்ட தொழில் தகராறுகள் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதுகுறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளை நான் வரவேற்கிறேன்.

113 ஆண்டுகளாக, 1868 ஆம் ஆண்டிலிருந்தே நடைபெற்று வருகிற ஒரு பழம் பெருமை வாய்ந்த பத்திரிகை நிறுவனம் சென்ற ஆண்டு மூடப்பட்டது. இழப்பின் காரணமாக அது மூடப்பட்டது என்று நிர்வாகம் அறிவித்தது. அப்படியானால் அங்கு பணிபுரிந்துகொண்டிருந்த தொழிலாளர்களுக்கு மாற்றுப் பணிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டதா? அல்லது அந்தப் பத்திரிகை நிர்வாகத்தை மறுபடியும் நடத்த அந்த நிர்வாகம் அரசுடன் தொடர்பு கொண்டிருக்கிறதா? அல்லது இதுகுறித்து மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் ஏதாவது முயற்சியை மேற்கொண்டிருக்கிறார்களா என்பதைப்பற்றி இங்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டும். எது எப்படி இருந்தாலும் அங்கு வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளர்களுக்குத் தகுந்த பணிப் பாதுகாப்பை அளிக்க வேண்டும். அவர்களுக்கு மாற்று வேலை அளிக்க மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆசிரியர்களுக்குத் தொழிற் சங்க உரிமை கொடுக்க வேண்டுமென்று பல்லாண்டு காலமாக நாங்கள் கேட்டுக்கொண்டு வருகிறோம். அண்மையில் இதுபற்றி புகழ்பெற்ற சுப்ரீம் கோர்ட்டின் ஓய்வுபெற்ற நீதிபதி திரு. கிருஷ்ணய்யர் ஒரு கருத்து கூறியிருக்கிறார். "ஆசிரியர்களும் தொழிலாளர்கள்தான். அவர்களுக்கும் தொழிற் சங்க உரிமையைப் பெற உரிமை இருக்கிறது". இப்படிச் சொல்லியிருப்பது சுப்ரீம் கோர்ட்டில் பன்னெடுங்

காலமாக நீதிபதியாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். அந்த வகையில் உரிமை கொடுக்க இந்த மாநில அரசுக்கு அதிகாரம் இல்லையென்றால் இது குறித்து மத்திய அரசோடு தொடர்பு கொண்டு ஆவன செய்ய வேண்டும். அப்படிப்பட்ட அதிகாரங்களைப் பெற அல்லது அதற்குத் தகுந்தபடி இந்திய அரசியல் சட்டத்திலே சட்டத் திருத்தங்களைக் கொண்டுவர மாநில அரசு மத்திய அரசுடன் தொடர்பு கொள்ள வேண்டும். இன்றைக்கு பல்வேறு மாநிலங்களில் ஆசிரியர்களுக்குத் தொழிற் சங்க உரிமை வேண்டுமென்று கேட்கிறார்கள். அவர்கள் தொழிலாளர்கள் அல்ல என்று சொல்லி அவர்களுடைய கோரிக்கையை ஒதுக்கிவிடும் நிலைமை வரக்கூடாது. அப்படி ஒதுக்கினால், ஆசிரியர்கள் எந்தப் பிரிவில் வருவார்கள்? ஆகவே ஆசிரியர்கள் 'ஆசிரியர் தொழிலைச்' செய்கிறார்கள். அதுவும் ஒரு தொழில்தானே. ஆசிரியர் பணி புனிதமானது, தெய்வீகமானது என்கிற வியாக்கியானத்திற்கு தயவு செய்து இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், போக வேண்டாம். ஆசிரியர்கள் தொழிற்சங்க உரிமையைப் பெறத் தகுதியுடையவர்கள். அப்படி தொழிற்சங்க உரிமை தரும்போது, இன்று மைனாரிட்டி நிறுவனங்கள் என்று சொல்லி அங்கு பணியாற்றுகிற ஆசிரியர்களுக்குத் தவறு இழைக்கும்போது தப்பித்துக்கொண்டிருக்கும் மைனாரிட்டி நிறுவனங்கள் தப்ப முடியாது. இன்றைக்கு அவர்கள் மைனாரிட்டி நிறுவனங்கள் என்று சொல்லி, அரசியல் சட்டத்திலே 30, 31 ஆவது பிரிவிலே இருக்கிற பாதுகாப்பைச் சொல்லி தப்பித்துக் கொள்கிறார்கள். ஆதலால் மைனாரிட்டி நிறுவனங்களில் இன்றைக்கு ஆசிரியர்களுக்கு இருக்கின்ற பணிப் பாதுகாப்பற்ற நிலையும் போக்கப்படும். அதற்கு ஒரு மாற்று ஏற்பாடாக, ஒரு கவசமாக, ஒரு பாதுகாப்பாக இந்தத் தொழிற் சங்க உரிமை விளங்கும். இது நியாயமான ஒன்று. அப்படிச் செய்யப்பட்டால், மைனாரிட்டி நிர்வாகங்கள் அரசியல் சட்டத்தைத் தங்கள் கையில் எடுத்துக்கொண்டு, தங்கள் இஷ்டம்போல் செயல்பட முடியாது. இதை நான் இந்தச் சமயத்தில் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தமிழகத்தைப் பொறுத்தவரையில், படித்துவிட்டு வேலையில்லாதிருப்பவர்களின் எண்ணிக்கை சுமார் 13 லட்சம் என்று இருக்கிறது. இந்த விவரம் நம்முடைய அறிக்கையிலேயே இருக்கிறது. 1981 டிசம்பர் வரை படித்துவிட்டு, வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்து விட்டு, வேலையற்றிருப்பவர்களுடைய எண்ணிக்கை 12 லட்சத்து, 60 ஆயிரத்து 991 என்று சொன்னால், இவர்களுக்கு வேலை கொடுக்க இந்த அரசு என்ன திட்டங்களை வகுத்திருக்கிறது என்று நான் அறிய விரும்புகிறேன். படித்துவிட்டு வேலைவாய்ப்பகத்தில் பதிவு செய்துவிட்டு வேலையில்லாமல் இருப்பவர்களுடைய எண்ணிக்கை இப்படி இருக்கும்போது, வேலைக்கு ஆட்கள் தேவைப்பட்டு, சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் பட்டியலை அனுப்பும்படி கேட்கும்போது,

அதை அனுப்புவதில் வீண் காலதாமதம் செய்கிறார்கள். இப்படி காலதாமதம் செய்வதைத் தவிர்க்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டுமானால் அதற்கு முக்கியமான 3 குறிப்புகள் காணப்படு கின்றன. ஒன்று வயது, இன்னொன்று (Merit) மற்றொன்று சீனியாரிட்டி. இந்த மூன்று அம்சங்களின் அடிப்படையில் வேலை கொடுக்கலாம் என்று இருக்கிறது. வயது, சீனியாரிட்டி ஆகிய இரண்டைப் பொறுத்தவரையில், வேலை கொடுப்பவர்கள் இந்த இரண்டையும் அவர்களுடைய விருப்பம்போல் மாற்ற முடியாது. ஆனால் மெரிட்டுக்குச் சரியான முறையில் வழி காட்டும் குறிப்புகள் இல்லாததால், நியமன அதிகாரிகள் தங்களுடைய விருப்பம்போல் அதனை மாற்றுகிறார்கள். மெரிட் என்பதற்கு வியாக்கியானம் என்ன, விளக்கம் என்ன என்பது குறித்து தெளிவாகக் குறிப்பு கொடுக்க வேண்டும். அப்படி விளக்கம் கொடுக்கப்படாத வரையில், அரசாணையின் காரணமாக, அவர்கள் தங்கள் விருப்பம்போல், மனம் போன போக்கிலே, தனி அர்த்தம் கொண்டு, தனி interpretation கொடுத்து பல தவறுகளைச் செய்ய ஏதுவாக இருக்கிறார்கள். இதை நான் இந்த சமயத்தில் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இன்னொரு கருத்தும் இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. படித்துவிட்டு, வேலையில்லாதிருக்கும் பெண்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பதுபற்றி ஆய்வு நடத்துவதுபற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. படித்து விட்டு வேலையில்லாதிருக்கும் பெண்களின் எண்ணிக்கை 26 ஆயிரத்து 80 என்று கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. இப்படி படித்துவிட்டு வேலை யில்லாதிருக்கும் பெண்களைப் பொறுத்தவரையில், தமிழகம் நான்காவது வரிசையில் இருக்கிறது. இப்படி நான்காவது இடத்துக்கு வருகின்ற அளவுக்கு பெண்களின் நிலை தள்ளப்பட்டிருக்கக் கூடாது. பெண்கள் படித்துவிட்டு இவ்வாறு வேலையில்லாதிருப்பது சமுதாயத்தின் முக்கியமான வளர்ச்சிக்கு அறிகுறி அல்ல. ஆகவே படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிற பெண்களுக்கு விரைந்து வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க இந்த அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து, வேலைவாய்ப்பு தொடர்பாக அண்ணாமலைப் பல்கலைக் கழகம், மதுரைப் பல்கலைக் கழகம், சென்னைப் பல்கலைக் கழகம் போன்ற இடங் களில் எல்லாம் பல்கலைக் கழக வேலைவாய்ப்பு வழிகாட்டிப் பிரிவுகள் Employment Guidance Bureau என்று இருக்கிறது. இது இந்தப் பல்கலைக் கழகங்களின் வளாகங்களுக்குள்ளேயே இருக்கிறது.

(மாற்றுத் தலைவர் திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி தலைமை)

(முற்பகல் 11-50)

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கும் அறிக்கையின்படி, சென்னைப் பல்கலைக் கழக வளாகத்தில் அமைந்திருக்கும் நிலையத்தில், 1981 டிசம்பர் அன்றுள்ள நிலவரப்படி, வேலை கோரி பதிவு செய்து கொண்ட வர்களின் எண்ணிக்கை 282. அத்தனை பேர் பதிவேட்டில் இருக்கிறார்கள். ஆனால் அதில் வேலைவாய்ப்பு பெற்றவர்களின் எண்ணிக்கை 7. அதைப் போலவே அண்ணாமலைப் பல்கலைக் கழக வளாகத்தில் உள்ள நிலையத்தில் பதிவேட்டில் உள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 457. அதில் வேலை வாய்ப்பு பெற்றவர்களின் எண்ணிக்கை 20. ஆனால் மதுரைப் பல்கலைக் கழக வளாகத்தில் உள்ள நிலையத்தில் உள்ள பதிவேட்டின்படி உள்ளவர்களின் எண்ணிக்கை 3,544. அதில் வேலைவாய்ப்பு தரப்பட்டவர்களின் எண்ணிக்கை 152. மதுரையில் உள்ள நிலையத்தில் மட்டும் இந்த அளவுக்கு ஏன் அதிகமான எண்ணிக்கை இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டுமென்று சம்பந்தப்பட்ட துறையினரை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன். இதற்குக் காரணம் என்னவென்றால், சம்பந்தப்பட்ட நிலையத்தில் வேலை வாய்ப்புக்கான நபர்களின் பட்டியலை அனுப்ப வேண்டும் என்று கேட்கப்படும்போது, மதுரைப் பிரிவிலிருந்து சரியான முறையில் உரிய நேரத்தில் பட்டியல் அனுப்பப்படுவதில்லை. இதன் காரணமாக அங்கே பதி வேட்டில் இருப்பவர்களின் எண்ணிக்கை அதிகமாகவே இருக்கிறது. இதைக் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்குக்கூட நான் கொண்டு வந்திருக்கிறேன். குறிப்பிட்ட தேதிக்குள் பட்டியலை அனுப்ப வேண்டு மென்று துறைத் தலைவர்கள் அல்லது அதிகாரிகள் கேட்கும்போது, மதுரையைப் பொறுத்தவரையில், உரிய நேரத்தில் குறிப்பிட்ட தேதிக்குள் பட்டியலை அனுப்புவதில்லை என்ற குறைபாடு இருக்கிறது. இதன் காரண மாகத்தான் மதுரைப் பல்கலைக் கழகத்திலுள்ள எம்ப்ளாய்மெண்ட் கைடென்ஸ் பீரோவில் ஏறத்தாழ 3,544 பேர் இருக்கிறார்கள். அதுமட்டுமல் லாமல், வேலை வாய்ப்பளிப்பதற்காகப் பட்டியலைக் கோரும்போது, சம்பந்தப் பட்ட நிறுவனங்கள் நேரடியாகவே பட்டியலை அனுப்பலாம் என்ற முறை இல்லாமல் அவை அனைத்தும் சென்னையில் இருக்கிற தலைமை நிலையத் திற்கு அனுப்பி, பிறகு இங்கேயிருந்து பட்டியல் சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு வர வேண்டும் என்ற நடைமுறை கடைப்பிடிக்கப்படுவதும் மற்றொரு முக்கியமான காரணமாக இருக்கிறது. இதன் காரணமாக, மதுரையைப் பொறுத்தவரையில், மாணவர்கள் அங்கே தங்களுடைய பெயர்களைப் பதிவு

செய்து கொள்வதையே விரும்பவில்லை. அந்த அளவுக்கு மதுரைப் பல்கலைக் கழகத்தில் உள்ள எம்ப்ளாய்மெண்ட் கைடென்ஸ் பீரோ மீது அவநம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது என்பதையும் துறையின் கவனத்திற்குக் கொண்டு வந்து, இத்தகைய குறைபாடுகளை விரைவில் நீக்க உரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டு அமைகிறேன். வணக்கம்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

* திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிலுள்ள தொழிலாளர் நிலைமைபற்றிய அரசின் கொள்கை விளக்கக் குறிப்பின் மீது சில கருத்துக்களைச் சொல்வதில் நான் பெருமைப்படுகிறேன்.

பொதுவாக, தமிழகத்தில் தொழிலாளர் நிலைமை அல்லது நிர்வாகம்—தொழிலாளர் உறவு, மிகப் பெருமளவுக்குச் சீரடைந்து வருகிறது அல்லது அவர்களுக்கிடையே உறவு கெடாமல் இருந்து வருகிறது என்ற உணர்வுதான் கிடைக்கும் பல்வேறு தகவல்களின் அடிப்படையில் நமக்கு ஏற்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கும் கொள்கை விளக்கக் குறிப்பில் வேலை நிறுத்தத்தின் காரணமாக தமிழகத்தில் எத்தனை மனித நாட்களை நாம் இழந்திருக்கிறோம் என்ற கணக்கைப் பார்க்கும்போது, கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு அதிகரித்திருக்கிற நிலையைப் பார்க்க முடிகிறது. டெக்ஸ்டைல் என்னும் துணி நெசவுத் தொழிலைப் பொறுத்த வரையில், 1980 ஆம் ஆண்டில் 15,69,824 நாட்களை இழந்திருக்கிறோம். ஆனால் 1981 ஆம் ஆண்டு அது 27,99,352 நாட்களாக உயர்ந்திருக்கிறது. அதோடு தொடர்புள்ள எஞ்ஜினியரிங் தொழிற்சாலைகளில் 1980 ஆம் ஆண்டு 4,23,884 நாட்களை இழந்திருக்கிறோம். ஆனால் அதே தொழிலில் 1981 ஆம் ஆண்டு 5,01,817 நாட்களை இழந்திருக்கிறோம். தமிழகத்தில் அமைதி நிலவுகிற உணர்வு நமக்கு ஏற்பட்டாலும்கூட வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் காரணமாக நாம் எத்தனை மனித நாட்களை இழந்திருக்கிறோம் என்பதைப் பார்க்கிறபோது, இதில் அரசு கவனம் செலுத்தி நிலைமையைச் சீர் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது என்பதை உணராமல் இருக்க முடியாது.

பி. அண்டு சி. மில்லில் ஏற்பட்ட நிலைமை காரணமாக அந்தத் தொழிற்சாலை தொடர்ந்து பல நாட்கள் மூடப்பட்டிருந்ததன் விளைவாக இந்த எண்ணிக்கை மிகப் பெருமளவுக்கு உயர்ந்திருக்கிறதோ என்ற உணர்வு

ஏற்பட்டாலும்கூட, பொதுவாக நிலைமை நாம் எதிர்பார்க்கிற அளவுக்குச் சீர்படவில்லை என்ற உணர்வு ஏற்படுவதை யாரும் தடுக்க முடியாது. எனவே இந்த நிலைமையைச் சீர் செய்வதற்கான முறையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்திருக்கிற விவரங்களுக்காக அவரைப் பாராட்டாமல் இருக்க முடியாது. உடல் ஊனமுற்றோர்களுக்குத் தனி வேலைவாய்ப்பகங்களை உருவாக்கி அதன் மூலமாக அரசின் துணையோடு 1—1—1981 முதல் 31—12—1981 வரை ஏறக்குறைய 2,661 பேர்களுக்கு வேலைவாய்ப்பு தரப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நிலையத்தில் வேலை கோரி பதிவு செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை 6,642 பேர். இதில் அரசு ஓரளவுக்கு முனைப்பு காட்டியிருக்கிறது என்ற உணர்வை நமக்கு உருவாக்கினாலும், இன்னும் அதிகமான முனைப்பைக் காட்ட வேண்டும் என்று சொல்லி, ஏற்கெனவே காட்டியிருக்கிற முனைப்புக்கு என்னுடைய பாராட்டுதல்களையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தில் சிலவற்றைப் பொறுத்தவரை, கவனம் செலுத்தாமல் புறக்கணித்துக் கொண்டு வருகிறோமோ அல்லது போதிய கவனம் செலுத்தாமலேயே இருக்கிறோமோ என்ற எண்ணம் உருவாவதை யாராலும் தடுக்க முடியாது. சென்ற ஆண்டில் எல்லா மாதங்களிலும் சிப்பெட்டித் தொழிற்சாலைகளில் விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன. ஒவ்வொரு முறை விபத்துக்கள் ஏற்படும்போதும், அதன் காரணமாக 20 பேர், 16 பேர் அல்லது 15 பேர் என்று மொத்தமாகச் சாகிற நிலைமையும், அதைத் தொடர்ந்து இதில் மிகுந்த கண்டிப்புக் காட்டப்படும் என்று அரசுத் தரப்பில் சொல்லப்படுவதும் மீண்டும் அத்தகைய விபத்துக்கள் தொடருவது என்பதும், தொழிலாளர் துறை முறையாக இயங்கவில்லை, அந்தத் துறை கண்டிப்பாகச் செயல்படவில்லை என்பதைத்தான் தெளிவாகக் காட்டுகின்றன. திண்டுக்கல்லில் வெடி விபத்து ஏற்பட்டு இறந்தவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தபோது, எந்த அளவுக்கு இந்த அரசு முனைப்பு காட்டியது என்பதை நான் அறிவேன். ஆனால் அதற்குப் பிறகு வெடிமருந்துகள் மற்றும் சிப்பெட்டி தயாரிக்கும் தொழிற்சாலைகள் அதிகமாக உள்ள இடங்களில் இத்தகைய விபத்துக்களை நிரந்தரமாகத் தடுத்து விடுவோம் என்ற எண்ணத்தை அரசு சார்பில் வெளியிட்டார்கள். ஆனால் அதற்குப் பிறகும் ஒவ்வொரு மாதமும் இத்தகைய தொழிற்சாலைகளில் விபத்துக்கள் தொடர்வதும், அதன் காரணமாக பலர் விபத்துக்குள்ளாகி உயிரிழப்பதும், அதிலும் பெரும் பகுதி குழந்தைகளாக இருப்பதும் எல்லோரும் அறிந்த நிலையாகும்.

(Child Labour) சைல்டு லேபர்தான் இதில் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய நிலைமைகள் தொடருவது நல்லதல்ல என்பதோடு, அந்தத் துறையில் தொழில் அதிபர்களின் கை மிகவும் ஓங்கியிருக்கிறதோ என்ற உணர்வை நமக்கு ஏற்படுத்துகிறது. இத்தகைய விபத்துக்களுக்குப் பிறகும், அங்கே தொழிற்சாலைகளை நடத்துகிற தொழிலதிபர்கள் தங்கள் நடைமுறையைக் கொஞ்சம்கூட மாற்றிக் கொண்டதாகத் தெரியவில்லை. அல்லது அவர்களை அரசாங்கத்தால்கூட மாற்ற முடியவில்லை என்ற எண்ணம்தான் ஏற்படுகிறது. எனவே இதில் அரசு இன்னும் அதிகமான கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே இன்றையதினம் கட்டிடத் தொழிலாளர்கள் பல்வேறு சங்கடங்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள். அவர்களுக்கு நம்மால் குறைந்த பட்ச ஊதியத்தை நிர்ணயிக்க முடிந்தால்கூட, சிமிண்ட் விநியோகம் பற்றி அரசின் கொள்கை அடிக்கடி மாறுகிற காரணத்தால், அவர்கள் இன்னும் கஷ்டப்படுகிற நிலைமைதான் இருக்கிறது. சில நேரத்தில் அதிகமாக சிமிண்ட் கிடைப்பதும், சில நேரங்களில் கிடைக்காமல் போவதுமான நிலைமை காரணமாக அவர்கள் வேலையற்றுப் போகிற நிலை ஏற்படுகிறது. அவ்வாறு அவர்கள் வேலை இழக்கும் நாட்களுக்கு அரசாங்கம் ஏதேனும் துணை புரியும் வகையில் நிதி உதவி செய்திட முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் எல்லோரும் ஒரு ஸ்பெஷலைஸ்டு (Specialised) இண்டஸ்டிரியைச் சார்ந்தவர்கள். கட்டிட வேலைக்கான பயிற்சியைத் தவிர, வேறு எந்த வேலையும் செய்ய முடியாதவர்கள். செய்ய வாய்ப்பு அற்றவர்கள் என்ற காரணத்தால், அரசாங்கம் அவர்களுக்குத் துணை புரிவது என்பது ஒரு கடமையாகும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

(நண்பகல் 12-00)

அதைப் போலவேதான் இலங்கை அகதிகளைப் பொறுத்தவரையிலும், பல்வேறு உணர்வுகளை நாம் வெளிப்படுத்திக் கொண்டு வருகிறோம். இரண்டு தலைமுறையாக இலங்கையில் வாழ்ந்து, இந்தியப் பிரஜைகளாகக் கருதப்பட்டு, அங்கேயிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிற அகதிகள் தமிழகத்திற்கு வந்திருக்கிறார்கள். அவர்களை நேற்று முன்தினம் (மண்டபத்தில்) நேரிலே சந்தித்தேன். எந்த அளவிற்கு அவர்கள் இன்னலுற்றிருக்கிறார்கள் என்பதை நாம் மனதிலே கொள்ள வேண்டும். பல்வேறு வேலைவாய்ப்புகளை அவர்களுக்குத் தருவதில் நாம் ஈடுபட்டிருக்கிறோம். அவர்களுக்கு ஒரு சங்கடம் இருக்கிறது இலங்கையில் உள்ள கண்டியில் அவர்கள் என்ன வேலையைச் செய்தார்களோ

அந்த வேலையைப் பதிவு செய்துகொள்ளவில்லை. உதாரணத்திற்கு அவர்கள் 'டி' (Tea) எஸ்டேட்டில் பணியாற்றியிருந்தால், அங்கே பதிவு செய்யும்போது பெட்டிக்கடை வைத்திருப்பதாகப் பதிவு செய்திருக்கிறார்கள். அந்தச் சூழ்நிலையில் அவர்கள் இங்கே வரும்போது, ஒரு குடும்பத்திற்குப் பெட்டிக் கடை வைப்பதற்காக மூவாயிரம் ரூபாய் கொடுப்பதாக நாம் வைத்திருக்கிறோம். அந்தப் பணத்தை வாங்கி ஒன்றுமே செய்ய முடியாது என்ற காரணத்தாலே, அவர்கள் வாங்காத நிலை இருக்கிறது. கூடலூரில் எத்தனையோ ஏக்கர் 'டீ' எஸ்டேட்டுகளை யார் யாரோ ஆக்கிரமிப்புச் செய்து கொண்டிருக்கிறார்கள். இலங்கையில் 'டீ' எஸ்டேட்டில் பணிபுரிந்து தாயகம் திரும்பியிருக்கிற அவர்களுக்கு இந்த 'டீ' எஸ்டேட்டில் பணி கிடைக்கவில்லை என்ற நிலைமை இருக்கிறது. அவர்கள் பதிவு செய்திருக்கின்ற தொழிலுக்குத்தான் அவர்களை அனுப்ப வேண்டுமென்ற நிலையில் நாம் இருந்தால், அகதிகளாக வந்து பிச்சைக்காரர்களாக மாறி தமிழகத்தின் வீதிகளில் அலைய வேண்டிய கட்டாயம் வந்துவிடும். ஆகவே மனிதாபிமானத்தோடு அவர்களுடைய பிரச்சினையைப் பரிசீலிக்க வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன்.

இந்த நேரத்தில் இன்னுமொன்றைக்கூட சொல்ல விரும்புகிறேன். அவர்கள் இலங்கை நாட்டிலே வாழ்ந்ததன் காரணமாக, அவர்களைத் தமிழ் நாட்டில் எந்தப் பகுதிக்கு அனுப்பினாலும், அங்கே தண்ணீர் வசதி இருக்கிறதா, மருத்துவ வசதி இருக்கிறதா, குழந்தைகளுக்குப் பள்ளிக்கூட வசதி இருக்கிறதா என்று கேட்கிறார்கள். தமிழகத்திலே இருக்கிறவர்கள் யாராவது இப்படிக் கேட்பார்களா என்று ஆச்சரியப்படும்படியாக இது இருந்தாலும், அவர்கள் அந்த நாட்டில் வாழ்ந்த வாழ்க்கையின் காரணமாக, அப்படிக் கேட்கிறார்கள். அவர்கள் அப்படிக் கேட்க ஆரம்பித்தவுடனே, நம்முடைய அதிகாரிகள் பழக்கத்தின் காரணமாக, வழக்கத்தின் காரணமாக, "இந்த மாதிரி வாய் இருந்ததால்தான் அங்கேயிருந்து துரத்தப்பட்டிருக்கிறார்கள்" என்று எரிச்சலில் சொல்லுகிற நிலைமையை நம்மாலே காண முடிகிறது. மனிதாபிமான உணர்வோடு செயல்படவில்லையென்றால், வீதியிலே பிச்சைக்காரர்களுடைய எண்ணிக்கை அதிகரிக்குமே தவிர, வேறு ஒன்றும் நடக்காது. அவர்களுக்கு நல்ல வேலை வாய்ப்பைக் கொடுக்க வேண்டிய கட்டாயம் நமக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், இன்னுமொரு நிலைமை இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை மறுத்துவிடமாட்டார்கள் என்று எண்ணுகிறேன். அதற்கு நேரிடையாக அவர் காரணமல்ல. தமிழகத்திற்குப் பல பெருமைகள் உண்டு. இந்தியாவிலேயே வறுமைக் கோட்டிற்குள்ளே

வாழும் மிக அதிகமானவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்ற சதவிகக் கணக்கை எடுத்தால், இங்கேதான். இந்தியாவிலேயே மிக அதிகமாக வேலை வாய்ப்பற்றவர்கள் எத்தனை பேர் என்று சதவிகம் எடுத்தால், அது தமிழகத்திலேதான் என்று சொல்ல முடியும். இங்கே எவ்வளவுதான் தொழிற்சாலைகளை ஆரம்பிக்கிறோம் என்று அறிவிப்புகள் வந்தாலும், இங்கே பெருகியிருக்கின்ற மக்கள் தொகைக்கேற்ப வேலை வாய்ப்புகளை உருவாக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டும். தொழிலாளர் நல அமைச்சர் அவர்களுக்குத் தொழிலாளர்கள் மீது தனிக் கவனம் இருக்கிறது என்றாலும், அவர்கள் தொழிலாளர்களுக்கு விரோதமாக சில நடவடிக்கைகளை எடுக்கிறபோது, சமுதாயத்திற்கே பெரும் தீங்கு விளையும் என்பதால், அதற்குப் பரிகாரம் . காண முயற்சி எடுக்க வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள், வட ஆற்காடு மாவட்டத்திலே, தர்மபுரி மாவட்டத்திலே நக்சலைட் என்ற பெயராலே எப்படி பலபேர் சுட்டுத் தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்று கோடிட்டுச் சொன்னார்கள். அவர்களுடைய நடவடிக்கைகள் சமுதாய விரோத நடவடிக்கைகளாக மாறிப் போனதால் அப்படிச் செய்திருக்கிறார்கள் என்றாலும், அதற்குப் பரிகாரம் காண வேண்டுமென்று சொல்லுவது என்னுடைய கடமை. அந்தப் பகுதியிலே இருக்கின்ற தொழிலாளர்களுடைய ஊதிய நிலைமை என்ன, தொழிலாளர்களுக்கு ஊதியம் ஏறியிருக்கிறதா, இல்லையென்றால் குறைந்தபட்ச ஊதியத்தைக் கொண்டுவர என்ன முயற்சி செய்திருக்கிறோம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அது இல்லையென்றால், நக்சலைட் என்ற பெயரால் சுட்டுத் தள்ளினாலும், அந்த 20 பேர் 200 பேர்களாக மாறுவார்கள், தர்மபுரி, வட ஆற்காடு பகுதிகளிலிருந்து தமிழகம் முழுவதற்கும் பரவக்கூடிய நிலை ஏற்படும். ஆகவே பொருளாதாரத் திட்டங்களை உருவாக்க வேண்டும், புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்க வேண்டும் என்ற அளவிற்குத் தொழிலாளர் சட்டங்கள் செயல்பட வேண்டும் என்பதை இந்த நேரத்தில் சொல்லுவது என்னுடைய கடமையென்று கருதுகிறேன்.

அதைப்போலவே இந்தியா முழுமைக்கும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது ஒரு சட்டம். அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் தெரிவிப்பார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். பாலேக்கர் ரிப்போர்ட், பத்திரிகைத் துறையிலே குறைந்தபட்ச ஊதியம் இவ்வளவு இருக்க வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறது. நிர்ணயிக்கப்பட்ட அந்த ஊதிய விகிதங்கள் எந்த அளவிற்குத் தமிழகத்திலே அமுல்படுத்தப்பட்டிருக்கின்றன என்று பார்க்கிற பொறுப்பு தமிழக அரசினுடையது. ஆனால்

மெத்த வேதனையோடு சொல்லுகிறேன், எத்தெந்தத் தொழில்களுக்கோ வேகமாகப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் உட்பட ஏன் இதைத் தொடாமல் விட்டார்கள் என்று புரியவில்லை. எல்லா அரசியல் கட்சிகளும் பத்திரிகையை நடத்துகின்றன. தமிழகத்திலே காங்கிரஸ் கட்சிக்குத்தான் பத்திரிகை இல்லை. ஆனால் அந்தக் காரணத்தாலே மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் சொல்லாமல் விட்டிருப்பார் என்று நான் கருதவில்லை. அவருடைய பேச்சுக்கு நான் நோக்கம் கற்பிக்க விரும்பவில்லை. ஆகவே பாரபட்சமாக இருக்கும் நிலைமையை மாற்றியமைக்க வேண்டும். பத்திரிகைத் துறையில் உள்ள பல தொழிலாளர்களுக்கு ஊதிய நிர்ணயம் செய்யப்படவில்லை, புராவிடண்ட் பண்டிலிருந்து மற்ற சலுகைகள் வரை வழங்கப்படவில்லை. நிரந்தரமாக்கப்படாத தொழிலாளர்களாக பல பேர் பல மாதங்களாக, ஆண்டுகளாகப் பணியாற்றும் நிலைமை இன்னும் இருக்கிறது. இதை அரசு மாற்றியமைக்க வேண்டுமென்று தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்னுமொரு வேண்டுகோளை இந்த அரசுக்குத் தெரிவிப்பது நல்லது என்று கருதுகிறேன். வேலைக்கு வைக்க நினைத்து மிகப் பெரிய அளவிலே மத்திய அரசினுடைய தபால் இலாக்காவிற்கு வருவாய் தேடித் தந்திருக்கிறார்.

திரு. ஆர். டி. சீத்தாபதி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், இலங்கைத் தமிழர்கள் பற்றிப் பேசுகின்ற நேரத்தில், அப்படி வாய் இருப்பதால்தான் விரட்டப்படுகிறார்கள் என்ற பொருள்படி சொன்னதாக அறிகிறேன். அது அவைக் குறிப்பிலே இருக்க வேண்டுமா? அல்லது அவரே மாற்றிக் கொண்டாலும் நலமாக இருக்கும்.

திரு. க. இராமமூர்த்தி: அதிலே ஒன்றும் தப்பாக இல்லை. மாற்றுவதற்கு என்னவிருக்கிறது? தப்பாக இருந்தால் மாற்றலாம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: நான் வேண்டுமானால் நினைவுபடுத்தட்டுமா?

திரு. க. இராமமூர்த்தி: தமிழகத்திலே இருப்பவர்கள் எங்கே போனாலும் இந்தச் சூழ்நிலை இல்லாமல் வாழ முடிகிறது. அவர்கள் (அகதிகள்) அங்கே வாழ்ந்து இங்கே வரும்போது இத்தகைய அடிப்படைத் தேவைகள் தேவைப்படுகின்றன. தண்ணீர் இருக்கிறதா, மருத்துவ வசதி இருக்கிறதா, பள்ளிக்

கூடம் இருக்கிறதா என்று கேட்கிறார்கள். இங்கேயுள்ள யாரும் அப்படிக் கேட்பதில்லை. இந்த நிலைமை இருக்கிறது. இதை வந்து கேட்டறிந்த போது, திரும்பத் திரும்ப அவர்கள் இதையே கேட்கும்போது எரிச்சல் தாங்காமல் "இந்த வாயால்தான் அங்கேயிருந்து விரட்டியடிக்கப்பட்டு இங்கே வந்தீர்கள்" என்று சொல்லுகிற நிலைமை இருக்கிறது. சில பிரத்தியட்ச நிலைமைகளை மறந்துவிட்டு வாழ முடியாது.

டாக்டர் இரா. சனார்த்தனம்: துணைத் தலைவர் அவர்களே, இங்கேயுள்ள அதிகாரிகள் எரிச்சலோடு சொல்லுகிறார்கள் என்பதால், அதிகாரிகள் முறையாக நடக்க வேண்டும் என்ற கருத்தைத் தெரிவிப்பதற்காக அப்படித் தெரிவித்திருக்கிறார் என்று நினைக்கிறேன். ஏதோ தவறாகக் கேட்டதால் தான் விரட்டியடிக்கப்பட்டார்கள் என்ற கருத்து வந்துவிட முடியாது என்று நான் நினைக்கிறேன்.

(பிற்பகல் 12-10)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன நோக்கம் சிறந்த நோக்கம். ஆனால் வெளியிலே இருப்பவர்களுக்கு ஏதோ நியாயம் கற்பிப்பதுபோல தெரிந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் அப்படிச் சொல்கிறார்.

திரு. க. இராமமூர்த்தி: விளக்கம் சொல்லாமல் இதைச் சொல்லியிருந்தால் நியாயம் கற்பிப்பதாக வரும். நடந்த நடைமுறையைத்தான் சொல்கின்றேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அதிகாரிகள் எரிச்சல் அடையத் தேவையில்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம்: அது இருப்பது நல்லதுதான். அதிகாரிகள் நடப்பது தவறு என்ற கருத்துப்பட சொல்லியிருக்கின்றார் என்பது விளக்கமாகிறது. அதிலே தவறு இல்லை.

திரு. ம. சங்கரலிங்கம்: அந்த அதிகாரிகள் அப்படி என்னுகிறார்கள் என்று சொன்னதிலே தவறு இல்லை. இப்படியெல்லாம் அங்கே பேசுகின்ற தால்தான் இங்கே அனுப்பிவிட்டார்கள் என்று வரக்கூடாது. அந்தச் சொற்றொடரை மாற்றினால் நல்லது. இலங்கை சர்க்கார் அப்படி நியாயம் கற்பிப்பதாக எடுத்துக்கொள்ளக்கூடாது. தமிழர்களுக்குப் பாதகம் வந்துவிடக் கூடாது என்ற அச்சத்துடன்தான் சொல்கின்றேன்.

திரு. க. இராமமூர்த்தி: இருக்கின்ற நிலைமைகளை நாம் உணராமல் நம்மை நாம் மறைத்துக்கொண்டே இருக்க முடியாது. நான் நேற்றுப்போய் அவர்களைப் பார்த்துவிட்டு வந்தேன். விவரமாகச் சொல்ல முடியவில்லை. நான் சொல்வதிலே ஒன்றும் தப்பாகச் சொல்லவில்லை.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அதிகாரிகள் எரிச்சல் அடைந்திருக்கிறார்கள். அப்படி அடையத் தேவையில்லை. அவ்வளவுதான்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் தெரிவித்த அடிப்படைக் கருத்திலே எந்தவிதமான வேற்றுமையும் இல்லை. இப்படி நடந்துகொள்ளக்கூடாது என்பது மிகுந்த மனிதாபிமானத்தோடு கவனித்துக்கொள்ள வேண்டிய காரியமாக இருக்கிறது. அதுவும்கூட அண்மையில் என்ன ஏற்பட்டிருக்கிறது என்றால், வேறு பல மாநிலங்களில் இப்படி அகதிகளுக்கு உதவி செய்கின்ற நிதியைப் பயன்படுத்தி அங்கெல்லாம் மில்களை உருவாக்கி அங்கே இருக்கின்றவர்களை, அகதிகளாக வந்தவர்களை வேலைக்கு எடுத்துக்கொண்டு, ஒரு மாதத்திற்குள் அவர்களுக்கு வேலை கொடுக்கின்றார்கள். பிறகு எடுத்து விடுகின்றார்கள். கோவாவிலே இருந்து விரட்டப்பட்டிருக்கிறார்கள். அப்படி விரட்டப்பட்டு வந்தவர்கள் கோவாவிலிருந்து மதுரைக்கு வந்திருக்கின்றார்கள். அப்படி நூற்றுக்கணக்கானவர்கள் அவதிக்கு உள்ளாகியிருக்கிறார்கள். அதுபோலவே ஆந்திராவிலேயிருந்து ஒரு மாதத்திலே அவர்களை விரட்டிவிட்டு, அவர்கள் உள்ளூர்க்காரர்களுக்கு வேலையைக் கொடுத்து விடுகிறார்கள். இலங்கையிலிருந்து வந்தவர்கள் இந்தச் சூழ்நிலையில் இருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே இலங்கையிலிருந்து வருகின்ற அகதிகளிடம் எவ்வளவு மதிப்போடு நடந்து கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் வலியுறுத்திச் சொல்வது நல்லது என்று கருதுகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: அதனாலேதான் நான் வலியுறுத்திச் சொன்னேன். இந்த டிமான்டிலே பேச முடியவில்லை. கூடலூர் விவகாரத்தை இழுத்ததே அதற்காகத்தான்.

இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். ஏறக்குறைய 11 மாதங்கள் அல்லது 13 மாதங்களாக 59 குடும்பங்கள் அங்கே அகதிகள் முகாமிலே இலங்கையிலிருந்து வந்த குடும்பங்கள் ஒருவேளை அரைவேளைப் பட்டினியாக இருக்கின்றார்கள். வேலையில்லாமல் கால்பட்டினி, அரைப்பட்டினி என்று இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் கொண்டுவந்த சொத்தை விற்றுவிட்டு வறுமையிலே வாடிக்கொண்டிருக்கிறார்கள், இதையெல்லாம்

[திரு. க. இராமமூர்த்தி] [1982 மார்ச் 27

பார்த்துவிட்டு வந்த பிறகுதான், அவர்களுக்கு வேலை வாய்ப்பு அலுவலகங்களில், சம்பந்தப்பட்ட துறைகளில் எத்தனை பேர்களுக்கு வேலை வாங்கித் தந்தார்கள் என்று கேட்டேன். எத்தனை முறைகள் அதிகாரிகளைப் பார்த்தீர்கள், எத்தனை முறை அதிகாரிகளைக் கேட்டீர்கள் என்று அவர்களைக் கேட்டு அறிந்த பிறகுதான் வந்தேன். அவர்கள் சொத்தை விற்றுவிட்டு, இன்றைக்கு அவர்களின் அவல நிலையைப் பார்த்துவிட்டு வந்த பிறகுதான், இதைச் சொல்கிறேன், இந்தக் கருத்தைக் கூட தெரிவிக்கிறேன்.

அடுத்தபடியாக, தொடர்ச்சிக்கு வருவது நல்லது என்று எண்ணுகிறேன். மத்திய அரசுக்கு இந்த அரசு துணை செய்வதிலே எனக்கு மகிழ்ச்சி. இங்கே தான் தபால் தந்தி இலாகாவிற்கு பெருமளவிலே சம்பாத்தியத்தை உருவாக்கித் தந்திருக்கிறது ஒரு மாநில அரசு என்றால், அது தமிழகம்தான். இங்கே எத்தனை ஆயிரம் மனுக்கள் வேலைவாய்ப்புக்காக வந்திருக்கின்றன என்ற எண்ணிக்கையைப் பார்க்கிறேன். ரெவின்யூ துறையிலேயிருந்து கோரப்பட்ட அதிகாரிகள் வேலைக்கு எல்லாம், கிராம ரெவின்யூ அதிகாரி என்று ஏதோ பெயர் போட்டார்கள், கிராம அதிகாரிகளை நீக்கிவிட்டு புதிதாகப் போடுவதாகச் சொன்னார்கள். உடனடியாக எத்தனை லட்சம் பேர்கள் விண்ணப்பித்தார்கள்? தபால் தந்தி துறையிலேயே இதற்காக என்று தனி கிளை அலுவலகம் நடத்தினார்கள். எத்தனை பேர்கள் அந்தக் கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள்? அடுத்து, காவல் துறையிலே கான்ஸ்டேபிள்களைத் தேர்ந்தெடுக்க எத்தனை லட்சம் பேர்கள் மனுப் போட்டார்கள்? ரூ. 5, ரூ. 10 என்று எவ்வளவு பேர்கள் இதற்காக பணம் கட்டினார்கள் என்பதையெல்லாம் எண்ணிப் பார்க்கின்றபோது, நாம் எந்த அளவுக்கு ஆசையைத் தூண்டி விட்டிருக்கிறோம் என்பதை மட்டுமல்ல, எந்த அளவுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மற்றவைகளுக்கு நான் வரவில்லை. அவைகளைப்பற்றி மற்ற நேரத்திலே பேசிக்கொள்ள முடியும். வேலை வாய்ப்பு இல்லாத நிலைமை எந்த அளவுக்கு அவர்களை அவல நிலைக்கு உட்படுத்தியிருக்கிறது என்பதற்கு இதைவிட வேறு எடுத்துக்காட்டு இருக்காது என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்ததாக, இங்கே கோவையிலே சிக் மில்ஸ் என்ற பெயராலே அல்லது சரியாக லாபகரமாக இயங்க முடியாத தொழிற்சாலைகளில் அல்லது நடக்க முடியாத தொழிற்சாலைகளை அல்லது நடத்த விரும்பாத நிலையிலே இருக்கக்கூடிய தொழிற்சாலைகளை அரசு முன் நின்று நடத்துவதற்கு அல்லது நடக்கச் செய்வதற்கு துணை இருக்கின்ற பெரும் காரியத்தைச்

1982 மார்ச் 27] [திரு. க. இராமமூர்த்தி]

செய்து வருகிறது. அதை நான் பாராட்டுகிறேன். ஆனால் சமயத்திலே என்ன நடக்கிறது என்றால், இரண்டொரு குறிப்பிட்ட தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையிலும், நீதிமன்றமே உத்தரவு போடுகிறது. அதற்கு ஒரு லிக்குடேடர் **(Liquidator)** என்று நியமிக்கிறார்கள். லிக்குடேடர் **(Liquidator)** களை நியமித்து அவர்கள் அங்கு சென்று அந்தத் தொழிற்சாலையை ஏற்று நடத்த வேண்டும் என்று சொல்லியிருக்கின்றார்கள். அவர்களை எதற்கு நியமிக்க வேண்டும். ஒரு கம்பெனியை உடைத்து முழுமையாக யார் யாருக்கு எவ்வளவு பங்கு போகிறது, ஒரு ஷேருக்கு எவ்வளவு வருகிறது என்று பார்த்துக் கொடுப்பதற்குத்தான். அதற்குத்தான் அந்த லிக்குடேடர் என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதற்குப் பொருள். ஆங்கிலத்திலே அப்படித்தான் இருக்கிறது. அப்படித்தான் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் என்ன காரணத்தினாலோ அந்த லிக்குவிடேட்டர் என்று சொல்லி போட்டு, அந்தத் தொழிற்சாலைகளை அவர்கள் மூலமாக நடத்த வேண்டும் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் இதை ஏற்று நடத்த வேண்டும் என்ற நடைமுறையின் காரணமாக தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் உதவியில்லை. அவர்கள் கடன் கொடுக்க முடியாது என்ற நிலை ஏற்பட்டு, பல தொழிற்சாலைகள் திறப்பதற்குரிய வழியின்றி மூடப்பட்டிருக்கின்றன. அந்த நிலைமைகள் இருக்கின்றன. முதலாளிகளுக்கு இடையிலே சண்டை இருக்கிறது என்பது வேறு. நாம் அதையும் தாண்டி நின்று, அதனாலே பாதிக்கப்படுகின்ற ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுடைய குடும்பங்களை எண்ணிப் பார்க்க வேண்டும். அந்தத் தொழிலாளர்களுடைய நிலைமையை எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்களுக்குத் துணை புரிகின்ற வகையிலே நம்முடைய நடவடிக்கைகள் இருக்க வேண்டும் என்று சொல்லி, அதற்கு ஏற்ற வகையில் இந்தத் துறை கவனம் செலுத்தவேண்டிய கட்டாயம் இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்ததாக, இன்னொன்றும் தமிழகத்திலே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஒரு தொழிற்சாலையைத் தொடங்குகின்றபோது, அது நல்ல வாய்ப்பிலே நடக்கின்றபோது, முதலாளிகள் மிகத் திறமையாக வேறு ஒன்றைச் செய்கின்றார்கள். அந்தத் தொழிற்சாலைக்கு ஒரு சிஸ்டர் கன்சர்ன் அல்லது துணைத் தொழிற்சாலையை உருவாக்குகின்றார்கள். அதற்குப் பிறகு சிஸ்டர் கன்சர்ன்ஸ் அல்லது குரூப் ஆஃப் இண்டஸ்ட்ரீஸ் என்று உருவாக்கிவிடுகிறார்கள். ஒரு தொழிற்சாலையில் வருகின்ற லாபத்தை இன்னொரு தொழிற்சாலையிலே கொண்டுபோய் போடுகிறார்கள். இன்னொரு தொழிற்சாலையில் உள்ள நஷ்டத்திற்கு இதை ஈடு செய்கிறார்கள். அந்த அளவிலே லாபத்திலே நடக்கின்ற தொழிற்சாலையிலே இருக்கின்ற

தொழிலாளர்கள் அந்த லாபத்தை அடைய முடியாத நிலைமைகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்த அளவுக்குக் கெட்டிக்காரத்தனமாக இருக்கின்றார்கள். உதாரணத்திற்குச் சொல்கிறேன். சேலம் மாவட்டத்திலே மேட்டூரிலே பியர்ட்செல் கம்பெனி (Beardsell Co.) என்று இருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மேட்டூர் பேர்ட் டெக்ஸ்டைல் இண்டஸ்ட்ரி என்பது. அங்கே கன்சிலியேஷன் நடந்து கொண்டிருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு முழுமையாகத் தெரியும். அதிலே வேலை நிறுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்கு என்று நல்ல வேகம் காட்டியிருக்கிறார்கள். அதற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் ஜனவரி மாதத்திலேயிருந்து ஒரு புதிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. லே ஆஃப் நடைபெற்றிருக்கிறது. அதிலே ஒரு ஏமாற்று வித்தை நடைபெற்றிருக்கிறது. அது என்னவென்றால் பஞ்சாலையைப் பொறுத்தவரையில், லாபத்திலே நடைபெற்றிருக்கிறது. பெருத்த லாபத்திலே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அது மட்டுமல்ல, அந்த லாபத்தை வேறு தொழிற்சாலைகளுக்கு ஈடு காட்டிவிட்டு இது நஷ்டத்திலே நடைபெறுகிற தொழிற்சாலையாகக் காட்டியிருக்கிறார்கள்.

அதற்கும் மேலாக பஞ்சு கிடைக்கின்ற காலத்திலே பஞ்சு கிடைக்கவில்லை என்ற அறிவிப்பைச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கும் மேலாக இப்போது அந்த அதிகாரிகள் சம்பளம் பெரிய அளவிலே வாங்குகின்ற அளவிலே நியமிக்கின்றபோது, பெரிய அளவில் ஊதியம் நிர்ணயித்துவிடுகிறார்கள். அப்படி அதிகமாக வாங்குகின்றவர்களை நிறைய நியமித்துவிட்டால், இப்போது வருகின்ற லாபத்திற்குக் கணக்குக் காட்ட முடியும் என்ற அளவிலேயும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த நிலைகளையெல்லாம் உருவாக்குகின்ற முதலாளிகளைப் பார்க்கிறோம். அந்த பேர்ட்செல் கம்பெனியில், பஞ்சாலையில் அதிலே இருக்கின்ற தொழிலாளர்களுக்கு 'லே ஆஃப்' கொடுத்து பல காலம் அவர்கள் வேலையற்றுப் போகின்ற நிலைமைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். எப்படியாவது அவர்கள் பஞ்சாலையை விட்டு வெளியேறட்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் தொழிற் சங்கத் தலைவராக இருந்து பேர் எடுத்தவர்கள். அவர்கள் இந்தப் பொறுப்பை இப்போது ஏற்றிருக்கிறார்கள். அவரைப் பொறுத்தவரையில், அறிவித்திருக்கிறார்கள். அந்த அறிவிப்பு எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. கன்சிலியேஷன் நடை

பெற்றுக் கொண்டிருக்கிறது என்று ஒரு அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். இதில் ஒன்றைச் சொல்கிறேன். இப்படிச் செய்தால், நமக்கு எவ்வளவு இன்னல்கள் வரும், அரசாங்கம் நம்மைக் கடுமையாக நெருக்கும் என்ற உணர்வு அந்த முதலாளிகளுக்கு ஏற்படுகின்ற வகையிலே இந்தத் துறையின் மாண்புமிகு அமைச்சர், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் நிலைமைகளைச் சீர்படுத்தியாக வேண்டும். அவர் காலத்திலேயே இதைச் செய்ய வேண்டும். தொழிற் சங்கப் பிரதிநிதியாக இருந்து வந்து இந்தப் பொறுப்பை ஏற்றிருக்கிறார்கள். இவ்வளவு காலம் ஆகியும் செய்ய முடியவில்லையே என்ற நிலையை அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள் என்பதை ஏற்றுக்கொள்கிறேன். நான் சொல்வது, இந்தக் கோளாறுகள் எங்கே ஏற்பட்டிருக்கின்றன என்பதை அவர் பார்க்க வேண்டும்.

(பிற்பகல் 12-20)

ஆகவே அதைப் பார்த்து, களைந்து, தொழிலாளர்களுக்கு உற்ற தோழர்களாய் இந்தத் துறை விளங்கும் நிலைமை ஏற்பட வேண்டுமென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு அமைச்சரவர்களுடைய துறையைச் சார்ந்தது அல்ல என்றாலும், இந்த நேரத்திலே இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஜெர்மன் லெப்ரசி ரிசர்ச் சென்டர் (German Leprosy Research Centre) என்று ஒரு நிறுவனம் சென்னையிலே இருந்துகொண்டிருக்கிறது. ஜெர்மன் நாட்டிலேயிருந்து வருகிற உதவிகளின் அடிப்படையில் தொழு நோயாளிகளுக்குத் துணை புரிகின்ற, உதவி புரிகின்ற ஒரு நிலையமாக அது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஏறத்தாழ 80 பேர்கள் அதில் இருக்கிறார்கள். அவர்கள் அங்கே ஒரு தொழிற் சங்க அமைப்பு அமைத்ததன் காரணமாக, ஐ.என்.டி.யூ.சி. தொழிற் சங்கத்தை அமைத்ததன் காரணமாக 21 பேர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அது, ஜெர்மன் நாட்டிலிருந்து வருகிற மானியத்திலே நடைபெறுகிற ஒரு நிறுவனமாகும். ஆனால் அங்கேயிருக்கிற பெரிய மனிதர்கள், அந்தப் பொறுப்பை ஏற்று நடத்துபவர்கள் ஏறத்தாழ 40 லட்சம் ரூபாய் வீடு கட்ட கடன் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எவ்வளவு பெரிய மனிதர்கள் என்பதைப் பார்க்க வேண்டும். தொழு நோயாளிகளுக்கு உதவி புரிய நிதியுதவி வருகிறது. அதில் பெரிய மனிதர்கள், 40 லட்சம் ரூபாயை வீடு கட்டக் கடன் வாங்கியிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது, எப்படிப்பட்ட கொள்ளை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பது மட்டுமல்ல, தொழிற் சங்கம் மூலமாக

[திரு. க. இராமமூர்த்தி] [1982 மார்ச் 27

அங்கே பணியாற்றும் தொழிலாளர்கள் செயல்படத் துவங்கினால், இதற்கெல்லாம் இடையூறு வந்து விடுமென்ற காரணத்தால், அதை முறியடிக்க வேண்டுமென்ற நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சரவர்கள் இதிலே தனியான கவனம் செலுத்துவதோடு, இப்படிப்பட்ட முதலாளி வர்க்கம் எதையும் செய்துவிட்டு, பிறகு மிரட்டும், பேசட்டும், பார்த்துக் கொள்ளலாமென்ற நிலையை உருவாக்குவதால், அவர்கள் நினைக்கின்ற எதையும் சாதித்துக்கொள்ள முடியுமென்ற நிலையை உருவாக்குவது நல்லதல்ல. இதற்கு முடிவு காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர் நலத் துறை அமைச்சரவர்கள் போக்குவரத்து அமைச்சரவர்களின் உற்ற நண்பர். அந்தத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு 8 மீட்டர் துணி ஆண்டு ஒன்றுக்கு சீருடைக்காகத் தந்துகொண்டிருக்கிறோம். 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை 8 மீட்டர் கொடுங்கள், ஆனால் அதைக் கொஞ்சம் நீண்டகாலம் எங்களுடைய கடுமையான உழைப்புக்கு ஒத்து வரும் வகையில் டெரிகாட்டன் துணியாகக் கொடுக்கக்கூடாதா என்று கேட்கிறார்கள் . . . சொல்லியாகிவிட்டதாக அமைச்சரவர்கள் கூறுகிறார்கள். மகிழ்ச்சி. அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, வேலை வாய்ப்புகளைப் புதிதாக உருவாக்க வேண்டுமென்று பல்வேறு நடவடிக்கைகளை வேகமாக எடுத்துக் கொண்டிருக்கிறோம். வேலை வாய்ப்பு இல்லாமல் போகிறதென்று வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிறோம். சேலத்திலே வேலை வாய்ப்பு தரும் ஒரு தொழில் எப்படி முடங்கியது என்பதை நாம் பார்க்க வேண்டும். அங்கே மாக்னசைட் குத்தகை முனுசாமி செட்டி என்பவருக்குக் கொடுப்பதுபற்றித் தகராறு ஏற்பட்டது. அது நீதி மன்றத்திற்குச் சென்றது. உயர்நீதி மன்றத்திலிருந்து உச்ச நீதி மன்றத்திற்குச் சென்று, அவருடைய கோரிக்கை நியாயமானது என்ற உணர்வையொட்டி அரசுத் துறைக்கு வலியுறுத்தி, அவருடைய காண்ட்ராக்ட் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும், 20 ஆண்டுகளுக்கு அவருக்கு காண்ட்ராக்ட் கொடுக்கப்பட வேண்டுமென்று உயர்நீதி மன்றம், உச்சநீதிமன்றம் கடுமையான உத்தரவு போட்டும், ஓராண்டுக்குத்தான் என்று அரசுத் துறை அதிகாரிகள் தங்களுடைய பிடிவாதப் போக்கினாலே அல்லது அவர்களுக்கே உள்ள அணுகுமுறையால் சொன்னதன் விளைவாக மீண்டும் முனுசாமிச் செட்டி உயர் நீதிமன்றத்திற்குச் சென்று, அதிகாரிகள் கோர்ட்டை அவமதித்தது குற்றம் என்று சொல்லி, 2000 ரூபாய் அபராதம் செலுத்த வேண்டிய நிலை அரசின் தொழில் துறைச் செயலாளருக்கு ஏற்பட்டிருக்கிறது. முனுசாமிச் செட்டிக்கு ஏற்பட்ட நீதிமன்றச் செலவுகளுக்கு 2000 ரூபாய் தர

1982 மார்ச் 27] [திரு. க. இராமமூர்த்தி]

வேண்டுமென்று தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கும்போது, ஒரு பக்கம் வேலையில்லாதவர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்க திட்டங்களை வகுக்கிறோம்; வேலையில் இருப்பவர்கள் வேலை இழக்காமலிருக்க அவர்களுக்கு நியாயபூர்வமாகத் துணை நிற்கிறோம். இன்னொரு பக்கம் வேலை வாய்ப்புகளை அடைத்துக் கொண்டிருக்கும் அதிகார வர்க்கம் எப்படிச் செயல்படுகிறது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் எண்ணிப் பார்த்து, அவர்களே இந்தப் பிரச்சினையில் தீர்வு காண முடியாது என்றாலும், அமைச்சரவை இதில் தீர்வு காண வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜனவரி மாதம் 19 ஆம் தேதி நடைபெற்ற இந்திய ஜனநாயகத்திற்கு உலை வைக்கும் வேலை நிறுத்தம் மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் குறிப்பிட்டார்களே, அப்படிப்பட்ட ஒரு வேலை நிறுத்தத்தைத் தடுத்து நிறுத்துவதிலே தமிழகம் மிகத் தைரியமாகச் செயல்பட்டிருக்கிறது. தமிழக அரசுக்குக் காவல் துறை துணை நின்றிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் பாராட்டாமல் இருக்க முடியாது. காரணம் பலவற்றைச் சொன்னாலும்கூட, உலகத் தொழிலாளர் வர்க்க நிலைமையைத் துணைக்குக் காட்டினாலும்கூட, தொழிலாளர் குறையல்லாத காரணங்களுக்காக தொழிலாளர்கள் நாடு தழுவிய போராட்டம் நடத்தினார்கள் என்பதை உலக அளவிலே இங்கேதான் நமது நாட்டில்தான் உருவாக்கிக் காட்டியிருக்கிறார்கள். தொழிற் சங்கத் தலைவர்களுக்கு வேலை இல்லையென்றால், இந்த தேச விரோத வேலைக்கு எப்போதும் தயாராக வழி காட்ட சில அரசியல் கட்சிகள் இருக்கின்றன என்பதை இந்தியா முதல் முறையாகக் கண்டது. அதைத்தான் இந்தியப் பிரதமர், அன்னை இந்திரா காந்தி அவர்கள் நாட்டுக்கு எச்சரித்தார். தமிழகத்திலே தமிழக அரசு, அந்த எச்சரிக்கையிலே உள்ள உண்மையைக் கண்டு, உரிய முறையில் நடவடிக்கை எடுத்ததற்காக தமிழக அரசையும், குறிப்பாக தொழிலாளர் நல அமைச்சரவர்களையும், காவல் துறையையும் பாராட்டி, அமைகிறேன்.

*திரு. ஆர். டி. சீத்தாபதி: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, 1982-83 ஆம் ஆண்டிற்கான தொழிலாளர்கள் நிலைமைபற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின் மீது பேசுகின்ற வாய்ப்பு கிடைத்தமைக்கு என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தொழிலாளர்களுடைய நிலைமைகளைப்பற்றி நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கூறுவதற்கு முன்பு ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்,

[திரு. ஆர். டி. சித்தாபதி] [1982 மார்ச் 27

இந்த மாமன்றத்தினுடைய தலைவர் அவர்கள் ஒரு அச்சுக் கோக்கின்ற தொழிலாளியாக தன்னுடைய பணியைத் துவக்கி, இந்த மாமன்றத்தினுடைய தலைவராக வந்திருக்கிறார்கள். இப்போது தலைவர் பொறுப்பை ஏற்றி ருக்கிற தாங்கள் கோவையிலே பஞ்சாலையிலே பணியாற்றி, இப்போது இந்த அவையினுடைய துணைத் தலைவர் பொறுப்பை ஏற்றிருக்கிறீர்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: நான் எப்போதும் பாட்டாளி நான். முதலிலே பஞ்சாலைப் பாட்டாளி. பின்பு திரைப்படப் பாட்டாளி. இப்போதும் பாட்டாளிதான்.

திரு. ஆர். டி. சித்தாபதி: தமிழகத்தின் முதலமைச்சரவர்கள் நடிப்பதைத் தொழிலாகக் கொண்டு, நான் அவர் நடித்த தொழிலாளி படத்தைச் சொல்ல வில்லை, நடிப்பதைத் தொழிலாகக் கொண்டு தமிழகத்தினுடைய முதலமைச்ச ராகப் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: மக்களுக்கு உழைக்கின்ற 'தொழிலாளி' தான்.

திரு. க. இராமமூர்த்தி: துணைத் தலைவரவர்களே, எல்லோரும் தொழி லாளிகள்தான். மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள் அச்சுத் தொழி லாளியாக இருந்து, மேலவைத் தலைவராக வந்தவர்கள் என்று சொன்னார்கள்.

* * *

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: * * *

திரு. ஆற்காடு நா. வீராசாமி : * * *

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 12-30)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: * * என்று சொன்ன வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுமாறு உத்தர விடுகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: புத்தகத்தில் அச்சுப் பிழை காரணமாக ஏற்பட் டிருக்கக்கூடிய அந்தப் பிழையையும் தாங்கள் நீக்கிவிட உத்தரவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

1982 மார்ச் 27]

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் நல்ல பொருளில்தான் சொன்னார்கள். ஆனால் அதுவே வெளியே பத்திரிகை களில் வந்தால் எத்தனை பெரிய போராட்டத்திற்கு இடம் வருத்துவிடும். அந்தக் காரணத்தால்தான் தாங்கள் சொன்னதையும் அகற்றிவிட உத்தரவிடு மாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: விவாதம் முடிகிற வரையில் அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

* * *

என்பதற்கு சொல்லப்பட்ட பொருள் குறித்து வெளியே வேறு ஏதாவது சொல்லப்பட்டு அதன் காரணமாக பிறகு ஏதாவது வேண்டாத விபரீதம் ஏற்படு மென்று உறுப்பினர்கள் கருதினால், அது சம்பந்தமாக பேசப்பட்ட பகுதிகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுமாறு உத்தரவிடுகிறேன்.

திரு. ஆர். டி. சித்தாபதி: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்கள் கூட ரெயில்வேயில் பணியாற்றி, தொழிற் சங்கத்தின் மூலமாக திராவிட இயக்கத்திலே ஈடுபாடு கொண்டு வந்தவர்கள் தான். இன்றையதினம் அவர்கள் தொழிலாளர் நல அமைச்சராக இருக்கி றார்கள். நானும் ஒரு தொழிலாளிதான். மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் "எங்களையெல்லாம் சொன்னாயே, உன்னைப்பற்றிச் சொல்ல வேண்டாமா?" என்று கருதலாம். அதற்காக நான் என்ன பணி யாற்றியவன் என்பதை உங்கள் முன் கூறுகிறேன். எதற்காக இதைக் குறிப் பிடுகிறேன் என்றால், அதற்குக் காரணம் இருக்கிறது. இந்த அவையிலே எங்களைப் போன்றவர்கள் அமர முடியுமா என்கிற நிலைமை இருந்தது. என்னைப் போன்ற பாட்டாளிகள் இந்த அவையிலே கருத்துக்களைச் சொல்ல முடியுமா என்கிற நிலைமை இருந்தது. நானும் ஒரு காலத்தில் வெல்டராகப் பணியாற்றியவன்தான். நாங்களெல்லாம் இந்த அவைக்கு வர முடியுமா என்கிற நிலைமை இருந்தது. அந்த நிலைமையை நம்முடைய திராவிட இயக்கத்தின் ஒளி விளக்காய், நம்மையெல்லாம் ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் மாற்றினார்கள். அண்ணா அவர்களுடைய பெரு முயற்சி யின் காரணமாக தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி பீடத் துக்கு வந்தது. அந்த ஆட்சியினுடைய உச்சக்கட்டமாக உண்மையான பொது வுடைமைக்குச் சொந்தக்காரர்கள் நாங்கள்தான், கம்யூனிஸ்டுகள் அல்ல என்பதை

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

வெளி உலகத்துக்குச் சொன்னார்கள். அதோடு மட்டுமல்ல, அதற்கு எடுத்துக்காட்டாகத்தான் 'தொழிலாளர் நாள் விடுமுறை' என்று கோயம்புத்தூரில் அறிவிப்பு விடுத்தார்கள். அதையும் நான் இங்கு நினைவுபடுத்துகிறேன். நான் அமரர் அண்ணா அவர்கள் இறந்தார்கள் என்று சொல்ல மாட்டேன். நம்முடைய உணர்வோடு அவர்கள் கலந்துவிட்டார்கள் என்பதை அவை அடக்கத்தோடு கூறுகிறேன். அவர் கட்டிக் காத்த கொள்கை வழிப்படி இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரிசையில் இருக்கிறேன். அந்த வகையில் இன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையை ஏற்றிருக்கின்ற கலைஞரின் உண்மையான தொண்டன் என்ற முறையில் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே கலந்துகொண்டு கருத்துக்களைச் சொல்வதற்கான வாய்ப்பு கிடைத்தமைக்கு நான் இரட்டிப்பு மகிழ்ச்சியடைகிறேன்.

1981-82 ஆம் ஆண்டு தொழிலாளர் நலத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 7 கோடியே 87 லட்சத்து 51 ஆயிரம் ரூபாய். ஆனால் 1982-83 ஆம் ஆண்டுக்கு 8 கோடியே, 27 லட்சத்து 74 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆக, கூடுதலாக 40 லட்சத்து 23 ஆயிரம் ரூபாய்தான் ஒதுக்கப்பட்டுள்ளது. இதை நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் தொழிலாளர்களுக்காக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடன் போராடிப் பெற்றுக்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கியமான சூழ்நிலையில் இருந்திருக்கிறார்கள். அதை ஏன் அவர் அதிக அளவில் பெறவில்லை என்பதை, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக நான் அறிய விரும்புகிறேன். 1981-82 ஆம் ஆண்டுக்கான கொள்கை விளக்கக் குறிப்பில் தொழிலாளர்களுடைய நன்மைக்காக பல்வேறு காரியங்களைச் செய்ய இருப்பதாக பக்கம் 61, பாரா 12-ல் சொல்லியிருக்கிறார்கள். தொழிலாளருக்கு மனமகிழ் மன்றங்கள் கட்ட இந்த அரசு தீர்மானித்திருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். அதுபோல் இரண்டு மூன்று நன்மைகள்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் நேரமின்மையைக் கருதி விட்டு விடுகிறேன். எல்லாவற்றையும் தொகுத்துக் கூற நேரமில்லை. ஏற்கெனவே மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் பசி எடுத்திருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். ஆகவே நான் விரிவாக எல்லாவற்றையும் தொகுத்துச் சொல்லாமல் ஒன்றிரண்டு பற்றி மட்டும் சொல்லி விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் பசி எடுக்கிறது என்று சொன்னது 3 மணி வரை அவை நடப்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நினைவுபடுத்துவதற்காகத்தான்.

திரு. ஆர். டி. சித்தாபதி: உடல் ஊனமுற்ற தொழிலாளர்களுக்கு நன்மை செய்வதற்காக ஒன்று சொல்லப்பட்டிருந்தது. சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, ஈரோடு போன்ற பல்வேறு மாவட்டங்களில் பல்வேறு தொழிலாளர்களுடைய நலன் கருதி இல்லங்கள் அமைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். வட சென்னையில் திருவொற்றியூரில் சமூக நலக் கூடங்கள் அமைத்து குறைந்தபட்ச நிலையில் அவர்களுக்கெல்லாம் சமுதாயப் பணிகளை ஆற்றுவதற்கு இந்த அரசு நிர்மாணித்திருப்பதாக அன்றைக்கு அறிவித்தார்கள். நான் கேட்கிறேன், இந்தச் செயல் திட்டங்களையெல்லாம் ஏன் முறைப்படி நிறைவேற்றவில்லை? வட சென்னையிலே, மற்ற மாவட்டங்களில் எல்லாம் தொழிலாளர் நலன் கருதி சமுதாயக் கூடங்கள், திருமணக் கூடங்கள் எல்லாம் அமைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்களே, சொன்னபடி எத்தனை கட்டப்பட்டிருக்கிறது, எத்தனை விடப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டும். அதுபோல் இந்த ஆண்டு இதற்கான திட்டங்கள்பற்றி ஒன்றும் கொள்கை விளக்கக் குறிப்பிலே இல்லையே, அது ஏன் விடப்பட்டிருக்கிறது என்பதையும் நான் அறிய விரும்புகிறேன். அதே நேரத்தில் இந்தத் திட்டத்தின் கீழ் தொழிலாளர்கள் இறந்துவிட்டால், அவர்களுடைய ஈமச் சடங்கிற்காக 200 ரூபாய் அளிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் 151 பேர்தான் இறந்தார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக 30,200 ரூபாய் செலவு செய்திருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இவ்வளவு பெரிய சென்னையிலும், தமிழகத்திலும் ஓர் ஆண்டில் 151 தொழிலாளர்கள்தான் இறந்திருப்பார்களா? என்னிடத்தில் இதுகுறித்து நிரம்ப புகார்கள் வந்திருக்கின்றன. சென்னையில் இறந்து போகின்ற தொழிலாளர்களுடைய பிணம் நாற்றமடைய விடக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன். மாங்கல்யத்தை அடகு வைத்து, மஞ்சள் கயிறைக் கட்டி, ஈமச் சடங்குகளைச் செய்கிறோம் என்று பெண்கள் சொல்லுகிறார்கள். இனிமேல் இப்படிப்பட்ட புகார்களுக்கு இடம் கொடுக்காமல், மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் உடனடியாக இதில் கவனத்தைச் செலுத்தி விரைவாக இத்திட்டத்தை அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 1981-82-ல் தொழிலாளர்களுக்காக விடுமுறை ஓய்வு இல்லங்கள் கட்ட நிர்மாணித்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஏற்காட்டில் தொழிலாளர்களுக்காக ஓய்வு இல்லங்கள் கட்டுவதாக இருக்கிறது. அதுபோல் மகாபலிபுரத்திலும், குற்றாலத்திலும் கட்டுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்காக 20 எக்கர் நிலம் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. அதுபோல் வால்பாறை, கொடைக்கானல்,

இராமேஸ்வரம் போன்ற இடங்களில் கட்டவும் சுற்றுலா வாரியம் உத்தேசித்துள்ளது என்று அறிவித்திருக்கிறார்கள். இந்த ஆண்டு இது சம்பந்தமாக கொள்கை விளக்கக் குறிப்பிலே ஒன்றும் சொல்லப்படவில்லை. ஏற்கெனவே அறிவித்த திட்டங்களில் எவை எவை நிறைவேற்றப்பட்டிருக்கின்றன, எவை எவை நிறைவேற்றப்படவில்லை என்கிற விவரங்கள் இதில் இல்லை. இப்படியெல்லாம் திட்டங்களை அறிவித்துவிட்டு நிறைவேற்றாமல் இருப்பது தொழிலாளர்களுடைய நாக்கிலே தேன் தடவப்படும் என்று சொல்லி, அவர்களுக்கு உள்ளபடியே தேன் தடவாமல் விட்டு விட்டு, அதன் காரணமாக அவர்கள் ஏமாற்றமடைவதற்கு ஒப்பாகும் என்பதை நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இராமேஸ்வரத்திலே அல்லது வேறு ஒரு மாவட்டத்திலே இவ்வாறு கட்டப் போகிறோம் என்று சொல்லியிருந்தால்கூடப் பரவாயில்லை. ஆனால் 5, 6 இடங்களில் கட்டுவதாகச் சொல்லிவிட்டு, பிறகு கட்டாமல் இப்படி விட்டுவிடுவது நல்லதல்ல. குறிப்பாக மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் இனிமேல் தருகிற கொள்கை விளக்கக் குறிப்புகளிலாவது இன்ன இன்ன திட்டங்களைச் சொன்னோம், இன்ன இன்ன திட்டங்களை நிறைவேற்றினோம் என்கிற விவரங்களைத் தர வேண்டும்.

அடுத்து, 1982-83 ஆம் ஆண்டுக்கான கொள்கை விளக்கக் குறிப்பிலே 1972 ஆம் ஆண்டு சம ஊதிய ஆலோசனைக் குழுவின் பரிந்துரையின் பேரில் ஆலோசனைக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன என்றும் அந்தக் குழுவின் கூட்டம் 5—10—1979, 18—12—1980, 18—12—1981 ஆகிய நாட்களில் நடந்து கீழ்க்கண்ட முடிவுகளை குழு எடுத்தது என்றும் சொல்லியிருக்கிறார்கள். பெண்களுக்கு அதிக வேலைவாய்ப்பு அளிப்பது என்றும், பெண்களுக்கும் ஆண்களுக்கும் பாரபட்சமற்ற சம உரிமை, சம ஊதியம் வழங்குவது என்றும், மருத்துவ மனைகள், கிராம வளர்ச்சி, வருவாய் மற்றும் சுற்றுலா வாரியம் போன்ற துறைகளில் பெண்களுக்கு அதிக வேலைவாய்ப்பு தரவேண்டுமென்றும் கொள்கை அளவில் முடிவெடுக்கப்பட்டதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த அளவுக்கு எத்தனை பெண்களுக்கு சம வாய்ப்புத் திட்டத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள் என்று நான் அறிய விரும்புகிறேன். அந்த நிலைமைகளை எல்லாம் இங்கு அறிவிக்கவில்லை. தாய்க் குலத்திற்கு சொந்தமான அரசு இது என்று ஒரு பக்கம் சொல்லிவிட்டு இன்னொரு பக்கம் அண்ணாவுக்குச் சொந்தமான அரசு இது என்று சொல்லுகிறார்கள். இந்த

அரசு தாய்க்குலத்தை நம்பி ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கிறது. இந்தக் கருத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே கூட தெரிவித்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12-40)

அடுத்து, இதே மன்றத்தில், தொழிலாளர்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்ற அடிப்படையில் 1981-82 ஆம் ஆண்டுக்கான கொள்கை விளக்கக் குறிப்பு விவாதிக்கப்படும்போது, தொழிலாளர்களுக்கான மருத்துவ மனைகள் விரிவுபடுத்தப்படும் என்றும், மருத்துவ மனைகளில் உள்ள படுக்கை வசதிகள் அதிகரிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. அப்போதே நான் கேட்டேன். சென்னையில் உள்ள ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனையில் 625 படுக்கைகள் கொண்ட வசதியும், மதுரையில் உள்ள ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனையில் 202 படுக்கைகள் கொண்ட வசதியும், கோவையில் உள்ள ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனையில் 500 படுக்கைகள் கொண்ட வசதியும் சென்னையில் உள்ள கலைஞர் கருணாநிதி நகரில் உள்ள ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனையில் 206 படுக்கைகள் கொண்ட வசதியும் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. அப்போது கலைஞர் கருணாநிதி நகரில் உள்ள மருத்துவ மனையில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கை 206-லிருந்து 500 ஆக உயர்த்தப்படும் என்று தெரிவித்தார்கள். ஆனால் கலைஞர் கருணாநிதி என்ற பெயர் இருப்பதன் காரணமாக அதைச் செய்யாவிட்டாலும்கூட, தொழிலாளர்களின் மீது கருணை கொண்டாவது அதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வேலூர் எவ்வளவு பெரிய நகரம் என்பதும், அந்த மாவட்டத்தில் எவ்வளவு தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள் என்பதும் எல்லோருக்கும் தெரியும். ஆனால் அந்த ஊர் என்ன பாவம் செய்ததோ தெரியவில்லை. ஒருவேளை ஆளும் கட்சிக்குச் சாதகமாக இல்லாத பகுதிகளில் தொழிலாளர்களுக்கு மருத்துவமனை வசதி செய்து தருவதில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முடிவெடுத்துவிட்டார்களோ என்னவோ தெரியவில்லை. அங்கே உள்ள தொழிலாளர் மருத்துவ மனையில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கை 50 மட்டும்தான். எனவே அதையும் பரந்த நோக்கத்தோடு
படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பேரறிஞர் அண்ணா ந்தத்
களின் வழியில் நடப்பதாகச் சொல்லிக் கொள்கிற ஒரு அரசு, அண் த்தால்,
களின் பெயரை வைத்துக் கொண்டிருக்கிற அரசு அவருடைய ப ன் நம்பு
பான்மையைப் பின்பற்றி நடந்துகொள்ள வேண்டும் என்று கே ன் இழப்பு
றேன்.

முன்பு சிவகாசியைச் சுற்றியுள்ள பகுதியில் தொழிலாளர்களுக்கான மருத்துவமனை அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. குமாரபாளையத்தில் ஒரு மருத்துவமனை நிறுவப்படும் என்றும், திருவெறும்பூர், துவாக்குடி, மற்றும் திருச்சி மாவட்டத்தில் உள்ள கொடுங்கையூர் ஆகிய இடங்களில் ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனைகள் அமைக்கப்படும் என்றும் சொல்லப்பட்டது. இவைகளெல்லாம் எந்த அளவுக்குக் கட்டி முடிக்கப்பட்டன என்று தெரியவில்லை. அங்கெல்லாம் அஸ்திவாரத்தைப் போட்டு, பத்திரிகையில் விளம்பரத்தைப் போட்டுவிட்டு, அதோடு அதை விட்டுவிட்டார்களா என்று தெரியவில்லை. அஸ்திவாரம் போட்டுவிட்டு கட்டாமல் முடிப்பதில் இவர்களைவிட சூரர்களாக வேறு ஆட்களே யாருமில்லை.

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்காக மன்னிக்க வேண்டுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தாபதி அவர்கள் பேசும்போது, அடிக்கல் நாட்டிவிட்டு காரியம் நடக்கவில்லை என்று குற்றஞ்சாட்டுகிறார். எதையும் ஆதாரத்தோடு சொல்ல வேண்டும். அப்படி இல்லை என்றால், நானும் 1978-79 வரை என்ன நடைபெற்றது என்று சொல்ல வேண்டிய நிலை உருவாகும். அதற்கான விவரத்தோடு நானும் காத்திருக்கிறேன். எனவே எந்த இடத்தில் யார் அடிக்கல் நாட்டிவிட்டு வேலை நடக்காமல் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆதாரத்தோடு தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆர். டி. சீத்தாபதி: இந்த அவையில் நாம் ஒரு மரபைக் கடைப்பிடிக்கிறோம். நாங்கள் செய்யவில்லை என்பதற்காகத்தான் இந்தப் பக்கம் வந்திருக்கிறோம். நீங்கள் செய்வீர்கள் என்று மக்கள் நம்பி உங்களை அந்தப் பக்கம் உட்கார வைத்திருக்கிறார்கள்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: இப்படிக் கூறுவதன் மூலம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் "எங்கள் கட்சி ஆட்சியின்போது நாங்கள் செய்யவில்லை, அதனால்தான் அந்தப் பக்கத்தில் அனுப்பப்பட்டிருக்கிறோம்" என்று ஒப்புக் கொள்கிறாரா ?

அந்த நிலை
ஆர். டி. சித்தாபதி: நாங்கள் செய்யவில்லை என்று மக்கள் கருதி
சொந்தமான என்றுதான் சொன்னேன். பல்வேறு தரப்பைச் சார்ந்த மக்கள்
அண்ணாவுக்குந்தத் தமிழகத்தில் சிலர் அப்படிக் கருதக்கூடும். அதனால்தான்
சியில் அமர வைத்திருக்கிறார்கள்.

அடுத்து, 1982-வது வருடக் கொள்கைக் குறிப்பில் வேலை இல்லாதோர் தொகைபற்றி நிரம்பக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் அதை விளக்கமாகச் சொல்லியிருக்கிறார். அதே பல்லவியை நான் பாட விரும்பவில்லை. ஆனால் வேலைவாய்ப்பு அளிக்கும் நிலையத்தில் காசு தருகிறவர்களுக்கு உதவி செய்கிறார்கள். நான் இதை அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகச் சொல்வதாக தயவுசெய்து ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் யாரும் கருதக்கூடாது. யார் ஆட்சியிலிருந்தாலும் சரி, அது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியானாலும் சரி, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியானாலும் சரி, அல்லது மாண்புமிகு திரு. திண்டிவனம் இராமமூர்த்தி அவர்கள் சார்ந்திருக்கிற கட்சி ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் மத்திய ஆட்சியானாலும் சரி, எத்தகைய ஆட்சியிருந்தாலும், வேலைக்குப் பதிவு செய்யும் இடங்களில் உள்ள சில அதிகாரிகள் இத்தகைய முறைகேடுகளை, பணத்தைப் பெற்றுக்கொண்டு செய்துகொண்டுதான் இருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் தனியாகக் கேட்டால், அந்த அதிகாரிகளின் பெயர்களைச் சொல்லத் தயாராக இருக்கிறேன். அது எங்களுக்கும் தெரியும், ஆளும் கட்சியில் இருப்பவர்களுக்கும் தெரியும். அப்படிப்பட்ட அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை இந்த அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வலு உள்ளவர்கள் வேலைக்குப் போவதும், வலுவில்லாதவர்கள் வேலைக்குப் போகாதிருப்பதும் சரியல்ல. தமிழகத்தைப் பொறுத்தவரை, நியாயமான முறையில் அனைவருக்கும் வேலைவாய்ப்பு அளிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1982 ஆம் ஆண்டைப் பொறுத்தவரை, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் நமக்கு ஏற்பட்ட மனித உழைப்பு நாட்களைப் பற்றி விரிவாகக் குறிப்பிட்டார். எனவே அதைப்பற்றி நான் இங்கே எதையும் குறிப்பிட விரும்பவில்லை. இருந்தாலும் கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்களின் அடிப்படையில் ஒன்றை மட்டும் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மனித உழைப்பு நாட்களில் ஏற்பட்டிருக்கிற இழப்பைக் குறைப்பதற்கான நடவடிக்கையை இந்தத் துறை மேற்கொள்ள வேண்டும். இந்தத் துறையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அடுத்த ஆண்டும் நீடித்தால், இந்தத் துறையில்தான் அவர் கடைசிவரை நீடிப்பார் என்று நான் நம்புகிறேன்—அப்படி தொடர்ந்து இருப்பாரானால், மனித நாட்களின் இழப்பு

எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைக் குறைப்பதன் மூலம் மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பக்கம் 51—பாரா 7, 7-ல் ஒரு குறிப்பு தரப்பட்டிருக்கிறது. அதாவது 14—10—1981 அன்று இத்துறை ஆய்வாளர்கள் இம்மாநிலம் முழுவதிலுமுள்ள சிமிட்டி உற்பத்தியாளர்களிடமும், சிமிட்டி விற்பனையாளர்கள் கடைகளிலும் திடீர்ச் சோதனை செய்தனர். 8 சிமிட்டி ஆலைகளில் சிமிட்டி மூட்டை நிரப்பப்படும் இடத்தில் 935 சிமிட்டி மூட்டைகளைச் சோதனை செய்ததில் 123 மூட்டைகளில் எடை குறைவாக இருந்தது என்றும் . . . 62 விற்பனையாளர்களின் சிமிட்டி மூட்டைகள் எடை குறைந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டதென்றும், சொல்லப்பட்டிருக்கிறது. குறைவாக இருந்தது என்றால், லாரிகளிலிருந்து இறக்கும்போது குறைவது என்பது வேறு. அதாவது தூக்கிப் போடுவதன் காரணமாகக் குறைவது. மற்றது எடுத்துக் கொள்வதால் குறைவது. இந்தப் பணி தமிழகத்தில் பல்வேறு இடங்களிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சென்னை நகரில் இதோடு கலப்படமும் நடைபெறுகிறது. தினந்தோறும் நான் வரும் வழியில், புரசவாக்கம் பகுதியில் இத்தகைய கலப்படம் பெருமளவில் நடைபெறுகிறது. சர்க்காருக்கும் இதற்கும் சம்பந்தம் இருக்கிறது என்றோ அல்லது ஆளும் கட்சிக்கும் இதற்கும் சம்பந்தம் இருக்கிறது என்றோ வெறும் அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக நான் எதையும் இங்கே சொல்லவில்லை. ஆனால் அந்தப் பகுதியில் இருக்கிற சிமிண்ட் விற்பனையாளர்கள்—தனிப்பட்ட ஏஜென்சிகள்—என்ன செய்கிறார்கள் என்றால், பி.& சி. மில்லில் சிமிண்ட் போன்ற நிறத்தில் விழும் சாம்பலை இரவு நேரத்தில் மூட்டை மூட்டையாகக் கொண்டு வந்து இரவோடு இரவாகக் கலந்து வெளியே விற்கிறார்கள். இத்தகைய சிமிண்டை வாங்கிக் கட்டிய அரசாங்கக் கட்டிடங்கள் பல இடங்களில் விழுந்ததுகூட அரசுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். அப்படிப்பட்டவர்கள் மீது அரசு கண்டிப்பாக நடவடிக்கை எடுத்து தண்டனை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். இதற்கெல்லாம் எவ்வளவு பெரிய அரசியல் வாதி பின்னணியாக இருந்தாலும், அதைப்பற்றிக் கவலைப் படாமல் நடவடிக்கை எடுக்க வேண்டும். பொதுவாக இங்கே இருக்கிற முறை எல்லோருக்கும் தெரியும். யாராவது ஒருவர் மீது கை வைத்து விட்டால், அவர் உடனே சித்தாபதியைப் பார்ப்பதும், இன்னொருவர் மீது கை வைத்துவிட்டால் அவர் ஓடிப்போய் மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதாவைப் பார்ப்பதுமான சூழ்நிலைதான் இருக்கிறது. இப்ப

டிப்பட்ட நிலைமைகள் உருவாவதென்பது என்னைப் போன்ற அனைவருக்கும் நன்கு தெரியும். ஆனாலும் கூட, இத்தகைய சமுதாய விரோதிகளைக் கண்டுபிடித்துக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பெட்ரோலைப் பொறுத்தவரையில், "24-6-1981 அன்று இத்துறை ஆய்வாளர்கள் ஆய்வு செய்தபோது 60 பெட்ரோல் பங்குகளில் அளவு குறைவாக பெட்ரோல் விற்பனையாவதைக் கண்டு பிடித்தனர்" என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. குறைவாகக் கொடுத்தால்கூட வாங்கிக் கொள்ளலாம். இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம் என்னிடம் ஒரு கார் இருக்கிறது, 2, 3 டாக்சிகள் எனக்கு ஓடுவதால் இதை நான் அறிவேன். குறைவாகப் பெட்ரோல் போட்டால்கூடப் பரவாயில்லை, போட்டுக் கொள்ளலாம். ஆனால் பல பெட்ரோல் பங்குகளின் உரிமையாளர்கள் பெட்ரோலோடு மண்ணெண்ணெயைக் கலக்கிறார்கள். எனவே இத்தகைய குற்றங்களைக் கண்டு பிடிக்க அரசு தனியாகக் காவல் துறையைச் சார்ந்த அதிகாரிகளைப் போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிப் போடும்போது வேலியே பயிரை மேய்ந்துவிடாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும். முக்கியமான ஒரு அதிகாரியை—டி.ஐ.ஜி. திரு மோகன்தாஸ் போன்ற ஒருவரை—இதற்காகத் தனியாகப் போட்டு இதைக் கண்டுபிடிக்க வேண்டும். அவரை வேறு எதற்கெல்லாமோ உபயோகப்படுத்துகிறார்கள். இதற்காக அவரைப் பயன்படுத்தி பெட்ரோல் பங்குகளில் மண்ணெண்ணெய் கலக்கப்படுவதைத் தடுக்க வேண்டும். இப்படி கலப்படம் செய்வதன் காரணமாக பல்வேறு சங்கடங்கள் ஏற்படுகின்றன. தனியார் கார்கள் மட்டுமின்றி அரசுத் துறை போக்குவரத்துச் சாதனங்களும் கெட்டு பெரிய பொருளாதாரச் சீர்கேடு ஏற்படுகிறது. எனவே இப்படிப்பட்ட தவறுகளைச் செய்பவர்களைக் கண்டுபிடித்து, அவர்களின் உரிமங்களை ரத்து செய்வதற்கான நடவடிக்கையில் ஈடுபட வேண்டும். உரிமங்களை வழங்குவது மத்திய அரசின் கையில் இருக்கிறது. இதுகூடவா சித்தாபதிக்குத் தெரியவில்லை என்று கருதக்கூடாது. மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி அவர்களின் உரிமங்களை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12.50)

அதற்கடுத்து, அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்தை சர்க்காரே 1978 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30 ஆம் நாள் நிறுவியிருக்கிறது. அதன் மூலமாக பல்வேறு நாடுகளுக்கு, நம்முடைய தொழில் துறையில் இருக்கின்ற

மிகப் பெரும் என்ஜினியர்கள், தொழிலாளர்கள், வெல்டர்கள், டிரைவர்கள் ஆகியவர்களை அனுப்பும் திட்டம் வைத்திருக்கிறோம். அதன் மூலமாகத் தமிழகத்திலேயிருந்து போகிறவர்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவு. ஆனால் தனிப்பட்ட முறையில் ஏஜென்சி வைத்துக்கொண்டு அதன் மூலம் நிறைய பேரை அனுப்புவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அண்மையிலேகூட திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சற்குணம் என்பவரின் அக்காள் மகன் மற்ற 116 பேரோடு சேர்ந்து வெளிநாடுகளில் சென்று ஏமாற்றப்பட்டபோது, சட்டமன்றப் பேரவைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சரிடம் தெரிவித்து, அவர்களையெல்லாம் விடுவித்து வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், சர்க்காரும் அதிலே ஈடுபட்டு, உடனடியாகக் கொண்டுவர ஏற்பாடு செய்ததற்காக திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் இந்த அரசையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் இதற்குப் பின்னாலே இருக்கிறவர்கள் மீது நடவடிக்கை எடுத்தால், காவல் துறைக்குச் சென்று அப்படிப்பட்டவரை விட்டு விடுங்கள் என்று சொல்லுகிற ஆளும் கட்சிக்காரர்கள் இருக்கிறார்கள்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: அது சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது. யாரோ விடுதலை செய்யப்பட்டிருக்கிறார் என்ற தவறான தகவலைத் தர வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆர். டி. சித்தாபதி: ஆளும் கட்சி கொறடா அவர்கள் தவறாகக் கருதிக் கொண்டிருக்கிறார். விடுவிக்க வேண்டும் என்று ஆளும் கட்சிக்காரர்கள் கேட்கிறார்கள், அதற்காக விட்டுவிட்டார்கள் என்று நான் சொல்லவில்லை. மக்களுடைய நலனைக் கருதி, அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் இதைத் தடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இங்கே இதை நான் பேசுவதன் மூலமாக, சித்தாபதி இதைப் பேசுகிறானே என்று மனவருத்தப்படாமல், சொல்லுகிற உண்மையைக் கருதி, யார் என்று நீங்களே அறிந்துகொண்டு—பெயரை நான் சொல்லவில்லை—தடுக்க வேண்டும். முதலமைச்சர் அவர்கள் இதிலே ஈடுபட்டு இந்தக் காரியத்தில் சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்பட வேண்டும் என்று வேகமாக ஆணையிடும்போது, சில பேர் குறுக்கிடுவது நாட்டிற்கு உகந்ததல்ல, நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஓட்டல் தொழிலாளர்களுக்கென்று ஒரு சட்டம் இருக்கிறதென்று இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். மூன்று ஸ்டார், நான்கு ஸ்டார் ஓட்டல்கள் என்று தமிழகத்திலே, சென்னையிலே பல ஓட்டல்கள் இருக்கின்றன. அவற்றில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கென்று சட்டங்கள் இருக்கின்றன. அந்தச் சட்டத்திற்குள்ளாக ஓட்டல் தொழிலதிபர்கள் செய்கிறார்களா என்றால், இல்லை. உதாரணத்திற்குச் சொல்லுகிறேன். ஓட்டல் காஞ்சி என்று ஒரு ஓட்டல் இருக்கிறது. அந்த ஓட்டலுக்கு உரிமை வாங்கிக் கொடுத்தவனே நான்தான். ஆனால் திறக்கும்போது எப்படியோ திறந்தார்கள். என்னுடைய இனிய நண்பர் திரு. ஜேப்பியார் அவர்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வைத்துத் திறந்தார்கள். எனக்கு அழைப்புக்கூட அனுப்பவில்லை. அந்த அளவிற்குப் பயம் அந்த ஓட்டல் அதிபருக்கு. ஆளும் கட்சியாக யார் வந்தாலும், தோளில் அமர்ந்து கொள்வார்கள், பிறகு ஆட்சியிலிருந்து போய்விட்டால், ஓடி விடுவார்கள் என்பது வழக்கம்.

திரு. ஜேப்பியார்: அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தாபதி அவர்கள் ஒரு நல்ல கருத்தைச் சொன்னார். ஆட்சி போனால் ஓடிவிடுவதாகச் சொன்னார். ஆட்சி போனால் ஓடுபவர்கள் அரசியலில் இருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது வியாபாரிகள் ஓடுவதில் என்ன ஆச்சரியம்?

திரு. ஆர். டி. சித்தாபதி: அதுதான் நடந்து கொண்டிருக்கிறது. மனதாரப் பாராட்டுகிறேன், மிக்க நன்றி தெரிவித்துக்கொள்கிறேன் என் இனிய நண்பருக்கு. அதே நேரத்தில் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். சில ஓட்டல் முதலாளிகள், ஆளும் கட்சிக்காரர்களை வைத்து சில தொழிலாளர் சங்கங்களை உடைக்க முயற்சிக்கிறார்கள். நமக்குள்ளே உள்ள கருத்து வேறுபாடுகளை வைத்து தொழிலாளிகளைப் பழி வாங்க வேண்டாமென்று இந்த அவையின் மூலமாக அந்தத் தொழிலாளர் சங்கத் தலைவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். ஒரு பெரிய மனிதர் அந்த ஓட்டலுக்கு வருகிறார் என்பதால்—அந்த ஓட்டலில் பணி புரிகிறவர் தி.மு.க. அனுதாபி என்ற காரணத்தினால் இன்று வரும் செய்தியை நாளை எதிர்க் கட்சிக்குச் சொல்லிவிடுவான் என்று கருதி—அவனை ஒரு வாரத்திற்கு லீவ் எடுத்துக் கொள்ளும்படி அச்சுறுத்தி லீவ் லெட்டர் வாங்கியிருக்கிறார்கள். தனிப்பட்ட முறையில் எச்சரிக்கை தெரிவிக்க விரும்புகிறேன். அப்படிப்பட்ட முதலாளிகள்

யாராக இருந்தாலும், அத்தகைய காரியங்களில் ஈடுபடாமலிருக்க வேண்டும் என்று அரசாங்கம் கேட்டுக்கொள்ள வேண்டும். அப்படிக் கேட்க மறுக்கிற காரணத்தாலேதான் போராட்டங்கள் வலுவடைந்து வருகின்றன. இந்த நிலைமையைப் போக்க முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

31 ஆம் தேதி கோட்டையை நோக்கி ஊர்வலம் வருவதாக ஓட்டல் தொழிலாளர்கள் அறிக்கை தந்திருக்கிறார்கள். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட பார்த்திருப்பார் என்று கருதுகிறேன். ஓட்டல் தொழிலாளர்கள் கோட்டைக்கு வருவதற்கு முன்னால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொழிலாளர்களை நாடி, உங்களை நாடி நான் வருகிறேன் என்று சொல்லி குறைகளைக் கேட்டு பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுடைய மிக முக்கியமான கோரிக்கை, "கர்நாடகாவிலே 370 ரூபாய் சம்பளம் வாங்குகிறார்கள், தமிழகத்திலே 120 ரூபாய்தான் நாங்கள் வாங்குகிறோம். ஆகவே இந்த ஏற்றத்தாழ்வைப் போக்க வேண்டும்" என்பதுதான் அதற்காக அவர்கள் 31 ஆம் தேதி சர்க்காரிடத்திலே மனு கொடுக்க வரவிருக்கிறார்கள். அதையும் அமைச்சர் அவர்கள் கவனித்து அவர்களுக்கு உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, 480 நாட்கள் பணிபுரிந்த தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கொள்கைக் குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். ஒரு வாரம், மூன்று மாதம் வேலையில் இருந்தாலே, அவனை நிறுத்திவிட்டு அல்லது லீவ் போடச் சொல்லி, அதற்குப் பின் மீண்டும் சேர்க்கிறார்கள் என்றால், அவன் எப்படி 480 நாட்கள் தொடர்ந்து வேலை செய்வான்? இப்படிச் செய்கின்ற தொழிலதிபர்கள், தொழிற்சாலைகள், கடைகள் ஆகியவற்றில் கவனம் செலுத்தி தொழிலாளர்களைத் தக்க முறையில் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டிரைவர்கள், கிளீனர்கள் ஆகியவர்களுடைய ஊதியத்தைக் குறித்து பக்கம் 26-ல் அத்தியாயம் நான்கில் சொல்லியிருக்கிறார்கள். உதாரணமாக மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் குறைந்த அளவு ஊதியத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டிருக்கிறார்கள். அதற்காக எம்.எஸ். என் 102, நாள் 19—1—1979 என்ற அரசாணை வெளியிட்டிருக்கிறார்கள். டிரைவர்களுக்கு 250 ரூபாய் என்றும் கிளீனர்களுக்கு 130 ரூபாய் தர வேண்டும் என்றும் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். அந்த ஆணை நிறைவேற்றப்படுகிறதா என்றால், இல்லை. இப்போது டாக்சி வைத்துக்

கொண்டிருக்கிற முதலாளிகள் எல்லாம் லாரி ஓனர்களாக ஆகிக் கொண்டிருக்கிறார்கள். தொழிலாளர்களுக்காக ஆணை பிறப்பித்துவிட்டால் மட்டும் போதாது, அதிலே 'ஃபாலோ அப் ஆக்ஷன்' இருக்க வேண்டும். ஆணையிட்டுவிட்டால் நடந்துவிடுமென்று கருதிக் கொள்ளாமல், அந்தக் காரியத்தில் அக்கறை கொண்டு தொழிலாளர்களுக்கு உத்தரவாதம் தந்து அந்தச் சலுகைகளைப் பெற்றுத் தர வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பக்கம் 26, அத்தியாயம் நான்கில் தொழிலாளர்களுக்கு ஓவர்-டைம் ஊதியம் கொடுப்பதுபற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். வாரத்திற்கு 48 மணி நேரத்திற்கு மேல் வேலை செய்தால், ஓவர்-டைம் ஊதியம் தருவது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். திருப்பத்தூர் பனியன் தொழிற்சாலையில் ஏழு மாத காலமாகப் போராட்டத்தை நடத்தினார்கள். பிறகு அமைச்சர் அவர்கள் தலையிட்டு காரியம் வெற்றி பெற்றிருக்கின்றது. அதேபோல மாதவரத்தில் சதர்ன் அலாய் ஃபவுண்ட்ரி, மற்றும் திருவொற்றியூரில் இந்தியன் கமர்ஷியல் இண்டஸ்ட்ரீஸ் ஆகிய தொழிற்சாலைகள் இருக்கின்றன. அங்கே காரியங்களைச் செய்யாமல் வேறுபல காரியங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து தொழிற்சாலை முதலாளிகள் மீது நடவடிக்கை எடுத்து தொழிலாளர்களுடைய நலனில் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

25—9—1980 அன்று வீட்டு வசதி வாரிய அலுவலகத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் மற்ற நபர்களுக்கும் தகராறு ஏற்பட்டது. 25, 26, 27 ஆகிய நாட்களில் வேலை நிறுத்தம் செய்தார்கள். காவல் துறையினருக்கும் அவர்களுக்கும், குடிசை மாற்று வாரியத்தினருக்கும் தகராறுகள் ஏற்பட்டன என்று சொல்லுகிறார்கள். அமைச்சர் அவர்கள் அதிலே தலையிட்டு, வேலை நிறுத்தம் செய்த நாட்களை விடுமுறையாக அறிவித்திருக்கிறார் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அந்தக் காரியம் நிறைவேறியிருக்கிறதா என்றால், இல்லை. அங்கே இருக்கின்ற அதிகாரிகள் அதற்கு மாறாக நடந்திருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து அந்த வாக்குறுதியை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-00)

பி. அண்டு சி. மில்லில் சென்ற ஆண்டு போனஸ் இன்னும் தரப்படவில்லை. தர முடியாது என்று அறிவித்து விட்டார்கள். ஆனால் 36-வது விதியின்கீழ் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் 7—1—1982 அன்று தொழிற்

சாலையினுடைய நிர்வாகத்தைக் கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஏன் போனஸ் தர முடியவில்லை என்று இந்தத் தொழிற்சாலைக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். ஆனால் இரண்டரை மாத காலம் ஆகியும் இன்னும் அவர்களுக்குரிய போனசைத் தரவில்லையே, ஏன் என்று அவர்களை அமைச்சர் அவர்கள் கேட்டால், அவர்கள்கூட நஷ்டத்திலே இருக்கிறது என்று சொல்லக்கூடும். இருந்தாலும் பி. அண்டு சி. மில்லை இப்போதுதான் திறந்திருக்கிறார்கள். இதிலே மீண்டும் சங்கடங்கள் இல்லாமல், மீண்டும் இழுத்துப் பூட்டுகின்ற நிலைமை ஏற்படாமல், இந்த அரசு ஜாக்கிரதையாக நிலைமையைக் கையாண்டு, தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் சமரசம் செய்து போனசைப் பெற்றுத்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் 4 சதவிகிதம் போனசை மத்திய சர்க்காரோடு போராடி அன்றைய தினம் இருந்த அமைச்சர், நமக்கெல்லாம் மூத்தவராக விளங்கிய மறைந்த திரு. என். வி. என். அவர்கள் தொழிலாளர் நல அமைச்சராக இருந்த காலத்தில் 8.33 சதவிகிதம் போனசாகப் பெற்றுத் தந்தார்கள். இன்னும் அதைவிட அதிகமாகச் செய்வதற்கு இந்த அரசாங்கத்துக்கு உத்தேசம் இருக்கிறதா இல்லையா என்பதைப்பற்றி நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மத்திய அரசோடு போராட இந்த அரசுக்கு என்ன அச்சம்? அதற்குத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் பக்க பலமாக இருக்கிறதே. இனி யாருக்காகப் பயப்பட வேண்டும்? ஏன் பயப்பட வேண்டும்? உண்மையான தொழிலாளர் தலைவர்கள் எல்லாம் இன்றைக்கு இல்லை. தொழிலாளர்களுக்காகப் பேசுகின்றவர்கள் அரசிடம் சொல்லிவிட்டு பறந்து விடுகிறார்கள். அவர்களுக்குச் சொல்கின்ற பதிலைக் கேட்கின்ற அளவிலே ஆள் இல்லை. தொழிலாளர்கள் பஞ்ச நிலைமைகளைப்பற்றி நாங்கள்தான் அதைக் கேட்க வேண்டும் பதில் உரையிலே. அந்த உரையை நாங்கள்தான் கேட்டாக வேண்டும்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் தலைவர்கள் இல்லாதது இந்த அரசின் மீது இருக்கின்ற நம்பிக்கை காரணமாகவும், தொழிலாளர்கள் நலனில் அக்கறை உள்ள இந்த அரசு ஆற்றுகின்ற பணியில் தவறு வராது என்றுதான் போயிருக்கிறார்கள்.

திரு. ஆர். டி. சித்தாபதி : அந்தப் பக்கத்தில் இருந்துகொண்டு இந்தப் பக்கத்தில் இருப்பவர்களுக்குப் பேசுகின்றார்கள். திரு என் வி என் அவர்கள் அப்படிப்பட்ட காரியத்தைச் செய்தார்கள். அதை இந்த அரசும் செய்ய வேண்டும். மேலும் புள்ளிகளை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதற்கு அடுத்து, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்தில் லேபர் போர்டு பற்றிச் சொல்கின்றேன். அதிலே சட்டமன்ற உறுப்பினரோ, மேலவை உறுப்பினரோ இணைக்கப்படவில்லை. அந்த லேபர் போர்ட் இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பேரவை, திராவிட முன்னேற்றக் கழகத் தொழிற் சங்கப் பேரவையினுடைய தலைவர்களுக்கு அந்த போர்டில் இடமில்லை. அதிலேயும் நம்முடைய தொழிலாளர் நல அமைச்சர் அவர்களுக்கு வேண்டியவர், நண்பர், எங்களுடைய தொழிற் சங்கத் தலைவர் திரு. குப்புசாமி, ஒரு காலத்திலே இரண்டு பேரும் ஒரே இடத்திலே பணியாற்றியவர்கள், அவர்தான் எங்கள் சங்கத்தினுடைய தலைவராக இருக்கிறார். அவரைக்கூட வரச் சொல்லவில்லை. அவர் என்பதல்ல, திராவிட முன்னேற்றக் கழகச் சங்கத் தலைவராக யார் வந்திருந்தாலும், அவரை அதில் போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய எஸ். எஸ். எம். சுப்பிரமணியம் குரூப் பற்றி புகார் வந்திருக்கிறது. அந்தப் புகாரினுடைய அடிப்படையிலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அதுபற்றி போன வருடம் கூடப் பேசினார்கள்.

திரு. ஆர். டி. சித்தர்பதி : அந்தப் புகார் வந்திருக்கிறது. அந்தப் புகாரினுடைய அடிப்படையிலே தான் தெரிவித்துக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் தலையிட்டுத் தீர்க்க வேண்டும். மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களிடம்கூட படிப்பதற்கு ஒப்புதல் பெற்றிருந்தும், எங்கள் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் வேண்டாம் என்று செல்கின்ற நேரத்திலே நான் அதை விரிவாகச் சொல்ல விரும்பவில்லை. குறிப்பாக அந்த எஸ் எஸ். எம். சுப்பிரமணியம் அவர்கள் யார் என்பதையும் இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எங்களுடைய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொருளாளர், பழைய பொருளாளர் எம். ஜி. ஆர். அவர்கள் இருந்த காலத்தில் . . .

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : நான் தலையிடவில்லை. போன வருடம் அங்கத்தினர் அவர்கள் பேசினார்கள். இந்த எஸ். எஸ். எம். சுப்பிரமணியம் பற்றிச் சொன்னார்கள். கைத்தறி நெசவாளத் தொழிலாளர்கள் பணி பாதுகாப்புக்கான விதிகள் பற்றியும் கே.கே. நகர், ஈ. எஸ். ஐ. மருத்துவமனை பற்றியும் ஏற்கெனவே சொன்னார்கள். அந்த எம். எஸ். எம். பற்றியும் நிறைய பேசினார்கள். இவைகளைப் பற்றியெல்லாம் ஏற்கெனவே பேசி

விட்டார்கள். எங்கள் தலைவரைப் பற்றிச் சொல்ல வேண்டாம். அப்படியும் சொல்ல வேண்டும் என்று விரும்பினால், அதைப்பற்றி ஒன்றும் இல்லை. டைம் ஆகிறது என்பதற்காகச் சொல்கிறேன். அதைப் பார்த்துச் செய்யுங்கள்.

திரு. சோ. ஆறுமுகம் : மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஆர். டி சித்தாபதி அவர்கள் சொல்ல விரும்புவது, அந்தப் பிரச்சினை இன்னும் தீர்க்கப் படாமல் இருக்கிறது. தொழிலாளர்கள் பழி வாங்கப்படுகிறார்கள். அந்தப் பிரச்சினையிலே முடிவு காண வேண்டுமென்று சொன்னார்கள். அதை அமைச்சர் அவர்கள் தலையிட்டு தீர்த்து வைப்பார்கள் என்று சொன்னால், அதைப்பற்றி அவர் பேசவேண்டிய அவசியம் இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. காடுவெட்டி கண்ணப்பன் : அந்த எஸ். எஸ். எம். குரூப்பிலே உள்ள மினா எம்ப்ராய்டரிங் பிராசசிங்கில் போன ஆண்டு வேலை நிறுத்தம் நடந்தது. மினா எம்ப்ராய்டரிங் பிராசஸிலே உள்ள தொழிலாளர்கள் சங்கத் தலைவராக சென்ற ஆண்டு, அதற்கு முந்திய ஆண்டு ஆக இரண்டு ஆண்டு களாக நான்தான் பணியாற்றிக் கொண்டிருக்கிறேன். எனவே அங்கே இருக்கின்ற பிராப்லம் எல்லாம் சுமுகமாக தீர்க்கப்பட்டு மீண்டும் அந்தத் தொழிலாளர்கள் பணிக்கு அழைக்கப்பட்டு, இப்போது அந்த பேக்டரி ஒழுங் காக ஓடிக்கொண்டிருக்கிறது. அந்த பிராப்ளம்ஸ் பற்றி இங்கே எழுப்பத் தேவையில்லை என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தாபதி அவர்கள் எஸ். எஸ் எம். யார் என்று கேட்டார்கள். அவர் நாடறிந்தவர். அவர் பெரியாருடைய காலத்திலேயிருந்து பகுத்தறிவுவாதியாக இருப்பவர். அவரைப் பற்றி மீண்டும் இந்த அவையிலே விவாதத்திற்கு வரவேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : பிரச்சினை இல்லை என்று சொன்னால் போதும்.

திரு. ஆர். டி சித்தாபதி : அங்கே இருக்கின்ற தொழிலாளர்கள் புகார் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் மூலமாக அமைச்சர் அவர்களிடம் அதைத் தந்துவிடுகிறேன். அதை அவரே பார்த்து, இதிலே விரிவான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். திரு. காடுவெட்டி கண்ணப்பன் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித் தார்கள். அவர் திராவிடர் இயக்கப் பாரம்பரையில் வந்தவர் என்று திரு. காடுவெட்டி கண்ணப்பன் சொன்னார்கள். நான் அதைப்பற்றி ஒன்று

சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். காரணத்தை அவர் சொல்லிவிட்ட காரணத் தினாலேயே அவர் நிரபராதி ஆகிவிட்டார் என்பதல்ல. அந்த எஸ். எஸ். எம் சுப்பிரமணியம் அவர்கள் கழகத்தினுடைய பொருளாளராக திரு. எம். ஜி. ஆர். அவர்கள் இருந்தபோது, அவர் மீது இன்கம் டாக்ஸ் கணக்கை தானாகவே எழுதிக் கொடுத்து காட்டிக் கொடுத்த . . .

டாக்டர் இரா. சனார்த்தனம் : அவர்கள் அவையிலே இல்லாத நேரத்தில் அவர்களைப்பற்றிச் சொல்கின்றார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஆர். டி. சித்தாபதி அவர்கள் * * * என்று சொன்ன பகுதியை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்குமாறு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். டி. சித்தாபதி : அல்லது காட்டிக் கொடுத்த நண்பர், திராவிட முன்னேற்றக் கழகத்தில் எங்களுடைய பொருளாளராக இருந்தபோது, அந்த இயக்கத்திலிருந்து அவரை நீக்குகின்றீர்களா அல்லது நான் போக வேண்டுமா என்று கேட்டார்கள். அந்த நேரத்திலே நாங்கள் எல்லாம் பொருளாளர் பக்கத்திலே இருந்து நடவடிக்கை எடுத்தோம். இன்று ஆளும் கட்சி பகுதியிலே அமர்ந்திருக்கிறார்கள். நான் போன ஆண்டு அவர்கள் பேசியதைச் சொல்கின்றேன். அதை நான் இப்போது தெரிவித்துக் கொள்கிறேன் ராமா வரத்தில், "தொழிலாளர்களை நான் மனது வைத்தால் வேலையிலிருந்து எடுத்து விடுவேன்" என்று பேசியிருக்கிறார்கள்.

திரு. ஜேப்பியார் : மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, அவை யிலே இல்லாத ஒருவரைப்பற்றி விமர்சிக்கிறார்கள். அவர்கள் இப்போது பதில் பேசுவதற்குச் சந்தர்ப்பம் கிடையாது.

திரு. ஆர். டி. சித்தாபதி : திரு. நாராயணசாமி நாயுடு அவர்களைப் பற்றிக்கூட எத்தனையோ முறைகள் பேசியிருக்கிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அந்தப் பிரச்சினையைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். அதைப்பற்றியே தொடர்ந்து பேசுகிறார்கள்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு அங்கத்தினர் திரு ஆர் டி சித்தாபதி அவர்கள் சொல்லவேண்டிய பிரச்சினையைச் சொல்லக்கூடாது என்பதல்ல என் கருத்து.

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

திரு. ஆர். டி. சித்தாபதி : ஆகவே, இந்த எஸ்.எஸ்.எம். குரூப் ஆப் கம்பெனியில் இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். தொழிலாளர் நண்பர்களைப் பழி வாங்குவதிலே இருக்கிறார்கள். ஆளும் கட்சியில் இருப்பவர்கள் அவர்மீது ஒன்றும் சொல்லாமல், ஒழுங்காக நடந்து கொண்டிருக்கின்றது என்று சொல்கின்றார்கள். ஆக, இந்தத் தொழிலாளர் நண்பர்களை இந்த அரசு காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கொள்கைக் குறிப்பின்மீது பேசுகின்ற வாய்ப்பு அளித்தமைக்காக நன்றி கூறி அமைகிறேன்.

* **மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் தொழிலாளர்கள் நலக் கொள்கைக் குறிப்பின்மீது 7 உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். பொதுவாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களுடைய இயல்புக்கு ஏற்ப எப்போதும் பேசுவதுபோல பேசினார்கள். ஆனால் எப்போதும் பேசுவதை விட சற்று காரம் குறைவாகவே அவரது பேச்சு இருந்தது. பொதுவாகக் கொஞ்சம் காரம் இருந்தது என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். மற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் நல்ல யோசனைகளைச் சொல்லி இந்த அரசு கவனிக்க வேண்டும் என்ற அளவில் அட்வைசாகச் சொன்னார்கள். அவர்களையெல்லாம் நான் மிகவும் பாராட்டுகிறேன். அவர்கள் சொன்ன எல்லாக் கருத்துக்களையும் மனதில் கொண்டு, அதற்கு ஏற்ப நடந்து கொள்ளுவேன் என்பதை இந்த நேரத்தில் உறுதியாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒரு அரசு எவ்வளவுதான் சிறப்பாக இருந்தாலும், Man is Fallible என்று சொல்வார்கள். மனிதன் தவறு செய்யலாம் என்று சொல்வார்கள். அப்படி எங்காவது தவறு இருக்கிறதென்றால், திருத்திக் கொள்ளலாம். இங்கே சொன்னதையெல்லாம், கடந்த 2, 3 வருடங்களில் யார் யார் என்னென்ன எடுத்துச் சொன்னார்களோ, அதையெல்லாம் ஒரு நோட்டில் குறித்து வைத்திருக்கிறேன். போன வருடம் என்ன பேசினார்கள் என்பதை வைத்திருக்கிறேன்.

(பிற்பகல் 1-10)

யார் யார் என்ன பேசினார்கள் என்பது தெரியும். பேரவையிலும் சரி, மேலவையிலும் சரி, அது உதவியாக இருக்கிறது சில நேரங்களில் 'ரெபடிஷன்' இருக்கிறது. உறுப்பினர்கள் அனைவரும் நல்லெண்ணத்தில் பேசியிருக்கிறார்கள் என்று வரவேற்கிறேன்.

கட்டடத் தொழிலாளர்கள் பற்றிப் பேசினார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள். இப்போது அவர்கள், அவர்களைச் சந்திக்கப் போய்விட்டார்கள் என்று கருதுகிறேன்: (சிரிப்பு) அந்தத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் . . .

திரு. சோ. ஆறுமுகம் : மாண்புமிகு துணைத் தலைவர்வர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் பேசிவிட்டு, வேறொரு அலுவல் காரணமாகப் போயிருக்கலாம். அமைச்சரவர்கள் குதர்க்கமாக, வேறொரு அர்த்தம் வரும்படி பேசக்கூடாது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : துணைத் தலைவரவர்களே, sense of humour இல்லையென்றால், வாழ்க்கையே சுவையாக இராது. Do not add years to life but add life years என்ன சொல்கிறார் அமைச்சர் என்று பார்க்கலாம். என்று அவர் இல்லை. அந்தத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், மத்திய அரசு அவர்களுக்குப் பாதுகாப்பான ஒரு நல்ல சட்ட முன்வடிவைக் கொண்டு வர இருக்கிறது. அது கொண்டு வரப்படுகிறது. அதைக் கொண்டு வருகிறார்களா, இல்லையா என்ற சந்தேகம் இருந்தது. எனவே நாமே ஒரு சட்ட முன்வடிவைத் தயார் செய்து, கொண்டு வரத் தயாராக இருந்தோம். இப்போது மத்திய அரசு அந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வரப் போகிறதென்ற மகிழ்ச்சியில் இருக்கிறோம். இந்தக் கூட்டத் தொடரிலேயே கொண்டு வருமென்று எதிர்பார்த்தோம். அவர்கள் கொண்டு வரவில்லையென்றால், மாநில அரசு அவர்களுக்குப் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வரும். எனவே 29—3—1982-ல் போராட்டம் என்பதெல்லாம் தேவையில்லை என்பது என்னுடைய வேண்டுகோளாகும். அவர்கள் சட்டம் கொண்டு வருவதாகச் சங்கம் அவ்வளவு வலுவுள்ளதாக இல்லாததால், தொழிலாளர்களை ஏமாற்றி சொல்லிவிட்டார்கள். அதில் என்னென்ன இருக்கிறதென்று கேள்வி நேரத்தில் பேரவையில் சொன்னதாக ஞாபகம். எனவே போராட்டம் தேவையில்லை. நல்ல சட்டத்தை மத்திய அரசு கொண்டுவர இருக்கிறது, அதில் என்னென்ன இருக்க வேண்டுமென்று மாநில அரசு சொல்லியிருக்கிறதோ அவற்றையெல்லாம் மத்திய அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது என கருதுகிறேன். எனவே போராட்டத்தை நிறுத்தி விடுங்கள் என்று அந்தத் தொழிலாளர்களுக்கு இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. காடுவெட்டி கண்ணப்பன் அவர்கள் தனியார் துறைப் போக்குவரத்தில் இருக்கக்கூடிய சிரமங்களை எடுத்துச் சொன்னார்கள். தனியார் துறைப் போக்குவரத்து முதலாளிகள், அங்கே தொழிற் சங்கம் அவ்வளவு வலுவுள்ளதாக இல்லாததால், தொழிலாளர்களை ஏமாற்றி

வருகிறார்கள் என்பது ஓரளவிற்கு உண்மை. அப்படிப்பட்ட ஏமாற்றம் அந்தத் தொழிலாளர்களுக்கு ஏற்படாமலிருக்க என்னென்ன காரியங்களில் ஈடுபட வேண்டுமோ, அவற்றையெல்லாம் இந்த அரசு செய்யுமென்பதைச் சொல்லியாக வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேச ஆரம்பிக்கும் போதே, "நாங்கள் ஏற்கெனவே தொழிலாளர் விரோத அரசு என்று சொன்னோம். அதற்காகக் கண்டனத் தீர்மானம் கொண்டு வந்தோம், அந்தக் கொள்கையிலிருந்து மாறவில்லை, அப்படியேதான் இருக்கிறார்கள்" என்று சொன்னார்கள். அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், சி.பி.எம். இடமிருந்து சர்டிபிகேட் வாங்க வேண்டுமென்ற துர்பாக்கிய நிலையில் நாங்கள் இல்லை என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். தொழிலாளர் பிரச்சினை என்று சொல்லும்போது, தொழிற்சாலைகள் முதலிலே இருந்தால்தான் ஒரு நாடு முன்னேற முடியும். தொழிற்சாலைகள் வந்த பிறகுதான் 'எம்ப்ளாய்மென்ட் ஆப்பர்சூனிடிஸ்' ஜெனரேட்டாகும். பொருளாதாரம் வளரும். அதைப்பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின்மீதான விவாதம் நேற்றைய முன்தினம் நடந்தது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் அருமையான சொற்பொழிவாற்றினார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள், நான் என்ன இளைத்தவனா என்று எதிர்க் கட்சியிலிருந்து பேசினார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி பேசினார்கள், திரு. தாஸ் பேசினார்கள். அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வரிசையிலிருந்து மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா போன்றவர்கள் பேசினார்கள். அதில் பேசி, இந்த அரசை நீங்கள் கண்டித்திருக்கலாம். கண்டிக்கவே இல்லையென்றால், நானும், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்களும் ஏன் எதிரெதிரே உட்கார்ந்திருக்கிறோம்? கருத்து வேறுபாடு இருப்பதால்தான், அப்படி உட்கார்ந்திருக்கிறோம். எத்தனையோ ஆண்டுகளாக ஒன்றாக இருந்து, பிரிந்தவர்கள். கருத்து வேறுபாடு எல்லாவற்றிலும் பிரதிபலிப்பது நியாயம்தான். இந்த நாட்டில் அதிக தொழிற்சாலைகள் வேண்டும், மத்திய அரசோடு சண்டை போட வேண்டும், மத்திய அரசு முதலீடு அதிகமாக வரவேண்டும் என்பதுதான் எல்லோருடைய கருத்து. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களும் ஒத்துக்கொள்வார்கள். நேற்று முன்தினம் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. முத்துசாமி, திரு. தாமோதரன், திரு. சங்கரலிங்கம் ஆகியோர் பேசிய பேச்சை கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள் அவையில் இருந்து, கேட்கவில்லையென்பதுதான் என்னுடைய கவலை. அவர்கள் இருந்து கேட்க

வேண்டும். 'ஒன் டிராக் மைன்டி' லேயே பேசக்கூடாது. நாங்கள் மார்க்சிசம், லெனினிசம் படித்திருக்கிறோம் இதுதான் 'ஸ்ட்ரேடஜி, டேக்டிக்ஸ்' என்று 'ஒன் டிராக் மைன்டி' லேயே போகக்கூடாது. மற்றவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்று பார்க்க வேண்டும். நேற்று முன்தினம் நடைபெற்ற விவாதம், was of a high order கிரிட்டிசிசம்' இருந்தது. that is bound to be there போன தடவை 3 பாயின்ட்ஸ்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். டி. சித்தாபதி அவர்கள் சொன்னார்கள். இந்த முறை பழுத்த தொழிற்சங்கவாதி மாதிரி, நல்ல முறையில் தயார் செய்து, பேசிக்கொண்டிருந்தார்கள். "என்னடா, நாம் தி. மு. க.வாயிற்றே, அண்ணா தி. மு. க ஆட்சியை அப்படியே விட்டால் எப்படி?" என்று ஒரு 'டிக்' பண்ணினார். இது இயற்கையாக ஏற்படக் கூடியதுதான். அரசியலில் இருக்கும். அதை ஏற்றுக்கொள்கிறேன். நேற்று முன்தினம் தொழில் வளர்ச்சி இந்த நாட்டில் ஏற்பட வேண்டும், பொருளாதாரம் வளர வேண்டும், அதையொட்டி தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய பங்கை வழங்க வேண்டும், அவர்கள் ஏமாற இடம் கொடுக்கக்கூடாது என்று எல்லாம் எடுத்துச் சொல்லப்பட்டது. அப்போது இரண்டு கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களும் இருக்கக்கூடாதா? கேட்டால் கமிட்டி மீட்டிங் என்கிறார்கள். எந்தக் கமிட்டி இதைவிட முக்கியம்? ஆண்டுக்கு ஒரு முறை பாலிசி ஸ்டேட்மென்ட் வருகிறது. அடுத்த ஆண்டு லேபர் வருகிறதோ, ஹவுசிங் வருகிறதோ. அன்று தொழில் கொள்கைக் குறிப்பில் பேசவில்லை. இன்றைய தினம் வந்து பேசிவிட்டு, என்ன அமைச்சர் சொல்கிறார் என்றுகூடக் கேட்காமல் * * * போய்விட்டார்கள் என்று ஏன் சொல்கிறேன் என்றால், அவர்கள் இருந்து பதிலைக் கேட்க வேண்டாமா?

திரு. ஆற்காடு நா. வீராசாமி: துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள், உறுப்பினர்கள் பேசிய கருத்துக்களுக்கு பதில் சொல்ல முழு உரிமை படைத்தவர்கள். ஆனால், பேசியவர்கள் எல்லாம் சபையில் இருந்தாக வேண்டுமென்பது மரபல்ல. எத்தனையோ வேலை காரணமாக அவர்கள் போகலாம். அதைக் காரணமாக வைத்துக் கொண்டு சொன்னால் எப்படி? இன்றைக்கு தி. மு. க. சார்பில் பேசிய திரு ஆர். டி சித்தாபதி அவர்கள்கூட வேறு அலுவல் காரணமாக அவசரமாகப் போயிருக்கலாம். அதைக் காரணமாகக் கொண்டு, பேசிவிட்டுப் போனவர்கள் மீது குற்றம் சுமத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

[1982 மார்ச் 27

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : துணைத் தலைவரவர்களே, Two way traffic தானே. கல்விக் கொள்கைக் குறிப்பின்மீது விவாதம் நடந்தபோது, நாங்கள் குறிப்பெடுத்து, கல்வி அமைச்சரவர்களிடம் கொடுத்தோம். அவர்கள் கொஞ்சம் காலதாமதமாக வந்தார் . . .

(திரு. க. இராமமூர்த்தி எழுந்தார்)

I will always yield especially for you. அதேபோல, ஊரகத் தொழிலமைச்சர் வரவில்லை. இருந்தாலும் நாங்கள் குறிப்பெடுத்துக் கொடுத்தோம். அது Collective responsibility அப்போது, மிகவும் கண்ணியத்திற்கு எப்போதும் பெயர் பெற்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் அதை எடுத்துச் சொன்னார்கள். மந்திரிகள் வரவில்லை, இங்கே உட்காரவில்லை என்று சொல்லக்கூடிய உரிமை உறுப்பினர்களுக்கு இருப்பதுபோல, நாங்களும் மனிதர்கள்தானே. எவ்வளவு கடுமையாகப் பேசினீர்கள். பதில் என்ன, நான் பேசுவது சரிதானா, அரசு பதில் சரிதானா அல்லது தவறா என்று உறுப்பினர்கள் கேட்க வேண்டுமென்று எனக்கு ஆசை. wishful thinking தான். உறுப்பினர்கள் இல்லை என்றால் என்ன செய்ய முடியும்?

திரு. ஆற்காடு நா. வீராசாமி : துணைத் தலைவரவர்களே, உறுப்பினர்கள் இருப்பதற்கும், அமைச்சர்கள் இருப்பதற்கும் வேறுபாடு இருக்கிறது. என்னதான் 'கலெக்டிவ் ரெஸ்பான்சிபிலிட்டி' இருந்தாலும், தொழிலாளர் நலத் துறை அமைச்சரவர்களுக்குத் தெரிந்த அளவிற்கு மற்ற அமைச்சர்களுக்குத் தெரிய வாய்ப்பில்லை. பேசுகிற உறுப்பினர்கள், சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் இருக்கும்போது தங்கள் கருத்துக்களைச் சொல்லி, அவைகள் முறையாகக் கவனிக்கப்பட்டு, பிரச்சினைகள் தீர்க்கப்படுமென்ற ஆர்வத்தின் காரணமாக, அப்படிச் சொல்லப்படுகிறதே தவிர, அரசாங்கத்தைக் கண்டித்துச் சொல்ல யாரும் தயாராக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் என் பழைய 'ப்ரெண்ட்'. இப்போது நான் பதில் சொல்லுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் இல்லாமல் எப்படி பதில் சொல்ல எனக்கு ஆர்வம் வரும்? 'பூமராங்' ஆவது போல் அவர் பேசுவார், நான் வெஹிமென்ட்டாக பதில் சொல்ல முடியும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவையில் இருப்பதாக நினைத்து, பதில் சொல்லலாம்.

1982 மார்ச் 27]

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு உறுப்பினர் அவையில் இல்லை என்று உணர்ந்து, விவாதத்தை சீக்கிரம் முடித்துக்கொண்டால், எல்லோருக்கும் நல்லதாக இருக்கும்.

திரு. க. இராமமூர்த்தி : துணைத் தலைவரவர்களே, அமைச்சர்களுடைய உணர்வு நியாயமானது. கூடுமானவரையில் ஒவ்வொரு நாளும் பேசுகின்ற உறுப்பினர்கள், பதிலுரைக்கு இருக்க வேண்டியது கடமை, நியாயமும்கூட. ஆனால் சில நேரங்களில் தவிர்க்க முடியாமல் உறுப்பினர்கள் வெளியே போகின்றபோது, வேண்டுமென்றே சென்றுவிட்டார்கள் என்ற உணர்வில், குற்றமாக எடுத்துக்கொள்ளக் கூடாது.

(பிற்பகல் 1-20)

ஆனால் அமைச்சர்களைப் பொறுத்தவரையில், ஒரு கடமை இருக்கிறது. அந்தப் பணியை, அந்தக் கடமையை மற்றவர்கள் செய்ய முடியாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் மட்டும் இங்கே கருத்துக்களைச் சொல்லவில்லை. மற்றவர்களும் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் சொன்ன கருத்துக்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவில்லை என்றால், அது அமைச்சர் அவர்கள் மீதுதான் பிரதிபலிக்கும். உறுப்பினர் மீது அது பிரதிபலிக்காது. ஏனென்றால் பதில் அளிக்க வேண்டிய கடமை அமைச்சருக்கு இருக்கிறது. அது உறுப்பினரைச் சேராது. ஆகவே, அமைச்சருடைய பதில், உறுப்பினர் அவையில் இல்லாவிட்டால்கூட, முழுமையாக இருக்க வேண்டும். அப்படி பதில் அளிக்க வேண்டும் என்பது சட்டமன்ற சம்பிரதாயங்களில் நியாயமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : என்னுடைய கருத்தைச் சொல்ல வேண்டுமென்றால், அவர்கள் அவையில் இருந்திருக்க வேண்டும். நேற்று முன்தினமும் அவர்கள் அவைக்கு வந்திருக்க வேண்டும். ஆக அவர்கள் கடமையிலிருந்து தவறியிருக்கிறார்கள். அன்றைக்கு இங்கு நல்ல முறையில் விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

* திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவையில் இல்லாததாலேயே அவர் கடமை உணர்விலிருந்து வழுவி விட்டார் என்கிற கடுமையான வாதத்திற்குப் போக வேண்டாம். அவர்கள் அவையில் இல்லை என்பதற்காக இப்படி கடுமையான வார்த்தையை அமைச்சர் அவர்கள் பயன்படுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[1982 மார்ச் 27

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திரு. நல்லசிவன் அவர்கள் அவையில் இருந்திருக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறார்கள். அவர்கள் அவையில் இல்லாவிட்டால்கூட பரவா யில்லை. அமைச்சர் அவர்கள் பதில் சொல்லலாம்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : ஒரு விளக்கம் கூறுகிறேன். நான் கம்யூனிஸ்டுகளுக்காக வாதாடுவதாகக் கருதக் கூடாது. இங்கே இரண்டு கம்யூனிஸ்ட் உறுப்பினர்கள்தான் இருக்கிறார்கள். இரண்டு பேரும் இன்றைக்கு கட்சிகளின் மாநிலத் தலைவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு மாநில அளவில் எவ்வளவோ பிரச்சினைகள் இருக்கக்கூடும். அனுபவம் வாய்ந்த நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் அதைப் பெரிய பிரச்சினை ஆக்கி விவாதிப்பதைவிட மற்றவர்கள் பேசியவற்றுக்குத் தகுந்த பதிலை சொன்னாலாவது நன்றாக இருக்கும்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இடம் மாறியிருப்பதால், ஆளும் கட்சியில் உள்ளவர்கள் இப்படிப் பேசுகிறார்கள் என்று அவர்கள் இங்கே சொன்னார்கள். அவர்கள் சொன்னது போல், நான் சொல்ல மாட்டேன். ஆனால் ஒன்று சொல்வேன். கேரளாவில் முன்பு இவர்களுடைய கட்சி ஆட்சியில் இருந்தது. அப்போது பகவதி அம்மன் பஞ்சாலையில் ஸ்டிரைக் நடந்தது. இங்கே நாடு தழுவிய போராட்டம் ஜனவரி 19-ல் நடைபெற்றது என்றெல்லாம் சொன்னார்கள். அதற்குள் நான் போக வில்லை.

'It was just to paralyse Indian economy and if possible to give pinpricks to the Government of India'

என்பதுதான் என்னுடைய கருத்து. அதுதான் அரசின் கருத்தும். பகவதி அம்மன் பஞ்சாலையில் நடைபெற்ற ஸ்டிரைக்கில் கம்யூனிஸ்ட் கட்சி கலந்து கொள்ளவில்லை. அன்றைக்கு அவர்கள் வேலை செய்தார்கள். 'இடம் மாறியிருப்பதால் ஆளும் கட்சியில் இருப்பவர்கள் இப்படிப் பேசுகிறார்கள்' என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதால்தான் இதைச் சொல்கிறேன். ஆகவே உறுப்பினர் அவர்களுடைய கட்சி கேரளாவில் ஆளும் கட்சியாக இருந்த காரணத்தால், அவர்கள் ஸ்டிரைக்கில் கலந்து கொள்ள வில்லை. "உங்கள் ஆட்சியில்தான் இடம் மாறுகிறது". இப்படி எங்களைக் குற்றம் சொல்பவர்களே வேலை நிறுத்தத்தில் ஈடுபடவில்லை. இவர்களுடைய

1982 மார்ச் 27] [திரு. எஸ். இராகவானந்தம்]

கட்சி ஆட்சியில் இருந்ததால், ஸ்டிரைக்குக்கு எதிராகச் செயல்பட்டார்கள். அது சம்பந்தமாக, அதற்கு எதிராக வெளியிடப்பட்ட நோட்டிஸ் என்னிடம் இருக்கிறது.

அதுபோல செக்ஷன் 11-எ பற்றி இங்கே சொன்னார்கள். அதுபற்றி அவர்கள் சொன்ன கருத்து சரியில்லை. அந்த செக்ஷன்படி, ஏற்கெனவே கொடுத்த தீர்ப்புகளில் தலையிட அதிகாரம் இல்லை என்கிற நிலை இருந்தது. ஆனால் இப்போது செய்திருக்கும் ஏற்பாட்டின்படி தீர்ப்பை ரிவைஸ் பண்ண, ஆல்டர் பண்ண அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. வருகிற வழக்குகளை யெல்லாம் நீதிமன்றத்திற்கு அனுப்புங்கள் என்று சொல்லவில்லை. எனக்குத் தெரிந்தவரையில், இதுபற்றி சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு கூட இல்லை. போனஸ் கொடுப்பது பற்றி மத்திய அரசிலிருந்து டைரக்ஷன் வந்திருக்கிறது. சட்ட பூர்வமாக கொடுக்கிற போனசுக்கு மேல் அதிகமாகக் கொடுக்க தமிழக அரசு முயற்சி எடுக்கக்கூடாது என்று அவர்கள் அதில் கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தாபதி அவர்கள் இங்கே ஒன்றைச் சொன்னார்கள். 8-1/3 என்று இருப்பதை நீங்கள் 10 பெர்சன்ட் என்று ஆக்க வேண்டுமென்று சொன்னார்கள். எனக்குத் தெரிந்தவரையில், இந்த 8-1/3 சதவிகித போனசை எல்லோரும் ஏற்றுக்கொண்ட பிறகு, அன்றைக்கு தொழிலாளர் நல அமைச்சராக இருந்த திரு. என். வி. என். அவர்களும் 8-1/3 வேண்டுமென மாநாட்டில் கூறினார். இதை 10 சதவிகிதமாக ஆக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தாபதி சொன்னார்கள். அது 'சீரியஸ் ரெப்பர்கஷனை' ஏற்படுத்தும். ஆழமாகத்தான் அதைப் பரிசீலிக்க வேண்டும். வடலூரில் நடந்த ஸ்டிரைக் பற்றியும் இங்கே சொன்னார்கள். 20 பெர்சன்ட் போனஸ் கொடுப்பதாக அவர்கள் சொன்னார்கள். "18 பெர்சன்ட் ஆக இருந்தாலும், 17 பெர்சன்ட் ஆக இருந்தாலும் நாங்கள் மேக்சிமம் 20 பெர்சன்ட் போனசைக் கொடுத்து விடுகிறோம். அதற்கு மேல் கொடுக்க மாட்டோம்" என்று சொல்வதுதான் அந்தத் தொழில் அதிபரின் கொள்கை. அதில் அவர் விடாப்பிடியாக இருக்கிறார். யாரிடம் போய் மோதுகிறோம் என்று பார்த்து மோத வேண்டும். வாதாடிப் பெற முடியும் என்று தெரிந்தால்தான், மோத வேண்டும். அதற்கு ஏதாவது தந்திரத்தைக் கையாள வேண்டும். எல்லா இடத்திலும் இப்படிப் போராடுகிற அணுகுமுறையைக் கையாண்டால் எப்படி? இதற்கு லீடர்ஷிப்புக்குரிய 'குவாலிட்டி', எல்லாம் இருக்க வேண்டும். கமிஷனரோடு பேசினார்கள். நானும் பேசினேன். சம்பந்தப்பட்டவர்கள் எல்லோருடனும் பேசினார்கள். ஆனாலும் அவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை. லாபம் வந்திருக்கிறதா என்றால், வந்திருக்கிறது. பிராஸ்பரஸ் இன்டஸ்ட்ரியா என்று கேட்டால், ஆம், 'பிராஸ்பரஸ் இன்டஸ்ட்ரி'

தான். அப்படி என்றால், அதிகமாக ஊதிய உயர்வு, படி எல்லாம் கேட்ப தற்குரிய வழிவகைகள் இருக்கின்றன. ஆனால் போனசைப் பொறுத்த வரையில்; 20 பெர்சென்டுக்கு மேல் கொடுப்பதற்கு இல்லை என்று அந்தத் தொழில் அதிபர் சொல்லிவிட்டார். அதற்காக அவரைக் கைது செய்ய முடியுமா ? இல்லை, எலெக்ட்ரிசிட்டி கனெக்ஷன் 'கட்' பண்ண முடியுமா ? ஆனால் நான் ஒன்று சொல்கிறேன். புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியைப்போல் நல்லாட்சியை வேறு எங்கேயுமே நாம் பார்க்க முடியாது. கடைசியிலே ரூ. 500 அட்வான்ஸ் வேண்டுமென்று கேட்டார்கள் பேச்சு வார்த்தை செந்த மண்டபத்தில் நடந்தது. நானும் போயிருந்தேன். பிரைவேட் செக்ரட்டரி கூட வந்திருந்தார். இங்கே மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது, அதிபர் மேல் ஒரு பழியைப் போட்டார். கொடுத்த தொகையை பிடித்தம் செய்கிறார்கள் என்றார். ஒரு சிலர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒன்றும் தெரியாதவர்கள் என்று நினைத்து ஏமாந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் தெரிந்தவர்கள். நாடகத்தில் சினிமாவில் எல்லாம் அவர்கள் டிரமன்டசாக அதில் வருகின்ற வசனங்களை எல்லாம் சொல்லிச் சொல்லி 'ரீடெயினிங் பவ்வர்' அவர்களுக்கு அதிகமாக இருக்கிறது. 30 நாளைக்கு முன்னால் ஒருவர் ஒரு பிரச்சினைபற்றிப் பேசும் போது ஒன்றைச் சொல்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். 30 நாளைக்குப் பின்னால் அதே பிரச்சினையை மாற்றிச் சொன்னால், உடனே அவர்கள் 'இன்றைக்கு வேறு விதமாகச் சொல்கிறீர்களே' என்று கேட்பார் கள். அவ்வளவு தூரம் அபார ஞாபக சக்தி படைத்தவர்கள் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள். ஆகவே தான் நான் சொல்கிறேன். மாண்பு மிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் பேசுபவர்கள் முதலிலேயே மிகவும் நன்றாக யோசித்துவிட்டுச் செல்ல வேண்டும்.

'tremendous memory power, retaining power, I have a lot of appreciation for him'

நன்றாக யோசித்துவிட்டுச் செல்ல வேண்டும். முதலில் 500 ரூபாய் 'அட்வான்ஸ்' வேண்டும் என்றார்கள் முதலாளியும் 500 ரூபாய் தரு கிறேன் என்றார். பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு வருக்கும் 750 ரூபாய் தாருங்கள் என்று சொன்னார்கள். பிடிக்காமல் இருந் தால் பரவாயில்லை என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் "திரு. இராக வானந்தம், பிரைவேட் செக்ரட்டரி போன்றவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்கள் பார்த்துக் கொள்வார்கள், நீங்கள் 750 ரூபாய் அட்வான்ஸ் கொடுங் கள்" என்று சொன்னார்கள். அட்வான்ஸ் என்று சொன்னால், கடன் என்று தானே பொருள். அப்படி என்றால் அதை அவர் 'ரெக்கவர்' பண்ணா

மல் இருப்பாரா ? சென்னையைப் பொறுத்தவரையில், பிறக்கின்ற ஒருவன் இறந்தால் எப்படி கிருஷ்ணாம்பேட்டைக்குப் போவது உறுதியோ அதுபோல் அட்வான்ஸ் என்று வாங்கிவிட்டால், அதைத் திரும்பப் பிடிப்பது உறுதிதானே.

'Recoverable advance, recovery to commence from 1st August of that year'

என்று அதற்கான ஒப்பந்தம் தெளிவாகப் போடப்பட்டிருக்கிறது. ஆகவே அட்வான்ஸ் என்று கொடுத்தால், அதைப் பிடிக்கத் தான் செய்வார்கள். 'பிரைம் மினிஸ்டர் இந்திரா காந்தி மிகவும் நல்லவர், ஆனால் சுற்றியிருக்கிற அமைச்சர்கள் பிற்போக்குவாதிகள். அவரைத் தீய சக்திகளிடமிருந்து விடு விக்க வேண்டும்' என்று சொல்வார்கள். அது ஒரு தந்திரம். அதுபோல் தான் இங்கேயும் புரட்சித் தலைவர் அவர்கள் மிகவும் நல்லவர். ஆனால் சுற்றியிருக்கிறவர்கள் இப்படிச் செய்துவிட்டார்கள் என்று சொல்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எப்படி நல்லவர்களோ அதேபோல் நாங்களும் நல்லவர்களே. அப்படி நல்லவர்களாக இல்லாவிட்டால், நாங்கள் தொடர்ந்து இருக்க முடியாது. (சிரிப்பு)

(பிற்பகல் 1-30)

ஏனென்றால் முதலமைச்சர் அவர்களின் கருத்துக்கு எதிராக இருப்பவர் யாரும் அமைச்சராக இருக்க முடியாது. ஒரு முதலமைச்சர் தன்னுடைய சகாக்களைப் பார்த்துதான் செலக்ட் செய்கிறார். We hold our office at this mercy and pleasure அப்படிப்பட்ட நிலையில் முதலமைச்சருடைய கருத்துக்கு ஓர் அமைச்சர் மாறுபட்டிருக்கிறார் என்றால், அடுத்த நாள் காலையிலே அவர் அமைச்சரவையிலே இருக்க முடியாது. முதலமைச்சரே அவரை டிராப் செய்து விடுவார். முதலமைச்சரின் கருத்துக்கு மாறுபட்டவர் அமைச்சரவையில் கண்டிப்பாக இருக்க முடியாது, ஆகவேதான் சொல்லு கிறேன், அவர் எவ்வளவு நல்லவரோ அவ்வளவு நல்லவர்கள்தான் நாங்கள் எல்லோரும் கூட.

திரு. ஆர். டி. சீத்தாபதி : சில முதலமைச்சர்களுக்கு சில அமைச்சர்களை வெளியே அனுப்ப முடியாத அளவுக்கு சில இக்கட்டான சூழ்நிலைகள் உண்டாகி விடுகின்றன. காலம் வரும் வரை அவர்கள் காத்திருக்க வேண்டிய அவசியம் வருகிறது. அது இன்றைய முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அன்றைய தினம் நாங்கள் ஆளும் கட்சியில் இருந்தபோது, எங்களின் பொருளாளராக இருந்த அவருக்கு இது மிக நன்றாகத் தெரியும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : ஒரு அமைச்சரவையில் முதலமைச்சரின் கருத்துக்கு மாறுபட்டவர் கண்டிப்பாக இருக்க முடியாது. அவருடைய கொள்கைக்கு மாறுபட்டவர்கள் இருக்க முடியாது. நானேகூட ஒரு கருத்தை ஒப்புக்கொள்ளவில்லை என்றால் 'வணக்கம், உங்களோடு என்னால் ஒத்துப் போக முடியவில்லை, என்னை விட்டுவிடுங்கள், நான் போய் வருகிறேன்" என்று போவதுதான் புத்திசாலித்தனமே தவிர, வேறு மாதிரி செயல்பட முடியாது. அதுதான் நியாயம்கூட. அவர் சொன்னதைக் கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றுபவர்களாகத்தான் நாங்கள் இருக்கிறோம்.

எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, "750 ரூபாய் அட்வான்ஸ் கொடுங்கள்" என்று சொன்னார். 'அட்வான்ஸ்' என்றால் முன்பணம் என்று அர்த்தம், முன்பணம் என்றால், அது ரெகவரபிள் என்றுதான் அர்த்தம். ஆக, இன்றைக்கு அதைத்தான் பிடிக்கிறார்கள். அதில் என்ன தப்பு? அங்கேதான் அவர்களுக்கு சிரமம் வருகிறது. போராட்டத்தை நடத்துவதற்கு முன்னால் யோசித்துப் பார்க்க வேண்டும். "போராடலாமா? போராடினால் வெற்றி பெறுவோமா? இதில் நமது 'சேன்சஸ் ஆப் விக்டரி' என்ன?" என்றெல்லாம் யோசித்துப் பார்த்து போராட்டத்தைத் துவங்க வேண்டும். அப்படியெல்லாம் எதையும் யோசிக்கமல் ஆரம்பித்துவிட்டு இப்போது சிக்கிக் கொண்ட பிறகு என்ன செய்வது? உடனே "புரட்சித் தலைவர் அரசு, எம். ஜி. ஆர். அரசு தொழிலாளர் விரோத கொள்கையுடைய அரசு" என்று சொல்வதா? 20 சதவிகிதம் தான் மேக்சிமம் என்று சட்டம் போட்டுவிட்டு, சட்டத்தில் எழுதி வைத்துவிட்டு, அதற்கு மேலும் வேண்டுமென்றால், எங்களால் வாங்கிக் கொடுக்க முடியுமா? இதில் நாங்கள் என்ன செய்ய முடியும்?

நீங்கள் போய் வகையில்லாமல் சிக்கிக் கொண்டால், நாங்கள் அதற்கு என்ன செய்ய முடியும்? போவதற்கு முன்னால் எங்களைக் கேட்டுக் கொண்டா போகிறீர்கள்? இங்கேகூட எங்களுக்குள் எவ்வளவோ 'டிபரன்ஸ் ஆப் ஒப்பீனியன்' இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சட்ட சபையில் என்னோடு ரொம்பவும் பிரெண்டிலியாகத்தான் இருந்தார். ஆனால் பேப்பரில் பார்த்தால் எங்களை மிகவும் அதிகமாக 'அட்டாக்' செய்கிறவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி தான். அதற்காக உண்மையைச் சொல்லாமல் இருக்கக்கூடாது. பல சந்தர்ப்பங்களில் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மத்திய அரசுக்கு நாங்கள் யோசனை சொல்கிறோம். இதுவரை மத்திய அரசு எங்களின் யோசனையை நிராகரித்தது கிடையாது. எங்களுக்குள் அரசியல் பேதம் இருக்கிறது என்பதற்காக

உண்மையை மறைக்க முடியாது அல்லவா? நேஷனல் டெக்ஸ்டைல் கார்ப்பரேஷனில் கூட இந்த மாதிரி அதிகமாகக் கொடுத்தால்தான் நல்லது, கோயம்புத்தூர் பார்முலா பிரகாரம் அதிகமாகக் கொடுக்கலாம் என்று சொன்னதும், மத்தியில் இருப்பவர்கள் ஒப்புக்கொண்டார்கள். நெய்வேலி பிரச்சினையிலே கூட இதற்கு மேலே கொடுக்க வேண்டும் என்றுதான் சொன்னோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதிகமாகக் கொடுத்தால்தான், இங்கே தொழில் அமைதி இருக்கும் என்று கடிதமே எழுதினார்கள். நான்கூட போன் செய்து பேசினேன். ஒத்துக் கொண்டார்கள். வந்திருப்பவர் திரு. ஆசாத் அவர்கள். அவருடைய மகன் கிருத்தி ஆசாத் பெரிய கிரிக்கெட் ஆட்டக்காரர். அவர் விளையாடியதை நானே பார்த்தேன். எனவே திரு. ஆசாத் அவர்களுக்குப் போன் செய்தபோது, "நான் உங்களுடைய மகனின் கிரிக்கெட் ஆட்டத்தைப் பார்த்தேன். He is an all-rounder" என்று சொல்லிவிட்டு, ஆதரவு கேட்டேன். அவரும் எப்பொழுதும் உண்டு என்றார்கள். மத்திய அரசு பிரச்சினையை நல்ல வகையில் தீர்த்து விட்டார்கள். ஆனால் தனிப்பட்ட முதலாளிகளிடம் சொன்னால், யார் கேட்கிறார்கள்? கேட்க மாட்டேன் என்று சொல்லுகிறார்கள். அதற்கு எங்களை என்ன செய்யச் சொல்கிறீர்கள்? உடனே அவர்களையெல்லாம் பிடித்து அரெஸ்ட் செய்து ஜெயிலில் போட முடியுமா? அந்த அதிகாரம் எங்களுக்கு இருக்கிறதா? இது ஒரு ஜனநாயக நாடு அல்லவா? இப்படியெல்லாம் செய்ய முடியுமா? முதலாளிகளைப் பார்த்து, "நீ 4 பேரை டிஸ்மிஸ் செய்திருக்கிறாய், 8 பேரை சஸ்பெண்டு செய்திருக்கிறாய், அது சரியல்ல. இவ்வளவு ரூபாய் கொடுக்க வேண்டும்" என்று அரசு சொல்லுகிறது. அவ்வளவுதான். இது சரியா இல்லையா என்று சொல்லுகிற அதிகாரம் நீதிமன்றத்தில் உள்ள நீதிபதிக்குத்தான் இருக்கிறதே தவிர, இந்த நாட்டில் பிரதம மந்திரியாக இருப்பவரிலிருந்து அடியேன் வரை யாருக்கும் அதிகாரம் இல்லை. இதற்காகத்தான் இன்டஸ்ட்ரியல் டிஸ்பியூட் ஆக்ட்டுக்கு செக்ஷன் 10-பி என்ற திருத்தத்தைக் கொண்டு வந்து பேரவையில் 'இன்ட்ரடியூஸ்' செய்திருக்கிறோம். அதை அங்கே அறிமுகப்படுத்தியிருக்கிறோம். இங்கேகூட அது விவாதத்திற்கு வரும்.

It gives powers to the Government to give directions in respect of conditions of service, including emoluments.

அப்படியிருக்கும்போது, அரசாங்கத்தைப் பார்த்து நீங்கள் ஸ்டிரைக்கை நீடிக்க விட்டீர்களே, ஸ்டிரைக்கை நீடிக்க விட்டீர்களே என்பதில் என்ன நியாயம் இருக்கிறது?

நாங்கள் போய் ஸ்டிரைக் செய்யும் தொழிலாளர்களைக் கூப்பிட்டு "நீங்கள் 8 மாதமாகத்தானே வேலை நிறுத்தம் செய்கிறீர்கள். இது போதாது, இன்னும் 2 மாதம் வேலை நிறுத்தம் செய்யுங்கள்" என்று சொல்லுகிறோமா? இந்த அரசு ஸ்டிரைக்கை நீடிக்கிறது, இந்த அரசு ஸ்டிரைக்கை நீடிக்கிறது என்றால், அது எப்படி நியாயமாகும்? இதற்கு நாங்களா பொறுப்பு? வேலை நிறுத்தம் செய்கிறவர்களைப் போய் சாயந்திரத்தில் பார்த்து, அவர்களுக்குப் பாதாம்கீர் கொடுத்து, பஜ்ஜி கொடுத்து, 'தொழிலாள நண்பர்களே, உங்களுக்குச் சொல்ல விரும்புவது என்னவென்றால், நீங்கள் 8 மாதமாக வேலை நிறுத்தம் செய்வது போதாது. நீங்கள் மேலும் 4 மாதம் வேலை நிறுத்தம் செய்ய வேண்டும், அப்போதுதான் இந்த நாட்டுக்கு நல்லது" என்று நாங்கள் சொல்லுகிறோமா? அரசாங்கம் வேலை நிறுத்தத்தை நீடிக்கிறது, அரசாங்கம் வேலை நிறுத்தத்தை நீடிக்கிறது என்று எப்படிச் சொல்கிறீர்கள்? இதில் எங்களுடைய 'ரோல்' என்ன?

இன்னும் சொல்லப்போனால், தினமும், 'சிட்டிவேஷன் ரிப்போர்ட்' வருகிறது. அதைப் பார்த்து, வேலை நிறுத்தம் குறைவு என்று இருந்தால் தான் மனதுக்கு நிம்மதியாக இருக்கும். தினமும் முதலமைச்சருக்கும் காப்பி போகிறது. நேற்றைக்கு லீவு நாள், அதனால் இல்லை. தமிழ் நாட்டில் மொத்தம் 7,90,275 பேர் ஆர்கனைஸ்டு லேபர் இருக்கிறார்கள். அதில் 2,709 பேர்தான் வேலைநிறுத்தத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். It is a creditable thing. எனக்கு வயது 66 ஆகிறது. ஆனால் இதைப் படித்துப் பார்த்தால், உடனே ரொம்ப ஜாலியாக இருக்கும். ஏதோ 60 வயதுக்கு வந்துவிட்டதைப்போல் நிம்மதி இருக்கும். பரவாயில்லை, தமிழ் நாட்டில் தொழிலமைதி நன்றாகத்தான் இருக்கிறது என்ற சந்தோஷம் ஏற்படுகிறது. வேலை நிறுத்தம் தமிழ் நாட்டில் குறைய வேண்டும், மனித நாட்கள் இழப்பு குறைய வேண்டும், தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டியது கிடைக்க வேண்டும், இவைகளுக்கெல்லாம் மேலாக, 'ஆப்டிமம் லெவல் புரொடக்‌ஷன்' இருக்க வேண்டும், தொழில் அமைதி இருக்க வேண்டும், அமைதியான சூழ்நிலை இருக்க வேண்டும், மற்ற மாநிலங்களிலிருந்து நிறைய தொழில் அதிபர்கள் தமிழ் நாட்டுக்கு வந்து புதிய தொழில்களைத் தொடங்க வேண்டும், இங்கே இன்னும் அதிகமான பேர்களுக்கு தொழில் வாய்ப்பை உருவாக்க வேண்டும் என்ற இவைகளைத் தவிர, எங்களுக்கு வேறு என்ன ஆசை இருக்கிறது? என்ன ஆசை இருக்க முடியும்? ஆனால் எதையும் யோசிக்காமல் வேலைநிறுத்தத்தைத் தொடங்கிவிட்டு பின்னாலே "அரசாங்கம் வேலை நிறுத்தத்தை நீடிக்கிறது" என்று குற்றஞ்சாட்டுவதில் எப்படி அர்த்தம் இருக்க முடியும்? கிராமங்களில் பார்த்தால், சைக்கிளில் ஏறத் தெரியாதவர்கள் யாரையாவது பிடித்து ஏறி உட்கார்ந்துகொண்டு தள்ளிவிடச் சொல்லு

வார்கள். அதற்குப் பிறகு அவர்களுக்கு இறங்குவதற்குத் தெரியாது. எங்காவது போய் 'பொத்' என்று விழுவார்கள். அந்த மாதிரி வேலை நிறுத்தத்தைத் தொடங்கி வைத்தவர்களுக்கு இறங்கத் தெரியவில்லை என்றால், நாங்கள் என்ன செய்வது?

* திரு. க. இராமமூர்த்தி: இருந்தாலும் அரசுக்கு ஒரு கடமை இருக்கிறது அல்லவா? ஒருவேளை மிஸ்கைடட்" (Misguided) ஆகக்கூட அது இருக்கலாம். இருந்தாலும் அரசாங்கம் தன்னுடைய துறையின் மூலம் வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டிய கடமை இருக்கிறது. அந்தக் கடமையை ஆற்ற வேண்டியது அவசியம். அந்தப் பொறுப்பை மற்றவர்களுக்குத் தள்ளிவிடுவது அரசுக்கு அழகல்ல.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: கடமை என்றால் என்ன என்று சொல்ல வேண்டும்.

* திரு. க. இராமமூர்த்தி: அரசினுடைய தொழிலாளர் துறை அதிகாரிகளை அனுப்பி பேச்சுவார்த்தை மூலம் வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டிய எல்லா முயற்சிகளையும் அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும். தொழிற் சங்கங்களுக்கு மட்டும்தான் இதில் பொறுப்பு இருக்கிறது என்று விட்டுவிட முடியாது சில நேரங்களில் தொழிற் சங்கங்கள் "பிரிஸ்டீஜியஸ்" ஆகப் போய் ஓரிடத்தில் நின்றுவிட்டால், அதிலிருந்து திரும்ப வரமுடியாத நிலை ஏற்படும். அப்போதெல்லாம் அரசாங்கம்தான் துணையாக இருந்து அத்தகைய வேலை நிறுத்தங்களை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தொழிலாளர் நலத் துறையில் லேபர் ஆபிசர் இருக்கிறார், அசிஸ்டென்ட் லேபர் கமிஷனர் இருக்கிறார், டெபுடி லேபர் கமிஷனர் இருக்கிறார். ஸ்பெஷல் டெபுடி லேபர் கமிஷனர் இருக்கிறார், ஜாயின்ட் லேபர் கமிஷனர் இருக்கிறார், கமிஷனர் ஆப் லேபர் இருக்கிறார், அவர்தான் சீப் கன்சிலியேஷன் ஆபிசர். அதற்கு மேலே எந்த கன்சிலியேஷன் ஆபிசரும் கிடையாது.

We are not Conciliation Officers. Minister used his good offices அவ்வளவுதான். Chief Minister used his good offices அவ்வளவுதான் Prime Minister used her good offices.

அவ்வளவுதான். அதனால்தான் இந்த அதிகாரிகளுக்கு ஏதோ ஒரு வகையில் ஒரு அலவன்ஸ் தர வேண்டும் என்று நான் முன்பு சிபாரிசு செய்தேன்.

The concilation officers should be paid some 200 or 300 rupees every year as Hardship-allowance.

என்றேன். அதற்காக நானே ஒரு பைலை சர்குலேட் செய்து அனுப்பினேன். ஆனால் அப்போதிருந்த ஒரு புண்ணியவான் நிதியமைச்சராக இருந்து கொண்டு அடித்துவிட்டுப் போய்விட்டார். நான் எப்படியும் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று பைலை 'சர்குலேட்' செய்தேன். இன்னும் சொல்லுகிறேன் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். 10 மணிக்கு வருகிறார்கள், இரவு 12 மணி வரைகூட கன்சிலியேஷன் நடக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி :

A few minutes back the Hon. Minister was saying about heir collective responsibility.

அதாவது அமைச்சர் அவர்கள் முன்பு பேசும்போது முதலமைச்சர் அவர்களுடைய கருத்துக்கு மாறுபட்ட அடுத்த நிமிஷமே அந்த அமைச்சர் பதவியிலிருந்து வெளியே அனுப்பப்படுவார். அமைச்சராக இருக்க மாட்டார் என்று சொன்னார். அப்படியானால் இந்த விஷயத்தில் முதலமைச்சர் கருத்தும், நிதியமைச்சர் கருத்தும் வேறாக இருந்ததா ? ஒன்றாக இருந்ததா ? முதலமைச்சரின் கருத்துக்கு மாறாக நிதியமைச்சர் கருத்திருந்தது என்றால், முதலமைச்சரால் அவரை 'கன்ட்ரோல்' செய்ய முடியவில்லையா? ஏன் அப்படிப்பட்ட நிலை ஏற்பட்டது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அப்படியில்லை, வெளியே அனுப்பிவிடுவார் என்று தெரிந்துதான் போய்விட்டார். நாம் சரியாக "பிட்-இன்" ஆக முடியாது என்று தெரிந்துதான் போய்விட்டார், புண்ணியவான்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அடிக்கடி வய்தைச் சொல்லி தனக்கு 66 வயதாகிறது என்று சொல்லிக் கொண்டிருக்கிறார். அப்படிப்பட்டவர் "போய்விட்டான் என்றும், அவன், இவன் என்றும்" பேசுவது நல்ல மரபாகாது. முறையல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அப்படிப்பட்ட வார்த்தை வரக்கூடாது என்று ஒப்புக்கொள்கிறேன். ஆக, கன்சிலியேஷன் மூலம் செட்டில் பண்ண முயற்சிக்கிறோம். முடியவில்லை என்றால், வேலை நிறுத்தத்தைத் தடை செய்ய வேண்டும் என்கிறோம். இதற்காகத்தான் ஒரு சட்டமே வர இருக்கிறது. அதாவது கண்டிஷன் ஆப் சர்வீசைச் சொல்லி, 'இன்டிரிம் ரிலீப்' கொடுத்து, வேலை நிறுத்தத்தைத் தடை செய்ய, எல்லா

அதிகாரத்தையும் தரும் அளவுக்குச் சட்டம் வருகிறது. சகோதரர் திரு. குப்புசாமி, கம்யூனிஸ்ட் தோழர்கள், சி. பி ஐ, சி. பி. எம், ஐ என் டி சி எல்லோரும் ஸ்லேபில் ' (Slab) ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். எனவே அந்தச் சட்டம் இங்கே ஒரு நிமிஷத்தில் 'பாஸ்' ஆகிவிடும் என்று நம்புகிறேன்.

இதைப்பற்றிக் குறிப்பிடும்போது, இன்னொரு விஷயத்தையும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தாபதி அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். லேபர் அட்வைசரி போர்டில் அருமைச் சகோதரர் திரு. குப்புசாமி இருக்கிறார். அவரே என்னிடம் சொன்னது நினைவில் இருக்கிறது. மினிமம் வேஜஸ் ஆக்டின் கீழ் குழு போடுகிறோம். அந்தக் குழுவில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் பிரதிநிதித்துவம் வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார். நானும் பதில் சொல்லியிருக்கிறேன். அந்தப் பதில் இதுதான். அந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், எங்களுக்கு முன்னால் இருந்த ஆட்சியாளர்கள் போன பாதையிலேயே நாங்களும் போகிறோம் என்று அவருக்குப் பதில் சொன்னேன். அவரும் சிரித்துக்கொண்டார். நானும் சிரித்துக் கொண்டேன். சிரிப்போடு அது நிற்கிறது. பாண்டிச்சேரியில்கூட அதுதான் நடக்கிறது.

(பிற்பகல் 1-40)

அங்கே என்ன நடந்தது என்றால், எங்களுக்கு முன்னாலே இருந்த ஆட்சியில் இருந்தவர்கள் என்ன செய்தார்களோ அதையே நாங்களும் செய்கிறோம். அந்த டிராக்கை விட்டு மாறவில்லை. அந்தக் கமிட்டியில் யார் யாரை அவர்கள் போட்டிருக்கிறார்களோ அவர்களையே நாங்களும் போட்டிருக்கிறோம்" என்று சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தாபதி அவர்கள் பேசியதைப் போலவே, "நாங்கள் அப்படிச் செய்தோம் என்றால், நீங்களும் அப்படியே செய்ய வேண்டுமா?" என்று கேட்டார். அப்படித்தான் செய்து கொண்டிருக்கிறோம் என்று சிரித்துக்கொண்டு விட்டு விட்டேன். அது பரிசிலனை செய்ய வேண்டிய பிரச்சினை.

சனவரி 19 ஆம் தேதியைப் பற்றிப் பேசினார்கள். ஏற்கெனவே கருத்தைச் சொல்லிவிட்டேன். வழக்கை வாபஸ் வாங்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். செட்டில்மென்ட் ஆனவுடனே வழக்கை வாபஸ் வாங்க வேண்டும் என்பதுதான் கம்யூனிஸ்ட் கட்சிகளுடைய கொள்கை. No, it is not the policy of the Government வன்முறை நடக்கிறதென்றால், முதலாளிகள் தொழிலாளிகளின் கை, காலை உடைத்து விடுகிறார்கள். அதைப் போலவே

[திரு. எஸ். இராகவானந்தம்] [1982 மார்ச் 27

தொழிலாளிகள் முதலாளியின் கையை, காலை உடைத்து விடுகிறார்கள். ஐந்தாறு தொழிலாளிகள் சேர்ந்து முதலாளிகளை அடித்து விடுகிறார்கள். அது நடந்து முடிந்த பிறகு, பேச்சுவார்த்தை நடக்கிறது. போனஸ், வேறு பல பிரச்சினைகள் பற்றி ஒப்பந்தம் ஏற்படுகிறது. உடனே அந்த கிரிமினல் கேசை வாபஸ் வாங்க வேண்டுமென்று கேட்டால், how is it possible? இந்த மாதிரி நடந்தால், அது எந்தப் பக்கம் நடந்தாலும் கேசை வித்டிரா பண்ண வேண்டுமென்று சொல்லுவது— It is impossible இதைச் செய்ய முடியாது. இதை இந்த அரசு செய்ய முடியாது. வன்முறையில் ஈடுபடுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது தொடரப்பட்ட கிரிமினல் வழக்கை வாபஸ் வாங்க முடியாது. அப்படி வாங்க முடியாததால் சி. பி. ஐ, சி பி எம், சி ஐ சி ஏ. ஐ. டி. யூ. சி. ஆகிய லேபர் யூனியன்கள் வளர முடியவில்லை. போராட்டம் நடந்து முடிந்த உடனே, கையை, காலை வெட்டிய கேஸ்களை வாபஸ் வாங்கிக் கொண்டால், "வெற்றி, கையை, காலை வெட்டிவிட்டு இன்று வேலைக்கு வந்துவிட்டேன், வெற்றி" என்று சொல்லுகிறார்கள். கையை, காலை வெட்டியதற்காக ஜெயிலில் கம்பி எண்ண வேண்டியவர்கள் வெளியே "வெற்றி, வெற்றி" என்று சொல்லிக் கொண்டிருப்பார்கள். இந்த அரசாங்கம் இதைச் செய்ய முடியாது.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : துணைத் தலைவர் அவர்களே, பொது வாக அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுவதைக் கேட்பதற்காக நாம் எல்லாம் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஒரு கட்சியிலே, கட்சி யினுடைய சாதனை வெற்றி பெறும்போது, வெற்றி விழாக்கள் கொண்டாடு வதும், வெற்றி காண முடியாத நேரத்தில் அரசுக்கு எதிராக இருப்பதும் இயற்கை. அமைசர் அவர்கள் எதிர்க் கட்சியிலே இருந்தபோது எத்தனையோ தொழிற் சங்கங்களுக்குத் தலைமை தாங்கி அப்படிச் செய் திருக்கிறார்கள். அதை விட்டுவிட்டு மாண்புமிகு உறுப்பினர்கள் பேசிய பேச்சுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருந்தால், இந்த விவாதம் விரைவிலே முடிவுற்று நல்ல முறையிலே முடிய வாய்ப்பாக இருக்கும்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள், நான் எப்படிப் பேச வேண்டும், என் பேச்சு எப்படி அமைய வேண்டுமென்று வாத்தியார் வேலை எடுத்துக்கொள்ள வேண்டிய தில்லை. உறுப்பினர்கள் எவ்வளவு நேரம் பேசினாலும் பொறுமையாக உட் கார்ந்திருக்கிறவன் அடியேன் இராகவானந்தம் ஒருவன்தான்.

1982 மார்ச் 27]

திரு. ஆற்காடு நா. வீராசாமி : இன்னும் ஒரு மணி நேரம் பேசுவதாக இருந்தாலும், நான் உட்கார்ந்திருக்கிறேன். ஆனால் அமைச்சர் அவர்கள் யாருக்காக பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்களோ, அவர் இந்த அவையில் இல்லை. இந்தச் சூழ்நிலையில் இருக்கின்றவர்களை மனதில் வைத்து பதில் சொன்னால் நல்லது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : எங்களை ஏன் 'அட்டாக்' செய்கிறார்கள் ? எங்களைப் பற்றிய உண்மைக்கு மாறானவைகளைச் சொல் லாமல் இருந்தால், அவர்களைப் பற்றிய உண்மைகளை நான் சொல்லாமல் இருக்கிறேன் என்று சொல்லுவேன். இது ஒரு தத்துவம். எங்களைப் பற்றி தொழிலாளர் விரோத ஆட்சி என்றும், நாங்கள் எங்கள் கொள்கையை மாற்ற வில்லை என்றும், அதிலே 'குரோத்' இல்லையென்றும் சொன்னால், என்ன 'குரோத்' இல்லை என்று கேட்கிறேன். காடம்பாறையில் நடந்தது அது தான். காண்ட்டிராக்டில் இருக்கிறவர்கள் வன்முறையில் ஈடுபட்டார்கள். கேஸ் போட்டார்கள். அதே மாதிரிதான் லட்சுமி ஒர்க்ஸ். பிறகு கேசை 'வித்டிரா' பண்ணவில்லை. எப்படிச் செய்ய முடியும் ? வித்டிரா பண்ணி விட்டால், போன கை, கால் வருமா ? உடைந்த மண்டை திரும்புமா ? இந்த நாட்டில் அமைதி இருக்கிறது. இப்படிப்பட்டவர்களை மீண்டும் வேலையில் வைக்காமல் வன்முறையில்லாமல் பண்ணியிருக்கிறோம். மைய அரசே 'கிளோயிங் டிரிபியூட்' கொடுத்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள்கூட, "சென்ட்ரல்-ஸ்டேட் ரிலேஷன் சரியாக இருக் கிறது, அனாவசியமாக மோதுவதில்லை, பக்குவமாகவும், பவ்வியமாகவும் நடக்கிறார்கள்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அதற்கடுத்தாற்போல், ஒருரைப்பற்றிச் சொன்னார்கள். நிறைய வேலை வாய்ப்பு வர வேண்டும், இன்டஸ்ட்ரிஸ் நிறைய வேண்டும் என்றார்கள். ஆரம்ப காலத்தில் நிறைய கோரிக்கையை வைத்தார்கள் அந்தக் கரும்புத் தொழிலாளர் லாளர் தொழிற் சங்கத்திற்கு தலை வணங்கி நன்றி தெரிவித்து பாராட்டுதலை தெரிவித்துக்கொள்கிறேன். பேச்சுவார்த்தை நடந்தது. பத்து நாட்களுக்கு முன் நான்தான் நடத்தினேன். நீங்கள் ஸ்டிரைக் செய்தால் சர்க்கரை உற் பத்தி குறையும். தொழிற்சாலையில் வேலை செய்ய வேண்டிய 700, 800 தொழிலாளிகள், 15 ஆயிரம், 16 ஆயிரம் கரும்புத் தொழிலாளிகள்—கேன் குரோயர்ஸ் இருக்கிறார்கள். If you go on strike, அவர்கள் கரும்பு 'டிரை' ஆகும். பிறகு ரெகவரி இல்லாமல் போகும். கரும்பை விற்று தன் மக்களுக்குக் கல்யாணம் செய்யலாம் என்று இருப்பார்கள். ஆகவே "மற்ற மாநிலத்தில் இருப்பதைவிட அதிகமாக பரிந்துரை இருக்கிறது, ஏற்றுக்

கொள்ளுங்கள்" என்று சொன்னேன். உடனே, ஐ. என். டி. யூ. சியும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொழிற் சங்கங்களும் ஏற்றுக் கொண்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஸ்டிரைக்கை ஒத்தி வைத்து வாபஸ் வாங்கியிருக்கிறார்கள். I thank them for that கையெழுத்துப் போடுவது பற்றி 2—4—1982 சொல்வதாகச் சொன்னார்கள். வேலை நிறுத்தத்தை பின்வாங்கிக் கொள்கிறோம் என்று சொன்னார்கள். அந்த ஸ்ட்ரேட்டஜியை இரண்டு யூனியன்களும் ஒத்துக்கொண்டிருக்கின்றன. இந்த மாதிரி மாநில அரசாங்கம் சிபாரிசு செய்திருப்பதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். வேலை நிறுத்தத்தை நிறுத்திக் கொண்டிருக்கிறார்கள். "தள்ளிப் போடுகிறீர்களா, டி. பி. மூர்த்தி" என்று கேட்டேன். "We are withdrawing" என்று சொன்னார்கள். புத்திசாலித்தனமாகப் போராட்டத்தை நடத்த வேண்டும்.

அதைப் போலவே லக்ஷ்மி மில்லிலும் இருக்கிறது. வன்முறையில் ஈடுபடுகிறார்கள் என்று சொன்னார்கள். பிரச்சினைகள் என்றால், போன் பண்ணுங்கள். மாண்புமிகு உறுப்பினர் கூப்பிட்டுப் பேசினேன் என்று சொன்னார்கள். பேசினேன். அதற்காகவே நான் இருக்கிறேன். காலையில் வந்தால் இரவு 7, 8 மணியாகிறது போவதற்கு. இங்கேயே சாப்பிட்டு விட்டு தங்குகிறேன். சட்டசபை இருந்தாலும், இல்லாவிட்டாலும் செக்ரட்டேரியட்டிலேயே இருக்கிறேன். எத்தனையோ பேரைக் கூப்பிட்டுப் பேசி விளக்கியிருக்கிறேன்.

ஓசூரில் வன்முறை நடந்தது. அதனால் நக்சல்பாரிகள் உருவாகியிருக்கிறார்களோ என்று சந்தேகிக்கிறேன் என்று சொன்னேன். இல்லையென்று போலீசில் சொன்னார்கள். சி. பி. எம். ஐப் பொறுத்தவரையில், Police report is Gospel true என்று இப்போது ஒத்துக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். அந்தக் கொள்கை தொடர்ந்து கையாளப்படும் என்று நம்புகிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : துணைத் தலைவர் அவர்களே, கம்யூனிஸ்ட் கட்சி இதுவரை தோழமைக் கட்சியாக இருக்கிறது. அதனுடைய தொழிலாளர் கொள்கையில் ஏற்பட்டிருக்கிற தவறுகளை இவ்வளவு அழுத்தமாக மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் சொல்லுவதிலிருந்து, தோழமையில் தொய்வு ஏற்பட்டுவிட்டதோ என்ற சந்தேகம் வருகிறது. இவ்வளவு கடுமையான வாதத்தை அவர்கள் செய்வதற்குப் பின்னணி இருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இந்தக் கேள்விக்கு புரட்சித் தலைவர்தான் பதில் சொல்ல வேண்டும். அதுதான் நியாயம். இப்போது கேட்டுவிட்ட காரணத்தாலே சொல்லுகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதைப் போல it is only an electoral constituency adjustment அதற்கு மேல் விளக்கம் சொல்லத் தயாராக இல்லை. எல்லோரும் அப்படித்தான் செய்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் பேசும்போது, 'மினிமம் வேஜஸ்' பற்றிச் சொன்னார்கள். இதை எப்போதும் அரசாங்கம் நிர்ணயிப்பதில்லை. ஒரு குழுவைப் போடுகிறோம். 'ஈக்குவல் ரெப்ரசென்டேஷன்' தருகிறோம். லேபருக்கு ஒருவரையும், மேனேஜ்மென்டுக்கு ஒருவரையும், 'ஈக்குவல் ரெப்ரசென்டேஷன்' என்ற வகையில் இதிலே ஒருவர் என்றால் அதிலே ஒருவர், இதிலே இரண்டு பேர் என்றால், அதிலே இரண்டு பேர், இதிலே மூன்று பேர் என்றால், அதிலே மூன்று பேர் என்று போட்டு அந்தக் குழு பரிந்துரை செய்வதை அப்படியே ஏற்கிறோம். எப்போதும் அரசாங்கம் தான் குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயிப்பதைப் போல மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். அது அரசு நிர்ணயிப்பதல்ல. அட்வைசரி போர்ட் இருக்கிறது. அவர்கள் சொல்லுவதைத்தான் அரசு 'நோட்டிபை' பண்ணுகிறது.

'ஷாப்ஸ் அண்ட் எஸ்டாபிளிஷ்மென்ட் ஆக்ட்' பற்றியெல்லாம் சொன்னார்கள். அதை ஏற்றுக்கொள்ள முடியாமைக்காக மிகவும் வருத்தப்படுகிறேன். நாம் 'செக்கப்' பண்ணும்போது, குறைவாக இருக்குமானால், நடவடிக்கை எடுத்தால்தான், தொழிலாளர்கள் பலனடைவார்கள். அவர்கள் பலன் அடைய வேண்டுமென்றால், அடிக்கடி செக்கப் பண்ண வேண்டும். ஹராஸ்மென்ட் இருந்தால், அதை இந்த அரசுக்குச் சொன்னால், நாங்கள் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். மற்றபடி வெயிட்ஸ் அண்டு மெஷர்ஸ் பற்றிச் சொன்னதற்காக ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்கிறேன். அந்தக் கூட்டத்திலே நாம் பேசி முடிவு எடுத்துக் கொள்ளலாம். சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலே அதுபற்றிச் சொல்லிவிட்டேன்.

யானைவர்கள் விடுதிபற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. லட்சுமிகாந்தன் அவர்கள் சொன்னார்கள். அதற்கென்று இன்டஸ்ட்ரியல் டிஸ்பியூட்ஸ் ஆக்ட் இருக்கிறது. அது ஆசிரியர்களுக்குப் பொருந்தாது. ஆனால் அங்குள்ள தொழிலாளர்களுக்குப் பொருந்தும். 'They can take advantage of the Industrial Disputes Act'. என்று சொல்லிக் கொள்கிறேன்.

'ஈக்குவல் ரெம்யூனரேஷன்' பற்றி சென்ற தடவையே சொன்னார்கள் ஏற்கெனவே சட்டம் இருக்கிறது. ஒரே வேலையை ஆணும் பெண்ணும் செய்தால், இரண்டு பேருக்கும் ஒரே ஊதியம் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. என்னுடைய நினைவு சரியாக இருக்குமானால், 1974 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். அந்த ஆண்டில்தான் மத்திய அரசு 'ஈக்குவல் ரெம்யூனரேஷன்' சட்டம் கொண்டு வந்தது. அதை நாம் செயல்படுத்துகிறோம்.

(பிற்பகல் 1-50)

இங்கே அப்படி இல்லையென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதைப் பற்றி நான் பரிசீலனை செய்கிறேன் என்று சொல்லிக் கொள்கிறேன்.

நம்முடைய திரு. இராமமூர்த்தி அவர்கள் 'சைல்டு லேபர்' பற்றிச் சொன்னார்கள். அதைப்பற்றி இராமநாதபுரம் கலெக்டரைத் தலைவராகக் கொண்ட ஒரு குழு அமைத்திருக்கிறோம். என்னைத் தலைவராகக் கொண்ட குழுவும் நியமிக்கப்படுகிறது. அங்கத்தினர்கள் சொன்ன கருத்தை மனதிலே வைத்துக்கொண்டு அதிலே என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்வதற்கு வேண்டிய முயற்சிகளை அரசு எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தீப்பெட்டித் தொழிற்சாலையைப் பற்றிச் சொன்னார்கள். பற்றிக்கொண்டு எரிவது பற்றிச் சொன்னார்கள். அதைப் பரிசிலனை செய்வதற்குத் தனி அதிகாரி எல்லாம் போட்டிருக்கிறோம். அதையெல்லாம் பார்ப்பதற்கு இந்த அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தெர்மல் ரிசர்ச் சென்டரைப் பற்றிச் சொன்னார்கள். லேபர் ஆபிசர்கள் கமிஷனர் அவர்களிடம் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்கின்றேன்.

பேர்ட்ஸ்செல் கம்பெனி பற்றிச் சொன்னார்கள். It is a strike prone Company அதாவது அங்கே மேனேஜ்மெண்ட் சரியாக இல்லை அதை ஏற்றுக்கொள்கிறேன். அப்படி சரியாக இல்லாத மேனேஜ்மெண்ட்டை எப்படி 'டேக்கிள்' பண்ணுவது என்று என்னை வந்து கேட்கலாம். 'என்ன செய்வது, அண்ணே' என்று என்னை வந்து கேட்கலாம். "அவர்கள் தகராறு பண்ணுகின்றார்களே, இப்படி இருக்கிறதே, அதை எப்படிச் சரிப்படுத்தலாம்" என்று கேட்டிருக்கலாம். நான் அதற்கு யோசனை சொல்லியிருப்பேன். ஒரு தரம் உண்ணாவிரதம் இருக்க அவர்கள் சென்னைக்கு வந்திருக்கிறார்கள். அவர்கள் சொல்கின்ற பாதையிலே போனால், அவர்கள் உள்ளே போய்விடுவார்

கள். ஜெயிலுக்குத்தான் போவார்கள். நான் அவர்களைக் கூப்பிட்டு முதலில் உண்ணாவிரதம் ஏற்பாடு பண்ணுங்கள் என்று நானே சொல்லிக் கொடுத்தேன். நான் 'நிலவு'இல் குடியிருக்கும்போது சொல்லியிருக்கிறேன். அதிலே ஒன்றும் தவறு இல்லை. "ஆப்டர் ஆல்" எதற்கு நாம் இருக்கிறோம்? சுற்றி சுற்றி வந்தாலும், நாம் 'ஹேவ் நாட்ஸ்'களுக்காக, இல்லாதவர்களுக்காகத்தான் இருக்கிறோம். இருக்கின்றவர்களுக்கு என்ன செய்ய வேண்டியிருக்கிறது? மந்திரியாக வந்திருக்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், இந்த இராகவானந்தத்தைப் போட்டால்தான், இந்தத் தொழிலாளர்களுக்கு நியாயமாக வாங்கிக் கொடுப்பான், சண்டை போட்டு வாங்கிக் கொடுப்பான் என்று கருதி, அவர்கள் என்னைக் கூப்பிட்டு மந்திரி ஆக்கி விட்டேன் என்று சொன்னார்கள். நான் சரி என்று சொல்லிவிட்டு வந்து விட்டேன். அவர்களே என்னைக் கேட்டிருந்தால் செய்யலாம். ஆனால் அடிக்கடி ஸ்டிரைக் செய்தால் . . .

திரு. ஆற்காடு நா. வீராசாமி : எனக்குக்கூட ரொம்ப நாட்களாகப் பழக்கமானவர்தான். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு அனுபவம் இருக்கிறது. அவரை அமைச்சராக வைத்துக்கொள்ளலாம். அதனாலேயே ஆளும் கட்சியிலே யாரும் அமைச்சராக ஆகக்கூடியவர், தொழிலாளர் நலத்துறை அமைச்சராக இருக்க திறமையுள்ளவர் இல்லை என்று முடிவு பண்ணிவிடக் கூடாது. ஒரு சூழ்நிலையில் வைத்துக்கொள்ளலாம் என்றுகூட இருக்கலாம்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அது மாதிரியெல்லாம் நான் நினைப்பவன் அல்ல. என்னுடைய 'மென்டல் மேக்-அப்' பற்றி என்னுடன் நெருங்கிய பழகியவர்களுக்குத் தெரியும். எனக்கு 66 வயது ஆயிற்று

I have lived a full life

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அமைச்சர் அவர்களுக்கு 66 வயது ஆனமாதிரி தெரியவில்லை. 46 வயது என்றுதான் சொல்வார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : நான் லைப்-ஐ அவ்வளவு சீரியசாக எடுத்துக் கொள்வதில்லை. நான் குழந்தை பெற்றவன். பேரன் பிள்ளைகளைப் பெற்றவன். மந்திரியாக ஆகி, புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் நல்லது செய்திருக்கிறேன். இன்னும் இருந்தால் 10 வருடம் கூட இருப்பேன். இந்த நிலையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கூப்பிட்டுச் சொன்னால், நாளை காலையிலேகூட விட்டுவிடுவேன். நான் திறமைசாலி; அதனாலேதான் வைத்திருக்கின்றார்கள் என்று சொல்லவில்லை. "40 வருட காலமாக இருக்கிறான். கிழவன், அவனை உபயோகப்படுத்திக் கொள்வோம்" என்ற எண்ணத்திலே இருக்கலாம். . . . சமயத்திலே

[திரு. எஸ். இராகவானந்தம்] [1982 மார்ச் 27

மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்னை 'பெரியவர்கள்' என்றுதான் கூப்பிடுவார்கள். 'பெரியவர் இருக்கின்றாரா பாருங்கள்' என்று சொல்வார்கள். ஏனென்றால் நான் அவரைவிட வயதிலே மூத்தவன். இங்கே கோவில்பட்டியார் தான் எனக்கு வயதில் முதல் பரிசு கிடைப்பதைத் தடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர் 74 வயது ஆனவர்கள். நான் அடுத்ததாகச் சொல்கிறேன். என்னுடைய தம்பிமார்கள், அமைச்சரவையிலே இருக்கின்றவர்கள் செய்கின்ற பெர்பார்மன்சைப் பார்த்து என்னைப்போல் சந்தோஷப்படுபவர் யாரும் கிடையாது. அதுபோல 'மென்டல் மேக்-அப்' உள்ளவன் நான். எல்லோருக்கும் வயது வந்தால் அப்படித்தான் இருப்பார்கள் போல் இருக்கிறது. அது எனக்கே வந்திருக்கிறது.

திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்ன எல்லாவற்றையும் நான் கவனிக்கிறேன். திரு. ஆர் டி. சீத்தாபதி அவர்கள் ரொம்ப நன்றாகப் பேசினார்கள். நல்ல கருத்துக்களை எல்லாம் சொன்னார்கள். நிரம்ப படித்துவிட்டு வந்து பேசியிருக்கிறார்கள். டிரேட் யூனியன் லீடர்களோடு உட்கார்ந்து 'டிஸ்கஸ்' பண்ணிவிட்டு வந்திருக்கிறார்கள். That is good. அது வரவேற்கத்தக்கது. அவர்கள் உரிமையோடு சொல்லலாம். அண்ணன், நான் சொல்கின்றேன் என்று எண்ண வேண்டாம். வேறு கட்சி மனப்பான்மையோடு நான் சொல்வதாக எடுத்துக் கொள்ளக்கூடாது. அவர்கள் நல்ல பாயிண்டுகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். கே. கே. நகரிலே, 1982-83ல் நான் சொன்ன அளவுக்கு 'பெட்'களை அதிகரிக்கிறேன். அந்தப் பெயரையெல்லாம் பார்த்து நான் செய்வது என்பது எனக்கில்லை. நான் ரொம்ப சாமியார் மாதிரி ஆகிவிட்டேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : சாமியாராக ஆகிவிடாதீர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : 480 நாட்கள் என்று சொல்கின்றார்கள். அவர்கள் ஏமாற்ற முயற்சி செய்கிறார்கள் என்று சொல்கின்றார்கள். அவர்கள் அப்படி ஏமாற்ற முடியாது. 400 நாட்கள் வேலை செய்யக்கூடிய ஒருவரை 480 ஆனால் அவருக்கு பர்மனென்ட் வேலை கொடுக்க வேண்டுமே என்பதற்காக வேறு யாரையாவது வேலையில் வைக்க முடியாது. அப்படி 80 நாட்களுக்குள்ளாக அவருக்குப் பதிலாக ஒருவரை வேலைக்கு வைத்தால், வேலையில் இருந்து ஏற்கெனவே ஒதுக்கப்பட்டவர்களுக்கு கன்டினிவிட்டி ஆஃப் சர்வீஸ்' கிடைக்கிறது அவர் கன்டினிவிட்டி ஆஃப் சர்வீசிலே' இருந்தார் என்றுதான் பொருள். வேலையிலிருந்து நீக்கப்பட்டவருக்கு 'கன்டினவிட்டி ஆஃப் சர்வீஸ்' கிடைக்கிறது. அவரை நிறுத்திவிட்டு

1982 மார்ச் 27] [திரு. எஸ். இராகவானந்தம்]

இன்னொருவரைக் கொண்டுவந்து வேலைக்கு வைக்க முடியாது. ஏனென்றால் 40 பேர்கள் வேலை செய்கின்ற இடத்தில் 2 பேர்களை நிறுத்திவிட்டு வேறு இரண்டு பேர்களைக் கொண்டு வந்து வைத்தால், அவர்களுக்கு 'கன்டினிவிட்டி ஆப் சர்விஸ்' கிடைத்துவிடும். அப்படிப்பட்ட பிரச்சினை இருந்தால், அதை அரசுக்கு எடுத்துச்சொல்ல வேண்டும். அப்படி வைக்கவில்லை என்று சொன்னால், தொழிலாளர்கள் போராடலாம். "440 பேர்கள் வேலை செய்தோம் இப்போது 38 ஆக ஆக்கிவிட்டார்கள். எனவே எங்களுக்கு இன்னும் 2 பேர்கள் வேண்டும்" என்று தொழிலாளர்கள் போராட வேண்டும். அப்படி இருந்தால்கூட நான் மாண்புமிகு அங்கத்தினர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், எங்கே தொழிலதிபர்கள் இந்தச் சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்ள ஏமாற்ற முயற்சி செய்கின்றார்களோ அவர்களைப் பற்றி இந்த அரசுக்குச் சொன்னால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கலாம். டெலிபோனில் பேசினாலும் கூட போதும். நான் உடனே கேட்பேன். அது யாராக இருந்தாலும் சரி, அந்தப் பிரச்சினை பற்றி என்னை வந்து பார்த்துத்தான் சொல்ல வேண்டும் என்பது இல்லை. போனில்கூட சொல்லலாம். அதைப் பற்றி கவனிப்போம் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம் பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு திரு. ரகுமான்கான்கூட பேரவையிலே சொன்னார்கள். அதிலே 4 நாட்கள் வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டிருந்தார்கள். 'நோ ஒர்க், நோ பே' என்று சொல்லியிருக்கிறோம். இவ்வளவு நாள் இருந்தும் என்னை வந்து பார்க்கவில்லை. இதற்கு முன் வந்து பார்த்தபோது "உங்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்க மாட்டோம், எந்தவிதமான நடவடிக்கையும் இருக்காது" என்று சொன்னேன். அவர்கள் திடீரென்று வேலை நிறுத்தம் செய்தார்கள். அதற்காக 'சார்ஜ் சீட்' கொடுத்திருக்கலாம். திடீரென்று வேலை நிறுத்தம் செய்தால், 8 நாட்கள் ஊதியம் பிடிக்கலாம். அது சரியாக இருக்கலாம். 'அட்லீஸ்ட்' ஒரு நாள் டோக்கனாகப் பிடித்திருக்கலாம்' 'I will not take disclipinary action against you' என்று சொன்னேன். அதற்கு எந்த எக்ஸ்பிளனேஷனும் கேட்கவில்லை. எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. 'ஐ வில்' நாட் டேக் எனி டிசிப்பிளினரி ஆக்ஷன் அகெயின்ஸ்ட் யூ' என்ற அதே ஆங்கில வார்த்தையைத் தான் சொன்னேன். எனக்குத் தெரிந்த ஆங்கிலம் அது. I still stand by it வேலை செய்யவில்லை, அதற்குக் கூலி கொடுக்கவில்லை. 'நோ ஒர்க், நோ பே'. அவ்வளவுதான். நான் இந்த நேரத்திலே லீவாக பாவிக்கிறேன் என்று சொல்லவில்லை. நான் சொன்னதை அவர்கள் வேறாகப் புரிந்துகொண்டிருந்தால், அது என்னுடைய தவறு அல்ல,

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சொன்ன கருத்தை அவர்களிடத்திலே சொல்லியும் இருக்கிறார்கள். அவர்களுடைய வேண்டுகோளாக அந்த 4 நாட்கள் அவர்களுக்கு கேசுவல் லீவ் என்று இருக்குமானால், அதை கேசுவல் லீவ்-ஆக ட்ரீட் செய்துகொண்டு, அவர்களுக்குச் சம்பளம் வழங்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களிடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு எந்தெந்த லீவ் இருக்கிறதோ அந்தந்த லீவ்களில் டெபிட் செய்துகொண்டு அவர்களுக்கு அந்த 4 நாட்கள் சம்பளத்தைக் கொடுப்பதற்கு முயற்சி எடுத்தால், இவ்வளவு சாதனைகளைச் செய்து வந்த அமைச்சர் அவர்களுக்கு அதுவும் ஒரு பெருமையாக நிற்குமே என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : என்னுடைய கவலை எல்லாம் அவர்கள் போராட்ட முறை தெரியாதவர்களாக இருக்கிறார்களே என்பது தான். வீட்டு வசதி வாரியத்திற்கு போனஸ் என்று அறிவித்தார்கள். அவர்கள் உடனே என்ன செய்ய வேண்டும். ஸ்லம் கிளியரன்ஸ் போர்டுக்கு எங்கே போனஸ் என்று கேட்க வேண்டுமா இல்லையா ? அது நியாயம். வீட்டு வசதி வாரியமும் போர்டும் ஒன்றாகத்தான் இருந்தது. குறுக்கிட வேண்டாம் அங்கத்தினர் அவர்கள். நான் முடித்து விடுகிறேன். கட் பண்ண வேண்டாம். அந்த கட், கட் என்பது அவ்வளவு சரியாக இருக்காது. அவர்களுக்கு போனஸ் கொடுப்பதாகக் கூறிவிட்டோம். இங்கே ஸ்லம் கிளியரன்ஸ் போர்டில் இருக்கின்ற எங்களுக்கு எங்கே போனஸ் என்று கேட்டு போராட்டம் ஆரம்பித்திருந்தால், பேசியிருப்போம். அதற்குப் பதில் 2 வருடங்களுக்கு முன் வேலை திருத்தம் செய்தபோது நான்கு நாள் ஊதியம் கிடைக்கவில்லை. எனவே ஒரு நாள் உண்ணாவிரதம் என்று உட்கார்ந்திருக்கிறார்கள் நல்ல பிரீஸ் இருக்கிறது. அருமையான கட்டடம் கட்டி கொடுத்திருக்கிறார்கள். எப்படிப்பட்ட பிரீஸ் இருக்கிறது. அங்கே உட்கார்ந்து நல்ல காற்றை என்ஜாய் பண்ணிவிட்டு வந்திருக்கலாம். you are all lucky people புரட்சித் தலைவர் ஆட்சியிலே என் உண்ணாவிரதம் இருக்க வேண்டும் ? என்னை வந்து பார்த்தால், கேட்டால் பேசத் தயாராக இருக்கிறேன் எனக்கு ரொம்ப வருத்தம். நமக்குச் சாப்பாடு கிடைக்கிறதே கஷ்டம். இதிலே உண்ணாவிரதம் இருந்தால், 'கேஸ்ட்ரிக் டிரபிள்'தான் வந்துவிடும். உண்ணாவிரதம் இருந்ததால் உடம்பு கெட்டுப் போயிற்று என்று சொல்லலாம். அதையெல்லாம் அவர்கள் என்னை வந்து கேட்கவில்லையே என்பதிலேதான் நான் வருத்தமாக இருக்கிறேன் என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன். They did not come and ask for bouns. வீட்டு வசதி வாரியத்திற்குக் கொடுத்த மாதிரி ஏன் எங்களுக்குக் கொடுக்கவில்லை என்று கேட்கவில்லை.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : அமைச்சர் அவர்கள் சொல்கின்ற காரணத்தினாலே, அவர்கள் கேட்காவிட்டாலும், அவர்கள் சார்பாக இப்போது கேட்டுக் கொள்கிறேன். வீட்டு வசதி வாரியத் தொழிலாளர்கள் எவ்வளவு போனஸ் வாங்கியிருக்கின்றார்களோ அதைப் போலவே, இந்த குடிசை மாற்று வாரியத் தொழிலாளர்களுக்கும் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இதைப்பற்றி அண்ணா தொழிற் சங்கப் பேரவைச் செயலாளர் திரு. பெருமாள் அவர்கள் எழுதிக் கேட்டிருக்கிறார்கள். நீங்கள் கேட்டதையும் கருத்திலே கொண்டு கொடுக்கும் போது இன்னின்னார் கேட்டார்கள் என்று சொல்வதிலே எனக்கு ஒன்றும் இல்லை. அதைச் சொல்லத் தயாராக இருக்கிறேன் என்று சொல்லிக் கொள்கிறேன். எனக்கு இன்னும் ஒரு மணி நேரம் வேண்டியதாக இருக்கின்றது. முடித்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னால், முடித்துக் கொள்ளலாம். 'one job for one family' பற்றிச் சொன்னார்கள். பேசியதற்குப் பதில் சொல்ல வேண்டும் அல்லவா ? எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சில் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் ? லைவ் ரிஜிஸ்ட்டரில் எவ்வளவு பேர்கள் இருக்கின்றார்களோ அவர்களுக்கு ஒரு விண்ணப்ப பாரம் அனுப்பப்பட்டிருக்கிறது. அந்தந்த வீட்டுக் குடும்பத்திற்குக் கடிதம் போயிருக்கிறது. அந்த விண்ணப்பத்தை அவர்கள் 'பில் அப்' பண்ணி அனுப்ப வேண்டும். அந்த விண்ணப்பங்கள் வந்த பிறகு, அவர்களுடைய பாவர்ட்டி நிலையைப் பார்த்து, எவ்வளவு பேர்கள் குடும்பத்தில் வேலையில் இருக்கிறார்கள், இல்லாமல் இருக்கிறார்கள் என்று பார்த்துத்தான் செய்ய வேண்டும். அப்படி வேலையில்லாமல் இருந்தால், அவர்களுக்கெல்லாம் வேலை கொடுப்பதற்காக திட்டமிட்டு அந்த வேலை நடந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப் போலவே பட்டதாரிகள், ஆசிரியர்கள் இவர்களுக்கெல்லாம் ரூபாய் 50 கொடுப்பது பற்றிய புள்ளிவிவரம் வைத்திருக்கிறேன். எவ்வளவு செலவாகிறது என்று வைத்துக்கொண்டிருக்கிறேன். அதற்கான கணக்கும் வைத்திருக்கிறார்கள். மற்றபடி ரெஜிஸ்ட்ரேஷன் பற்றிச் சொன்னார்கள். எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சில் ரெஜிஸ்ட்ரேஷன் பற்றிச் சொன்னார்கள்.

(பிற்பகல் 2-00)

அண்ணாமலை யூனிவர்சிடியில் உள்ளவர்கள் அங்கேயே பதிவு செய்கிறார்கள். செங்கற்பட்டு, சென்னையில் உள்ளவர்கள் இங்கே பதிவு செய்கிறார்கள், மதுரையைப் பற்றி—மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்களுக்குச் சொல்கிறேன், அவர் கவனிக்கவில்லை—இராமநாதபுரம், திருநெல்வேலி, மதுரை மாவட்டங்களில் உள்ளவர்கள் மதுரையில் ரிஜிஸ்டர் செய்வதால், அங்கே எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்

[திரு. எஸ். இராகவானந்தம்] [1982 மார்ச் 27

கள் சொன்ன எல்லாக் கருத்துக்களையும் மனதிலே கொண்டு, அவர்கள் காழ்ப் புணர்ச்சி இல்லாமல் சொன்ன நல்ல ஆலோசனைகள் குறித்து அரசு நடவடிக்கை எடுக்குமென்று தெரிவித்து, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

THIRUMATHI TARA CHERIAN : While appreciating all that the Hon. the Labour Minister had done and is doing for the better understanding between Management and Labour and for the welfare of labour, I would like to mention that I pointedly brought to his attention last year and asked him what he had done about the Labour Welfare Board. I am glad that some other hon. Member also referred to it. There is a lot of child labour and we cannot get away from that. This is happening because of poverty and any amount of legislation will not help eradicate it. Small children come from their houses and are employed in catering departments, restaurants and they almost become destitutes and are sleeping in pavements. They are exploited by others and sometimes goondas take away all their earnings. Though the Hon. the Labour Minister promised to me off the record that he would do something he has not done anything. Sir, one minute more. I hope he will definitely do something. It is up to the Labour Minister to see that the Cell in the Labour Department collects statistics about the problems faced by such children within six months and he will be able to get the census of all child labour in Tamil Nadu and the Government of Tamil Nadu can set an example to others in this problem.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதையெல்லாம் மனதிலே கொண்டு, அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் 29—3—1982 திங்கட்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது

(பிற்பகல் 2-02)

5. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

142. Notification issued with G.O. Ms. No. 2998, Home, (Tr. I), dated the 17th December 1981 regarding exemption from payment of motor vehicles for the vehicles belonging to Fish

1982 மார்ச் 27]

Farmers Development Agency and Small Farmers Development Agency. [Laid on the table of the House under section 25 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974).]

143. The Annual Accounts of the Tamil Nadu Khadi and Village Industries Board for the years 1971-72 to 1975-76. (Tamil and English). [Laid on the table of the House under section 24 (3) of the Tamil Nadu Khadi and Village Industries Board Act, 1959 (Tamil Nadu Act 18 of 1959).]

B. Reports, Notification and Other Papers.

132. Eleventh Report of the Committee on Estimates on the action taken by the Government on the recommendations contained in the Report on Compensation and Assignments to Local Bodies and Panchayat Raj Institutions. (1980-82) (Tamil).

133. A Review of the Tamil Nadu Fire Service Department, 1981-82. (Tamil and English).

134. Policy Note on Motor Vehicles Acts—Administration, 1982-83. (Tamil and English).

135. Returns of Assets of the following Members of the Tamil Nadu Legislative Council placed on the Table in pursuance of the Resolution passed by the Tamil Nadu Legislative Council on the 28th August 1969 :

Returns as on 30th June 1980

Thiru G. Swaminathan

Returns as on 31st March 1981

1. Thiru P. R. Thomas
2. Thiru G. Vasantha Pai
3. Thiru P. Munuswamy
4. Thiru V. V. V. Anandham

(373-ஆம் பக்கத்தில் இனம் 3-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

சிறு சேமிப்புத் திட்டத்தின் முக்கியமான அடிப்படை நோக்கமே சிக்கனத்தின் முக்கியத்துவத்தை சமுதாயத்தில் உள்ள மக்களுக்கு உணர்த்தி அதன் மூலம் ஒவ்வொரு வீட்டிலும் சேமிக்கும் மனப்பான்மையை ஏற்படுத்தி நாட்டின் வளர்ச்சிக்கு வழி காணுவதாகும். இத்திட்டத்தில் ஏனைய தேசிய உடைமையாக்கப்பட்ட/வரையறுக்கப்பட்ட வங்கிகளில் அளிக்கப்படும் வட்டியை விட மிக அதிக வட்டி வழங்கப்படுகிறது. அதிக வட்டி/வரிச் சலுகைகளை பெறும் நோக்கத்தில் மக்கள் இத்திட்டத்தில் தாங்களாகவே முன் வந்து முதலீடு செய்து வருகின்றனர். இதில் எந்தவித வற்புறுத்தலுக்கும் இடமில்லை

வசூலின் பெரும் பகுதி, ஆண்டு கடைசியில்தான் கணிசமாக வசூல் செய்யப்படுகிறது. ஏனெனில், மக்கள் வரிச் சலுகையைப் பெறுவதற்கு ஆண்டு கடைசியில்தான் சிறு சேமிப்புத் திட்டங்களில் கணிசமாக முதலீடு செய்கிறார்கள். சிறுசேமிப்பு மூலம் ஏற்படும் நன்மைகளின் சிறப்பு அம்சங்களை முக்கியமாக மக்களுக்கு ‘சிறப்பு இயக்கத்தின்’ மூலம் தெரியப்படுத்த அனைத்து மாவட்ட அலுவலர்களும் கேட்டு கொள்ளப்பட்டுள்ளனர். வியாபாரிகளும் வணிகர்களும் வற்புறுத்தலுக்கு ஆளாகக் கூடும் என்ற எண்ணம் ஏற்படாமல் இருக்க வணிக வரித்துறையைச் சார்ந்த அலுவலர்களை சிறு சேமிப்பு ‘சிறப்பு இயக்கத்தில்’ கலந்து கொள்ள வேண்டாமென கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

திருச்சி மாவட்டத்தில் கட்டாயப்படுத்தி வசூல் செய்யப்படவில்லை. ஒவ்வொரு ஆண்டும் இது போலவே வசூல் செய்யப்படுகிறது. சிறு சேமிப்பு இயக்குநருக்கோ அல்லது மாவட்ட ஆட்சியருக்கோ கட்டாயப்படுத்தி வசூல் செய்வதாக முறையீடு ஏதும் மக்களிடமிருந்து பெறப்படவில்லை. தானாக முன்வந்து சிறுசேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்யப்படும் தொகைகளை மட்டுமே பெற வேண்டுமெனவும், கட்டாயப்படுத்தி வசூலிக்க வேண்டாமென அனைத்து அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சியர் அறிவுரை வழங்கியுள்ளார்.

இணைப்பு II

(14 ஆம் பக்கத்தில் இனம் 4-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

பாகம் 1.

தமிழ் நாட்டில் தொழிலாளர்கள் நலன்

அத்தியாயம் 1

பொது.

1. 1. தமிழ் நாட்டில், தொழிற்சாலைகள் மற்றும் தொழில் நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்களின் உரிமைகளைப் பெற்றுத் தருவதும், தொழில் அமைதியைப் பாதுகாப்பதும் தொழிலாளர் நலத் துறையின் பொறுப்பாகும். சமுதாயத்திற்குப் பயனளிக்கும் வகையில் மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்குத் திட்டமிட்டுச் செயலாற்ற தொழில் நிருவாகத்தினருக்கு உரிமை உண்டு. அதே நேரத்தில் தொழிலாளர்களின் நலனையும் அவர்கள் கருத்திற்கொண்டு செயலாற்ற வேண்டும். இந்நோக்கத்திற்காக தொழிற் சங்கங்கள் மற்றும் நிருவாகங்களின் இசைந்த ஒத்துழைப்பினை அரசு பெரிதும் நம்பியிருக்கிறது. இந்த வகையில் சென்ற ஆண்டு இருதரப்பாரிடமிருந்தும் பெருமளவில் இந்த ஒத்துழைப்பை அரசு பெற்றிருந்தது என்பதில் அரசு பெருமை கொள்கிறது. இதன் விளைவாக சுமுகமான தொழில் உறவை நிலைநாட்டுவதில் வெற்றி கண்டமைக்காக அனைவரும் தமிழகத்தைப் பாராட்டியுள்ளனர். சுமுகமான முறையில் தீர்த்து வைக்கப்பட்ட தொழில் தகராறுகள் பற்றியும் வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் காரணமாக உழைப்பு நாட்கள் வீணாவதைக் குறைத்திருப்பது பற்றியும் இந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் இதற்குச் சான்றாக அமையும். தொழில் அமைதியைப் பேணிக் காத்திட, தொழிற் சங்கத்தினரும் நிருவாகத்தினரும் இந்த ஆண்டிலும் தொடர்ந்து தங்கள் ஒத்துழைப்பை நல்கியமைக்கு அரசு தனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறது.

1. 2. தொழிலாளர்களின் உரிமைகளும் நலன்களும் இயன்றவரை அவர்களுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டதாக இருக்க வேண்டுமென்பதை இந்த அரசு தனது கொள்கையாகக் கொண்டுள்ளதை தெளிவுபடுத்தி இருக்கிறது. அப்பொழுதுதான் அவர்கள், தங்களின் உரிமைகளைப் பெற போராட்டங்களில் ஈடுபடாமல், இயற்றப்பட்டுள்ள முற்போக்கான சட்டதிட்டங்கள் மூலமாகவே அவைகளைப் பெற முடியும். இதனைக் கருத்திற் கொண்டு தொழில் நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்களைப் பணிகளில் நிலைப்படுத்தவும்,

துரதிருஷ்டவசமாக தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்படும் தொழிலாளர்கட்கு வாழ்க்கைச் செலவுப்படி வழங்கிடவும் உறுதி செய்ய இந்த அரசு சட்டங்களை இயற்றியுள்ளது. இந்த இரண்டு சட்டங்களும் 1—1—1982 முதல் செயலுக்கு வந்துள்ளன. பணியிலிருந்து தவறாக வெளியேற்றப்படும் போதும், பணி நீக்கம் செய்யப்படும்போதும் நீதி கோரி தொழிலாளர்கள் நேரிடையாக தொழிலாளர் நீதிமன்றங்களில் முறையிட உரிமையளித்தும் அரசு சட்டம் இயற்றியுள்ளது. இச் சட்டத்திற்கு குடியரசுத் தலைவரின் இசைவு எதிர்பார்க்கப்படுகிறது.

1. 3. வரைமுறைப் படுத்தப்படாத தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் நலன் குறித்து அரசு எப்போதும் அக்கறை காட்டி வந்துள்ளது. கைத்தறித் துறையில் பணியாற்றும் இப்படிப்பட்ட இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் நலன் பெறும் வகையில், 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்கள் (வேலை நிலைமைகள் மற்றும் பல்வகை விதித்துறைகள்) சட்டத்தை அரசு இயற்றியிருக்கிறது.

1. 4. 1981 ஆம் ஆண்டில் அரசு பல தொழில்களில் தொழிலாளர்களுக்கான குறைந்த அளவு ஊதியங்களை நிர்ணயித்துள்ளது. மேலும் முன்னர் நிர்ணயிக்கப்பட்ட ஊதிய விதங்களை திருத்தி அமைத்துள்ளது. தொழிலாளருக்கு நன்மை பயக்கும் இச்சட்டங்களை செவ்விய முறையில் செயல்படுத்திட தொழிலாளர் நலத்துறை மற்றும் வருவாய்த் துறைகளிலுள்ள நிருவாக அமைப்பு முடுக்கி விடப்பட்டுள்ளது.

1. 5. தொழிலாளர் நலத் துறையின் பணிகள் பற்றிய விவரங்கள் இவ் வறிக்கையின் இப்பகுதியில் கீழ்க்காணும் தலைப்புகளின் கீழ் தொகுக்கப்பட்டுள்ளன :

1. தொழில் உறவுகள் குறித்த சட்டம்.
2. வேலை நிலைமைகள் மற்றும் பணி நிபந்தனைகள் குறித்த சட்டங்கள்.
3. ஊதியங்கள் குறித்த சட்டங்கள்.
4. சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள்.
5. தொழிலாளர் நலப் பணிகள்.
6. எடைகள்-அளவைகள் குறித்த சட்டம்.

அத்தியாயம் 2.

தொழிலுறவுகள் குறித்த சட்டம்.

2.1. தமிழ் நாட்டில் தொழில் அமைதியைப் பேணிக் காப்பதற்கு பொறுப்பு வகிக்கும் தொழில் உறவு நிர்வாக அமைப்புக்கு அரசு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. எனவே, அரசு இந்த அமைப்பினை மேலும் திறமை வாய்ந்ததாக ஆக்கும் நோக்கத்துடன் ஐந்து தொழிலாளர் நல அலுவலர் பதவிகளை தொழிலாளர் நல உதவி ஆணையராக நிலை உயர்த்தி ஆணை பிறப்பித்துள்ளது. மேலும் கூடுதலாக இரண்டு தொழிலாளர் நல அலுவலர்களை நியமிக்கவும் அனுமதி வழங்கியுள்ளது. ஓசூரில் வளர்ந்து வரும் தொழிற்பேட்டைப் பகுதியைக் கவனிக்க தர்மபுரி மாவட்டத்தில் ஒருவரும், பெருகிவரும் தொழில் தகராறுகளுக்குத் தீர்வு காண மதுரையில் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

2. 2. 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டம்.

1980, 1981 ஆம் ஆண்டுகளில் எழுந்த தொழில் தகராறுகளின் எண்ணிக்கையும் அவை தீர்த்து வைக்கப்பட்ட விவரங்களும் கீழ்க்காணும் விவர அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன :—

விவர அட்டவணை.

விவரம்.	1980 (1980 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் நாளிலிருந்து 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரை).	1981 (1981 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் முதல் நாளிலிருந்து 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரை).
(1)	(2)	(3)
அ. ஆண்டு தொடக்கத்தில் முடிவுறாமல் இருந்த புகார்கள் மற்றும் தகராறுகளின் எண்ணிக்கை ..	1,844	1,770
ஆ. வரப்பெற்ற புகார்கள், எழுந்த தகராறுகளின் எண்ணிக்கை ..	8,383	8,435

(1)	(3)	(5)
இ. முந்தைய ஆண்டுகளில் புலனாய்வு செய்யப்பட்ட புகார்கள் தகராறுகள் உட்பட தற்போது புலனாய்வு செய்யப்பட்ட புகார்கள், தகராறுகள் ஆகியவை குறித்த எண்ணிக்கை ..	8,457	8,653
ஈ. இணக்க முறையில் தீர்வு கண்ட தகராறுகளின் எண்ணிக்கை ..	1,667	1,791
உ. வேறு வகையில் சமரச அலுவலர்களின் உதவியுடன் தீர்வு கண்ட தகராறுகளின் எண்ணிக்கை ..	5,748	5,789
ஊ. தொழிலாளர் நீதி மன்றங்கள் மற்றும் தொழில் நடுவர் மன்றத் தீர்ப்புக்கு விடப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை	1,036	1,035
எ. 10(2) ஆம் பிரிவின் கீழ் நீதிமன்றத் தீர்ப்புக்கு விடப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை ..	..	33
ஏ. நடுவர் தீர்ப்புக்கு விடப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை ..	6	5
ஐ. ஆண்டு இறுதியில் முடிவுறாமல் இருந்த தகராறுகளின் எண்ணிக்கை ..	1,770	1,542

2, 3. வேலையை நிறுத்தி விடுநல்.

அறிக்கை ஆண்டிலும், முந்தைய ஆண்டிலும், நடைபெற்ற வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் ஆகியவற்றின் ஒப்பு நோக்கு விவரங்கள் வருமாறு—

விவரம்.	1980 (1980 ஆம் ஆண்டு ஜனவரித்திங்கள் முதல்நாளிலிருந்து 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரை).	1981 (1981 ஆம் ஆண்டு ஜனவரித்திங்கள் முதல்நாளிலிருந்து 1981ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம்நாள் வரை).
அ. கதவடைப்புகள் உட்பட வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை ..	293	288
ஆ. வீணான உழைப்பு நாட்கள் ..	35,01,022	41,24,021

2. 4. 1980 மற்றும் 1981 ஆம் ஆண்டுகளில் நடந்த வேலை நிறுத்தங்கள் கதவடைப்புகள் ஆகியவை குறித்த தொழில் வாரியான பகுப்பாய்வு, இணைப்பு I-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

2.5. 1981 ஆம் ஆண்டில் நடந்த வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள், குறித்து தீர்வு காணப்பட்ட வழிமுறைகள் வருமாறு.—

(அ) சமரச அலுவலர்களால் பேச்சு வார்த்தை நடத்திய பிறகு நேரடிப் பேச்சு வார்த்தைகள் மூலமாக தீர்க்கப்பட்டவை ..	55
(ஆ) தாங்களாகவே முன் வந்து வேலை தொடங்கப்பட்டவை	17
(இ) தொழிலாளர் நலத்துறை/அரசு அலுவலர்களால் தீர்த்து வைக்கப்பட்டவை ..	193
(ஈ) முடப்பட்டவை	4
(உ) ஆண்டின் இறுதியில் பேச்சு வார்த்தையில் இருந்தவை	19
மொத்தம்	288

2. 6. தொழிலாளர் நீதி மன்றங்கள் மற்றும் தொழில் நடுவர் மன்றத்தின் முடிவுக்கு அனுப்பப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை, அந்த நீதிமன்றங்களால் பிரிவு 15-ன் கீழும் பிரிவு 33 சி (2)-ன் கீழும் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை இவைகளைக் காட்டும் விவர அறிக்கை இணைப்பு I-இல் கொடுக்கப்பட்டுள்ளது.

2.7. தொழிற்சாலைகள் மூடப்படுவதைத் தவிர்க்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்.

இவ்வகையில் சென்னை, பக்கிங்காம் கர்னாடிக் ஆலை, லிமிடெட் நிறுவனம், சென்னை, இந்தியன் எக்ஸ்பிரஸ் (மதுரை) 'பிரைவேட் லிமிடெட்' நிறுவனம் ஆகியவற்றில் எழுந்த தகராறுகளுக்குத் தீர்வு கண்டது தொழிலாளர் நலத்துறையின் பாராட்டத்தக்க சாதனைகளாகும்.

இத்தகராறுகள் பற்றிய விவரங்கள் வருமாறு :—

(1) சென்னை, பி அண்டு சி ஆலை நிறுவனம் :—

(அ) கிட்டத்தட்ட 13,000 தொழிலாளர்கள் பணியாற்றும் 'பி அண்டு சி' ஆலையை அதன் நிருவாகம், 1—1—1981-லிருந்து மூடிவிட்டது. ஆலை மூடப்பட்டது குறித்து, அதன் தொழிற் சங்கங்கள் தொழில் தகராறை எழுப்பின. இத்தகராறு குறித்து, தமிழ்நாடு அரசு, மைய அரசுடன் தொடர்பு கொண்டது. மைய அரசின் ஆலோசனையின்படி, தொழிலாளர் நலத்துறையின் ஓய்வு பெற்ற ஆணையர் திரு. கமலாரத்தினம் அவர்களை தனி அலுவலராக மாநில அரசு நியமித்தது. ஆலையின் ஊதிய அமைப்பு, பணிச்சுமை, ஆகியவை குறித்து ஆராயவும், தொழிற்சங்கங்கள் ஆலை நிருவாகம், வணிக அமைச்சின் அலுவலர்கள் ஆகியோர்களிடையே ஏற்பட்ட உடன்பாட்டின் அடிப்படையில் பரிந்துரைப்பதற்கும் அவர் நியமிக்கப்பட்டார்.

(ஆ) இதற்கிடையில், ஆலை மூடப்பட்டதால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களின் துயர் துடைக்க, தமிழ்நாடு அரசு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தொழிலாளர் ஒருவருக்கு ரூ. 200 வீதம் ரூ. 26 லட்சம் கருணை மானியமாக வழங்க அனுமதியளித்தது. தொழிலாளர்களுக்கென முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து இவ்வளவு பெரிய தொகையை வழங்கியது இதுதான் முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

(இ) மின்னி ஆலையில் பணிச்சுமை/உற்பத்தித் திறன்/செயல்முறை/சம்பள அடிப்படை இவை குறித்து பி அண்டு சி ஆலை தனி அலுவலர் தனது முடிவுகளைத் தெரிவித்தார். அதன் பிறகு, 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) ஆம் பிரிவின்படி தொழிலாளர் நல ஆணையர் முன்னிலையில் 6—6—1981-ல் உடன்பாடு ஒன்று கையெழுத்தாயிற்று. அந்த ஆலையை மீண்டும் திறப்பதுதான் இந்த உடன்பாட்டின் முக்கிய நோக்கமாகும். அந்த ஆலை 19—6—1981-ல் மீண்டும் திறக்கப்பட்டது.

(2) இந்தியன் எக்ஸ்பிரஸ் (மதுரை) பிரைவேட் லிமிடெட், சென்னை.

20—6—1981 முதற்கொண்டு, சென்னையிலுள்ள தங்கள் நிறுவனத்தை மூடப் போவதாக 20—4—1981 அன்று இந்நிறுவனத்தினர், 1947 ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் 25 FFA பிரிவின் கீழ் அறிவிப்புக் கொடுத்தனர். இந்நிறுவனம் மூடப்படுவதைத் தவிர்க்க தொழிற்சங்கங்கள் உடனடியாகத் தொழிலாளர் நல ஆணையரை அணுகினர். இரு தரப்பினரோடும் அவர் பேச்சுவார்த்தை நடத்தியதன் விளைவாக, 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12(3) ஆம் பிரிவின் கீழ் அவர்கள், அவர் முன்னிலையில் 8—5—1981-ல் உடன்பாடு ஒன்றில் கையெழுத்திட்டனர். இந்த உடன்பாட்டின் பயனாக, சுமார் 800 தொழிலாளர்கள் வேலை பார்க்கும் அந்த நிறுவனம் மூடுவது தவிர்க்கப்பட்டது.

2. 8. தொழில்வாரியான உடன்பாடுகள்.

(1) சங்கரன்கோவிலில் உள்ள கைத்தறி, விசைத்தறி ஆலைகள்.—சங்கரன்கோவிலில் உள்ள கைத்தறி, விசைத்தறி ஆலைகளைச் சேர்ந்த சுமார் 6,000 தொழிலாளர்கள் சம்பள உயர்வு முதலியவை தொடர்பான மதுரை, தொழிலாளர் நல துணை ஆணையாளரின் சமரச முடிவைச் செயற்படுத்த வேண்டுமென வலியுறுத்தி 26—3—1981-ல் வேலை நிறுத்தம் தொடங்கினர். திருநெல்வேலி, தொழிலாளர் நல துணை ஆணையர் முன்னிலையில் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. அப்பேச்சு வார்த்தைகள் வெற்றிகரமாக நடைபெற திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரும், தொழிலாளர் நல அமைச்சரும் தங்கள் ஆலோசனைகளை நல்கினர். அவர்களுடைய அறிவுரைப்படி 15—5—1981-ல் உடன்பாடுகள் செய்து கொள்ளப்பட்டன. வேலை நிறுத்தம் கைவிடப்பட்டு, 16—5—1981-ல் மீண்டும் வேலை தொடங்கியது.

(2) திருப்பூரிலுள்ள பனியன் ஆலைகள்.—சம்பள உயர்வு கோரியும், 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தைச் செயற்படுத்தக் கோரியும், திருப்பூர் பகுதியிலுள்ள பனியன் ஆலைகளைச் சேர்ந்த சுமார் 20,000 தொழிலாளர்கள் 4—3—1981-லிருந்து வேலை நிறுத்தம் மேற்கொண்டனர். சென்னை தொழிலாளர் நலத் தனித் துணை ஆணையர்

முன்னிலையில் சமரசப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. அப்போது தொழிலாளர் நல அமைச்சரும் ஆலோசனை வழங்கினார். அதன் பிறகு 1947 ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின்படி 23—4—1981-ல் உடன்பாடு ஏற்பட்டது.

(3) தமிழ்நாட்டிலுள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகள்.—மாநிலம் முழுவதிலும் தோல் பதனிடும் தொழிலில் ஈடுபட்டுள்ள சுமார் 7,500 பேர், சம்பள உயர்வு, பணி நிலைமைகளில் முன்னேற்றம் முதலியன கோரி தொழில் தாவாவினை எழுப்பினர். சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு மன நிறைவு அளிக்கும் வகையில், சென்னை தொழிலாளர் நலத் தனித் துணை ஆணையர் அப்பிரச்சினையைத் தீர்த்து வைத்தார். 6—4—1981-ல் உடன்பாடு ஏற்பட்டது.

2.9. பெருந் தொழிற்சாலைகளில் உடன்பாடுகள் :

(1) நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் லிமிடெட், நெய்வேலி.—இந்நிறுவன நிர்வாகத்தினர் அளிக்க முன்வந்ததைக் காட்டிலும் அதிக அளவு ஊதியக் கொடை வழங்கக் கோரி, இந்நிறுவனத் தொழிலாளர்கள் சுமார் 18,000 பேர் கோரிக்கை ஒன்றை முன் வைத்தனர். அதன் காரணமாகத் தொழில் அமைதியின்மை ஏற்பட்டது. உற்பத்திக்கேற்ப ஊதியக் கொடை வழங்க வேண்டுமென தொழிலாளர்கள் கோரினர். தொழிலாளர் நல ஆணையர் இதுகுறித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். இப்பேச்சு வார்த்தையின் பொழுது தொழிலாளர்நல அமைச்சரும் தனது ஆலோசனைகளை நல்கினார். நேரடி நடவடிக்கை எதிலும் ஈடுபட வேண்டாமென அமைச்சர் கேட்டுக்கொண்டார். சம்மந்தப்பட்ட தொழிற் சங்கங்களும் அதை ஏற்றுக்கொண்டன. அமைச்சரின் தலையீட்டின்பேரில், மத்திய அரசைச் சேர்ந்த சம்பந்தப்பட்ட துறையானது, முதலில் இந்நிறுவனம் வழங்க முன்வந்த ஊதியக் கொடையைக் காட்டிலும் அதிகத் தொகையை வழங்க ஒப்புக்கொண்டது. இது தொழிலாளர்களுக்கு மனநிறைவை அளித்தது. இது குறித்து 17—11—1981-ல் உடன்பாடு ஒன்று கையெழுத்தாகி, தொழில் உறவு இயல்பான நிலைக்குத் திரும்பியது.

(2) மதுரை கோட்ஸ் லிமிடெட்.—1980 மற்றும் 1981 ஆம் ஆண்டுகளுக்கு ஊதியக் கொடை வழங்குவது தொடர்பாக, மதுரை, அம்பாசமுத்திரம், தூத்துக்குடி ஆகிய இடங்களிலுள்ள இந்நிறுவனத்தைச் சேர்ந்த 16,000 தொழிலாளர்கள் 15—10—1981-லிருந்து தொடங்கி, பல்வேறு நாட்களில் பகுதியாகவோ, முழுமையாகவோ வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். தொழிலாளர் நல அமைச்சர் முன்னிலையில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. இப்பேச்சுவார்த்தைகளையடுத்து, 30—6—1981 ஆம் நாளுடன் முடிவடையும் ஆண்டுக்கு ஊதியக் கொடையும், ஊக்கத் தொகையும் வழங்குமாறு, சம்பந்தப் பட்ட தரப்பினருக்கு தொழிலாளர்நல இணை ஆணையர் 21—10—1981-ல் ஆலோசனை கூறினார். அவருடைய ஆலோசனையை ஏற்று, தொழிலாளர்கள் 22—10—1981-ல் மீண்டும் வேலைக்கு திரும்பினர்.

(3) சேரன் போக்குவரத்துக் கழகம், கோயம்புத்தூர்—1980-81 ஆம் ஆண்டுக்கு ஊதியக் கொடை வழங்குவது தொடர்பாக சேரன் போக்குவரத்துக் கழகம், சேரன் பொறியியல் கழகம் ஆகிய நிறுவனங்களுக்கும் அவற்றின் தொழிலாளர்களுக்குமிடையே ஒரு தொழில் தகராறு எழுந்தது. கோயம்புத்தூர், தொழிலாளர் நலத் துணை ஆணையர் நடத்திய பேச்சு வார்த்தைகளின் விளைவாக, 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12(3) ஆம் பிரிவின்படி 12—10—1981-ல் ஓர் உடன்பாடு ஏற்பட்டது.

(4) நெய்வேலி செராமிக்ஸ் அண்ட் ரிப்ராக்டரிஸ் லிமிடெட், வடலூர்.—மேற்படி நிறுவனம் பணியாளர் சங்கமானது, 1979-80 ஆம் ஆண்டுக்கு 50 சதவித ஊதியக் கொடை வழங்க வேண்டும், 1980 செப்டம்பருக்கு ஊக்கத் தொகை வழங்க வேண்டும், அன்றாடப் பணியாளர்களின் பணியை முறைப்படுத்த வேண்டும், ஊதியத்தை உயர்த்த வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தனர். இக்கோரிக்கைகள் குறித்து நேரடிப் பேச்சு வார்த்தை எதும் நடத்த நிருவாகத்தினர் முன்வராததால், இந்நிறுவனத் தொழிலாளர்கள் 16—10—1980 முதற்கொண்டு வேலை நிறுத்தம் மேற்கொண்டனர். அதனை அடுத்து, நிருவாகத்தினர் 17—10—1980 முதற்கொண்டு கதவடைப்புச் செய்தனர், கடலூர் தொழிலாளர் நல அலுவலர், சென்னை தொழிலாளர் நல துணை ஆணையர் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற சமரசப் பேச்சு வார்த்தைகள் பலனளிக்கவில்லை. எனவே, இப்பிரச்சினையை தொழிலாளர் நல ஆணையர் அலுவலகம் தீர்வுக்கு எடுத்துக்கொண்டது. தொழிலாளர் நல அமைச்சரின் முயற்சியால் சென்னை தொழிலாளர் நல இணை ஆணையர் முன்னிலையில் 18—4—1981-ல் உடன்பாடு ஒன்று கையெழுத்தாயிற்று.

2. 10. ஏனைய உடன்பாடுகள் :

(1) இலக்குமி ஆட்டோமாட்டிக் லூம்ஸ், ஒசூர்.—இந்நிறுவனத் தொழிலாளர்கள் 7—8—81 முதல் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்ததாலும், வன்முறை செயல்களில் ஈடுபட்டதையடுத்தும், 13—8—1981-லிருந்து தொழிற்சாலையை கதவடைப்புச் செய்வதாக நிருவாகம் அறிவித்தது. சென்னை தொழிலாளர் நல துணை ஆணையர் (ஆய்வு) அவர்களின் முன்னிலையில் நடந்த சமரசப் பேச்சுவார்த்தைகளின் விளைவாக; 1947 ஆம் ஆண்டு

தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின்படி 12—11—1981-ல் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. இந்த உடன்பாட்டின்படி, நிருவாகம் 16—11—1981 லிருந்து கதவடைப்பை நீக்கியது.

(2) தென் இந்தியா விஸ்கோஸ் லிமிடெட், சிறுமுகை—உற்பத்தியைப் பெருக்க தொழிலாளர்கள் பணியாற்றியுள்ளதைக் கருத்தில் கொண்டு ஊக்கத் தொகை வழங்கக் கோரி, சிறுமுகை தென்னிந்திய விஸ்கோஸ் லிமிடெட் நிருவனத் தொழிலாளர்கள் கோரிக்கை எழுப்பினர், ஊக்கத் தொகை அளவு குறித்து இருதரப்பினரும் உடன்பாடு காண இயலாததால், சென்னை தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலைய இயக்குநரின் ஆலோசனை கோரப்பட்டது. இப்பிரச்சினை குறித்து இருதரப்பினரோடும் அவர் பேச்சுவார்த்தை நடத்தியதன் விளைவாக, 23—10—1981 இல் 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) ஆம் பிரிவின்படி ஓர் உடன்பாடு ஏற்பட்டது.

(3) திரு. மீனாட்சி மில்ஸ் குரூப்.—மதுரை, பரவை மற்றும் மணப்பாறையிலுள்ள மேற்படி ஆலைகளில் பணியாற்றும் சுமார் 4,000 தொழிலாளர்கள் 1980-81 ஆம் ஆண்டிற்கான ஊதியக் கொடை வழங்கக் கோரி 16—10—1981 லிருந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர், தொழிலாளர் நல இணை ஆணையர் இருதரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்தி, தொழிலாளர்களுக்கு ஊதியக் கொடைத் தொகை எவ்வளவு என்பதை முடிவு செய்யும்வரை ஊதியக் கொடை முன்பணம் வழங்கலாம் என அறிவுரை நல்கினார். இதன் பயனாக வேலை நிறுத்தம் கைவிடப்பட்டு, 30—11—1981 லிருந்து தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை திரும்பப் பெற்றுக்கொண்டு, மீண்டும் பணியாற்றத் தொடங்கினர்.

(4) சீதாலட்சுமி மில்ஸ் குரூப்.—1980-81 ஆம் ஆண்டிற்கான ஊதியக் கொடை பிரச்சினை மீது மதுரை சீதாலட்சுமி மில்ஸ் குரூப், தேனியைச் சேர்ந்த 'போஜராஜ் டெக்ஸ்டைல்ஸ்' இராமநாதபுரத்தில் உள்ள அய்யப்பன் டெக்ஸ்டைல்ஸ், இராசகம்பீரம், வரதலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் ஆகிய நிறுவனங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். சில ஆலைகளில் 19—10—1981 லிருந்தும் ஏனையவற்றில் 23—10—1981லிருந்தும் வேலை நிறுத்தம் தொடங்கியது. சென்னை தொழிலாளர் நல இணை ஆணையர் இரு தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்தி, ஊக்கத் தொகையும், ஊதியக் கொடையும் வழங்க வேண்டும் என்று 5—12—1981 அன்று அறிவுரை நல்கினார். இதன் பயனாக, தொழிலாளர்கள் 6—12—1981 லிருந்து வேலை நிறுத்தத்தைக் கைவிட்டனர்.

(5) நாதியம்மாள் டெக்ஸ்டைல் மில்ஸ் லிமிடெட், அழியாநிலை.—மேற்படி ஆலையில் பணியாற்றும் சுமார் 500 தொழிலாளர்கள், 1980-81 ஆம் ஆண்டிற்கான ஊதியக்கொடை கோரி 1—10—1981 லிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். தொழிலாளர் நல இணை ஆணையர் பேச்சுவார்த்தை நடத்தி, 17—11—1981 இல் அவர்களுக்கு 1980-81 ஆம் ஆண்டிற்கான ஊதியக் கொடையினை வழங்கும்படி அறிவுறுத்தினார். இதன் பயனாக, 20—12—1981 அன்று தொழிலாளர்கள் பணிக்குத் திரும்பினர்.

2.11. முதல் அமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதி உதவி அளிக்கப்பட்ட விவரங்கள்:—

(1) சென்னை, பாலு கார்மெண்ட்ஸ் நிறுவனத்தில் பணியாற்றிய 275 தொழிலாளர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 200 வழங்க 1981 ஆம் ஆண்டு எப்ரல் திங்களில் தமிழ்நாடு அரசு ஆணையிட்டது.

(2) சென்னை, கேஞ்சஸ் பிரின்டிங் இங்க் பேக்டரியில் பணியாற்றிய 78 தொழிலாளர்கள் ஒவ்வொருவருக்கும், ரூ. 200 வழங்க 1981 ஆம் ஆண்டு எப்ரல் திங்களில் தமிழ்நாடு அரசு அனுமதியளித்தது.

(3) 'பி அண்டு சி மில்ஸ்' நிறுவனத்தில் பணியாற்றும் சுமார் 13,000 தொழிலாளர்களுக்கு ஒவ்வொருவருக்கும், ரூபாய் 200 விதம் ரூபாய் 26 லட்சம் வழங்க அரசு அனுமதி வழங்கியது.

2.12. தொழிற்சங்கங்கள்.—

தமிழ்நாட்டில் 1—1—1981 அன்று உள்ளவாறு பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கங்களின் எண்ணிக்கை 3,498 ஆக இருந்தது. இவ்வாண்டில் 562 தொழிற்சங்கங்கள் புதிதாகப் பதிவு செய்யப்பட்டன. 218 தொழிற் சங்கங்களின் பதிவு விலக்கம் செய்யப்பட்டது. 4 தொழிற்சங்கங்களின் பதிவு விலக்கம் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டது. 5 தொழிற்சங்கங்கள் கலைக்கப்பட்டன. ஒரு தொழிற்சங்கம், மற்றொரு சங்கத்தோடு இணைக்கப்பட்டது. ஆக 1981 ஆம் ஆண்டு இறுதியில் பதிவு செய்யப்பட்டுள்ள தொழிற்சங்கங்களின் எண்ணிக்கை 3,846.

2.13. முத்தரப்பு ஆலோசனைக் குழுக்கள் :

தொழிலாளர்கள் மற்றும் தொழிலதிபர்களின் பிரதிநிதிகளைக் கொண்டு குழுக்களை அமைத்து அவைகளின் ஆலோசனைகளைப் பெறுவதன் மூலம் தொழிலாளர் நலச் சட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்த முடியுமென்று அரசு நம்புகிறது. சென்ற ஆண்டு செயலாற்றிய சட்டப்படி அமைந்த குழுக்களும், ஏனைய குழுக்களும் வருமாறு—

சட்டப்படி அமைந்த குழுக்கள்.

(1) குறைந்த அளவு ஊதியங்கள் (மாநில) ஆலோசனை வாரியம்.

(2) அட்டவணையிட்ட வெவ்வேறு தொழில்களுக்குக் குறைந்த அளவு ஊதியங்களை நிர்ணயிக்க சென்ற ஆண்டு அமைக்கப்பட்ட குழுக்கள்.

(3) மலைத் தோட்ட தொழிலாளர் (வீட்டு வசதி) ஆலோசனை வாரியம்.

(4) 1976 ஆம் ஆண்டு பீடித் தொழிலாளர்கள் நல நிதிச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட ஆலோசனைக் குழு.

(5) மாநில ஒப்பந்தத் தொழிலாளர்கள் ஆலோசனை வாரியம்.

(6) 1976 ஆம் ஆண்டு சம ஊதியச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட ஆலோசனைக் குழு.

ஏனைய குழுக்கள்.

(1) மாநிலத் தொழிலாளர் நல ஆலோசனை வாரியம்.

(2) மாநில மதிப்பீட்டு-செயற்படுத்தும் குழு.

(3) மலைத் தோட்டத் தொழிலாளர் நல ஆலோசனைக் குழு.

(4) தொழிலாளர் நலச் சட்டங்கள் குறித்த குழு.

(5) சிறுவர்களைப் பணியில் அமர்த்தல் பற்றிய மாநில ஆலோசனை வாரியம் மற்றும் குழு.

(ஆ) வாரியம்.—சிறுவர்களை வேலைக்கமர்த்துதல் குறித்து மத்திய அரசு தொழிலாளர் நல அமைச்சகம் அமைத்த உயர் அதிகாரக் குழுவின் பரிந்துரையின்படி தமிழ்நாடு அரசு மாநில தொழிலாளர் நல அமைச்சரின் தலைமையின் கீழ் மாநில ஆலோசனை வாரியம் ஒன்றை 1981 ஏப்ரலில் அமைத்தது. இவ்வாரியத்தின் பணிகள் வருமாறு :—

சிறுவர்களை பணியிலமர்த்துவது தொடர்பாகத் தற்போதுள்ள சட்டங்களின் செயல்முறை பற்றி ஆய்வு செய்தல்.

(ii) பணிபுரியும் சிறுவர்களின் நலனுக்கான சட்ட நடவடிக்கைகளையும் நலப்பணிகளையும் எடுத்துரைத்தல்.

பணிபுரியும் சிறுவர்களுக்கு நலம் பயக்கும் பணிகளின் முன்னேற்றத்தை ஆராய்தல்.

(iv) எந்தத் தொழில்கள் மற்றும் பகுதிகளில் கொஞ்சம் கொஞ்சமாக சிறுவர்கள் பணியிலமர்த்தப்படுவதைத் தவிர்க்கலாம் என்பது பற்றியும் அது குறித்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் பரிந்துரைத்தல்.

இவ்வாரியம் 24—6—1981 அன்றுகூடி, தமிழ்நாட்டில் சிறுவர்களைப் பணிக்கமர்த்தல் சம்பந்தப்பட்ட பல சட்டங்களின் செயல்முறையினை ஆராய்ந்து பணிபுரியும் சிறுவர்களுக்கு முறைசாராக் கல்வி, தொழிலாளர் ஈட்டுறுதி திட்டம் பயன்கள் முதலியவை தொடர்பாகச் சில பரிந்துரைகளைச் செய்துள்ளது,

(ஆ) குழு :

தீப்பெட்டித் தொழில், பட்டாசுத் தொழில் போன்றவற்றில் பணிபுரியும் சிறுவர்களுக்கு நலம் பயக்கும் பணிகளைச் செயல்படுத்தவும், இராமநாதபுரம் மாவட்டத்தில் சிறுவர்களைப் பணிக்கமர்த்துவது பற்றிய பிரச்சினைக்கு தீர்வு காணுவதில் தொடர்புடைய, பல்வேறு அமைப்புகளின் பணிகளை ஒருங்கிணைக்கவும், அரசு, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையின் கீழ் ஆலோசனைக் குழு ஒன்றை 1980 அக்டோபர் திங்களில் அமைத்தது. இக்குழுவில், தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் தொழிலதிபர் அமைப்புகளின் பிரதிநிதிகளும் உள்ளனர். இந்த ஆலோசனைக் குழு 22—7—1981 அன்று சிவகாசியில் கூடியது. மீண்டும் இக்குழு 19—1—1982 அன்று கூடியது.

(C) சுமுகமான தொழிலுறவுக்குப் பரிசு வழங்கும் திட்டம்.

தொழில் நிறுவனங்களில், நிர்வாகத்தினருக்கும், தொழிலாளர்களுக்குமிடையே சுமுகமான தொழிலுறவு தொடர்ந்து நிலவ ஊக்கமளிக்கும் பொருட்டு சுமுகமான தொழிலுறவினை நிலவச் செய்வதில் பாராட்டத்தக்க பணியாற்றிய நிர்வாகத்தினருக்கும் தொழிற் சங்கங்களுக்கும் சிறப்புப் பரிசுகள் அளிக்கும் திட்டத்தை அரசு கொண்டு வந்துள்ளது, இத்திட்டத்தின்கீழ், பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்க தொழிலதிபர், தொழிலாளர் பிரதிநிதிகளுடன், உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவரின் தலைமையின்கீழ் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது அக்குழு 1981-இல் பல முறை கூடி 1980 ஆம் ஆண்டிக்கு பரிசு பெறுவதற்குரியவர்களைத் தெரிந்தெடுத்தது. இவர்களுக்கு முதற் பரிசாக சுழற்கோப்பை ஒன்றும் நிலையாக வைத்துக் கொள்ளக் கூடிய கேடயம் ஒன்றும் இரண்டாம் பரிசாக தகுதிச் சான்றிதழ் ஒன்றும் அளிக்கப்படும்.

அத்தியாயம் 3.

வேலை நிலைமைகள் மற்றும் பணி நிபந்தனைகள் குறித்த சட்டங்கள்.

3.1. 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் ·

(1) 1981 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் 9,681 தொழிற்சாலைகளும், ஆண்டு இறுதியில் (31—12—1981 ஆம் நாள் நிலவரப்படி) 10,444 தொழிற்சாலைகளும் இருந்தன. இவற்றில் 6,40,650

தொழிலாளர்கள் பணி புரிகின்றனர். இவ்வாண்டில் 1,149 தொழிற்சாலைகள் புதிதாக இச்சட்டத்தின் கீழ் வந்தன. 396 தொழிற்சாலைகள் நீக்கப்பட்டன. புதிய தொழிற்சாலைகளைப் பதிவு செய்வது குறித்து இவ்வாண்டில் இத்துறை முனைப்பாக நடவடிக்கை மேற்கொண்டதன் காரணமாக மேலும் பல தொழிற்சாலைகள் இச்சட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டன, இதனால், தொழிற்சாலைகள் சட்டத்தின்படியும், ஏனைய தொழிலாளர் நலச் சட்டங்களின்படியும் கிடைக்கும் பயன்களை அதிகத் தொழிலாளர்கள் பெற இயலும்.

(2) இச்சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், தொடரப்பட்ட வழக்குகளின் விவரங்கள் முறையே III, IV ஆம் இணைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன

(3) தொழிற்சாலைகள் சட்டத்தினையும் தொழிலாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு இயற்றப்பட்டுள்ள ஏனைய சட்டங்களையும் தீவிரமாகச் செயல்படுத்தும் நோக்கத்துடன், அரசு, தொழிற்சாலை ஆய்வாளர்களின் எண்ணிக்கையை அதிகரித்து அவர்களின் பணியைச் சீரமைத்துள்ளது. கோயம்புத்தூரைத் தலைமையிடமாகக் கொண்ட தொழிற்சாலை தலைமை இணை ஆய்வாளர் அலுவலகம், சென்னை, ஈரோடு ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்ட இரு தொழிற்சாலைத் தலைமைத் துணை ஆய்வாளர் அலுவலகங்களும், சென்னை, கோயம்புத்தூர், திருச்செங்கோடு ஆகிய இடங்களைத் தலைமை இடமாகக் கொண்ட மூன்று தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகங்களும் திறம்படச் செயல்படத் தொடங்கியுள்ளன. இவற்றைத் தவிர, சிறுவர்களை வேலைக்கமர்த்துதல் தொடர்பாகத் தனிக் கவனம் செலுத்தவும், பெருவாரியான தீப்பெட்டி, பட்டாசுத் தொழிற்சாலைகளை தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்வதற்காகவும் சிவகாசியில் மேலும் ஒரு தொழிற்சாலை ஆய்வாளர் பதவி ஏற்படுத்தப்பட்டுள்ளது,

3.2. தொழிலாளர்களின் பாதுகாப்பு:

(1) 1981 ஆம் ஆண்டில் தொழிற்சாலைகள், தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றில் ஏற்பட்ட விபத்துக்களின் விவரம் வருமாறு :—

ஆண்டு,	உயிர் இழப்பு ஏற்பட்ட விபத்துக்கள்,	உயிர் இழப்பு ஏற்படாத விபத்துக்கள்.
1980	47	27,398
1981	47	24,815

(2) தொழிற்சாலைகள் சட்டத்தின் செயல்வரம்பிற்குள் பெருவாரியான தொழிற்சாலைகள் கொண்டு வரப்பட்டிருந்தபோதிலும் தொழிற்சாலைகளில் ஏற்படும் விபத்துக்கள் பெருமளவிற்குக் குறைந்துள்ளன. அதிலும் குறிப்பாக, தொழிற்சாலை ஆய்வாளர்கள் இடைவிடாது தொழிற்சாலைகளுக்குச் சென்று பார்வையிட்டு, தொழிலாளர் நலனைக் கவனித்து வந்ததன் பயனாக உயிரிழப்பு அல்லாத விபத்துக்களின் எண்ணிக்கை பெருமளவில் குறைந்துள்ளது. தொழிற்சாலைகளில் ஏற்படும் விபத்துக்களைத் தடுப்பதற்காக, பாதுகாப்பு அல்லாத விபத்துக்களின் எண்ணிக்கை பெருமளவில் குறைந்துள்ளது. தொழிற்சாலைகளில், தனிக்கவனம் செலுத்தி விபத்துக்களைத் தடுப்பதற்காகவும், தொழிற்சாலை ஆய்வாளர்கள் நடவடிக்கை மேற்கொள்கின்றனர்.

3.3. அரசு வழங்கும் பாதுகாப்பு பரிசுகள்; உழைப்பு வீரர் பரிசுகள்

(State Saity Awards and Shrmvir Awards)

(1) தொழிலாளர்கள், நிர்வாகத்தினரிடையே தொழில் பாதுகாப்பை மேம்படுத்தவும், புதிய முயற்சிகளை மேற்கொள்ளவும், அரசு பாதுகாப்புப் பரிசுகள், உழைப்பு வீரர் பரிசுகள் (Shramvir Awards) ஆகிய இரு தனிப் பரிசுகள் வழங்கும் திட்டத்தை அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.

(2) தொழிற்சாலைப் பாதுகாப்பு, அதிக உற்பத்தி, உற்பத்திச் செலவைக் குறைத்தல், பொருள்களை இறக்குமதி செய்வதற்குப் பதிலாக உள்நாட்டுப் பொருள்களைப் பயன்படுத்துதல் போன்ற தொழிற்சாலைகளின் முன்னேற்றத்திற்குத் தேவையான கருத்துக்களைத் தெரிவிக்கும் தொழிலாளருக்கு அவருடைய பணியையும், ஆலோசனையையும் போற்றிப் பாராட்டும் வகையில் மாநில அளவிலான ' உழைப்பு வீரர் ' என்னும் பரிசு அளிக்கப்படுகிறது. இப்பரிசுத் திட்டத்தின் கீழ், 1980 ஆம் ஆண்டில், 80 மனுக்கள் வரப்பெற்றன.

(3) அரசு வழங்கும் பாதுகாப்புப் பரிசுகள், விபத்துக்களைக் குறைக்க வேண்டுமென்ற போட்டி மனப்பான்மையை பல்வேறு தொழிற்சாலை நிர்வாகத்தினரிடையே உருவாக்கும் நோக்கம் கொண்டவை. விபத்துக்களைப் பெருமளவு குறைத்துள்ள தொழிற்சாலைகளுக்கு, அவற்றின் பணியைப் பாராட்டும் வகையில் இந்தப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. 1980 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் பரிசுகள் பெறுவதற்காக 776 விண்ணப்பங்கள் வரப்பெற்றன.

(4) இத்திட்டத்தின் கீழ் பரிசு பெறத் தகுதியுடையவர்களின் பெயர்கள் முடிவு செய்யப்பட்டு விட்டன. அவர்களுக்கு விரைவில் பரிசுகள் வழங்கப்படும்.

3.4. பாதுகாப்புப் பிரிவு :

(1) இந்த ஆண்டு மதுரையில் ஒரு பாதுகாப்புப் பிரிவு அமைக்கப்பட்டது. பெருவாரியாக விபத்துக்கள் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படும் தொழிற்சாலைகளில் அவ்வாறு விபத்துக்கள் பெருமளவில் ஏற்படுவதற்கான காரணங்களை

ஆராயவும், பாதுகாப்பு ஆய்வினை மேற்கொள்வதும் இப்பிரிவின் முக்கியப் பணிகளாகும். இப்பாதுகாப்புப் பிரிவு, தொழிற்சாலையில் பாதுகாப்புக்குரிய கருவிகள், சாதனங்களின் வடிவமைப்பினைத் தெரிந்தெடுத்துக் கூறுவதோடு, தொழிற்சாலையின் பாதுகாப்பு முறைகளை மேம்படுத்துவது குறித்து தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கு ஆலோசனையும் வழங்குகிறது. இப்பிரிவு, தொழிற்சாலைப் பாதுகாப்பின் பல்வேறு அம்சங்கள் குறித்து, தொழிலாளர்களுக்கும், மேற்பார்வையாளர்களுக்கும் தொழில் நுட்பப் பணியாளர்களுக்கும், நிர்வாகப் பணியாளர்களுக்கும் பயிற்சி வகுப்புகளையும் நடத்தி வருகிறது.

(2) இவ்வாண்டில், தொழிலாளர்கள், மேற்பார்வையாளர்களுக்காக பல பாதுகாப்பு வகுப்புகள் நடத்தப்பட்டன இக்காலத்தில் மதுரை, மகாலட்சுமி நூற்பாலை, அம்பாசமுத்திரம், மதுரை கோட்ஸ், ஆறுமுகநேரி, தாரங்கதாரா கெமிக்கல்ஸ், சிவகாசி இராமமூர்த்தி மெட்டல் டெகரேட்டிங் இண்டஸ்டிரி ஆகிய தொழிற்சாலைகளில் பாதுகாப்பு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(3) இப்பாதுகாப்புப் பிரிவு தொழிற்சாலைகளில் விபத்துக்கள் ஏற்படுவதை தவிர்ப்பதற்காக புதிய முறைகளைக் கண்டறியவும் ஆராய்ச்சி வளர்ச்சிப் பிரிவாகச் செயலாற்றுவதோடு, தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பும் தொழிற்சாலை நன்முறையில் நடைபெறுவதற்கும் வகை செய்கிறது.

(4) 1981 ஆம் ஆண்டில் எட்டு திரைப்படங்கள் வாங்கப்பட்டன. தற்போது தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகத்தில் தொழிற்சாலை பாதுகாப்பு, சுகாதாரம் குறித்து 40 திரைப்படங்கள் உள்ளன. தொழிலாளர்களின் நலன் கருதி இவற்றைத் திரையிட்டுக் காட்ட தொழிற்சாலைகளுக்கு இவை இலவசமாகக் கொடுக்கப்படுகின்றன.

3.5. உற்பத்தித் திறன் :

தமிழ் நாட்டில் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி ஆகிய இடங்களில் ஆறு உற்பத்தித் திறன் குழுக்கள் உள்ளன. இக்குழுக்கள் ஒவ்வொன்றும், அவை செலவிட்ட தொகையில் 50 சத வீதத் தொகை அல்லது ரூ. 1,500 இவற்றுள் எது குறைவானதோ, அத்தொகை ஒவ்வொரு ஆண்டும், பொது மானியமாக, இக்குழுக்களுக்கு மாநில அரசால் வழங்கப்படுகிறது.

3.6. தொழிற்சாலையில் உடல் நலம் பேணும் பிரிவு :

(1) மாநில தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகத்தில் ஆய்வுக் கூடத்துடன் இணைந்த தொழிற்சாலைச் சுகாதாரம் உடல்நலம் பேணும் பிரிவு ஒன்று ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளது. ஆபத்தான பணிகளில் ஈடுபட்டுள்ள

தொழிலாளர்களுக்கு மருத்துவப் பரிசோதனைக்கு ஏற்பாடு செய்தல், உயிரின மாதிரிகளை ஆய்வுகூடத்தில் பரிசோதனை செய்தல், அவர்கள் தொழில் சார்ந்த நோய் எவற்றாலும் பாதிக்கப்பட்டுள்ளார்களா என்று ஆய்தல் இவை இப்பிரிவின் பணிகளாகும்.

(2) இந்த ஆண்டில் 72 தொழிற்சாலைகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. 32 தொழிற்சாலைகளிலிருந்து மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. இரத்தம், சிறுநீர் மாதிரிகள் பல பரிசோதனை செய்யப்பட்டன. இச்சோதனைகளின் முடிவுகள் தொழிற்சாலைகளின் நிர்வாகங்களுக்குத் தெரிவிக்கப்பட்டன. தொழிலாளர்களுக்கு உடல்நலக் கேடு விளையாமல் இருக்கத்தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு அவர்களுக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது. இவ்வாறு, தூசி புகை அல்லது ஆவியை அவை தோன்றுமிடத்திலிருந்து உடனடியாக வெளியேற்றுவதற்கான வெளியேற்று வசதிகளை அமைத்திடுமாறு அவர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. ஈயம் சம்பந்தப்பட்ட தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு ஏற்படக்கூடிய நச்சு நோய் குறித்தும், அதிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான வழிவகை பற்றியும் எடுத்துக் கூறப்பட்டது.

(3) நிறுவன அமைப்பின் கீழ் வராத தொழில் பிரிவுகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கும் இது போன்ற பரிசோதனைகள் நடத்த மருத்துவப் பாதுகாப்புப் பிரிவு ஒன்று மதுரையில் ஏற்படுத்தப்பட்டு 24—10—1981 முதல் செயல்பட்டு வருகிறது.

(4) தொழிலாளர் காப்புறுதித் திட்டத்தின் கீழ் வராத தொழிலாளர்களுக்கு மருத்துவ நிவாரண நோய் தடுப்புப் பணிகளை மதுரையிலுள்ள இந்த மருத்துவப் பாதுகாப்புப் பிரிவு மேற்கொள்கிறது.

(5) இந்த ஆண்டு முதற்கொண்டு சான்றளிக்கும் மருத்துவர்களைக் கொண்ட ஆறு பிரிவுகள், சென்னை, வேலூர், சேலம், சிவகாசி, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் செயல்படத் தொடங்கியுள்ளன தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகளின் 95 ஆம் விதியின் கீழ் அறிக்கையிடப்பட்டுள்ள தொழில்களான முந்திரிக் கொட்டை பதப்படுத்தும் தொழிற்சாலைகள், இரசாயனத் தொழிற்சாலைகள், மண்பாண்டம், பீங்கான் தொழிற்சாலை போன்ற ஆபத்தான தொழில்களில் உள்ள தொழிலாளர்களைப் பரிசோதிப்பதே இந்த மருத்துவர்களின் முக்கியப் பணியாகும். உடல் நலத்திற்கு ஊறு விளைவிக்கும் தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் உடல் நலனை குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை இவர்கள் சோதனை செய்கின்றனர்.

3.7. தொழிலாளர் நலச் சட்டங்களைச் செயல்படுத்தும் அமைப்பினை வலுப்படுத்துதல் :

தொழிலாளர் நலச் சட்டங்களைச் செயல்படுத்தும் பணியாளர் அமைப்பை வலுப்படுத்தும் நோக்கத்தோடு மேலும் 3 தொழிலாளர் நல ஆய்வாளர் பதவிகளை இந்த ஆண்டு அரசு ஏற்படுத்தியுள்ளது. இவர்கள், சென்னை, காஞ்சிபுரம், தூத்துக்குடி ஆகிய இடங்களில் செயலாற்றுகின்றனர். ஆய்வாளர் அலுவலகத்தின் பணியாளர்கள் எண்ணிக்கையை அதிகரித்த பிறகு, தொழில் நிறுவனங்களில் ஆய்வுகள் பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் தொடரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை இவை பெருமளவு உயர்ந்துள்ளது என்பதை III, IV ஆம் இணைப்பிலுள்ள அட்டவணைகளிலிருந்து அறியலாம்.

3.8. 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம் :

(1) இச்சட்டத்தின் கீழ் உள்ள கடைகள், நிறுவனங்களின் எண்ணிக்கை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் குறித்த விவரங்கள் தொடரப்பட்ட வழக்குகள், பிரிவு 41-ன் கீழ் முடிவு செய்யப்பட்ட வழக்குகள் ஆகிய விவரங்களை III, IV ஆம் இணைப்புகளிலுள்ள அட்டவணைகளில் காணலாம்.

(2) இந்த ஆண்டில், இச்சட்டத்தின் விதித்துறைகள், மாமல்லபுரம் நகரியத்திற்கும், கைலாசபுரம் பேரூராட்சிக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளன

(3) விதிகளில் திருத்தம்—

(அ) தமிழ்நாடு கடைகள் நிறுவனங்கள் விதிகளின் 9, 11 ஆம் விதிகள் திருத்தப்பட்டன. இந்தத் திருத்தத்தின்படி, இச்சட்டத்தின் 41 ஆம் பிரிவின் கீழ் தொழிலாளர் நலத் துணை ஆணையாளர்கள் அலுவலகத்திலுள்ள தொழிலாளர் நல உதவி ஆணையாளர் மேல்முறையீட்டு அலுவலர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

(இ) 1981 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் தமிழ்நாடு கடைகள், நிறுவனங்கள் விதிகளில் செய்யப்பட்ட மற்றொரு திருத்தத்தின்படி 'K' படிவத்தில் உள்ள விடுப்புப் பதிவேடு திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

(4) 51 ஆம் பிரிவின்கீழ் விண்ணப்பங்கள்—

சட்டத்தின் 51 ஆம் பிரிவின் கீழ் செய்து கொள்ளப்பட்ட 7 விண்ணப்பங்கள் இந்த ஆண்டு தொடக்கத்தில் பரிசீலனையில் இருந்தன. 1981 ஆம் ஆண்டில் 4 விண்ணப்பங்கள் வரப்பெற்றன. மொத்தமுள்ள 11 விண்ணப்பங்களில்,

தொழிலாளர் நல ஆணையாளர் 7 விண்ணப்பங்கள் குறித்து ஆணை பிறப்பித்துள்ளார். ஆண்டு இறுதியில் 4 விண்ணப்பங்கள் முடிவு செய்யப்படாமலிருந்தன.

3.9. 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்கள் சட்டம்.

(1) இச்சட்டத்தின் கீழ் உள்ள உணவகங்களின் எண்ணிக்கை வசூலிக்கப்பட்ட பதிவுக் கட்டணம், மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் தொடரப்பட்ட வழக்குகள், இச்சட்டத்தின் 19 ஆம் பிரிவின்படி முடிவு செய்யப்பட்ட மேல்முறையீடுகள் ஆகிய விவரங்களை III முதல் V வரையுள்ள இணைப்புகளிலுள்ள அட்டவணைகளில் காணலாம்.

(2) இந்த ஆண்டில், இச்சட்டம், செங்கற்பட்டு மாவட்டம், மாமல்லபுரம் நகரியத்திற்கும், திருச்சிராப்பள்ளி மாவட்டம், கைலாசபுரம் பேரூராட்சிக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

(3) இந்த ஆண்டில், தொழிலாளர் நல ஆணையாளர், இச்சட்டத்தின் 27 (2) பிரிவின்கீழ் செய்து கொள்ளப்பட்ட ஒரு விண்ணப்பத்தை விசாரித்து ஆணை பிறப்பித்தார்.

3.10. 1966 ஆம் ஆண்டு பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம், 1968 ஆம் ஆண்டு தமிழ்நாடு பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) விதிகள் :

(1) இச்சட்டத்தின் கீழ் வசூலிக்கப்பட்ட உரிமத் தொகை, ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், தொடரப்பட்ட வழக்குகள் ஆகிய விவரங்களை III முதல் V வரையுள்ள இணைப்புகளிலுள்ள அட்டவணைகளில் காணலாம்.

(2) திருத்தங்கள்—

தொழிலதிபர்கள், தொழில்ளாளர்கள் தயாரிக்கும் பீடிகளில் பெரும் அளவை தள்ளி விடுவதால் தொழிலாளர்களுக்கு ஊதிய இழப்பு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக, அரசு, 1968 ஆம் ஆண்டு தமிழ்நாடு பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) விதிகளில் 33-A என்னும் புதிய துணை விதியைச் சேர்த்தது. இவ்விதியின்படி, தொழிலதிபர், ஒரு தொழிலாளரால் தயாரிக்கப்படும் பீடி அல்லது சுருட்டு அல்லது இவை இரண்டிலும் 5 சதவீதத்திற்கு மேற்பட்ட பீடி அல்லது சுருட்டு அல்லது இவ்விரண்டையும் தள்ளுபடி செய்யக்கூடாது.

(3) பீடித் தொழிலாளருக்கு ஊதிய உறுதி :

நாளொன்றிற்குக் குறைந்தது 500 பீடிகளாவது சுற்றப் போதுமான மூலப்பொருள்களை பீடித் தொழிலாளர்களுக்குத் தொழிலதிபர்கள் வழங்காத போது, நாளொன்றிற்கு 1,000 பீடிகள் சுற்றுவதற்கு நிர்ணயித்துள்ள குறைந்த அளவு தொகையில் 50 சதவீதத் தொகையை ஊதியமாக வழங்க உத்திரவாதம் அளிக்கும் வகையில் அரசு ஆணையிட்டது. இந்த ஆணை 22-6-1981 நாள் முதல் செயலுக்கு வந்தது.

(4) பீடித் தொழிலாளர் நலன் :

(அ) பீடித் தொழிலாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு பீடித் தொழிலாளர்களுக்கு நலம் பயக்கும் பணிகளை மேற்கொள்ள மத்திய அரசு ஒரு அமைப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த அமைப்பு துறை அதிகாரிகளின் ஒத்துழைப்போடும் உதவியுடனும், பீடித் தொழிலாளர்களுக்காக பல்வேறு நலப் பணிகளை மேற்கொண்டுள்ளது. இந்த வகையில் கீழ்க்கண்டவற்றைக் குறிப்பிடலாம்—

(i) பீடித் தொழிலாளர்களுக்கு மருத்துவ சிகிச்சையளிப்பதற்காக, மேலப்பாளையத்தில் நிலையான—நடமாடும் மருத்துவப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(ii) பீடித் தொழிலாளர்களுக்கும் அவர்களைச் சார்ந்துள்ளவர்களுக்கும் மருத்துவ சிகிச்சை அளிக்க ஆங்கில மருத்துவ முறை மருந்தகங்கள் வேலூருக்கு அருகாமையில் உள்ள சாத்துவாச்சேரியிலும், தென்காசியிலும், ஈரோட்டிலும் செயல்பட்டு வருகின்றன.

(iii) நிலையான—நடமாடும் மருந்தகம் ஒன்றை அமைப்பதற்கு ஒப்புதலளிக்கப்பட்டு, அம்மருந்தகம் திருச்சியில் அமைக்கப்பட்டுள்ளது.

(iv) 1976 ஆம் ஆண்டு பீடித் தொழிலாளர்கள் நல நிதிச் சட்டத்தின் கீழ், பீடித் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. 1980-81 ஆம் ஆண்டில் 2,501 மாணவர்களுக்கு 1,04,640 ரூபாய் அளிக்கப்பட்டுள்ளது. 1981-82 ஆம் ஆண்டில். படிப்புதவித் தொகை வழங்குவதற்கு, உரிய விண்ணப்பங்கள் பெங்களூர், பீடித் தொழிலாளர் நல ஆணையாளரால் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) பொருளாதார வகையில் நலிந்த நிலையில் உள்ளவர்களுக்காக தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் வேலூர், சாத்துவாச்சேரியில் கட்டப்பட்ட வீடுகளில் 150 வீடுகளை பீடித் தொழிலாளர்களுக்கு ஒதுக்கவும், அவ்வாறு ஒதுக்கப்பட்ட ஒவ்வொரு வீட்டிற்கும் ஆகும் செலவில் 10 சத

வீதத் தொகையை வீடு பெறும் பீடித் தொழிலாளர் முதற்கண் செலுத்துவதன் பேரிலும், பெங்களூர் மத்திய அரசு பீடித் தொழிலாளர்கள் நல ஆணையாளரால் ஒவ்வொரு வீட்டிற்கும், 1,500 ரூபாய் செலுத்தப்படுவதன் பேரிலும், அவ்வீடுகளை ஒதுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கிணங்க, உதவி மானியமாக 2.25 இலட்சம் ரூபாய் மைய அரசு இதற்காக அனுமதித்துள்ளது.

(5) குழுக்கள் :

1976 ஆம் ஆண்டு பீடித் தொழிலாளர்கள் நல நிதிச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் தமிழ்நாட்டிற்காக ஆலோசனைக் குழு ஒன்றை மைய அரசு அமைத்துள்ளது. 9 பேர்களை உறுப்பினர்களாகக் கொண்டுள்ள இக்குழுவிற்கு தமிழ்நாடு தொழிலாளர் நல அமைச்சர் தலைவர் ஆவார். இக்குழு இவ்வாண்டில், மும்முறை கூடி இம்மாநிலத்தில் பீடித் தொழிலாளர்களின் நலனை மேம்படுத்துவதற்குரிய பல்வேறு நடவடிக்கைகள் பற்றி விவாதித்தது.

3.11. 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம் :

(1) 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம், அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகள் இத்துறையைச் சேர்ந்த அலுவலர்களால் தீவிரமாக செயலாக்கப்பட்டு வருகின்றன.

(2) வசூலிக்கப்பட்ட பதிவுக் கட்டணம், ஆய்வாளர் நடத்திய ஆய்வுகள், விதித்துறைகளை மீறியதற்காகத் தொடரப்பட்ட வழக்குகள் ஆகியவை குறித்த விவரங்கள் II முதல் IV வரையிலுள்ள இணைப்புகளில் காணும் விவர அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

3.12. 1955 ஆம் ஆண்டு உழைக்கும் பத்திரிகையாளர்கள், ஏனைய செய்தித்தாள் நிறுவனப் பணியாளர்கள் (பணி நிலைமைகளும் பல்வேறு விதித்துறைகளும்) சட்டம் :

(1) இச்சட்டத்தின் விதித்துறைகள், தொழிலாளர் நல ஆய்வாளர்களாலும், தொழிலாளர் நலத் துணை ஆய்வாளர்களாலும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வாண்டில், தொழிலாளர் நல ஆய்வாளர்கள், தொழிலாளர் நலத் துணை ஆய்வாளர்கள் ஆகியவர்களோடு, சென்னை தொழிலாளர் நல ஆணையாளர் அலுவலகத்தைச் சேர்ந்த பொதுமக்கள் தொடர்பு அலுவலரும் இச்சட்டத்தின் கீழ் ஆய்வாளராகப் பணி புரிவர் என்று அரசு அறிவித்துள்ளது. 1981 ஆம் ஆண்டு இறுதியில் இருந்தவாறு, இச்சட்டத்தின் கீழ் 54 நிறுவனங்கள் உள்ளன, இவற்றில் 3,500 பத்திரிகையாளர்கள் பணி புரிகின்றனர்.

(2) 1936 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தின்கீழ் செய்தித்தாள் நிறுவனங்கள் தொழில் நிறுவனங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. மேற்கூறிய சட்டத்தின் விதித்துறைகளை செய்தித்தாள் நிறுவனங்களுக்கு நீட்டிக்க வரைவு அறிவிக்கை ஒன்றை அரசு வெளியிட்டுள்ளது,

(3) செய்தித்தாள் நிறுவனங்கள் குறித்து அமைக்கப்பட்ட பலேக்கர் நடுவர் மன்றத்தின் பரிந்துரைகளைச் செயற்படுத்தியதன் விளைவாக, இச்சட்டத்தின் கீழ் வருகிற பத்திரிகையாளர்கள், ஏனைய செய்தித்தாள் நிறுவனப் பணியாளர்கள் ஆகியோர் வேலை இழக்காமல், அவர்களின் நலனைக் காக்க மைய அரசு 1981ஆம் ஆண்டு 12ஆம் அவசரச் சட்டத்தின் வாயிலாக இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவில், திருத்தத்தைச் செய்துள்ளதோடு 16-A என்னும் புதிய பிரிவொன்றையும் சேர்த்துள்ளது.

(4) செய்தித்தாள் நிறுவனங்கள் குறித்த பலேக்கர் நடுவர் மன்றத்தின் பரிந்துரைகளை, செயற்படுத்தப்படுவதை துறை அலுவலர்கள் கண்காணித்து வருகின்றனர்.

3.13. 1976 ஆம் ஆண்டு விற்பனை மேம்பாட்டுப் பணியாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம் :

மருந்து தயாரிப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்குப் பொருந்துமாறு செய்யப்பட்டுள்ள இச்சட்டம் இதன்கீழ் நியமிக்கப்பட்ட ஆய்வாளர்களால் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது.

3.14, 1970ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர்கள் முறைப்படுத்துதலும் நீக்குதலும்) சட்டம்.

(1) இச்சட்டத்தின்கீழ் 1981ஆம் ஆண்டில், 395 பேர் முதன்மைத் தொழிலதிபர்களாகவும், 972 பேர் ஒப்பந்தக்காரர்களாகவும் பதிவு செய்யப்பட்டனர்.

(2) செய்யப்பட்ட ஆய்வுகள், தொடரப்பட்ட வழக்குகள் ஆகியவை குறித்த விவரங்கள் II முதல் V வரையிலான இணைப்புகளில் காணும் விவர அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

(3) இம்மாநிலத்தில் பொறியியல் தொழிலில் ஈடுபட்டுள்ள ஒப்பந்தத் தொழிலாளர்கள், அவர்களுடைய பணி நிலைமைகள் ஆகியவை குறித்து ஆய்வு செய்ய துணைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

(4) சிமிட்டித் தொழில் குறித்த, துணைக் குழு அளித்த பரிந்துரையின் பேரில், இத்தொழிலில் கீழ்க்காணும், செய்முறைகளில், ஒப்பந்தத் தொழிலாளர்களை 1—3—1981ஆம் நாளிலிருந்து நியமிக்கக்கூடாது என்று அரசு ஆணை பிறப்பித்தது :—

(அ) சிமிட்டியை சிப்பம் கட்டும் இல்லத்தில் அதனைப் பைகளில் சிப்பம் செய்யும் முறை ; மற்றும்,

(ஆ) கோணிப்பைகளில் அச்சிடுதல்.

3.17. 1951 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர்கள் சட்டம் :

1981ஆம் ஆண்டில், 66 தொழில் நிறுவனங்களின் நிலை ஆணைகள், சான்றளிக்கும் அதிகாரிகளால், சான்றளிக்கப்பட்டன. மேலும் 7 தொழில் நிறுவனங்களைப் பொறுத்தமட்டில், அவற்றின் நிலை ஆணைகளில் செய்யப்பட்ட திருத்தங்களுக்கும் சான்றளிக்கப்பட்டது. இவ்வாண்டில், இச்சட்டத்தின் கீழ் 9 மேல்முறையீடுகளை மேல்முறையீட்டு மன்றங்களாகச் செயல்படும் தொழிலாளர் நீதி மன்றங்கள் விசாரித்துத் தீர்ப்பளித்துள்ளன.

3.16. 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறைகள்) சட்டம் :

இவ்வாண்டில் ஆய்வாளர்களால் ஆய்வு செய்யப்பட்டவை, இச்சட்டத்தின் விதித்துறைகளை மீறியதற்காகத் தொடரப்பட்ட வழக்குகள் ஆகியவை குறித்த விவரங்கள் II முதல் V வரையிலான இணைப்புகளில் காணும் விவர அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

3.17, 1951ஆம் ஆண்டு மலைத்தோட்டத் தொழிலாளர்கள் சட்டம் :

(1) 1981ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் 419 மலைத் தோட்டங்கள் இருந்தன. இவற்றில் சுமார் 90,600 தொழிலாளர்கள் பணி புரிந்தனர். 1—1—1981ஆம் நாளிலிருந்து 31—12—1981ஆம் நாள் வரையிலுள்ள காலஅளவில் 1,060 தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தியுள்ள 21 மலைத் தோட்டங்கள் புதிதாகப் பதிவு செய்யப்பட்டன. 270 தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தியிருந்த 6 மலைத் தோட்டங்கள் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டன. ஆக, இந்த ஆண்டின் இறுதியில் 434 மலைத் தோட்டங்கள் பட்டியலில் இடம் பெற்றிருந்தன.

31—12—1981ஆம் நாளன்று இருந்தவாறு இவற்றில் பணிபுரிந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை தோராயமாக 91,390 ஆகும்.

(2) இச்சட்டத்தின் விதித்துறைகள், விதிகள் ஆகியவற்றை மலைத் தோட்டத் தலைமை ஆய்வாளரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள மலைத்தோட்ட ஆய்வாளர்கள் எழுவர் செயற்படுத்தி வருகின்றனர். தொழிலாளர் நல இணை ஆணையர் மலைத் தோட்டத் தலைமை ஆய்வாளராகத் தொடர்ந்து செயலாற்றி வருகிறார்.

(3) செய்யப்பட்ட ஆய்வுகள், இச்சட்டம், விதிகளின் விதித்துறைகளை மீறியதற்காக வழக்குத் தொடர அனுமதிக்கப்பட்டவை ஆகியவை குறித்த விவரங்கள் II லிருந்து V வரையிலான இணைப்புகளில் காணும் விவர அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

(4) 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு மலைத் தோட்டத் தொழிலாளர்கள் விதிகளைச் சேர்ந்த 51 (2)ஆம் விதியின்கீழ் குடியிருப்புகளிலிருந்து தொழிலாளர்களை வெளியேற்றுமாறு கோரி, நிர்வாகத்தினர் தாக்கல் செய்த 4 விண்ணப்பங்களை கோயம்புத்தூர் தொழிலாளர் நீதிமன்றம் முடிவு செய்தது.

3.18. 1981 ஆம் ஆண்டு மலைத்தோட்டத் தொழிலாளர்கள் (திருத்தச்) சட்டம்:

(1) மத்திய அரசு, மலைத்தோட்டத் தொழிலாளர்கள் சட்டத்தை 1981 ஆம் ஆண்டு, மலைத்தோட்டத் தொழிலாளர்கள் (திருத்தச்) சட்டத்தினால் (சட்டம் எண் 58/1981) திருத்தியுள்ளது, இச்சட்டத்தின் முக்கிய கூறுகள் வருமாறு :—

(i) மலைத் தோட்டத் தொழிலாளர்கள் சட்டம், முன்னர் 10,117 எக்டேர் பரப்பளவு கொண்ட மலைத் தோட்டங்களுக்கும், 30 தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தியுள்ள மலை தோட்டங்களுக்கும் மட்டுமே பொருந்தியது. ஆனால், இச்சட்டம், தற்போது 5 எக்டேர் அல்லது அதற்கு மேற்பட்ட பரப்பளவுள்ள மலைத் தோட்டங்களுக்கும், 15 தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தியுள்ள மலைத் தோட்டங்களுக்கும் பொருந்துமாறு நீட்டிக் கப்பட்டுள்ளது.

(ii) மலைத் தோட்டங்களைப் பதிவு செய்யவும், ஒவ்வோராண்டும் புதுப்பிக்கப்படுவதற்கும், வகை செய்யப்பட்டுள்ளது.

(iii) குழந்தைகள் காப்பகம் தொடர்பான விதித்துறைகளை, 50 பெண் தொழிலாளர்களுக்குக் குறைவான தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தியுள்ள அல்லது அத்தகைய பெண் தொழிலாளர்களின் குழந்தைகளின் எண்ணிக்கை 20-க்குக் குறைவாக உள்ள மலைத் தோட்டங்களுக்கும் நீட்டிப்பதற்குரிய அதிகாரம் அரசுக்கு வழங்கப்பட்டுள்ளது.

(iv) மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்காக மலைத் தோட்ட அதிபர்களால் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ள வீடுகள் இடிந்து விழ்வதால் ஏற்படும் விபத்துக்களுக்காக தொழிலாளர்களுக்கு இழப்பீடு வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

(v) நிர்வாகம் விபத்துக்கள் பற்றி அறிவிக்கவும், விபத்துக்கள் பற்றிய பதிவேட்டை பராமரித்து வரவும் கோர வகை செய்யப்பட்டுள்ளது.

2. இச்சட்டம் 26—1—1982 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்துள்ளது. இச்சட்டத்தின் கீழ் புதிய விதிகளை இயற்றுவது குறித்து தொழிலாளர் நல ஆணையாளரோடு கலந்தாலோசித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

3.19. புதிய தொழிலாளர் நலச் சட்டங்கள் :

(1) 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு வாழ்க்கைப்படி வழங்கல் சட்டம் (சட்டம் எண் 45/1981).—தொழில் நிறுவனங்கள் தங்களுடைய பணியாளர்களைத் தற்காலிகமாகப் பணியிலிருந்து நீக்கி வைக்கும்போது, அக்கால அளவிற்கு அப்பணியாளர்களுக்கு வாழ்க்கைப்படி வழங்கிட வேண்டுமென்று இச்சட்டம் வரையறுக்கிறது. வழங்கப்பட வேண்டிய வாழ்க்கைப்படி வீதங்கள் வருமாறு :—

முதல் 90 நாட்களுக்கு—ஊதியத்தில் 50 சதவீதம்.

90 நாட்களுக்கு பிறகு 180 நாட்கள் வரை—ஊதியத்தில் 75 சதவீதம்.

180 நாட்களுக்கு மேற்பட்டு—முழு ஊதியம்.

இச்சட்டத்தின் விதித்துறைகள் 1—1—1982 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்துள்ளன.

(2) 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களின் பணியை நிரந்தரப்படுத்தல்) சட்டம் (சட்டம் எண் 46/1981).

24 திங்கள் கால அளவில், தொடர்ந்து 480 நாள் பணி புரிந்த தொழிலாளர்களின் பணியை நிரந்தரப்படுத்த இச்சட்டம் வகை செய்கிறது. இச்சட்டத்தின் முக்கியக்கூறு யாதெனில், தொழிலாளர் ஒருவர் பணிபுரியும் காலத்தில் பணியில் இடையீடு ஏற்படுமானால் அதற்கு அவர் பொறுப்பல்லவென்று தெரிந்தால், அந்த இடையீட்டைத் தொடர் பணியாகச் சேர்த்துக் கணக்கிட தொழிலாளர் உரிமை உடையவர் ஆவார் என்பதே ஆகும். எனவே, தொழிலாளர் எவரையும் ஒருதலை முடிவெடுத்து எந்த ஒரு நிர்வாகமும் அவரைப் பணியிலிருந்து நீக்கி, தொடர்ந்த பணியின் பயன் அத்தொழிலாளருக்கு கிடைப்பதை தடுக்க முடியாது. இச்சட்டம் 1—1—1982 ஆம் நாளன்று, செயலுக்கு வந்துள்ளது.

(3) 1981 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டம் (சட்ட எண் 47/1981.—ஆலோசனைக் குழுக்களை அமைத்தல் அவை செயல்படுதல் ஆகியவற்றில் காணப்படும் சில நடைமுறைச் சிக்கல்களை களையும் பொருட்டு, இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டம், 1—10—1981 ஆம் நாளன்று செயலுக்கு வந்தது.

(4) 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு கைத்தறித் தொழிலாளர்கள் (பணி நிலைமைகளும் பல்வேறு விதித்துறைகளும்) சட்டம்.—நெசவாளர்களுக்கும் சொந்தத்தறி நெசவாளர்களுக்குமிடையே தொழிலதிபர் தொழிலாளர் உறவை வளர்க்கவும், நெசவாளர்களுக்கு ஊதியங்கள் வழங்கப்படுதல், நெசவாளர்களைப் பணியில் தொடர்ந்து வைத்திருத்தல், அவர்களுக்கு சுகாதார, ஏனைய நல வசதிகளுக்கு வகை செய்தல் ஆகியவற்றிற்கு உறுதி செய்யவும் இச்சட்டம் வகை செய்கிறது. தொழிற்சங்க அமைப்பு இல்லாத பெருவாரியான தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாக்க இத்தகையதொரு சட்டத்தை இயற்றியதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது.

அத்தியாயம் 4.

ஊதியங்கள் குறித்த சட்டங்கள்.

4.1. 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டம்,

(1) தொழிற்சங்க அமைப்பு இல்லாத பெருவாரியான தொழிலாளர்களுக்கு, இயன்ற வகையில் அதிகம் பேருக்கு குறைந்த அளவு ஊதியங்களை வழங்க உறுதி செய்வதில், அரசு மிகுந்த கவனம் செலுத்துகிறது. கீழ்க்காணும் வேலைகளுக்குரிய குறைந்தளவு ஊதிய வீதங்களை அரசு நிர்ணயித்துள்ளது அல்லது திருத்தியுள்ளது.

(i) தையல் தொழில் (முதன் முறையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது).

(ii) செயற்கை வைரம் தீட்டும் தொழில் (முதன் முறையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது).

(iii) கடைகள்—நிறுவனங்களில் வேலை (திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

(iv) காப்பிக்கொட்டை பதப்படுத்தல் தொழிலில் வேலை (முதன் முறையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது).

(2) ஆய்வுக்கால அளவில், கீழ்க்காணும், வேலைகளுக்குரிய குறைந்த அளவு ஊதிய வீதங்களை நிர்ணயிக்க ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது,

(i) வாசனைப் புகையிலை தயாரிக்கும் தொழிலில் வேலை.

(ii) கட்டிடங்கள் கட்டுதல், கற்களை உடைத்தல், கற்களைத் தூள் செய்தல், சாலை போடுதல், சாலை பராமரிப்பு ஆகிய பணிகளில் வேலை.

(iii) சோப்புத் தயாரிப்புத் தொழிலில் வேலை.

(iv) அரசினர் மருத்துவமனை, தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவமனை, மருத்துவ மனைகள், தனியார் மருத்துவ விடுதிகள் ஆகியவற்றில் வேலை,

(v) விசைத்தறித் தொழிலில் வேலை.

(vi) திரைப்படத் தொழிலில் வேலை.

(vii) முந்திரித் தொழிலில் வேலை.

(viii) உள்ளாடைகள் தயாரிப்புத் தொழிலில் வேலை.

(ix) கைத்தறிப் பட்டு நெசவுத் தொழிலில் வேலை.

(x) கைத்தறி நெசவுத் தொழிலில் வேலை.

(xi) கம்பள விரிப்பு, போர்வை நெய்யும் தொழிலில் வேலை.

(xii) பீடி சுற்றும் தொழில் நீங்கலாக, பீடி தயாரிக்கும் தொழில் உட்பட புகையிலை தயாரிப்புத் தொழிலில் வேலை.

(xiii) உணவகங்கள், சிற்றுண்டியகங்கள் ஆகியவற்றில் வேலை.

(xiv) தீப்பெட்டி, பட்டாசு தயாரிப்புத் தொழிலில் வேலை.

(xv) பாத்திரங்கள் (தட்டுமுட்டுச் சாமான்கள்) தயாரிப்புத் தொழிலில் வேலை,

(3) 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் விவர அட்டவணையில் பின்வரும் தொழில்கள் சேர்க்கப்பட்டுள்ளன :—

(i) டாக்சிகள், ஆட்டோ ரிக்ஷாக்கள் ஓட்டுவதில் வேலை.

(ii) சிறு அளவிலான பொறியியல் இணைப்புக் கட்டுமானத் தொழிலில் வேலை.

(4) 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் 20 ஆம் பிரிவின்கீழ், "அதிகாரிகள்" என்று அறிவிக்கப்பட்டுள்ள தொழிலாளர் நல நீதிமன்றங்களின் நீதிபதிகள், இவ்வாண்டில் குறைந்த அளவு ஊதியங்கள் தரப்படாமை குறித்து வந்த 41 உரிமைக் கோரிக்கை மனுக்களை முடிவு செய்துள்ளனர்.

(5) குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின்கீழ் நடத்திய ஆய்வுகள், தொடர்ந்த வழக்குகள் முதலியவை பற்றிய விவரங்கள் III ஆம், V ஆம் இணைப்பில் காணும் விவர அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

4.2. வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு அளிக்கப்படும் குறைந்த அளவு ஊதியங்கள் :—

(1) பாரதப் பிரதமர் அவர்கள் புதிய 20 அம்சத் திட்டமொன்றை அறிவித்துள்ளார்கள். இத்திட்டத்தில் வேளாண்மைத் தொழிலாளர்களுக்குரிய குறைந்த அளவு ஊதியங்கள் குறித்து மறு ஆய்வு செய்வதும் அவைகளைப் பயன்தரும் வகையில் செயலாக்குவதும் இடம் பெற்றுள்ளது. வேளாண்மைத் தொழில் பிரிவில், குறைந்த அளவு ஊதியங்களைச் செயலாக்கும் பொறுப்பு, வருவாய்த் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதன் பொருட்டு மாவட்ட ஆட்சியர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், கோட்டாட்சியர்கள், வட்டாட்சியர்கள், துணை வட்டாட்சியர்கள், தலைமையிட துணை வட்டாட்சியர்கள், உள்வட்ட வருவாய் ஆய்வாளர்கள் ஆகியோர் அவரவர்களுடைய அதிகார வரம்பிற்குள் "ஆய்வாளர்களாக" நியமிக்கப்பட்டுள்ளனர். குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின்கீழ் கொடுக்கப்படுகின்ற எல்லா உரிமைக் கோரிக்கை மனுக்கள் குறித்து விசாரணை நடத்தி முடிவு செய்யும் பொறுப்பு வட்டாட்சியர்களைச் சாரும்.

(2) வேளாண்மைத் தொழில் புரியும் வேலைக்குரிய ஊதியங்களின் குறைந்த அளவு வீதம், கடைசியாக 1979 செப்டம்பரில் திருத்தியமைக்கப்பட்டது, இந்த ஊதியங்களைத் திருத்தியமைப்பதில் அரசுக்கு ஆலோசனை கூறும் பொருட்டு, ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

4.3. 1936 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டம்—

(1) தொழிற்சாலைகளைப் பொறுத்தமட்டில் தொழிற்சாலை ஆய்வாளர்களாலும், ஏனைய தொழில் நிறுவனங்களைப் பொறுத்தமட்டில், தொழிலாளர் நல ஆய்வாளர்களாலும் இச்சட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது.

(2) 1936 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தின் விதித் துறைகள், செய்தித்தாள் நிறுவனங்களுக்கும் பொருந்தும் வகையில் நீட்டித்து, அரசு, இவ்வாண்டில், வரைவு அறிவிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

(3) ஆய்வுகள், தொடரப்பட்ட வழக்குகள், முடிவு செய்த உரிமைக் கோரிக்கைகள் ஆகியவை பற்றிய விவரங்கள், III ஆம் இணைப்புகளில் காணும் விவர அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன.

அத்தியாயம் 5.

சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள்.

5.1/1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி பலவகை விதித் துறைகள் சட்டம்.

(1) இச்சட்டத்தை நீட்டித்தல்.

ஆய்வுக்கால அளவில் பின்வரும் புதிய நிறுவனங்கள்/தொழிற்சாலைகள் அவற்றுக்கெதிரே குறிப்பிட்டுள்ள நாளிலிருந்து இச்சட்டத்தின் செயல் வரம்புக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன :—

(i) சரக்குகளை கொண்டு வந்து ஏற்றி அனுப்புதல், கப்பலில் சரக்குகளை ஏற்றுதல், கப்பலிலிருந்து சரக்குகளை இறக்குதல் ஆகிய தொழில்களில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் 23—11—1981

(ii) கோழி வளர்ப்புப் பண்ணைகள் 7—12—1981

(iii) கால்நடைத் தீவன தயாரிப்புத் தொழிற்சாலைகள் 7—12—1981

இதன் விளைவாக இச்சட்டம், மேலும் 722 புதிய நிறுவனங்களுக்கு நீட்டிக்கப்பட்டது. இதனால், கூடுதலாக சுமார் 46,000 தொழிலாளர்கள் பயனடைந்தனர்.

(2) இச்சட்டத்தின் கீழ் வரும் நிறுவனங்கள்/சந்தாதாரர்கள் :—

1981 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30 ஆம் நாளன்று இருந்தவாறு, இச்சட்டத்தின்கீழ் வரும் நிறுவனங்கள்/ தொழிலாளர்கள்/சந்தாதாரர்கள் ஆகியோர் பற்றிய விவரங்கள் வருமாறு :—

விவரம்	விலக்களிக்கப்பட்டவை	விலக்களிக்கப் படாதவை.	மொத்தம்
(1)	(2)	(3)	(4)
நிறுவனங்களின் எண்ணிக்கை	463	12,504	12,967
இச்சட்டத்தின் கீழ் வரும் தொழிலாளர்களின் எண்ணிக்கை	3,27,250	10,98,187	14,25,437
சந்தாதாரர்களின் எண்ணிக்கை	3,16,348	9,93,040	13,09,388

[1982 மார்ச் 27

3. தொழிலாளர் குடும்பநல ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் வரும் உறுப்பினர்கள்.
உறுப்பினர்களின் எண்ணிக்கை—8,89,235

(4) 1976 ஆம் ஆண்டு தொழிலாளர்களின் வைப்பீட்டுத் தொகை இணைந்த ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் வரும் உறுப்பினர்களின் எண்ணிக்கை.

(அ) 1952 ஆம் ஆண்டு தொழிலாளர்கள் வருங்கால வைப்பு நிதித் திட்டத்தின்கீழ், விலக்களிக்கப்படாத, விலக்களிக்கப்பட்ட நிறுவனங்களிலுள்ள உறுப்பினர்கள் அனைவரும் ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் உறுப்பினர்களாவர்.

(ஆ) தொழிலாளர்களிடமிருந்து சந்தாத் தொகை/தவணை கட்டணம் ஏதும் வசூலிக்காமல், அவர்களுக்கு தொகுதி ஈட்டுறுதித் திட்டத்தை செயலுக்குக் கொண்டு வந்துள்ள நிறுவனங்களுக்கு, 1976 ஆம் ஆண்டு, தொழிலாளர்களின் வைப்பீட்டுத் தொகை இணைந்த ஈட்டுறுதித் திட்டம் பொருந்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. அத்தகைய நிறுவனங்களின் எண்ணிக்கை வருமாறு :—

நிறுவனங்களின் எண்ணிக்கை.	உறுப்பினர்களின் எண்ணிக்கை.
71	77,596

(இ) இச்சட்டத்தின் பல்வேறு விதித்துறையின் கீழ் செலுத்த வேண்டிய தொகையின் கேட்பு, வசூல், பாக்கி விவரங்கள் வருமாறு :—

செலுத்த வேண்டிய தொகை பற்றிய விவரம்	30–11–1981 அன்றிருந்த வாறு பாக்கி.	1981 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 1 ஆம் நாள் முதல் நவம்பர் திங்கள் 30 ஆம் நாள் வரை வசூல்.
(1)	(2)	(3)
	(ரூபாய் இலட்சத்தில்)	
1 தொழிலாளர்களின் வருங்கால வைப்பு நிதி	203.33	4,428.17
2 குடும்பநல ஓய்வூதிய நிதி	10.58	657.64
3 வைப்பீட்டுத் தொகை இணைந்த ஈட்டுறுதிநிதி	7.15	174.19

(ஈ) நாட்டுடைமையாக்கப்பட்ட துணி ஆலைகள் தொடர்பான தொகை ரூ. 59.13 இலட்சம் உட்பட, தொழிலாளர்களின் வருங்கால வைப்பு நிதியின் கீழ் காட்டப்பட்ட பாக்கித் தொகையில் பெரும்பகுதி பஞ்சாலைத் தொழில் தொடர்பானதாகும். பாக்கித் தொகை ரூ. 144,20 இலட்சத்தில் ரூ 85,45 இலட்சம் பின்வரும் தொழில் நிறுவனங்களிடையே முடங்கிக் கிடக்கிறது.

1982 மார்ச் 27]

	(ரூபாய் இலட்சத்தில்)
(i) மேற்கூறிய திட்டம் பொருந்துவது குறித்து எதிர்ப்புத் தெரிவித்து ரிட் மனுக்களைத் தாக்கல் செய்துள்ள நிறுவனங்கள்	68.10
(ii) கலைக்கப்பட்டுள்ள நிறுவனங்கள்	12.85
(iii) மூடப்பட்டுள்ள நிறுவனங்கள்	4.50
மொத்தம்	ரூ. 85.45 இலட்சம்

(உ) எஞ்சியுள்ள 58.75 இலட்சம் ரூபாயை வசூலிக்க வேண்டியதில் 51.03 இலட்சம் ரூபாய் வசூலிக்க இவ்வமைப்பு 278 இனங்களில் வரிவசூல் நடவடிக்கை எடுத்துள்ளது. இவற்றோடு நிலுவைத் தொகைகளை உரிய காலத்தில் செலுத்தத் தவறியவர்களுக்கு எதிராக 1,395 வழக்குகளும் தொடரப்பட்டுள்ளன.

(5) வருங்கால வைப்புநிதி கணக்குகளை முடித்து, தொகை கொடுத்துத் தீர்த்தல் :

(அ) 1981 ஆம் ஆண்டில் (30—11—1981 ஆம் நாள் வரை) 46,743 இனங்களைப் பொறுத்தமட்டில் வருங்கால வைப்புநிதிக் கணக்குகளை இறுதியாக்கி தொகை வழங்கித் தீர்ப்பது தொடர்பாக 1,340 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.

(ஆ) வரப்பெற்ற உரிமைக் கோரிக்கைகள், தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்டவை அல்லது குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காகத் திருப்பி அனுப்பப்பட்டவை, 30—11—1981 ஆம் நாளன்றிருந்தவாறு தொகை கொடுத்துத் தீர்க்கப்படாமலுள்ள உரிமைக் கோரிக்கைகள் ஆகியவற்றைக் காட்டும் விவர அறிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

(i) 31—12—1980 ஆம் நாளன்று இருந்தவாறு தொகை கொடுத்துத் தீர்க்கப்படாமலிருந்த உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை	6,527
(ii) 1981 ஜனவரியிலிருந்து 1981 நவம்பர் வரை வரப்பெற்ற உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை	54,066
(iii) 1981 ஆம் ஆண்டில் தொகை கொடுத்துத் தீர்க்கப்பட வேண்டியிருந்த உரிமைக் கோரிக்கைகளின் மொத்த எண்ணிக்கை	60,593

(iv) 1981 ஜனவரி முதல் 1981 நவம்பர் வரையில், தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை 46,743

( ) குறைபாடுகளைச் சரி செய்வதற்காகத் திருப்பி அனுப்பப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை 8,937

(vi) 30—11—1981 ஆம் நாளன்று இருந்தவாறு தீர்க்கப் படாமலிருந்த உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை 4,913

(இ) 1981 ஆம் ஆண்டில் தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகள் பற்றிய பகுப்பாய்வு (1981 ஜனவரி முதல் 1981 நவம்பர் வரை) :—

(i) இறப்பு	3,757
(ii) வயது முதிர்வு பெற்றமை	5,946
(iii) நிரந்தரமாக இயலாமையுற்றது	1,018
(iv) பதவியை விட்டு விலகியது	29,849
(v) ஆட்குறைப்பு செய்யப்பட்டது	5,657
(vi) இடம் பெயர்தல்	31
(vii) பணியிலிருந்து நீக்கப்பட்டது	344
(viii) பல்வகை	141
மொத்தம்	46,743

(6) 1971 ஆம் ஆண்டு, தொழிலாளர்கள் குடும்ப நல ஓய்வூதியத் திட்டம் :

(i) 31—12—1980 ஆம் நாளன்று இருந்தவாறு முடிக்கப் பெறாமலிருந்த கோரிக்கைகளின் எண்ணிக்கை 5,967

(ii) 1981 ஜனவரி முதல் 1981 நவம்பர் வரை வரப் பெற்ற கோரிக்கைகளின் எண்ணிக்கை 40,944

மொத்தம் 46,911

(iv) 1981 ஜனவரி முதல் 1981 நவம்பர் வரை தொகைக் கொடுத்துத் தீர்க்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை 33,463

(v) குறைபாடுகளை சரி செய்து அனுப்ப திருப்பி அனுப் பப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை 9,899

(vi) 30—11—1981 ஆம் நாளன்று இருந்தவாறு முடிவுறா மல் இருந்த கோரிக்கைகளின் எண்ணிக்கை 4,549

(i) தொகை கொடுத்து தீர்க்கப்பட்ட கோரிக்கைகளுக் காக வழங்கப்பட்ட தொகை 43,97

(ரூபாய் இலட்சத்தில்)

(viii) 30—11—1981 ஆம் நாளன்று இருந்தவாறு மாதந் தோறும் ஓய்வூதியத்தை பெறும் குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை 790

(7) 1976 ஆம் ஆண்டு தொழிலாளர்கள் வைப்பீட்டுத் தொகை இணைந்த ஈட்டுறுதித் திட்டம் :

(i) 31—12—1980 ஆம் நாளன்று இருந்தவாறு முடிக்கப் படாமலிருந்த கோரிக்கைகளின் எண்ணிக்கை 613

(ii) 1981 ஜனவரி முதல் 1981 நவம்பர் வரை வரப் பெற்ற கோரிக்கைகளின் எண்ணிக்கை 3,308

(iii) மொத்தம் 3921

(iv) 1981 ஜனவரி முதல் 1981 நவம்பர் வரையில் தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை 2,041

(v) குறைபாடுகளைச் சரி செய்து அனுப்புமாறு கோரி திருப்பி அனுப்பப்பட்ட உரிமை கோரிக்கைகளின் எண்ணிக்கை 1,232

(vi) 30—11—1981 ஆம் நாளன்றிருந்தவாறு நடவடிக்கை எடுக்காமல் நிலுவையாக இருந்த மனுக்களின் எண்ணிக்கை 648

(vii) தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் தொடர்பாக வழங்கப்பட்ட தொகை — ரூ. 66.13 (இலட்சம்)

(8) முன்பணங்கள் :

(அ) அறிக்கையாண்டில் பின்வரும் நோக்கங்களுக்காக இத்திட்டத்தின் சந்தாதாரர்களுக்கு அவர்களது வருங்கால வைப்புநிதிக் கணக்கில் உள்ள தொகையிலிருந்து திருப்பிச் செலுத்த வேண்டாத முன்பணங்கள் வழங்கப்பட்டன.

நோக்கம்	இனங்களின் எண்ணிக்கை	வழங்கப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்)
(i) வீட்டு மனைகள்/கட்டிடங்கள் வாங்குவதற்காக அல்லது வீடுகள் கட்டுவதற்காக		
(ii) உதவித் தொகையுடன் வீடு கட்டும் திட்டத்தின் கீழ்க் கட்டப்பட்ட குடியிருப்புகளை ஒதுக்குவதற்காக	1,681	82.93
(iii) குறைந்த வருமானமுள்ளவர்களுக்குரிய வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டுவதற்காக		
(iv) 15 நாட்களுக்கும் மேற்பட்டு கதவடைப்பு செய்யப்பட்ட / மூடப்பட்ட நிறுவனங்களின் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட முன்பணங்கள்	851	3.3[illegible]
(v) உறுப்பினர்கள் அல்லது உறுப்பினர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் மருத்துவச் சிகிச்சை தொடர்பாக ஏற்பட்ட செலவுகளுக்காக	493	3.63
(vi) தன்னுடைய திருமணத்திற்காக மகளின், மகனின் சகோதரிகளின் சகோதரர்களின் திருமணங்களுக்காகவும், குழந்தைகளின் உயர்நிலைப் பள்ளி கல்விக்கு மேற்பட்ட படிப்புக்காக	5,567	103.16
(vii) வெள்ளம்/நில நடுக்கம் போன்ற இயல்பு மீறிய கால நிலைகளின் போது ஏற்படக்கூடிய செலவுகளுக்காக	13	0.11
(viii) மின்வெட்டு காரணமாகப் பாதிக்கப்பட்ட நிறுவனங்களின் பணியாளர்களுக்காக	இல்லை	

(9) முக்கிய திருத்தங்கள் :—

(அ) இவ்வாண்டில் 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் நல வருங்கால வைப்புநிதித் திட்டத்தின் கீழ் சில திருத்தங்கள் செய்யப்பட்டன. அவற்றில், பின்வருவனவற்றைப் பற்றிக் குறிப்பிடலாம்:

இத்திட்டத்தின் கீழ், இந்நிதியின் உடல் ஊனமுற்ற தொழிலாளர் சந்தாதாரர் உறுதுணைச் சாதனங்களை வாங்குவதற்காகத் தங்களது ஆறு மாத அடிப்படைச் சம்பளம் மற்றும் அகவிலைப்படிகளுக்கு நிகரான தொகையை அல்லது அவர் செலுத்திய சந்தா தொகை அளவிற்கு நிகரான தொகையை முன் பணமாக மேற்கூறிய நிதியிலிருந்து பெற இயலும் வகையில் புதிய விதித்துறை ஒன்று கொண்டுவரப்பட்டுள்ளது.

(ஆ) 1971 ஆம் ஆண்டு தொழிலாளர் குடும்ப நல ஓய்வூதியத் திட்டத்தில் செய்யப்பட்டுள்ள முக்கிய திருத்தங்களாவன :—( ) இத்திருத்தம் செய்யப்படுவதற்கு முன்னர் குடும்பத்தினருக்குக் கிடைக்கப் பெற்ற குறைந்தளவு ஓய்வூதியம் 40 ரூபாய் ஆகும். ஆனால் 13—1—1981 ஆம் நாளன்று, குறைந்தளவு ஓய்வூதியத்தை 60 ரூபாயாக உயர்த்தி 1971 ஆம் ஆண்டு தொழிலாளர் குடும்ப நல ஓய்வூதியத் திட்டத்தின் 28 ஆம் பாராவின் கீழ் இவ்விதித்துறை திருத்தப்பட்டுள்ளது. இவ்வுயர்வு 1—3—1980 ஆம் நாள் முதல் செயலுக்கு வந்துள்ளது.

(ii) மேலே குறிப்பிட்டது போல மாதாந்திர குறைந்தளவு குடும்ப நல ஓய்வூதியத்தை உயர்த்தும்போது, இறந்து போன உறுப்பினரின் குடும்பத்தினர் ஆயுள் காப்புறுதித் தொகை 1,000 ரூபாயைப் பெறுவர் என்று முன்னர் வகை செய்யப்பட்டதற்கு மாறாக, ஒட்டு மொத்தமாக 2,000 ரூபாயைப் பெற இயலும் வகையில் 1971 ஆம் ஆண்டு தொழிலாளர் குடும்பநல ஓய்வூதியத் திட்டத்தின் 31 ஆம் பாராவும் திருத்தப்பட்டுள்ளது.

இவ்விரு திருத்தங்களின் மூலம் இறந்துபோனவர்களின் குடும்பங்களுக்கு உயர்த்தப்பட்ட குறைந்த அளவு ஓய்வூதியமும் ஒரு மொத்தத் தொகையும் கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது.

5.2. தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டம் :

(1) 1955 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வரும் தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டம், இதுவரையில் 50 மையங்களில் செயற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாண்டில், இத்திட்டம் பின்வரும் புதிய பகுதிகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இத்திட்டத்தின் கீழ் மேலும் 6,200 தொழிலாளர்கள் வருகின்றனர்.

(அ) சிவகாசி சுற்றுப்புறப் பகுதிகள்.

(ஆ) சேலம் மாவட்டம் திருச்செங்கோடு வட்டத்தில் உள்ள குமாரபாளையம்.

(இ) திருச்சி மாவட்டத்தில் உள்ள திருவெறும்பூர் மற்றும் வாக்குடி.

(2) மேற்சொன்ன நீட்டிப்பு காரணமாக தமிழ்நாட்டில் ஈட்டுறுதி செய்யப்பட்டவர்கள், பயனடைவோர் ஆகியோரின் மொத்த எண்ணிக்கை உயர்ந்துள்ளது. இது தொடர்பான விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

(i) தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை	4,81,200
(ii) ஈட்டுறுதி செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை	5,18,200

(iii) இதில் அடங்கிய குடும்பங்களின் எண்ணிக்கை	5,18,200
(vi) பயனடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை	20,01,000

(3) மின்சக்தியைப் பயன்படுத்தக்கூடியதும் 20-க்கும் அதற்கு மேற்பட்டும் பணியாளர்களை கொண்டதுமான தொழிற்சாலைகளுக்குப் பொருந்தக்கூடிய இத்திட்டத்தின்கீழ், பின்வரும் உதவிகளுக்கு வகை செய்யப்பட்டுள்ளது :—

(i) மருத்துவ உதவி (மருந்துப் பொருட்களாக வழங்கப்படுதல்).

(ii) நோய்க்கால உதவி

(iii) பேறுகால உதவி

(iv) ஊனமையுற்றோருக்கு உதவி

(v) சார்ந்துள்ளவர்கள் நல உதவி

(vi) இறுதிச் சடங்குகளுக்குரிய செலவுத் தொகை பணமாக

(4) ஆய்வுக்கால அளவில் தொழிலாளர் நல ஈட்டுறுதி மருந்தகங்கள் பின்வரும் இடங்களில் செயல்படத் தொடங்கியுள்ளன :—

(i) திருத்தங்கல்—இராமநாதபுரம் மாவட்டம், சிவகாசி சுற்றுப்புறப் பகுதிகளுக்காக.

(ii) குமாரபாளையம், சேலம் மாவட்டம்.

(iii) திருவெறும்பூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

(5) ஆய்வாண்டில் பின்வரும் புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன—

(i) தற்போது அம்பத்தூரிலுள்ள தொழிலாளர் நல ஈட்டுறுதி நிலையான மருந்தகத்தை இரண்டாகப் பிரித்து ஒன்று அம்பத்தூரிலும் மற்றொன்று கொரட்டூரிலும் அமைக்கப்பட்டுள்ளன.

(ii) கோயம்புத்தூரில் தற்போதுள்ள நடமாடும் மருந்தகத்தை எடுத்துவிட்டு, சின்னியம்பாளையத்தில் நிலையான தொழிலாளர் நல ஈட்டுறுதி மருந்தகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(iii) கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த வெள்ளலூரில் கே. என். ஆர். பஞ்சாலைக்கு தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டத்தை நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்தொழிலாளர்கள் வெள்ளலூரிலுள்ள தொழிலாளர் நல ஈட்டுறுதி மருந்தகத்தில் சிகிச்சை பெறுவர்.

[1982 மார்ச் 27

(vi) தற்போது நாகர்கோயிலிலுள்ள தொழிலாளர் நல ஈட்டுறுதி மருந்தகத்தோடு தொழிலாளர்களை இணைப்பதன் மூலம் கன்னியாகுமரி சுற்றுப்பகுதிகளுக்கு இத்திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

(v) ஆத்தூரில் நிலையான மருந்தகம் ஒன்றைத் தொடங்குவதன் மூலம் ஆறுமுகனேரிக்கு இத்திட்டத்தை நீட்டித்தல்.

(iv) சேலம் சுற்றுப்புறப்பகுதியில் நிலையான மருந்தகம் ஒன்றைத் தொடங்குவதன் மூலம் சேலம் சுற்றுப்புறப் பகுதிக்கு இத்திட்டத்தை நீட்டித்தல்

(vii) கோயம்புத்தூர் தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவ மனையில் இதய நோய் மருத்துவப் பிரிவு (Intensive Coronary care unit) ஒன்றைத் தொடங்குதல்.

(6) பெருந் திட்டத்தின் கீழ் பின்வரும் பகுதிகளில் தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டத்தை நீட்டிக்கவும் கருதப்பட்டுள்ளது.

(i) செங்கற்பட்டு மாவட்டத்தில் திருநின்றவூர், தருவள்ளூர் காக்களூர் ஆகிய இடங்களிலும் அவற்றின் சுற்றுப்புறப் பகுதிகளிலும் உள்ள தொழிலாளர்களுக்கு நீட்டித்தல்.

(ii) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மானாமதுரைக்கும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளுக்கும் நீட்டித்தல்.

(iii) திருநெல்வேலி மாவட்டத்தில், பேட்டையில் நிலையான மருந்தகம் ஒன்றைத் தொடங்குவதன் மூலம் வீரநல்லூருக்கு நீட்டித்தல்.

(iv) நீலகிரி மாவட்டத்தில் உதகமண்டலத்திற்கும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளுக்கும் நீட்டித்தல்.

(v) வட ஆற்காடு மாவட்டத்தில் அரியூருக்கு நீட்டித்தல்.

(vi) தருமபுரி மாவட்டத்தில் ஒசூருக்கு நீட்டித்தல்.

(7) மாநிலத்தில் உள்ள 5 தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவ மனைகள் மற்றும் 110 தொழிலாளர் நல ஈட்டுறுதி நிலையான மருந்தகங்களில், 5 தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவ மனைகளும், 45 தொழிலாளர் நல ஈட்டுறுதி மருந்தகங்களும் அரசுக்கு அல்லது தொழிலாளர் நல ஈட்டுறுதிக் கழகத்திற்குச் சொந்தமான கட்டிடங்களில் செயல்படுகின்றன. எஞ்சியுள்ளவை தனியார் வாடகைக் கட்டிடங்களில் செயல்படுகின்றன.

1982 மார்ச் 27]

(8) இரண்டு டாக்டர்கள் மற்றும் அதற்கு மேற்பட்ட டாக்டர்களைக் கொண்டுள்ளவையும் தற்போது வாடகைக் கட்டிடங்களில் செயற்படுபவையுமான மருந்தகங்களுக்கு, 45 இடங்களில் சொந்தக் கட்டிடங்களைக் கட்ட தொழிலாளர் நல ஈட்டுறுதிக் கழகம் ஒப்புக் கொண்டுள்ளது. இந்த 45 இடங்களில் மருந்தகக் கட்டிடங்களைக் கட்டுவதற்குரிய நிலத்தை கையகப்படுத்தும் பணி பல்வேறு நிலைகளில் உள்ளது.

(9) பின்வரும் இடங்களில் மேலும் நான்கு (50 படுக்கைகளைக் கொண்ட) தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவ மனைகள் கட்டவும் கருதப்பட்டுள்ளது—

(i) சேலம்.

(ii) மேட்டூர் அணை.

(iii) திருச்சிராப்பள்ளி.

(vi) சிவகாசி.

இதற்குத் தேவையான நிலங்களைக் கையகப்படுத்தும் பணி வெவ்வேறு நிலைகளில் நடைபெற்று வருகிறது.

(10) சந்தா வசூல்.—1981-82 ஆம் ஆண்டில் (31—1—1982 வரை) தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் சந்தாத் தொகைகள் தொடர்பாக ரூ. 1,335.43 இலட்சம் பெறப்பட்டது

(11) பண உதவி.—ஈட்டுறுதி செய்து கொண்டவர்களுக்கு (31—1—1982 வரை) ரூ. 938 இலட்சம் பண உதவியாகக் கொடுக்கப்பட்டது.

5.3. தொழிற்சாலை விபத்துக்கள் துயர் துடைப்பு நிதி :

(1) கல் உடைத்தல், வெடி வைத்துத் தகர்த்தல், கிணறு தோண்டுதல் அல்லது அவை போன்ற ஆபத்தான தொழில்களில் பணிபுரியும்போது காயம் ஏற்பட்டு அதனால் நிலையாகப் பணியாற்ற இயலாமற்போன தொழிலாளர்களுக்கு அல்லது மரணமடைந்த தொழிலாளர்களைச் சார்ந்து இருப்பவர்களுக்கு உதவியளிக்கும் பொருட்டு, ஆண்டொன்றுக்கு 15,000 ரூபாய் தொடர் மானியத்துடன் அரசால் இந்நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. 1923 ஆம் ஆண்டு தொழிலாளர்கள் இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் இழப்பீடு வழங்குவதற்குத் தொழிலதிபர்களிடம் நிதிவசதி இல்லாதிருந்தால், அல்லது வேறு காரணங்களை முன்னிட்டு தொழிலாளர்கள் அல்லது அவர்களைச் சார்ந்துள்ளோர் அச்சட்டத்தின்கீழ் இழப்பீட்டுத் தொகை பெற இயலாது போனால் இந்நிதியிலிருந்து உதவித் தொகை அளிக்கப்படும். இழப்பீடு வழங்கப் பேறுயான

நிதி வசதி இல்லாத சிறிய ஒப்பந்தக்காரர்களிடம் பணிபுரியும் தொழிலாளர்கள் விபத்தில் மரணமடைந்தால் அல்லது காயமடைந்தால் அவர்களும் இந்நிதியிலிருந்து உதவித்தொகை பெறுவர்.

(2) 1981 ஆம் ஆண்டில் தொழிலாளர் ஐவருக்கு இந்நிதியிலிருந்து துயர் தணிப்புத் தொகையாக ரூ. 10,000 வழங்கப்பட்டது.

அத்தியாயம் 6.

தொழிலாளர் நலப்பணிகள்.

6.1. அரசு உதவி பெறும் தொழிலாளர் வீட்டுவசதித் திட்டம் (தனியார் தொழிலதிபர்கள் திட்டங்கள்)

(1) 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் வருகின்ற தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்ட இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி அளிக்கப்படுகிறது.

(2) ஆய்வுக்கால அளவில் புதிய திட்டம் எதற்கும் அனுமதி வழங்கப்படவில்லை. ஏற்கெனவே அனுமதி வழங்கப்பட்ட திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருவது குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், படாளம்.	—40 வீடுகள் கட்டும் பணி II ஆம் கட்டம் நிதியாண்டின் இறுதிக்கு முன்னர் முடிந்து விடும் என எதிர்பார்க்கப்படுகிறது.
சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை மோகனூர்.	— 72 வீடுகள் கட்டுதவற்குரிய திட்டம் இவ்வாண்டின் இறுதிக்கு முன்னர் நிறைவு பெற்றுவிடும்.
ஸ்ரீ இராமலிங்கா ஆலை லிமிடெட் அருப்புக்கோட்டை.	—அரசு அனுமதித்துள்ள 140 வீடுகள் கட்டும் பணி தரை மட்டம் வரையில் ((plinth — Level)) முடிந்துள்ளது.

(3) இத்திட்டம் தொடக்கத்திலிருந்து 31—12—1981 ஆம் நாள் வரையில் இத்திட்டத்தின்கீழ் தனியார் தொழிலதிபர்கள் கட்டியுள்ள வீடுகளின் மொத்த எண்ணிக்கை 1,078 ஆகும். இது தொடர்பாக இதுவரையில் கடன் வகையில் ரூ. 30,10 இலட்சமும் உதவித் தொகை வகையில் ரூபாய் 13.93 இலட்சமும் செலவு செய்யப்பட்டுள்ளது.

6.2. மலைத் தோட்டத் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டம் :

(1) இத்திட்டம் மலைத் தோட்டத் தொழிலதிபர்கள் தங்களது தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டித் தருவதற்கு உதவி புரிவதை நோக்கமாகக் கொண்டதாகும். ஓர் அறை கொண்ட குடியிருப்புகள் ஒவ்வொன்றும் 4,000 ரூபாய் உச்சவரம்புச் செலவில் (1979 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்டவாறு) கட்டப்படுகின்றன. அத்தொகையில் 50 சதவிகிதம் கடனாகவும் 37.5 சதவிகிதம் உதவித் தொகையாகவும் வழங்கப்படுகிறது. அறிக்கை ஆண்டில் பின்வரும் புதிய திட்டங்களுக்கு அரசு அனுமதியளித்துள்ளது.

	வீடுகளின் எண்ணிக்கை	கடன் (ரூபாய்)	உதவித் தொகை (ரூபாய்)
(அ) ப்ருக் லாண்ட்ஸ் எஸ்டேட் குன்னூர் . .	4	8,000	6,000
(ஆ) வாட்டர் பால்ஸ் எஸ்டேட் (மேற்கு) வால்பறை.	24	48,000	36,000

(2) இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து இதுவரை 715 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 31—12—1981 ஆம் நாள் வரையில் ஏற்பட்டுள்ள செலவு முறையே கடன் வகையில் ரூபாய் 9 71 இலட்சமும் உதவித் தொகை வகையில் ரூபாய் 6.30 இலட்சமும் ஆகும்.

6.3. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் :

(1) தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் 1973 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. தொழிலாளர் நல அமைச்சர் இவ்வாரியத்தின் தலைவராவார். இவ்வாரியம் தொழிலாளர்களின் நலனை முன்னிட்டு நிறைய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இவ்வாரியம், தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் நலனை முன்னிட்டு விரைவில் மேலும் பல நல்ல திட்டங்களைச் செயற்படுத்தவும் எண்ணியுள்ளது. அவற்றின் விவரங்கள் வருமாறு :—

(2) தொழிலாளர் நல நிலையங்கள்.

ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள 14 நிலையங்களோடு இவ்வாண்டில் பின்வரும் இடங்களில் நிலையங்கள் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன :—

(1) மேட்டூர் அணை.
(2) டால்மியாபுரம்.
(3) திருச்சிராப்பள்ளி.

(4) தாராபுரம்.

(5) விக்கிரமசிங்கபுரம்.

(6) தூத்துக்குடி.

(7) பெரியநாயக்கன் பாளையம்.

(8) தஞ்சாவூர்.

(3) தொழிற்சங்கத் தலைவர்கள், தொழிலாளர்களின் பிரதிநிதிகள் ஆகியோருக்கென்று சென்னை தேனாம்பேட்டையில் உள்ள தங்கும் இல்லம் (ஜீவா இல்லம்).

சென்னைக்கு அலுவல் பற்றி வரும் தொழிற் சங்கப் பிரதிநிதிகளுக்கு தங்குமிடவசதி அளிக்கும் பொருட்டு, தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம், ரூபாய் 10 இலட்சம் செலவில் சென்னை, தேனாம்பேட்டையில் 'ஜீவா இல்லம்" என்ற கட்டிடத்தைக் கட்டியுள்ளது. இதன்பொருட்டு 2 இலட்சம் ரூபாய் மானியமும் இலவசமாக 5 கிரவுண்டு 1630 சதுர அடி நிலமும் தமிழக அரசு வழங்கியுள்ளது. கிரவுண்டு ஒன்று 76,300 ரூபாய் விதம் இந்நிலத்தின் மொத்த மதிப்பு 3,81,500 ரூபாயாகும். இக்கட்டிடம் 18—11—1981 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சரால் திறந்து வைக்கப்பட்டது.

(4) இவ்வாரியம் செயற்படுத்தும் பிற தொழிலாளர் நலத் திட்டங்கள், இவற்றின் மூலம் பயனடைந்தோரின் எண்ணிக்கை ஆகியவை பற்றிய விவரம் வருமாறு :—

(அ) தையல் பயிற்சி நிலையங்கள்—

1. இத்தையல் பயிற்சி நிலையங்களின் மொத்த எண்ணிக்கை 23

2. பயிற்சி பெறுவோரின் மொத்த எண்ணிக்கை 680

(ஆ) நர்சரிப்பள்ளிகள்—

1. நர்சரிப்பள்ளிகளின் எண்ணிக்கை .. 22

2. பயனடைந்த குழந்தைகளின் மொத்த எண்ணிக்கை 598

(இ) குழந்தை நலக் காப்பகங்கள்.—

1. குழந்தை நலக் காப்பகங்களின் மொத்த எண்ணிக்கை 6

2. பயனடைந்த குழந்தைகளின் மொத்த எண்ணிக்கை 248

(ஈ) படிப்பகங்கள்.—

1. படிப்பகங்களின் மொத்த எண்ணிக்கை .. 4

2. பயனடைந்த தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை 36,600

(5) பிற திட்டங்கள்—

	பயனடைந்தவர்களின் எண்ணிக்கை	தொகை ரூ.
(அ) தொழிலாளர்கள் மூக்குக் கண்ணாடி வாங்கியதற்குரிய செலவைத் திருப்பிக் கொடுத்தல் ..	878	370,09
(ஆ) தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு தட்டச்சு, சுருக்கெழுத்து ஆகியவற்றைக் கற்றுக்கொள்வதற்குரிய கட்டணத்தையும், தேர்வுக் கட்டணத்தையும் அளித்தல் ..	301	2,186
(இ) "பிளஸ் 2" படிப்பிற்குரிய படிப்புதவித் தொகை ..	12	6,000
(ஈ) பொறியியல் படிப்பதற்குரிய படிப்புதவித் தொகை ..	6	6,000
(உ) எம்.பி.பி.எஸ். படிப்பிற்குரிய படிப்புதவித் தொகை	2	2,000
(ஊ) பொறியியலில் பட்டப் படிப்பிற்குரிய படிப்புதவித் தொகை ..	12	7,200

	பயனடைந்தவர்களின் எண்ணிக்கை	தொகை ரூ.
(எ) தொழிற் பயிற்சி நிறுவனங்களில் படிக்கும் மாணவர்களுக்குரிய படிப்புதவித் தொகை ..	6	1,800
(ஏ) புத்தக வங்கி ..	1,648	15,251
(ஐ) இறுதிச் சடங்கிற்குரிய செலவு ...	151	30,200

(6) தொழிலாளர் நல நிதிக்கென்று மாநில அரசு வழங்கும் தொகை :

தொடக்கத்தில் அரசு வழங்கிய ரூபாய் 5 இலட்சத்துடன், இத்தொழிலாளர் நல நிதி ஏற்படுத்தப்பட்டது. தொழிற் சங்கத் தலைவர்களுக்கென்று கட்டப் பட்ட தங்குமில்லத்தை (ஜீவா இல்லம்) 18—11—1981 அன்று திறந்து வைத்து உரையாற்றியபோது, வருங்காலத்தில் அரசு, தொழிலாளர் ஒரு வருக்கு ஆண்டொன்றுக்கு இரண்டு ரூபாய் வீதம் வழங்குமென்று, மாண்பு மிகு முதலமைச்சர் அறிவித்தார். இதன் அடிப்படையில் அரசு வழங்க இருக்கும் தொகை ஆண்டு ஒன்றிற்குச் சுமார் ரூபாய் 14 இலட்சமாகும்.

6.4. சட்ட உதவி :

(1) உயர்நீதி மன்றத்தில் நடைபெறும் சட்ட நடவடிக்கைகளைப் பொறுத்த மட்டில், தொழிற்சங்கங்களின் சட்ட நடைமுறை செலவுகளுக்காக, நிதி உதவி அளிக்கும் பொருட்டு அரசு திட்டமொன்றுக்கு ஏற்பளித்துள்ளது. இத் திட்டத்தின்படி, சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு, 'ரிட்' மனு ஒன்றுக்கு 150 ரூபாய் வழங்கப்படும். சட்ட நடவடிக்கைகளுக்காக நிதி உதவி தேவைப்படும் போதெல்லாம், அதனை வழங்க தொழிலாளர் நல ஆணையாளருக்கு அதிகா மளிக்கப்பட்டுள்ளது.

(2) வசதியில்லாத, நிதி உதவி பெறத் தகுதியுடைய தொழிலாளர்களுக்கும் அல்லது அவர்களைச் சார்ந்துள்ளவர்கட்கும், இழப்பீட்டுறுதிச் சட்டத்தின் கீழ் இழப்பீட்டுத் தொகை வழங்குமாறு கோருகின்றவர்களுக்கு அரசுச் செலவில் சட்ட உதவியளிக்கும் பொருட்டு இந்த அரசு, ஆண்டொன்றுக்கு 1,000 ரூபாய்க்கு வகை செய்துள்ளது. தொழிலாளர்கள் இழப்பீட்டுறுதிக் கூடுதல் ஆணையாளரின் ஆணைகளை எதிர்த்து, நிருவாகம் மேல் முறையீடு செய்கையில் விபத்தினால் காயமுற்ற தொழிலாளர்கள், உயர் நீதிமன்றத்தில், தங்கள் தரப்பை எடுத்துரைத்து வழக்காடுவதற்காகச் சட்ட உதவி பெறுவதற் குத் தகுதியுடையோராவர். அத்தகைய சட்ட உதவி தேடும் தொழிலாளர்

கள் இழப்பீட்டுறுதி கூடுதல் ஆணையாளரால் அவர்கள் தொடர்ந்த வழக்கு களில் இழப்பீடு வழங்கப்பட்டவர்களாக இருக்க வேண்டும். இந்தத் திட்டத் தின் கீழ் அறிக்கை ஆண்டில், 3 கோரிக்கைகள் வரப்பெற்று 150 ரூபாய் வழங்கப்பட்டது.

6.5. தொழிலாளருக்குரிய சட்ட ஆலோசனைக் குழுக்கள் :

(1) சென்னையில் ஒன்றும், கோயம்புத்தூரில் ஒன்றும், மதுரையில் ஒன்று மாக மொத்தம் மூன்று சட்ட ஆலோசனைக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. அவை, ஓய்வு பெற்ற நீதித்துறை அதிகாரிகளாலும், ஓய்வு பெற்ற தொழிலாளர் நல அதிகாரிகளாலும், நிருவகிக்கப்பட்டு வருகின்றன. போதிய வசதியற்ற தொழிலாளர்களுக்கு சட்ட உதவி அளிப்பதற்கென்று திட்டமொன்றைத் தயாரிப்பது பற்றிய பொதுப்பிரச்சினை குறித்து ஆய்வு செய்யும் பொருட்டு, அமைக்கப்பட்ட தனி நபர் குழு அளித்த பரிந்துரை களின் பேரில், அரசு, இக்குழுக்களை அமைத்துள்ளது. இக்குழுக்கள், பணி யாளர்களின் முறையீடுகளை, பரிவு உணர்வுடன் அணுகி, அவர்களுடைய குறைகளை நிவர்த்தி செய்வதற்குப் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்தும் பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் உதவி பெறுவதற்கு அணுக வேண்டிய அமைப்புகள் குறித்தும் அவர்களுக்கு ஆலோசனை கூறுகின்றன.

(2) இக்குழுக்கள், 1981 ஆம் ஆண்டில் 384 முறையீடுகளை முடிவு செய்தன.

6.6. தமிழ்நாடு தொழில் சத்துணவுத் திட்டம் :

(1) கேர் (CARE) நிறுவன உதவியுடன் தொழில் சத்துணவுத் திட்டம் இம்மாநிலத்தில் தொழிலாளர்களின் நலனுக்காகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொழிலாளர்க் குடும்பங்களிலுள்ள சிறார்கள், கருவுற்ற தாய் மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோர் இத்திட்டத்தின் மூலம் பயனடை கின்றனர். இத்திட்டத்தின் கீழ் தற்போது தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் நல நிலையங்கள் உட்பட 117 பிரிவுகள் வாயிலாக 34,387 பேர் பயனடைந்து வருகின்றனர்.

(2) தொழில் சத்துணவுத் திட்டத்தோடு ஒருங்கிணைந்த சுகாதார விரிவுப் பணித் திட்டமும் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இதனால், சத்துணவு பெறுவதோடு மருத்துவ சிகிச்சையையும் அவர்கள் பெற இயலும்.

6.7. தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம், சென்னை :

(1) சிறந்த தொழிற்சங்க அமைப்பை மேம்படுத்தவும், நிருவாக வாயில்களை வளர்க்கவும், திறம் பெற்ற தொழிலாளர் நல நிருவாகப் பணிக்கு வகை செய்யவும் தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் செயல்படுகிறது.

(2) இந்நிலையத்தால் இதுவரையில் 130 வகுப்புகள்-கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. இவற்றில் 3,306 பேர் கலந்து கொண்டனர். 1981 ஆம் ஆண்டில் நடத்திய பல்வேறு வகுப்புகள்-கருத்தரங்குகள் குறித்த விவரங்கள் வருமாறு :—

தொடர் எண்ணும் பயிற்சி வகுப்பின் பெயரும்.	பயிற்சிகால அளவு முதல்	வரை	பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)
(i) 11ஆம் தொழிற்சங்கத் தலைமைப் பயிற்சித் திட்டம் ..	30–3–81	8–5–81	27
(ii) 12 ஆம் தொழிற் சங்கத் தலைமைப் பயிற்சித் திட்டம்	7–12–81	18–1–81	29
துறை அலுவலர்களுக்கு நினைவுகூர் பயிற்சி வகுப்பு.—			
(iii) தொழிலாளர் நலன் வேலைவாய்ப்புத்துறை அலுவலர்களுக்கும் பிரிவு அலுவலர்களுக்கும் 11 ஆம் நினைவுகூர் பயிற்சி வகுப்பு	2–2–81	28–2–81	9
(iv) தொழிலாளர் நலன் வேலை வாய்ப்புத் துறை அலுவலர்களுக்கும் பிரிவு அலுவலர்களுக்கும் 12 ஆம் நினைவுகூர் பயிற்சி வகுப்பு	6–7–81	1–8–81	9
வனத்துறை அலுவலர்களுக்கு பயிற்சி வகுப்பு.—			
(v) நாகர் கோயிலில் வனத்துறை அலுவலர்களுக்கு முதல் பயிற்சி வகுப்பு	27–4–81	30–4–81	1[illegible]

(1)	(2)	(3)	(4)
(vi) மதுரையில் வனத்துறை அலுவலர்களுக்கு இரண்டாம் பயிற்சி வகுப்பு	27–5–81	30–5–81	10
(vii) மதுரையில் வனத்துறை அலுவலர்களுக்கு மூன்றாம் பயிற்சி வகுப்புகள்	24–6–81	27–6–81	9
தொழில் சார்ந்த சுகாதாரம், பாதுகாப்பு நலன் பற்றிய திட்டம்			
(viii) சென்னையில் தனியார் பொது நிறுவனங்களின் நிர்வாக அதிகாரிகளுக்கும் மேற்பார்வையாளர்களுக்கும் தொழில் சார்ந்த சுகாதாரம் பாதுகாப்பு, நலன் குறித்த முதல் சிறப்புப் பயிற்சித் திட்டம்	7–1–81	8–1–81	22
(ix) சென்னையில் தொழிலாளர்களுக்கு தொழில் சார்ந்த சுகாதாரம் பாதுகாப்பு நலன் குறித்த தமிழில் இரண்டாம் பயிற்சி திட்டம் ..	30–7–81	31–7–81	33
(x) சென்னையில் நிருவாக அதிகாரிகளுக்கும் மேற்பார்வையாளர்களுக்கும் தொழில் சார்ந்த சுகாதாரம் பாதுகாப்பு நலன் குறித்து மூன்றாம் சிறப்புப் பயிற்சித் திட்டம் ..	15–10–81	16–10–81	42
(xi) மதுரையில் தொழில் சார்ந்த சுகாதாரம் பாதுகாப்பு நலன் குறித்த நான்காம் சிறப்புப் பயிற்சித் திட்டம் ..	16–12–81	17–12–81	46

(1)	(2)	(3)	(4)
தமிழ்நாடு மின்சார வாரியப் பணியாளர்களுக்கு ஒழுங்கு முறை நடவடிக்கைகளிலும், தொழில் தகராறுகள் சட்டத்திலும், தீவிரப் பயிற்சி.			
(xii) காடாம்பாறையில்	29–1–81	30–1–81	60
(xiii) ஈரோட்டில் ..	23–7–81	24–7–81	60
(xiv) திருநெல்வேலியில்	24–9–81	25–9–81	60
தொழில் கூட்டுறவுச் சங்க அலுவலர்களுக்கு பயிற்சி வகுப்புகள்;			
(xv) சேலத்தில் தொழில் கூட்டுறவுச் சங்க அலுவலர்களுக்கு முதல் மறு பயிற்சி வகுப்பு ..	6–7–81	8–7–81	17
(xvi) தஞ்சாவூரில் கூட்டுறவுச் சங்க அலுவலர்களுக்கு இரண்டாம் மறு பயிற்சி வகுப்பு ..	15–9–81	17–9–81	17
கூட்டுறவுச் சங்கங்கள்—உள்ளாட்சி மன்ற அலுவலர்களுக்கு மறு பயிற்சி வகுப்பு.—			
(xvii) 18 ஆம் பயிற்சி ..	20–1–81	30–1–81	10
(xviii) 19 ஆம் பயிற்சி ..	2–3–81	12–3–81	15
(xix) 20 ஆம் பயிற்சி ..	20–5–81	30–5–81	18
(xx) 21 ஆம் பயிற்சி ..	17–8–81	27–8–81	19
(xxi) 22 ஆம் பயிற்சி ..	2–11–81	12–11–81	19
பொது, தனியார் நிறுவனங்களின் தொழிலாளர் நல அலுவலர்களுக்கும் பணியாளரமைப்பு அலுவலர்களுக்கும் சிறப்புப் பயிற்சித் திட்டம்—			
(xxii) மதுரையில் முதல் பயிற்சி.	11–2–81	13–2–81	2[illegible]

(1)	(2)	(3)	(4)
(xxiii) திருச்சியில் இரண்டாம் பயிற்சி	19-3-81	21-3-81	42
(xxiv) கோயம்புத்தூரில் மூன்றாம் பயிற்சி.	29–9–81	1–10–81	49
(xxv) திருச்சியில் தமிழ்நாடு போக்குவரத்துக் கழக அலுவலர்களுக்குச் சிறப்புப் பயிற்சித் திட்டம்	21–1–81	23-1-81	32
(xxvi) தகுதிகாண் பருவ நிலை இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களுக்குப் பயிற்சி ..	21–4–81	(ஒரு நாள் மட்டும்)	9
(xxvii) சென்னையில் தொழிற்சாலை தொழிலாளர்களுக்கு வாழ்க்கைத்தரத் திட்டம் ..	1–6–81	6–6–81	18
(xxviii) சென்னையில் தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையத்திற்காக சர்க்கரைத் தொழில் பணியாளர்களின் பணிகளும் தொழில் உறவுகளும் பற்றிய வகுப்பு ..	5–5–81	7–8–81	40
(xxix) பொதுத்துறை நிறுவன அலுவலர்களுக்கு "ஒழுங்குமுறை நடவடிக்கை நிருவாகம்" பற்றி மதுரை பாண்டியன் ஓட்டலில் தனிப் பயிற்சித் திட்டம் ..	25–11–81	27–11–81	27

(XXX) சென்னையில் இந்திய அலுவலர்கள் சங்கத்தின ஒத்துழைப்புடன் "தமிழ்நாட்டில் மாறி வரும் தொழில் உறவுகள்" பற்றிய கருத்தரங்கு ..	13–12–81	14–12–81	103

(3) தொழிலாளர் நிருவாகம் பற்றிய பகுதி நேரப் பட்டப் படிப்பு.—இந்நிறுவனம் தொழிலாளர் நிருவாகம் பற்றிய பட்ட மேற்படிப்பு வகுப்பு ஒன்றை நடத்துகிறது. இதைத் தொழிலாளர் நல அமைச்சர் (15-5-1979 அன்று தொடங்கி வைத்தார். 1-7-1981 அன்று தொழிலாளர் நல அமைச்சர் மூன்றாம் பட்ட மேற்படிப்பு வகுப்பைத் தொடங்கி வைத்தார்) தற்போது இதில் 40 மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

(4) தமிழில் தொழிலாளர் நலம் பற்றிய திங்கள் இதழ்—இந்நிறுவனம் "உழைப்பவர் உலகம்" என்னும் இதழைத் திங்கள்தோறும் தமிழில் வெளியிட்டு வருகிறது. இவ்விதழ் எளிய தமிழில் வெளியிடப்படுகிறது. தொழிலாளர்கள் நீதிமன்றங்கள், உயர்நீதிமன்றங்கள், தலைமை நீதி மன்றம் அளித்த தொழிலாளர் பிரச்சினை பற்றிய முக்கியமான தீர்ப்புகள் இதில் வெளியிடப்படுகின்றன. தொழில், தொழிலாளர் நலன் பற்றி முக்கிய அரசு அறிவிக்கைகளும் இவ்விதழில் வெளியிடப்படுகின்றன. வாசகர்கள் கேட்கும் வினாக்களுக்கும் தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் எழும் ஐயங்கள், அவர்கள் உரிமைகள் மற்றும் சலுகைகள் பற்றி தெளிவுபடுத்திடவும் "வினா-விடை" என்ற பகுதியும் இதில் இடம் பெறுகின்றது, இப்பகுதியும், "வாசகர் பக்கம்" என்னும் பகுதியும் பொதுமக்களிடையே நல்ல வரவேற்பு பெற்றுள்ளது என்பது "உழைப்பவர் உலகம்" இதழைப் படிப்பவர்கள் குறித்து இந்நிறுவனத்தின் ஆராய்ச்சிப் பிரிவு நடத்திய ஆய்விலிருந்து தெரிய வந்தது. சந்தாதாரர்களின் எண்ணிக்கை 1981 ஏப்ரலில் 6,800 ஆக இருந்தது. 1981 டிசம்பரில் 10,000 ஆக உயர்ந்துள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

(5) ஆராய்ச்சிப் பிரிவு.—பல்வேறு தொழிற்சாலைகளில் ஏற்படும்தொழில் தகராறுகள், வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள், தொழிலாளர் கடன் பட்டுள்ளமை, தொழில் விபத்துக்கள், பணிக்கு வாராமை பற்றிய பிரச்சினை, சங்க அமைப்பு இல்லாத தொழிலாளர்களின் அடிப்படைத் தேவைகள், தொழிலாளர்களையும், தொழிலையும் பாதிக்கும் இது போன்ற பிற கூறுகள் ஆகியவற்றை கண்டறிவதற்காக இந்நிறுவனத்தில் ஓர் ஆராய்ச்சிப் பிரிவை அமைக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. தொழிலாளர் நலனையும் தொழில் வளர்ச்சியையும் பாதிக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் இந்த ஆய்வு

பெரிதும் உதவியாக இருக்கும், 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின்படி தொழிலாளர் நீதி மன்றம் மற்றும் நடுவர் மன்றங்களின் செயல் திறன் பற்றியும் "உழைப்பவர் உலகம்" இதழினைப் படிப்பதால் தொழிலாளருக்குக் கிடைக்கும் நன்மை பற்றியும் ஆய்வு ஒன்றை இப்பிரிவு நடத்தியுள்ளது.

அத்தியாயம்-7

எடைகள்-அளவைகள் குறித்த சட்டம்.

7.1. 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு எடைகள்-அளவைகள் (செயற்படுத்தல்) சட்டத்தின் விதித்துறைகள், எடை-அளவைகள் கட்டுப்பாட்டு அதிகாரியின் நிருவாகப் பொறுப்பின் கீழ் தொழிலாளர் நல ஆய்வகத்தால் செயற்படுத்தப் படுகின்றன. தொழிலாளர் நலத் துறை ஆணையாளர் (ஆய்வுகள்), எடைகள்-அளவைகள் கட்டுப்பாட்டு அதிகாரியாகப் பணியாற்றுகிறார்.

1981 ஆம் ஆண்டில், எடைகள்-அளவைகள் சட்டத்தின் விதிமுறைகளையும், விதிகளையும் மீறியதற்காக 18,643 வழக்குகள் தொடரப்பட்டன. முன்னர் முடிவு செய்யப்படாமலிருந்த வழக்குகள் உட்பட 16,605 வழக்குகளில், சம்பந்தப்பட்டவர்களுக்கு தண்டனையளிக்கப்பட்டது. ரூ. 3,33,910 அபராதம் விதிக்கப்பட்டது. 1981இல் முத்திரைக் கட்டணமாக ரூபாய் 51,75,638.79 வசூலிக்கப்பட்டன

7.2 1981 ஆம் ஆண்டில் சென்னை, எடைகள்-அளவைகள் கட்டுப்பாட்டு அதிகாரி 552 விற்பனையாளர்கள், 240 பழுது பார்ப்பவர்கள், 108 தயாரிப்பாளர்கள் ஆகியோருக்கு உரிமங்கள் வழங்கினார். 1980, 1981 ஆம் ஆண்டுகளில் உரிமங்கள் வழங்கப்பட்டவர்களின் விவரங்கள் வருமாறு :—

ஆண்டு.	பழுதுபார்ப்பவர்கள்.	விற்பனையாளர்கள்.	தயாரிப்பாளர்கள்.
1980 ..	304	521	106
1981 ..	240	552	108

7.3. அறிக்கையாண்டில், விற்பனையாளர்கள், தயாரிப்பாளர்கள், பழுது பார்ப்பவர்கள் ஆகியோரிடமிருந்து உரிமக் கட்டணமாக ரூ. 1,57,859.50 வசூலிக்கப்பட்டது.

7.4. 1981 இல் மாநிலம் முழுவதிலும் 2,392 கூட்டுச் சோதனைகள் நடத்தப்பட்டன. 73,618 நிறுவனங்கள் சோதனை செய்யப்பட்டன. 7,431 வணிகர்களின் மீது வழக்குத் தொடரப்பட்டது. கிராமங்களில் எடைகள்-அளவைகள் சட்டத்தையும், விதிகளையும் தீவிரமாகச் செயற்படுத்துவதற்கு, சார்நிலை அதிகாரிகள் கிராமங்களில் முறையான, வழக்கமான ஆய்வுகளையும் செய்தனர். 1981 ஆம் ஆண்டில் அவர்கள் 9,337 கிராமங்களில் ஏறத்தாழ 62,353 கடைகளை சோதனையிட்டனர்.

7.5. உணவுப்பொருள் பங்கீட்டுக் கடைகளிலும், ஏனைய பங்கீட்டு முகவாண்மைப்புகளிலும் பொருள்கள், எடைக்குறைவாகத் தரப்படுவதைக் கண்டுபிடிக்கும் சிறப்பு நடவடிக்கையாக மாநிலம் முழுவதிலும் பல்வேறு நாட்களில்-அதாவது 26-7-1981, 27-7-1981, 5-12-1981 ஆகிய நாட்களில்-உணவுப்பொருள் பங்கீட்டுக் கடைகளில் திடீர் சோதனை நடத்தப்பட்டது. ஆய்வாளர்கள் 458 நிறுவனங்களில் சோதனை செய்தனர். 161 உணவுப் பொருள் பங்கீட்டுக் கடைகளிலும், ஏனைய பங்கீட்டு முகவாண்மைப்புகளிலும் பொருள்களின் எடை குறைவாக இருப்பதைக் கண்டு பிடித்தனர். சட்டத்தை மீறியதற்காக சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய தண்டனை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

7.6. பெட்ரோல் பங்க்குகளில் அளவு குறைவாகப் பெட்ரோல் விற்பனையை செய்யப்படுவதைக் கண்டுபிடிக்கும் சிறப்பு நடவடிக்கைகளில் 24-6-1981 அன்று இத்துறை ஆய்வாளர்கள், இம்மாநிலம் முழுவதிலுமுள்ள பெட்ரோல் பங்க்கு களைத் திடீர் சோதனை நடத்தினர். அன்று ஆய்வாளர்கள் 351 பெட்ரோல் பங்க்குகளில் சோதனை நடத்தி, 60 பெட்ரோல் பங்க்குகளில் அளவு குறைவாக பெட்ரோல் விற்பனையாவதைக் கண்டுபிடித்தனர். சம்பந்தப்பட்ட பெட்ரோல், டீசல் விற்பனையாளர்கள் மீது உரிய தண்டனை நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

7.7 14—10—1981 அன்று இத்துறை ஆய்வாளர்கள் இம்மாநிலம் முழுவதிலுமுள்ள சிமிட்டி உற்பத்தியாளர்களிடமும் சிமிட்டி விற்பனையாளர் கடைகளிலும் திடீர்ச்சோதனை செய்தனர். இம்மாநிலத்திலுள்ள 8 சிமிட்டி ஆலைகளில் சிமிட்டி மூட்டை நிரப்பப்படும் இடத்தில் 935 சிமிட்டி மூட்டைகளைச் சோதனை செய்ததில் 128 மூட்டைகளில் 1 கி. முதல் 2.4 கி.கி. வரை சிமிட்டி குறைவாக இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. மீண்டும் அம்மூட்டைகளில் சிமிட்டியை நிரப்பி சரிப்படுத்தி விற்பனை செய்ய அவை தனியே பிரிக்கப்பட்டன. சோதனை செய்யப்பட்ட 192 விற்பனையாளர்களில், 103 விற்பனையாளர்களிடம் சிமிட்டி இருப்பு இல்லை. எஞ்சிய விற்பனையாளர்

களிடம் இருந்த சிமிட்டி மூட்டைகளை ஆய்வாளர்கள் தனித்தனியே சோதனை செய்தனர். 62 விற்பனையாளர்களின் சிமிட்டி மூட்டைகள் எடை குறைந்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. 89 விற்பனையாளர்களின் கடைகளில் சோதனை செய்யப்பட்ட 2,132 மூட்டைகளில், 1,164 மூட்டைகளில் 2 கி. கி. முதல் 20.6 கி. கி. வரை சிமிட்டி குறைவாக இருந்தது கண்டறியப்பட்டது. இச் சட்டத்தின் 17 (5) (பி) பிரிவின்படி அம்மூட்டைகள் ஆய்வாளர்களால் பறிமுதல் செய்யப்பட்டன. இதன் வாயிலாக அம்மூட்டைகள் விற்பனையாகாமல் தடுத்து நிறுத்தப்பட்டன. வணிகர்கள் கேட்டு கொண்டதன் பேரில், அம்மூட்டைகளில் உள்ள அளவு சிமிட்டிக்கான விலைக்கே விற்பனை செய்ய வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அம்மூட்டைகள் அவர்களிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டன.

7.8. சமையல் வாயு சிலிண்டர்களில் வாயு அளவு குறைவாக உள்ளது என்று செய்தித்தாள் புகார்கள் வந்ததன் பேரில், தொழிலாளர் நலத்துறை ஆய்வாளர்கள் 7-8-1981 அன்றும், 10-8-1981 அன்றும் பல்வேறு இடங்களில் திடீர்ச்சோதனை நடத்தினர். 7-8-1981 அன்று சென்னை எண்ணெய்த் தூய்மை (ஆயில் ரிபைனரீஸ்) ஆலையில் வாயு நிரப்பப்படுமிடத்தில் இத்துறை அதிகாரிகள் சோதனையிட்டனர். 10 சிலிண்டர்களைச் சோதனை செய்ததில் 2 சிலிண்டர்களில் அளவு சரியாக இருந்தது. எஞ்சிய 8 சிலிண்டர்களில் 50 கிராம் முதல் 600 கிராம் வரை வாயு அளவு குறைந்தது. எனவே, அளவு குறைந்த சிலிண்டர்கள் மீண்டும் சரியாக நிரப்பப்படுவதற்காக எடுத்துச் செல்லப்பட்டன. மூன்று பெரு வணிகர்களின் கடைகளும் 10-8-1981 அன்று சோதனையிடப்பட்டன. 30 சிலிண்டர்களைச் சோதனை செய்ததில் 15 சிலிண்டர்களில் வாயு அதிகமாகவும், 14 சிலிண்டர்களில் குறைவாகவும், ஒரு சிலிண்டரில் மட்டும் சரியாகவும் இருந்தது கண்டறியப்பட்டது. வாயு அதிகமாக அடைக்கப்பட்டிருந்த சிலிண்டர்களில் 100 கிராம் முதல் 3,700 கிராம் வரை அளவு அதிகமாகவும், வாயு அளவு குறைந்த சிலிண்டர்களில் 200 கிராம் முதல் 5,400 கிராம் வரை அளவு குறைவாகவும் இருந்தது. வாயு அளவு குறைவாக இருந்த சிலிண்டர்களை இந்தியன் ஆயில் நிறுவனத்திற்கு மீண்டும் திருப்பி எடுத்து அனுப்பும்படி ஆணையிடப்பட்டன. இவ்வாறு இவை விற்கப்படாமல் தடுக்கப்பட்டன.

7.9. இந்தக் கூட்டுச் சோதனைகள் மற்றும் தீவிர ஆய்வுகள் ஆகியவற்றின் விளைவாக பல்வேறு உலோகங்களினால் செய்யப்பட்ட 26,260 எடைக் கற்களும், வெவ்வேறு அளவுகளுள்ள 18,669 முகத்தல் அளவைகளும்,

வெவ்வேறு வகையான 867 நிறுக்கும் கருவிகளும், 802 அளவைக்கருவிகளும், 3,431 தராசுகளும் தவறாக உள்ளன குறைபாடு உடையன அல்லது சரிபார்க்கப் படாதவை என்பதனால் கைப்பற்றப்பட்டன.

பாகம்—2

அத்தியாயம்-8

தேசிய வேலை வாய்ப்புப் பணி.

8.1. வேலை வாய்ப்புகள் :—

(1) தமிழ்நாட்டில் 39 வேலைவாய்ப்பகங்கள் இயங்கி வருகின்றன. அவற்றில் 13 துணை வேலை வாய்ப்பு அலுவலகங்கள், இரண்டு சிறப்பு வேலை வாய்ப்பகங்கள் மற்றும், சென்னை, மதுரை, அண்ணாமலை நகர் ஆகிய இடங்களில் செயற்படும் மூன்று பல்கலைக்கழக வேலைவாய்ப்புத் தகவல் மற்றும் வழிகாட்டும் நிலையங்கள் ஆகியவையும் அடங்கும்.

(2) வேலை வாய்ப்பகங்கள் வேலைத் தேடுவோர்களைப் பதிவு செய்து அவர்களை அறிவிக்கப்பட்ட வேலைக்காலி இடங்களுக்குப் பரிந்துரைக் கின்றன. வேலைக்காக பதிவு செய்துள்ள மனுதாரர்கள், வேலை அளிக்கப் பட்டவர்கள், வேலைக்காக வேலை வாய்ப்பகங்களில் செல்லுபடி பதிவேட்டில் (Live Register) காத்திருப்பவர்கள், அறிவிக்கப்பட்ட வேலை காலியிடங்களின் எண்ணிக்கை, வேலை வாய்ப்பகங்களை பயன்படுத்திக் கொண்ட அரசுத்துறை, தனியார் துறையைச் சேர்ந்த தொழிலதிபர்களின் எண்ணிக்கை விவரங்களும் மற்றும் இதே காலத்தில் சென்ற ஆண்டிற்கான நிகரான விவரங்களும் இணைப்பு -ல் உள்ள விவர அட்டவணை பிரிவு 1-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

8.2. உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலை வாய்ப்பு அலுவலகம்.

உடல் ஊனமுற்ற விண்ணப்பதாரர்களைப் பதிவு செய்து அவர்களை வேலையில் அமர்த்தும் நோக்குடன் சென்னையில் சிறப்பு வேலை வாய்ப்பகம் ஒன்றும் மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் ஆகிய மாவட்டங் களிலுள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களில் ஊனமுற்றோர்களுக்காக நான்கு தனிப் பிரிவுகளும் இயங்கி வருகின்றன. இவ்வலுவலகங்கள் அரசுத் துறை,

தனியார் துறையைச் சேர்ந்த தொழில் அதிபர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு எல்லாவித உடல் ஊனமுற்றோருக்கும் வேலை வாய்ப்பு அளித்து வருகின்றன. 1-4-1981 லிருந்து 31-12-1981 வரையிலான காலத்தில் உடல் ஊனமுற்ற மனுதாரர்களை பதிவு செய்து, வேலையில் அமர்த்தப்பட்ட விவரங்கள் இணைப்பு VI-ல் உள்ள விவர அட்டவணையின் பிரிவு 2-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

8.3. தொழில் மற்றும் நிருவாக வேலைவாய்ப்பு அலுவலகம் :

(1) இந்த அலுவலகம் உயர்ந்த தொழில் அனுபவம், அறிவியல், பொறி யியல், நிருவாக மேற்பார்வைப் பணிக்கல்வி தகுதியுடையவர்களைப் Professional and Executive standard) பதிவு செய்து அரசுத்துறை, தனியார் துறையைச் சேர்ந்த தொழிலதிபர்களுடன் தொடர்பு கொண்டு, பதிவு செய்துள்ள விண்ணப்பதாரர்களைத் தகுந்த வேலையில் அமர்த்த முயற்சி செய்து வருகிறது. 1-4-1981 முதல் 31-12-1981 வரையிலான காலத்தில் இந்த அலுவலகம் ஆற்றிய பணிகளின் புள்ளிவிவரங்கள் இணைப்பு -ல் உள்ள விவர அட்டவணையின் பிரிவு 3-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

(2) சென்னை, மதுரை, அண்ணாமலைப் பல்கலைக்கழக வேலைவாய்ப்பு தகவல் மற்றும் வழிகாட்டும் நிலையங்கள் பல்கலைக்கழகங்களில் படித்த பட்டதாரிகளுக்கும் மற்றும் படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கும் வேலைவாய்ப்பு விவரங்களை அளிப்பதும் வழி காட்டுதல் பணியையும் தொழில் உயர் பட்டதாரிகளையும் வேலை வாய்ப்பிற்காக பதிவு செய்யும் பணியையும் செய்து வருகிறது. 1-4-1981 முதல் 31-12-1981 வரையிலான காலத்தில் இந்நிலையங்கள் ஆற்றிய பணிகளின் புள்ளி விவரங்கள் இணைப்பு VI இல் உள்ள விவர அட்டவணையின் பிரிவு 4இல் கொடுக்கப்பட்டுள்ளன.

8.4. வேலை நிலவரத் தகவல் திட்டம் (Employmen Market Information Programme)

இத்திட்டத்தின்கீழ், 10 அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்கள் உள்ள (வேளாண்மை நீங்கலாக) எல்லாத் தனியார்த்துறை நிறுவனங்களிலிருந்தும், அனைத்துப் பொதுத்துறை நிறுவனங்களிலிருந்தும் காலாண்டுக்கொருமுறை வேலை நிலவரத்தகவல் திரட்டப்படுகிறது. இவ்வாறு தகவல் திரட்டும் பணி தொழிற்சங்க அமைப்பு ரீதியான துறைகளில் மட்டும் (Organised மேற்கொள்ளப்பட்டது. 31-3-1981, 30-6-1981, 30-9-1981 ஆகிய தேதிகளுடன் முடியும் மூன்று காலாண்டுகளில் தகவல் கேட்கப்பட்ட நிறுவனங் களின் எண்ணிக்கை, பொதுத்துறை, தனியார் துறையைச் சார்ந்த நிறுவனங்

களில் வேலையிலிருப்போர்களின் எண்ணிக்கை ஆகிய புள்ளி விவரங்கள் இணைப்பு VI ல் உள்ள விவர அட்டவணையின் 5 ஆம் பிரிவில் கொடுக்கப்பட்டுள்ளன.

8.5. பணியாளர்களின் தொழில்-கல்வித் தகுதி குறித்து இரண்டாண்டுகளுக்கொருமுறை நடத்தப்படும் ஆய்வு:

(1) 1959 ஆம் ஆண்டு வேலைவாய்ப்பகங்கள் (காலியிடங்களைக் கட்டாயமாக அறிவித்தல்) சட்டத்தின் விதிகளுக்கிணங்க அனைத்து தனியார்த்துறை தொழிலதிபர்களும், அவர்கள் வேலைக்கமர்த்தியுள்ள தொழிலாளர்களின் வேலை வகைபாடு, அவர்களின் கல்வித்தகுதி ஆகியவைகள் குறித்த 30-9-1981 அன்றைய நிலவரப்படியின் புள்ளி விவரங்களை ஈ ஆர் படிவங்களில் அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். 30-9-1981 அன்றைய நிலவரப்படி தனியார்த்துறை நிறுவனங்களிலிருந்து தொழிலாளர்களின் வேலை வகைப்பாடு கல்வித் தகுதி ஆகிய விவரங்கள் திரட்டும் பணி நடைபெற்று வருகிறது.

(2) இவ்வியக்கத்தால் கீழக்கண்ட பொருள் பற்றிய சிறப்பு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன :—

(அ) தமிழ்நாட்டில், வேலை வாய்ப்பகங்களில் நிலுவையிலுள்ள காலியிடங்கள் பற்றிய ஆய்வு.

(ஆ) தமிழ் நாட்டில் மகளிர் வேலை வாய்ப்பு/வேலை வாய்ப்பின்மை பற்றிய ஆய்வு.

(3) இவ்வியக்கத்தால் கீழ்க்கண்ட ஆய்வுகள் நடந்தேறி வருகின்றன :—

(i) மதுரை மாவட்ட வேலை வாய்ப்பகத்திலும், திண்டுக்கல் துணை வேலை வாய்ப்பகத்திலும் உள்ள செல்லுபடி பதிவேடுகளில் பதிவு செய்து காத்திருப்பவர்களில் எத்தனை பேர்கள், ஏற்கனவே வேலையில் உள்ளனர் என்பதைப் பற்றிய ஆய்வு.

(ii) தமிழ் நாட்டின் சில குறிப்பிட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களில் செல்லுபடி பதிவேட்டிலுள்ள தேசிய தொழிற் பழகுநிலை சான்றிதழ் (National Apprenticeship Certificate) தேசிய தொழிற் சான்றிதழ் (National Trade Certificate) பெற்றவர்கள் பற்றிய ஆய்வு.

8.6. வேலை வாய்ப்பகங்களின் பணியை கம்ப்யூட்டர்களைக் கொண்டு செய்தல்.

சென்னை, செங்கற்பட்டு மாவட்டங்களிலுள்ள 9 வேலை வாய்ப்பகங்களின் பணிகளைக் கம்ப்யூட்டர்கள் மூலம் செய்யும் திட்டத்தை அரசு அனுமதித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் மனுதாரர்களின் விவரங்கள் கம்ப்யூட்டர் நாடாவில் பதிவு செய்யப்பட்டு, அரசு புள்ளி விவரத் தொகுப்பு நிலையத்தில் சேகரித்து வைக்கப்பட்ட புள்ளி விவரத் தொகுப்பு கொண்டு கம்ப்யூட்டர் நாடாக்களின் உதவியால் வேலை வாய்ப்பகங்களின் பணிகளைச் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு இதுவரை மேற்கொள்ளப்பட்ட பணிகளின் முன்னேற்றம் பற்றிய விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன :—

(அ) 31-10-1981 முடிய உள்ள கால அளவில் தொழில் மற்றும் நிருவாக வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள அனைத்து மனுதாரர்களின் விவரங்கள் கொண்ட (29,900) படிவங்கள் தயாரிக்கப்பட்டன. அப்படிவங்கள் அரசு புள்ளி விவரத் தொகுப்பு நிலையத்திற்கு, பாகுபாட்டிற்காக (processing) அனுப்பப்பட்டன.

(ஆ) இப்படிவங்களை பாகுபாடு செய்தபின், அரசு புள்ளி விவரத் தொகுப்பு நிலையம், தகவல் படிவத்தில் பிழைத்திருத்தங்கள் செய்யும் பொருட்டு பதிப்பித்தல் பட்டியல் (Edit list) வழங்கியது. தேவையான பிழைத்திருத்தங்கள் அரசு புள்ளி விவரத் தொகுப்புப் பிரிவுக்கு அனுப்பப்பட்டன.

(இ) பதிப்பித்தல் பட்டியல்படி, பிழைத் திருத்தங்கள் செய்யப்பட்ட பட்டியல் ஒன்றினை அரசு புள்ளி விவரத் தொகுப்பு நிலையம் வழங்கியுள்ளது. பிழைத் திருத்தங்கள் சரியாக செய்யப்பட்டுள்ளதா என்று அவை சரி பார்க்கப்பட்டன.

(ஈ) அரசு புள்ளி விவரத் தொகுப்பு நிலையம் முடிவான பட்டியல் (Master statement) தயாரிக்கும் பணியை மேற் கொண்டுள்ளது. இப்பணி முடிந்ததும் மனுதாரர்களைத் தேர்ந்தெடுக்கும் பணிகளும் இதர வேலை வாய்ப்பகப் பணிகளுக்கும் கம்ப்யூட்டர் வாயிலாக மேற்கொள்ளப்படும்.

8.7. வாழ்க்கைத் தொழிலுக்கு வழி காட்டுதலும், வேலை வாய்ப்பு ஆலோசனை அளித்தலும். (Vocational Guidence and Employment Counselling)

தமிழ் நாட்டில் தருமபுரி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்கள் நீங்கலாகப் பிற மாவட்டங்களில் வாழ்க்கைத் தொழில் வழிகாட்டும் பிரிவுகள் செயற்பட்டு வருகின்றன. இப்பிரிவுகள் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள [illegible] தொடர்ந்து [illegible] வேலைவாய்ப்பு, பயிற்சி

பெறுவதற்கான வசதிகள், வேலைவாய்ப்புக் குறித்து தகவல், தொழில் பழகு வசதிகள் குறித்த விவரங்களை அளிக்கிறது. மாணவர்கள்/பதிவு செய்தவர்கள் பயனடையும் வகையில் வழிகாட்டுதல் தொடர்பான கலந்துரையாடல்கள் நடத்தப்படுகின்றன. மாணவர்கள்/வேலை தேடுவோரின் பயனுக்காக வேலை வாய்ப்பகங்களிலுள்ள வாழ்க்கைத் தொழில் வழிக்காட்டிப் பிரிவுகள் காலாண்டு தோறும் வழிகாட்டிச் செய்தி அறிக்கைகள் தயாரித்து, பள்ளிகளுக்கும், நூலகங்களுக்கும் அவற்றை அனுப்புகின்றன. வாழ்க்கைத் தொழில் வழி காட்டும் பிரிவுகளில் நடைபெறும் பணிகளின் விவரங்கள் இணைப்பு VI இல் உள்ள விவர அட்டவணையின் 6ஆம் பிரிவில் கொடுக்கப்பட்டுள்ளது.

(2) சென்னையிலுள்ள வேலைவாய்ப்பு பயிற்சித் துறை இயக்ககத்தின் மாநில வாழ்க்கை தொழில் வழிகாட்டல் பிரிவு 33 தொழில் பயிற்சி நிலையங்களில் சுமார் 34,448 விண்ணப்பத்தாரர்களுக்கு திறனாய்வுத் தேர்வு (Aptitude text) நடத்தியது. தொழில் பயிற்சி நிலையங்களில் பல்வேறு தொழில்களில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்காக இத்தேர்வு நடத்தப் பட்டது.

1981 டிசம்பர் திங்களில் சென்னை பல்கலைக் கழகத்தில் படித்த பட்ட தாரிகள் படித்துக் கொண்டிருக்கும் மாணவர்கள் பொதுமக்கள் பயனடை வதற்காக ஒரு "தொழில் தகவல் கண்காட்சி" 1981-ல் நடத்தப்பட்டது.

(3) இவ்வாண்டில் வேலை வாய்ப்பு பயிற்சித் துறை இயக்க அலு வலர்கள் 31 வேலை வாய்ப்பகங்களை ஆய்வு செய்தனர்.

8.8. வேலைவாய்ப்புத் தொடர்பு அலுவலகப் பிரிவு :

இப்பிரிவு பர்மா, ஸ்ரீலங்கா ஆகிய நாடுகளிலிருந்து தாயகம் திரும்பி யோருக்கு தகுந்த வேலை வாய்ப்பு பயிற்சி வசதிகள் ஆகியவற்றை பெற உதவுகிறது. இப்பிரிவால் நடைபெறும் பணிகளில் விவரங்கள் இணைப்பு VI இல் உள்ள விவர அட்டவணையின் 7 ஆம் பிரிவில் கொடுக்கப்பட்டுள்ளன.

8-9-1959 ஆம் ஆண்டு வேலை வாய்ப்பகங்கள் (வேலை காலியிடங்களைக் கட்டாயமாகத் தெரிவித்தல்) சட்டத்தைச் செயற்படுத்துதல் :

30-9-1981 அன்றைய நிலவரப்படி 12,853 நிறுவனங்கள் இச்சட்டத்தின் கீழ் வந்தன. 30-9-1980 நாள்படி 12,710 நிறுவனங்கள் இச் சட்டத்தின் கீழ் இருந்தன. குறிப்பிட்ட காலங்களில் அறிவிக்கப்பட்ட காலியிடங்களின் எண்ணிக்கையும் அந்நிறுவனங்களால் நிரப்பப்பட்ட இடங்களின் எண்ணிக் கையும் இணைப்பு VI இல் உள்ள விவர அட்டவணையில் 8 ஆம் பிரிவில் கொடுக்கப்பட்டுள்ளன.

8.10. வேலையற்றோருக்கு உதவித் திட்டம்

படித்த வேலையற்றோர்களிடையே உள்ள அவல நிலையைப் போக்கும் பொருட்டு "வேலையற்றோர் உதவித் திட்டம்" ஒன்றை அரசு உருவாக்கி இத்திட்டம் 1—7—1980 முதல் செயற்படுத்தப்பட்டு வருகிறது. வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்துள்ள ஏற்பளிக்கப்பட்ட பின்வரும் பிரிவுகளைச் சேர்ந்த வேலை நாடுவோர்கள் அத்திட்டத்தின்கீழ் உதவி பெற தகுதியுடையவர்கள் ஆவார் :—

1. அனைத்து படிப்புத் துறைகளிலும், பட்டதாரிகள் பட்ட மேற் படிப்பு பட்டதாரிகள்.

2. தகுதி வாய்ந்த இடைநிலைப்பள்ளி ஆசிரியர்கள்.

3. தகுதி வாய்ந்த உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள்.

4. தகுதி வாய்ந்த உடற்பயிற்சிக்கல்வி/தொடக்கப்பள்ளி உயர் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள்.

5. தகுதி வாய்ந்த தமிழ், பிற மொழி ஆசிரியர்கள்.

6. தகுதி வாய்ந்த கைவினை ஆசிரியர்கள்.

7. பொறியியல் பட்டயச் சான்றிதழ் பெற்றவர்கள்.

பள்ளி இறுதி வகுப்புத் தேறிய அல்லது புதிய 10-வது வகுப்பு தேறிய அல்லது அதற்கு சமமான கல்வித் தகுதியுடைய பார்வை இழந்தோருக்கும் தொழில் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்றோருக்கும் 1-10-1981 முதல் வேலையற்றோருக்கான உதவித் திட்டத்தினை அரசு விரிவுபடுத்தியுள்ளது. இத்திட்டத்தில் 1980-81, 1981-82 (31-12-81 வரை) ஆம் நிதி ஆண்டுகளில் பயனடைந்தோரின் மொத்த எண்ணிக்கை அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உதவித் தொகை ஆகியவை பற்றிய விவரங்கள், இணைப்பு VI இல் உள்ள விவர அட்டவணையில் 9 ஆம் பிரிவில் கொடுக்கப்பட்டுள்ளன.

8.11. ஆதிதிராவிடர்/பழங்குடியினருக்கான வேலை வாய்ப்பு உதவி :

(1) ஆதி திராவிடர், பழங்குடியினரை வேலையில் அமர்த்துவதில் வேலை வாய்ப்பகங்களின் பணிகளை ஒருங்கிணைக்க இவ்வியக்ககத்தில் ஒரு தனிப்பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மைய, மாநில அரசு நிறுவனங்களில் நிரப்பப்படாமல் உள்ள காலியிடங்களை நிரப்புவதற்கான சிறப்பு நடவடிக்கை களை இப்பிரிவு மேற்கொள்கிறது. வேலை வாய்ப்பகங்களில் பதிவு

செய்துள்ள வேலையில் அமர்த்தப்பட்ட ஆதி திராவிடர், பழங்குடியினரின் எண்ணிக்கை விவரங்கள் இணைப்பு VI இல் உள்ள விவர அட்டவணையின் 10 ஆம பிரிவில் கொடுக்கப்பட்டுள்ளன.

(2) வேலை வாய்ப்பில் பல்வேறு இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு உரிய ஒதுக்கீட்டின் அடிப்படையில் காலியிடங்கள் நிரப்பப்படுவதற்காக இத்துறை, ஒருங்கிணைந்த பதிவேட்டுத் திட்டம் ஒன்றை செயற்படுத்தியது. இத்திட்டம் வலகத்தில் செயற்படுத்தப்பட்டது சேலம் மாவட்டத்தில் உள்ள மாநில அரசு, வலகத்தில் செயற்படுத்தப்பட்டது சேலம் மாவட்டத்தில் உள்ள மாநில அரசு, அரசுசார் நிறுவனங்கள் உள்ளாட்சி நிறுவனங்கள் இவைகளில் ஏற்படும் அனைத்து வேலைக்காலியிடங்கள் தொடர்பாக இன அடிப்படையிலான ஒதுக்கீட்டை சேலம் வேலைவாய்ப்பு அலுவலகத்திலுள்ள ஒருங்கிணைந்த பதிவேட்டுப் பிரிவு செயற்படுத்துகிறது. அறிக்கை காலத்தில் இன அடிப்படையிலான ஒதுக்கீடு பொருந்துகின்ற அறிவிக்கப்பட்ட காலி இடங்களில் 18 சதவீதத்தை இப்பிரிவு ஆதி திராவிடர் பழங்குடியினருக்கு ஒதுக்கியது. பழங்குடியினருக்கு வாழ்க்கைத் தொழில் வழிகாட்டுவதற்காகவும், பழங்குடியினரை அனுப்புவதற்குத் தகுந்த வேலைகளிலுள்ள காலியிடங்களாக கண்டறியவும், பழங்குடியினருக்கான தனி வாழ்க்கைத் தொழில் முறை வழி காட்டும் நிலையம் ஒன்று உதகமண்டலத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இப்பிரிவால் நடைபெறும் பணிகளின் விவரங்கள் இணைப்பு VI -ல் உள்ள விவர அட்டவணையில் 11-வது பிரிவில் கொடுக்கப்பட்டுள்ளன.

8.12. ஒரு குடும்பத்தில் ஒருவருக்கேனும் வேலை வாய்ப்பு அளித்தல்.

(1) ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவருக்கேனும் வேலை கிடைக்க வேண்டும் என்பது தமிழ்நாடு அரசின் கொள்கையாகும். ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் வேலை வாய்ப்பகங்களில் தங்கள் பெயரை பதிவு செய்துள்ளவர்களுமான வேலையற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பளிப்பது இக்கொள்கையின் ஒரு அம்சமாகும்.

(2) ஒருங்கிணைந்த கிராமப்புற மேம்பாட்டுத் திட்டம், சுய வேலை வாய்ப்புக்காக கிராமப்புற இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டம் இவைகளின்கீழ் நபர்களை தெரிவு செய்கையில் சுய வேலைவாய்ப்புக்காக உதவி வேண்டுவோருக்கு முன்னுரிமையளிக்க அரசு தீர்மானித்துள்ளது.

வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்துள்ளவர்கள் பற்றிய புள்ளி விவரங்களை வைத்து வருவதற்காக வருமானம், படிப்புத் தகுதி, விரும்பும் வேலையின் தன்மை முதலிய இன்றியமையாத விவரங்களைத் திரட்டுவதற்காக

13 இலட்சம் படிவங்கள் அச்சிடப்பட்டு, வேலை வாய்ப்பகங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளன. சனவரித் திங்கள் இறுதி வரை 9.75 இலட்சம் படிவங்கள் அனுப்பப்பட்டன. 5.39 இலட்சம் படிவங்கள் நிரப்பப்பட்டு திரும்பப் பெறப்பட்டுள்ளன. புள்ளி விவரங்கள் "திரட்டும் பணி" விரைவில் முடிவுறும்.

8.13. மாவட்ட உழைப்பாற்றல் திட்ட வேலைவாய்ப்புக் குழுக்கள்.

ஒவ்வொரு மாவட்டத்திலும், உழைப்பாற்றல் திட்ட வேலை வாய்ப்புக் குழுவை அமைப்பதற்கு தொழிலாளர் நல வேலை வாய்ப்புத் துறையின் 20-10-1981 ஆம் நாளிட்ட 2406 ஆம் எண்ணில் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. உள்ளூரில் கிடைக்கும் வாய்ப்புக்களை அடிப்படையாகக் கொண்டு தனித்து இயங்கக்கூடிய பல்வேறு சுய வேலைவாய்ப்பு முயற்சிகளில் மாவட்டங்களில் வேலையற்று இருப்போரையும் போதிய வேலைவாய்ப்பு அற்று இருப்போரையும் வழிப்படுத்தும் ஓர் அமைப்பாக இந்தக் குழுக்கள் செயல்படும் என்று கருதப்படுகிறது. மாவட்டங்களிலுள்ள வேளாண்மை தொழில் கூட்டுறவு, கட்டுமானம், புள்ளிவிவரம், கிராமப்புற மேம்பாடு, கல்வி கால்நடை வளர்ப்பு, கிராமத் தொழில்கள், தாழ்த்தப்பட்ட சமுதாயம், மகளிர், வங்கிகள், மக்கள் பிரதிநிதிகள், தனியார் துறை ஆகிய பிரிவுகளைச் சேர்ந்தவர்களின் பிரதிநிதிகளைக் கொண்டு இக்குழுக்களை அமைக்க கருதப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் இக்குழுவின் தலைவராகவும், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், உறுப்பினர்-செயலாளராகவும் பணியாற்றுவர்.

8.14. 1981-82 ஆம் ஆண்டில் அரசால் அனுமதிக்கப் பெற்று செயல்படுத்தப்பட்ட திட்டங்கள்.

பின்வரும் திட்டங்கள் 1981-82 ஆம் நிதி ஆண்டில் செயற்படுத்தப்பட்டன :—

1. தொழில் நுட்ப தகுதி பெற்றவர்களுக்கு மதுரையில் தனியாக வேலை வாய்ப்பு அலுவலகம் அமைத்தல்.

2. வேலை வாய்ப்பகங்களில் கூடுதல் பணியாளர்களை அமர்த்துதல்.

3. சென்னை-35லுள்ள தொழில் நிருவாக வேலை வாய்ப்பு அலுவலகத்தில் கூடுதல் பணியாளர்களை அமர்த்துதல்.

4. வேலை வாய்ப்பு பயிற்சித் துறை இயக்கத்திற்கும் வேலை வாய்ப்பகங்களில் உள்ள வேலை நிலவரத் தகவல் பிரிவிற்கும் கூடுதல் தட்டச்சர்கள் நியமித்தல்.

5. வேலை வாய்ப்பகங்களுக்கு 12 அறைகள் கொண்ட இரும்பு அலமாரிகள் வழங்குதல்.

6. சேலம் மாவட்டத்திலுள்ள மேட்டூரிலும், இராமநாதபுரத்திலுள்ள விருதுநகரிலும் துணை வேலை வாய்ப்பகங்களை அமைத்தல்.

7. மதுரையில் வட்டாரத் துணை இயக்குநர் அலுவலகத்தை ஏற்படுத்தல்.

8. சென்னை, மதுரை, அண்ணாமலைப் பல்கலைக் கழக வேலை வாய்ப்புத் தகவல் மற்றும் வழிகாட்டு நிலையங்கள் ஒவ்வொன்றிற்கும் உதவியாளர் ஒருவரை நியமித்தல்.

8.15. எதிர்காலத் திட்டங்கள்.

(1) திருச்சியில் வட்டாரத் துணை இயக்ககத்தை ஏற்படுத்துதல்.

வேலை வாய்ப்பகங்களின் பணியைச் சீரிய முறையில் மேற்பார்வையிடவும் கட்டுப்பாட்டுடன் இயக்கவும், மேலும், வேலை தேடுவோரின் குறைகளை விரைவாக நிவர்த்தி செய்யவும் 1982-1983 ஆம் நிதி ஆண்டில் திருச்சியில் வட்டாரத் துணை இயக்குநர் அலுவலகம் ஒன்று திறவப்படவிருக்கிறது. தற்போது இயக்குநர் செயல்படுத்தி வரும் அதிகாரங்களில் சிலவற்றை அங்கு நியமிக்கப்படவிருக்கும் துணை இயக்குநருக்கு வழங்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

(2) திருநெல்வேலி, மதுரை, தஞ்சாவூர் மாவட்டங்களிலுள்ள துணை வேலை வாய்ப்பு அலுவலகங்களை, மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங் களாக நிலை உயர்த்துவதன் மூலமாக, வேலை வாய்ப்பகங்களை வலுப் படுத்துதல்.

கிராமப்புறங்களில் வாழும் வேலை தேடுவோருக்கு சீரிய முறையில் பணி யாற்றவும், வேலை வாய்ப்பகங்களில் ஏற்படும் தாமதங்களை தவிர்க்கவும் 1982-83 ஆம் ஆண்டில் தூத்துக்குடி, திண்டுக்கல் நாகபட்டினத்திலுள்ள துணை வேலை வாய்ப்பகங்களோடு திருநெல்வேலி, மதுரை, தஞ்சாவூர் மாவட்டங்களிலுள்ள ஒருசில வட்டாரங்களைச் சேர்த்து அத்துணை வேலை வாய்ப்பு அலுவலகங்களை மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களாக தரமுயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

(3) சென்னையிலுள்ள தொழில்-நிருவாக வேலைவாய்ப்பு அலுவல கத்தை வலுப்படுத்துதல்.

இம்மாநிலத்திலுள்ள கல்லூரிகள், மேல்நிலைப் பள்ளிகளில் ஏற்படும் காலியிடங்களை பூர்த்தி செய்யத் தகுந்த நபர்களை விரைவில் பரிந்துரைக்கும் பணியை தொழில் நிருவாக வேலைவாய்ப்பகம் மேற்கொள்ள வேண்டியிருப் பதால் இதனை வலுப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இவ்வலு வலகத்திற்குத் தெரிவிக்கப்படும் காலியிடங்களுக்கு மனுதாரர்களை அனுப்ப உடனடியாக நடவடிக்கை எடுக்கவும், தகுதியான மனுதாரர்களைத் தேர்ந் தெடுப்பதில் உதவி இயக்குநருக்கு உடன் பணி புரியவும் இவ்வலுவலகத்தில் தற்போதுள்ள இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர் பதவியை, மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் பதவியாக 1982-83 ஆம் ஆண்டில் நிலை உயர்த்தி தொழில் நிருவாக வேலை வாய்ப்பகத்தை வலுப்படுத்தத் திட்டமிடப் பட்டுள்ளது.

(4) வேலை வாய்ப்பகங்களுக்கு இரும்பு அலமாரிகள் வழங்குதல்.

வேலை தேடுவோரின் முக்கிய விபரங்களைக் கொண்ட பதிவட்டைகளை பத்திரமாக வைப்பதற்காக 1982-83 ஆம் ஆண்டில் வேலை வாய்ப்பகங்களுக்கு 12 இழுவறைகள் கொண்ட 25 இரும்பு அலமாரிகள் வழங்க திட்டமிடப் பட்டுள்ளது.

(5) மதுரையில் உள்ள வட்டார அலுவலகத்திற்கு வாகனமும் தொலை பேசியும்.

மதுரையிலுள்ள வட்டார துணை இயக்குநர் தன் கட்டுப்பாட்டிலுள்ள நான்கு மாவட்டங்களில் இயங்கும் வேலை வாய்ப்பகங்களை திடீர் சோதனை யிடவும் முழுமையான ஆய்வு செய்யவும் பெறப்படும் குற்றச்சாட்டு மனுக்கள் மீது தக்க நடவடிக்கை எடுப்பதற்காகவும் அவருடைய பணியை திறம்படச் செய்வதற்காகவும் போக்குவரத்து வசதி செய்து கொடுக்கும் பொருட்டு, 1982-83 ஆம் ஆண்டில் மதுரை வட்டார துணை இயக்குநர் அலுவலகத்திற்கு தொலைபேசியும், வாகனமும் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

அத்தியாயம்-9.

கைவினைஞர் பயிற்சித் திட்டம்.

9.1. தொழில் பயிற்சி நிலையங்களின் பங்கு:

(1) தொழில் வளம் பெருக தொழில் நுட்பப் பயிற்சி பெற்ற கைவினை ஞர்கள் அதிக அளவில் தேவைப்படுகின்றனர். இத்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஐந்தாண்டுத் திட்டங்களின்கீழ் இந்தியாவின் பல பகுதிகளிலும்

தொழிற் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டன. பயிற்சியைப் பயனுள்ள தாகச் செய்யும் பொருட்டு இந்தத் தொழில் பயிற்சி நிலையங்களில் பணி மனைச் சூழ்நிலைகள் உருவாக்கப்பட்டன. கைவினைஞர் பயிற்சித் திட்டத் திற்கு இந்தத் தொழில் பயிற்சி நிலையங்கள் ஆதாரமாக உள்ளன. தமிழ் நாட்டில், ஒவ்வொரு தொழில் பயிற்சி நிலையமும் சம்பந்தப்பட்ட முதல்வரின் பொறுப்பில் இயங்கி வருகிறது. மாநில அளவில் எல்லாத் தொழில் பயிற்சி நிலையங்களும் வேலை வாய்ப்பு பயிற்சித் துறை இயக்குநரின் மேற்பார்வையில் இயங்குகின்றன. கைவினைஞர் பயிற்சித் திட்டத்தின் கீழ், பின்வரும் வகைப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன :—

(i) தொழில் பயிற்சி நிலையங்களில் நிறுவனப் பயிற்சி.

(ii) 1961 ஆம் ஆண்டு தொழில் பழகுவோர் சட்டத்தின் கீழ் தொழில் பழகுவோர் பயிற்சி.

(iii) தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கான மாலை நேர வகுப்புகள்.

(iv) தொழில் பள்ளிகளுக்கான விதிக் கோவையின் கீழ் மானிய உதவி பெறும் தனியார் தொழில் பள்ளிகளில் கைவினைஞர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

(v) வேலை இழந்த பொற்கொல்லர்கள், மாதிரி அமைப்பு தயாரிப் பாளர், கைத்தறி நெசவாளர்கள் ஆகியோருக்கு தொழில் பயிற்சி நிலையங் களில் தெரிந்தெடுக்கப்பட்ட தொழில்கள் (பகுதி நேரம்) தனிப் பயிற்சித் திட்டம்.

(vi) வாழ்க்கைத் தொழில் பயிற்சி முற்போக்குத் திட்டம்.

(vii) அம்பத்தூர் தொழில் பயிற்சி நிலையத்தில் பயிற்றுவிப்போர் பயிற்சித் திட்டம்.

(viii) கிராமப்புற இளைஞர்களுக்கு குறுகிய கால பயிற்சி திட்டம்.

(ix) குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களின் பயிற்சிக்காக சென்னை/பெருநகர் வளர்ச்சிக் குழுமம் நடத்தும் திட்டம்.

(2) 1981 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் அரக்கோணத்திலும் கடலூரிலும் (மகளிர்) தொடங்கப்பட்ட தொழில் பயிற்சி நிலையங்களையும் சேர்த்து, தமிழ்நாட்டில் 34 தொழிற்பயிற்சி நிலையங்கள் இருக்கின்றன. இத் தொழில் பயிற்சி நிலையங்களில் அனுமதிக்கப்பட்ட மொத்த மாணவர்கள் 8,334 ஆகும்.

30 பொறியியல் பிரிவுகளிலும், 9 பொறியியல் அல்லாத பிரிவுகளிலும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. 19 தொழில் பிரிவுகளில் பயிற்சிக் காலம் ஓராண் டாகும். 20 தொழில் பிரிவுகளில் பயிற்சிக் காலம் இரண்டாண்டாகும். மகளிருக்கென தனியாக தொழில் பயிற்சி நிறுவனம் ஒன்று சென்னையிலும் மற்றொன்று கடலூரிலும் இயங்கி வருகின்றன எந்திரக் கம்மியர் (பொது மின் அணுவியல்) துறையில் பயிற்சி அளிப்பதற்காக தனி தொழில் பயிற்சி பிரிவு ஒன்று அடையாறு மின்னணுவியல் கூடத்தில் இயங்கி வருகிறது. சாதி இட ஒதுக்கீட்டு விதிகளைப் பின்பற்றி, ஆண்டிற்கு ஒரு முறை தொழில் பயிற்சி நிலையங்களில் தகுதி அடிப்படையில் பயிற்சியாளர்கள் சேர்க்கப்படுகின்றனர். 1980 ஆம் ஆண்டில் மாநிலத்திலுள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் அனுமதிக்கப்பட்டப் பயிற்சியாளர்களின் எண்ணிக்கை 7,891. ஆனால் 1981 ஆம் ஆண்டில் 8,033 பயிற்சியாளர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

(3) தேர்ச்சி பெற்ற கைவினைஞர்களை உருவாக்கும் நோக்குடன் தொழிற் பயிற்சி நிலையங்களில் சேருவதற்கான குறைந்த கல்வித் தகுதி ஒன்பதாம் வகுப்பு படித்திருக்க வேண்டும் என முன்பு வரையறுக்கப்பட் டிருந்ததை பள்ளி இறுதி வகுப்புவரை படித்திருக்க வேண்டும் என்று மாற்றி யமைக்கப்பட்டுள்ளது.

(4) தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சித் திறனைச் செம்மை யாக்கவும் தொழில் பழகுவோர் பயிற்சித் திட்டத்தை திறம்படச் செயல் படுத்தவும், கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் வட்டாரத் துணை இயக்குநர் அலுவலகங்கள் நிறுவப்பட்டு உள்ளன.

(5) பயிற்சி பெறுபவர்கள், பயிற்சி முடிந்த பின்னர் நல்ல வேலை வாய்ப்பு வசதிகளைப் பெறும் பொருட்டு, வேலை வாய்ப்பு குறைவாக உள்ள தொழில் பிரிவுகளை நீக்கி விட்டு வேலை வாய்ப்பு அதிகம் உள்ள தொழில் பிரிவுகளைப் புதிதாக அறிமுகப்படுத்துவதன் மூலம் தொழில் பயிற்சி நிலையங் களில் தொழில்களைப் பல திறப்படுத்துதல் திட்டத்தை அரசு செயற்படுத்தி வருகிறது.

(6) 1981-82 ஆம் ஆண்டில் செங்கற்பட்டு, கிண்டி, புதுக்கோட்டை, ஆகிய தொழிற் பயிற்சி நிலையங்களில் 'பற்றவைப்பவர்' தொழில் பிரிவினை நீக்கி விட்டு, மாணவர்கள் விரும்புவதும் வேலை வாய்ப்பு அதிகம் உள்ளதுமான பன்னுண எந்திர வேலையாள் கம்மியர் (மோட்டார் வண்டி) ஆகிய தொழில் பிரிவுகள் ரூபாய் 5 இலட்சம் செலவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

(7) 1982-83 ஆம் ஆண்டு ஒசூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் கருவிகள் அச்சுத் தயாரிப்புத் தொழில் பிரிவும், கைக்கடிகாரம், சுவர் கடிகாரம் செய்பவர் தொழில் பிரிவும், விருதுநகர், மேட்டூர் அணை திண்டுக்கல் ஆகிய இடங்களில் உள்ள தொழில் பயிற்சி நிலையங்களில் கம்மியர் (மோட்டார் வண்டி) தொழில் பிரிவும் தொடங்கவும் கருதப்பட்டுள்ளது.

(8) தமிழ்நாட்டில் உள்ள தொழில் பயிற்சி நிலையங்களில் அளிக்கப் படும் பயிற்சியின் தரத்தினை பின்வருவனவற்றிலிருந்து மதிப்பிடலாம் :—

(அ) இதுவரை நடைபெற்ற 17 அனைத்திந்திய திறனாய்வு போட்டிகளில், தமிழ்நாடு முதன்மை இடத்தை எட்டு முறைகள் பெற்றுள்ளது. இதற்கென குடியரசுத் தலைவரின் சுழற் கேடயத்தையும் எட்டு முறை பெற்றுள்ளது. 1982-ம் ஆண்டு சனவரித் திங்களில் நடைபெற்ற 18-வது அனைத்திந்திய திறனாய்வு போட்டியின் முடிவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

அனைத்திந்திய தொழில் தேர்வில் மதிப்பீட்டுத் தரத்தை உயர்த்தும் பொருட்டு 1979 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் மைய இடங்களில் விடைத் தாள்களைத் திருத்தும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. 1981 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் இத்திட்டம் ஓராண்டு ஈராண்டு பயிற்சியுடைய எல்லாத் தொழில் பிரிவுகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது. 1981 ஆம் ஆண்டு ஜூலை திங்களில் நடைபெற்ற அனத்திந்திய தொழில் தேர்வில் கலந்து கொண்ட 8,210 பயிற்சி பெறுவோர்களில் 6,843 பயிற்சி பெறுவோர் தேர்ச்சி பெற்றனர். தேர்ச்சி முடிவு 83 விழுக்காடாகும்.

(9) 1981-82 ஆம் ஆண்டு ஈரோட்டில் இருக்கும் தொழில் பயிற்சி நிலையத்திற்கு நிரந்தர மாணவர் விடுதி ஒன்றினைக் கட்டுவதற்கான வேலை தொடங்கப்பட்டுள்ளது.

9—2—1961 ஆம் ஆண்டு தொழில் பழகுவோர் சட்டம்—

(1) 1961 ஆம் ஆண்டு தொழில் பழகுவோர் சட்டம், 1963 ஆம் ஆண்டு நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. இச்சட்டத்தின் விதித் துறைகளுக் கிணங்க தொழில் பழகுநர் ஆலோசகரால் அறிவிக்கப்பெறும் தொழில் பிரிவுகளில் நிறுவனத்தில் உள்ள தொழில் பழகுவோருக்குப் பயிற்சி அளிப்பது தொழில் அதிபரின் கடமையாகும். இப்பயிற்சித் திட்டம், தொழில் பயிற்சிப் பள்ளிகளில் அளிக்கப்படும் பயிற்சியின் தொடர்ச்சியாகும். வளர்ந்து வரும் தொழிற்சாலைகளின் தேவைகளை நிறைவு செய்யப் போதிய அளவுக்குப்

பயிற்சி பெற்ற கைவினைஞர்களைத் தேசிய அளவில் உருவாக்கி அவர்களின் திறமையை வளர்ப்பதும், பயிற்சி பெற்றவர்களின் ஒட்டு மொத்த தரத்தை உயர்த்த இயலும் வகையில் இந்தியா முழுவதும் ஒரே சீரான பயிற்சி வசதியை முறைப்படுத்தி செயற்படுத்துவதும், இத்திட்டத்தின் குறிக்கோளாகும். தொழில் பயிற்சி நிலையங்கள் தொழில் பழகுவோருக்குப் பல்வேறு தொழில் களில் அடிப்படைப் பயிற்சியை அளிக்கின்றன. தொழில் பழகு பயிற்சியின் போது தொடர்புடைய பொருத்தமான அறிவுரையுடன், அவசியமான பட்டறைப் பயிற்சி அல்லது பணியில் இருக்கும் போது பயிற்சி (on the Job trainning) அவர்களுக்கு அளிக்கப்படுகிறது. பயிற்சியின் கால அளவு, அந்தந்த தொழிலைப் பொறுத்து ஆறு திங்கள் முதல் நாலாண்டு வரை வேறுபடுகிறது. தொழில் பழகுவோர் பயிற்சியின் இறுதியில், அனைத் திந்திய தொழில் திறமைப் போட்டிகளில் பங்கேற்கின்றனர். தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்குத் தேசிய தொழில் பழகுநிலை சான்றிதழ் அளிக்கப்படுகிறது.

(2) தொழில் பழகுவோர் பயிற்சியின் தரத்தை உயர்த்த 1981-82 ஆம் ஆண்டு அம்பத்தூர், திருச்சி, மதுரை ஆகிய இடங்களில் தொழில் பயிற்சி தொடர்பாக அறிவுரை வழங்கும் தனிப்பட்ட நிலையங்கள் அமைக்கப்பட்டன. பயிற்சி திட்டத்தை வெற்றியுடன் நிறைவேற்றுவதற்காக தாராபுரத்தில் தொழில் பயிற்சி தொடர்பாக அறிவுரை வழங்கும் நிலையம் ஒன்றும் புதிதாக அமைக்கப்பட்டது. தொழில் பயிற்சி தொடர்பாக அறிவுரை வழங்கும் வகுப்புக்களைத் தகுந்த முறையில் மேற்பார்வையிடவும், பயிற்சியின் தரத்தை உயர்த்தவும், கடலூரில் உள்ள தொழில் பயிற்சி தொடர்பாக அறிவுரை வழங்கும் நிலையத்தில் தொழில் பழகுவோர் உதவி ஆலோசகர் பதவி ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(3) இத்திட்டத்தின் கீழ் 30-9-1980 அன்றும் 30-9-1981 அன்றும் தொழில் பழகுவோரின் விவரப் பட்டியல் கீழ்வருமாறு :—

	ஒதுக்கீடு செய்யப்பட்ட தொழில் பழகுவோர் எண்ணிக்கை.		
	பொதுத் துறை.	தனியார் துறை.	மொத்தம்.
30–9–1980 அன்றுள்ளவாறு	3,890	7,041	10,931
30–9–1981 அன்றுள்ளவாறு	3,622	7,381	11,003

[1982 மார்ச் 27

தேர்வு செய்யப்பட்ட
தொழில் பழகுவோரின்
எண்ணிக்கை.

	பொதுத் துறை.	தனியார் துறை.	மொத்தம்.
30–9–1980 அன்றுள்ளவாறு	3,000	7,080	10,080
30–9–1981 அன்றுள்ளவாறு	2,685	7,485	10,170

(4) இன்றுள்ளவாறு, தொழில் பழகுவோர் சட்டத்தின்கீழ் 136 தொழில்கள் பயிற்சிக்கென குறிப்பிடப்பட்டுள்ளன. எல்லா தொழில் பழகுவோருக்கும் பயிற்சிக்கால அளவில் திங்கள் ஒன்றுக்கு ரூ. 130 முதல் ரூ. 200 வரை பயிற்சி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இந்தப் பயிற்சி உதவித்தொகை வீதம், 25—1—1982-லிருந்து இந்திய அரசால் திருத்தப் பட்டுள்ளது. இப்போது பயிற்சிக் கால ஆண்டினைப் பொறுத்து இந்த உதவித் தொகை ரூ. 230-லிருந்து ரூ. 350 வரை வேறுபடுகிறது. 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30-ம் நாளிலிருந்து தனியார், தமிழக அரசுத் துறை நிறுவனங்களில் 1961 ஆம் ஆண்டு தொழில் பழகுவோர் சட்டம் செயல் படுத்தப்படும் நிறுவனங்கள் 1,563 ஆகும். 1981 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் நடைபெற்ற அனைத்திந்திய தொழிற் பயிற்சித் தேர்வில் எழுதிய 2,596 பேரில் 2,284 பேர் வெற்றி பெற்றனர்.

(5) வட சென்னை தொழிற் பயிற்சி நிறுவனத்தில் தொழில் பழகுவோரின் பயிற்சித் தொடர்பாக அறிவுரை மையத்திற்காக வகுப்பறைகள் கட்டுவதற்கான பணி 1981-82 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டுள்ளது.

9.3. தொழிற்சாலைகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு மாலை நேர வகுப்புகள்:

(1) தொழிற் சாலைகளில் பணிபுரியும் பணியாளர்களுக்குத் தொழில் துறை அறிவினை மேம்படுத்தி அதன் மூலம் அவர்களுக்குப் பதவி உயர்வு வாய்ப்பு களை ஏற்படுத்திக் கொடுப்பதே இத்திட்டத்தின் நோக்கம் ஆகும். தொழிற் சாலை அதிகமாக உள்ள பகுதிகளான கிண்டி, வடசென்னை, அம்பத்தூர், மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள தொழிற் பயிற்சி நிறுவனங் களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்தொழிற் பயிற்சி நிறுவனங்களில் உள்ள மொத்த பயிற்சி இடங்கள் 1,050 ஆகும். 1981-82 ஆம் ஆண்டில் இத்திட்டம் மேட்டூர் அணை மற்றும் திருச்சியில் தொடங்கப்பட்டது. இவற்றில் 150 பேர் பயிற்சி பெறுகின்றனர். 1981 ஆம் ஆண்டு தேர்வில் 567 பேர் தேர்வு எழுதியதில் 465 பேர் வெற்றி பெற்றனர்.

1982 மார்ச் 27]

(2) திருச்சியிலுள்ள பாரத் கனரக மின்கலத் தொழிற்சாலை (பெல் நிறுவனம்), அத்தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களின் அறிவினை மேம்படுத்த தொழிற்சாலை வளாகத்திற்குள் இத்திட்டத்தைச் செயல்படுத்து கிறது. பற்றவைத்தல், பொருத்துதல் ஆகிய இரு தொழில் பயிற்சி பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன. இப்பயிற்சி வகுப்பில் 50 பேர் சேர்த்துக்கொள்ளப் படுகின்றனர்.

9.4. நிதி உதவி பெறும் தொழிற் பள்ளிகள்:

(1) வேலைவாய்ப்பு-பயிற்சித் துறை இயக்குநரால் பிறப்பிக்கப்பட்ட தொழில் பயிற்சி பள்ளிகள் ஒழுங்குமுறை விதிக்கோவையின் கீழ் அங்கீகாரம் அளிக்கப்பட்ட 78 தொழிற்பள்ளிகள் தற்சமயம் தமிழ்நாட்டில் உள்ளன. இப்பள்ளிகள் தச்சுத் தொழில், கருமார் தொழில், பொருந்துநர் தொழில், பற்றவைக்கும் தொழில், பூ வேலை, பின்னல் வேலை, துணி வெட்டுதல், தைத்தல் முதலியவற்றில் பயிற்சி அளிக்கின்றன. இத்தொழில்களின் பயிற்சிக் காலம் ஓராண்டு முதல் மூன்று ஆண்டுகளாகும். அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 5,124. தற்போது 4,374 மாணவர்கள் இப்பள்ளி களில் பயிற்சி பெறுகிறார்கள். அங்கிகரிக்கப்பட்ட எல்லா தனியார் நிறுவனங் களிலும் பயிற்சியின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு எல்லாத் தொழில்களுக்கும் பொதுவான பாடத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. 1975 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் பொதுத் தேர்வும் நடத்தப் பட்டு வருகிறது. தொழில் பள்ளிகளுக்கான ஒழுங்குமுறை விதிக்கோவையின் விதித் துறைகளின்படி இப்பள்ளிகள் மானியம் பெறத் தகுதியுடையவை யாகும். 1981 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்வில் எழுதிய 2,170 பயிற்சி யாளர்களில் 2,043 பேர் தேறினர். வெற்றி 94 விழுக்காடாகும்.

(2) அரசு தொழில் பயிற்சி நிலையப் பணியாளர்களுக்கு மூன்றாவது சம்பள ஆணைக் குழு பரிந்துரைத்த சம்பள விதங்கள் நிதி உதவி பெறும் தொழிற் பள்ளிகளில் அதுபோன்ற பதவிகளில் இருக்கும் ஆசிரியர்களுக்கும் பொருந்தும் என அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. உதவி பெறும் பள்ளிகள் எங்கு அமைந்திருந்தாலும் அப்பள்ளி பணியாளர்களுக்குப் பொருந்தக்கூடிய வீட்டு வாடகைப்படியும், நகர ஈட்டுப் படியும் வழங்க அரசு அனுமதித் துள்ளது. அரசுப் பணியாளர்களுக்குச் சமமாக இப்பணியாளர்களுக்கு அகவிலைப்படி வழங்கவும் அரசு அனுமதித்துள்ளது.

9.5. சிறப்புப் பயிற்சித் திட்டம் :

வேலை இழந்த பொற்கொல்லர்கள், மாதிரி வடிவமைப்புத் தயாரிப் பாளர்கள், கைத்தறி நெசவாளர்கள் முதலியோர் தங்களுக்குப் பொருத்தமான

வேலையைப் பெறுவதற்கான சில தொழில் நுட்பப் பயிற்சிகளை அளிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். சேலம், திருச்சி, மதுரை, பேட்டை ஆகிய இடங்களிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில் பயிற்சி நிலையங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இங்கு கருமார் தொழில், பொருத்துனர் தொழில், செப்பு வேலைப்பாடு, தகர வேலைப்பாடு ஆகிய இரட்டை தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு, பயிற்சியாளருக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 10 பயிற்சி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட பயிற்சியாளர்களின் எண்ணிக்கை 160 ஆகும். 1981 ஆம் ஆண்டு 160 பயிற்சியாளர்கள் இவ் வகுப்பில் அனுமதிக்கப்பட்டனர். 1981 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் 155 பேர் தேர்வு எழுதியதில் 155 பேர்களும் தேர்ச்சி பெற்றனர்.

9.6. வாழ்க்கைத் தொழில் மேல் பயிற்சித் திட்டம்.

(1) தொழில் நுட்பவியலில் நாள்தோறும் பெருகி வரும் நவீன கருவிகளையும் மாற்றங்களையும் கருத்திற்கொண்டு ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம்/அனைத்து நாட்டுத் தொழிலாளர் நல நிறுவனத்தின் உதவியுடன் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் தொழில் துறை அறிவினை மேம்படுத்த, அம்பத்தூர், தொழிற்பயிற்சி நிலையத்தில் வாழ்க்கைத் தொழில் மேல் பயிற்சித் திட்டம் கொண்டு வரப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் அம்பத்தூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் கீழ்க்கண்ட தொழில்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தியத் தர நிர்ணயம், பொறியியல் வரைபடங்களைக் கற்றல், உலோகப் பற்ற வைப்பில் சிறப்புப் பயிற்சி, கருவி அச்சு தயாரித்தல், கம்பியர் பராமரிப்பு, மற்றும் மின்சாரம் பராமரிப்பு.

இதுவரை தொழில் நிறுவனங்களிலிருந்து அனுப்பப்பட்ட 847 தொழிலாளர்கள் மேற்கூறிய தொழில்களில் அம்பத்தூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்றுள்ளனர்.

(3) 1981-82 ஆம் ஆண்டு இத்திட்டம் கோயம்புத்தூரிலுள்ள தொழிற் பயிற்சி நிலையத்திற்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

9.7. அம்பத்தூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் பணியாளர்களுக்கான பயிற்சித் திட்டம்.

(1) இத்திட்டத்தின் நோக்கமும் குறிக்கோளும் பயிற்றுநர்களுக்கும் கல்வி கற்பிப்பதில் தொழில் நுட்ப உத்தி குறித்தும் ஒலி, ஒளி கருவிகளை உபயோகிப்பது குறித்தும், நிருவாகம் குறித்தும் நவீனப் பயிற்சி அளிப்பதேயாகும். இப்பயிற்சித் திட்டம் 1980 ஆம் ஆண்டு சனவரியிலிருந்து அம்பத்தூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் இளநிலைப் பயிற்சி அலுவலர்களும், உதவி பயிற்சி அலுவலர்களும் நவீன தொழில் நுட்ப பயிற்சி முறையால் பயன் அடைகின்றனர். இப்பயிற்சித் திட்டத்தில் நவீன தொழிற் சாலைகளைப் பார்வையிடுவதும் அடங்கும்.

(2) பயிற்றுவித்தலின் கீழ் கற்பிக்கும் முறை, பாடத் திட்டங்களில் ஏற்பட்டுள்ள புதிய மாற்றங்கள், கற்பிக்கும் முறை குறித்த கோட்பாடுகள், கல்விச் சாதனங்கள் தயாரித்தல் ஆகியவற்றில் பயிற்றுநர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. நவீன ஒலி ஒளி கருவிகளைப் பயன்படுத்துவதிலும் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுவரையில் 88 பயிற்றுநர்கள் இப்பயிற்சி பெற்றுள்ளனர்.

9.8. கிராம இளைஞர்களுக்குச் சுயவேலை வாய்ப்பிற்கான பயிற்சித் திட்டம்

1. கிராம இளைஞர்கள் சுய வேலைவாய்ப்பைத் தேடிக்கொள்வதற்கு இயலும் வண்ணம் அவசியமான திறமையைப் பெறச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். சிறு விவசாயிகள் ஓரளவு நிலம் வைத்துள்ள விவசாயிகள், நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள், கிராமப்புறக் கைவினைஞர்கள், வறுமைக் கோட்டின்கீழ் உள்ள கிராம இளைஞர்கள் இவர்களுக்குப் பயிற்சி அளித்து திறமையுடையவர்களாக ஆக்குவதையே இத்திட்டம் முக்கிய குறிக்கோளாக கொண்டுள்ளது. திறமை மிக்க கைவினைஞர்கள் நகர்ப்புறத்திற்குச் செல்வதைத் தடுத்து அவர்களைக் கிராமப்புறங்களிலேயே இருக்கச் செய்து தொழில் புரிய ஊக்குவிப்பதையும் இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. குறைந்த அளவு கல்வித் தகுதி எதும் வலியுறுத்தப்படவில்லை. 18 வயது முதல் 35 வயது வரை உள்ள கிராம இளைஞர்கள் பயிற்சிக்குச் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

(2) 19 தொழிற் பயிற்சி நிலையங்களில் 11 சுயவேலை வாய்ப்புத் தொழில்களில் இத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வந்தது. இத்திட்டம் சமீபத்தில் மேலும் எட்டு தொழில் பயிற்சி நிலையங்களில் நீட்டிக்கப்பட்டுள்ளதுடன் தற்பொழுது இம்மாநிலத்தில் இத்திட்டம் 27 தொழில் பயிற்சி நிலையங்களில் செயல்படுத்தப்படுகிறது. பயிற்சிக் காலம் முழு நேரப் பயிற்சிக்கு 2 மாதங்கள் (10 தொழிற் பயிற்சி நிலையங்கள்) பகுதி நேரப் பயிற்சிக்கு 4 மாதங்கள் (17 தொழிற் பயிற்சி நிலையங்கள்) மாலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை. உதவித் தொகை முழு நேரப் பயிற்சியாளர்களுக்கு மாதம் ரூ. 100—வீதமும் பகுதி நேரப் பயிற்சியாளர்களுக்கு மாதம் ரூ. 75— [illegible] ரூ. 250—மதிப்புள்ள கருவிப்

பெட்டி ஒன்று அனைத்துப் பயிற்சியாளர்களுக்கும் பயிற்சியின் முடிவில் அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது. 1981 ஆம் ஆண்டு அக்டோபர் 31 முடிய இத்திட்டத்தின் கீழ் 6,931 கிராம இளைஞர்கள் தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளனர்.

(3) 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதி முதல் இத்திட்டம் செயல் படுத்தப்படுவது மாநில அளவிலிருந்து மாவட்ட அளவிற்குப் பரவலாக்கப் பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களை தலைமையாக இயங்கும் மாவட்ட அளவிலான குழுக்கள் இத்திட்டத்தைச் செயல்படுத்து கின்றன. இத்திட்டம் ஒருங்கிணைந்த கிராமப் புறவளர்ச்சித் திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இதன்கீழ் தமிழ்நாட்டிலுள்ள 376 வளர்ச்சி வட்டாரங்களும் வருகின்றன. ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 1981-82ல் வட்டாரம் ஒன்றுக்கு ஒதுக்கப்பட்ட ரூ. 6 இலட்சத்தில், இத் திட்டத்திற்காக ரூ. 1.50 இலட்சம் பயன்படுத்தப்படும்

9.9. தொழிற் பயிற்சி நிலையங்களில் குடிசைவாழ் மக்களுக்கான பயிற்சித் திட்டம்.

இந்தத் திட்டம், உலக வங்கியின் உதவியுடன் குடிசை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சென்னை மாநகர் குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் பொறுப்பு ஏற்கும் திட்டமாகும். இத்திட்டம் கிண்டி, அம்பத்தூர், வட சென்னை ஆகிய தொழிற் பயிற்சி நிலையங்களில் 1979 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாலை 6 மணியிலிருந்து இரவு 9 மணி வரை பகுதி நேரத் தொழிலாக தச்சு வேலை, ஒட்ட வைப்பு உட்பட இரு சக்கர வண்டி வேலை, சாதாரண மின் கம்பி வேலை, பழுது பார்த்தல், கட்டிட வேலை, வண்ணம் பூசுதல், சைக்கிள் பழுது பார்த்தல், குறைவழுத்தப் புற்ற வைப்புத் தொழில் ஆகிய தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. தொழில்களுக்கு ஏற்ப பயிற்சிக் காலம் மூன்று திங்களி லிருந்து ஆறு திங்கள் வரை உள்ளது. இதுவரை 700 பயிற்சியாளர்கள் இத் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்றுள்ளனர்.

(1) பயிற்சியாளர்கள் சுய வேலை வாய்ப்பில் ஈடுபடும்போது அவர்களுக்கு நம்பிக்கையை ஊட்ட, மூன்று உற்பத்தி சார்ந்த பயிற்சி நிலையங்கள் அம்பத்தூர், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள தொழில் பயிற்சி நிலையங்களில் 1981-82ல் தொடங்கப்பட்டன.

9.10. பொது :

(2) 1982-83 ஆம் ஆண்டில், நாகர்கோவிலில் உள்ள எஸ்.எம்.ஆர்.வி நிலையத்தில் பல்வேறு தொழில் பிரிவுகளில் கூடுதலாக 160 மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதன் மூலம், அதனை ஒரு முழுமையான மகளிர் தொழிற் பயிற்சி நிலையமாக தரமுயர்த்திட திட்டமிடப்பட்டுள்ளது.

(3) தொழிற் பயிற்சிப் பள்ளிகளில் பயிற்சியின் தரத்தை மேம்படுத்த ரூபாய் 10 லட்சம் செலவில் பற்றாக்குறையான கருவிகளை வாங்குவதற்காகவும் ரூபாய் மூன்று லட்சம் செலவில் கருவிகளை மாற்றி அமைக்கவும் திட்டமிடப் பட்டுள்ளது.

பாகம் III

அத்தியாயம்-10

கோரிக்கை 55 பல்வகை மூலதனச் செலவு 495 ஏனைய சமூக சமுதாய நலப்பணிகள் குறித்து மூலதனச் செலவு-ஏ ஏனைய சமூக சமுதாய நலப் பணிகள்-வகை வேலை வாய்ப்பு.

இத்தலைப்பின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட இருக்கும் சில துணைத் திட்டங்கள் வருமாறு :

10.1. தொழிற் பயிற்சி நிலையங்களின் பணியாளர்களுக்கு குடி யிருப்புகள் கட்டுதல்.

இம்மாநிலத்திலுள்ள 25 தொழிற் பயிற்சி நிலையங்களில் பணியாற்றும் பணியாளர்களில், தெரிந்தெடுக்கப்பட்ட பணியாளர்களுக்கு, நிலையான குடி யிருப்புகள் உள்ளன. எஞ்சிய தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு இத்திட்டத் திற்காக 1982-83 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 1,000 அடையாள நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

10.2 தொழிற் பயிற்சி நிலையங்களில் மாணவர் விடுதி கட்டிடத்தைக் கட்டுதல்.

இம்மாநிலத்திலுள்ள 24 தொழில் பயிற்சி நிலையங்களில் நிலையான மாணவர் விடுதிக் கட்டிடங்கள் உள்ளன. ஈரோடு தொழிற் பயிற்சி நிலை யத்தில் மாணவர் விடுதி கட்டும் பணி 1981-82-ல் தொடங்கப்பட்டுள்ளது. இப்பணிக்காக 1982-83 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 1000 அடையாள நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

10.3. அரக்கோணத்திலும், கடலூரிலும் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு இயந்திரங்கள் கருவிகளுக்கு வகை செய்தல்.

அரக்கோணத்திலும், கடலூரிலும் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு இயந்திரங்கள், கருவிகள் வாங்குவதற்காக 1982-83 ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 3 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

10.4. தொழில் பழகுவோர் பயிற்சித் திட்டம்.

சென்னை (வடக்கு), தொழிற் பயிற்சி நிலையத்தில் உள்ள தொழில் தொடர்பான அடிப்படைப் பயிற்சி வகுப்புகளை நடத்துவதற்கு வகுப்பறைகள் கட்டுவதற்காக 1982-83 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 2.30 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. கிண்டி, தொழிற் பயிற்சி நிலையத்தில் அடிப்படைப் பயிற்சி நிலையத்திற்குக் கருவிகள், தளவாடங்கள் வாங்குவதற்கும் அம்பத்தூர், திருச்சி, மதுரையில் புதிதாகத் தொடங்கப்படும் அடிப்படைப் பயிற்சி வகுப்புகளுக்கான மேசை, நாற்காலிகள் வாங்குவதற்கும் ரூ. 8,000 நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது

10.5. தொழில்களைப் பல்திறப்படுத்தல் :—

செங்கற்பட்டு, கிண்டி, புதுக்கோட்டை தொழிற் பயிற்சி நிலையங்களில் தொழில்களை பல்திறப்படுத்தும் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு இயந்திரங்கள், கருவிகள் வாங்குவதற்காக 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 5.55 இலட்சம நிதி ஒதுக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் இந்தத் தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு மேலும் தேவையான இயந்திரங்கள், கருவிகள் வாங்குவதற்கு 1982-83 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 2.01 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

10.6 சாதனங்கள் வாங்குதல் :

பல்வேறு தொழில்களுக்காக, மைய அரசு வரையறுத்த கருவிகள், சாதனங்கள் குறித்த தாப்பட்டியலைத் திருத்தியமைத்ததனால் கம்மியர் (மோட்டார் வாகனங்கள்) கம்மியர் (குளிர்பதனம்-சீர்வளி வசதி), கருவிகளும் சாதனங்களும் வாங்க வேண்டியுள்ளது. இதற்காக 1982-83 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இயந்திரங்கள் மற்றும் சாதனம் வாங்க ரூ. 10.26 இலட்சம் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

10.7. கம்மியர் தொழில் (பொது மின்னணுவியல்) பயிற்சி :

அடையாறு, பயிற்சிப் பிரிவுக்கு கருவிகள், சாதனங்கள் வாங்குவதற்காகும் செலவுக்காக 1982-83 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 23,000 நிதி ஒதுக்கம் செய்துள்ளது.

10.8. தற்போதுள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் நவீன வசதிகள் செய்து கொடுத்தல்.

(1) அம்பத்தூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் வாழ்க்கைத் தொழில் மேற் பயிற்சித் திட்டத்திற்கும், வேலூர், தொழிற் பயிற்சி நிலையத்தில் கோல்

பதனிடும் தொழில்களுக்கும் கருவிகள், சாதனங்கள் வாங்குவதற்காக 1982-83 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 1,05,000 நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.

(2) இத்திட்டம் 1981-82 ஆம் ஆண்டிலிருந்து கோயம்புத்தூர் தொழிற் பயிற்சி நிலையத்திலும் செயல்படுத்தப் படுகிறது. இயந்திரங்கள், கருவிகள் வாங்குவதற்காக 1982-83 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 1,00,000 நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பாகம்-IV

அத்தியாயம்-11.

11.1. அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம் :

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் (தமிழக அரசைச் சார்ந்தது) 1956 ஆம் ஆண்டின் நிறுமங்கள் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட நிறுமமாக 1978 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30-ந் தேதி அன்று நிறுவப் பட்டது. இந் நிறுவனம் ரூ. 50 இலட்சத்தை அங்கீகரிக்கப்பட்ட மூலதன மாகக் கொண்டுள்ளது. இத்தொகையில் இதுவரை ரூ. 10 இலட்சம் பங்குத் தொகையாக வழங்கப் பெற்றுள்ளது.

11.2. இந்நிறுவனத்தின் நோக்கங்கள் :

(1) திறமை பெற்ற, ஓரளவு திறமை பெற்றவர்களுக்கு வெளி நாடுகளில் வேலை வாய்ப்பைப் பெற்றுத் தருவது (2) வெளிநாடுகளில் பணிபுரியும் தொழிலாளர்களால் சேமித்து அனுப்பி வைக்கப்பெறும் தொகையினை முதலீடு செய்வது, (3) இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் கூட்டுத் தொழில் நிறுவனங்கள் நிறுவுவது (4) இந்தியப் பொருட்களின் ஏற்றுமதியை மேம் படுத்துவது ஆகியவையாகும்.

11.3. தற்போது வெளிநாடுகளில் தொழிலாளர்களுக்கு வேலை கிடைப்பதற்கான வாய்ப்புகளைக் கண்டறிவது பற்றிய பணியை இந்நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. வெளிநாடுகளில் வேலை செய்ய விரும்பும் தொழி லாளர்களை இந்த நிறுவனம் பதிவு செய்து கொள்கிறது. 13-12-1981 அன்றுள்ளபடி இந்நிறுவனத்தில் பதிவு செய்துள்ளவர்களின் எண்ணிக்கை 5,517 ஆகும். இந்நிறுவனம், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஈராக், லிபியா ஆகிய நாடுகளுக்கு இதுவரையில் 423 தொழிலாளர்களை அனுப்பியுள்ளது. அவர்கள் மூலமாக இந்தியாவிற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 90 இலட்சம் அந்நிய செலாவணி கிடைக்குமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்நிறுவனம் மேலும் 51 பணியாளர்களை ஈராக் நாட்டிற்கு அனுப்ப தேர்வு செய்வதற்கான முன்னேற்பாடுகளைச் செய்து வருகிறது.

பாகம் V.

இணைப்புகள்.

இணைப்பு I.

தொழிலாளர்—தொழிலதிபர் நல்லுறவு.

(i) தொழில் வாரியாக வேலை நிறுத்தங்கள், கதவடைப்பு குறித்த புள்ளி விவரங்கள்.

தொடர் எண்ணும் தொழிலும்.	வேலை நிறுத்தங்கள் கதவடைப்புகளின் எண்ணிக்கை. 1980	1981	ஈடுபட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை. 1980	1981	இழந்த உழைப்பு நாட்கள். 1980	1981
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
துணி நெசவு ..	137	133	78,916	1,14,392	15,69,824	27,99,352
பொறியியல் ..	70	86	14,999	16,178	4,23,884	5,91,817
தோல்பதனிடும் தொழிற்சாலை. ..	8	6	728	909	13,392	13,247
புகையிலை, பீடி ..	5	1	51,377	695	5,16,184	37,520
மலைத்தோட்டங்கள். ..	13	13	90,643	17,358	3,66,216	2,70,818
ஏனையவை ...	90	49	47,021	36,732	6,11,522	5,01,267
மொத்தம் ...	293	288	2,81,784	1,86,174	35,91,922	41,24,021

(ii) தீர்ப்பு வழங்குதல்.

(1)	தீர்ப்புக்கு அனுப்பப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. 1980 (2)	1981 (3)	தீர்ப்புகள் வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. 1980 (4)	1981 (5)
(அ) சென்னை, தொழில் நடுவர் மன்றமும் தொழிலாளர் நீதி மன்றங்களும்.	1,036	1,035	889	1,003
(ஆ) 10(2)-ஆம் பிரிவின் கீழ் அனுப்பப்பட்டவை.	..	33	..	..
(இ) தொழிலாளர் நீதி மன்றங்கள் முன்பு 33-சி (2)-ஆம் பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பங்களில் முடிவு செய்யப்பட்டவை.	1,554	1,694	..	..

(iii) வசூல்—

1947-ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் 33-சி (1)-ஆம் பிரிவின் கீழ் தொழிலாளர்களுக்கு சேர வேண்டிய பாக்கித் தொகைகளை வசூலிப்பதற்காக அரசு ஆணை பிறப்பித்த விவரங்கள்.

வசூல் செய்ய ஆணையிடப்பட்டவை. 1980	1981	தொகை ரூபாய். 1980	1981.
(1)	(2)	(3)	(4)
124	205	6,76,322·22	26,61,048·31

(iv) வழக்கு தொடர்தல்—

நடப்பாண்டில் வழக்கு தொடர அனுமதிக்கப்பட்டவை—3

இணைப்பு II.

பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் உள்ள நிறுவனங்கள்/தொழிலாளர்கள்/வசூலிக்கப்பட்ட உரிமத் தொகை குறித்த விவரங்கள்.

ஆண்டு. (1)	நிறுவனங்களின் எண்ணிக்கை. (2)	பணிக்கமர்த்தப் பட்ட தொழிலாளர் களின் எண்ணிக்கை. (3)	வசூலிக்கப்பட்ட உரிம பதிவுக் கட்டணம். (4)
I. தொழிற் சங்கம் அமையப் பெற்ற தொழில்கள்.			
1. 1948-ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம்.			
1980	9,681	6,75,222	52,75,124
1981	10,444	6,40,850	53,31,106
2. 1951-ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டம்.			
1980	419	90,291	
1981	434	91,390	..
3. 1961-ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம்.			
1980	1,564	55,077	70,931·69
1981	1,626	58,035	84,877·77

ஆண்டு. (1)	நிறுவனங்களின் எண்ணிக்கை. (2)	பணிக்கமர்த்தப் பட்ட தொழிலாளர் களின் எண்ணிக்கை. (3)	வசூலிக்கப்பட்ட உரிம பதிவுக் கட்டணம். (4)
II. தொழிற் சங்கம் அமையப் பெறாத தொழில்கள்.			
1. 1966-ஆம் ஆண்டு பீடி, சுருட்டுத் தொழிலாளர்களின் (பணி நிலைமை) சட்டம்.			
1980	1,397	12,935	38,145·50
1981	1,332	12,361	42,617·00
		(வீட்டுத் தொழிலாளர்கள் 2,00,000)	
2. 1947-ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள், நிறுவனங்கள் சட்டம்.			
1980	2,86,420	2,61,527	
1981	2,78,123	2,64,492	
3. 1958-ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்கள் சட்டம்.			
1980	28,285	67,378	2,20,860·05
1981	27,987	71,146	3,09,298·00

இணைப்பு III.

பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ், தொழிலாளர் நல ஆய்வாளர்கள் நடத்திய ஆய்வுகள் குறித்த விவரங்கள்.

சட்டத்தின் பெயர்.	முறையான ஆய்வு.	விடுமுறைகள் ஆய்வு.	தனி ஆய்வு.	திடீர் ஆய்வு.	இரவு நேர ஆய்வு.	சரிபார்ப்பு ஆய்வு.	மொத்த ஆய்வுகள்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
(i) 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம்.	19,311	888	1,555	502	776	1,891	24,923
(ii) 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம்.	3,59,467	44,029	6,344	10,959	18,781	..	4,39,580
(iii) 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்கள் சட்டம்.	51,801	838	398	675	346	..	54,058
(iv) 1961 ஆம் ஆண்டு மோட்டார்போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம்.	3,551	52	161	76	..	..	3,840
(v) 1955 ஆம் ஆண்டு உழைக்கும் பத்திரிகையாளர் மற்றும் ஏனைய செய்தித்தாள் பணியாளர்கள் (பணி நிலைமையும் பல்வகை ஒதுக்கீடுகளும்) சட்டம்.	38	..	..	..	..		38
(vi) 1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர்கள் (முறைப்படுத்துதலும் நீக்குதலும்) சட்டம்.	874	..	..	.	..	..	874
(vii) 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்சாலை நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறைகள்) சட்டம்.	1,88,595	3,161	2,348	2,868	..	..	1,96,972
(viii) 1951 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர்கள் சட்டம்.	1,338	100	180	82	..	..	1,700

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
(xi) 1936 ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்குதல் சட்டம்.	54,316	135	79	274	..	..	54,804
(x) 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டம்.	1,65,261	277	169	525	20	..	1,66,252
(xi) 1966 ஆம் ஆண்டு பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமை) சட்டம்.	3,198	154	60	243	..	..	3,655
(xi) 1938 ஆம் ஆண்டு சிறுவர்கள் பணி சட்டம்.	296	..	..	..	..	..	296
(xii) 1961 ஆம் ஆண்டு மகப்பேறு பயன் சட்டம்.	6,657	..	..	..	..	..	6,657

இணைப்பு IV.

பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் தொடரப்பட்ட வழக்குகள், முடிக்கப்பட்ட வழக்குகள் குறித்த விவரங்கள்.

சட்டத்தின் பெயர்.	தொடக்கத்தில் முடிவு பெறாமல் இருந்தவை.	இந்த ஆண்டில் அனுமதிக்கப்பட்டவை.	முடிக்கப்பட்டவை.	தண்டனை அளிக்கப்பட்டவை.	விடுதலை பெற்றவை,	கண்டிக்கப்பட்டவை.	திரும்பப் பெறப்பட்டவை.	முடிவுறாமல் உள்ளவை.	பெறப்பட்ட அபராதத் தொகை ரூபாய்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)
(i) 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம்.	2,134	3,756	3,984	3,855	43	22	64	1,906	3,09,440
(ii) 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள், நிறுவனங்கள் சட்டம்.	4,004	17,029	15,101	14,966	26	50	59	5,932	7,85,074
(iii) 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்கள் சட்டம்.	1,003	2,901	2,463	2,427	2	12	22	1,441	1,57,321
(iv) 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர் சட்டம்.	197	466	469	458	..	2	9	194	58,055

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)
(v) 1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர்கள் (முறைப்படுத்துதலும் நீக்குதலும்) சட்டம்.	..	19	23	23	..	..	..	3	2,600
(vi) 1958 ஆம் ஆண்டு தமிழ் நாடு தொழிற்சாலை நிறுவனங்கள் (தேசிய, பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டம்.	1,446	4,723	4,409	4,372	8	13	16	1,760	1,28,032
(vii) 1951 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டம்.	75	74	102	97	4	..	1	47	12,335
(viii) 1936 ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்குதல் சட்டம்.	474	1,431	1,152	1,145	..	2	3	753	44,465
(ix) 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டம்.	412	2,054	1,675	1662	1	5	7	791	88,505
(x) 1961 ஆம் ஆண்டு மகப்பேறு பயன் சட்டம்.	..	8	7	..	..	..	..	1	360
(xi) 1972 ஆம் ஆண்டு தமிழ் நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம்.	..	2	1	1	..	..	—	1	150
(xii) 1966 ஆம் ஆண்டு பீடி, சுருட்டுத் தொழிலாளர் (பணி நிலைமை) சட்டம்.	89	118	148	138	4	5	7	19	10,785
(xiii) 1976 ஆம் ஆண்டு சம ஊதியச் சட்டம்.	..	3	1	1	..	..	..	2	10

இணைப்பு V.

(அ) பற்பல தொழிலாளர் நலச்சட்டங்களின்கீழ் துறை அலுவலரால் முடிவுசெய்யப்பட்ட வழக்குகள்

விவரங்கள்.	தமிழ்நாடு உணவகங்கள் சட்டம்.		*தமிழ்நாடு கடைகள் நிறுவனங்கள் சட்டம்.		பணிக்கொடை** வழங்குதல் சட்டம்.	
	1980	1981	1980	1981	1980	1981
(i) தொடக்கத்தில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை	32	22	168	146	352	173
(ii) இவ்வாண்டில் வரப் பெற்ற வழக்குகளின் எண்ணிக்கை.	114	128	191	336	893	1,236
(iii) மொத்த வழக்குகளின் எண்ணிக்கை.	146	150	359	482	1,245	1,409
(iv) நடப்பாண்டில் முடிவு செய்யப் பட்ட வழக்குகளின் எண்ணிக்கை.	124	112	213	358	1,072	1,059
(v) ஆண்டு முடிவில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை.	22	38	146	124	173	350

* தொழிலாளர் நல அலுவலர்கள், தொழிலாளர் நல உதவி ஆணையர் (இணக்கம்) ஆகியவர்களால் முடிவு செய்யப்பட்டவை.

** தொழிலாளர் நல துணை ஆணையாளர்களின் அலுவலகங்களில் உள்ள தொழிலாளர் நல உதவி ஆணையாளர்களால் முடிவு செய்யப்பட்டவை.

(ஆ) தொழிலாளர் நல துணை ஆணையர்களால் முடிவு செய்யப்பட்ட வழக்குகள்.

விவரங்கள்.	தொழிலாளர் இழப்பீட்டு சட்டம்.		ஊதியம் வழங்குதல் சட்டம்.		பணிக்கொடை வழங்குதல் சட்டம்.	
	1980	1981	1980	1981	1980	1981
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
(i) ஆண்டு தொடக்கத்தில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை.	449	339	204	216	93	163
(ii) இவ்வாண்டில் வரப் பெற்ற வழக்குகளின் எண்ணிக்கை.	798	874	421	758	711	327
(iii) மொத்தம்	1,247	1,213	625	974	804	490
(iv) இவ்வாண்டில் முடிவு செய்யப் பட்ட வழக்குகளின் எண்ணிக்கை.	908	959	409	793	641	344
(v) ஆண்டு முடிவில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை.	339	254	216	181	16[illegible]	146

இணைப்பு—VI.

தேசிய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஆற்றிய சாதனைகளின் விபரங்கள்.

1 வேலைவாய்ப்புக்கள் :

விவரங்கள். (1)	1-4-1981 லிருந்து 31-12-1981 வரை உள்ள காலத்தில். (2)	1-4-1980 லிருந்து 31-12-1980 வரையிலான காலத்தில். (3)
(i) தமிழ்நாட்டிலுள்ள வேலைவாய்ப்பகங்களால் பதிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை.	3,92,694	3,89,678
(ii) வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை	53,339	37,481
(iii) அறிவிக்கப்பட்ட காலி இடங்களின் எண்ணிக்கை	78,215	53,725
(iv) வேலைவாய்ப்பகத்தை பயன்படுத்தி வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை :		
(அ) பொதுத் துறை	17,660	11,727
(ஆ) தனியார் துறை	5,928	5,674
(v) டிசம்பர் திங்கள் நிலவரப்படி வேலைவாய்ப்பகப் பதிவேட்டிலுள்ள விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை.	12,60,991	11,07,233

உடல் ஊனமுற்றவர்களுக்கான தனி வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை.

1—1—1981 முதல் 31—12—1981 வரையிலான காலத்திற்கு.

(1)	பதிவு செய்து கொண்டவர்கள். (2)	வேலையில் அமர்த்தப் பட்டவர்கள். (3)	1981ஆம் ஆண்டு டிசம்பரில் பதிவேட்டில் உள்ளவர்களின் எண்ணிக்கை. (4)
(அ) பார்வையற்றோர்	494	96	1.289
(ஆ) காது கேளாதோர், ஊமை	551	160	1,114
(இ) கை, கால் ஊனமுற்றோர்	5,597	2,405	13.682
மொத்தம் ..	6,642	2,661	16,085

தொழில்—நிர்வாக வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை.

1—4—1981 முதல் 31—12—1981 வரை.

(1)	பதிவு செய்து கொண்டவர்கள். (2)	வேலையில் அமர்த்தப் பட்டவர்கள். (3)	1981ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முடிய பதிவேட்டில் உள்ளவர்களின் எண்ணிக்கை (4)
	8,828	1,564	21,339

பல்கலைக் கழக வேலை நிலவரத் தகவல்—வழிகாட்டி பிரிவு, அண்ணாமலை நகர், சென்னை மதுரை.

(1)	பதிவு செய்து கொண்டவர்கள். (2)	வேலையில் அமர்த்தப் பட்டவர்கள். (3)	1981ஆம் ஆண்டு டிசம்பர் வரை பதிவேட்டில் உள்ளவர்களின் எண்ணிக்கை. (4)
	1—4—1981 முதல் 31—12—1981 வரையிலான காலத்திற்கு		
(அ) சென்னை	118	7	282
(ஆ) மதுரை	1,510	152	3,544
(இ) அண்ணாமலை நகர்	157	20	457

வேலை வாய்ப்பு நிலவரத் தகவல் திட்டம்.

காலாண்டு. (1)	நிறுவனங்களின் எண்ணிக்கை. (2)	நிறுவனங்களிலுள்ள மொத்த வேலை வாய்ப்பு. (3)
(அ) பொதுத்துறை :		
31—3—1981	9,398	12,18,885
30—6—1981	8,921	12,31,087
30—9—1981	9,081	12,44,487
(ஆ) தனியார் துறை :		
31—3—1981	11,785	6,84,581
30—6—1981	11,863	6,92,736
30—9—1981	12,367	7,02,340

வாழ்க்கைத் தொழில் ஆலோசனை :

	1—4—1981 முதல் 31—12—1981 வரை,
(1) கூட்டுக் கலந்துரையாடல்களின் எண்ணிக்கை	3,153
(2) கூட்டுக் கலந்துரையாடல்களில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை.	56,681
(3) பதிவு வழிமுறைகளைப் பயன்படுத்திக் கொண்டவர்களின் எண்ணிக்கை.	13,710
(4) பணியில் அமர்த்தப்பட்ட/தொழில் பழகும் பயிற்சியில் சேர்க்கப்பட்டவர்களின் எண்ணிக்கை.	612
(5) பள்ளிகள்/கல்லூரிகளில் நடத்தப்பட்ட தொழிற்பயிற்சி உரையின் எண்ணிக்கை.	280
(6) தொழில் பழகும் பயிற்சி/படிப்பு உதவித் தொகை/மேல்படிப்புக்காக அனுப்பப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை.	10,706

தொழிலாளர் வேலை வாய்ப்பக பிரிவு—

	1—4—1981 முதல் 31—12—1981 வரையிலான கால அளவிற்கு. ஸ்ரீலங்கா.	பர்மா.
(1) பதிவு செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை ..	3,343	1,215
(2) பணியில் அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை ..	608	428
(3) தாயகம் திரும்பியவர்களின் எண்ணிக்கை (டிசம்பர் திங்கள் 31ஆம் நாள் நிலவரப்படி).	12,786	2,317

1959 ஆம் ஆண்டு வேலைவாய்ப்பகங்கள் (வேலைக் காலி இடங்களைக் கட்டாயமாக அறிவித்தல்) சட்டம் :

காலம்.		அறிவிக்கப் பட்ட காலி இடம்.	நிரப்பப் பட்ட காலி இடம்.
(i) 1—4—1980 முதல் 31—12—1980 வரை.	..	47,973	31,326*
(ii) 1—4—1981 முதல் 31—12—1981 வரை.	..	74,523	48,860*
(iii) 1—1—1981 முதல் 31—12—1981 வரை.	..	95,235	61,4[illegible]5*

*அறிவிக்கப்பட்ட காலி இடத்திற்கும் நிரப்பப்பட்ட இடத்திற்கும் இடையே உள்ள வேறுபாட்டிற்கு காரணம். (1) தேர்வு முடிவுகள் கிடைக்கப் பெறாததால், காலியிடங்கள் தொழில் அதிபர்களால் நிரப்பப்படாமல் உள்ளவை. (2) பொருத்தமான விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாத காரணத்தால் காலி இடங்கள் இரத்து செய்யப்பட்டவை. (3) எதிர்பார்க்கப்பட்ட அளவிற்கு காலி இடங்கள் ஏற்படாமை.

வேலையற்றோர் உதவித் திட்டம் :

31—12—1981 அன்று நிலவரப்படி பயனடைந்தவர்களின் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(1) 1—7—1980 முதல் 31—12—1981 வரை பயனடையத் தகுதி வாய்ந்தவர்கள் என்று அடையாளப்படுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை.	19,640
(2) தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களுக்கு, சரிபார்த்து உதவித்தொகை அளிப்பதற்காக வட்டாட்சியருக்குப் பூர்த்தி செய்யப்பட்டு அனுப்பப் பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை.	19,640

(3) வட்டாட்சியரால் அனுமதி அளிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை.	11,281
(4) 1-10-1981 வரை பயனடையத் தகுதி வாய்ந்தவர்களென அடையாளப்படுத்தப் பட்ட பார்வையிழந்தவர்களின் எண்ணிக்கை.	136
(5) இனம் 4-ல் உள்ள தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களுக்கு, சரிபார்த்து நிவாரணத் தொகை அளிப்பதற்காக மாநிலத்திலுள்ள வட்டாட்சியர்களுக்கு, பூர்த்தி செய்யப்பட்டு அனுப்பப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை.	50

1980-81, 1981-82 ஆம் ஆண்டுகளுக்கான, ஒதுக்கீடும் செலவும் குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

ஆண்டு.	ஒதுக்கீடு.	செலவு.
	ரூ.	ரூ.
(1) 1980-81	50,00,050	22,04,000
(2) 1981-82	80,00 000	45,27,000 (31-1-81 வரை)

10. ஆதிதிராவிடர் பழங்குடியினர்களுக்கு வேலை வாய்ப்பு உதவி—

	1-41981- முதல் 31-2-1981 வரை (sic)	
	ஆதி திராவிடர்.	பழங் குடியினர்.
(1) பதிவு செய்து கொண்டவர்கள்	54,980	2,556
(2) பணியில் அமர்த்தப்பட்டவர்கள்	8,604	276
(3) பதிவேட்டில் உள்ளவர்கல்	1,96,715	5,067

மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தின் பழங்குடியினருக்கான தனி வாழ்க்கை தொழில்
…லோசனை நிலையம், உதகமண்டலம் :

	1-4-1981 முதல் 31-12-1981 வரை.
பழங்குடியினர் வாழ்கின்ற பெரும்பகுதி இடங்களுக்கு, இப்பிரிவு சென்று வந்த பொழுது பதிவு செய்து கொண்ட பழங்குடியினரின் எண்ணிக்கை.	10,49
பதிவு செய்து கொண்ட காலத்தில் வழிகாட்டப்பட்ட பழங்குடியினரின் எண்ணிக்கை.	201
தொழில் பயிற்சி வசதி குறித்து தனிப்பட்ட வகையில் தகவல் வரப்பெற்ற பழங்குடியினரின் எண்ணிக்கை.	2,006
ஆதி திராவிடர் நல பள்ளிகள்/விடுதிகளில் பழங்குடியினருக்காக நடத்தப்பட்ட தொழிற்பயிற்சி உரைகளின் எண்ணிக்கை.	67
தனி வாழ்க்கைத் தொழில் ஆலோசனை நிலையத்தின் மூலம் பணியில் அமர்த்தப்பட்ட பழங்குடியினரின் எண்ணிக்கை—	63
(அ) பணியில்	14
(ஆ) தொழில் பழகுவோர் பயிற்சியில்	5
(இ) பயிற்சி திட்டத்தில்	

திங்கட்கிழமை, 1982 மார்ச் 29.

பங்குனி 16, துன்மதி—திருவள்ளுவராண்டு 2013.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் உள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9.30 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

நெடுஞ்சாலைத் துறையில் பொறியாளர்களுக்குச் சலுகைகள்.

*217. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 14—5—1974 தேதியிட்ட பொதுப்பணித்துறை அரசு ஆணை நிலை எண் 632-ல் அளிக்கப்பட்டுள்ள சலுகைகளை 14—5—1974-க்கு முன்னர் பட்ட மேற்படிப்பு படித்த நெடுஞ்சாலைத் துறைப் பொறியாளர்களுக்கும் அளிக்க வேண்டும் என்று நெடுஞ்சாலைத் துறை பொறியாளர்கள் சார்பில் 22—3—1979 தேதியிட்ட கோரிக்கை அரசுக்கு வந்துள்ளது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(இ) முன்னாள் தலைமைச் செயலாளர் அவர்கள் 4—4—1981 அன்று நடத்திய கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவிற்கிணங்க பாதிக்கப்பட்ட அலுவலர்கள் அரசுக்குத் தனித் தனியே முறையீடு செய்யலாம் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

*218. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நெடுஞ்சாலைத் துறை கிராமப் பணித் துறையில் முதுநிலைப் பட்டம் பெற்ற பொறியாளர்களுக்கு சிறப்புப் படியும், பதவி உயர்வில் சலுகையும் அளிக்கக் கோரி நெடுஞ்சாலைத் துறை பொறியாளர்கள் சார்பில் 22—3—1979 தேதியிட்ட மனு அரசுக்கு வந்துள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(இ) முதுநிலைப் பட்டதாரிப் பொறியாளர்களுக்கு, பதவி உயர்வு சலுகைகள் வழங்குவது குறித்த கோரிக்கையின்மீது, இப்பொழுதுள்ள விதி முறைகளில் மாற்றம் ஏதும் தேவை இல்லை என்று முடிவு செய்துள்ளது. அவர்களுக்குச் சிறப்புப் படி அல்லது 6 ஆண்டுகள் முன் ஊதிய உயர்வு வழங்கும் கோரிக்கை ஏற்புடையதாக இல்லை என்றும் முடிவு செய்யப் பட்டுள்ளது. ஆனால் புதிய மாதிரி ஊக்கத் திட்டம் கொண்டுவர ஒரு செயற் குறிப்பு, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீரமைப்புத் துறையின் பரிசீலனையில் உள்ளது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைமைச் செயலாளர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, தனிப்பட்டவர்கள் விண்ணப்பம் அனுப்பினால், அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிட்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பதிலளித்ததுபோல், எனக்கும் ஒரு கடிதம் வந்தது. அந்த அறிவிப்பிற்கேற்ப தனிப்பட்டவர்கள் விண்ணப்பம் அனுப்பினால் அந்த மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து ஆணையின் பலனை அவர்கள் அனுபவிக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்குவார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : விரைவாக நடவடிக்கை எடுக்க அறிவுரை கூறப்படும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : பொறியாளர்களுக்கு ஊக்க ஊதியம் அளிக்கப்படுவதைப் பொறுத்தவரையில் அவர்களுடைய கோரிக்கையை ஏற்ப தற்கில்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு நம் மாநிலத்தில் பொறியியலில் தேர்ச்சி பெற்றவர்கள் மிகவும் திறமையான வர்கள் நல்லமுறையில் தேர்ச்சி பெற்றவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய ஊதியத்தைப் பொறுத்தவரையில், மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால், அது மிகவும் குறைவாக இருப்பதால், அவர்களில் பலர் தனியார் துறைகளுக்குச் சென்று விடுகிறார்கள். ஆதலால் அரசுத் துறை அவர்களுடைய சிறந்த பணியைப் பயன்படுத்திக் கொள்ள முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஊதியக் குறைவால் அத்தகைய வாய்ப்பு இல்லாமல் அரசுத் துறைக்குக் கிடைக்காமல் இருக்கிறது. ஆகவே அவர்களுடைய ஊதியத்தை மாற்றியமைப்பது என்கிற கோரிக்கை ஒருபுறம் இருந்தாலும் கூட, அவர்கள் பெற்றிருக்கின்ற மேல் பட்டப் படிப்புக்கு—மற்ற சில மாநிலங் களில் 6 ஊக்க ஊதிய உயர்வு. இன்னும் சில மாநிலங்களில் 150 ரூபாய்

இன்சென்டிவ் என்று தரப்படுகிறது. அதுபோல் இங்கும் நாம் வழங்குவது குறித்து பரிசீலனை செய்யவேண்டும். அப்படிச் செய்தால் பொறியாளர்கள் அரசுத் துறையில் ஆர்வத்துடன் வேலை செய்ய முன்வருவார்கள். அரசு இது குறித்து மறு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இந்தப் பொறியாளர்களைப் பொறுத்தவரையில், நெடுஞ்சாலைத் துறை, பொதுப் பணித் துறை இன்னும் இதர துறைகளில் பணியாற்றுகின்ற அரசுப் பொறியாளர்களைப் பொறுத்த வரையில், இவர்களுக்கு மற்ற மாநிலங்களில் உள்ள ஊதியத்தை விட, குறிப் பாக கேரளாவை விடக் குறைவாக இருக்கிறது என்கிற நிலை இன்றைக்கு இருக்கிறது. அவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் சம்பளம் அதிகம் இல்லை என்ற காரணத்தால், ஏற்கெனவே அவர்களுடைய கோரிக்கை பரி சீலனைக்காக அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. அது இன்றைக்கு அரசின் பரிசீலனையில் உள்ளது. குறிப்பாக முதுகலைப் பட்டம் முடித்துள்ளவர் களுக்கு 6 ஆண்டுகள் முன் ஊதிய உயர்வு கொடுக்க வேண்டும் என்ற அவர் களுடைய கோரிக்கை ஏற்கப்படவில்லை. ஆனால் அதற்கு மாறாக முதுகலைப் பட்டதாரிகளுக்குப் புது மாதிரியான சலுகையை அமுலுக்குக் கொண்டுவரலாமா என்று நிர்வாகம் மற்றும் பணியாளர் சீர்திருத்தத் துறை பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : நிர்வாகம் மற்றும் பணியாளர் சீர்திருத்தத் துறை பொதுவாக இந்தமாதிரி எல்லாத் துறைகளிலும் "இன்சென்டிவ் இன் கிரிமென்ட்" என்று தருவதற்குப் பதிலாக ஒரு குறிப்பிட்ட தொகையை லம்ப் சம் (Lumpsum) ஆகக் கொடுத்து விடலாமா என்பது குறித்து பரிசீலனை செய்து வருகிறார்கள் இதுகுறித்து விரைவில் முடிவு எடுக்கவும் இருக்கிறார்கள். அப்படி முடிவு எடுக்கப்படுமானால், "இன்சென்டிவ் இன்கிரி மென்ட்' தருவது என்கிற தற்போதைய சலுகையைவிட அது மிகவும் குறை வாகவும் மோசமாகவும் இருக்கும் என்கிற அச்சம்கூட இருக்கிறது. ஆகவே டெக்னிகல் படிப்பு படித்துள்ள இவர்கள் இவர்களுடைய படிப்புக்கு ஏற்றவகை யில், இவர்களுடைய டெக்னிகல் தகுதிக்கு ஏற்ற வகையில், ஓரளவுக்குக் கணிச மான தொகை பெறும் வகையில் அமைய இந்தத் துறை—நிர்வாகம் மற்றும் பணியாளர் சீர்திருத்தத் துறைக்குப் பரிந்துரை செய்து அனுப்புமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இது இப்போது பரிசீலனையில் இருக்கின்ற நிலையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை யையும் சேர்த்துப் பரிசீலனை செய்து, அவர்களுக்கு மொத்தமாகப் பணம் கொடுப்பதா இல்லை வேறு விதத்தில் சலுகை அளிப்பதா என்பது பற்றி முடிவு செய்யலாம்.

ஆசிரியர்களின் சேமநல நிதி கணக்குகள்.

* 219 வினா.—செல்வி ஆ. லீலாவதி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகராட்சிப் பள்ளிகளின் ஆசிரியர் மற்றும் ஊழியர்களின் சேம நல நிதி, 31—3—1981 தேதிவரை ஒழுங்காக இல்லை என்பதும், ஒவ்வொரு வருடமும் இவர்களுக்குக் கணக்குத் தெரிவிப்பது இல்லை என்பதும் அரசுக்குத் தெரியுமா ?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (இ) இது சம்பந்தமாக தக்க அறிவுரைகள் மாநகராட்சி ஆணையருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

செல்வி ஆ. லீலாவதி : ஆசிரியர்களுடைய சேம நல நிதிக் கணக்கு பல ஆண்டுகளாகச் சீர் செய்யப்படாமல் இருக்கிறது. அது ஒழுங்காக இல்லை. ஆசிரியர்கள் 2 ஆயிரம் ரூபாய் அந்தக் கணக்கில் செலுத்தி இருந்தால்கூட, அவர்களுக்கு 200 ரூபாய் தான் இருக்கிறது என்று ஸ்லிப் வருகிறது. ஆகவே ஒவ்வொரு ஆசிரியருக்கும் தனித்தனியாக அட்டைகள் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இதுபோன்ற ஒழுங்கீனங்கள் ஏதாவது மாநகராட்சிப் பகுதிகளிலே நடந்தால், கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால் அட்டைகள் மறுபடியும் கொடுக்கத் தேவையில்லை என்பது என்னுடைய தனிப்பட்ட கருத்து. 31—3—1981-க்கு முன் சேம நல நிதிக் கணக்கு கொடுக்கவில்லையென்றால், அது உடனடியாகக் கொடுக்கப்பட வேண்டும் என்று நாங்களே நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். எனவே, இப்போது யார் யாருடைய கணக்கு சரியில்லை என்று என்னிடத்தில் சொல்லுவார்களேயானால், அதுகுறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : ஆசிரியர்களிடமிருந்து நல நிதிக்காகப் பிடிக்கப்படுகின்ற பணத்திற்கு ஆண்டுதோறும் பி. எப். அக்கவுண்ட் சிலிப் என்கிற பெயரால் ஒரு 'ஸ்லிப்' தரப்படுவது வழக்கம். இப்படித் தருவதன் மூலம் ஆண்டு முழுவதும் பிடிக்கப்பட்ட தொகை சரியாகக் கணக்கு வைக்கப்பட்டு இருக்கிறதா என்று ஆசிரியர்கள் அறிய முடியும். அதைப் பார்த்தபின் அதில்

ஏதாவது குறை இருந்தால், அந்தக் குறைகளைத் திருப்பிச் சுட்டிக்காட்டித் தீர்த்துக் கொள்ளுகின்ற வழக்கமும் நடைமுறையில் இருந்து வந்தது. ஆனால் இப்போது நகராட்சி, மாநகராட்சிப் பள்ளிகளில், பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு இம்மாதிரி 'அக்கவுண்ட் ஸ்லிப்' வழங்குவதில்லை. அதனால் 'அக்கவுண்ட் ஸ்லிப்'பில் பல குறைபாடுகள் இருக்கின்றன. ஏற்கெனவே வழங்கி வந்தது மாதிரி, ஆண்டுதோறும் வழங்கி வந்திருந்தால், இம்மாதிரி குறைகள் இருந்திருக்காது. ஆகவே இந்த 'அக்கவுண்ட் ஸ்லிப்'பை மாநகராட்சி, நகராட்சி உட்பட அனைத்துப் பள்ளி ஆசிரியர்களுக்கும் உடனடியாக வழங்க அரசு ஆணை பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஏற்கெனவே கொடுக்கப்பட்டு வருகிற அட்டைகளைப்பற்றி நான் கூறவில்லை. புதிதாக அட்டைகள் கொடுக்கப்பட வேண்டும் என்ற அவசியம் இல்லை, தேவையில்லை என்றுதான் நான் சொன்னேன். ஏற்கெனவே கொடுக்கப்பட்டு வருகிற அட்டைகள் இப்போதும் கொடுக்கப்பட்டு வருகின்றன. அதில் எங்காவது தவறுகள் இருப்பதாக இருந்தால், அதை அரசுக்குச் சுட்டிக்காட்டினால், அதுகுறித்து நடவடிக்கை எடுப்பேன் என்றுதான் குறிப்பிட்டேன்.

செல்வி ஆ. லீலாவதி : பொதுவாக ஆசிரியர்களுக்கு வருடத்திற்கு ஒரு தடவை இந்த 'அக்கவுண்ட் ஸ்லிப்' வந்து கொண்டிருக்கிறது. ஆசிரியர்கள் கையில் பாஸ் புக் மாதிரி ஒன்று இருந்தால், அவர்கள் இந்த பாஸ் புக்கில் பிடித்தம் செய்யப்படும் ரூபாய் மற்றும் அது சம்மந்தமான குறிப்புகளை அங்கு சென்று எழுதிக் கொள்வார்கள், இதன்மூலம் அப்படியே 'அக்கவுண்ட் ஸ்லிப்' வராத பட்சத்தில் அவர்களுடைய கணக்குபற்றி அவர்கள் தெரிந்து கொள்ள வாய்ப்பாக இருக்கும். அதற்கேற்ற வகையில் இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா? அவர்களுக்குப் பாஸ் புக் வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஆசிரியர்களுக்குச் சரியான கணக்குகளை அட்டைகள் மூலம் கொடுக்க வேண்டும் என்பதுதான் இந்த அரசின் கொள்கை. எங்கெங்கு கணக்குகள் சரியாக இல்லை, கணக்குகள் சரியாகக் கொடுக்கப்படவில்லை என்கிற ஐயப்பாடு இருக்கிறதோ அவற்றை எல்லாம் என்னிடத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னால், உடனடியாக நான் கவனித்து நடவடிக்கை எடுப்பேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Superintending Engineers' Posts in Highways Department.

* 220 Q. THIRU E. S. VENKATESAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that a number of vacancies in the cadre of Superintending Engineers in the Highways Department, are not being filled up for the past several months; and

(b) if so, the reasons for such delay ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (இ) சில கண்காணிப்புப் பொறியாளர் பணியிடங்கள் கூடுதல் பொறுப்பில் இருந்து வந்தன. நிர்வாகக் காரணங்களினால் அப்பணியிடங்களுக்கு முறையான பதிலிகளை அமர்த்த இயலவில்லை. அவற்றில் இப்போது முறையான பதிலிகள் அமர்த்தப் பட்டுள்ளனர்.

சிறப்பு தொழுநோய்ப் படி.

* 221 வினா.—**செல்வி ஆ. லீலாவதி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சுகாதாரப் பணிகள் இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள தொழு நோய்த் துறையில் பணியாற்றும் மருத்துவ அதிகாரிகள், அரசு ஆணைப்படி சிறப்புத் தொழு நோய்ப்படி பெறுவதற்குத் தகுதியுடையவர்களாக இருக்கையில் மருத்துவக் கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள தொழு நோய்ப் பிரிவில் பணியாற்றும் மருத்துவ அதிகாரிகள் அத்தகைய படியைப் பெறத் தகுதியில்லை என்பதை அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், பின்னவருக்கும் மேற்சொன்ன படியைக் கொடுக்க அரசு முன்வருமா ?

(முற்பகல் 9.40)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்.

(இ) மருத்துவக் கல்லூரி இயக்குநரின் கீழ் செயல்படும் தொழு நோய்க் கட்டுப்பாட்டுத் துறையில் பணி புரியும் மருத்துவ அலுவலர்கள் தனியாகத் தொழில் புரிய அனுமதிக்கப்பட்டிருப்பதால், இவர்களுக்குச் சிறப்புப் படி

அளிப்பதில்லை. மேலும் தமிழ் நாடு மூன்றாவது ஊதியக் குழு சிறப்புப் படியை வேறு எந்தப் புதிய பதவியினருக்கும் அளிக்கப் பரிந்துரை செய்யவில்லை.

செல்வி ஆ. லீலாவதி : சுகாதாரப் பணிகள் இயக்குநர் கட்டுப்பாட்டிலுள்ள தொழு நோய்த் துறையில் பணியாற்றும் மருத்துவ அதிகாரிகள் தொழு நோயாளிகளுடன் வேலை செய்வதால், அவர்களுக்கு ' ரிஸ்க் அலவன்ஸ் ' தரப் படுகிறது. ஆனால் மருத்துவக் கல்லூரிக் கல்வி இயக்குநர் கட்டுப்பாட்டில் உள்ளவர்களும் தொழு நோயாளிகளைக் கவனிக்க வேண்டியிருப்பதால், அவர்களுக்கும் இந்த சிறப்புத் தொழு நோய்ப் படி கொடுப்பது நலமாக இருக்கும் என்பதால் அவர்களுக்கும் இத்தகைய ' ரிஸ்க் அலவன்ஸ் ' தரப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். எனவே இதுகுறித்து, அரசு தன் கொள்கையை மறு பரிசிலனை செய்ய முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல், மூன்றாவது ஊதியக் குழு இதைப் பரிசிலனை செய்து இவர்களின் கோரிக்கையை நிராகரித்திருக்கிறது. நான்கூட அவர்களுக்கும் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்றுதான் கருதினேன். என்றாலும் ஊதியக் குழு இவ்வாறு நிராகரித்ததற்குக் காரணம் அதில் பணியாற்றுகிறவர்கள் டெர்மடாலஜிஸ்ட் மற்றும் ஸ்கின் ஸ்பெஷலிஸ்ட்களாக இருக்கிறார்கள். கல்லூரிகளோடு இணைந்துள்ள மருத்துவ மனைகளில் ஆபத்திற்கான வாய்ப்புகள் குறைவு என்ற அடிப்படையில் ரிஸ்க் அலவன்ஸ் தேவையில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இத்தகைய மருத்துவர்கள் தனியாகப் பிராக்டிஸ் செய்யும் வாய்ப்பும் இருக்கிறது. ' ரிஸ்க் அலவன்ஸ் ' எவ்வளவு கிடைக்குமோ அதை ஒரு நாளில் பிராக்டிஸ் மூலம் சம்பாதிக்க முடியும், ஆகவே, தேவையில்லை என்று தரப்படவில்லை. அதுவும் ஊதியக் குழுவின் பரிந்துரை காரணமாகத்தான் கொடுக்கப்படவில்லை.

திரு. க. அருணாசலம் : தற்போது, தொழு நோயும் மற்ற நோய்களைப் போன்ற ஒரு நோய்தான் என்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதோடு, அனைத்து மருத்துவ மனைகளிலும் தொழு நோய்க்கான மருத்துவம் செய்யப்பட வேண்டும் என்ற கருத்தும் ஏற்கப்பட்டிருக்கிறது. இந்த அடிப்படையில் அந்த மருத்துவர்களுக்கும் வழங்க சிறப்பு ஊதியத்தை மறுபரிசிலனை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு உறுப்பினர் திரு அருணாசலம் அவர்கள் தன் வினாவின் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் செல்வி லீலாவதி அவர்களுக்குப் பதில் அளித்திருக்கிறார்கள் என்றுதான் நான்

நினைக்கிறேன். இருந்தாலும் தொழு நோயைப் பொறுத்தவரை, "ரிஸ்க் அலவன்சைக்" கூட பெரிதாகக் கருதவில்லை. நமக்கு எவ்வளவு ஆர்வம் இருக்கிறதோ அந்த அளவுக்குப் பணியாற்ற முடியும். நேற்றைக்கு நான் தர்மபுரியில் தொழு நோய் மருத்துவ மனையில் இரண்டு மணி நேரம் இருக்கும் வாய்ப்பு கிடைத்தது. அங்கே தரப்பட்ட கூல் டிரிங்சைக்கூட நான் குடித்தேன். அதைச் சாப்பிடுவதற்குக்கூட பலர் பயப்படுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், அது மாதிரி ஒரு தேவையற்ற பயம், தேவையற்ற சந்தேகம் மக்களிடம் இருக்கிறது. டாக்டர்களிடம்கூட இருக்கிறது. இதில் எந்தவிதமான பயமும் தேவையில்லை. எல்லா மருத்துவ மனைகளிலும் தொழு நோயாளிகள் தாராளமாக அனுமதிக்கப்படலாம். அதில் எந்தவிதமான அச்சமும் தேவையில்லை என்பதுதான் நவீனமான கருத்தாகும். இதை ஓர்ல்டு ஹெல்த் ஆர்கனைசேஷனும் நூற்றுக்கு நூறு ஏற்றுக்கொண்டிருக்கிறது.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தற்போது தமிழ் நாட்டிலுள்ள தொழு நோயாளிகளின் எண்ணிக்கை எவ்வளவு? அந்த எண்ணிக்கை ஆண்டுதோறும் குறைந்து வருகிறதா அல்லது கூடி வருகிறதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : முன்பிருந்ததைவிட இப்போது இருக்கும் எண்ணிக்கை குறைந்து கொண்டுதான் இருக்கிறது. தொழு நோயைப் பொறுத்தவரையிலும், அகில இந்தியாவிலும் நம்முடைய மாநிலத்தின் பணிகளைத்தான் பாராட்டியிருக்கிறார்கள். சென்ற ஆறு ஆண்டுகளில் தொழு நோயாளிகளின் எண்ணிக்கையைப் பொறுத்த சதவிகம் குறைந்துகொண்டுதான் வந்திருக்கிறது. 1976 ஆம் ஆண்டில் 1,000-க்கு 20 பேர் என்று இருந்த நிலைமை மாறி இந்த ஆண்டு 1,000-க்கு 14 என்று குறைந்திருக்கிறது. அந்த அளவுக்கு அது வேகமாகக் குறைந்து வருகிறது நேற்றைக்கு முழுமையாக நான் தர்மபுரி மாவட்டத்தில் இருந்ததால், சிலவற்றை அங்கே தெரிந்துகொள்ள முடிந்தது. 1976 ஆம் ஆண்டில் அங்கே 1,000-க்கு 28 ஆக இருந்த நிலைமையைக் கட்டுப்படுத்தி, இப்போது 1,000-க்கு 10 ஆகக் கொண்டு வந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு க. அருணாசலம் அவர்கள் குறிப்பிட்டதைப் போல், திட்டமிட்டு தைரியமாக இந்தப் பிரச்சினையை நாம் அணுகினால், நிச்சயமாக அதை வெற்றிகாமாகச் சமாளிக்க முடியும். 4, 5 ஆண்டுகளில் தமிழ் நாட்டிலிருந்து தொழு நோயை அறவே நீக்க வாய்ப்பிருக்கிறது என்பதைக்கூட சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

செல்வி ஆ. லீலாவதி : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது, தொழு நோயாளிகள் மருத்துவ மனையில் தான் டிரிங்க்ஸ் கூட சாப்பிட்டதாகச் சொன்னார்கள். தொழு நோய் எவ்வாறு பரவுகிறது என்று தெரிந்தால் அவர்களோடு மக்கள் அருவருப்பு இல்லாமல் பழக முடியும். தொழு நோயாளிகளின் எச்சல்பட்டால்கூட, தொழு நோய் வந்துவிடும் என்ற பயம் இப்போது பலருக்கும் இருக்கிறது. எனவே தொழு நோய் எவ்வாறு பரவுகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இங்கே அதைப்பற்றி நான் விவரமாகச் சொல்வது என்பது பொருத்தமாக இருக்காது என்று கருதுகிறேன். நான் என்னுடைய அனுபவத்தை மட்டும் சொல்லவில்லை. பெரிய எக்ஸ்பர்ட்டுகள் சொல்லுகிற கருத்தை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். 100-க்கு 90 சதவிதம் நாம் அனாவசியமாகப் பயப்படுகிறோம். அந்த அளவுக்குப் பயம் நமக்குத் தேவையில்லை. ஒரு "கான்ஸ்டண்ட் காண்டாக்ட்" இருந்தால், அதாவது தொழு நோயாளிகளோடு தொடர்ந்து நமக்கு காண்டாக்ட் இருந்தால், அது வருவதற்கான வாய்ப்பு இருக்கும். இதுதான் திட்டவட்டமான, ஆதார பூர்வமான கருத்து. சில தொழு நோயாளிகளைப் பார்த்தால், மிக அதிகமாக இருப்பதைப் போலத் தோன்றும். அவர்களைப் பொறுத்தும் கூட "பாசிடிவ், நெகடிவ் சிலைடு" எடுத்துப் பார்த்து முடிவு செய்து, அது 'நெகடிவ்' என்று டாக்டர்களால் சர்டிபிகேட் கொடுக்கப்பட்டுவிட்டால், "அதாவது இன்பெக்ஷயஸ் நிலைமையிலிருந்து அவர் ஃப்ரியாக இருக்கிறார்" என்று சர்டிபிகேட் கொடுக்கப்பட்டுவிட்டால், இவருடைய நோய் தொத்து நோய் அல்ல என்று சர்டிபிகேட் கொடுத்துவிட்டால், நாம் கண்டிப்பாக அவரோடு பழகலாம். சென்சேஷன் தான் இருக்காது. அப்படி சர்டிபிகேட் கொடுக்கப்பட்டவர்களை நாம் அரவணைத்துக் கொண்டு சமுதாயத்தில் வாழ முடியும். இதன் மூலம் இந்த வியாதி கொஞ்சம் தோன்றும்போதே பலர் சொல்லிவிடுவார்கள். அதுகூட நல்லதுதான்.

ஊராட்சி ஒன்றிய மருத்துவமனைகள்.

* 222 **வினா.—திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

ஊராட்சி ஒன்றிய மருத்துவமனைகளில் ஒரு வருடத்திற்கு மேல் மருத்துவர் இல்லாமல் இயங்கும் மருத்துவமனைகள் மாவட்ட வாரியாக எத்தனை?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

வடாற்காடு	3
தென்னாற்காடு	3
தர்மபுரி	3
கோயம்பத்தூர்	4
திருநெல்வேலி	2
திருச்சி	2

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மருத்துவ மனைகளில் மருத்துவர்கள் இல்லா திருப்பது மக்களுக்கு எவ்வளவு தீங்கு விளைவிக்கும் என்பதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்கள். ஏறத்தாழ 12 இடங்களுக்கு மேலாக மருத்துவர்கள் இல்லாத நிலை இருப்பது தெரிகிறது. இதற்குக் காரணம் என்ன? அந்த இடங்கள் இப்போதாவது நிரப்பப்பட்டு உள்ளனவா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : எந்தெந்த இடங்கள் என்கிற முழு விவரத்தோடு பட்டியல் என்னிடம் இருக்கிறது. இருந்தாலும் தமிழகத்தில் ஊராட்சி ஒன்றியங்களால் நடத்தப்படுகிற ரெகுலர் டிஸ்பென்சரிகள் 181 இருக்கின்றன. சித்த மெடிசனைப் பொறுத்தவரை, 56 டிஸ்பென்சரிகள் இருக்கின்றன. ஆயுர்வேத டிஸ்பென்சரிகள் 19 இருக்கின்றன. யுனானி டிஸ்பென்சரிகள் 3 இருக்கின்றன. அதைப்போலவே அவைகள் தவிர ரூரல் டிஸ்பென்சரீஸ் என்ற இரண்டாவது வகையில் ஏறத்தாழ 480 டிஸ்பென்சரிகள் இருக்கின்றன. இப்படி ஒட்டுமொத்தமாக 700 டிஸ்பென்சரிகள் இருக்கின்றன. இவைகளில்தான் வேகன்சி பொசிஷன் 12 என்று சொல்லியிருக்கிறேன். இது மிகவும் குறைவான எண்ணிக்கைதான். இருந்தாலும்கூட அவைகளையும் நிரப்புவதற்கு தற்காலிகமாக எடுக்கலாமா என்றும் யோசனை செய்தோம். அப்படி தற்காலிகமாக மருத்துவர்களை நியமித்தால், மீண்டும் அவர்களை சர்விஸ் கமிஷன் 'ரெகுலரைஸ்' செய்ய வேண்டிய நிலைமை இருக்கிறது. எனவே இப்போது படிப்படியாக அந்த இடங்களை நிரப்பிக் கொண்டிருக்கிறோம். முன்பிருந்ததைவிட வேகமாகப் பல இடங்களில் நிரப்பிக் கொண்டிருக்கிறோம்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : இப்படி தேர்வாணைக் குழுவின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படும் டாக்டர்களின் பதவி உறுதியாகிவிடுகிற காரணத்தால் சில இடங்களுக்கு அவர்களைப் போடும்போது, போகாமல் இருந்துவிடு

கிறார்கள். இதன் காரணமாக சில மருத்துவ மனைகளில் மருத்துவர்கள் இல்லாத நிலை ஏற்படுகிறது. அதிலும் குறிப்பாக நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், பல டாக்டர்கள் அங்கே வராத நிலை இருக்கிறது. எனவே இதன் காரணமாகத் தற்காலிகமாக மருத்துவர்களை நியமிக்க வேண்டும் என்று அரசு முடிவு செய்யுமா? தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இப்படிப்பட்ட இடங்களுக்குப் போடப்படும்போது, அவர்கள் அங்கே போகாமல் இருந்தால், அவர்கள்மீது அரசு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்திருக்கிறது?. நீலகிரி மாவட்டத்தில் மிகுந்த குளிர் இருப்பதன் காரணமாக, அங்கே சென்று பணியாற்ற பல டாக்டர்கள் அஞ்சுவதன் காரணமாக, மருத்துவப் படிப்பிற்கு மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும்போது, நீலகிரி மாவட்டத்தைச் சார்ந்தவர்களை அதிகமாக எடுப்பது என்று அரசு முடிவெடுத்தால், அது உறுதுணையாக இருக்காதா?.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாவட்ட ரீதியில் மாணவர்களை நாம் எடுக்க முடியாது. அப்படிச் செய்தால், கோர்ட் அதை "ஸ்ட்ரைக் டவுன்" செய்திருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டபோது, இப்படிச் செய்யலாம் என்று சட்டசபையில் சொன்னார். ஆனால் அப்படிச் செய்வதை கோர்ட் அனுமதிக்கவில்லை என்பதையும் அவரே சொன்னார். இப்போது மருத்துவர்கள் போகாமல் இருக்கிறார்கள் என்றால், அதற்காக நாம் தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொள்கிறோம்; 15 நாள் அவகாசம் பொதுவாகக் கொடுக்கிறோம். சர்விஸ் கமிஷனால் தேர்ந்தெடுக்கப் பட்ட டாக்டர்கள் அந்தக் குறிப்பிட்ட 15 நாட்களில் போய்ச் சேரவில்லை என்றால், தயவு தாட்சண்யம் எதுவும் காட்டாமல், உடனடியாக அவர்களைப் பணி நீக்கம் செய்து அவர்கள் இடத்திற்குப் போடுவதற்கு என்று 10, 50 பேரை செலக்ட் செய்து அனுப்புகிறோம். இவ்வாறு தயவு தாட்சண்யம் இல்லாமல் இடங்களை நிரப்புவதற்கான நடைமுறைதான் தற்போது கையாளப்படுகிறது.

(முற்பகல் 9.50)

திரு. க. மீனாட்சிசுந்தரம் : ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனைகளை யெல்லாம் அரசு மருத்துவ மனைகளாக மாற்றுகிற உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா? இப்போது ஏதேனும் அப்படி எடுக்கப்பட்டிருக்கிறதா? அப்படி ஏதாவது திட்டம் இருந்தால் ஆண்டுதோறும் கொஞ்சம் கொஞ்சமாக எடுக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இப்போது இருக்கக் கூடிய நிலைமையே நீடித்துக் கொண்டிருந்தால், நன்றாக இருக்குமென்று கருதுகிறேன். ஊராட்சி ஒன்றியங்களே தேர்வு செய்யக் கூடிய நிலைமை இருக்கிறது. இப்போது அங்கே 'வேகன்சி' ரொம்பக் குறைவாக இருக்கிறது. நான் ஏற்கெனவே அறிவித்த மாதிரி, 12, 14 இடங்கள் தான் காலியாக இருக்கின்றன. இதை அரசாங்கமே எடுத்துக்கொண்டால், மேலும் காலி இடங்களின் எண்ணிக்கை அதிகமாகும். ஏனென்றால் இதற்காக டாக்டர்களை வேறு போட வேண்டும். அதற்கென்று தனியாக ரெக்ரூட்மென்ட் நடப்பதால், இப்போது இடங்கள் காலியாக இருப்பது ரொம்பவும் குறைவாக இருக்கிறது. அதை மாற்றியமைப்பது எந்தவிதப் பயனும் தராது என்பது என்னுடைய கருத்து.

திரு க. இராமமூர்த்தி : ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனைகளில் மருத்துவர்கள் ஓராண்டிற்கு மேல் இல்லாமல் இருந்திருக்கிற நிலைமைக்கு, தேர்வாணைக் குழுவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் கிடைக்கவில்லை என்பதுதான் காரணமா? அதற்காக அரசாங்கத்திடம் ரிசர்வ் லிஸ்ட் இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறதா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன். ஓராண்டுக்கு மேல் மருத்துவர்கள் இல்லாமல் மருத்துவ மனை எப்படி இயங்கியது? அல்லது இயங்காமலே இருந்ததா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பஞ்சாயத்து ஒன்றியங்களின் கீழ் இயங்குகின்ற மருத்துவமனைகளைப் பற்றி நான் சொல்லியிருக்கிறேன். அதிலே

Doctors are working under the administrative control of the respective Panchayat Unions. Appointment, punishment and discharge are dealt with, with the concurrence of the Director of Medical Services and Family Welfare and the Director of Indian Medicine.

அந்த வகையிலே நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். இது போன்ற கேள்விகள் வரும் என்பதாலேதான் குறிப்புகளைத் தயார் செய்து வைத்துக் கொண்டிருக்கிறேன். டிரான்ஸ்பரைப் பொறுத்த வரையில்,

Within Panchayat Union limit the Commissioner;
Within the District: Collector
Between districts: Director of Rural Development

டி. ஆர். டி. தான் அதை அணுகுகிறார்கள். 'பனிஷ்மெண்ட்' என்று வரும் போது, நல்வாழ்வுத் துறை வருகிறது. இப்படி இரண்டு இலாக்காக்களும் சேர்ந்து செயல்படுகின்றன. ஆகவே இதிலே காலியிடங்கள் குறைவாக இருக்கின்றன. நல்வாழ்வுத் துறையை எடுத்துக்கொண்டால், காலியிடங்கள் அதிகமாகும். இந்தக் காலியிடங்களை இன்றைக்கு நிரப்பியிருக்கிறோம். சின்னச் சின்ன மருத்துவமனைகளாக இருப்பதால், அதிக நோயாளிகள் வருவது கிடையாது. 20, 30 பேர் வந்து கொண்டிருக்கிறார்கள். அங்கேயிருக்கிற கம்பவுண்டர் மருந்து கொடுத்துக் கொண்டிருக்கிறார். அல்லது பக்கத்திலேயுள்ள மருத்துவமனைக்குச் சென்றிருக்கிறார்கள். இருந்தாலும் டாக்டர்கள் **இல்லாமல் இருக்கக்கூடாது என்பதற்காக நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கி**றோம்.

திரு. க. இராமமூர்த்தி : இதிலே ஏற்பட்டிருக்கிற நிர்வாக நிலைமைகளை ஒத்துக்கொள்கிறேன். மருத்துவர்கள் இல்லாமல் மருத்துவ மனைகள் ஓராண்டுக் காலமாக இயங்கியிருக்கின்றன என்பது தெரிந்தும்கூட, உடனடியாக நடவடிக்கை எடுக்காத நிலைமை எப்படி ஏற்பட்டது? மருத்துவர்கள் இல்லாமல் ஒரு மருத்துவமனை இயங்க முடியாது. ஓராண்டுக் காலமாக அப்படி 12, 13 இடங்களில் இருந்திருக்கின்றது. நோயாளிகள் குறைந்த எண்ணிக்கையில் இருந்திருந்தாலும், விளைவுகள் விபரீதமாக இருந்திருக்கும். இது எப்படி அரசாங்கத்தின் கவனத்திற்கு வராமல் போயிற்று?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனைகளைப் பொறுத்த வரையில், சுகாதாரத் துறையிலிருந்து டாக்டர்கள் அனுப்பப்படுவதில்லை. அங்கே நியமிப்பதற்காக 'அட்வர்டிஸ்மென்ட்' செய்கிறோம். சில நேரங்களில் 'பார்ட்டிகுலர்' ஆஸ்பத்திரிக்குத் தேவை என்று கூட போடுகிறோம். அதற்கு டாக்டர்கள் வர வேண்டும். அப்படி டாக்டர்கள் வரவில்லையென்றால், காலியாக இருக்கும். ஆகவே மற்ற இடங்களிலிருந்து 'டிரான்ஸ்பர்' செய்ய வேண்டும். மேலும் 'ரிசர்வ் லிஸ்ட்' வைக்க வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறோம். 'ரிசர்வ் லிஸ்ட்' வைத்தால் இந்தப் பிரச்சினை வராது. ஆனாலும் கூட ஒவ்வொரு முறையும் தேர்வு செய்யப்பட்டவர்களின் 'லிஸ்ட்' காலியாகிவிடுகிறது. தேர்வாணைக் குழு ஒரு குறிப்பிட்ட அளவிற்குத்தான் 'ரிசர்வ் லிஸ்ட்' வைக்க வேண்டுமென்று வைத்திருக்கிறார்கள். இந்தச் சிக்கலான பிரச்சினையில் அரசுக்கும், சர்விஸ் கமிஷனுக்கும் உள்ள பிரச்சினையை முறைப்படுத்தி, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன மாதிரியாக, காலியிடங்கள் இல்லாமல் பார்த்துக்கொள்ள நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள் 223, 224 ஒத்தி வைக்கப்படுகின்றன. வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

(1) விதிகள் குழுவிற்கு உறுப்பினர்களை நியமிப்பது குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மேலவை விதி 192-ன் படி 1982-83 ஆம் ஆண்டுக்கான விதிகள் குழுவிற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்களை நான் நியமித்துள்ளேன் :—

1. மாண்புமிகு மேலவைத் தலைவர்—தலைவர்
2. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே
3. மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்
4. டாக்டர் தி. இரா. சனார்த்தனம்
5. திரு. ம. சங்கரலிங்கம்
6. திரு. த. சந்தோஷம்
7. திரு. க. இராமமூர்த்தி
8. திரு. ஜே. எம். மியாகான்
9. திரு. எ. ஆர். தாமோதரன்
10. திரு. ப. மாணிக்கம்
11. திரு. ஆ. நல்லசிவன்
12. திரு. வி. வி. வி. ஆனந்தம்
13. திரு. ஜி. சுவாமிநாதன்
14. திரு. ஜீ. வசந்த பை

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது, நீர்ப்பாசனத் துறை அமைச்சர் (மேலவை முன்னவர்) அவர்கள் அலுவல் முறையில் உறுப்பினராக இருப்பார்.

(2) பேரவையிலிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட சட்டமுன்வடிவுகளின் பிரதிகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன் :—

1. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/1982.)

2. 1982 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/1982.)

3. 1982 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/1982.)

3. கவன ஈர்ப்பு.

(1) தஞ்சை மாவட்டத்தில் குழந்தைகளுக்குப் பரவலாக அம்மை நோய் கண்டிருப்பது குறித்தும், திருமருகல் ஒன்றியத்தைச் சேர்ந்த ஆலத்தூர் கிராமத்தில் ஒரு வாரத்தில் 15 குழந்தைகள் இறந்திருப்பது குறித்தும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

"தஞ்சை மாவட்டத்தில் குழந்தைகளுக்கு பரவலாக அம்மை நோய் கண்டிருப்பதும், திருமருகல் ஒன்றியத்தைச் சேர்ந்த ஆலத்தூர் கிராமத்தில் கடந்த ஒரு வாரத்தில் 15 குழந்தைகள் இறந்திருப்பது குறித்தும்."

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே பரவலாகக் குழந்தைகளுக்கு அம்மை நோய் கண்டிருப்பது பற்றி கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே குறிப்பிட்டிருக்கிறேன். ஆனால் விவர அறிக்கையிலே திருமருகல் ஒன்றியத்தைச் சேர்ந்த ஆலத்தூர் கிராமத்தைப் பற்றி மட்டும் தகவல் தரப்பட்டிருக்கின்றது. தஞ்சை மாவட்டம் பூராவும் அம்மை நோய் இருக்கிறது. குறிப்பாக நான் இருக்கின்ற அந்தப் பகுதியில், என் மகனுக்கே கூட அம்மை நோய் கண்டிருக்கிறது. மேலும் அந்தப் பகுதியிலே பல குழந்தைகள் அம்மை நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மாவட்டம் பூராவும் ஆங்காங்கே இப்படி அம்மை நோய் தோன்றியிருப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது, அதிலே ஏதேனும் இறப்பு உண்டா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

@ 698 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்தவுடனே, டைரக்டர் ஆஃப் பப்ளிக் ஹெல்த் அவர்களிடம் தொடர்பு கொண்டு மாவட்டம் பூராவும் என்ன நிலைமை என்று விசாரிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறேன்.

"I have to state that, as reported by the District Health Officer, Thanjavur, there are no running cases of measles and chicken-pox in Alathur village of Thirumarugal Panchayat Union. We have also combed the entire district. In the entire district there were 5 running cases of mumps. There was one death on 12th February 1982 in the village due to nephritis." நெப்ரெட்டிஸ் என்ற நோய் சில இடங்களில் இருக்கிறது. அம்மை நோய் இல்லையென்றாலும் கூட, அதற்கு ஒரு பெயர் வைத்து அம்மை நோய் என்று அவர்கள் அழைக்கிறார்கள் என்று விவர அறிக்கையிலேயே கொடுத்திருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல்,

List of measles cases during 1981 in Alathur village:—

Veni, daughter of Kaliaperumal—died on 18th July 1981.

Rajeswari, daughter of Venkatachalam—died on 16th July 1981.

Sathiya, daughter of Balachandran—recovered.

Karthikeyan, son of Govindaraju—recovered.

என்று 4 கேஸ்களைப் பற்றித் தகவல் கொடுத்திருக்கிறார்கள். மாவட்டத்திலே இத்தகைய பிரச்சினைகள் இல்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: இந்த விவர அறிக்கையிலே 1981 ஆம் ஆண்டு ஜூலையில் தட்டம்மை கண்டு இரண்டு பேர் இறந்ததாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அம்மை நோயின் காரணமாக இறந்ததாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலும், இறப்புப் பதிவேட்டில் அந்தக் காரணத்தைக் கூறாமல் மாந்தம், காய்ச்சல் ஆகியவற்றின் காரணமாகத்தான் இறந்தார்கள் என்று இறப்புப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைப் போலவே அம்மை நோயால் இறந்தவர்களுக்கெல்லாம் வேறு காரணத்தாலே இறந்தார்கள் என்று எத்தனை பேருக்கு எழுதியிருக்கிறார்கள்? "நெஃப்ரைட்டிஸ்" என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை "பேது அம்மை" என்று கிராமத்தார்கள் சொல்லுகிறார்கள். ஆகவே அது அம்மை அல்ல வேறு நோய், ஆகவே அச்சம் தேவையில்லை என்று மக்களுக்குப் புகட்டுகின்ற வகையிலே செய்தி பரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா?

(முற்பகல் 10-00)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கொஞ்சம் அச்சம் எழுப்பாமல் இருக்க வேண்டும் மக்கள் தைரியமாக இருக்கிறார்கள். சில நேரங்களில் சில விஷயங்களைக் கற்பனையாகச் செய்யக் கூட வாய்ப்பு இருக்கிறது. எதிர்க் கட்சியிலே இருப்பவர்கள் கொஞ்சம் எக்ஸ்ட்ராவாகவே சொன்னால்தான் நடவடிக்கை எடுப்போம் என்று சொல்கின்றார்கள் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு மேல்வைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஆசிரியர்கள் கட்சி தானே.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: அவர் எதிர்க் கட்சியாக இருந்தாலும் எதிர்க் கட்சியல்ல. அந்த உரிமையோடு சொல்கின்றேன். அதிலே எந்தவிதமான அச்சமும் வேண்டாம். அள்ளு மாந்தம் என்று தமிழிலே சொல்வார்கள். ஆங்கிலத்திலே சொல்லும்போது, பிராங்கோ நிமோனியா என்ற வார்த்தைகளைச் சொல்வார்கள். அம்மை இருக்கிறபோது தான் பிரச்சினை. இந்தியாவிலே ஒரு கேஸ் கூட கிடையாது. தமிழ் நாட்டிலேயும் கிடையாது. ஸ்மால் பாக்ஸ் கம்ப்ளீட்டாக எராடிகேட்டட். இன் தி சப்-கான்டினன்ட் சிக்கன்பாக்ஸ்-ஐப் பார்த்துவிட்டு அம்மை மாதிரி இருக்கிறது என்ற அச்சம் நமக்குத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(2) சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் மூன்று மாதங்களாகத் தொடர்ந்து எக்ஸ்ரே பிலிம் இல்லாதது குறித்து.

திரு. க. இராமமூர்த்தி (திரு. ஆ. நல்லசிவன் சார்பில): மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, "சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் மூன்று மாதங்களாகத் தொடர்ந்து எக்ஸ்ரே பிலிம் இல்லாததன் காரணமாக, நோயாளிகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருப்பதால் மக்கள் மத்தியிலும், நோயாளிகள் மத்தியிலும் எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து" மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

@ 699-700 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

திரு. க. இராமமூர்த்தி : மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விவர அறிக்கை இந்த நிலைமையை அப்படியே மறுப்பதாக அமைந்திருக்கிறது. மாதம் வாரியாக, ஒவ்வொரு மாதமும் எவ்வளவு எக்ஸ்ரே எடுப்பது என்ற கணக்கை அரசு பரிசிலனை செய்ததா? அப்படிச் செய்திருந்தால், சராசரியாக எவ்வளவு எடுக்கப்படுகிறது, இந்த மூன்று மாதங்களில் எடுத்திருப்பதைவிட குறைந்திருக்கிறதா அல்லது சாதாரமையாக இருந்திருக்கின்றதா அல்லது அதிகரித்திருக்கிறதா என்ற விவரங்களைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, சராசரியாகக்கூட எனக்குக் கணக்கு வரவழைத்துத் தரப்பட்டிருக்கிறது. சராசரியாக 10 சதவிகிதம் குறைவாகவே பயன்படுத்தியிருக்கிறார்கள். அதற்குக் காரணம் தட்டுப்பாடு என்பது அல்ல. மிக எச்சரிக்கையாக அதைச் செலவு செய்ய வேண்டும். ஒரு 'காஸ்ட்லி மெட்டீரியல்' என்ற அளவில் ஒட்டுமொத்தமாக எல்லா மாநிலங்களுக்கும் சொல்லியிருக்கிறார்கள். தேவையில்லாத போது எக்ஸ்ரே எடுப்பதைத் தவிர்க்க வேண்டும். மற்றபடி மிக மிக அவசியம் இருந்தால், எந்தவிதமான தயக்கமும் இல்லாமல், உடனடியாக எடுக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையிலே கொஞ்சம் குறைவாகப் பயன்படுத்தியிருப்பார்கள். யாருக்கும் எக்ஸ்ரே இல்லாமல் போய்விடவில்லை.

To tide over difficulties, if any, in obtaining films from the Hindustan Photo Film Company, the heads of medical institutions have been permitted by the Director of Medical Education to purchase x-ray films in the open market by calling for quotations.

இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் பிலிம் கொடுப்பதிலே காலதாமதப் படுத்தியதால், தட்டுப்பாடு ஏற்பட்டது. நாம் கேட்ட நேரத்திலே கொடுக்கவில்லை. கேட்டால், கேட்டதில் 50 சதவிகிதம் தான் அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே புதிதாக ஒரு உத்தரவு போட்டு, தேவையான அளவுக்கு பிலிம் கிடைக்கவில்லை என்றால், ஓப்பன் மார்க்கெட்டிலே உடனடியாக வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொல்லியிருக்கிறோம். இந்த உத்தரவுக்குப் பிறகு எந்தவிதமான பிரச்சினையும் இருக்காது என்று நினைக்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : விலை அதிகமான மருந்துகளை அல்லது தளவாடங்களை அதிகமாக வாங்கி வைக்கக்கூடாது என்பது ஒரு நல்ல முறை என்றாலும் இந்த எக்ஸ்ரே போட்டோ பிலிம்மைப் பொறுத்தவரையில், ஸ்டாக்கில் கொஞ்சம் எப்போதும் இருப்பது நல்லது என்ற வகையிலே இருக்க வேண்டும். மருத்துவ மனையிலே அந்த குறிப்பிட்ட மாதங்களில் எந்த அளவுக்கு வெளியிலேயிருந்து எக்ஸ்ரே பிலிம் வாங்கியிருக்கிறார்கள் ? இல்லையென்றால், நோயாளிகளே கடைக்கு நேரடியாகப் போய் வாங்குகின்ற நிலைமைகள் ஏற்பட்டனவா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : அப்படி ஒன்றும் ஏற்படவில்லை. தட்டுப்பாடு காரணமாக உடனடியாக நமக்குக் கிடைக்கவில்லை என்றால், அதிலே எந்தவிதமான தயக்கமும் இல்லாமல் வெளியிலே வாங்கிக்கொள்ளலாம். இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் மூலம் நமக்குக் கிடைப்பது 50 சதவிகிதம் தான். கிடைக்கவில்லை என்றால், வெளியில் வாங்கி கொஞ்சம் ரிசர்வ் ஸ்டாக் வைத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். எக்ஸ்ரே பிலிம் வெளியில் வாங்குகின்றபோது, விலை ரூபாய் 2, ரூபாய் 3 என்று கூடுதலாக இருக்கும். கன்செஷனல் ரேட்டைவிட மூன்று ரூபாய் அதிகமாக இருந்தாலும் கூட வாங்கி வைத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள்.

4. சமுதாய வளர்ச்சி மற்றும் நகர நிர்வாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீது விவாதம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சமுதாய வளர்ச்சி மற்றும் நகர நிர்வாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீது விவாதம். விவாதம் முடிந்த பிறகு, மாநகராட்சி குறித்த மூன்று சட்ட முன்வடிவுகள் ஆய்வு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டும். உறுப்பினர்கள் இந்த மூன்று சட்ட முன்வடிவுகளில் குறிப்பிட்டுள்ள பொருள்கள் பற்றி இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலேயே பேசிவிட்டால், மேற்படி சட்ட முன்வடிவுகளைத் தனி விவாதம் இல்லாமலே நிறைவேற்றலாம். அதுபற்றி அலுவல் ஆய்வுக் குழுவிலும் ஆலோசிக்கப்பட்டிருக்கிறது என்பதை நினைவுகூர்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

“ சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள சமுதாய வளர்ச்சி மற்றும் நகர நிர்வாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு @ பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் ”

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன் மொழியப்பட்ட தீர்மானம்—

“ சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள சமுதாய வளர்ச்சி மற்றும் நகர நிர்வாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் ”.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் பேசலாம்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இத்துடன் . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சட்ட முன்வடிவுகளைப் பிறகு எடுத்துக்கொள்ளலாம். விவாதத்திற்குப் பிறகு பிரேரேபிப்பதற்கு எடுத்துக் கொள்ளலாம்.

* திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, சமுதாய வளர்ச்சி மற்றும் நகர நிர்வாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த அரசு சமுதாய வளர்ச்சிப் பிரிவின்கீழ் தன்னிறைவுத் திட்டத்தைத் துவக்கி அதைப் படிப்படியாக பல்வேறு ஒன்றியங்களுக்கும் விரிவுபடுத்தி நல்ல பணிகளைச் செய்ய முயற்சி செய்வதை நான் வரவேற்கிறேன். அதைக் குறித்து, தன்னிறைவுத் திட்டத்திலுடைய ஆக்க பூர்வமான பணிகளுக்காக என்னுடைய பாராட்டுக்களையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன். நல்ல குடிநீர் வசதி செய்து தருவது, சாலைகள் அமைத்துத் தருவது, பள்ளிக்கூடக் கட்டிடங்கள் கட்டித் தருவது போன்ற மூன்று முக்கியமான பணிகளை, அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்தல் நல்லது என்ற நோக்கத்தின் கீழ் இந்தத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் இந்தப் பணிகள் நடைபெற்று வருவது வரவேற்கத்தக்கது. இந்தத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் காணுகின்ற குறைபாடுகளைப் பற்றி இந்த மன்றத்திலே பல்வேறு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள். அந்தக் குறைபாடுகளையெல்லாம் களைய தக்க நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

@ 700-7[illegible]0 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

குடிநீர் பிரச்சினையைப் பொறுத்தவரையில், இன்று குடிநீர் பிரச்சி னைக்காக தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கி, இப்படிப்பட்ட பணிகள் செய்யப்பட்டிருந்தாலும், இன்னமும் கிராமங்களில் குடிநீர் வசதி இல்லாமல் இருக்கிறது. கிராம மக்கள் அவதிக்குள்ளாகியிருக்கிறார்கள் என்பதையும், பல இடங்களில், பல கிராமங்களில் இந்த நிலைமை இருக்கிறது என்பதையும் அரசு உணர்ந்திருக்கும் என்று கருதுகிறேன். அதுவும் குறிப் பாக வளம் குறைந்த பகுதிகளிலே, வானம் பார்த்த பூமியிலே இப்படிப்பட்ட குடிநீர் தட்டுப்பாடு மிக அதிகமாக கிராமப்புறங்களிலே இருக்கிறது என்பதைக் கருத்திலே கொண்டும் அப்படி குடிநீர் தட்டுப்பாடு இருக்கின்ற கிராமங்களில் வறட்சி ஏற்படுகின்ற காலத்திலே இந்தப் பிரச்சினையினுடைய சிக்கல்கள் அதிகமாகியிருக்கின்றன என்பதையும் கருத்திலே கொண்டு, குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்னை போன்ற நகரங் களுக்குக் குடிநீர் வசதி இல்லாமல் இருந்தால், உடனே அது பத்திரிகைகளிலே மிக முக்கியமான பிரச்சினையாக வருகிறது. அது சட்ட மன்றப் பேரவை யிலும், மேலவையிலும் ஒரு முக்கியமான விவாதமாக இடம் பெறுகிறது. மகாத்மா காந்தி அடிகள் சொன்ன—கிராம ராஜ்யம், ராம ராஜ்யம் என்று சொல்வார்கள்—அந்த கிராம ராஜ்யத்தில் ஏழையெளிய மக்கள் வாழ்கின் றார்கள். நூற்றுக்கு எண்பது பேர்கள் வாழ்கின்ற கிராம மக்களுக்கு குடிநீர் வசதி இல்லையென்றால், சட்டமன்றப் பேரவையிலோ அல்லது சட்ட மன்ற மேலவையிலோ பத்திரிகைகளிலோ நகரங்களுக்குக் கொடுக்கின்ற முக்கியத்துவம் அந்தக் கிராமங்களுக்குக் கொடுப்பதில்லை. நூற்றுக்கு 80 பேர்கள் வாழ்கின்ற கிராமப்புறங்களில் உள்ள குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பது, அரசின் தலையாய கடமையாக இருக்கிறது என்பதை மனதிலே கொண்டு அந்தக் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் சாலைகள் இணைப்பு பற்றிச் சொல்லப்பட்டது. இந்த இணைப்புச் சாலைப் பணிகளை இன்றைக்கு அரசு நெடுஞ்சாலைத் துறைக்கு டெபாசிட் ஓர்க்காகக் கொடுத்துச் செய்தால், அது இன்னும் சரியாக, திறமையாக நடைபெற வழிவகுக்கும் என்பதை முன்பே தெரிவித்திருக்கிறேன். அதையே மீண்டும் வலியுறுத்துகிறேன்.

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

(முற்பகல் 10-10)

இதை நெடுஞ்சாலைத் துறையிடம் டெபாசிட் ஓர்க்காகக் கொடுத்துச் செய்தால், நாம் எதிர்பார்க்கும் பலன்கள் அதிகமாகக் கிடைக்குமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தன்னிறைவுப் பணியில் ஒரு குறை சுட்டிக்

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1982 மார்ச் 29

காட்டப்படுகிறது. இலக்கை அடைய வேண்டுமென்பதற்காக மிக வேகமாகப் பணிகளைச் செய்ய வேண்டுமென்று அதிகாரிகள் தூண்டப்படுகிறார்கள். அப்படி அதிவேகமாகப் பணிகளைச் செய்ய வேண்டுமென்று தூண்டப்படும்போது, hasty action காரணமாக நடைமுறைக் குறைபாடுகள் ஏற்படுகின்றன. குறிப்பிட்ட தேதியில் முடித்தாக வேண்டுமென்ற கட்டாயத்தில் சில தவறுகள் தவிர்க்க முடியாததாகிவிடுகின்றதென்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அந்தந்த வேலைகளுக்குத் தேவையான அளவிற்கு நேரம் ஒதுக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். மிக வேகப்படுத்துவதன் மூலமாகத் தவறுகள் ஏற்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இத்திட்டத்தில் கிராம சாலைப் பணிகளில் ஈடுபட்டுள்ள துணைக் கோட்டப் பொறியாளர்களுக்கு ஜீப் வசதியில்லை. அதனால் சாலைகளைப் பராமரிக்கும் பணிகளையும், மேற்பார்வையிடும் பணிகளையும் செய்ய முடியாமல் இருக்கிறதென்பதை நான் முன்பேகூடச் சொன்னேன். துணைக் கோட்டப் பொறியாளர்களுக்கென்று தனியாக ஜீப் வசதி செய்து கொடுக்க வேண்டும். ஊராட்சி ஒன்றிய ஆணையாளரிடம் இருக்கும் ஜீப் பல்வேறு பணிகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. துணைக் கோட்டப் பொறியாளர் தினந்தோறும் சாலைகளைப் பார்த்து, பராமரிக்க வேண்டியிருக்கிறது. எனவே அவர்களுக்கு ஜீப் அளிக்க வேண்டியது அவசியமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு இன்னொரு சந்தேகம் இருக்கிறது. குறிப்பிட்ட ஆண்டுகளுக்குள் தன்னிறைவுத் திட்டம் முடிவடைந்துவிடுகிறது. அதற்குப் பிறகு சாலைப் பணிகளை யார் பராமரிப்பது என்று அரசு முடிவெடுத்துவிட்டதா? அது குறித்து எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்று கேள்விப்படுகிறேன். தன்னிறைவுத் திட்டம், கட்டம் கட்டமாக நடக்கிறது. அது முடிந்த பிறகு, தொடர் பணிகள் நடக்க வேண்டும். அப்போது சாலைப் பராமரிப்பை நெடுஞ்சாலைத் துறை ஏற்குமா அல்லது ஊராட்சி ஒன்றியம் ஏற்குமா என்பது குறித்து அரசு விரைவாக முடிவெடுத்தால் நல்லது. முடிந்தால் அமைச்சரவர்கள் தன்னுடைய பதிலிலேயே விளக்கினால், நான் நன்றி உடையவனாக இருப்பேன்.

1982 மார்ச் 29] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

கிராமப்புறச் சாலைகள் தமிழ் நாட்டிலே 38,047 கிலோமீட்டர்கள் அளவிற்கு இருக்கின்றன. அது எந்த அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதற்காகச் சொல்கிறேன். இந்த அறிக்கையிலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது. பெரும்பாலான சாலைகள் இணைப்புச் சாலைகள். அந்த இணைப்புச் சாலைகள் பணியை ஊராட்சி ஒன்றியங்கள் எடுத்துக்கொண்டு செய்கின்றன. 38,000 கிலோ மீட்டர் அளவிற்குள்ள இணைப்புச் சாலைகள் பணியை எடுத்துச் செய்யும்போது, அதற்காக—அதாவது ரூரல் ரோட்ஸ்-க்காக அல்லது ரூரல் ஒர்க்ஸ்-க்காக—ஒரு தனித் தலைமைப் பொறியாளரை நியமிக்க வேண்டும். ஒரு தலைமைப் பொறியாளர் பதவியை உருவாக்கி அவருடைய தலைமையில் இந்தப் பணிகளைச் செய்தால், இந்தப் பணிகள் சிறப்பாக நடக்க வாய்ப்பிருக்கும் என்பதை மாண்புமிகு அமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். கிராமச் சாலைகள் பணியை இப்போது நெடுஞ்சாலைத் துணைக் கோட்டப் பொறியாளர்கள்தான் பார்வையிடுகிறார்கள். அவர்களுக்குப் பதிலாக கிராமச் சாலைகள் பணியை மேற்பார்வையிடவும், அவற்றைப் பராமரிக்கவும் தனியே ஒரு வட்டத்திற்கு ஒரு துணைக் கோட்டப் பொறியாளரும், ஒரு ரெவின்யூ வட்டத்திற்கு ஒரு கோட்டப் பொறியாளரும் நியமிக்கப்பட்டு, அவர்கள் நிர்வாகத்தின்கீழ் இந்தப் பணிகள் நடைபெற்றால், அவை சிறப்பாக நடைபெற வாய்ப்பு இருக்குமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் குறிப்பிட்டுள்ள ஒரு செய்தி மகிழ்ச்சி தருவதாக இருந்தாலும், இன்னொரு செய்தி கவலை அளிப்பதாக இருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சனவரி 1982 வரை பதிவு செய்தவர்கள் 4,54,602 பேர்கள் என்றும், அதிலே 3,31,111 பேர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டது என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது நிரந்தர வேலையா தற்காலிக வேலையா என்பது குறிப்பிடப்படவில்லை. அதைப்பற்றி அமைச்சரவர்கள் விளக்கினால், நான் மகிழ்ச்சியடைவேன். இப்படி அதிகமான அளவிற்கு இந்தத் திட்டத்தின் கீழ் பதிவு செய்தாலும், இன்னொரு கருத்து குறிப்பிடப்பட்டிருக்கிறது. 'அப்படிப் பதிவு செய்திருப்பினும் இந்தத் திட்டத்தின்கீழ் வேலைக்கு வருவதில்லை. ஏனெனில் அவர்கள் உடல் உழைப்புப் பணிகளுக்கு மாறாக எழுத்துப் பணிகளையே விரும்புகிறார்கள்' என்ற செய்தி அறிக்கையிலே காணப்படுகிறது. இது கவலை தரும் செய்தி. கிராமப்புறங்களில் உழைப்பின்மீது நம்பிக்கை குறைந்தால், இந்த நாட்டின் எதிர்காலம் என்னவாகும் என்று அரசு சிந்தித்துப் பார்த்து அந்த அடிப்படைக் குறைபாட்டைக்

களைய என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை ஆராய வேண்டும்.
அப்படிப்பட்ட மனப்பான்மை ஏன் வந்தது, இந்தத் திட்டத்தின்கீழ்
வேலைக்கு வருபவர்களுக்கு ஊதியமும் அரிசியும் தரப்படுவதை மாற்றி
வேறு கவர்ச்சியாக இந்தத் திட்டத்தை அமைத்தால் அதிகம் பேர்கள்
வேலை செய்ய முன்வருவார்களா என்பதையெல்லாம் அரசு சிந்தித்து முடிவு
செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த அறிக்கையிலே பள்ளிக்கூடங்கள் பற்றி இருக்கிறது.
ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள் 1—6—1981 முதல் அரசு
ஊழியர்களாக மாற்றப்பட்டுவிட்டார்கள். ஆனால் பள்ளிக்கூடக் கட்டிடங்கள்
ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. இதிலுள்ள நடை
முறைப் பிரச்சினைகளை முன்பே சொல்லியிருக்கிறேன். மீண்டும் அதை
விரிவாகச் சொல்ல விரும்பவில்லை. அவற்றில், சொந்தப் பள்ளிக் கட்டிடங்கள்
இருக்கின்றன, வாடகைக் கட்டிடங்களிலும் பள்ளிகள் நடக்கின்றன.
1—6—1981-க்குப் பிறகு வாடகைக் கட்டிடங்களில் நடைபெறும் பள்ளிகளுக்கு
வாடகை யார் தருவது என்பதற்கு முடிவு காணாததால், இன்றையவரை
வாடகை செலுத்தப்படாமல் இருக்கிறது. ஆசிரியர்களை கல்வித் துறை
எடுத்துக் கொண்டிருக்கிறது, எனவே கல்வித் துறைதான் கொடுக்க
வேண்டுமென்று உள்ளாட்சித் துறை சொல்லுகிறது. கட்டிடங்கள்
உள்ளாட்சித் துறையின்கீழ் இருப்பதால், உள்ளாட்சித் துறை
தான் வாடகை கொடுக்க வேண்டுமென்று கல்வித் துறை
சொல்வதாக அறிகிறேன். இந்த இரண்டுங்கெட்டான் நிலைக்கு
முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்
கிறேன். பள்ளிக் கட்டிடங்களைக் கல்வித் துறையிடம் ஒப்படைத்தால்,
இந்தப் பிரச்சினையே வராது. ஆசிரியர்களை ஒப்படைத்ததுபோல், அந்தப்
பள்ளிக் கட்டிடங்களையும் கல்வித் துறையிலே ஒப்படைத்துவிட்டால், இந்த
இரண்டுங்கெட்டான் நிலை ஏற்பட வழியில்லை. வாடகைக் கட்டிடங்களில்
நடைபெறும் பள்ளிகளுக்கு யார் வாடகையைச் செலுத்துவது என்பது
பற்றி உடனடியாக முடிவு காண வேண்டும். இல்லாவிட்டால் வாடகைக்கு
அனுமதித்தவர்கள், பள்ளிகளைக் காலி செய்யுங்கள் என்று சொல்லும் நிலை
ஏற்படலாம். அதை மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு
வருகிறேன். தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் பல ஆரம்பப் பள்ளிகளுக்குக்
கட்டிட வசதிகள், கணிசமான அளவிற்கு உருவாகி வருகின்றன. அதற்காக
அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். பல கிராமங்களில், சிற்றூர்
களில், ஆரம்பப் பள்ளி வசதி இல்லாத இடங்களில் பள்ளிகள் வந்திருக்கின்றன.
ஏற்கெனவே பள்ளிகள் உள்ள இடங்களில் அதை விரிவுபடுத்தி, மாற்றங்கள்

செய்து, வசதிகளைச் செய்திருக்கிறார்கள். அதனால் பாராட்டுகிறேன்
அதே நேரத்தில் உயர் நிலைப் பள்ளிகளையும், மேல் நிலைப்
பள்ளிகளையும் இந்தத் திட்டத்தின் கீழ் கொண்டு வந்திருக்கக்கூடாதா என்ற
ஆசை எங்களுக்கு உண்டு. அப்படி உயர் நிலைப் பள்ளிகள், மேல் நிலைப்
பள்ளிகளை இத்திட்டத்தில் இணைத்திருந்தால், உயர் நிலைப் பள்ளிகள், மேல்
நிலைப் பள்ளிகள் ஆகியவற்றுக்குக் கட்டிட வசதிகள் இல்லை என்று
சொல்லப்படும் புகாருக்கு இடம் இல்லாமல் போயிருக்கும். தன்னிறைவுத்
திட்டத்தில் அவற்றை இணைத்திருந்தால், பல வசதிகள் அந்தப் பள்ளிகளுக்கு
வந்திருக்கும் என்று கருதி, வருகிற ஆண்டுகளில் உயர் நிலைப் பள்ளிகள்,
மேல் நிலைப் பள்ளிகளுக்குக் கட்டிட வசதிகள் செய்ய, அந்த அம்சத்தையும்
தன்னிறைவுத் திட்டத்தில் சேர்க்க முடியுமா என்று அரசு பரிசிலனை செய்ய
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு சில இடங்களில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் கட்டப்படும் பள்ளி
களுக்கு asbestos sheet போடப்படுகிறது. சில இடங்களில் R.C.
roof போடப்படுகிறது. இது நீடித்திருக்கும். அஸ்பெஸ்டாஸ் ஷீட்
குறிப்பிட்ட காலத்திற்குத்தான் இருக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. இனி
மேல் வருங்காலத்தில் அஸ்பெஸ்டாஸ் கூரை போடுவதற்குப் பதிலாக,
அனைத்துப் பள்ளிகளுக்கும் R.C. roof போட வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். பள்ளிக்கூடங்களைக் கட்டினால் மட்டும் போதாது. அங்கே
மாணவர்கள், மாணவிகள், ஆசிரியர்கள், ஆசிரியைகள் இருக்கிறார்கள். நடு
நிலைப் பள்ளிகளில் வயதிற்கு வருகின்ற மாணவிகள் இருக்கிறார்கள். அவர்
களுக்குக் கழிப்பிட வசதிகள் இல்லை. கழிப்பிட வசதிகள் இல்லாமல் பள்ளி
களைக் கட்டுவது நல்லதல்ல. சுகாதாரக் கெடுதல் மாத்திரமல்ல, இந்தப்
பெண்கள் நிலை என்ன என்பதை அரசு சிந்திக்க வேண்டும். கழிப்பிட
வசதிகள் இல்லாமல், எந்த இடத்திலும் செல்லலாம் என்ற வழக்கத்தை
ஏற்படுத்தினால், அவர்கள் வளருகின்றபோதும்கூட, வசதியிருந்தாலும், அந்த
வசதிகளைப் பயன்படுத்தாத நிலைமைக்கு அவர்கள் தள்ளப்படுவார்கள்.
civic sense அவர்களுக்கு வராது. அவர்களுக்கு தனிப்பட்ட
முறையில் இருக்கும் சங்கடங்களைப் போக்குவதற்கும், civic sense
ஏற்படவும் எல்லா கிராமப் பள்ளிகளிலும் கழிப்பிட வசதிகள் செய்து தர
வேண்டுமென்று இந்தச் சமயத்தில் மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்
கொள்கிறேன்.

சமுதாய வளர்ச்சி மற்றும் நகர நிர்வாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம்

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1982 மார்ச் 29

(முற்பகல் 10-20)

நடு நிலைப் பள்ளிகளுக்கு என்று சொத்து இருக்கிறது. பல்லாயிரக்கணக்
கான ரூபாய் பெறுமானமுள்ள பொருட்கள் நடு நிலைப் பள்ளிகளில் இருக்
கின்றன. பொதுமக்களுடைய நன்கொடைகள் அங்கு லட்சக்கணக்கில் இருக்
கின்றன. ஆகவே பள்ளிக்கூடத்திலிருக்கிற பொருட்களையும், பள்ளிக்கூட
சொத்தையும் பாதுகாக்க காவலர் பதவிகளை ஏற்படுத்த வேண்டும். ஒவ்
வொரு பள்ளிக்கும் ஒரு காவலர் வீதம் நியமிக்க வேண்டும். அப்படி
இன்றைக்கு காவலர்கள் இல்லாததால் பல இடங்களில் திருட்டு நடைபெறு
கிறது. நடு நிலைப் பள்ளிகளுக்காவது இந்தப் பதவிகளை ஏற்படுத்த
வேண்டும்.

அடுத்து, பள்ளிக்கூடங்களைச் சுற்றியுள்ள தோட்டங்களைப் பராமரித்து
உற்பத்தியைப் பெருக்க ஒவ்வொரு நடு நிலைப் பள்ளிக்கும் ஒரு (Gardener)
தோட்டக்காரர் பதவியை ஏற்படுத்த வேண்டும். அந்த வகையில் பள்ளிக்
கூடத்தின் வளர்ச்சிக்கு அரசு உதவி செய்ய வேண்டும்.

அடுத்து, 1—6—1981-க்கு முன்பு ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றிக்
கொண்டிருந்த ஆசிரியர்களுடைய பல குறைபாடுகள் அரசின் கவனத்திற்குக்
கொண்டு வரப்பட்டும் கூட, இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.
நிர்வாக மாற்றம் ஏற்பட்டதால்தான், இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட
வில்லை. ஒரு நிர்வாக மாற்றம் ஏற்படும்போது, பல சங்கடங்கள் ஏற்படும்
என்பதை நான் நன்றாக அறிந்தவன். ஆனால் இன்றைக்கு இந்தக் குறை
பாடுகளை யார் நிவர்த்தி செய்வது என்று தெரியாமல், இரண்டு துறையிலும்
இருப்பவர்கள் ஒரு முடிவுக்கு வராமல் இருக்கிறார்கள். ஆகவே இன்னின்ன
குறைபாடுகளை உள்ளாட்சித் துறை நீர்க்க வேண்டும், இன்னின்ன குறை
களை கல்வித் துறை தீர்க்க வேண்டும் என்று அரசு ஒரு முடிவுக்கு வந்து,
அதுகுறித்து திட்டவட்டமாக அறிவித்து விட்டால், அதிகாரிகள் அதுகுறித்து
உடனடியாக நடவடிக்கை எடுப்பார்கள். இதற்கு மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பிராவிடன்ட் நிதியைப் பொறுத்தவரையில், அது இப்போது
ஆணையர்களுடைய கட்டுப்பாட்டின்கீழ் இருக்கிறது. அதை ஊராட்சி ஒன்
றியங்களில் நிர்வாகம் செய்யக்கூடிய துணைக்கல்வி அதிகாரிகள் வசம்
ஒப்படைக்க வேண்டும். அவர்களுடைய கட்டுப்பாட்டின் கீழ் இந்தக்
கணக்கைப் பராமரிக்க வேண்டும்.

1982 மார்ச் 29] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

அடுத்து, இன்றைக்கு இந்தத் துறையில் ஆலோசனைக் குழுக்கள் என்று
இருக்கின்றன. சட்டமன்ற உறுப்பினர்களும் இந்த ஆலோசனைக் குழுவில்
இடம் பெற்றிருப்பதாக இங்கே தகவல் தரப்பட்டிருக்கிறது. ஆனால் உள்ள
படியே சட்டமன்ற உறுப்பினர்கள் இதில் இடம் பெற்றிருக்கிறார்களா என்பது
கேள்விக் குறியாக இருக்கிறது. காரணம் அந்தந்த இடத்தில் உள்ள சட்ட
மன்ற உறுப்பினர்கள் இந்தக் குழுக்களில் இடம் பெற வேண்டும் என்பது
நியதி. சிதம்பரம் நகராட்சியைப் பொறுத்தவரையில், நான் அந்த ஊரிலேயே
பல்லாண்டுகளாக இருப்பவன். இருந்தும் நான் அங்கு இந்தக் குழுவில் இடம்
பெறவில்லை. சட்டமன்ற மேலவை மற்றும் பேரவை உறுப்பினர்கள் இவ்வாறு
ஆலோசனைக் குழுக்களில் இடம் பெறலாம் என்று விதிகளில் இடம்
இல்லையா அல்லது அந்த நகராட்சி மந்த நிலையில் செயல்படுகிறதா என்பது
குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆராய்ந்தறிந்து நடவடிக்கை
எடுக்க வேண்டும்.

அடுத்து, என்னுடைய மாவட்டம் தென்னாற்காடு மாவட்டம். தென்
னாற்காடு மாவட்டத் தலைநகர் கடலூர். இது மிகவும் பின்தங்கிய மாவட்டத்
தலைநகர். தமிழகத்திலேயே இன்றைக்கு மிகவும் பின்தங்கிய மாவட்டத் தலை
நகர் எது என்று பார்ப்போமேயானால், அது கடலூர் தான். இதற்கு என்ன
காரணம் என்று எனக்குத் தெரியவில்லை. மாண்புமிகு உள்ளாட்சித் துறை
அமைச்சர் அவர்கள் வேறு மாவட்டத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் கூட,
தயவுசெய்து அவர் கடலூருக்கு பலமுறை வந்து தங்கி, அங்கு இருக்கக்கூடிய
கொசுக்களின் தொல்லையை அவர்கள் அனுபவித்து, இதற்கு ஒரு முடிவு கட்ட
வேண்டும். இதற்கு முக்கிய காரணம், அங்கு நிலத்தடி கழிவுநீர்த் திட்டம்
முறையாகச் செயல்படுத்தப்படவில்லை. பல ஆண்டுகளாக இத்திட்டம் அங்கு
செயல்படுத்தப்படவில்லை. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த
உடனடியாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு பகல் நேரத்தில் கூட அங்கு கொசுத்
தொல்லை அதிகமாக இருக்கின்றது. அதுகுறித்தும் நடவடிக்கை எடுக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்னையிலும் அதுபோன்று
கொசுத் தொல்லை அதிகமாக இருக்கின்றது என்பதனையும் மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று
சொல்லி இன்னும் ஒன்றை ஒன்றைச் சொல்லி முடித்துவிடுகிறேன்.

ஊராட்சி, நகராட்சி, மாநகராட்சி போன்றவற்றுக்கு தேர்தல் விரைவில்
நடைபெறுவதாக இல்லை. ஏற்கெனவே 6 மாதம் அது தள்ளிப் போடப்பட்
டுள்ளது. அதோடு ஹைக்கோர்ட் மற்றும் சுப்ரீம் கோர்ட்டுக்கு இது போகப்

போகிறது. இப்போது ஹைக்கோர்ட்டில் இது இருக்கிறது. அரசின் கையில் இல்லை. உயர்நீதிமன்றத்தை அடுத்தும் போனால், இன்னும் அதிகமாகக் கால தாமதம் ஆகும். ஆகவே இப்படிப்பட்ட சூழ்நிலையில் நாம் தேர்தல் எப்போது நடைபெறும் என்கிற விவாதத்தில் ஈடுபடுவதை விட்டுவிட்டு, அங்கு நிர்வாகம் செம்மையாக நடைபெற என்ன மாற்று ஏற்பாடு செய்யப்போகிறோம் என்பதுபற்றிச் சிந்திக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு இதற்குரிய பொறுப்பு மாவட்ட வளர்ச்சி மன்றங்களிடத்தில் இருக்கிறது. ஆனால் இவைகள் இன்றைக்கு சரியாக இயங்குகின்றனவா என்றால், அது குறித்து மிகவும் வருத்தத்துடன் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். 1974-75-ல் குறைந்தபட்சம் 144 கூட்டங்கள் மாநிலம் முழுவதும் நடைபெற்றிருக்க வேண்டும் ஆனால் நடைபெற்றதோ 130 கூட்டங்கள்தான். அது போல் 1975-76-ல் 176 கூட்டங்கள் நடைபெற்றிருக்க வேண்டும். ஆனால் நடைபெற்றதோ 109 கூட்டங்கள் தான். 1976-77-ல் 144 கூட்டங்கள் நடை பெற்றிருக்க வேண்டும். ஆனால் 95 கூட்டங்கள் தான் நடைபெற்றன. 1977-78-ல் 144 கூட்டங்கள் நடைபெற வேண்டும் என்பதற்கு மாறாக 41 கூட்டங்கள் தான் நடைபெற்றிருக்கின்றன. 1978-க்குப் பிறகு நிலைமை என்ன என்பதுபற்றி அறிக்கையில் விவரம் இல்லை. 1978-க்குப் பிறகு இன்னும் குறைவாகத்தான் நடைபெற்றிருக்கும் என்று நான் கருதுகிறேன். இன்றைக்கு மாவட்டங்களைப் பொறுத்தவரையில், மாவட்ட கலெக்டர் இந்த மன்றத்தினுடைய தலைவராக இருக்கிறார். இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்கின்ற கருத்துக்களை அவர் எந்த அளவு கேட்கிறார் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இப்போது அவர் அதிகாரிகள் பக்கமா, உறுப்பினர்கள் பக்கமா என்கிற பிரச்சினை இருக்கிறது. Non-Official ஆக சேர்மேன் ஒருவர் இதில் இருக்க வேண்டும். அதற்கு ஏற்ற முறையில் தக்க விதிமுறைகளை ஏற்படுத்த வேண்டும் என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கோரத்தைப் Quorum பொறுத்தவரையில் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் இருந்தால் தான் கூட்டம் நடைபெறும் என்று இருக்கிறது. நம்முடைய சட்டமன்றப் பேரவை மற்றும் மேலவையைப் பொறுத்தவரையில், ஆறில் ஒரு பங்கு இருந்தால் போதும் என்று விதியிருக்கிறது. ஆனால் இந்த வளர்ச்சி மன்றங்களில் மூன்றில் ஒரு பங்கு இருக்க வேண்டுமென்று இருப்பதால் பல சந்தர்ப்பங்களில் கோரம் இல்லாததால், கூட்டங்கள் நடைபெற முடியவில்லை. தென்னாற்காடு மாவட்டத்தில் இதன் காரணமாக கடந்த

ஓராண்டு காலமாக ஒரு கூட்டம் கூட நடைபெற முடியவில்லை. ஆகவே அதற்குரிய விதிகளிலே திருத்தம் செய்யலாமா என்பதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசிலனை செய்ய வேண்டும்.

அடுத்து, பல தீர்மானங்கள் வளர்ச்சி மன்றங்களிலே கொண்டுவரப்பட்டு, அங்கு நிறைவேற்றப்பட்டு பிறகு, அவை அரசுக்கு வருகின்றன. அப்படி வருகின்ற தீர்மானங்கள் பற்றி இங்கே அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆனால் அந்தத் தீர்மானங்கள் எவை எவை, அவற்றின்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது, அரசாங்கம் ஏற்றுக்கொண்டவை எவை எவை, நிராகரிக்கப்பட்டவை எவை எவை என்பது போன்ற விவரங்கள் இல்லை. ஆகவே வருங்காலத்திலாவது கொடுக்கப்படுகிற தீர்மானங்களின் மீது அரசு என்னென்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதையும் எந்த அளவுக்கு அவைகள் எல்லாம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதையும் குறிப்பிட வேண்டும். அப்படி விவரம் கொடுப்பது மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் இன்னும் சிறப்பாகப் பணியாற்ற வாய்ப்பளிப்பதாக இருக்கும். தேர்தலை ஒத்திவைக்கிற பிரச்சினைக்குப் போகாமல், தேர்தல் நடைபெறும் வரையில், மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் ஒரு சிறந்த மாற்று அமைப்பாக, சிறந்த முறையில் செயல்படக் கூடிய ஜனநாயக அமைப்பாகச் செயல்பட எதை எதைச் செய்யலாம் என்பதையெல்லாம் மனதிலே கொண்டு, அவை திறமையாக, சிறப்பாக, ஆக்கபூர்வமாக, நல்லமுறையில் நடைபெற உரிய நடவடிக்கைகளை இந்த அரசு உடனடியாக எடுக்க வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன்.

* திரு. க. அருணாசலம் : மாற்றுத் தலைவர் அவர்களே, சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள சமுதாய வளர்ச்சி மற்றும் நகர நிர்வாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது பேச எனக்கு வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இத்துறையில் நடைபெறக் கூடிய வேலைகளைப் பார்த்து, நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். வேலைகள் என்ற அளவிலே பார்ப்போமேயானால், இத்துறை மிகத் திறமையாகச் செயல்பட்டுக்கொண்டு வருகிறது, தன்னிறைவுத் திட்டம் மிகவும் சிறப்பாக நடைபெற்றுள்ளது. குறிப்பாக நான் அதுபற்றி ஒன்று சொல்கிறேன். தன்னிறைவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில், இந்த அரசு என்னென்ன செய்ய இருக்கிறது என்பதை பலரும் அறியும் வகையில் தெரியப்படுத்தி காரியங்களைச் செய்திருக்கிறார்கள். அந்தந்த ஒன்றியங்களில் இருக்கிற அனைவருக்குமே இதுபற்றித் தெரிகிறது. எனவே அனைத்து மக்களுக்கும் இந்தத் தன்னிறைவுத் திட்டம் பற்றி தெரியும் வகையில் இந்த அரசு செயல்பட்டிருக்கிறது என்பதற்கு என்னுடைய முழுப் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்

[திரு. க. அருணாசலம்] [1982 மார்ச் 29

இன்றைக்கு நாம் கொள்கை விளக்கக் குறிப்புகள் பற்றி விவாதம் நடத்திக் கொண்டிருக்கிறோம். கொள்கை விளக்கம் என்று பார்த்தால், அது சமுதாய வளர்ச்சிக்கு உகந்ததாக இல்லை. சமுதாய வளர்ச்சி என்றால் எவ்வளவோ திட்டங்கள் தீட்டியுள்ளார்கள். பொருளாதார வளர்ச்சி என்னமோ ஏற்பட்டிருக்கின்றது. ஆனால் உள்ளபடியே எந்த அளவு சமுதாய வளர்ச்சி நாட்டிலே நடந்திருக்கிறது என்று பார்த்தால், ஒன்று நமக்குப் புரியும். சமுதாய வளர்ச்சியைப் பொறுத்தவரையில் எதை அடைய வேண்டுமென்று நினைத்தோமா அதில் கொஞ்சம் கூட அடைய முடியவில்லை. 1958 ஆம் ஆண்டில் பஞ்சாயத்துச் சட்டம் திருத்தியமைக்கப்பட்டபோது, அன்றைக்கு பிரதமராக இருந்த ஜவஹர்லால் நேரு அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். 'இது பஞ்சாயத் ராஜ் அல்ல, பஞ்சாயத்தி ராஜ்' என்றுதான் அப்போது அவர்கள் வலியுறுத்திச் சொன்னார்கள். ஊரில் ஒரு பஞ்சாயத்து இருப்பதன் மூலமாக மட்டுமே நாம் நம்முடைய குறிக்கோளை அடைய முடியாது, பஞ்சாயத்துக்கள் மூலமாக ஏற்படுகிற வளர்ச்சி தேசம் பூராவும் செல்ல வேண்டுமென்று சொன்னார்கள். அந்தக் கண்ணோட்டத்தோடு காரியங்களைச் செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அந்த

(முற்பகல் 10-30)

அடிப்படையில் 1958 ஆம் ஆண்டுப் பஞ்சாயத்து சட்டம் நமது மாநிலத்தில் மாற்றியமைக்கப்பட்டது. இன்றையதினம் சமுதாய வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஒரு இலட்சம் மக்கள் வாழ்கிற இடத்தில் நாம் அனைவரும் ஒரே சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் என்ற எண்ணம் வளர்ந்திருக்கிறதா என்றால், இல்லை. அங்கே மக்கள் நாயகம் இல்லை. ஒரு சிலருடைய—பிரதிநிதிகளுடைய—நாயகம்தான் இருக்கிறதே தவிர, மக்கள் நாயகம் இல்லை. அத்தகைய நிலை வருவதற்கு இன்னும் எத்தனை காலம் ஆகுமென்று தெரியவில்லை. அதுபற்றிய நமது கொள்கைகள்கூட, விளக்கமாக இல்லை. இதை விளக்கமாகச் சொல்லுவதற்காகத்தான் பல்வந்த்ராய் மேத்தா தலைமையில் ஒரு குழு முன்னால் அமைக்கப்பட்டது. மூன்று நிலைகளில் அது இருக்க வேண்டும் என்று அந்தக் குழு பரிந்துரை செய்தது. அவை வெறும் நிர்வாக அமைப்புகளாக அமையாமல், ஆளுகிற அமைப்புகளாக இருக்க வேண்டும் என்று அந்தக் குழு சொன்னது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் அடிக்கடி ஒரு கருத்தை நினைவூட்டிக் கொண்டிருக்கிறார். மகாத்மா காந்தியடிகள் கனவு கண்ட இராம ராஜ்ஜியம் வரவேண்டுமென்றார். இவைகள் வெறும் நிர்வாக இந்திரங்களாக இல்லாமல், இங்கே ஆளும் கட்சிக்கு ஒரு ஏஜெண்ட் மாதிரி

1982 மார்ச் 29] [திரு. க. அருணாசலம்]

செயல்படாமல், அதிலுள்ளவர்கள் சுயமாகவே சிந்தித்து தன்னம்பிக்கையோடு காரியம் செய்பவர்களா என்றால், அந்த வகையில் தற்போது தீட்டப்படும் திட்டங்கள்—அதாவது தன்னிறைவுத் திட்டங்கள்—அமையவில்லை என்றுதான் சொல்ல விரும்புகிறேன். தன்னிறைவுத் திட்டம் என்பது அதிகாரிகளாலும் காண்ட்ராக்டர்களாலும் செயல்படுத்தப்படுகிற திட்டமாகத்தான் இருக்கிறது. மக்கள் இப்படி மேலும் மேலும் மற்றவர்களை நம்பித்தான் வாழ வேண்டியவர்களாக இருக்கிறார்கள். தன்னம்பிக்கை அளிக்கும் ஒரு மாற்று அமைப்பு அவர்களுக்கு இல்லாமல் இருக்கிறது. அவர்களே சிந்தித்து அவர்களே காரியங்களை நடத்திக் கொள்ளுகிற மாதிரி சமுதாய வளர்ச்சிக்கு ஒரு ஏற்பாடும் இல்லாமல் இருக்கிறது. இவை வெறும் உள்ளாட்சி அமைப்புகளாக இருக்கின்றனவே தவிர, வேறல்ல. எனவேதான் சமுதாய வளர்ச்சி பற்றிய குறைபாடு நமது கொள்கையிலேயே இருக்கிறது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஜனநாயகத்தை நாம் கொண்டுவந்தபோது, எல்லாவற்றையும் மக்களே செய்து கொள்வார்கள் என்று கனவு கண்டோம். சுதந்திரத்திற்குப் பிறகு பரவல் முறையில் ஆட்சி நடக்கும் என்று நம்பினோம். கிராமங்களில் இருப்பவர்கள்கூட ஜனநாயகத்தில் பங்கெடுத்துக் கொள்ளும் வாய்ப்பு இருக்கும் என்றுதான் நம்பினோம். அத்தகைய முறையில் நாட்டில் அமைப்புகளை ஏற்படுத்த வேண்டும் என்று விரும்பினோம். ஆனால் இன்றுவரை அதைச் செயல்படுத்த முடியாத நிலைமைதான் நாட்டில் இருக்கிறது.

விரைவில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள் வரும், மக்கள் பிரதிநிதிகள் வந்து ஆட்சிப் பொறுப்பை மேற்கொள்வார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடும். ஆனால் தேர்தல் முடிந்த பிறகுங்கூட, இங்கே சமுதாய வளர்ச்சி இருக்குமா என்பது சந்தேகம்தான் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இப்போதேகூட கிராமங்களில் உள்ள மாதர் நல சங்கங்கள், இளைஞர் நல சங்கங்கள் மற்றும் தாங்களாகவே இயங்கும் வேறு எத்தனையோ நிறுவனங்கள் தன்னிறைவுத் திட்டங்களில் ஈடுபட்டாலுங்கூட, அவைகளையே அந்தத் திட்டத்தை நேரடியாகச் செய்யும்படி உதவினால் நல்லதாக இருக்கும். அதற்கு உறுதுணையாக அரசாங்கக் கொள்கைகள் இருக்க வேண்டும். தற்போதைய நிலையில் தேர்தல்களைத் தள்ளிப் போட்டாலுங்கூட, இப்போது இருக்கும் முறையிலேயே 'தன்னிறைவுத் திட்டங்களை மக்களே செயல்படுத்துவார்கள், மக்களுடைய தலைவர்களாக இருப்பவர்களே செயல்படுத்துவார்கள்' என்ற நிலை இருக்க வேண்டும். இத்தகைய அமைப்புகள்—மக்களின்

தலைவர்களாக இருப்பவர்களைக் கொண்ட அமைப்புகள்—சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவைகள் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, கிராமங்களுக்கான திட்டங்களைச் செயல்படுத்தும் நிலை ஏற்பட வேண்டும். இப்போது மாதர் சங்கங்களைப் போன்றவைகள் தங்களை ஏற்கெனவே பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மூலமாகப் பணிகள் பலவற்றைச் செய்யலாம். அதைப் போலவே தானியங்கி நிறுவனங்கள் மூலமாகப் பல காரியங்களைச் செய்யலாம். அப்படிச் செய்தால் தான் மக்களிடையே தன்னம்பிக்கை ஏற்படும்.

இப்போது கிராமங்களுக்குக் குடிதண்ணீர் கொடுப்பது என்பது மிக அவசியமான ஒன்றாகும். இதற்கு டெல்லியில் இருப்பவர்கள்தான் இத்தனை கோடி ரூபாய் ஒதுக்க வேண்டும் என்று முடிவெடுக்கிறார்கள். இது ஒரு வகையில் சரியாக இருக்கலாம். ஆனால் அதைக்கூட அங்கே இருப்பவர்கள் அக்கறைப்படிதான் கொடுக்க வேண்டும் என்று முடிவெடுப்பது சரியில்லை என்கிறேன். அவர்கள் நினைக்கிற மாதிரிதான் அதைக் கொடுக்க வேண்டும் என்று அவர்கள் முடிவெடுக்கிறார்கள். இதன் காரணமாக ஜனங்கள் என்பவர்கள் வெறும் விண்ணப்பம் போடுகிறவர்களாகத்தான் இருக்கிறார்கள். ஆங்கிலேயர் ஆட்சியின்போது கலெக்டருக்கு விண்ணப்பம் போட்ட மாதிரிதான், இன்றைக்கும் மக்கள் விண்ணப்பம் போடுகிறார்களே தவிர, 'நாமே அந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொள்ள முடியும்' என்ற நம்பிக்கையைப் பெற்றவர்களாக இல்லை. யார் பணம் கொடுக்கிறார்களோ அவர்கள் சொல்கிற முறையில்தான் காரியங்கள் செய்யப்படும் என்ற நிலை நீடிப்பது சரியல்ல என்று சொல்ல விரும்புகிறேன்.

மக்களிடமிருந்து பணம் வரியாக வசூலிக்கப்படுகிறது. அதுதான் மக்களுக்குத் திருப்பித் தரப்படுகிறது. ஆனால் மேலே இருப்பவர்கள் அந்தப் பணத்தைத் தங்கள் உத்தேசம் போல் செலவிடுகிறார்கள். அப்படிப்பட்ட நிலையில்லாமல் மக்களே அந்தப் பணத்தைச் செலவிட வேண்டும். அதில் ஏதேனும் தவறுகள் நடைபெற்றால், அரசு அதை நெறிப்படுத்தலாம். அப்படிப்பட்ட முறையில், குறைவான அளவில் அரசு தலையிட்டு அதிகமான அளவில் மக்களே செயல்படுத்துகிற முறை இருந்தால்தான், நாட்டில் உண்மையான ஜனநாயகம் மலரும். அதுவரை மக்கள் எழுத்து வேலை செய்கிறவர்கள் பக்கமாகத்தான் பார்த்துக் கொண்டிருப்பார்கள். இப்போது நாட்டில் எழுத்து வேலை செய்கிறவர்கள் அதிகமான ஊதியத்தைப் பெறுகிறார்கள். உழைப்பைத் தருகிறவர்களுக்குக் குறைவான ஊதியம் கொடுக்கப்படுவதால், அவர்களிடையே எப்போதும் ஒரு அதிருப்தி இருக்கிறது. ஊதியத்தைக் கொடுக்கும்போதுகூட, அரசு அதைப் பகிர்ந்தளிக்கும் வகையில்

ஒரு திட்டத்தை உருவாக்கவேண்டும். அப்படிப்பட்ட ஒரு திட்டம் வரும்வரை மக்கள் எழுத்து வேலை செய்பவர்கள் பக்கமாகத்தான் பார்த்துக் கொண்டு இருப்பார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது " ஒயிட் காலர்டு ஒர்க்கர்ஸ் " என்று சொல்லி எங்கள் பக்கம் கை காட்டுகிறாரே, அதற்கு ஏதாவது காரணம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. க. அருணாசலம் : நம்மைவிட இன்னும் அதிகமான " ஒயிட் காலர்டு " ஆசாமிகள் இருக்கிறார்கள். இந்த நாட்டைப் பொறுத்தவரையில், ஏராளமான வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. உற்பத்தி ஏராளமாகப் பெருகி இருக்கிறது. தலைக்கு மூன்று ரூபாய் என்று பகிர்ந்தளிக்கலாம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் உண்மையில் அப்படி கிடைக்கிறதா என்றால், இல்லை. காரணம் திட்டங்களின் பலன்களை ஒருசிலர்தான் அனுபவிக்க முடிகிறது, பெரும்பான்மையானவர்களால் அடைய முடியவில்லை என்ற நிலை இருக்கிறது. அரசு பலருக்கு வேலை வாய்ப்பைக் கொடுக்கிறோம் என்று சொல்லுகிறது. அதன் அடிப்படையில் பலர் ரோடு போடுகிறார்கள், மற்ற மராமத்து வேலையைச் செய்கிறார்கள். விடியற்காலையில் எழுந்து மண்வெட்டியை வைத்துக் கொண்டிருப்பவர்களை அழைத்து வேலை தருகிறார்கள். இது பஞ்ச நிவாரண வேலை. இதனை எப்படி வேலை வாய்ப்புக்கு ஏற்பாடு செய்துள்ளதாகக் கூற முடியும்? ஒவ்வொரு தொழிலாளியும் தான் நிச்சயமாக வேலை செய்து பிழைக்க முடியும் என்று நம்புகிற அளவுக்குத் தக்கதாக வேலை வாய்ப்பு இருக்க வேண்டும். அப்போது தான் அது வெற்றிகரமாக அமைந்திருக்கிறது என்று பொருள்படும்.

அடுத்து, நாட்டில் உள்ளவர்கள் மற்றும் இல்லாதவர்கள் என்கிற வித்தியாசத்தைக் குறைக்க வேண்டும் என்பது. இதைச் செய்வதற்காகத்தான் ஆறு ஐந்தாண்டுத் திட்டங்களும் திட்டப்பட்டன. ஆனால் முடிவில் இவைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்து ஆய்வு செய்கிறபோது, இந்த இரு பிரிவினருக்குமிடையே உள்ள பிளவு இன்னும் அதிகமாயிருக்கிறதே தவிர, குறையவில்லை என்று ஒப்புக் கொள்கிறார்கள். இதற்குக் காரணம் நாமெல்லாம் ஒரே சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் என்ற எண்ணத்தை உண்டு பண்ணும் வகையில் கல்வியோ, சிந்தனையோ, கொள்கைகளோ இல்லை. எனவே இவைகளையெல்லாம் மாற்றி அமைக்க வேண்டியது அவசியமாகிறது. இந்தப் பிளவு இன்னும் நீடித்துக் கொண்டே போனால், மக்களின் மனம் உடைந்து பல்வேறு இன்னல்களுக்குத் தங்களை ஆட்படுத்திக் கொண்டு, நாம் பெற்ற சுதந்திரத்தையே பறி கொடுத்து விடுவார்களோ என்ற சந்தேகம் ஏற்படு

[திரு. க. அருணாசலம்] [1982 மார்ச் 29

கிறது. சுதந்திரம் இங்கே நிலைத்திருக்குமா என்ற சந்தேகத்தைக்கூட இது உருவாக்கிவிடும். எனவே ஜனநாயகத்தில் மக்கள் அனைவரும் பங்கேற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்ற முறையில், கொள்கைகளை வகுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். திட்டமிட்டுச் செயல்பட்டால் முன்னேறலாம் என்று அடிக்கடி சொல்லுகிறோம். ஆனால் திட்டம் போடுவது என்று வரும்போது, டெல்லியிலிருந்து திட்டம் போடுவதால், நாட்டில் உள்ள குறைகளை நாம் தீர்த்துவிட முடியாது. அடிமட்டத்திலிருந்து திட்டமிடும் முறை இருக்க வேண்டும். "மைக்ரோ லெவல் பிளானிங்". வேண்டுமென்று சொல்லி சில ஆண்டுகளுக்கு முன்னால் மாநிலங்களுக்கு யோசனை தெரிவிக்கப்பட்டது. அதாவது பஞ்சாயத்து யூனியன்கள் அளவிலேயே திட்டங்கள் போடப்பட்டு அவை அமுல்படுத்தப்பட வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதற்கு உதவியாக மாநிலங்களிலும் பிளானிங் கமிஷன் வைக்க வேண்டும் என்று சொன்னதன் அடிப்படையில் நமது மாநிலத்தில் கூட ஒரு திட்டக் கமிஷன் செயல்படுகிறது. அத்தகைய திட்டக் கமிஷன்கள் கூட மக்களைக் கலந்து கொள்ளாமல், ஊரில் இருப்பவர்களைக் கலந்து கொள்ளாமல் திட்டம் திட்டுகிற நிலைமைதான் இருக்கிறது. அப்படிப் போடப்பட்ட திட்டங்களே கூட எவ்வாறு செயல்படுத்தப்பட்டிருக்கின்றன, அவைகளில் எத்தனை செயல்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதற்கான சரியான ஆய்வு செய்யப்பட்ட விவரம் கிடைக்காத காரணத்தால், அதைப்பற்றி ஒன்றும் அதிகமாக இங்கே சொல்ல முடியவில்லை. ஆனால் பிளானிங் கமிஷன் என்ன விரும்புகிறது என்றால், "மக்கள் தங்களுக்குத் தேவையான திட்டங்களைத் தாங்களே போட வேண்டும், அவர்கள் தங்களுக்குத் தேவையான ரிசோர்சஸ்ஸையும் பற்றித் தெரிந்திருக்க வேண்டும், அவைகளைப் பயன்படுத்தி எப்படி முன்னேறலாம் என்று நினைக்க வேண்டும், இப்படிப்பட்ட முறையில் செயல்பட்டால்தான் நாம் சமுதாயத்தில் முன்னேற்றம் அடைவதற்கு வழி பிறக்கும்" என்று சொல்கிறார்கள்.

(முற்பகல் 10-40)

மாநிலத் திட்டக் குழுவினர் திட்டம் போடுகிறார்கள். திட்டம் போடும் போது, 'ரிசோர்சஸ்' பற்றி கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை. 'திட்டம் போட்டிருக்கிறோம், இவ்வளவு பணம் வேண்டும்' என்று சொல்லுகிறார்கள். திட்டம் போடுவதற்கு முன்னால் போதுமான 'ரிசோர்சஸ்' இருக்கிறதா என்பதை யோசிக்க வேண்டும். இப்போது நம்முடைய மாநிலத்தில் பல பல்கலைக் கழகங்கள் வந்துகொண்டிருக்கின்றன. உயர் நிலை கல்விச் சாலைகள் வந்துகொண்டிருக்கின்றன. இவைகளையெல்லாம் இந்தத் திட்டத்திலே ஏற்படுத்த வேண்டும். அந்தந்த ஒன்றியப்பகுதியில் உள்ள கல்லூரிகள், மேல்

1982 மார்ச் 29] [திரு. க. அருணாசலம்]

நிலைப் பள்ளிகள் ஆகியவைகள் எல்லாம் இதைப்பற்றிச் சிந்திக்கும்படி தூண்டி அவர்களையும் ஈடுபடுத்தினால், நாம் செயல்படுத்திக் கொண்டிருக்கிற சமுதாய வளர்ச்சித் திட்டங்களை மிகச் சிறந்த முறையில் நடைமுறைப் படுத்துவதற்கு உதவியாக இருக்கும். சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் வெற்றி பெற வேண்டுமென்றால், முதலில் பஞ்சாயத்துக்கள் தங்களைத் தாங்களே ஆண்டு கொள்ளும் வசதி இருக்க வேண்டும். அதை உணர்ந்துதான் அந்தக் காலத்திலே ஊர் புறம்போக்கு நிலங்கள் எல்லாம் பஞ்சாயத்து வசம் இருக்க வேண்டுமென்ற விதியை வகுத்தார்கள். இடைக் காலத்திலே அந்த அதிகாரம்கூட திரும்ப எடுக்கப்பட்டது. பஞ்சாயத்துக்களுக்கு பல அதிகாரங்கள் இருக்க வேண்டும். விவசாயத் துறையிலே அவர்களுக்கு அதிகாரம் இருக்க வேண்டும் என்று சொல்லுகிறோம். ஆனால் எவ்வளவு தூரம் அதிகாரம் இருக்கிறது ? அரசு லெவி கேட்கும்போது இவ்வளவுதான் கொடுக்க வேண்டுமென்ற உரிமை அவர்களுக்கு இருக்கிறதா என்றால், இல்லை. இதை அதிகாரிகள்தான் முடிவு செய்கிறார்கள். அப்படி இல்லாமல், பஞ்சாயத்துகூட, 'இந்த ஊரில் இவ்வளவு விளைந்திருக்கிறது, இந்த ஊரில் இத்தனை பேர் இருக்கிறார்கள், அவர்கள் சாப்பிட குறைந்த அளவு நெல் இவ்வளவு தேவை' என்று கருதி அதை வைத்துக்கொண்டு, அதற்கு மேல் உள்ள நெல்லை மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்ற நிலை இல்லை. அப்படிப்பட்ட நிலை இருக்க வேண்டும்.

கிராமங்களில் டெவலப்மெண்ட் கமிஷனர் இருக்கிறார், கூட்டுறவுத்துறை எக்ஸ்டென்ஷன் ஆபிசர், எஜுகேஷனல் எக்ஸ்டென்ஷன் ஆபிசர் ஆகியவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் என்ன வேலையைச் செய்வது என்று தெரியாமல் இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதே சமயத்தில் ஒவ்வொரு துறையும் நேரடியாக இயங்குகிறது. அவர்கள் பணியாற்றுகின்றார்கள். கிராமநல அதிகாரி என்று ஒருவர் இருக்கிறார். அவருக்கு என்ன அதிகாரம் இருக்கிறது ? கடன் கொடுக்கக்கூட அதிகாரம் இல்லையென்று கூறி, தன்னுடைய அதிகாரத்தைப்பற்றியே நினைத்துக் கொண்டிருக்கிறார். அப்படி இல்லாமல், தங்களுக்கும் கடமை இருக்கிறது, அதைச் செய்ய வேண்டும், அதற்குத் தகுந்த அதிகாரங்கள் இருக்கின்றன என்ற நிலையிலே, பஞ்சாயத்து ஒன்றிய அளவில் எல்லாத் துறையைச் சேர்ந்தவர்களும் கலந்து சேவை செய்ய வேண்டுமென்ற நிலையை உருவாக்க வேண்டும். வேலை வாய்ப்பைக் கொடுக்க வேண்டுமென்றாலும், ஒரு பஞ்சாயத்து ஒன்றியத்திலே இத்தனை பேர் வேலை செய்யக்கூடிய ஆட்கள் இருக்கிறார்கள், அவர்கள் என்னென்ன வேலையைச் செய்வார்கள் என்று பார்த்துச் செய்ய வேண்டும். இப்போது ஆசிரியர்கள் எல்லாம் மாநில அரசோடு நேரிடையாகத் தொடர்பு உடையவர்

களாக இருக்கிறார்கள் என்று பெருமையாகப் பேசிக்கொள்கிறோம். அதைப் போலவே கொஞ்ச காலத்திற்குப் பிறகு தேசிய அரசுடன் ஒன்றிவிட வேண்டும் என்று சொல்லுவார்கள். தேசிய உணர்வைப்பற்றி இப்போது அதிகமாகப் பேசி வருகிறார்கள். மாநிலத்திலே உள்ளவர்கள் தேசியப் பற்றுடன் இருக்க வேண்டுமென்று சொல்லும்போது, உலகப்பற்று தேவை யில்லை என்பதல்ல. தேசியப்பற்று உலகப் பற்றுக்கு வழி வகுக்கும். அதைப்போலவே, மாநிலப்பற்று தேசியப்பற்றுக்கு வழி வகுக்க வேண்டும். ஒன்றியப் பற்று மாநிலப் பற்றுக்கு வழி வகுக்க வேண்டும். ஆகவே, தேசப் பற்று வளர்ந்தால்தான், காந்தியடிகள் கண்ட 'நேஷனல் ஸ்டேட்' உருவாக முடியும். "நாங்கள் உயர்ந்தவர்கள், மற்றவர்களை ஆளப் பிறந்தவர்கள்" என்ற, மற்ற நாடுகளில் உள்ள, குறுகிய நோக்கத்தைக் கொண்ட "நேஷன் ஸ்டேட்"-ஐ அவர் கண்டித்தார். நம்முடைய நாட்டில் சுதேசி உணர்வை உண்டாக்க வேண்டும். அதை வளர்க்கிற முறையில் திட்டங்களை வகுத்துச் செய்தால், சரியான சமுதாய வளர்ச்சிக் கொள்கை இருக்கும் என்று கூறிக் கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

***திரு. சோ. ஆறுமுகம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சமுதாய வளர்ச்சி, நகர நிர்வாகம் குறித்த கொள்கைக் குறிப்பின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில கருத்துக்களை நான் தெரி விக்க விரும்புகிறேன். ஐந்து கோடி மக்களைக் கொண்ட தமிழகத்திலே கிரா மங்களில் மட்டும் சுமார் 3 கோடியே 20 இலட்சம் மக்கள் வாழ்கிறார்கள் என் றாலும், மற்ற நகரப் பகுதிகளிலே சுமார் 160 இலட்சம் மக்கள் வாழ்கிறார்கள் என்பதை நாம் பார்க்கிறோம். ஆகவே பெரும்பாலும் மக்களுடைய தேவை களைக் கவனிக்கக் கூடிய ஒரு பொறுப்பு இந்தத் துறைக்கு இருக்கிறது என்பதை நாம் யாரும் மறந்துவிடுவதற்கில்லை. ஆனால் மக்களுடைய பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு இயங்கக்கூடிய இந்தத் துறை எப்படி ஒரு நோஞ்சான் குழந்தையைப் போல தமிழகத்திலே இருக்கிறதோ அதைப் போலவே இந்த அவையிலே கூட போதுமான அளவிற்கு, அதுவும் சொல்லப் போனால் ஆளும் கட்சி வரிசையில் மிகக் குறைவாக அமர்ந்து கொண்டிருக்க வேண்டிய சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது.

1958 ஆம் ஆண்டு பஞ்சாயத்துச் சட்டங்கள் திருத்தப்பட்டு, நாட்டாண்மைக் கழக நிர்வாகத்தை மாற்றியமைத்து, ஊராட்சி, பேரூராட்சி நிர்வாகத்தின் கீழ், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக்கொண்டு மக்களுடைய நன்மைகளைக் கவனிக்க வேண்டும் என்பதற்காக திருத்தப்பட்ட இந்தச் சட்டத்தின் அடிப்படையிலே மக்கள் பயன்பெற்று வந்தார்கள்.

அதனைத் தொடர்ந்துதான் காந்தியடிகளுடைய பிறந்த நாளில், அவர் எண்ணிய கிராம ராஜ்யத்தை தமிழகத்திலே மேலும் வலுப்படுத்த வேண்டு மென்று நினைத்து 1961 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 2 ஆம் தேதி தமிழகத்திலே ஊராட்சி ஒன்றியங்கள் 374 அல்லது 378 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டு பொது மக்களுடைய நன்மைகளைக் கவனிக்கக்கூடிய நல்ல அமைப்பை உருவாக்கி அதன்மூலம் காரியங்கள் நடைபெற்று வந்தன.

பொதுவாக குடி தண்ணீர் வசதி செய்து கொடுப்பது, கல்வி, வேளாண்மை, கால்நடை வளர்ச்சி, சுகாதாரம், பள்ளிக் கட்டிடம், மகளிர்-சிறார் நலம், சமூகக் கல்வி, பாதை வசதிகள், நீர்ப்பாசனம், கிராமங்களுக்குத் தெரு விளக்கு போன்ற மக்களுக்குப் பயன்படக்கூடிய அத்தியாவசியமான காரியங் களை இந்த அமைப்புகள்தான் செய்து வந்தன ஆனால் கடந்த நான்கைந்து ஆண்டுகளாக அத்தகைய பணிகளை அலட்சியப்படுத்துகிற சூழ்நிலையில் மந்தப் போக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

1976 ஆம் ஆண்டில் 106 நகராட்சிகள், நகரியங்கள் கலைக்கப்பட்டன.

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

(முற்பகல் 10-50)

அதனைத் தொடர்ந்து அரசு சார்பிலே தெரிவித்திருப்பதுபோல 378 ஊராட்சி ஒன்றியங்கள் கலைக்கப்பட்டு அதன் தொடர்பாக 12,632 ஊராட்சி மன்றங்களும், 606 பேரூராட்சி மன்றங்களும் கலைக்கப்பட்டு, இன்றைக்கு அதிகாரிகளுடைய வசம் இந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக் கிறது. ஒருவேளை ஆட்சியிலே அமர்ந்திருப்பவர்கள், இந்த அதிகாரிகள் மூலம் இந்தக் காரியங்களை, பொறுப்புக்களைக் கவனிக்கின்றபோது, நேரடி யாக அமைச்சர்களுடைய கட்டுப்பாட்டுக்குள்ளே அவர்கள் இயங்குவார்கள், அவர்கள் நினைத்ததை யெல்லாம் செய்வதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று கருதி, இந்தத் துறையிலே தேர்தல் நடத்தாமல் மேலும் இதை இப்படியே வைத்துக்கொண்டிருக்க வேண்டும் என்று நினைக்கின்றார்களோ என்னவோ, எனக்குத் தெரியாது. ஆனால் ஒரு குழுவை வேண்டுமானாலும் அமைத்து, ஆட்சியில் இருப்பவர்கள் அதை ஆய்வு செய்து, ஒரு அறிக்கையாவது பெற்றாக வேண்டும். பொது மக்களுடைய பிரதிநிதிகள் மீது அரசியல் காரணத்திற்காகக் கூட, இன்னும் சொல்லப்போனால், சில பேர்கள், பல தவறு செய்கிறார்கள்

என்று சொல்கின்றார்கள் என்றாலும்கூட, ஒரு குழுவை ஏற்படுத்த வேண்டும். மக்களின் பிரதிநிதிகளிடத்தில் இருந்துகொண்டிருந்த இத்துறை மிகப் பெரிய காரியங்களையெல்லாம் ஆற்றவேண்டிய இந்த இலாகா, இப்போது அதிகாரிகளிடம் இந்த உள்ளாட்சித் துறை நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டிருப்பதன் காரணமாக எவ்வளவு தவறுகள் நடைபெறுகின்றது என்பதை நம்மாலே பார்க்க முடிகிறது. இன்றைக்கு தன்னிறைவுத் திட்டம்பற்றி இதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். முதல் கட்டமாக 69 வட்டாரங்களும், இரண்டாவது கட்டமாக 150 வட்டாரங்களும், மூன்றாவது கட்டமாக 159 வட்டாரங்களும் என்று எடுத்துக்கொண்டு இந்தத் தன்னிறைவுத் திட்டத்தை நிறைவேற்றுவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இந்தத் திட்டத்திலே காணப்படுகின்ற குறிக்கோள், கொள்கைகள் வரவேற்கக்கூடியதாக இருந்தாலும், அதை நாம் அனைவரும் பாராட்ட வேண்டியதாக இருந்தாலும் கூட, தன்னிறைவுத் திட்டம் என்று சொன்னால், திட்டமிட்டபடி செய்ய வேண்டும். அந்தப் பகுதிக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர், இணைப்பு சாலைகள், சிறுபாலங்கள், ஆதிதிராவிடர் குடியிருப்பு, அவர்கள் மயானம் செல்லும் பாதை வசதி, மேம்படுத்தப்பட்ட ஊரக மருந்தகங்கள், தாய் சேய் நல விடுதிகள், பள்ளிக்கூடங்கள், ஆதிதிராவிடர்களுக்கான வீடுகள் இவைகள் எல்லாம் தரப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் தன்னிறைவுத் திட்டத்திலே வருகின்ற இந்தத் திட்டங்கள் எல்லாம் அந்தந்த வட்டாரங்களிலே நிறைவேற்றப்படுகின்றனவா என்று பார்த்தால், அவைகள் நிறைவேற்றப்படவில்லை என்பதைத்தான் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நாம் திட்டமிட்டபடி, முதல் கட்டத்திலே எடுத்துக்கொள்ளப்பட்ட 69 வட்டாரங்களைப் பற்றி ஆய்வு செய்து பார்க்க வேண்டும். இன்னமும் குடிநீர் பிரச்சினை, சாலைகள் வேண்டுமென்ற கோரிக்கை, பள்ளிக்கூடங்கள் தேவை என்ற நிலை இவைகள் எல்லாம் இருந்துகொண்டுதான் இருக்கின்றன என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. தன்னிறைவுத் திட்டத்தைக் கொண்டு வந்து விட்டோம். அதனாலே முழுமையான பயனை மக்கள் பெறுகிறார்கள் என்று நாம் சொல்வதிலே எந்தவிதமான பயனும் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுபோலவேதான் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம். இது 1979 முதல் 1980 வது ஆண்டு செப்டம்பர் மாதம் வரை வேலைக்கு உணவுத் திட்டம் என்ற பெயராலே செயல்பட்டு, அதற்குப் பின்னாலே தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் என்று 1980 அக்டோபர் முதல் செயல்படுகிறது. ஏற்கெனவே இந்தத் திட்டங்களிலே பொதுமக்கள் நிரந்தரப் பயன் பெறாமல்,

காண்ட்ராக்டர்கள் பெரும்பாலும் பயன் அடையக்கூடிய வகையிலேதான் அமைந்துவிட்டது என்ற நிலை இருக்கிறது. அதற்கு பல ஆதாரங்களை என்னாலேகூட தரமுடியும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த என்.ஆர்.இ.பி. திட்டத்தைப் பொறுத்த அளவில், இந்த தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தைப் பொறுத்தவரையில், காண்ட்ராக்ட் முறை இல்லை. ஆக மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொல்வதைப்போல, காண்ட்ராக்ட் முறை எந்த ஒன்றியத்திலாவது நடைமுறைப்படுத்தப்பட்டது என்று சொன்னால், தயவுசெய்து ஆதாரங்களோடு இங்கே குறிப்பிட்டால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். இல்லாவிட்டால் அவர்கள் ஏதோ பேசுகின்ற போக்கிலே அரசின் மீது அந்தத் திட்டத்தில் ஏதாவது குறை சொல்ல வேண்டுமென்று சொல்லியிருந்தால், அது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புறேன்.

திரு. சோ. ஆறுமுகம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வேலைக்கு உணவுத் திட்டம் என்பதைத்தான் நான் மாற்றிச் சொல்லிவிட்டேன் என்று கூறிக்கொள்கிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்): நீக்கலாமா வேண்டாமா என்பதற்குக் காரணம் சொல்ல வேண்டும்.

திரு. சோ. ஆறுமுகம்: நீக்க வேண்டாம். ஆதாரங்கள் இருக்கின்றன என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: அங்கத்தினர் அவர்கள் சொல்வது சரிதான். அதாவது, 1980 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வரையிலே வேலைக்கு உணவுத் திட்டம் என்ற பெயரில்தான் இருந்தது. 1980 அக்டோபர் மாதத்திலிருந்து இது தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டமாக மாற்றப்பட்டது. ஆகவே அங்கத்தினர் அவர்கள் சொல்வது சரி. இந்தத் திட்டத்தில் காண்ட்ராக்ட் முறை எங்கேயாவது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறதா என்பதுதான் என்னுடைய கேள்வி. ஆகவே அப்படி நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால், காண்ட்ராக்ட் மூலமாக எந்த எந்த வேலைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதற்கு ஆதாரங்கள் இருந்தால் தயவு செய்து இங்கே கொடுக்க வேண்டும்.

திரு. சோ. ஆறுமுகம் : மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த வேலைக்கு உணவுத் திட்டத்தில் காண்ட்ராக்ட் முறை இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்கின்றார்கள். ஆனால் நான் உறுதியாகச் சொல்கின்றேன். இந்த வேலையில் பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்தான் இவைகளைச் செய்ய வேண்டும் என்று இருந்தாலும், அவர்கள் காண்ட்ராக்டர்களை அழைத்து அவர்களிடம் பொறுப்பை ஒப்படைத்து இவர்கள் வேலை செய்வதாக, மஸ்டர் ரோல் தயார் செய்து, பில்லைக் கொடுத்திருக்கிறார்கள் என்ற ஆதாரத்தை நிச்சயமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னாலே தர முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். ஏனென்று சொன்னால், நாம் இங்கே ஆதாரம் இல்லாமல் எதையும் பேசக்கூடாது என்று விதிமுறையிலே இருப்பது ஒன்று. இரண்டாவது மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் இப்போது காண்ட்ராக்ட் முறையிலே ஒருவரின் ஒப்பந்தத்தின் அடிப்படையிலே ஏற்றுக்கொண்டு வேலையாட்களை அனுப்பி, மஸ்டர் ரோல் பிரிபேர் பண்ணி, அதைப்போன்ற வேலைகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள்" என்று சொன்னார்கள். இந்த ஊராட்சிப் பணியாளர்கள்தான் தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தை நடத்தவேண்டும் என்று நாம் நடைமுறைப் படுத்திக்கொண்டிருக்கிறோம். ஆக இதிலே தவறுகள் நடந்திருந்தால், நடைமுறைபடுத்துவதிலே பணியாளர்கள் வேறு விதமாகச் செய்துகொண்டிருந்தால், அதை ஆதாரத்தோடு நிரூபிக்கவேண்டும். ஏனென்றால் இது ஒரு மத்திய அரசுத் திட்டம். மத்திய அரசு 50 சதவிகிதமும், மாநில அரசு 50 சதவிகிதமும் என்ற முறையிலே நடந்துவருகிறது. இந்தத் திட்டத்திற்குரிய கணக்குகளைக் காட்டி ஒப்புதல் பெற்று பாராட்டுதலையும் நாம் பெற்றிருக்கிறோம். தமிழ் நாடு மட்டும் தான் கணக்குகளைக் காட்டியது என்ற பாராட்டுதலையும் தமிழ் நாடு பெற்றிருக்கிறது. நாம் இந்த ஆண்டுக்குரிய முழுமையான பணத்தையும் பெற்றிருக்கிறோம். வேறு எந்த மாநிலமும் அப்படிப் பெறவில்லை. ஆகவே தமிழ் நாட்டுக்கு மத்திய அரசு ரூபாய் 15 கோடி கொடுத்திருக்கிறது. நம் மாநில அரசு ரூபாய் 15 கோடி ஒதுக்கியிருக்கிறது. ஆக இதன் நடைமுறையிலே ஏதாவது தவறு இருந்தால், நாம் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்

திரு. சோ. ஆறுமுகம் : மாண்புமிகு மேலவை மாற்றுத் தலைவர் அவர்களே. அமைச்சர் அவர்கள் இந்த உறுதியைச் சொல்லக்கூடிய காரணத்தினாலே, ஆதாரத்தை அவர்களிடம் தரத் தயாராக இருக்கிறேன். அதை நான் ஒத்துக்கொள்கிறேன். அதற்கு நான் பொறுப்பேற்றுக்கொள்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள், உணவுக்கு வேலைவாய்ப்புத் திட்டம் பற்றிய ஆதாரம் தரப் போகிறார்களா அல்லது தேசிய வேலைவாய்ப்புத் திட்டம் குறித்தா என்பதைப்பற்றி குழப்பம் இல்லாமல் சொல்ல வேண்டும்.

திரு. சோ. ஆறுமுகம் : மாற்றுத் தலைவர் அவர்களே, நான் பொறுப்பு ஏற்றுக்கொண்டது, 1979 முதல் 1980 வரை உணவுக்கு வேலைத் திட்டம் என்ற பெயராலே இருந்து வந்து, பின்னாலே தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டமாக மாற்றப்பட்டது, உணவுககு வேலைத் திட்டம் என்ற போரோல செய்யப்பட்டபோது, ஒப்பந்தக்காரர்கள் மூலம் பணிகள் நடைபெற்றிருக்கின்றன என்பதற்குத் தான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் ஆதாரங்கள் தர இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-00)

திரு. க. இராமமூர்த்தி : மாற்றுத் தலைவரவர்களே, இதிலே ஒரு சின்ன சங்கடம். காண்ட்ராக்ட் கிடையாது என்பது அமைச்சரவர்களின் விளக்கம். அதில் சந்தேகம் இருப்பதாக நான் நினைக்கவில்லை. ஒப்பந்தக்காரர்கள் என்று குறிப்பிடுவது அன்அஃபிசியலாக (unofficial) யார் ஒப்பந்தக்காரர்களாக இருக்கிறார்களோ அவர்கள் மூலமாக காண்ட்ராக்ட் இல்லாமல் செய்யப்படுகிறதென்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிடுகிறார் என்று நினைக்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள், தான் ஒரு வக்கீல் என்பதை இப்போது அருமையாக நிரூபித்திருக்கிறார்கள்.

திரு. சோ. ஆறுமுகம் : அடுத்து, இந்த அறிக்கையிலே வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் என்ற அடிப்படையிலே 18 வயதிற்கு மேற்பட்ட உழைக்கும் தகுதி பெற்ற ஆண், பெண் அனைவருக்கும் வேலைவாய்ப்பு அளிப்பதற்காக 1979 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அந்த முறையில் 18 வயதிற்கு மேற்பட்ட உழைக்கும் தகுதி பெற்ற ஆண்கள், பெண்கள் பதிவு செய்து கொள்ளலா

மென்று அறிவிப்புச் செய்து, 1981-82-லிருந்து ஜனவரி 1982 வரை பதிவு செய்து கொண்டவர்கள் எண்ணிக்கை 4,54,602 பேர்களாகும் என்று சொல்லியிருக்கிறார்கள், இதிலே வேலை வாய்ப்பு பெற்றவர்கள் 3,31,111 பேர்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆங்காங்கு தமிழகத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கிற பல்வேறு பணிகளில் 2 நாட்கள், ஒரு வாரம், ஒரு மாதம் என்று வேலை செய்யக்கூடியவர்களைக் கணக்கெடுத்து இவ்வளவு பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து விட்டோமென்று சொல்வதிலே எந்தப் பயனும் இருக்க முடியாதென்று தெரிவித்துகொள்ள விரும்புகிறேன்.

தமிழ் நாட்டிலே 38,047 கிலோமீட்டர் நீளமுள்ள இணைப்புச் சாலைகள் உள்ளன என்று அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். 1982-83-ல் 500 கிலோ மீட்டர் இணைப்புச் சாலைகளை மேம்படுத்த 1 கோடி ரூபாய் அளவிற்கு ஒதுக்கியிருக்கிறார்கள். நம்முடைய தேவைக்கேற்ப அதிகப்படியான நிதியை இதற்கு ஒதுக்க வேண்டுமென்று நான் சொல்லும்போது, ஒன்றைச் சொல்லு வார்கள். தன்னிறைவுத் திட்டம், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம்— இவைகள் மூலமும் வேலைகளை எடுத்துக்கொள்கிறோம் என்று சொல்லக் கூடும். ஆனால் வளர்ந்துவருகிற நம்முடைய தேவையைக் கணக்கில் எடுத்துப் பார்க்கும்போது, மிகக் குறைந்த நிலையிலேதான் சாலை மேம்படுத்தும் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறதென்பதை இங்கு தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன். அடுத்து, பள்ளிக் கட்டிடங்கள், ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் 28,784 இருப்பதாக அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதிலே தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 2,000 பள்ளிக் கட்டிடங் களையும், தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் 949 பள்ளிக் கட்டிடங்களையும் கட்ட நடவடிக்கை எடுத்துக்கொண்டிருப்பதாக இங்கு சுட்டிக் காட்டப்பட்டிருக் கிறது. ஆனால் இன்றைக்கு எல்லா இடங்களிலுமே பள்ளிகள் இடவசதியோடு இல்லை. பல பள்ளிகள், போதுமான இடவசதி இல்லாமல் வராண்டாவிலும், மரத்தடிகளிலும் நடத்த வேண்டிய சூழ்நிலை இன்றைக்கு இருப்பது மட்டு மல்ல, தரமான கட்டிடங்கள் இல்லை, சுகாதார வசதிகள் இல்லாத சூழ்நிலை: இன்னும் சொல்லப்போனால் கட்டிடங்கள் பழுதடைந்துவிட்டால், அவற்றை உடனடியாகப் பராமரிப்பு செய்ய முடியாத நிலைமைகள் இருக்கின்றன என் பதைத் தெரிவித்து, இதிலே இந்தத் துறை கவனம் செலுத்தி, ஒரு முனைப் பான திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்பதை இந்த நேரத்திலே தெரி விக்க நான் விரும்புகிறேன்.

ஊராட்சி மன்ற அலுவலகத்திற்குக் கட்டிட வசதியில்லை, அதற்காக நிதி ஒதுக்கி, நாங்கள் ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டிடங்கள் கட்ட முடிவு செய்திருக்கிறோமென்று சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு ஊராட்சி

மன்றமாக இருந்தாலும் சரி, ஒன்றிய அளவிலே இருந்தாலும் சரி, இப்போது இதில் கவனம் செலுத்துவதைவிட, பள்ளிக் கட்டிடங்களை அபிவிருத்தி செய் யும் பணியிலும், சுகாதார வசதிகள் செய்யும் பணியிலும் முதலிலே கவனம் செலுத்த வேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோள். மக்களுடைய பிரதிநிதிகள் தேர்தல் மூலம் வந்த பிறகு வேண்டுமானால் அவர்கள் உட் கார்ந்து, பொது மக்கள் நன்மையைக் கவனிக்க தகுந்த அலுவலகம் வேண்டு மென்பதை குறிக்கோளாகக் கொண்டு, அவற்றுக்கு நிதி ஒதுக்கம் செய்யலா மென்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

பாராட்டக்கூடிய ஒன்று இதிலே இருக்கிறது. என்ன என்று சொன்னால், ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலே பணியாற்றக்கூடிய அலுவலர்களுக்குக் குடியிருப்பு வசதிகள் செய்து தருவதற்கு 1982-83 லே 61.60 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே எல்லா ஒன்றிய அலுவலகங்களி லும் அலுவலர் குடியிருப்பு வசதிகளைச் செய்து தர வேண்டும். ஏன் என்று சொன்னால், சில இடங்களில் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் எங்கோ ஓரிடத் தில், ஒற்றைப் பனைமரம் என்று சொல்லுவார்களே, அதுபோல் இருந்து கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களில் அலுவலர் குடியிருப்பு வசதி களைச் செய்து தந்து, அலுவலர்கள் அங்கே இருந்தால்தான், அந்தப் பகுதி களில் மக்கள் தொடர்பு கொள்ளவும், சில வசதிகளைப் பெறவும் வாய்ப்பு ஏற்படும். எனவே இதிலே அதிக கவனம் செலுத்த வேண்டுமென்று இந்த நேரத் திலே தெரிவித்துக்கொள்கிறேன். வேளாண்மைத் துறையும் இதிலே கவனம் செலுத்தும் காரணத்தால், முசுக்கொட்டைச் செடிகளை வளர்த்து, பட்டு உற்பத்தி செய்வதுபற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே பயிற்சி கொடுப் பதற்காக மாதம் 150 ரூபாய் விதம் 3 மாதங்களுக்குத் தருவதாகச் சொல்லப் பட்டிருக்கிறது. ஊரகத் தொழில்துறை அமைச்சரானாலும் அல்லது சமுதாய வளர்ச்சித் துறை அமைச்சரானாலும், முசுக்கொட்டை வளர்ப்பதிலே, பட்டுப் பூச்சி வளர்ப்பதிலே அதிக அக்கறை கொண்டிருக்கிறார்கள பயிற்சிக் காலத்திற்கு 150 ரூபாய் வழங்குவதாகச் சொல்கிறார்கள். ஒரு ஒன்றியத்தில் எவ்வளவு பேரைத் தேர்ந்தெடுத்து பயிற்சி கொடுக்கிறார்கள் அல்லது விவசாயிகளுக்கு இந்தப் பயிற்சியா, அதிகாரிகளுக்கு இந்தப் பயிற்சியா என்பதையும் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இன்றையதினம், முசுக்கொட்டைச்செடிகளை வளர்க்கவும், பட்டுப்பூச்சி வளர்க்கவும் விவசாயிகள் பயிற்சி பெற்றுத்தான் செய்ய வேண்டுமென்று இல்லை. அதிகாரிகளுக்குச் சொல்லித்தரும் அளவிற்கு தமிழகத்தில் இன்றைய விஞ்ஞான காலத்தில் விவசாயிகள் வளர்ந்திருக்கிறார்கள், வளர்ந்து

விட்ட நிலையில் இருக்கிறார்கள் என்பதைக் கவனத்தில் கொண்டு, இதற்கு முக்கியத்துவம் கொடுப்பதைவிட, தமிழ்நாட்டில் உள்ள ஏரிகள், சிறுசிறு குட்டைகள் ஆகியவற்றில் தண்ணீர் தேக்கிவைக்க நடவடிக்கைகளை நம்முடைய இலாக்கா எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏரிகளின் நீர்வரத்தைச் சரி செய்ய வேண்டும். சிறு குட்டைகளுக்கு தடுப்புச் சுவர்களை எழுப்பி, தண்ணீர் வரக்கூடிய காலத்தில் தேக்கி வைக்கவும் கவனம் செலுத்த வேண்டும். ஏனென்று சொன்னால், மழை இல்லாவிட்டால் தமிழகமே ஒரு பாலைவனமாகிவிடுமென்ற அச்சம் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது, காவிரி நீர் பிரச்சினையை எண்ணிப் பார்க்கிறபோது ஆகவே இப்படிப்பட்ட சிறுபாசன ஆதாரங்களைப் பொறுத்தவரையில், ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அல்லது பொதுப் பணித்துறை கவனம் செலுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, ஆரம்பச் சுகாதார நிலையங்கள், ஊராட்சி ஒன்றிய மருத்துவமனைகள், தாய் சேய் நல விடுதிகள் இவைகளையெல்லாம் இன்றைக்கு இந்த இலாக்கா கவனித்துக் கொண்டிருக்கிறது. இதிலே ஊராட்சி ஒன்றிய மருத்துவமனைக்கு ஆண்டு ஒன்றுக்கு மருந்து வாங்குவதற்கு எவ்வளவு தருகிறோமென்று பார்த்தால், மிகக் குறைந்த தொகை, 5,400 ரூபாய்தான் தருகிறோம்.

(முற்பகல் 11-10)

இன்றைக்கு மக்களுடைய தேவை, நோய்கள் பல்வேறு காரணங்களால் அதிகமாகி இருப்பதால், அதன் அடிப்படையில் ஏற்படுகிற தேவை, மருந்துகளின் தேவை எல்லாம் நகரங்களிலாகட்டும், கிராமங்களிலாகட்டும், அதிகமாகிக் கொண்டுவருகிறது. மக்களுடைய நோய்களைக் குணப்படுத்த மருந்துகளை வாங்கிக் கொடுக்கிறோம் என்று சொல்லிவிட்டு, 5,400 ரூபாய் மட்டும் ஆண்டு ஒன்றுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், இது போதுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக நடத்தப்படக் கூடிய மருத்துவமனைகள் அதிகமாக மருந்துகளை வாங்க இன்னும் அதிகமாக நிதி ஒதுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு 16 ஆயிரம் கிராமங்களில் சுமார் 22.56 கோடி ரூபாய் செலவு செய்து மகளிர்க்கு என்று கழிப்பிடங்கள் கட்டுகின்ற திட்டம் பரிசீலனையில் இருக்கிறது என்று அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். இது பாராட்டத் தக்க அம்சம். கவர்ச்சிகரமான கொள்கை அறிவிப்பு இது. ஆனால் இதற்குத்

தேவையான நிதியை ஒதுக்கியிருக்கிறார்களா என்றால் இல்லை. அதற்கு நேர்மாறாக இது அரசின் பரிசீலனையில், ஆலோசனையில் இருக்கிறது என்று மட்டும் சொல்லியிருக்கிறார்கள். இப்படி இதற்காக ஒரு விளம்பரத்தைத் தேடிக்கொள்வதிலே என்ன பயன் ஆட்சியில் இருப்பவர்களுக்கு ஏற்படப் போகிறது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். எதற்கு எடுத்தாலும் மகளிர்க்குச் செய்கிறோம் என்று சொல்கிறது இந்த அரசு. அப்படிப்பட்ட பாசம், அன்பு இன்றைக்கு ஆடவர்கள் மீது இந்த அரசுக்கு தமிழகத்திலே இல்லையோ என்கிற சூழ்நிலைக்கு இது ஆதாரமாகக் கூட அமைந்துவிடுமோ என்கிற ஒரு சந்தேகம் இன்றைக்கு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. இதிலேயும் மகளிர்க்குச் செய்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, "இந்த அரசு மகளிர் மீது விருப்பம் கொண்டுள்ளது; மகளிர்க்குத் திட்டங்களை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் இந்த அரசுக்கு இருக்கிறது, அந்த வகையில் விளம்பரம் செய்ய வேண்டுமென்ற எண்ணம் இந்த அரசுக்கு இருக்கிறது" என்றெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே பேசிக்கொண்டிருக்கிறார்கள். அப்படியானால், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மகளிர் மீது வெறுப்பு தான் இருக்கிறதா?

திரு. சோ. ஆறுமுகம்: மதிய உணவுத் திட்டத்தின் கீழ் உணவு செய்து போடுபவர்கள் யார் என்று கேட்டால், தாய்மார்கள் என்று சொன்னார்கள். இப்போது கிராமங்களில் கழிப்பிட வசதி யாருக்காகக் கட்டப் போகிறோம் என்று கேட்டால், தாய்மார்களுக்கு என்று சொல்லுகிறார்கள். இதை நான் சொல்வதால் உங்கள் பக்கம் இருப்பதை நீங்கள் அப்படி இருப்பதாக ஒத்துக் கொண்டால் நான் கேட்கிறேன். ஒன்றிரண்டு திங்களுக்கு முன்னால் விலைவாசி எல்லாம் ஏறிவிட்டதே, காய்கறி இன்னும் சாமான்கள் விலை எல்லாம் ஏறிவிட்டதே என்று சொல்லி, சென்னை நகரில் தாய்மார்கள் கையில் பொருள்களை எல்லாம், ஆயுதங்களை எல்லாம் எடுத்துக்கொண்டு ஊர்வலம் வந்தார்களே, அந்த வகையில் இந்த அரசுக்கு அவர்களிடத்தில் எதிர்ப்பும் இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறந்துவிடக் கூடாது என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தப் பிரச்சினையை எதற்காக நான் குறிப்பிட்டேன் என்பதையும் நான் சொல்வேன். இதுபோன்ற திட்டங்கள் செயல்படுத்தக்கூடிய, சாத்தியக்கூறுள்ள திட்டங்கள் அல்ல. அப்படியே இந்த அரசு செயல்படுத்துவதாக இருந்தால், நான் அரசுக்கு இது குறித்து ஒரு ஆலோசனை சொல்கிறேன். கழிப்பிடங்களைச் சுத்தம் செய்ய முதலில் தண்ணீர் வசதி இருக்கிறதா என்று அரசு

[திரு. சோ. ஆறுமுகம்] [1982 மார்ச் 29

முதலில் பார்க்க வேண்டும். நான் 1959 ஆம் ஆண்டிலிருந்தே ஊராட்சி ஒன்றியத் தலைவராக, உறுப்பினராகப் பணியாற்றியவன் என்கிற முறையில் ஒன்றை இது குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஊராட்சி அல்லது ஒன்றியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இருக்கிற கழிப்பிடங்களில் கூட இன்றைக்கு தண்ணீர் வசதியில்லாமல் அவை பழுதடைந்திருக்கின்றன— உள்ளேபோக முடியாத சூழ்நிலை இருக்கிறது. என்னுடைய கிராமத்தில் 1959 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட நல்ல கழிப்பிடங்களில் கூட தண்ணீர் வசதி இல்லாததால், அவைகளில் எல்லாம் இன்றைக்கு புல் முளைத்துக் காணப்படு கின்றன. ஆகவே தான் பயன்பட முடியாத, சாத்தியக் கூறு இல்லாத அறி விப்புகளை அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று நான் குறிப்பிட்டேன். ஆனால் 16 ஆயிரம் கிராமங்களுக்கும் கழிப்பிட வசதி செய்யப்பட வேண்டும் என்கிற கருத்து உள்ளபடியே வரவேற்கக் கூடிய ஒரு திட்டம். அதை எப்போது செய்யப் போகிறார்கள்? ஏன் இந்தக் கொள்கை விளக்கக் குறிப் பிலேயே இதற்குத் தேவையான நிதியை ஒதுக்கவில்லை? தேவையான நிதியை ஒதுக்காமலே ஏன் இப்படிப்பட்ட திட்டங்களை அறிவிக்கிறீர்கள் என்று நான் அறிய விரும்புகிறேன்.

அடுத்து, பட்டினிச் சாவு தடுப்புத் திட்டம் என்று சொல்லியிருக்கிறார்கள். 1980 ஆம் ஆண்டு முதல் இது நடைமுறைக்கு வந்தது. ஒரு நபருக்கு 100 ரூபாய் விதம் பட்டினி கிடப்பவர்களுக்குக் கொடுத்து பட்டினிச் சாவைத் தடுத்து நிறுத்தி விடுவதாக நினைத்துக்கொண்டு இந்த அறிவிப்பைச் செய்தார் கள். இன்றைக்கு இந்தத் திட்டத்தின்கீழ் 437 பேருக்குத் தான் இந்த உதவி யைச் செய்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஒரு நபருக்கு 100 ரூபாய் என்றால், 437 பேருக்கு 43,700 ரூபாய் தான் வழங்கியிருக்கிறார்கள். இது அறிக்கையிலேயே சொல்லப்பட்டிருக்கிறது. இந்த 100 ரூபாய் கிராம நல ஊழியர்கள் மூலம் கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். என் னைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் கூட கிராம நல ஊழியர்களை கடந்த 4, 5 ஆண்டுகளாக பார்க்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. இப்படிப் பட்ட சூழ்நிலையில் இவர்கள் பட்டினியில் கிடப்பவர்களைக் கண்டுபிடித்து, சாவைத் தடுத்து நிறுத்த அப்படிப்பட்டவர்களை எங்கே போய் சந்திக்க முடியும்? அப்படிப்பட்டவர்களை இவர்கள் சந்தித்து, இவர்கள் மூலம் அவர்கள் இந்த உதவியைப் பெற முடியுமா என்கிற ஐயப்பாடு என்னைப் போன்றவர்களுக்கு வராமல் இல்லை. இதிலே தவறு நடைபெற வாய்ப்பிருக் கிறது. அப்படியானால் திட்டவட்டமாக இந்த 100 ரூபாய் உதவியை பட்டினியால் வாடுபவர்கள் பயன்படுத்த, இதற்கான பொறுப்பை கிராம நல ஊழியர்களை நம்பிக் கொடுப்பதில் பயனிருக்காது. அனுபவ ரீதியாக

1982 மார்ச் 29] [திரு. சோ. ஆறுமுகம்]

நான் இதைச் சொல்கிறேன். இதை அரசு பரிசீலிக்க வேண்டும். இதில் மிகவும் கண்ணும் கருத்துமாக அரசு இருக்க வேண்டும். இல்லாவிட்டால் மக்களுடைய பணம் வீண் விரயமாகிவிடும். பிறகு இது புள்ளிவிவரத்திற்கு மட்டும் தான் பயன்படும். உண்மையில் பட்டினி கிடப்பவர்களுக்கு பயன் படாது.

அடுத்து D.D.O. க்களுக்கு ஜீப் வாங்க இதிலே நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டிருக்கிறது. 10 ஜீப்புகள் வாங்குவது என்பது பாராட்டத்தக்க அம்சம் தான். ஆனால் இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலையில் அவர்களுக்கு அங்கே என்ன வேலை இருக்கிறது என்பது தான் என்னுடைய கேள்வி. இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களிலே, அவற்றின் நிர்வாகத்திலே கலந்திருந்த பேரூராட்சி மன்றங்களையெல்லாம் தனியாகப் பிரித்திருக்கிறார்கள். அதற்காக என்று தனியாக ஒரு இயக்குநரைப் போட்டிருக்கிறார்கள். அதற்கு அடுத்தாற்போல் பஞ்சாயத்து யூனியன் பள்ளிக்கூடங்களில் பணியாற்றிக் கொண்டிருந்த ஆசிரி யர்களையெல்லாம் அரசு ஊழியர்களாக ஆக்கி, கல்வித் துறையோடு இணைத்து விட்டார்கள். அடுத்து, வேளாண்மையை எடுத்துக்கொண்டால் கூட அதை இன்றைக்கு விவசாய இலாகாவினுடைய கட்டுப்பாட்டுக்குள் முழுமையாகக் கொண்டுவந்து விட்டார்கள். இப்படி ஒவ்வொன்றையும் எடுத்து விட்டு நாம் பார்க்கிறபோது இன்றைக்கு D.D.O. ஆக இருக்கிற அதிகாரிகள் கூட என்ன வேலை செய்யப் போகிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை. இன்றைக்கு அதிகாரிகளுடைய போக்குவரத்து வசதிக்காக ஜீப்புகள் வழங்க அரசு முன் வந்திருக்கும் அதேவேளையில் யூனியனில் இருந்த வேலைகளையெல்லாம் அந்தந்தத் துறைகளிடம் கொடுத்துவிட்ட பிறகு, வெறும் ஊராட்சி ஒன்றியம் என்று பெயர் சொல்லுவதற்கு மட்டும் அவைகளை வைத்துக்கொண்டிருக்கி றோம். இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களின் முக்கியமான பணி என்று பார்த்தால், சாலை போடுவதுதான். இதைக்கூட நெடுஞ்சாலை இலாகாவிடம் கொடுத்துவிட்டோம். இப்படிப்பட்ட பணிகளைக் கூட அந்தந்தத் துறை களுக்குக் கொடுத்த பிறகு இன்றைக்கு இதில் இருக்கிற அதிகாரிகளுக்கு என்ன பணி இருக்கிறது? இன்றைக்கு அவர்களுக்கு எந்த அளவிற்குப் பணி கொடுக்க அரசு கவனம் செலுத்தியிருக்கிறது என்று நான் அறிய விரும்பு கிறேன். அவர்களுடைய ஆற்றலைப் பயன்படுத்த, அவர்களுக்கு உற்சாகத்தை ஊட்ட என்ன செய்யலாம் என்பதுபற்றி அரசு சிந்தனையைச் செலுத்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழகத்திலே இன்றைக்கு 106 நகராட்சிகளும், நகரியங்களும் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆணையர்களுக்கெல்லாம் 1982 ஜனவரி திங்கள் 18-லிருந்து பயிற்சி கொடுப்பதாகவும், அதற்காக தனியாக

ஒரு இயக்குநர் போட இருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஆணையர்களுக்கெல்லாம் இனிமேல் பயிற்சி கொடுத்து, அந்தப் பயிற்சியை அவர்கள் பெற்றுத்தான் நாட்டு மக்களுடைய தேவையை, நகராட்சியினுடைய வளர்ச்சியைப் பூர்த்தி செய்யப் போகிறார்களா? அல்லது இதுவரை அவர்கள் தெரியாமல் தான் இருந்திருப்பார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நினைக்கிறார்களா என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, பயிற்சி நிறுவனம் என்பது இப்போது ஆரம்பிக்கப்பட்டது; ஆணையர்களுக்கு மட்டுமல்ல, நகராட்சி நிர்வாகத்தில் பணியாற்றுகிற ஊழியர்களுக்கும் பயிற்சி தருகிறோம். ஏற்கனவே அதிகாரிகளுக்கும், ஆணையர்களுக்கும் மட்டும் தான் பயிற்சி கொடுக்கப்பட்டு வந்தது. இப்போது ஊழியர்களுக்கும் சேர்த்து பயிற்சி கொடுக்கப்படுகிறது.

(முற்பகல் 11-20)

திரு. சோ. ஆறுமுகம்: அதில் இருக்கிற ஊழியர்கள் நிதிநிலை அறிக்கையைத் தயார் செய்து நகர மன்ற உறுப்பினர்கள் அல்லது மக்கள் பிரதிநிதிகள் இருந்தால், அவர்கள் இயற்றுகிற தீர்மானத்தைச் செயல்படுத்தும் அதிகாரிகளாகத்தான் இருக்கிறார்கள். 'டெக்னிகல் ஸ்டாப்' இருக்கிறார்கள். தொழில் நுட்பம் தெரிந்த அவர்களுக்குப் பயிற்சி ஏதும் தேவையில்லை; ஆகவே, ஆணையாளர்களுக்கும் பயிற்சி தேவையில்லை. ஊழியர்களுக்கு அது அவசியமே இல்லை. வேண்டுமானால் இயக்குநராக ஒருவரைப் போடுவதற்கு இது வாய்ப்பாக இருக்கலாமே தவிர இதன் காரணமாக எந்தப் பலனும் ஏற்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, 106 நகராட்சிகளுக்குச் சொந்தமாக 5,488 கிலோ மீட்டர் நீளம் சாலைகள் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த சாலை வசதிகளைப் பராமரிக்க 1982-83 ஆம் ஆண்டுக்கு சுமார் 20 லட்சம் ரூபாய் மட்டும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இது மிகவும் குறைவான தொகை. இதை அதிகரிக்க வேண்டும். இதற்காக அதிகமான தொகையை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தற்போது நகராட்சிப் பகுதிகளில் உள்ள சாலைகள் பல்லாங்குழிகளைப் போல் இருக்கின்றன. இன்னும் கொஞ்ச நாட்களானால் சம்பல் பள்ளத்தாக்குகளைப்போல் அந்தப் பாதைகள் அமைந்துவிடுமோ என்று ஐயப்பட வேண்டிய அளவுக்கு நகராட்சிப் பாதைகள் சீரழிந்திருக்கின்றன. எனவே அதிகமான நிதி ஒதுக்கீடு பெற்று எல்லா நகராட்சிகளுக்கும் பகிர்ந்தளித்து இந்தச் சாலைகளை முறையாகப் பராமரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, மக்களின் பிரதிநிதிகளைக் கொண்டு நடக்க வேண்டிய இந்த ஊராட்சி மற்றும் உள்ளாட்சி மன்ற அமைப்புகளையெல்லாம் இன்றைய தினம் அதிகாரிகளை மட்டும் வைத்துக்கொண்டு நடத்துகிற முறையில் ஜனநாயக அமைப்புகளின் குரல் வளையை இந்த ஆட்சியாளர்கள் நசுக்கி விட்டார்கள் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஊராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஒன்றியங்களின் தேர்தல்கள் நடத்தப்படவில்லை. நடத்தக்கூடிய வகையில் சட்டங்கள் உருவாக்கப்படவில்லை. அவை நடைபெறக்கூடாது என்பதற்காகவே அதற்கேற்ற வகையில் சட்டங்கள் உருவாக்கப்பட்டன. அதன் காரணமாக இன்றையதினம் உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு இருக்கிறது. அந்த வழக்கு எப்போது முடியுமோ தெரியாது. அதற்குப் பிறகுதான் அவைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்படும். அதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. இதற்கு நீதிமன்றத்தின் மீது பழி போட்டுக் கொண்டிருக்கிறார்கள். சரி, ஆனால் தமிழகத்தில் உள்ள 106 நகராட்சிகளுக்கும் சென்னை மாநகராட்சி மற்றும் மதுரை மாநகராட்சி, கோவை மாநகராட்சி உட்பட இந்த அமைப்புகளுக்கான தேர்தல்களை நடத்துவதில் இந்த அரசுக்கு என்ன தடை என்றுதான் கேட்க விரும்புகிறேன். இதிலேயும் ரிசர்வேஷன் முறையில் பெண்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் இட ஒதுக்கீடு செய்யப் போகிறார்களா இல்லையா? இத்தகைய ஒரு நோக்கம் இருக்கிற காரணத்தால்தான், முதல் கட்டமாக ஊராட்சிகள், பேரூராட்சிகள், மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கான தேர்தல்கள் நடத்தப்படும் என்றும், பின்னர் நகராட்சிகளுக்கான தேர்தல்கள் நடத்தப்படும் என்றும், அதற்குப் பின்னரே மாநகராட்சிகளுக்கான தேர்தல்கள் நடத்தப்படும் என்றும், 3 கட்டமாகத் தேர்தல்களை அறிவித்திருக்கிறார்கள் என்று நம்புகிறேன்.

இப்போது முதல் கட்டத் தேர்தல்கள்தான் நீதிமன்றத்தால் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. அந்த வழக்கின் முடிவு தெரிந்த பிறகுதான் அதற்குப் பின்னர் வாக்காளர் பட்டியல் தயாரித்து தேர்தல்களை நடத்துவார்கள். ஆனால் நகராட்சிமன்றங்களுக்கும் மாநகராட்சி மன்றங்களுக்குமான தேர்தல்களை ஏன் நடத்த முன்வரவில்லை என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன். தேர்தல் நடத்துவதில் உங்களுக்கு நம்பிக்கையில்லை என்பதையாவது திட்டவட்டமாகச் சொல்லிவிடுங்கள். "நாங்கள் இன்னும் கொஞ்ச காலத்திற்குத் தான் இருக்கப் போகிறோம்; அது வரை இப்படியே தான் வைத்திருப்போம்" என்று எண்ணுகிறீர்களானால், அதையாவது வெளிப்படையாகச் சொல்லிவிடுங்கள். நாங்களும் "நீங்கள் அமைச்சர்களாக

இருக்கிற வரை இந்தத் தேர்தல்கள் நடக்கப் போவதில்லை" என்று உறுதியாக நம்பிக்கொண்டு பேசாமல் இருக்கத் தயார். எப்போது பார்த்தாலும் "இதோ தேர்தல் வருகிறது, இதோ தேர்தல் வருகிறது" என்று சொல்லி பிறகு பெரிய ஆபத்தில் போய் மாட்டிக்கொள்வது போன்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எனவே, முதற்கட்டத் தேர்தல்கள் நின்றுவிட்டிருந்தாலும்கூட, நகராட்சிகளுக்கும், மாநகராட்சிகளுக்குமான தேர்தல்களை நடத்த வேண்டும், அதன் மூலம் மக்களுடைய பிரதிநிதிகள் நிர்வாகத்திற்கு வர வேண்டும். அப்படி வருவதன் மூலமாக பொதுமக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, சென்னை மாநகராட்சியோடு புறநகர்ப் பகுதிகளிலிருந்து 9 பகுதிகளை இணைத்திருக்கிறார்கள். சென்னை மாநகராட்சி இதுவரை புறநகர்ப் பகுதிகளில் எந்தவிதமான நன்மையும் செய்யவில்லை. இவைகளெல்லாம் பேரூராட்சிகளாகவும் பஞ்சாயத்துக்களாகவும் இருந்தன. அந்தப் பகுதிகளின் நிலைமை அப்படியே தொடருகிறது. தொடர்கதைபோல் அவை இருந்தும், அந்தப் பகுதிகளில் சென்னை **மாநகராட்சி** வீட்டு வரி அல்லது கட்டிடங்கள் கட்டுவதற்கான பிளான் அனுமதிப்பது போன்ற வேலைகள், மற்றும் தொழில்களுக்கு வரி வசூலித்தல் ஆகியவைகளைப் பொறுத்த வரை, சென்னையில் உள்ள பகுதிகளுக்கு விதிக்கப்படுகிற முறையிலேயே வசூலிக்கிறது. அந்தப் பகுதிகளுக்கு இதுவரை எந்த வசதியும் செய்து தரப்படவில்லை. இப்படி வசதி ஏதும் செய்து தரப்படாமலேயே, இவைகள் சென்னை மாநகராட்சியோடு இணைக்கப்பட்ட ஒரே காரணத்தால், அபிவிருத்தி அடைந்த நகர்ப்பகுதிகளுக்கு அமுல்படுத்தப்படும் விதிமுறைகளையே அங்கேயும் அமுல்படுத்தும் சூழ்நிலை இருப்பதன் காரணமாக, அங்கே இருக்கும் மக்கள் பெரும் துன்பத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனவே வசதிகள் செய்து தரப்பட்ட பிறகு, வேண்டுமானால் இந்த விதிமுறைகளை அங்கே அமுல்படுத்தலாம் என்ற சரியான யோசனையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்னை மாநகராட்சிக்கும் துறைக்கும் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வளர்ந்து வருகிற சென்னையின் குடிநீர்ப் பிரச்சினை மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. இன்றையதினம் சுமார் 33 முதல் 40 இலட்சம் மக்கள் வரை சென்னையில் வாழ்கிறார்கள். இவர்களுக்குத் தேவையான குடிநீரை வழங்க வேண்டுமென்றால், அதற்கு வீராணம் திட்டத்தைத் தவிர வேறு திட்டம் எதுமில்லை. ஆனால் அதை அரசியல் காரணங்களுக்காகத் தள்ளிவிட்டார்கள். அதற்கு வேறு என்ன மாற்று ஏற்பாட்டை செய்யப் போகிறார்கள்? கட்டளைக் கால்வாய்த் திட்டம் என்று சொன்னார்கள். இப்போது கட்டளைக் கால்வாய்த் திட்டத்தையும் கைவிட்டுவிட்டார்கள். அதைக் கைவிட்டுவிட்டு தண்ணீர் எங்கே கிடைக்கிறதோ அங்கே தலைநகரையே மாற்றப் போகிறோம் என்று சொன்னார்கள். திருச்சிக்கும் தஞ்சைக்கும் இடையே இருக்கும் பகுதிக்குத் தமிழகத்தின் தலைநகரம் மாற்றப்படும் என்று அறிவித்தார்கள். அதற்காகவாவது சரியான முறையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டனவா என்றால், அதுவும் வெறும் யோசனையே தவிர, வேறல்ல என்று எல்லோருடைய எதிர்ப்புக்குப் பிறகு சாமர்த்தியமாக மாற்றிக் கொண்டார்கள்.

இன்றையதினம் கட்டளைக் கால்வாய்த் தண்ணீரும் சென்னைக்கு இல்லை. தலைநகர் மாற்றப் பிரச்சினையையும் கைவிட்டுவிட்டார்கள். இப்போது கிருஷ்ணா நதியிலிருந்து தண்ணீர் கொண்டு வரப்போகிறோம் என்கிறார்கள். அதுவாவது எந்தக் கட்டத்தில் இருக்கிறது? அது எப்போது நிறைவேற்றப்படும்? அந்தத் திட்டம் எப்போது முடிவடையும்? தயவுசெய்து அதையாவது அறிவிக்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் பருவ மழை பொய்த்த போதெல்லாம் பல்வேறு பகுதிகளிலும் குழாய்க் கிணறுகளை அமைத்துக் கொடுத்தோம். அவைகளில் பாதிக்கு மேல் பழுதுபட்டிருக்கின்றன. அவைகளில் இன்றையதினம் தண்ணீர் வராத நிலைதான் இருக்கிறது. இன்றையதினம் மக்களுடைய தேவைக்குத் தேவையான தண்ணீர் இல்லாத காரணத்தால், பெரும் துன்பத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். சென்னை நகரில் எப்படி பாலுக்கு பெண்களும் மற்றவர்களும் காலை 4 மணிக்கே கியூவில் போய் நிற்கிறார்களோ அதைப்போல் இனி குடிநீருக்கும் நிற்க வேண்டிய அவசியம் வந்துவிடப் போகிறது. இப்போதே குழாயில் அடித்துத்தான் தண்ணீர் கொண்டுவர வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே இதற்காக ஒரு முனைப்பான திட்டம் ஒன்றை நிறைவேற்றியாக வேண்டும். அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக சென்னையைக் கவனிக்காமல் விடுவது முறையல்ல என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிங்காரச் சென்னை என்று சொல்லிக் கொண்டிருந்த நிலைமை மாறி, இன்றையதினம் சீரழிகிற சென்னையாக அது மாறிக் கொண்டிருக்கிறது.

அடுத்து, பலமாடிக் கட்டிடங்களைக் கட்டுகிற பிரச்சினையைப் பொறுத்த வரையில், ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இப்படிப்பட்ட கட்டிடங்கள் சென்னையில் புறநகர்ப் பகுதிகளில், சென்னையை ஒட்டியிருக்கிற பகுதிகளில்,

கட்டப்பட வேண்டும். அங்கேதான் அவைகள் கட்டப்பட வேண்டும் என்று உறுதியாகச் சொல்லப்பட வேண்டும். அப்போதுதான் சென்னை நகரில் இருக்கிற நெரிசலைப் போக்க முடியும். சுகாதாரக் கேடுகளை அகற்றவும் நகரத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்ளவும் அப்போதுதான் வாய்ப்பு ஏற்படும் என்பதால், சென்னையை ஒட்டியுள்ள புறநகர்ப் பகுதிகளில் மட்டுமே பலமாடிக் கட்டிடங்களைக் கட்ட அனுமதிக்க வேண்டும் என்று கூறிக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

அதே நேரத்தில் சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னை கடற்கரைச் சாலையிலிருந்து லஸ் முனை வரைக்கும் போக்குவரத்து வசதிக்காக சுமார் 60 முதல் 70 கோடி ரூபாய் வரையில் திட்டமிட்டு மத்திய சர்க்காருக்கு அனுப்பி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது ஒரு அவசியமான திட்டம். அமைச்சர்கள் கோட்டையிலே உட்கார்ந்து கொண்டு மத்திய சர்க்காருக்குக் கடிதம் எழுதிக் கேட்டிருக்கிறோம் என்று சொல்லுவதைவிட, டில்லிக்குச் சென்று நேரிலேயே கேட்க வேண்டும். டில்லிக்குச் சென்றால், காவடி தூக்குகிறார்கள் என்று நாங்கள் சொல்லமாட்டோம். அங்கே சென்று அமைச்சர்களைப் பார்த்து, நகரத்திலே போக்குவரத்து இடைஞ்சல் இருக்கிறது, இட நெரிசல் இருக்கிறது, ஆகவே இது ஒரு முக்கியமான திட்டம், இத்தகைய திட்டத்திற்கு அனுமதி கொடுக்க வேண்டும் என்று சொல்லி, வாதாடி, நிதியைப் பெற்று சென்னை கடற்கரைச் சாலையிலிருந்து லஸ் முனை வரைக்கும் போக்குவரத்து வசதியை ஏற்படுத்தும் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். நாகர்கோவில் முனிசிபாலிட்டியில் தியாகிகளுக்கு நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலே திரு. சிவமுத்துக் கருப்பன் அவர்களுக்கு ஐந்து ஏக்கர் நிலம் லீசுக்குக் கொடுத்தார்கள். ஆனால் 1—4—1981-ல் அந்த லீஸ் முடிந்துவிட்டது. ஆகவே திரும்ப எடுத்துக்கொள்வோம் என்று நகராட்சியினர் சொல்லியிருக்கிறார்கள். தியாகி என்ற பெயரால் கொடுக்கப்பட்டது, ஆகவே அவருக்கே லீசுக்குக் கொடுக்க வேண்டுமென்று எல்லாக் கட்சிக்காரர்களும் சொல்லியும், ஆணையாளர் அதை மறுத்து, " இல்லை, இல்லை நாங்கள் வேறு ஒருவருக்குத்தான் கொடுப்போம் " என்று சொல்லி, பிறகு அதை நகராட்சியே எடுத்துக்கொண்டு, அதை ஏலத்தில் விட்டு, அவரைக் காலி செய்துவிட்டார்கள். தியாகிக்குக் கொடுத்ததைத் திரும்பப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

உள்ளாட்சித் துறையில் தேர்தலை நடத்தாமையால், கிராமப்புறங்களில் சூழ்நிலைகள் எப்படியோ இருக்கின்றன. அதைப் போலவே தமிழ் நாட்டிலுள்ள எல்லா நகரங்களிலும் சேர்த்து 700 குடிசைப் பகுதிகளைக் கொண்டதாக நகரங்கள் இருக்கின்றன. மேலும் குடிசை மாற்று வாரியமும், வீட்டு வசதி வாரியமும் கட்டிக் கொடுத்திருக்கக் கூடிய வீடுகள் உள்ள பகுதியில் சுகாதார வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறதா, குடிதண்ணீர் வசதி செய்து தரப்பட்டிருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும். இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் பலமாடிக் கட்டிடங்களாக கட்டிக் கொடுக்கப்பட்டது இன்றைக்கு குடிசைப் பகுதியாக தோற்றம் அளிக்கக் கூடிய அளவிற்கு இருக்கிறது. சென்னை நகரத்திலே மட்டும் 73 குடிசைப் பகுதிகள் இன்னும் இருந்து கொண்டிருக்கிற சூழ்நிலை இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தபோது, முனைப்பாகச் செயல்பட்ட இந்த இலாக்காவில் இப்போது தொய்வு ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு வீட்டு வசதி வாரிய அமைச்சர் அவர்கள் விளையாட்டு விளையாடுவார்கள். அதிலே வேகம் இருக்கும். சிலம்பு விளையாட்டிலே வேகம் இருக்கும். அந்தக் குடிசைப் பகுதிகளை யெல்லாம் மாற்றி நல்ல வீடுகளைக் கட்டிக் கொடுப்பதிலே நாம் அதிகமான முனைப்போடு செயல்படுவதோடு, தமிழ் நாட்டிலுள்ள எல்லா நகராட்சிப் பகுதிகளிலும் குடிசை மாற்று வாரியத்தின் பணிகளை விரைவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இவைகளையெல்லாம் சொல்லுகிறபோது, சிதம்பரத்தில் தில்லை என்று பெயர் வைத்தோம், மாயூரத்தை மயிலாடுதுறை என்று பெயர் மாற்றினோம் என்று ஒலியெழுப்பிக் கொண்டிருப்பதில் பயன் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி பெயர் வைப்பதிலும், தாராளமாக விளம்பரம் செய்வதிலும்தான் நீங்கள் இருக்கிறீர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சேலத்தையும், ஏற்காட்டையும் பொறுத்த வரையில், சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. சுற்றுலாப் பயணிகளைக் கவரக் கூடிய நிலையில் உள்ள ஏற்காட்டில் முனைப்பாக பணியில் ஈடுபட்டிருக்கிறோமா என்றால், இல்லை, பன்னெடுங் காலமாகப் போடப்பட்ட பாதைகள் அப்படியே இருக்கின்றன. சேலத்திலிருந்து மலை உச்சி ஏறும் வரையில் உள்ள சாலையை அகலப்படுத்தவில்லை. அங்கே இருக்கின்ற மலைவாசி மக்களுக்கு இணைப்புச் சாலைகளைப் போட்டோம். அவைகளையெல்லாம் மேலும் பராமரிக்காததால், தொடர்ந்து மலைவாசி மக்கள் பயன்படுத்த முடியாத சூழ்நிலையில் இருக்கின்றன. ஆகவே சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய ஏற்காட்டைப்பற்றி கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல சேலத்திலே உள்ள கொல்லி மலையையும் கவனிக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். சேலத்திலே திருமணிமுத்தாறு நகரத்திலே ஓடுகிறது. அதிலே வருகிற நாற்றத்தால் பெரும் நோய்க்கு அந்தப் பகுதி மக்கள் ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைச் சுத்தப்படுத்தி, துர்நாற்றத்தைப் போக்கி, நோய்களைத் தடுக்கின்ற முயற்சியிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சேலத்திலே பாதாள சாக்கடைத் திட்டம் என்று முதலமைச்சர் அவர் களைக் கொண்டே விழா நடத்தப்பட்டது. சென்ற ஆண்டு நாங்கள் கேள்வி கேட்டபோது அமைச்சர் அவர்கள், உடனே வேலை தொடங்க இருக்கிறது என்று சொன்னார்கள், ஆனால் முதலமைச்சர் அவர்கள் தலைமையில் கல் நாட்டு விழா நடைபெற்று, ஒன்றரை ஆண்டுகள் ஆன பின்னும், அந்தப் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கான வேலைகள் தொடங்கப்படவில்லை. ஆகவே அதைக் கைவிட்டுவிட்டார்களோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. இப்படி கல்லை நட்டுவிட்டு, வேலையை ஆரம்பிக்காமல், விளம்பரம் பெற்றுக் கொண்டு, பிறகு திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது பழி போடுவதையே நோக்கமாக வைத்துக் கொண்டிருப்பதால், பயன் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு நகரங்களில் எல்லாம் வசதிகளைச் செய்து தரமுடியாத சூழ் நிலையில், நகராட்சி மன்றங்களுக்குச் சொந்தமான கட்டிடங்களில் வாடகைக்கு இருக்கும் வாடகைதாரர்களுக்கு நன்மை செய்ய முடியாத சூழ்நிலையில் 1—4—1982 முதல் வாடகையை உயர்த்த வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறார்கள். வேலூர், குடியாத்தம் போன்ற பகுதிகளில் 50 சதவீதம் உயர்த்த இருப்பதாக அறிகிறேன். அவர்கள் இப்போது 100 ரூபாய் வாடகை செலுத்துகிறார்கள் என்றால், இன்னும் 50 ரூபாயைக கூட சேர்த்துக் கட்ட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அப்படி இல்லாவிட்டால், காலி செய்ய வேண்டுமென்று நோட்டீஸ் கொடுத்து காலி செய்வது என்பது என்ன நியாயம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஐம்பது சதவீதம் ஒரேயடியாக உயர்த்த ஆணையாளர்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது என்று தெரியவில்லை. இதையும் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் நகரத்திலே மருத்துவமனைக்குப் பக்கத்திலே, சென்ட்ரல் தியேட் டருக்கு முன்பு ஒரு இரயில்வே கேட் இருக்கிறது. இது போக்குவரத்திற்குப் பெரிய இடைஞ்சலாக இருக்கிறது. மருத்துவமனைக்குப் பக்கத்திலே

இரயில்வே கேட் இருப்பதால், கேட் மூடிவிட்டால் 500 வண்டிகள் இரண்டு பக்கமும் நின்றுவிடுவதால், மருத்துவமனைக்குச் செல்லக்கூடிய நோயாளிகள் வேதனைப்படக் கூடிய பெரும் இடைஞ்சல் இருக்கிறது. அங்கே மேம்பாலம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. அதை நிறைவேற்ற வேண்டும். அதற்காக மாநில அரசு மத்திய அரசைக் கேட்டிருப்பதாக அறி கிறேன். அரசு 50 சதவீதச் செலவை ஏற்றுக்கொள்வதாகவும், நகராட்சி 50 சதவீதத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொன்னதாகவும் பிறகு அதை மத்திய அரசிடத்திலேயிருந்து மாநில அரசு பெற்றுக்கொள்ளும் என்றும் சொன்னதாக அறிகிறேன். ஆனால் நகராட்சி அந்த முயற்சியை எடுக்க வில்லை. அந்த முயற்சி எடுத்து அங்கே மேம்பாலத்தைக் கட்ட வேண்டு மென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக இந்தத் துறை இன்றைக்குப் பெருமைப்படக் கூடிய அளவிலே காரியங் களை ஆற்றவில்லை. இந்தத் துறை, நான் ஏற்கனவே சொன்னதைப் போல நோஞ்சான் குழந்தையாக இருக்கிறது. என்ன டானிக் கொடுத்தாலும் வலுவுள்ள குழந்தையாக வளராதோ என்ற ஐயப்பாடு தோன்றக் கூடிய அளவிற்கு ஜனநாயகத்தின் குரல்வளையை நசித்து விட்டார்கள் என்று சொல்லி இந்த அளவோடு அமர்கிறேன். வணக்கம்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சமுதாய வளர்ச்சி மற்றும் நகர நிர்வாகம் குறித்த கொள்கை குறிப்பின் மீது சில கருத்துக்களைச் சொல்லுவதற்கு இந்த நேரத்தில் வாய்ப்புக் கொடுத்த தற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நகராட்சி நிறுவனங்களில், சமுதாய வளர்ச்சியைப் பொறுத்தவரையில் எந்த அளவிற்கு துரிதமாகக் காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன, அதற்காக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிற முயற்சிகள் என்ன என்பதை நிச்சயமாக இந்த நாடு நன்றாக அறியும். அந்த வளர்ச்சிக்காக நாம் எடுத்திருக்கிற பல்வேறு முயற்சிகளை எனக்கு முன்னாலே பேசிய அருமை நண்பர் மாண்பு மிகு உறுப்பினர் திரு. சோ. ஆறுமுகம் அவர்கள் சிறப்பாக, விளக்கமாக

(முற்பகல் 11-40)

எடுத்துச் சொன்னார்கள். ஆனால் ஒரு எதிர்க் கட்சி என்ற முறையில் எடுத்துச் சொல்லவேண்டிய எல்லாவற்றையும் எடுத்துச் சொல்லிவிட்டு, கடைசியாக வாடிக்கையாகச் சொல்கின்ற அந்த முறையில் . . .

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் கொள்கை விளக்கக் குறிப்புகளின் மீது ஒவ்வொரு கட்சியின் சார்பிலேயும் ஓர் உறுப்பினர் பேசுவது என்று முடிவு எடுத்திருக்கிறோம்.

அது மட்டுமல்ல, இந்த அவையானாலும் சரி, சட்டமன்றப் பேரவையானலும், எந்த மானியக் கோரிக்கையாக இருந்தாலும், அதிலே பிரதானமான எதிர்க் கட்சி கடைசியிலே பேசியதற்குப் பிறகு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வதை மரபாக இதுவரையிலே கடைப்பிடித்து வருகிறோம். ஆனால் என்ன காரணத்தினாலோ இங்கே இன்றையதினம் திராவிட முன் னேற்றக் கழகம் பிரதான எதிர்க் கட்சியாக இருந்தும்கூட, அந்தக் கட்சியி னுடைய உறுப்பினரைப் பேச வைத்துவிட்டு அதற்குப் பிறகு ஆளுங்கட்சி, அதற்குப் பிறகு மற்ற கட்சி என்ற முறையைப் பின்பற்றுவது எந்த அடிப் படையிலே என்று தெரியவில்லை. எனவே இந்த மன்றத்தில் இதுவரையில் கடைப் பிடித்து வந்த மரபை எப்படி நாம் இன்றையதினம் மீறி யிருக்கிறோம் என்பதற்கான விளக்கத்தைத் தாங்கள் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் ஒரு பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள். பொதுவாக இங்கே 'ரெகக்னைஸ்ட் அப்போசிஷன்' என்று இல்லை. இரண்டாவது தாங்கள் அழைக்கின்ற நேரத்தில் மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி அவர் கள் இருந்திருந்தால், அவரை அழைத்த பிறகு, திரு. ஆறுமுகம் அவர்களைப் பேசச் சொல்லியிருக்கலாம். ஆளும் கட்சியினர் கடைசியிலே பேசுவதற்குக் காரணம், இப்போது உறுப்பினர்கள் பேசியதற்குப் பிறகு, இந்தக் கொள்கைக் குறிப்போடு தனி அதிகாரிகளுடைய பதவிக் கால நீடிப்பு பற்றிய மசோதாவும் இருக்கிறது. அதெற்கெல்லாம் பதில் சொல்லவேண்டிய பொறுப்பு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது. கடைசியிலே பேசுவதைவிட முன்னா லேயே பேசினால் கொஞ்சம் நேரம் அதிகமாகக் கிடைக்கும். மாண்புமிகு அங்கத்தினர் திரு. க. இராமமூர்த்தி அவர்கள் இப்பொழுது இல்லை. ஆகவே அவரை அழைத்திருக்கிறார்கள். இதிலே ஒன்றும் இல்லை என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா வீராசாமி : மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொல்கின்ற 'ரெகக்னைஸ்டு அப்போசிஷனா' இல்லையா என்பதல்ல பிரச் சினை. பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட பெரும்பான்மையுள்ள எதிர்க் கட்சி முதல் எதிர்க் கட்சி. அதற்குப் பிறகுதான் மற்ற எதிர்க் கட்சிகள். அப் படித்தான் ஒரு எதிர்க் கட்சி என்ற அளவில் முதலிடம் கொடுத்திருக்கிறோம். 'ரெகக்னைஸ்ட்' அல்லது 'அன்ரெகக்னைஸ்ட்' என்பதல்ல, இருக்கின்ற முறையை மாற்றுவது முறையா என்றுதான் கேட்கிறேன். ஏனென்றால் இது

ஏற்கெனவே ஒத்துக்கொண்ட முறை. உறுப்பினர்கள் இல்லை என்றாலும் கூட, திராவிட முன்னேற்றக் கழகத்தின் மற்ற உறுப்பினர்கள் இருந்திருக்கி றார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்திகூட இருந்தார்கள். இனிமேல் எதிர்காலத்திலேயாவது அந்த முறை பின்பற்றப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : முறை தவறி நடக்க வேண்டு மென்று நடத்தப்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்பார்த்த நிலையில் உறுப்பினர் இல்லாத காரணத்திற்காக அவர் பேசுகின்றாரே தவிர, முறையை மாற்ற வேண்டும், மரபை மாற்ற வேண்டும் என்ற நோக்கம் இந்த அவைக்கு இல்லை. அதனாலே எந்தவிதமான முறையும் மீறப்படவில்லை என்பதை உறுப்பினர் அவர் களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு திரு. இராதா அவர்களைப் பேச அழைக்கிறேன்.

திரு. எஸ். ஆர் இராதா : குறுக்கீடு என் பேச்சில் வரும் என்று கருதிக் கொண்டிருந்தேன். அந்தக் குறுக்கீட்டை வேறு விதத்திலே மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் ஆரம்பித்தார்கள். இருந்தாலும் எனக்கு ஒரு மகிழ்ச்சி. நான் பேசுவதை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள் என்பதைப் பற்றி நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன். இந்தக் குறிப்பின் மீது சில விவரங்களைச் சொல்ல-விரும்புவதற்குக் காரணம் நீண்ட நாள் நகராட்சியின் தொடர்பிலே பணியாற்றியவன் என்பதால்தான். இதிலே இரண்டொரு கருத்துக்களைச் சொல்ல வேண்டும் என்பதற்கான வாய்ப்பைப் பெற்றேன். இந்தத் துறையைப் பொறுத்தவரையிலே, இன்றைக்கு இது வேகமாகச் செயல் பட்டுக் கொண்டிருக்கிறது என்பது நாட்டிலே இருக்கின்ற அத்தனை பேர் களுக்கும் நன்றாகத் தெரியும், அதற்கு ஒரு எடுத்துக்காட்டு என்னவென்றால், இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் நீண்டநேரம் பல்வேறு விஷயங்களைப்பற்றி விரிவாகப் பேசினார்கள். இங்கே அவர் களுடைய நிலையிலே கருத்துக்களைச் சொன்னார்கள். ஆனால் கடைசியிலே வேடிக்கையாகச் சொல்ல வேண்டும் என்பதற்காக, அவருடைய கண்ணுக்கு இது நோஞ்சான் குழந்தையாகத் தெரிந்தது. அவருடைய கண்ணுக்கு இது சான்டோவாகத் தெரியும் என்று நாம் நிச்சயமாக எதிர்பார்க்க முடியாது. அதை சான்டோவாகச் சொல்லிவிட்டால், நிச்சயம் இந்தத் துறை சிறப்பாகச் செயல்படும். அவர்கள் பல்வேறு திட்டங்களை எடுத்துச் சொன்னார்கள். ஒவ்வொன்றாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். விவரமாகச் சொல்லி இப்படியெல்லாம் நடைபெறுவதற்கான காரணங்களை எடுத்துச் சொல்லி

வந்தார்கள். ஊராட்சித் தேர்தலைப்பற்றி திரும்பத் திரும்ப நாம் பல்வேறு நேரங்களிலே பேசியாயிற்று. இருந்தாலும் அவர்கள் திரும்பவும் குற்றச்சாட்டை ஆளும்கட்சி மீது சொல்கின்றார்கள். ஆளும் கட்சிக்காரர்கள் தேர்தலைத் தள்ளிப்போடவேண்டும் என்று இருக்கிறார்கள் என்று சொன்னால், நாட்டு மக்கள் நம்புவார்கள் என்ற முறையிலே அவர்களின் பேச்சுக்கள் அமைந்திருக் கின்றன என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன். நாட்டிலே இருக்கின்ற ஏழையெளிய மக்களுக்கு யாரால் தடைப்பட்டது என்பது நன்றாகத் தெரியும். நான் ஒன்றைப் பெருமையாகக் கூறிக்கொள்வேன். எத்தனையோ ஆண்டுகள் தேர்தல் நடைபெறாமல் இருந்திருக்கிறது. ஊராட்சித் தேர்தல் என்பது இருக்கிறதா இல்லையா என்பதை மறந்த நிலை யில் தேர்தல்கள் நடத்தியாக வேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இதிலே தீவிரமான ஆர்வம் காட்டினார்கள். அதற்குப் பின்னாலே தான் கிராமத்தில், ஊராட்சி என்றால் தேர்தல் நடக்கும் என்பதை நினைவு படுத்தினோம். பொய்ப நாட்களுக்கு முன்னாலே நடந்தது என்று அவர் களுக்கு நினைவூட்டியிருக்கிறோம். இந்த நிலைவைக் கொண்டு வந்தது நாங்கள் தான். அதற்குப் பின்னர்தான் ஆளும்கட்சிப் பணி என்ன, எதிர்க் கட்சிகள் பணி என்ன என்று பேசியிருக்கிறார்கள். "எங்களுக்குத் தேர்தலிலே ஆர்வம் இல்லை, எங்களுக்குத் தேர்தலிலே நம்பிக்கை இல்லை" என்று சொல்லியிருந்தால், மதுரை மாநகராட்சித் தேர்தலை நடத்த வேண்டிய அவசியமில்லை. அதை ஒத்தி வைத்து, அதையும் ஒரு ஸ்பெஷல் ஆபிசரின் கையிலே கொடுத்துவிட்டு, மதுரையில் மேயர் இல்லாத அளவிலே நடத்திருக்க முடியும். அதைச் சொல்கின்ற நேரத்திலே நானும் ஒரு குற்றச் சாட்டைச் சொல்வதாக இருந்தால், நானும் சொல்ல முடியும். 1969-லே நடைபெற்ற தேர்தலுக்குப் பிறகு, 1976-வது ஆண்டு வரையில் எத்தனை ஆண்டுக்காலம் தேர்தல் நடத்தப்படாமல் இருந்தது? அந்தக் காலத்தில் நகராட்சி உறுப்பின ந 1969-ல் தேர்ந்தெடுக்கப்பட்டேன். பல ஆண்டுகள் காத்திருந்தேன். அதற்குப் பிறகு தேர்தல் வருமா வருமா என்று பார்த்துக்கொண்டிருந்தேன். ஒவ்வொரு ஆண்டும், ஆண்டுக்கு ஆண்டு நீடித்துக் கொண்டே போனார்கள். நகராட்சியிலே உறுப்பினர்கள் எண்ணிக்கை தானாகக் குறைய ஆரம்பித் தது. அதற்குக் காரணம் பலர் சாக ஆரம்பித்தார்கள். எனக்கே எல்லோரும் செத்த பிறகு தேர்தலே இல்லாமல் செய்துவிடுவார்களோ என்ற பயமும் இருந்தது. நல்லவேளையாகக் கலைத்தார்கள். கலைத்ததனால் ஸ்பெஷல் ஆபிசர்கள் இடம்பெற்றிருக்கிறார்கள் என்று நாம் குற்றம்கூட சொல்லலாம். ஆனால் அதைச் சொல்லவில்லை. தேர்தல் நடத்த வேண்டுமென்று ஆளுங் கட்சியிலே இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியை நிச்சயமாக ஒரு கண்ணாடிமுன் நின்று மனந்திறந்து

பார்த்தால், நிச்சயமாக அதை ஏற்றுக்கொள்ளத்தான் செய்வார்கள். எதிர்க் கட்சி என்ற முறையிலே குற்றச்சாட்டு சொல்ல வேண்டுமென்ற ஒரே காரணத் திற்காகத்தான், ஆளுங் கட்சிக்காரர்கள்தான் இப்படிச் செய்தார்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கின்றார்களே தவிர, இன்றைக்கு வழக்கு மன்றத்திலே இருக்கின்ற வழக்குகளைப் பார்த்தால், யாராலே தேர்தல் நிறுத்தப்பட்டது என்பது நன்றாகத் தெரியும். ஆனால் இன்றைக்கு தேர்தலில் ஒரு புதிய ஆர்வம் வந்துவிட்டது. தேர்தல் நடக்க வேண்டும் என்பதிலே இன்றைக்கு ஒரு புதிய வேகம் வந்துவிட்டது. அத்தனை பேர்களும், கிராமங்களிலே இருக்கின்ற சாதாரண ஏழையெளிய மக்களும் தேர்தல் வரவேண்டுமென்று விரும்புகின்ற நிலைமைகள் இன்றைக்கு தமிழ் நாட்டில் உருவாகியிருக்கின்றன. இதற்குக் காரணம், நான் பெருமையாகத் தெரிவித்துக்கொள்வேன், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் என்பதைப் பெருமையாகச் சொல் வேன். இந்த அரசு நடத்துகின்ற உள்ளாட்சித் துறையின் நிர்வாகம் நோஞ் சான் நிர்வாகம் என்று சொன்னால், முன்பு 7 ஆண்டுக் காலம், 8 ஆண்டுக் காலம் தேர்தலைப் பின்னாலே சந்திக்காது என்ற அளவில் நடத்திய ஒரு அரசை நோஞ்சான் என்று சொல்வதா அல்லது வியாதிகளிலே வேறு ஏதாவது ஒரு வியாதியைச் சொல்வதா என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் ஒன்றைச் சொல்வேன். இவ்வளவு ஆர்வம் காட்டி நாங்கள் செய்கின்ற இந்தக் காரியங்களுக்கெல்லாம் காரணம் கற்பிக்கின்ற நோக்கத்தை எதிர்க் கட்சிகள் என்ற முறையிலே கைவிட்டால், செயல்முறைகளைக் கைவிட்டால், இன்னும் சிறப்பாக நாங்கள் பணியாற்றுவதற்கு அது பயனுள்ளதாக இருக்கும் என்பதைச் சொல்வேன்.

பாதாளச் சாக்கடைத் திட்டத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள்கூட சொன்னார்கள். சேலம் திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கல்நாட்டிவிட்டு கைவிட்டிருக்க முடியாது என்று சொல்லி யிருந்தால், நன்றாக இருந்திருக்கும். நான் வருத்தத்தோடு சொல்கிறேன். அப்படிச் சொல்லவில்லை. இன்றைக்கு அங்கே அந்தத் திட்டம் செயல் படுத்தப்படுவதில் ஓர் ஆர்வம் காட்டப்படுகிறது. அங்கே அந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு விரிவுபடுத்துவதற்கு வழிவகை சொல்லலாம். இந்த இடத்திலே தேக்கம் இருக்கிறது. இந்தத் தேக்கத்தைத் தவிர்த்து திட்டத்தை இப்படிச் செய்தால், வேகப்படுத்தலாம் என்று சொல்லலாம்.

[திரு. எஸ். ஆர். இராதா] [1982 மார்ச் 29

(முற்பகல் 11-50)

ஆனால் திட்டமே கைவிடப்பட்டதென்று பத்திரிகையில் வந்தால் சேலத்திலே உள்ள சாதாரண மக்கள் அந்தப் பத்திரிகைச் செய்தியைப் பார்த்ததும், திட்டம் கைவிடப்பட்டதுபோல் இருக்கிறது, திரு. ஆறுமுகம் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், போய்விட்டதுபோல் இருக்கிறது என்ற உணர்வை அவர்களிடையே வளர்க்கக் காரணமாக இருக்கும். இன்றைக்கு புதை சாக்கடைத் திட்டத்தைப் பொறுத்தவரையில், சேலமாக இருந்தாலும் சரி, கும்பகோணமாக இருந்தாலும் சரி, அந்தத் திட்டம் வர வேண்டுமென்று ஆர்வத்தோடு மக்கள் இருக்கிறார்கள். எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு ஒவ்வொரு பகுதியாகத் திட்டங்களைத் தீட்டினார்கள். ஆனால் பல நேரங்களில் அவை செயல்படவில்லை. கும்பகோணத்திலே, காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் புதை சாக்கடைத் திட்டத்தை ஆரம்பித்தார்கள். பிறகு தி.மு.க அரசு இருந்த காலத்தில், நான் தி.மு.க. வில் சேர்ந்திருந்தபோது, வற்புறுத்தியும் புதை சாக்கடைத் திட்டத்தைக் கொண்டுவர முடியவில்லை. தி.மு.க. அரசின்மீது குற்றம் சொல்லி என்னை நானே குற்றச்சாட்டுக்கு ஆளாக்கும் நிலை வரக்கூடாதென்பதற்காகச் சொல்லுகிறேன், திட்டங்கள் வரும்போது அதிலுள்ள சங்கடங்களை எடுத்துச் சொல்லி, அதை நிறைவேற்றுவதில் ஆர்வம் காட்ட வேண்டும். . .

* திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் பெருந்தன்மையோடு, அவர்களுடைய அணுகுமுறையை விளக்கினார்கள். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அடிக்கல் நாட்டிய பிறகு, எந்த அளவிற்கு அந்தத் திட்டம் நடந்துகொண்டிருக்கிறதென்று சொன்னால், 'திட்டம் நடந்துகொண்டிருக்கிறது' என்ற நம்பிக்கை ஏற்படும்.

திரு. எஸ். ஆர் இராதா : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் ஒன்றைக் கேட்டார்கள். அதைச் சொல்லாமல் போவதற்குக் காரணம், அதற்குரிய அமைச்சரவர்கள் எந்தெந்த வகையில் காரியங்கள் நடைபெறுகின்றன என்பதைச் சொல்லுவார்கள். அவர்தான் சொல்ல வேண்டும். அவர் சொன்னால்தான், அந்தக் காரியத்தில் உள்ள வேகம் . .

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லுவதை ஏற்றுக்கொள்கிறேன். அவர்தான் சொல்ல வேண்டுமென்பதல்ல. அந்தப் பொருள் பற்றி ஒரு உறுப்பினர் பேசும்போது, அந்தத் தகவல்களை அறிந்து கொண்டு பேசுவதுதான் சாதாரண நடைமுறை வழக்கம்.

1982 மார்ச் 29]

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் என்னை நம்ப மறுக்கிறார். அவரைப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன், நம்பிக்கை வைத்தால்தான் நல்லது . . . நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். 'என்னை விட்டால் வேறு யாரை நம்புவது' என்று சொன்னதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் சொல்லும்போது அவரைச் சந்தேகப்படாமல், என்மீது மாத்திரம் சந்தேகப்படுவதாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் பேசும்போது, 'திட்டம் கைவிடப்பட்டதென்று தெரியுமா, ஆதாரம் இருக்கிறதா' என்று அவரைக் கேட்டிருக்க வேண்டும்.

* திரு. க. இராமமூர்த்தி : துணைத் தலைவரவர்களே, எனக்குக் கோப்புகளைப் பார்க்கும் வாய்ப்பு கிடையாது. நடைமுறைகளைப் பார்க்கும் வாய்ப்பு உண்டு. பள்ளம் தோண்டவில்லை, பைப்புகள் போடவில்லை. அந்த நிலையில், திட்டம் செயல்படவில்லை என்று தெரிகிறது. அதுபற்றி மற்ற விவரங்களைக் கோப்புகளின் அடிப்படையில் நாங்கள், இங்கேயிருந்து கொண்டு சொல்ல முடியாது.

திரு. சோ. ஆறுமுகம் : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள், 'இங்கு பேசி பத்திரிகையில் வர வேண்டும்' என்று நான் பேசியதாக பொருள் தொனிக்கும் வகையில் சொன்னார்கள். அதை அவர் திருத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். முதலமைச்சரைக் கொண்டு கல்நாட்டு விழா 1980 ஆம் ஆண்டு முடிவில் என்று நினைக்கிறேன், நடைபெற்று, இன்னமும் பாதாள சாக்கடைத் திட்டம் துவங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டைத்தான் சொன்னேன். அந்தத் திட்டம் இருக்கிறதா, நடைபெறுமா என்பதற்கு விளக்கத்தை அமைச்சரவர்களிடம் தான் எதிர்பார்க்கிறேன், மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்களிடமல்ல.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். முன்பே இப்படிப் பேசியிருந்தால் அது சிறப்பாக அமைந்திருக்கக்கூடும்.

திரு சோ. ஆறுமுகம் : துணைத் தலைவரவர்களே, அப்படித்தான் பேசினேன். அடிக்கல் நாட்டு விழா நடைபெற்று இன்னமும் அந்தப் பாதாளச் சாக்கடைத் திட்டம் வேலை ஆரம்பிக்கப்படவில்லை என்றுதான் பேசினேன். . .

திரு. எஸ். ஆர். இராதா : 'திட்டம் கைவிடப்பட்டது' என்று சொன்னார்கள். அப்படிச் சொல்லியிருக்க வேண்டியதில்லை. என்ன நிலையில் இருக்கிறதென்று கேட்டிருக்கலாம் நான்கூட எதிர்க் கட்சியில் இருந்தால், இன்னமும் தீவிரமாகப் பேசியிருப்பேன். பதில் சொல்லுவார்கள் பதில் சொல்ல வேண்டுமென்றுதான் விருப்பமாக இருக்கிறேன். திட்டம் கைவிடப் பட்டது என்னும்போது, பத்திரிகையில் பெயர் வர வேண்டுமென்று சொன்னார்கள் என்று சொல்லமாட்டேன். அப்படிச் செய்தி தவறாக வந்து விட்டால், அங்கே உள்ளவர்களுக்குத் தவறான செய்தி கிடைக்குமென்பதற் காகச் சொல்லுகிறேன். மாண்புமிகு உறுப்பினரவர்கள் அந்தப் பகுதியில் உள்ளவர்கள், அதில் ஆர்வம் உடையவர்கள் எங்கே நிற்கிறதென்று கண்டறிந்து. அதை அமைச்சரவர்களுக்குச் சொல்லி, அதில் முனைப்பு காட்டுங்கள் என்று சொன்னால், அது எதிர்க் கட்சியாக இருந்தாலும் சரி, வேறு எந்த நிலையில் இருந்தாலும் சரி, ஒரு ஆட்சிக்கு நாம் செய்கின்ற காரியம் என்பதைவிட, நம்முடைய ஊருக்கு நாம் செய்கின்ற காரியம், அந்த முறையில் அமைய வேண்டுமென்றுதான் அதைக் குறிப்பிடுகிறேன்.

திரு. சோ. ஆறுமுகம் : துணைத் தலைவரவர்களே, நான் மீண்டும் குறுக்கிடுவதற்காக மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் வருத்தப்பட மாட்டார்கள் என்று நினைக்கிறேன். நான் பேசும்போதேகூட, கால்கோள் விழா நடைபெற்று 1-1/2 ஆண்டுக்கு மேலே ஆகிவிட்டது, அந்தப் பணி இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை, அந்தத் திட்டம் கைவிடப்பட்டுவிட்டதா என்று சந்தேகத்தைக் கேட்க எனக்கு உரிமையுண்டு. அமைச்சரவர்கள் பதில் சொல்லுவார்கள். அந்த அடிப்படையிலேதான் என்னுடைய கேள்வியை எழுப்பினேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவரவர்களே, அந்தத் திட்டம் கைவிடப்படவில்லை. அதற்குரிய வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் இதற்காக இவ்வளவு நேரத்தை எடுத்துக்கொண்டால், நான் பதில் சொல்லி முடிக்க வெகு நேரம் ஆகிவிடும். இதற்கு நான் பதில் சொல்லுகிறேன்.

திரு. சோ. ஆறுமுகம் : துணைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொன்ன பதிலுக்கு நன்றி. அந்தச் சந்தேகம் வரக் காரணம், முன்னாள் குடிநீர் வடிகால் வாரியத் தலைவர், திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் அவர்கள், பதவியை விட்டு நீங்கிய பின்பு, நிருபர்களைச் சந்தித்தபோது, பாதாளச் சாக்கடைத் திட்டம் பயன் உள்ளதாக இருக்குமா என்று கேள்வி கேட்டபோது, அது பயன் உள்ளதாக அமையாது, சாத்தியப்படாது, நிறைவேற்ற முடியாது என்று பதில் சொன்னதால்தான், எனக்கு அந்தச் சந்தேகம் வந்தது.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : இது சம்பந்தப்பட்ட மந்திரியே நான்தான். இருந்தாலும் மாண்புமிகு அமைச்சர் திரு. குழந்தைவேலு அவர்கள் பதில் சொல்லுவார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இது குறித்து அமைச்சரவர்கள் பின்னால் பதில் சொல்லுவார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு பேரும் பாதாளச் சாக்கடையைவிட்டு வெளியே வாருங்கள்.

திரு. சோ. ஆறுமுகம் : துணைத் தலைவரவர்களே, தாங்கள் சொல்லுவது தவறான எண்ணத்தைப் பரப்பிவிடும் நாங்கள் ஏதோ சாக்கடையில் இருப்பது போலவும். . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : தவறான எண்ணத்திலே சொல்லவில்லை. உறுப்பினர் அவர்கள் அப்படியிருந்தால் எனக்குப் பிடிக்குமா ?

திரு. எஸ். ஆர். இராதா : பாதாளச் சாக்கடைத் திட்டம் பற்றிக் கொஞ்சம் அதிகமாகப் பேசக் காரணம், சேலம் என்று சொல்லும்போது, எனக்கு அதில் கொஞ்சம் அக்கறை இருந்தது. என்னுடைய ஊரிலே, கும்பகோணத்திலே, என்றைக்கோ ஆரம்பிக்கப்பட்டு, ஒரு பகுதியிலே நிறைவேற்றப்பட்டுவிட்டது. அடுத்து, 2 ஆம் கட்டம், 3 ஆம் கட்டம், 4 ஆம் கட்டம் என்று இருப்பதை இன்றைக்குச் செயல்படுத்த வேண்டுமென்று சொல்லியும்கூட, இன்னமும் கவனிக்காமல் இருக்கும் நிலை இருக்கிறது என்பதை இந்த வாய்ப்பில் தெரிவிக்க வேண்டுமென்றுதான், அதை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் திரு. எஸ். இராகவானந்தம் அவர்கள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள் என்று அடிக்கடி சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அவர், அடிக்கடி எங்கள் ஊருக்கு வர வேண்டியவர்கள். எல்லா வகையிலும் சொந்தமானவர். உலகத்திலே கொசுவிற்குப் பெயர் போன இடமாக கும்பகோணம் இருந்தது. அந்த அளவிற்கு கொசுக்கள் இருந்த ஊரில், பாதாளச் சாக்கடைத் திட்டத்தை ஒரு பகுதியில் நிறைவேற்றிவிட்டு, மற்ற பகுதிகளில் செய்யாமல் இருந்த நிலையை மாற்றி, மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்த இலாக்காவை எடுத்துக்கொண்ட பிறகு, அவரிடம் அதைச் சொல்லி, மற்ற பகுதிகளுக்கு அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டிய அவசியத்தைச் சொல்லி, அவர்களும் அதை ஏற்றுக்கொண்டு, அதை நடைமுறைப்படுத்தும் காரியங்களில் ஈடுபட்டு, காரியங்கள் வேகமாக நடைபெறுகின்றன. அதைச் சொல்ல வேண்டுமென்பதற்காகத்தான் சொன்னேன். பாதாளச் சாக்கடைத் திட்டம்

எவ்வளவு அத்தியாவசியத் திட்டம் என்று எடுத்துச் சொல்லத்தான் சொன்னேன். கோவை, சேலம், திருச்சி போன்ற நகரங்களில், பல்வேறு இடங்களில் சில சில பகுதிகளில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. அடுத்த பகுதியில் நிறைவேற்ற பண வசதியில்லை என்பதால் தடைப்படுகிறது: இன்னும் பசுமையான நினைவில் இருக்கிறது. கும்பகோணத்தில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றிய பிறகு, இணைப்பு கொடுத்தார்கள். கட்டணம் வசூலிக்க வேண்டுமென்று இணைப்பு கொடுத்தவர்களிடம் காசு கேட்கும்போது, அவர்கள் காசு கொடுக்க மறுக்கிறார்கள். காசு கொடுக்கவில்லை என்றால், இணைப்பு தராதே என்று உத்தரவு போட்டார்கள். பலர் இணைப்பு வாங்காமல் சாக்கடையைத் தெருவில் விட்டார்கள். எனவேதான் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைக் கவனிக்க வேண்டுமென்று சொன்னேன். எல்லா நகரசபைகளிலும் இருக்கின்ற நிலைமை இது. இன்றைக்கு காலம்

(நண்பகல் 12-00)

நவீன காலமாக மாறிக்கொண்டிருக்கிறது. இது ரொம்ப முக்கியமாகக் கவனிக்க வேண்டிய ஒன்று. இதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. இந்தப் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைப்பற்றி அதனால்தான் நான் இங்கு எடுத்துக்காட்டிப் பேசினேன். பெயர் சூட்டுவதிலேதான் இந்த அரசு ஆர்வம் காட்டுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் சொன்னார். அதில் என்ன நன்மை இருக்கிறது என்றும் கேட்டார். அப்படி அவர் சொல்லும்போது என்னுடைய பகுதியான மாயூரத்தையும் சேர்த்துச் சொல்லிவிட்டார். அவருடைய கவனத்திற்கு நான் ஒன்றைக் கொண்டு வருகிறேன். நான் அவருடைய கருத்து குறித்து அவருடைய கவனத்திற்கு என் கருத்தைக் கொண்டு வருகிறேனேயல்லாமல், அவருடைய கருத்துக்கு மாறுபட்டு அல்ல. மாண்புமிகு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. கிட்டப்பா அவர்கள் மாயூரத்தில் மயில் ஆட வேண்டுமென்று கோரிக்கையை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலிருந்தே விட்டார்கள்: இன்றைக்கு இந்த அரசு வந்ததற்குப் பிறகு தான் மாயூரத்தில் மயிலை ஆட விடலாம் என்று சொல்லியிருக்கிறார்கள்: அதோடு மயிலாடுதுறை என்று பெயர் மாற்றமும் செய்யப்பட்டிருக்கிறது: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் 'பெயர் மாற்றுவதிலே இந்த அரசு காட்டுகிற ஆர்வத்தை காரியங்கள் செய்வதிலே காட்டவில்லை' என்று சொன்னார்கள்: அப்படி காரியம் செய்வதிலே இந்த அரசு உண்மையிலேயே ஆர்வம் காட்டவில்லை என்று சொன்னால், தன்னிறைவுத் திட்டம் போன்ற பல்வேறு

திட்டங்களை நிறைவேற்றியிருக்க முடியுமா என்று நான் கேட்கிறேன். அதே நேரத்தில் சில மக்களுடைய சில ஆர்வங்களை, விருப்பங்களை நிறைவேற்ற வேண்டுமென்ற நல்லெண்ணத்தில்தான் சில பெயர் மாற்றங்களையும் செய்திருக்கிறோம்: ஆகவே நிச்சயமாக இந்த அரசு பெயர் மாற்றம் செய்வதிலே மட்டும் தன்னுடைய கவனத்தைச் செலுத்திக்கொண்டிருக்கவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஒரு காலத்திலே காங்கிரஸ் நண்பர்கள் எப்படியெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தார்கள்? கல்லக்குடியாக இருந்தால் என்ன, டால்மியாபுரமாக இருந்தால் என்ன, பெயர் மாற்றத்தால் என்ன பயன் வந்துவிடப் போகிறது என்றெல்லாம் நம்மைப் பார்த்துக் கேட்டார்கள். திராவிட உணர்வின் காரணமாக, தமிழ் பற்றின் காரணமாக, தமிழ் வளர்ச்சியின்பால் இந்த அரசுக்கு இருக்கிற பற்று காரணமாக, ஆர்வத்தின் காரணமாக இப்படிப்பட்ட பெயர் மாற்றங்களை இந்த அரசு செய்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். திராவிட இயக்கத்திலே, திராவிட உணர்வோடு இருக்கிற மாண்புமிகு உறுப்பினர் திரு ஆறுமுகம் போன்றவர்கள் "இன்றைக்கு இப்படிப் பெயர் மாற்றுகிறீர்களே, அதனால் என்ன நன்மை வந்துவிடப் போகிறது?" என்று சொல்வது, குற்றச்சாட்டாகச் சொல்வது எனக்கு வியப்பாக இருக்கிறது. திராவிட உணர்வுடைய அவர்கள் இப்படிப்பட்ட நல்ல காரியங்களை இந்த அரசு செய்கிறபோது, பாராட்டாமல் இருந்துவிட்டால் கூட, பரவாயில்லை. ஆனால் குற்றச்சாட்டாகச் சொல்வது சரியல்ல: காங்கிரஸ் நண்பர்கள் அப்படிச் சொன்னால் கூட பரவாயில்லை என்று விட்டுவிடலாம்: காரணம் அவர்கள் 20 ஆண்டுகளாக இதைத் தான் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்: திராவிட உணர்வோடு உள்ளவர்கள் அப்படி அல்ல. அவர்கள் இதுபோன்ற நல்ல காரியங்களைப் பாராட்ட வேண்டும். இப்படிப்பட்ட நல்ல தமிழ்ப் பெயரைக் கேட்ட பிறகாவது நம்முடைய நாட்டு மக்களுக்குத் தமிழ் உணர்ச்சி வர வேண்டுமென்ற அடிப்படையில் இத்தகைய பல தமிழ்ப் பெயர் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இப்படிச் செய்வதன் மூலம் இந்த அரசு ஒரு பகுத்தறிவுக் காலத்தை நோக்கி வேகமாகப் போய்க்கொண்டிருக்கிறது என்பதை இந்த நாட்டு மக்களுக்குச் சொல்ல முடியும்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னொன்றையும் சொன்னார்கள். முகக்கொட்டையைப் பொறுத்தவரையில், அரசு ஆர்வம் காட்டியிருக்கிறது என்று சொன்னால், அந்தத் தொழிலில் என் மாண்புமிகு உறுப்பினர் கை வைக்கிறார் என்று எனக்குத் தெரியவில்லை. மற்ற தொழில்களில் அவர் கை வைத்திருந்தால் பரவாயில்லை என்று நான் விட்டுவிட்டுப் போயிருக்கலாம், ஆனால் முகக்கொட்டைத் தொழிலில் அவர் கை வைத்தால்,

பட்டுத் தொழில் பாதிக்கப்பட்டு விடும். (சிரிப்பு) கிலோ ஒன்றுக்கு 320 ரூபாய் என்று இருந்தது இன்றைக்கு 520 ரூபாய் என்று ஆகியிருக்கிறது. சில சமயங்களில் பட்டு நூலின் விலை 560 ரூபாய்க்குப் போகிறது. இன்றைக்கு பட்டுநூலை வெளி நாடுகளிலிருந்தாவது வாங்கி எங்களுக்குக் குறைந்த விலையில் கொடுக்க முயற்சி எடுங்கள் என்று நாங்கள் சொல்லி அந்த வகையில் இதுகுறித்து வேகமாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட நிலையில் நாம் இருக்கும்போது, 'செடியைப் பிடுங்கச் சொல்கிற செயலுக்கு அவர்கள் வரக் கூடாது': வேறு பல்வேறு திட்டங்களைப்பற்றி அவர்கள் சொல்லலாம். இன்றைக்கு பட்டு வளர்ப்பு என்பது நம் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், புதிதாக எடுத்துக்கொண்டிருக்கிற மிக மிகப் பெரிய முயற்சி. கர்நாடகாவிலே தான் பட்டுப் புழு வளர முடியும், அங்கிருந்து தான் நாம் பட்டு நூலைப் பெற முடியும் என்று சொல்லக்கூடிய நிலை இதன் மூலம் மாற்றப்பட்டிருக்கிறது. இன்றைக்கு இந்த அரசு வந்ததற்குப் பிறகு தமிழகத்திலேயும் பட்டுப் புழுவை வளர்க்க முடியும், இலையைப் போட்டு அவைகள் கூடு கட்டிய பிறகு புழுக்களைச் சாகடித்து 'ரீலிங் யூனிட்' வைத்து நூலைச் சுற்ற முடியும். அதன் மூலம் வெளிநாடுகளிலிருந்து கிடைக்கிற அளவுக்கு தரமான பட்டுநூலைப் பெற முடியும் என்கிற ஒரு நிலையை, தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், இந்த அரசு கொண்டுவந்திருக்கிறது. இந்த வகையில் ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற பல பேருக்கு இந்த அரசு பயிற்சி அளிக்கிற திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. இது பாராட்டத்தக்க முக்கியமான திட்டம்: அவர்களுக்கு ஊக்கம் தரப்படுகிறது: அந்த அடிப்படையில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலேயும் அவர்களுக்கு என்று தனியாக ஒரு யூனிட் அமைத்து அவர்களே பட்டு நூலை உற்பத்தி செய்ய வேண்டுமென்ற அடிப்படையில், நாமே பட்டுப் புழுக்களை வளர்த்து இலை போட்டு, அவைகள் கூடு கட்டிய பிறகு சாகடித்து, ரீலிங் யூனிட் வைத்து, நூலைச் சுற்ற முடியும் என்கிற முறையில் இத்திட்டம் செயல்பட உள்ளது: இப்படி ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தின் மூலமும் காரியங்கள் செய்யப்படுமானால், பல்லாயிரக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள பட்டுநூல் நமக்குக் கிடைக்கும்: அத்தகைய வாய்ப்பை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இங்கு உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டால், நாம் கர்நாடகாவிலிருந்து வாங்க வேண்டிய அவசியமில்லை: தமிழகம் தன்னிறைவு அடையும். ஆகையினால் தான் நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் பணிவோடு என்று கேட்டுக்கொள்கிறேன். தயவுசெய்து எதிலே உங்களுக்கு அக்கறையோடு இருந்தாலும் இந்தப் பட்டுநூல் உற்பத்தித் திட்டத்தைப் பொறுத்தவரையில் தயவுசெய்து வேறுபாடு கொள்ள வேண்டாம்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : ஆளும் கட்சி உறுப்பினர்களானாலும், எதிர்க் கட்சி உறுப்பினர்களானாலும், அவர்களுடைய கருத்துக்களைச் சொல்வது என்பது உறுப்பினர்களுக்கு இருக்கிற உரிமை. அதற்காக ஆளும் கட்சி உறுப்பினர் எதிர்க் கட்சி உறுப்பினர் சொல்கிற கருத்துக்களை எல்லாம் குறை சொல்வதும், திருத்திச் சொல்வதும், சொல்லாத ஒன்றைச் சொல்லியதாகச் சொல்வதும் முறையல்ல. எங்கள் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் செடியைப் பிடுங்கச் சொன்னதாக இங்கே மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். அப்படிப்பட்ட கருத்தை அவர் சொல்லவே இல்லை. எங்கள் கட்சி உறுப்பினர் தெரிவிக்காத ஒரு கருத்தை, தெரிவித்ததாக இங்கே பேசி, அவையினுடைய கவனத்தைத் திசைதிருப்புகின்ற வகையில் மாண்புமிகு உறுப்பினர் பேசுவது அவருக்கே அழகல்ல.

திரு. சோ. ஆறுமுகம் : முசுக்கொட்டை செடி வளர்ப்பு குறித்து நான் சொன்ன கருத்து வேறு. இதிலே முசுக்கொட்டைச் செடி வளர்த்து பட்டு நூல் எடுப்பதுபற்றி மாதம் ஒன்றுக்கு 150 ரூபாய் வீதம் 3 மாதம் பயிற்சி யளிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நம்முடைய விவசாயிகள் எல்லா வகையிலும் விஷயம் தெரிந்தவர்களாக இருக்கிறார்கள். இதிலே நாட்டம் காட்டுவதை விட ஏரிகள், குட்டைகள் இவைகளில் எல்லாம் தண்ணீரைப் பாதுகாப்போடு தேக்கி வைக்க வேண்டும். நீர் ஆதாரம் உயர்ந்தால் விவசாயிகளுக்கு நல்லது. அந்த வகையில் கவனம் செலுத்தவேண்டும். பட்டுநூல் சம்பந்தப்பட்ட பயிற்சியைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு இந்தப் பயிற்சி இல்லாவிட்டாலும்கூட அவர்கள் இந்தத் தொழில் செய்வார்கள் என்கிற அடிப்படையில் தான் என்னுடைய கருத்துக்களைச் சொன்னேன். செடிகளைப் பிடுங்க நான் சொல்லவே இல்லை. 'அது ஒரு சிக்கல் நிறைந்த பகுதி' என்று பேரறிஞர் அண்ணா சொன்னார். ஆகவே அந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த அளவிற்கு நார் உரிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்:

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே விளக்கத்தைச் சொல்லும்போது ஒன்றைச் சொன்னார்கள். பட்டுநூல் என்றால் சிக்கல் வரத்தான் செய்யும்: அந்தக் கலையில் சிக்கல் இல்லாமல் இருக்கின்ற நிலைமையை உருவாக்க வேண்டும்: சில நேரங்களில் சிக்கல் வருகிற விஷயங்களில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆர்வம் காட்டுவதை விட்டுவிட்டு, அவர் சம்பந்தப்பட்ட காரியங்களிலே கவனம் செலுத்த வேண்டும். இதில் சம்பந்தப்பட்டவர்கள் அத்தனை பேருக்கும் இதுபற்றி தெரிய வேண்டும்

என்கிற அடிப்படையில் ஒரு வாய்ப்பு தரப்பட்டிருக்கிறது. அவர் சொன்ன கருத்தை எதிர்த்து நான் சொல்லவில்லை. ஆனால் இந்தத் தொழில் இன்றைக்குத் தமிழகத்தில் புதிதாக வந்திருக்கிறது. முசுக்கொட்டைச் செடி வளர்ப்பு வேண்டாம் என்கிற அடிப்படையில் அவர் பேச்சை ஆரம்பித்தார். அவருக்கு பதில் சொல்வதற்காக நான் இதைச் சொல்லவில்லை. கர்நாடகாவிலிருந்து புதிதாக தமிழகத்திற்கு இதைக் கொண்டு வந்து பயிற்சி தருகிற ஒரு நல்ல திட்டம் இது. நானே இதனை நேரில் பார்த்திருக்கிறேன்: இதில் இன்னும் அதிகமான பேர்களுக்கு இதுகுறித்துப் பயிற்சியளித்து, இதில் மாற்றங்கள் செய்தால்தான் தமிழகத்தில் தேவையான அளவிற்கு இதனை உற்பத்தி செய்ய வாய்ப்பு உண்டாகும். தமிழகத்து விவசாயிகளைப் பொறுத்த வரையில், அவர்களுக்கு இத்தகைய பயிற்சி தேவையில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். அந்தக் கருத்தை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. இந்தத் தொழிலுக்குப் பயிற்சி இல்லையென்றால், இதில் வளர்ச்சி காண முடியாது. இது புதுமையான தொழில். இது நவீனமான தொழில். கர்நாடகாவில் மட்டும் செய்யப்பட்ட தொழிலை இன்றைக்கு தமிழகத்திற்குக் கொண்டு வந்திருக்கிறோம். நானே இந்தத் தொழில் செய்வதை நேரில் பார்த்திருக்கிறேன். விவசாயிகளைப் பொறுத்தவரையிலும் கூட, இது குறித்து அவர்கள் என்ன தெரிந்து வைத்திருக்கிறார்கள் என்பதை நான் நேரில் பார்த்திருக்கிறேன். முசுக்கொட்டைச் செடியை வளர்த்து, பட்டுப் புழுக்களை வாங்கி, அதற்கு இலைகளைப் போட்டு, கூடு கட்டிய பின் புழுக்களைச் சாகடித்து, நாங்களே பட்டு நூல் எடுக்கவும் தயார் என்கிற நிலைமைக்கு நாம் வருகின்றபோது இதிலுள்ள சிக்கல்கள் விரிவானவை. அவை பல பேருக்குத் தெரிவதில்லை. பயிற்சி கொடுப்பதன் மூலம் தான் இதிலுள்ள சிக்கல்களை அவர்கள் அறிய வாய்ப்பு உண்டாகும். அப்படி இல்லையென்றால், கோடிக்கணக்கான ரூபாய் கர்நாடகாவுக்குப் போய்ச் சேரும். தமிழகத்திற்குத் தேவையான பட்டு நூலை இந்தத் தொழிலின் மூலம் தான் நாம் உற்பத்தி செய்ய முடியும். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் இன்றைக்கு இந்தப் பயிற்சியைத் தர இருக்கிறோம். நாமே பட்டுப்புழுவை வாங்கி, நாமே வளர்த்து, இலையைப் போட்டு, புழுக்கள் கூடு கட்டிய பிறகு, அந்தப் புழுக்களைச் சாகடித்து, ரீலிங் யூனிட் வைத்து, நூலைச் சுற்ற முடியும். அதன் அடிப்படையில் பட்டு நூலைத் தயாரிக்க முடியும். அந்த வகையில் இந்தத் தொழிலைப் பற்றி விவசாயிகள் அறிந்து கொள்வதற்கான வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்கிற அடிப்படையில் தான், என்னுடைய கருத்துக்களை இங்கே சொன்னேன்.

(பிற்பகல் 12-10)

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் சொன்னதைப்போல் குளத்தில் தண்ணீர் தேக்கி வைப்பதையோ வாய்க்கால்களைப் புதுமைப் படுத்துவதையோ நான் நிச்சயமாக எதிர்த்துப் பேசவில்லை. நான் அதை ஆதரிக்கிறேன். ஆனால் அவர் எங்களைப் பார்த்து ஒரு கேள்வியைக் கேட்டார். "இன்னும் எத்தனை காலத்திற்கு நீங்கள் இருக்கப் போகிறீர்கள்? கொஞ்ச காலத்திற்குத்தானே இருக்கப் போகிறீர்கள்". என்று லேசாகப் பேச்சை முடிக்கிற நேரத்தில் கேட்டுவிட்டு அமர்ந்துவிட்டார். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் கொஞ்ச காலம் என்று சொல்லும்போது, அது 25 ஆண்டுக்காலமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். அந்த வகையில்தான் கொஞ்ச காலத்திற்கு இருந்துவிட்டுப் போங்கள் என்று சொன்னார் என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் இருக்கும்வரை நாங்கள் நிச்சயமாக ஆளும் கட்சியாகத்தான் இருப்போம் என்பதில் நான் மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கிறேன். எனவே கொஞ்ச காலம் என்று அவர் சொன்னதற்காக அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவைக்குக்கூட கொஞ்ச காலம்தான் இருக்கிறது. 12½ அல்லது 1 மணிக்கு முடிக்க வேண்டும். அதற்குத் தகுந்தாற்போல் முடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆர். டி. சீத்தாபதி: மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் பேசும்போது மாண்புமிகு உறுப்பினர் திரு ஆறுமுகம் அவர்கள் இருக்கும் வரை நாங்கள் ஆட்சியில் இருப்போம் என்று குறிப்பிட்டார். மாண்புமிகு உறுப்பினர் திரு ஆறுமுகம் அவர்கள் உயிரோடு இருக்கும் வரை ஆட்சியில் இருப்போம் என்றாரா அல்லது அவர் எம். எல். சி. யாக இருக்கும்வரை திரு. இராதா அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருப்போம் என்கிறாரா?

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு உறுப்பினர் திரு. சீத்தாபதி அவர்கள் எப்படி விரும்புகிறாரோ அப்படியே முடிவு செய்து கொள்ளலாம்.

அடுத்து, நேரமில்லை என்று சொன்னதன் காரணமாக நான் ஒன்றிரண்டு விஷயங்களை மட்டும் இங்கே குறிப்பிட்டுவிட்டு முடித்துக் கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

குடந்தை நகராட்சியில் என். எம். ஆர். பிரச்சினை பல ஆண்டுக்காலமாக இருந்து வருகிறது. அவர்களுக்குப் பல ஆண்டுகளாகச் சம்பளம் கொடுக்கப் படாதிருக்கும் நிலைமை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு அதில் அரசு விரைவில் முடிவெடுக்கும் நிலையில் இருக்கிறது என்று எண்ணு கிறேன். மற்ற நகராட்சிகளில் பணியாற்றுகிறவர்களில் என். எம். ஆர். களுக்குச் சம்பளம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அவர்கள் பணியும் முறைப் படுத்தப்பட்டு அவர்களை வேலையில் வைத்திருக்கிறார்கள். எனவே குடந்தை நகராட்சியிலும் அவர்களை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அரசாணை வெளியிடப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கும்பகோணத்தில் ஒரு மார்க்கெட்டும், பேருந்து நிலையமும் இருக்கின்றன. அவைகள் இரண்டையும் அந்த இடத்திலிருந்து மாற்ற வேண்டும் என்று திட்டம் போடப்பட்டு நீண்டநாட்களாக நிறைவேற்றப் படாமல் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட அதை நேரில் பார்வையிட்டுவிட்டு வந்திருக்கிறார்கள். பேருந்து நிலையம் மிகவும் நெருக்கடியான இடத்தில் இருக்கிறது. எனவே அதை மாற்ற வேண்டுமென்று திட்டம் தயாரிக்கப்பட்டு அரசின் பரிசிலனைக்கு வந்திருக்கிறது. எனவே அதையும் விரைவில் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே ஆதிதிராவிட மக்களுக்குப் பல்வேறு இடங்களில் இல்லங்கள் கட்டித் தரப்படுவதாக இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. என்னு டைய ஊருக்குப் பக்கத்தில் ஒரு ஒன்றியத்தின் சார்பில் "தொழுதகரை" என்ற இடத்தில் ஆதிதிராவிடர்களுக்காகக் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளைப் பார்த்தேன். இப்படி பல்வேறு ஒன்றியப் பகுதிகளிலும் ஆதிதிராவிடர்களுக்கு என்று வீடுகட்டித் தரும் நிலை ஏற்பட்டால் தமிழ கத்தில் உள்ள கிராமப்புறங்களில் நிச்சயமாக தன்னிறைவு ஏற்பட்டுவிடும். தன்னிறைவுத் திட்டங்களை பல்வேறு பகுதிகளிலும் நல்ல முறையில் செயல் படுத்துவதன் மூலமாக பல்வேறு தரப்பு மக்களும் மனம் திறந்து இந்த அரசைப் பாராட்டுகிறார்கள். தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக இன்றைய தினம் கிராமங்கள் தன்னிறைவை அடைந்துவருகின்றன. இவ்வாறு கிராமப் பகுதிகளுக்கு எந்த அளவுக்குக் கவனம் செலுத்துகிறோமோ அதே அளவுக் குத்தான் நகர்ப் பகுதிகளிலும் நாம் கவனம் செலுத்தி வருகிறோம். கிராமங் களில் ஆயிரக் கணக்கில் பணம் செலவழித்தால் நகர்ப் பகுதிகளில் கோடிக் கணக்கான ரூபாய்களைச் செலவிட்டு பல்வேறு காரியங்களைச் செய்து வருகிறோம். ஆனால் என்ன காரணத்தாலோ அது பலருக்குத் தெரியாமல்

இருக்கிறது. ஆனால் இந்த ஆட்சியாளர்கள் கிராமப்புறங்களுக்குத்தான் எல்லாவற்றையும் செய்கிறார்கள் என்று சொல்லிச் சொல்லி அதன் மூலம் நகர்ப்புறங்களில் இருப்பவர்கள் மத்தியில் இவர்களுக்கு ஆதரவில்லை என்ற நிலையை உண்டாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் அவர்கள் இவ்வாறு சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்த எண்ணம் நிறைவேறப் போவதில்லை. காரணம் இன்றையதினம் மாநகராட்சியின் பல்வேறு பகுதிகளை வளர்ப்பதற்கான முறையில் அநேக திட்டங்கள் கொண்டு வரப் பட்டிருக்கின்றன. எனவே இத்தகைய திட்டங்களையெல்லாம் நல்ல முறையில் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர் களே, சமுதாய வளர்ச்சி மற்றும் நகர நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பை இந்த அவையில் வைத்து ஓரளவுக்குப் பாராட்டுதல்களைப் பெற்றுக் கொண்டு முடிவடைந்திருக்க வேண்டிய இன்றைய நிகழ்ச்சிகள் சில விமர்சனங்களுக்கும் ஆளாகியிருக்கிறது. இங்கே சில தவறுகள் சுட்டிக் காட்டப்பட்டு, அது விரிவான விவாதமாக மாறியிருப்பதற்குக் காரணம் — மாண்புமிகு அமைச்சர் அவர்களே இதை மறுக்க மாட்டார் என்று கருது கிறேன்—மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள உள்ளாட்சித் துறையைத்தான் வைத்துக் கொண்டிருக்கிறாரே தவிர அதில் உள்ளாட்சி யில்லை. சிலவற்றைப்பற்றி இங்கே குறிப்பிட்டபோது நானே கூட நினைத் தேன். எதிர் தரப்பிலிருந்து சிலவற்றைக் குறிப்பிட்டபோது மாண்புமிகு உறுப்பினர் திரு இராதா அவர்களே எழுந்து, இவைகளையெல்லாம் இங்கே தான் குறிப்பிட வேண்டுமா என்றும், அவைகளைப்பற்றி இங்கே பேசலாமா என்றும் அவருக்கே உரிய முறையில் பேசுவார் என்றுதான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். ஆனால் அவரேகூட இன்றையதினம் குடந்தையில் உள்ள நகராட்சியில் இருக்கும் என். எம். ஆர். வேலைகளில் தவறுகள் நடை பெறுகின்றன என்றும் அந்தப் பிரச்சினையை சீக்கிரமாக முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்றும் இந்த அவையிலேயே பேச வேண்டிய அவசியம் ஏற்பட் டிருக்கிறது. சாதாரண நாட்களில் இதைப்போன்ற பிரச்சினைகளைக் குறித்து இங்கே நாம் பேசுவதில்லை ஆனால் இன்றைய தினம் தமிழ கத்தில் உள்ளாட்சி மன்ற அமைப்புகள் இயங்காத காரணத்தால் பஞ்சாயத்துக் களிலும், நகராட்சிகளிலும் இன்னும் மாநகராட்சிகளிலும் பேச வேண்டியவை களையெல்லாம் இங்கே வந்து, நாமே பஞ்சாயத்து, மற்றும் ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்களைப் போல் நகராட்சி மற்றும் மாநகராட்சி மன்ற உறுப்பினர்

[திரு. க. இராமமூர்த்தி] [1982 மார்ச் 29

கள்போல் பேச வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமை இந்த ஒரு துறைக்கு மட்டும் தான் ஏற்பட்டிருக்கிறது. அதற்காக தற்போதைய இத்துறையின் அமைச்சர் அவர்களை மட்டுமே குற்றவாளியாக ஆக்கிவிட முடியாது. இந்தக் குற்றத்தை இதற்கு முன்னாலே இன்னும் அழகாகச் செய்து முடித்துவிட்டு ஒருவர் போயிருக்கிறார். ஆனால் அந்தக் குற்றத்தைத் தொடர்ந்து செய்கின்ற முறையில் இன்றைய உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் வேறு வழியில்லாமல் பொறுப்பை ஏற்றிருக்கிறார் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள் எப்போது நடைபெறும் என்பது நிச்சயமற்ற ஒன்றாக இருக்கிறது. இதன் காரணமாக இன்றைய தினம் மூன்று சட்ட முன்வடிவுகள் இந்த அவையின் ஒப்புதலுக்காக கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

கோவை மாநகராட்சி மன்றத்தைப் பொறுத்த சட்ட முன்வடிவில் ஒரு கருத்து சொல்லப்பட்டிருக்கிறது.

"The Coimbatore City Municipal Corporation.............. so that the newly elected Councillors may come into office on a day within a period of six months from the date of his appointment, namely 12th June 1981.........".

இப்படிச் சொல்லிவிட்டு அதை மீண்டும் ஜூலைக்கு 1982 வரை நீட்டிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதாவது ஜூன் 82 வரை நீட்டிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்.

The Government have decided to conduct the ordinary elections to municipalities and municipal Corporations after the panchayat elections are over.

ஊராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை நடத்தும்போது முதல் கட்டமாக ஊராட்சி மன்றங்களுக்கும், பேரூராட்சி மன்றங்களுக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் தேர்தல்கள் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. அடுத்த கட்டமாக நகராட்சிகளுக்குத் தேர்தல்கள் நடத்தப்படும் என்றும் இறுதி கட்டமாக மாநகராட்சிகளுக்குத் தேர்தல்க்ள் நடத்தப்படும் என்றும் அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டது. இப்போது ஊராட்சி மன்றங்கள், பேரூராட்சி மன்றங்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கான தேர்தல்களைப் பொறுத்த வரை தேர்தலை நடத்த முடியாது என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

1982 மார்ச் 29] [திரு. க. இராமமூர்த்தி]

சென்ற முறை நான் பஞ்சாயத்துக்களைப் பற்றிய சட்ட முன்வடிவின் மீது பேசும்போதே தெளிவாகக் குறிப்பிட்டேன். இந்தச் சட்ட முன்வடிவின் அடிப்படையில் நீங்கள் தேர்தல்களை நடத்த முயலுவீர்களானால் நிச்சயமாக அவை நடைபெறாது. அதுமட்டுமல்ல எப்படியாவது தேர்தலை ஒத்திப் போட வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலேயே இந்தச் சட்ட முன்வடிவுகள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் அன்றைய தினம் தெளிவாகக் குறிப்பிட்டேன். இருந்தாலும் அந்தச் சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பட்ட பிறகு நீதிமன்றத்திலே நாம் எதிர்பார்த்தபடியே அதற்கு தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டு காலதாமதமாகிக் கொண்டிருக்கிறது. ஆனால் நீதி மன்றத்திற்கே போகாத நிலையில் உள்ள நகராட்சி மன்றங்கள் மற்றும் மாநகராட்சி மன்றங்கள் ஆகியவற்றிற்கான தேர்தல்களை எப்போது நடத்தப் போகிறீர்கள் என்பதுதான் கேள்வி. ஏற்கெனவே பஞ்சாயத்து தேர்தல்கள் எல்லாம் நடைபெற்று முடிவுற்ற பிறகுதான் நகராட்சிகளுக்கும் மாநகராட்சிகளுக்கும் தேர்தல்கள் நடத்தப்படும் என்ற அடிப்படையில் எப்படி அப்போதே வழி செய்யப்பட்டது என்பதுதான் எனக்குப் புரியவில்லை. ஆக இதுவும் நகராட்சி மன்றங்கள் மற்றும் மாநகராட்சி மன்றங்கள் இவற்றிற்கான தேர்தல்களையும் தள்ளிப் போட வேண்டும் அல்லது தவிர்க்க வேண்டும் என்ற நிலையில் எடுக்கப்பட்ட முடிவுதான் என்பதை நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12-20)

(மாற்றுத் தலைவர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் தலைமை)

ஆகவே சட்டமுன்வடிவுபற்றி நான் அதிகமாகப் பேச விரும்பவில்லை. இப்போது நல்ல திட்டங்களையெல்லாம் அறிவித்திருக்கிறார்கள், அல்லது செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். தன்னிறைவுத் திட்டம், ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், வேலை வாய்ப்பு உறுதித் திட்டம், நகராட்சி, ஊராட்சி மன்றங்களுக்குக் கட்டிடத் திட்டம், சத்துணவுத் திட்டம், குடும்ப நல்வாழ்வுத் திட்டம், கிராமத்தில் மகளிருக்கான கழிப்பிடங்கள் கட்டும் திட்டம் போன்ற மற்றும் வேறு பல புதிய திட்டங்களையெல்லாம் அறிவித்திருக்கிறார்கள், செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இவைகள் எல்லாம் பாராட்டுக்குரிய திட்டங்கள். இதை எப்படி நிறைவேற்றுகிறோம் என்பதிலேதான் கோளாறுகள் வருகின்றன. கோளாறு என்பதோடு மட்டுமல்லாமல் சில திட்டங்களில் நம்முடைய மன்னோட்டம் எந்த அளவிலே தவறிப்போயிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தத் திட்டங்கள் எப்படி செயல்படுகின்றன என்பதற்கு என்னிடம் ஒரு குறிப்பு இருக்கிறது.

"இன்டஸ்ரியல் எக்கானமிஸ்ட்" என்ற ஆங்கிலப் பத்திரிகையில் டாக்டர் ஆர். எம். ஹொனாவர் என்பவர்—

Dr. R.M. Honavar, Dirccior, Institute for Financial Management and Research, Madras.

"Indian Economic Development 1950-1980—An Assessment"

என்று ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அதிலே அவர்

"However excellent plans blue prints may be, they are good only to the extent they are implemented."

என்று குறிப்பிட்டிருக்கிறார். மிக உயர்வான திட்டங்கள் அல்லது மக்கள் பார்த்து இது போன்ற திட்டங்களை யாராவது கொண்டு வருவார்களா என்று எண்ணுகிற அளவிற்கு, வியக்கின்ற திட்டங்களை அறிவிக்கலாம். அதிலே தவறில்லை, ஆனால் உண்மையிலேயே அதுபற்றிப் பெருமை அடைய வேண்டுமென்றால், எந்த அளவிற்கு நிறைவேற்றப்படுகிறதோ அந்த அளவிற்குத்தான் அரசு அதிலே பெருமையைத் தேடிக்கொள்ள முடியும். ஆகவே திட்டங்களை அறிவிக்கின்றபோது, நாம் அதனுடைய பின்னணியைப் பார்க்கிறோம். வெறும் அதிகாரிகள் மட்டும் நிறைவேற்றுகிற திட்டங்கள், அல்லது அரசியல்வாதிகள் கலந்து இருப்பதாலே, பதவியிலே இருப்பவர்கள், பொறுப்பிலே இல்லாத, பணிப் பொறுப்பிலே இல்லாத அளவிலே அரசியல்வாதிகள் ஆகியவர்கள், இரண்டாக் கலந்து செய்கிற பணி என்பதாலே பல திட்டங்கள் காலதாமதமாகின்றன.

"It is the political-cum-Government organisation which will implement them, and therefore the nature, preceptions and structure of this organisation are important in determining our economic performance."

என்று அந்தக் கட்டுரையில் சொல்லியிருக்கிறார். ஆகவே பல கோடி ரூபாய்க்கு நாம் திட்டங்களை அறிவிக்கிறோம் என்றாலும், அந்தத் திட்டங்கள் எப்படி நிறைவேறுகின்றன என்பதைப் பார்க்கும்போது, அவைகள் முழுமையான அளவிற்குப் பலன் அளிக்கவில்லை என்பதை ஊராட்சித் துறையைப் பொறுத்த வரையில், என்னாலே சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கின்ற கொள்கைக் குறிப்பிலே மூன்றாவது பக்கத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள். குடிநீர் வசதிக்காக 1981-82 ஆம் ஆண்டில், மதிப்பீடு ரூபாய் 2,105 இலட்சம் என்று சொல்லி,

அதிலே செலவினம் என்று வருகிறபோது ரூபாய் 1,366 இலட்சம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே நம்முடைய மதிப்பீடுகள் உயர்வாக இருந்தும், செலவினம் குறைவாக இருக்கிறதென்றால், என்ன நிலைமை என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஏன் இந்தச் சூழ்நிலை என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

31—1—1982 வரையில், மீண்டும் மதிப்பீட்டைச் சொல்லியிருக்கிறார்கள் ரூபாய் 5,922 இலட்சம், செலவு என்று வருகிறபோது ரூபாய் 3,080 இலட்சம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த அளவிற்கு 31—1—1982 வரையில் செலவிட்டுவிட்டு, பாதி அளவிற்கு உள்ள மீதியுள்ள பணத்தை கடைசியாக இருக்கின்ற இரண்டு, மூன்று மாதங்களுக்குள்ளாகச் செலவு செய்து முடிக்க வேண்டும். இரண்டு, மூன்று மாதங்களுக்குள் முடிப்பது என்று வருகிறபோது, எவ்வளவு வேகமாகச் செய்ய வேண்டிய நிலை வரும்? போடாத சாலைகளைப் போட்டதாகவும், முடியாத கட்டிடங்களைக் கட்டியதாகவும், இடிந்து விழுகிற தண்ணீர்த் தொட்டிகளைக் கட்டியதாகவும்— இப்படியெல்லாம் செய்யப்படுகிறது என்பது உள்ளாட்சித் துறையிலே என்னைப் போலவே அனுபவம் உள்ள அமைச்சர் அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். 1981-82 ஆம் ஆண்டுக்கு இணைப்புச் சாலைகளுக்காக மதிப்பீடு ரூபாய் 2,822.55 இலட்சம்; ஆனால் முழுமையிலேயே செலவாகியிருப்பது ரூபாய் [illegible] இலட்சம்தான். அதிலே அடுத்த ஆண்டு என்று வருகிறபோது, செயல்திறன் இலக்கு என்று வருகிறபோது, இணைப்புச் சாலைகள் போட மதிப்பிட்டது 11,510.78 கிலோ மீட்டர் ஆனால் செய்து முடித்திருப்பது 6,228.22 கிலோ மீட்டர். இலக்கிலே பாதிகூட வரவில்லை. எந்த அளவிற்கு மதிப்பிடுகிறோமோ அதிலே பாதி கூட நிறைவேறவில்லை. அநேகமாக எல்லாவற்றிற்கும் இப்படித்தான் ஆதி திராவிடர் குடியிருப்பு, சிறுநீர்ப் பாசனம், ஊரக வளர்ச்சி, ஒன்றியப் பள்ளிக் கட்டிடங்கள் ஆகிய எல்லாவற்றிற்கும் இதுதான் நிலை என்றால், செயல்படும் திறனிலே ஏதோ கோளாறு இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். அல்லது மதிப்பிடும் முறையிலே அளவு இல்லாமல் மதிப்பிடுகிறோம் என்பதையாவது ஒத்துக்கொள்கிறார்களா என்பது தெரியவில்லை.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, செலவு செய்யப்பட்ட தொகையையும், எவ்வளவு வேலை முடிந்திருக்கின்றது என்ற மதிப்பீடுகளையும் இங்கே கொடுத்திருக்கிறோம். வேலை முடிக்கும் தருவாயில் உள்ளவைகள் இந்தக் கணக்கில் வரவில்லை. அப்படியே அவற்றைக் கொடுத்திருக்கிறோம். செலவு செய்[illegible] முடிவு பெற்றிருப்பதை நாம் இங்கே கொடுத்திருக்கிறோம். முடிவுறாமல் கொஞ்சம்

நிலுவையில் இருந்தால், அது இந்தக் கணக்கிலே வருவதில்லை. இரண்டு,
மூன்று மாதங்களில் முடிவடைந்துவிடும் என்று எதிர்பார்க்கிறோம்.
ஏற்கெனவே 90 சதவிகிதத்திற்கு முடிவுற்றிருக்கிறது. இன்னும் ஒரு வார
காலத்திலே எல்லா வேலைகளும் முடிவுறும் நிலை இருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்தை
ஏற்றுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது சாலைகள்
போடுவதைப் பொறுத்த வரையில், வேண்டுமானால் முழுக்க முழுக்கச் சரியாக
இருக்கலாம். சாலைகளைப் பொறுத்தவரையில், எல்லாவற்றையும் முடித்தால்
தான் நான் ராக்டர்களுக்குப் பணம் கொடுக்கிறோம் என்பதல்ல முழு
முடிய, ஸ்டேஜ் பை ஸ்டேஜ் stage by stage பணம் கொடுத்துக்
கொண்டிருக்கிறோம். ஆனால் மற்ற திட்டங்களைப் பொறுத்த வரையில்,
பாதிதான் பணம் செலவழித்திருக்கிறோம் என்றால் இதிலே கோளாறு
இருக்கிறது. இன்னுமொரு வாரத்திலே முடியும் என்பதிலே சந்தேகமில்லை.
ஒரு மாதத்திற்குள்ளாக, நிர்ப்பந்தத்தின் அடிப்படையிலே, அவசரம் அவசர
மாக வேலை நடைபெறுகிறபோது யாரும் ஒழுங்காகப் பார்க்கமாட்டார்கள்,
ஆன வரையில் ஆகட்டும் என்ற அளவிலே வேலைகள் ஆகும்.

இரண்டு நாட்களுக்கு முன்பு இராமேஸ்வரம் சென்று வந்தேன். அங்கே
யிருந்து இரண்டு மைல் அப்பாலுள்ள இடத்திற்குக் காரில் அழைத்துச் சென்
றார்கள். காரை ஓட்டிய டிரைவர் சொன்னார். அது டாக்சிதான். "கொஞ்ச
காலத்திற்கு முன்னால் கவர்னர் வந்து போனார். அப்போது இந்த ரோடு
எவ்வளவு அழகாக, கார் சுலபமாகச் செல்லக் கூடிய வகையில் நன்றாக இருந்
தது தெரியுமா. இப்போது கொஞ்ச நாட்களுக்குள் இப்படி ஆகிவிட்டது"
என்று சொன்னார். கொஞ்ச காலத்திற்குள்ளேயே எப்படி சாலைகள்
ஆகின்றன என்பதைச் சொல்வதற்காகத்தான் இதைச் சொன்னேன். ஆகவே
நம்முடைய இலக்கைப் பூர்த்தி செய்வதில் வேலைகள் ஆண்டு முழுவதும் பரவ
லாக நடைபெற வேண்டும். ஆண்டு முழுக்க நடைபெறாமல் கடைசியாக
இரண்டு, மூன்று மாதங்களில் நடைபெற்றால், எப்படியாவது பணத்தை
வாங்க வேண்டும், செலவழிக்கவேண்டும், இல்லையென்றால் அடுத்த ஆண்டிற்
குச் செல்லும் என்ற நிலையில் செலவழிப்பதால்தான், இப்படிப்பட்ட நிலை
கள் ஏற்படுகின்றன என்பதைச் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.
இவற்றையெல்லாம் இங்கே சுட்டிக்காட்ட வேண்டிய அவசியமில்லை. நகராட்சி
மன்றங்கள், பஞ்சாயத்து ஒன்றியங்கள், ஊராட்சி மன்றங்கள், மாவட்ட
வளர்ச்சி மன்றங்கள் நடைபெற்றிருக்குமானால், அங்கே சொல்லியிருக்கலாம்.
அவைகள் இல்லாத நேரத்தில் இங்கேதான் வந்து சொல்ல வேண்டியிருக்கிறது.

இன்னுமொன்றைச் சொன்னார்கள். தன்னிறைவுத் திட்டத்தைப்
பொறுத்தவரையில் . . .

**மாற்றுத் தலைவர் (திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்) : விவாதம் முடிவுறுகிற
வரையில் அவையின் அனுமதியுடன் அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.**

(பிற்பகல் 12-30)

திரு. க. இராமமூர்த்தி : தன்னிறைவுத் திட்டத்தைப் பொறுத்த
வரையிலே, ஒன்றை நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். அது மிக
நல்ல திட்டம், தேவையான திட்டம் என்பதோடு, அது வேகமாகச் செயல்படு
வதன் மூலமாக கிராமப்புற மக்களின் தேவைகளை ஓரளவுக்கு நாம் பூர்த்தி
செய்ய முடியும் என்ற ஆர்வத்திலே நடைபெறுகின்றது அந்தத் திட்டம்.
அதிலே நான் ஒன்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்த மன்றங்கள்
எல்லாம் செயல்படாத நிலையிலே ஒரு மாவட்டத்திற்கு என்ற அளவிலே
யாவது இந்தத் தன்னிறைவுத் திட்டத்தின் அடிப்படையிலே எடுத்துக்
கொள்ளப்பட்ட பஞ்சாயத்து ஒன்றியங்களிலே நடைபெற்ற வேலைகளை
'சூப்பர்வைஸ்' செய்ய வேண்டும். இந்த வேலை எப்படி நடைபெற்றிருக்
கிறது, அது 'எந்த அளவுக்கு வெற்றிகரமாக நடைபெற்றிருக்கிறது, அங்கு
எடுக்கப்பட்ட பல்வேறு வேலைகள் முறையாக நடைபெற்று அதனுடைய
பலனை மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்களா என்று தெரிந்து
கொள்கின்ற அளவுக்கு ஒரு உத்தியோகப் பற்றற்ற குழுவை நியமிக்க
வேண்டும். அதிலே வேண்டுமானால் அரசு அதிகாரிகளைச் சேர்த்துக்
கொள்ளலாம். அதில் யார் யார் இருக்க வேண்டும் என்று நான் 'சொல்லத்
தயாராக இல்லை. உத்தியோகப் பற்றற்றவர்களை சேர்த்துப் போய் சுற்றிப்
பார்த்து விட்டு வரச் சொல்லலாம். அந்த வேலைகள் அந்த இடங்களில் சரி
யாக நடக்கின்றனவா என்று பார்க்க வேண்டும். குறைகள் இல்லாமல் இருக்
கிறதா என்று பார்க்க வேண்டும். எந்தக் குறைகளுமே இல்லாமல்
இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லமாட்டார்கள்
என்று கருதுகிறேன். பல உதாரணங்களை ஏற்கெனவே சொல்லியிருக்
கிறோம். பரிபூரணமாக மறுத்துவிட முடியாது. ஆனால் இந்த அவையிலே
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு வந்ததுதான் குறைகள் என்று
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எண்ணிவிட வேண்டாம். அவர்கள்
யாரிடம் சொல்வது என்று அறியாததாலே, யாரிடம் முறையிடுவது என்று
தெரியாததால், பல விஷயங்கள் கவனத்திற்கு வராமல் இருக்கின்றன. அப்படி

ஒரு குழு இருந்தால்தான் நல்லது. இல்லையென்றால் அதைக் கவனிக்க முடியாது என்பதை மனதிலே கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம். வேலைக்கு உணவுத் திட்டமாக அது தொடங்கி ஊரக வேலை வாய்ப்புத் திட்டமாக அமைந்திருக்கின்ற ஒன்று. அதனுடைய பணிகளிலே ஒன்றைச் சொல்லி யிருக்கிறார்கள். அது மத்திய அரசின் திட்டமாக மாற்றியமைக்கப்பட்ட ஒன்று. இன்றைக்கு மத்திய அரசினுடைய நிதி உதவியோடு செயல்படுகின்றது அந்தத் திட்டம். அதற்கு குறிக்கோள் வைத்திருக்கிறார்கள். ஒன்று ஊரகப் பகுதிகளில் வேலை வாய்ப்பு இல்லாதவர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்தல். இரண்டாவது நிலையான சமுதாய உடைமைகளை உருவாக்கி, அதன்மூலம் ஊரகப் பொருளாதாரத்தை மேம்படுத்துதல், மற்றும் ஊரக ஏழை மக்களின் வருவாய் நிலையை உயர்த்துதல் என்று வைத்திருக்கிறார்கள். இதிலே நாம் எங்கே இருந்து கொண்டிருக்கிறோம் என்பது எனக்குத் தெரிய வில்லை. திட்டம் செயல்பட்ட ஓராண்டில் எந்த அளவுக்கு சமுதாய உடைமைகள் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன, எந்த அளவுக்கு சமுதாய உடைமைகள் வளர்ச்சி அடைந்திருக்கின்றன, அதன் விளைவாக ஊரகப் பொருளாதாரம் எந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது என்ற விபரங்களைக் கொடுத்திருந்தால், இந்தத் திட்டம் பற்றி விவரங்கள் முழுமை அடைந்திருக்க முடியும். ஆனால் அது எதும் இல்லாமல் இருந்துகொண்டிருக்கிறது.

இன்னொன்றை இந்த நேரத்திலே சொல்லாமலிருக்க முடியாது. இந்தத் ஏற்கெனவே அதைப்பற்றிப் பேசியிருக்கிறேன். என்றாலும்கூட, இந்தத் திட்டத்தின் அடிப்படையிலே, ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் அடிப் படையிலே தரப்படுகின்ற அரிசியை நான் இந்த அவையிலே ஒருமுறை கொண்டு வந்து காட்டினேன். நான் எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருப்பதுபோல, இது காண்ட்ராக்ட் மூலமாக நடைபெறுகின்ற வேலையல்ல. இதை நான் ஒப்புக் கொள்கிறேன். அவர்களும் (தி. மு. க.) ஏற்றுக் கொண்டார்கள். கொள்கைக் குறிப்பிலே அவர்கள் பேசும்போது சொல்லியிருக்கிறார்கள். இந்த வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் அந்த வேலைகளைச் செய்ய முன்வருகின்றவர்கள் மிகக் குறைவானவர்களாகவே இருந்துகொண்டிருக்கிறார்கள். அதன் காரணமாக நாம் எதிர்பார்த்த பலன் இல்லை. குறிப்பிட்ட இந்த வேலை

களுக்கு, வேலைக்கு உணவுத் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்கின்ற போது, அதற்கான பணியாட்கள் வருவதில்லை. அப்படி அதற்கு வராததனாலே அந்தந்தப் பகுதியிலே உள்ள வேலை நடக்கவில்லை. இந்தப் பணிகளுக்குக் குறிப்பிட்ட நிதியைச் செலவிட்டாக வேண்டும் என்று அவர்கள் காண்ட் ராக்டர்கள் மூலமாகத்தான் இந்த வேலையைச் செய்து முடிக்கிறார்கள் என்ற நிலையை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பிட்ட வேலையைக் குறிப்பிட்ட சமயத்திலே செய்து முடியுங்கள் என்று சொல்லும்போது, காண்ட்ராக்டர்கள் அதிகாரம் இல்லாமல் அன் அபிசியலாக (un-official) அவர்கள் தங்கள் ஆட்களைக்கொண்டு இந்த வேலைகளை நிறைவேறச் செய்து கொண்டிருக்கிறார்கள். அதிலேகூட எனக்கு வருத்தம் இல்லை. ஆனால் நாம் கருதியுள்ள நோக்கத்தின்படி, அங்கு உண்மையிலேயே நடக்கிறதா ? காண்ட்ராக்ட்டில் இந்த அரிசியைக் கொண்டுவந்து கொடுத்தால், வேலை செய்பவர்கள் வாங்குவதற்குத் தயாராக இல்லை. அந்த அளவுக்கு அரிசி யினுடைய தரம் இருக்கிறது. அந்த அரிசியை அரசாங்கத்தினுடைய புரோக்யூர்மெண்டுக்குக் கொடுத்துவிட்டு, பதிலுக்கு அவர்கள் அதைப் பணமாக வாங்கிக்கொண்டு போகிறார்கள். இந்த வகையிலேதான் வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. அரசிடத்திலே அரிசியை வாங்கி, அதையே பணமாகத் திரும்பக் கொண்டு போகிறார்கள். வேலை கொடுக்கிறோம் ; கூலி கொடுக்கிறோம் என்ற அளவிலே வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றனவா என்று பார்க்க வேண்டும். அதைத்தான் நாம் எதிர்பார்க்கிறோம். ஆனால் அந்த அளவுக்கு இந்தத் திட்டம் வெற்றிகரமாக இல்லை. இந்தத் திட்டத்தின் மூலமாக அடையவேண்டிய பயன்கள் அமையவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் மறுக்கமாட்டார்கள் என்று கருதுகிறேன்.

இந்த ஊராட்சி அலுவலகங்களைக் கட்டுவதற்காக அரசாங்கம் 1980—81லே 40 அலுவலகங்களைக் கட்டுவதற்கு ரூ. 15 இலட்சம் ஒதுக்கிச் செய்திருக்கிறார்கள், 1981—82 லே 50 அலுவலகங்கள் கட்டுவதற்கு ரூ. 15 இலட்சம் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். 1982—83 ஆம் ஆண்டிலே மீண்டும் ஒரு 50 அலுவலகங்கள் கட்டுவதற்காக 15 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய் திருக்கிறார்கள். ஏறத்தாழ 45 இலட்சம் ரூபாய் மூன்று ஆண்டுகளிலே பஞ்சாயத்துகளினுடைய அலுவலகக் கட்டிடங்களைக் கட்டுவதற்காக ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். ஆனால் இந்தத் துறை எத்தனைப் பஞ்சாயத்துகளிலே சொந்தக் கட்டிடங்கள் இருக்கின்றன என்ற தகவலைத் தந்திருக்க வேண்டாமா ? இதுவரையிலே இனிமேல் எத்தனை பஞ்சாயத்துக் களுக்குப் பஞ்சாயத்து அலுவலகக் கட்டிடங்கள் கட்டியாக வேண்டுமென்று

சொல்ல வேண்டாமா? அதுகூட இல்லாமல் ஆண்டுக்கு 15 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்கிறோம், கட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்கின்றார்கள். ஒவ்வொரு கட்டிடமும் எந்த அளவுக்கு மதிப்பீடு செய்யப்படுகிறது என்ற நிலையைச் சொல்ல வேண்டாமா? அது இல்லாத நிலையிலே செயல்படுகிறபோது, ஏதோ மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராதா அவர்கள், "அது, நான்தான் கொண்டு வந்தேன், நான்தான் நடவடிக்கை எடுத்தேன், ஆகவேதான் அந்தத் திட்டம், அந்த பாதாளச் சாக்கடைத் திட்டம், ஆகவே தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள்" என்று சொன்னார்கள். அதுபோல சொல்லக் கூடியவர்கள் மட்டும்தான் அவரவர்கள் ஊர்களிலே அலுவலகக் கட்டிடங்களைக் கட்டிக் கொண்டுவிடுகின்ற வாய்ப்பு இருக்குமோ என்ற சந்தேகம் எதிர்த் தரப்பிலே இருக்கின்றவர்களுக்கு இல்லாமல் இல்லை என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்ததாக, என்னுடைய கணக்குக்கே வராத ஒன்று இருக்கிறது. சத்துணவுத் திட்டம். சத்துணவுத் திட்டத்தின் அடிப்படையிலே ஏறத்தாழ இன்றைக்குப் புள்ளி விவரங்கள் கொடுத்திருக்கிறார்கள். இத்திட்டம் 71 ஒன்றியங்களில் ஆரம்பிக்கப்பட்டது. அவைகளில் 41 ஒன்றியங்களில் நிறைவேற்ற நிதி கொடுக்கப்பட்டுள்ளது. 27 ஒன்றியங்களிலே நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத்திட்டம் மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்கு மாற்றப்பட்டிருக்கிறது என்றும், சில மாறுதல்களோடு செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றும் விவரங்களையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். இதைச் சொல்லி விட்டுக் கடைசியாகச் சொல்கின்றார்கள். "ஒவ்வொரு குழந்தைகள் காப்பகங்களில் 120 பேர் என்ற விகிதத்தில் இம்மாநிலத்தில் 93 வட்டாரங்களில் அமைந்த 1,002 குழந்தைகள் காப்பகங்களில், பள்ளி செல்லும் பருவத்திலுள்ள குழந்தைகளுக்கும், கருவுற்றத் தாய்மார்களுக்கும் தினமும் உணவு வழங்க இத்திட்டம் வகை செய்கிறது. 1,002 காப்பகங்கள் ஒவ்வொன்றின் மூலமும், பள்ளி செல்லும் பருவத்திலுள்ள 40 குழந்தைகளுக்கும், குழந்தைக் காப்பகத்தில் பதிவு செய்யப்படாத 40 குழந்தைகளுக்கும், கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் 40 பேர்களுக்கும்" என்ற புள்ளி விவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே பார்க்கின்றபோது, பள்ளி செல்கின்ற குழந்தைகள் 40, செல்லாத குழந்தைகள் 40 என்ற அளவிலே ஒரு ஒன்றியத்திற்கு ஒரு யூனிட்டு 80 குழந்தைகள் என்ற விகிதத்திலே 1002 யூனிட்டுகளுக்கு அல்லது 1002 காப்பகங்களுக்கு, மொத்தம் 93

வட்டாரங்களிலே பஞ்சாயத்து ஒன்றியங்களிலே இத்திட்டம் அமைந்திருக்கின்றது. அந்த அடிப்படையிலே பார்க்கின்றபோது, 93 பஞ்சாயத்து ஒன்றியங்களிலே ஏறத்தாழ 80,160 குழந்தைகள் இந்தத் திட்டத்தின் அடிப்படையிலே உணவை பெறுகிறார்கள் அல்லது வாய்ப்பினைப் பெறுகிறார்கள். இந்தக் கணக்குப் பார்க்கின்றபோது, 378 பஞ்சாயத்து யூனியன்களுக்கும் இது எவ்வளவு வருகிறது என்று கணக்குப் போட்டுப் பார்த்துக்கொண்டிருந்தேன். இந்த 378 பஞ்சாயத்து யூனியன்களுக்கும் மொத்தமாக ஏறத்தாழ 3,20,240 குழந்தைகள் என்ற அளவிலே வருகிறது.

(பிற்பகல் 12-40)

இந்த 3,20,240 குழந்தைகளுக்கு, நாள் ஒன்றுக்கு 30 பைசா விதம் தருகிறோமென்ற நிலையை ஏற்றுக்கொண்டாலும், ஏற்கெனவே சத்துணவுத் திட்டத்தின்கீழ் இதை அமுல்படுத்திக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அறிவித்துள்ள அல்லது நிதியமைச்சர் அவர்கள் அறிவித்துள்ள 100 கோடி ரூபாய் திட்டத்திலும், இந்தக் குழந்தைகளுக்காகத்தான் செயல்பட்டாக வேண்டும். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அறிவித்த நாற்றங்கால் பள்ளித் திட்டமும் இந்தக் குழந்தைகளுக்காகத்தான் செயல்பட்டாக வேண்டும். இரண்டிற்கும் 101 கோடி ரூபாய். இது தவிர பள்ளி செல்லும் குழந்தைகளுக்குச் சத்துணவு அளிக்கும் திட்டத்தின்கீழ் செலவிடப்படும் சில கோடி ரூபாய்கள். எந்த அடிப்படையிலே இவ்வளவு செலவாகும் என்று கணக்கிட்டார்கள் என்பது புரியவில்லை. திரும்பத் திரும்ப நான் கணக்குப் போட்டுப் பார்க்கிறேன். அதற்காகக்கூடிய செலவெல்லாம், மொத்தமாக, ஏறத்தாழ 20 இலட்சம் ரூபாய் அல்லது 30 இலட்சம் ரூபாய்க்கு மேல் போகவில்லை. ஆண்டு முடிவிலே என்று வருகிற போது, அல்லது ஓராண்டுக்கு என்று வருகிறபோது இந்தத் திட்டத்திலே நேராயமாக 15 கோடி ரூபாய்க்கு அதிகமாகச் செலவிட முடியாது. 100 கோடி ரூபாய் திட்டத்தின் அடிப்படையிலே 2 வயதிலிருந்து 10 வயது வரையுள்ள அத்தனை குழந்தைகளுக்கும் சத்துணவு என்றாலும் சரி, அல்லது நீங்கள் (உள்ளாட்சித் துறை அமைச்சர்) சொல்கிற திட்டமானாலும் சரி அல்லது கல்வி அமைச்சர் அவர்கள் சொல்லும் நாற்றங்கால் பள்ளி செல்லும் வயது உள்ள குழந்தைகளுக்கான திட்டமானாலும் சரி, இவ்வளவு பேர்களுக்கும் ஆண்டொன்றுக்கு 15 கோடி ரூபாய்க்கு மேலே செலவு செய்ய முடியாது. ஆகவேதான் சொல்கிறேன், மதிப்பீடு எந்த அடிப்படையிலே செய்தார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும்,

செயல்பட்டுக் கொண்டிருக்கும் பஞ்சாயத்து யூனியனிலும் இந்தக் குழந்தைகளின் எண்ணிக்கை எவ்வளவு? அவர்களுக்குச் செய்யக்கூடிய செலவு— — மிக அதிகமாகச் சத்துணவிற்காகச் செய்யக்கூடிய செலவு என்ற அடிப்படையிலே திட்டத்தைப் போட்டிருந்தால், மதிப்பீடு முறையாக இருந்திருக்கும். இன்றைக்கு அளவுக்கதிகமாக மதிப்பீடு செய்திருக்கிறோம். மற்ற செலவினங்களைப் பொறுத்தவரையில், சாலைகளுக்கு, கட்டிடங்கள் கட்டுவதற்கு ஒதுக்கும் செலவினங்களைப் பொறுத்தவரையில், ஆண்டு இறுதியில் வேகமாகச் செயல்பட முனைகிறோமே அதுபோல, இந்தத் திட்டமும் நிதியைச் செலவிட ஒரு வாய்ப்பாக அமையும். அது சத்துணவாக அமையாது. வீண் செலவாக அமையும். சில இடங்களில் வேலை எடுத்துச் செய்ய முடியாது என்று சொல்லும் காண்ட்ராக்டர்களைப் பார்த்திருக்கிறேன். சில வேலைகளை முடிக்க முடியாமல் திணறிக் கொண்டிருப்பார்கள். ஊராட்சி ஒன்றியங்களிலே அல்லது மற்றத் துறைகளிலே சில வேலைகளை எடுக்க ஆளே வராது. கடைசியில் ஒரு மாதம்தான் இருக்கும். அதற்கான பணத்தை வாங்க வேண்டுமென்று இன்ஜினியரே ஆள் பிடிப்பார் அல்லது மற்றவர்கள் மூலமாக ஒரு காண்ட்ராக்டரைப் பிடித்து, வேலையை ஒரு வழிக்குச் செய், முடித்ததாகக் கருதி பணம் கொடுக்கிறேன் என்று சொல்லி, பல இடங்களிலே நடப்பது உண்டு. அதுபோல் சத்துணவுத் திட்டத்திலே நடைபெறும் என்ற அச்ச உணர்வை, சந்தேகத்தை, நியாயமான சந்தேகத்தை அரசு அகற்றுவதற்கு முன் வரவேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன். அதோடு மட்டுமல்ல. இன்றைக்குப் பல திட்டங்களை அரசு அறிவிக்கிறது. மீண்டும், இன்டஸ்டிரியல் எக்கனாமிஸ்ட் என்ற பத்திரிகைதான் துணையாக வருகிறது. சில திட்டங்களை அறிவிக்கும்போது நமக்கு என்ன எண்ணம் இருக்கிறதென்று அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

"Similarly, their anxiety to win over the electorate has led them to function exclusively as advocates of a large transfer of resources to as large a number of people as possible. In a poor country doing good to the poor is always a winning slogan. Under this slogan they have advocated subsidised prices for consumers."

சில திட்டங்களை அறிவிக்கும்போது அல்லது நம்முடைய நாட்டைப் போன்ற ஏழை நாடுகளிலே சில திட்டங்களை அறிவிக்கும்போது, எதைச் சொன்னால் உடனடியாக எடுக்குமோ அதை அறிவிப்பதன் மூலம் We may be popular

நம்மைப் போன்று உண்டா என்ற எண்ணத்தைத் தந்துவிடலாம். உதாரணத்திற்குச் சொல்வதானால், சத்துணவுத் திட்டம் 100 கோடி ரூபாய் என்று சொன்னவுடன், உலகம் முழுவதும் வியப்பார்கள். இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இப்படி ஒரு திட்டம் இல்லை. ஏழைக் குழந்தைகளுக்காக, வாடி வதங்கிய குழந்தைகளுக்காக, உணவு இன்னது என்று அறியாத குழந்தைகளுக்காக, சத்தில்லாத குழந்தைகளுக்காக ஒரு ஆட்சி 100 கோடி ரூபாய் செலவிட முன்வருகிறதென்றால், அந்த எண்ணம் எப்படிப்பட்ட எண்ணம் என்று நினைப்பார்கள்? வியப்பார்கள், அதில் தவறில்லை. அதே நேரத்தில் அந்தத் திட்டம் எந்த அளவிற்குப் பயன்படுகிறது, அந்தத் திட்டத்தின் அடிப்படையில் உண்மையிலேயே எவ்வளவு பேர்கள் பயன்பெறுகிறார்கள் என்ற நிலைமைகள் வருகிறபோது, நாம் அறிவித்த தொகையிலே பாதிகூடச் செலவிட முடியாத நிலைமை இருக்கிறதென்பது வெளி உலகிற்குத் தெரியாது. ஆகவே நமது திட்ட நடவடிக்கைகள் அந்த முறையிலே அமைந்திருக்கின்றன என்ற உணர்வு ஏற்படுவதை யாராலும் தடுக்க முடியாது. எனவே எந்தத் திட்டமாக இருந்தாலும் சந்தேகம் வருகிறது. அது தன்னிறைவுத் திட்டமானாலும், வேலைக்கு உணவுத் திட்டமானாலும் அல்லது வேலை வாய்ப்பு உறுதித் திட்டமானாலும், எந்தத் திட்டமானாலும், அது செயல்படும் முறையிலே கோளாறு இருக்கிறது. அவற்றைக் கண்டிக்க, சுட்டிக்காட்ட, தடுக்க இடையிலே ஏதாவது ஒரு இயந்திரம் இருக்கிறதா என்றால் எங்கேயும் கிடையாது. எங்கே நடைபெறுகிறதோ அந்த இயந்திரத்திலிருந்து கடைசியில் வர வேண்டிய இயந்திரமான செக்ரடேரியட்தான் இருக்கிறது. இடையிலே இருக்க வேண்டிய ஜனநாயக அமைப்புகள் அத்தனையும் முடங்கிப் போயிருக்கின்றன. அதோடு மட்டுமல்ல. சில மாவட்டங்களில் மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்; வளர்ச்சி மன்றங்களை வைத்துக் கொண்டிருங்கள் அது வேறு. சில மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் செயல்படாமல் இருக்கின்றன. அதைக் கண்காணித்தது யாராவது? ஏன் செயல்படவில்லை? கூட்டம் கூட்டவில்லை? ஒரு ஆண்டுக்கு மேலாக வளர்ச்சி மன்றங்கள் கூட்டப்படவில்லையே, கூட்டப்பட்டாலும் கோரம் இல்லாமல் தள்ளி வைக்கப்படுகின்றனவே, எதனாலே? உண்மையிலேயே என்ன கோளாறு இருக்கிறது என்று பார்க்க வேண்டாமா? ஜனநாயகம் இங்கே இயங்கவில்லை. மேலேயிருந்து ஜனநாயகத்தைத் தரும்போது, ஜனநாயகம் முறைப்படி இயங்கவில்லை, எங்கோ தடைபட்டுக் கொண்டிருக்கிறதென்ற உணர்வு வந்திருக்க வேண்டாமா? இந்தத்

துறையிலே அது இல்லாத காரணத்தை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. உள்ளாட்சித் துறையிலே மட்டும் அடங்கவில்லை. மாவட்ட வளர்ச்சி மன்றங்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்தான் தலைவர்.

மாற்றுத் தலைவர் (திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்). மாண்புமிகு உறுப்பினர் பேசத் தொடங்கி 30 நிமிடங்கள் ஆகிவிட்டன. இன்னும் எவ்வளவு நிமிடங்களில் பேச்சை முடித்துக்கொள்வார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: தலைவரவர்களே, நான் பேச்சை முடித்துக் கொள்கிறேன். பிறகு வேண்டுமானால் சட்டமுன்வடிவுகளின் மீது விவரமாக மற்ற கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இரண்டையும் சேர்த்துப் பேசும்போது. . . .

திரு. ஆர். டி. சீத்தாபதி: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்ன கருத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே வரவேற்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகம்மது: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு இராமமூர்த்தி அவர்கள் சட்ட முன்வடிவில் தனியாகப் பேசப் போவதாக புதிய கருத்து சொன்னதால், நான் ஒரு செய்தி சொல்ல விரும்புகிறேன். அலுவல் ஆய்வுக் குழுவில் நாம் இப்படி ஒரு முடிவெடுத்ததற்குக் காரணம், தனி அதிகாரிகளுக்கான வெறும் கால நீட்டிப்பு குறித்த சட்டமுன்வடிவுகள் என்பதால்தான். ஏற்கெனவே 2, 3 முறை பேசியிருக்கிறார்கள். எனவே கொள்கைக் குறிப்பில் பேசும் போது அது குறித்தும் ஒன்றிரண்டு கருத்துக்களை, மாநகராட்சிகள் சம்பந்தமான கருத்துக்களைச் சொல்வதாக இருந்தால், சொல்லலாம், பிறகு மொத்தமாக சட்டமுன்வடிவுகளை நிறைவேற்றி விடலாமென்று முடிவெடுத்திருக்கிறோம். பேசும்போது, அதையும் சேர்த்துப் பேசினால் போதுமானது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சீத்தாபதி அவர்கள் திரு. இராமமூர்த்தி சொன்னதை வரவேற்றார்கள். அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது அல்லது பதில் சொல்லி முடித்த பிறகு தன்னிலை விளக்கமாக ஏதாவது கேட்கலாம். இல்லையென்றால் ஒவ்வொருவரும் திரும்பவும் பேச ஆரம்பித்து, விவாதம் நீளும். இப்போதே அவை முடிக்கிற காலத்தை 2½ மணி, 3 மணி என்று பொருத்தமில்லாமல் நீடித்துக்கொண்டிருக்கிறோம். அதைத் தவிர்க்க எல்லோரும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. சோ. ஆறுமுகம்: மாண்புமிகு அவை முன்னவர் சொன்ன கருத்தை முழுமையாக ஏற்றுக் கொண்டாலும் கால நீட்டிப்புக் குறித்த சட்டமுன்வடிவுகளுக்குத் திருத்தங்கள் கொடுத்திருப்பார்கள். ஓராண்டு வேண்டாம் ஆறு மாதங்கள் இருந்தால் போதும், என்று திருத்தம் கொடுத்திருந்தால், அதை முன்மொழிந்து பேச வேண்டி வருமே.

மாண்புமிகு திரு. கா. இராசா முகம்மது: துணைத் தலைவரவர்களே, சட்டமுன்வடிவுகளை நீங்கள் எல்லாம் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கிறீர்கள் என்பதற்கு அடையாளமாக யாருமே திருத்தம் கொடுக்கவில்லை. எனவே தான் அப்படியே நிறைவேற்றலாமென்று சொல்லுகிறோம்.

திரு. க. இராமமூர்த்தி: தலைவரவர்களே, சட்டமுன்வடிவிற்குத் தனியாக விவாதம் தேவை என்று சொல்லவில்லை. மாண்புமிகு அவை முன்னவர் சொன்னதுபோல மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறோமோ இல்லையோ, எங்களுக்கு வேறு வழியில்லாமல் இருந்து கொண்டிருக்கிறோம். அமைச்சருக்கும் வேறு வழியில்லை. நீட்டிக்கக் காலம் கேட்பதைத் தவிர அவருக்கும் வேறு வழி இல்லை.

(பிற்பகல் 12.50)

ஓராண்டுக்கு என்று கேட்பதைவிட அரசு நினைக்கிறபோது தேர்தலை நடத்தும் என்கிற விதத்தில் அதிகாரத்தைக் கேட்டிருக்கலாம். இன்றைக்கு அரசு போடுகிற திட்டங்களை நிறைவேற்ற பல்வேறு அமைப்புகள் இருக்கின்றன. உள்ளாட்சித் துறை மாவட்டங்களில் இருக்கிற பல்வேறு அமைப்புகளை அதிகாரம் செய்ய முடியவில்லை. அல்லது கடுமையாக நடந்துகொண்டு திட்டங்களை நிறைவேற்ற முடியவில்லை. அதனால் இன்றைக்கு பல்வேறு பணிகள் முழுமையாக நிறைவேற முடியவில்லை. அரசு கொள்கையாக அறிவிக்கிற திட்டங்களாகட்டும், ஒதுக்கப்படுகிற நிதியாகட்டும், அல்லது செலவு செய்கிற வகையிலாகட்டும், இன்றைக்கு உள்ளாட்சித் துறை எந்த முறையில் நடைபெறுகிறது என்பதை நாம் பார்த்தோமானால், மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் அந்தத் திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்று நமக்குத் தெரிந்தாலுங்கூட, பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதில் பல சங்கடங்கள், சிக்கல்கள் இருப்பதைக் காண முடியும். இப்படிப்பட்ட நிலை

களை அரசு தவிர்க்க வேண்டும். நாட்டு மக்களுக்குத் தேவையான திட்டங்களை அரசு துணிவோடு அறிவிக்க வேண்டும். அப்படி அறிவிக்கிற திட்டங்களை முழுமையாகச் செயல்படுத்துகிற வகையில் திட்டங்கள் அமைய வேண்டும்.

இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கெல்லாம் ஜீப்புகள் மிக மிகத் தேவை. இன்னமும் பல திட்டங்களை அரசு நிறைவேற்ற வேண்டுமென்ற வேகம் வந்திருக்கும்போது, ஊராட்சி ஒன்றியங்கள் எல்லாம் பல ஜீப்புகளைப் பயன்படுத்தாமல் இருக்க முடியாது. ஆனால் எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இப்படிப்பட்ட ஜீப்புகள் எல்லாம் எதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன என்று சொல்வதில் நாம் பெருமைப்பட்டுக்கொள்ள முடியாது. எங்கள் மாவட்டத்திலுள்ள ஜீப்புகள் பாண்டிச்சேரிக்குச் சென்றுவர பயன்படுத்தப்படுகின்றன. மிக அதிமான அளவில் ஜீப்புகள் இன்றைக்கு இப்படிச் சென்று கொண்டிருக்கின்றன. இவை எந்த அளவிற்குச் சென்றுகொண்டிருக்கின்றன என்பதோடு மட்டுமல்லாமல், எந்த அளவிற்கு இதற்காக பெட்ரோல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதையும், கணக்கிட்டுப் பார்க்க வேண்டும். அதோடு மட்டுமல்லாமல், அவர்கள் மாதா மாதம் எந்த அளவிற்குப் பயணம் செய்திருக்கிறார்கள் என்பதையும் சேர்த்துப் பார்க்க வேண்டும். இந்த அரசின் நிர்வாக இயந்திரங்கள் இன்றைக்கு எப்படி விளையாடுகின்றன என்பதை அவ்வாறு கணக்கிட்டுப் பார்த்தால், நாம் உணர முடியும்.

அதற்கு அடுத்து, ஒரு நல்ல திட்டத்தை இந்த அரசு கொண்டு வந்ததற்காக நான் இந்த அரசைப் பாராட்டாமல் இருக்க முடியாது. கிராமப்புறங்களில் மகளிர்க்குக் கழிப்பிடங்களைக் கட்டுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இது மிகுந்த அளவிலே வரவேற்கக்கூடிய ஒரு நல்ல திட்டம். மிக மிகத் தேவை என்பதால் நான் வரவேற்கிறேன். கிராமங்களில் மட்டுமல்ல, இன்றைக்கு நகரங்களில்கூட, இந்த வசதி மிக மிகத் தேவை. நகராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் நகரங்களுக்கெல்லாம் இந்த வசதி தேவை. நம்மைப் பொறுத்தவரையில் நகராட்சியானாலும், மாநகராட்சியானாலும் ஒவ்வொரு வீட்டிலும் கழிப்பிட வசதி இருந்தாக வேண்டும். புதிய கட்டிடங்களைக் கட்டுவதற்கு அத்தகைய வசதி இருக்க வேண்டும் என்று சட்டமே இருக்கிறது. ஏற்கெனவே இருக்கிற வீடுகளுக்குக்கூட இந்த வசதி தேவை என்பதை உணர்ந்திருக்கிறோம். அதற்காக இன்றைக்குப் பல பழைய வீடுகளில் ஒரு தடுப்பு வைத்து அத்தகைய வசதியைச் செய்து காண்பித்து விடுகிறார்கள். ஆனால் ஏற்கெனவே இருக்கின்ற சிறு வீடுகளில் இப்படிச் செய்வதற்குரிய

வாய்ப்பு இல்லை. பல குடிசைப் பகுதிகளில் மட்டுமல்லாமல், வளர்ந்துகொண்டிருக்கிற அல்லது வளர்ந்துவிட்ட பல வீடுகளையுடைய குடிசைப் பகுதிகளில் கூட இத்தகைய வசதியைச் செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. நிலைமை இவ்வாறு இருப்பதால், சென்னை மாநகராட்சி போன்ற பகுதிகளில் வாழ்பவர்கள் கழிப்பிடங்களுக்கென்று வேறு எங்கேயும் போக முடியாது. யாராவது வீதிகளில் வராத நேரத்தில், இருள் அடைந்த நேரத்தில், விளக்கு எரிந்து கொண்டிருந்தால், விளக்கை உடைத்து எறிந்து இருள் சூழ்ந்திருக்கக்கூடிய நிலையை உருவாக்கிய நேரத்தில்தான், சாதாரண தெருக்களைப் பலர் இன்றைக்குக் கழிப்பிடங்களாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு நான் மாண்புமிகு வீட்டு வசதி அமைச்சர் அவர்களுடைய ஆளுகைக்கு உட்பட்ட வீட்டு வசதி வாரியக் குடியிருப்பில் வசிக்கிறேன். லாயிட்ஸ் காலனியில் இருக்கக்கூடிய என்னுடைய வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய இடத்தை இதற்காகத்தான் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அநேகமாக பல வீட்டு வசதிக் குடியிருப்பு பகுதிகளில் இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. பக்கத்து வீடுகளில் இருப்பவர்களுக்கு, சுற்றி இருப்பவர்களுக்கு இத்தகைய வசதி இல்லையென்றால், ‘இயற்கையின் அழைப்பு’ இது என்பதால், யாரும் அவர்களைத் தடுக்க முடியாது. இது இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய உண்மை நிலை. இந்த வகையில் அவர்கள் எங்கேயாவது போக வேண்டுமென்று நினைத்தால், எங்கே மறைவாக, இருளாக இருக்கிறதோ அந்த இடத்தை தேடிப் போகிறார்கள். இதை எல்லாம் பார்த்துத்தான், இதற்கு ஒரு பரிகாரமாகத்தான் பொதுவான கழிப்பிடங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். லாயட்ஸ ரோட்டில் நகராட்சிப் பள்ளிக்கூடத்தின் மதிற் சுவரிலேயே இதனைக் கட்டியிருக்கிறார்கள். இதன் காரணமாக அந்த இடத்தைத் தாண்டிப் பள்ளிக்கூடத்திற்குச் செல்ல முடியவில்லை. அந்த அளவிற்கு அங்கு சூழ்நிலை மோசமாக இருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமைகள் எங்கும் இருக்கக்கூடாது. இப்படி பள்ளிக்கூடம் போன்ற அமைப்புகளுக்கு நடுவிலே இது தேவையா? கிராமப்புறங்களில் இது இன்றைக்குத் தேவை. இதற்கு வேறு மாற்று ஏற்பாடு செய்ய முடியாதா என்பதல்ல பிரச்சினை. எல்லா இடங்களிலும் இத்தகைய கழிப்பிட வசதியை ஏற்படுத்த வேண்டும்.

அடுத்து, புள்ளி விவரத்தைப் பொறுத்தவரையில், அது சம்பந்தப்பட்ட கணக்குகள் எப்படி இருக்கின்றன என்பதற்கு ஒரே ஒரு எடுத்துக்காட்டை இங்கே சொல்ல ஆசைப்படுகிறேன். இது குறித்து இன்டஸ்ட்ரியல் (Industrial Economics) எக்கனாமிக்ஸ்ல் நிலையை ஒப்பிட்டுப் பார்க்கும்

ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். அதில் 'பிறப்பு விகிதங்களைப் பொறுத்த வரையில், மாண்புமிகு அமைச்சர் டாக்டர் ஹண்டே அவர்களுக்குப் பாராட்டு என்று தெரிவித்திருக்கிறார்கள்.

"Oddly enough, the only political personage who chose to note the results of the Census was the Tamil Nadu Health Minister, Dr. Hande."

என்று அவர்கள் அதில் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் வினயம் மிகுந்த இன்னொரு வார்த்தையையும் சொல்லியிருக்கிறார்கள்.

"He wrongly took credit for Tamil Nadu's low growth rate without realising that it was due to a high death-rate and not a low birth-rate."

என்பதையும் குறிப்பிட்டிருக்கிறார்கள்

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே I thank the honourable Member for dragging me into the picture. நம் 'பர்த் ரேட்' குறைவாக அதில் முழுமையான விவரம் இல்லை. இருக்கிறது. இந்த வருஷம் ரேன்டம் செக்கிங்படி நம்முடைய 'பர்த் ரேட்' 28 பேர் பேர் தவுசண்டுக்கு.

It is almost the lowes நம்மோடு இந்த விஷயத்தில் இப்போது போட்டி போடக் கூடியவர்கள் யார் என்றால், அது கேரளா மட்டும்தான். அவர்களுடைய "பர்த் ரேட்" குறைவாக இருக்கிறது. ஆனால் அவர்களுடைய 'பாப்புலேஷன் எஸ்கலேஷன் ரேட்' ஆயிரத்திற்கு 19.4. நம்முடைய 'பாப்புலேஷன் எஸ்கலேஷன் ரேட்' ஆயிரத்திற்கு 17.4. கேரளாவைவிட நம்முடைய 'பாப்புலேஷன் எஸ்கலேஷன்' குறைவு. நம்முடைய death rate is slightly higher than that of Kerala. But our death-rate is the second best in the country.

முழுமையாக அவர்கள் விவரங்களைப் போடவில்லை. Our death rate is the second best and our birth-rate is almost the best.

திரு. க. இராமமூர்த்தி: இது நான் சொன்னதல்ல. It is a research report

மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்தை நான் ஏற்றுக்கொள்ளத் தயார். நம்முடைய மாநிலத்தில் இறப்பவர்களுடைய சதவிகிதத்தை இந்த அளவிற்குக் குறைக்க வேண்டிய கட்டாயம் நமக்கு இருக்கிறது. பிறப்பையும், இறப்பையும் இணைக்கும்போது, என்ன நிலைமை என்பதுபற்றி பத்திரிகையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில், என்னைப் பொறுத்தவரையில், மற்ற மாநிலங்கள் இயங்குகிற

நிலையை ஒப்பிட்டுப்பார்க்கும்போது, இந்த விஷயத்தில் நாம் பரவாயில்லை என்று கருதுகிறேன். பாரதத்தின் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் கூட இதைப்பற்றிக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் தரப்படுகிற புள்ளிவிவரங்கள் எங்கோ நம்மை இழுத்துச் செல்லுகின்றன. ஒரு முடிவில்லாமல், ஒரு முறையில்லாமல் அது இருக்கிறது. இதுபற்றி எவ்வளவோ பெரிய ரிப்போர்ட்டைக் கொடுத்த, ரிசர்ச் செய்த டாக்டர் ஹனோவர் அவர்கள் முடிவிலே இதற்கு ஒரு பரிகாரம் சொல்கிறார்.

"Unless our rulers wake up soon and think of development as a matter of prime concern and not as a by-product of political fun and games, the foundations of our society are bound to suffer. It may be too late then to control the course of events."

என்று அவர் சொல்லியிருக்கிறார். இதை நான் இந்த நேரத்தில் வலியுறுத்திக் கூறுகிறேன். இதிலே அரசு அதிகாரிகளுக்குத்தான் பொறுப்பிருக்கிறது என்பதல்ல. அதிகாரப் பற்றற்றவர்கள் தான் அதற்குப் பொறுப்பு என்கிற நிலைமைக்கும் வரத் தேவையில்லை. ஆனால் முழுமையாக முறையாக நம்முடைய கவனம் வளர்ச்சித் திட்டங்களில் செலுத்தப்படவில்லை என்றால், அதனுடைய விபரீதத்தை, விளைவை நாம் அனுபவித்துத்தான் ஆக வேண்டும். அப்படிப்பட்ட நிலைமை ஏற்படும்போது, அதன் விளைவு சமுதாயத்தின் அடித்தளத்திலிருக்கிற மக்களைத்தான் வளர்ச்சி அடையாத பகுதியைத்தான், குறிப்பாக ஏழையெளிய மக்களைத்தான் பாதிக்கும். அவர்கள்தான் பலி வாங்கப்படுவார்கள்.

(பிற்பகல் 1-00)

இறுதியாக முடிப்பதற்கு முன்னதாக நகராட்சி மன்றப் பிரச்சினைகள் குறித்து — அத்தகைய அமைப்புகள் இன்றையதினம் இல்லாத காரணத்தால் சிலவற்றை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

நாம் எவ்வளவுதான் உயர உயரப் போனாலுங்கூட, கடைசியில் நம் ஊருக்கு வராமல் இருக்க முடிவதில்லை. எங்கள் ஊரான திண்டிவனம் பற்றி சிலவற்றை நான் இங்கே குறிப்பிட்டாக வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகியிருக்கிறேன். அங்கே இருக்கிற குடிநீர்ப் பிரச்சினைபற்றி அந்தத் துறைக்குப் பொறுப்பேற்றிருக்கிற மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே எனக்குப் பதில் அளித்திருக்கிறார்கள்.

அதுபற்றி மேற்கொண்டு அதிகாரிகளிடம் விவரம் கேட்டிருக்கிறார்கள் அல்லது நடவடிக்கை எடுக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். எனவே மீண்டும் அதைப்பற்றி இங்கே குறிப்பிட விரும்பவில்லை. ஆனால் திண்டிவனம் நகரத்தைப் பொறுத்தவரையில், பணம் படைத்தவர்கள் எங்கே வாழ்கிறார்களோ அந்தப் பகுதிகளுக்கு மட்டும்தான் தண்ணீர் வழங்கப்படு கிறதே தவிர வேறு பகுதிகளுக்குத் தண்ணீர் வழங்கப்படுவதில்லை. அதுவும் மாதக் கணக்கில் தண்ணீர் வழங்கப்படவில்லை. தண்ணீர் இருந்தும் கொடுக்கப்படுவதில்லை. திண்டிவனம் நகராட்சியில் கிடைக்கிற தண்ணீரை எல்லாப் பகுதிகளுக்கும் பகிர்ந்து தரமுடியும். ஆனால் அங்கே பணியாற்று கிறவர்கள் அந்த அளவுக்குப் பொறுப்பேற்று இருக்கிறார்கள். ஏறத்தாழ 5,000 அல்லது 10,000 மக்கள் வாழ்கிற பகுதிகளுக்குக்கூட தண்ணீர் நிரந்தர மாகக் கிடைப்பதில்லை என்ற நிலைமை இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக் கிறேன்.

இன்னொரு தகவலும் வந்திருக்கிறது. இவற்றையெல்லாம் சாதாரண காலத்தில் இங்கே பேசுவது என்றால், நான் உண்மையிலேயே மிகவும் கூச்சப்பட்டிருப்பேன். வெட்கப்பட்டிருப்பேன். ஆனால் இப்போது வேறு வழியில்லாத காரணத்தால் அவற்றை இங்கே குறிப்பிட வேண்டிய நிலையில் இருக்கிறேன்.

இராஜபாளையம் தாலுக்காவில் கிழவிக்குளம் என்கிற ஒரு ஊரில் மருத்துவ மனை ஒன்று தொடங்க வேண்டுமென்று அதற்காக ரூபாய் பத்தாயிரமும் ஐந்து எக்கர் நிலத்தையும் ஒப்படைத்திருக்கிறார்கள். இது மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். காரணம் அவரே அங்கு சென்று வந்திருப்பதால் அவருடைய கவனத்திற்கும் இது கொண்டு வரப்பட்டிருக்கும் என்று கருதுகிறேன். ஆனால் அந்த இடத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமையவில்லை. மாறாக சத்திரப்பட்டி என்ற கிராமத்தில் அது அமைந்திருக்கிறது. அது பற்றிய விவரங்களுக்கும், நடவடிக்கைகளுக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பொறுப்பில் விட்டுவிடுகிறேன். ஆனால் திடீரென்று சத்திரப் பட்டியில் அதை அமைக்க வேண்டும் என்று சில நடவடிக்கைகள் எடுக்கப் பட்டன. நிலம் ஆர்ஜிதம் செய்தல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப் பட்டன. அங்கே ஐந்து எக்கர் 26 சென்ட் நிலம் ஆளுநர் அவர்களின் பெயருக்கு நன்கொடையாகப் பத்திரம் பதிவு செய்யப்பட்டதோடு அந்த

ஆரம்ப சுகாதார நிலையத் திறப்பு விழா நடத்திவிட்டார்கள். ஒரு இடம் ஆளுநர் பெயருக்குத் தானமாக வழங்கப்பட வேண்டும் என்றால் ஊராட்சி மன்ற ஆணையாளர் அந்த இடத்தைப் பார்வையிட்டு, அதற்கான வரை படத்தை வாங்கி, 10 நகல் வாங்கி, பத்திரப் பதிவு அலுவலகத்தில் வில்லங்க சான்றிதழ் வாங்கி அதற்குப் பின் ஆணையாளரால் டி-நோட்டீஸ் செய்யப் பட்டு பத்திரம் பதிவு செய்யப்பட வேண்டும் என்று இருக்கிறது. இந்த முறையில்தான் கிழவிக்குளம் கிராமத்தில் பத்திரம் பதிவு செய்யப்பட்டது. ஆனால் சத்திரப்பட்டி கிராமத்தில் வழங்கப்பட்ட நிலத்தைப் பொறுத்தவரை இந்த முறை பின்பற்றப்படாமல் மிகவும் வேக வேகமாக இரண்டு நாள் அவகா சத்தில் இது நடைபெற்றிருக்கிறது. பஞ்சாயத்து ஒன்றியங்கள் எப்படிச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு என்பதற்காக இதைச் சொல்கிறேன். அரசாங்கம் ஏன் கிழவிக் குளத்தில் அதைத் தொடங்காமல் சத்திரப்பட்டியில் தொடங்கியது என்ற கேள்விக்கு நான் போகவில்லை. ஆனால் தங்கள் அதிகாரத்தை ஆணையாளர்களாக இருப்பவர்கள் எப்படித் தவறாகப் பயன்படுத்துகிறார்கள் என்பதற்கு உதாரணமாக இதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : அவையின் நேரத்தை அதிகமாக எடுத்துக் கொள்ளாமல் ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். சத்திரப்பட்டியில் தற்போது வாடகைக் கட்டிடத்தில்தான் இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைத்திருக்கிறோம். அந்த இடம் தோழமைக் கட்சியின் தொகுதியாக இருக்கிறது. ஒன்றியத்தில் ஒரு பகுதி ஒரு தொகுதி யையும் இன்னொரு பகுதி இன்னொரு தொகுதியையும் சார்ந்தது. அதை யெல்லாம் கூட பார்க்காமல் உடனடியாக அந்த ஆரம்ப சுகாதார நிலையத் தைத் தொடங்க வேண்டும் என்ற காரணத்தால் வாடகைக் கட்டிடத்தில் ஆரம்பித்து வைத்திருக்கிறோம். நில ஆர்ஜிதம் பற்றி எந்த விதமான உறுதி யான முடிவும் எடுக்கப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தின் அடிப்படையில் அதுபற்றி ஆராய்ந்து நடவடிக்கை எடுக் கப்படும் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : இதற்காக என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித் துக் கொள்கிறேன். இன்னொரு இடத்தில் அமைந்துவிட்டது என்பது வேறு விவகாரம். ஆனால் நில ஒப்படைப்புக்கு ஒரு நிச்சயமான முறை வேண்டும் என்றிருப்பதால் நிலத்தை அரசோ அல்லது துறையோ கேட்டிருக்கிறது. அப்படி நிலத்தைக் கொடுப்பதற்கு முன்வந்தவர்கள் அந்த அளவுக்குச்

செல்வாக்குப் பெற்றவர்களாக இருந்திருக்கிறார்கள் அல்லது அதிகாரிகள் எந்த அளவுக்குத் தவறான செல்வாக்குக்கு இடம் கொடுத்திருக்கிறார்கள் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு என்பதால் இதைச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து இன்னொரு சம்பவத்தையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து இன்னொரு சம்பவத்தையும் நான் இங்கே குறிப்பிட அடுத்ததாகவா ?

திரு. க. இராமமூர்த்தி : இன்னும் இரண்டொரு விஷயங்கள்தான் இருக்கின்றன. சீக்கிரத்தில் முடித்து விடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் இருப்பார் என்று நினைத்தேன். அவர் பெயர் வைப்பதைப் பற்றியும் தமிழப்பற்றியும் இங்கே பேசினார். கொள்கை விளக்கக் குறிப்பில் "தாரா" திட்டம் என்று போடப்பட்டிருக்கிறது. 16 வது பக்கத்தில் வரி விதிப்பிலிருந்து சலுகை பெறுவதற்காக "தாரா" திட்டம் என்று போடப்பட்டிருக்கிறது. தமிழில்கூட தாரா என்றுதான் பெயர் கொடுத்திருக்கிறார்கள். ராதா-வாக இருந்தாலும் சரி, "தாரா"-வாக இருந்தாலும் சரி, அது தமிழாக இல்லை என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

இதைக் குற்றச்சாட்டாகவோ அல்லது விளம்பரமாகவோ சொல்லவில்லை. அரசினர் எந்த அளவுக்குத் தமிழில் பூரணத்துவம் படைத்திருக்கிறார்கள் என்பதற்காகச் சொல்கிறேன். சில திட்டங்களைக்கூட தமிழில் சரியாக அறிவிக்க முடியவில்லை என்பதற்காகச் சொல்கிறேன். இந்த நிலையில் தான் என்னைப் பார்த்து அவர் கடந்த காலத்தைப் பற்றிக் குறிப்பிட்டார். அன்றைக்கு இருந்த நிலைமையை எல்லாம் எண்ணிப் பார்க்காமல் அவர் குறிப்பிட்டார். எனவே இன்றைய சூழ்நிலையில் இதைக் குறிப்பிடுவது என்னுடைய கடமை என்று தான் கருதுகிறேன்.

திண்டிவனம் நகரத்தில் மாடு வதை செய்யும் இடத்தில் பணம் வசூலிக்க ஆரம்பக் கேள்வியே ரூபாய் 10,001 என்று தொடங்கியிருக்கிறார்கள். அந்த அளவுக்கு இருக்கும்போது அதிகார பூர்வமாக மாடு அடிக்க வேண்டிய இடம் எது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துறை மூலமாகவோ அல்லது நேரில் போய்ப் பார்த்தோ தெரிந்து கொள்ளலாம். ஏலத்திற்கு ஒரு இடம் விடப்பட்டது. ஆனால் மாடு அடிக்கும் இடம் வேறாக இருக்கிறது. நாள் தோறும் சுமார் ஐநூறுக்கும் மேற்பட்ட மாடுகளை அங்கே அடிக்கிறார்கள்.

அதன் விளைவாக சுகாதாரக்கேடுகள் அந்தப் பகுதிகளில் உள்ளவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பது மட்டுமல்ல, மிகவும் பின்தங்கியவர்கள் அல்லது தாழ்த்தப்பட்ட அரிசன மக்கள் வாழ்கிற பகுதிகளை அது சுகாதாரச் சீர் கேட்டுக்குள்ளாக்கியிருக்கிறது. அதைக் குறித்து யாராவது பெடிஷன் எழுதினால், அவர் யார் என்று அடையாளம் காட்டப்பட்டு உதை வாங்குகிற நிலை இருக்கிறது. அல்லது அவர் அவதிக்கு ஆளாகிற நிலைமை இருக்கிறது. இதைத் தடுக்க வழியில்லையா என்றால், இருக்கிறது. நகராட்சி மன்றத்தில் பணியாற்றுகிறவர்கள் பணம் வாங்காதவர்களாக, லஞ்சம் வாங்காதவர்களாக இருந்தால் தடுக்க முடியும். அது தொடருகிற வரை இதைத் தடுக்க முடியாது என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து இதுகுறித்து நடவடிக்கை எடுக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, திண்டிவனத்தில் ஒரு ஆசிரியர் நகராட்சிப் பள்ளியைச் சேர்ந்தவர் கள்ளச் சாராயம் விற்பனையில் ஈடுபட்டார் என்பதற்காக அவர்மீது வழக்குத் தொடரப்பட்டது. 878/74ல் - 2703/74 - 3—12—1974ல் வழக்கு பதிவு செய்யப்பட்டு அவர் பல நாட்கள் இந்த வழக்கு சம்பந்தமாக கோர்ட்டில் ஆஜராகியிருக்கிறார். ஆனால் அப்படிக் கோர்ட்டில் ஆஜரான நாட்களுக்குக் கூட அந்த ஆசிரியர் பள்ளியின் வருகைப் பதிவேட்டில் கையெழுத்துப் போட்டிருக்கிறார். அவர் கோர்ட்டுக்குப் போன தேதிகள் விவரம் முழுவதும் என்னிடம் இருக்கிறது. இவ்வளவு நடந்தும் இது நகராட்சியின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டும் இதுவரை நடவடிக்கை எதும் எடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, மண்டபத்தில்—கிழக்கு இராமநாதபுரத்தில்—பேச்சிப்பிள்ளை மடம், கொச்சூர் போன்ற பகுதிகளில் தன்னிறைவுத் திட்டம் செயல்படுத்தப் படுகிறது. ஆனால் இந்த கிராமங்களுக்கு மட்டும் ரோடுகள் கிடையாது. இவைகளெல்லாம் அரசியல் ரீதியாக நடைபெறுகின்றன என்று நான் சொல்லவில்லை. ஆனாலும் இவைகள் முறையாக அங்கே நிறைவேற்றப்படவில்லை. இதனால் பொது மக்கள் சங்கடத்திற்குள்ளாகிறார்கள் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, தூத்துக்குடியிலிருந்து மண்டபம் வரை திருப்புல்லாணி வழியாக இரண்டு கிலோ மீட்டர் சாலை போடப்பட்டது—சுமார் ஒன்றரை இலட்சம் ரூபாய் செலவில் போடப்பட்டது. போட்ட சில நாட்களிலேயே அந்த சாலை பயன் இல்லாமல் போய்விட்டது என்ற தகவல் வந்திருக்கிறது.

[திரு. க. இராமமூர்த்தி] [1982 மார்ச் 29

(பிற்பகல் 1.10)

இதையெல்லாம் சீரமைக்க உள்ளாட்சி மன்றங்கள் செயல்பட முடியாத நிலை இருக்கிறது. இவைகள் எல்லாம் செயல்பட வைக்கப்படுமானால், பல காரியங்களை ஆற்ற முடியும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சட்டமுன்வடிவை எப்போது வேண்டுமானாலும் நிறைவேற்றிக் கொள்ளட்டும். எப்போது தேர்தல் நடைபெறும் என்ற கேள்வியை இனிமேல் நான் கேட்கத் தயாராக இல்லை. ஆனால் ஒன்றை மட்டும் செய்யட்டும். உள்ளாட்சி நிறுவனங்களுக்குப் பதிலாக அதிகாரிகள்தான் காரியங்களைச் செய்வார்கள், மற்றவர்கள் இருந்தால் இருங்கள், இல்லாவிட்டால் போங்கள் என்று சொல்லக்கூடிய நிலைமை இல்லாமல், உத்தியோகப் பற்றற்றவர்கள் மூலமாக அந்த அமைப்புகளை நடத்த முன்வர வேண்டும். அதிலேகூட ஆலோசனை வழங்குவதற்காக மன்றங்களை அறிவித்திருக்கிறார்கள். அதிலேகூட அதிகாரிகளைச் சேர்த்து உத்தியோகப் பற்றற்றவர்களைத் தலைவர்களாகப் போட்டு இயக்குவதிலே என்ன சங்கடம் இருக்கிறது? அந்தச் சங்கடத்தைத் தவிர்த்தால், சில ஆண்டுகளாக உள்ளாட்சி மன்றங்கள் இல்லாமல் இருக்கின்ற நிலையைப் போக்க உள்ளாட்சி மன்றங்களுக்குப் பதிலாக வேறு சிலராவது பணியாற்றும் வாய்ப்பு ஏற்படும் என்று சொல்லி, இந்தக் கொள்கைக் குறிப்பிலே அறிவித்திருக்கின்ற திட்டங்கள் எல்லாம் மகிழ்ச்சியாக வரவேற்புக்குரிய திட்டங்களாக இருந்தாலும், செயல்படும் முறையில் பல்வேறு தவறுகள் நடைபெறுகின்றன என்பதால், அவற்றைச் சீர் செய்யவில்லை என்றால், இந்தக் கொள்கையே தவறான கொள்கையாக(பயனற்ற கொள்கையாக மாறும் என்ற அச்சத்தை வலியுறுத்தி உரையை முடிக்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சமுதாய வளர்ச்சி, நகர நிர்வாகம்பற்றி இங்கே மன்றத்தினுடைய ஐவர் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களுக்கு எல்லாம் பதில் சொல்ல வேண்டுமென்றால், நானும் கால நீட்டிப்பைக் கேட்க வேண்டிய சூழ்நிலை வரும் என்பதால், ஒரு சில கருத்துகளுக்கு மட்டும் இங்கே பதில் சொல்லவிருக்கிறேன். இந்தக் கொள்கைக் குறிப்புகளை எல்லோரும் வரவேற்றுப் பேசியிருக்கிறார்கள். ஆனால் ஒரு சில நிலைகளைப் பற்றி மட்டும் எடுத்துச் சொல்லி அரசு செய்யவேண்டிய காரியத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவைகளையெல்லாம் கண்டிப்பாகக் கவனத்திலே கொள்வேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1982 மார்ச் 29] [திரு. ப. குழந்தைவேலு]

குறிப்பாக சமுதாயத்தைப் பொறுத்தவரையில், வளர்ச்சியுற வேண்டும் என்பதோடு மட்டுமல்லாமல், சமுதாயத்தில் வாழ்கிற ஏழையெளிய மக்களுக்கு உண்ண உணவும், இருக்க இடமும், உடுக்க உடையும், அத்தனையும் கொடுக்கப்பட வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் சமுதாய வளர்ச்சிக்காக இந்த அரசு பாடுபட்டு வருகிறது என்பதையும் அந்த அடிப்படையில்தான் திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதையும் நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தமிழகத்திலே ஏற்பட்டதற்குப் பின்னாலேதான் நோஞ்சான் குழந்தைகள் எல்லாம் எதற்கும் அஞ்சாது துணிந்து செயல்படுகின்ற அளவிற்கு, எப்படிப்பட்ட தடைகள் வந்தாலும், அதை எதிர்த்து துச்சமென செயல்படுகிற குழந்தைகளாக மாறியிருக்கிறார்கள் என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நோஞ்சான் குழந்தைகளாக பல்வேறு ஆட்சிக் காலத்திலே அமைப்புகள் இருந்தன. குழந்தைகளுக்குத் தாய்ப் பாலை ஊட்டாமல் புட்டிப் பாலை ஊட்டி வளர்த்ததன் காரணத்தாலே அந்தக் காலத்திலே குழந்தைகள் நோஞ்சான் குழந்தைகளாக இருந்தன. ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள் இன்று தாய்ப் பாலை அந்தக் குழந்தைகளுக்கு ஊட்டியதால், அந்தக் குழந்தைகள் சத்துள்ள குழந்தைகளாகவும், எதற்கும் அஞ்சாத குழந்தைகளாகவும் இருப்பார்கள் என்ற எண்ணத்தோடு சமுதாய வளர்ச்சிக்காக, அதன் நிர்வாகத்திற்காக தாய்ப் பால் கொடுக்கப்பட்டு வருகிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாமன்ற உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும், எந்த ஆட்சிக் காலத்திலும் ஊராட்சி மன்றங்களுக்கு இப்படி கோடி கோடியாகக் கொட்டியதாக வரலாறு, சரித்திரம் கிடையாது. புதிய வரலாற்றை, புதிய சகாப்தத்தை ஊராட்சி மன்றங்களுக்கும், நகராட்சி மன்றங்களுக்கும் ஏற்படுத்திய பெருமை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உண்டு என்பதை ஆணித்தரமாகக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்குக் காரணம், இந்திய உபகண்டத்திலே பல்வேறு மாநிலங்கள் இருந்தாலும், எந்த மாநிலத்திலும் தன்னிறைவுத் திட்டம் என்ற தன்னிகரற்ற திட்டத்தை யாரும் துணிந்து செயல்படுத்தவில்லை. இந்த மாநிலத்தில் புரட்சித் தலைவர் தன்னிறைவுத் திட்டத்தைக் கிராமங்களுக்குக் கொண்டுவந்து காந்தியடிகள் கண்ட கனவை நனவாக்க வேண்டுமென்று பாடுபட்டார்கள். சுதந்திரம் வாங்கித் தந்த காந்தியடிகள் கண்ட கனவை நனவாக்கும் முயற்சியில் புரட்சித் தலைவர் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதைப் பெருமையாகச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. ப. குழந்தைவேலு] [1982 மார்ச் 29

கிராமங்கள்தோறும் ஒன்பது வகையான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் என்றும், கிராமத்திற்குக் கிராமம் இணைப்புச் சாலைகளை ஏற்படுத்தி அவைகள் நகர்ப்புறங்களாக மாற வேண்டுமென்ற எண்ணத்தோடு இந்த அரசு பாடுபட்டு வருகிறது. இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், முதற் கட்டமாக 69 ஒன்றியங்களையும், இரண்டாவது கட்டமாக 69 ஒன்றியங்களையும், மூன்றாவது கட்டமாக 159 ஒன்றியங்களையும் எடுத்துக் கொண்டிருக்கிறோம். இதுவரையில் இதற்காகச் செலவழிக்கப்பட்ட தொகை இந்த குறிப்பிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் 159 ஊராட்சி ஒன்றியங்களுக்கு இந்த ஆண்டிலே செலவிடுகிற தொகை 97 கோடி ரூபாய். இப்படிக் கோடிக் கோடியாகக் கொட்டி அதன் மூலமாகத் தன்னிறைவை அடைய வேண்டுமென்ற எண்ணத்தோடு இந்த அரசு பாடுபடுகிற நேரத்தில், மாமன்ற உறுப்பினர்கள் இதைப் பாராட்டுவதோடு மட்டுமல்லாமல், இப்படிப்பட்ட பணிகளுக்கு ஊக்கமும், ஆக்கமும் கொடுப்பதோடு ஒத்துழைப்பையும் தர வேண்டும். உதவிகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் தன்னிறைவுத் திட்டத்தைப் பாராட்டியிருக்கிறார்கள். ஆங்காங்கே ஒரு சில இடங்களில் குறைகள், கோரிக்கைகள் வருகின்றன என்றும் எடுத்துச் சொல்லும்போது, அதை ஏற்றுக் கொள்ளுகிற இதயத்தோடு தான் இங்கே இருக்கிறேன் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் மிகப் பெரிய திட்டத்தைச் செயல்படுத்தும்போது ஒருசில குறைபாடுகள் வரத்தான் செய்யும், அது இயற்கையும் கூட. அப்படிப்பட்ட குறைகள் வருகிறபோது, கோரிக்கைகள் எழும்பும்போது, உடனடியாகப் பார்த்து சீர் செய்ய வேண்டிய கடமை உணர்வு எங்களுக்கு உண்டு என்பதை மறுக்கவில்லை என்பதைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தன்னிறைவுத் திட்டத்தைப் பொறுத்த வரையில், பல பேரும், பல மாநிலங்களிலிருந்து வரக்கூடிய அமைச்சர்களும் பாராட்டியிருக்கிறார்கள். உத்தரப் பிரதேசத்தில் இருக்கக் கூடிய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கூட எனக்குக் கடிதம் அனுப்பி, "இந்தத் திட்டம் மிக நல்ல திட்டமாக இருக்கிறது. நான் நேரிலே வந்து பார்த்தேன். இதனுடைய அடிப்படைகளை தயவுசெய்து புத்தக வடிவாகத் தர வேண்டும்" என்று கேட்டிருக்கிறார்கள். இருக்கக் கூடிய எல்லா மாநிலத்திலும் இது போன்ற திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்ற எண்ணம் எங்களைப் போன்றவர்களிடத்திலே இருக்கிறது. அப்படிச் செய்தால்தான் கிராமங்கள் தன்னிறைவை அடையும் என்ற எண்ணத்தை வெளியிட கடமைப்பட்டிருக்கிறேன்.

1982 மார்ச் 29] [திரு. ப. குழந்தைவேலு]

இன்று ஊரகத் துறையில் பல்வேறு திட்டங்கள் செயல்படுகின்றன. குறிப்பாக தன்னிறைவுத் திட்டம் அல்லது தேசிய கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். இந்தத் திட்டம் ஏற்கெனவே ஜனதா ஆட்சிக் காலத்திலே வேலைக்கு உணவு திட்டம் என்ற அடிப்படையிலே செயல்பட்டு வந்தது. 1980 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல், காங்கிரஸ் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, இந்தத் திட்டம் வேறு பெயருடைய திட்டமாக மாற்றப்பட்டது. மத்திய அரசினுடைய முழுமையான திட்டமாக இருந்தது (cent per cent cetrally sponsored scheme) காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே 1980 ஆம் ஆண்டு அக்டோபர் முதல் தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் என்ற முறையில் மாற்றியமைக்கப்பட்டது. கொடுக்கக் கூடிய மானியத்தைக் கூட 50 சதவீதமாகக் குறைத்துவிட்டார்கள். மாநிலம் 50 சதவீதமும், மத்திய அரசு 50 சதவீதமும் போட்டு நடத்தப்பட வேண்டுமென்று குறிப்புகள் அனுப்பியிருந்தார்கள். முதலிலே வேலைக்கு உணவு என்ற வகையிலே நடைபெற்ற நேரத்தில் ஒப்பந்தக்காரர்களை வைத்து வேலைகளைச் செய்யலாம் என்ற முறை இருந்தது. தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் என்று மாறிய பிறகு, ஒப்பந்தக்காரர்கள் மூலமாக எந்த வேலையும் செய்யக்கூடாது; கிராமப் பணித்துறையில்தான் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதற்கிணங்க வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் இங்கே ஒரு கேள்வியைக் கேட்டார்கள். வேலை வாய்ப்பு உறுதித் திட்டம்பற்றிக் கேட்டார்கள். அதிலே 4,31,000 பேர் மனுச் செய்திருக்கிறார்கள், ஆனால் 3,30,000 பேருக்குத்தான் வேலை கொடுத்திருக்கிறார்கள் என்று கோடிட்டுச் சொன்னார்கள். வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் ஒருவர் தன்னுடைய பெயரை அங்கே இருக்கக் கூடிய கிராமநல ஊழியரிடம் பதிவு செய்ததற்குப் பிறகு, ஒரு மாத காலத்திற்குள் வேலை கிடைக்கவில்லையென்றால், ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் பணமாகக் கொடுக்க வேண்டும் அல்லது அதற்குண்டான அரிசியைக் கொடுக்க வேண்டும் என்பதுதான் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம்,

(பிற்பகல் 1-20)

இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முடியவில்லை. காரணம் தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம் இங்கே நடைமுறைபடுத்தப்பட்டு, நாம் அதன் மூலமாக எல்லோருக்கும் வேலைவாய்ப்பு கொடுக்கின்ற காரணத்தினாலேதான், இந்த ஈ.ஜி.எஸ். திட்டத்தை தனியாகச் செயல்படுத்தவேண்டிய அவசியம் இல்லை.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : துணைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்ற நேரத்தில், இந்த ஆண்டு இந்தத் திட்டம் 150 ஒன்றியங்களிலே மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். மீதியிருக்கின்ற ஒன்றியத்திலே வேலைவாய்ப்பு நிச்சயமாகக் கொடுக்க வாய்ப்பு இல்லை. அப்படிப்பட்ட இடத்திலே இந்தத் திட்டத்தை அமுல்படுத்தி வேலை கொடுக்க முயற்சித்திருக்கலாம் அல்லவா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, உண்மையிலேயே கருத்துக்கள் மாறுபடுகின்ற சூழ்நிலையில் நம்முடைய மாண்புமிகு அங்கத்தினர் திரு. வீராசாமி அவர்கள் இங்கே சில கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். காரணம் வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திற்கு என்று 150 ஒன்றியங்கள் வைக்கவில்லை. தன்னிறைவுத் திட்டத்திற்குத்தான் 150 ஒன்றியங்கள்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : தன்னிறைவுத் திட்டம் என்று வைத்து, ஏற்கெனவே இந்த 150 ஒன்றியங்களிலே அமுல்படுத்தி வருகிறோம். அந்த ஒன்றியங்களிலே வேலைவாய்ப்பு கிடைக்கிறது. ஆனால் மீதியிருக்கின்ற ஒன்றியங்களிலே இப்போது சொல்லிக்கொண்டிருக்கின்ற இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால், அவர்களுக்கு இந்தப் பலன் கிடைக்கும் அல்லவா என்பதைத்தான் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அது தேவையில்லை என்பதுதான். நான் பேசுகின்ற நேரத்தில் நான் உறுப்பினர் அவர்களுக்கு உரிய முறையிலே விளங்க வைக்க முடியவில்லையோ என்ற சந்தேகம்தான் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகவேதான் விளக்கமாகச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தில் தன்னிறைவுத் திட்டத்தின் முதல் கட்டமாக 69 ஒன்றியங்கள் என்றும், பிறகு 150 ஒன்றியங்கள் என்றும், இப்போது 159 ஒன்றியங்கள் என்றும் கொண்டுவருகிறோம். ஈ.ஜி.எஸ். என்று சொல்லக்கூடிய, எம்ப்ளாய்மெண்ட் கேரண்டி ஸ்கீம், வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தை எல்லா ஒன்றியங்களிலும் இதை நடைமுறைப் படுத்துகிறோம். இப்படி தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தினை எல்லா ஒன்றியங்களிலும் நடைமுறைபடுத்துவதால், இப்போது வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் செய்வதற்கு வேலை இல்லாமல் போய் விட்டது என்றுதான் குறிப்பிடுகிறேன். காரணம் இதிலே பதிவு செய்து கொண்டவர்கள் 4,31,000 பேர்க்ள் என்று சொன்னால், அதிலே பதிவு செய்து

கொண்டவர்கள் அனைவருக்குமே தேசிய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் வேலை கொடுத்துவிடுகிறோம். அப்படி 30 நாட்களுக்குள் அவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை என்று சொன்னால், அவர்களுக்கு ஒரு ரூபாய், அதற்குரிய அரிசி அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்பதுதான் அந்தத் திட்டம். அதிலே பதிவு செய்துகொண்டவர்கள் முப்பது நாட்களுக்குள் யாரும் வேலையில்லாமல் இல்லை என்ற நிலை இருக்கின்ற காரணத்தினாலே தான், ஈ.ஜி.எஸ். தேவைப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே அரசின் சார்பான கொள்கை விளக்கக் குறிப்பில் இந்த வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் மிகவும் அதிகமான பேர்கள் பதிவு செய்து கொண்டிருப்பினும், பலர் இத்திட்டத்தின் கீழ் வேலைக்கு வருவதில், உடலுழைப்புப் பணிகளுக்கு மாறாக, எழுத்துப் பணிகளையே விரும்புகின்றனர் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தில் வேலை பெறாதவர்கள் ஒரு இலட்சம் பேர்கள் வருகிறார்கள். அங்கே கணக்குக் கேட்கின்றபோது, அப்படிக் கேட்டிருந்தால் சரியாக இருக்கும். அந்த ஒரு இலட்சம் பேர்கள் 'ஒயிட் காலர்ட் ஜாப்' என்று சொல்லக்கூடிய எழுத்து வேலைதான் வேண்டும் என்று மனுக்கள் கொடுத்திருக்கிறார்கள். அதைத்தான் இங்கே குறிப்பிட்டிருக்கிறோம். ஆகவேதான் தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்திலே 3 இலட்சம் பேர்களுக்கு மேல் நாம் வேலை கொடுத்து விட்டோம். ஏறக்குறைய ஒரு இலட்சம் பேர்கள் எழுத்து வேலை மட்டுமே வேண்டுமென்று கேட்ட காரணத்தினாலேயே அவர்களுக்கு வேலை கொடுக்க முடியாத நிலையிலே நாம் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : துணைத் தலைவர் அவர்களே, இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற அறிக்கையில் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் எத்தனை பேர்கள் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள், எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்புத் தரப்பட்டிருக்கிறது என்ற விவரம் இல்லை. வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் பதிவு செய்து கொண்டவர்கள் எண்ணிக்கை 4,54,602 என்றும் அதிலே 3,31,111 பேர்களுக்கு வேலை தரப்பட்டிருக்கின்றது என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது குறித்து அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தைப் பொறுத்தவரையில், எவ்வளவு ஆட்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்ற 'நார்ம்ஸை' மத்திய அரசு இங்கே குறிப்பிடவில்லை. அவர்கள் கேட்பது, நம்மை கேட்பது, எவ்வளவு 'மேன்-டேஸ்', எவ்வளவு மனித உழைப்பு நாட்கள் அதற்காக ஏற்படுத்தப்பட்டன என்ற கணக்கைத்தான் கேட்கின்றார்கள். இந்த ஆண்டிலே கூட தேசிய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், வருகின்ற 31—3—1982-ல் முடிவடைகின்ற இந்த ஆண்டில் 2,52,00,000 மனித உழைப்பு நாட்கள் என்று நாம் கேட்கிறோம். அதுதான் கணக்கு. ஆகவேதான் ஆட்கள் பற்றிச் சொல்லவில்லை. மனித உழைப்பு நாட்களைத்தான் அவர்கள் கேட்கிறார்கள். நாம் ஆட்கள் கணக்கெடுத்து வைத்துக்கொண்டால் கூட, தேசிய வேலை வாய்ப்புத் திட்டக் கணக்கைப் பார்க்கின்றபோது, அவர்கள் "how many man-days?" என்றுதான் கேட்கிறார்கள். ஆகவே 'மேன்-டேஸ்' கணக்கு வேண்டுமென்றால், 2,52,00,000 மனித உழைப்பு நாட்கள் இங்கே தேவைப்படுகிறது என்று கணக்கு சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவேதான் அந்தப் புள்ளிவிவரங்கள் அப்படிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதே நேரத்தில் இந்தத் திட்டம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு மட்டுமல்ல, நகராட்சிகளுக்கும் பேரூராட்சிகளுக்கும்கூட இந்தத் தன்னிறைவுத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம்.

மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஆறுமுகம் அவர்கள், "உள்ளாட்சித் துறையை வைத்துக்கொண்டிருக்கின்ற அமைச்சர் அவர்கள் அதிகமான நிதி கேட்கவேண்டாமா?" என்ற கேள்வியைக் கேட்டார்கள். உண்மையிலேயே உள்ளாட்சித் துறையிலேதான் இப்போது அதிக நிதி செலவழிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டிலே நாம் கொண்டுவந்திருக்கின்ற கொள்கைக் குறிப்புகளைப் பார்த்தால், அதில் ரூபாய் 125 கோடி உள்ளாட்சித் துறைக்கு மட்டுமே கொடுக்கப்பட்டிருப்பது தெரியும். முதலிலே 1970-71-ல், 1971-72 ல் எவ்வளவு ரூபாய் கொடுத்தார்கள்? ஒரு ரூபாய் 10 கோடி கூட கொடுக்கவில்லை. அப்படிப்பட்ட நிலையில் இருந்த உள்ளாட்சித் துறைக்கு இன்று ரூபாய் 125 கோடி கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு உயர்ந்த நிதியை வாங்குகின்ற அளவுக்கு துறை உயர்ந்திருக்கிறது. அதைப் பாராட்டவில்லை. அதற்கு மாறாக இன்னும் அதிகமாகக் கேளுங்கள் என்கிறார்கள். கேட்டோம். கேட்டது கிடைத்தது. எங்கே? புரட்சித் தலைவர் அவர்களிடத்திலே ரூபாய் 10 கோடி அளவுக்கு பேரூராட்சிகள், நகராட்சிகள் ஆகியவற்றுக்கு தன்னிறைவுத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அவர்கள் என்ன கேட்க வேண்டுமென்று நினைக்கிறார்களோ அதை நாங்கள் முன்

கூட்டியே நினைத்து, புரட்சித் தலைவர் அவர்களிடத்திலே வாங்கிக்கொண்டிருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே உள்ளாட்சித் துறையில்தான் இன்று அதிவேகமாக வேலைகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன என்பதை யாரும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் ஒன்று. மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஆறுமுகம் அவர்கள் இன்னொரு கருத்தைச் சொன்னார்கள். இந்த அரசுக்குக் களங்கம் கற்பிக்கின்ற வகையில், அதுவும் பாதாளச் சாக்கடைத் திட்டத்தில் இந்த 1980-ல் அடிக்கல் நட்டு, தமிழ் நாட்டினுடைய மானத்தையும், மரியாதையையும் அந்தப் பாதாளச் சாக்கடையிலே போட்டுப் புதைப்பதற்காக புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் வருகின்றார் என்றெல்லாம் அங்கே பேசி, அதற்குப் பின்னாலே இந்தப் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு அடிக்கல்லும் நாட்டப்பெற்றது. நான் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். ஒரு நல்ல காரியத்தை, ஒரு நல்ல திட்டத்தை, இந்த செயல்களையெல்லாம் முன்பிருந்த அரசு செய்யவில்லை. ஆனால் இந்த ஆட்சி, இந்த அரசு அதற்கான நடவடிக்கைகளை எடுத்து அதற்குப் பின்னாலே திட்டத்தைக் கொண்டு வந்து அடிக்கல் நாட்டுகின்ற நேரத்தில், அதற்கு முன்னால் அங்கே எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்களும் சேலத்திலே பேசினார்கள். என்ன பேசினார்கள்? நாம் எல்லாம் கூனிக்குறுகுகின்ற அளவிற்குப் பேசினார்கள். தமிழர்களாக இருக்கின்றவர்கள் எந்த நேரத்திலும் தலைநிமிர்ந்து, வீரநடைபோட்டு நடந்து செல்கின்ற நிலையில் இருக்க வேண்டுமென்று எண்ணுகின்ற எண்ணம் எங்களுக்கு இருந்தாலும் கூட, அவர்கள் பேசுகின்ற பேச்சு எப்படி இருக்கிறது என்பதை மட்டும் தயவுசெய்து எண்ணிப்பார்க்க வேண்டும். தமிழ் நாட்டினுடைய மானத்தையும் மரியாதையையும் பாதாளச் சாக்கடையிலே சேலத்திலே புதைப்பதற்குத்தான் புரட்சித் தலைவர் அவர்கள் வருகின்றார்கள் என்று பேசவில்லையா? தயவுசெய்து நான் பேசி முடித்துவிடுகிறேன். பிறகு சொல்லலாம். அவர்கள் அங்கே பேசவில்லை, சபையிலே பேசியிருக்கிறார்கள். அங்கே பேசியதைத்தான் சொல்கிறேன். இல்லை என்றால் இல்லை என்று சொல்லிவிடட்டும். பேப்பரிலே வந்திருக்கிறது. நான் காண்பிக்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: துணைத் தலைவர் அவர்களே, எங்கள் தலைவர் அப்படிப் பேசவில்லை. நான்கூட அந்தக் கூட்டத்திற்குப் போயிருந்தேன்.

(திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் எழுந்தார்கள்.)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அங்கத்தினர் அவர்களுக்கு பேப்பரைக் காட்டுகிறேன். 'முரசொலி' பத்திரிகையைக் காட்டுகிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே என்ன பேசுகின்றார்களோ அதற்குப் பதில் சொல்வதுதான் முறை. அப்படி இருந்தாலும், முரசொலியிலே இருப்பதாகச் சொல்கின்றார். அதை எடுத்துக் காட்டினால், நல்லதாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இப்போது நான் சொன்னதைக் காட்டட்டுமா? உடனே காட்டுகிறேன். இன்னும் 'Within half an hour காட்டட்டுமா? அதற்கு என்ன சொல்லப்போகிறார்கள்?

திரு. ஆற்காடு நா. வீராசாமி : துணைத் தலைவர் அவர்களே, இப்படி ஒரு அமைச்சரே சொல்கின்றார்கள். இப்போது முரசொலியிலே காட்டுகிறேன் என்றார். அதற்குப் பிறகு அரை மணி நேரத்திலே காட்டுகிறேன் என்கிறார். அதே நேரத்திலே வெளியிலே பேசியதற்கு எல்லாவற்றிற்கும் பதில் சொல்வது என்றால் எப்படி? ஓர் அமைச்சர் பதில் சொல்வதை நான் வரவேற்கிறேன். அதே நேரத்தில் வெளியில் பேசுகின்ற எல்லாவற்றிற்கும் இங்கே பதில் சொல்வதென்றால் . . . .

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : ஒரு நல்ல நோக்கத்திற்கு உள் நோக்கம் கற்பித்துப் பேசக்கூடிய முறையை அவர்கள் கோடிட்டுக் காட்டி இருக்கிறார். அங்கத்தினர் அவர்கள் கேட்கவேண்டியது அதற்கு ஆதாரம் இருக்கிறதா அல்லது பேசினார்களா என்று கேட்டதற்கு, அவர்கள் முரசொலியிலே வந்திருக்கிறது, நான் காட்டுகிறேன் என்று சொல்கிறார்கள். அதற்குப் பிறகு அமைச்சர் அவர்கள் காட்டவில்லை என்றால், உரிமைப் பிரச்சினைகூட எழுப்பலாம், அமைச்சர் சரியான காரணத்தை, தகவலைக் கொடுக்கவில்லை என்று. அரசு இப்படித்தான் கட்டுப்பட்டுப் பேச வேண்டும் என்ற நிபந்தனை இல்லாததால், உறுப்பினர்கள் இப்படித்தான் பேச வேண்டும், மான்ய குறிப்பின் மீது இப்படித்தான் பேசவேண்டும், கொள்கைக் குறிப்பின்மீது இப்படித் தான் பேச வேண்டுமென்று மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் வலியுறுத்த வேண்டியதில்லை. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் பேசியதை மறுத்திருக்கலாம். சேலத்திலே பேசவில்லை என்றால், மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஆறுமுகம் அவர்கள், 'நான் அந்தக் கூட்டத்திலே பேசவில்லை' என்று மறுத்துவிட்டால் அதுவும் அவைக் குறிப்பிலே இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதும் குறிப்பில் இருக்கிறது.

(திரு. ஆற்காடு நா வீராசாமி எழுந்தார்)

நான் பேசியபிறகு சொல்லலாம். இப்படி குறுக்கிடுவது பட்டி மன்றத்திலே நிற்கின்ற மாதிரி ஆகிவிடும். அது அல்ல முறை. மறுப்பதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தவறாகச் சொல்கின்றார் என்றால் அதுவும் அவைக் குறிப்பிலே இருக்கிறது. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் அதை மறுத்துச் சொல்லட்டும்.

(பிற்பகல் 1-30)

திரு. சோ. ஆறுமுகம்: துணைத் தலைவரவர்களே, நம்முடைய முதலமைச்சரவர்கள் சேலத்திற்கு பாதாளச் சாக்கடை கால்கோள் விழாவிற்கு வந்தார்கள். எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள், அதற்கு முதல்நாள் ஒரு கூட்டத்திலே பேசுகிறார்கள். அப்போது பாதாளச் சாக்கடைத் திட்டத்தைப் பற்றி குறை சொல்லிப் பேசவில்லை. கலைஞர் அவர்கள் பேசியது, தமிழர்களுடைய மானத்தை எல்லாம், உரிமைகளை எல்லாம் இழந்துவிட்டு, பாதாளச் சாக்கடைத் திட்ட கால்கோள் விழாவிற்கு நாளை வரப்போகிறார் என்ற அளவிலேதான் பேசினாரே தவிர, பாதாளச் சாக்கடைத் திட்டத்தைக் குறை சொல்லி அல்லது முதலமைச்சரைக் களங்கப்படுத்தும் நோக்கத்திலே அன்றைக்கு அவர் பேசவில்லை.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு துணைத் தலைவர்களே, நான் பேசாததைப் பேசியதாக . . . நான் அந்தக் கூட்டத்திலே கலந்து கொள்ளவில்லை. கலைஞர் அவர்கள் பேசிய கூட்டத்தில் நான் கலந்து கொண்டிருந்தால், அந்த வார்த்தைகள் எப்படி வந்தன என்பதை என்னால் நேரடியாகச் சொல்ல முடியும். அடுத்த நாள் நான் விழாவிற்குப் போனபோது மாலைமுரசுப் பத்திரிகை என்னிடம் கொடுக்கப்பட்டது. அந்த விழாவிலேயே பேசினேன்: திரும்ப பதில் சொன்னேன். இப்படி கலைஞர் பேசிவிட்டுப் போயிருக்கிறாரே, சரியா, முறையா; ஒரு தமிழருக்கு உரிய பண்பாட்டோடு பேசியிருக்கிறாரா என்ற கருத்தை நான் அங்கே எடுத்துச் சொன்னேன். அதற்காகத் தான் சொல்கிறேன். ஆதாரம் இல்லாமல் எந்தக் கருத்தையும் இங்கே வெளியிட விரும்பவில்லை. ஆதாரத்துடன்தான் பேசுகிறேன். பர்ட்டிகுலர் இஷ்யூ—மாலை முரசு இதழ் தேவை என்றாலும் நான் கொண்டு வந்து கொடுக்கத் தயாராக இருக்கிறேன்.

திரு. சோ. ஆறுமுகம் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சென்ற ஆண்டுகூட கொள்கை விளக்கக் குறிப்பின் மீதான விவாதத்தில் இதே கருத்துக்களைப் பேசினார்கள். அப்போதும் பதில் சொல்லியிருக்கிறோம்.

அதையேதான் சொல்லுகிறார்கள். அப்படிச் சொல்ல மாண்புமிகு அமைச்சருக்கு உரிமையுண்டு. உரிமையில்லை என்று சொல்லவில்லை; முதல் நாள் கலைஞர் பேசியது, தமிழர்களுடைய உரிமையை, தமிழர்களுடைய மானத்தை எல்லாம் குழி தோண்டிப் புதைத்துக்கொண்டிருக்கும் முதலமைச்சரவர்கள், நாளைய தினம் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு கல்நாட்ட இங்கே வருகிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்ற அளவிலே பேசினார். ஆனால் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைப் பற்றிக் குறை சொல்லிப் பேசவில்லையென்பதை இப்போதும் தெரிவித்துக்கொள்கிறேன். பத்திரிகைகளில் வந்த செய்திகளையெல்லாம் அமைச்சரவர்கள் ஆதாரமாக எடுத்துக்கொண்டால். . .

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : 'வந்திருக்கிறது' என்றுதான் சொல்லுகிறேன்.

திரு. சோ. ஆறுமுகம் : வந்திருக்கிறதென்று சொன்னால் சரி. அதை ஆதாரமாக எடுத்துக்கொள்ளவில்லை என்று அமைச்சரவர்கள் திருத்திக் கொள்வார்களானால் வரவேற்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்வதன் நோக்கம், ஒரு திட்டம் வருவதற்கு முன்னாலேயே அதிலே குறை காண வேண்டும், அதிலே குற்றம் சொல்ல வேண்டுமென்ற எண்ணத்தோடு இருக்கிறார்கள் என்பதைச் சொல்வதற்குத்தானே தவிர, வேறொன்றுமில்லை. அந்தத் திட்டத்தைப் பற்றி அந்த நோக்கத்தோடு பேசவில்லை, கலைஞர் அவர்கள் பாதாளச் சக்கடைத் திட்டத்தைக் குறை சொல்லிப் பேசவில்லை என்று சொன்னால் போதுமானதுதான்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவரவர்களே, முன்னாலேயே அவை முன்னவர் அவர்கள் அதைத்தான் சொன்னார். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் விளக்கம் சொல்லியிருக்கிறார்கள். எங்களுடைய தலைவர் இந்தத் திட்டத்தைக் குறை சொல்லவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அமைச்சரவர்கள் முரசொலியில் வந்திருக்கிறதென்று சொல்லியிருக்கிறார். இப்போது மாலை முரசில் வந்திருப்பதாகச் சொல்கிறார். ஆக, எதுவாக இருந்தாலும் நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, திட்டத்தைக் குறை சொல்லவில்லை என்று எங்கள் கட்சி சார்பிலே திரு. ஆறுமுகம் அவர்கள் சொல்லியும், திரும்பத் திரும்ப ஒரு கட்சியின் தலைவர் வெளியில் பேசியதை வைத்துக்கொண்டு, சொல்லாத ஒன்றைப் பேசுவது முறைதானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை 9 கோடியே 10 இலட்சம் ரூபாயாகும். 9 கோடியே 10 இலட்சம் ரூபாயையும் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து பெற்றுக்கொள்வதா அல்லது ஹட்கோவிலிருந்து பெற்றுக் கொள்வதா என்ற பிரச்சினை வந்தது. அதற்குப் பின்னாலே 1981 ஏப்ரலுக்குள் ஹட்கோ உதவியுடனும், அரசு உதவியுடனும் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வாமென்று முடிவு எடுத்து, இப்போது இடங்களுக்கு நில ஆர்ஜிதப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. நில ஆர்ஜிதப் பணிகள் முடிவடைந்தவுடன்தான் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை அமுல்படுத்த முடியும். நில ஆர்ஜிதப் பணியைச் செய்யாமல் இதைச் செய்ய முடியாது. ஆகவே அந்தப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தத் திட்டம் கைவிடப்படவில்லை, நீங்கள் சொல்வதுபோல். இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறதே தவிர கைவிடப்படவில்லை. நல்ல திட்டத்தைத்தான் இந்த அரசாங்கம் செயல்படுத்திக் கொண்டிருக்கிறதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. ஆறுமுகம் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களிடம் ஒன்றைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். பாதாளச் சாக்கடைத் திட்டமென்பது நகரத்திலே இருக்கும் கழிவு நீரையெல்லாம் நகரத்திற்கு வெளியிலே குழாய் வழியாகக் கொண்டு செல்லும் திட்டம். அதிலே ஒன்றும் நில ஆர்ஜித வேலையில்லை. முதலிலே ஹட்கோவில் நிதி உதவி கேட்டார்கள். பிறகு அவர்கள் சில விதிமுறைகளைப் போட்டதால், அதற்கு அரசாங்கமோ, நகராட்சியோ அவர்கள் கேட்பதுபோல் எழுதிக் கொடுக்க முடியாது, குவாரன்டி கொடுக்க முடியாது என்பதால் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து நிதி உதவி பெறுவதென்று ஒரு முறை சொல்லப்பட்டது. எதிலே நிதி வாங்குவதென்ற பிரச்சினையை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு ஹட்கோ நிறுவனமோ அல்லது ஆயுள் காப்பீட்டுக் கழகமோ நிதி உதவி கொடுத்திருக்கிறதா, அவர்கள் ஒதுக்கீடு செய்தார்களா அல்லது அனுமதித்து விட்டார்களா என்ற விவரங்களை அமைச்சரவர்கள் தெரிவிக்க வேண்டும். நில ஆர்ஜிதம் என்று சொல்லுகிறார்கள். எதற்காக? கழிவு நீரை வெளியே கொண்டு போய், அங்கே அந்த நீரைப் பயன்படுத்துவதற்காகத்தான். எங்களுடைய கிராமமாகிய பூலாவரியில் நில ஆர்ஜிதத்தின் மூலம் 1,000 ஏக்கர் எடுக்க முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இடையில் திட்ட வேலையைத் துவங்க என்ன தடை? நகரத்தில் குழாய் பதிக்கும் பணிகளை ஏன் மேற்கொள்ளவில்லை என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று சொன்னால் இந்தத் திட்டத்திற்கு முழுமையாக என்னென்ன செய்யப்பட வேண்டுமோ அவற்றை முன் கூட்டியே நாம் செய்ய வேண்டும். அப்போதுதான் திட்டத்தை நடைமுறைப் படுத்த முடியும். இல்லையென்று சொன்னால், திட்டம் பாதியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நேரத்தில், நில ஆர்ஜிதப் பணி குறித்து கோர்ட்டுக்குப் போய் தடை வாங்கிவிட்டால் நீங்களே சொல்வீர்கள், திட்டம் பாதியில் நிற்கிறதென்று. சொல்லமாட்டீர்களா? ஆகவே நில ஆர்ஜிதப் பணிகளை முதலிலே முடித்துவிட்டு, அதற்குப் பின்னாலே குழி தோண்டி, குழாய்கள் பதிப்பது போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்.

திரு. சோ. ஆறுமுகம் : தலைவரவர்களே, அமைச்சரவர்களிடமிருந்து ஒன்றைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அது மக்களுக்கும் நன்மையாக இருக்கும். கல்நாட்டு விழா செய்கிறபோது நில ஆர்ஜிதப் பணிகள் முடிந்திருக்க வேண்டும். திட்டப் பணிகள் வரையறுத்திருக்க வேண்டும். அப்படி வரையறுத்த பின்னாலேதான் நிதி உதவியை ஹட்கோ நிறுவனத்தின் மூலமோ, ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்தோ பெற முடியும். நீங்கள் நிதிபெறாமல், கல்நாட்டு விழா நடத்திவிட்டு, 1½ ஆண்டுகளாகப் பணி துவங்காமல் இருக்கிறது. அதற்கான காரணத்தைத்தான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : சம்பந்தம் இல்லை என்றாலும் கூட நிலைமையைத் தெளிவுபடுத்த வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். இந்த மாதிரியான திட்டங்களை நிறைவேற்றும்போது, நாம் எதிர்பாராத சம்பவங்கள் ஏற்பட்டு, காலதாமதம் ஏற்படுவது இயற்கைதான். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் பச்சையாறு திட்டத்தைச் சொல்லலாம். திருநெல்வேலி மாவட்டத்தில் டி.பி.ஏ.பி.ன்கீழ் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லி, 10, 20 இலட்சம் ரூபாய்க்கு மேலே கட்டடப் பணி செய்து, கடைசியில் மாநில அரசு, மத்திய அரசு முடிவு செய்து, ஹைட்ராலஜி சரியாகப் பார்க்காத காரணத்தால், செய்ய முடியாதென்று சொல்லி, செலவு செய்து கட்டடங்கள் கட்டிய பிறகும், அந்தத் திட்டம் அப்படியே நிறுத்தப்பட்டுவிட்டது. கலவைப்பள்ளி என்பது வழக்கு மன்றத்தில் இருக்கிறது. இதே அடிப்படைதான். நான் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. முன்மாதிரியாக சில அனுபவங்கள் வந்ததால், மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். ஆர்ஜிதப் பணி முடிந்த பிறகுதான் துவங்க வேண்டும். ஹட்கோ கொடுக்காவிட்டாலும், எல்.ஐ.சி. கொடுக்காவிட்டாலும், மாநில அரசு செய்யும் என்ற நிலைமையை உறுதி செய்தநான் அடிக்கல் நாட்டுவிழா நடத்

தப்பட்டது. அடிக்கல் நாட்டிய பிறகு, உடனே திட்டத்தை ஆரம்பிக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பது தவறு. காலதாமதம் என் என்று கேட்கலாம். அதற்கு பதில் சொல்லலாம். கட்டி செலவழித்து, இப்போது அந்தத் திட்டமே இல்லையென்று ஆகிவிட்டது. பச்சையாறு திட்டம் இல்லை என்று இருக்கிறது. தி.மு.க. ஆட்சியில் இப்படி நடந்ததே என்று கேட்க மாட்டேன். சில நேரங்களில் கணக்குப் போடுகிறோம். அது தவறிவிடுகிறது. அல்லது காலதாமதத்திற்கு வழக்கு மன்றம் ஒரு காரணமாக வந்துவிடுகிறது. இந்தப் பழைய அனுபவங்களைப் வைத்துப் பார்க்கும்போது கொஞ்சம் எச்சரிக்கையாகச் செயல்பட வேண்டுமென்றுதான் மாநில அரசு செயல்பட்டு வருகிறதென்று அமைச்சரவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அந்தப் பணிகள் சீக்கிரமாக, விரைவாக முடுக்கிவிடப்பட்டு, வேலைகள் நடந்து வருகின்றன.

அடுத்தபடியாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் கிராமக் குடிநீர் திட்டம் பற்றி ஒருசில கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாக கிராமக் குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தவரையில் தமிழகத்தில் 47,705 குடியிருப்புகள் உள்ளன. அதிலே நாம் எத்தனை சிற்றூர்களுக்குக் குடிநீர் வழங்க வேண்டுமென்றால், 18,167 சிற்றூர்களாகும். அங்கே வாழ்கின்ற மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. முடிவு செய்யப்பட்டதற்குப் பின்னாலே கடந்த 1977-78லிருந்து அந்தத் திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. 1977-78-ல் 1,140 குடியிருப்புப் பகுதிகளுக்கு சிற்றூர்களுக்கு நாம் பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் கொடுத்திருக்கிறோம். அதற்கான செலவுத் தொகை 715 இலட்சம் ரூபாயாகும். 1978-79-ல் 1,404 சிற்றூர்களுக்கு நாம் பாதுகாக்கப்பட்ட குடிநீரை 860 இலட்சம் ரூபாய் செலவில் கொடுத்திருக்கிறோம்.

(முற்பகல் 1-40)

1979-80-ல் 921 சிற்றூர்களுக்குக் கொடுத்திருக்கிறோம். 1980-81-ல், 2,300 சிற்றூர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1981-82-ல் 2,384 குடியிருப்புகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுவரையிலும் 67 கோடி ரூபாய் இதற்காகச் செலவழித்து 8,149 குடியிருப்புகளுக்கு இவ்வசதியைச் செய்து கொடுத்திருக்கிறோம். இன்றைக்கு 67 கோடி ரூபாய் செலவழித்து, 8,149 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதித் திட்டங்களை விரிவுபடுத்தியிருக்கிறோம் என்று சொன்னால், இவர்களுக்கெல்லாம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று பொருள். அதே சமயத்தில் மாண்புமிகு உறுப்பினர்

திரு. ஆறுமுகம் சென்னை நகருக்குக் குடிநீர் என்பதுபற்றி கருத்துச் சொன்னார்கள். குறிப்பாக சென்னைக்கு வீராணம் கால்வாய் திட்டமா, கட்டளைக் கால்வாய் திட்டமா, இல்லை, வேறு ஏதாவது திட்டமா என்று கேட்டார். இதுகுறித்து மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்கள் இதே மேலவையிலும் பேரவையிலும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எங்களைப் பொறுத்தவரையில், சென்னையைப் பொறுத்தவரையில், கிருஷ்ணா கால்வாய் திட்டத்தின் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இந்தத் திட்டத்தை 188 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றி, அதன் மூலம் சென்னை நகருக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொண்டு வரவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இங்கே பல்வேறு கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். அவைகளுக்கெல்லாம் பதில் சொன்னால், இன்னும் ஒரு மணி நேரம் அல்லது 2 மணி நேரம் கூடுதலாக ஆகும். ஆதலால் மிகவும் முக்கியமானவைகளைப் பற்றி மட்டும் சொல்லுகிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு அமைச்சரிடமிருந்து ஒரே ஒரு விளக்கம் பெற விரும்புகிறேன். 188 கோடி ரூபாய் செலவிட்டு சென்னை நகர மக்களுக்கு கிருஷ்ணா கால்வாய் திட்டத்தின் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்கப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு சென்னை நகரில் குடிநீர் கிடைப்பதில் பிரச்சினை இருக்கிறது. குறிப்பாக அமைந்தகரை பகுதியில் எல்லாம் குறிப்பிட்ட நேரங்களில் தண்ணீர் கிடைக்கவில்லை. குழாய்களில் தண்ணீர் சரியாக வரவில்லை. இது சென்னை நகரில் குடிநீர் பஞ்சம் வர இருக்கிறது என்கிற அபாயத்திற்கு ஒரு எச்சரிக்கை போல் இருக்கிறது. இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். குடிநீர் பஞ்சம் வந்த பிறகு, நடவடிக்கை எடுக்க முடியாது. கோடைக் காலத்தில் இவ்வாறு ஏற்பட்டிருக்கிற தண்ணீர் பஞ்சத்தைப் போக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தண்ணீர்ப் பஞ்சம் சென்னைக்கு வருவது என்பது புதிதல்ல. 1973, 1974, 1975 ஆம் ஆண்டுகளில் எல்லாம் தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டு, 'ஆல்டர்நேட்டிவ் டேஸ்' என்கிற அடிப்படையில் ஒருநாள் விட்டு ஒருநாள் தண்ணீர் விட்டுக் கொண்டிருந்தார்கள். 5, 6 மாதங்களுக்கு முன்பு வறட்சி ஏற்பட்ட நேரத்தில் கூட, போர்வெல் எல்லாம் போட்டு பரவலாகத் தண்ணீர் பஞ்சம் இல்லாமல் பார்த்துக்கொண்டோம். இப்போதும் கூட கூடுமானவரை, சென்னையைப் பொறுத்தவரையில், நமக்கு இருக்கிற

இன்டர்னல் சோர்சஸை எல்லாம் பயன்படுத்தி, கிணற்றில் தண்ணீர் இருந்தால், அதை போர்வெல் மூலம் பயன்படுத்தி எந்த அளவுக்குச் செய்ய முடியுமோ அந்த அளவுக்கு இதைச் செய்ய பரிசீலித்துக்கொண்டிருக்கிறோம் Money is no problem. அந்த அடிப்படையில் இத்திட்டத்தைப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : கிராமங்களில் நான் சொன்ன அடிப்படையில் இன்றைக்கு திட்டங்களை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறோம். அதோடு மட்டுமல்லாமல், 1977-78 ஆம் ஆண்டில் வறட்சி ஏற்பட்ட போது, அதற்காக நாங்கள் முனைந்து நின்று காரியங்களைச் செய்ததை அனைவரும் பாராட்டியிருக்கிறார்கள். அந்த நேரத்தில் 6,703 குழாய்க் கிணறுகள் ரூபாய் 8 கோடி செலவில் அமைக்கப்பட்டன. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் ஒரு கருத்தைச் சொன்னார். இங்கே இந்த அரசு பெண்களுக்கு மட்டும் தான் அதிக முக்கியத்துவம் தருகிறது என்று அவர் சொன்னார். "பெண்களுக்கு 16 ஆயிரம் கிராமங்களில் கழிப்பிடங்கள் 23.56 கோடி ரூபாய் செலவில் கட்டும் செயற்குறிப்பு பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறீர்கள், நீங்கள் இதனை விளம்பரப்படுத்த வேண்டுமென்ற அடிப்படையில், விளம்பரப் பிரியர்களாக மாறிவிட்டிருக்கிறீர்கள்" என்கிற எண்ணத்தின் அடிப்படையிலே இங்கே கருத்துத் தெரிவித்தார்கள். தாய்மார்களுக்கு குறிப்பிட்ட இடத்தைக் கொடுக்க வேண்டும், அவர்களுக்கு குறிப்பிட்ட ஒதுக்கீடு கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில், பல்வேறு திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் தான் நாங்கள் ஏற்கெனவே பஞ்சாயத்துத் தேர்தலில்கூட மகளிர்க்கு 15 சதவிகித இட ஒதுக்கீடுகள் என்கிற வகையில் சட்டங்களைக் கொண்டு வந்தோம். அந்தச் சட்டம் இன்றைக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது. குறிப்பாக கிராமங்களில் இருக்கிற பெண்கள் வெளியே போய் உட்கார வேண்டிய நிலையில் இருப்பதால், கால கட்டாயத்தில் இருப்பதால், அது கஷ்டம் என்பதால், அதை உணர்ந்து உடனடியாக அந்த அடிப்படையில் அவர்களுக்குக் கழிப்பிடங்களை ஏற்படுத்த வேண்டுமென்று கருதி இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. அப்படி இதனை ஏற்படுத்துகின்ற நேரத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சேர்த்தே கழிப்பிடங்களைக் கொண்டு வருவோம் என்று தான் ஏற்கெனவே கொள்கை விளக்கக் குறிப்பில் கூட தெரிவித்திருக்கிறோம். ஆண்களை விட பெண்களுக்குத் தான் முக்கியத்துவம் கொடுக்கிறீர்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் சொன்னார். ஆனால் இத்திட்டம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் செயல்படுத்தப்படும் என்றுதான் கொள்கை விளக்கக் குறிப்பிலே கூட சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. சோ. ஆறுமுகம் : இப்படி பெண்களுக்குச் செய்வதாக சொல்லிக் கொள்வதன் மூலம் பெண்களை நீங்கள் ஏமாற்றுகிறீர்கள்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : யார் ஏமாற்றிக் கொண்டிருந்தார்கள் என்பது இந்த நாட்டு மக்களுக்குத் தெரியும். ஏமாற்றுபவர்கள் ஆட்சியில் இருக்கக்கூடாது என்ற அடிப்படையில் தான் இப்போது நாங்கள் ஆட்சிப் பீடத்திற்கு வந்திருக்கிறோம்.

திரு. சோ. ஆறுமுகம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதோ பெண்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது வெறுப்புக் கொண்டு இருப்பது போலவும் இவர்களை முழுமையாக நம்பிக் கொண்டு ஆட்சி பீடத்தில் அமர்த்தியிருப்பதாகவும் சொல்கிறார்கள். அதற்காகத்தான் நான் பேசுகிறபொழுது இன்னொன்றையும் சொன்னேன்

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : * * *

திரு. ஆற்காடு நா. வீராசாமி : * * *

திரு. ஆர். டி. சித்தாபதி : * * *

திரு. ஆற்காடு நா. வீராசாமி : * * *

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : * * *

திரு. ஆற்காடு நா. வீராசாமி : * * *

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : * * *

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : * * *

திரு. ஆற்காடு நா. வீராசாமி : * * *

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : * * *

திரு. ஆர். டி. சித்தாபதி : * * *

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : * * *

திரு. ஆற்காடு நா. வீராசாமி : * * *

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : ஊர்வலம் வந்தார்கள்' என்பதிலிருந்து தொடர்ந்து வந்த முழுப் பேச்சையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுமாறு உத்தரவிடுகிறேன்.

* * * தலைவர் ஆணைப்படி நீக்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இன்றைக்கு கிராமங்களில் ஆண்களின் வசதிக்காகவும், பெண்களின் வசதிக்காகவும் 16 ஆயிரம் இடங்களில் கழிப்பிடங்களை 22.56 கோடி ரூபாய் செலவில் கட்டும் திட்டத்தை நிறைவேற்ற இந்த அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே கிராமங்களில் இருக்கக்கூடிய தாய்மார்களின், பெரியோர்களின் வசதிக்காக இதுபோன்ற கழிப்பிடங்களை—24 மணி நேரமும் தண்ணீர் வரக்கூடிய கழிப்பிடங்களாக கட்டிக்கொடுக்க, மாற்றியமைக்க இந்த அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. அதேசமயத்தில் நகராட்சிப் பகுதிகளில் கூட பல இடங்களில் டிரை லேட்ரின்கள் இருக்கின்றன. நேற்றைக்கு கூட நான் ராஜபாளையம், விருதுநகர், சிவகாசி போன்ற பகுதிகளுக்குச் சென்றிருந்தபோது, இப்படிப்பட்ட உலர் கழிப்பிடங்கள் இருப்பதைப் பார்த்து வந்தேன். அங்கேயெல்லாம் இன்னமும் அவர்கள் டிரை லேட்ரின்களைத்தான் உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் மாற்றியமைக்க வேண்டும். அதற்காகத்தான் அவற்றையெல்லாம் 'செப்டிக் டாங்' பொருத்தப்பட்ட கழிப்பிடங்களாக மாற்றியமைக்கும் திட்டத்தை இந்த ஆண்டு முதல் நடைமுறைப்படுத்த இருக்கிறோம். அதற்காக வங்கிகளின் மூலம் இல்லையென்று சொல்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் கடன் கொடுக்கும் திட்டத்தை இந்த ஆண்டிலிருந்து அமுல்படுத்த இருக்கிறோம்.

அடுத்து, இன்றைக்கு ஊராட்சி மன்றங்களாக இருந்தாலும், பேரூராட்சிகளாக இருந்தாலும், மாநகராட்சிகளாக இருந்தாலும், அவற்றிலிருந்து வருகின்ற வருமானம் மிகவும் குறைவாக இருக்கிறது. ஆக, வருவாய் மிகக்

(பிற்பகல் 1 50)

குறைவாக இருக்கிற அதே நேரத்தில் வசதிகளை அதிகமாகச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. ஆகவே வருவாயை அதிகரிக்கும் வகையில் தனியார் சந்தைகளை—அவைகள் ஊராட்சி மன்றத்திற்கு உட்பட்டவைகளாக இருந்தால் ஊராட்சி மன்றங்களுக்கும், அவை பேரூராட்சி மன்றங்களுக்குச் சொந்தமாக இருந்தால் அந்த அமைப்புகளுக்கும் அதைப்போலவே நகராட்சி மன்றங்கள் மற்றும் மாநகராட்சி மன்றங்களுக்குச் சொந்தமாக இருந்தால் அத்தகைய அமைப்புகளுக்குமே சொந்தமாக்கி அவற்றை அத்தகைய அமைப்புகளே ஏற்று நடத்துவதற்கான முறையில் இந்தத் தொடர் கூட்டத்திலேயே ஒரு சட்டம் கொண்டு வர இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிக் கொண்டு வருவதன் மூலமாக ஏறத்தாழ ரூபாய் 10 கோடிக்கு மேல் உள்ளாட்சி மன்றங்களுக்கு வருவாய் அதிகரிக்கும் வாய்ப்பு

இருக்கிறது. தனியார் மட்டும் சந்தைகள் மூலமாகப் பெருமளவுக்கு லாபம் பெறுகிற நிலையை மாற்றி, அதை ஊருக்கும் உலகுக்கும் சொந்தமாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இதைக் கொண்டு வர இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பஞ்சாயத்துகளின் பல்வேறு கட்டிடங்கள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்தக் கணக்கையும் மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் கேட்டார். தமிழகத்தில் மொத்தம் 12,632 ஊராட்சி மன்றங்கள் இருக்கின்றன. அவற்றில் 7,459 ஊராட்சி மன்றங்கள் இலவசமாக அல்லது வாடகைக் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. சொந்தக் கட்டிடங்களில் 61 ஊராட்சி மன்றங்கள் மட்டுமே இயங்கி வருகின்றன. இந்த நிலைமையை மாற்றி 5,112 ஊராட்சி மன்றங்களுக்கும் நாம் சொந்தக் கட்டிடங்களைக் கட்ட வேண்டுமென்ற திட்டத்தைத் தீட்டி அதைக் கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழும், கிராம தன்னிறைவுத் திட்டத்தின் கீழும் கட்டி வருகின்றோம். இன்னும் மூன்றாண்டுக் காலத்திற்குள் எல்லா ஊராட்சி மன்றங்களுக்கும் சொந்தமாகக் கட்டிடங்கள் உண்டு என்ற நிலையை நாம் உருவாக்கிக்கொண்டிருக்கிறோம்.

இந்தக் கொள்கை விளக்கக் குறிப்போடு மூன்று சட்ட முன் வடிவுகளையும் அவை எடுத்துக்கொண்டு கருத்துக்களைத் தெரிவித்ததற்காகவும் நான் நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கால நீட்டிப்பு ஏன் ஏற்பட்டது என்பது மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரியும். ஊராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை முனைப்பாகச் செயல்படுத்த வேண்டும் என்று அரசு செயல்பட்டுக் கொண்டிருந்தபோதுதான் அவற்றிற்கான தடையுத்தரவு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டது. தேர்தல்கள் நடத்தப்படுவதை எதிர்த்து 340 ரிட் மனுக்கள் போடப்பட்டன. அதன் மீது நடுவர் ஆயம்—டிவிஷன் பெஞ்ச்—நாளைக்கு பரிசிலனை செய்ய இருக்கிறது. அரசின் சார்பாக நாங்கள் மனு போட்டு அந்தத் தடையை நீக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். நாளைய தினம் அந்த மனு எடுக்கப்படவிருக்கிறது தடை நீக்கப்பட்டால் அதற்குப் பிறகு வழக்கு மன்றம் அரசுக்கு என்ன டைரெக்ஷன்களைக் கொடுக்கிறதோ அதற்கு ஏற்ற முறையில் தேர்தலை விரைவில் நடத்துவதற்கான எல்லா நடவடிக்கைகளையும் அரசு எடுத்துக் கொள்ளும் என்பதையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதன் காரணமாகத்தான் நகராட்சிகளுக்கு 6 மாதம் அல்லது ஒரு வருஷம் தனியதிகாரிகளின் காலத்தை நீட்டிக்க

வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும் 6 மாதத்திற்குள் தேர்தல்களை நடத்தவும் அதில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவை நகராட்சி மன்றம் சென்ற ஆண்டு மே மாதம் ஒன்றாம் தேதியன்று மாநகராட்சியாக அறிவிக்கப்பட்டது. அதற்கும் தனி அதிகாரி நியமிக்கப்பட்டிருக்கிறார். அவருடைய காலமும் வரும் மே மாதத்தில் முடிவடைகிற காரணத்தால் அதையும் நீடிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. அதோடு கோவை மாநகராட்சியில் அதனைச் சுற்றியுள்ள 12 பஞ்சாயத்துக்களில் இருந்த பகுதிகளையும் சேர்த்திருப்பதால் இப்போதிருக்கிற வார்டுகளின் எண்ணிக்கையை அதிகரித்து அவற்றை 60 ஆக உயர்த்தி தேர்தல் நடத்துவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சியைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பல கருத்துக்களைத் தெரிவித்தார்கள். மாநகராட்சி தேர்தல்களை ஓராண்டு காலத்திற்குத் தள்ளிப் போட்டாலும்கூட, தேர்தலை முன்கூட்டியே நடத்த வேண்டும் என்ற நிலை வந்தால் 6 மாதத்திற்குள் நடத்தக்கூட இப்போதைய சட்ட முன்வடிவில் விதிமுறைகள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

இன்னொரு கேள்வியினையும் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டார்கள். ஊராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள்தான் நீதிமன்றத்தால் தடை செய்யப்பட்டன. எனவே நகராட்சி மன்றம் மாநகராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை நடத்தக்கூடாதா என்று கேட்டார்கள். அரசு ஏற்கெனவே ஒரு கொள்கை ரீதியான முடிவை நாட்டு மக்களுக்கும் இந்த மன்ற உறுப்பினர்களுக்கும் தெரிவித்திருக்கிறது. அதாவது முதல் கட்டமாக நாம் ஊராட்சி மன்றங்களுக்கும் ஒன்றியங்களுக்குமான தேர்தல்களை நடத்த இருக்கிறோம். இரண்டாவது கட்டமாக நகராட்சி மன்றங்களுக்கும் மூன்றாவது கட்டமாக மாநகராட்சி மன்றங்களுக்கும் தேர்தல்களை நடத்த இருக்கிறோம். நாளையதினம் நடுவர் ஆயத்தின் தீர்ப்பு வருகிற காரணத்தால் சீக்கிரமாக நமக்கு ஒரு முடிவு கிடைக்கும் என்று நம்புகிறோம். அரசைப் பொறுத்த வரையில் ஒதுக்கீடு தேவை என்பதில் கருத்து மாற்றம் ஏதுமில்லாமல் இருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18 சதவீதமும், தாய்மார்களுக்கு 15 சதவீதமும் இடஒதுக்கீடு தேவை என்றுதான் நாம் சொல்கிறோம். இதற்கு மாறாகத் தீர்ப்பு வந்தால் அதற்கு எப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ அத்தகைய நடவடிக்கைகளையும் இந்த அரசு எடுக்கும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

இறுதியாக மூன்று சட்ட முன்வடிவுகள் மீதும் பல்வேறு கருத்துக்களைச் சொன்ன மாமன்ற உறுப்பினர்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தச் சட்ட முன்வடிவுகளை ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்பதை அனைவரும் ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள். எனவே பல்வேறு கருத்துக்களையும் தெரிவித்த மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்து அமைகிறேன். வணக்கம்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : ஒரு முக்கியமான விளக்கத்தைக் கேட்க விரும்புகிறேன். தன்நிறைவுத் திட்டத்தின் கீழ் இணைப்புச் சாலைகள் போடப்பட்டுள்ளன. இனி இவைகளைப் பராமரிக்கும் பொறுப்பு யாருடைய கட்டுப்பாட்டில் இருக்கும், எந்தத் துறை இந்தப் பொறுப்பை மேற்கொள்ளும், ஊராட்சி ஒன்றியங்களே அவைகளை ஏற்று நடத்துமா அல்லது நெடுஞ்சாலை துறை ஏற்று நடத்துமா அல்லது கிராமப் பணித்துறை ஏற்று நடத்துமா, இதைப்பற்றி அரசு ஏதும் முடிவெடுக்கவில்லை என்று நினைக்கிறேன். அது குறித்து அரசு என்ன முடிவெடுக்கப் போகிறது ? விரைவில் முடிவெடுத்தால்தான் நன்றாக இருக்கும். முதல் கட்டப் பணிகள் முடிவடையும் தருவாயில் இருப்பதால் இப்போது முடிவெடுத்தால் தான் பராமரிக்கும் பணிகள் செம்மையாக நடக்க வசதியாக இருக்கும். எனவே இது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசின் கருத்தைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தன்னிறைவுத் திட்டம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. இப்போது 3 வது கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறோம். வருகிற 1 ஆம் தேதியிலிருந்து 3 வது கட்டம் தொடங்கவிருக்கிறது. எனவே இப்பணி தொடங்கப்பட்டு முடிவடைந்த பிறகு அதில் ஏற்பட்டிருக்கிற அபிவிருத்திப் பணிகள் அத்தனையும் எப்படி பராமரிப்பது என்ற கருத்தைக் குறித்து அரசு பரிசீலிக்கும். இவற்றை நெடுஞ்சாலைத் துறை ஏற்பதா அல்லது கிராமப் பணித்துறை ஏற்பதா அல்லது ஊராட்சி ஒன்றியங்கள் ஏற்பதா என்பதை அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

5. அரசின் சட்ட முன்வடிவுகள்.

(1) தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/1982).

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1982 ஆம் ஆண்டு, நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/1982) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் "

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1892 ஆம் ஆண்டு, நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/1982) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் "

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1982 ஆம் ஆண்டு, நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/1982) நிறைவேற்றப்பட வேண்டும் "

என்று முன்மொழிகிறேன்.

@ 721 ஆம் பக்கத்தில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1982 மார்ச் 29

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1982 ஆம் ஆண்டு, நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/1982) நிறைவேற்றப்பட வேண்டும் "

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(2) 1982 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1982).

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1982 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/1982) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் "

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1982 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/1982) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் "

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

@ 721–722 ஆம் பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1982 மார்ச் 29]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1982 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1982) நிறைவேற்றப்பட வேண்டும் "

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :

" சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1982 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1982) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(3) 1982 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/1982)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1982 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/1982) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் "

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1982 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/1982) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

@ 722 ஆம் பக்கத்தில் இணைப்பு VI ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1982 மார்ச் 29

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு, ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1982 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/1982) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்." என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1982 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1982) நிறைவேற்றப்பட வேண்டும் ".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை பிற்பகல் 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 2-00)

6. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்

A. Statutory Rules and Orders.

144. Notification issued with G.O. Ms. No. 1350, Commercial Taxes and Religious Endowments, dated the 11th December 1981 regarding an amendment to the Tamil Nadu General Sales Tax Rules, 1959. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].

1982 மார்ச் 29]

145. The Tamil Nadu Government's review on the working of the Tamil Nadu Agro Industries Corporation Limited, Madras for the year 1979-80 together with copies of the Fourteenth Annual Report. (Tamil & English) [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956)].

146. Sixth Annual Report of the Tamil Nadu Poultry Development Corporation Limited for the year 1978-79. (Tamil & English) [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956)].

B. Reports, Notifications and Other Papers.

136. Policy Note on the Administration of Jails in Tamil Nadu 1982-83 (Tamil & English).

137. Policy Note on Animal Husbandry, 1982-83 (Tamil and English).

138. Performance Budget on Animal Husbandry Department, 1982-83 (Tamil & English).

139. Activities of the Tamil Nadu Poultry Development Corporation Limited, Madras, 1982-83 (Tamil & English).

140. Corrections to the Tamil copies of the Activities of the Tamil Nadu Poultry Development Corporation Limited, Madras (1981-82).

141. Progress Review Report of the Tamil Nadu Meat Corporation Limited for the year 1981-82 (Tamil and English).

142. Supplement to Demand No. 55—Capital Outlay on Public Works Sanitation and Water Supply, 1982-83 (Tamil & English).

143. Second Report of the Committee on Delegated Legislation on the action taken by the Government on the recommendations of the Committee (English).

* 144. The Tamil Nadu Municipal Councils (Appointment of Special Officers) Amendment Bill, 1982 (L. A. Bill No. 18 of 1982), as passed by the Assembly.

* 145. The Coimbatore City Municipal Corporation (Amendment) Bill, 1982 (L.A. Bill No. 19 of 1982), as passed by the Assembly.

* 146. The Madras City Municipal Corporation (Amendment) Bill, 1982 (L.A. Bill No. 20 of 1982), as passed by the Assembly.

† 147. The Tamil Nadu Appropriation Bill, 1982 (L.A. Bill No. 22 of 1982), as paseed by the Assembly.

இணைப்பு I.

(593 ஆம் பக்கத்தில் இனம் 3 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

1982 ஆம் ஆண்டில் தஞ்சை மாவட்டம் திருமருகல் ஊராட்சி ஒன்றியம் பகுதியில் ஆலத்தூர் கிராமத்தில் தட்டம்மை (Measles), சின்னம்மை (Chickenpox) இவைகளால் எவரும் பாதிக்கப்படவில்லை என மாவட்ட சுகாதார அலுவலர் அறிவித்துள்ளார். ஆயினும், தாளம்மை அல்லது புட்டம்மை எனப்படும் மம்ஸ் (Mumps) என்கிற வியாதியால் ஐந்து பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளார். இது தவிர, இக்கிராமத்தில் நேப்ரைடிஸ் (Nephrites) எனப்படும் சிறுநீரக தொடர்பான நோயால் 12—2—1982-ல் இறந்து விட்டார். இந்நோயை அப்பகுதியிலுள்ளவர்கள் 'ஊது அம்மை' என்று அழைக்கிறார்கள்.

1981-ம் ஆண்டில் இக்கிராமத்தில் ஜுலை மாதத்தில் நால்வர் தட்டம்மையால் பாதிக்கப்பட்டு அதில் இருவர் இறந்து விட்டனர். இறப்புப் பதிவேட்டில் இறப்பிற்கு காரணம், ஒருவருக்கு 'மாந்தம்' என்றும் மற்றவருக்கு 'காய்ச்சல்' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நோயாளிகளை தனிமைப்படுத்துவதும், சுற்றுப்புற சுகாதாரத்தை பேணிக்காத்தலும் நீர் நிலைகளில் மருந்து தெளிப்பதும் நோய் அதிக அளவில் பரவாமல் தடுக்க உதவும். இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. எனவே எந்தவித பதட்டமும் அடையத் தேவையில்லை என கூறிக்கொள்கிறேன்.

* Circulated to all M.L.Cs. on 25th March 1982.

† Circulated to all M.L.Cs. on 27th March 1982.

இணைப்பு II.

(595 ஆம் பக்கத்தில் இனம் 3 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

அரசு மருத்துவ மனைகளுக்குத் தேவையான எக்ஸ்ரே பிலிம்கள் இந்துஸ்தான் போட்டோ பிலிம் நிறுவனத்திலிருந்து வாங்க வேண்டும். அவ்வப்போது தேவைப்பட்டியல் கொடுத்து எக்ஸ்ரே பிலிம்கள் வாங்கப்படுகின்றன.

அரசு ஸ்டான்லி மருத்துவமனையைப் பொறுத்த மட்டில் அவசியமானவர்களுக்கு எக்ஸ்ரே பிலிம் எடுப்பதில் எந்தவிதமான கடுமையான இடையூறும் இதுவரை ஏற்படவில்லை. மருத்துவ பரிசோதனை தேவைப்படும் சட்ட நடவடிக்கைகள் தொடர்பான இனங்களிலும் அவசர சிகிச்சை அளிக்க வேண்டிய இனங்களிலும் எக்ஸ்ரேக்கள் எடுக்கப்படுகின்றன. அரசு ஸ்டான்லி—மருத்துவமனையில் எக்ஸ்ரேக்கள் எடுப்பதில்லை என்று எந்த விதமான புகாரும் இதுவரை வரவில்லை. கீழ்க்கண்ட எக்ஸ்ரே பிலிம்கள் கைவசம் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒளி ஊடுருவத்தக்க எக்ஸ்ரே படச்சுருள்

	பாக்கெட்டுகள்		படச்சுருளின் எண்ணிக்கை
15" × 12"	87	×	50
14" × 11"	71	×	50
12" × 10"	13	×	50
10" × 8"	2	×	50
6½" × 8½"	6	×	50
6¼" × 4¾"	18	×	50

ஒளி ஊடுருவாத வகையில் அமைந்த படச்சுருள்

15" × 12"	18	×	50
12" × 10"	38	×	50
10" × 8'	17	×	50
6½" × 8½"	48	×	50

இரசாயனங்கள்

ஃபிக்ஸர்	9 பாக்கெட்டுக்கள்
டெவலெப்பர்	36 பாக்கெட்டுக்கள்

இந்துஸ்தான் போட்டோ பிலிம் கம்பெனியிடமிருந்து எக்ஸ்ரே பிலிம்கள் பெறப்படுவதில் தடைகள் இருந்தால் எக்ஸ்ரே பிலிம்கள் ஒப்பந்தப் புள்ளி முறையில் வேறு நிறுவனங்களிடமிருந்து வாங்கிக் கொள்ள மருத்துவமனைத் தலைவர்கள் மருத்துவ கல்வி இயக்குநரால் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர். எனவே எக்ஸ்ரே பிலிம்களுக்கு தட்டுப்பாடு எதுவும் இல்லை.

இணைப்பு III

(593 ஆம் பக்கத்தில் இனம் 4-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

முன்னுரை

தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டம் 1958, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் அமைக்கவும் அவைகளில் பின்தங்கிய கிராமங்களில் அரசியல், பொருளாதார சமூக நிலைகளை வலுவடையச் செய்யவும் உதவியது. தமிழ் நாட்டில் உள்ள 378 ஊராட்சி ஒன்றியங்களில் 12,632 ஊராட்சிகளும், 606 பேரூராட்சிகளும், 13 ஊராட்சிநகரியங்களும் உள்ளன. ஊராட்சி ஒன்றியங்கள் அந்தப் பகுதிகளில் சமுதாய வளர்ச்சி திட்டங்களை அமுல்படுத்தப்பட வேண்டிய நிர்வாக உள்ளமைப்புகளைக் கொண்டதாகும். கிராமப்புறத்தில் இருந்து நகரங்களுக்குச் செல்லும் மக்களையும், நகர மோகத்தினை தவிர்க்கவும், தீவிர பொருளாதார வளர்ச்சி திட்டங்களை அமல்படுத்துவதன் மூலமே கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பினை அதிகரிக்கச் செய்து அக்கிராமங்களை தன்னிறைவும் தன்னம்பிக்கையும் உடையனவாக மாற்ற முடியும்

ஊரக வளர்ச்சி 1.

ஊரக வளர்ச்சி இயக்ககம்.

(அ) உடமை அமைப்பு வளர்ச்சி திட்டங்கள்.

1. தன்னிறைவுத் திட்டம்.

கிராமங்களில் தேவையான அடிப்படை வசதிகளாள குடிநீர், சாலை, பள்ளிக் கட்டிடம் ஆகியவைகளை அமைத்து அதனுடைய சமூக பொருளாதார வளர்ச்சியினை விரைவு படுத்த அரசினரால் கொண்டு வரப்பட்ட திட்டம் இத் தன்னிறைவுத் திட்டமாகும்.

அடிப்படை வசதிகள் எண்ணற்றவாயினும் கிராமங்களின் உடனடியான தேவை என்ன என்பதையும் நிதி வசதியினையும் கருத்திற்கொண்டு கீழ்க்கண்ட பணிகள் இத்திட்டத்தின் கீழ் செயலாக்கப்படுகின்றன :—

1. பாதுகாக்கப்பட்ட குடிநீர்.
2. இணைப்புச் சாலைகள்.
3. சிறுபாலங்கள்.
4. ஆதிதிராவிடர் குடியிருப்பிலிருந்து மயானம் செல்லும் சாலை வசதி.
5. சிறுபாசன வசதி மேம்பாடு.
6. ஊரக மருந்தகங்கள்.
7. தாய் சேய் நல விடுதிகள்.
8. பள்ளிக் கட்டிடங்கள்.
9. ஆதிதிராவிடர்களுக்கான வீடுகள்.

தன்னிறைவுத் திட்டம் ஊராட்சி ஒன்றியங்களில் மூன்று கட்டங்களாக செயல்படுத்தப்படுகிறது:

முதற் கட்டம்	.. ..	69 வட்டாரங்கள்
இரண்டாம் கட்டம்	..	150 வட்டாரங்கள்
மூன்றாம் கட்டம்	..	159 வட்டாரங்கள்
		378 வட்டாரங்கள்

1980–81-ல் முதற்கட்டமாக முடிக்கப்பட்ட பணிகள் கீழே கொடுக்கப்பட்டு உள்ளன :

பணிகளின் வகை. (1)	செலவினம். (2) (ரூபாய் இலட்சத்தில்.)	சாதனை. (3)
1. குடிநீர் வழங்கல்	1,807	2300
2. இணைப்புச் சாலைகள் ..	12,39.70	6,590.96 கி.மீ.
3. சிறுபாலங்கள்	350.86	3,044
4. ஆதிதிராவிடர் குடியிருப்பிலிருந்து மயானம் செல்லும் சாலை வசதி.	79.89	927.71 கி.மீ.
5. சிறுபாசன வசதி மேம்பாடு	68.67	1,023
6. ஊரக மருந்தகங்கள்	47.43	82
7. தாய்சேய் நல விடுதிகள் ..	118.95	237
8. பள்ளிக் கட்டிடங்கள் ..	487.45	949
9. ஆதிதிராவிடர்களுக்கான வீடுகள்	302.61	10,116

இரண்டாம் கட்ட தன்னிறைவுத் திட்டத்தின் (1981–82) கீழ் எடுத்துக்கொண்ட பணிகளும், சாதனைகளும், நிதி, செயல்திறன் இலக்கு ஆகியவைகள் கீழே தரப்பட்டுள்ளன :—

பணிகளின் வகை.	நிதி.		செயல்திறன் இலக்கு.	
	மதிப்பீடு.	செலவினம்.	மதிப்பீடு.	31–1–1982 வரை சாதனை.
(1)	(2)	(3)	(4)	(5)
	(ரூபாய் இலட்சத்தில்)			
1. குடிநீர் வழங்கல்	2,105.00	1366 (குடியிருப்புகள்)	5922	3080
2. இணைப்புச் சாலைகள் ..	2,822.55	1,833.68	11,510.78 கி.மீ.	6,288.22 கி.மீ
3. ஆதிதிராவிடர் குடியிருப்பிலிருந்து மயானம் செல்லும் சாலை வசதி.	56.10	35.64	980.65	659.23
4. சிறுபாலங்கள்	1,441.38	11,57.42	11,785	7346
5. சிறுபாசன வசதி மேம்பாடுகள்	53,75	33.70	609	435
6. ஊரக மருந்தகங்கள்	112.95	74.26	170	26
7. தாய் சேய் நல விடுதிகள் ..	273.90	196.16	490	63
8. பள்ளிக் கட்டிடங்கள்	954.56	7[illegible]1.22	1,793	566
9 ஆதிதிராவிடர்களுக்கான வீடுகள்	450	338.28	15,000	10966

1982–83 ஆம் ஆண்டில் மூன்றாவது கட்டமாக இத்திட்டம் 159 ஊராட்சி ஒன்றியங்களில் ரூ. 97 கோடி மதிப்பீட்டில் கீழ்க்கண்ட பணிகளை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது :

பணிகளின் வகை.	செயல்திறன் இலக்கு.	நிதி மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்.)
(1)	(2)	(3)
1. குடிநீர் வழங்கல்	6336	9,700
2. இணைப்புச் சாலைகள்	13012 கி.மீ.	
8. சிறுபாலங்கள்	12128	
4. ஆதிதிராவிடர் குடியிருப்பிலிருந்து மயானம் செல்லும் சாலை வசதி.	2281 கி.மீ.	
5. சிறு பாசன வசதி மேம்பாடு ..	8023	
6. ஊரக மருந்தகங்கள்	192	
7. தாய்சேய நல விடுதிகள்	539	
8. பள்ளிக் கட்டிடங்கள்	3457	
9. ஆதிதிராவிடர்களுக்கான வீடுகள்	20000	

2. தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் :

இம்மாநிலத்தில் 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் செயற்படுத்தப்பட்டு வந்த மத்திய அரசின் திட்டமான வேலைக்கு உணவு திட்டம் 1980 அக்டோபர் திங்கள் முதல், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் என மத்திய அரசின் திட்டமாக மாற்றி அமைக்கப்பட்டது. இத்திட்டத்தின் குறிக்கோள்களாவன:

1. ஊரகப் பகுதிகளில் வேலை வாய்ப்பு இல்லாதவர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்தல்.

2. நிலையான சமுதாய உடைமைகளை உருவாக்கி அதன் மூலம் ஊரகப் பொருளாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் ஊரக ஏழை மக்களின் வருவாய் நிலையை உயர்த்துதல்.

3. ஊரக மக்களின் சத்துணவு நிலையங்களை மேம்படுத்தி வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்.

[1982 மார்ச் 29

இம்மாநிலத்தில் உள்ள 378 ஊராட்சி ஒன்றியங்களிலும் இத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படும் பணிகளின் வகைகளாவன :

1. சிறிய நீர்ப்பாசன பணிகள் (கால்வாய்கள், குளங்கள், கிணறுகள் முதலியன).

2. வெள்ளத் தடுப்பு மற்றும் கழிவு நீர் கால்வாய்கள்.

3. மண், நீர்வளப் பாதுகாப்பு.

4. வன மேம்பாடு, சமுதாயக் காடுகள் வளர்த்தல்.

5. ஊரக சாலைகள்.

6. தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்களுக்கு நேரடியாகப் பயனளிக்கும் திட்டங்கள்.

7. பள்ளிக்கட்டிடங்கள், ஊராட்சி அலுவலகக் கட்டிடங்கள், சமுதாயக் கூடங்கள், பள்ளி ஆசிரியை குடியிருப்புகள், தாய் சேய் நல விடுதிகள், போரடிக்கும் களங்கள் முதலியன.

ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் வேலையாட்களுக்குத் தரும் ஊதியம் கீழ்க்கண்டவாறு கொடுக்கப்படுகிறது :

1 கிலோ அரிசி 1 ஆளுக்கு 1 நாளைக்கு	..	ரூ. 1.75
ஊதியப் பகுதி (மாநில அரசுப் பங்கு)	..	ரூ. 1.75
ஊதியப் பகுதி (மத்திய அரசுப் பங்கு)	..	ரூ. 3.50
மொத்தம்	..	ரூ. 7.00

இவ்வூதியம் மாநிலத்தில் ஆண், பெண் வேறுபாடின்றி எல்லோருக்கும் தரப்படுகிறது. இத்திட்டத்திற்கான அரிசி மற்றும் நிதி ஒதுக்கீடும், செலவினங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

வருடம்	அரிசி		ஊதியம்		தளவாடங்கள்	
	ஒதுக்கீடு	செலவினம்.	ஒதுக்கீடு	செலவினம்.	ஒதுக்கீடு	செலவினம்.
			(ரூபாய் லட்சங்களில்)		(ரூபாய் லட்சங்களில்)	
1979-80	73,000 (மெட்ரிக் டன்)	58,232	..	..	..	..
1980-81	60,000	47,378	186.50	186.50	873	575.50
1981-82	50,246‡	28,530	2220.00*	1945.62*	..	..

1982 மார்ச் 29]

(‡) முந்தைய ஆண்டு அரிசித் தொகை மீதத்தையும் இவ்வாண்டு தொகையையும் சேர்த்துக் கணக்கிடப்பட்டுள்ளது.

(*) ஊதியத் தொகையும் தளவாடத் தொகையும் சேர்ந்தது.

இத்திட்டத்தின்கீழ் சாதனங்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

		1979-80	1980-81	1981-82
1. எடுக்கப்பட்ட பணிகள்	..	42,390	38,226	44,372
2. முடிக்கப்பட்ட பணிகள்	..	32,9 4	28,513	33,983
3. முடிக்கப்பட்ட பணிகளின் மதிப்பு	..	920.90 இலட்சங்கள்	872.30 இலட்சங்கள்	2346.52 இலட்சங்கள்
4. உருவாக்கப்பட்ட மனித உழைப்பு நாட்கள்.	..	142.04 இலட்சங்கள்	146.75 இலட்சங்கள்	335.21 இலட்சங்கள்

1981—82 ஆண்டிலிருந்து 31—12—1981 நாள் வரையில் உள்ள செயல் சாதனைகள் :

சிறிய நீர்ப்பாசனப் பணிகள்	..	6,799.85 ஹெக்டேர்கள்
வெள்ளத்தடுப்பு மற்றும் கழிவு நீர்க் கால்வாய்கள்		374.34 ஹெக்டேர்கள்
ஊரக சாலைகள் மற்றும் இணைப்புச் சாலைகள்.		9,472.00 கி.மீ.
பள்ளிக் கட்டிடங்கள், ஊராட்சி அலுவலகக் கட்டிடங்கள் முதலியன.		4,031

3 வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் :

18 வயதிற்கு மேற்பட்ட உழைக்கும் தகுதி பெற்ற ஆண் பெண் அனைவருக்கும் வேலை வாய்ப்பு அளிப்பதற்காக 1979-ம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. கிராமப்புற ஆண்களும் பெண்களும் இத்திட்டத்தின் கீழ் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். 1981-82-லிருந்து ஜனவரி 1982 வரை வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 4,54,602 ஆகும். அதில் 3,31,111 பேருக்கு வேலை கொடுக்கப்பட்டது. மிகவும் அதிகமான பேர் பெயரைப் பதிவு செய்திருப்பினும் பலர்

இத்திட்டத்தின் கீழ் வேலைக்கு வருவதில்லை, ஏனெனில் அவர்கள் உடல் உழைப்புப் பணிகளுக்கு மாறாக எழுத்துப் பணிகளையே விரும்புகின்றனர்.

தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் சாதாரணமாக கூலி வேலையை மேற்கொள்பவருக்குப் பயன்படுகிறது 1981-82 ஆம் ஆண்டு முதல், கூலிக்காகப் பயன்படுத்தப்பட்ட அரிசி 28,530 மெட்ரிக் டன்களாகும்.

4. சாண எரிவாயுத் திட்டம் :

ஆறாம் ஐந்தாண்டு திட்ட காலத்தில் சாண எரிவாயுத் திட்டத்தை இந்திய அரசு மத்திய அரசுத் திட்டமாக செயல்படுத்த திட்டம் தீட்டியுள்ளது. திட்டக் காலத்தில் 4 லட்சம் சாண எரிவாயு அமைப்புகள் நிறுவப்பட வேண்டும். இத்திட்டத்தைச் செயல்படுத்த மாநில அரசுக்கு ஒப்புதல் அளித்து நடப்பு ஆண்டில் நாடு முழுவதும் 35,000 அமைப்புகளை ஏற்படுத்த வேண்டும். அவற்றில் தமிழக அரசு 3,500 பிரிவுகளை அமைக்க வேண்டியுள்ளது.

இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான எல்லா செலவினங்களையும் மத்திய அரசே ஏற்கிறது. அவற்றின் விவரம் கீழே தரப்பட்டுள்ளது :—

மத்திய அரசு மானியம்

சாண எரிவாயு அமைப்பின் கொள்ளளவு (கன மீட்டரில்),	ஆதி திராவிடர் மற்றும் மலைவாழ் இனத்தவர்	சிறு மற்றும் குறு விவசாயிகள். (ரூபாய்)-	மற்றவர்கள்
2	1,500	1,000	650
3	1,950	1,800	1,000
4	2,300	1,500	1,200
5	2,900	1,900	1,500

அமைப்புகளுக்காக விண்ணப்பங்கள் சேகரிக்கும் ஊர்நல அலுவலர்களுக்கு ரூ. 30 மானியம் அளிக்கப்படுகிறது. 3,500 அமைப்புகள் என்ற இலக்கினை அடைவதற்காக ஒவ்வொரு வட்டாரத்திலும் 25 அமைப்புகள் என்ற விதம் ஒரு இலக்கினை செயல்படுத்துமாறு உடனே அதற்கான விண்ணப்பங்களை சேகரித்து தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் உதவி பெற்று பரிசீலனை செய்யுமாறு ஆணைகள் இடப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் வெற்றி வங்கிகள் கடன் உதவி அளிப்பதில் காட்டும் ஒத்துழைப்பை பொறுத்து உள்ளது.

மாவட்ட ஆட்சியாளர்கள் இதுவரை 1924 விண்ணப்பங்கள் பெற்றும் 384 சாண எரிவாயு அமைப்புகளை அமைத்து உள்ளனர். மத்திய அரசு முதல் தவணையாக ரூ. 10.92 இலட்சங்கள் மானியம் அளித்துள்ளது. இந்த மானியத்தை செலவழித்த பின் மத்திய அரசு மேலும் நிதி உதவி அளிக்கும்.

5. சாலைகள் :

சமுதாய வளர்ச்சிக்கு சாலை வசதிகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. தமிழ் நாட்டில் 38,047 கிலோ மீட்டர் நீளம் இணைப்புச் சாலைகள் உள்ளன. இவற்றில் 5,373 கிலோ மீட்டர் மண் சாலைகளாகும். மற்றும் 13,473 கிலோ மீட்டர் சல்லி பரப்பப்பட்ட சாலைகளாகும். இந்த இணைப்புச் சாலைகள் மேம்பாட்டிற்காக தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

இணைப்புச் சாலைகளுக்காக 1981-82 ஆம் ஆண்டு தன்னிறைவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ. 28.00 கோடியாகும். மூன்றாம் கட்டத்தில் மேலும் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். 1982-83 ஆம் ஆண்டு தன்னிறைவுத் திட்டம் செயல்படாத ஊராட்சி ஒன்றியங்களில் 500 கிலோ மீட்டர் இணைப்புச் சாலைகளை மேம்படுத்த ரூபாய் 100.00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

6. பள்ளிக் கட்டிடங்கள் :

ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் 28,784 பள்ளிகள் உள்ளன. தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 2,000 பள்ளிக் கட்டிடங்களும் 949 பள்ளிக் கட்டிடங்கள் தன்னிறைவுத் திட்டத்தின் கீழும் ரூபாய் 17.36 கோடி மதிப்பீட்டில் கட்டப்படுகின்றன. பள்ளிக் கட்டிட வேலைகள் இம்மாநிலத்தில் எடுத்துச் செயல்பட்ட திட்டங்களில் ஒரு மாபெரும் திட்டமாகும்.

7 குடிநீர் வழங்குதல் :

1982-83 ஆம் ஆண்டு ரூபாய் 150.00 லட்சங்கள் கிராம வேலைத் திட்டத்தின்கீழ் கிராமத்தில் குடிநீர் வழங்குவதற்குகாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகை குடிநீர் வழங்குவதற்காக மட்டுமின்றி, குடிநீர் வழங்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட மின் தொடர்பு கட்டணத்தை கட்டுவதற்கும் பயன்படும். மேலும் புதிய குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்குவதற்கும் பயன்படும்.

தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்திற்கு வழங்கப்படும் தொகை இதில் சேராது.

கைப்பம்புகளின் பராமரிப்பு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து ஊராட்சி ஒன்றியத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. மெக்கானிக்குகளின் பணியமைப்பும் ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் கொணரப்பட்டுள்ளது.

8. ஊராட்சிகளுக்கு அலுவலகக் கட்டிடங்கள் :

அநேக ஊராட்சிகளுக்குச் சொந்தமாக அலுவலகக் கட்டிடங்கள் இல்லை. ஒவ்வொரு ஊராட்சிக்கும் சொந்தமான அலுவலகக் கட்டிடம் தேவைப்படுகிறது. எனவே ஊராட்சிகளுக்கு அலுவலகக் கட்டிடம் கட்டுவதற்கு முடிவு செய்யப்பட்டது. 1980—81 ஆம் ஆண்டு 41 ஊராட்சிகளுக்கு முதல் கட்டமாக அலுவலகக் கட்டிடம் கட்டுவதற்காக ரூபாய் 15 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. இதற்கான செலவினம் அரசு மானியம் மற்றும் ஊராட்சிகளின் பங்குத் தொகை மூலம் செலவிடப்படும். ஊராட்சிகளின் நிதி நிலையை அடிப்படையாகக் கொண்டு அவற்றின் பங்குத் தொகை நிர்மானிக்கப்படும். 1981—82 ஆம் ஆண்டின் தன்னிறைவுத் திட்டப் பகுதியிலுள்ள 50 ஊராட்சிகளுக்கு அலுவலகக் கட்டிடம் கட்டுவதற்கு ரூபாய் 15.00 இலட்சம் ஊராட்சிகளின் பங்குத் தொகையினை பொறுத்து அனுமதிக்கப்பட்டது. மகளிர் மன்றங்களுக்கான கட்டிடங்கள் இல்லாத ஊராட்சிகளில் மட்டுமே கட்டிடங்கள் கட்ட வேண்டும் என்பது முடிவெடுக்கப்பட்டுள்ளது. மேலும் 50 கட்டிடங்கள் கட்டுவதற்காக 1982-83 ஆம் ஆண்டு இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூபாய் 15.00 இலட்சமாகும்.

9. ஊராட்சி ஒன்றியங்களின் தலைமையிடங்களில் பணியாளர் குடியிருப்பு :

பெரும்பாலான கிராமப் புறங்களில் ஊராட்சி ஒன்றிய தலைமை இடங்களில் அமைந்துள்ள பகுதிகள் தனிப்பட்டவரின் வீடுகள் வாடகைக்கு கிடைப்பது மிகவும் அரிதாகவுள்ளதால் ஊராட்சி ஒன்றிய அலுவலர்களான ஆணையாளர் மற்றும் மேலாளர் போன்ற அலுவலர்கள் அருகிலுள்ள சிறு நகரங்களில் குடியிருக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. எல்லா ஊராட்சி ஒன்றிய தலைமையிடங்களிலும் பணியாளர்கள் குடியிருப்புகளை பல்வேறு கட்டங்களில் கட்டிமுடிக்க அரசு முடிவு செய்துள்ளது. 1981-82 ஆம் ஆண்டு 20 ஊராட்சி ஒன்றியங்களில் குடியிருப்புகள் கட்ட ரூபாய் 60.00 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1982-83 ஆம் ஆண்டு ரூபாய் 61.60 இலட்சம் மொத்த செலவில் 20 ஊராட்சி ஒன்றிய தலைமையிடங்களில் குடியிருப்பு வசதிகளை செய்து தர தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) உற்பத்தித் திட்டங்கள்.

1. வேளாண்மை, கால்நடைப் பாதுகாப்பு மற்றும் மீன் வளம்.

வேளாண்மை மற்றும் கால்நடை திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மற்றும் பயிற்சி மற்றும் பார்வை முறையில் எடுத்துக் கொள்ளப்படாத பணிகள் ஊராட்சி ஒன்றியங்களில் நிறைவேற்றப்படுகின்றன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு குறிப்பிட்ட தொகை வழங்கப்படும். அவ்வப்போது, இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான நெறி முறைகள் அளிக்கப்படும். 1982-83 ஆம் ஆண்டு ரூபாய் 60 லட்சம் பின்வருமாறு பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளது.

	(ரூபாய் இலட்சத்தில்)
(1) வேளாண்மை	38
(2) கால்நடை பராமரிப்பு	12
(3) மீன் வளம்	10

வேளாண்மை :

வேளாண்மை திட்டத்தின் கீழ் புதிய வேளாண்மை கிடங்கோ அல்லது துணைக்கிடங்கோ கட்டுவதற்காக ரூபாய் 21.60 லட்சம் மதிப்பீட்டில் வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. ரூபாய் 2.90 லட்சங்கள் முடிக்கப் பெறாத கட்டிட வேலைகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் ரூபாய் 3.46 லட்சம் களம் அமைப்பதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பட்டு உற்பத்திக்காக முசுக்கொட்டை செடிகளை வளர்த்தல் இதன்கீழ் எடுத்து கொள்ளப் பட்டுள்ளது. விவசாயிகளுக்கு பட்டு உற்பத்திக்காக 3 மாத பயிற்சி தரப்படுகிறது. அவர்களுக்கு உதவித்தொகையாக மாதமொன்றுக்கு ரூபாய் 150 அளிக்கப்படுகிறது.

கால்நடை பராமரிப்பு :

கால்நடை பராமரிப்பிற்காக ரூபாய் 12 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கால்நடை மருந்தகக் கட்டிடங்கள் கட்டவும் தற்போது உள்ள மருந்தக கட்டிடங்களை சீர்திருத்தவும் கால்நடை மருத்துவக் குடியிருப்புகள் கட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மீன் வளம் :

மீன் வளர்ச்சியில் தீவிர முன்னேற்றம் காண்பதற்காக குறிப்பிட்ட பகுதிகளில் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. கீழ்க்கண்ட மாவட்டங்கள் 1981-82 ஆம் ஆண்டு இதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

(1) செங்கற்பட்டு.

(2) கன்னியாகுமரி.

(3) தஞ்சாவூர்.

(4) மதுரை.

தக்க குளங்கள், ஏரிகள் ஆகியவற்றை தேர்ந்தெடுத்து, மீன் வள ஆய்வாளர்கள் போன்ற வல்லுநர்களைக் கொண்டு மீன் வளத்தை மேம்படுத்துதல் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

(இ) நல்வாழ்வுத் திட்டங்கள்.

1. திருத்தி அமைக்கப்பட்ட ஊட்டச் சத்துணவுத் திட்டம் :

ஊட்ட சத்துணவுத் திட்டம் மத்திய அரசு மற்றும் "யூனி செப்" நிறுவனம் ஆகியவைகளின் உதவியோடு குழந்தைகள் மற்றும் கருவுற்ற பெண்களின் சத்துணவு நிலையை மேம்படுத்தவும் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் 75 ஒன்றியங்களில் ஆரம்பிக்கப்பட்டு அவைகளில் 48 ஒன்றியங்களில் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய 27 ஒன்றியங்களில் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத்திட்டம் மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்கு மாற்றப்பட்டு விட்டதால் சில மாறுதல்களோடு செயல்படுத்தப்படுகிறது. மேற்குறித்த 27 ஒன்றியங்கள் தவிர 10 புதிய ஒன்றியங்கள் 1981—82 ஆம் ஆண்டில் சேர்க்கப் பட்டுள்ளன.

திட்ட விவரங்கள் :

இத்திட்டத்தின் சிறப்பு அங்கங்கள் வருமாறு :

(1) சத்துணவுக் கல்வி.

(2) பயிற்சி.

(3) பொதுசுகாதாரம்.

சத்துணவுக் கல்வி திட்டத்தின்கீழ் கேர் உதவியுடன் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும் 30 குழந்தைக் காப்பகங்கள், அமைக்க வேண்டும். ஒவ்வொரு காப்பகத்திலும் 80 குழந்தைகளும் 40 தாய்மார்களும் சத்துணவு பெறுவர்.

கிராமப்புற மக்களிடையே மக்கள் நலம், சுகாதாரக் கல்வி, சத்துணவு ஆகியவற்றின் முக்கியத்துவத்தை உணர்த்தி அவர்களிடையே விழிப்புணர்ச்சியினை உண்டாக்க வேண்டி, சத்துணவுத் திட்டத்தின் கீழ், சத்துணவுத் திட்ட ஒன்றியத்தில் உள்ள 30 குழந்தைகள் காப்பகங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 60 தாய்மார்களுக்கு 10 முகாம்கள் அமைத்து இரண்டு நாட்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

பொது சுகாதார திட்டத்தின் கீழ் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் :—

(1) குழந்தைகள் காப்பகங்களில் உள்ள குழந்தைகள் அனைவரையும் தொற்று நோயிலிருந்து தடுத்தல்.

(2) வைட்டமின் மாத்திரைகள் குழந்தைகளுக்கும் மற்றும் கருவுற்ற தாய்மார்களுக்கும் சத்து குறையினை ஈடுசெய்யும் வகையில் வழங்குதல்.

(3) சத்துணவு மதிப்பீடு.

ஆரம்ப நல்வாழ்வு நிலையங்கள், குடும்ப நல்வாழ்வு நிலையங்கள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் மருத்துவ அதிகாரிகள் அனைவரும் இத்திட்டத்தின் பொது சுகாதார பணியின்கீழ் உள்ள வேலைகளை கவனிப்பார்கள்.

திருத்தி அமைக்கப்பட்ட ஊட்டச் சத்துணவுத் திட்டம் 6 வருட செயல் திட்ட கால அளவினை கொண்டதாகும். இதில் ஒரு ஆண்டு ஆரம்ப வேலையாண்டாகும். மீதமுள்ளவை நடைமுறை ஆண்டுகளாகக் கொள்ளப்படும். முன்னர் கூறியபடி திருத்திய ஊட்டச் சத்துணவுத் திட்டம் தற்போது 37 ஒன்றியங்களில் செயல்பட்டு வருகின்றன.

ஒன்றியங்களின் எண்ணிக்கை	37
குழந்தைகள் காப்பகங்களின் எண்ணிக்கை	507
பயன்பெறுவோர் :	
(அ) குழந்தைகள்	40,560
(ஆ) தாய்மார்கள்	20,280

[1982 மார்ச் 29

2. பள்ளி செல்லும் பருவத்திலுள்ள குழந்தைகளுக்கும்/கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் உணவு வழங்கும் திட்டம்.

குழந்தைகள் காப்பகங்களில் 120 பேர் என்ற விகிதத்தில் இம்மாநிலத்தில் 93 வட்டாரங்களில் அமைந்த 1,002 குழந்தைகள் காப்பகங்களில், பள்ளி செல்லும் பருவத்திலுள்ள குழந்தைகளுக்கும், கருவுற்ற தாய்மார்களுக்கும் தினமும் உணவு வழங்க இத்திட்டம் வகை செய்கிறது. 1,002 காப்பகங்கள் ஒவ்வொன்றின் மூலமும், பள்ளி செல்லும் பருவத்திலுள்ள 40 குழந்தைகளுக்கும், குழந்தை காப்பகத்தில் பதிவு செய்யப்படாத 40 குழந்தைகளுக்கும், கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் 40 பேர்களுக்கும், ஒருவருக்கு ஒரு நாளைக்கு 80 கிராம் பல்கர் கோதுமை மற்றும் 7 கிராம் எண்ணெய் என்ற விகிதத்தில் 'கேர்' நிறுவனம் இத்திட்டத்தின் கீழ் வழங்குகிறது. மேலும் இச் செலவுக்காக ஒருவருக்கு ரூபாய் 0.03 விதமும், பாலசேவிகை மற்றும் ஆயாக்களுக்கு கூடுதல் ஊதியமாக முறையே ரூபாய் 20 மற்றும் ரூபாய் 10 அளிக்கப்படுகிறது. 1980-81-ல் ரூபாய் 32.44 இலட்சம் செலவழிக்கப்பட்டது. 1981-82-ல் இத்திட்டத்திற்கான மமதிப்பீடு ரூபாய் 19 00 லட்சம். இத்திட்டத்தின் கீழ் பயன் பெறும் குழந்தைகளின் எண்ணிக்கை 43,420, தாய்மார்களின் எண்ணிக்கை 21,710.

(உ) சுகாதாரத் திட்டங்கள்.

1. ஆரம்ப நல்வாழ்வு நிலையங்கள் :

மாநிலத்தில் மொத்தம் 382 நல்வாழ்வு நிலையங்கள் சமுதாயத்திற்கு நோய் தடுப்புப் பணிகளையும் நோய் நீக்கும் பணிகளையும் செயல்படுத்துகின்றன.

தாய் சேய் நல விடுதிகள் :

தாய்சேய் நலப் பணிகள் மேம்படுத்துவது ஊராட்சி ஒன்றியங்களின் கடமையாகும். தாய் சேய் நல விடுதிகளின் பராமரிப்பு செலவில் மூன்றில் இரண்டு பங்கு அரசால் உதவித் தொகையாக அளிக்கப்படுகிறது. 1982—83-ல் ஒதுக்கப்பட்டுள்ள நிதி ரூபாய் 115.00 இலட்சம்.

ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள் :

ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை அமைத்து பராமரிக்கும் பணியும் ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பாகும். மேலும் ஊராட்சிகளில் கிராமப்புற மருந்தகங்கள் இயங்கி வருகின்றன. ஆண்டொன்றுக்கு ரூபாய் 5,400-க்கு மேற்படாமல் பராமரிக்கப்படும் ஒரு மருந்தகத்தின் செலவில் 50 சத

1982 மார்ச் 29]

விகிதத்தை அரசிடமிருந்து நிதி உதவியாக ஊராட்சி ஒன்றியங்கள் பெற்றுக் கொள்ளலாம். 1982—83-ல் ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூபாய் 5.00 இலட்சம்.

குடும்ப நல்வாழ்வு :

ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் குடும்ப நல்வாழ்வுத் திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பு ஊராட்சி ஒன்றியங்களுக்கு உரித்தானது. தமிழகத்தில் உள்ள 378 ஊராட்சி ஒன்றியங்களிலும் சீரமைக்கப்பட்ட குடும்ப நல்வாழ்வு திட்டங்கள் கொண்டு வரப்பட்டது.

2. கிராம மகளிர்க்கு கழிப்பிடங்கள் கட்டுதல் :

வேற்றப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 138 கழிப்பிடங்கள் கட்டப்பட்டன.

ஒரு வட்டாரத்திற்கு இரண்டு என்ற விகிதத்தில் 1980—81 ஆம் ஆண்டு முதற்சட்டமாக தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப்பட்ட 69 ஒன்றியங்களில், பெண்களுக்காக கழிப்பிடங்கள் கட்டும் முன்னோடித் திட்டம் நிறை

இரண்டாவது கட்டமாகத் தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வரும் 150 ஒன்றியங்களில் இரண்டு கிராமங்களுக்கும், முதற்கட்ட இவைகளின் மொத்த மதிப்பு ரூபாய் 8.74 இலட்சம்.

தன்னிறைவுத் திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட 69 ஒன்றியங்களில் மேலும் இரண்டு கிராமங்களுக்கும் இத் திட்டத்தை விரிவுபடுத்துவது ஆய்வில் உள்ளது. பெண்களுக்கு மட்டும் கழிப்பிட வசதிகளை அளித்து, ஆண்களும், குழந்தைகளும் திறந்த வெளிகளை கழிப்பிடங்களாகப் பயன்படுத்துவது இத்திட்டத்தினை முழுமைப்படுத்துவது ஆகாது என்று இத் திட்டத்தை ஆய்வு செய்த திட்டக் குழு, ஆண்களுக்கும் கழிப்பிடங்கள் கட்டப்பட வேண்டுமென ஆலோசனை கூறியது. அதற்கிணங்க நான்கு அறை ஆண்களுக்கும், இரண்டு அறை பெண்களுக்கும், ஆக ஆறு அறைகள் கொண்ட, சிமெண்ட் கூரை அமைக்கப்பட்ட கழிப்பிடங்கள், தமிழ்நாட்டிலுள்ள 16,000 கிராமங்களில் அமைக்கப்படுவதற்கான திட்டம் உருவாக்கப்பட்டது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பு ரூபாய் 22.56 கோடி. இது பரிசீலனையில் உள்ளது.

3. பட்டினிச் சாவு தடுப்புத் திட்டம் :

பட்டினிச் சாவுகளைத் தடுக்கும் நோக்கத்துடன் பட்டினிச் சாவு தடுப்புத் திட்டம் ஒன்றை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டம் 13—12—80 முதல் நடைமுறைக்கு வந்தது.

இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து 437 நபர்களுக்கு ரூபாய் 43,700 வழங்கப்பட்டுள்ளது.

ஊ. பயிற்சித் திட்டங்கள் :

தே. கல்லுப்பட்டி, பட்டுக்கோட்டை, சத்திய விஜய நகரம் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய இடங்களில் நான்கு கிராம விரிவாக்க பயிற்சி நிலையங்கள் செயல்படுகின்றன. இவை தவிர பவானிசாகரில் மாநில கிராம வளர்ச்சி பயிற்சி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. மேற்குறித்த ஐந்து நிலையங்களில் கைவினை பகுதிகள் உள்ளன. தே. கல்லுப்பட்டி மற்றும் சத்தியவிஜய நகர பயிற்சி நிலையங்களில் மனை இயல் பிரிவுகள் உள்ளன.

பவானிசாகரில் அமைந்துள்ள பயிற்சி நிலையத்தில் ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு இரண்டு மாத பயிற்சியும், சமூக நல மற்றும் கல்வி விரிவாக்க அலுவலர்களுக்கு 30 நாள் சிறப்புப் பயிற்சியும், மாவட்ட அளவிலான வளர்ச்சிப் பணி அதிகாரிகளுக்கு 15 நாள் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

கிராம விரிவாக்க பயிற்சி நிலையங்களில் புதிதாக ஊர்நல அலுவலராக பதவி ஏற்க இருப்போருக்கு இரண்டு ஆண்டுகால பணி முன் பயிற்சியும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊர்நல அலுவலர்களுக்கு தீவிர வேளாண்மை பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இப்பயிற்சிகளைத் தவிர ஊட்டச் சத்துணவுத் திட்டம் பற்றிய பயிற்சியும் அளிக்கப்படுகிறது. மனை இயல் பிரிவுகளில் பெண் அலுவலர்களுக்கும், அலுவலர்கள் அல்லாத பிறருக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. இவை தவிர மத்திய அரசு வகுத்துள்ள வேலைகளுக்காக கிராமப்புற இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகின்றன. 1,394 இளைஞர்கள் ஏற்கெனவே பயிற்சி பெற்றுள்ளனர். தற்போது 685. கிராமப்புற இளைஞர்கள் பயிற்சி பெறுகின்றனர்

1982-83-ல் ஏற்கெனவே உள்ள தொழில்கள் அல்லது கீழ்க்கண்ட தொழில்கள் கிராமப்புற இளைஞர்களுக்கு பயிற்சி அளிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளன :—

1. ஊர்திகளின் இயந்திர நுட்பம்.
2. வானொலிப் பெட்டி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகளின் தொழில் நுட்பம்.

தற்போது பயிற்சிகால அளவு மூன்று மாதங்களிலிருந்து ஆறுமாத அளவாகும். பயிற்சிகளுக்கான கால அளவினை தேவையான பயிற்சிகளில் ஆறு மாதங்களிலிருந்து 12 மாதங்களாக மாற்ற திட்டமிடப்பட்டுள்ளது.

(எ) மற்ற திட்டங்கள் :

ஜீப் வழங்குதல்

ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றை மேற்பார்வையிடும் பணி கோட்ட வளர்ச்சி அலுவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தம் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளுக்கு அடிக்கடி சென்று தம் பணியை அவர்கள் திறம்பட ஆற்றியாக வேண்டும். தற்பொழுது அவர்கள் தங்கள் நிர்வாகத்திற்கு உட்பட்ட ஊராட்சி ஒன்றிய ஜீப்புகளை பயன்படுத்தி வருகிறார்கள். கிராமப் புறங்களில் அடிப்படை தேவைகளை நிறைவு செய்து அனைத்துத் துறைகளிலும், கிராமங்களை முன்னேற்றம் அடையச் செய்யும் சிறப்புத் திட்டமான 'தன்னிறைவுத் திட்டம்' தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் போன்ற மாபெரும் திட்டங்களையும் மற்றும் செயல்பட்டு வரும் பல திட்டங்களையும் திறம்பட நிறைவேற்ற கோட்ட வளர்ச்சி அலுவலர்களுக்கென படிப்படியாக ஜீப் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

1981—82-ம் ஆண்டில் கோட்ட வளர்ச்சி அலுவலர்க்கென 10 ஜீப்புகள் வாங்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. இப்பொழுது மீதமுள்ள 12 கோட்ட வளர்ச்சி அலுவலர்களுக்கு ஜீப்புகள் வழங்கப்பட வேண்டும். 1982—83 ஆம் ஆண்டில் 10 கோட்ட வளர்ச்சி அலுவலர்களுக்கு ஜீப்புகள் ரூபாய் 6.90 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

2. தமிழ்நாடு ஊரக சீரமைப்பு சங்கம் :

வருமான வரி செலுத்துவோர் அளிக்கும் நன்கொடைகளைக் கொண்டு கிராமப்புற திட்டங்களை நிறைவேற்றுவதற்கு "தாரா" என்னும் ஒரு சங்கத்தை அரசு பதிவு செய்துள்ளது. ஊர்ப்புற முன்னேற்ற திட்டங்களுக்கு வருமான வரி செலுத்தும் வர்த்தக மற்றும் தொழில் நிறுவனங்கள், தாராள மனப்பான்மை கொண்ட தனிப்பட்டவர்கள் அளிக்கும் நன்கொடைகளுக்கு முழு வருமான வரி சலுகை அளிக்கப்படுகிறது. இச்சங்கம் கிராமங்களில் பல நல்ல பணிகளை நிறைவேற்ற இருக்கிறது. இப்பணிகள் கிராமங்களின்

தேவைகளைப் பூர்த்தி செய்யப் பயன்படும். 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள்வரை வசூலிக்கப்பட்ட மொத்தத் தொகை கீழ்வருமாறு :—

வருமான வரி செலுத்துவோர் அளித்த நன்கொடையும் மேற்கொள்ளப்பட்ட வேலைகளும் கீழ்வருமாறு :—

	வேலைகள்.	நன்கொடை. (ரூபாய் இலட்சங்களில்.)
(1)	(2)	(3)
வருமான வரிச்சட்டப் பிரிவு 35 சி. சி. கீழ்வரிச் சலுகை.	12	11.75
வருமான வரிச்சட்டப் பிரிவு 35 சி. சி. ஏ. கீழ் வரிச் சலுகை		
(1) தனிப்பட்ட நிறுவனங்கள்	17	231.98
(2) தாரா மூலம்	11	41.79
மொத்தம்	40	285.52

3. **வானொலி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகள் :**

வேளாண்மை குடும்ப நல வாழ்வு மற்றும் அனைத்துத் துறைகளிலும் ஏற்பட்டுள்ள அண்மைக்கால அறிவியல் கண்டு பிடிப்புகளை, முறைகளை கிராமப்புற மக்கள் அறிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக கிராமங்களில் 47,937 வானொலிப் பெட்டிகளும், 498 தொலைக் காட்சிப் பெட்டிகளும் நிறுவப்பட்டு தமிழ்நாடு உள்ளாட்சிகளில் வானொலி மற்றும் தொலைக் காட்சி பராமரிப்பு நிறுவனத்தால், ஊரக வளர்ச்சி இயக்குநரின் கீழுள்ள தலைமை வானொலி அதிகாரியால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. ஆதி திராவிட குடியிருப்புகள் அனைத்திற்கும் படிப்படியாக வானொலிப் பெட்டிகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

4. **பள்ளிகள் :**

தற்போது ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் மொத்தம் 28,784 பள்ளிகள் இயங்கி வருகின்றன. 1981—82 ஆம் ஆண்டில், ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாக மாற்றப்பட்டு, பள்ளி நிர்வாகம் முழுவதும் கல்வித் துறைக்கு மாற்றப்பட்டுவிட்டது. பள்ளிகளை நடத்தி மதிய உணவுத் திட்டத்தை செயற்படுத்தும் பொறுப்பு தற்போது கல்வித் துறையைச் சார்ந்ததாகும்.

பேரூராட்சிகளின் இயக்கம் :

பேரூராட்சிகள் :

இம்மாநிலத்தில் 606 பேரூராட்சிகள் மற்றும் 13 நகரியக் குழுக்கள் இருக்கின்றன. இவைகளில் தமிழகத்தின் மக்கள் தொகையில் சுமார் ஐந்தில் ஒரு பாகம் வசிக்கின்றனர். கடந்த 30 வருடங்களாக இப்பேரூராட்சிகள் முன்னேற்றமடையவில்லை. இப்பேரூராட்சிகளின் வருமானமும் பல வருடங்களாக அபிவிருத்தி அடையவில்லை. ஆயினும் பணியாளர் சம்பளச்செலவு மூன்றாம் ஊதியக் குழுவின் பரிந்துரையை அமல் படுத்தியதால் மிகவும் அதிகமாக உயர்ந்துள்ளது. பாதிக்கும் மேற்பட்ட பேரூராட்சிகள் தங்கள் வருமானத்தில் பாதிக்கு மேல் பணியாளர்களுக்கான ஊதிய வகைகளுக்கே செலவிடுகின்றன. நிதி பற்றாக்குறை காரணமாக பல பேரூராட்சிகள் எவ்வித புதிய திட்டங்களையும் அமல்படுத்த முடியவில்லை. இந்நிலையில் பேரூராட்சிகளையும் நகரியக் குழுக்களையும் அபிவிருத்தி செய்வதற்காக அரசு அதற்கெனவே ஒரு தனி இயக்ககத்தை நிறுவியுள்ளது. மேலும் ஊராட்சி ஒன்றியங்களில் தற்போது செயல்பட்டு வரும் தன்னிறைவுத் திட்டத்தைப் போல் பேரூராட்சிகளிலும் 1982—83 ஆம் ஆண்டில் செயல்படுத்த முடிவெடுத்துள்ளது. இதற்கான திட்டங்கள் படிப்படியாக செயல்படுத்தப்படும்.

நகர மேம்பாடு.

நகராட்சிகளின் இயக்ககம்.

1. **நகராட்சி நிர்வாகம் :**

தற்போது 98 நகராட்சிகள் மற்றும் 8 நகரியக் குழுக்கள் இம்மாநிலத்தில் உள்ளன. அவைகளாவன :—

நிலை.	நகராட்சிகள்.	நகரியக் குழுக்கள்
(1)	(2)	(3)
சிறப்பு நிலை	4	—
தேர்வு நிலை	9	3
முதல் நிலை	29	3
இரண்டாம் நிலை	33	2
மூன்றாம் நிலை	23	—
மொத்தம்	98	8

[1982 மார்ச் 29

வளர்ந்து வரும் நகரப் பிரச்சினைகள் மற்றும் இதர பணிகள் அதிகரித்துள்ளதன் காரணமாக நகராட்சி இயக்ககத்தில் நிதி, கல்வி, பொறியியல் பிரிவுகள் தோற்றுவிக்கப்பட்டன. மேலும் நகராட்சி ஆணையர்களுக்கும், பணியாளர்களுக்கும் பயிற்சி தருவதன் மூலம் அவர்களின் திறமையை அதிகரிக்கச் செய்து, உள்ளாட்சி நிறுவனங்களின் நிர்வாகத்தை செம்மை செய்து "தமிழ்நாடு நகர்ப்புறக் கல்வி நிறுவனம்" என்ற ஒரு பயிற்சி நிறுவனத்தை ஏற்படுத்தியுள்ளது. இப்பயிற்சி வகுப்புகள் 1982 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 18 ஆம் நாளில் ஆரம்பிக்கப்பட்டது. இந்தப் பயிற்சி நிலையத்தின் நிர்வாகம் ஒரு இயக்குநரால் நிர்வகிக்கப்படுகிறது. எதிர் காலத்தில் இந்த பயிற்சி நிலையம் ஆராய்ச்சி நிலையமாகவும் புள்ளியியல் நிலையமாகவும் விளங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

2. நகராட்சிகளின் சாலைகளை செப்பனிடுதலும் வடிகால்கள் அமைத்தலும் :

106 நகராட்சிகள் மற்றும் நகரியங்களில் 5,488 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் பராமரிக்கப்படுகின்றன. கடும் மழை, மற்றும் வெள்ளத்தால் சாலைகள் மிகவும் சேதமடைந்து விடுகின்றன. நலிவுற்ற நிதி நிலைமையால், நகராட்சிகள் சேதமடைந்த சாலைகளை செப்பனிட இயலவில்லை. சுங்கத் தீர்வை மூலம் நகராட்சிகளுக்கு கணிசமான தொகை கிடைத்து வந்தது நிறுத்தப்பட்டு தற்போது ஈட்டுத் தொகை வழங்கப்படுகிறது. 1939 ஆம் ஆண்டு வாக்கில் விதிக்கப்பட்ட இந்த ஈட்டுத் தொகை, சாலைகள் பராமரிப்புக்கு போதுமானதாக இல்லாததால், கூடுதலான போக்குவரத்துக் காரணமாக சாலைகளின் நிலைமை மேலும் சீர்கேடடைந்து வருகிறது. நிதி நிலைமை சரியில்லாத நகராட்சிகளுக்கு சாலைகளை செப்பனிடவும், வடிகால்கள் கட்டவும் 1982-83 ஆம் ஆண்டு ரூபாய் 20 இலட்சம் நிதியுதவி செய்ய அரசு முடிவெடுத்துள்ளது.

5. மண்டல நிர்வாக இயக்கக அலுவலகங்களுக்கு கட்டிடங்கள் கட்டுதல் :

தற்போது வேலூர், மதுரை, சேலம், தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள மண்டல நகராட்சி நிர்வாக இயக்ககங்கள் போதுமான இடவசதியின்றி வாடகை கட்டிடங்களில் உள்ளன. தற்போது உருவாக்கப்பட்ட பொறியியற் பிரிவு காரணமாக அதிக வாடகையில் கூடுதல் இடம் தேவைப்படுகிறது.

மண்டல இயக்ககங்கள் நிரந்தமானவை என்பதாலும் கணிசமாக வாடகைப் பணம் வழங்குவது சேமிக்கப்படும் என்பதாலும் அரசு மண்டல நகராட்சி இயக்ககங்களுக்கு கட்டிடங்கள் கட்ட முடிவெடுத்துள்ளது. 1982-83 ஆம் ஆண்டில் மதுரை மற்றும் சேலம் மண்டல இயக்ககங்களுக்கு கட்டிடங்கள் ரூபாய் 4.00 இலட்சம் செலவில் கட்ட முடிவெடுக்கப்பட்டுள்ளது.

1982 மார்ச் 29]

4. பிற்படுத்தப்பட்ட பகுதிகளின் ஒருங்கிணைந்த முன்னேற்றத் திட்டம் :

இத்திட்டத்தின் கீழ் நகராட்சிகளில் உள்ள பிற்படுத்தப்பட்ட பகுதிகளுக்கு அடிப்படை வசதிகளான சாலைகள், விளக்குகள், குடிநீர், பொதுக்கழிப்பிடங்கள் போன்ற வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. இத்திட்டம் 1977-78 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 1982-83 ஆம் ஆண்டும் சேர்த்து இந்நாள் வரை அரசு 63 நகராட்சிகளுக்கு ரூபாய் 41.00 இலட்சம் வழங்கியுள்ளது. 1979-80 ஆம் ஆண்டுவரை அளித்த ரூபாய் 16.00 இலட்சம் 16 நகராட்சிகளுக்கு முழுமையாக செலவிடப்பட்டது. நடப்பு ஆண்டில் 47 நகராட்சிகளுக்கு அளித்த ரூபாய் 25.00 இலட்சத்தில் இதுவரை ரூபாய் 10.00 இலட்சம் செலவாயிற்று. மீதமுள்ள வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அவைகள் 1982 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் தேதிக்குள் முடிவுறுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. 1982-83 ஆம் ஆண்டில் ரூபாய் 25.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5. விரைவுபடுத்தப்பட்ட குடிசை மேம்பாடு திட்டம் :

தமிழ்நாட்டில் உள்ள நகராட்சி பகுதிகளில் சுமார் 700 குடிசை பகுதிகள் உள்ளன. அரசு 1977-78 ஆம் ஆண்டிலிருந்து 25 நகராட்சிகளுக்கு ரூபாய் 250 இலட்சம் கொடுத்து உள்ளது. குடிசை பகுதிகளை மேம்படுத்த இத்திட்டம் முதன் முதலில் திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் நகராட்சிகளில் 1978-79 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது இத்திட்டத்தின் கீழ் குடி நீர், சாலைகள், பொதுக்கழிப்பிடங்கள், விளக்குகள், கழிவு நீர் கால்வாய்கள் போன்ற முக்கியமான வசதிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட குடிசைப் பகுதிகளில் வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வருடமும் அரசு ரூபாய் 50.00 இலட்சம் மான்யமாக நகராட்சிகளுக்கு வழங்குகிறது. இந்த ஆண்டும் இத்திட்டத்தின் கீழ் முன்னேற்ற வேலைகள் செய்ய 15 நகராட்சிகளில் ரூபாய் 50.00 இலட்சம் அளித்துள்ளது. இத்திட்ட மேம்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட ரூபாய் 250.00 இலட்சங்களில் இதுவரை ரூபாய் 205.00 இலட்சங்கள் செலவழிக்கப்பட்டுள்ளது. இந்த வேலைகள் அனைத்தும் பூர்த்தியாகும்பொழுது கிட்டத்தட்ட 250 குடிசைப் பகுதிகள் தேவையான வசதிகள் பெறும். இத்திட்டத்திற்கு 1982-83 ஆம் ஆண்டு ரூபாய் 50.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

6. பள்ளிக் கட்டிடங்கள் :

தமிழ்நாட்டில் (ஆரம்ப மற்றும் இடைநிலை பள்ளிகள்) 1,040ம் (உயர் நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகள்) 58-ம் நகராட்சிகளால் நடத்தப்பட்டு வருகின்றன. அவைகளில் பெரும்பகுதியானவை வாடகைக் கட்டிடங்களிலேயே போதுமான இடவசதியின்றி இயங்கி வருகின்றன.

பல பள்ளிகள் பழைய கட்டிடங்களிலும் இயங்குகின்றன. எனவே, புதிய கட்டிடங்கள் கட்டவும் போதுமான இடவசதி ஏற்படுத்திக் கொடுக்கவும் மானியங்கள் நகராட்சிக்கு வழங்கப்படுகின்றன. 1982-83 ஆம் ஆண்டு ஆரம்பப் பள்ளிகள் மற்றும் பள்ளிகள் கட்டுவதற்கு ரூபாய் 20.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1980-81 ஆம் ஆண்டில் ரூபாய் 21.50 இலட்சமும் 1981-82 ஆம் ஆண்டில் ரூபாய் 20.00 இலட்சமும் மானியமாக வழங்கப்பட்டது. சுமார் 115 ஆரம்பப் பள்ளிகள் மற்றும் இடைநிலைப் பள்ளிகள் இத் திட்டத்தின்கீழ் கட்டி முடிக்கப்படும். 31 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிக் கட்டிட வேலைகள் தேர்ந்தெடுக்கப்பட்ட 18 நகராட்சிகளில் ரூபாய் 25.00 இலட்சம் செலவில் நடைபெற்று வருகிறது. 1982-83 ஆம் ஆண்டும் தொடர் திட்டமாக ரூபாய் 25.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

7. தனியார் தெருக்களை மேம்படுத்தும் சுழல் நிதித் திட்டம் :

நகராட்சிகளிலுள்ள தனியார் தெருக்களை மேம்படுத்த நகராட்சிகளில் சுழல் நிதியை அரசு ஏற்படுத்தி 1980-81 ஆம் ஆண்டு ரூபாய் 25.00 இலட்சம் வழங்கியது. இத்தொகை 25 நகராட்சிகளுக்கு மொத்த வேலைகளின் மதிப்பீட்டுத் தொகையில் பாதித் தொகையாக வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 167 தனியார் மனைப் பிரிவுகளை மேம்படுத்த எடுத்துக் கொண்டன. மேலும் மேம்படுத்த வேண்டிய நிலையில் 653 மனைப் பிரிவுகள் உள்ளன. 1982-83 ஆம் ஆண்டு 150 மனைப் பிரிவுகள் மேம்பாட்டிற்காக எடுத்துக் கொள்ளப்படும்.

8. நலிவுற்ற வருவாயுள்ள நகராட்சிகளில் தன்னிறைவுத் திட்டம் :

கடந்த 20 ஆண்டுகளாக நகர்ப்புறங்களில் மக்கள் தொகை குறிப்பிடத் தக்க அளவில் உயர்ந்துள்ளது. 1961 ஆம் ஆண்டு 64 ஆக இருந்த நகராட்சிகளின் எண்ணிக்கை 1982-ல் 106 ஆக உயர்ந்துள்ளது. மேலும் நகர்ப்புற மக்கள் தொகை 1961 ஆம் ஆண்டில் 45,11,165-லிருந்து 1981 ஆம் ஆண்டில் 72,20,954 ஆக குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளது. தமிழ் நாட்டிலுள்ள நகராட்சிகளின் மொத்த எல்லைப் பரப்பளவு 1,476.42 சதுர கிலோ மீட்டர் அளவாகும். நகரில் மொத்தமுள்ள ஜனத்தொகையில் கால் பகுதி ஆதி திராவிடர்களும் குடிசைவாழ் பகுதி மக்களாகவும் உள்ளனர். இது வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் எண்ணிக்கை நீங்கலாகும். எனவே நகராட்சிகளில் தன்னிறைவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தி நகர்ப்புற மக்களின் அடிப்படைத் தேவைகளான குடிநீர், சாலை, மின் விளக்கு, பொது சுகாதாரம், கல்வி நிலையங்கள் போன்ற வசதிகளை ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதை முதற்கட்டமாக செயல்படுத்த 1982-83 ஆம் ஆண்டில் நிதி நிலைமை சரியாக இல்லாத நகராட்சிகளில் அமல்படுத்தவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இணைப்பு IV

(693 ஆம் பக்கத்தில் இனம் 5 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

L.A. Bill No. 18 of 1982.

(As Passed by the Assembly.)

A Bill further to amend the Tamil Nadu Municipal Councils (Appointment of Special Officers) Act, 1976.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-third Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*— (1) This Act may be called the Tamil Nadu Municipal Councils (Appointment of Special Officers) Amendments Act, 1982.

(2) It shall come into force at once.

2. *Amendment of secton 4, President's Act 28 of 1976.*—In clause (*a*) of sub-section (3) of section 4 of the Tamil Nadu Municipal Councils (Appointment of Special Officers) Act, 1976 (President's Act, 28 of 1976),—

(*i*) for the words "for a period of five years and nine months" "the words for a period of six years and nine months" shall be subtituted ;

(ii) in the first proviso, for the words "the said period of five years and nine months", the words "the said period of six years and nine months" shall be substituted.

இணைப்பு V

(694 ஆம் பக்கத்தில் இனம் 5 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

L.A. Bill No. 19 of 1982.

(As passed by the Assembly.)

A Bill to amend the Coimbatore City Municipal Corporation Act, 1981.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Trirty-third Year of the Republic of India as follows:—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Coimbatore City Municipal Corporation (Amendment) Act, 1982

(2) It shall come into force at once.

2. *Amendment of Schedule VII to Tamil Nadu Act 25 of 1981.*—In Schedule VII to the Coimbatore City Municipal Corporation Act, 1981 (Tamil Nadu Act 25 of 1981), in sub-rule (*a*) of rule 4,—

(i) for the expression "period of six months", the expression "period of two years" shall be substituted;

(ii) for the proviso the following proviso shall be substituted, namely :—

"Provided that the Government may by notification, for sufficient cause, direct that the period specified in this sub-rule be reduced by such period, not exceeding six months as may be specified in such notification."

இணைப்பு VI

(695 ஆம் பக்கத்தில் இனம் 5 (3)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

L.A. Bill No. 20 of 1982.

(As passed by the Assembly.)

A Bill further to amend the Madras City Municipal Corporation Act, 1919.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-third Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Madras City Municipal Corporation (Amendment) Act, 1982.

(2) It shall come into force at once.

2. *Amendment of Section 55-B, Tamil Nadu Act IV of 1919.*—In section 55-B of the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919), in sub-section (1) for the words "within a period of seven years and six months", the words "within a period of eight years and six months" shall be substituted.

தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை

செவ்வாய்க்கிழமை, 1982 மார்ச் 30.

பங்குனி 17, துன்மதி—திருவள்ளுவராண்டு 2013

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4.00 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (புலவர் புலமைப்பித்தன்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Tamil Pandits in Backward Classes Department.

*225 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether it is a fact that many qualified Tamil Pandits promoted from Secondary Grade Cadre, are threatened with demotion as Secondary Grade Assistant in the Backward Classes Department;

(*b*) if so, the number of persons affected; and

(*c*) the reasons for the same?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மதுரை மாவட்ட தனித் துணை ஆட்சித் தலைவர் (கள்ளர் சீரமைப்பு) அவர்கள் 9 இடைநிலை ஆசிரியர்களை முதல் நிலை தமிழ் பண்டிதர்களாக பதவி உயர்வு கொடுத்துள்ளார். இப்பதவி உயர்வானது, அப்பதவிகளுக்கான சிறப்பு விதிகளைக் கடைப்பிடிக்காமல் கொடுக்கப்பட்டதால், இது முறையற்ற பதவி நியமனமாகும்.

திரு. பா. ரா. தாமஸ்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பின்தங்கிய வகுப்பினர் படிக்கும் பள்ளிகளிலே போதிய மாணவர்கள் எண்ணிக்கை இருக்கின்ற காரணத்தினாலே, அவர்களை மீண்டும் அந்தப் பணியிடங்களிலே வைத்துக்கொள்ளக்கூடிய அளவிலே வசதி இருக்கிறது என்ற காரணத்தினாலே, அந்த முறையிலே தமிழாசிரியர்கள் தொடர்ந்து பதவியிலே இருக்க, பதவியிலே இறக்கம் பெறாத தமிழாசிரியராகப் பணியாற்றுகின்ற வாய்ப்பை அமைச்சர் அவர்கள் கொடுப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதிலே 9 பேர்கள் 1968-லேயிருந்து 1979 வரையிலே முதனிலைத் தமிழாசிரியர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் செகண்டரி கிரேட் ஆசிரியர்களாக இருந்து அந்தத் தகுதி பெற்றதன் காரணமாக அவர்கள் அப்படி நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் தமிழ்நாடு பிற்பட்டோர் சார்நிலை பணியாளர்களுக்கான விதி 2 ஏ-யின் படி, இரண்டாம் நிலையிலிருந்து பதவி உயர்வு பெறுவது என்பதன் மூலமாக நியமனம் செய்ய மட்டுமே விதிகளில் இடமிருக்கிறது. ஆனால் துறை ஆட்சித் தலைவர் அவர்கள் மேற்கொண்ட நியமனங்கள் மாற்றல் அடிப்படையிலே செய்ததால், இந்நியமனங்களைப் பணியிடங்களுக்கான சிறப்பு விதிகளுக்கு ஏற்ப செய்யாததனால், இது முறையற்ற நியமனம் ஆகிறது. ஆனால் நான் குறிப்பிட்ட இந்த 9 இடங்களில் அவர்கள் தமிழ் பண்டிதர்களாக நியமனம் பெற தகுதி பெற்றிருக்கிறார்கள். ஆனால் செய்த நியமனம் விதிப்படி செய்யாததனால், இது முறையற்ற நியமனம் என்பதால், இந்த நியமனங்களை நிலைப்படுத்த செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் இருக்கிறது. தனியாகப் பரிசிலித்து முடிவெடுக்க வேண்டுமே தவிர, விதிமுறைகளின் அடிப்படையிலே முடிவெடுப்பதற்கில்லை. ஆனால் அதற்கான தகுதி அவர்களுக்கு இருக்கின்றது. அதைத்தான் அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழாசிரியர்கள் என்ற சொல் மிக அழகான சொல். தமிழாசிரியர் என்ற சொல்லுக்குப் பதிலாக தமிழ் பண்டிதர் என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றார்கள். மொழி பெயர்ப்பவர்கள் தமிழாசிரியர் என்று சொல்வதைவிட தமிழ் பண்டிதர் என்ற சொல்லை அதிகமாகப் பயன்படுத்துகின்றார்கள். ஆகவே தமிழாசிரியர் என்ற சொல்லைப் பயன்படுத்த வேண்டுமென அறிவுரை கூறுவார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போது பொதுவாகவே தமிழாசிரியர் என்ற சொல்லைத் தான் எல்லோரும் பயன்படுத்தி, தமிழாசிரியர் கழகம், தமிழாசிரியர் சங்கம் என்றுதான் குறிப்பிடுகிறார்கள். ஏற்கெனவே தமிழ் பண்டிதர் என்று இருந்திருக்கிறது. ஏனென்றால் தமிழ் பண்டிதர் பயிற்சி பெற்று ஆசிரியராக வருவதால், தமிழ் பண்டிதர் என்று கூறப்பட்டது. இப்போது பெரும்பாலும் கணக்காசிரியர், மொழியாசிரியர் என்று சொல்வதுபோல, அவர்கள் தமிழ் மொழி பயிற்றுவிக்கின்ற காரணத்தினால், அவர்கள் தமிழாசிரியர்கள் என்று தான் அழைக்கப்படுகிறார்கள்.

திரு. செ. முத்துசாமி : இடைநிலை ஆசிரியர்கள் பதவி உயர்வு பெற தமிழாசிரியர்களாகத் தங்களை உயர்த்திக் கொள்கிறார்கள். பலவேறுபட்ட ஆசிரியர்களை ஊக்கப்படுத்த, பி.ஏ., பி.டி. ஆசிரியர்களுக்கு ஊக்க ஊதியம் அண்ணா அவர்கள் காலத்திலே கொடுக்கப்பட்டது. ஆனால் தமிழ் பயிற்றுவிக்கின்றவர்களுக்கு மட்டும் அப்படி கொடுக்காமல் இருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காலத்திலே இருந்து அப்படியே நிற்கிறது. அதை விரைவாகத் தர ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அது குறித்து செயற்குறிப்பு இல்லை. தனியாகத்தான் ஆராய வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஓய்வு பெறும்பொழுது ரூ. 10,000

*226 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசு ஊழியர் ஆசிரியர்கள் ஓய்வு பெறும்பொழுது ரூ. 10,000 உதவித் தொகை வழங்குவது குறித்து ஆய்வு செய்ய நிதி அமைச்சர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அக்குழு அறிக்கையினை அரசுக்கு அளித்து விட்டதா ?

(உ) குழுவின் பரிந்துரையின் விபரங்கள் என்ன ?

(எ) அது எப்பொழுது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இல்லை.

(உ) வினா எழவில்லை.

(எ) வினா எழவில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு ஊழியர்கள் ஆவலுடன் எதிர்பார்த்த நான்கு அகவிலைப்படித் தவணைகளை பணப் பயனுடன் கொடுத்து அறிவித்த மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கும், தமிழக அரசுக்கும் இந்த சமயத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்ற நேரத்தில், ஓய்வு பெறும்போது, ரூபாய் பத்தாயிரம் உதவித் தொகை

கொடுப்பது என்ற திட்டம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மாதந்தோறும் தரும் குறிப்பிட்ட தொகையினை வாங்கி, அரசு திரும்ப ஒரு குறிப்பிட்ட தொகையைக் கொடுத்து உதவி செய்து அதன் மூலம் அவர்களுக்கே திரும்ப வரக்கூடிய திட்டம், அவர்களுடைய எதிர்காலத்திலும் வாழ்விற்குப் பாதுகாப்புத் தரக்கூடிய திட்டம் என்பதால் வேறு மாநிலங்களில் இல்லாவிட்டாலும்கூட, நம்முடைய மாநிலத்திலே இதைச் செய்து பிற மாநிலங்களுக்கு நாம் வழிகாட்டியாக அமையக்கூடிய சூழ்நிலையை உருவாக்க அரசு விரைவாக முன்வருமா ? அமைச்சருக்கே அதை அமல்படுத்துகின்ற அதிகாரமும் இருப்பதால், அதை விரைவில் அமுல் படுத்துவார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதுபற்றி ஏற்கெனவே இந்த அவையிலேயே இரண்டு மூன்று தடவைகள் விளக்கங்கள் தந்திருக்கிறேன். அதுபற்றிய சூழ்நிலையை ஏற்கெனவே எடுத்த முடிவின் அடிப்படையிலே ஏற்பாடு செய்தோம். 1—4—1974-லே ஒரு திட்டம் கொண்டு வரப்பட்டது. 10 ரூபாய் மாதம் என்று அவர்கள் செலுத்திக் கொண்டே வருவார்களானால், அவர்களுக்கு உதவி செய்யும் வகையில் அவர்கள் எவ்வளவு செலுத்துகின்றார்களோ அதை வட்டியோடு கொடுப்பது என்றும், இடையில் இறந்துபடுகின்ற நிலை ஏற்பட்டால் அவர்களுக்கு பத்தாயிரம் ரூபாய் தருவதாகவும் ஒரு செயல்முறை இருந்தது. ஆனால் ஆயுள் இன்சூரன்ஸ் கழகத்தின் சார்பாக மத்திய அரசு அந்த முறை இருக்கக் கூடாது என்று மறுத்ததன் காரணமாக, 1975 ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்டது. அதற்குப் பிறகுதான், மாதம் ஒரு ரூபாய் ஒவ்வொருவரும் செலுத்த வேண்டும் என்றும் இடையிலே இறந்துபடுகின்ற சூழ்நிலை ஏற்பட்டால், அவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் தரலாம் என்றும் இருந்தது. 1977-78-ல் மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கூறுவது போன்று ஒரு முறை வகுக்கப்பட்டது. அந்த அடிப்படையிலே வைக்கப்பட்ட திட்டத்தின்படி, அவர்கள் செலுத்துகின்ற தொகை, அவர்கள் ஆற்றுகின்ற பணிக் காலத்தையும் பொறுத்து இருந்தது. அந்த அளவுக்கு அரசுப் பணியாளர்கள் எவ்வளவு குறைவாகத் தொகை செலுத்தியிருந்தாலும், காலம் எவ்வளவு குறைவாக இருந்தபோதிலும், ஓய்வு பெறுகின்ற ஒவ்வொருவருக்கும் மொத்தமாக ரூ. 10 ஆயிரம் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தியதன் காரணமாக 1977-78-லே செயல்படுத்தப்பட வேண்டுமென்ற அந்தத் திட்டம் செயல்படுத்தப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு, 7——5—1981-லே நிதி அமைச்சர், தலைமைச் செயலாளர், இரண்டாவது செயலாளர் ஆகியவர்களைக் கொண்ட ஒரு குழு

அமைத்திருக்கிறோம். அப்படி அரசு ஊழியர்கள் வற்புறுத்தியதால்தான் அது செயல்படாமல் போய்விட்டது. ஆகவேதான் மீண்டும் இருக்கின்ற நிலைமையில் ஊழியர்கள் ஒரு பங்கு அரசு ஒரு பங்கு என்று செயல்படுவதன் மூலம் அவர்கள் எவ்வளவு செலுத்துகின்றார்களோ அந்த அடிப்படையில் தான் தர முடியும், சகட்டுமேனிக்கு ரூ. 10 ஆயிரம் தருவது என்பது சரியாகாது. இருக்கின்ற சூழ்நிலைகளை எடுத்துத் தெரிவித்து, ஒரு சுமுகமான முடிவு காணவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்தேன். அதற்குப் பிறகுதான் மறுபடியும் கூப்பிட்டு வைத்துப் பேசி முடிவெடுக்கலாம் என்று இருக்கிறோம். அதைத்தான் நான் ஏற்கெனவே இந்த அவையிலே தெரிவித்திருக்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : ஓய்வு பெறுபவர்களுக்கு ரூ. 10 ஆயிரம் தருவது பற்றி நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பலமுறை சொல்கின்றபோது, சகட்டுமேனிக்கு எல்லோருக்கும் ரூ. 10 ஆயிரம் தருவது இயலாது என்பதுபோலச் சொன்னார்கள். ஆனால் அவர்கள் ஆய்வு செய்கின்றபோது, ஏற்கெனவே நான் ஒரு திட்டம் தந்திருந்தேன். ஒரு ஊழியர் ரூ. 10 என்று கொடுத்தால், ஒரு மாதத்திற்கு 7½ லட்சம் ஊழியர்கள் இருப்பதால், ரூ. 75 லட்சம் அரசுக்குக் கிடைக்கும். அதிலே ரூ. 3 லட்சம் நிர்வாகச் செலவுகளுக்கு என்று வைத்துக் கொண்டால், மீதி ரூ. 72 லட்சம் இருக்கும். ஒருவருக்கு பத்தாயிரம் என்றால் ஒரு மாதத்திற்கு கிட்டத்தட்ட 720 பேர்களுக்குக் கொடுப்பதாக இருந்தால் ஆண்டுக்கு 8,640 பேர்களுக்குத் தரலாம். அந்த அளவுக்கு ரிட்டையர்மென்ட் ஆகின்றவர்கள் இருக்கிறார்களா என்ற புள்ளிவிவரத்தை எடுத்துப் பார்த்தால், அந்த அளவுக்கு இருக்காது. அதுதான் ஆசிரியர்கள் அரசு ஊழியர்கள் சங்கங்கள் தருகின்ற புள்ளிவிவரங்கள் ஆகும். ஆகவே அந்த வகையிலே இந்த ஆலோசனையைக் கருத்தில் கொண்டு, எல்லோருக்குமே தர முடியும். அப்படித் தருவதற்காக ஆய்வு செய்யும்போது அரசு இந்த ஆலோசனையை வைத்து ஆலோசிக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதற்காகத்தான் உட்கார்ந்து அதைப்பற்றிப் பேச வேண்டும் என்று சொன்னேன். எல்லோரிடத்திலும் ரூ. 10, ரூ. 10 என்று வாங்கிக் கொண்டு, 20 ஆண்டுக் காலம், 30 ஆண்டுக் காலம், 35 ஆண்டுக் காலம் என்று பணியாற்றிவிட்டு பதவிக் காலம் கழித்து ஓய்வு பெறுகின்றவர்களுக்கு ரூபாய் பத்தாயிரம் தருவது பற்றிப் பேசும்போது அந்தப் பத்தாயிரம் ரூபாய் தரலாம் என்ற ஒரு திட்டவட்டமான முடிவுக்கு வந்தாக வேண்டும். பிற்காலத்தில்

3 ஆண்டு பணியாற்றியவர்களுக்கும் அவ்வளவு, 33 ஆண்டுகள் பணியாற்றியவருக்கும் அவ்வளவுதானா என்று கேட்கலாம். இந்த நேரத்திலேயே சில வரைமுறைகளை முறைப்படுத்தி ஒரு செப்பேட்டிலே எழுதித் தந்துவிடுவார்களானால், அப்படி ஒரு முடிவுக்கு வந்துவிடலாம். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் ஒரு கணக்கு சொல்கின்றார்கள். அவரவர்கள் செலுத்துகின்ற தொகையை வைத்துக் கொடுக்கின்றபோது, அவர்கள் எவ்வளவு செலுத்துகின்றார்களோ அந்த அளவுக்கு அரசு ஒரு பங்கு செலுத்துவது என்ற கணக்கு வருகின்றபோது, அவர்கள் ஒரு மூவாயிரம் சில்லரை ரூபாய் செலுத்துகின்றார்கள் என்றால், அரசு ரூபாய் மூவாயிரம் சில்லரை உதவி செலுத்தலாம். அவர்கள் செலுத்துகின்ற தொகைக்கு வட்டி, வட்டிக்கு வட்டி என்று கணக்குப் போட்டால், பணிக் காலத்திற்கு ஏற்ப கிட்டத்தட்ட 24 ஆயிரம் ரூபாய், 30 ஆயிரம் ரூபாய்

(பிற்பகல் 4.10)

என்ற அளவுக்குக்கூட ஓய்வு பெறுகின்றவர்களுக்குப் போகக் கூடும். ஆகவே தான் இரண்டு கணக்குகளிலும் எந்தக் கணக்கை எடுத்துக்கொள்வது என்பதில் திட்டவட்டமான முடிவிற்கு வர வேண்டும். அது குறித்து முடிவு செய்ய வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் போடும் கணக்குப்படி பார்த்தால், என்றைக்கும் அதுதான் என்றால், இப்போதே அந்தத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளலாம். நியாயம் அதில் வராது என்பதாலும், செலுத்துவதற்கு ஏற்ற வகையில் திருப்பித் தர வேண்டு மென்ற கருத்து இருப்பதாலும், மீண்டும் உட்கார்ந்து பேசி, முதலமைச்சரவர்களைக் கலந்து பேசி, பரிசிலனை செய்யலாம். அதை விரைவிலே செய்ய வேண்டுமென்று கூறியிருக்கிறேன். ஓய்வு இருக்கும்போது, செய்யலாமென்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. செ. முத்துசாமி : சமீபத்திலே நடுவண் அரசு ஒரு திட்டத்தைப் பாராளுமன்றத்தில் அறிவித்திருக்கிறது. அது பத்திரிகையிலே வந்திருக்கிறது. மாதம் 10 ரூபாய் வீதம் நான்காம் பிரிவு ஊழியர்கள் கட்டினால், 33 ஆம் ஆண்டு இறுதியில், ஓய்வு பெறும்போது, 27,850 ரூபாய் தரும் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அத்தகைய திட்டத்தைப் பரிசீலித்து, மாநில அரசும் அதைக் கொண்டு வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விவரங்கள் தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதையும் என்னுடைய பரிசிலனைக்கு எடுத்துக்கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் ஓய்வு பெறும் வயதை 55-லிருந்து 58 ஆக உயர்த்தியபோது, நாங்கள் ஒரு கருத்தைச் சொன்னோம். இனி 3 ஆண்டுகளுக்கு ஓய்வு பெறும் வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. இந்த நேரத்திலே இந்தத் திட்டத்தை அமுல்படுத்தினால், அரசு ஊழியர்கள், ஆசிரியர்களிடமிருந்து வசூலிக்கும் தொகை சேரும்; செலவிராது, செய்யுங்கள் என்று சொன்னோம். அப்போது அரசு அதைச் செய்யவில்லை. வருகிற 1982 ஏப்ரலுக்கு மேலே, 3 வருடங்கள் பதவி நீட்டிப்பு பெற்றவர்கள் அனைவரும் ஓய்வு பெற இருக்கிறார்கள். எனவே அதிக எண்ணிக்கையில் ஓய்வு பெறும் சூழ்நிலை ஏற்படும். இந்த நேரத்தில் இந்தத் திட்டத்தை அறிவித்தால், அரசுக்கு அதிகச் செலவு ஏற்படுமென்று நினைத்து, காலங்கடந்து இந்தத் திட்டத்தை அறிவிக்கலாமென்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறதென்று கேள்விப்படுகிறேன். அது உண்மையா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினரவர்கள் உணர்த்தியதற்குப் பிறகுதான், இது தெரிகிறது. முன்கூட்டியே எனக்குத் தெரிந்திருந்தால், அதற்குச் சாதகமான சூழ்நிலைகளைக் கண்டிருப்பேன். அரசுக்கு அப்படிப்பட்ட எண்ணமில்லை. இதில் இருக்கும் சங்கடத்தைச் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினரவர்கள் நல்லதொரு கருத்தை உணர்த்தியிருக்கிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : வினா எண் 227 ஒத்தி வைக்கப்படுகிறது.

அரசு மேல்நிலைப் பள்ளி, பூலாம்பாடி

* 228 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், பூலாம்பாடி அரசு மேல் நிலைப் பள்ளி மாணவர்கள், பள்ளிக்கு நிரந்தரக் கட்டிடம், குடிநீர் வசதி ஆகியவைகளைக் கோரி 1979 நவம்பர் திங்களில் வேலை நிறுத்தத்தில் *டுபட்டதை அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், மாணவர்களின் கோரிக்கைகளின் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) அரியலூர் கல்வி மாவட்டம் பூலாம்பாடி அரசினர் மேல் நிலைப் பள்ளி மாணவர்கள் 8—11—1979 மற்றும் 9—11—1979 ஆகிய நாட்களில், பள்ளிக்கு போதிய கட்டிட வசதி செய்து

தரும்படியும், குடிநீர் வசதி செய்து தரும்படியும், கோரி, கோஷமிட்டு விட்டு, ஊர்வலம் சென்றபின், பள்ளிக்கு அமைதியாகத் திரும்பிவிட்டனர். இவைகளினால் பள்ளியின் வகுப்புக்கள் அவ்விரு நாட்களிலும் மூடப்படவில்லை.

(இ) இப்பள்ளியில் மூன்று வகுப்பறைகளைக் கொண்ட கட்டிடம் கட்டப் பெற்று முடியும் தருவாயில் உள்ளது. மேலும் இப்பள்ளிக்கு ஒரு வகுப்பறையுடன் கூடிய அறிவியல் ஆய்வுக்கூடம் ஒன்றும் கட்டப்பட்டு வருகின்றது. வறட்சி நிவாரண நிதியின் மூலம் பள்ளிக்கருகில் ஒரு குழாய்க் கிணறு (Bore well) தோண்டப்பெற்று குடிநீர் தாராளமாக தற்போது கிடைத்து வருகிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவரவர்களே, திருச்சி மாவட்டம் பூலாம்பாடி அரசு மேல்நிலைப் பள்ளியிலே இப்போது நடைபெற்று வருகின்ற வகுப்புகள் எத்தனை ? அந்த வகுப்புகளுக்குரிய அறைகள் எத்தனை இருக்கின்றன ? மீதி அறைகள் அத்தனைக்கும் நிரந்தரக் கட்டிடத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்போது இருக்கிற கணக்குப் படி, இந்தப் பள்ளிக்கு 20 வகுப்பறைகள் தேவைப்படும் என்று இருக்கிறது. பெரும்பாலான வகுப்பறைகள் கீற்றுக் கொட்டகையில் நடந்து வரும் நிலை இருக்கிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : அமைச்சரவர்களுடைய விடையிலிருந்து 4 வகுப்புகளுக்குத்தான் இப்போது கட்டிட வசதிகள் இருக்கின்றன என்று தெரிய வருகிறது. மீதி 16 வகுப்புகளுக்கு நிரந்தரக் கட்டிடம் கட்ட உடனடியாக ஏதாவது ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஏற்கனவே நான் பல்வேறு சந்தர்ப்பங்களில் சொல்லியதுபோல, இதுபோன்ற குறைபாடு நிறைய பள்ளிகளில் இருக்கிறது. அதற்காக தனிப்பட்ட முயற்சி ஒன்றை எடுத்து வருகிறோம். அது வருகின்றபோதுதான், இந்தக் குறைபாடுகளை நீக்க முடியும். மற்றபடி இருக்கிற நிதி வசதிகளை வைத்துக் கொண்டு, அந்தந்தப் பள்ளிகளுடைய வசதிகளை உணர்ந்து, அந்த முன்னுரிமைப் பட்டியல்படிதான் காரியங்களைச் செய்ய முடியும்.

எளிய முறையில் தமிழ் மொழியைக் கற்றல்

* 229 வினா.—**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் மொழியை குறுகிய காலத்தில் பிற மாநிலத்தவரும், அயல் நாட்டினரும் கற்றுக்கொள்ளும் வகையில் எளிய முறைகளைக் கண்டறிய ஒரு குழு அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது தற்போது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவரவர்களே, இன்று ஆங்கிலம் போன்ற பிற நாட்டு மொழிகளைக் கூட குறுகிய காலத்தில் கற்றுக்கொள்ள, அவர்கள் வெளி நாடுகளுக்குச் சென்று, அந்த ஏற்பாடுகளைச் செய்து, ஒரு மாத காலத்திற்குள், 2 மாத காலத்திற்குள் அல்லது 6 மாத காலத்திற்குள் என்று வைத்து, ஆங்கிலம், ரஷ்யன் போன்ற மொழிகளைக் கற்பித்து வருகிறார்கள். மிகச் சுலபமாகக் கற்பித்து வருகிறார்கள். தமிழின் சிறப்பைப் பற்றிப் பேசும்போது, தமிழ் மொழியைத் தமிழ் தெரியாதவர்களும் அறிந்துகொள்ள, இந்தியாவில் உள்ள பிற மாநிலத்தவரும், வெளிநாடுகளில் உள்ளவர்களும் அறிந்துகொள்ள இப்படிப் பட்ட வாய்ப்புகளைச் செய்ய வேண்டியது அரசின் கடமை. தங்களுடைய மொழிகளை வளர்த்துக்கொள்ள ஆக்கபூர்வமான வழி முறைகளில் ஈடுபட்டுள்ள பிற மொழிக்காரர்களைப் போல, நாமும் ஏன் அப்படிப்பட்ட முயற்சிகளைக் கையாளக்கூடாது ? இது குறித்து செயற்குறிப்பு இதுவரை இல்லாவிட்டாலும், இனிமேலாவது இந்தக் கருத்தை பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு, இதை நடைமுறைப்படுத்த மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : குழு அமைக்கின்ற செயற் குறிப்புதான் இல்லை என்று சொன்னேன். இந்த முயற்சியை மேற்கொண்டிருக்கிறோம். தமிழ் நாடு மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மன்றம், மைசூரில் உள்ள இந்திய மொழிகள் மைய நிறுவனம் ஆகிய இரண்டும் ஒருங்கிணைந்து ஒரு திட்டத்தை வகுத்து, 9—3—1981 முதல் 23—3—1981 வரை மொழியியல் வல்லுநர்கள் மற்றும் ஆசிரியர்கள் அடங்கிய

ஒரு பயனுள்ள பட்டறை—ஒர்க்ஷாப்—நடத்தியது. அதில் வெளி நாடுகளில் வாழும் தமிழர்கள் கற்றுக்கொள்ள ஏதுவாக 40 பாடங்கள் தமிழில் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. இப்போது அதை மேலும் சீரமைத்து அதற்குத் தேவையான மற்ற காரியங்களைச் செய்வதற்கு, சென்னை அடையாறில் உள்ள உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் தொடர்ந்து செய்ய வேண்டிய காரியங்களை மேற்கொண்டிருக்கிறது.

டாக்டர் இரா. சனார்த்தனம் : குழு அமைக்கவில்லை என்றாலும் தஞ்சைப் பல்கலைக் கழகம் வெளி நாடுகளுக்கு ஒரு அறிஞர் குழுவை அனுப்பி, தமிழ் மொழியை வளர்ப்பது பற்றி ஆராய இருப்பதாக ஒரு செய்தி வந்திருக்கிறது. அவர்கள் மூலமாக நமது எழுத்துச் சீர்திருத்தத்தை வெளி நாட்டுத் தமிழர்கள் ஏற்றுக்கொள்ள அரசு வழிவகை காணுமா? கேசட் மூலம், டேப் மூலம் அயல் மொழிகளைக் கற்றுக்கொள்ள பயிற்சி தரும் முறை இருக்கிறது. அந்த முறையில் தமிழைப் பயிற்றுவிக்க ஆராய்ச்சி நிறுவனம் மூலம் முயற்சி செய்யும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தமிழ் படிக்க வேண்டிய நிலையில் தமிழர்களே இருக்கிறார்கள். தமிழ் நாட்டில் இருக்கும் தமிழர்கள் 100-க்கு 56 பேர்கள் தமிழ் படிக்கத் தெரியாமல் இருக்கிறார்கள். இவர்கள் தமிழ் படிக்க வேண்டும். அதற்கு அடுத்து, இந்தியாவில் உள்ள மற்ற மொழி பேசுபவர்கள் தமிழ் பேச விருப்பப்பட்டால், அவர்கள் சுலபமாகத் தமிழ் படிக்க வாய்ப்பு தர வேண்டும். தமிழ் நாட்டிலிருந்து பல்வேறு நாடுகளுக்குச் சென்று அங்கே குடியேறி, இன்றைக்குத் தமிழை மறந்துள்ள அந்தத் தமிழர்கள் தமிழ் படிக்க சுலபமான வழியை நாம் ஏற்படுத்தித் தர வேண்டும். அதற்குப் பிறகு மற்ற நாட்டுக்காரர்கள் விரும்பினால், தமிழ் படிக்க நாம் ஏற்பாடு செய்ய வேண்டும். இந்தத் தேவைகளை எல்லாம் வைத்துப் பார்க்கும்போது, ஒரு மொழியைக் குறுகிய காலத்திலே படித்து, தெரிந்துகொள்வது என்ற ஒரு வாய்ப்பை நாம் ஏற்படுத்தித் தர வேண்டுமென்ற நிலைமை இன்றைக்கு இருக்கிறது. ஆகவேதான் அதற்காக ஒரு 'ஒர்க்ஷாப்'—பட்டறை—நடத்தி, பாடங்களைத் தயாரித்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் சொன்னது போன்று கேசட் போன்ற மெசின் எய்ட்ஸ்—சொல்லித் தருகின்ற துணைக் கருவிகள்—எல்லாம் தயாரிக்க முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். இப்போது இருக்கும் விஞ்ஞான முறைப்படி எப்படி சொல்லிக் கொடுக்கலாமென்று எண்ணி, தயாரிக்கப்படுகிறது. இது வெளிவந்து பரவும்போது தமிழைச் சுலபமாகப் படிக்கும் நல்ல வாய்ப்பைப் பெறுவார்கள்.

திரு. செ. முத்துசாமி : தமிழகத்தில் ஆங்கிலத்தைக் கற்றுக்கொள்ள நல்ல முறையில் சொல்லித் தருவதற்கு, மெட்ராஸ் இங்லிஷ் லாங்குவேஜ் டீச்சிங் கேம்பெயின் என்று பிரிட்டிஷ் கவுன்சில் பாதிப் பணமும், தமிழக அரசு பாதிப் பணமும் போட்டு சில நடைமுறைகளை வைத்து, அதை நல்ல முறையில் சொல்லிக் கொடுக்க முயற்சி எடுத்துக்

(பிற்பகல் 4-20)

கொண்டிருக்கிறோம். ஆனால் தமிழைப் பொறுத்தவரையில்; இன்னும் 10 ஆம் வகுப்பு, எஸ்.எஸ்.எல்.சி. போன்ற வகுப்புகளில் படிக்கக் கூடியவர்கள் கூட சில நேரங்களில் பிழை இல்லாமல் தமிழை எழுத முடியாத நிலை இருக்கிறது. ஆதலால் தமிழக அரசுக்கு இதுபற்றி நான் ஒன்று சொல்கிறேன். தமிழை ஒழுங்காக மாணவர்கள் படிக்க, நவீன முறையில் தமிழைச் சொல்லித் தர ஒரு நிறுவனத்தை உண்டாக்க வேண்டும். அது தமிழ் மொழி பற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டும். பொதுவாக அந்த வகையில் விஞ்ஞான ரீதியில் தமிழை மாணவர்களுக்குச் சொல்லித் தர இந்த அரசு முன்வருமா? அதற்கு மாநில கல்வி ஆராய்ச்சி நிறுவனத்தில் இந்த வகையில் முழுமையாகப் பயன்படுத்தக்கூடிய அளவுக்கு ஒரு தனிப் பிரிவு ஏற்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்போது இருக்கிற சூழ்நிலையில் மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற காரியம் ஆசிரியர் பயிற்சி நிறுவனம் போன்ற அமைப்புகள் ஏற்று நடத்திச் செய்ய வேண்டிய ஒன்று. அவர்கள் அதைச் செய்வார்கள் என்று நான் கருதுகிறேன். இங்கே கேட்கப்பட்டிருக்கிற கேள்வி சுலபமாகத் தமிழைப் பேச, படிக்க விரும்புகிறவர்களுக்கு அல்லது எழுத வேண்டுமென்று விரும்புகிறவர்களுக்கு குறுகிய காலப் பயிற்சி அளிக்கும் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவது பற்றியதாகும். அந்த முறையில் இத்திட்டத்தை இன்றைக்கு நாம் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். இத்திட்டம் எப்படி நடைபெறுகிறது என்பதைப் பார்த்த பிறகு, இதன் அடிப்படையில் மற்ற காரியங்களைச் செய்யலாம். ஆனால் பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும் நல்ல முறையில் தமிழைச் சொல்லித் தருவதற்குரிய ஆர்வத்தை ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகளும், ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிகளும்தான் காட்ட வேண்டும்.

திரு. சி. இராமலிங்கம் : வெளி மாநிலங்களில் பலர் தமிழைக் கற்க வேண்டுமென்ற ஆர்வமுடையவர்களாக இருக்கிறார்கள். வானொலியில் ரேடியோவில் தமிழை வாய் மூலம் சொல்லிக் கொடுக்கிறார்கள். நவீன இயந்திரமான டி. வி. போன்றவை இன்றைக்கு நடைமுறைக்கு வந்திருக்கின்றன. ஆகவே

பிற மாநிலங்களில் உள்ள டி. வி. க்கள் மூலம் தமிழ் கற்க வேண்டுமென்ற ஆர்வமுள்ளவர்களுக்கு தமிழைக் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா? இங்கே திரு. நன்னன் போன்றவர்கள் தமிழைச் சொல்லிக் கொடுப்பதன் மூலம் தமிழைப் பயில வாய்ப்பிருக்கிறது. அதுபோல பிற மாநிலங்களில் உள்ளவர்களுக்கும் தமிழைச் சொல்லிக்கொடுக்க இந்த அரசு ஏதாவது ஏற்பாடு செய்திருக்கிறதா? இதுவரை அத்தகைய முயற்சி மேற்கொள்ளப்படவில்லையென்றால், இனிமேலாவது இத்தகைய முயற்சியில் ஈடுபட வேண்டுமென்கிற எண்ணம் அரசுக்கு இருக்கிறதா? வெளிநாடுகளிலும் இதுபோல் செய்ய அரசுக்கு உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்போது நான் சொல்லியுள்ள திட்டத்தைப் பொறுத்தவரையிலும் கூட, இந்த உணர்வின் அடிப்படையில் தான் அதனை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். தற்சமயம் இந்தியாவிலே, தமிழகத்திற்கு அப்பால் சுமார் 15க்கு மேற்பட்ட பல்கலைக் கழகங்களில் தமிழைக் கற்றுக்கொடுக்கக் கூடிய ஒரு வாய்ப்பை இந்த அரசு ஏற்படுத்தியிருக்கிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : ஒரு செய்தியை நான் சமீபத்தில் படித்தேன். ரஷ்யாவிற்கு வெளி நாடுகளிலிருந்து பயிற்சிக்காக பலர் செல்கிறார்கள். அவர்கள் செல்வது எப்படிப்பட்ட பயிற்சிக்காக இருந்தாலும், பயிற்சி தொடங்குவதற்கு முன்னதாக, முதல் கட்டமாக ஒரு மாதம் ரஷ்ய மொழியைப் பயிற்சியாளர்களுக்கு அவர்கள் போதிக்கிறார்கள். அதற்குப் பிறகு ஓராண்டு பயிற்சியென்றால், மீதமுள்ள 11 மாதங்களில் ரஷ்ய மொழி மூலம் தான் அந்தப் பயிற்சியையும் கற்றுக் கொடுக்கிறார்கள். அந்தப் பயிற்சி எப்படிப்பட்ட பயிற்சியாக இருந்தாலும், அவர்களுடைய மொழியில் தான் அதைக் கற்றுத் தருகிறார்கள். அவர்கள் அவர்களுடைய நாட்டு மொழியை எவ்வளவு நுட்பமாக வளர்க்கின்ற வழியைக் கையாள்கிறார்கள் என்பதை நான் அந்தச் செய்தியின் மூலம் அறிந்துகொண்டேன். ஒரு மாத காலத்திற்குள் அவர்கள் ரஷ்யாவில் அவர்களுடைய நாட்டு மொழியைக் கற்றுக் கொடுத்து விடுகிறார்கள். மீதமுள்ள 11 மாதங்களில் தொழில் நுட்பம் சம்பந்தப்பட்ட பாடங்களைக் கூட ரஷ்ய மொழியில் தான் கற்றுத் தருகிறார்கள். அந்த அடிப்படையில் நாமும் தமிழகத்திலே சில பயிற்சிகளைத் தரும்பொழுது, தமிழ் தெரியாதவர்களுக்கு முதல் கட்டமாகத் தமிழைக் கற்றுக் கொடுத்துவிட்டு, பிறகு பயிற்சியையும் தமிழிலேயே கொடுக்கலாம். இன்றைக்கு உலக நாடுகள் பலவற்றில் இந்த முறைதான் கையாளப்படுகிறது. ஆனால் நாம் ஆங்கிலத்தில்தான் இன்றைக்கும் பயிற்சி அளித்து வருகிறோம். உலகத் தமிழ் மாநாட்டில்கூட இப்படி ஆங்கிலம் பயன்படுத்தப்பட்ட காட்சியை

நாம் பார்த்தோம். ஆகவே தமிழ் தெரியாதவர்களுக்கு ரஷ்யாவில் செய்வதைப் போல, முதலில் தமிழ் மொழியைக் கற்றுக் கொடுத்துவிட்டு, பிறகு பயிற்சியையும் தமிழிலேயே கொடுப்பதற்குரிய ஏற்பாட்டை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இனிமேலாவது செய்ய முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ரஷ்யாவில் மட்டுமல்ல, உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் அவர்களுடைய தாய்மொழியில்தான் எல்லாவற்றையும் நடத்திக் கொண்டிருக்கிறார்கள், பயிற்று மொழியாக அவர்களுடைய தாய் மொழியைத்தான் அவர்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். நம்மைப் போல் உள்ளவர்கள் வெளி நாடுகளுக்குப் போய் ஏதாவது பயிற்சி பெற வேண்டுமென்று கருதினால்கூட, அந்த நாட்டிலுள்ள மொழியில்தான் படிக்க முடியும். அப்படி படிக்கப் போகிறவர்களுக்கு அந்நாட்டு மொழி தெரியவில்லை என்றால், முதலில் ஒரு 6 மாத காலம் அவர்களுடைய மொழியைக் கற்றுத் தருகிறார்கள். அப்படிச் சொல்லித் தந்த பிறகு அந்நாட்டு மொழியில் தான் பயிற்சியையும் தருகிறார்கள். அவர்கள் தங்களுடைய நாட்டு மொழியைப் பரப்ப வேண்டுமென்று செய்கிற காரியம் அல்ல இது. அவர்களுடைய நாட்டில் பயிற்று மொழியாக அவர்களுடைய நாட்டுத் தாய் மொழியை வைத்திருப்பதால், வேறு நாடுகளிலுள்ளவர்கள் அங்கு பயிற்சிக்காகப் போனால் அந்நாட்டு மொழியில் தான் பயிற்சி பெற வேண்டும். அப்படிப்பட்ட நிலைமைதான் அங்கு இன்றைக்கு இருக்கிறது. ஆதலால் தான் நாம் அங்கு செல்கிறோம் என்றால், அவர்களுடைய தாய்மொழியில் தான் நாமும் படிக்க வேண்டுமென்ற நிலை இருக்கிறது. ஆனால் இங்கே நாம் ஆங்கிலத்தை வைத்துக்கொண்டிருப்பதால் வெளிநாடுகளிலிருந்து வருகிற தமிழ் தெரியாதவர்கள் உட்பட அனைவரும் ஆங்கிலத்தில்தான் படித்துச் செல்கிறார்கள். நாமே இன்னும் தமிழில் சரியாகப் படிக்கவில்லை. நாம் தமிழில் படிக்க வேண்டுமென்ற நிலைமையைக் கொண்டுவர முயற்சித்தால், அதை எதிர்ப்பவர்கள் குறைந்த எண்ணிக்கையுடையவர்கள் தான். அப்படி அவர்களுடைய எண்ணிக்கை குறைந்த அளவில் இருந்தாலும், அவர்கள் தான் இன்றைக்கு பேசுகிறவர்களாகவும், எழுதுகிறவர்களாகவும் இருக்கிறார்கள். ஆதலால் தான் தமிழில் படிக்க வேண்டுமென்று விருப்பம் கொண்டுள்ள மெஜாரிட்டியினருடைய கவனத்திற்கு அது வரவில்லை. உடனே எதிர்ப்பாளர்கள் எல்லாம், இதிலே எதிர்ப்பு இருப்பதுபோல், ஒரு பிரச்சினையை உண்டாக்கி விடுகிறார்கள். அதற்கு நாமும் உடனே பதில் சொல்ல வேண்டிய கட்டாயம் இருக்கிறது. இருந்தாலும் தமிழைப் பயிற்று மொழியாக ஆக்கும் வகையில் தான் இந்த அரசு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆசிரியர்களின் வருங்கால வைப்பு நிதி கணக்குகள்.

* 230.—திரு. நீலநாராயணன் (திரு. ம. சங்கரலிங்கம் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் 'பி' பிரிவு பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் வருங்கால வைப்பு நிதி, அவர்களுடைய கணக்கில் 15—6—1980 வரை, சேர்க்கப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், காலதாமதத்திற்குக் காரணம் என்ன ?

(உ) இதனால் ஆசிரியர்கள் இழப்புக்குள்ளாகிறார்கள் என்று அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

(உ) இல்லை.

Tutorial Periods in Higher Secondary Schools

* 231 Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state the method adopted and the steps taken, to provide the tutorial periods in the Higher Secondary Classes?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கல்லூரிகளைப்போல விரிவுரையாற்றும் முறையைக் கையாளும்போதுதான், மேல்நிலைப்பள்ளிகளில் (தனிப் பயிற்சிக்கு) டுடோரியலுக்கு என தனிப் பிரிவேளைகள் தேவை. கற்பிக்கும் முறை, பள்ளிகளைப் போலவே, மேல்நிலைப் பள்ளிகளிலும் கையாளப்படுவதால், மேல்நிலைப் பள்ளிகளில் டுடோரியலுக்கென் பிரிவேளைகள் தேவையில்லை. பாடங்களைக் கற்றுத் தரும்போதே மாணவர்களுக்குத் தனிப் பயிற்சியையும் தேவைக்கேற்பத் தருவது மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களின் பணியாகும்.

திரு. பா. ரா. தாமஸ் : கல்லூரிகளிலே பொதுவாக பி யு சி கல்வித் திட்டம் அமுலில் இருந்த காலத்திலும், இன்டர்மீடியட் கல்வித் திட்டம் அமுலில் இருந்த காலத்திலும் இவ்வாறு கடைப்பிடிக்கப்பட்டு வந்ததாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் மேல் நிலைப் பள்ளிகளில், மொழி ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்குப் பாட

நேரம் மிகவும் அதிகமாக இருக்கிறது. ஒரு வகுப்புக்குப் பாட நேரம் என்பதைப் பொறுத்தவரையில், மொழியைச் சொல்லிக் கொடுப்பதைப் பொறுத்தவரையில், 4 பாட வேளை என்று வைத்திருக்கிறார்கள். ஒரு பீரியட் என்பது ¾ மணி நேரம். ஆங்கிலம் ஆனாலும், தமிழ் ஆனாலும் 3 மணி நேரம் அவர்கள் மொழியைச் சொல்லிக் கொடுக்கவேண்டியிருக்கிறது. இதனால் அவர்கள் வாரத்திற்கு 24 மணி நேரம் பாடம் எடுக்கிற நிலைமை இருக்கிறது. இதன் காரணமாக இந்த மொழி ஆசிரியர்கள் கட்டுரைகள் எழுதுவது, இலக்கணம் சொல்லிக் கொடுப்பது போன்ற விஷயங்களில் ஈடுபட முடியவில்லை. முதலில் இந்தத் திட்டம் புகுத்தப்பட்டபோது, டியூட்டோரியல் போல் இங்கேயும் பாடங்கள் சொல்லிக் கொடுக்கப்படும் என்று தான் குறிப்பு இருக்கிறது. அந்த வகையில் இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். இப்போது இருக்கின்ற 24 பாட வேளை என்பதை 18 அல்லது 16 பாட வேளை என்று வைத்தால் போதும். அப்படி இருந்தால்தான் வெளி நேரங்களில்—மற்ற நேரங்களில் அந்த ஆசிரியர்கள் கட்டுரை வரைதல், இலக்கணம் எழுதுதல் போன்றவைபற்றி மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதில் தங்களுடைய கவனத்தைச் செலுத்த முடியும். அந்த வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு ஏற்பாடு செய்வார்களா ? இது குறித்து ஆராய்வார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : " இப்போது வேலைப் பளு இருக்கிறது, ஆகவே வேலை நேரத்தை வாரத்திற்கு 18 மணி நேரத்திலிருந்து 15 மணி நேரமாகக் குறைக்க வேண்டும் " என்று தமிழ் ஆசிரியர்கள் கோரியிருக்கிறார்கள். இதன்மீது பள்ளிக் கல்வி இயக்குநர் தனது கருத்தை இன்று அரசுக்கு அனுப்பியிருக்கிறார். இதை அரசு கருத்தில் வைத்திருக்கிறது.

திரு. பா. ரா. தாமஸ் : வரும் ஆண்டிலேயே அத்தகைய ஒரு முறை கையாளப்படுமா ? அப்படி இருந்தால்தான், தமிழ் மற்றும் ஆங்கிலப் படிப்பை மொழி ஆசிரியர்கள் மாணவர்களுக்கு நல்லமுறையில் சொல்லிக்கொடுக்க முடியும். அதன் அடிப்படையில் மாணவர்களிடத்தில் மொழித் திறமையையும் வளர்க்க முடியும். ஆகவே, எவ்வளவு விரைவாக இத்திட்டத்தை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அமுலுக்குக் கொண்டு வர இருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவசரப்படுவதுபற்றி நான் தப்பாக நினைக்கவில்லை. (சிரிப்பு) ஆனால் அரசாங்கம் அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வரக்கூடாது. இது குறித்து முறையாகப் பரிசீலித்த பிறகுதான் அரசு முடிவெடுக்கும்.

திரு. செ. முத்துசாமி : கல்லூரிக் கல்வியினுடைய ஒரு பிரிவான பி.யு.சி.-யைத்தான் இன்றைக்கு மேல்நிலைப் பள்ளிகளில் மேல் நிலைக் கல்வியாகக் கொண்டு வந்திருக்கிறோம். அத்தகைய ஒரு கல்லூரிக் கல்வி குறித்து இன்றைக்கு அதிக கவனம் செலுத்த வேண்டும். கல்லூரிகளைப் பொறுத்தவரையில், அங்கே டெமான்ஸ்ட்டிரேட்டர்களை, விளக்குநர்களை எல்லாம் வைத்திருந்தார்கள். அதே கல்வியைத்தான் இன்றைக்கு மேல் நிலைப் பள்ளிகளில் சொல்லிக் கொடுக்கும்போது டெமான்ஸ்ட்டிரேட்டர்கள், விளக்குநர்கள் இல்லாமல் ஆசிரியர்களை மட்டும் வைத்துச் சொல்லிக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். இந்நிலையில் மேல் நிலைப் பள்ளிக் கல்வியைப் பொறுத்தவரையிலும் கூட, கல்லூரிகளில் சொல்லிக் கொடுக்கப்பட்ட கல்வி போல் அதிக கவனம் செலுத்த வேண்டும். அந்த வகையில் மேல் நிலைப் பள்ளிகளில் எல்லாம் விளக்குநர்களை அரசு நியமனம் செய்யும் கருத்துரு ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆரம்பத்திலேயே அதைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன். கல்லூரிகளில் நடைபெறுவது லெக்சர் அல்லது விரிவுரையாகும். அங்கு 60 மாணவர்கள் உட்கார்ந்திருப்பார்கள். ஆசிரியர் விரிவுரை செய்வார். அதை யார் கேட்டுக்கொண்டிருப்பது, அதில் கேட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு ஏதாவது சந்தேகம் இருக்கிறதா என்பதுபற்றியெல்லாம் அவர் பார்க்கமாட்டார். ஆனால் பள்ளிகள் என்று வரும்போது, அங்கு கல்வியைப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் சொல்லிக் கொடுக்கிறார்கள். அங்கு 35 மாணவர்கள் உட்கார்ந்துகொண்டிருப்பார்கள். ஆசிரியர் பாடம் சொல்லித் தருவார். கேள்வி கேட்பார். மாணவர்கள் அதற்கு பதில் சொல்வார்கள். ஆசிரியர் மாணவர்கள் பக்கத்திற்குப் போய் தனிக் கவனம் 'பெர்சனல் அட்டென்ஷன்' செலுத்துவார். அத்தகைய கல்வி முறையைத் தான் இன்றைக்கு நாம் மேல் நிலைப் பள்ளிகளில் வைத்துக்கொண்டிருக்கிறோம். மாணவர்கள் லெச்சர் நடைபெறுகிற வகுப்புகளில் உட்கார்ந்து பெற்று வந்த கல்வியை இங்கேயும் பெறக் கூடாது, கல்வியின் தரம் உயர வேண்டும் என்று நினைத்துத்தான் 'வகுப்புக் கல்வி' ஆக மேல் நிலைப் பள்ளிகளில் இதனை வைத்துக் கொண்டிருக்கிறோம். லெக்சர் நடத்துகிற இடங்களுக்குத்தான் லெக்சரார்ஸ், டெமான்ட்டிரேட்டர்கள் எல்லாம் தேவைப் படுவார்கள் அல்லது டியுட்டோரியல் வகுப்புகள் நடைபெறுகிற இடங் களுக்கு அவர்கள் தேவைப்படுவார்கள். ஆனால் மேல் நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில், அப்படிப்பட்ட லெக்சரர்ஸ் தேவையில்லை. மேல் நிலைப் பள்ளிகளை 'பள்ளி வகுப்புகள்' போல நடத்த வேண்டுமேயொழிய, டியுட்டோரியல் போல் நடத்த வேண்டுமென்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. பள்ளி வகுப்புகளில் லெக்சர் பண்ணக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Regularisation of Services of Teachers in High Schools taken over by Government

*232. *Q.*—THIRU P. R. THOMAS and THIRU K. MEENAKSHI SUNDARAM : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that a large number of different categories of teachers serving in the High Schools, taken over by the Government from Aided Managements, are undergoing much hardship for want of regularisation of their services;

(*b*) if so, the number of Schools taken over by the Government and the number of teachers, so affected; and

(*c*) the action taken so far for regularising their services?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (இ) அரசால் எடுத்துக்கொள்ளப்பட்ட ஆறு தனியார் உயர் நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களில், ஆலத்தம்பாடி ஜானகி அண்ணி உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றும் ஒரு புட்டதாரி ஆசிரியரைத் தவிர, ஏனையோரை அரசுப் பணிக்கு ஈர்த்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அவர்கள் அரசு ஊழியர்களுக்குரிய அனைத்துச் சலுகைகளும் பெற்று வருகிறார்கள்.

(உ) மேற்கூறிய ஒரு பட்டதாரி ஆசிறியரையும் அரசுப் பணிக்கு ஈர்த்துக் கொள்ளும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(பிற்பகல் 4-30)

திரு. பா. ரா. தாமஸ் : இவ்வாறு தனியார் பள்ளிகளை அரசு மேற்கொள்ளும்போது, ஆசிரியப் பெருமக்களை, அதிலும் குறிப்பாக பட்டதாரி ஆசிரியர்களை மட்டும் ஈர்ப்பதில் அதிகக் காலதாமதம் ஏற்படுகிறது. இதன் காரணமாக அவர்கள் ஊதிய உயர்வு பெறுதல், தேர்வு நிலை பெறுதல் போன்ற சிறப்புச் சலுகைகளைப் பெற முடியாத நிலை இருக்கிறது. எனவே பொதுவாக இப்படி தனியார் பள்ளிகளை அரசு ஈர்க்கும்போது, அப்போதே தேர்வாணைக் குழுவின் அனுமதியைப் பெற்றுவிட்டால், சிக்கல் ஏற்படாது. சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை ஈர்ப்பதற்கும் விரைவாக ஒப்புதல் பெற்றுவிட்டால், அனைத்துச் சலுகைகளும் ஆசிரியர்களுக்குக் கிடைக்கும் என்பதால், அமைச்சர் அவர்கள் இதுபற்றி நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தேர்வாணைக் குழுவின் அனுமதி பெற்று மேற்கூறிய பட்டதாரி ஆசிரியரையும் அரசுப் பணிக்கு ஈர்த்துக்கொள்ளும் முடிவை அரசு எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தஞ்சை மாவட்டம் ஆலத்தம்பாடி ஜானகி அண்ணி உயர் நிலைப் பள்ளியை அரசு ஈர்த்தது. அதில் திரு. ராஜ்குமார் என்கிற பி. டி. அசிஸ்டெண்ட் 1—6—1976-ல் அரசுப் பணியில் ஈர்க்கப்பட்டாலும், கடந்த 6 ஆண்டுக் காலமாக தேர்வாணைக் குழுவின் மூலம் பணி ஈர்ப்பு செய்யப்படாத காரணத்தால், பல்வேறு சலுகைகள் பெற முடியாமல் அவருக்கு அநேக இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இதற்கு தேர்வாணைக் குழுவின் அனுமதி வேண்டும் என்று சொல்லப்படுகிறது. தேர்வாணைக் குழு தன்னுடைய தவிர்ப்பை வழங்க வேண்டுமென்றால், அந்த ஆசிரியர் அரசுப் பள்ளியை ஏற்பதற்கு முன்பு குறைந்தது 2 ஆண்டுக் காலமாவது பணியாற்றியிருக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. இம்மாதிரிதான் தேர்வாணைக் குழு குறிப்பு அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது. குறிப்பிட்ட இந்த ஆசிரியர் 9 மாத காலம்தான் அந்தப் பள்ளியில் பணியாற்றியிருக்கிறார். எனினும் 6 ஆண்டுக் காலமாக அந்த ஆசிரியரின் பணி ஈர்ப்புச் செய்யப்படாத காரணத்தால்—அவர் இப்போது திட்டச்சேரியிலுள்ள பள்ளிக்கு மாற்றப்பட்டிருந்தாலும்—பணி ஈர்ப்பு செய்யப்படாமல் மிகவும் அல்லற்படுகிறார். எனவே தேர்வாணைக் குழுவின் தவிர்ப்பைப் பெறுவதற்கு இன்னும் காலங் கடத்தாமல் இருப்பதற்கு உரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : காலதாமதமாவதற்கான காரணத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே இங்கே தெரிவித்துவிட்டார்கள். தேர்வாணைக் குழு ஒப்புதல் அளிக்காத காரணத்தால்தான், இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மறுபடியும் இப்போது நாங்கள் முயற்சியை மேற்கொண்டிருக்கிறோம். அதில் வெற்றி பெறுவோம் என்றுதான் கருதுகிறேன்.

திரு. செ. முத்துசாமி : தனியார் பள்ளிகளையும், மற்றும் ஊராட்சி ஒன்றியம் அல்லது உள்ளாட்சித் துறையிலிருக்கும் பள்ளிகளை எடுக்கும்போது அல்லது அப்கிரடேஷன்—நடு நிலைப் பள்ளியாக இருப்பதை உயர் நிலைப் பள்ளியாக உயர்த்தும்போது—செய்யும்போது ஆசிரியர்களை ஈர்ப்பதில் பல ஆண்டுக்காலம் தாமதமாகிறது. இதைத் தவிர்க்கும் முறையில் தேர்வாணைக் குழுவின் அனுமதியை அல்லது தவிர்ப்பைப் பெற வேண்டாம் என்கிற முடிவை அரசு மேற்கொள்ளுமா ? தற்போது 2, 3 அல்லது 4, 5 ஆண்டுகளானாலும் பின்னாலே தேர்வாணைக் குழுவின் தவிர்ப்பு பெறப்படுகிறது. இந்த நிலையை நீக்கி, அரசாங்கம் இத்தகைய பள்ளிகளை எடுக்கும்போது, இனி தேர்வாணைக் குழுவின் ஒப்புதல் தேவையில்லை என்கிற அளவுக்கு ஒரு

மொத்தமான தவிர்ப்பை வழங்க அரசு முன்வருமா? அப்படிப்பட்ட முறை மூலமாகத்தான் ஆசிரியர்களின் பணியை விரைவில் ஈர்க்க முடியும் என்பதால், அரசு இந்த முறையைக் கையாள முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தேர்வாணைக் குழுவின் அதிகார வரம்பிலிருந்து இதை எடுத்துவிட்டால், பிரச்சினையே இருக்காது என்பது உண்மைதான். ஆனால் அப்படி எடுத்துவிட வேண்டுமா என்பதுதான் பரிசீலிக்கப்பட வேண்டிய பிரச்சினையாக இருக்கிறது. இதன் காரணமாக ஆசிரியர்கள் 4 அல்லது 5 ஆண்டுக் காலம் பாதிக்கப்படுகிறார்கள் என்பது உண்மைதான். அப்படிப் பாதிக்கப்படாதிருக்க என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதைக் குறித்து அரசு பரிசீலிக்கும்.

நகர்ப்புற வக்ப் வாரிய சொத்துக்கள் மேம்பாட்டுத் திட்டம்.

* 1 கு.கா. வினா.—டாக்டர் இரா. சனார்த்தனம்: மாண்புமிகு நீர்ப் பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நகர்ப்புற வக்ப் வாரியத்தின் சொத்துக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் எத்தனை வக்ப் வாரியத்தைச் சேர்ந்த நிறுவனங்களுக்குக் கடன் வழங்கப்பட்டிருக்கிறது ?

(இ) அதை கூடுதலாக உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(உ) ஆம் எனில், இதுவரை வழங்கப்பட்டிருக்கும் நிறுவனங்களுக்கும் அவ்வாறு உயர்த்தப்பட்ட தொகை அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : (அ) 13 (பதிமூன்று). ஆனால் இவைகள் வக்ப் வாரியத்தின் சொத்துக்கள் அல்ல, தனிப்பட்ட வக்ப்புகள்.

(இ) இல்லை.

(உ) கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம் : இம்மாதிரியான நிறுவனங்கள் மாவட்ட ரீதியாக எவ்வளவு இருக்கின்றன ? இவற்றின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: நகர்ப்புற வக்ப் வாரியத்தின் சொத்துக்களை மேம்பாடு செய்யும் திட்டத்தின்கீழ் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் கடன் தொகையைக் கூடுதலாக்க அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா என்ற வினாவிற்கு இல்லை என்று பதில் அளித்தேன். அதிகபட்சமாக ரூ. 1,50,000 வரை நகர்ப்புற வக்ப்க்கு கடன் உதவி தரப்படுகிறது.

இன்னொரு கேள்வி எத்தனை வக்ப்களுக்கு இத்தகைய கடன் உதவி கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதாகும். அதற்கு இதுவரை ரூ. 10,05,500, 13 வக்ப்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்றேன். மேலும் 14 வக்ப்களுக்கு ரூ. 11,97,000 அபிவிருத்தி கடன் வழங்குவதற்கு அரசு இப்போது அனுமதி வழங்கியிருக்கிறது.

டாக்டர் இரா. சனார்த்தனம் : இந்தத் தொகையை அதிகப்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : கடந்த 2, 3 ஆண்டுகளாகத் திரும்பத் திரும்பச் சொல்லித்தான் இந்தக் கடன் உதவியைக் கூட தர வேண்டிய நிலையில் அரசு இருக்கிறது. நாமாகவே போய் வலிய பிரச்சாரம் செய்து கடன் தொகையைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று சொல்லி, அதற்குப் பிறகுதான் இந்தத் தொகையையே கூட கொடுக்க முடிந்திருக்கிறது. கிருத்துவ சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் மிகச் சிறந்த முறையில் ஆலயத்திற்குச் சொந்தமான சொத்துக்களைப் பராமரிக்கிறார்கள். எந்த இடத்தையும் அவர்கள் சாதாரணமாக "ஐடிலாக" பயனில்லாமல் வைத்திருப்பதில்லை. அந்த எண்ணத்தின் அடிப்படையில் லட்சக் கணக்கான மதிப்புள்ள வக்ப் சொத்துக்களை நல்ல முறையில் 'டெவலப்' செய்ய வேண்டும் என்று இந்த நிதியை ஒதுக்குகிறோம். இந்த நிதியை ஒழுங்காக வாங்கிப் பயன்படுத்துவதில் ஆர்வம் காட்டினால், அடுத்த ஆண்டு இதற்கு மேலும் அதிகமான தொகையை ஒதுக்குவதுபற்றிப் பரிசீலிக்கலாம்.

Cement Permits

216. Q—Thiru—K.§ RAMAMOORTHY: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the number of applications pending before the Tahsildar, Tindivanam, as on 1st March 1981, for Cement Permits;

(b) the number of those applicants who have not been granted even a single bag of Cement for the past one year and more; and

(c) the reasons therefor?

§ 27—3—1982 தேதிய வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்ட வினா.

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : (அ) 20 மூட்டைகளுக்கு கீழ்—312

20 மூட்டைகளுக்கு மேல்—345

657

(இ) இல்லை.

(உ) எழவில்லை.

திரு. க. இராமமூர்த்தி : இந்தக் குறிப்பிட்ட வட்டாட்சியரிடம் பலர் சிமெண்டுக்கான அனுமதி பெற்றிருந்தும்கூட, அவர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட கடைகளில் சிமிண்டு மூட்டை கிடைக்காமல் அவதிப்பட்டதும்—இப்போது அந்த முறை நீக்கப்பட்டது என்றாலும் கூட—அதில் பலருக்கு இன்று வரை சிமெண்ட் மூட்டை கிடைக்கவில்லை என்பதும் அரசுக்குத் தெரியுமா ? அதுபற்றிய பல புகார்கள் மாவட்ட அளவிலும் வட்ட ஆட்சியர் அளவிலும் செய்யப்பட்டும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : இங்கே கேட்கப்பட்ட கேள்வி திண்டிவனம் வட்டாட்சியரிடம் சிமெண்ட் அனுமதிக்காக நிலுவையிலிருந்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை என்ன என்பதாகும். ' அந்த விவரத்தைத் தான் நான் சொன்னேன். ஏற்கெனவே தாசில்தார் பெர்மிட் கொடுத்திருந்தாலும், அவை இனிமேல் செல்லுபடியாகாது. இதில் ஏற்கெனவே ஏதாவது தவறு நடந்திருக்குமானால், ஊழல் நடந்திருக்குமானால், அதைப்பற்றி விசாரிக்கலாம். என்றாலும் அவர் கொடுத்த பெர்மிட்டுகள் அனைத்தும் இப்போது 'இன்வாலிட்' ஆகிவிட்டன. 800 சதுர அடி பரப்புள்ள வீடுகள் கட்டுகிறபோது, அதற்கான சிமெண்டை கோவாப்பரேட்டிவ் சொசைடியிலிருந்து ஆர்.டி.ஓ. அல்லது டி.டி. ஓ. மூலம் பெர்மிட் பெற்று வாங்கிக் கொள்ளலாம். அதுதான் இனிமேல் இருக்கும் நடைமுறையாகும். ஏற்கெனவே தாசில்தாரிடம் பெண்டிங்கில் இருந்தாலும், அது பயன்படாது. இனிமேல் ஆர்.டி.ஓ. வுக்குத்தான் மனு செய்ய வேண்டும்.

திரு. க. இராமமூர்த்தி : இன்றையச் சூழ்நிலையில் என்னுடைய வினாவின் முக்கியத்துவம் போய்விட்டது என்பதை நான் அறிவேன். இருந்தாலும் சிமின்டு விநியோகத்தைப் பொறுத்த வரையில், அந்தப் பகுதியில் அதை ஒரு துணைத் தொழில் போல் வைத்துக்கொண்டு வாங்குகிற சம்பளத்திற்கும் அதிகமாக 'லைசென்ஸ்' கொடுப்பதன் மூலமாக அவர்கள் வருமானத்தைத் தேடிக் கொண்டிருந்தார்கள் என்ற நிலைமையை அரசுக்கு உணர்த்துவதற்காகத்தான் இந்தத் துணை வினாவைக் கேட்டேன். குறைந்தபட்சம் இதைக் கருத்தில் கொண்டு இதுபோன்ற குற்றச்சாட்டுகளுக்கு ஆளானவர்கள் அல்லது இதைப்போன்று புகார் சொல்லப்பட்டு விசாரிக்கப்பட்டதோ அல்லது விசாரித்தும் நடவடிக்கை எடுக்கவில்லையோ—அப்படிப்பட்டவர்களிடம் இத்தகைய பொறுப்பை மீண்டும் தாராமலிருக்க அரசு முன்வருமா?

(பிற்பகல் 4.40)

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, வட்டாட்சியர், பி.டி.ஓ. க்கள் போன்றவர்களிடத்திலே பெர்மிட் வழங்குகிற அதிகாரம் இருந்த காரணத்தாலே, அவர்களிலே சில பேர் இதைப் போல தவறு செய்கிறார்கள் என்று அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்த பிறகு, அந்த அதிகாரத்தை மாண்புமிகு முதல்வர், புரட்சித் தலைவர் அவர்கள் ஆர்.டி.ஓ., டி.டி.ஓ., ஆகியவர்களிடத்திலும் சென்னை போன்ற இடத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர், அவருடைய நேர்முக உதவியாளர் ஆகியவர்களிடமும் இன்றையதினம் வழங்கியிருக்கிறார். ஏற்கெனவே தவறுகள் நடைபெற்றிருந்த இடங்கள் பற்றி அரசின் கவனத்திற்கு வருகிற போது, முன்னால் நடந்த தவறாக இருந்தாலும், தவறு செய்கிறவர்கள் தண்டிக்கப்பட வேண்டும், கண்டிக்கப்பட வேண்டும். அது குறித்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

(1) ஆளுநரிடமிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : ஆளுநர் அவர்கள் கீழ்க்கண்ட சட்டமுன்வடிவுகளை ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கு தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள் :

1. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு.
2. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்டமுன்வடிவு.

(2) பேரவையிலிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, அரசியலமைப்புச் சட்டப்படி பணச் சட்டமுன்வடிவு என பேரவைத் தலைவரால் நிர்மானிக்கப்பட்டு இம்மேலவையின் பரிந்துரைக்காக பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு கீழ்க்கண்ட சட்டமுன்வடிவுகள் மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெறப்பட்டுள்ளன :—

1. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1982).
2. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (என். 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு என். 26/1982).

(3) உறுதிமொழிக் குழுவிற்கு உறுப்பினர்களை நியமித்தல்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மேலவை விதி 175-ன்படி 1982-83 ஆம் ஆண்டுக்கான அரசு உறுதிமொழிக் குழுவிற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்களை மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள் நியமித்துள்ளார்கள் :—

1. திரு. ம. சங்கரலிங்கம்—தலைவர்
2. டாக்டர் தி. இரா. சனார்த்தனம்
3. திரு. பா. ரா. தாமஸ்
4. திரு. ஏ. ஜே. தாஸ்
5. திரு. ப. மாணிக்கம்
6. திரு. வி. வி. வி. ஆனந்தம்
7. திரு. ஈ. எஸ். வெங்கடேசன்

(4) உரிமைக் குழுவிற்கு உறுப்பினர்களை நியமித்தல்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : 1982-83 ஆம் நிதியாண்டிற்குரிய உரிமைக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய ஒன்பது உறுப்பினர் பதவிகளுக்கு, கீழ்க்கண்ட உறுப்பினர்கள் முறையாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள் :

1. திரு. ஈ. வெ. அ. வள்ளிமுத்து

2. திரு. ஏ. ஆர். தாமோதரன்

3. திரு. ஆ. நல்லசிவன்

4. திரு. க. இராமமூர்த்தி

5. டாக்டர் தி. இரா. சனார்த்தனம்

6. திரு. ஆற்காடு நா. வீராசாமி

7. திரு. ஈ. எஸ். வெங்கடேசன்

8. திரு. ஜேப்பியார்

9. செல்வி ஆ. லீலாவதி

நியமனம் செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையானது, அதாவது ஒன்பது, நிரப்பப்பட வேண்டிய காலியிடங்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், இந்த ஒன்பது உறுப்பினர்களும், உரிமைக் குழுவிற்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கிறேன்.

மேலவை விதி 156 (1)-ன்படி மாண்புமிகு மேலவை முன்னவர், அவைத் துணைத் தலைவர், பிரதான எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் இந்தக் குழுவின் உறுப்பினர்களாவர்.

சட்டமன்ற மேலவை விதிகளில் 156(4) விதியின் கீழ் துணைத் தலைவர் அவர்களை இக்குழுவின் தலைவராயிருக்கும்படி மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள் நியமித்துள்ளார்கள்.

(5) அவைக் குழுவிற்கு உறுப்பினர்களை நியமித்தல்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : 1982-83 ஆம் நிதியாண்டிற்குரிய அவைக் குழுவிற்கு தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய ஆறு உறுப்பினர் பதவிகளுக்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் முறையாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள் :

1. செல்வி ஆ. லீலாவதி

2. திருமதி சீத்தாதேவி கிருஷ்ணசாமி

3. திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி

4. திரு. காடுவெட்டி கண்ணப்பன்

5. திரு. எஸ். ஆறுமுகம்

6. திருமதி தாரா செரியன்

நியமனம் செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையானது, அதாவது ஆறு, நிரப்பப்பட வேண்டிய காலியிடங்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், இந்த ஆறு உறுப்பினர்களும், அவைக் குழுவிற்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கிறேன். அத்துடன் மேலவை விதி 173(1)-ன்படி கீழ்க்கண்ட உறுப்பினர்களை மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள் நியமித்துள்ளார்கள் :—

1. திரு. ஈ. வெ. அ. வள்ளிமுத்து
2. திரு. பி. முனுசாமி

மேலவைத் துணைத் தலைவர், அலுவல் முறையில், குழுவின் தலைவராவார்.

3. கவன ஈர்ப்பு.

(1) திண்டுக்கல் சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியப் பள்ளிச் சிறுவர்களுக்கு மதிய உணவு வழங்குவதை 1—2—1982-லிருந்து நிறுத்தியது குறித்தும் மற்றும் அருப்புக்கோட்டை நகராட்சி அரசு மானிய உதவி பெறும் பள்ளிக்கு 1979 செப்டம்பர் முதல் 22 மாதங்களுக்கு மதிய உணவுத் திட்டத்தின் செலவுக்கு பணம் கொடுக்காதது குறித்தும்.

திரு. பா. ரா. தாமஸ்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர் களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

" திண்டுக்கல் சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியப் பள்ளிச் சிறுவர்களுக்கு மதிய உணவு வழங்குவதை 1—2—1982-லிருந்து நிறுத்தியது குறித்தும் மற்றும் அருப்புக்கோட்டை நகராட்சிப் பகுதியிலுள்ள அரசு மானிய உதவிபெறும் பள்ளிகளைச் சேர்ந்த செயலாளர்களுக்கும் தலைமை ஆசிரியர்களுக்கும் 1979 செப்டம்பரிலிருந்து 1980 செப்டம்பர் வரையிலும், 1981 மார்ச் முதல் நாளது வரையிலான 22 மாதங்களுக்கு மதிய உணவுத் திட்டத்தின் செலவுக்கு மாண வர் ஒருவருக்கு 5 காசு விதம் ஆணையாளர் வழங்கவில்லை என்பது குறித்தும் ".

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, விவா அறிக்கை @ ஒன்று அவையின்முன் வைக்கப்பட் டிருக்கிறது.

திரு. பா. ரா. தாமஸ்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டையைப் பொறுத்தவரையில், 17 தனியார் பள்ளி மையங்களில் 22 மாதங்களாக மதிய உணவுக்காகக் கொடுக்க வேண்டிய தன் பங்கான ஐந்து பைசாவை நகராட்சி கொடுக்காத காரணத்தாலே, அங்குள்ள ஆசிரியர்கள், ஏழை மாணவர்களுக்காக, 22—3—1982-லிருந்து உண்ணாவிரதம் இருந்ததைத் தொடர்ந்து மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து, ஆணை யாளர் 51 ஆயிரம் ரூபாயை ஆசிரியர்களுக்கு ஈட்டுத்தொகையாகக் கொடுத்த தற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

@ 838 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

திண்டுக்கல் சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியப் பள்ளியைப் பொறுத்தவரை யில், ஊராட்சி ஒன்றியத்திலிருந்து இதற்கான ஐந்து பைசாவைக் கொடுக்காத காரணத்தால், 1—2—1982-லிருந்து மதிய உணவு மாணவர்களுக்குக் கொடுக்க மாட்டோம் என்று சொல்லி—பத்து பைசாவில் உணவு தயாரித்துக் கொடுத் தால் பொது மக்கள் தவறாகக் கருதுவார்கள் என்பதால்—நிறுத்தியிருக்கிறார் கள் என்று சொல்லப்படுகிறது. ஆகவே மாவட்ட ஆட்சித் தலைவர் ஊராட்சி ஒன்றிய ஆணையாளரிடமிருந்து அந்தப் பணத்தைப் பெற்று 75 மாணவர்கள் மதிய உணவு மையங்களுக்குக் கொடுத்து விட்டார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இந்த விவா அறிக்கையில், அண்மை யில் அப்பங்குத் தொகையை ஊராட்சி ஒன்றியம் அப்பள்ளிகளிடம் கொடுத்து விட்டதால், தற்போது மதிய உணவு தொடர்ந்து கொடுக்கப்படுவதாக அறிக்கை வந்துள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

திரு. பா. ரா. தாமஸ்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர் களே, எனக்குக் கொடுக்கப்பட்ட தகவல்படி, 9—2—1982 அன்று வரை கொடுக்கப்படவில்லை. அதற்குப் பிறகு கொடுத்திருந்தால், நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மதிய உணவுத் திட்டத்திற்காக 1974 ஆம் ஆண்டிலே ஒரு மாணவ னுக்கு 15 காசுகள் வழங்க வேண்டுமென்று திட்டமிடப்பட்டது. இப்போது விலைவாசி உயர்ந்திருப்பதால் அரிசி, மளிகைச் சாமான்கள், சமையல் கட்ட ணம், கேஸ் போன்ற பல செலவுகள் உயர்ந்திருப்பதால், 15 காசுகளுக்குத் தர மான உணவு எவ்வாறு கொடுக்க இயலும்? இதனால் பிள்ளைகளும் வேதனைப் படுகிறார்கள், பெற்றோர்களும் சஞ்சலப்படுகிறார்கள். ஆகவே 15 காசு களை உயர்த்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இப்போது அத்தகைய யோசனை இல்லை. வேறு சில புதிய திட்டங்கள் வருவதால், அந்தச் சூழ்நிலையில் எப்படி நடந்துகொள்ள முடியும் என்பதைப்பற்றி ஆராயலாம்.

(2) வட ஆற்காடு மாவட்டம், கோணலம் கிராமத்திலுள்ள இடுகாட்டில் இறந்து போன ஆதி திராவிட மூதாட்டியின் சடலத்தை புதைக்கவிடாமல் ஜாதி ஹிந்துக்கள் தடுத்ததும் ஆதி திராவிடர்கள் தாக்கப்பட்டதும் குறித்து.

[திரு. பா. ரா. தாமஸ்] [1982 மார்ச் 30

திரு. வி. வி. வி. ஆனந்தம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன் :

" வட ஆற்காடு மாவட்டம், கோணலம் கிராமத்தில் உள்ள இடுகாட்டில் இறந்துபோன ஹரிஜன மூதாட்டி ஒருவரின் சடலத்தை புதைக்கும்போது அந்தக் கிராம ஜாதி ஹிந்துக்கள் புதைக்க விடாமல் தடுத்ததும், ஹரிஜனங்கள் தாக்கப்பட்டதும், அதனால் கிராமத்திலுள்ள அத்தனை ஹரிஜனக் குடும்பங்களும் கிராமத்திலிருந்து வெளியேறி சென்றுவிட்டது குறித்தும் ".

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, அதுபற்றி விவர அறிக்கை @ அவையின்முன் வைக்கப் பட்டிருக்கிறது.

திரு. வி. வி. வி. ஆனந்தம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நமது நாடு விடுதலை அடைந்து ஏறத்தாழ 35 ஆண்டுகள் ஆகியும்கூட, இன்றும் ஆதி திராவிட சகோதரர்களுக்கு இடுகாட்டிலேகூட சம உரிமை அளிக்கப்படவில்லை. அவர்களுக்கென்று தனி இடுகாடு ஒதுக்கும் திட்டத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இடுகாட்டில் எல்லோருக்கும் போல அவர்களுக்கும் சம உரிமை கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மேலும் இந்த நிகழ்ச்சி 4—10—1981 அன்று நடந்திருக்கிறது. சுமார் 80 வயதுடைய நாகம்மாள் என்ற ஆதி திராவிட மூதாட்டி இறந்துவிட்டார். அவரை இடுகாட்டில் சென்று புதைக்கும்போது, ஜாதி இந்துக்கள் மறுதளித்ததால் ஏற்பட்ட பிரச்சினைக்கு 3—3—1982 அன்றுதான் சமாதானத் தீர்வு கண்டிருக்கிறார்கள். இந்த ஐந்து மாத இடைவெளிக்குக் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

@ 839 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது

1982 மார்ச் 30]

(பிற்பகல் 4-50)

* மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்டிருக்கக்கூடிய இந்தக் கிராமத்தைப் பொறுத்த வரையிலே, அங்கே ஆதி திராவிடர்களுக்கும் மற்ற ஜாதி இந்துகளுக்கும் இடையே தொடர்ந்து இந்த இடுகாட்டினைக் குறித்து பல ஆண்டுக்காலமாகவே பிரச்சினை இருந்தது. குறிப்பிட்ட அந்தத் தினத்தன்று ஆதி திராவிடர்கள் அந்த இடுகாட்டிலே அந்த மூதாட்டியைப் புதைக்கின்றபோது, அங்கே அவர்களுக்குள்ளேயே தகராறு ஏற்பட்டதன் காரணமாக இது அதிகாரிகளுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. ஆனால் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கின்றபோது, ஜாதி இந்துக்கள் ஆதி திராவிடர்கள், வெளி ஆட்களுடைய தலையீடு காரணமாக, இடுகாட்டுப் பிரச்சினையை விட்டுவிட்டு, ஆதி திராவிட மக்கள் வசிக்கக்கூடிய பகுதியில் குறிப்பாக அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்றும், தற்போது அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கக்கூடிய இடத்தை வேறு இடத்திற்கு மாற்றி அளிக்க வேண்டும் என்றும், மாற்றி குடியமர்த்த வேண்டும் என்றும் கோரிக்கைகளை வைத்ததன் காரணமாக காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. அரசு இதிலே நடவடிக்கை எடுத்தது. ஆனால் அந்த குறிப்பிட்ட மக்கள் கேட்டிருக்கக்கூடிய அந்தக் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு, இந்த மக்களை வேறு இடத்திலே குடியமர்த்துகின்றபோது இந்த ஆதி திராவிடர்கள் வைத்திருக்கக்கூடிய முக்கியமான பிரச்சினைகள் தமிழகத்திலே இருக்கக்கூடிய மற்ற பகுதிகளுக்குப் பரவிவிடும் என்ற எண்ணம் இருந்தது. அவர்கள் ஏற்கெனவே இருந்துவந்த பகுதியானது அரசினால் தனியாரிடத்திலேயிருந்து கையகப்படுத்தி அவர்களுக்கு அளிக்கப்பட்ட இடமாகும். அரசு அவர்களுடைய கோரிக்கைகளை ஏற்று புதிதாக வேறு இடத்தை ஏற்பாடு செய்தருமானால், அது மற்ற இடங்களிலே உள்ள ஆதி திராவிட மக்களுக்கு முன்உதாரணமாக மாறி தமிழகத்திலே இருக்கக்கூடிய சகஜ நிலை மாறிவிடும் என்ற காரணத்தினாலேதான் இப்படி தாமதம் ஏற்பட்டிருக்கிறது.

வட ஆற்காடு மாவட்டம், கோணலம் கிராமத்திலுள்ள இடுகாட்டில் இறந்து போன ஆதி திராவிட மூதாட்டியின் சடலத்தைப் புதைக்க விடாமல் ஜாதி ஹிந்துக்கள் தடுத்ததும், ஆதி திராவிடர்கள் தாக்கப்பட்டதும் குறித்து

[1982 மார்ச் 30

திரு. வி. வி. வி. ஆனந்தம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து எழுச்சி மன்றம் என்ற பெயரால் ஜாதி இந்துக்களுக்கும் ஆதி திராவிட சமூகத்தினருக்கும் இடையே இனத் துவேஷத்தை, தீண்டாமையை வளர்ப்பதற்கு, இந்த இந்து எழுச்சி மன்றங்கள் சில அறிக்கைகளை ஜாதி இந்துக்களுக்கு அனுப்பி வருகின்றார்கள் என்பதை அரசு அறியுமா? அப்பேர்ப்பட்ட மன்றங்களுடைய இந்த சாதி வேறுபாட்டை வளர்க்கும் திட்டங்களைத் தடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, இதுபோன்ற நிலைமைகள் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. தகுந்த ஆதாரங்களோடு கொண்டுவரப்பட்டால், அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

4. அரசின் தீர்மானங்கள்.

(1) சட்ட மன்றப் பேரவையின் பொதுக் கணக்குக் குழுவில் பணியாற்ற ஐந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

" 1982-83 ஆம் நிதியாண்டிற்குரிய சட்டப் பேரவை பொதுக் கணக்குக் குழுவில் பணியாற்ற டாக்டர் தி. இரா. சனார்த்தனம், திரு. சி.ரா. லெட்சுமி காந்தன், திரு. எஸ். முத்து, திரு. சோ. ஆறுமுகம், திரு. க. இராமமூர்த்தி, ஆகிய ஐந்து சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :

" 1982-83 ஆம் நிதியாண்டிற்குரிய சட்டப் பேரவை பொதுக் கணக்குக் குழுவில் பணியாற்ற டாக்டர் தி. இரா. சனார்த்தனம், திரு. சி. ரா. லெட்சுமி காந்தன், திரு. எஸ். முத்து, திரு. சோ. ஆறுமுகம், திரு. க. இராமமூர்த்தி ஆகிய ஐந்து சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(2) சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழுவில் பணியாற்ற ஐந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

" 1982-83 ஆம் நிதியாண்டிற்குரிய சட்டப் பேரவை மதிப்பீட்டுக் குழுவில் பணியாற்ற திரு. நிலநாராயணன், திரு. காடுவெட்டி கன்னப்பன், திரு. ப. மாணிக்கம், திரு. வி. வி. வி. ஆனந்தம், திரு. எ. ஜே. தாஸ் ஆகிய ஐந்து சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

" 1982-83 ஆம் நிதியாண்டிற்குரிய சட்டப் பேரவை மதிப்பீட்டுக் குழுவில் பணியாற்ற திரு. நிலநாராயணன், திரு. காடுவெட்டி கன்னப்பன், திரு. ப. மாணிக்கம், திரு. வி. வி. வி. ஆனந்தம், திரு. எ. ஜே. தாஸ் ஆகிய ஐந்து சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(3) சட்டமன்றப் பேரவையின் துணைச் சட்ட ஆய்வுக் குழுவில் பணியாற்ற ஐந்து உறுப்பினர்களை நியமனம் செய்தல்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

" 1982-83 ஆம் நிதியாண்டிற்குரிய சட்டப் பேரவை துணைச் சட்ட ஆய்வுக் குழுவில் பணியாற்ற திரு. ச. வே. அ. வள்ளிமுத்து, திரு. க. மீனாட்சி சுந்தரம், திரு. எஸ். முத்துசாமி, திரு. ஜேப்பியார், திரு. ம. சங்கரலிங்கம், ஆகிய ஐந்து மேலவை உறுப்பினர்களை மேலவை நியமனம் செய்கிறது" என்று முன்மொழிகிறேன்.

D 2 C 9—5

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

" 1982-83 ஆம் நிதியாண்டிற்குரிய சட்டப் பேரவை துணைச் சட்ட ஆய்வுக் குழுவில் பணியாற்ற திரு. ஈ. வே. அ. வள்ளிமுத்து, திரு. க. மீனாட்சி சுந்தரம், திரு எஸ். முத்துசாமி, திரு. ஜேப்பியார், திரு. ம. சங்கரலிங்கம் ஆகிய ஐந்து மேலவை உறுப்பினர்களை மேலவை நியமனம் செய்கிறது."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(4) சட்டமன்றப் பேரவையின் பொதுத் தொழில் நிறுவனங்கள் குழுவில் பணியாற்ற ஐந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

" 1982-83 ஆம் நிதியாண்டிற்குரிய சட்டப் பேரவை பொதுத் தொழில் நிறுவனங்கள் குழுவில் பணியாற்ற திரு. எஸ். ஆர். இராதா, திரு. சி. இராமலிங்கம், திரு. எ. ஆர். தாமோதரன், திரு. பா. ரா. தாமஸ், திரு. ஆர். டி. சீத்தாபதி ஆகிய ஐந்து சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

" 1982-83 ஆம் நிதியாண்டிற்குரிய சட்டப் பேரவை பொதுத் தொழில் நிறுவனங்கள் குழுவில் பணியாற்ற திரு. எஸ். ஆர். இராதா, திரு. சி. இராமலிங்கம், திரு. எ. ஆர். தாமோதரன், திரு. பா. ரா. தாமஸ், திரு. ஆர். டி. சீத்தாபதி ஆகிய ஐந்து சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(5) அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்தாறாவது அறிக்கையை அளித்தல்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்தாறாவது அறிக்கையை அரசு உறுதிமொழிக் குழுத் தலைவரின் சார்பாக அளிக்கிறேன்.

6. அரசின் சட்ட முன்வடிவுகள்.

(1) தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1982).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவரவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1982 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1982) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் "

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1982 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1982) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் ".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பரிந்துரை ஏதுமில்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவரவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1982) திருப்பியனுப்பப்பட வேண்டும் "

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1982) திருப்பியனுப்பப்பட வேண்டும் ".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

@ 122-124 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

(2) தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1982).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1982 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1982) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1982) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதிலே மகிழ்ச்சியடைகிறேன். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் எல்லாப் பகுதியினரும் மகிழ்ச்சி அடையக் கூடிய வகையிலே, அமைச்சர்களுக்கு ஊதிய உயர்விலேயிருந்து அரசு ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு வரை அறிவித் திருப்பது குறித்து நான் பாராட்டுகிறேன், நன்றியும் தெரிவித்துக் கொள் கிறேன். நான்கு அகவிலைப்படி தவணைகளை மாண்புமிகு அமைச்சர் அவர் கள் அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் தந்திருக்கிறார்கள். ஒரே சட யத்தில் தந்திருக்கிறார்கள். இதுவரை என்னுடைய பொது வாழ்வில் நான்கு அகவிலைப்படித் தவணைகளை ஒரே முறையில் தந்திருப்பதற்கான ஒரு காலம் ஏற்படவில்லை. அதை விலைவாசி உயர்வின் காரணமாக மத்திய அரசும் மாநில அரசும் தந்திருந்தாலும், இந்த அளவுக்கு உயர்வு தந்திருப்பதைப் பொறுத்து நான் பாராட்டுகிறேன்.

அடுத்து, இங்கே தரப்பட்டிருக்கக்கூடிய நிதி உயர்வு விலைவாசிக்கு தக்கபடி தரப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மத்தி அரசு நீண்ட காலம் தள்ளி வைத்து அதற்குப் பிறகு ஒரு தேதியிலே அதை

@ 125—127 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளத

தந்திருக்கிறது. மாநில அரசு அதிலிருந்து ஒவ்வொரு உயர்வையும் நான்கு மாதங்கள் தள்ளித் தந்திருக்கிறது. 4 உயர்வுகளும் 4 மாதங்கள் 4 மாதங்கள் என்று தள்ளிவைத்து 16 மாதங்கள் உயர்வைக் குறைத்துத் தந்திருக்கிறார்கள் என்பதையும், அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தர வேண்டிய நிதி 16 கோடி ரூபாயை மிச்சப்படுத்தி அரசாங்கத்தின் கையிலே வைத்திருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 3-00)

இதற்கு முன்னால் 40 மாதங்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் சம்பளத்தை, 8 இலட்சம் ஊழியர்களுடைய ஊதியத்தை அரசு தராமல், மிச்சப்படுத்தி, கையிலே வைத்திருக்கிறது. ஆக மொத்தம் 56 மாதங்கள் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்குத் தர வேண்டிய நிதியை அரசாங்கம் கையிலே வைத்திருக்கிறது. அதாவது 56 கோடி ரூபாய். இங்கே பத்தாயிரம் ரூபாய் தருவதற்கு திட்டமென்ன என்று கேட்டார்களே, நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். அரசு ஊழியர்களுக்குத் தரவேண்டிய நிதி 56 கோடி ரூபாயை கையிலே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த 56 கோடி ரூபாயை டெபாசிட்டிலே போடட்டும். அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் 8 இலட்சம் பேர்கள் தலா 500 ரூபாய் தரத் தயாராக இருக்கிறார்கள். அதில் 40 கோடி ரூபாய் வருகிறது. ஆக 96 கோடி ரூபாய். அதனுடன் 4 கோடி ரூபாய் போட்டால் மொத்தம் 100 கோடி ரூபாய் ஆகிறது. இப்படி 100 கோடி ரூபாயை அரசாங்கம் சேமிக்கும் போது ஓய்வு பெறுகிறவர்களுக்கு 10,000 ரூபாய் தருவதில் எந்த விதச் சங்கடமும் இராது. நிதியமைச்சரவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக் கொள்வேன். இந்தக் கால கட்டத்தில் 8,000 பேர்கள்தான் ஓய்வு பெறுவார்கள் 8,000-த்திலிருந்து 10,000 பேர்கள்தான் இருக்க முடியும் என்பது அறிவார்ந்த சிலர் தெரிவித்த கணக்கு. முன்னால் 3 இலட்சம், 4 இலட்சம் ஊழியர்கள் தான் பணியாற்றினார்கள். அந்தக் கணக்கைப் பார்க்கும்போது அதில் ஓய்வு பெறுபவர்களின் சதவிகிதத்தைப் பார்க்கும்போது 8,000-த்திலிருந்து 10,000 பேர்கள்தான் ஓய்வு பெறுவார்கள். அப்போது ஆண்டொன்றுக்கு 8 கோடி தான் தரவிருக்கிறார்கள். 100 கோடி ரூபாயை ஒரு சேமிப்பில் வைக்க வேண்டும். அரசு பைனான்சிங் கார்ப்பரேஷன் வைத்திருக்கிறார்கள். அதில் வட்டி 18 சதவிகிதம் தருகிறார்கள் மத்திய அரசினர் சிறு சேமிப்பில் 6 வருடங்களில் 2 மடங்காகத் தருகிறார்கள். அதிலும் 18 சதவிகித வட்டி கிடைக்கிறது. அதைப் போல பைனான்சிங் கார்ப்பரேஷன்களிலும் கொடுக்கிறார்கள். 100 கோடி ரூபாயை முதலீடு செய்யும்போது, இதற்கு 18 கோடி ரூபாய்

வருகிறது. ஆனால் [illegible] 8 கோடிதான் தருகிறார்கள். ஆண்டுக்காண்டு 10 கோடி ரூபாய் மிச்சமாகிறது. 10 ஆண்டுகளுக்குப் பிறகு ரிடையர் ஆகிறவர்களின் எண்ணிக்கை 20,000 ஆகும். இதுதான் இன்றைக்குள்ள நிலைமை. அப்போது இந்தத் தொகை கிட்டத்தட்ட 200 கோடி அளவிற்கு வந்துவிடும். அப்போது அதற்குக் கிடைக்கும் வட்டியிலிருந்து ஓய்வு பெறுபவர்களுக்குக் கொடுப்பதில் எந்தவிதச் சிரமும் இராது என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இப்போதுகூட தந்திருப்பதை மகிழ்ச்சியோடு தந்திருக்கிறார்கள்; பாராட்டுகிறேன். மனம் திறந்து பாராட்டுகிறேன். நாவலர் அவர்கள் நிதியைச் சிக்கனப்படுத்த வேண்டும், பெரியார் போல இருக்க வேண்டும் என்று சொன்னதால், இரண்டு தவணைகளை மிச்சம் வைத்து பின்னால் தருவார்களோ என்று எண்ணினேன். அவர்கள் பேசும்போது, தகுந்த நேரத்தில் விரைவாகத் தருகிறேன், காலம் சொன்னால் உங்களுக்கு நல்லதல்ல, எங்களுக்கும் நல்லதல்ல என்று சொல்லி, இப்போது அறிவித்திருக்கிறார்கள். அதற்காக மனதாரப் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது 10,000 ரூபாய் ஓய்வு பெறும்போது தருவதற்கு ஒரு திட்டத்தைச் சொல்லியிருக்கிறேன். அதை அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

சமீபத்தில் மத்திய அரசு அறிவித்திருக்கும் திட்டத்தைப்பற்றி நான் கேள்வி நேரத்தில் சொன்னேன். மாதம் 10 ரூபாய் நான்காம் பிரிவினர் செலுத்தினால், உயர்ந்த பிரிவினர் செலுத்துவதற்கு ஓய்வு பெறும்போது ரூபாய் 50,000 வரை தருகிறார்கள். அதன் விவரம் தெரியவில்லை. நான்காம் பிரிவினர் மாதம் 10 ரூபாய் செலுத்தினால், 33ஆம் ஆண்டு இறுதியில் 27,850 ரூபாய் தருவதாகச் சொல்கிறார்கள். ஆண்டுகள் குறையும் போது அதற்கேற்றாற்போல் தரும் திட்டத்தை மத்திய அரசு வெளியிட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டத்தையும் தமிழக அரசு பரிசீலிக்க வேண்டும் என்று அரசு ஊழியர்கள் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன். நிதி அமைச்சர் அவர்கள் 56 மாதங்களுக்கான ஊதிய உயர்வைத் தள்ளித் தந்ததால், 56 கோடி ரூபாய் கையிலே இருக்கிறது. நாங்கள் 40 கோடி ரூபாய் தருகிறோம். மொத்தம் 96 கோடி ரூபாய். 4 கோடி ரூபாயைக்கூடச் சேர்த்தால் 100 கோடி ரூபாய் வருகிறது. இந்தப் பணத்தைக் கொண்டு அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் ஓய்வு பெறும்போது 10,000 ஆயிரம் ரூபாய்

அளிக்கும் திட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று மீண்டும் நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நாமக்கல்லில் கடுமையான தண்ணீர்ப் பஞ்சம் செயற்கையாக உருவாக்கப்பட்டிருக்கிறது. அங்கே ஆயில் என்ஜின் மூலம் நீரேற்றும் நிலையத்தில் ஐந்து, ஆறு நாட்கள் தண்ணீர் வருவதில்லை. சேலம் மாவட்டத்திலே சேர்ந்திருந்து அடுத்தபடியாக வளர்ந்துவரக் கூடிய நாமக்கல் பகுதியில் நீர் கட்டுப்பாடு இருந்து வந்திருக்கிறது என்பது கொடுமையான விஷயம். அங்கே கமலாலயம் என்ற குளம் இருந்தது. அதுவும் அசுத்தப்படுத்தப்பட்ட காரணத்தால், அதைப் பயன்படுத்த முடியவில்லை. எனவே இதில் விரைந்து நடவடிக்கை எடுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பல சலுகைகள் வழங்கியிருக்கிறார்கள். அதற்காக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சில மாநிலங்களில் இருக்கும் சலுகைகளை அன்றைக்கே கூடச் சொன்னேன். அதைப்பற்றி உறுப்பினர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். பஞ்சாப், ஹரியானா, இன்னும் இரண்டொரு வட மாநிலங்களில் உறுப்பினர்கள் வீடு கட்டிக் கொள்ளக் கடன் அளிக்கிறார்கள். அரசு ஊழியர்களுக்கு வீடு கட்டிக் கொள்ளத் திட்டம் இருப்பது போல, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் ஒரு திட்டம் வைத்திருக்கிறார்கள். வீடு கட்டுவதற்கு ஒரு இலட்சம் ரூபாய் கடனாக வழங்குகிறார்கள். திருப்பிக் கட்டக் கூடிய கடன்தான். அதற்கு வட்டிவிகிதம் என்னவென்று தெரியவில்லை. வட்டியில்லாக் கடன் என்று அறிகிறேன். அதை எந்த அளவிற்கு இங்கே செய்ய முடியுமென்பதை அரசு சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, வாகனம் வாங்கிக்கொள்ள 50,000 ரூபாய் ஒதுக்குகிறார்கள். அந்தத் திட்டம் இருக்கிறது. அதையும் அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அடுத்தாற்போல் தொகுதி அலவன்ஸ் என்று தருகிறார்கள். இப்போது அமைச்சர்களுக்கு அலுவலகம் இருக்கிறது. அது நல்ல நடைமுறை. அப்படியிருந்தாலும்கூட, நாங்கள் எழுதும் கடிதங்களுக்குப் பதில் வருவதில்லை என்பதுதான் எங்களைப் போன்றவர்களுக்கு இருக்கும் ஏக்கமாகும். அதுதான் உண்மையான நிலையாகும். அமைச்சர்களிடம் விண்ணப்பங்கள் தரும்போது, பல நேரங்களில் விடை அளிக்கப்படுவதில்லை. மிக தேவையான அம்சம். எனவே நிதி அமைச்சரவர்களிடம் கேட்டுக்

கொள்வது, அமைச்சரவையிடம் கேட்டுக்கொள்வது, இன்னமும் 4, 5 பேர்களைப் போட்டுக் கொள்ளட்டும். எங்களைப் போன்றவர்கள் எழுதும்போது, பதில் வருவதில்லை. முதலமைச்சர் செல் இருக்கிறது. அதற்குக் கடிதம் போட்டால், பதில் வருகிறது. அமைச்சர் அலுவலகங்களுக்கு ஆட்கள் போதாது என்றால், வேண்டிய எஸ்டாபிளிஷ்மென்டை ஏற்படுத்த வேண்டும். பிரச்சினைகளுக்கு உரிய பதில் தரும் நியாயமான நடைமுறையை உருவாக்க வேண்டும். இனியொரு விதி செய்வோம் அதை எந்நாளும் காப்போம் என்று பாரதி சொன்னதை பாரதி நூற்றாண்டு விழாவில் அரசின் கவனத்திற்கு வைத்து, அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல், ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் ஒரு உடனாள், அட்டெண்டர் அல்லது எழுத்தர் இருக்க வேண்டும். இந்தக் காலக் கட்டத்தில் பொதுப் பணியில் உண்மையாக, வேகமாகப் பணியாற்றுகிறவர்களுக்கு இருக்கும் சிக்கலை நாம் அறிகிறோம். அப்படி இருக்கும்போது, உறுப்பினர்களுக்கு உதவி செய்ய ஒருவர் உடன் இருக்க வேண்டும். நாங்கள் பொதுப் பணிதான் செய்கிறோம். பொதுப் பணியாற்றுகிறவர்களுக்கு ஒரு எழுத்தரை உதவி செய்ய அனுமதித்தால், எந்தவித நஷ்டமும் அரசுக்கு ஏற்படாது. இந்த ஆட்சிக்கு உதவிகரமாக இருக்கும். மக்களுக்கு அரசு செய்யும் நன்மைகள் போய்ச் சேர, உறுப்பினர்களுக்கு உதவும்படியாக இருக்கும். அவர்களுக்கு அலுவலகம் பஞ்சாயத்து அலுவலகத்தில் கொடுத்தாலும் சரி, தாலுக்கா அலுவலகத்தில் கொடுத்தாலும் சரி. ஒரு அறையைத் தாருங்கள். கிராம முன்சீப் காலத்தில் சாவடி இருந்தது. வெள்ளைக்காரர்கள் காலத்தில் இருந்து சாவடி இருக்கிறது. வரி வசூல் பண்ண இருந்தது. சுதந்திரம் அடைந்து இத்தனை ஆண்டுகளாகியும், சட்டமன்ற உறுப்பினர்கள் அலுவலகத்தில் உட்கார்ந்து மக்களுக்குச் சேவை செய்ய ஏற்பாடு இல்லை. அதை இந்த விஞ்ஞான உலகத்தில் செய்யவில்லை என்றால் நாம் எவ்வளவு பின்னடைந்து இருக்கிறோம் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அமெரிக்க நாட்டிலே ஒவ்வொரு செனட்டருக்கும் அலுவலகம் இருக்கிறது. அந்த அளவிற்கு இல்லாவிட்டால்கூட, டைப் மெஷின் கொடுக்க வேண்டும். அது அரசாங்கச் சொத்து. ஆபீஸ் முடியும்போது, டேர்ம் முடியும்போது திருப்பி அரசிடம் அதை ஒப்படைக்க வேண்டும். அதற்காக காரன்டி தர வேண்டும். தமிழிலே ஒரு டைப் மெசின், அதை நிர்வகிக்க உதவுவதற்கு ஒரு உடனாள் 550 ரூபாய் சம்பளத்தில் நியமனம் செய்ய வேண்டும். நியமனம் செய்வது அந்தந்த உறுப்பினர் வசமே இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU G. SWAMINATHAN : I want a small clarification from the hon. Member. The hon. Member wants a private-Secretary. What will be the sex of the Private Secretary the Government will consider?

திரு. செ. முத்துசாமி: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எந்த முறையிலே 'செக்' பண்ண வேண்டுமென்று கருதுகிறார் என்று தெரியவில்லை. கவர்ன்மென்ட்டுக்கு செக் என்று சொல்லவில்லை.

திரு. பா. ரா. தாமஸ்: எந்த 'செக்ஸ்' என்று கேட்கிறார்.

(பிற்பகல் 5-10)

திரு. முத்துசாமி: ஆங்கிலத்தில் மாண்புமிகு உறுப்பினர் கேட்டார். 'செக்ஸ்' என்று அவர் சொன்னதை நான் வேறொரு பொருள்படுகிற 'செக்' என்று கருதி விட்டேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அதுவும் செக் தான். (சிரிப்பு)

திரு. செ. முத்துசாமி : 'ஆண்பாலா' இல்லை 'பெண்பாலா' என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்கிறார். இந்த வேலைக்கு எப்படிப்பட்டவர்களைப் போட வேண்டுமென்று இந்த அரசு விரும்புகிறதோ அவர்களைத் தாராளமாகப் போடலாம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் குறிப்பிடுவது 'காமத்துப்பால்' பற்றியா? (சிரிப்பு).

திரு. க. மீனாட்சிசுந்தரம்: அறம் என்பதற்குக் கடமை என்ற பொருளும் உண்டு. அதைத்தான் உறுப்பினர்கள் சொல்ல முடியும்.

திரு. செ. முத்துசாமி : நாங்கள் அதுபற்றி வாதாட முடியாது. நாங்கள் பெண்களைப் போடக் கூடாது என்று சொன்னால், அது தாய்க் குலத்திற்கு எதிராக இருக்கும் என்பதால், அப்படி நான் சொல்லவில்லை. ஆனால் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்கிற அடிப்படையில் எழுத்தர்களை நியமித்து, மக்களுக்கு சட்டமன்ற உறுப்பினர்களின் மூலமாக நன்மை போய்ச் சேர வழிவகைகளை அரசு செய்ய வேண்டும். ஆண்களா இல்லை பெண்களா என்பதல்ல இங்கே பிரச்சினை. இந்த விஷயத்தைப் பொறுத்த வரையில், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் நல்லமுறையில் பரிசீலித்து உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் அலுவலக வசதியைச் செய்துதர வேண்டும்.

அடுத்து, சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் போனால், பஞ்சாயத்து யூனியனில் ஜீப் தருகிறார்கள். ஆனால் பஞ்சாயத்து யூனியனுக்கு சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் போனால், 'எங்களுக்கு அதற்குரிய புரவிஷன் பண்ணுவதில்லை.' அதையும் மனதில் வைத்து மேலவை உறுப்பினர்கள் தொகுதிக்கு வந்தால், இந்த மாதிரி அதற்குரிய ஓர் ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். சம்பந்தப்பட்ட தொகுதிக்கு சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் வந்தால், ஜீப் வசதியை அளிக்க வேண்டும் என்ற முறையில் ஒரு சுற்றறிக்கையை அரசு அனுப்பினால், அது எங்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பை அளிப்பதாக அமையும். நாங்களும் சட்டமன்ற உறுப்பினர்கள்தான். நாங்களும் சம உரிமை உடையவர்கள்தான். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஜீப் வழங்கப்படுவது மாதிரி எங்களுக்கு பஞ்சாயத்து யூனியன்களில் வழங்குவதில்லை. நான் சொல்லியுள்ள கோரிக்கைகளை அருள்கூர்ந்து மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டு, விடை பெறுகிறேன்.

* திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நிதி ஒதுக்க மசோதாக்களின்மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இங்கே எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அகவிலைப்படி உயர்வுபற்றி கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். அவை அத்தனையையும் நானும் வழிமொழிகிறேன். அகவிலைப் படி உயர்வை இந்த கூட்டத் தொடரிலே வழங்க வேண்டும் என்று நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களைக் கேட்டபோது வழங்கப்படும் என்று சொல்லாமல், 'விரைவிலே செய்கிறேன்' என்று சொன்னார்கள். அது தான் உங்களுக்கும் நல்லது, எனக்கும் நல்லது என்றும் சொன்னார்கள். 'சொல்லாமல் செய்பவர்தாம் பெரியவர்' என்றும் சொன்னார்கள். அந்த அளவில் நாங்கள் எல்லாம் இன்றைக்கு அறிவிப்பார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்க நேற்றைக்கே பேரவையில் இதுகுறித்து அறிவித்திருக்கிறார்கள். அகவிலைப் படி உயர்வு அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட்டிருப்பதோடு மட்டுமல்லாமல், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அவர்களுடைய தொலைபேசிக் கட்டணத்தைப் பொறுத்தவரையில் சலுகைகள், பேருந்து பாஸ் வழங்குவதில் சலுகை என்றெல்லாம் அறிவித்திருக்கிறார்கள். இதை நான் பாராட்டுகிறேன். ஆனால் ஆண் உறுப்பினர்கள் பேருந்திலே செல்கின்றபோது, அவர்கள் அழைத்துச் செல்கின்றவர் கூடுமானவரைக்கும் ஆணாக இருப்பது நல்லது என்கிற ஒரு வார்த்தையைச் சேர்த்திருக்கிறார்கள். அதனால் வெளியில் இருப்பவர்கள் கிண்டல் செய்கிறார்கள். அதை சட்டமன்றத்தில் சொல்லி

யிருக்கிறார்கள். வேண்டுமானால் அதை சுற்றாணை மூலம் சொல்லி இருக்கலாம். அது இன்றைக்கு மற்றவர்களின் கிண்டலுக்கு இலக்காக ஆகி இருக்கிறது. இதை நான் இந்த சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

சட்டமன்ற மேலவைத் தலைவர், துணைத் தலைவர் இவர்கள் எல்லாம் அரசுக்கு நன்றி தெரிவிக்க வாய்ப்பு இல்லை. அவர்கள் சார்பாகவும் அவர்களுக்கு ஊதியத்தை உயர்த்தியிருப்பதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் அவர்களுக்கும் நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்குள்ள நேரத்தையும் எனக்குத் தந்தால், நான் அதுபற்றி பேச வாய்ப்பாக இருக்கும். சட்டமன்ற உறுப்பினர்களுடைய ஊதியத்தை உயர்த்தியிருப்பதற்கும் நன்றி. ஸ்டெனோ தருகின்ற பிரச்சினையைப் பொறுத்தவரையில், ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். டைப் செய்ய பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தைப் பயன்படுத்தலாமா என்பதுபற்றி ஆலோசிக்கப்படும் என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களுடைய வீடுகள் எல்லாம் பஞ்சாயத்து யூனியன்களுக்குப் பக்கத்தில் இருப்பதில்லை. அலுவலகம் ஓரிடத்தில் இருக்கிறது. உறுப்பினர்களுடைய வீடு வேறு எங்கோ இருக்கிறது. அப்படி பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தைப் பயன்படுத்துவது அவ்வளவு சரியாக இருக்காது. மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி சொன்னதுபோல், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு டைப்ரைட்டிங் மெஷின் தந்து பின்னால் எடுத்துக்கொள்ளக்கூடிய முறையில், நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அகவிலைப் படி உயர்வைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு தவணையிலும் 4 மாதம் தள்ளி பிற்பாடுதான் அரசு இதைத் தந்திருக்கிறது. ஆந்திரா, கர்நாடகா, கேரளா, மத்திய அரசு என்று மாநில அரசுகளாகட்டும் அல்லது மத்திய அரசாகட்டும் 18 மாதங்களுக்கு முன்னாலிருந்தே அகவிலைப் படி உயர்வைத் தந்திருக்கிறார்கள். நம்முடைய அரசு மட்டும் இப்படிப் பின் தேதியிட்டுத் தந்திருக்கிறது. இதை முன்னால் இருந்தே தந்திருந்தால் பாராட்ட வாய்ப்பாக இருந்திருக்கும். அதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் செய்ய வேண்டும். மற்றொன்று ; அதாவது குறைந்தபட்ச

அகவிலைப்படி உயர்வுக்கும் அதிகபட்ச அகவிலைப்படி உயர்வுக்கும் இடையே பாதிக்கு மேல் இடைவெளி இருக்கக்கூடாது என்று நீண்ட நாட்களாக அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். இது வரை இதை அரசு செயல்படுத்தவில்லை. இதையும் நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

அடுத்து, இப்போது உயர்த்தப்பட்டிருக்கிற அகவிலைப்படி உட்பட அனைத்து அகவிலைப் படிகளையும் ஊழியர்களுடைய ஊதியத்துடன் சேர்த்து நிர்ணயிக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் வைத்திருக்கிறார்கள். அதைப்பற்றியும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த அகவிலைப் படி உயர்வு பென்ஷன்தாரர்களுக்கு உண்டா இல்லையா என்பது குறித்து விளக்கம் இல்லை. அவர்கள் வயதானவர்களாக, காடு வா வா என்று அழைக்கிறது; வீடு போ போ என்று சொல்கிறது என்ற நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வயதானவர்களை எல்லாம் காடு வா வா என்று அழைக்கிறதா ? (சிரிப்பு)

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தங்களுக்கு மட்டும் அதில் தவிர்ப்பு உண்டு. அப்படிப்பட்ட நிலையில் இருக்கிற சிலரை நானே நேரில் பார்த்ததால்தான் சொல்கிறேன். பென்ஷன்தாரர்களுக்கு இந்த அகவிலைப்படி உயர்வு உண்டா இல்லையா என்பதற்கு விளக்கம் தேவை. இப்படிப்பட்ட ஒன்றிரண்டு சலுகைகளையாவது பேரவையில் அறிவித்ததைத் தொடர்ந்து இங்கேயும் அறிவிக்க வேண்டும். அந்த வகையில் இதனைச் செய்ய வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, அகவிலைப்படி உயர்வுத் தொகையை ரொக்கமாக வழங்கியிருக்கிறார்கள். அதற்கான என்னுடைய ரெட்டிப்பு மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றொன்றையும் சொல்வேன். வீட்டுவாடகைப் படி, நகர ஈட்டுப்படி போன்றவற்றை உயர்த்துவது குறித்து ஒவ்வொரு ஊதியக் குழு அமைக்கப்படும்போது மட்டுந்தான் பரிசீலிக்கிறார்கள். இன்றைக்கு வீட்டு வாடகை

உயர்ந்துகொண்டே போய்க் கொண்டிருக்கிறது. நகரத்தில் பொருள்களின் விலையும் உயர்ந்து கொண்டே போகிறது. ஆகவே அகவிலைப் படி உயர்வு வழங்கப்படும்போதே, வீட்டு வாடகைப் படியையும் நகர ஈட்டுப் படியையும் உயர்த்தி அவ்வப்போது அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விடுப்புப் பயணச் சலுகை என்கிற சலுகையை ஒரு வழிப் பயணத்திற்குத் தான் தந்திருக்கிறார்கள். பயணச் சலுகையை அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் தந்திருக்கிறோம் என்று விளம்பரம் செய்திருந்தார்கள். 15 நாள் ஈட்டிய விடுப்பை ஒப்படைப்பு செய்து வருகின்ற தொகையின் அளவுக்குக்கூட இப்படிச் சென்று வருபவர்களுக்குக் கிடைப்பதில்லை. 240 கிலோ மீட்டருக்கு அப்பால் சென்றால்தான், இந்தச் சலுகை உண்டு. வெளி மாநிலத்திற்குச் சென்றால் இல்லை. இப்படி எல்லாம், கட்டுப்பாடுகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அந்த அளவிற்கு இது எந்த ஊழியர்களுக்கும் பயன்படவில்லை. ஆகவே இந்தக் கட்டுப்பாடுகளை இந்த அரசு அவசியம் நீக்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ரெயில் பயணக் கூப்பன் வழங்குவதுபோல், ஒரு குறிப்பிட்ட அளவில் ரெயில் கூப்பன்களை இவர்களுக்கும் வழங்க வேண்டும். அதை ஆண்டுக்கு ஒருமுறை பயன்படுத்தலாம் என்கிற முறையில் கொண்டுவரவேண்டும். இப்போது இருக்கிற இத்திட்டம் அறிவிப்புடனேயே இருக்கிறது. அது செயல்படவில்லை. அல்லது இப்படியும் செய்யலாம். இந்தச் சலுகையைச் சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்களும், சட்டமன்ற மேலவை உறுப்பினர்களும் பெற்றிருப்பதுபோல், பேருந்துகளில் 'பாஸ்' தந்து அவர்கள் எங்கு வேண்டுமானாலும் சென்று வரக்கூடிய அளவில் ஒரு வாய்ப்பினை அளித்து அறிவித்தால், உண்மையிலேயே அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் உளமாறப் பாராட்டுவார்கள், அதன்மூலம் பயனடைவார்கள். அரசு இதுபற்றிய முடிவான அறிவிப்பை வெளியிட வேண்டுகிறேன்.

அடுத்து, போனஸ் பற்றி ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இன்றைக்கு அரசுத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டுக்குள் இருக்கக்கூடிய வீட்டுவசதி வாரியத்தில் பணியாற்றுகின்ற ஊழியர்களுக்குப் போனஸ் வழங்கப்பட்டு போனஸ் திட்டத்தை அமுல்நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஒரு பகுதி ஊழியர்களுக்கு இதை அளிக்கும்போது மற்றப் பகுதி ஊழியர்களுக்கும் இதை அளிக்க வேண்டும். இதனையும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு க. மீனாட்சிசுந்தரம்] [1982 மார்ச் 30

அடுத்து, அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் கடன் தொகை என்கிற வகையில் கடன் அளிக்கப்படுகிறது. திருமணக் கடன் என்றும் மிதிவண்டிக் கடன் என்றும் தொகை ஒதுக்கப்படுகிறது. ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களுக்கு இத்தகைய கடன் தேவை என்றால், மாவட்ட ஆட்சித் தலைவருக்குத்தான் விண்ணப்பம் அனுப்ப வேண்டும். அப்படி அனுப்பப்படுகிற விண்ணப்பங்கள் சரியான முறையில் பட்டுவாடா செய்யப்படுவதில்லை. அதற்கு மாறாக இப்போது யார் ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களுடைய பணி சம்பந்தப்பட்ட நிர்வாக அதிகாரியாக இருக்கிறாரோ, அவரிடம் இந்தப் பொறுப்பை ஒப்படைக்க வேண்டும். அந்த வகையில் இப்போது அசிஸ்டென்ட் எஜூகேஷனல் ஆபிசராக இருக்கக்கூடிய கல்வித் துறை அதிகாரிகளிடம் இந்தப் பொறுப்பை ஒப்படைத்து, அதன்மூலம் ஆசிரியர்களுக்கான கடன்கள் விரைவில் பட்டுவாடா ஆக வழி செய்ய வேண்டும். அதுமட்டுமல்ல இந்த வகைக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள தொகை போதாது. இப்போது ஒதுக்கி உள்ள தொகை அலுவலக ஊழியர்களுக்குக்கூட போதாது. இப்படிப்பட்ட நிலையில் இந்தக் கடன் தொகை ஆசிரியர்களுக்குப் போய்ச் சேராது.

அடுத்து, இன்றைக்கு ஆசிரியர்களுடைய பயிற்சிக் காலத்திற்குக் கூடுதல் ஊதிய உயர்வு தரப்பட்டிருக்கிறது. இடைநிலை ஆசிரியர்களுக்கு, இளநிலை ஆசிரியர்களுக்கு எல்லாம் அவர்களுடைய 2 ஆண்டுக்காலப் பயிற்சிக்கு இது தரப்பட்டிருக்கிறது. இந்தப் பிரச்சினைபற்றி நான் கல்வி மானியத்தில்கூட பேசியிருக்கிறேன். திருவாங்கூர் கொச்சியிலிருந்து தமிழகத்திற்கு வந்து பணியில் உட்படுத்தப்பட்ட நாகர்கோவில், திருநெல்வேலி போன்ற பகுதிகளைச் சார்ந்த ஆசிரியர்கள் நம்முடைய பகுதிக்கு வந்த பிறகு ஓராண்டுக் காலம் பயிற்சியை அவர்கள் பெற்றிருந்தால், மற்றவர்களுக்குரிய எல்லாச் சலுகைகளும் இவர்களுக்கும் உண்டு என்று அரசாணை எண் 970, கல்வித்துறை, நாள் 7—5—1963-லே வெளியான ஆணையிலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது. திருவாங்கூர் கொச்சியிலிருந்து தமிழகத்தில் ஈர்க்கப்பட்ட ஆசிரியர்களின் ஓராண்டுக் காலப் பயிற்சி தமிழகத்து ஆசிரியர்கள் ஈராண்டு காலப் பயிற்சிக்குச் சமம்; அவர்கள் முழுத் தகுதி உடைய ஆசிரியர்கள் என்று ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது. அப்படி இருக்கும்போது, இப்போது தமிழகத்தில் ஈராண்டு பயிற்சி பெற்ற இளநிலை, இடைநிலை ஆசிரியர்களுக்கு மட்டும் அவர்களுடைய இரண்டாண்டுப் பயிற்சிக் காலத்திற்காக ஊதிய உயர்வை அளித்துவிட்டு, இவர்களுக்கு மட்டும் இந்த ஊதிய உயர்வு கிடையாது என்று அரசு மறுப்பது எப்படி நியாயம் ஆகும் என்பது எனக்குப் புரியவில்லை.

1982 மார்ச் 30] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

(பிற்பகல் 5.20)

திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டைப் பகுதிகளில் உள்ள இத்தகைய ஆசிரியர்கள் இன்றையதினம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே அரசின் பழைய ஆணைக்கு ஏற்ப இதைச் சீர் செய்து தர வேண்டும் என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நடுநிலைப் பள்ளிகளின் பட்டதாரி தலைமை ஆசிரியர்களுக்கு டியூட்டி அலவன்ஸ் என்று சொல்லப்படும் பணிப்படி வழங்கப்படாமல் இருக்கிறது. நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு பணிப்படியாக ரூபாய் 15 வழங்கப்படுகிறது. ஆனால் பட்டதாரி ஆசிரியர்கள் அவர்கள் தகுதிக்கு ஏற்ப ஊதியம் பெற்றாலுங்கூட, அவர்களுக்கு மட்டும் டியூட்டி அலவன்ஸ் தொகையான ரூபாய் 15 வழங்கப்படாமல் இருக்கிறது. அவர்களுக்கும் அது தரப்படும், அதுபற்றி அரசு பரிசீலித்துக்கொண்டு வருகிறது, விரைவில் முடிவு சொல்லப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவையில்கூட அறிவித்திருக்கிறார்கள். எனவே அதை விரைவில் வழங்க அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மதிய உணவுத் திட்டத்திற்காக, அரசு 10 காசு மானியமாக வழங்குகிறது. 5 காசுகளை ஊராட்சி ஒன்றியத்திலிருந்து தர வேண்டும். ஆனால் பெரும்பாலான ஒன்றியங்கள் 5 காசைத் தருவதில்லை. எனக்கு முன்பு, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ரா. ராமன் அவர்கள்கூட இதைப்பற்றி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவந்து அவையிலே விவாதிக்கப்பட்டிருக்கிறது. ஆக வெறும் 10 காசுகள் மட்டுமே மதிய உணவுத் திட்டத்திற்காக வழங்கப்படுகிறது. ஆனால் இந்த 10 காசுகளை மட்டும் வைத்துக் கொண்டு குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கும் மிகப் பெரிய உலக மகா அதிசயத்தை இன்றையதினம் ஆசிரியப் பெருமக்கள் தமிழ் நாட்டில் செய்து வருகிறார்கள். எப்படி 10 காசுகளில் மதிய உணவு வழங்கப்பட முடியும்? அதிலேகூட ஒரு பாகுபாடு இருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்களுக்கென்றால், 10 காசு தரப்படுகிறது. ஆதி திராவிடர் நலத்துறையில் 22 காசு தரப்படுகிறது. இப்போது இலவச உணவுத் திட்டத்திற்காக ரூபாய் 100 கோடி ஒதுக்கப்பட்டு ஒரு புதிய திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதன்மூலம் 35 அல்லது 50 காசு செலவழிக்கப்பட இருக்கிறது என்று நினைக்கிறேன். எனவே இப்போது இருக்கிற நிலைமையில் எல்லோருக்கும்

ஒரே வகையில் தருகிற முறையில் 35 அல்லது 50 காசு என்ற அளவுக்காவது மதிய உணவுக்குரிய மானியத் தொகையை உயர்த்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து முதியோர் உதவித் தொகை வழங்குவது குறித்து ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

(மாண்புமிகு தலைவர் அவர்கள் மணி அடித்தார்)

முதியவர்களைப் பற்றிப் பேசுவதால் மாண்புமிகு தலைவர் அவர்கள் சற்று நேரம் தருவார்கள் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : நான் என்னை முதியவன் என்று ஒப்புக் கொண்டால் அல்லவா, சலுகை காட்டுவதற்கு ?

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, விரைவில் முடித்துக் கொள்கிறேன்.

தற்போது அரசு முதியோர்க்கான உதவித் தொகை அளித்து வருகிறது. ஆனால் அதற்காக ஒரு உச்சவரம்பையும் வைத்துக் கொண்டிருக்கிறது என்று அறிகிறேன். அதாவது இத்தனை நபர்களுக்கு மட்டும்தான் வழங்குவது என்ற வகையில் ஒரு உச்சவரம்பு வைக்கப்பட்டிருக்கிறது. எனவே எத்தனை விண்ணப்பங்கள் பெறப்பட்டாலும் உச்சவரம்பு இருக்கிற காரணத்தால், அதற்கு மேற்பட்ட யாருக்கும் அவர்களுக்குத் தகுதி இருந்தாலுங்கூட, வழங்கப்படுவதில்லை என்ற நிலை இருக்கிறது. இதன் காரணமாக தகுதியுள்ள பலருக்குக் கிடைக்க வாய்ப்பில்லாமல் போய் விட்டிருக்கிறது எனவே இந்த வகையில் அரசு நிர்ணயித்துள்ள உச்சவரம்பை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தற்போது யாராவது ஒருவர் இறந்தால்தான் அந்த இடத்தை இன்னொருவருக்கு வழங்குவது என்ற நிலைமை இருக்கிறது. எனவே இந்த உதவித் தொகையை தகுதியுள்ள அனைத்து முதியோர்களுக்கும் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்** : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவின்மீது என்னுடைய கருத்துக் களைச் சொல்ல விரும்புகிறேன்.

ரூ. 31, 38, 62, 10,000க்கு மேற்படாத தொகை ஒதுக்கீடு செய்யப்படுவதற் கான சட்டமுன்வடிவை வரவேற்று அதே நேரத்தில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்

களுக்கும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் அறிவித்திருக்கிற சலுகைகளுக்காக எங்களுடைய இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, எங்களுடைய பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மேலவைத் தலைவர் சார்பிலும் உறுப் பினரே நன்றி தெரிவித்துக் கொள்ளலாம்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மேலவைத் தலைவர், மாண்பு மிகு பேரவைத் தலைவர், மற்றும் பேரவை, மேலவை ஆகியவற்றின் துணைத் தலைவர்கள் சார்பாகவும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கும் இந்த அரசுக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதிலும் மத்திய அரசு செய்ததுபோல் அல்லாமல், இந்த மாநில அரசு ரொக்கமாகவே பணத்தைக் கொடுக்க அறிவித்திருப்பதை மிகவும் பாராட்டி வரவேற்கிறேன். இதன்மூலம் இந்த மாநிலத்தின் தனித்தன்மையைக் காப்பாற்றியதோடு அல்லாமல், நாங்கள் சொந்தமாக ஒரு முடிவை எடுத்துச் செயல்படுத்தும் உறுதி படைத்தவர்கள் என்பதை நிருபிக்கும் வகையில் செயல்பட்டதற்காக நிதியமைச்சர் அவர் களுக்கு எங்களின் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பாகப் பேருந்துப் பயண உரிமைச் சீட்டைப் பொறுத்தவரையில், மாண்புமிகு பெண் உறுப்பினர்களுக்கு கொடுப்பதைப் போன்ற அதே சலுகைகளை ஆண் உறுப்பினர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று கோரி வந்ததை ஏற்று பெண் உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிற அதே வகையில் இன்றையதினம் ஆண் உறுப்பினர்களுக்கும் வழங்கப்படுகிற சலுகைக்காகவும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இதன் மூலம் சட்டமன்ற ஆண் உறுப்பினர்களுக்கும் சம உரிமையை வழங்கியது டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் என்ற வகையில் அவரையும் பாராட்டு கிறேன். இது எங்கள் மனதில் உறுத்திக்கொண்டே இருந்தது. மாண்புமிகு உறுப்பினர் சகோதரி லீலாவதி உட்பட அனைத்து மாண்புமிகு பெண் உறுப்பினர்களும், இதை ஆதரித்து எங்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று தான் விரும்பினார்கள். அது இன்றையதினம் நிறைவேறி இருக்கிறது என்ப தற்காக எங்கள் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதில் ஏதோ நிபந்தனை இருக்கிறது போல் இருக்கிறதே !

1982 மார்ச் 30]

திரு. சி. ரா லெட்சுமிகாந்தன் : அப்படி ஒன்றுமில்லை மாண்புமிகு மேலவை மற்றும் பேரவைத் தலைவர்களுக்கும் துணைத் தலைவர்களுக்கும் இப்போது ஊதிய உயர்வு அளிக்கப்பட்டிருந்தாலுங்கூட, அதில் சட்டமன்ற மேலவை மற்றும் பேரவையின் அரசு கொறடாக்கள் விடுபட்டுப் போயிருப்ப தாக அறிகிறேன். எனவே அவர்களுக்கும் அந்தச் சலுகைகளை நான் சொல்லுகிற தகவல்கள் சரியாக இருக்குமானால் வழங்க வேண்டும் என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களை வேண்டிக் கொள்கிறேன்.

நிர்வாகத்தைப் பொறுத்தவரை, பல்முறை நான் இங்கே, ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறேன். அதைப் போலவே மாண்புமிகு உறுப்பினர்களும் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். நாம் எத்தனை கோடி ரூபாய்களை ஒதுக்கீடு செய்து திட்டங்கள் போட்டாலும், திட்டங்களின் பலன்கள் ஏழை எளிய மக்களையும், சாதாரண மக்களையும், விரைவாகச் சென்று சேர்வதற்கு எவ்வெவை முட்டுக் கட்டைகளாக இருக்கின்றனவோ அவற்றையெல்லாம் தவிர்த்தாக வேண்டும். அதற்கான வழிமுறைகளைக் கண்டாக வேண்டும் என்று சொல்லி இருக்கிறேன். நமது நாட்டைப் பொறுத்தவரை, சிவப்பு நாடா முறை இன்னும் நடைமுறையில் இருந்து கொண்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. சிவப்பு நாடா முறை காரணமாகவும், இன்னும் நிர்வாகத்தைப் பரவலாக்காமல் அதிகாரத்தை ஒரு சில இடங்களிலேயே குவித்து வைத்துக் கொண்டிருப்பதன் காரண மாகவும் திட்டங்களின் பலன்கள், ஏழை எளிய மக்களையும் பாமர மக்களையும் சென்றடைவதில் மிகுந்த காலதாமதம் ஏற்படுகிறது. நிர்வாகத்தை வேகமாக நடத்தவும், அரசின் திட்டங்களை வேகமாகச் செயல்படுத்தவும், இப்போது இருக்கிற நிர்வாக முறையை மாற்றி அமைக்க வேண்டியது நியாயம் என்பதால் அதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதற்காகத் தேவைப்பட்டால் பல நிபுணர்களின் கருத்தைப் பெறுவதற்கு ஏற்ற முறையில் ஒரு குழு அமைக்கப்பட வேண்டும். இதுகுறித்து ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவை யிலேயே ஒரு கருத்தை வெளியிட்டார்கள். அதாவது அவர் அமெரிக்கா சென்று திரும்பியதும் அந்தக் கருத்தைச் சொன்னார். "நான் அங்கே சில நடைமுறைகளை நேரில் கண்டேன். அதன்மூலம் நிர்வாகத்தை எளிதாக நடந்த வாய்ப்பிருக்கிறது. அந்தகைய நடைமுறைகளை நமது மாநிலத்திலும் செயல்படுத்துவதற்கான உரிய நடவடிக்கைகளை நான் மேற்கொள்வேன்" என்று அவரே ஒருமுறை இங்கே குறிப்பிட்டார்கள். அந்த வகையில்

1982 மார்ச் 30] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

சிவப்புநாடா முறையை ஒழிக்கவும், நிர்வாகத்தைப் பரவலாக்கவும் புதிய நிர்வாக அமைப்பை உருவாக்கவும், நிர்வாகத்தில் சிறந்த அனுபவம் பெற்ற நிபுணர்களையும், அறிஞர்களையும் கலந்து இதைச் செயல்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இதைக் குறித்து மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தம் பதிலில் குறிப்பிட்டால் நான் மிகவும் மகிழ்ச்சி அடைவேன்.

அடுத்து, தேர்வாணைக் குழுவைப் பொறுத்தவரையில், நமது கருத்து மாற வேண்டும். தேர்வாணைக்குழு என்பது சமூக நீதியை நியாயத்தை நிலை நாட்டுவதற்காக அரசியல் சட்டத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்ட ஓர் அமைப்பாகும். அப்படிப்பட்ட அமைப்பு சமூக நீதியை நியாயத்தை நிலை நாட்டுவதற்குப் பதிலாக வேறு வழியில் போய்க் கொண்டிருக்குமானால், அதைச் சரிசெய்வது மாநில அரசின் கடமையாகிறது. அரசியல் சட்ட விதி முறைகள் ஒருபக்கம் இருந்தாலும், ஒரு தேர்வாணைக் குழுவை வைத்துக் கொள்வதா இல்லையா என்பதை மாநில அரசே நிர்ணயித்துக்கொள்ள முடியும். அதுமட்டுமல்லாமல் எந்தெந்தத் துறைகளைத் தேர்வாணைக் குழுவின் எல்லைக்குள் சேர்க்க வேண்டும், எதையெதைச் சேர்க்க வேண்டாம் என்று முடிவு எடுக்கும் பொறுப்பு மாநில அரசுக்கு உண்டு. இதைக் குறித்தும் மாண்மிகு முதலமைச்சர் அவர்கள் பதவிக்கு வந்தபொழுது ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். எனவே அதைப்பற்றித் தீவிரமாகச் சிந்தித்து ஒரு முடிவெடுக்க வேண்டிய காலம் இன்றைக்கு வந்துவிட்டது என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன். தேர்வாணைக் குழுவின் மூலமாக பல்வேறு துறை களில் பணி நிரந்தரமாக்கப்பட வேண்டிய ஊழியர்கள் பல ஆண்டு காலமாக நிரந்தரமாக்கப்படாமல் தேக்க நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அதைப்போலவே தற்காலிக ஊழியர்களின் எண்ணிக்கை—10 (எ) (1) அடிப்படையில் நியமிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே போகிறது. இது அரசுக்கு ஒரு மிகப் பெரிய பிரச் சினையை உருவாக்கிக்கொண்டு வருகிறது. ஒரு பெரிய தலைவலியையே உண்டாக்கி வருகிறது. எனவே இதையும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு துறையில் 7 ஆண்டுக் காலம் பணியாற்றிய ஊழியர்களுக்கு ஒரு தேர்வு தேர்வாணைக் குழுவால் நடத்தப்பட்டு, தற்காலிகமாக 7 ஆண்டுகளாகப் பணிபுரிந்த அந்த ஊழியர்களில் பாதி பேரை எடுத்துவிட்டு, மற்றவர்களை வெளியே இருந்து எடுத்திருக்கிறார்கள். இதன் காரணமாக அந்தத் துறையில்

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1982 மார்ச் 30

பல ஆண்டுக் காலம் பணியாற்றியவர்கள் வீட்டுக்குப் போகிற நிலை உருவாகியிருக்கிறது. அதுமட்டுமல்ல. மிகப் பெரிய காலதாமதம் தேர்வாணைக் குழுவின் காரணமாக ஏற்படுகிறது. இதையெல்லாம் அகற்றுவதற்கான முறையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒன்று, மிகப் பெருமளவில் தேர்வாணைக் குழுவில் மாற்றத்தை உருவாக்க வேண்டும், அல்லது அதை அகற்றிவிட்டு, பணிக்கான நியமனங்களை விரைவுபடுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அரசுத் தரப்பிலிருந்து இது குறித்த விவரங்களைச் சேகரித்துப் பார்த்தாலே எத்தனை துறைகளில் இத்தகைய தேக்கம் இருக்கிறது என்பதையும் அதற்கு எந்த அளவுக்குத் தேர்வாணைக் குழு காரணம் என்பதனையும் அரசு உணர முடியும். எனவே, இதைக் குறித்து அரசு விரைவில் சிந்தித்து ஒரு முடிவு எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அரசுப் பள்ளிகளில் உள்ள உடற் கல்வி ஆசிரியர்களுக்காக தேர்வாணைக் குழு ஒரு தேர்வை நடத்தியது. அந்த Procedure முடிய இரண்டாண்டுகள் ஆகிவிட்டன.

(பிற்பகல் 5.30)

அந்த 35 இடங்களில் 31 உடற் கல்வி ஆசிரியர்கள் வெளியே இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். பணியில் இருக்கும் 4 பேரைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். இதை எங்கே போய்க் கேட்பது? தேர்வாணைக் குழு என்பது சுயேட்சையான அமைப்பு. அதைத் தட்டிக் கேட்க முடியாது. தட்டிக் கேட்கும் உரிமை நமக்குக் கிடையாது. ஆகவே நிதியமைச்சர் அவர்கள் இதுகுறித்து நல்ல முடிவு எடுக்க வேண்டும். அரசு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் முன்பே குறிப்பிட்டதைப் போல, பள்ளிகளில் காலியாக உள்ள பதவிகளைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். காலியிடங்களைப் பூர்த்தி செய்யாததால், மாணவர்களின் கல்வி நலம் பாதிக்கப்படுகிறது. பல பள்ளிகளில் ஆசிரியர்கள் பதவிகளில் இல்லை. ஆகவே பாடங்களை நடத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து அவற்றை நிரப்ப, பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1982 மார்ச் 30] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

தொடக்கக் கல்வியைப் பொறுத்தவரையில், ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் இருப்பதால், அதன் பணி மேலும் அதிகமாகியுள்ளது. ஆகவே தொடக்கப் பள்ளிப் பணிகளைக் கவனிப்பதற்காக தனி இயக்குநர் பதவியை ஏற்படுத்துவது நல்லது என்பதை இந்தச் சமயத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டமன்ற மேலவைத் துறையைப் பொறுத்தவரையில், ஒருசில கருத்துக்களைச் சொல்லிவிட்டு முடித்துக் கொள்கிறேன். மேலவையின் பெருமையைப் பற்றி உறுப்பினர்கள் சொல்ல வேண்டியதில்லை. இங்கே நடைபெறுகின்ற விவாதங்களின் தன்மைகளையும், இந்த அவையை நடத்திச் செல்லுகின்ற மாண்புமிகு தலைவர் அவர்களின் பாங்கினையும் இன்று நாடு நல்ல முறையிலே உணர்ந்திருக்கிறது. இருந்தாலும், மேலவைத் துறையிலே இருக்கின்ற சில தேவைகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டதைப் போல நம்முடைய மேலவைத் துறையின் அலுவலகம் வராந்தாவில் இருக்கும் நிலையை உடனடியாக அகற்ற வேண்டும். அப்படியிருப்பது எங்களுக்குக்கூட இடையூறாக இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் உணர்ந்து அது குறித்து முடிவு செய்ய வேண்டும்.

மேலவை உறுப்பினர்களின் எண்ணிக்கை கூட சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கு இருக்கலாம் என்று இருக்கிறது. அப்படிப் பார்த்தால் மேலவையில் 78 உறுப்பினர்கள் இருக்கலாம். இப்போது 63 பேர்தான் இருக்கிறார்கள். 78 உறுப்பினர்கள் என்று அரசியல் சட்டம் நமக்கு உரிமை கொடுத்திருக்கிறது. அந்த உரிமையைப் பயன்படுத்தி ஏன் மேலவை உறுப்பினர்களின் எண்ணிக்கையை உயர்த்தக்கூடாது?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அப்போது இவ்வளவு நேரம் பேசுவதற்குக் கிடைக்காது!

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: அதைப்பற்றிக் கவலையில்லை. அரசியல் சட்டம் இடம் கொடுத்திருப்பதால், அதைப் பயன்படுத்திக் கொண்டு மேலவை உறுப்பினர்களின் எண்ணிக்கையை உயர்த்தினால், அவையின் பெருமை அதிகமாகும் என்பதை அரசுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போலவே பேரவையில் இருக்கின்ற அதிகாரிகளின் பதவியில் மூன்றில் ஒருபங்கு எண்ணிக்கை மேலவைத் துறையிலே இல்லை. இங்கே பதவி உயர்வுகளுக்குக்கூட வாய்ப்பு இல்லை. அங்கே உள்ள எண்ணிக்கையில்

மூன்றில் ஒருபங்கு அலுவலர்களாவது இங்கே இருக்க வேண்டும். ஆகவே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பேரவையில் எத்தனை பதவிகள் இருக் கின்றன, பணியாளர்கள் இருக்கிறார்கள் என்பதைப் பார்த்து அதிலே மூன்றிலே ஒரு பங்கு பதவிகள், பணியாளர்கள் மேலவைத் துறையிலே இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மேலவைத் துறையில் உள்ள ஓய்வறை மிக அருமையான ஓய்வறை. ஆனால் அதைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய அளவிற்கு வாய்ப்புகள் இல்லை. அங்கே தினந்தோறும் பத்திரிகைகள் வருவதில்லை. பத்திரிகைகள் தாமதமாக வருகின்றன. ஆகவே அன்றாடம் அன்றைய பத்திரிகைகள் வர நடவடிக்கை எடுக்க வேண்டும், தொலைபேசிகூட, 29271 என்ற எண்ணுக்கு எக்ஸ்டென்ஷன் இருக்கிறது. ஆனால் 29111 என்ற தலைமைச் செயலக தொலைபேசி இருந்தால், உறுப்பினர்களுக்கு உதவியாக இருக்கும். உறுப்பி னர்கள் அவையில் இருக்கும்போது, அவசரமாகத் தொடர்பு கொள்ள வேண்டிய நிலை வரும்போது, லாபியில் தொலைபேசி இருந்தால் நல்லது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தொலைபேசியின் மணி அடிக்கும். அது இங்கே கேட்கும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : அல்லது லாபிக்குப் பக்கத்திலே, அருகாமையில் தொலைபேசி இணைப்பு ஏற்படுத்த வேண்டும் என்று மாண்பு மிகு நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சலுகையைப்பற்றி பல உறுப்பினர்கள் சொன்னார்கள். அதை நான் முழுமனதோடு வழிமொழிந்து பேசுகிறேன். அதைப் போலவே ஓய்வு பெற்ற சட்டமன்ற உறுப்பினர்கள் படுகின்ற தொல்லை களைப்பற்றி முன்னால் ஓய்வு பெற்ற சட்டமன்ற உறுப்பினர்கள் சொன் னார்கள். பொது வாழ்க்கைக்கு வந்துவிட்ட பிறகு, பல பேர் தங்களுடைய சொத்துக்களை, பொருள்களை இழந்து மீண்டும் பொது வாழ்க்கையிலிருந்து விடுபட விரும்பாமல் நீடித்துக்கொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் படுகிற தொல்லைகளை மனதிலே கொண்டு அவர்களுக்கு அளிக்கப் படும் ஓய்வு ஊதியத் தொகையை ரூபாய் 250லிருந்து ரூபாய் 500ஆக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பேருந்துகளில் செல்லுகிற சலுகையை, ஒருவர் மட்டும் செல்லுவதற்காவது, வழங்குவது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த இரண்டு சலுகைகளையும் ஓய்வு பெற்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அரசு தருமேயானால், பொது வாழ்வில் அவர

களுக்கு நம்பிக்கை வரும். ஓய்வு பெற்று இன்று பல சட்டமன்ற உறுப்பினர் கள் வறுமைக் கோட்டிற்கும் கீழே வாடுகிறார்கள். கூலி வேலை செய்கிறார்கள் என்ற விவரம் வந்து கொண்டிருக்கின்றது. இப்படிப்பட்ட நிலைமை வருமே யானால் பொது வாழ்க்கையில் ஈடுபடக்கூடிய மனப்பான்மையே போய் விடும் என்பதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் உணர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, பொதுவாக இந்தச் சட்டமுன் வடிவுகளை வரவேற்று அமர்கிறேன்.

திரு ஆ. நல்லசிவன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நிதி ஒதுக்க மசோதாக்கள் மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். முதலிலே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அரசு ஊழியர்களுக்கு நான்கு பஞ்சப் படித் தவணைகள் ரொக்கமாகக் கொடுத்ததற்காகப் பாராட்டுகிறேன். ஏனென்றால் ரொக்கமாகக் கொடுக்க வேண்டாம், அதனால் விலைவாசி ஏறும் கொடுத்ததற்காகப் பாராட்டுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி என்றெல்லாம் ஆளும் ஆளுங்கட்சிக்கு நிர்ப்பந்தம் இருந்தும்கூட, ரொக்கமாகக் அவர்கள் சொன்ன மாதிரி, 5, 6 மாத பாக்கியிருந்தாலுங்கூட, இப்போதாவது நான்கு தவணைப் பஞ்சப்படியை ரொக்கமாகக் கொடுத்திருப்பதற்காகப் பாராட்டுகிறேன்.

நம்முடைய கவுன்சில் நடைபெறுவதற்கு உதவக்கூடிய அலுவலர்கள், அதாவது 20 பியூன்கள், 15 கிளார்க்குகள், நான்கு டைப்பிஸ்டுகள், ஆக மொத்தம் 39 பேர்கள் தற்காலிகமாகவே வேலை செய்து கொண்டிருக்கிறார் கள். செஷன் நடக்கும்போதுதான் அவர்களுக்கு வேலை. செஷன் முடிந்த வுடனே வீட்டுக்குப் போக வேண்டியதுதான். இன்டஸ்ட்ரியல் டிஸ்பியூட் ஆக்ட்படி அவர்களுக்கு லேஆப் கொடுக்கும்போது, பாதிச் சம்பளம்கூட அவர்களுக்குக் கொடுப்பதில்லை. செஷன் ஆரம்பிக்கும்போது, இந்தக் காரியாலயத்திற்குக் கிளார்க், டைபிஸ்ட், பியூன்கள் தேவைப்படுகின்றனர். அவர்கள் எல்லாம் எட்டு, ஒன்பது வருடங்களாக டெம்பாரியாகவே வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். நம்முடைய காரியாலயத்திலும் பேரவை காரியாலயத்திலும் எட்டு, ஒன்பது வருடங்களாக டெம்பாரியாக வேலை செய்யக்கூடிய கிளார்க், டைபிஸ்ட், பியூன் போன்றவர்களுடைய சர்வீசை ரெகுலரைஸ் செய்ய அரசு யோசிக்க வேண்டும். இதிலே ஒன்றை உடனடியாகச் செய்ய முடியும். செஷன் நடக்கும்போது இடையிலே இரண்டு நாள் ஹாலிடே வந்தால், உறுப்பினர்களுக்குத் தினப்படி கொடுக்கப்படுகிறது. ஆனால்

[1982 மார்ச் 30

ஞாயிற்றுக்கிழமைகளிலும், மற்ற விடுமுறை நாட்களிலும் இந்தச் சிப்பந்தி
களுக்குச் சம்பளம் இல்லை. அட்டண்ட் பண்ணும்போது மட்டும் சம்பளம்
இருக்கிறது. நாம் தொடர்ச்சியாக 40 நாட்களுக்குக் கூட்டம் நடத்துகிறோம்.
ஆகவே அவர்கள் வேலை செய்கிறார்கள். இதற்டையில் வேறு எங்கேயும்
வேலை பார்க்க முடியாது. இடையிலே வரக்கூடிய லீவு நாட்களில்கூட வேறு
வேலைக்குப் போக முடியாது. அந்த லீவு நாட்களில் லீவ் சம்பளம்
இல்லையென்றால், அவர்கள் எப்படிச் சமாளிக்க முடியும்? ஆகவே அவர்
களுக்கு இருக்கின்ற குறைகளை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்
கேட்டறிந்து, உடனடியாக செஷன் நடக்கும்போது, இடையில் உள்ள
ஹாலிடேசுக்குச் சம்பளம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று இந்தச்
சமயத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

பாதிக்கப்பட்டவர்
குமரிமாவட்டத்திலே கலவரம் நடந்த பகுதியிலே
களுக்கு நிவாரணம் சம்பந்தமாக நானும் பேரவையில் என்னுடைய கட்சியின்
தலைவர் திரு. சங்கரய்யா அவர்களும் 28ஆம் தேதி சுற்றிப் பார்த்தோம்.
பாதிக்கப்பட்டவர்களில் இந்து, முஸ்லீம், கிறித்துவ மதத்தைச் சார்ந்த
சாதாரண மக்கள்தான் மிக அதிகமாக இருக்கிறார்கள். ஏற்கெனவே 9
பேர் சாவு ஏற்பட்டது மட்டுமல்லாமல் பல பேர் காயப்பட்டிருக்கிறார்கள்.
வீடுகளும், தென்னைகளும் அடித்து நாசமாக்கப்பட்டுள்ளன. சாமான்கள்
திருடப்பட்டிருக்கின்றன. சாவைவிட காயப்பட்டவர்கள் அதிகமாக இருக்
கிறார்கள். இதிலே ஒரு முக்கியமான விஷயம். பள்ளந்துறை என்ற
கிராமத்தில் குழந்தைகளுக்கும், பெண்களுக்கும் என்று ஒரு ஆஸ்பத்திரி
இருக்கிறது. அதைக் கிறிஸ்துவ சிஸ்டர்கள் நடத்திக் கொண்டிருந்தார்கள்.
அங்கு அந்த ஆஸ்பத்திரிக்கு ஏற்பட்டுள்ள சேதத்தை பொது வாழ்க்கையில்
நம்பிக்கை உள்ளவர்கள் அங்கீகரிக்க மாட்டார்கள். கழிவறை முதற்கொண்டு
உடைக்கப்பட்டிருக்கின்றது. நோயாளிகளின் மெத்தைக்கு முதற்கொண்டு
தீ வைத்திருக்கிறார்கள். மருந்துகள் கொட்டி சிதறடிக்கப்பட்டிருக்கின்றன.

(பிற்பகல் 5.40)

இன்னொன்று அந்த வட்டாரத்திலே அரசு நடத்துகின்ற ஆஸ்பத்திரி இல்லை.
அதுவும் ஓரளவுக்குத்தான் தேவைகளைப் பூர்த்தி செய்யும். அந்த ஆஸ்பத்திரி
யைத் திரும்பவும் செயல்படச் செய்ய வேண்டுமென்றால், மிக அதிகமான
அளவிற்கு உதவி செய்ய வேண்டியதாக இருக்கிறது. அப்படிப்பட்ட நிலை
மையில் அது இருக்கிறது. இன்னொன்று, அந்த வட்டாரத்திலே மேல்மணக்
காடு என்ற கிராமத்திலே, ஒரு கான்வென்ட் ஸ்கூல், அந்தப் பள்ளிக்கூடத்திலே

1982 மார்ச் 30] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

கடைசியாக எழுதப்பட்டது போர்டிலே 26.2.82 அன்று. மார்ச் மாதம், ஏப்ரல் மாதம் எழுத வேண்டிய பரிட்சையைப் பற்றி எழுதிப் போட்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு அதிலே இருக்கக்கூடிய இருக்கைகளும் உடைக்கப்பட்டிருக்கின்றன. இரண்டு வகுப்புகளுக்கு இடையிலே இருக்கக்கூடிய தடுப்புப் பலகைகூட, அடித்து நொறுக்கப்பட்டிருக்கிறது. அரசு வந்து மதிப்பீடு போட வேண்டும் என்று அந்த இடங்களை யாருமே பூட்டாமல் திறந்து போட்டு வைத்திருக்கிறார்கள். அந்தமாதிரி கடுமையான சேதம் ஏற்பட்டிருக்கிறது. இதை நான் குறிப்பாக கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். குளச்சல் அருகில் கோவில் பிறை பகுதியிலுள்ள சுண்ணாம்பு உற்பத்தி செய்பவர்கள் கிளிஞ்சல்களைப் பயன்படுத்தி சுண்ணாம்பு உற்பத்தி செய்பவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதை உற்பத்தி பண்ணக்கூடிய ஒரு 15 குடும்பங்களில் 9 வீடுகளை அறவே தட்டி விட்டார்கள். அவைகள் நொறுக்கப்பட்டிருக்கின்றன. பக்கத்திலே இருக்கக்கூடிய மரங்களிலேயும், மாட்டுக் கொட்டகைக்குள்ளும், உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சொந்தக்காரர்கள் இடங்களில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். 15 குடும்பங்களில் 9 குடும்பங்களினுடைய வீடுகள் தரைமட்டமாகிவிட்டன. அந்த வீடுகள் காரை வீடுகள். ஓலை வீடுகள் அல்ல. அந்தக் குடும்பங்கள் உள்ள பகுதி சுண்ணாம்பு உற்பத்தியாளர்கள் பகுதி. இன்னொன்று பள்ளந்துறை பகுதி. அந்தத் துறையிலே ஆயிரம் வீடுகள் இருக்கின்றன. அதிலே பூராவும் கிறித்தவர்கள், மீனவர்கள் இருக்கிறார்கள். அதிலே 650 வீடுகளுக்கு அதிகமாக அடித்து நொறுக்கப்பட்டிருக்கின்றன. பூராவும் ஓட்டு வீடுகள், அடித்து நொறுக்கப்பட்டுள்ளன. பெட்ரோலை ஊற்றி தீ வைத்திருக்கிறார்கள். பெட்ரோல் டின்களே அந்த வீடுகளுக்கு முன்னாலே கிடக்கின்றன. பக்கத்திலே 500 தென்னை மரங்கள் கருகி விட்டன. இப்படிப்பட்ட சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அது மட்டுமல்ல, ஈத்தா மொழியில் 3 கடைகள் நொறுக்கப்பட்டிருக்கின்றன. நான் கவனத்தில் கொண்டு வர விரும்புவது இதிலே உடனடியான நிவாரணம் என்ற முறையிலே நடவடிக்கைகள் இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். கோவில் பிறையிலே இருக்கக் கூடிய குடும்பங்கள், சுண்ணாம்பு உற்பத்தி பண்ணக்கூடிய அந்த 10 குடும்பங்கள், பள்ளந்துறையிலே இருக்கக்கூடிய அந்த ஆயிரம் குடும்பங்கள் அவர்கள் தொழிலைச் செய்ய முடியாது. காரணம் என்னவென்றால், வள்ளங்கள் முழுவதும் உடைக்கப்பட்டுவிட்டன. வலைகள் எல்லாம் அறுத்து எறியப்பட்டிருக்கின்றன. நான் அங்கே பார்க்கும் போதுதான், அவர்கள் ஊரிலேயிருந்து திரும்பி வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கடலுக்குப்

போக வேண்டுமென்றால், வள்ளமும், வலையும் இல்லாமல், அவர்கள் போக முடியாது. தொழில் செய்ய முடியாது. ஆகவே அந்தப் பகுதிகளுக்கு ஒரு மாதம் ரேஷனை அரசு இலவசமாகக் கொடுத்தால்தான் அவர்கள் தொழி லுக்குப் போக முடியும். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். ஆகவே பள்ளந் துறை, கோவில்பிறை ஆகிய இரண்டு பகுதிகளுக்கும் உடனடியான உதவிகளை அரசு செய்தால்தான் நல்லது. நஷ்ட ஈட்டைப் பொறுத்தவரையில், 8 பேர்கள் போலிஸ் துப்பாக்கிச் சூட்டிலே இறந்தவர்கள். ஒருவர் அந்தக் கலவரத்திலே கலவரக்காரர்களால் தாக்கப்பட்டு இறந்திருக்கிறார். ஆக அந்த ஒன்பது பேர் களுக்கும் உதவி செய்ய வேண்டும். இதை நான் அரசுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நஷ்டப்படுத்தப்பட்ட பொருள்களுக்கு நஷ்டஈடு கொடுப்பதாக அரசு வாக்குறுதி அளித்திருக்கிறது. இந்த நஷ்டஈட்டைப் பற்றி அசெஸ் செய்வதற்கு ரெவின்யூ ஆபிசர்கள் வந்து பார்க்க வேண்டும். அந்த நஷ்டத்தை ஈடு செய்ய வேண்டுமென்று அறிவித்திருப்பதால், அந்த நஷ்டம் எவ்வளவு என்று பார்ப்பதற்கு அதிகாரிகள் வருவார்கள் என்று அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். சர்க்கார் அதிகாரிகள் வருவார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அரசுத் தரப்பிலே அதை அசெஸ் பண்ணுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். நஷ்டம் எவ்வளவு என்று பார்ப்பதற்கு அதிகாரிகள் வருவார்கள் என்பதற்காக நஷ்டப்பட்ட பகுதிகளைப் பூராவும் திறந்து போட்டிருக்கிறார்கள். அவைகள் பாதுகாப்பு எதுவுமின்றி இருக்கின்றன. ஆகவே அரசுத் தரப்பிலிருந்து அதை அசெஸ் செய்வதற்கு ஏற்பாடு செய்து விட்டால், சிக்கிரமாக அந்த நஷ்ட ஈட்டைக் கொடுக்கலாம். கமிஷன் வந்த பிறகு யார் குற்றவாளி என்று சொல்லலாமே தவிர, இந்த அளவுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று கமிஷன் தீர்மானிக்கப் போவதில்லை. ஆகவே அரசு அந்தப் பகுதிகளுக்கு ரெவின்யூ அபிஷியல்களை அனுப்பி, அந்த நஷ்டம் எவ்வளவு என்று அசெஸ் பண்ணுவது அவசியம் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதுபோல பள்ளந்துறை என்ற கிராமத்தில் உள்ள அந்த வீடுகளும் அந்தக் கான்வென்டும், அந்த ஆஸ்பத்திரியும் திட்டமிட்டே நாசமாக்கப்பட்டிருக் கின்றன. கிட்டத்தட்ட 20 லாரிகளில் ஆட்கள் வந்து திட்டமிட்டு நாசம் செய்யப்பட்டிருக்கிறது. இதிலே எந்தவிதமான மறுப்பும் இருக்க முடியாது. அதை யார் வேண்டுமானாலும் பார்க்க முடியும். இது சம்மந்த மான நடவடிக்கைகள் தீவிரமாக இல்லாததால், அந்தப் பகுதி மக்கள் இன்னும் பயத்திலேயே இருக்கிறார்கள். அவர்கள் மத்தியிலே பயம் போகவில்லை.

அதுமட்டுமல்ல இன்னமும் அந்த டென்ஷன் இருந்து கொண்டிருக்கிறது என்பதை அரசுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு ஆறு மாத காலத் திற்கு மதப் பிரச்சாரம் செய்யாதிர்கள் என்று முதலமைச்சர் அவர்கள் பேசி னார்கள். மதத் தொழிலை நடத்துங்கள், மதப் பிரச்சாரம் செய்யாதிர்கள் என்று சொன்னார்கள். அதற்கு பதில் சொல்கின்ற முறையிலே மதுரை ஆதீனம் ஒரு வாரத்திற்கு முன்பு நாகர்கோவிலிலே பேசியிருக்கிறார்கள். " இவர் யார் இந்த மாதிரி பேச வேண்டாமென்று சொல்வதற்கு ? " என்று சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இது நீதி விசாரணையில் இருக்கிறது. இப்போது தனிப்பட்ட யாரையும் குறிப்பிடாமல் இருப்பது நல்லது.

திரு. ஆ. நல்லசிவன் : மேற்கொண்டு கலவரம் உண்டாக்க முயற்சிக்கின் றார்களே, அதை நான் அரசுக்குத் தெரிவித்துக் கொள்ள வேண்டாமா என்று கேட்க விரும்புகிறேன். அவர்கள் பகிரங்கமாகச் சொல்கிறார்கள். கன்னியா குமரியிலே எது நடந்தாலும் நாங்கள் உடனே பாதுகாத்து நிற்போம். ஆறிலும் சாவு, நூறிலும் சாவு, நீங்கள் தைரியமாகப் பாதுகாத்துக் கொள்ளுங் களென்று தினமலரிலே, அவர்களுக்கு விரோதமாக எழுதிக் கொண்டிருக்கிற பத்திரிக்கையானாலும், பரவாயில்லை, இருக்கிறது. அவர்கள் அப்படியே போட்டோ படம் போடக்கூடிய பத்திரிக்கையிலே இந்த மாதிரி எழுதப்பட்டு இருக்கிறது. அதுமட்டுமல்ல, முதலமைச்சர் அவர்கள் கூறியிருப்பதாகச் சொல்கிறார்கள். 'நான் நடிகன் அல்ல. எனக்கு நடிப்புக் கண்ணீர் விடத் தெரியாது' என்று வெளியிலே கூறுவதைச் சொல்லி இருக்கிறார்கள். இது எதற்காக என்றால், இந்த அரசு மதப் பிரச்சாரம் பண்ணாது என்பதற்கு மறு மொழியாக எடுத்துக் கொள்வதற்கு அப்படி அவர்கள் சொல்கின்றார்கள். " உதய சூரியனை மறைக்க முடியாது. காற்று எங்கே போவதையும் தடுக்க முடியாது " என்று அவர்கள் சொல்கின்றார்கள். இப்படியெல்லாம் இந்த நாட்டிலே பகிரங்கமாகப் பிரச்சாரம் பண்ணுகிறார்கள். இது தினமலரிலே பப்ளிஷ் ஆகியிருக்கிறது. இதிலே என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், இந்த டென்ஷன் இன்னும் அங்கே இருக்கிறது என்பதையும் அதைத் தூண்டு வதற்கான முயற்சிகள் நடக்கின்றன என்பதையும் நான் அரசின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். சைக்கிள் யாத்திரையிலே துண்டுப் பிரசுரங்கள் வீசப் பட்டிருக்கின்றன. அது எந்த அச்சகத்திலே அச்சிடப்பட்டது என்று அதிலே தெரிவிக்கப்படவில்லை. ஆனால் என்ன அதிலே சொல்லப்பட்டு

இருக்கிறது என்றால், இந்துக்கள் படித்தால் அவர்களது வெறியைத் தூண்டு கின்ற அளவுக்கு, பெண்களைப் பற்றித் தவறான செய்திகள் இருக்கின்றன. மண்டைக்காட்டில் பெண்கள் கற்பழிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படி ஒரு பொய்யான செய்தியை அச்சிட்டுப் போட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ரொம்ப விவரத்திற்குள்ளேயே போகிறார்கள். அது நல்லதல்ல. அங்கே எரிந்து கொண்டிருப்பதை நாம் அணையச் செய்ய விரும்புகிறோம். அணைப்பது நம்முடைய கொள்கை என்றால், கூடுமானவரையில் நாம் கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அதுதான் நல்லது.

திரு. ஆ. நல்லசிவன் : அணைக்க வேண்டும் என்பதற்காகத்தான் நானும் சர்க்காரிடம் சொல்லிக்கொண்டிருக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இது நிதி ஒதுக்கீடு பற்றிய பேச்சு. அந்த விஷயத்தில் முடிவிற்கு வர வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : நான் சுருக்கிக்கொள்கிறேன். இதை நான் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அந்த அபாயமான நிலைமைகள் அங்கே இருக்கின்றன. அங்கே டென்ஷன் இருக்கின்றது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்

அடுத்து, ஜப்தி விஷயம் பற்றிச் சொல்கின்றேன். கூட்டுறவுக் கடன்களுக்காக மீண்டும் அரசு ஜப்தியைத் தொடங்கியிருக்கிறது. அந்த ஜப்தியின் காரணமாக தமிழ் நாட்டிலே மீண்டும் ஒரு பதட்ட நிலைமை ஏற்படும் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஜப்தி சம்பந்தமாக அரசு கொடுத்த வாக்குறுதிப்படி நடக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். " ஐந்து ஏக்கருக்குக் கீழே வைத்திருப்பவர்களுக்குள்ள கடனை, வட்டியைத் தள்ளுபடி செய்யுங்கள். ஐந்து ஏக்கருக்கு மேலே உள்ளவர்களுக்கு அபராத வட்டியையும், வட்டியையும் ரத்து செய்ய வேண்டும், கடனைச் செலுத்த தவணை கொடுங்கள் ' என்று கேட்டிருக்கின்றார்கள். அரசுத் தரப்பிலே பல முறைகள் சொல்லும்போது, அதை மத்திய அரசுதான் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அதையும் நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் இப்போது நிலைமை என்ன ?

அவர்கள் வறட்சியினால் மீண்டும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் . அவர்கள் விளைவித்த பொருள்களுக்குப் போதிய விலை கிடைக்கவில்லை. மிளகாய் பல இடங்களிலே பூச்சியடித்திருக்கிறது. கரும்பை வெல்லமாக்குகின்ற செலவுக்குக் கூட கட்டுப்படியாகவில்லை என்பதால், அதை வயலிலேயே எரித்துவிடுவது என்ற எண்ணத்தில் இருக்கிறார்கள். அந்த அளவுக்கு விலை குறைவாக இருக்கிறது. நல்ல விலை கிடைக்காமல் திண்டாடுகின்ற நிலைமைகள் இருக்கின்றன. மின்சாரத் தட்டுப்பாடு இருக்கிறது. போதிய அளவுக்குத் தண்ணீர் இல்லை. இந்த நேரத்திலே ஜப்திக்குப் போனால், அது சரியாக இருக்குமா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். அதுவும் பயிர்க் கடனுக்காக நிவாரணம் தேவை என்ற இந்த விவசாயக் குழு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கண்டு பேசியபோது, ' நாங்கள் நிவாரணம் கொடுக்கத் தயாராக இருக்கிறோம், ஆனால் மத்திய அரசு எங்களை பிளாக் லிஸ்ட் பண்ணி, ரிசர்வ் பாங்கியிலே பிளாக் லிஸ்ட்டிலே சேர்த்துவிடுவார்கள் ' என்று சொல்கின்றார்கள். மத்திய அரசை விவசாய உயர் மட்டக் கமிட்டி போய்ப் பார்க்க வேண்டும் என்பதற்கான செலவுகளை இந்த அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதை ஏற்றுக்கொள்வதாகக் கூறியிருக்கிறது. அவர்கள் அப்படிப் போவதற்கு அனுமதி கொடுத்து விட்டு, இப்படி ' ஜப்தி செய்தால், அந்த விவசாயக் கமிட்டிக்கு, விவசாயிகளுக்கு எப்படி நம்பிக்கை ஏற்பட முடியும் என்பதைக் கேட்டுக் கொள்கிறேன். அந்த பாதிரியான சூழ்நிலை இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் நான் அரசுக்குத் தெளிவாகச் சொல்கிறேன். கிராமங்களில் நம்முடைய ரெவின்யூ அபிஷியல்களை, போலீசை வைத்துக் கொண்டு இந்தக் கடனை வசூலிக்கப் போகும்போது அங்கே ஒரு பதட்ட நிலையை அரசே உண்டாக்கிக் கொண்டிருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன். அதனால் சிக்கல்கள் ஏற்படும். முன்கூட்டியே அதைக் கவனிக்க வேண்டும். அரசுக்கு இருக்கக்கூடிய இடைஞ்சல்களுக்கிடையே இதையும் சேர்த்துக்கொள்ள வேண்டாம். நாட்டிலே இதையும் சமாளித்துக்கொள்ளலாம். இதைச் சமாளிப்பதில் பெரிய சிரமம் இல்லை. காரணம் என்னவென்றால் ஏற்கெனவே ரூ. 80 கோடி இந்த வருட பட்ஜெட்டிலே கூட்டுறவு பாங்கியிலே கொடுத்திருக்கிறார்கள். அந்த 80 கோடி ரூபாயை அவர்கள் ஏற்கெனவே கடனாக விநியோகித்திருக்கிறார்கள். அந்தத் தொகைகளை அடுத்த வசூலிலேயிருந்து ' பேக் அப் ' பண்ண முடியும். உடனடியாக ரிசர்வ் பாங்கில் பிளாக் மார்க் பெறக்கூடிய ஆபத்து இல்லை. இந்த வருட பட்ஜெட்டிலே அரசு கூட்டுறவு பாங்குக்கு என்று ஏற்கெனவே ரூ. 80 கோடி

கொடுத்திருப்பதால், அது விவசாயிகளுக்கு விநியோகம் ஆகியிருக்கிறது. ஆகவே- உடனடியாக அந்த ஆபத்து இல்லை. அந்த வசூல் தொகையிலே யிருந்து நிலைமையைச் சமாளிக்க முடியும். அந்த வசூல் தொகையிலேயிருந்து ரிசர்வ் வங்கிக்குக் கட்ட முடியும். அந்த அடிப்படையிலே அரசு யோசிக்க வேண்டும். ஐப்தி நடக்கின்ற காரணத்தினாலே தகராறு நடக்கிறது. தஞ்சாவூரிலே தகராறு நடந்திருக்கிறது. அது ரிப்போர்ட் ஆகிறது. அட்ஜார்ன்மென்ட் மோஷனே வந்திருக்கிறது. ஆகவே அரசு ஐப்தி விஷயத்திலே கவனமாக இருக்க வேண்டும். ஐப்தியை நிறுத்திவிட்டு, அதை எப்படிச் செய்யலாம் என்று ஆலோசித்துப் பார்க்க வேண்டும். இன்னொரு முக்கியமான விஷயம். பொது விநியோகத்தின் மூலமாக, 11 ஆயிரம் கடைகள் மூலமாக, அந்த 10 முக்கியமான பொருள்களை நியாயமான விலைக்கு விற்க ஏற்பாடு செய்ய வேண்டும். 100 கோடி ரூபாய் திட்டம் வைத்திருக்கிறார்கள். அது ஒரு விளம்பரத் திட்டம்தான் என்று கடந்த இரண்டு மூன்று மாதங்களாக விவாதத்தின்போது சொல்வதைக் கேட்டிருக்கின்றோம். அங்கே

(பிற்பகல் 5-50)

முதலமைச்சரவர்கள் குழந்தைகளுக்கு என்று சொன்னார்கள். இங்கே பேசுகிறபோது, பெண்கள் மூலம் கொடுக்கப் போகிறோமென்று சொன்னார்கள். நிதியமைச்சரவர்கள் சொல்லும்போது, மதிய உணவுத் திட்டத்தைப் போன்று இருப்பது போல 'லவுட் திங்கிங்' போல பேசினார்கள். 100 கோடி ரூபாயை எப்படிச் செலவழிக்கலாமென்பதற்கு உறுப்பினர்களே நல்ல யோசனை சொல்லுங்கள் என்று கேட்கிறார்கள். அரசிடம் இதற்கு திட்டவட்டமான திட்டமில்லை என்று இதிலிருந்து தெரிகிறது. விலைவாசி உயர்விற்கு மத்திய அரசின் கொள்கைதான் காரணம் என்பதை நாங்கள் ஒத்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் நேரடியாக மக்களுடன் மாநில அரசு தொடர்பு கொள்வதால், மாநில அரசு மீதுதான் மக்களுக்கு அதிருப்தி ஏற்படும். எனவே 10 அத்தியாவசியப் பொருட்களையாவது நியாய விலைக் கடைகளின் மூலம் விநியோகித்து, அந்த நஷ்டத்தை 100 கோடி ரூபாயில் ஈடு செய்யலாம். பத்து அத்தியாவசியப் பொருள்களை மலிவு விலையில் பெற்றோர்களுக்குக் கொடுத்து, அவர்கள் மூலம் குழந்தைகளுக்கு அந்தப் பயன் போகட்டும். அதற்கான 'இன்ப்ராஸ்டிரக்சர்' நம்மிடம் இருக்கிறது. 100 கோடி ரூபாய் செலவழிக்க தெளிவான திட்டமில்லை. விளம்பரத்திற்காகத் தான் இருக்கிறது. அதற்குப் பதிலாக 10 அத்தியாவசியப்

பொருட்களை நியாய விலைக் கடைகளின் மூலம் விநியோகித்தால், அதன் மூலமாக மக்களின் கஷ்டத்தை ஓரளவிற்குப் போக்கலாமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, வேலையற்றோர்களுக்கு நிவாரணம் என்ற பிரச்சினை வரும்போது, 14,000 பேர்களுக்குப் 'ப்ரொவைட்' பண்ணியிருக்கிறார்கள். மேற்கு வங்கத்தை இந்த விஷயத்தில் மேற்கோளாகக் கொள்ளக்கூடாதா? எம்ப்ளாய்மென்ட் எக்சேஞ்சில் 5 வருடங்கள் தொடர்ந்து எழுதி வைத்துள்ள அனைவருக்கும் நிவாரணம் கொடுப்பது என்று முடிவெடுத்து, 3 லட்சம் பேர்களுக்கு 40 லட்சம் ரூபாய் அளித்திருக்கிறார்கள். துப்பாக்கிப் பிரயோகத்திற்கு மேற்கு வங்கத்தை உதாரணம் காட்டும் அரசு, இதில் உதாரணம் காட்டக் கூடாதா? சட்ட சபையில் இதைச் சட்டமாக நிறைவேற்றியிருந்தால், எல்லோருக்கும் கிடைக்கும். அப்படியில்லாமல் அரசாணை போடுவதால், ஒரு மாவட்டத்திற்கு இவ்வளவு என்று கோட்டா ஒதுக்கும்போது, குறிப்பிட்ட எண்ணிக்கையினருக்குத் தான் கிடைக்கும். யாராவது செய்ததால்தான் இன்னொருத்தருக்குக் கிடைக்கும் நிலைமை இருக்கிறது. இதிலுள்ள குறைபாட்டை நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான பிரச்சினை. கைத்தறித் தொழிலாளர்களுக்கான சட்டத்தை நிறைவேற்றியாகிவிட்டது, 13—3—1982-லிருந்து அமுலுக்கு வருகிறதென்பது பேரவையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. சட்டத்தை அமுலாக்க விதிகள் தேவை. விதிகளை எப்படி அமுல் நடத்துவது என்று சம்பந்தப்பட்ட யாருக்கும் தெரியவில்லை. அரசு இதிலே விசேட கவனம் செலுத்த வேண்டும். நம்முடைய தமிழ் நாட்டில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக இருக்கக்கூடிய மிகப் பெரிய தொழிலாகிய கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ள—5 லட்சம் கைத்தறிகளில் ஈடுபட்டுள்ள—20 லட்சம் பேர்களுக்கு வாழ்வளிக்கும் பிரச்சினையில், விதியைப் போட்டு அமுல்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டும். இன்னும் சம்பந்தப்பட்ட இலாக்காவிற்கோ அல்லது கீழ் மட்டத்திலுள்ளவர்களுக்கோ எப்படி அமுலாக்குவது என்று தெரியவில்லை. . . . .

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு தலைவரவர்களே, விதி சட்ட இலாக்காவில் ஆய்வில் இருக்கிறது. விரைவிலே வெளியிடப்படும். அதற்காக சட்டத்தைத் தாமதப்படுத்த விரும்பவில்லை. ஒரு சில சட்டப் பிரிவுகளை விதியில்லாமலே அமுல்படுத்த முடியும். இப்போது அது நடந்து

கொண்டிருக்கிறது. மிக விரைவிலே இந்த விதிகள் அறிவிக்கப்படுமென்று சொல்லிக் கொள்கிறேன். இதைப் பேரவையிலும் சொல்லியிருக்கிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : தலைவரவர்களே, நன்றி. நான் கடைசியாக ஒன்றை அரசிடத்தில் சொல்ல விரும்புகிறேன். சென்ற ஆண்டுகூட சொன்னேன். அரசிடத்தில் தனக்கெதிராக, மற்றவர்களுக்கு எதிராக . . .

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, ஒரு சிறிய வேண்டுகோள். மாண்புமிகு உறுப்பினரவர்கள், விதி விரைவில் வர வேண்டும், சட்டம் இப்படி இப்படி இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். இந்தியாவிலேயே அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் தமிழகத்தில்தான் கைத்தறி நெசவாளர்களுக்காக ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினரவர்கள் தன் செல்வாக்கை உபயோகப்படுத்தி, மேற்கு வங்கத்தில் இதைப் போன்றதொரு சட்டத்தைக் கொண்டுவர முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இரண்டு பேரும் ரொம்பவும் சுமுகமாகப் போய்விட்டீர்கள் போலிருக்கிறது !

திரு. ஆ. நல்லசிவன் : தலைவரவர்களே, மேற்கு வங்கத்தில் ஏற்கெனவே வராமல் இருந்தால், அமைச்சரவர்கள் சொல்லும் யோசனைப்படி, அங்கே கொண்டுவர ஏற்பாடு செய்கிறேன்.

போன ஆண்டே ஒரு கருத்தைச் சொன்னேன். கருவூலத் துறையிலுள்ள ஊழியர்கள் மீது அனாவசியமாகப் பழி வாங்கல் நடக்கிறதென்று கூறினேன். அதை விசாரித்து நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார்கள். அதற்குப் பிறகு, இலாக்காவில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தவறானது என்று உயர்நீதி மன்றத்தில் தீர்ப்பு கொடுத்து, அனைவரையும் திரும்ப வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று உத்தரவு போட்டார்கள். அதற்குப் பிறகு 68 பேர்களையும் வேலைக்கு எடுத்துக் கொண்டு, மீண்டும் சஸ்பென்ஷனில் வைக்கப்படுகிறார்கள். அரசின் கொள்கைகளுக்கு எதிராக ஊழியர்கள் போராடும்போது, போராட்டம் செய்ய தைரியம் இருக்கிறதா என்று பாடம் புகட்ட இப்படி அவர்களைப் பழி வாங்கும் நிலை இருக்கிறதென்று நான்

நினைக்கிறேன். சஸ்பென்ஷன் செய்தது சரியில்லை என்று உயர்நீதி மன்றம் உத்தரவு போட்ட பிறகு, அந்த சஸ்பென்ஷன் ஆர்டரை 'கேன்சல்' செய்து, அவர்களை ஜாயின் பண்ணச் சொல்லி, மறு நாள் மீண்டும் சஸ்பென்ஷன் உத்தரவு போடப்படுகிறது. ஒரு ஆண்டுக்கு முன்பே இதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். இப்போதும் இதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இதில் சரியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையிலே இருக்கும் பால் பண்ணைத் துறையிலே ஒரு வருடத்திற்கு முன்னால் 1,500 பேர்கள் வேலை செய்தார்கள். அவர்கள் ஒரு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டபோது, வேலை நிறுத்த காலத்தில் வேறு சிலரை நியமித்து பாலை விநியோகம் செய்தார்கள். பிறகு சம்பந்தப்பட்ட அமைச்சரவர்கள் பேசி முடிக்கலாமென்று கூறிய பிறகு, ஏற்கெனவே வேலையில் வைத்தவர்களை எடுக்க முடியாது, ஆகவே உங்களுக்கு வேலையில்லை என்று ஐ. எல். ஓ. ஸ்டேன்டர்டை மீறி, இன்டர்நேஷனல் லேபர் ஆர்கனைசேஷன் ஸ்டேன்டர்டை மீறி, சொல்லியிருக்கிறார்கள். ஒரு வேலை நிறுத்தம் நடக்கும்போது, அந்த வேலை நிறுத்தத்தை உடைக்க யாரையும் பயன்படுத்தக்கூடாது என்று ஐ. எல். ஓ. விதி இருக்கிறது. வேலை நிறுத்தத்தை உடைக்க சில பேரை வேலைக்கு புகுத்தியது மட்டுமல்லாமல், அது முடிந்து அவர்கள் வேலைக்கு வந்த பிறகுகூட, அவர்களை வேலைக்கு வைத்ததால் உங்களை எடுத்துக்கொள்ள முடியாது என்று 1,500 பேரை வேலையில்லாமல் வெளியே வைத்திருக்கும் அரசின் கொள்கை தொழிலாளர் விரோத கொள்கைதான். பழி வாங்கும் எண்ணம் தான்.

(மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் எழுந்தார்)

நான் நிதி அமைச்சரவர்களிடம்தான் கேட்கிறேன். தொழிலாளர் நலத் துறை அமைச்சரவர்களிடம் கேட்கவில்லை.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : எந்த மந்திரி வேண்டுமானாலும் பதில் சொல்லலாம்.

THIRU A. NALLASIVAN : I am not yielding.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் உட்கார வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள், செய்து கொண்டிருக்கிறார்கள். பால் பண்ணை அதிகாரிகளோ அரசாங்கமோ யாரையும் வேலையை விட்டு நீக்கவில்லை. அவர்கள் வேலைக்கு வரவில்லை. தொடர்ந்து வேலை நிறுத்தத்தில் இருக்கிறார்கள். மக்களுக்குப் பால் கொடுக்க 'ஆல்டர்னேட் அரேன்ஜ்மென்ட்' செய்திருக்கிறார்கள். யாரையும் வேலையை விட்டு நீக்கவில்லை. அவர்களாக நின்றிருக்கிறார்கள். They have sacrificed their job. தொடர்ந்து வேலை நிறுத்தத்தில் இருக்கிறார்கள்.

திரு. ஆ. நல்லசிவன் : தலைவரவர்களே, மக்களுக்குச் சேவை செய்வதற்காக தங்கள் வேலையை ஒரு வருடமாகத் தியாகம் செய்யும் தொழிலாளர்களை இங்கேதான் பார்க்க முடியும். அரசைப் பொறுத்த மட்டிலும், 1,500 பேர்களின் குடும்பங்களைத் தெருவிலே விட்டுவிட்டு, குறிப்பாக ஆளும் கட்சியைச் சேர்ந்த 'உறுப்பினர்களை ஸ்டிரைக்கை உடைக்கப் பயன்படுத்தி, அவர்களுக்கு வேலையில்லாமல் போகக் கூடாதென்று வேலை கொடுத்து, இவர்களைத் தெருவில் நிறுத்திவிட்டு, இவர்கள் பொது மக்களுக்காகத் தியாகம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லும் தொழிலாளர் நல மந்திரியை தமிழ் நாட்டில் தவிர வேறு எங்கும் பார்க்க முடியாது. இதில் அரசு தலையிட்டு. 1,500 பேர்களுக்கு வேலை கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு, என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, 2,138 கோடி 62 லட்சம் 10 ஆயிரம் ரூபாய் அளவிலே இன்றைக்கு மாண்புமிகு நிதி அமைச்சவார்கள் நிதி ஒதுக்கீடு கோரி இந்த அவை முன்னே வந்திருக்கிறார்கள். சட்ட மன்றத்தினுடைய இந்தத் தொடர் கூட்டம் முடிவடைகின்றது என்பதற்கு இந்தச் சட்ட முன்வடிவு அடையாளமாக வந்திருக்கிறது. பெருந்தொகையைப் பெறுகின்ற நிதியமைச்சாவர்கள் நாளை அல்லது அதற்கு மறு நாளிலிருந்து இந்தச் சட்டமன்றம் விரும்பிய நம்பிக்கை கொண்டு நிறைவேற்றித் தந்த பல்வேறு இனங்களுக்கு இந்த நிதியைப் பயன்படுத்தி, வருகிற ஓராண்டிற்கு தமிழகத்திற்கு நல்வாழ்வு என்ற வகையிலே வழி அமைக்க இருக்கிறார்கள். அவர்களுக்கு என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு மாத்திரமல்ல,

(பிற்பகல் 6.00)

தமிழகத்திலே முதன் முறையாக இன்றைக்கு சட்ட மன்ற உறுப்பினர்களாக, பொது மக்களுடைய பிரதிநிதிகளாகப் பணியாற்றுபவர்களுக்கு, அவர்கள் சிரமமின்றி நல்ல முறையில் பணியாற்ற வேண்டுமென்ற எண்ணத்தில் பல்வேறு வசதிகளை, வாய்ப்புகளை இந்த அரசு தேடித் தந்திருக்கிறது. இப்படிச் செய்வது கூட தவறு என்ற எண்ணம் உருவாகிக் கொண்டிருந்த நிலையை இந்த அரசு மாற்றியமைக்கும் வகையில் இதைச் செய்திருக்கிறது. இவை அவசியம் தேவை. இதையெல்லாம் செய்தால்தான், சட்ட மன்ற உறுப்பினர்கள் தங்களுடைய கடமைகளைச் செம்மையாக, முழுமையாக நல்ல முறையில் ஆற்ற முடியும் என்ற வகையில், சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு, அமைச்சர்களுக்கு, சட்ட மன்றத் தலைவர்களுக்கு எல்லாம் பல சலுகைகளை அறிவித்திருக்கிறார்கள். சட்ட மன்ற உறுப்பினர்களுக்குத் தேவையான உதவி பற்றி அறிவித்ததற்காக அந்த வகையிலும் இந்த அரசுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். பலவற்றை இங்கே எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். ஆனால் சிலவற்றை மட்டும் நான் இங்கே கோடிட்டுக் காட்ட ஆசைப்படுகிறேன். நம்முடைய அரசு கடன் நிவாரணச் சட்டத்தின் கீழ் ஏழையெளியவர்கள் பலன் பெற வேண்டுமென்ற அடிப்படையில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தது. அரசின் நடவடிக்கையைப் பொறுத்தவரையில், அதில் தவறுகள் கிடையாது. ஆனால் உண்மையில் ஏழையெளியவர்களுக்கு அதன் பலன் போய்ச் சேரவில்லை, கிடைக்கவில்லை, ஒரு சில அதிகாரிகளின் நடவடிக்கையால். இதையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த அரசும், இந்த மாமன்றமும் எதை விரும்பிற்றோ அது நிறைவேறியிருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும். ஏழையெளியவர்களுடைய நல்வாழ்வுக்காக, நாட்டிலே இன்றைக்கு வாழ வழியின்றி உழன்று கொண்டிருப்பவர்களுக்காக எதைச் செய்ய வேண்டுமென்று விரும்பினோமோ அதன் பலன் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. அதற்கு பல்வேறு ஆதாரங்கள் என்னிடம் இருக்கின்றன. இந்த நேரத்தில் ஒரே ஒரு ஆதாரத்தை மட்டும் இங்கே அதற்குத் துணை சேர்ப்பதன் மூலம் இந்தக் கடன் நிவாரணப் பணிகள் செம்மையாக, முறையாக நடைபெற வாய்ப்பாக இருக்கும் என்கிற வகையில் கோடிட்டுக் காட்ட ஆசைப்படுகிறேன். இந்தச் சட்டத்தின் கீழ் ஏழையெளிய மக்கள் பலன் பெற என்னுடைய கருத்து வாய்ப்பாக அமையும் என்ற வகையில் இதை நான் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. க. இராமமூர்த்தி] [1982 மார்ச் 30

தென்னாற்காடு மாவட்டம் காட்டுமன்னார் கோவில் வட்டம்
ம. கொத்தங்குடி கிராமத்தில் வசிக்கும் செ. குஞ்சிதபாதம் பிள்ளை மனைவி
விதவை அன்னம்மாள் என்பவர் இதுகுறித்து எனக்குக் கடிதம் ஒன்று
எழுதியுள்ளார். அதில் ' எனது கணவர் வீடு அடமானம் 1966 ஆம் ஆண்டு
ரூபாய் 3,000-க்கு வைத்து அவர் 1972 ஆம் ஆண்டு இறந்துவிட்டார். நான்
ஒரு ஏழை விதவை. நான் மனு பாரத்தை தாலுக்காவில் பெற்று பூர்த்தி
செய்து தாசில்தாரிடம் வருமானச் சான்றிதழ் பெற்று சிதம்பரம் கடன்
நிவாரண தாசில்தார் அவர்களுக்கு மனு செய்து கொண்டேன்
தாசில்தார் அவர்கள் தீர்ப்பில் எனது கணவர் உயிருடன் இருந்து நிவாரணம்
கேட்கலாம், அவர் இறந்து போய்விட்டார். அவருடைய மனைவி
விதவை, நிவாரணம் கேட்க முடியாது என்று தீர்ப்பு கூறியுள்ளார்.'
என்று எழுதியிருக்கிறார்: அந்தக் கடன் நிவாரண தாசில்தாருடைய பெயரை
நான் சொல்ல விரும்பவில்லை. 'நான் உடனே சிதம்பரம் துணை ஆட்சியர்
அவர்களுக்கு 14—3—1981-ல் டி.ஆர்.எ. 49/80—13/80 அப்பீல் செய்தேன்.
இதுவரை ஒரு வருடம் ஆகியும் துணை ஆட்சியர் தீர்ப்பு அளிக்கவில்லை'
என்று அவர் மீண்டும் எழுதியிருக்கிறார். மேற்கொண்டு அந்தக் கடிதத்தில்
எழுதியுள்ளதை நான் படிக்க விரும்பவில்லை. ஏற்கெனவே இந்த
அவையில் கடன் நிவாரணம் பற்றி நான் பலமுறை சொல்லியிருக்கிறேன்.
கடன் நிவாரணச் சட்டத்தின் அடிப்படையிலே எப்படிச் செயல்படுகிறோம்
என்பதைப் பார்க்க வேண்டும். யார் அதிகாரத்தின் அடித்தளத்தில்
இருக்கிறார்களோ அவர்கள் மூலம் கடன் கொடுக்க வேண்டியிருக்கிறது.
துர்ப்பாக்கியவசமாக அந்தப் பொறுப்பை யாரிடம் ஒப்படைத்திருக்கிறோமோ
அவர்களுடைய நெஞ்சங்கள் இந்த அவையினுடைய, அரசினுடைய
உணர்வுகளுக்கு ஏற்ப செயல்படவில்லை. ஏழையெளியவர்களுக்கு நன்மை
செய்வதாக இல்லை. அவர்களுடைய உணர்வுகள் இந்த மன்றத்தின்
உணர்வுகளுக்கு ஏற்ப, ஏழையெளியவர்களுக்கு நன்மை செய்வதாக
இருந்திருக்க வேண்டும். சட்டபூர்வமாக நாம் ஏழைகளுக்குத் தர
வேண்டுமென்று சொல்லுகிற பல்வேறு சலுகைகளைத் தர வேண்டுமென்ற
உணர்வு அவர்களிடம் இல்லை. அத்தகைய ஒரு நிலையை இன்றைக்கு
உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் நாம் என்ன
தான் சட்டத்தைப் போட்டாலும், அதிகாரத்தை வைத்துக்கொண்டு ஆட்சி
நடத்தினாலும், அதனால் ஏழையெளியவர்களுக்குப் பலன் இருக்காது.
இன்னொரு சுற்றறிக்கையும் வந்திருக்கிறது. இரண்டொரு முறை அதுபற்றி

1982 மார்ச் 30 [திரு. க. இராமமூர்த்தி]

நான் பேசியிருக்கிறேன். நகைக் கடனை சுத்தமாக இனிமேல் கொடுக்க வேண்டாம் என்று கிராமக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சுற்றறிக்கை வந்திருக்கிறது.

தென்னாற்காடு மத்திய கூட்டுறவு வங்கி லிமிடெட், கடலூர், ந. க. 817/81-82-இ, நாள் 14—3—1982-ன்படி இது அனுப்பப்பட்டிருக்கிறது. அதிலே ' தகவல் 1-ல் கண்டுள்ள சுற்றறிக்கைப்படி மாநில வங்கியார் மத்திய வங்கிக்குப் போதிய அளவு நகர வங்கிகள் மற்றும் பிரதம கூட்டுறவு சங்கங்கள் ஆகியவற்றின் மூலம் நிலம் கடன் வழங்க, 1982 ஆம் ஆண்டிற்கு அனுமதிக்காததினாலும், நிதி நிலை முடக்கம் காரணமாக, மத்திய வங்கிக்கு அனுமதிக்கப்பட்ட கடனளவின் தற்போதைய நிலுவை தொகையையே மாதா மாதம் குறைத்துக் கொண்டு வர வேண்டும் என தெரிவித்துள்ளதால், சங்கங்களுக்கு மேற்கொண்டு மத்திய வங்கியினால் நிதி வசதி அளிக்க இயலாததோடு, நம் வங்கி மாநில வங்கியில் பெற்றுள்ள கடன் அளவு மற்றும் நிலுவைத் தொகையை மாதா மாதம் அவர்கள் அறிவித்துள்ளபடி குறைத்துக்கொண்டு வர வேண்டும் என்பதால், சங்கங்களுக்கு 1982 ஆம் ஆண்டுக்கு அனுமதிக்கப்பட்ட ரொக்கக் கடனளவைக் குறைத்து அதிகப்படியாக உள்ள நிலுவையினை வசூல் செய்து மாநில வங்கிக்குச் செலுத்துவதை தவிர, வேறு வழியில்லை என்ற அடிப்படையில் சங்கங்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள கடன் அளவு மற்றும் நிலுவை ஆகியவற்றையும் பரிசீலித்து, தகவல் 2-ல் தனி அலுவலர் கூட்டத் தீர்மானம் 20, நாள் 3—3—1982-ன்படி இத்துடன் இணைத்துள்ளவாறு, நகர வங்கிகளுக்கும் பிரதம சங்கங்களுக்கும் விவசாய வங்கிகளுக்கும் 1982 ஆம் ஆண்டிற்கு அனுமதிக்கப்பட்ட நகைக் கடனளவை அவைகளுக்கு எதிரே , குறிப்பிட்டவாறு குறைத்து அனுமதிக்கப்படுகிறது."

"தற்சமயம் கடனளவைக் குறைத்து அனுமதி செய்வதினால் நிலுவை அதிகமாக உள்ளதை உடனடியாக வசூல் செய்து இருசால் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் " என்று சொல்லிவிட்டு இந்த அறிக்கையைத் துரித சுற்றறிக்கையாக சம்பந்தப்பட்ட சங்கத் தலைவர்கள் அனைவருக்கும் சம்பந்தப்பட்ட சங்கச் செயலாளர்கள் அனைவருக்கும் என்று குறிப்பிட்டு விட்டு, அதன் நகலை அனைத்துக் கிளை மேலாளர்களுக்கும் தக்க நடவடிக்கைக்காக என்று அனுப்பியிருக்கிறார்கள். இந்தத் துரிதச் சுற்றறிக்கை வெளி வந்ததன் விளைவாக, கிராமங்களைப் பொறுத்த வரையில், நகைக் கடன் கிடையாது என்று சொல்லக்கூடிய நிலை

ஏற்பட்டிருக்கிறது. இது எங்கே கொண்டு போய் நிறுத்தும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். விவசாயப் பணி வேகமாக நடந்து கொண்டிருக்கிற இந்த நேரத்தில் இப்படி உத்தரவு போட்டிருப்பதன் காரணமாக, அவர்கள் மேற்கொண்டு நகைக் கடன் பெற முடியாது. கடன் நிவாரணச் சட்டத்தின் மூலம் யாருக்கு நன்மை அளிக்க வேண்டுமென்று நாம் நினைக்கிறோமோ அவர்களுக்கு அது கிடைக்கவில்லை. மீண்டும் யாரிடம் அவர்கள் சென்றால், மிக அதிகமான அளவுக்கு வட்டிப் பணம் செலுத்த வேண்டியிருக்குமோ, யாரிடம் சென்றால் நகையும் வராது, பணமும் வராது என்கிற நிலை இருக்கிறதோ, அவர்களை நோக்கி விவசாயிகளை இந்தத் துரிதச் சுற்றறிக்கை மூலம் துரத்திக் கொண்டிருக்கிறது. இந்த முடிவு சரியான முடிவு அல்ல. இது ஒரு தவறான முடிவு. நகைக் கடன்களை கிராமத்தில் இருக்கிற கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகக் கொடுப்பதை நிறுத்துவது என்பது ஒரு நல்ல முடிவல்ல, நல்ல வழிமுறையும் அல்ல. இதுகுறித்து மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் இதுபோல் நிறைய இருக்கின்றன. அவற்றையெல்லாம் இப்பொழுது நான் பேச விரும்பவில்லை. அரசுத் துறைகளைப் பொறுத்தவரையில், அமைச்சர்களைப் பொறுத்தவரையில், நான் ஒன்றைச் செய்யச் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். பாராளுமன்ற உறுப்பினர்கள், சம்பந்தப்பட்ட மத்திய அரசின் துறைகளுக்கோ, அமைச்சர்களுக்கோ, அவர்களுடைய தொகுதி பற்றியோ, எடுக்கப்பட வேண்டிய பல்வேறு நடவடிக்கைகள் பற்றியோ கடிதம் எழுதினால், அந்தக் கடிதங்களுக்கு உடனடியாக முழுமையான பதிலைப் பெறுகிறார்கள். அதோடு மட்டுமல்ல. அந்தத் துறை அதுசம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதையும் தெரிவிக்கிறார்கள். கடைசியாக கடிதம் எழுதுகிற நேரத்தில் உள்ள நிலைமை என்ன என்பதைப் பற்றித் தெளிவாக எழுதுகிறார்கள். ஆனால் நம்முடைய மாநிலத்திலுள்ள துறைகளுக்கு சட்ட மன்ற உறுப்பினர்கள் கடிதம் எழுதினால், பதில் வருவதில்லை. தப்பித் தவறி வந்தால் கூட, 'உங்களுடைய கடிதத்தில் கண்டுள்ளது பரிசீலனையில் இருக்கிறது' என்று தான் பதில் வரும். அதற்குப் பிறகு 6 மாதத்திற்கு அப்பால் நாமாக அதுகுறித்து மீண்டும் எழுதினால், மீண்டும் 'பரிசீலனையில் இருக்கிறது' என்ற முத்துப் போன்ற வார்த்தைகள் தான் பதிலாக வரும். வேறு பதில் வருவதில்லை. இதன் விளைவு என்ன என்பதை எண்ணிப் பார்க்க

வேண்டும். பலவற்றை, கடிதம் மூலம் துறை தெரிவிக்க வேண்டியவற்றைத் தெரிவிப்பதில்லை. இப்படி துறையினருக்குத் தெரிந்த ஒன்றைத் தெரிவிக்காமல் தவிர்த்து விடுவதன் மூலம், அதற்கு இடம் கொடுக்காமல் செய்வதன் மூலம், நாம் அந்தத் துறை அதிகாரிகளைப் பற்றி விமர்சனம் செய்து பேச வேண்டிய கட்டாயச் சூழ்நிலைக்கு ஆளாகிறோம். பல தவறுகள் ஆங்காங்கே நடைபெறும்போது, அந்தந்தப் பகுதிகளில் இருக்கிற சட்ட மன்ற உறுப்பினர்கள் உடனே அதுபற்றி எழுதுகிறார்கள். அப்படி எழுதப்படுகிற புகார் மீது உடனடியாக அதிகாரிகள் எந்தவித நடவடிக்கையும் எடுப்பதில்லை. அதிகார வர்க்கத்தைப் பொறுத்த வரையில், எதைக் குற்றம் சாட்டி அதற்கு எழுதுகிறார்களோ அந்தக் குற்றச்சாட்டுகள் மீது நடவடிக்கை எடுக்காது. அத்தகைய நிலைக்கு இன்றைக்கு அதிகார வர்க்கம் வந்திருக்கிறது. அதனால் தான் பல குற்றச்சாட்டுகள் சம்பந்தமாக மீண்டும் மீண்டும் இங்கே சொல்ல வேண்டிய கட்டாயத்திற்கு நாம் ஆளாகிறோம். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நிதித் துறையின் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருப்பதால், அனைத்துத் துறைச் செயலாளர்களுக்கும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் சட்ட மன்ற உறுப்பினர்களிடமிருந்து கடிதம் வந்தால், உடனடியாக அவர்களுக்கு முழுமையான பதிலைத் தர வேண்டுமென்ற ஆலோசனையை, சுற்றறிக்கையை, உத்தரவை வெளியிட வேண்டும். அப்படிப்பட்ட ஒரு உத்தரவாதத்தை அளிப்பதன் மூலம் ஜனநாயகம் நல்ல முறையில் செம்மையாகச் செயல்பட அது வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 6.10)

திண்டுக்கல் கோபிநாதசுவாமி கோயில் அறங்காவலர்களின் நிர்வாகத்தில் இருக்கிற ஊழல், வட ஆற்காடு மாவட்டம் வாணியம்பாடி வட்டம், வெங்கடசமுத்திரம் மதுரா பாட்டூர் ஆலய நிர்வாகத்தில் இருக்கிற முறைகேடுகள் மற்றும் காரைக்குடியில் உள்ள கொப்புடைநாயகி அம்மன் கோயில் நிர்வாகத்தில் உள்ள ஊழல்கள் என்று பல்வேறு தகவல்கள் எனக்குத் தமிழ் நாட்டின் பல பகுதிகளிலிருந்து வந்து கொண்டிருக்கின்றன. அவைகளையெல்லாம் கூட இந்த நேரத்தில் நான் இங்கே குறிப்பிட விரும்பவில்லை. இவற்றின் மீது முறையான நடவடிக்கை எடுத்து, சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரிவித்திருந்தால், நன்றாக இருந்திருக்கும்.

நீங்கள் சொன்னது தவறு, இதுதான் உண்மையான தகவல் என்பதையாவது துறை கொடுத்திருக்கலாம். ஆனால் அதற்கு மாறாக, 'நீ யார் கேட்பதற்கு? எனக்கு அதிகாரம் இருக்கிறது' என்ற உணர்வோடு துறையினர் செயல்பட்டால், அதன் விளைவு இப்படி குற்றச்சாட்டுகளாக வெடித்து, கடிதங்களாக வெளி வந்து, பின்னர் துண்டுப் பிரசுரங்களாக, துண்டுச் சீட்டுகளாக வருவதோடு, இங்கேயும் பேசுகிற நிலை உருவாகிறது. எனவே இவைகளையெல்லாம் தவிர்க்கக் கூடிய வகையில் அனைத்துத் துறைகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, காவல் துறை எப்படி நடைபெறுகிறது என்பதற்கு ஒரு வேதனையான தகவல் எனக்கு வந்திருக்கிறது. எஸ். ரெத்தினம் என்பவர், நெ. 7, நந்தனம் காலனி, 2-ம் தெரு, சென்னை 35-ல் குடியிருப்பவர் ஒரு மனு அனுப்பியிருக்கிறார். இதைக் குறித்து மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஏற்கெனவே மற்றொரு அவையில் பதில் சொல்லியிருக்கிறார் என்று அறிகிறேன். எனக்கு அதற்குப் பிறகு ஒரு கூடுதலான தகவல் வந்திருக்கிற காரணத்தால், அதை மட்டும் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். அவருடைய மகன் படுகொலை செய்யப்பட்டிருக்கிறான். எனவே தந்தை அந்தக் கடிதத்தை எழுதியிருக்கிறார்.

"சைதை காவல் நிலையத்தினர் பிணத்தை மறுநாள் 3—12—1981 காலை 7.15 மணிக்கு அண்ணா சாலை வழியாக எடுத்துச் சென்று அரசாங்கப் பொது மருத்துவமனையில் அனாதைப் பிணம் என்றும், புகை வண்டி விபத்தில் இறந்தவர் என்றும் கூறி பிணவறையில் ஒப்படைத்து உள்ளனர்."

"ஏற்கெனவே இந்தச் சம்பவம் ஏற்படுவதற்கு சில நாட்களுக்கு முன்பு சைதை காவல் நிலையம் எஸ். பி. ஓ. பி. சி. 44 ஜெ-1 பி. எஸ் ர கணேசன் என்பவருக்கும் கொலை செய்யப்பட்டவருக்கும் வாய்த் தகராறு ஏற்பட்டு அந்தக் காவலர் இறந்தவரை வீடு வரை துரத்தி வந்துவிட்டு, "நீ வெளியே வா, உன்னை என்றைக்கிருந்தாலும் பார்த்துக் கொள்கிறேன்" என்று சவால் விட்டுப் போயிருக்கிறார்."

"இறந்தவர் குடித்திருந்ததாகவும் அவர் வாயில் சாராய வாடை வீசியதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது இறந்தவர் ஏதோ குடித்துவிட்டு குடிபோதையில் இருந்த சமயம் ஏதோ விபத்தினால் இறந்திருக்க வேண்டும் என்று சொல்வதற்கு ஆதாரமாக இருப்பதற்கு முன்னேற்பாட்டுடன் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் உடல் உறுப்புகள் பரிசோதனைக் குறிப்பில் "விஸ்செரா" எவ்விதமான சாராயமோ நஞ்சோ பரிசோதனையில் கண்டுபிடிக்கப்படவில்லை என்று திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது"

விஸ்செரா ரிப்போர்ட் காப்பிகூட என்னிடம் இருக்கிறது. அதை மட்டும் இங்கே படிக்க விரும்புகிறேன்;

Tamil Nadu Forensic Science Laboratory, Kamarajar Salai, Madras-4.

. . . . "We examined the above six articles but we did not detect methhyl alchohol or other poison in any of them."

இப்படி ஒரு ஏழை கொலை செய்யப்பட்டார் என்ற நிலை வருகிறபோது, அதற்கான விசாரணை எவ்வளவு முறைகேடாக இருந்திருக்கிறது அல்லது அலட்சியப்படுத்தப்பட்டு, பொறுப்பற்ற முறையில் இருந்திருக்கிறது என்பதற்காகத்தான் நான் இதைக் குறிப்பிடுகிறேன். காவல் துறை இந்த ரிப்போர்ட்டை வாங்கித்தான் இறுதியாக முடிவு செய்ய வேண்டும். இது வருவதற்கு முன்னாலேயே அவர் "குடிபோதையில் இறந்துபோனார்" என்று எழுதி வைத்துவிட்டு அந்தக் குற்றத்தைக் காவல்துறை மூடி மறைக்கிற நிலை வருமானால், ஊரில் சட்டம் ஒழுங்கு எப்படிச் செயல்படும், ஏழை எளிய மக்களுக்கு எப்படி நியாயம் கிடைக்கும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இதில் அரசுக்கு நேரடியான பொறுப்பு இருக்கிறதா இல்லையா என்பது கூட அல்ல. அதிகாரிகள் எந்த அளவுக்குத் துணிந்து செயல்படுகிற நிலை தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கிறபோது, அந்தத் துறை "இன்னும் முறையாக அலெர்ட்" செய்யப்பட வேண்டும் என்று கூற விரும்புகிறேன். தங்களுக்கு மேலே இருப்பவர்கள். நடவடிக்கை எடுப்பார்கள் என்ற அச்ச உணர்வு, பய உணர்வு இல்லாத வரை எந்தத் துறையும் சரியாகச் செயல்படாது. அப்படிப்பட்ட உணர்வை உருவாக்க வேண்டியது அவசியம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சட்டமன்ற மேலவைத் துறையைப் பொறுத்தவரை, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களிடத்தில் ஒன்றை வேண்டிக் கொள்ள விரும்புகிறேன். இந்தத் துறை அதிகமான பதவி உயர்வுக்கு வாய்ப்பு இல்லாத துறை. ஆகவே நம்முடைய துறையின் செயலாளர்களையும் மற்ற துறைகளில் உள்ள செயலாளர்களின் அந்தஸ்திற்கு ஒப்ப உயர்த்துவதன் மூலமாக அவர்களுக்கு ஒரு தனியான மரியதையை உருவாக்க முடியும் என்பது மட்டுமல்ல, வேறு சில பணிகள் வேகமாக நடைபெறுவதற்கும் இது துணையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பல நேரங்களில் சம்பந்தப் பட்ட துறைகளுக்கு எழுதும்போது சிலவற்றிற்கு மாதக் கணக்கில் பதில் வராமல் காத்துக் கொண்டிருக்க வேண்டிய நிலை இருக்கிறது. அந்த நிலைமைகளை மாற்றி சில கடிதங்களையெல்லாம் நமது துறையின் மூலம் மற்ற துறைகளுக்கு அனுப்பி அவற்றிடமிருந்து உறுப்பினர்களுக்கு உரிய பதிலை நமது துறை வாங்கித் தர இயலும். இப்போது கேள்விகள் கேட்கப்பட்டால், எப்படி உரிய துறைக்கு நமது துறை அனுப்பிப் பதிலைப் பெற்று அவைக்கு அளிக்கிறதோ அதைப்போல சாதாரண கடிதங்களைக்கூட இந்தத் துறையின் மூலம் மற்ற துறைகளுக்கு அனுப்பி பதில் பெற முடியும். அதன் மூலம் நமது துறைக்கும் ஒரு 'இன்டரஸ்ட்' இருக்க முடியும். இதற்கென்று ஒரு தனியான பிரிவையும்கூட நமது துறையில் ஏற்படுத்த வேண்டும். சட்ட மன்றப் பேரவை பெரியது என்று நினைத்தாலும், நமது அவையில்கூட பரிட்சார்த்தமாக இத்தகைய முயற்சியை மேற்கொண்டு பார்க்கலாம் என்று நான் கருதுகிறேன். அதற்கு ஏற்ற வகையில் துறையை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, துறையில் இருப்பவர்களின் பதவி உயர்வுக்கான வாய்ப்புகளை விரிவு படுத்த வேண்டும், அதற்கேற்ப ஒரு ரிசர்ச் பிரிவு ஏற்படுத்தப்பட வேண்டும் என்று சொல்லி, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கோரியிருக்கும் நிதியை ஒதுக்குவதற்கு என்னுடைய கட்சியின் சார்பில் ஆதரவைத் தெரிவித்து அமைகிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கிடு மசோதா மீது எனது கருத்துக்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நிதியொதுக்க மசோதா பற்றிய விவாதத்தில் நான் கலந்து கொண்டு பேசுகிற நேரத்தில் கடந்த ஆண்டு இந்த அவையில் வைக்கப்பட்ட நிதி ஒதுக்கம் பற்றிய சில விவரங்களையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

1978-79 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கத்தைப் பற்றியும், அதில் அரசாங்கம் செய்திருக்கிற செலவுகளைப்பற்றியும் இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தக் குறிப்புகளையெல்லாம் நான் விவரமாக இங்கே தெரிவிப்பதைவிட இன்றைக்கு ஒரு நாளைக்காவது கொஞ்சம் விரைவில் பேசி முடித்துக்கொள்ளலாம் என்று கருதுகிற காரணத்தால், அவைகளைப்பற்றிச் சுருக்கமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1978-79 ஆம் ஆண்டு 1,317 கோடி ரூபாய் ஒதுக்க வேண்டும் என்று கேட்டு ஒதுக்கப்பட்டு அதில் ரூ. 1,179 கோடிதான் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கும்போது, 143 கோடி ரூபாய் இந்த அரசாங்கம் அந்த ஆண்டில் பல்வேறு இலாக்காக்களுக்கு ஒதுக்கிய பணத்தைச் செலவழிக்கவில்லை என்பதைப் பார்க்கிறோம். அதைப்போலவே 1979-80 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கிய பணம் முழுவதுமாகச் செலவிடப்படவில்லை. 1,482 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு 1,435 கோடி ரூபாய்தான் அதில் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்ற புள்ளிவிவரத்தை நாம் பார்க்கிறோம். 1979-80 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தில் ஏறத்தாழ 158 கோடி ரூபாய் செலவழிக்கப்படவில்லை என்ற வகையில் விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இந்த வகையில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு ஒரு கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். பொதுவாக இலாக்கா அமைச்சர்கள் அந்தந்த இலாக்காக்கள் அக்கறையோடு வேகமாகச் செயல்பட வேண்டும் என்று விரும்பினாலும்கூட, ஏந்தக் காரணத்தாலோ சில நேரங்களில் ஒதுக்கப்பட்ட பணம் செலவழிக்கப்படாமல் இருக்கின்றது. எனவே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நிதித் துறை மூலமாக ஒதுக்கப்பட்ட பணம் முறையாகச் செலவழிக்கப்படுகிறதா என்று பார்க்க வேண்டும். "What is the progress made? என்று ஒவ்வொரு இலாக்காவையும் தட்டிக் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களைப்பற்றி எனக்கு நன்கு தெரியும். திராவிட முன்னேற்றக் கழகத்தில் அவர் பொருளாளராக இருந்தபோது, மிகவும் கண்டிப்போடு இருந்தவர். அப்படிப்பட்டவர் இன்றையதினம் நிதியமைச்சராக இருக்கிற காரணத்தால், இலாக்கா அளவிலும் கொஞ்சம் கண்டிப்பாக இருந்து இவைகளைத் துரிதப்படுத்தி ஒதுக்கப்படுகிற பணம் முறையாகச் செலவழிக்கப்படுகிற வகையில் பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நிலவள வங்கிகள் மூலமாக 1975—76 முதல் 1977—78 வரை கொடுக்கப்பட்ட கடன்கள் பருவ மழை பொய்த்ததன் காரணமாகவும் மற்ற காரணங்களாலும் விவசாயப் பெருங்குடி மக்கள் தொல்லைக்கு ஆளான காரணத்தால்,

விவசாயக் கடன்களைப் பொறுத்த வரையில், கொஞ்ச காலத்திற்குத் தள்ளி வைப்பதாக அறிவிக்கப்பட்டது. அப்படி அறிவித்த பிறகு, அசல் மீது ஏறிய வட்டி, அபராத வட்டி, தவணை கடந்த வட்டி, அதிகப்படியான வட்டி என்று பல்வேறு வகையிலும் வட்டி போடப்பட்டு அந்த வட்டிகளின் மொத்தம் அசலோடு சேர்க்கப்பட்டு அதற்குத் தவணை அளிப்பதாகச் சொல்லப்பட்டு இன்றையதினம் அவற்றின்மீதும் அபராத வட்டி வசூலிக்கப்படுகிறது. உதா

(பிற்பகல் 6-20)

ரணத்திற்கு ஒன்றைச் சொல்லுகிறேன். ஒரு விவசாயி 1974-75-ல் ஐந்தாயிரம் ரூபாய் கடன் வாங்கியிருந்தால், 30—6—1980-ல் அசல், வட்டி, தவணை கடந்த வட்டி, அதிக வட்டி, அபராத வட்டி எல்லாம் சேர்த்து 8,500 ரூபாய் செலுத்த வேண்டிய நிலை இருக்கிறது. 8,500 ரூபாய் இன்றையதினம் எப்படி கணக்கு எடுக்கப்படுகிறது என்றால், அசலாக கணக்கு எடுக்கப்படுகிறது. காரணம் அசலுக்கு ஒரு வட்டி, வட்டிக்கு ஒரு வட்டி போடக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. மாண்புகு நிதியமைச்சர் அவர்கள் கூட்டுறவுத் துறையோடு தொடர்பு கொண்டு இந்த நிலையைப் போக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

ஒரு பக்கத்திலே மின்சார வெட்டு இல்லையென்று கூறிக்கொண்டு மறைமுகமாக கிராமப் பகுதிகளில் மின்சார வெட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறதென்றால், அதை முன்கூட்டியே அறிவிக்க வேண்டும். நான் சாந்திருக்கின்ற வட ஆற்காடு மாவட்டத்திலே விவசாயிகள் எவ்வளவு பயிரிட்டார்களோ அதிலே 60 சதவிதத்திற்கும் அதிகமான அளவிற்கு பயிர்கள், மின்சார வெட்டு என்ற பெயராலே அறிவிக்கப்படாத காரணத்தால், மின்சாரம் கிடைக்காத காரணத்தால் நாசமாகியிருக்கின்றன. வட ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர், வறட்சி வந்துவிட்டது என்று, அரசாங்கத்திற்குக் கருத்து சொல்லக்கூடிய அளவிற்கு நிலைமைகள் மோசமாக இருக்கின்றன. மின்சார வெட்டு இருந்தால், எவ்வளவு என்றும், கண்டிப்பாக இத்தனை மணி நேரத்திற்காவது அவர்களுக்கு மின்சாரம் கொடுக்க வேண்டும் என்றும் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த மூன்றாண்டுகளாக நில வரியை வசூலிக்காமல் இருந்துவிட்டு, கிராம அதிகாரிகள் இல்லாத இந்தச் சூழ்நிலையில் இப்போது வரியை வசூலிக்க கெடுபிடி நடவடிக்கை எடுக்கப்படுகிறது. வரி வசூலிக்காதது அரசாங்கத்தின்

குற்றமே தவிர, விவசாயிகளுடைய குற்றமல்ல. எனவே கெடுபிடி வசூல் செய்யக்கூடாது என்று உடனடியாக அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் நாடு அரசின் கொள்கையின்படி, வியாபாரிகள் வாங்கும் நெல்லில் 50 சதவிதம் லெவி முறையில் அரசு நிர்ணயித்த விலையில் வாங்குவதால், வியாபாரிகள் விவசாயிகளிடமிருந்து நெல் வாங்குவதை நிறுத்திவிட்டதால், விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே விவசாயிகளிடமே, அவர்களுக்குக் கட்டுப்படியாகக் கூடிய விலையைக் கொடுத்து, அரசாங்கமே நேரிடையாகக் கொள்முதல் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நாவலர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அமைச்சராக இருந்தபோது, விவசாயிகளுக்கு இப்படிப்பட்ட பிரச்சினைகள் வந்த நேரத்தில், தஞ்சை மாவட்டத்திலும், வட ஆற்காடு மாவட்டத்திலும் ஆங்காங்கே அரசாங்கமே கொள்முதல் நிலையங்களை வைத்து விவசாயிகளிடமிருந்து நெல்லை வாங்கியது. அப்படிப்பட்ட நிலையை இன்றைய தினமும் உருவாக்கி விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெல்லுக்கு, குவிண்டால் ஒன்றுக்கு 150 ரூபாயும், கரும்புக்கு, சர்க்கரை கண்டுமுதல் 8.5 சதவிதம் இருந்தால், டன் ஒன்றுக்கு 200 ரூபாயும் கொடுக்க வேண்டுமென்று விவசாயிகள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையில் இருக்கின்ற நியாயங்களை உணர்ந்து, அரசு உடனடியாக விலையை நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்கள் தன்னிறைவுத் திட்டம் என்ற பெயரால் நிறைவேற்றும் பணிகளை நிறைவேற்றுவதற்காக கான்ட்ராக்டர்கள் முன்வரக்கூடிய விஷயத்திலுள்ள பிரச்சினைகளை ஒழுங்காகத் தீர்த்து செயல்படுத்த, அதைச் சரி பார்க்க அரசாங்கம் குழு ஒன்றை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்லூரிகளில் எங்கு பார்த்தாலும், மாணவர்கள் பிரச்சினை இருக்கின்றது. அதைப்பற்றியெல்லாம் மற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். குறிப்பாக ஒரு பிரச்சினையை மட்டும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். கரூர் அரசுக் கல்லூரியில் ஹாஸ்டலில் தங்கியிருந்த மாணவர்களுக்கும், வெளி மாணவர்களுக்குமிடையே மோதல் ஏற்பட்டது. அதில் ஹாஸ்டல் மாணவர்கள் ஏழு பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். வெளி

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1982 மார்ச் 30

மாணவர்கள் ஆறு பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் எந்த விதியின் கீழ் கைது செய்யப்பட்டார்கள் என்றால், ஐ. பி. சி. 307-ன் கீழ். ஐ. பி. சி. 307-ன் கீழ் வழக்கு போட்ட காரணத்தாலே அவர்களை விடுதலை செய்ய முடியாத சூழ்நிலையில் கண்டிஷன் பெயரில் விடப்பட்டிருக்கிறார்கள். மாணவர்களுக்குப் பரிட்சை நெருங்கிக் கொண்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் அந்த இரு சாராரும் சேர்ந்து அரசாங்கத்திற்கு ஒரு விண்ணப்பம் கொடுத்திருக்கிறார்கள். "நாங்கள் இனிமேல் சண்டை போட்டுக்கொள்ள மாட்டோம், சகோதரர்களாக வாழ்கிறோம்" என்ற கோரிக்கையை விட்டிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கையை ஏற்று மாணவர்களின் எதிர்காலத்தைக் கருதி, அவர்கள் மீதுள்ள வழக்குகளைத் திரும்பப் பெற்றுக் கொண்டு எதிர்காலத்திலே பரிட்சை எழுத நல்லமுறையிலேப் படிக்க வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வேலையில்லாத் திண்டாட்டத்தைப்போக்க எவ்வளவோ நடவடிக்கை எடுக்கிறோம் என்று பேசப்படுகிறது. ஐந்து லட்சம் பேருக்கு வேலை கொடுக்கிறோம் என்று சொல்லுகிறோம். கல்வியமைச்சர் அவர்கள்கூட இரண்டாயிரம் பேருக்கு வேலை கிடைக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். 1974ஆம் ஆண்டு ஒருவர் முதுநிலை ஆசிரியர் பயிற்சியில் தேர்ச்சி பெற்று, வேலை தேடித்தரும் அலுவலகத்திலே பதிவு செய்திருக்கிறார். அவர் பெயர் வி. சுப்பிரமணியம். கடந்த எட்டாண்டுகளாக வேலை தேடிக் கொண்டிருக்கிறார். இந்த எட்டாண்டு கால இடைவெளியில் கடந்த ஆண்டு ஒரே ஒரு முறை அவருக்கு இன்டர்வியு வந்தது. இன்டர்வியு கார்டை எடுத்துக்கொண்டு அலுவலகத்திற்குச் சென்று கேட்டபோது, "35 வயது ஆகிவிட்டது, தேர்வுக்கு வர முடியாது, வெளியேறுங்கள்" என்று அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள், அவருக்கு வயதாகி விட்டதற்குக் காரணம் அந்தத் தனிப்பட்ட ஆசிரியர் அல்ல. அவர் எட்டாண்டுகளுக்கு முன்பே பதிவு செய்திருக்கிறார். அவருக்கு வேலை கிடைக்காமல் இருந்த சூழ்நிலையில், வயது ஆகிவிட்டது என்று குற்றம் சொல்லி இன்டர்வியூவில் கலந்துகொள்ளக் கூடாது என்று நாம் சொல்வது நியாயமல்ல. ஆகவே அப்படி யாராவது பதிவு செய்திருந்தால், பதிவு செய்யப்பட்ட தேதியில் அவருடைய வயதைக் கணக்கிலே எடுத்துக்கொண்டு இந்தப் பிரச்சினையை அணுகுவது சரியாக இருக்கும். அவருடைய பெயர் திரு. வி. சுப்பிரமணியம், இராமபாளையம் கிராமம், திமிரி அஞ்சல். அவர் எழுதிய கண்ணீர் கடிதத்தை முழுவதும் படிப்பதைவிடக் கடைசியில் அமைச்சர் அவர்களிடம் கொடுக்கிறேன். அதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1982 மார்ச் 30] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

பொதுவாகக் கல்வித் துறையிலே யோசனைகளைத் தெரிவிப்பேன். ஆனால் கண்டிப்பதில்லை. ஏனென்றால் இது வளர வேண்டிய துறை, மாணவர்களுடைய துறை. பல லட்சக்கணக்கான மாணவர்கள் பரிட்சை எழுதுகிறார்கள். ஆகவே உன்னிப்பாக, வெகு கவனமாக இந்தத் துறை இருக்க வேண்டும். ஒரு மாணவன், ஆர். எம். இப்ராஹிம் என்பவர் 15 ரூபாய் கட்டி மார்ச் தேர்வு எழுதக் குறிப்பிட்ட நேரத்தில் மனு போட்டார். என்னக் காரணத்தாலோ அவருக்கு 'ஹால் டிக்கெட்' போய்ச் சேரவில்லை. அவருடைய தந்தை "ஏழ்மையில் இருக்கின்ற நான் எவ்வளவோக் கஷ்டப்பட்டு படிக்க வைத்து 15 ரூபாய் கட்டியிருக்கிறேன். 'ஹால் டிக்கெட்' உரிய நேரத்தில் வாராததால், தேர்வு எழுத முடியவில்லை. அதைப் பரிசீலனை செய்ய வேண்டும்" என்று கடிதம் எழுதி இருக்கிறார். அதற்கு ரீஜனல் டைரக்டரேட் ஆப் கவர்ன்மென்ட் எக்சாமினேஷன், கோயம்புத்தூர், அலுவலகத்திலிருந்து

"He is informed that his name has been registered for the above examination under Register No. ."

என்று சொல்லி கடிதம் 23—3—1982 அன்று அனுப்பப்பட்டிருக்கிறது. இருந்தாலும் 25 ஆம் தேதி வந்து சேர்ந்த காரணத்தாலே அந்த மாணவன் தேர்வு எழுத முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த மாதிரியான குறைபாடுகள் எதிர்காலத்திலாவது நிகழாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கல்வித் துறையைக் கேட்டுக்கொள்கிறேன்.

சட்டம், ஒழுங்கு பற்றிச் சொன்னார்கள். எப்படிச் செல்வாக்கு பெற்றவர்களால் சட்டம், ஒழுங்கு பாதிக்கப்படுகிறது என்பதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். செங்கற்பட்டு மாவட்டம், வேளூர் மதுரா-நாகச்சேரி கிராமத்தில் இருக்கும் திருவேங்கட செட்டியார் குமாரன் வி.டி. ஏழுமலை என்பவர் ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். புகைப்படம்கூட கொடுத்திருக்கிறார். அவர் ஒரு சொத்தை வாங்கியிருக்கிறார். அதைப் பக்கத்து வீட்டுக்காரர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. செல்வாக்கு இருப்பதால், இரவோடு இரவாக எந்தச் சொத்தை வாங்கினாரோ அந்தச் சொத்தையே பாழ்படுத்தியிருக்கிறார்கள். அங்கிருந்த மரங்கள் வெட்டப்பட்டிருக்கின்றன, வீடுகள் இடிக்கப்பட்டிருக்கின்றன. வீடு இருந்த இடமே தெரியாத அளவுக்கு ஒரு சூழ்நிலையை உருவாக்கியவர்கள் மீது காவல் துறையினர் நடவடிக்கை எடுக்கிறோம் என்று வாக்குறுதியைக் கொடுத்தாலுங்கூட, செல்வாக்கு படைத்தவர்கள் குறுக்கே நின்று கொண்டு முறையாக நடவடிக்கை எடுக்காதபடி தடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் புகைப்படங்களை

(திரு. ஆற்காடு நா. வீராசாமி) [1982 மார்ச் 30

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பார்த்தால் அவருக்கே உரிய கருணை உள்ளத்தோடு யார் இதிலே சம்பந்தப்பட்டிருந்தாலும். தடுத்து நிறுத்து வார்கள் என்று மனதார நம்புகிறேன்.

ஓட்டல் தொழிலாளர்கள் பிரச்சினைபற்றி இங்கே எடுத்துச் சொல்லப் பட்டது. தொழிலாளர் நல அமைச்சர் அவர்களைச் சந்திக்க ஊர்வலம் வரப்போவதாக பத்திரிகையிலே செய்தி பார்த்தேன். "வரட்டும் கவனிக் கிறேன்" என்று அமைச்சர் அவர்கள் கூட சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : துணைத் தலைவர் அவர்களே, கூலி உயர்வு வேண்டுமென்று கேட்கிறார்கள். அவர்களுக்குக் குறைந்தபட்சக் கூலி நிர்ணயிக்க ஏற்கெனவே குழு அமைக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : அமைச்சர் அவர்கள் சொன்னதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களுடைய கோரிக்கை அது ஒன்று மட்டுமல்ல. அவர்கள் பத்து அம்சக் கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். ஹோட்டல் தொழிலாளர்களுக்கு வாழ்க்கைச் சம்பளம் நிர்ணயம் செய்ய வேண்டும். இப்போதுள்ள குறைந்தபட்ச ஊதியத்தை தற்போதைய விலைவாசி ஏற்றம், வாழ்க்கைத் தரம் ஆகியவற்றிற்கேற்ப மாற்றியமைக்க வேண்டும், தற்காலிக தொழிலாளர் முறையை ரத்து செய்ய வேண்டும், குடியிருப்பு வசதிகள் வேண்டும், ஈ.எஸ்.ஐ.-யை அமல்படுத்த வேண்டும் என்பன போன்ற பத்து கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கைகளுக்காக வருகிறார்கள். எனவே ஊர்வலத்தைத் தடுத்து அவர்களைக் கைது செய்வதை விட, அதில் ஐந்து பேரை வரவழைத்து தொழிலாளர் நல அமைச்சர் சந்தித்து நியாயமான கோரிக்கைகளைப் பரிசிலனை செய்து அவர்களுக்கு நல்வாழ்வு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜப்தி நடவடிக்கைகளைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். உண்மையிலேயே வட ஆற்காடு மாவட்டத்திலே கூட்டுறவுத் துறையிலே உள்ள அதிகாரிகள் எந்த அளவிற்கு மோசமான சூழ்நிலையில் ஜப்தி செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதற்குப் பல ஆதாரங்களைத் தர முடியும். ஞாயிற்றுக் கிழமை நானே நேரிலே சென்றிருந்தபோது, ஒரு வயதான தாய் தனக்கு ஏற்பட்ட இன்னல் களை வேதனையோடு வந்து சொன்னார். ஆற்காடு விளாப்பாக்கம் கிராமத்தில், நடுமாட வீதியில் குடியிருக்கக்கூடிய திரு. துரைசாமி அவர்களின் மனைவி முனியம்மாள் வீட்டிலே, ஆற்காடு லெவி துணைத் தாசில்தார் போய்

1982 மார்ச் 30] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

"நீங்கள் கடன் வாங்கியிருக்கிறீர்கள், கடனைக் கொடுக்க வேண்டும், இல்லை என்றால் ஜப்தி செய்வோம்' என்று சொன்னதற்குப் பிறகு, "நாளைக்கு ஏற்பாடு செய்கிறேன்" என்று சொல்லியும்கூட, "முடியாது, போலீசோடு வந்திருக்கிறேன். ஆகவே இன்றைக்கே கட்ட வேண்டும்" என்று கட்டாயப்படுத்தியிருக்கிறார். அவர்கள் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும்,

(பிற்பகல் 6.30)

அந்தக் கிராமத்திலே இருக்கக்கூடிய கருணையுள்ளவர்கள் பொறுப்பேற்று கொஞ்சம் அவகாசம் கேட்டிருக்கிறார்கள். இல்லையென்றால், நாளைக்கு வந்து கட்டுகிறேன் என்று சொல்லியும், அதிகாரிகள் அந்தப் பெண் கழுத்திலே இருந்த செயினையாவது கொடு என்று கட்டாயப்படுத்தியிருக்கிறார்கள். இப்படிக் கல்நெஞ்சம் படைத்த அதிகாரிகள் யாராக இருந்தாலும், அப்படிச் செய்யச் சொல்லி அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது என்று நான் நிச்சய மாகச் சொல்ல மாட்டேன். அந்த அளவுக்குக் கடுமையாக அதிகாரிகள் நடக்கிறார்கள் என்றால், அந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய தினம் படித்த வாலிபர்களுக்கு வேலை தேடித் தருகின்ற நிறுவனம் தமிழ் நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன். அந்தத் தமிழ் நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் இருக்கிறதா என்பது தெரியவில்லை. அந்த அளவுக்கு நிலைமைகள் இருந்து கொண்டிருக்கின்றன. பத்திரிகையிலே வந்த குறிப்பைக் காட்டிச் சொல்கிறேன்.

Lakhs of unemployed youths in the State, including Graduates, have been in a state of suspense for the past four months. They have been watching the newspapers every day only to get disappointed because the notification for recruitment to Group IV, Services has not yet been published by the Tamil Nadu Public Service Commission. The Tamil Nadu Government issued orders as early as November 24th last year saying that it had requested the Tamil Nadu Public Service Commission to conduct Open Competitive Examination for Group IV Services such as Junior Assistants, Typists and Steno-typists services immediately to meet the requirements in March 1983. In the last five years, no Group IV Examination has been conducted by the Service Commission. Those within the age-limit for the competitive examination during these five years are now over-aged.

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1982 மார்ச் 30

அதுவும் இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்ற காரணத்தினாலேயே, அந்தப் பட்டதாரிகளுக்கு, டைப்பிஸ்டு ஆக வேண்டியவர்களுக்கும், ஸ்டெனோ கிராபர்கள் என்று பொறுப்பு ஏற்றுக் கொள்ள வேண்டியவர்களுக்கும், தமிழ் நாடு பப்ளிக் சர்விஸ் கமிஷனில் கடந்த ஐந்து ஆண்டுகளாக குரூப் நான்கு சர்விஸ்க்கு விண்ணப்பங்கள் வரவழைக்கப்படாததன் காரணமாக, 'ஏஜ்' ஆகிவிடுகின்றது. வயது அதிகமாகிவிடுகின்ற காரணத்தினாலே அவர்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்ற செய்தி பத்திரிகைகளிலே வந்து கொண்டிருக்கின்றது.

அடுத்து, இன்றையதினம் கொள்முதல், லெவி கொள்முதல் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய நிதியமைச்சரே அதற்குப் பொறுப்பு ஏற்றிருக்கின்ற காரணத்தினாலே அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைய தினம் திண்டுக்கல்லிலே இருக்கின்ற நிலைமைகளைப்பற்றி காலையிலேகூட சட்டமன்றப் பேரவையிலே பேசப்பட்டதாகத் தெரிகிறது. எல்லா விவரங்களையும் சொல்வதைவிட, அதிலே இருக்கின்ற முக்கியமான விஷயத்தை மட்டும் சொல்கின்றேன். திண்டுக்கல்லில் அனைத்து 60 அரிசி ஆலைகளும் 80 அரிசி மொத்த வியாபாரக் கடைகளும் 24—3—1982 முதல் கடையடைப்பு. இதனால் எட்டாயிரம் தொழிலாளர்கள் வேலையின்றிக் கஷ்டப்படுகின்றார்கள் என்ற சூழ்நிலை இன்று திண்டுக்கல்லிலே உருவாகியிருக்கிறது. வெளி மாவட்டத்தில் நெல் கொள்முதல் கூடாது, மதுரை மாவட்டத்தில்தான் கொள்முதல் செய்ய வேண்டும் என்று சமீபகால அரசுச் சட்டத்திற்குப் புறம்பாக வாய்மூலம் உத்தரவு போடுகிறார்கள். வெளி மாநிலத்தில் நெல் விலை குறைவாக உள்ளது. மதுரை மாவட்டத்தில் வெளி மாவட்டத்தைவிட நெல் மூட்டைக்கு ரூபாய் 25 அதிகம் கொடுத்துக் கொள்முதல் செய்யவேண்டியுள்ளது. இதனால் அரிசி விலை ஏறிவிட்டது. திண்டுக்கல் தாலுக்காவிற்கு 7,500 டன் அரிசி கொள்முதல் செய்யவேண்டுமென அரசின் குறியீடு (டார்கெட்) உள்ளது என்ற காரணத்தால் திண்டுக்கல் தாலுக்கா ஒரு வறட்சிப் பிரதேசமாக இருந்தும்கூட, அந்த அளவை அவர்களாலே எட்ட முடியவில்லை. இந்தத் தவறுதலான டார்கெட்டை இந்த அரசாங்கம் அந்த தாலுக்காவுக்கு நிர்ணயித்ததன் காரணமாக, இன்றையதினம் 32 உரிமங்கள் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டிருக்கின்றன.

இப்படிப்பட்ட கெடுபிடிகளை அந்தப் பகுதி அதிகாரிகள் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த நிலையில் அங்கே அர்த்தால் வந்திருக்கிறது.

1982 மார்ச் 30] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்].

லெவி கொள்முதல் என்ற பெயரில் சிவில் சப்ளைஸ் அதிகாரிகளின் சட்ட வரம்பை மீறிய கட்டாயக் கொள்முதல் நடவடிக்கைகளையும், கெடுபிடிகளையும் கண்டித்து, வருகின்ற 30—3—1982ஆம் தேதி செவ்வாய்க்கிழமை அனைத்து வர்த்தக சங்கங்களும் இணைந்து பூரண அர்த்தாலும், கடையடைப்பும் நடைபெறும் என்று அறிவித்து அவர்கள் நடத்தியிருக்கிறார்கள். இந்தக் கெடுபிடியின் தீவிரம் காரணமாக, சட்ட விதிகளுக்குப் புறம்பான நடவடிக்கைகளை அங்கே அதிகாரிகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். தஞ்சையிலே கொள்முதல் செய்வதற்கு ஆள் இல்லை என்ற நிலை இருக்கும்போது, அங்கே கொள்முதல் செய்வதை விட்டுவிட்டு, திண்டுக்கல்லில், வறட்சிப் பகுதியாகி உற்பத்தி அதிகமாக இல்லை என்று அரசாங்கத்திற்குத் தெரிந்திருந்தும்கூட, அதிகாரிகள் குருட்டுத்தனமாக 7,500 டன் என்று லெவியைப் பிக்ஸ் செய்துவிட்ட காரணத்தினாலே அதைக் கொடுத்துத்தான் தீர வேண்டும் என்று இங்கேயிருந்து கேட்கிறார்கள். அப்படிக் கேட்பதா ? அவர்கள் சொல்கின்றார்கள். "எங்களை அனுமதியுங்கள், நாங்கள் தஞ்சாவூருக்கு எங்கள் செலவிலே போய் கொண்டு வந்து இங்கே கொடுக்கிறோம்" என்று சொன்னாலும்கூட, முடியாது நீங்கள் இங்கேதான் இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தக் காரணத்தினாலேதான் கடைகளையெல்லாம் மூடிவிட்டார்கள். அந்த நான்கைந்து நாட்களிலே ஒரு படி அரிசி ஒரு ரூபாய் அதிகமாக விற்கக்கூடிய நிலை அந்தப் பகுதியிலே ஏற்பட்டிருக்கிறது. அதையெல்லாம் தடுக்க நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோலவே, இன்றையதினம் நாட்டிலே நடைபெறுகின்ற திருட்டுக்களைப்பற்றிச் சொல்கிறேன். பலர் பல நேரங்களிலே திருடுவது தவறு என்று சொல்லியிருக்கிறார்கள். அதை நாம் வலியுறுத்தி என்ன நடவடிக்கை எடுத்தாலும், அந்தத் தொழிலிலே காவல் துறையிலே இருப்பவர்கள் சம்மந்தம் கூடாது என்று சொல்லியிருந்தும், யார் பிக்பாக்கெட் அடிக்கின்றார்களோ அவர்களைக் கண்டுபிடித்து தண்டிக்க வேண்டும் என்ற முறை இருந்தும், அந்தத் திருடுகின்ற தொழிலை, மோசடித் தொழிலை காவல் துறையிலே சம்பந்தப்பட்டவர் செய்கின்றார் என்றால், அதைவிட அபாயம் இந்த நாட்டிற்கு இருக்க முடியாது. நான் குறிப்பிட்ட அந்த சம்பவம் சமீபத்திலே இரண்டு, மூன்று மாதங்களுக்குள் நடந்திருக்கிறது. திரு. சிட்டி பாபு என்பவர், ப்ரியா எலக்ட்ரானிக்ஸ் சவுண்ட் சர்விஸ், அம்மனம்பாக்கம், செங்கற்பட்டு அவர்கள், எலக்ட்ரிக்கல்ஸ் சவுண்ட் சர்விஸ் பொருள்கள் வாங்க சென்னைக்கு வந்திருக்கிறார்கள். இருட்டிவிடுகிறது. சினிமாப் பார்த்து

விட்டுப் போகிறார்கள். அப்படிப் போகின்ற நேரத்திலே ஒரு போலீஸ்காரர் "உன்னைப் பார்த்தால் சந்தேகமாக இருக்கிறது" என்று சொல்லி அவரிடத்திலே திடீரென்று பாக்கெட்டிலே என்ன இருக்கிறது, கத்தி, கித்தி இருக்கிறதா? என்று கேட்டிருக்கிறார்கள். ஒன்றுமில்லை என்று தெரிந்தவுடனே, பையிலே என்ன இருக்கிறது என்று கேட்டிருக்கிறார். அவர் பையிலே ரூபாய் 3,490 இருக்கிறது என்றார்கள். அதை எடுத்துக்கொண்டு, அவர் அவரை வா இன்னொரு இடத்திற்கு என்று அழைத்துக்கொண்டு போய், மப்டியிலே இருந்த ஒரு போலீஸ்காரரிடத்திலே ஒப்படைத்துவிட்டு, அந்தப் பணத்தை எடுத்துக்கொண்டு அவர்மீது வழக்கு போடுகின்றார்கள். அவர் "என்னை விட்டால் போதும்" என்று சொல்கிறார்கள். அதற்குப் பிறகு, "பணத்தைக் கொடுங்கள்" என்று கேட்கிறார்கள். இதையெல்லாம் சொன்னது என்னிடத்தில் மட்டுமல்ல. அவர்கள் இதை முதலமைச்சர் அவர்களிடமும் சொல்லியிருக்கிறார்கள். முதலமைச்சரிடத்திலே ஒரு புகார் மனு கொடுத்திருக்கிறார்கள். அவருக்கு முதலமைச்சர் அலுவலகத்திலேயிருந்து ஒரு கடிதம் போகிறது. கடித எண் எப். 207/82, நாள் 20—1—1982-ல் முதலமைச்சர் சிறப்பு அலுவலகத்தில் முறையீடுகள் பகுதியில் மனு பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

'அன்புடையீர், தாங்கள் முதலமைச்சர் அவர்களுக்கு அனுப்பிய 1—12—1981 நாளிட்ட மனு பெற்றுக் கொள்ளப்பட்டது. அதன்மீது சென்னை நகர காவல் துறை ஆணையாளர், சென்னை-8, அவர்களால், நடவடிக்கை எடுக்கப்படுகிறது, என்று சொல்லி அவருக்கு ஒரு கார்டு கூட வருகிறது. இந்தக் கார்டு போனவுடனே அவருக்கு ஒரு நம்பிக்கை வருகிறது. அந்த நம்பிக்கையில் அவர் பணம் கடன் கேட்கிறார்கள். யாரும் கடன் கொடுக்கவில்லை. போலீஸ் ஆணையாளர் அதைக் கண்டுபிடியுங்கள் என்று சொல்லி நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் ஒரு இரண்டு பேர்களை அனுப்பி திருட்டுக் கொடுத்தவரை அழைத்து வந்து, போன பணம் போய்விட்டது, யாரோ எடுத்துக் கொண்டுவிட்டார்கள் என்று எழுதிக் கொடுத்து விடுங்கள், எங்களாலே கண்டுபிடிக்க முடியவில்லை, எங்களை ஆணையாளர் உயிர் எடுக்கின்றார் என்று சொல்லிக் கேட்டிருக்கிறார்கள். எப்படியும் கண்டுபிடியுங்கள் என்று ஆணையாளர் உயிரை எடுக்கிறார் என்று சொல்லியிருக்கிறார்கள். அதிலே பரிதாபம் என்னவென்றால், அந்தக் காவலர் யாரென்று அவருடைய பெயர் முதற்கொண்டு அவர் எழுதிக் கொடுத்திருக்கின்றார். அப்படி கொடுத்துங்கூட நடவடிக்கை எடுக்காமலிருப்பது

கண்டிக்கத்தக்கது. எனவே காவல் துறையில் இருப்பவர்கள் எல்லாம் இப்படிப்பட்ட நடவடிக்கையிலே ஈடுபடக்கூடாது என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பொதுவாக இந்த மாநிலத்திலே செயல்களை நல்லமுறையிலே செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தோடு செய்கிறார்கள். அந்த அக்கறையின் காரணமாக திருச்சிக்கு, ஒரு பொதுக்கூட்டத்திலே பேசுகின்றபோது, ஒரு மெடிகல் யுனிவர்சிட்டி வருகிறது என்று சொன்னார்கள். நாங்கள்கூட மகிழ்ச்சியாக இருந்தோம். சட்டமன்றப் பேரவையில் அவர்கள் சொல்கின்றபோது, பேராசிரியர் அன்பழகன் அவர்கள் கேட்டார்கள். "அப்கிரேட் செய்யப்பட்ட போஸ்ட் கிராஜுவேட் இன்ஸ்டிடியூட் பற்றிச் சொல்கின்றீர்களா?" என்று கேட்டார்கள். அப்போது "யுனிவர்சிட்டி தான் வரப்போகிறது, அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறோம்" என்றும், வரும் என்ற நம்பிக்கையையும் உண்டாக்கினார்கள். எனக்குக் கிடைத்திருக்கின்ற தகவல் என்ன? இங்கே திராவிட முன்னேற்றக் கழக எம். பி.க்கள் மீது பழி போடுகிறார்கள். இந்த நாட்டிற்கு நல்லவை செய்வதாக இவர்கள் பேசுகின்றார்கள். பத்திரிகையிலே செய்திகள் வருகின்றன. தமிழக எம். பி. க்கள் நாடாளுமன்றத்திலே கேட்கின்றார்கள். இந்த மெடிகல் யுனிவர்சிட்டிபற்றிக் கேட்கின்றார்கள். டாக்டர் கலாநிதி அவர்கள் இதைப்பற்றிக் கேட்கின்றார்கள். அதற்கு இன்று "மினிஸ்டர் ஆப் எஜுகேஷன், சோஷியல் வெல்பேரிலே" இருந்து ஒரு கடிதம் வருகிறது.

"Dear Dr. Kalanidhi,

You have raised in the Lok Sabha, under Rule 377 of the Rules of Procedure for Business, on the 21st December 1981, the matter regarding the establishment of a University for Medical Sciences in Tamil Nadu. Though Medical Education is not within the purview of the University Grants Commission, all matters connected with the establishment of Universities in the country will have to be examined by the U.C.G. If and when any proposal is received for establishing a new University for Medical Sciences in Tamil Nadu, the Commission will give due consideration to it.

என்று ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். எனக்குத் தெரிய வேண்டியதெல்லாம், நாம் ஒரு பக்கத்திலே நம்பிக் கொண்டிருக்கும் போது, தமிழகத்திலேயிருந்து அப்படிப்பட்ட ஒரு பிரபோசலும் வரவில்லை

என்பது போலக் கடிதம் அந்த அமைச்சகத்திலேயிருந்து வந்திருப்பதால், நான் கேட்டுக் கொள்கிறேன், டாக்டர் ஹண்டே அவர்கள் இதுவரையிலும் அந்த புரோபசலை அனுப்பாமலிருந்தால், விரைவிலே அனுப்பி வைக்க வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : துணைத் தலைவர் அவர்களே, மெடிகல் யுனிவர்சிட்டிக்கு நாங்கள் செயற்குறிப்பு அனுப்பியிருக்கிறோம் என்று சொல்லவில்லை. We have to prepare the format அதற்காக டாக்டர் நடராஜன், டாக்டர் இராமமூர்த்தி, டாக்டர் வேணுகோபால் ஆகிய மூன்று பேர்களை வைத்து ஒரு three-man committee அமைத்திருக்கிறோம் They are collecting the format. That is the stage where the matter stands.

(பிற்பகல் 6-40)

திரு. ஆற்காடு நா. வீராசாமி : துணைத் தலைவரவர்களே, இப்போது தான் இந்த விளக்கம் கிடைத்திருக்கிறது. அன்றையதினம் அமைச்சரவர்கள் பதில் சொன்னபோது, யுனிவர்சிட்டி விரைவில் வருமென்று நினைத்திருந்தேன். பத்திரிகையில் பார்த்தாலும், அந்த எண்ணம்தான் வருகிறது. அவர்களே ப்ரபோசல் வந்தால் கவனிக்கிறோமென்று சொல்லியிருப்பதால், கடிதம் எழுதியிருப்பதால், அதில் தீவிரமாகக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆளும் கட்சியினுடைய தலையீடுகள் எங்கெங்கெல்லாம் இருக்கிறதென்பதை விவரமாகச் சொல்லாவிட்டாலும், குடிசை மாற்று வாரியம் பற்றியும், நம்முடைய குடிநீர் வடிகால் வாரிய அமைச்சரைப் பற்றியும் பேச வேண்டுமென்று நினைத்தாலும், நேரமில்லை. சாமியார் ஆகிவிட்டதாக அவரே சொல்லியிருக்கிறார். அவரை இணைத்துக்கொண்டு, சில தவறுகளைச் செய்கிறார்கள். அவரே தவறு செய்தார் என்று சொல்லவில்லை. 26—3—1982 அன்று இரவு ஒரு மணிக்குமேல் பல ஆண்டுகளாக நற்பணி மன்றம் என்று இயங்கி வந்த தி.மு.க. சார்பு மன்றம் அ.தி.மு.க. [illegible] வினரால் பிரிக்கப்பட்டு, எம்.ஜி.ஆர். மன்றம் என்று அங்கே போர்ட் மாட்டி வைத்திருக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல. அதைச் செய்கின்றவர்கள் எல்லாம் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள். மகேந்திரன் என்பவர் அந்தப் பகுதியில் உள்ள அரசாங்க நிலங்களையெல்லாம் வளைத்துக்கொண்டு, அங்கே கடை கட்டுகிறார், வீடு கட்டுகிறார். கேட்டால், அமைச்சர் பெயரைச் சொல்கிறார். நான்கூட,

"அமைச்சர் நிச்சயமாகச் சொல்லியிருக்கமாட்டார், எங்கள் மன்றத்தில் சாமியார் ஆகிவிட்டேன் என்று சொல்லியிருக்கிறார், இராது" என்று சொல்லியுங்கூட, அவர் பெயரைத் திரும்பத் திரும்பச் சொல்கிறார் ....

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : சாமியார் ஆகிவிட்டேன் என்று சொல்லவில்லை. 'ஆகலாமா' என்று பார்க்கிறேன் என்று சொன்னார்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : துணைத் தலைவரவர்களே, 'ஆகிவிட்டேன்' என்று சொன்னார். உடனேகூடக் கேட்டேன். எல்லாம் கடந்து போய்விட்டேன் என்று சொன்னார். வேடிக்கை என்னவென்றால் நம்முடைய அமைச்சர் சாமியார் ஆகிறார். அங்கே அ.தி.மு.க.காரர் என்ன செய்கிறார் என்றால், அங்கே ஒரு சாமி கோயில் இருக்கிறது, பெரிய கோயில் இல்லை, சின்னக் கோயில்தான் ....

திரு. சி. இராமலிங்கம் : துணைத் தலைவரவர்களே, 'அ.தி.மு.க.' என்று ஒரு கட்சியில்லை. அண்ணா தி.மு.க. என்றுதான் கட்சி இருக்கிறது.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : பொறுங்கள் அண்ணா தி.மு.க.—அதில் எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் நம்முடைய அமைச்சர் பெயரைச் சொல்லிக்கொண்டு, அப்படிப்பட்ட தவறு செய்கிறார்கள். அங்கே ஒரு சின்னக் கோயில் இருக்கிறது. பெரிய கோயில் கூட இல்லை. மாண்புமிகு அமைச்சர் டாக்டர் ஹண்டே அவர்களுக்கு அந்தப் பகுதி மனப்பாடம். டி. பி. சத்திரம். அந்த இடத்தில் குடிசைகள் போட்டுக்கொண்டிருக்கிறவர்கள் சின்ன கோயில் வைத்திருக்கிறார்கள். அந்தக் கோயில் நிலத்தை ஆக்கிரமித்துக்கொண்டு, பல தவறுகள் நடக்கின்றன. அவற்றைக் கண்டுபிடித்து, இப்படிப்பட்ட புகார்களுக்கு இடம் கொடுக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று, நம்முடைய அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அவருடைய மனைவி பெயரிலேகூட வீடு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இருந்தும்கூட ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிறார். இது குறித்து நடவடிக்கை எடுப்பார்கள் என்பதால், விவரமாகச் சொல்லவில்லை.

சென்னை பெருநகர் குடிநீர் வடிகால் வாரியம்—மெட்ரோ வாட்டர்—அந்தத் திட்டத்தில் வடிகால் நீர் இரைக்கும் நிலையங்கள் என்று சொல்லி இன்றைய தினம் அந்த வேலைகள் செய்ய சென்னை-1 பாட்லிபாய் & கம்பெனி சோயஸ்ட் டெண்டர் கொடுத்து, 6.9 கோடி ரூபாய் திட்டத்திற்கான வேலை

கள் நடக்கும்போது, அந்த வேலைகள் எப்படி நடக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் நேராகச் சென்று பார்க்க வேண்டும். இதிலேயும் சாமியார் என்று நினைத்துக் கொண்டிராமல், நேராகச் சென்று பார்க்க வேண்டும். எப்படி ஸ்பெசிபிகேஷன் கொடுத்திருக்கிறோமோ, அந்த ஸ்பெசிபிகேஷனுக்குச் சம்பந்தமில்லாமல் வேலை செய்கிறார்கள். அதிகாரிகள் போய்க் கேட்டால், உங்களுக்குத் தெரியாது, யாரிடத்தில் வேண்டுமானாலும் சொல்லுங்கள், நாங்கள் இப்படித்தான் செய்வோமென்று சொல்லுகிறார்கள். நல்ல திட்டத்தை நிறைவேற்றுகிறோம். 5.9 கோடி ரூபாய் திட்டம் கொடுத்து, அதற்கான ஸ்பெசிபிகேஷன் கொடுத்து அந்த ஸ்பெசிபிகேஷனுக்கு விரோதமாக காண்ட்ராக்டர் அல்லது கம்பெனி செய்தால், அதைக் கண்டித்து நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை. எனக்குக் கிடைத்துள்ள குறிப்பில் டெக்னிகல் அட்வைசரி கமிட்டி ஒன்று வைத்து, ஆக்சுவல் வேல்யுவேஷனை நிர்ணயிக்க வேண்டுமென்றும், வேலை செய்த குவாலிட்டியை 'டெஸ்ட்' செய்ய வேண்டுமென்றும் இந்த அவையின் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு குடிநீர் வடிகால் வாரிய அமைச்சரவர்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சென்னைப் பெருநகர் குடிநீர் வடிகால் வாரியத்தின் மெட்ரோ வாட்டர் சீஃப் இன்ஜினியர் வெளிநாடுகளுக்குச் சென்று வந்தார். அங்கே ஒரு நிறுவனத்திடமிருந்து 'வெக்டர்' என்ற அகற்றும் இயந்திரம் வாங்கப்பட்டது, 50 லட்சம் ரூபாய் செலவில். வாங்கியது நல்லதுதான். இருபதாம் நூற்றாண்டில்கூட சாக்கடை அடைத்துக் கொண்டால் மனிதன் மூழ்கி சுத்தம் செய்கிறான். பார்ப்பதற்கு நமக்கே அசிங்கமாக இருக்கிறது. அந்த முறையை மாற்ற வேண்டுமென்று இந்தத் திட்டம் கொண்டுவரப்படுகிறது. அந்த இயந்திரம் வாங்கப்பட்டு, எங்கே யாவது வேலை செய்திருக்கிறதா என்பதை அரசாங்கம் எண்ணிப் பார்க்க வேண்டும். எனக்குக் கிடைத்துள்ள தகவல்களை அப்படியே சொல்கிறேன். இடையில் இந்த இயந்திரத்தை இயக்க நடத்த விழாவெல்லாம் இருக்கிறது. அந்த விழாவிற்குப் பிறகு அந்த இயந்திரத்தை இன்றையவரை பயன்படுத்த முடியவில்லை. என்ன காரணமென்றால், 'வெக்டர்' என்ற அந்த இயந்திரத் தைப் பயன்படுத்தி அடைப்புகளை நீக்க நம்முடைய ட்ரெயினேஜ் குழாய்கள் ஏற்றதாக இல்லை. அதன் 'ப்ரெஷர்' காரணமாக ட்ரெயினேஜ் குழாய்கள் சேதமடைந்து விடுகின்றன. இதை, இயந்திரம் வாங்குவதற்கு முன்னால் யோசிக்கவில்லை. அதற்கு மற்ற உதிரிப்புக்களோ, உபரிகளோ, வாங்கிவர வில்லை. ஒன்றைப் போட்டு, 'டெஸ்ட்' செய்து, அந்த உதிரிப்பு உடைந்து

விட்டால் அதை மாற்றுவதற்கு 'ஸ்பேர் பார்ட்ஸ்' இல்லை. இதை இயக்கு வதற்கு பயிற்சி பெற்றவர்கள் இல்லை. ஆகவே இது பயன்படுத்தப்படாமல் இருக்கிறது. இதைப்போல லோடிங் அண்டு பக்கெட்டிங் மெஷின், இந்தியா விலே தயாரானவை, 15 மெஷின்கள் வாங்கியிருக்கிறார்கள். ஒவ்வொரு ஏரியா ஆஃபீசுக்கும் கொடுத்து, பயன்படுத்தச் சொன்னார்கள். அதுவும் பயன்படுத்த முடியாமல் இருக்கிறது. இதைச் சொல்லுவதற்குக் காரணம், நிதி ஒதுக்க மசோதாவில் பேசுகின்றபோது, நிதியெல்லாம் ஒதுக்குகிறோம், இவைகளையெல்லாம் வாங்குகிறோம், வாங்கியும் இவைகள் பயன்படாமல் இருந்தால், நிதி ஒதுக்கியும் பயனில்லை, அதற்குப் பிறகு இவ்வளவு செலவிட்டு அதனுடைய பயன் இந்த நாட்டுக்குக் கிடைக்காமல் இருந்தாலும் பயனில்லை. மாண்புமிகு அமைச்சரவர்கள் சம்பந்தப்பட்டது இது. இது வரை சொன்னது குற்றச்சாட்டு அல்ல, குறைகள். இதையெல்லாம் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்ததன் மூலம், இவைகளைத் திருத்துவார்கள் என்று நம்புகிறேன். அப்படித் திருத்தவில்லை என்றால், மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் ஒவ்வொரு இலாக்காவிலும், ஒவ்வொரு ஆண்டும் ஒதுக்கப்பட்ட பணம் குறைந்தது டிசம்பர் 31 ஆம் தேதிவரையில் எந்த அளவிற்குச் செலவு செய்யப்பட்டிருக்கிறது என்று கேட்க வேண்டும். நம்முடைய நிதி அமைச்சரவர்களுக்குக் கொஞ்சம் அதிக வேலை இருந்தாலும் கூட, நிதி இலாக்கா எல்லா இலாக்காக்களுடன் தொடர்பு கொண்டு, எவ்வளவு செலவாகிறது ஏன் செலவு செய்யவில்லை, What is the percentageof amount s- far spent. என்பதற்கெல்லாம் விளக்கம் கேட்டு, நடவடிக்கைகளைத் தீவிரமாக்குவதன் மூலம், சமுதாயத்திற்கு நல்ல பலன் கிடைக்க, அந்தப் பலனை மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் நல்லமுறையில் நாட்டு மக்களுக்கு உருவாக்கித்தர வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பு அளித்த தற்கு நன்றி கூறி, அமைகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : துணைத் தலைவரவர்களே, நான் சாமியார் ஆகிவிட்டேன் என்று சொன்னதற்கு ஒரு விளக்கம் சொல் கிறேன். காழ்ப்புணர்ச்சிகள் இல்லாமல், பெருந்தன்மையோடு நடந்துகொள் ளக்கூடிய பக்குவத்தை இந்த வயதில் அடைந்திருக்கிறேன் என்ற பொருளில் தான் சொன்னேன். முற்றும் துறந்த முனிவனாகிப் போய்விடவில்லை.

திரு. ஆர். டி. சீத்தாபதி : சில சாமியார்கள் சாம்ராஜ்யத்தை அழித்திருக் கிறார்கள். இந்தச் சாமியார் எப்படியோ ?

திரு. ஆற்காடு நா. வீராசாமி: துணைத் தலைவரவர்களே, அன்றே நினைத்தேன். அமைச்சரவர்கள் அண்ணன் மாதிரி. சாமியார் மாதிரி ஆகி விட்டேன் என்று சொல்லுகிறாரே, பட்டுச்சட்டை போட்டுக்கொண்டு, பள பளப்பாக 'வாட்ச்' கட்டிக்கொண்டு, சாமியார் ஆகிவிட்டேன் என்று சொல்லுகிறாரே, வயதான காலத்தில் அந்த எண்ணம் வந்திருக்கிறது, அதைப் பாராட்ட வேண்டுமென்று எண்ணி ஒன்றும் கேட்கவில்லை. அந்த எண்ணம் வந்ததற்குப் பாராட்டுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவர் பட்டுச் சாமியார். (சிரிப்பு)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாளில் தொடங்கும் நிதி ஆண்டுக்கு மாநில தொகு நிதியிலிருந்து 2138 கோடியே 62 லட்சத்து 10 ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாத தொகையை ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்ற இந்த ஒதுக்கீடு பற்றிய சட்ட முன்வடிவு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப் பட்டு, மேலவையினுடைய கருத்துக்கு வைக்கப் பட்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்கள் பலவற்றையும் தந்திருக்கிறார்கள். இங்கே பல்வேறு கருத்துக்கள் எடுத்துச் சொல்லப்பட்டன. பல்வேறு துறைகளைப் பற்றிய கருத்துக்கள் எடுத்துச் சொல்லப்பட்டன. சாதாரணமாக வீட்டிலே பொறுப்பு வாய்ந்தவர்களிடத்தில் பணத்தைக் கொடுத்து, இன்னின்ன செலவு செய் என்று சொல்கிறபோது, அறிவுரைகள் வழங்கி "இதெல்லாம் வீணாகாமல் பார்த்துக்கொள், நல்லதுக்குச் செய், இந்த வகைக்குச் செய்" என்று எடுத்துச் சொல்லும் முறையில், இங்கே ரூபாய் 2,000 கோடிக்கு மேற்பட்ட தொகைக்கு ஒப்புதல் அளிப்பதற்குமுன், சட்டமன்றப் பேரவை, மேலவை உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களெல்லாம் அறிவுரையாக எடுத்துச் சொல்லப்பட்டன என்ற முறையிலே கேட்கப்பட்டது. ஓராண்டுக்குச் செலவு செய்ய வழிவகைகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதையொட்டி பல்வேறு துறைகள்பற்றி கருத்துக் களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே மிக மிகப் பொதுவான கொள்கைபற்றி எடுத்துச்சொன்னால், அதற்கு விளக்கம் தருவது எளிது. ஒதுக்கீடு நிதியைப்பற்றிச் சொன்னால், பதில் சொல்வது எளிது. மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி போன்றவர்கள் மிகமிக சாதாரணமான நிகழ்ச்சிகள் பற்றி விளக்கங்களை எடுத்துச் சொன்னார்கள். அதற்கான விடையை நான் எடுத்துச் சொல்வதென்பது இந்த நிலையிலே இயலாத ஒன்று என்பதை

(பிற்பகல் 6-50)

அவர்களும், மற்றவர்களும் நன்கு உணருவார்கள். ஆனாலும் கூட எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்களை அந்தந்தத் துறையைச் சார்ந்த அமைச்சர் களும், அந்தத்தத் துறையில் உள்ள அதிகாரிகளும் ஆய்ந்தறிந்து, குறைகள் உள்ளபடியே இருந்தால், அவற்றை நீக்குவார்கள். குற்றங்கள் இருந்தால், அவற்றைக் களைவார்கள். அல்லது விளக்கங்கள் தர வேண்டுமென்ற சூழ் நிலை இருந்தால், அதற்குரிய விளக்கத்தை சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் தருவார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன கூற்றுக்கள் அனைத்தும் அதற்குப் பயன்படும். பலரும் பல்வேறு கருத்துக்களை எடுத்துச்சொன்னார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி ஒன்றைக் குறிப்பிட்டார். 1978-79 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையைப் பொறுத்தவரையில், அந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகையின் அளவுக்கு நிதி செலவிடப்படவில்லை என்று சொல்லி, செலவிடாமல் விடுபட்ட தன்மை அதில் இருந்ததாகக் குறிப் பிட்டுக் காட்டினார். எப்போதுமே சட்டமன்றத்தின் அனுமதி பெற்று, இன்னின்ன இனத்திற்கு இப்படி இப்படிச் செலவிட வேண்டுமென்று எடுத்துச் சொல்லி, அதற்கான ஒப்புதலைப் பெற்றுத் தான், நாம் செலவு செய்ய வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. கேட்டதற்கு மேல் கூடுதலாகச் செலவு செய்யவேண்டிய நிலைமையில், அப்படிச் செலவு செய்கிற தன்மையைப்பற்றி விளக்கி துணை மதிப்பீடு வாயிலாக இங்கே அதைக் கொண்டு வந்து, சட்ட மன்றப் பேரவை மற்றும் மேலவை ஆகியவற்றின் அனுமதியைப் பெறுகிறோம். சில சமயங்களில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையின் முழு அளவையும் ஆண்டு முழுவதும் கூட செலவிட முடியாமல் மீதியிருக்கிற தன்மையைப் பற்றியும் இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி குறிப்பிட்டார் நிதியமைச்சர் என்கிற முறையில் எனக்கு இருக்கிற கவலையும் அதுதான். அந்தந்த ஆண்டு எந்தெந்த நோக்கத்திற்காக நிதியை ஒதுக்குகிறோமோ அந்தந்த நோக்கத்திற்காக அந்த நிதி அந்தந்த ஆண்டிலேயே செலவழிக்கப் பட்டால், எனக்கு மேற்கொண்டு அதிகமாக வரும் ஆண்டுகளில் நிதிச் செலவு ஏற்படாது என்கிற அடிப்படையில் அது நல்லது தான். ஆனால் எதற்காகத் திட்டம் தீட்டுகிறோமோ, எந்தத் திட்டத்திற்காக நிதி ஒதுக்குகிறோமோ அந்தத் திட்டம் ஓராண்டு, ஈராண்டு என்று தள்ளிப் போய்விட்டால், அது அவ்வளவு நல்லதல்ல. அதன் காரணமாக ரூ. 30 லட்சம் செலவிட வேண்டும் என்பதற்கு பதில், அடுத்த ஆண்டு ரூ. 45 லட்சம் செலவிட வேண்டும் என்கிற நிலை

(டாக்டர் இரா. நெடுஞ்செழியன்) [1982 மார்ச் 30

வந்து, அதற்கு அடுத்த ஆண்டு அது ரூ. 60 லட்சமாகி, பிறகு ரூ. 90 லட்சம் என்கிற அளவுக்குக் கூட சில சமயம் செலவிட வேண்டிய கட்டாயத்திற்கு நாம் வரவேண்டிய நிலை இருக்கிறது. நிதித் துறையைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இருக்கிற கவலையின் தன்மையைவிட எனக்கு இந்த வகையில் மிகவும் அதிகமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் எதிர்பாராத சில சூழ்நிலைகளின் அடிப்படையில் அவற்றைச் செலவழிக்க முடியாத சிலபல தன்மைகள் ஏற்பட்டு விடுகின்றன. அதற்காகத்தான் இப்படிப்பட்ட நிலைமைகளை அக்கவுண்டன்ட்-ஜெனரல் அவர்கள் கண்டுபிடித்துச் சொல்கிறார். இந்த ஆண்டு இந்தத் தொகையைச் செலவிட்டிருக்க வேண்டுமே, ஏன் செலவிடவில்லை என்கிற குறிப்புகளை அவர்கள் வைக்கிறார்கள். அதன் பிறகு அவர்களும், பப்ளிக் அக்கவுன்ட்ஸ் கமிட்டியினரும் அதாவது பொதுக் கணக்குக் குழுவினரும், சம்பந்தப்பட்ட அத்தனை அதிகாரிகளும், அந்தந்தத் துறையில் உள்ளவர்களும் ஓரிடத்தில் வந்து உட்கார்ந்திருப்பார்கள். அங்கு கேட்கப்படுகின்றவைகளுக்கு அதிகாரிகள் விளக்கம் கொடுக்கிறார்கள். அந்தந்தத் துறைகளிலிருந்து வந்திருக்கிறவர்கள் அதற்கான காரண காரியங்களைச் சொல்கிறார்கள். அதிகாரிகளால் சொல்லப்படுகிற காரண காரியங்கள் ஏற்புடையவையாக இருந்தால், அவர்களும் அதை ஏற்றுக்கொள்கிறார்கள். அதிகாரிகள் அல்லது துறையினர் சொல்கிற காரணங்கள் ஏற்புடையதாக இல்லாவிட்டால், விளக்கம் கேட்கிறார்கள். அப்படி அளிக்கப்படுகின்ற விளக்கத்திலும் திருப்தி இல்லையென்றால்; கண்டனங்கள் தெரிவிக்கிறார்கள். அதன் பிறகு இப்படிப்பட்ட நிலைமைகள் இனிமேல் இருக்கக் கூடாது என்கிற குறிப்புகளை அவர்கள் தெரிவிக்கிறார்கள். இது சாதாரணமாக அரசாங்கத்தின் நடைமுறையிலே இருக்கக்கூடிய ஒன்று. ஆனால் கூடுமானவரை இவை குறைக்கப்பட வேண்டும். அதற்கேற்ப அந்தந்தத் துறைகளுக்கு என்று அந்தந்த ஆண்டிலே ஒதுக்கப்படுகின்ற பணம் செலவழிக்கப்படாமல் மிச்சப்படுத்தப்படுகின்ற நிலைமைகள் குறைக்கப்பட வேண்டும். அரசாங்கம் ஒதுக்குகிற பணம் முழுமையாக அந்தந்த ஆண்டிலேயே செலவிடப்பட வேண்டும் என்பதுதான் அரசின் கொள்கை. இந்த அரசிடம் மட்டும்தான் இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது என்பதல்ல; எந்த அரசாக இருந்தாலும். ஆட்சியை நடத்துகின்றபோது, எதிர்பாராமல் சில சூழ்நிலைகள் ஏற்படத்தான் செய்யும். ஆனால் ஒதுக்கப்பட்ட பணம் முழுமையாகச் செலவழிக்கப்படவில்லை என்பதற்குரிய காரண காரியங்களை நுணுகி ஆய்ந்தறிந்து அதற்குரிய காரணங்களைக் கேட்கிற முறையில், விளக்கங்களைக்

1982 மார்ச் 30] (டாக்டர் இரா. நெடுஞ்செழியன்)

கேட்கிற முறையில், இன்றைக்கு பொதுக் கணக்குக் குழு இருக்கிறது. அவர்களுடைய குறிப்புகளுக்கான விளக்கங்கள் அந்தந்தத் துறையினரால் தரப்படுகின்றன. ஆனால் பொதுக் கணக்குக் குழுவினருக்கு மாநில அரசு அதிகாரிகளால் தரப்படுகின்ற விளக்கம் அவர்களுக்குத் திருப்தி அளிக்கின்ற வகையில் அமைய வேண்டும். அந்த அடிப்படையில், இன்றைக்கு நடைமுறையில் இருக்கிற சூழ்நிலைகளை நான் இங்கே சொல்கிறேன். நான் அப்படிச் சொல்கின்ற சிலபல தன்மைகளை இந்த மன்றம் ஏற்கும் என்று நான் கருதுகிறேன்.

1967-68-ல் 594.16 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஆனால் செலவு செய்யப்பட்டது 533.94 கோடி ரூபாய். ஆக மிச்சம் 62.4 கோடி ரூபாய். மிச்சம் வந்த தொகை 10.44 சதவிகிதம். இந்த அளவுக்கு அந்த ஆண்டிலே பணம் செலவழிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. 1970-71-ல் 722.60 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. செலவழிக்கப்பட்டது 644.24 கோடி ரூபாய். மிச்சப்படுத்தப்பட்டது 83.17 கோடி ரூபாய். 11.51 சதவிகிதத் தொகை அந்த ஆண்டிலேயே செலவழிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. 1973-74 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டது 850.92 கோடி ரூபாய். செலவழித்தது 674.65 கோடி ரூபாய். மிச்சம் வந்த தொகை 183.24 கோடி ரூபாய். அந்த ஆண்டில் செலவிடப்படாமல் மிச்சப்படுத்திய தொகை 21.53 சதவிகிதம் ஆகும். 1976-77-ல் 1,183.04 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது: ஆனால் 894.35 கோடி ரூபாய் தான் செலவிடப்பட்டது. ஆக மிச்சம் வந்த தொகை 262.23 கோடி ரூபாய். செலவிடப்படாத தொகை 22.74 பெர்சென்ட் ஆகும். 1978-79-ல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதுபோல், ஒதுக்கப்பட்ட தொகை 1,317.99 கோடி ரூபாய். ஆனால் செலவு செய்யப்பட்டது 1,179.90 கோடி ரூபாய். ஆக, செலவழிக்கப்படாத தொகை 142.82 கோடி ரூபாய். இது 10.81 சதவிகிதம் ஆகும். 1979-80-ல் ஒதுக்கப்பட்ட தொகை 1,482.15 கோடி ரூபாய். ஆனால் செலவழிக்கப்பட்டது 1,335.62 கோடி ரூபாய். ஆக, மிச்சப்படுத்தப்பட்ட தொகையின் அளவு 10.67 சதவிகிதம் ஆகும். இதை ஏன் நான் இங்கே சொல்கிறேன் என்றால், அதற்குக் காரணம் இருக்கிறது. முன்பு 22.74 சதவிகிதத் தொகைகூட செலவழிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆதலால் அவர்கள் பாதையிலேயே நானும் போய், 40 சதவிகித அளவிற்கு இதைக் கொண்டு போக துள்ளித் துள்ளிக் குதிக்கிறேன் என்று தயவுசெய்து யாரும் கருத வேண்டாம். (சிரிப்பு) அப்போதே தவிர்க்க முடியாத சூழ்நிலை காரணமாக இவ்வளவுக்குப் போயிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் எங்களைப் பொறுத்தவரையில்,

இன்னும் ஓரளவுக்கு இந்தத் தொகையைக் குறைக்க வேண்டுமென்ற நிலையில் தான் இருக்கிறோம். இந்த அரசைப் பொறுத்தவரையில், பல்வேறு இடங்களுக்கு, பல்வேறு திட்டங்களுக்காக பணத்தை ஒதுக்குகிறோம். சில இடங்களில் ஒதுக்கப்படும் பணத்தைக் கொண்டு கட்டிடங்களைக் கட்ட முடியாத, தகராறு போன்ற, நிலைகள் இருக்கின்றன. அதுபோல் சில இடங்களில் அணைக்கட்டு கட்டுவது போன்ற திட்டங்களை நிறைவேற்ற முடியாத சூழ்நிலை இருக்கிறது. இப்படி பல்வேறு காரணங்களால், பல்வேறு திட்டங்களை நிறுத்தி வைக்கப்படுகிற சூழ்நிலை இருப்பதன் காரணமாகவும் பணம் மிச்சமாகிறது. ஆகவே கூடுமானவரை அந்தந்த ஆண்டுக்கு என்று ஒதுக்கப்படுகின்ற தொகையை அந்தந்த நோக்கங்களுக்காக அந்தந்த ஆண்டிலேயே செலவிட்டு திட்டத்தை நிறைவேற்றுவதுதான் அரசுக்கும் நன்மை, நிதித் துறைக்கும் நன்மை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் ஒன்றை இங்கே குறிப்பிட்டார். அகவிலைப் படி உயர்வு ஓய்வுபெற்றவர்களுக்கு உண்டா என்று கேட்டார். அண்மைக் காலமாக அகவிலைப் படி உயர்வு அளிக்கப்படும் போதெல்லாம் ஓய்வு பெற்றவர்களுக்கும் அதை அளித்து வருகிறோம். அந்த வகையில் ஒரு தவணையில் குறைந்தபட்சம் 3 ரூபாயும், அதிகபட்சம் 12 ரூபாயும் அவர்களுடைய ஓய்வூதியத்தோடு சேர்த்துத் தரப்படும்.

இங்கே பல உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி மின்சார வெட்டுபற்றிக் குறிப்பிட்டார். மின்சாரத் துறையைப் பொறுத்தவரையில், அனல் மின்சாரம், புனல் மின்சாரம் இவை இரண்டின் மூலம் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற சூழ்நிலை என்ன என்பதைப்பற்றி மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இந்த அவையிலேயே ஏற்கெனவே அறிவித்திருக்கிறார்கள். அது குறித்து இருக்கிற சூழ்நிலை என்ன என்பதுபற்றி இங்கே விளக்கிப் பேசியிருக்கிறார்கள். இடையிலே தூத்துக்குடியில் இருக்கிற அனல் மின்சார இயந்திரம் எதிர்பாராத விதமாக பழுதடைந்து அதனால் சிலபல நாட்கள் அதிலிருந்து மின்சாரம் வராமல் இருந்தது. கொஞ்சம் அதன் காரணமாக மின்சாரம் தடைப்பட்டது. பிறகு இயந்திரம் பழுதுபார்க்கப்பட்டு பழைய நிலைக்கு ஓரளவு மின்சாரம் வந்துகொண்டிருக்கிறது. அதன் காரணமாக தொழில்களுக்கு மின்சாரப் பற்றக்குறை ஏற்பட்ட சூழ்நிலையில், பெரிய தொழில்களுக்கு ஓரளவுக்கு ஒதுக்கப்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. அந்த

அடிப்படையில் ஓரளவுக்கு விவசாயிகளைப் பொறுத்தவரையில், மின்சார வெட்டு இல்லாமல் இப்போது நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம். அப்படி எடுத்த முடிவின் அடிப்படையில் 'பீக் அவ்வர்ஸ்' என்கிற அடிப்படையில் மின்சாரம் வழங்கிக் கொண்டிருக்கிறோம். எதிர்காலத்தில் மழை பெய்தால், புனல் மின்சாரத்தின் அளவு உயர்ந்து அதன் அடிப்படையில் மின்சார வெட்டின் அளவும் தளர்த்தப்படும். அப்படிப்பட்ட நேரத்தில் நல்ல முறையில் மின்சாரம் தர தயாராக இருக்கிறோம் என்பதை அறிவிக்க வேண்டிய அவசியம் எங்களுக்கே ஏற்படும்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : சில நேரங்களில் மின்சார வெட்டு வருவது என்பது தவிர்க்க முடியாதது. 12 ஆண்டுகள் இந்த இலாக்காவில் நான் பணியாற்றியிருக்கிறேன். இதுகூட எனக்குத் தெரியாமல் இருக்குமா ? ஆனால் விவசாயிகளுக்கு 6 மணி நேரம் கொடுத்தால், நிச்சயம் அது காலை 6 மணியிலிருந்து 12 மணி வரை, இந்த இந்தத் தாலுக்காக்களுக்கு நண்பகல் 12 மணியிலிருந்து பிற்பகல் 6 மணி வரை, அடுத்து இன்னின்ன வட்டங்களுக்கு இன்னின்ன நேரம் என்று திட்டவட்டமாக அறிவித்து, அதன்படி 6 மணி நேரம் கொடுத்தாலேயே போதும். அப்படிச் சொல்கின்ற 6 மணி நேரத்தில் மின்சாரம் இல்லை என்கிற நிலை வந்துவிடக் கூடாது. இப்போது அப்படிப்பட்ட ஒரு உத்தரவாதம் இல்லாமல், உள்ளபடியே பல கோடிக்கணக்கான பெறுமானமுள்ள பயிர்கள் எல்லாம், வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், பாதிக்கப்பட்டுள்ளன. என்னைப் பொறுத்தவரையில், எனது 10 ஏக்கர் நிலம் பாதிக்கப்பட்டிருக்கிறது. என்னைப்பற்றி மட்டும் நான் சொல்லவில்லை; மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் அதுபற்றித் தெரியும். பயிர்கள் எல்லாம் அப்படி பாதிக்காத அளவுக்கு இனிமேலாவது 6 மணி நேரம் திட்டவட்டமாக மின்சாரம் அளிக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால், அத்தனை பயிர்களும் பாதிக்கப்படும். அதற்குரிய ஏற்பாட்டை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் செய்தாலே போதும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : விவாதம் முடிகிற வரையில் அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(பிற்பகல் 7-00)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. விராசாமி அவர்கள் குறிப்பிட்டதைப்போல், இது ஒரு 'டெக்னிகல் சப்ஜெக்ட்'தான். அவரே அந்தத் துறையிலிருந்து அதன் முறைகளை உணர்ந்திருக்கிறார். எவ்வளவு மின்சாரம் கிடைத்தால் எவ்வளவு வினியோகம் செய்ய முடியும் என்பது அவருக்குத் தெரியும்.

கிடைக்கிற மின்சாரத்தின் அளவைப் பொறுத்து, எந்த அளவுக்கு ஒதுக்கீடைச் செய்யலாம் என்று பார்த்து செய்ய வேண்டிய நிலைமை இருக்கிறது. 'பீக் பீரியட்' என்று சொல்வார்கள். விவசாயத்திற்கும் தொழில்களுக்கும் எந்த அளவுக்குப் பங்குபோட்டுக் கொடுக்கலாம் என்று பார்த்து, தொழில்களுக்குப் பயன்படுத்தாத நேரத்தில், அதை விவசாயத்திற்குத் தர வேண்டும் என்ற முறையை மின்சார வாரியம் வகுத்துக் கொண்டுதான் செயல்படுகிறது. அந்த வகையில்தான் முறைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் குறிப்பிட்டதைப் போல், அதைக் கணக்கிடும் முறையை அந்த வாரியத்தில் உள்ள வல்லுநர்கள் மேற்கொண்டிருப்பார்கள் என்றுதான் கருதுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் வட ஆற்காடு மாவட்டத்தைப்பற்றிச் சொன்னார்கள். வேறு பல மாவட்டங்களில் இருக்கிற நிலையைவிட வட ஆற்காடு மாவட்டத்தில், மழை பொய்த்துவிட்டதன் காரணமாக, வறட்சி நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அந்த மாவட்டத்தில் உள்ள சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், அரசுக்கு அறிக்கை தர வேண்டும் என்றும் அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். பேரவையில்கூட மாண்புமிகு உறுப்பினர்கள் வட ஆற்காடு மாவட்டத்தைப்பற்றி அதிகமாகக் குறிப்பிட்டு, அங்கே மின்சாரப் பற்றாக்குறை நிலை இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இது குறித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அங்கே சொல்லியிருக்கிறார். எனவே ஓரளவுக்கு விவசாயிகளுக்கு ஒரு உறுதியளிக்கும் வகையில் 'கியாரண்டி' தருகிற வகையில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் கண்டிப்பாக மின்சாரம் கிடைக்கும்

என்று சொல்லுகிற வகையில், ஒரு நீக்குப் போக்காகப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற முறையை நான் ஏற்றுக்கொள்கிறேன். எந்த அளவுக்கு அதைச் செய்ய முடியும் என்பதை உரிய துறையினர் கண்டறிந்து ஆவன செய்வார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆசிரியர்களின் வேலை வாய்ப்புபற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் மாண்புமிகு உறுப்பினர் திரு. விராசாமி அவர்களும் இங்கே குறிப்பிட்டார்கள். வயதான பிறகு வேலை கிடைக்காத சூழ்நிலை ஒருவருக்கு ஏற்பட்ட சூழ்நிலையைக்கூட அவர் இங்கே குறிப்பிட்டார். கூடுமானவரை நம் நாட்டைப் பொறுத்தவரையில், எவ்வளவு வேலை வாய்ப்புகள் ஏற்படுகின்றன என்ற கணக்கும் அதில் எவ்வளவு பேரை "அப்சார்ப்" செய்ய முடியும், ஏற்றுக் கொள்ள முடியும், என்ற கணக்கும், அதற்கு நாம் எவ்வளவு பேரை உற்பத்தி செய்ய வேண்டும் என்ற கணக்கும், நெடுங்காலமாகவே ஒரு தொடர்பில்லாமலேயே இருந்து வருகிறது. நான் கல்வியமைச்சராக இருந்தபோதே, இதையெல்லாம் ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும் என்ற அடிப்படையில்தான் பல ஆசிரியர் பயிற்சி நிலையங்களை நானே மூடினேன்; அதுமட்டுமல்லாமல் பயிற்சி பெற வேண்டிய ஆசிரியர்களின் எண்ணிக்கையையும் குறைத்தேன். அதோடு இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளுக்குத் தேர்வு செய்தாலே போதும் என்றும் கொண்டு வந்தேன். அப்படி இருந்தும், தமிழாசிரியர்களைப் பொறுத்தவரை, அவர்களைப் பயிற்றுவிக்க ஏராளமான நிலையங்கள் இருக்கின்றன என்ற காரணத்தால், ஏதேனும் ஒன்றைப் படிக்க வேண்டும் என்று அவர்கள் படித்து விடுகிறார்கள். படித்துத் தமிழ்ப் புலவர்களாக ஆகிவிடுகிறார்கள். அவர்களையெல்லாம் ஏற்றுக்கொள்கிற அளவுக்கு புதிய வாய்ப்புகள் ஏற்படுவதில்லை. 6,000 பேர், 7,000 பேர், 8,000 பேர் என்கிற அளவுக்கு தமிழ்ப் புலவர்கள் படித்தும் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அதைப்போல செகண்டரி கிரேடில் எத்தனை ஆசிரியர்கள் தேவை என்று கண்டறிந்து, வருஷா வருஷம் டிமாண்டு அன்டு சப்ளைக்கு ஏற்ற வகையில், தேவைக்கு ஏற்ற அளவே நாம் உற்பத்தி செய்வதில்லை. டிமாண்டுக்கு மேல் 20, 25 சதவீதம் அதிகமாகக்கூட பொருளாதாரத் தத்துவத்தில் உற்பத்தி செய்யலாம் என்று சொல்லுவார்கள். ஆனால் அப்படியில்லாமல் 300 சதவீதம், 400 சதவீதம், 1,000 சதவீதம் என்ற அளவுக்கு ஆசிரியர்கள் உருவாக்கப்படும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இது வேதனைக்குரியதுதான். ஆசிரியர் பயிற்சி பெற்று எட்டு ஆண்டுக் காலம் அல்லது 10 ஆண்டுக் காலம் காத்திருந்து, அதற்குப் பிறகு இப்போது 1973 ஆம்

ஆண்டில் தேர்ச்சி பெற்றவர்களைத்தான் எடுத்துக்கொள்ளும் வாய்ப்பிருக்கிறது; அடுத்த ஆண்டில்தான் 1974 ஆம் ஆண்டில் தேர்ச்சி பெற்றவர்களை எடுத்துக்கொள்ளும் வாய்ப்பிருக்கிறது என்று சொல்லுகிற நிலைமை இருக்கிறது. இப்படித்தான் இன்றையதினம் பட்டியல்களைப் போட்டு வருகிறோம். பி.டி. ஆசிரியர்களைப் பொறுத்த வரையில்கூட, அவர்களுக்குக் கடந்த ஆறு ஆண்டுகளாக வேலையில்லை, நான்கு ஆண்டுகளாக வேலையில்லை என்ற நிலைமைதான் இருக்கிறது. நாமும் கூடுமானவரையில் நிதி வசதியின் அடிப்படையில்தான் ஆசிரியர்களுக்கான பதவியிடங்களை ஒதுக்கீடு செய்கிறோம். தேவையான இடங்களைத் தந்துவிடுகிறோம் என்று சொல்வதற்கில்லை. நிதி வசதிகளுக்கு ஏற்பவே தருகிறோம். எப்படியாவது ஒரு ஆசிரியருக்கு இவ்வளவுதான் மாணவர்கள் என்று வைத்தால், ஏராளமான ஆசிரியர்களை நியமிக்கக்கூடிய நிலை இருந்தால், பரவாயில்லை. **அந்தக்** கணக்கு—'அரித்மெடிக்'—சரியாக வருகிறது என்றாலும், நடைமுறையில் சங்கடம் வருகிறது. "Something is better than nothing" என்கிற வகையில் படிப்பே இல்லாத தன்மையைவிட எப்படியாவது ஒரு ஆசிரியர் 40, 45 மாணவர்களை வைத்துக் கட்டுப்படுத்துவதன் மூலமாக கல்வியறிவு வரட்டும் என்ற தன்மையில் நாம் செயல்பட வேண்டியிருக்கிறது. கல்வித் துறையைப் பொறுத்த வரையில், 2,000 ஆசிரியர்கள் வேண்டும் என்றும் 1,000 பி.டி. ஆசிரியர்கள் வேண்டும் என்றும்தான் கேட்கிறார்கள். ஆனால் நிதி வசதியின் அடிப்படையில் இவ்வளவுதான் ஒதுக்க முடியும் என்று நாம் தருகிறோம். நிதி வசதி பெருகும்போது, ஓரளவுக்கு இந்த நிலைமையைச் சீர் செய்ய முடியும் என்று கருதுகிறேன்.

தேர்வாணைக் குழுவைப்பற்றி பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்களும் இங்கே குறிப்பிட்டார்கள். அதை எப்படிச் சீர் செய்வது என்பதுபற்றி அரசு ஆய்ந்துகொண்டிருக்கிறது. தேர்வாணைக் குழுவின் மூலமாகத்தான் இந்த மாநிலத்தில் உள்ள அனைத்துத் துறைகளுக்கும் பணியாட்களைத் தேர்ந்தெடுக்க வேண்டிய நிலை இருக்கிறது. என்றாலும் அது நடத்தும் தேர்வுகளுக்கான பட்டியல்கள் 2 அல்லது 2½ ஆண்டுக்காலம் வரைகூட வெளியிடப்படாமல் காலதாமதமான நிலைகளும் இருக்கின்றன. எப்படி சுப்ரீம் கோர்ட்டுக்குப் போன வழக்குகள் 12, 13 ஆண்டுக் காலமாக நீதி கிடைக்காமல் தேங்கிக் கிடக்கின்றனவோ, அதைப்போல் இங்கேயும் தேக்கம் இருக்கிறது. எனவே அதன் செயல்முறைகளை எந்த அளவுக்கு எளிமைப்படுத்த வேண்டும் அல்லது சீர்படுத்த வேண்டும் என்பதில் கருத்தைச் செலுத்தி வருகிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் பேசும்போது, தேர்வாணைக் குழுவை அறவே நீக்கிவிடலாம் என்றார். அதனால் ஏற்படுகிற நன்மையைவிட சங்கடங்கள் அதிகமாக இருக்கும் என்பதால்தான், நாம் தேர்வாணைக் குழுவையே வைத்துக்கொண்டிருக்கிறோம். அதை நாம் நீதி இலாக்காவைப் போல் வைத்துக் கொண்டிருக்கிற காரணத்தால்தான், அது தேர்ந்தெடுத்து அனுப்பும் ஆட்கள் நியாயமான முறையில் தேர்வு பெற்றவர்களாக இருப்பார்கள் என்ற அடிப்படையில், அந்த நம்பிக்கையில் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அந்த அமைப்பு இல்லாமல் ஆங்காங்கே தேர்ந்தெடுத்துக்கொள்கிற நிலை இருந்தால், அதில் சிபாரிசு வந்துவிட்டது என்றும், வேண்டியவர்களைப் போட்டுவிட்டார்கள் என்றும், சொந்த ஜாதிக்காரர்களுக்குக் கொடுத்துவிட்டார்கள் என்றும் சொல்லுகிற சூழ்நிலை வரும். எனவே தேர்ந்தெடுக்கும் முறையைப் பரவலாக்கி இன்னும் விரைவுபடுத்துவதற்கான முறைகளை நாம் மேற்கொள்ள வேண்டும் என்றுதான் அரசு எண்ணிக்கொண்டிருக்கிறது. அதுபற்றிய விவர அறிக்கை வந்த பிறகு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்களும் லெவி கொள்முதல்பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். நானே அடிக்கடி சொல்வது உண்டு. லெவி போட வேண்டிய நிலை இல்லை என்றால் எனக்கும் சங்கடமில்லை, நாட்டுக்கும் சங்கடமில்லை. ஆனால் இருக்கிற சூழ்நிலையைப் பார்க்கும்போது, லெவி முறை மூலமாகத்தான் நாம் உள்ளபடியே நியாய விலைக் கடைகளை நடத்த முடியும் என்ற நிலை இருக்கிறது. நாம் மாநிலமெங்கும் 17,300 கடைகளை நடத்திக் கொண்டிருக்கிறோம். அதில் 1,90,00,000 குடும்ப அட்டைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தமிழ் நாட்டில் சென்சஸ் பிரகாரம் மொத்தம் 4,80,00,000 மக்கள் தான் இருக்கிறார்கள் என்ற கணக்கிருந்தாலும், குடும்ப அட்டைகள் கணக்குப்படி பார்த்தால், 6½ கோடி மக்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கு நாம் சென்ற ஆண்டு வழங்கியது 6 லட்சம் டன் அரிசியாகும். நாம் லெவி கொள்முதல் மூலமாக ரூ. 125, ரூ. 119, ரூ. 120 என்ற அளவுக்குக் கொள்முதல் செய்து அல்லது ரூ. 115க்குக் கொள்முதல் செய்து அந்த அரிசியை 55 காசு குறைத்து கிலோ ரூ. 1.75 என்ற விலைக்குக் கொடுக்கிறோம். பெரியவர்களுக்கு ஒரு கிலோவும் சிறுவர்களுக்கு ½ கிலோ அரிசியும் வழங்கப்படுகிறது. அதற்கு மேலும் தேவைப்படுகிறவர்கள் வெளிச் சந்தையில் வாங்க வேண்டும். இந்த முறையில் லட்சம் டன் அரிசி சென்ற ஆண்டு வினியோகிக்கப்பட்டிருக்கிறது. ஆக, 6 லட்சம் டன் கையிருப்பில் இருந்தால், வினியோகிக்க முடியும் என்ற நிலை இருக்

கிறது. மத்திய அரசு நமக்கு வறட்சியின் காரணமாக பற்றாக்குறை ஏற்பட்டுவிட்டது என்ற காரணத்திற்காக, பஞ்சாப், ஆந்திரம் போன்ற மாநிலங்களில் கொள்முதல் செய்து, கொள்முதல் விலைக்கே நமக்கு அனுப்பி வைத்தார்கள். நாம் ஓப்பன் மார்க்கெட்டில் வாங்க வேண்டுமென்றால், கிலோ ரூ. 3 அல்லது ரூ. 3¼ கொடுத்துத்தான் வாங்கியிருக்க வேண்டும். ஆனால் ரூ. 115 க்கு வாங்கி போக்குவரத்துச் செலவையும் கூட்டி நாம் விநியோகிக்கிற நிலையில் இருப்பதால், ஓரளவுக்கு அது எளிமையாக்கித் தரப்படுகிறது. இப்போது வறட்சியில்லாமல் ஓரளவுக்குப் போதுமான அளவுக்கு 'செல்ப் சபிஷியென்சி' என்ற அளவுக்கு நமது மாநிலம் அமைந்திருக்கிறது. கேரள மாநிலம் தன்னிறைவு பெற முடியாத மாநிலம். பக்கத்தில் இருக்கிற கருநாடக மாநிலம் 'மார்ஜினலி டெபிசிட் ஸ்டேட்'. நாம் 'மார்ஜினலி சர்ப்ளஸ் ஸ்டேட்' 'அதிகமாக ஸர்ப்ளஸ் ஸ்டேட்' என்று சொல்லுகிற அளவுக்கு இருப்பது ஆந்திர மாநிலம் ஒன்றுதான். எனவே அங்கேயிருந்துதான் கொள்முதல் செய்ய வேண்டும். தமிழகத்தைப் பொறுத்தவரை, 65 லட்சம் டன் உற்பத்தியாகிற நிலை இருந்தாலும், உற்பத்தியாளர்கள் தங்கள் சொந்த உபயோகத்திற்கு என்று சுமார் 35 லட்சம் டன் வைத்துக் கொண்டாலும், மீதி 30 லட்சம் டன்னாவது வியாபாரிகளால் வாங்கப்பட்டு விற்கப்பட வேண்டும். 30 லட்சம் டன் விற்கப்பட வேண்டும் என்கிறபோது, 15 லட்சம் டன்னாவது நமக்கு லெவி மூலம் வர வேண்டும். இப்போது நமக்கு வந்திருப்பது 4 லட்சம் டன்தான். இதிலிருந்து நாம் எந்த அளவுக்கு ஏமாற்றப்படுகிற நிலையில் இருக்கிறோம் என்பதை உணர முடிகிறது. அவ்வளவு பெரிய திருச்சி மாவட்டத்தில் இதுவரை நமக்கு 8,000 டன்தான் கொள்முதலாகியிருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் கூட 16,000 டன் கிடைத்திருக்கிறது. ஆனால் திருச்சி மாவட்டத்தில் மொத்தம் 8,000 டன்தான் கிடைத்திருக்கிறது. எந்த அளவுக்கு நாம் ஏமாற்றப்படுகிறோம் என்பது இதன் மூலம் புரியும். லெவியை ஏமாற்றாமல் கொடுத்திருந்தால், நமக்கு 15 லட்சம் டன் கிடைத்திருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : லெவி வாங்க வேண்டும் என்பதில் நான் கருத்து வேறுபாடு கொள்ளவில்லை. இதில் எதிர்க் கட்சிகள் எல்லாம் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம். ஆனால் கிடைக்கிற இடத்தில் வாங்காமல் இருக்கிறார்களே என்பதுதான் எங்கள் குறை. தஞ்சையில் இப்போது வாங்குவதற்கு ஆளே இல்லை. எங்கள் கட்சியின் நிர்வாகக் குழு தஞ்சையில்

நடைபெற்றபோது, தஞ்சையைச் சேர்ந்தவர்கள் வேதனைக் கண்ணீர் விட்டார்கள். அங்கே வாங்க ஆள் இல்லை. லெவி கேட்கிற காரணத்தால், வியாபாரிகள் வாங்காமல் விட்டுவிடுகிறார்கள். விவசாயிகள் அவசர காரியத்திற்குக் கூட நெல்லை விற்க முடியாத நிலை இருக்கிறது. எனவே அங்கே சிவில் சப்ளைஸ் அல்லது கூட்டுறவுத் துறை மூலம் வாங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்றுதான் கேட்டுக்கொள்கிறேன். தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கொள்முதல் செய்ததைப்போல், தேவைப்படுகிற அளவுக்குக் கிடைக்கிற இடத்தில் வாங்க வேண்டும். அரிசி கிடைக்காத திண்டுக்கல்லில் போய் "7,500 டன் உங்கள் தாலுக்காவுக்கு டார்கெட்" என்று கட்டாயப்படுத்தினால், அவர்கள் எப்படி கொடுக்க முடியும்? எனவே எங்கே அதிகமாகக் கொடுப்பதற்கு விவசாயிகள் தயாராக இருக்கிறார்களோ அங்கே வாங்க வேண்டும். அதிகமாக விளையாத இடத்தில் குறியீட்டைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைக் குறித்து மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அந்த இலாக்காவுக்கு உரிய ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 7-10)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, விளக்கம் கேட்டதற்காக நன்றி. இப்போதே கூட அரசின் சார்பாக கொள்முதல் செய்வதற்காக 360க்கு மேற்பட்ட கொள்முதல் நிலையங்களை தஞ்சை மாவட்டம் முழுவதும் வைத்திருக்கிறோம். இப்போதும் 110 ரூபாய், 115 ரூபாய், 123 ரூபாய்க்கு அவர்கள் கொடுக்கத் தயாராக இருந்தால், நாங்களும் கொள்முதல் செய்யத் தயாராக இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்ததற்கிணங்க, அண்மையில் வெளிச் சந்தையில் வியாபாரிகளோடு போட்டி போட்டு கொள்முதல் செய்யலாம் என்று கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சொல்லியிருக்கிறோம். அப்படி கூட்டுறவுச் சங்கங்கள் வெளிச் சந்தையில் போட்டி போட்டு வாங்கினால், ஓரளவிற்கு அதிகமாக விற்கும்போது, அது செக்காக இருக்கக் கூடும் என்றும், இப்போது நியாய விலைக் கடையில் ரூ. 1.75 க்குப் போட்டாலும், பிறகு ரூபாய் 2.80க்கு நாம் தந்தால்கூட வெளி மார்க்கெட்டில் ரூ. 3.50க்குப் போகும்போது மக்களுக்குக் கட்டுபடியாகக் கூடிய வாய்ப்பாக இருக்கும் என்று கருதுகிறேன். தஞ்சை மாவட்டத்திலே மொத்த வியாபாரிகள் கொள்முதல் செய்ய தடையில்லை. அங்கே லெவி தந்துவிட்டு, திண்டுக்கல்லில் அரைப்பதிலே தடையில்லை. டிரேடர்ஸ் அண்டு மில்லர்ஸ் லெவி என்று இருக்கிறது. டிரேடர்ஸ் லெவி கொடுத்துவிட்டு, திண்டுக்கல்லில் அரைக்கும்போது, "லெவி கொடுத்து

விட்டேன்'' என்று சொல்லி அதற்கான சர்டிஃபிகேட்டைக் காண்பித்தால், தகராறு கிடையாது. சர்டிஃபிகேட் இல்லாவிட்டால், கொள்முதல் செய்கிற வ்கையிலே லெவி கொடுக்காவிட்டால், மில்லில் கொடுக்க வேண்டுமென்று வைத்திருக்கிறோம். வியாபாரம் செய்யாமல் அரைக்கும்போது வாங்கும் நிலைமைகள் இல்லை. இந்தக் காரணத்தைக் கொண்டுதான் 1974 ஆம் ஆண்டிலே 'ஃபார்மர்ஸ் லெவி' போட்டோம். இப்போது 'ஃபார்மர்ஸ் லெவி' போட்டால், விவசாயிகளுக்குக் கஷ்டம் ஏற்படும். இப்போது ஏழரை இலட்சம் டன் கொள்முதல் செய்ய முடிந்திருக்கிறது. 'ஃபார்மர்ஸ் லெவி' போட்டால் கிட்டத்தட்ட 8 இலட்சம் டன் எளிதாக வாங்கலாம். ஆனால் அதிகாரிகள், மற்றவர்கள், வீட்டுக்கு வீடு புகுந்து விவசாயிகளைத் தொல்லைப்படுத்த வேண்டியிருக்கும் என்பதால்தான், அதைப் போடவில்லை. இதிலே அதிகாரிகளால் சில சங்கடங்கள் இருக்கலாம். அறவே இல்லை யென்று சொல்லவில்லை. சில பல இடங்களில் இருக்கக் கூடும். அப்படிப் பட்ட இடங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர், வழங்குதுறை அதிகாரிகள் அதுபற்றி விசாரித்து, கெடுபிடி இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். சில சமயங்களில் லெவி கொடுக்காமல் மொத்தத்தை யும் வெளி மார்க்கெட்டில் விற்பதால், அவர்களுக்கு இலாபம் கூடுதலாகக் கிடைக்கிறது. அப்படி விற்பதன் காரணமாக அதிக இலாபம் வருவதால் சிலபல இடங்களில் ஏமாற்று வேலைகள் நடைபெறுகின்றன. எல்லோரும் அப்படிச் செய்கிறார்கள் என்று சொல்லவில்லை. ஆகவேதான் இந்தக் கணக்கையெல்லாம் பார்க்க வேண்டியிருக்கிறது.

ஓய்வு பெற்றால் பத்தாயிரம் ரூபாய் அளிப்பது பற்றிய விளக்கங்களை ஏற்கெனவே சொல்லியிருப்பதால் மீண்டும் கூற வேண்டிய அவசியம் இல்லை யென்று கருதுகிறேன். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உதவி செய்வதற்கு ஆள் வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அத்தகைய வசதி வாய்ப்புகளை நிதி வசதி ஏற்பட ஏற்படத்தான் செய்ய முடியும். ஒன்றைச் செய்யலாமா என்று பார்க்கிறோம். பேரவையிலே கூட அதைக் குறிப்பிட்டேன். மாண்புமிகு உறுப்பினர்கள் கூட அதைச் சொன்னார்கள். ஆங்காங்கே ஊராட்சி ஒன்றியத்திலே இருக்கின்ற இடத்தைப் பயன்படுத்தி அங்குள்ள ஸ்டெனோகிராஃபரைப் பயன்படுத்தி அதன் மூலமாக கடிதப் போக்குவரத் தைச் செய்ய வசதி வாய்ப்புகளைச் செய்தால், உள்ளபடியே பலன் தருமென்று சொன்னார்கள். அதற்காக ஆராய்ந்து முடிவு எடுக்க முடியுமா என்று பார்க்க வேண்டும். எதிர்காலத்திலே இப்படி படிப்படியாகக் கொண்டுவருகிற போது மேலும் செய்யலாம் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

முதியோர் ஓய்வூதியம்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சி சுந்தரம் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒருவர் இறந்தால்தான், பூர்த்தி செய்வது என்று அதற்கு ஏற்கெனவே உச்சவரம்பு வைத்திருந்தோம். இப்போது அதை ஓரளவு தளர்த்திவிட்டோம். பெருந்தலைவர் திரு. காமராஜ் அவர்கள் இதைக் கொண்டு வந்தபோது, நாடு முழுவதும் 16 ஆயிரம் பேருக்கு ஓய்வூதியம் தரப்பட்டது. அறுபது வயது இருக்க வேண்டுமென்று சொல்லி ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒரு கோட்டா வைத்திருந்தோம். இப்போது மேலும் தளர்த்திவிட்டதால், இப்போது இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, முதியோர் ஓய்வூதியம் பெறுவோரின் எண்ணிக்கை 52 ஆயிரம் என்று வந்திருக்கிறது. இதை விளக்கக் குறிப்பிலேகூட குறிப்பிட்டிருக்கிறேன். இப்போது ஒரு இலட்சத்து 99 ஆயிரம் பேருக்கு வேலை கிடைக்கிற அளவுக்கு வந்திருக்கிறது. அண்மையிலே அறிவித்தபடி, 30 ஆயிரம் விவசாயத் தொழி லாளர்களுக்கு ஓய்வூதியம் என்றும், 17 ஆயிரம் பேருக்கு மேற்கொண்டு வரப்படும் என்றும் இருக்கிறது. இப்போது உச்சவரம்பு எடுக்கப்பட்டு விட்டது. இதிலே சேர்க்கப்படுகிற அளவிற்கு அவ்வளவு பேரையும் சேர்க்க நிதிவசதி இல்லை. ஆங்காங்கே இருக்கின்ற நிலைமைகளைப் பார்த்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட்டுக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அகவிலைப் படியைச் சம்பளத்தோடு இணைக்க வேண்டுமென்று பல கோரிக்கைகளை வைத்தார்கள். அவ்வப்போது எடுக்கின்ற முடிவு, சம்பளக் குழு வருகிறபோது அதன் பரிந்துரையின் அடிப்படையிலே செய்கிறோம். இருந்தாலும் பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அதைத் துறையினர் ஆராய்கிறார்கள். எந்த அளவிற்குச் செய்ய முடியும், அதனாலே ஏற்படுகிற நிலைமை என்ன என்பதைப் பார்க்க வேண்டும்.

"ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை
போகாறு அகலாக் கடை"

என்று வள்ளுவர் கூறியதன் காரணமாக, பொருள் வரும்வழி குறுகிப் போனாலும் பரவாயில்லை, செலவினத்தை அதிகமாக ஆக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கருதுகிறோம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இதை வள்ளுவர் சொல்லியிருப்பதால், ஆகாறு அகல அகல, போகா றையும் அகலமாக ஆக்கிக் கொண்டு போகலாம். இருக்கின்ற வழியைச் சரி பார்த்துச் செய்ய வேண்டியிருப்பதால், இதைப் பற்றியெல்லாம் யோசிக்க வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் தற்காலிகமாக வேலை செய்கின்றவர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஆண்டு முழுவதும் வேலைகள் இருக்குமானால், அப்படிப்பட்டவர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று செய்கிறோம். சிலபல வேலைகளுக்குத் தற்காலிகமாகவே இருக்கலாம். சட்டமன்றம் நடைபெறுவதற்கு சிலபல நாட்களுக்குத் தேவையான வேலைக்கு ஆட்கள் என்று வருகிறது. ஆளுக்கு வேலை என்று வந்தால், இப்படிப்பட்ட சங்கடங்கள் வருகின்றன. நிரந்தரப் பதவிகளை ஏற்படுத்தும்போது, கூடுமானவரையில் தற்காலிகமாக உள்ளவர்களை 'அப்சார்ப்' பண்ண முடியுமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம். நிரந்தரமான பதவிகள் இருக்குமானால், நிரந்தரப்படுத்துகிறோம். இல்லாவிட்டால் சிலபல பதவிகளைத் தற்காலிகமாகவே வைக்க வேண்டும். இல்லாவிட்டால் செலவினம் அதிகமாகும். வேறு பல வகைகளிலே, தற்காலிகமாக உள்ளவர்களை இழுத்துக் கொள்ள வாய்ப்புகள் இருக்குமானால் அதைப்பற்றி யோசிக்கலாம். நிரந்தரம் என்றும், தற்காலிகம் என்றும் இரண்டு வகையாக வைத்திருக்கிறோம். அவர்கள் ஒரு வேலை பார்த்த பிறகு, சென்ற தடவை வேலை பார்த்தார்கள் என்பதால் கருணையின் அடிப்படையிலே அவர்களுக்கே வேலை தருகிறோம். அப்படியில்லாமல் புது ஆட்களை வைத்தால், அந்த வாய்ப்பே அவர்களுக்கு இருக்காது. ஆகவேதான் ஆறு ஆண்டுக் காலம் தற்காலிகமாக வேலையில் பலபேர் இருக்கிறார்கள் என்று வருகிறது. கருணையின் அடிப்படையிலே, மனிதாபிமானத்தின் அடிப்படையிலே நிரந்தர வேலையில் காலி ஏற்படும்போது, அவர்களை இழுத்துக்கொள்ள முடியுமா என்பதை அவ்வப்போது ஆராய்ந்து கொண்டு வருகிறோம்.

திரு. ஆ. நல்லசிவன் : துணைத் தலைவர் அவர்களே, டெம்ப்ரவரி ஒர்க்சுக்கு செஷன் நடக்கும்போது இடையில் வரக்கூடிய விடுமுறை நாட்களுக்குச் சம்பளம் இல்லை. செஷன் நடக்கும்போது, இடையில் வரக்கூடிய விடுமுறை நாட்களுக்கு மெம்பர்களுக்குப் படி தரப்படுகிறது. ஆனால் இந்தத் தற்காலிக சிப்பந்திகளுக்கு விடுமுறை நாட்களுக்குச் சம்பளம் இல்லை. அதையாவது செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தினக்கூலி என்பதால், என்றைக்குப் பணி நடக்கிறதோ அன்றைக்கு மட்டும் கூலி தரவேண்டுமென்ற நிலை வருகிறது. அதை மாற்ற வேண்டுமென்றால், நாம் யோசிக்க வேண்டும். "செஷன் ஆரம்பிக்கும் நாளிலிருந்து முடியும் வரை" என்று சொல்லிவிட்டால், இடையிலே வருகின்ற விடுமுறை நாளுக்கும் சேர்த்துத் தருகின்ற

சூழ்நிலை வரும். இப்போது பணிக்கு வந்தால் சம்பளம், வராவிட்டால் சம்பளம் இல்லை. தினக்கூலி என்பதால், வேலை செய்யும் நாட்களுக்குத்தான் சம்பளம் கிடைக்கும். மாண்புமிகு உறுப்பினர் கூறிய விடுமுறை நாட்களைப்பற்றி என்ன செய்யலாம் என்பதுபற்றித் தனியாக யோசிக்கலாம். எதன்மூலமாகச் செய்யலாம் என்பதை ஆராய்ந்து அதற்கான திட்டங்களைத் தீட்டலாம்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்திருக்கின்ற உறுப்பினர்கள் காலையிலே பேரவையிலே பேசும்போது, 'இப்போது அங்கே நிலைமைகள் ஓரளவிற்கு கட்டுக்கடங்கி இருந்தாலும், மீண்டும் தூண்டிவிடாமல் தடுத்து நிறுத்தப்படவேண்டும்" என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அங்கே சென்று இருக்கின்ற நிலைமைகளை ஆராய்ந்து, பல்வேறு குழுக்கள், சமயசார்புடையவர்கள் ஆகியவர்களைச் சந்தித்து, அங்கே அமைதிச் சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு அவர்களே வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் கொடுக்க வேண்டும், வெகுவாக பாதிக்கப்பட்டு வாழ்க்கையை நடத்த முடியாதவர்களுக்கு உடனடியாக நிவாரணம் அளிக்கும் திட்டங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் மாண்புமிகு முதல்மைச்சர் அவர்கள் சொல்லிவிட்டு வந்திருக்

(பிற்பகல் 7—20)

கிறார்கள். அதுமட்டுமல்ல, அங்கே இருக்கின்ற குழுக்களும், நல்லவர்களும் மற்றவர்களும் சேர்ந்து சில பல வசதிகளை முறையாகச் செய்துகொண்டு வருகிறார்கள். கிருத்துவர்கள்கூட, பாதிரிமார்கள் எல்லாம்கூட நிதி வசதியைத்திரட்டி, இந்த இடிபட்ட, பாழாக்கப்பட்ட சேதப்பட்ட கோயில்களுக்குக் கூட பணம் கொடுக்கின்றார்கள். மாண்புமிகு அங்கத்தினர் திரு. நல்லசிவன் அவர்களும் மற்றவர்களும் சொன்னதுபோல, கிருத்துவர்கள் கொடுக்கின்ற பணத்தை நாம் வாங்குவதா, அதை வாங்கி இந்துக் கோயில்களைக் கட்டுவதா, அப்படி கட்டக்கூடாது என்ற மனப்பான்மையுடையவர்கள் இருக்கின்றார்கள் என்றால், அது சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்துகின்ற அளவிற்கு அமையாது. இங்கே இருப்பவர்கள் ஓரளவிற்கு அதற்கான முயற்சிகளைச் செய்கின்றார்கள். துப்பாக்கிச் சூட்டினால் இறந்தவர்களுடைய குடும்பங்களுக்கு எந்த அளவிற்கு நிதியுதவி அளிக்கலாம் என்பதைப்பற்றி மாண்புமிகு முதல்வர் அவர்கள் அங்கே விசாரணையைப் பொறுத்தும், மாவட்ட ஆட்சித்

தலைவர் அவர்களிடத்தேயிருந்தும் அறிக்கை கேட்டிருக்கிறார்கள். அந்த அறிக்கை வந்தபிறகு, அவர்களுடைய குடும்பங்களுக்கு எந்த அளவுக்குச் செய்யலாம் என்பதுபற்றி யோசித்து, அதனுடைய நிலைமைகளைப் பொறுத்து உதவி அளிக்கலாம் என்று சட்டமன்றப் பேரவையிலே வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். அங்கே சென்றுவிட்டு வந்த பிறகும், அங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு அங்கத்தினர்கள் துப்பாக்கிச் சூடு பற்றிச் சொன்னார்கள்.

திரு. ஆ. நல்லசிவன் : அந்தத் துப்பாக்கிச் சூட்டிலே எட்டு பேர்கள் இறந்திருக்கிறார்கள். ஒருவர் கலவரம் செய்யப் போனவர்களால் கொல்லப்பட்டிருக்கிறார். அவருடைய குடும்பத்தினருக்கும் உதவியளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த நிலைமைகளைப்பற்றிச் சரியாகத் தகவல் தெரியவில்லை. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். அதைப்பற்றிய நிலைமை பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்தும், விசாரணைக் குழுக்களிடமிருந்தும் அறிக்கையும் வருமானால், அதனுடைய அடிப்படையிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் வாக்களித்த அந்தத் தன்மையிலே அவற்றையெல்லாம் கவனிக்கலாம் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

வேறு பல பிரச்சினைகளைப்பற்றி மாண்புமிகு அங்கத்தினர் பலர் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். சட்டமன்றப் பேரவையிலேயும், மேலவையிலேயும் உள்ள வசதி வாய்ப்புகளைப்பற்றி அன்றும் சொன்னார்கள், இன்றும எடுத்துச் சொன்னார்கள். அதிலே இருப்பது வேலையினுடைய தன்மைகள் வளர்ந்திருக்கின்றன. பிரிவுகள் வளர்ந்திருக்கின்றன. வேலை செய்பவர்கள் எண்ணிக்கை வளர்ந்திருக்கிறது. ஆனால் இந்தக் கோட்டையிலே இட வசதி இல்லாத காரணத்தினால்தான், தாழ்வாரத்திலே அலுவலகம் வைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அன்றே நான் எடுத்துச் சொன்ன மாதிரி, இதற்கு உடனடியாக என்னென்ன வாய்ப்பு ஏற்படுத்தலாம் என்று பார்க்க வேண்டும். இந்தப் பகுதியைச் சேர்ந்திருக்கின்ற சில பகுதிகளை, இடங்களைக் காலி செய்து தருவதன் மூலமாக, வேறு இடத்தில் தலைமையகத்தினுடைய வேறு பல துறைகளை அகற்றுவதன்மூலமாக, அந்த இடம் நமக்குக் கிடைக்கக்

கூடும். அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம். தலைமைச் செயலாளர் அவர்கள் அதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்காகச் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. க. இராமமூர்த்தி : கிராமக் கூட்டுறவுச் சங்க நகைக் கடன்கள் குறைக்கப்பட்டிருப்பதுபற்றி ஏதாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த நிலைமைகள் ஏற்படுவதற்குக் காரணம், இந்தக் கூட்டுறவு வங்கிகள் மட்டுமல்ல, ஷெட்யூல்ட் பேங்குகள், நேஷனலைஸ்ட் பேங்குகள்கூட இந்தக் கதிக்குத்தான் வந்திருக்கின்றன. அதற்குக் காரணம் ரிசர்வ் பாங்கு. அப்படி ஒரு கொள்கையை அது எடுத்து விட்டது. நகையின் பேரிலே பணம் கொடுப்பதில்லை என்று சொல்லியிருக்கிறது. இது புரொடிக்டிவ் இயராக இருப்பதன் காரணமாக, உற்பத்தித் திறனை அதிகரித்து, உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று திட்டமிட்டிருப்பது தான் காரணமாகும். ஆகவேதான் பாங்குகளிலே இருக்கின்ற பணத்தையெல்லாம் இப்படி உற்பத்தித் திறனைப் பெருக்குவதற்குப் பயன்படுத்துகின்ற அளவுக்குச் செலவிட வேண்டுமே தவிர, நகைக் கடன்களுக்குப் பணம் கொடுத்து அவர்களுடைய கல்யாணம் போன்றவற்றிற்குச் செலவழிக்கக் கூடாது என்று ரிசர்வ் வங்கி முடிவெடுத்திருக்கிறது. ஷெட்யூல்ட் பேங்குக்கு இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கொடுத்து அந்த அடிப்படையிலே நம்முடைய கூட்டுறவு வங்கிகளுக்கும் நகையின் மீது கடன் வாங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு அங்கத்தினர்கள் கூறுவது போன்ற கடினமான நிலைமை கிராமப்புறங்களில் ஏற்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்து, மத்திய அரசுக்கு நாம் மறுபடியும் இதைப்பற்றித் தெரிவித்து ஓரளவுக்கு ஏழையெளிய மக்கள், சாதாரண மக்கள் இவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட தொகைக்குக் கீழே நகைக் கடன் கொடுக்கலாம் என்று வேண்டுமானால் சொல்லலாம். ரூபாய் நான்கு ஆயிரம், ரூபாய் ஐந்தாயிரம் அல்லது ரூபாய் பத்தாயிரம் என்று தரா விட்டாலும், ஏழையெளிய மக்களுக்குத் தருகின்ற அளவுக்காவது விதியைத் தளர்த்த முடியுமா என்பதுபற்றி ஆலோசிக்க வேண்டுமென்று சொல்லலாம் என்ற கருத்தில் இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல அவர்கள் 24 சதவீத வட்டிக்கும், 30 சதவீத வட்டிக்கும், 36 சதவீத வட்டிக்கும் கடன் கொடுப்பவர்களிடத்திலே அவசரத் தேவைக்கு நகையை அடகு வைத்து, வைக்கப்படுகின்ற நகையை மூழ்கடிக்கின்ற சூழ்

(டாக்டர் இரா. நெடுஞ்செழியன்) [1982 மார்ச் 30

நிலை ஏற்படும். ஆகவேதான், ஒரு குறிப்பிட்ட தொகையை ஏழையெளிய மக்க
ளுக்கு, சாதாரண மக்களுக்கு அன்றாட வாழ்க்கையை நடத்த பயன்படுகின்ற
அளவுக்கு ஒரு லிமிட் வைத்து, விதியைத் தளர்த்தச் சொல்லலாம் என்ற
கருத்தில் மத்திய அரசுக்குத் தெரிவிக்கலாம் என்று கருதுகிறோம். இதனு
டைய விளைவுகள் நம்மால் ஏற்படுத்தப்பட்டதல்ல என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

மற்ற பிரச்சினைகள் பலவற்றையும் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச்
சொல்லியிருக்கிறார்கள். பல்வேறு குறைபாடுகள் பல்வேறு துறைகளிலே
இருப்பதைப்பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இங்கே எடுத்துச்
சொல்லியதன் மூலமாக, அந்தக் குறைபாடுகளை நீக்குவதற்கு வேண்டிய
முறைகளை அந்தத் துறைகள் மேற்கொள்ளுவதன் மூலமாகத்தான் இந்த
நோக்கம் நிறைவேறும். நாம் எவ்வளவு பணத்தைச் செலவழித்தாலும் நாம்
செலவழிக்கின்ற பணத்தினுடைய முழுப் பயனும் மக்களுக்குப் போய்ச் சேர
வேண்டும். போடப்பட்ட திட்டங்கள் நிறைவேற வேண்டும் என்று சொன்
னார்கள். அந்த வகையிலே, ஓரளவுக்குத் தமிழகத்தைப் பொறுத்தவரையில்,
தொடர்ந்து பல ஆண்டுகளாகவே அந்தப் பெயரைக் காப்பாற்றிக்
கொண்டு வருகிறோம் என்றாலும், இன்னும் பல மாநிலங்களுக்கு எடுத்துக்
காட்டாக ஆக வேண்டும் என்பதுதான் நம் எண்ணம். கீழ்மட்ட அதிகாரி
களை மேல் மட்ட அதிகாரிகள் பார்த்துக் கொள்ள வேண்டும். அந்த மேல்
அதிகாரிகளை அதற்கு மேல் அதிகாரிகள் கவனிக்க வேண்டும். மாண்புமிகு
உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் பல்வேறு கட்டங்களிலே எடுத்துச்
சொன்னார்கள். அதற்குக் காரணம் சொன்னார்கள். படிப்படியாகக்
கண்காணிப்பாளர்கள் இருக்கின்றபோது, மேலிடத்தில் இருப்பவர்கள் ஆய்
வாளர்கள் அறிக்கை வரவேண்டும் என்று சொல்வார்கள். ஆனால் கீழே
அவர்கள் வைத்ததுதான் சட்டமாகிவிடுகிறது. ஆகவேதான் கூடுமானவரை
யில், இப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்படாமல் நியாயத்திற்கு மாறாக இருக்
கின்ற கீழ் அதிகாரிகள் மீது நியாயத்தை உணர்ந்து நடக்கின்ற மேல் அதிகாரி
கள் தக்க நடவடிக்கை எடுப்பதுதான் முறையாகும். அதற்கான கண்
காணிப்பு செலுத்துவதன் மூலமாகச் சீர்செய்வார்கள். மாண்புமிகு அங்கத்
தினர் அவர்கள் எடுத்துச் சொன்ன காரணமாக, அதிகாரிகளும் அந்த நிலை
மைகளைச் சரி செய்ய முன்வருவார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

1982 மார்ச் 30] (டாக்டர் இரா. நெடுஞ்செழியன்)

எல்லா உறுப்பினர்களுக்கும் செய்தித்தாள்கள் மூலமாக பேரவையிலே அறிவிக்கப்பட்டவைகள் எல்லாம் தெரியும் என்றால்கூட, முறைப்படி இந்த அவைக்கு அறிவிக்கப்பட்டு, இந்த அவையினுடைய குறிப்பிலே ஏற வேண்டுமென்பதற்காக அதை மீண்டும் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

மத்திய அரசு நிதி நெருக்கடியின் காரணமாக பிப்ரவரி 1982 வரையிலுள்ள நிலுவைத் தொகையை பொது சேமநல நிதியில் வைக்கும்படி ஆணையிட்டுள்ளது. 1982 மார்ச் முதல் ரொக்கமாக அகவிலைப் படி மத்திய அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் என்றும், பொது சேமநல நிதிக்கு 1—4—1982 முதல் வட்டி வழங்கப்படும் என்றும், 31—3—1982 வரையில் மேற்படி தொகையிலிருந்து முன் பணம் எதுவும் கொடுக்கப்படமாட்டாது என்றும் ஆணையிட்டுள்ளது. இது நாம் அங்கேயிருந்து கேட்டறிந்த விளக்கங்களிலிருந்து தரப்பட்டிருக்கிறது.

இங்கே மாண்புமிகு அங்கத்தினர்கள் பல பேர் எடுத்துத் தெரிவித்ததன் காரணமாகவும், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், அரசு சார்புடைய நிறுவனங்களிலே பணியாற்றுகின்றவர்கள் எல்லாம் அவர்கள் கருத்துக்களை எடுத்து வைத்ததன் காரணமாகவும், அதே முறையைக் கடைப்பிடித்தல் காரணமாகவும் நமக்குச் சில சங்கடங்கள் குறையும் என்றாலும்கூட, விவாதத்திற்குப் பிறகு அவர்களைச் சங்கடங்களுக்கு ஆளாக்க வேண்டாம் என்ற காரணத்தினாலேதான், "அவர்களுக்கு மனச் சோர்வு ஏற்படக்கூடும், அவர்களுக்கு கஷ்டங்கள் ஏற்படக்கூடும்" என்று சொல்லி, 3 தவணைகளுடைய அந்த ரொக்கத்தை ஏப்ரல் மாதத்திற்குள்ளாகவே தருவதாக முடிவு செய்திருக்கிறோம். இந்த முறைப்படி கணக்கு எடுத்துப் பார்த்தாலும், இந்த ஆண்டைப் பொறுத்தவரையில், 1982வது ஆண்டிலே கொடுப்பது ரூ. 7 கோடி ஆகவும், அடுத்த ஆண்டைப் பொறுத்த வரையில் ரூ. 48 கோடியாகவும் கூடுதல் செலவாகும். ஆக மொத்தம் ரூ. 55 கோடிக்கு அடுத்த ஆண்டு நிதியிலே நாம் வழிவகை காணவேண்டும். எப்படியாவது இந்தச் சுமையைத் தாங்கிக் கொண்டு வழிவகைகள் காணவேண்டுமென்ற அடிப்படையிலேதான் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருடைய நோக்கத்தை நிறைவேற்றியிருக்கிறோம். அந்த அளவில் 1—2—1981 முதல், முதல் தவணை அகவிலைப்படியும், 1—2—1982 முதல் இரண்டாவது தவணை அகவிலைப் படியும், 1—3—1982 முதல் மூன்றாவது தவணை அகவிலைப்படியும், 1—5—1982 முதல் நான்காவது தவணை அகவிலைப்படியும் தருவது என்று முடிவு செய்திருக்கிறோம். 1—4—1979 முதல் 1—10—1981 வரை, பதினொரு

இருக்கின்ற நிதிநிலைக்கு ஏற்பத்தான் வைத்திருக்கிறோம். சில பல மாதங்
தடவைகள் அகவிலைப்படிகள் வழங்கியிருக்கிறோம். இப்போது 10 தவணை
அகவிலைப்படியை வழங்குகின்ற சூழ்நிலையிலேயே இருக்கிறோம்.
இருக்கின்ற நிதிநிலைக்கு ஏற்பத்தான் வைத்திருக்கிறோம். சில பல மாதங்
களுக்கு மிச்சப்படுத்தினோம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
சொன்னார்கள். அதை மிச்சப்படுத்தி தனியாகப் பணம் 'வைத்திருக்க
வில்லை. அப்படி இருந்திருக்குமானால் கொடுத்திருக்கலாம். அப்படி மிச்சப்
படுத்தி வைக்கின்ற சூழ்நிலை இருந்தால், எவ்வளவோ காரியங்களுக்குச் செல
வழித்திருக்கலாம். இல்லாத காரணத்தினால்தான், இந்த நிலைமைக்கு வந்து
நாம் தள்ளிக் கொடுக்க வேண்டிய அவசியம் வந்தது. அப்படியிருந்தாலும்
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததற்கிணங்க, ஆசிரியர்களும், அரசு
ஊழியர்களும், மற்றவர்களும் அரசாங்கத்தினுடைய நிலைமையைக் கருதி,
நாட்டினுடைய நிலைமையைக் கருதி நெருக்கடியைக் கருதி, ஒத்துழைப்பு
கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலே, இந்த வேண்டுகோளை
விடுகின்ற அளவிலேதான் நிலைமைகள் இருக்கின்றன. அந்த அளவிலேதான்
நாம் கூடுமானவரையில் செய்கிறோம்.

"கொண்டையுள்ள சீமாட்டியாக இருந்தால், கோதி முடிவாள்" என்று
பழமொழி உண்டு. ஆனால் அப்படிப்பட்ட சூழ்நிலையில் அதிகமாகப் பணம்
இருக்குமானால், நாம் அதையும் செய்யலாம். ஆனால் "சேலையில்லை
என்று ஒரு சின்னாயி சிற்றன்னை வீட்டிற்குச் சென்றாளாம். ஆனால் அவள்
ஈச்சம்பாயைக் கட்டிக்கொண்டு எதிரே வந்தாளாம்" என்று ஒரு பழமொழி
உண்டு. நமக்கு நிதிதேவை என்று இப்படி ஏற்றுக் கொள்வதையெல்லாம்
தாருங்கள் என்று, டெல்லி அரசாங்கத்திலே நாம் கேட்கப் போவோமானால்,
"எனக்கு இருக்கின்ற பற்றாக்குறை இப்போது ஒன்பது ஆயிரம் கோடி
ரூபாயாக இருக்கிறது" என்று சொல்கின்றபோது, நாம் இருப்பதை வைத்து
இந்த அளவுக்குச் சமாளித்திருக்கிறோம் என்பதால், மாண்புமிகு அங்கத்
தினர்கள் இவற்றையெல்லாம் பொருட்படுத்தமாட்டார்கள் என்று கருதுகிறேன்.
அரசாங்கத்தினுடைய நிலைமைகளை, தன்மைகளை ஏற்றுக்கொள்வார்கள்
என்று கருதுகிறேன்.

அதுமாதிரி மாண்புமிகு அங்கத்தினர்கள் செய்தித் தாள்களிலே பார்த்து
அறிந்திருப்பார்கள். மேலவை பேரவை உறுப்பினர்கள் சம்பளம் ரூபாய்
250 அடிப்படை என்று இருந்ததை ரூபாய் 300ஆக நாம் உயர்த்தியிருக்
கிறோம். ஈட்டுப்படி எப்போதும்போல் ரூபாய் 400 ஆக இருக்கிறது.
தொலை பேசியைப் பொறுத்தவரையில், ரூபாய் 250 கொடுத்து வந்தோம்.

அதைத் தவிர மூன்று மாதத்திற்கொருமுறை வாடகைக் கட்டணம் 175 ரூபாய் என்று தனியாகக் கொடுத்து வந்தோம். அந்த வாடகைக் கட்டணத்தை இப்போது இரண்டு மாதத்திற்கொரு தடவை ரூபாய் 175 ஆக ஆக்கி

(பிற்பகல் 7-30)

அதோடு தொலைபேசிக் கட்டணமும் உயர்ந்துவிட்டது. இதையெல்லாம் சேர்த்தால், கூடுதல் வாடகைப் படியாக மாதம் ஒன்றுக்கு 44 ரூபாயும், தொலைபேசிக் கட்டணம் இருக்கிற அளவிலே மாதமொன்றுக்கு 48 ரூபாய். கூடுதலாக வருவதால், மொத்தத்தில் 92 ரூபாய் கூடுதலாகிறது என்று கணக்கிட்டு, 100 ரூபாயைக் கூடுதலாகச் சேர்த்து, 250 ரூபாய் என்பதை 350 ரூபாயாக வழங்க முடிவு செய்திருக்கிறோம். இனி அவரவர்கள் வாடகைப் பணத்தைக் கட்டிக்கொள்ளலாம், தொலைபேசி வைத்துக் கொண்டாலும் சரி, 'வைத்துக்கொள்ளாவிட்டாலும் சரி. ஏற்கெனவே தொலைபேசி வைத்துக் கொள்ளாதவர்களுக்கு 300 ரூபாய் என்றும், தொலைபேசி வைத்திருப்பவர்களுக்கு 250 ரூபாயும், தனியாக 175 ரூபாயும் கொடுக்கப்பட்டது. இப்போது இந்த வேறுபாடு வேண்டாமென்று சொல்லி, தொலைபேசி வைத்துக்கொள்வது, வைத்துக் கொள்ளாதது அவரவர்கள் விருப்பமென்று சொல்லி, வாடகைக்குக் கணக்கு கொடுத்து, கேட்டு வாங்கித் தருவதில் பல்வேறு இடர்பாடுகள் என்று அறிந்து, மொத்தமாக 350 ரூபாய் தொலைபேசிப் படியாகத் தரலாமென்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. இப்போது மொத்தமாக 1,050 ரூபாய் வருகிறது. இரண்டொரு மாநிலங்களைத் தவிர மற்ற மாநிலங்களில் மொத்தமாகத் தருவது 1,000 ரூபாய் அளவிற்குத் தான் இருக்கிறது. மராட்டிய மாநிலத்தில் 1,300 ரூபாய் அளவிற்கு இருக்கிறது. பக்கத்திலுள்ள கர்நாடகத்தில் 1,250 ரூபாய் அளவிற்குப் போயிருக்கிறது. மற்றைய மாநிலங்கள் அத்தனையிலும் 1,000 ரூபாய் அளவில்தான் அமைந்திருக்கிறது. இதிலே மிகக் குறைவாக இருப்பது மேற்கு வங்கத்தில் தான். அங்கே உறுப்பினர்களுக்கு மொத்தமாகத் தருவது 450 ரூபாய்தான். அங்கே ஒரு நாளைக்குப் படியாக 20 ரூபாய்தான் தருகிறார்கள். அடுத்தபடியாக, கேரளாவில் கொஞ்சம் குறைத்துத்தான் தருகிறார்கள். அங்கே 750 ரூபாய் தருகிறார்கள். திருவனந்தபுரத்தில் இருந்தால் ஒரு நாளைக்குப் படி 25 ரூபாய், வெளி ஊர்களுக்குச் சென்றால் ஒரு நாளைக்குப் படி 35 ரூபாய் என்று இங்கே இருக்கிறது. அந்த வகையில் பார்க்கும்போது, நாம் படியாக 50 ரூபாய் தருவது என்பது

பாராளுமன்றத்தில் 51 ரூபாய் தருகிறார்கள். பல்வேறு குறைவல்ல. 50, 40, 30 ரூபாய் என்று தருகிறார்கள். எனவே நாம் மாநிலங்களில் பல மாநிலங்களுக்குக் கூடுதலாக தந்திருப்பது ரொம்பக் குறைவல்ல. சில மாநிலங்களுக்குக் கீழே இருக்கிறதென்றாலும், நிதி இருக்கிறது, வசதிகளைப் பொறுத்து அப்படி வைத்திருக்கிறோம்.

ஒரு குறிப்பைக் குறிப்பிட்டுச் சொன்னேன். ஓய்வூதியம் தரும்போது பாராளுமன்ற உறுப்பினர்களாகவோ, அதாவது, மறுபடியும் சட்டமன்ற அந்தக் காலம் வரை உறுப்பினர்களாகவோ ஆனால், அவர்களுக்கு வேலை ஓய்வூதியம் நிறுத்தி வைக்கப்படும். அல்லது ஒரு வாரியத்தில் வைக்கப்படும். பார்த்து, சம்பளம் வாங்கினால், அப்போது நிறுத்தி மேலவையிலும், மற்ற வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் தியாகிகள் ஓய்வூதியமோ, பேரவையிலும் எடுத்துச் சொன்னதற்கிணங்க, அரசாங்கத்திலே வேலை உடல் ஊனமுற்றோர் ஓய்வூதியமோ அல்லது அதைக் கணக்கில் எடுத்துக்கொள்ள பார்த்து பென்ஷன் வாங்கினாலோ, உதாரணத்திற்குச் வேண்டாமென்று நான் அறிவித்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடேசன் இருக்கிறார்— சொல்கிறேன். இப்போது அவர் அவையில் இல்லை—அவர் ஐட்ஜ்-ஆக இருந்து ஓய்வூதியம் பெறுகிறார். சட்டமன்ற உறுப்பினருக்கான ஓய்வூதியத்தைப் பெறும்போது, சட்டமன்ற அதைக் கணக்கில் எடுப்பதா, வேண்டாமா என்றால், ஓய்வூதியம் உறுப்பினராக இருக்கும்போதே அதை வாங்குகிறபோது, அந்தப் பென்ஷனைக் வாங்கும்போது அதை வாங்குவதில் தவறில்லை. சொல்லியிருக்கிறேன். கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டாமென்று உறுப்பினராக மறுபடியும் சட்டமன்ற உறுப்பினராக, பாராளுமன்ற ஓய்வூதியம் ஆனால் ஓய்வூதியம் கிடையாது. அல்லது பாராளுமன்றம். அது குறைவாக தந்தால், 500 ரூபாய் தந்தால், இது வேண்டாம். அளவிற்கு இருந்தால் மீதியைத் தந்து, 500 ரூபாயாக்கும் எடுத்துக்கொள்ள வைத்திருக்கிறோம். மற்றவைகளைக் கணக்கில் வேண்டாமென்று சொல்லியிருக்கிறோம்.

அடுத்து, ஆண் உறுப்பினர்கள் துணையாக ஒருவரைப் பெற வேண்டுமென்று உறுப்பினர்கள் சொன்ன அடிப்படையில், நான் வேடிக்கையாகத்தான் சொன்னேன், யாரையும் களங்கப்படுத்த வேண்டுமென்ற தன்மையில் சொல்லவில்லை. அப்படிப்பட்ட சந்தேகத்திற்கு இடம் கொடுக்க வேண்டாம். பனை மரத்தின்கீழ் நின்று பாலைக்

குடித்தாலும் கூட, நாடு பால் குடித்ததாகக் கருதாது., வேறு ஏதோ குடிக்கிறான் என்றுதான் எண்ணுவார்கள் என்பதால், ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்றுதான் சொன்னேன். வேடிக்கையாகச் சொன்னேன், வினையாகச் சொல்லவில்லை என்று குறிப்பிட விரும்புகிறேன். துணையின்றி நெடுந்தொலைவு செல்லேல் என்ற பழமொழி உண்டு. மாண்புமிகு உறுப்பினர்களின் வேண்டுகோளை அந்த வகையில் நிறைவேற்ற வேண்டுமென்பதற்காகத்தான் ஒருவரைத் துணையாக அழைத்துச் செல்லலாமென்ற தன்மையை வைத்திருக்கிறோம்.

ரெயில்வே கட்டணம் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதற்கிணங்க, ஒரு முடிவெடுக்கப்பட்டது. ஏற்கெனவே 2,500 ரூபாய் மதிப்புள்ள கூப்பன்கள் தந்திருக்கிறோம். ரெயில்வே கட்டணம் உயர்ந்துள்ளதைக் கணக்கிட்டபோது, சராசரி 14 சதவிகிதம் உயர்த்தியிருக்கிறார்கள். அந்தக் கணக்கின்படி 350 ரூபாய் கூடுதலாகிறது. ஆக 2,850 ரூபாய் ஆகிறது. போனால் போகட்டும் என்று சொல்லி, 150 ரூபாயைக் கூடுதலாகச் சேர்த்து (சிரிப்பு), அதை 3,000 ரூபாயாக்கி, அந்த அளவிற்கு ரயில்வே கூப்பன்கள் தரலாமென்று முடிவெடுத்து, தருகிறோம். இப்போதிருக்கும் நிதி வசதிகளுக்கேற்ப இந்த முடிவெடுத்திருக்கிறோம். என்றாலும் கூட இந்த வசதி வாய்ப்புகள் பெருக வேண்டுமென்பதும், மாண்புமிகு உறுப்பினர்களுடைய மரியாதைகள் காப்பாற்றப்படும் அளவிற்கு சூழ்நிலைகள் ஏற்பட வேண்டுமென்பதும்தான் அரசின் எண்ணம். அதைத்தான் பலரும் எடுத்துக் காட்டினார்கள். அதற்கான சூழ்நிலைகளை ஏற்படுத்த, ஏற்படுத்தத்தான் மன்றத்திற்குப் பெருமை. மன்றத்திற்குப் பெருமை ஏற்பட வேண்டுமென்றால், உறுப்பினர்களாலதான் ஏற்பட வேண்டும். உறுப்பினர்களால் பெருமை ஏற்பட்டால்தான் நாடு அதனால் பெருமை பெறும், புகழ் பெறும். இந்த அவையைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன மாதிரி, அந்த மரபு, அந்த பண்பு காப்பாற்றப்பட வேண்டுமென்பது பாராட்டுக்குரியது. என்றென்றும் தமிழகத்தை எடுத்துக் காட்டாகக் கொள்ளுமளவிற்கு நாம் உணர்ச்சிவயப்படாமல் இருக்க வேண்டும். அந்த வகையில் மன்றம் நடைபெற விருப்பம் செலுத்துகிறோம். வாதிட்டு கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளலாம். ஒருவருக்கொருவர் கருத்து வேறுபாடுகளுக்கு மதிப்பளித்து, மனிதனுக்கு மனிதன் மதிக்கிற பண்பையும், மனிதனுக்கு மனிதன் காட்டுகிற அன்புள்ளத்தையும், மனிதனுக்கு மனிதன் காட்டுகிற மரியாதையையும் வளர்க்க வேண்டுமென்று

மறைந்த திரு. வி. கல்யாணசுந்தரனார் அவர்கள் அடிக்கடி எடுத்துச் சொல்லுவார்கள். கருத்து வேறுபாடுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும், அதே நேரத்தில் மனிதத் தன்மைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும், மனிதனுக்கு மனிதன் காட்டுகிற மரியாதைக்கு மதிப்பளிக்க வேண்டும் என்பதற்கு நாட்டு மக்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக சட்டமன்றப் பேரவை, மேலவை உறுப்பினர்கள் நடந்துகொள்ளும் தன்மைகள் ஏற்படுமானால், நாடு பாராட்டும், போற்றும். ஆனால் விவாதங்களிலே சூடு இருக்கக்கூடாது, நல்ல ஒளி இருக்கலாம். 'லைட்' இருக்க வேண்டும் "ஹீட்" இருக்கக் கூடாது. அந்த வகையிலே பல்வேறு தன்மைகளைச் செய்யலாம். உறுப்பினர்கள் நிரம்ப கருத்துக்களை எடுத்துச் சொல்லி, அரசுக்குத் துணை புரியும் அளவிற்கு இருக்கிறார்கள். "The ruling part has its way. The opposition has its say". என்று ஜனநாயகத்தைப் பொறுத்தவரை சொல்லுவார்கள். ஆகவே ஆளும் கட்சி எதையும் செய்யும் வாய்ப்பு பெற்றிருக்கிறது. குற்றம், குறைகளைச் சுட்டிக் காட்டும் வாய்ப்பு, எதிர்க் கட்சிகளுக்கு இருக்கிறது. ஆளும் கட்சி குற்றம் குறைகளைச் சுட்டிக்காட்ட இயலாது, சுட்டிக்காட்ட முடியாது.

'இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்'

என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறார். இடித்துச் சொல்லுகின்றவர் பக்கத்தில் இல்லாவிட்டாலும், இடித்துரைக்கிற ஒருவரைப் பக்கத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று குறிப்பிட்டார் வள்ளுவர். அப்படி ஒருவர் இல்லாமல் போனால் அந்த நாட்டை அழிக்க வேறு நாட்டிலிருந்து படையெடுத்து வர வேண்டிய அவசியமில்லை. அப்படி ஒருவர் இல்லாமலேயே படையெடுத்து வர வேண்டிய அவசியமில்லை. அப்படி ஒருவர் இல்லாமையே அவனை அழித்துவிடுமென்று 2,000 ஆண்டுகளுக்கு முன்பு வள்ளுவர் சொல்லியிருக்கிறார். அந்த வகையில் எதிர்க் கட்சியினர் எடுத்துச் சொல்லும் கருத்துக்கள் அரசுக்கு வலியூட்டும் வகையிலும், நிர்வாகத்தைச் செம்மைப்படுத்தும் வகையிலும் அமைய வேண்டும். பொதுக் கூட்டத்தில் பேசுகிற முறை ஒன்று; வகுப்பிலே சொல்லிக் கொடுக்கும் முறை இன்னொன்று. வழக்கு மன்றத்திலே வாதாடும் முறை மற்றொன்று. இந்த சட்டமன்றப் பேரவை, மேலவையில் வாதாடும் முறை ஒன்று. இந்த நான்கிற்கும் வேறுபாடுகளைப் புரிந்துகொண்டால், அதன் மூலம் சட்ட மன்றத் தன்மைகள் கூட வரும். சில சமயங்களில் பொதுக் கூட்டமாக மாறி

விடுவதால், சிலபல சங்கடங்கள் ஏற்படுகின்றன. அந்த நிலைமைக்கு இடம் கொடுக்காத அளவிற்கு, இந்த மன்றத்தின் பெருமையை, புகழைக் காப்பாற்றும் அளவிற்கு எல்லோருடைய ஒத்துழைப்பும் இருக்க வேண்டுமென்று கேட்டு, நிதி ஒதுக்கீடு மசோதாவின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு, எல்லோரும் நல்லாதரவு தந்ததற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, அமைகிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : துணைத் தலைவரவர்களே, அரசு ஊழியர்களுடைய பயணச் சலுகை பற்றி ஒன்றுமே சொல்லவில்லை. இரண்டு வழிக்குக் கொடுக்க வேண்டும், பேருந்தில் செல்ல அனுமதிக்க வேண்டுமென்று சொன்னேன். அதனால் பெரிய நஷ்டமில்லை. அது பயன்படுத்த முடியாமல் இருக்கிறது. அதைக் கொஞ்சம் 'கன்சிடர்' செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவரவர்களே, சென்ற ஆண்டு அதை அறிவித்தோம். அதில் ஏற்படும் விளைவு என்ன என்று பார்க்கிறோம். அதை மீண்டும் பரிசீலனை செய்யும்படி கேட்கிறார்கள். செலவாகிற பரிசீலனையாகத்தான் அது இருக்கிறது. அதைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன். பலரும் அதைப்பற்றி விண்ணப்பம் தந்திருக்கிறார்கள். அதைப்பற்றி ஆராய்கிறோம். என்ன முடிவெடுக்கலா மென்று அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1982 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1982) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பரிந்துரை ஏதுமில்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே,

“சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1982 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1982) திருப்பியனுப்பப்பட வேண்டும்”

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

“சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1982) திருப்பியனுப்பப்பட வேண்டும்”.

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் 2—4—1982 வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும்

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 7-40)

7. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

Nil.

B. *Reports, Notifications and Other Papers.*

* 148. Policy Note on Miscellanous Relief and Rehabilitation of Indians Overseas and Refugees and Evacuees. (Tamil & English.)

* 149. Performance Budget on Rehabilitation Department, 1982–83. (Tamil & English.)

* 150. Policy and Programmes of the Handlooms and Textiles, 1982–83. (Tamil & English.)

* 151. Performance Budget on Handlooms and Textiles 1982-83. (Tamil & English.)

* 152. Demand No. 42-Policy Note on Pensions and other Retirement Benefits. (Tamil & English.)

* 153. Demand No. 56-Policy Note on Loans and Advances by the State Government. (Tamil & English.)

* 154. Twelfth Report of the Committee on Estimates on the action taken by the Government on the observation contained in the Report on Civil Supplies (Part-II). (Tamil.)

155. Report of the Select Committee on the Tamil Nadu Co-operative Societies Bill, 1980 (L.A. Bill No. 45 of 1980.)

156. The Tamil Nadu Appropriation (No. 2) Bill, 1982 (L.A. Bill No. 26 of 1982), as passed by the Assembly.

157. Thirty-Sixth Report of the Committee on Government Assurances.

---

* Circulated to all M.L.Cs. on 29th March 1982.

இணைப்பு I

[748 ஆம் பக்கத்தில் இனம் 3(1)க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

மைய சமையற்கூடங்கள் செயல்படாத பகுதிகளில் உள்ள தொடக்கப் பள்ளி நண்பகல் உணவு மையங்களில், தனியார் பள்ளி மையங்களுக்கு அந்தந்த உள்ளாட்சி மன்றம் 5 (ஐந்து) காசு பங்குத் தொகையைத் [அதாவது ஒரு குழந்தைக்கு நாளைக்கு 5 (ஐந்து காசு விதம்) 200 நாட்களுக்கு] தர வேண்டும் என்பதை 1—10—1979 முதல் அமுலாக்கி 28—9—1979 அன்று அரசு ஆணை வெளியிட்டது. அவ்வாறு கொடுப்பதனால் அந்த உள்ளாட்சி மன்றங்களுக்கு ஏற்படும் செலவை 'ஏற்பளிக்கப்பட்ட' செலவினமாகக் கருதி, தொடக்கக் கல்விக்கான அரசு மானியம் பெறும் பொழுது கணக்கில் எடுத்துக்கொள்ளலாம் என்றும் ஆணையிடப்பட்டது.

சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியம் 31—12—81-க்குப் பின் மேற்சொன்ன 5 காசு பங்குத் தொகையைத் தராமல் நிறுத்திவிட்டதால், அவ்வொன்றியத்திலுள்ள தனியார் பள்ளிகள் 1—2—82 முதல் மதிய உணவு தருவதை நிறுத்தி விட்டதாகவும் ஆனால் இதுபற்றி ஊராட்சி ஒன்றியத்திடம் விளக்கம் கோரியதில், அண்மையில் அப்பங்குத் தொகையை ஊராட்சி ஒன்றியம் அப்பள்ளிகளுக்கு கொடுத்துவிட்டதால் தற்பொழுது அப்பள்ளிகளில் மதிய உணவு குழந்தைகளுக்கு தொடர்ந்து அளிக்கப்படுவதாக அறிக்கை வந்துள்ளது.

ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் 1—6—1981 முதல் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டு விட்டபொழுதிலும், ஊராட்சி ஒன்றியங்கள் தமது பகுதிகளிலுள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கும், தனியார் பள்ளிகளுக்கும் முன்னர் தந்து வந்தது போல 5 காசு பங்குத் தொகையைத் தொடர்ந்து தந்து வர வேண்டும் என்று 23—7—1981 நாளிட்ட கல்வித் துறை கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

இணைப்பு II

[750 ஆம் பக்கத்தில் இனம் 3(2)க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

வடாற்காடு மாவட்டம், அரக்கோணம் வட்டத்திலுள்ள கோணலம் கிராமத்தில் ஏறத்தாழ 300 வன்னிய ரெட்டியார்களே பெரும்பாலும் வாழ்ந்து வருகின்றனர். விவசாயம் அவர்களின் முக்கிய தொழிலாகும். இந்த கிராமத்தின் ஆதி திராவிடர் குடியிருப்பு, கிராமத்திலிருந்து ஏறத்தாழ 150 கெஜ தூரத்தில் உள்ளது. அதில் ஏறத்தாழ 13 வீடுகள் உள்ளன.

4—10—81 அன்று சுமார் 80 வயதுடைய நாகம்மாள் என்ற ஆதி திராவிட மூதாட்டி நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்டார். வழக்கமாகப் பிணங்களைப் புதைக்கும் இடத்தில் எங்கு பார்த்தாலும் முட்புதர்கள் இருப்பதாலும், அவ்வூர் தலைவர் அருகிலுள்ள ஓடைப்புறம்போக்கில் புதைப்பதற்கு உறுதிமொழி அளித்திருந்ததாலும், அங்கு அவரது சடலத்தைப் புதைக்க மறுத்துவிட்டனர். இதற்கு அருகிலுள்ள சிற்றூரைச் சேர்ந்த சாதி இந்துக்கள் ஆட்சேபணை தெரிவித்தனர். அரக்கோணம் தாசில்தார் கிராமத்திற்குச் சென்று, இரு தரப்பினரையும் சமரசம் செய்தார். அவரது கட்டளையின் பேரில் சடலம் புறம்போக்கு நிலத்தில் புதைக்கப் பட்டது. மேலும் ஆதி திராவிடர்களுக்கென தனி இடுகாடு ஒதுக்கப்படும் என்றும் உறுதிமொழியளிக்கப்பட்டது. புதிதாக ஏற்படுத்தப்பட்ட இடுகாடு கஞ்சமேட்டிற்கு அருகில் இருப்பதாலும், இவ்வழியாக கோணலத்திலுள்ள பள்ளிக்கு பிள்ளைகள் செல்ல வேண்டியிருப்பதாலும் கோணலம் கிராமத்தைச் சேர்ந்த சில வன்னிய ரெட்டியார்களும் கஞ்சமேட்டைச் சேர்ந்த தேசவ ரெட்டியார்களும் இந்த முடிவிற்கு உடன்படவில்லை. இந்த சம்பவம் கோணலத்தைச் சேர்ந்த ஆதி திராவிடர்களுக்கும் ரெட்டியார்களுக்குமிடையே கசப்புணர்வை ஏற்படுத்தியது. இந்த சம்பவத்திற்குப் பிறகு தங்களுக்கு வழக்கமாகத் தரப்படும் வேலைகள் தரப்படுவதில்லையென்றும், தாங்கள் தரக் குறைவாக நடத்தப்படுவதாகவும் ஆதி திராவிடர்கள் முறையிட்டனர்.

15—1—1982 அன்று கோணலம் கிராமத்தைச் சேர்ந்த செல்லப்ப ரெட்டியார் என்பவர் இறந்துவிட்டார். மேளம் அடிப்பதற்கு காலனி ஆட்கள் அழைக்கப்பட்டனர். தங்களுக்கு வேலை தர ரெட்டியார்கள் மறுத்ததை மனதில் கொண்டு ஆதி திராவிடர்கள் இதைச் செய்ய மறுத்து விட்டனர். ஒரே ஒரு ஆதி திராவிடர் மட்டும் இறந்தவருக்கு மாலையணிவித்து மரியாதை செய்தார். இது காலனி மக்களின் எதிர்ப்புக்கு

அவர்கள் உள்ளானது. இது ரெட்டியார்களுக்குத் தெரிய வரவே, குப்புசாமி ரெட்டி என்பவரின் கீழ் ஒரு கூட்டமாகக் கூடிக்கொண்டு கிராமத்திற்கு வந்து ஆதி திராவிடர்களை வினவினர். அதன் பிறகு அவர்கள் காலனியிலுள்ள ஆதி திராவிடர்களை குழாய்கள், கற்கள் முதலியவற்றைக் கொண்டு தாக்கி, இதனால் 5 ஆதி திராவிடர்களுக்கு சிறு காயங்கள் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. இதற்கு எதிர் நடவடிக்கை எதும் இல்லை. இருப்பினும் அரக்கோணம் புறக் காவல் நிலைய குற்ற என் 11/82-ல் இ.பி.கோ. பிரிவுகள் 147, 324 மற்றும் 323-ன் கீழ் 16—1—1982 அன்று வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது.

அரக்கோணம் வட்டாட்சியர், துணைக் காவல் ஆய்வாளருடன் கிராமத்திற்கு உடனே சென்று உடன்பாடு செய்து வைத்தார்.

17—1—1982 அன்று கோணலம் ஆதி திராவிடர்கள் அரக்கோணம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வந்து மாலை 5 மணி வரை அதன் முன்பு அமர்ந்திருந்தனர். அவர்களைச் சமாதானப்படுத்த வட்டாட்சியர் மேற்கொண்ட முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. 20—1—1382 அன்று இராணிப்பேட்டை கோட்டாட்சியர், அரக்கோணம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வந்து ஆதி திராவிடர்களைச் சந்தித்தார். ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. இதில் காலனியைச் சேர்ந்த 30 பேர் கலந்து கொண்டனர். குற்றவாளிகள் மீது அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்று ஆதி திராவிடர்களுக்கு கோட்டாட்சியர் அறிவுரை வழங்கியதுமன்றி, ஆதி திராவிடர்களுக்குத் தேவைப்படுகின்ற அடிப்படை வசதிகள் செய்து தரப்படும் என்றும் உறுதியளித்தார். இருப்பினும் ஆதி திராவிடர்கள் தங்கள் கிராமத்திற்கு அவர்கள் திரும்பிச் செல்லப் போவதில்லை என்றும், அருகிலுள்ள முள்வாய் என்ற கிராமத்தில் குடியேறப் போவதாகவும் தெரிவித்தனர். மேலும் அவர்கள் முள்வாயில் தங்களுக்கு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட வேண்டும் என்றும், வீடுகள் மற்றும் அடிப்படை வசதிகள் செய்து தரப்பட வேண்டுமென்றும் விருப்பம் தெரிவித்தனர். கோட்டாட்சியர் மீண்டும் கிராமத்திற்குச் சென்றிருந்து இரண்டு பிரிவினரையும் சமாதானக் கூட்டம் ஒன்றிற்கு 21—1—1982 அன்று வருமாறு அறிவுறுத்தினார். இக்கூட்டத்திற்கு சாதி இந்துக்கள் மட்டுமே வந்திருந்தனர்.

இக்கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது திரு. முருகேசன் என்பவரின் மனைவி மல்லிகா, 23 வயதுள்ளவர், 16—1—1982 அன்று 4 பேர்கள் தன்னை கற்பழித்துவிட்டதாக முறையிட்டார். அவரிடமிருந்து

காவல் துறையினர் அறிக்கை பெற்று அரக்கோணம் புறக் காவல் நிலைய குற்ற என். 15/82-ல் இ.பி.கோ. பிரிவுகள் 448 மற்றும் 476-ன் கீழ் வழக்கு பதிவு செய்தனர். கற்பழித்ததாகக் கூறப்பட்ட நான்கு பேர்களில் மூவரை 21—1—1982 அன்று அரக்கோணம் புறக்காவல் நிலைய ஆய்வாளர் கைது செய்து, காவலில் வைத்துள்ளார்.

22—1—1982லிருந்து 25—1—1982 வரை கோணலம் ஆதி திராவிடர்கள் அரக்கோணம் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு தொடர் உண்ணாவிரதம் இருந்தனர். 26—1—1982 அன்று அவர்கள் தங்கள் உடைமைகளுடன் முள் வாய்க்குச் சென்றுவிட்டனர். ஆதி திராவிடர்களுக்கும் அவர்களது அனுதாபிகளுக்கும் புதிய காலனியில் குடியமர்த்துவது என்பது சாத்தியமல்ல என்பதால் ஆதி திராவிடர்களுக்குத் தேவையான எல்லா உதவிகளையும் பாதுகாப்பையும் அவர்கள் கோணலத்திற்கு மீண்டும் திரும்பி வந்தால் அரசு அளிக்கும் என்று தம்மை வேலூரில் சந்தித்த ஆதி திராவிடர்களுக்கும் அவர்களது அனுதாபிகளுக்கும் மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்.

25—2—1982 அன்று மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தியபடி, கோட்டாட்சியர் மீண்டும் முள்வாய்க்குச் சென்றார். நீண்டதொரு விவாதத்திற்குப் பின் ஆதி திராவிடர்கள் தாங்கள் இன்னும் இரண்டு நாட்களுக்குள் கோணலத்திற்கு திரும்பிச் செல்வதற்கு உடன்பட்டனர், எனினும் அவர்கள் தங்கள் உறுதிமொழியை நிறைவேற்றவில்லை.

2—3—82 அன்று கோணலம் மற்றும் முள்வாய் கிராமங்களுக்கு மாவட்ட ஆட்சியர் தாமே நேரில் சென்றிருந்து கோணலம் கிராமத்திற்குத் திரும்பிச் செல்லுமாறு அவர்களை உணர்த்துவித்தார். மேலும் அனைத்துக் கட்சியினரின் கூட்டம் ஒன்றையும் அவர் கூட்டி அவர்களை இழப்பீடு பற்றிய முக்கிய முறையீட்டினை உடனடியாக கவனிக்க தக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

3—3—1982 அன்று ஆதி திராவிடர் நல அமைச்சர் மாவட்ட ஆட்சியருடன் கோணலம் கிராமத்திற்குச் சென்றிருந்தார். ஆதி திராவிடர்களுடனும் ரெட்டியார்களுடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தி ஒரு உடன்பாட்டினை ஏற்படுத்தினார், ஆதி திராவிடர்களுக்கு ரெட்டியார்களின் கீழ் வேலை செய்யவும் உறுதியான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் வேலையும், ஒருங்கிணைந்த ஊரக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கடன்களும் ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஆதி திராவிடர்கள் இவற்றிற்கெல்லாம் உடன்பட்டே இவ்விஷயம் இறுதியில் முடிவு வைக்கப்பட்டிருக்கிறது.

இதுமட்டுமின்றி அங்கே அவர்கள் தெரிவித்திருந்த இடுகாடு பிரச்னையும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கிறது. மேலும் அவர்களது குறைபாடுகள் ஏதாவது இருக்குமேயானால் அவற்றினை உடனடியாகக் களைய வேண்டுமென்றும் மாவட்ட ஆட்சித் தலைவரும் கேட்டுக் கொள்ளப் பட்டிருக்கின்றார்.

ஆதி திராவிடர்கள் தற்போது கோனலம் கிராமத்திலேயே வசித்து வருகிறார்கள். நிலைமை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. கிராமத்தில் அமைதி நிலவுகிறது.

இணைப்பு III

(34 ஆம் பக்கத்தில் இனம் 6(1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

L.A. Bill No. 22 of 1982.

(As passed by the Assembly) :

A Bill to provide for the appropriation of certain further moneys out of the Consolidated Fund of the State for the service of the financial year which commenced on the 1st April 1981.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-third Year of the Republic of India as follows :—

1. *Short title.*—This Act may be called the Tamil Nadu Appropriation Act, 1982.

2. *Supplementary appropriation out of the Consolidated Fund for the financial year which commenced on the 1st April* 1981.—The State Government may appropriate out of the Consolidated Fund of the State for the financial year which commenced on the 1st April 1981, a further sum not exceeding Five hundred and two crores, sixty-seven lakhs and thirty-four thousand rupees being moneys required to meet —

(*a*) the supplementary grants made by the Tamil Nadu Legislative Assembly for that period, as set forth in column (3) of the Schedule ; and

(*b*) the supplementary expenditure charged on the Consolidated Fund of the State for that period, as set forth in column (4) of the Schedule.

THE SCHEDULE.

(*See* section 2.)

Demand number.	Services and purposes.	Sums not exceeding. Voted by the Legislative Assembly.	Sums not exceeding. Charged on the Consolidated Fund of the State.	Total.
(1)	(2)	(3)	(4)	(5)
		RS.	RS.	RS.
1	Land Revenue Department ..	39,14,000	..	39,14,000
2	State Excise Department ..	68,50,000	..	68,50,000
3	Motor Vehicles Acts—Administration	46,10,000	2,81,000	48,91,000
4	General Sales Tax and Other Taxes and Duties—Administration	1,55,53,000	..	1,55,53,000
5	Stamps—Administration ..	11,15,000	..	11,15,000
6	Registration	20,12,000	..	20,12,000
7	State Legislature	30,90,000	3,17,000	34,07,000
8	Elections	33,86,000	..	33,86,000
9	Head of State, Ministers and Headquarters Staff ..	1,83,51,000	24,99,000	2,08,50,000
10	*	*	*	*
11	District Administration ..	6,000	56,000	62,000
12	Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959	15,84,000	10,000	15,94,000
13	Administration of Justice ..	1,14,71,000	4,86,000	1,19,57,000
14	Jails	13,47,000	..	13,47,000
15	Police	6,71,76,000	65,000	6,72,41,000
16	Fire Services	83,05,000	..	83,05,000
17	Education	20,63,78,000	..	20,63,78,000
18	Medical	6,51,28,000	..	6,51,28,000
19	Public Health	5,50,17,000	..	5,50,17,000
20	Agriculture	29,93,56,000	..	29,93,56,000
21	Fisheries	32,39,000	..	32,39,000
22	Animal Husbandry	2,06,76,000	..	2,06,76,000
23	Co-operation	79,[illegible]0,59,000	..	79,60,59,000
24	Industries	2,[illegible],74,000	..	2,89,74,000
25	Cinchona	11,83,000	..	11,83,000
26	Handlooms and Textiles ..	6,81,80,000	..	6.84,80,000
27	Khadi	2[illegible],02,000	..	29,02,000
28	Community Development Projects, etc.	23,73,11,000	51,000	23,73,62,000
29	Labour including Factories ..	2,000	..	2,000
30	Social Welfare	3,000	..	3,000
31	Welfare of the Scheduled Tribes and Castes, etc. ..	10,89,26,000	99,000	10,90,25,000
32	Welfare of Backward Classes, etc.	1,35,000	..	1,35,000

Demand number.	Services and purposes.	Sums not exceeding. Voted by the Legislative Assembly.	Sums not exceeding. Charged on the Consolidated Fund of the State.	Total.
(1)	(2)	(3)	(4)	(5)
		RS.	RS.	RS.
33	Housing	2,000	..	2,000
34	Urban Development	11,39,49,000	..	11,39,49,000
35	Civil Supplies	1,33,38,000	90,000	1,34,28,000
36	Irrigation	3,66,30,000	..	3,66,30,000
37	Public Works—Buildings ..	65,39,000	7,82,000	73,21,000
38	Public Works—Establishment and Tools and Plant ..	1,69,94,000	..	1,69,94,000
39	Roads and Bridges	1,63,98,000	53,47,000	2,17,45,000
40	Road Transport Services and Shipping	47,05,000	1.98,000	49,03,000
41	Relief on account of National Calamities	2,46,42,000	..	2,46,42,000
42	Pensions and other Retirement Benefits	11,72,000	..	11,72,000
43	Miscellaneous	3,000	98,000	1,01,000
44	Stationery and Printing ..	4,82,06,000	..	4,82,06,000
45	Forest Department	1,78,22,000	17,000	1,78,39,000
46	Compensations and Assignments	..	24,000	24,000
47	Information, Tourism and Film Technology	40,03,000	..	40,03,000
48	Capital Outlay on Agriculture.	1,49,65,000	36,000	1,50,01,000
49	Capital Outlay on Industrial Development	4,15,38,000	11,15,000	4,26,53,000
50	Capital Outlay on Irrigation	13,000	..	13,000
51	Capital Outlay on Public Works—Buildings. ..	13,000	..	13,000
52	Capital Outlay on Roads and Bridges	6,86,91,000	..	6,86,91,000
53	Capital Outlay on Road Transport Services and Shipping.	4,10,36,000	..	4,10,36,000
54	Capital Outlay on Forest ..	71,70,000	..	71,70,000
55	Miscellaneous Capital Outlay.	11,86,42,000	4,03,000	11,90,45,000
56	Loans and Advances by the State Government ..	1,87,57,50,000	..	1,87,57,50,000
	Public Debt—Repayment ..	..	50,00,00,000	50,00,00,000
	GRAND TOTAL ..	**4,51,47,60,000**	**51,19,74,000**	**5,02,67,34,000**

I certify that this is a Money Bill.

Fort St. George,
Madras,
Date : 27th March 1982.

K. RAJARAM,
Speaker,
Tamil Nadu Legislative Assembly.

இணைப்பு IV

(35 ஆம் பக்கத்தில் இனம் 6(2) க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

L.A. Bill No. 26 of 1982.

(As passed by the Assembly)

A Bill to provide for the Appropriation of moneys out of the Consolidated Fund of the State for the service of the financial year commencing on the 1st April 1982.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-third Year of the Republic of India as follows :—

1. *Short title.*—This Act may be called the Tamil Nadu Appropriation (No. 2) Act, 1982.

2. *Appropriation out of the Consolidated Fund for the financial year commencing on the 1st April* 1982.—The State Government may appropriate out of the Consolidated Fund of the State for the financial year commencing on the 1st April 1982, a sum not exceeding two thousand one hundred and thirty-eight crores, sixty-two lakhs and ten thousand rupees, being moneys required to meet—

(*a*) the grants made by the Tamil Nadu Legislative Assembly for that year, as set forth in column (3) of the Schedule ; and

(*b*) the expenditure charged on the Consolidated Fund of the State for that year, as set forth in column (4) of the Schedule.

THE SCHEDULE.

(*See* section 2.)

Demand number.	Services and purposes.	*Sums not exceeding* Voted by the Legislative Assembly.	Charged on the Consolidated Fund of the State.	Total.
(1)	(2)	(3)	(4)	(5)
		RS.	RS.	RS.
1	Land Revenue Department ..	12,07,41,000	..	12,07,41,000
2	State Excise Department ..	2,68,44,000	..	2,68,44,000
3	Motor Vehicles Acts—Administration	2,10,46,000	..	2,10,46,000
4	General Sales Tax and other Taxes and Duties—Administration ..	9,24,62,000	30,000	9,24,92,00
5	Stamps—Administration ..	96,74,000	..	96,74,000
6	Registration	4,03,06,000	1,000	4,03,07,000
	Debt Charges	..	1,24,26,77,000	1,24,26,77,000
7	State Legislature	1,24,49,000	3,62,000	1,28,11,000
8	Elections	30,27,000	..	30,27,000
9	Head of State, Ministers and Headquarters Staff ..	20,55,89,000	1,01,76,000	21,57,65,000
10	Milk Supply Schemes ..	86,50,000	..	86,50,000
11	District Administration ..	23,41,17,000	82,000	23,41,99,000
12	Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959	2,21,79,000	30,000	2,22,09,000
13	Administration of Justice ..	9,20,58,000	1,29,44,000	10,50,02,000
14	Jails	6,47,66,000	1,000	6,47,67,000
15	Police	69,50,74,000	60,000	69,51,34,000
16	Fire Services	4,97,53,000	5,000	4,97,58,000
17	Education	2,90,78,59,000	6,000	2,90,78,65,000
18	Medical	76,56,72,000	..	76,56,72,000
19	Public Health	74,45,47,000	..	74,45,47,000
20	Agriculture	82,98,62,000	6,000	82,98,68,000
21	Fisheries	3,78,83,000	10,000	3,78,93,000
22	Animal Husbandry	18,19,49,000	1,000	18,19,50,000
23	Co-operation	9,72,16,000	..	9,72,16,000
24	Industries	12,35,25,000	1,000	12,35,26,000
25	Cinchona	2,45,81,000	..	2,45,81,000
26	Handlooms and Textiles ..	5,45,92,000	..	5,45,92,000
27	Khadi	1,76,07,000	..	1,76,07,000
28	Community Development Projects and Municipal Administration	1,25,98,33,000	..	1,25,98,33,000
29	Labour including Factories ..	8,27,74,000	..	8,27,74,000
30	Social Welfare	23,01,71,000	..	23,01,71,000
31	Welfare of the Scheduled Tribes and Castes, etc. ..	41,10,31,000	2,02,000	41,12,33,000

Demand number.	Services and purposes	Sums not exceeding — Voted by the Legislative Assembly.	Sums not exceeding — Charged on the Consolidated Fund of the State.	Total.
(1)	(2)	(3)	(4)	(5)
		RS.	RS.	RS.
32	Welfare of the Backward Classes. etc.	9,22,67,000	1,000	9,22,68,000
33	Housing	15,64,59,000	..	15,64,59,000
34	Urban Development	24,16,32,000	..	24,16,32,000
35	Civil Supplies	6,57,70,000	51,000	6,58,21,000
36	Irrigation	36,01,57,000	12,000	36,01,69,000
37	Public Works—Buildings ..	4,71,47,000	55,000	4,72,02,000
38	Public Works—Establishment and Tools and Plant ..	13,22,89,000	..	13,22,89,000
39	Roads and Bridges	63,15,28,000	..	63,15,28,000
40	Road Transport Services and Shipping	67,40,000	2,000	67,42,000
41	Relief on account of Natural Calamities	28,000	8,59,00,000	8,59,28,000
42	Pensions and other Retirement Benefits.	30,40,47,000	81,10,000	31,21,57,000
43	Miscellaneous	90,73,11,000	13,73,000	90,86,84,000
44	Stationery and Printing ..	10,21,26,000	2,51,000	10,23,77,000
45	Forest Department	9,31,58,000	8,000	9,31,66,000
46	Compensations and Assignments	22,37,47,000	22,53,000	22,60,00,000
47	Information, Tourism and Film Technology	2,21,75,000	..	2,21,75,000
48	Capital Outlay on Agriculture.	7,00,42,000	1,000	7,00,43,000
49	Capital Outlay on Industrial Development	24,46,67,000	3,000	24,46,70,000
50	Capital Outlay on Irrigation	42,72,25,000	..	42,72,25,000
51	Capital Outlay on Public Works—Buildings ..	37,20,54,000	9,01,000	37,29,55,000
52	Capital Outlay on Roads and Bridges	20,20,35,000	1,000	20,20,36,000
53	Capital Outlay on Road Transport Services and Shipping.	6,87,64,000	..	6,87,64,000
54	Capital Outlay on Forests ..	14,89,68,000	..	14,89,68,000
55	Miscellaneous Capital Outlay	16,61,31,000	6,000	16,61,37,000
56	Loans and Advances by the State Government ..	3,65,54,24,000	..	3,65,54,24,000
	Public Debt—Repayment .	..	1,81,09,60,000	1,81,09,60,000
	GRAND TOTAL ..	18,20,97,28,000	3,17,64,82,000	21,38,62,10,000

I certify that this is a Money Bill.

K. RAJARAM,
Speaker,
Tamil Nadu Legislative Assembly.

Fort St. George,
Madras,
Date : 30th March 1982.

தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

வெள்ளிக்கிழமை, 1982 ஏப்ரல் 2.

பங்குனி 20, துன்மதி—திருவள்ளுவராண்டு 2013.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9.30 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள் —விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

பாரதியார் பற்றிய திரைப்படம்.

* 125. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பாரதியார் வாழ்க்கை வரலாறு பற்றிய திரைப்படம் ஒன்றை அரசு தயாரிப்பது குறித்து செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : (அ) & (இ) மகாகவி பாரதி நூற்றாண்டு விழாவினை ஒட்டி மகாகவி பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றினை முழு நீளத் திரைப்படமாக தயாரிக்கப்படுவது பற்றிய கருத்துரு பாரதியார் நூற்றாண்டு விழாக் குழுவின் பரிசீலனையில் உள்ளது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பை வரவேற்கிறேன். உத்தேசிக்கப்பட்டுள்ள திரைப்படம் பாரதியார் நூற்றாண்டு நிறைவு விழா முடிவடைவதற்கு முன் வெளியிடப்படுமா ? அவ்வாறு பாரதியார் திரைப்படத்தை வெளியிடும்போது, தமிழ் நாட்டில் வாழ்ந்த தேசியத் தலைவர்களுடைய பணியையும் இணைத்து ஒரு தேசிய எண்ணத்தை, உணர்ச்சியை அது உருவாக்குகிற அளவுக்கு அமையும் வகையில் அரசு நடவடிக்கை எடுக்குமா ?

[1982 ஏப்ரல் 2

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : தலைவர் அவர்களே, திரைப்படம் தயாரித்து வெளியிடுவது என்பதை ஒரு குறுகிய காலத்திற்குள்ளே நிர்பந்தப் படுத்தி முடிப்பது என்பது இயலாத காரியம். மேலும் இதுபோன்ற வரலாற்று நாயகர்களுடைய வாழ்க்கையைத் திரைப்படமாக எடுக்கிறபோது, மிகப் பெரிய அளவில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வேண்டும். அந்த ஆராய்ச்சிகளின் உண்மையான நோக்கத்தை மக்களுக்கு நல்லமுறையில் வெளிப்படுத்த வேண்டும். அதே நேரத்தில் நல்ல சுவையான, உணர்ச்சிகளைத் தாக்கூடிய வகையிலும் இத்தகைய திரைப்படம் அமைய வேண்டும். ஆகவே நூற்றாண்டு விழா முடிவடைவதற்குள் தான் இந்தத் திரைப்படம் வர வேண்டும் என்பது அவ்வளவு முக்கியம் அல்ல. அதைத் தொடர்ந்தும் பாரதியாரைப் பற்றிய செய்திகளும், நிகழ்ச்சிகளும் வந்துகொண்டிருப்பது தான் நாட்டுக்குப் பயனளிக்கும். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல், பாரதியார் காலத்திலே வாழ்ந்த தேசியத் தலைவர்கள் வாழ்க்கை வரலாற்றையெல்லாம் இணைத்துக் காட்டும்போது, அவர்களுடைய வாழ்க்கையையும் காட்டுவதாக அது அமைந்திருக்கும். ஆகவே பாரதியாருடைய வாழ்க்கை வரலாற்றைத் திரைப்படமாக எடுக்கிறபோது மற்ற விடுதலை வீரர்களுடைய வரலாறும் இதோடு இணைந்து வருகிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இப்படி திட்டமிட்டுள்ள பாரதியாருடைய வாழ்க்கை வரலாறு பற்றிய திரைப்படத்தைப் பொறுத்தவரை, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதன் பொறுப்பை ஏற்க இருப்பதாக செய்தித் தாளில் தகவல் வந்தது. அந்தச் செய்தி உண்மைதானா ? இது ஒரு செய்திப் படமாக குறுகிய காலத்தில் ஓடக்கூடியதாக இருக்குமா, இல்லை முழு நேரத் திரைப்படமாக இருக்குமா ?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : இது செய்தி விளக்கப்படமாக எடுக்கப் படுவதில்லை. முழு நேரப் படமாக, ஃபீச்சர் பிலிம் என்று அழைக்கப்படுகிற அளவில், என்றைக்கும் மக்கள் பார்த்து, மகிழ்கிற அளவில் இது எடுக்கப்பட வேண்டும் என்பதுதான் இதன் அடிப்படை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமக்கு ஓய்வு கிடைக்குமானால், அநேகமாக இந்தப் படத்தினுடைய மேற்பார்வையை 'நானே ஏற்றுக்கொள்வேன்' என்று அறிவித்திருக்கிறார்கள்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : மகாகவி பாரதியாரைப் பற்றிய வரலாற்றை புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் திரைப்படமாக எடுக்க வேண்டுமென்ற முயற்சியில் பெரிய அளவில் ஈடுபட்டார்கள். ஆனால் பெரிய நடிகர் ஒருவருடைய ஒத்துழைப்பு இல்லாததால், அவர் மனமுடைந்து விட்டது

1982 பிப்ரவரி 26]

என்று சொல்கிறார்கள். பாரதியார் வரலாற்றை விளக்கும் திரைப்படத்தில் மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள் நடிக்க முன்வருவார்களா ? எங்களுக்கும் நடிக்க சந்தர்ப்பம் கிடைக்குமா ? (சிரிப்பு)

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : பாவேந்தர் பாரதிதாசன் அவர்களுடைய இறுதிக் காலத்தில் மகாகவி பாரதியாரைப் பற்றிப் படம் எடுக்க வேண்டுமென்ற முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார்கள். அதற்கு தமிழகத்தில் இருக்கிற பெரிய நடிகர் ஒருவர் ஒத்துழைப்பதாக உறுதி கூறியிருந்தார் என்றும், அதையொட்டி பாவேந்தர் பாரதிதாசன் பணம் முதலீடு செய்தார் என்கிற தகவல் கூட இருக்கிறது. ஆனால் அந்தத் திரைப்படத்திற்கான கதை, உரையாடல் போன்றவற்றை எழுதியிருக்கிறார்களா என்பது பற்றி அரசுக்குத் தெரியாது. அப்படி ஒருவேளை அவர்கள் எழுதிய குறிப்புகள் அவர்கள் சம்பந்தப்பட்ட குடும்பத்தினர் யாரிடமாவது இருந்தால், அதை அவர்களிடமிருந்துபெற்று, அதையே பயன்படுத்திக்கொள்ள முடியுமா என்பதைப்பற்றியும் அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களும், உறுப்பினர்களும் அதில் பங்கு பெறுவதுபற்றிக் கேட்டார்கள். தலைவர்களுடைய வரலாற்றைத் திரைப்படமாக எடுக்கிறபோது, வரலாற்றிலே தொடர்புள்ள தலைவர்கள் எல்லாம் அதிலே வர வாய்ப்பிருக்கிறது. ஆனால், அவர்கள் பாத்திரங்களாக அல்லாமல் நாட்டுக்குத் தேவையான தகவல்களைத் தருகிற அத்தகைய வரலாற்று நாயகர்களாக வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : பாத்திரங்களாக இருந்தாலும் 'மீசையை எடுக்க வேண்டாம்' என்று சொன்னால், நானும் நடிக்கத் தயார் (சிரிப்பு).

தந்தை பெரியார் நினைவு அரங்கம்.

* 234. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு செய்தி-அற நிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சென்னையில் தந்தை பெரியாரின் நினைவாக அரங்கம் அமைக்கும் திட்டத்தின்மீது அரசு முடிவு செய்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : (அ) ஆம்.

(இ) தந்தை பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்களின் நினைவாக சென்னை மாநகரில் எல்லாவிதமான புதுமையான வசதிகளுடன் கூடிய பெரிய தொரு மாநாட்டு அரங்கம் அமைப்பதற்கு அரசு கொள்கை அளவில் முடிவு செய்துள்ளது.

அதற்கேற்ப, தனிக் கட்டிடக் கலை நிபுணர்களிடையே போட்டி ஒன்றை ஏற்பாடு செய்து அதன்மூலம், மிகவும் சிறந்த வரைபடமும் வடிவமைப்பும், மதிப்பீடும் பெற அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இந்த மாநாட்டு அரங்கைக் கட்ட, ஏதேனும் தற்காலிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறதா ? இந்த மாநாடு அரங்கம் எத்தனை ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட இருக்கிறது ? இதிலே தந்தை பெரியார் அவர்களுடைய கருத்துக்களைப் பரப்ப ஏதேனும் ஏற்பாடுகள் செய்யப்படுமா ? அதாவது வள்ளுவர் கோட்டத்தில் திருக்குற ளைப் பதித்திருப்பது போல், தந்தை பெரியார் அவர்களுடைய கருத்துக் களை இந்த அரங்கத்தில் செதுக்குவதற்கான செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : தந்தை பெரியார் அவர்களுடைய பெயரால் அமைக்கப்பட இருக்கிற இந்த அரங்கம் மாநாட்டு அரங்கம் என்கிற பெயரால் அமைக்கப்பட திட்டம் போடப்பட்டிருக்கிறது. இந்தியத் துணைக் கண்டத்தைப் பொறுத்தவரையில், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த உலக மாநாட்டு அரங்கங்களை எல்லாம்விட இங்கே நவீன வசதிகள் பல உள்ளதாக இருக்கும். இன்றைக்கு இந்த மாநாட்டு அரங்கம் பல புதிய வசதிகளையும், பல்வேறு தொழில்நுட்ப வசதிகளையும் உடையதாக அமைக்கப்பட இருக்கிறது. அப்படிப்பட்ட சிறப்பான வசதிகளோடு கூடிய மாநாட்டு அரங்கமாக அது அமைய இருக்கிறது. அதற்கு தற்காலிகமாக பொதுப் பணித் துறையினர் 1 கோடியே 60 லட்சம் ரூபாய்க்கு ஒரு மதிப்பீட்டைத் தயாரித்து அனுப்பி இருக்கிறார்கள். இருந்தாலும் உலக மக்கள் அல்லது உலகத்திலே இருக்கிற ஆய்வாளர்கள், அறிஞர்கள் போன்றவர்கள் மாநாட்டு மண்டபத்திலே கூடு கிறபோது, தனிச்சிறப்புப் பெற வேண்டும் என்ற அடிப்படையில், கட்டிட அமைப்பு சிறந்த முறையிலே அமைய வேண்டும், திராவிடக் கலை, கட்டிடக் கலை, நாகரிகக்கலை போன்றவற்றின் சிறப்பை விளக்கும் அடிப்படையில் அது அமைய வேண்டும் என்ற வகையில் பல்வேறு கட்டிட நிபுணர்களிடையே ஒரு போட்டிபோல் வைத்து, பலரிடத்திலிருந்து அந்த வரைபடத்தைக் கேட்டுப்பெற்று பயனளிக்கும் வகையில் இது விளங்க அதற்கான முயற்சியில் இந்த அரசு ஈடுபட்டிருக்கிறது.

திரு. சி. இராமலிங்கம் : தந்தை பெரியார் அவர்கள் திருச்சியில் முதன் முதலாக ஆசிரியப்பயிற்சிப் பள்ளி ஒன்றை பகுத்தறிவுப் பிரசாரம் செய்யக் கூடிய அளவில் ஏற்படுத்தினார்கள். அந்தப் பள்ளியை அரசு மேற்கொள்ளும் எண்ணம் இருக்கிறதா ? அது தனியார் மேற்பார்வையில் இருக்கிறது. அப்படி தனியார் மேற்பார்வையில் இருக்கும் அந்த ஆசிரியர் பயிற்சிப் பள்ளி அரசுடைமை ஆக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : கல்வி அமைச்சரிடத்தில் இந்தக் கேள்வியைக் கேட்குமாறு வேண்டிக்கொள்கிறேன்.

(முற்பகல் 9.40)

டாக்டர் இரா. சனார்த்தனம் : இத்தகைய மண்டபம் எழுப்பப்படும் போது,அது சென்னையின் மையமான பகுதியில், தற்போது இராணுவத்தின் பொறுப்பில் இருக்கிற இடத்தை அரசு கோரிப்பெற்று, அந்த இடத்தில் அமைக்க முயற்சிகளை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : இந்த மண்டபத்தை அமைப்ப தற்கான இடத்தைத் தேர்ந்தெடுப்பதில்தான் கொஞ்சம் சிக்கல் இருக்கிறது. அது ஒரு சிறந்த இடமாக இருக்க வேண்டும் என்றுதான் தேடிக்கொண்டிருக் கிறோம். அதுவும் 5 எக்கர் முதல் 10 ஏக்கர் பரப்புள்ள இடமாக அது அமைய வேண்டும். அப்படி இருந்தால்தான், அது தேசிய அளவில் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மாநாட்டு மண்டபமாக, பல்வேறு வசதிகளையும் கொண்ட மண்டபமாக அமைய முடியும் என்ற கருத்து இருக்கிறது. அப்படித் தேடுகிற போது, அரசினர் தோட்டத்தில் ஆடம்ஸ் சாலைக்குப் பக்கத்தில் இருக்கிற இடத்தைப் பற்றி முதலில் குறிப்பிட்டார்கள். ஆனால் அந்த இடத்தில் எதிர்காலத்தில் " ரேபிட் டிரான்சிட் சிஸ்டம்" என்ற திட்டம் வர இருக்கிற காரணத்தால், அந்த இடம் அமைதியாக இருக்காது என்ற முடிவுக்கு வந்திருக் கிறார்கள். அதற்குப் பிறகு காமராஜர் சாலையில் இருக்கும் பல்கலைக் கழகத் தேர்வு மண்டபத்திற்கு அருகிலிருக்கும் சாரணர் இயக்கத்திற்குச் சொந்தமான இடத்தில் அமைக்கலாமா என்று யோசனை செய்தபோது, கல்வித் துறை அந்த இடத்தைத் தருவதற்கு யோசித்துக் கொண்டிருக்கிறது. மறுப்புக்கூட தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, நகரின் மத்தியில் அமைக்க வேண்டும் என்கிறபோது, இப்போதே மாநகரின் மத்தியில் நுரையீரல், இதயம் போன்ற பகுதிகள் காலியாக இருக்க வேண்டும் என்ற தத்துவத்திற்கு மாறாக, இருக்கிற இடங்களிலெல்லாம் கட்டிடங்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன. அது

மாநகரத்தில் உள்ள மக்களின் சுகாதாரத்தைப் பாதிக்கிறது என்ற கருத்து, கடுமையான எதிர்ப்போடு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இதுபோன்ற மண்டபம் கட்ட ஆர்வம் காட்டினாலும், நகரின் ஒதுக்குப்புறமான இடத்தில் ஊர்க்கோடியில் கட்ட வேண்டும் என்று எதிர்கால வளர்ச்சியை மனதில் கொண்டு கட்டினால், அது பலனளிக்கும் என்று அரசு கருதுகிறது. தற்காலிக மாக இப்போது ஆளுநர் தோட்டத்திற்கு அருகில் இதற்கு இடம் பெற முடியுமா என்ற முயற்சியும் இல்லையென்றால் எல்லியட் கடற்கரைச் சாலைக்குப் போகிற வழியில் இடம் பெற முடியுமா என்ற முயற்சியும் பரிசிலனையில் இருக்கின்றன.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார் அவர்களின் நினைவாக அமைக்கப்படவிருக்கும் இந்த மண்டபத்தில் பெரியார் அவர்களின் வாழ்க்கையில் நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகள், அவர் பொது வாழ்க்கையில் ஈடுபட்ட நிகழ்ச்சிகள் மகாத்மா காந்தியடிகளின் தலைமையில் தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தில் ஆற்றிய பணிகள், கல்விப் பணிகள், சமூகச் சீர்திருத்தப் பணிகள் ஆகியவற்றை விளக்கிக் காட்டும் வகையில் ஒரு பகுதியில் ஓவியக் கண்காட்சியை வைப்பதற்கு இடம் ஒதுக்கப்படுமா ? அதற்கு ஏற்ற வகையில் மண்டபத்தை அமைக்க அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : தந்தை பெரியார் அவர்களின் நினைவாக அமைக்கப்படுகிற மண்டபத்தில் சில பகுதிகளில் அவருடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளைச் சித்தரித்துக் காட்டுவதன் மூலம் இந்த நாட்டு மக்களுக்கு 60, 70 ஆண்டுக்கால தேசிய விடுதலை இயக்க வரலாற்று நிகழ்ச்சி களையும் அதற்குப் பிறகு தமிழ் நாட்டின் தொடர்பான வரலாற்று நிகழ்ச்சிகளையும் தெரிவிக்க முடியும் என்றுதான் அரசு கருதுகிறது. நூற்றாண்டு விழாக் குழுவும் அந்தக் கருத்தைத்தான் அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறது. ஆகவே மண்டபத்திற்கான வரைபடம் அமைப்பு முதலானவை பற்றிய முடிவெடுக்கப்பட்டவுடன் எந்தப் பகுதியில் எப்படிப் பட்ட காட்சிகளை வைக்கலாம் என்பதை அரசு இறுதியாக முடிவு செய்யும். பிரச்சினைகள் அவருக்கு நன்கு தெரியும்.

பட்டதாரி ஆசிரியர்கள் பதவிகளுக்கு நேர்முகத் தேர்வு

* 235 வினா.—செல்வி ஆ. லீலாவதி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1980 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 11 ஆம் நாள் ரிப்பன் கட்டிடத்தில் மாநகராட்சிப் பள்ளிகளில் நியமனம் செய்யப்படுவதற்கான பட்டதாரி ஆசிரியர்களுக்காக நடைபெற்ற நேர்முகத் தேர்வின் முடிவுகள் 31—3—1981 வரை அறிவிக்கப்படவில்லை என அரசுக்குத் தெரியுமா ?

(இ) எத்தனை இடங்கள் காலியாக உள்ளன ?

(உ) நேர்முகத் தேர்வின் முடிவுகள் அறிவிக்கப்படவும் காலி இடங்கள் உடனே நிரப்பப்படவும், அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) 11—3—1980 ஆம் நாள் நேர்முகத் தேர்வு எதுவும் நடைபெறவில்லை.

(இ) தற்போது இடங்கள் எதுவும் காலி இல்லை.

(உ) தக்க அறிவுரைகள் மாநகராட்சி ஆணையருக்கு வழங்கப்பட்டுள்ளன.

செல்வி ஆ. லீலாவதி : மாநகராட்சியில் பல ஆசிரியர்களுக்கான நேர்முகத் தேர்வுகள் நடைபெறுகின்றன. பட்டதாரி ஆசிரியர்களுக்கும் தையல் ஆசிரியர்களுக்கும் நேர்முகத் தேர்வுகள் நடத்தப்பட்டிருக்கின்றன. அவைகளில் மாநகராட்சி கல்வி அதிகாரியும், விசேஷ அதிகாரியும், ஆணையரும் பங்கேற்கிறார்கள். இவ்வாறு மூவரும் நேர்முகத் தேர்வில் கலந்து கொண்டும், பல மாதங்கள் கழித்துத்தான் ஆசிரியர்களை நியமனம் செய்கிறார்கள். இது அரசுக்குத் தெரியுமா ? எனவே நேர்முகத் தேர்வுகள் முடிவடைந்த உடனே நியமனம் செய்வதற்கான வகையில் அரசு ஆணைகள் பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மூலக் கேள்வி 11—3—1980 ஆம் தேதியன்று நேர்முகத் தேர்வு நடைபெற்றதாகச் சொல்கிறது. ஆனால் அந்தத் தேதியில் நேர்முகத் தேர்வே நடைபெறவில்லை. எனவே மேற்கொண்டு மற்ற கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டியதில்லை என்றுதான் நான் நினைக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள் எண் 236 முதல் 238 வரை ஒரே பொருள் குறித்து இருப்பதால், அவை அனைத்தும் ஒன்றாக எடுத்துக் கொள்ளப்படும்.

நிரந்தர உதவிக்கோட்டப் பொறியாளர் அலுவலகங்கள்.

*236. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழகத்தில் எத்தனை வட்டத் தலைமையகங்களில் (Taluk Headquarters) நெடுஞ்சாலைத் துறை நிரந்தர உதவிக்கோட்டப் பொறியாளர் அலுவலகங்கள் (Regular Sub-Divisional (Engineer's Offices) இதுவரை ஏற்படுத்தப்படவில்லை ?

(இ) அந்த வட்டத் தலைமையகங்களில் அவ்வலுவலகங்களைத் திறக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

(உ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) தமிழகத்தில் 49 வட்டத் தலைமையிடங்களில் நெடுஞ்சாலைத் துறை நிரந்தர உதவிக் கோட்டப் பொறியாளர் அலுவலகங்கள் இதுவரை ஏற்படுத்தப்படவில்லை.

(இ) & (உ) உதவிக் கோட்டப் பொறியாளர் அலுவலகங்கள் இல்லாத 38 வட்டங்களில் அவ்வலுவலகங்களை ஏற்படுத்த தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை மற்றும் கிராமப்பணித் துறை) அனுப்பி உள்ள பிரேரணைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

*237. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்ற மேலவையில் 23—1—1981 அன்று வினா எண் 7-க்கு அளிக்கப்பட்ட விடையினையொட்டி கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

தென் ஆற்காடு மாவட்டம், பண்ருட்டியில் நெடுஞ்சாலைத்துறை நிரந்தர உதவிக் கோட்டப் பொறியாளர் அலுவலகம் (Regular Sub-Divisional

Engineer's Office.) எப்பொழுது திறக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பண்ருட்டியில் நெடுஞ்சாலை மற்றும் கிராமப்பணித் துறை உதவிக் கோட்டப் பொறியாளர் அலுவலகம் ஏற்படுத்துவது குறித்து இனிவரும் திட்ட காலங்களில் அரசின் நிதி நிலைமையினைக் கருத்திற் கொண்டு பரிசீலனை செய்யப்படும்.

*238. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்ற மேலவையில் 23-1-1981 அன்று வினா எண் 7-க்கு அளிக்கப்பட்ட விடையினையொட்டி கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

தென் ஆற்காடு மாவட்டம், உளுந்தூர்பேட்டையில் நெடுஞ்சாலைத்துறை சாலைப் பராமரிப்புப் பணிகள் அதிகமாக உள்ள காரணத்தால் நிரந்தர உதவிக் கோட்டப் பொறியாளர் அலுவலகம் (Regular Sub-divisional Engineer's Office) எப்பொழுது திறக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : உளுந்தூர்பேட்டையில் நெடுஞ்சாலை மற்றும் கிராமப்பணித் துறை உதவிக் கோட்டப் பொறியாளர் அலுவலகம் ஏற்படுத்துவது குறித்து இனிவரும் திட்ட காலங்களில் அரசின் நிதி நிலைமையைக் கருத்திற் கொண்டு பரிசீலனை செய்யப்படும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தற்போது பஸ் ரூட் ஸ்கீம் (Bus route scheme) என்றும், ரூரல் ரோட்ஸ் ஸ்கீம் (Rural roads scheme) என்றும் அதற்குப் பிறகு ஷுகர் கேன் ஸ்கீம் (Sugarcane scheme) என்றும் மூன்று திட்டங்கள் இருக்கின்றன. இந்த மூன்று திட்டங்களின் கீழும் அமைக்கப்படும் சாலைகளின் பராமரிப்பு தற்போது உதவிக் கோட்டப் பொறியாளரிடம் ஒப்படைக்கப்பட்டு, அவற்றிற்கான பராமரிப்புப் பணிகள் அவரால் மேற்கொள்ளப்படுகின்றன. இப்படி அவருக்கு ஏராளமான பணிகள் வந்துவிடுவதன் காரணமாக "Length of the Road" என்று சொல்லப்படும் முறையில் சாலைப் பராமரிப்புப் பணிகள் மிகவும் அதிகமாகிவிடுகின்றன. ஏற்கெனவே ஒரு வட்டத்திற்கு ஒரு உதவிக் கோட்டப் பொறியாளர் அலுவலகம் இருந்தால்தான் இந்தப் பணிகளையெல்லாம் ஒழுங்காகச் செய்ய முடியும் என்ற நிலை இருக்கிறது. எனவே அவர்களின் பணிச் சுமையை அரசு கருத்தில் கொண்டு கொள்கை ரீதியாக ஒவ்வொரு ரெவின்யூ வட்டத்திற்கும் ஒரு உதவிக் கோட்டப்

பொறியாளர் அலுவலகத்தை அமைக்க முடிவெடுத்தால், எதிர்காலத்தில் இத்தகைய பணிகளைத் திறமையாகச் செய்வதற்கு உதவியாக இருக்கும் என்பதால், அமைச்சர் அவர்கள் இதற்கான முறையில் நடவடிக்கையை மேற்கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : கிராமச் சாலைகளைப் பொறுத்த வரை, இந்தியாவில்தான் மிக அதிகமான நீளத்திற்குச் சாலைகள் இருக்கின்றன. என்ற நிலை இருக்கிறது. தமிழகத்தில் மட்டும் 71,527 கிலோ மீட்டர் அளவுக்குக் கிராமச் சாலைகள் இருக்கின்றன. எனவே கிராமச் சாலைகளுக்காக என்று தனியாக ஒரு முதன்மைப் பொறியாளரை ஏற்படுத்தி அவரின்கீழ் கோட்டங்களை ஏற்படுத்தலாமா என்பது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. அப்படி வரும்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துக்களையும் யோசனைகளையும் அரசு ஆராயும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : 38 வட்டத் தலைமையகங்களில் உதவிக் கோட்டப் பொறியாளர் அலுவலகங்கள் அமைக்கப்படுவது அரசின் பரிசீலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த 38 வட்டங்களில் உளுந்தூர்பேட்டையும், பண்ருட்டியும் அடங்கியிருக்கின்றனவா ? அப்படி இல்லை என்றாலும்கூட, வருகிற நிதியாண்டிலாவது உளுந்தூர்பேட்டை மற்றும் பண்ருட்டி ஆகிய இரு இடங்களிலும் இரு உதவிக் கோட்டப் பொறியாளர் அலுவலகங்கள் அமைக்க அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : 38 வட்டங்களில் உளுந்தூர் பேட்டையும் பண்ருட்டியும் அடங்கியிருக்கின்றனவா இல்லையா என்பது பற்றிய குறிப்பு என்னிடம் இல்லை. ஆயினும் அவை கவனத்தில் கொள்ளப்படும்.

Selection to 1st Year M.B.B.S. Course

*239 *Q.*—THIRU P. R. THOMAS (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. Minister for Healths be

(*a*) the dates, when the interview for admission to the 1st year M.B.B.S., Course was completed ;

(*b*) the date, on which the list of selected candidate was published ; and

(c) the reasons for the inordinate delay in publishing the final list ?

மாண்புமிகு டாக்டர் எச். வி ஹண்டே : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

(அ) எச்.எஸ்.சி. மாணவர்களுக்கு 21-9-1981 அன்றும் விஞ்ஞானப் பட்டதாரிகளுக்கு 23-11-1981 அன்றும் நேர்முகத் தேர்வுகள் முடிவுற்றன.

(இ) தேர்வுப் பட்டியல்கள் 20-11-1981 அன்றும் 8-12-1981 அன்று பிற்பகலும் வெளியிடப்பட்டன.

(உ) நேர்முகத் தேர்வு முடிந்ததும் ஒவ்வொரு தேர்வுக் குழுவாலும் செய்யப்பட்ட தேர்வை ஒருங்கிணைப்புக் குழு (கோவார்டினேஷன் குழு) தயாரிக்க வேண்டியிருந்தது. விஞ்ஞானப் பட்டதாரிகளைப் பொறுத்தவரை தேர்வு முடிவுகளை வெளியிடுவதில் தாமதம் ஏதுமில்லை. எச்.எஸ்.சி. மாணவர்களைப் பொறுத்தவரை ஏராளமான விண்ணப்பங்கள் இருந்ததால் ஒருங்கிணைப்புக் குழு ஆய்வு செய்வதில் சிறிது காலதாமதமாயிற்று.

THIRU A. R. DAMODARAN : Sir, as a result of the admission being announced in December, many of those who have already joined professional colleges like Engineering Colleges leave the Engineering Colleges and join the Medical Colleges resulting in many vacancies in Engineering Colleges. May I know whether at least in 1982—83, the Government will think of adopting a new procedure for admissions to medical colleges and, if so, what this procedure will be ?

The Hon. Dr. H.V. HANDE : Hon. Chairman, as far as the Engineering Colleges are concerned, I learn from the authorities that they were having a very good waiting list and the vacancies will be filled up from that list and, therefore, that particular problem is bound to be solved. I also share the views of the hon. Member that we have to co-ordinate in a proper manner the admission to Engineering Colleges and the admission to Medical Colleges so that no seat is wasted. I fully agree with the hon. Member that we have to co-ordinate and some measure of co-ordination will be adopted this year.

THIRU A. R. DAMODARAN : Sir, if the Engineering College admissions are completed by July 10th or 15th, why is it that the Medical College admissions go on till December each year ? Is there any special reason for that ?

The Hon. Dr. H.V. HANDE : Mr. Chairman, there are quite a few reasons. The most important reason is the fact that the nativity certificates have been questioned a number of times. Especially in the two districts of Kanyakumari and Coimbatore, we have the problem. The large number of applications required a great deal of scrutiny. I am giving the hon. Member the reasons for the delay. The co-ordination also took a lot of time, as there were 8 committees, pooling the results. Thirdly, about 100 Social status certificates were challenged and the reply from the Collectors took time to be received. Fourthly, about 100 permanent residence certificates were also challenged as the natively of the individuals was suspected. The Collectors had to investigate and verify the certificates issued by the Tahsildars and that also took time.

(முற்பகல் 9-50)

டாக்டர் இரா. சனார்த்தனம் : இவ்வாறு மருத்துவக் கல்லூரிக்குத் தேர்வு செய்யப்பட்ட மாணவர்களில், பொதுப் பட்டியலிலும், பிற்பட்டோர் பட்டியலிலும் 80 சதவீதத்திற்கு மேல் மதிப்பெண் பெற்ற எத்தனை மாணவர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள் ? குறிப்பாக 13 ஆயிரம் மாணவர்கள் மனுச் செய்வதால் தேர்ந்தெடுப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது என்பதால், அதைத் தவிர்க்க குறைந்தபட்ச மதிப்பெண் அதிகமாக இருக்க வேண்டுமென்ற முறையையோ அல்லது வேறு முறைகளையோ கையாண்டு விரைவில் மாணவர்களைத் தேர்வு செய்ய என்ன நடைமுறையைக் கையாளப் போகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : ஓப்பன் காம்படிஷனைப் பொறுத்த வரையில், அதிலே பிற்பட்டவர்களும் வருகிறார்கள், முற்பட்டவர்களும் வருகிறார்கள், எல்லோரும் வருகிறார்கள். இதிலே ஒதுக்கப்பட்ட இடங்கள் 278 என்றால், தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 270 பேர். 97 சதவீத மாணவர்கள் 80 சதவீத மதிப்பெண்களுக்கு மேல் பெற்றிருக்கிறார்கள்.

பிற்பட்ட வகுப்பினரைப் பொறுத்த வரையில், ஒதுக்கப்பட்ட இடங்கள் 388 என்றால், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 435. 92 சதவீதத்தினர் 80 சதவீதத்திற்கு மேல் மதிப்பெண் பெற்றிருக்கிறார்கள். ஆகவே ஓப்பன் காம்படிஷன், பிற்பட்டோர் பட்டியல் ஆகிய இரண்டையும் சேர்த்தால் மொத்தமாக 80 சதவீதத்திற்கு மேல் மதிப்பெண்கள் வாங்கியவர்களில் 95.45 சதவீதத்தினர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. ம. சங்கரலிங்கம் : சென்ற ஆண்டு, ஹையர் செகண்டரி பள்ளியிலிருந்து வந்த மாணவர்களை மருத்துவக் கல்லூரியில் சேர்ப்பதற்காக நவம்பர், டிசம்பர் மாதங்களில் தேர்ந்தெடுத்தால், இன்ஜினியரிங் கல்லூரியிலும், விவசாயக் கல்லூரியிலும் சேர்ந்திருந்த மாணவர்களில் பலர் மருத்துவக் கல்லூரிக்கு வந்துவிட்டார்கள். அப்படி எத்தனை மாணவர்கள் இன்ஜினியரிங் கல்லூரியிலிருந்து வந்திருக்கிறார்கள் ? எத்தனை மாணவர்கள் விவசாயக் கல்லூரியிலிருந்து வந்திருக்கிறார்கள் ? ஆகவே அடுத்த ஆண்டிலாவது ஹையர் செகண்டரி பள்ளியிலிருந்து மருத்துவக் கல்லூரியில் சேரும் மாணவர்களின் பட்டியலையும், இன்ஜினியரிங் கல்லூரியில் சேரும் மாணவர்களின் பட்டியலையும், விவசாயக் கல்லூரியில் சேரும் மாணவர்களின் பட்டியலையும் ஒரே நாளில் வெளியிட ஏற்பாடு செய்யப்படுமா ? எட்டு கமிட்டிகள் இண்டர்வியூ நடத்துவதால் ஒவ்வொரு நாளும் இண்டர்வியூ செய்து வழங்கப்பட்ட மார்க் சென்ட்ரல் கமிட்டிக்கும் அமைச்சருக்கும் ஒரே நாளில் தபால் மூலமாக வர ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : அந்த மார்க் லிஸ்ட் அமைச்சருக்கு வருவது கிடையாது. அப்படி வர வேண்டிய தேவையில்லை. கமிட்டித் தலைவருக்கு வந்தாலே போதும். ஏனென்றால் அவர்கள்தான் பெறுகிறார்கள். மருத்துவக் கல்லூரியில் இன்னுமொரு பிரச்சினை இருக்கிறது. மருத்துவக் கல்லூரியைப் பொறுத்த வரையில், இண்டர்வியூவில் வழங்கப்படும் மார்க்கு 75-லிருந்து 30 ஆகக் குறைக்கப்பட்டிருக்கிறது. ஒரு ஜட்ஜ்மென்டின் அடிப்படையிலே இது செய்யப்பட்டிருக்கிறது. அது சம்பந்தமாகக் கூட சில கேள்விகள் எழுப்பப்பட்டு அட்வகேட் மூலமாக நமக்கும் அவர்களுக்கும் கடிதப் போக்குவரத்து நடந்ததால், ஆரம்பத்திலே 15 நாள் தாமதம் ஆகிவிட்டது. இந்த ஆண்டு ஆரம்பத்திலேயே சட்ட நுணுக்கங்கள் என்னென்ன, இதிலே என்னென்ன பிரச்சினைகள், தடைகள் வரக்கூடும் என்பதை ஆராய்ந்து உடனடியாக ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். எனக்குக் கூட வேகமாகச் செய்ய வேண்டுமென்ற ஆசை.

எத்தனை மாணவர்கள் இன்ஜினியரிங் கல்லூரியிலிருந்து வந்திருக்கிறார்கள் என்பதை நாம் சொல்ல முடியாது. அவர்கள்தான் சொல்ல முடியும். அவர்களுக்கு 4 சப்ஜெக்டுகள் இருக்கின்றன. 'மேத்தமேட்டிக்ஸ்' இருந்தாலும்கூட இதற்குப் போட உரிமையுண்டு. எத்தனை மாணவர்கள் அங்கேயிருந்து வந்தார்கள் என்ற பட்டியல் அங்கே இருக்கும், இங்கே இல்லை. மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர் சொல்லுவதைப் போல, வேகமாகச் செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது என்ற கருத்து இருக்கிறது. குறிப்பாக கோயம்புத்தூர், கன்னியாகுமரி ஆகிய இரண்டு

மாவட்டங்களைப் பொறுத்த வரையிலும், நாம் கொஞ்சம் எச்சரிக்கையாக, ஜாக்கிரதையாக இருகக வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். சந்தேகம் ஏற்பட்டவுடனே மீண்டும் பரிசிலனை செய்ய வேண்டுமென்று சொல்லி பரிசிலனை செய்து ரிஜெக்ட் செய்திருக்கிறோம். அந்த அளவிற்கு நம்முடைய மாநிலத்தில் இருப்பவர்களுக்கு நன்மை தரக்கூடும் என்பதால், ஸ்ட்ரிக்ட்டாக இருந்து 'ரிஜெக்ட்' செய்திருக்கிறார்கள்.

திரு. க. இராமமூர்த்தி : மருத்துவக் கல்லூரிக்குத் தேர்வு செய்யப்பட்டவர்களில் 90 சதவிதத்திற்கு மேற்பட்டவர்கள் 80 சதவிதத்திற்கு மேற்பட்ட மார்க்குகளை வாங்கியிருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ரிட்டன் டெஸ்டில் (Written Test) அவர்கள் வாங்கிய சதவிதம் என்ன ? இன்டர்வியூவில் அவர்கள் வாங்கிய சதவிதம் என்ன ? ரிட்டன் டெஸ்ட்டில் வாங்கிய (Lowest) குறைந்த மார்க் எவ்வளவு ? ரிட்டன் டெஸ்ட்டில் லோயஸ்ட் மார்க் என்ற அடிப்படையிலே உள்ளவர்களுக்கு இன்டர்வியூவில் எவ்வளவு மார்க் கிடைத்திருக்கிறது என்பதை அறியலாமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : முழுமையாக விவரங்கள் இல்லை என்றாலும், 80 சதவிதம் மார்க் நியரிக்குக் கிடைத்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் முக்கியமான ஒரு கேள்வியைக் கேட்டார். 80 சதவிதம் மேற்பட்ட மார்க்கு வாங்கியவர்களுக்குக் கொடுத்திருக்கிறோம் என்றால், ரிட்டன் டெஸ்டில் நன்றாக மார்க் வாங்கியவர்களுக்குத்தான் கிடைத்திருக்கிறது. 94 சதவிதம் பேருக்குக் கிடைத்திருக்கிறது. மீதிப் பேர்களுக்குக்கூட 75-ல் இருந்து 78 வரை கிடைத்திருக்கிறது. ஆகவே மார்க் நிறைய எடுத்தவர்களுக்குத்தான் கிடைத்திருக்கிறது. இரண்டாவதாக 30 மார்க் கமிட்டியிலே போட வேண்டுமென்று இருக்கிறது. அதிலே 25, 26 என்று இருந்தால் ஒன்று, இரண்டு பேருக்குக் கிடைத்திருக்கும். தியரி மார்க் எண்ணிக்கையின் அடிப்படையிலே கொடுத்திருக்கிறோம். அந்த அடிப்படையிலே இதுவரை இல்லாத அளவிற்கு தியரியில் நிறைய மார்க் கிடைத்தவர்களுக்கு இடம் நிறைய கிடைத்திருக்கிறது.

THIRU A. R. DAMODARAN : Sir, now that the interview marks have been reduced from 75 to 30 what is the necessity for allowing all those who have got 120 marks to apply for admission to Medical Colleges? May I ask the Hon. Minister whether he could not raise the limit to 155 marks so that the number of applicants will be reduced to about 3,000 in which case the admission can be completed within one month, because so many candidates need not be interviewed?

The Hon. Dr. H.V. HANDE : I fully share the views of the hon. Member, but the moment we fix a limit, it may become an emotional issue. Therefore, I will leave it at that. I agree with the hon. Member that it is an exercise in fulity to invite all these persons who got les than 75% marks. None of them has got into the Medical Colleges. I fully agree with that. But I do not want to open the Pandora's box and invite the criticism of so many persons. So, we have allowed the old system to continue. I fully agree with the hon. Member.

ஹோமியோபதியில் பட்டப்படிப்பு.

* 240. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) ஹோமியோபதி முறையில் புதிய பட்டப்படிப்பு துவங்க அரசு முடிவு ஏதும் செய்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) மற்றும் (இ) அரசின் பரிசிலனையில் உள்ளது.

திரு. சி ரா லெட்சுமிகாந்தன் : இந்தப் புதிய படிப்பானது Degree Course ஆக இருக்குமா அல்லது Diploma Course ஆக இருக்குமா ? இதைத் தோற்றுவிப்பதற்கு முன்பு அகில இந்திய மருத்துவர் கழகத்துடன் கலந்தாலோசிக்கப்பட்டதா ? இப்படிப்பட்ட பட்டப் படிப்பை அரசு எந்த இடத்திலே துவக்க உத்தேசித்திருக்கிறது என்ற விவரங்களையெல்லாம் நான் அறியலாமா ?

(முற்பகல் 10.00)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இப்போது கவர்ன்மென்ட் ஹோமியோபதி மெடிகல் காலேஜ் என்று சென்னையிலே 1975 ஆம் ஆண்டிலேயிருந்து எச்.எம். எஸ். கோர்ஸ், ஒரு டிப்ளமோ கோர்ஸ் ஆக இருக்கிறது. இந்தக் கோர்ஸ்க்கு 4½ ஆண்டுக் காலம் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அது கோர்சினுடைய பீரியட். Strength of the students for admission எவ்வளவு என்றால், 21 பேர்களை நாம் ஆண்டுதோறும் அனுமதித்துக் கொண்டிருக்கிறோம். எடுத்துக் கொண்டிருக்கிறோம். இப்போது டிகிரி கோர்ஸாக ஆரம்பிக்க வேண்

மென்றால், டிப்ளமோ கோர்ஸும் இருக்க வேண்டும். டிகிரி கோர்ஸும் இருக்க வேண்டும். இதிலே இரண்டு கோர்ஸுகளும் இருக்குமானால், பல பிரச்சினைகள் வருகின்றன. அது மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்கும் தெரியும். ஆகவே டிப்ளமோ கோர்ஸை எடுத்துவிட்டு டிகிரி கோர்ஸ் கொண்டு வரவேண்டுமா, தனியாக டிப்ளமோ கோர்ஸ் இருக்கலாமா என்று இன்னும் அரசாங்கம் முடிவு செய்யவில்லை. ஆகவேதான் இந்தக் கேள்விக்கு அப்படி பதில் சொன்னேன்.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஹோமியோபதி கல்லூரியைப் பொறுத்தவரையில், எனக்கு இன்னொன்று ஞாபகத்தில் இருக்கிறது. ஜி.சி.ஐ.எம். என்ற கிராஜுவேட் ஆஃப் காலேஜ் ஆஃப் இந்தியன் மெடிசன் என்ற அளவிலே அரசு இறுதியாக முடிவெடுத்து, அவர்கள் அந்த கோர்சை எம்.பி.பி.எஸ். அளவிலே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கீழ்ப்பாக்கம் மருத்துவ மனையிலே சொல்லியிருக்கிறார்கள். இதை 4½ ஆண்டுப் பட்டப் படிப்பாகப் படிக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதற்குப் பிறகும் அந்தப் படிப்பிற்கு எம்.பி.பி.எஸ். அளவிலே சமமான அந்தஸ்து வர வேண்டுமென்று நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. அந்த நிலைமைகளைப்பற்றிச் சிந்திக்க வேண்டும் என்றும், அரசு அதைப்பற்றி மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும், எம்.பி.பி.எஸ். படிப்பிலே அதை ஒரு சப்ஜக்டாக வைத்து, படிக்க வருகின்றவர்கள் படிக்கலாம் என்ற அளவுக்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்கிறார்கள். அதைப்பற்றி அரசு சிந்திக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஹோமியோபதியைப் பொறுத்தவரையில், எம்.பி.பி.எஸ்.ஸினுடைய ஒரு பகுதியாக அங்கே கல்வி தரப்பட்டு, எம்.பி.பி.எஸ். மாணவர்களுக்கு ஹோமியோபதி கற்றுக்கொடுத்தால், நன்றாக இருக்கும் என்று யோசனை சொல்லியிருக்கிறார்கள். சாதாரணமாக பாரதப் பிரதமர் அவர்கள் முன்பு ரெவ்யூ கமிட்டியிலே இந்தப் பிரச்சினை வந்தபோது, மாண்புமிகு முதல்வர் அவர்களும் நானும் அந்தக் கூட்டத்திலே இருந்தோம், " சித்த மருத்துவம், ஆயுர்வேத மருத்துவம், ஹோமியோபதி மருத்துவம் இவைகளிலெல்லாம், உள்ள முக்கியமான அம்சங்களைக் கொஞ்சம் கொஞ்சமாக எம்.பி.பி.எஸ் மாணவர்களுக்கும் சொல்லிக் கொடுத்தால் நன்றாக இருக்கும். ஏனென்றால் சில வியாதிகளை அவர்களே சிகிச்சை செய்ய வசதியாக இருக்கும் " என்றார்கள், அப்போது நான் ஒரு சந்தேகம் எழுப்பினேன்.

" Madam, there is an All India Medical Council in Delhi and that has to take a decision. Unless it gives the clearance, we can do nothing as far as syllabi for M.B.B.S. students are concerned. This is a decision that has to be taken by the Indian Medical Council. So, Madam, the ball is in your court and you have to take a decision. "

என்று சொன்னேன். அப்போது பாரதப் பிரதமர் அவர்கள் பக்கத்திலே இருக்கக்கூடிய செக்ரட்டரி அவர்களைப் பார்த்துப் பேசினார்கள். பிறகு That will never happen என்று அவரே சொல்லிவிட்டார்கள். இது ஒரு நல்ல கருத்து. மத்திய அரசிலே இருக்கின்ற பாரதப் பிரதமர் அவர்கள்கூட இந்தமாதிரியான கருத்துடையவர்களாக இருந்தார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட சித்த மருத்துவ மனையில், ஹோமியோபதி மருத்துவமனையில் இவர்களுக்கும் பயிற்சி கொடுத்தால் நன்றாக இருக்கும் என்ற ஒரு கருத்தை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும்கூட இந்திய மெடிக்கல் கவுன்சில் என்ன சொல்கின்றதோ அதைப் பொறுத்துத்தான் சிலபஸை வகுக்க வேண்டும் என்ற நிலைமைகள் இருக்கின்ற காரணத்தினாலே, நாம் அதைப்பற்றி ஒன்றும் செய்வதற்கில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

வேகக் கட்டுப்பாடு.

@ * 223. வினா—திரு. சி. ரா லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பஸ், லாரி போன்ற கனரக வாகனங்களில் வேகக் கட்டுப்பாடு கருவியைப் பொருத்துமாறு அரசு உத்தரவு பிறப்பித்துள்ளதா ?

(இ) அப்படி பொருத்தப்படாத வாகனங்களின் உரிமையாளர்கள் மீது அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(உ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆம். தமிழ் நாடு மோட்டார் வண்டிகள் விதிகளில் கனரக மோட்டார் வண்டிகளில் வேகக் கட்டுப்பாட்டுக் கருவிகள் பொருத்தப்பட வேண்டும் என்ற ஒரு விதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(இ) இல்லை. முன்மாதிரியாக அரசுப் பேருந்துகளில் வேகக் கட்டுப்பாட்டுக் கருவி பொருத்தப்பட்டது. ஒரு கால வரம்பைக் குறித்து அதற்குள்

@ 29—3—1982 ஆம் நாள் வினாப் பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.

தனியார் வாகனங்களில் வேகக் கட்டுப்பாட்டுக் கருவியைப் பொருத்த வேண்டும் என்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. அந்தக் கால வரம்பு இன்னும் முடிய வில்லை என்ற காரணத்தினால், நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற சூழ்நிலையும் ஏற்படவில்லை.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்த அரசுப் பேருந்துகளிலே வேகக் கட்டுப்பாடு கருவி பொருத்தி வருகின்றனர். ஆனால் மிக முக்கியமான பிரச்சினையாக இங்கே லாரி களால்தான் அதிகமான விபத்துக்கள் ஏற்படுகின்றன என்பதை நாங்கள் இந்த அவையிலே அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறோம். அந்த லாரிகளிலே, தனியார் பேருந்துகளிலே எல்லாம் இந்தக் கருவியை வைக்க வேண்டும். மிக வேகமாக, போட்டி போட்டுக்கொண்டு செல்லக்கூடிய தனியார் பேருந்துகளில் எல்லாம் இப்படிப்பட்ட வேகக் கட்டுப்பாட்டுக் கருவிகள் பொருத்தப்படாவிட்டால், அரசின் உத்தரவிற்கே மரியாதை இல்லை என்ற நிலைமை உருவாகலாம். அரசு முடிவாக அரசாணை பிறப்பித்து, காலக்கெடு முடியவில்லை என்றாலும்கூட, அப்படி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டாலும்கூட, அந்தக் காலக் கட்டத்திற்குள்ளாக அவைகளைப் பொருத்துவதற்கான அறிகுறியையாவது அது சம்பந்தப்பட்ட உரிமையாளர்கள் காட்டியிருக்கிறார்களா? இவ்வாறு வேகக் கட்டுப்பாட்டுக் கருவியைப் பொருத்தமாட்டோம் என்று அவர்கள் சார்பில் அரசுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறதா? அது குறித்து அரசின் நிலை என்ன? அரசு இது குறித்து எப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கப்போகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : சாதாரணமாக ஏதாவது ஒரு காரியத் திற்கு ஒரு கடைசி தேதி நிர்ணயித்தால், அந்தக் கடைசி நிமிடம் வரை பயன்படுத்திக் கொள்வதுதான் நம் மக்களுடைய பழக்கம். அப்படித்தான் இருந்து வருகிறது. இப்போதுள்ள நிலையில் காலத்தைக் குறித்துக் கொடுத்திருக்கிறோம். அந்தக் காலத்திற்குள்ளாக மாற்றவில்லை என்றால், கடுமையான நடவடிக்கை எடுப்போம் என்று சொல்லியிருக்கிறோம். இன்னும் பல்வேறு இடங்களிலேயிருந்து அந்தக் கருவியை மாற்றுவதற்கான காலத்தை நீட்டிக் கொடுக்க வேண்டுமென்று அவர்கள் மனுக்கள் கொடுத்துக் கொண்டிருக் கிறார்கள். ஆனால் நாம் என்ன சொல்லியிருக்கிறோம் என்றால், 2 ஆண்டுகள் 3 ஆண்டுகள் என்று நீண்ட காலமாகத் தொடர்ந்து கொண்டே வந்திருக்கிறோம்

அதை வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம், எனவே நீட்டிக் கொடுப்பதற்கு வாய்ப்பு இல்லை என்று நாம் அவர்களுக்குத் திட்டவட்டமாகச் சொல்லி யிருக்கிறோம்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, அந்தக் காலக் கெடு எந்தத் தேதி என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா? இப்போது அமைச்சர் அவர்கள் குறிப்பிடுவது போல, கடைசி தேதி வரை பொறுத்துப் பார்க்கலாமா என்று அவர்கள் முயற்சி செய்வது உண்மைதான். காரணம் இந்த மோட்டார் பைக்கில் போகின்றவர்கள் தலையிலே கவசம் அணிய வேண்டுமென்று உத்தரவு போட்டு, பிறகு திடீரென்று அந்த உத்தரவு ரத்து செய்யப்பட்டுவிட்டது. அப்படி ஏதாவது மாறுதல் செய்தால், கூடுமான வரைக்கும் நமக்கு மிச்சம் தானே என்று அவர்கள் நினைக்கக்கூடும். ஆகவே அரசு தான் எடுத்த முடிவில் உறுதியாக இருந்து, தனியார் லாரிகளிலே, பேருந்துகளிலே வேகக் கட்டுப்பாட்டுக் கருவியைப் பொருத்த வேண்டுமென்ப திலே நடவடிக்கைகளைத் தீவிரமாக எடுக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தனியார் பேருந்துகளிலே, லாரிகளிலே எல்லாம் அரசு அறிவித்த தேதியிலிருந்து 4 மாதங்களுக்குப் பின்னால் வருகின்ற ஒவ்வொருவரும் சான்றிதழ் பெறுவதற்கு வருகின்றபோது, அவர்கள் அந்த வேகக் கட்டுப்பாட்டுக் கருவியைப் பொருத்தியிருக்க வேண்டும் என்ற உத்தரவை இட்டிருக்கிறோம். ஆறு மாதங்களுக்கு ஒரு முறை அவர்கள் சான்றிதழ் பெற வருவார்கள். எனவே ஒட்டுமொத்தமாக 6 மாதத்தில் அவர்கள் பொருத்துகின்ற வாய்ப்பு இருக்கிறது. ஒரு சில பேருந்துகள் முதல் மாதத் திலே வருகின்றன. ஒரு சில பேருந்துகள் கடைசி மாதத்திலே வருகின்றன. ஆகவே 6 மாதத்திற்குள் ஒட்டுமொத்தமாக அவைகளிலெல்லாம் மாட்டு வதற்கான சூழ்நிலை இருக்கிறது.

THIRU A. R. DAMODARAN: Sir, has this time-limit been fixed for lorries? Number one Number two . . . are the Government aware that there is only one manufacturer manufacturing this speed control device and that they do not have regional offices in Tamil Nadu because many of the lorry-owners are not able to fit it up? May I know from the Government whether they will pass an order to the truck manufacturers saying that this should be part of the original equipment of all trucks sold in the State, which might be easier to implement?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : அந்தப் பிரச்சினை இருந்துகொண்டு தானிருக்கிறது. நாம் அந்தக் கருவியை உற்பத்தி செய்கின்றவர்களுக்கு எழுதியிருக்கிறோம். அதை ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொல்லி யிருக்கிறோம். அவர்கள் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த வகையிலே அவர்களுக்கு அங்கே தனியாக அலுவலகம் இல்லை என்ற குறை இருந்தது. இப்போது அது நீக்கப்பட்டிருக்கிறது என்று கேள்விப் படுகிறோம். இன்னும்கூட பல்வேறு நிறுவனங்கள் இது போன்ற கருவிகளை தாங்களும் தயார் செய்கிறோம் என்று நம்மிடத்திலே மனுக்களைக் கொடுத் திருக்கிறார்கள். அதைப்பற்றிப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம்.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய இந்த உத்தரவு வெளி மாநிலங்களிலிருந்து இந்த மாநிலத்திலே ஓடுகின்ற லாரிகள் பேருந்துகளுக்குப் பொருந்துமா ? (National நேஷனல் பெர்மிட் பெற்று ஓடுகின்ற பஸ்கள், அல்லது லாரிகள் இவைகளுக்கு இந்த உத்தரவு பொருந்துமா என்று அறிய விரும்புகிறேன் .

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : வெளி மாநிலங்களிலே உரிமைபெற்று வருகின்ற அந்த வாகனங்களை நம்மால் கட்டுப்படுத்த முடியாது. தென் மாநிலங்களைச் சேர்ந்த அத்தனை பேர்களும் ஊட்டியிலே நடைபெற்ற கூட்டத்திலேதான் இப்படிப்பட்ட முடிவுகள் எடுத்திருக்கிறார்கள். படிப்படி யாகத்தான் தென் மாநிலங்களில் இருக்கின்ற அத்தனை வாகனங்களிலேயும் பொருத்தப்பட வேண்டும் என்ற கருத்தையும் ஏற்கெனவே அவர்கள் சொல்லி யிருக்கிறார்கள். எனவே அந்தந்த மாநிலத்தில் அவரவர்கள்தான் பார்த்துக் கொள்ள வேண்டும்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : சேரன் போக்குவரத்துக் கழகம் இந்தக் கருவியைத் தயாரிக்கிறது. அது இதை அதிகப்படியாகத் தயாரித்து மற்றவர் களும் வாங்கிக்கொள்கின்ற வசதியை ஏற்படுத்துமா ? அதோடு முதல் கட்டமாக சென்னை நகர அல்லது பெரு நகருக்குள்ளே நுழைகின்ற வாகனங் களில் அவசியம் இந்தக் கருவி இருக்க வேண்டுமென்று அரசு ஒரு நிலையை உருவாக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : எல்லா கனரக வாகனங்களிலும் இருக்க வேண்டுமென்பதுதான் அரசினுடைய கொள்கை. அதை வேகமாக நடை முறைப்படுத்த அரசாங்கம் தயாராக இருக்கிறது. சேரன் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையில், அந்தக் கருவியைத் தயாரிப்பதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதைத் தயாரித்து வெளியிலே கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பது சரியாக இருக்காது.

காரணம் அது வேறு துறையிலே சென்றுவிடும். அதனுடைய அடிப்படை நோக்கத்திலிருந்து மாறிவிடும், ஒரு வியாபார ரீதியாகப் போய்விடும் என்ற காரணத்தினாலே, அரசாங்கப் போக்குவரத்துக் கழகத்திற்குத் தேவைப் படுகின்ற கருவிகளைத் தயாரிப்பதற்கான முயற்சிகளை அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 10.10)

திரு. க. இராமமூர்த்தி : தலைவரவர்களே, வெளி மாநிலங்களிலிருந்து இந்த மாநிலத்தில் ஓடுகின்ற லாரிகள், பஸ்கள் ஆகியவற்றை இந்த உத்தரவு கட்டுப்படுத்துமென்ற நிலைமை ஏற்பட்டால், 'டிஸ்கிரிமினேஷன்' என்ற அளவிலே இது நீதி மன்றத்திற்குச் சென்றால் அடிபட்டுப் போகுமே. அதுபற்றிப் பரிசீலிக்கப்பட்டதா ? சட்டத் துறையைக் கலந்தாலோசித்து இந்த உத்தரவு போடப்பட்டதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : நம்முடைய மாநிலத்தில் நாம் சில சட்டங்களை அமுலாக்க முடியும். இதில் மாறுபட்ட கருத்து வர வாய்ப் பில்லை என்று சட்டத் துறை சொல்லியிருக்கிறது.

Buses involved in Road Accidents

@ * 224 Q.—THIRU K. RAMAMOORTHY: Will the Hon. the Minister for Transport be pleased to state:

(a) the number of buses belonging to the various Transport Corporations, that were involved in road accidents from the year 1977;

(b) the years of experience of the Drivers involved, in serving in long route buses; and

(c) the number of years of service of these Drivers in the Transport Corporations.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : (அ) 18,732 பேருந்துகள்.

(இ) சராசரியாக ஓட்டுநர்களின் அனுபவம் 5 முதல் 11 வருடங்களுக் குள்ளாக உள்ளது.

(உ) சராசரியாக அவர்களின் அனுபவம் போக்குவரத்துக் கழகங்களில் 1 முதல் 3 வருடங்களுக்குள்ளாக உள்ளது.

@ 29—3—1982 ஆம் நாள் வினாப் பட்டியலிருந்து ஒத்திப் போடப் பட்டது.

திரு. க. இராமமூர்த்தி : தலைவரவர்களே, ஓராண்டுக்குள்ளாக அனுபவம் பெற்றவர்களை இந்த அளவிற்கு பஸ்களிலே ஓட்டுநர்களாகக் கொண்டுவர அவசியம் என்ன ஏற்பட்டது, அப்படிப்பட்டவர்களுக்குப் போதுமான பயிற்சி இல்லாததால்தான் இந்த விபத்துக்கள் ஏற்படுகின்றன என்பதை அரசு பரிசிலனை செய்ததா ? இவற்றை மீண்டும் அரசு பரிசிலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, போக்குவரத்துக் கழகங்களிலே எடுக்கும்போது, குறைந்தபட்சம் 2 ஆண்டுகள் அனுபவம் வேண்டுமென்று சொல்லி, எடுத்து வருகிறோம். இன்றைய தினம் உள்ள சூழ்நிலை, ஓட்டுநர்கள் போதிய அளவிற்கு இல்லை என்பதுதான். குறைவாக உள்ளனர். அவர்களுக்குக்கூட போக்குவரத்துக் கழகங்களின் மூலம் பயிற்சி கொடுத்து வருகிறோம். சில சூழ்நிலைகளிலே சங்கடமான நிலைமை ஏற்படுகிறது. ஒட்டுமொத்தமாக ஓட்டுநர்கள் மீது குறை சொல்ல முடியாது.

திரு. க. இராமமூர்த்தி : தலைவரவர்களே, ஓட்டுநர்களில் பல பேர்களை (Temporary) தற்காலிகமாக எடுப்பதால், அவர்கள் முழு அளவிற்கு பொறுப்பில்லாமல், பேருந்துகளை வழி நடத்திச் செல்லும் நிலையில் பெரும்பாலான விபத்துக்கள் ஏற்படுகின்றன என்று தகவல் கிடைத்திருக்கிறது. அதைப்பற்றி அரசு பரிசிலனை செய்து, அதை மாற்ற அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : ஓட்டுநர்கள் கிடைக்காத காரணத்தால் முதலிலே அப்படி எடுத்துக் கொண்டிருந்தார்கள். கடந்த 2½ ஆண்டுகளாக அந்தச் சூழ்நிலைகளை மாற்றி, டெம்பரரியாக எடுப்பதை மாற்றியிருக்கிறோம்.

திரு. ப. மாணிக்கம் : ஹெவி வெகிகிள் லைசன்ஸ் பெறாதவர்களைக்கூட பேருந்துகளை ஓட்ட அனுமதித்திருக்கிறார்கள். அதனால் நானே விபத்திற்குள்ளானேன். அப்படிப்பட்ட நிலை ஏற்படாமலிருக்க அரசு போக்குவரத்துக் கழகங்கள் கவனித்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : ஹெவி வெகிகிள் லைசன்ஸ் பெறாதவர்களை நிச்சயமாகப் போக்குவரத்துக் கழகங்களில் நியமிப்பது என்பது நடந்திருக்க முடியாததாகத்தான் இருக்கும். மாண்புமிகு உறுப்பினரவர்கள் விபத்திற்கு உள்ளாகிவிட்டார்கள் என்று சொன்னார்கள். அந்தப் பேருந்து அரசுக்குச் சொந்தமான பேருந்தாக இருந்தால், கடுமையான நடவடிக்கை எடுக்க வாய்ப்புண்டு. எப்படிப்பட்ட சூழ்நிலையில் அது நடந்தது என்பது தெரியவில்லை.

திரு. ப. மாணிக்கம் : நவம்பர் 27, காரைக்குடியிலிருந்து திருப்பத்தூருக்கு தேர்தல் நேரத்தில் சென்றபோது விபத்து நடந்தது. அரசுப் பேருந்து—நகரப் பேருந்து. ஓட்டி வந்த டிரைவர் ஹெவி வெகிகிள் லைசென்ஸ் இல்லாதவர். நேரடியாக வந்து மோதியதன் காரணமாக, அனுபவம் இல்லாததால், பிரேக் போடுவதற்கு பதிலாக, ஆக்சிலரேட்டரை மிதித்து விட்டார். அரசுப் பேருந்தில் நடந்திருக்கிறது. எப்படி இவைகளை அனுமதிக்கிறார்கள் என்பதை அமைச்சரவர்கள் பரிசிலிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : எந்த ஆண்டு என்று சொல்லவில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : திருப்பத்தூர் தேர்தல் என்று சொல்லியிருக்கிறார்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தேர்தல் நேரமாக வேறு இருந்திருக்கிறது. இதுவரை இதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லாமல் இருந்தது வருத்தமாக இருக்கிறது. இது குறித்து நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். ஹெவி வெகிகிள் லைசன்ஸ் இல்லாதவர் ஓட்டுநராக இருக்க முடியாது. வந்த ஓட்டுநர், அவரிடம் கொடுத்தாரோ என்பது சந்தேகமாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்களிடம் குறிப்புகளை வாங்கி, கடுமையான நடவடிக்கைகள் எடுக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

உடுக்குறியிடாத வினாக்கள்.

மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள்.

5. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

15—6—1980 நாளன்றுள்ளபடி மேல் நிலைப் பள்ளிகளில் நியமிக்கப்பட்டுள்ள தலைமை ஆசிரியர்களில் (i) முதுகலைப் பட்டம் பெறாதவர்கள், (ii) முதுகலைப் பட்டம் பெற்றவர்கள், எத்தனை பேர் ?

விடை—15-6-1980 நாளன்றுள்ளபடி மேல்நிலைப் பள்ளிகளில் நியமிக்கப்பட்ட தலைமை ஆசிரியர்களில்,

(i) முதுகலைப் பட்டம் பெறாதவர்கள்—480 பேர்.

(ii) முதுகலைப் பட்டம் பெற்றவர்கள்—606 பேர்.

[1982 ஏப்ரல் 2

பள்ளித் துணை ஆய்வாளர்கள்.

6. வினா—திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

கல்வித் துறையில் பள்ளித் துணை ஆய்வாளர் பதவியில் 1982 ஆம் ஆண்டு ஜூலை முதல் தேதியன்று மூன்று ஆண்டுக்கு மேலும் ஒரே இடத்தில், அதே பதவியில் நீடிப்பவர்கள் மாவட்ட வாரியாக எத்தனை பேர்கள்?

விடை—

மாவட்டம்	நபர்களின் எண்ணிக்கை
புதுக்கோட்டை	1
சேலம்	1
தர்மபுரி	1
செங்கல்பட்டு	1
திருச்சிராப்பள்ளி	2
தென் ஆற்காடு	1

துணைக் கல்வி அதிகாரிகள்.

7. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1—12—1981 தேதியில் பணியாற்றும் துணைக் கல்வி அதிகாரிகள் (Assistant Educational Officers) எத்தனை பேர்?

(இ) இவர்களில் 'ஏ' பிரிவு, பி பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர்?

விடை—

(அ) 366.

(இ) 'ஏ' பிரிவைச சேர்ந்தவர்கள் 181.

'பி' பிரிவைச் சார்ந்தவர்கள் 185.

Bonded Labourers, who were assigned Lands for Cultivation

8. Q.—THIRU K. RAMAMOORTHY: Will the Hon. the Minister for Adi Dravidar Welfare be pleased to state:

(a) the number of Bonded Labourers, who were assigned lands for cultivation during the Emergency and thereafter; and

(b) the number among them, who are engaged in direct cultivation in those lands?

1982 ஏப்ரல் 2]

விடை—

அவைமுன் ஓர் விவர அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

2. அறிவிப்புகள்.

(1) பேரவையிலிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, அரசியலமைப்பு சட்டப்படி பணச் சட்ட முன்வடிவு என பேரவைத் தலைவரால் தீர்மானிக்கப்பட்டு இம்மேலவையின் பரிந்துரைக்காக பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 62/81) மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்.

(2) ஆளுநரிடமிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: ஆளுநர் அவர்கள் கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளை ஆய்விற்கு எடுத்துக் கொள்வதற்கு தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு பயிர்களுக்குக் கேடு விளைவிக்கத்தக்க பூச்சிகளையும் நோய்களையும் பற்றிய (திருத்த) சட்ட முன்வடிவு.

2. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப்படுத்தலும்) திருத்தச் சட்ட முன்வடிவு.

(1) பேரவையிலிருந்து செய்தி—தொடர்ச்சி.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட சட்ட

@ 113-115 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

முன்வடிவுகளின் பிரதிகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன் :—

1. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு பயிர்களுக்குக் கேடு விளைவிக்கத்தக்க பூச்சிகளையும் நோய்களையும் பற்றிய (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 65/1981).

2. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப்படுத்தலும்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 66/1981).

3. கவன ஈர்ப்பு.

(1) சென்னை எஸ். ஐ. இ. டி. கல்லூரி அருகில் 18—3—1982 அன்று மாலை ஏற்பட்ட கோர பஸ் விபத்தில் மூன்று பேர்கள் உயிரிழந்ததும், பலர் காயமுற்றதும் குறித்து.

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

"சென்னை, தேனாம்பேட்டையில் அண்ணா சாலை பாரதிதாசன் சாலை சந்திப்பில் (எஸ்.ஐ.இ.டி. கல்லூரி அருகில்) 18-3-1982 அன்று மாலை ஏற்பட்ட கோர பஸ் விபத்தில் மூன்று பேர்கள் உயிரிழந்ததும், பலர் படுகாயமுற்று மருத்துவ மனையில் உயிருக்குப் போராடியதும் குறித்து".

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, ஒரு விவர அறிக்கை @ அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆ. நல்லசிவன்: தலைவரவர்களே, குறிப்பிட்ட இந்த பஸ் அதிக வேகமாக ஓட்டப்பட்டது என்பது பற்றி வேகக் கட்டுப்பாடு மீட்டர் என்ன காட்டியது என்பதை அறிய விரும்புகிறேன். 4½ மாத அனுபவமுள்ள டிரைவரை சென்னை போன்ற நகரத்தில் நியமிப்பது நல்லதா ? அதிக அனுபவமுள்ளவர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா !

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, அந்த வண்டியில் வேகக் கட்டுப்பாட்டுக் கருவி பொருத்தப்பட்டுள்ளது. அருகாமையில் இருந்த பஸ் ஸ்டாப்பிலே நின்றுதான், எடுத்திருக்கிறார்கள். எனவே அந்த இடத்தில்

@ 963-966ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

அதிக வேகம் இருக்க வாய்ப்பில்லை. ஓட்டுநரின் கவனக் குறைவால்தான் இது நடந்திருக்கிறதென்று சொல்லியிருக்கிறார்கள். ஓட்டுநர்கள் எல்லா நேரங்களிலும் இப்படி இருந்து விடுவதில்லை. நாம் பயிற்சி கொடுத்து, அதற்குப் பின்புகூட நாம் பேருந்துகளை ஓட்டுவதற்கு எடுக்கும்போது எப்படியெல்லாம் ஓட்ட வைத்துப் பார்த்து எடுக்கிறோமோ, அப்படித்தான், பயிற்சி முடிந்த பிறகு, தேர்ச்சி பெற்றிருக்கிறார்களா என்று பார்த்துதான் எடுக்கிறோம். இருந்தாலும் சில நேரங்களில் இப்படிப்பட்ட தவறுகளுக்குள்ளாகி விடும்போது அது தவிர்க்க முடியாததாகி இருக்கிறது. இருந்தாலும்கூட அதை இன்னும் சரி செய்வதற்காக வேகமான நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. ஆ. நல்லசிவன் : தலைவரவர்களே, சாதாரணமாக இப்படிப்பட்ட விபத்துக்களில் இறந்து போகிறவர்களுக்கு, காயமுற்றவர்களுக்கு போக்குவரத்துக் கழகங்கள் எவ்வளவு நஷ்ட ஈடு தருகின்றன என்பதை அறிய விரும்புகிறேன். அந்த நஷ்ட ஈடு சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்க போக்குவரத்துக் கழகம் உத்தரவு பிறப்பித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : இப்படி ஏற்படும் விபத்துக்களில் இறந்து விடுபவர்களுக்கு போக்குவரத்துக் கழகங்கள் எவ்வளவு நஷ்ட ஈடு தர வேண்டுமென்பதை ஒட்டுமொத்தமாகச் சொல்லிவிட முடியாது. நிலைமைகளுக்கேற்ப அவர்கள் வழக்கு மன்றத்திற்குப் போகிறார்கள். வழக்கு மன்றத்தில் என்ன முடிவு செய்கிறார்களோ அதற்குக் கட்டுப்பட்டு கொடுக்கிறோம். சில நேரங்களில் வழக்கு மன்றத்திற்குப் போவதற்கு முன்னால்கூட நேரடியாகப் பேசி, இருக்கின்ற சூழ்நிலைகளுக்கேற்ப கொடுக்கிறோம். சட்டப்படி என்ன செய்ய வேண்டுமோ, அதற்கு அரசு தயாராக இருக்கிறது.

(2) வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மாடப்பள்ளி அருகில் களரூர் என்ற இடத்தில் விவசாயத்திற்குப் பயன்படும் காளை மாடுகள் மற்றும் பசு மாடுகள் கொல்லப்பட்டு, அண்டை மாநிலங்களுக்கு அனுப்பப்படுவது குறித்து.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

" வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மாடப்பள்ளி அருகில் களரூர் என்ற இடத்தில் விவசாயத்திற்குப் பயன்படும் காளை மாடுகள் மற்றும் பசு மாடுகள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டு அண்டை மாநிலங்களுக்கு அனுப்பப்படுவது குறித்து ".

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, விவர அறிக்கை @ அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவரவர்களே, நான் 2, 3 வாரங்களுக்கு முன்பு அந்தப் பகுதிக்குச் சென்று, ஆசிரியர்களை நேரில் சந்தித்த போது, நண்பர்கள் இந்த இடத்திற்கு அழைத்துச் சென்று அங்கு நடப்பதை நான் நேரிலே பார்த்த பிறகுதான், கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறேன். அமைச்சரவர்கள் கொடுத்த அறிக்கையில் அங்கு நடைபெறுவது ஓரளவிற்கு ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. அது குறித்து நடவடிக்கை எடுப்பதற்காக அமைச்சரவர்களையும், துறையினரையும் பாராட்டுகிறேன்.

(பிற்பகல் 10-20)

ஆனால் கொடுக்கப்பட்டிருக்கிற விவரத்தில் சில தகவல்கள் விடப்பட்டிருக்கின்றன. ஒரு வாரத்திலே இரண்டு நாட்கள் மாடுகள் வெட்டப்படுகின்றன. சராசரி ஒரு நாளில் 500 மாடுகள் வெட்டப்படுகின்றன. பல்வேறு காரணங்களுக்காக பயன்படுகின்ற மாடுகளையும் சந்தைகளிலிருந்து வாங்குகிறார்கள். அப்படி வாங்கிய பசுக்களை வெளி மாநிலங்களுக்கு மாடுகளாகக் கொண்டு செல்வதில் இடையூறு இருப்பதால், கள்ளத்தனமாக அவைகளை வெட்டி இறைச்சியை எடுத்துச் செல்கிறார்கள். அதுகூட அறிக்கையில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. கள்ளத்தனமாக இப்படி மாடுகளை வெட்டுவதை அறிக்கையிலேயே ஒப்புக்கொண்ட பிறகு, அத்தகையவர்கள் மீது எத்தகைய நடவடிக்கை சட்டப்பூர்வமாக எடுக்கப்பட்டிருக்கிறது என்று நான் அறிய விரும்புகிறேன். அத்தகையவர்கள் மீது வழக்கு ஏதாவது போடப்பட்டிருக்கிறதா ? அதுபற்றிய விவரங்கள் ஒன்றும் இந்த அறிக்கையில் இல்லை. அதுபற்றி அறியலாமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற விவரங்களின் அடிப்படையில் தான், இங்கு குறிப்பு வைக்கப்பட்டிருக்கிறது. மாடுகளைக் கொன்று கொண்டிருக்கிற நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இங்கு மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிறார். இப்படி பசுக்களையும், பசுக் கன்றுகளையும் எருமைக் கன்றுகளையும் கொல்லுவதையும், கொன்று வெளி மாநிலங்களுக்கு அனுப்புவதையும் தடுக்கும் பொருட்டுதான் ஒரு சட்ட முன்வடிவை சட்டமன்றப் பேரவையின் முன்

@ 966 968 அம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது

அறிமுகப்படுத்தியுள்ளோம். அது சட்டமாகும்போது, நல்ல முறையில் இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : குறிப்பிட்ட இந்தச் சம்பவம் குறித்து இப்போது நல்ல முறையில் அரசுக்கு வெளிப்படுத்தியுள்ளதால், குறிப்பிட்டபடி கள்ளத்தனமாக மாட்டை வெட்டும் தொழிலில் ஈடுபட்டிருக்கிற சம்பந்தப்பட்டவர்கள் மீது இப்போது இருக்கின்ற சட்டங்களைப் பயன்படுத்திக் கொண்டு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். உடனே இத்தகைய காரியங்களை நிறுத்துவது சம்பந்தமாக ஊராட்சி ஒன்றிய ஆணையருக்குத் தேவையான குறிப்புகள் அனுப்பப்பட்டுள்ளதாக குறிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவர் அவ்வாறு நடவடிக்கை எடுத்து இத்தகைய செயலைத் தடுத்து நிறுத்தி விட்டாரா என்பது குறித்து ஒன்றும் இந்தக் குறிப்பில் தெரிவிக்கப்படவில்லை. அது குறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா !

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : அத்தகைய நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறார்கள் என்றுதான் அறிக்கையில் இருக்கிறது.

4. அரசின் தீர்மானம்.

செங்கற்பட்டு மாவட்டம் திருத்தணி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள திருத்தணி பேரூராட்சியின் தற்போதைய பகுதிகளை ஒரு நகரியமாக அறிவிப்பது குறித்து.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவரவர்களே,

" தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 4-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவினையொட்டி, செங்கற்பட்டு மாவட்டம் திருத்தணி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள திருத்தணி பேரூராட்சியின் தற்போதைய பகுதிகள் நிறுவனக் குடியிருப்பாக இருப்பதால், அதனை ஒரு நகரியமாக அறிவிப்பதென அவை தீர்மானிக்கிறது "

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

" தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 4-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவினையொட்டி, செங்கற்பட்டு மாவட்டம் திருத்தணி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள திருத்தணி பேரூராட்சியின் தற்போதைய பகுதிகள் நிறுவனக் குடியிருப்பாக இருப்பதால், அதனை ஒரு நகரியமாக அறிவிப்பதென அவை தீர்மானிக்கிறது "

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

5. அரசின் சட்ட முன்வடிவுகள்.

(1) தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 62/1981)

THIRU K. RAMAMOORTHY: Sir, I rise on a point of order.

(மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் எழுந்தார்.)

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் உட்காரலாம். உறுப்பினர் சொல்லட்டும்.

* திரு. க. இராமமூர்த்தி: தாங்கள் வேறு விதமாக இந்தச் சட்ட முன் வடிவை நிறைவேற்ற விரும்பினாலொழிய, இதற்குக் குறைந்தபட்சம் 3 நாள் கால அவகாசம் தேவை. வேறு விதமாக விரும்புகின்ற அதிகாரம் மாண்புமிகு தலைவரவர்களுக்கு இருந்தாலும் கூட, இது மனி பில் ((Money Bill) என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். ஒவ்வொரு முறையும் தாங்கள் இந்த அதிகாரத்தைப் பயன்படுத்துவதன் மூலம் நாங்கள் பெருத்த கால அவகாச நெருக்கடிக்கு ஆளாகிறோம். பணம் சம்பந்தப்பட்ட இந்த மசோதாவில் நாங்கள் பூரணமாக, முழுமையாக எங்கள் கருத்துக்களைச் சொல்லுவதற்கு வாய்ப்பளிக்க வேண்டும். எங்களை முழுமையாக இதிலே ஈடுபடுத்தி, முழுமையான அளவில் அரசுக்கு ஆலோசனை சொல்லி, மேல் நடவடிக்கைக்கு எங்களுடைய ஆலோசனைகள் உதவுவதற்கு வாய்ப்பளிக்க வேண்டும். அதற்கு சந்தர்ப்பம் இல்லாமல் இருப்பதைத் தவிர்க்க வேண்டும். இன்னொரு நாளைக்கு இதுபற்றி விவாதிக்க தேதி கொடுத்து, எங்களையும் அதற்கு அழைக்க வேண்டும். இன்னொன்றையும் சொல்கிறேன். இப்படி மசோதாக்கள் வரும்போது, பெரும்பாலான மசோதாக்களைப் பொறுத்த வரையில், இருக்கிற நிலைமை என்னவென்றால், எங்களுக்கு அசல் சட்டம் கிடைப்பதில்லை. குறிப்பாக இந்த மனி பில்லைப் (Money Bill) பொறுத்தவரையிலும்கூட, இதுபற்றி முழுமையாகத் தெரிந்துகொள்ள அசல் சட்டம் கிடைக்கவில்லை. பலமுறை இதுபற்றி இந்த அவையில் நான் சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இந்த விஷயம் பற்றி உறுப்பினர் விவாதத்தின்போது சொல்லலாம். இதுபற்றி அலுவல் ஆய்வுக் குழுவில் ஆலோசிக்கப்பட்டது. இந்த மசோதாவைக் கொண்டு வருவதற்கான நாள் கூட நிர்ணயித்தாகிவிட்டது. 31—3—1982 அன்று இது உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இரண்டு நாள் அவகாசம் இருந்திருக்கிறது. ஆனால் அவகாசம் போதுமானதல்ல என்று உறுப்பினர் அவர்கள் கருதினால், அது வேறு விஷயம்.

திரு. க. இராமமூர்த்தி: அசெம்பிளியில் நிறைவேற்றப்பட்ட பிறகு சில மாற்றங்கள் வந்திருக்கலாம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: சம்பிரதாயமாக உறுப்பினர் இப்படிச் சொல்கிறார். உறுப்பினர்களின் உரிமையைப் பாதுகாப்பதில் நான் பூரண ஒத்துழைப்பு தருகிற வகையிலே இருக்கிறேன். இதில் அவ்வளவு குற்றச் சாட்டுக்கு ஒன்றும் இடமில்லை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 62/1981) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 62/1981) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

மாண்புமிகு மேலவைத் தலைவர்: திரு. ஏ. ஆர். தாமோதரன்.

* திரு. க. இராமமூர்த்தி: மீண்டும் நான் ஒரு ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப விரும்புகிறேன். இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில், இது 'மனி பில்' ஆக இருப்பதால் இதிலே சில மாற்றங்களை ஏற்படுத்துகிற போது, இது அசல் சட்டத்திலிருந்து எப்படி மாறுபடுகிறது என்பதற்கான காரணங்களை விளக்கி அதன் நகலைக் கொடுத்திருக்க வேண்டும். இல்லா விட்டால் அதற்குப் பொறுப்பேற்றுள்ள அமைச்சர் ஏன் மாற்றங்கள் செய்கிறார்கள், என்ன அவசியத்தின் பேரில் செய்கிறார்கள், ஏன் இப்படி திடீரென்று மாற்றம் செய்கிறார்கள் என்பதற்கான விவரங்களைத் தந்திருக்க வேண்டும். நூலகத்தில் (Library) இதனுடைய அசல் சட்டங்கள் இல்லாத நிலையில், இதனுடைய பின்னணியைப் (Background)

@ 968–975 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. க. இராமமூர்த்தி] [1982 ஏப்ரல் 2

பற்றி அறிந்துகொள்ள முடியாத நிலையில் நாங்கள் இதிலே கலந்து கொள்ளும்படி அரசுத் தரப்பிலிருந்து எங்களைக் கட்டாயப்படுத்துகிற நிலை இருக்கிறது. அந்த வகையில் எங்களுக்கு வேண்டிய தகவல்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தர வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதாவது சொல்கிறார்களா ?

மாண்புமிகு திரு. எஸ் டி சோமசுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்கள் அமைச்சர் முன்னுரையாகச் சொல்ல வேண்டுமென்று கேட்டதால், அதைப் பற்றி நான் சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் நிலை என்ன என்று தான் கேட்டேன். அவர்கள் சொல்ல விரும்பினால், முன்னுரையாகச் சொல்லலாம். அப்படிச் சொல்வதில் எனக்கு ஒன்றும் ஆட்சேபணையில்லை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, முன்னுரை யாக்ச் சிலவற்றை நான் சொல்ல விரும்புகிறேன். அப்படி சிலவற்றை நான் சொல்ல விரும்புகிறபோது, இந்தச் சட்ட முன்வடிவு பற்றியும் ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராம மூர்த்தி அவர்கள் எழுப்பிய பிரச்சினை பற்றி தாங்கள் தீர்ப்பு அளித்த போதிலும், அதற்குப் பிறகும் அவர்கள் இதுபற்றி விளக்க வேண்டுமென்ற எண்ணத்தை இங்கே சொன்னார்கள். அந்த வகையில் நான் இதுபற்றி விளக்கிச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இது போன தொடர் கூட்டத் திலேயே பேரவையிலே அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு சட்ட முன்வடிவு. அப்படி அதை அறிமுகப்படுத்தியபோது, அதுபற்றி நடந்த உண்மை நிலை என்ன என்பதுபற்றியும் சொல்கிறேன். பொதுவாக இன்றைக்கு பாராளு மன்ற நடைமுறையிலே என்ன நடைபெறுகிறது என்பதையும் சொல்கிறேன். பொதுவாக நாடாளுமன்றத்திலே மசோதாவை அறிமுகப்படுத்துகிறபோது, ராஜ்ய சபை உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் பேசப்படுகிற எண்ணங் களையெல்லாம் படித்துத் தெரிந்து வைத்துக் கொள்கிறார்கள். அந்த வகை யில் இந்த மசோதாவும் சென்ற கூட்டத் தொடரிலேயே சட்டமன்றப் பேரவை யிலே அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் 2 தினங்களுக்கு முன்புதான் இது நிறைவேற்றப்பட்டிருக்கிறது. முறையாகப் பேரவையிலே நிறைவேற்றப்பட்ட பிறகு, தொடர்ந்து இந்த அவைக்கு அது வந்திருக்கிறது. வேண்டுமானால் கால அவகாசம் போதவில்லையென்று கருதினால், மேலவைத் தலைவர் அவர் களும் இங்கே இருக்கிற அலுவல் ஆய்வுக் குழுவினரும் பேரவையில் நிறை

1982 ஏப்ரல் 2] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

வேற்றப்பட்ட பிறகு, ஒரு வாரம் கழித்து, அதாவது 1 வாரம் லீவு விட்டு, அதன் பிறகு, இதை இங்கே விவாதத்திற்கு எடுப்பதில் அரசுத் தரப்பில் ஆட்சேபனை இல்லை. ஏனென்று சொன்னால், ஒரு சட்ட முன்வடிவு கொண்டு வரப்படுகிறது என்று சொன்னால், அதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாகப் படித்துப் பார்த்து புரிந்து, அதை ஆராய்ந்து அதற்குப் பிறகு அதைப்பற்றி விளக்கங்களைச் சொல்கிறபோதுதான், அது முழுமை பெறும். அந்த அடிப்படையில் சொல்லப்படுகின்ற கருத்துக்களும் அரசுக்கு உதவியாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். அப்படி இல்லாமல், சில விவாதங்கள் முழுமையாக இல்லாமல், பூரணமாகப் புரிந்துகொள்ள முடியாமல், இங்கே படித்துவிட்டு அரை குறையாக உறுப்பினர்கள் சொல்லும்போது எனக்கு உள்ளபடியே பதில் சொல்வதில்கூட சங்கடம் இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமை இன்றைக்கு இல்லாமல் இருப்பதால், மீண்டும் சட்டத்தைப் பற்றி இங்கு முன்னுரை சொல்ல வேண்டிய நிலை எனக்கு ஏற்படுகிறது. இதை நான் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-30)

அடுத்தபடியாக, இந்தச் சட்ட முன்வடிவில் அதிகமான மாற்றங்கள் ஏது மில்லை. கெய்வார் கமிட்டி கொடுத்த அறிக்கையில் 116 விதமான சிபாரிசுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதற்கு முன்னால் 99 சிபாரிசுகளை இந்த அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. இன்றைய தினம் சுமார் 8 அல்லது 9 சிபாரிசுகளை யும் இந்த அரசு ஏற்றுக்கொண்டு அதை நடைமுறைப்படுத்துவதற்காக இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

இப்படி நடைமுறைப்படுத்தும்போது, ஒன்றைக் குறிப்பிட வேண்டும் என்று நினைக்கிறேன். வியாபாரிகள், ஏற்கெனவே கொடுக்கப்பட்டிருக்கிற விளக்கங்களின் அடிப்படையில் வரியை வசூலிக்கிறார்கள். சில நேரங்களில் அந்த விளக்கங்களின் அடிப்படையில் குறைவாகவோ, அதிகமாகவோ வரியை வசூலித்து விடுகிறார்கள். சில நேரங்களில் வசூலிக்காமல் விட்டு விடுகிறார்கள். அவ்வாறு வியாபாரிகளே வரி வசூல் செய்யாதபோது, அரசு அவர்களிடம் வரி வசூலிப்பது சரியில்லை என்ற அடிப்படையில் அந்தத் தொகையைத் தள்ளுபடி செய்வதற்கு அதிகாரம் இருக்கிறது. இதுவரை அரசு அதை ஒரு 'எக்சிகியூட்டிவ்' ஆர்டர் மூலமாகத் தள்ளுபடி செய்து வந்தது. 1967-98 லிருந்தே இந்த முறைதான் கையாளப்பட்டு வந்திருக்கிறது. அப்படி அரசுக்குச் சேர வேண்டிய வரியை அல்லது அபராதத்தைத் தள்ளுபடி செய்யும் அதிகாரம் அரசுக்கு இருந்தாலும், அதை அறிவிப்பின் மூலம் தள்ளு

படி செய்திருந்தாலும், அல்லது அறிக்கை மூலம் தள்ளுபடி செய்தாலும், அவற்றை நாம் சட்ட மன்றத்தில் வைக்க வேண்டும், சட்டமன்றத்தின் ஆய்வுக்கு அதை உட்படுத்த வேண்டும் என்ற வகையில் இப்போது திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். நீண்ட காலமாகவே அரசுக்கு வர வேண்டிய வரியைத் தள்ளுபடி செய்யும்போது அல்லது அபராதத்தைத் தள்ளுபடி செய்யும்போது, அவைகளை மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வராமலே இருந்தோம். இப்போது அவைகளை மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அவற்றின் முன் வைக்க வேண்டும் என்று சொல்வது ஒரு முற்போக்கான அம்சம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

மற்றொரு புதிய அம்சத்தைப்பற்றியும் நான் குறிப்பிட விரும்புகிறேன். புதிதாகப் பல வியாபாரிகள் பதிவு செய்து கொள்கிறார்கள். அதனால் நன்மை ஏற்படுகிறது என்ற காரணத்தால், பதிவு செய்துகொள்ள வேண்டும் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று விரும்பினால், செய்து கொள்ளலாம். என்று சொல்லுகிறோம். "It may" என்றுதான் இருக்கிறது. இதற்கு முன்னால் பதிவு செய்ய வேண்டுமென்றால், சாமான்களை வாங்கினார்களா விற்றார்களா என்ற கணக்கைக் காட்ட வேண்டும். ஆனால் இப்போது வியாபாரிகள் விரும்பினால், பதிவு செய்துகொள்ளலாம் என்ற வாய்ப்பைக் கொடுத்திருக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சிலர் வியாபாரம் செய்கிறார்கள், எதிர்பாராத நிலையில் அவர்கள் இயற்கை எய்திவிட்டால், அவர்களுடைய குழந்தைகள்—அவர்கள் மைனர்களாக இருந்தால்—அவர்கள் பெயரில் வியாபாரத்தைச் செய்வதற்குச் சங்கடங்கள் இருக்கின்றன. எனவே அப்படிப்பட்ட நிலையில் 'கார்டியன்' பெயரில் இதைப் பதிவு செய்துகொள்கிற முறையை இன்றைய தினம் ஏற்பாடு செய்திருக்கிறோம்.

(மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி பேச எழுந்தார்).

நான் பேசி முடித்துவிடுகிறேன். பிறகு நீங்கள் ஏதாவது கேட்பதாக இருந்தால் கேட்கலாம். இப்போது என்னைப் பேச விடுங்கள்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: நான் பேசுவது வேறு அல்ல. நேரம் வீணாகக்கூடாதேயென்றுதான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இராம மூர்த்தி அவர்கள் முன்னுரையாகச் சொல்லி சிலவற்றைப் பொறுத்தவரை பதில் கேட்டார். அதற்குத்தான் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார். உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் ஏதாவது கேட்க வேண்டுமென்று விரும்பினால், அமைச்சர் பேசி முடித்த பிறகு கேட்கலாம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: நான் சொல்வதால் நேரம் வீணாகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதினால், அதற்கு நான் காரணமல்ல. முன்னுரையாகச் சிலவற்றைச் சொல்ல வேண்டும் என்று விரும்பியதால், நான் சிலவற்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். ஏதாவது சொல்ல வேண்டுமென்றால், நான் பேசிய பிறகு பேசலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் என்ன சொல்ல விரும்புகிறார் என்றால், 'நான் சொல்ல வேண்டியதைச் சொன்னால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அளவுக்கு விளக்கம் சொல்ல வேண்டிய அவசியமே இருக்காது" என்பதுதான்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களுக்கு மட்டும் பதில் சொல்வதாக இருந்தால், இதையெல்லாம் நான் சொல்லாமல் இருக்கலாம். ஆனால் இங்கே இருக்கிற மாண்புமிகு மற்ற உறுப்பினர்களுக்கும், இங்கே இல்லாத பொதுமக்களுக்கும் செய்தித் தாள்கள் வழியாகச் சிலவற்றை விளக்கமாகச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: தற்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களுக்குத் திருப்திதானே?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இன்றைக்குப் புதிதாக பலர் பதிவு செய்கிறார்கள். முன்பு என்ன முறை இருந்தது என்றால், அதற்கு எவ்வளவு தொகை கட்டணமாகக் கட்ட வேண்டும் என்று அதிகாரிகள்தான் நியமித்தார்கள். அதில் சில சங்கடங்கள் இருப்பதால், அந்தத் தொகையை வியாபாரிகளே நிர்ணயிக்கலாம் என்று இந்தச் சட்ட முன்வடிவின் மூலம் ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம்.

அடுத்து, இதற்கு முன்னால் அரசு அதிகமாக ஒரு வியாபாரியிடமிருந்து பணத்தை வரியாக வசூல் செய்திருந்தால், திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று மட்டும்தான் இருக்கிறது. அப்படித் திருப்பிக் கொடுக்கப்படுவதற்கு எந்த விதமான கால வரையறையும் இல்லாமல் இருந்தது. அரசு எப்போது

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1982 ஏப்ரல் 2

அதை வேண்டுமானாலும் கொடுக்கலாம் என்ற நிலைதான் இருக்கிறது. வேண்டிய தொகையை மாற்றி வியாபாரிகளுக்குத் திருப்பிக் கொடுக்கப்பட அது ரூபாய் 100-க்கு மேல் இருந்தால் அதை மூன்று மாதத்திற்குள், அதாவது 90 நாட்களுக்குள் கொடுக்கவேண்டும். அந்த வகையில் 3 மாதத்திற்குள் திருப்பிக் கொடுக்காவிட்டால், அரசு 12 சதவீத வட்டியைச் சேர்த்து வியாபாரி களுக்குக் கொடுக்க வேண்டும் என்று இப்போது வழிவகை செய்திருக்கிறோம். இப்படி ஒரு முற்போக்கான முறையில் இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம். வியாபாரிகளிடம் அதிகமான தொகையை வசூலித்து விட்டு அதை எப்போது வேண்டுமானாலும் திருப்பிக் கொடுக்கும் நிலை இருக்கக் கூடாது, அதை 3 மாதத்திற்குள் கொடுக்க வேண்டும். இல்லை யென்றால் 12 சதவிகிதம் வட்டி போட்டு கொடுக்க வேண்டும் என்று கொண்டு வந்திருக்கிறோம்.

அடுத்து, காலதாமதம் செய்யப்பட்டால், அதற்கு அபராதம் என்று விதிக் கப்பட்டிருக்கிறது. அதை மாற்றி வட்டி என்று கொண்டு வந்திருக்கிறோம். இப்படி செய்வார் கமிட்டியால் கொடுக்கப்பட்ட அறிக்கையின் பேரில், வியாபாரி களின் சங்கடங்களைத் தீர்க்கும் வகையில் முற்போக்கான முறையில் இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது. புதிதாக எந்த வரியும் போடப்படவில்லை, புதிதாக எந்தத் தள்ளுபடியும் செய்யவில்லை. நிர்வாகச் சிக்கல்கள் காரணமாக இருக்கிற குறைபாடுகளைச் சரிப்படுத்துவதற்காகத் தான் இதனைக் கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : அமைச்சருக்கு நேரம் வீணாகக் கூடாது என்பதற்காகத்தான் நான் குறுக்கிட விரும்பினேன். திரு. இராமமூர்த்தி அவர்கள் இங்கே பேசும்போது அமைச்சர் அவர்கள் முன்னுரையாகச் சில வற்றைச் சொல்ல வேண்டும் என்று விரும்பியதற்கு ஒரு காரணத்தைச் சொன்னார். சட்டத்தில் தற்போது இருக்கும் பிரிவு என்ன, இதற்கு என்ன திருத்தத்தைக்கொண்டு வருகிறோம், என்பதற்கான விளக்கத்தைத் தந்தால், நன்றாக இருக்கும் என்றார். ஏற்கெனவே அது இந்த வகையில் அச்சடிக்கப் பட்டு தரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் இங்கே குறிப்பிட்ட அனைத்துமே அச்சடிக்கப்பட்டு தரப்பட்டிருக்கிறது. இதைப் படிப்பதற்கு பதிலாக மறுபடியும் அதையேச் சொல்லிக்கொண்டிருக்க வேண்டாம் என்பதற் காகத்தான் நான் குறுக்கிட விரும்பினேனே ஒழிய, அமைச்சர் அவர்கள் நேரத்தை வீணாக்குகிறார்கள் என்று சொல்லவில்லை.

1982 ஏப்ரல் 2]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு திரு. வீராசாமி அவர்கள் எப்போதும் என் பக்கமாகத்தான் பேசுவார். இது குறித்து நான் முதலிலேயே நன்றி தெரிவித்திருக்க வேண்டும். மன்னிக்க வேண்டும். இப்போது தெரிவித்துக்கொள்கிறேன்.

* திரு. க. இராமமூர்த்தி : பல நாட்களாக நான் இதைப் பார்த்து வந்திருக் கிறேன். இரண்டு பேருமே சமயத்தில் ஒன்றாகி விடுகிறார்கள். நான் கேட்க விரும்பியதெல்லாம் இதுதான் இதற்கு என்ன 'பேக் கிரவுண்டு" என்பது நமக்குத் தெளிவாக்கப்பட வேண்டும். ஒரு குறிப்பிட்ட திருத்தத்தைப் பொறுத்தவரையில், இதற்கான மூல விதி என்ன என்பது நமக்குத் தெரிய வேண்டும். இப்போது முன்னே இருக்கும் விதி என்ன, கொண்டு வரப்பட் டிருக்கிற திருத்தம் என்ன என்பதைப்பற்றி மட்டும் இங்கே கொடுத்திருக்கிறார் கள். We must know the background முழுமையான சட்டப் பிரதி நமக்குத் தரப்படாமல் இது முடியாது என்றுதான் குறிப்பிடுகிறேன்.

ஒரு பிரிவைச் சொல்லி அதற்கு இந்தத் திருத்தம் தேவைப்படுகிறது என்று மட்டும் சொல்லிவிட்டால் போதாது. The aim of the Chapter என்ன என்பது நமக்குத் தெரியாத நிலையில் இப்படி வெறும் திருத்தத்தை மட்டும் உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பது சரியல்ல. எடுத்தெறிகிற வகை யில் ஒரு தேவையைச் சொல்லி அந்தப் பிரிவுக்கு இந்தத் திருத்தம் வருகிறது. அதற்கு இது தேவைப்படுகிறது என்று சொல்வது சரியல்ல என்பதைத்தான் தெரிவிக்க விரும்புகிறேன். இது ஒரு முக்கியமான சட்டத் திருத்தம். இந்த மாநிலத்தின் பொருளாதாரத்தைப் பொறுத்த சட்ட முன்வடிவு. எனவே இதுதான் பிரிவு, இதுதான் திருத்தம் என்று அச்சிட்டுக் கொடுக்காமல் இந்தச் சட்ட முன்வடிவின் Background பின்னணி என்ன என்பதைத் தெரிவிக்க வேண்டும். இப்படி ஒரு Basic அடிப்படை விவர மில்லாமல் விவாதிப்பது சரியல்ல. 'இது ஒரு' (Basic) necessity அல்லது Basic Principle ஏற்கெனவே மூலச் சட்டத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது, இந்தத் திருத்தத்தின் மூலமாக என்ன விளைவு கள் ஏற்படும், இப்போதிருக்கும் சட்டத்தில் என்ன சங்கடம் இருக்கிறது என்பதையெல்லாம் விளக்கியிருக்க வேண்டும். இப்போது தரப்பட்டிருக்கிற விளக்கம் மட்டும் போதாது. அரசாங்கத்திடமிருந்துதான் இத்தகைய விளக் கங்கள் வர வேண்டும். எங்களால் சிலவற்றை மட்டும்தான் படிக்க முடியும். "இது ஒரு சட்டப் பிரச்சினை" பல்வேறு கோணங்களிலிருந்து இதனை ஆராய வேண்டும். இது சட்டப் பிரச்சினை என்பதால், இப்படிப்பட்ட பின்னனி எதுவும் சொல்லாமல் ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வரக் கூடாது.

(முற்பகல் 10-40)

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆகவே அந்த வாய்ப்பு இல்லாத நிலையில் இது வேண்டியதில்லை. அப்படியே நிறைவேற்றலாம் என்றால் அது வேறு. இதையெல்லாம் நாங்கள் படிக்க வேண்டும். கொஞ்சம் போதாக இருந்தாலும், படித்துவிட்டு விவாதத்திலே கலந்து கொள்ளலாம் என்ற வகையிலே இந்தச் சட்ட முன்வடிவு வந்திருந்தால் நல்லது என்பதற்காகத்தான் நான் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பினேன். மசோதாவில் இருப்பதை அப்படியே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருப்பிச் சொல்வதால், தன்னுடைய நேரம் வீணாகிறது என்று ஒருவேளை மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் நினைத்தார்களோ என்னவோ தெரியவில்லை. அல்லது அமைச்சரைக் காப்பாற்ற வேண்டுமென்று நினைத்தாரோ என்னவோ தெரியவில்லை. அமைச்சர் மற்ற விவரங்களைத் தராதது என்னுடைய தவறல்ல.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: துணைத் தலைவர் அவர்களே, யாரையும் காப்பாற்ற வேண்டுமென்று நான் நினைக்கவில்லை. அவையின் நேரம் வீணாகாமல் இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் நான் சொன்னேன். ஏற்கெனவே அச்சடிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டிருப்பதால், அமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கம் அதிலே இருப்பதால், அது போதுமே என்று சொன்னேன்.

THIRU A.R. DAMODARAN : Mr. Deputy Chairman, Sir, I am grateful to the Hon. Minister for explaining some of the provisions of the Bill that he has introduced because, unlike the hon. Member Thiru Veerasami, I believe that there should be an explanatory statement for all Bills that are introduced in the House if they pertain to certain important policies which require the explanation of the Hon. Minister. It was the custom prior to 1970 or even in 1972 and 1973 for the Hon. Minister to read an explanatory statement. Even now he does it in the Legislative Assembly. Perhaps, because he is repeating the Bill, he does not want to repeat. I would request him to give an explanatory statement on

all Bills introduced. Especially, in so far as Bills relating to the revenue administration are concerned, which are complicated, a brief explanatory statement may be given.

First, I would like to say that L.A. Bill No. 62|1981 was introduced in the last Session of the Assembly and one important fact the Hon. Minister has failed to mention is that the Bill as introduced is not the Bill as it is passed today. The Hon. Minister himself has introduced an amendment to the Bill which he has not mentioned. He should have mentioned it when he made the explementatory statement. I shall refer to that when I come to the clauses.

Sir, I shall first refer to the amendment to section 17. The power to notify was always there for the Government to reduce or exempt. But, because the Public Accounts Committee and the Comptroller Auditor and General of India felt the power to waive was not given to the Government the Government have now brought forward the amendment saying that they can also waive any sales tax which collected or remained uncollected over a period of time which was collected or remained uncollected in certain exceptional cases, waiver is absolutely necessary and a Notification has to be placed before the House when it is in Session and, otherwise, it is sent to us by means of publication in the Fort St. George Gazette. Therefore the power to waive should be given to the Government and I welcome that provision.

Regarding section 24, the Hon. Minister has mentioned that many recommendations of the Kaiwar Committee are being implemented by Government. I would like to point out to him that the Kaiwar Committee made its recommendations in 1978 and the Hon. Minister is moving at a snail's pace by bringing in amendments in 1982. When the recommendations were made in 1978, a sense of urgency should prevail with the Government. If they are willing to accept the recommendations, they should try to do it as speedily as possible. I shall refer to some of the recommendations which have not been implemented, after dealing with the sections. I would request the Hon. Minister to deal with these amendments as expeditiously as possible.

[Thiru A. R. Damodaran] [1982 ஏப்ரல் 2

My first grievance is that while the Government have constituted a Sales Tax Advisory Committee, these proposals for amendment of the sales tax law which may lead to some discussion amongst the merchants and the Chambers of Committee could very well be placed before the Sales Tax Advisory Committee. No tax proposal is involved in all these and these are all certain circumstantial amendments that are being carried out My request to the Hon. Minister is that, in future, when he makes consequential amendments to the Sales Tax Act, he may have them placed before the Sales Tax Advisory Committee and get their suggestions. It is for the Government to accept the suggestions or not. But, nonetheless they can be discussed in the Sales Tax Advisory Committee. To my knowledge, this Committee has met only twice—once prior to 1979 and one after 1979. My request to the Hon. Minister is that the Sales Tax Advisory Committee should meet in December or November long before the Hon. Minister frames his Budget so that the suggestions of trade and the Chambers of Commerce may be considered.

Sir, section 24 is sought to be amended and in October 1981, the Government themselves introduced an amendment whereby they said that the penal interest be reduced from 2 per cent to 1 1|2 per cent. This has been a long-standing claim of the trade. But, now, I find in the Bill that has been introduced in the Assembly and which has been passed and which is coming before us to-day, that he has cancelled the Government amendment itself and has said that the penal interest will remain at 2 per cent per month. Why do the Government want to act as a Marwari and charge 24 per cent per annum? The Hon. Minister has pleaded vigorously for the scaling down of interest when he was moving the Debt Relief Bill and he is now acting in exactly opposite fashion. I would plead with him that the penal interest should be reduced to 1 1|12 per cent, as he himself amended in October 1981. My wonder is what made him change his mind within 4 months. I would request the Hon. Minister to explain it. The Banks are now charging interest at 19.5 per cent and they are not charging 24 per cent. What the Kaiwar Committee recommended was that the rate of interest charged by commercial banks might be taken into account. If the rate cannot be 18 per cent the Hon. Minister could very well

1982 ஏப்ரல் 2] [Thiru A. R. Damodaran]

fix the rate at 19.5 per cent as penal interest. I take strong objection to the Government brining in a Bill and then bringing an amendment without any sort of public representation. The Hon. Minister may kindly explain this.

Next, Sir, I will refer to the amendment to section 34. A new clause is being introduced whereby the Joint Commissioner of Commercial Taxes is given powers to revise the orders of the lower authority, on his own motion and he gets powers to act *suo motu*. Formerly he had the power to revise after calling for records and revise an assessment. But, a completely new condition is added to the effect that he can do so only if, in his opinion, the interests of revenue are affected prejudicially. In other words, he can act only if it is something to the advantage of the Department. The Joint Commissioner of Commercial Taxes can revise an order made by the Deputy Commissioner or by the Appellate Assistant Commissioner. But where a mistake is committed which affects the assessee, the Joint Commissioner will have no *suo motu* power to revise the assessment order in favour of the assessee. I think this is highly discriminatory. Surely an officer of the standing of Joint Commissioner of Commercial Taxes exercising his *suo muto* powers, is not likely to be influenced by other considerations when he says that on the face of it, an order passed by the Deputy Commissioner or the Appellate Assistant Commissioner requires revision. I think that this removes one remedy that could have been given to an assessee if an injustice had been rendered to him. The original Sales Tax Act contained this provision and I shall mention it. It is true, as my hon. Friend Thiru Ramamoorthy mentioned, that Sales Tax Act is not available in our Legislature and we have to buy it from other book-shops in the City and if he had told me I would have got him another copy. We never expect to get them from our Legislature. Powers of revision. Under section 34 of the Act, there is power to remedy any injustice. It is, therefore, open to an asseasee or if a decision is prejudicial to the interests of revenue to bring to the notice of the authority any error made by the subordinate authorities. This is an order passed by the Sales Tax Tribunal in 1973 Board of Revenue vs. Raj Brothers Agencies. I would like the Hon. Minister to note that instead of accepting only the recommendations of his own department, it would be better for him to consult the public also and the people from trade and commerce

[Thiru A. R. Damodaran] [1982 ஏப்ரல் 2

in the Sales Tax Advisory Committee meetings. The Hon. Minister is always surrounded by the officials of his own department and I do not blame them and they will try to put forth the point of view that is most favourable to the Department from the point of view of collecting revenue.

(முற்பகல் 10.50)

But, the Hon. Minister is not representing only his Department. He is representing the public and to remove the existing facility that is with the assessee is, in my opinion, rathr harsh on the assessee. I would plead with him again to concede my request that in moving such amendments he may take into account the opinions expressed by trade and the Chambers of Commerce. If he still feels that he cannot accept that is his decision. But the consultation must be there and this consultation does not exist to the extent we want it to exist between trade, commerce and the Department.

Sir, I shall now refer to another amendment which the Hon. Minister has moved. It is in paragraph 9 and it is an amendment to section 36 of Tamil Nadu Act I of 1959. Here again, the Hon. Minister has interfered and removed the existing provision which enabled the assessee to chain some relief. Here, the assessee can go on appeal against the order of an Appellate Assistant Commissioner. Formerly the power was given to the Appellate Tribunal to give a judgement in favour or the assessee or against film. Now, a new section is being introduced by the Government hereby the assessing authority is empowered within sixty days of an appeal filed by the assessee, to file a petition for enhancement of the assessment made. This is a very threatening posture. I am an assessee and I go on appeal claining relief from the Tribunal. Formerly, the assessing authoriy would also be called, the records would be called and judgement would be delivered depending on the justice of the case. Now, the Hon. Minister says that when an assessee goes on appeal the assessing authority can also move the Tribunal, within sixty days, pleading for enhancement of the tax or the penalty that has been levied. This is a penal provision intended to act as a threat to assessees to prevent them from going on appeal to the Tribunal. I do not think that this sort of provision could be introduced in the Act. This was not recommended by the Kaiwar Committee and this is a recommendation of his own Department.

1982 ஏப்ரல் 2] [Thiru A. R. Damodaran]

Sir, the Hon. Minister made a general remark that the important recommendations of the Kaiwar Committee have been implemented. I am careful enough to get the recommendations of the Kaiwar Committee here. I would like to point out to the Hon. Minister that many important recommendations in favour of the assessees have not been carried out by the Government. Of course, some recommendations have been implemented in the eariler Bill. I will not deny the Hon. Minister the credit for some such amendments. But I would like to say that one recommendation in paragraph 17.4.11 of the Report of the Kaiwar Committee has not been implemented. It said that the system of summary assessment accepted by Government might be implemented at an early date and that the limit might be raised to two lakhs of rupees' total turnover. At present, the limit is only Rs. 1 lakh. The Kaiwar Committee stated in 1978 that the turnover could be Rs. 2 lakhs. Now that I am talking in 1982, I may even say that the turnover could be Rs. 3 lakhs in view of the inflation. I would like to ask the Government why they have not considered implementing this particular recommendation of the Kaiwar Committee. Then, paragraph 17.4.22 of the Report of the Kaiwar Committee states that the provisions of the Surcharge and Additional Surcharge Acts may be incorporated in the Sales Tax Act itself. This has not been done Pargraph 17.8.3 states that the rate of penal interest may be reviewed and refixed as 1½ per cent having due regard to the maximum rate of interest charged by the Banks to retail trade. Now, the Hon. Minister mentioned that he was following the Kaiwar Committee's recommendations. But, here he has acted exectly contrary. Paragraph 17.12.1 of the Report says that mass consumption goods should be taxed at a very low rate if they cannot be exempted outright.

Regarding the mass consumption goods, my old plea has been with regard to grocery articles like Uppu, Milagai business. The Hon. Minister has not found it possible to accept it. But it was one of the important recommendations of the Committee. Sir. I would remind him that whatever recommendations have been made will soon become out-of-date. We are in 1982 and the Kaiwar Committee Report came in 1978 and it is almost four years since then. Inflation is taking place at the rate of 20 per cent. I would once again plead with him that the composition limit may be raised from Rs. 50,000 of Rs. one lakh and the limit for summary assessment

may be raised from Rs. 1 lakh to Rs. 2 lakhs. I would also plead with him not to be guided entirely by the advice of his department all the time but he should also try to take the trade and commerce people who are now much irriated and consider their representations. The Government may not agree because they do not depend upon those people for their votes, etc. That is a different matter. On behalf of trade and commerce, I would plead with him that he must have the Sales Tax Advisory Committee meetings at least twice or thrice a year for finding a solution to different problems. There is no use if the Government lay down some conditions without consulting trade and commerce and then saying that they are trying to evade taxes. I would like to plead for a change of approach on the part of the Hon. Minister. With these remarks, I would request the other hon. Members also to give their views on the amendment. Thank you.

* திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவா அவர்களே, இந்தத் திருத்தச் சட்ட முன்வடிவின் மீது சிலவற்றை மட்டும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தத் திருத்தங்களுக்கான அடிப்படை ஆதாரம் கெய்வார் ரிப்போர்ட் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். நான் அவர்கள் மூலம் அந்தத் துறைக்கும் அரசுக்கும் விடுக்கின்ற வேண்டுகோள், கெய்வார் கமிட்டி ரிப்போர்ட்டைப் பற்றி நாம் ஒரு முடிவுக்கு வந்துவிட வேண்டும். இதில் அரசு எதை எதை உடனடியாகக் கொண்டு வரலாம், எதை எதைக் காலந்தாழ்த்திக் கொண்டு வரலாம் என்று தெரிவிக்க வேண்டும். கெய்வார் அவர்கள் அளித்துள்ள ரிப்போர்ட்டில் எதை எதை அரசு ஏற்கிறது, எதை எதை அரசு ஏற்கவில்லை அல்லது ஏற்க இயலாது என்று சொல்ல வேண்டும். இந்த ரிப்போர்ட் 1978 ஆம் ஆண்டு கொடுக்கப்பட்டிருக்கிறது. 1978-க்குப் பிறகு, இதற்கு முன் ஒவ்வொரு ஆண்டும் ஏதாவது ஒரு முடிவை அல்லது ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். 1978 ஆம் ஆண்டுக்குப் பிறகு இன்று கெய்வார் ரிப்போர்ட் அடிப்படையிலேதான் திருத்தம் வந்திருக்கிறது. நாம் கெய்வார் கமிட்டி ரிப்போர்ட்டின் அடிப்படையிலேதான் அதை அமுல்படுத்துகிறோம் என்பது சரியாக இருக்காது. கெய்வார் அன்றைக்கு இருந்த நிலைமையின் அடிப்படையிலே தந்திருக்கின்ற பரிந்துரைகள் ஆகும். அதன் அடிப்படையிலே முடிவை எடுக்கின்றபோது, 1978-லே கொடுத்த பரிந்துரைக்கு 1982-லே நாம் திருத்தம் கொண்டு வருகிறோம். ஒரு பிரிவுக்கு அல்லது பல பிரிவுகளுக்குத் திருத்தம்

கொடுக்கிறார்கள். அதாவது அந்த ரிப்போர்ட்டிலே எந்த எந்தப் பரிந்துரைகள் சாதகமாக இருக்கின்றனவோ அதை மட்டும் பயன்படுத்திக் கொள்வது என்று இருக்கிறது. அந்த நிலையில் எந்த அளவுக்கு எந்த நோக்கத்திற்காக கெய்வார் கமிஷன் அமைக்கப்பட்டதோ அது நிறைவேறாமல் போகிறது என்பதை இந்த நேரத்திலே நான் அவையின் கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். இப்போது கொடுத்துள்ள திருத்தங்களைப் பொறுத்து, இரண்டொன்றைப் பற்றி அரசினுடைய பரிசீலனைக்கு வைக்க விரும்புகிறேன். இந்த 3-வது திருத்தத்திலே 1-எ பிரிவிலே கொடுத்திருக்கிறார்கள். செக்ஷன் 20-க்குக் கொடுத்திருக்கின்ற திருத்தம். அதில்

"Where a person intending to commence business is a minor or where a minor inherits an existing business or succeeds a dealer, the certificate of registration shall be issued in the name of any guardian, trustee or agent of the minor carrying on business on behalf of and for the benefit of such minor."

ஆகவே இது ஒரு முக்கியமான திருத்தம். மைனர்களுடைய தொழில் அல்லது வியாபார அமைப்புகளுக்குத்தான் இது ஒரு பாதுகாப்பாக அமைந்திருக்கிறது. அதிலே ஒரு வேண்டுகோள். கார்டியனுடைய பெயரிலே அல்லது டிரஸ்ட்டியினுடைய பெயரிலே உரிமை வழங்குவதன் மூலமாக அவர்கள் பெயரிலே 'சர்ட்டிபிகேட் ஆப் ரெஜிஸ்ட்ரேஷன்' கொடுப்பதிலே பல சிக்கல்கள் உருவாக வாய்ப்பு இருக்கிறது. ஆகவே அரசு அப்படிப்பட்ட 'சர்ட்டிபிகேட் ஆப் ரெஜிஸ்ட்ரேஷன்' கொடுக்கின்றபோது, மைனர் 'பெயரையும் சேர்த்துக் கொடுக்க வேண்டும். அந்த நிலைமை இருக்க வேண்டுமே தவிர, மைனரை நீக்கி மைனருக்கு கார்டியன் என்ற முறையிலே அமைத்தாலும்கூட, யார் மைனர் என்பதை மிகத் தெளிவாக [illegible] tificat[illegible] த் தெரிவிக்க வேண்டும். ஆகவே இந்தப் பிரிவினைப் பொறுத்தவரையிலே, அமுல் நடத்துவதிலே அதற்கான விதிகளை இயற்றுகிறபோது, அரசு இதிலே கண்காணிப்பாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-00)

பொதுவாக மற்ற கருத்துக்களைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் சொல்லிய கருத்துக்களை ஏற்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்

சட்டப் பிரிவு 36-க்குக் கொடுத்திருக்கிற திருத்தம் மிகுந்த ஜனநாயக விரோதமான திருத்தமாகும். இதை எப்படி மாண்புமிகு அமைச்சரவர்கள் தேவையென்று கருதினார்களென்று தெரியவில்லை. எப்போதுமே இது போன்ற வரி விதிப்புகளிலே அல்லது இதுபோன்ற அசைன்மென்டுகளிலே நிச்சயமாக அரசியல் வருவது இயற்கை. அதற்கு வாய்ப்பு தருவதுகூட தவிர்க்க முடியாததுதான். அப்படிப்பட்ட நிலை இருக்கும்போது, அப்பீல் செய்தால் ஏற்கெனவே விதிக்கப்பட்ட வரியைவிட அதிகமாக வரி விதிக்க வாய்ப்பு தருவோம், வரி விதிப்பை உயர்த்த வேண்டுமென்று வருமான வரித் துறை கேட்கும் என்ற நிலை வந்தால், யார் அப்பீலுக்கு வருவார்கள் ? எந்தக் காரணத்திற்காக இதைப் போடுகிறார்கள் ? நிர்ணயித்தது இவ்வளவுதான். இதைத்தான் செலுத்த வேண்டுமென்றால், அதோடு முடித்துவிட வேண்டும். அப்பீல் செய்வதால் மீண்டும் உனக்கு அதிகமாக வரியை உயர்த்திப் போடுகிறோம் என்று சொன்னால், நான் கேட்கிறேன். நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் துறையிலே உள்ள கீழ்மட்ட அதிகாரிகள் இப்படி மேல் முறையீடு வருகிறபோது, மேலும் அதை உயர்த்தலாமென்று சொன்னால், உயர்த்த வேண்டிய அளவிற்கு இருக்கின்ற வியாபாரிகளுக்கு ஆரம்பத்திலேயே உயர்த்தி வரி விதிப்பு விதிக்காமல், குறைவாக விதித்த அதிகாரிகள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் ? அரசு அதிகாரிகள் முறை தவறிச் செயல்பட ஒரு வாய்ப்பை அல்லது சரளமான தமிழில் சொல்வதாக இருந்தால் லஞ்சம் அதிகமாக விளையாட ஒரு வாய்ப்பை இந்தச் சட்டத் திருத்தத்தின் மூலமாக நாம் ஏற்பாடு செய்து தருகிறோம். அப்பீல் செய்தால், மேலும் நான் வரி விதிப்பை உயர்த்தப் போகிறேன், ஆகவே நான் போட்டதை ஒத்துக் கொள் என்று சொல்ல முடியும் அல்லது குறைவாகப் போட்டுவிட்டு, அதை அப்படியே ஏற்றுக்கொள் என்று சொல்ல முடியும். அல்லது அதையும் மீறி இது நியாயமல்ல என்று அரசாங்கத்திடம் வந்தால், அவர்களை அதிகமான வரி விதிப்பிற்கு உள்ளாக்கி, அதன் மூலம் ஊருக்கு எச்சரிக்கை செய்து, வியாபாரிகள் சங்கத்திடம் பேரம் பேசக்கூடிய வாய்ப்பாக இருக்கும். இந்தச் சட்டப் பிரிவே தேவையற்ற ஒன்று என்பதோடு மட்டுமல்ல, நல்ல முறையிலே செயலாற்றிக் கொண்டிருக்கும் அதிகாரிகளைக்கூட, you are temrting them to be corrupt அவர்களுக்குப் பண வசதி கிடைக்க வசதி செய்கிறோம் என்ற உணர்வு ஏற்படுத்தும் வகையிலே இந்தச் சட்டப் பிரிவு அமைந்திருக்கிறது என்று சொல்லி, அதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். முடிப்பதற்கு முன் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். அநேகமாக விற்பனை வரிச் சட்டத்திற்குத் திருத்தம் வராமல் ஒரு சட்டமன்றத் தொடர்

கூட்டமும் முடிவடைந்ததாக நினைவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களே சொல்லியிருக்கிறார்கள், ஆயிரம் சட்டத் திருத்தம் வேண்டுமானாலும் கூட கொண்டு வருவேன், எது தேவை என்று கருதுகிறேனோ, அதைக் கொண்டு வருவேன், மக்களுடைய தேவைதான் முக்கியம். அதற்காகத் திருத்தம் கொண்டு வருவேன், என்று சொல்லியிருக்கிறார்கள். அது தேவையான உணர்வும்கூட. ஒவ்வொரு திருத்தமும் வருகிறபொழுது, சட்டப் புத்தகங்கள் தரவேண்டியது இல்லை. குறைந்த பட்சம் இப்படிப்பட்ட திருத்தங்களைப் பொறுத்த வரையில், உறுப்பினர்களுக்கு முழுமையான சட்டப் புத்தகத்தைத் தந்தால், இந்தத் திருத்தங்கள் வரும்பொழுது, அதைப் பற்றி முறையாகப் பரிசீலிக்க வாய்ப்பு இருக்கும். வழக்கறிஞர் என்ற முறையிலே ஒரு சிலருக்கு அந்த வாய்ப்பு இருக்கும், அது வேறு. சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே அதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டும் என்றும், அதற்கு அமைச்சர் அவர்கள் பொறுப்பு ஏற்க வேண்டும் என்றும் கூறி, என்னுடைய கருத்துக்களை அமைச்சர் பரிசிலனை செய்வார் என்ற நம்பிக்கையுடன் அமைகிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே விற்பனை வரிச் சட்டத்திற்குக் கொண்டு வந்துள்ள திருத்தத்தின் மீது எனது கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல, சட்டமன்றக் கூட்டத் தொடர் என்றால், விற்பனை வரிச் சட்டத் திருத்தம் வரும் என்று நாம் சொல்லிக் கொள்ளுகிற நிலைமைக்கு ஏற்ப இவைகளை எல்லாக் கூட்டத் தொடரிலும் சந்தித்து வருவதைத் தொடர்ந்து விற்பனை வரிச் சட்டத்தில் பல திருத்தங்கள் தேவைப்படுகின்றன என்ற நிலையை உணர முடிகிறது. இந்த நிலையில் ஒருங்கிணைந்த திருத்தமாகக் கொண்டு வந்து இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு சட்டத்தை அமுல்படுத்துகிற முறை இருந்தால்தான், விற்பனை வரித் துறையும் இயங்க முடியும். வியாபாரிகளும் எல்லாவிதமான சட்டங்களையும் அமுல்படுத்தி தங்கள் விற்பனையை நடத்த முடியும் என்று கருதுகின்றேன். மேலும் அடிக்கடி சட்டங்களைத் திருத்தும் பொழுது, அதை அமுல்படுத்தும் அதிகாரிகளுக்கும் தொல்லை. விற்பனையாளர்களுக்கும் தொல்லை, வாங்குபவர்களுக்கும் தொல்லை.. ஆனால் நன்மைகளைக் கருதித்தான் செய்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்தும்பொழுது சொன்னார்கள். இதில்29, 24, 34, 36 ஆகிய விதிகள் திருத்தப்படுகின்றன. இத்தனை திருத்தங்களுக்கு காரணங்கள் நோக்கங்களைத் தந்திருக்கிறார்கள். இங்கேயும் சொல்லியிருக்கிறார்கள். அதில் 2½ சதவிகிதமாக இருந்ததை

1½ சதவிகிதமாகக் குறைக்கிறோம், நன்மையில்லையா, என்று கேட்டார்கள். அதை வரவேற்கிறோம். அப்படி குறைக்கிற பொழுது அவர்களுக்குத் திருப்பிச் செலுத்த வேண்டியது வந்தால், அபாரதம் என்று இருப்பதுதான் முறை. அரசாங்கம் அபாரதம் செலுத்தலாம். அபாரதம் என்பதைவிட திருப்பிச் செலுத்துவது என்று சொன்னால் முறையானது என்று கருதி வட்டி என்ற சொல்லைப் போட்டிருக்கிறார்கள். அபராதம் என்பதைக் குறிப்பிட்ட காலத் தில் கொடுக்க வேண்டும். கூடுதலாக வாங்கக்கூடாது என்ற உணர்வு வரும். கூடுதலாக வசூலித்தால் அரசாங்கம் திருப்பித் தருகிறது. அபாரதம் என்று இருந்தால்தான், அவர்கள் வசூல் செய்வதில் எச்சரிக்கையாக இருப்பார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஒரு வாணிகம் செய்பவர் இயந்தை எய்திவிட்டால், அவருடைய குடும்பத்திலருக்கு அதை மாற்றிக் கொடுக்க என்னென்ன முறைகளைக் கையாள வேண்டும் என்று சொல்லியிருக் கிறது. இதில் மைனர்களுக்கு விதிவிலக்கு அளித்திருக்கிறது. அவர்களை யும் சேர்த்துக்கொள்ள அரசு ஆராய வேண்டும்.

36-ஆம் விதியைத் திருத்தச் சொல்லப்பட்ட காரணம் அவ்வளவு சரியாக எனக்குத் தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அதை அழுத்தமாக எடுத்துச் சொன்னார்கள். விற்பனை வரிக்கு உட்படுத்தப்பட்டவர் தனக்கு விதிக்கப் பட்ட வரி கூடுதலாக இருக்கிறது என்று அப்பீல் செய்தால், உடனே இப பொழுது விதித்திருப்பதை உயர்த்த அரசுக்கு உரிமை உண்டு என்று சொல்லு வது ஆச்சரியப்படக் கூடியது மட்டுமல்ல, மேல்முறையீடு செய்யக்கூடாது என்று அவர்களுக்கு ஒரு உத்தரவை வழங்குவதாகத்தான் உள்ளது. இந்தத் திருத்தத்தை மாற்றிவிட்டு யாரும் மேல்முறையீடு செய்யக்கூடாது என்று போட்டால் அரசினுடைய உள்ளம் தெளிவாக இருக்கிறது. முறையீட்டுக்கு வழி யில்லை, அரசாங்கம் வரி விதிக்கிறது. எல்லோரும் கொடுக்க வேண்டும், மக்கள் நன்மைக்காகக் கொடுக்க வேண்டும் என்று சொல்லலாம். மேல்முறையீடு செய்தால் நாங்கள் உயர்த்துவோம் என்று சொல்லுவது எச்சரிக்கை விடுவது மட்டுமல்ல, ஜனநாயக மரபுக்கு ஒவ்வாதது; இது ஜனநாயகப் புத்தகத் தில் இருக்க லாயக்கில்லாத சட்டம் என்பது நியாயத்தின் அடிப்படையில் இருக்கும் ஒன்று. இது இராணுவ ஆட்சியில் போடும் முறை. இதைக் கொண்டுவந்து ஏன் ஜனநாயகச் சட்டப் புத்தகத்தில் புகுத்த வேண்டும்? மேல் முறையீடு செய்பவர்களுக்கு வரியை உயர்த்துவது என்பது ஜனநாயக நாட்டுச் சட்டப் புத்தகத்தில் இருக்கலாமா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். இங்கே பேசிய எல்லோரும் அழுத்தமாகச் சொல்லியிருக் கிறார்கள். அந்த ஒன்றையாவது எடுத்துவிட்டு மற்றவற்றை நிறைவேற்ற முன்வர வேண்டும் என்று கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ் டி. சோமசுந்தரம் : மேன்மைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லி யிருக்கிறார்கள். பொதுவாக அவைகள் எல்லாம் நான் கொண்டுவந்த சட்ட முன்வடிவிற்கு ஏற்புடையதாகத்தான் இருந்தன என்பதையும், இன்னும் நல்லது செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் சொல்லியிருக்கிறார்கள் என்பதையும் பொதுவாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-10)

கெய்வார் கமிட்டி பற்றி இங்கே சொன்னார்கள். கெய்வார் கமிட்டியின் ரிப்போர்ட்டிலுள்ள வார்த்தைகளுக்காக மட்டும் இதைக் கொண்டு வரவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதில் உள்ளதையும் சேர்த்து, உள்ளடக்கி இதைக் கொண்டு வந்திருக்கிறேன் என்பதை நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் பல கருத்துக் களை இங்கே சொன்னார்கள். பொதுவாக அவர்கள் எந்த விவாதமாக இருந்தாலும், நடுநிலையாக இருந்து மிக விளக்கமாக நல்ல கருத்துக்களைக் கூறுவார்கள். அந்த அடிப்படையில் இந்தச் சட்ட முன்வடிவின் மீதும் நல்ல பல கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அரசு பரிசீலிக்க வேண்டிய விதத்தில் ஒவ்வொரு முறையும் அவர்கள் கருத்துக்களைச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். அதோடு மட்டுமல்ல இன்றைக்கு அவர்கள் சொல்லும்போது 'சேல்ஸ் டாக்ஸ்'ஐப் பொறுத்தவரையில் சம்பந்தப்பட்ட வியாபாரிகளை எல்லாம் அடிக்கடி கலந்தாலோசிக்க வேண்டுமென்று இங்கே கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அதையும் ஏற்றுக்கொள்கிறேன். வியாபாரிகளைக் கலந்தாலோசிக்கிற அதே நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்களையும் நான் கலந்தாலோசிக்க மிகவும் விருப்பமுடையவனாக இருக் கிறேன் என்பதையும் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒவ்வொரு முறையும் இங்கே சட்ட முன்வடிவுகளைக் கொண்டு வரும்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆழ்ந்த நல்ல பல கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார் கள். கெய்வார் கமிட்டி ரிப்போர்ட்டைப் பொறுத்தவரையில், அது 4, 5 ஆண்டுகளுக்கு முன்பு கொண்டு வரப்பட்டது. இன்றைக்கு அது பழையதாகி விட்டது என்கிற ஒரு பொதுவான கருத்து தெரிவிக்கப்பட்டது. ஆனால் இதற்கு முன்பு எப்படியெல்லாம் செய்திருக்கிறார்கள் என்பதை நான் சொன்னால், அது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் நான் குறை கூறுவ தாகக் கருதக்கூடாது. இதை விரைவாக இந்த அரசு நடைமுறைபடுத்தியிருக் கிறது என்பதையும் நான் குறிப்பிட்டுத்தான் ஆக வேண்டும். ஆனால் இதை

விட இன்னும் விரைவாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்று சொல்கிறபோது, அதையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். அப்படிச் செய்வது கூட நல்லது தான். 116 பரிந்துரைகளில் 99, 105, 106 என்றெல்லாம் மாற்றத்தை அறிமுகப் படுத்தியதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வார்கள். எவ்வளவு நாட்கள் ஆகியிருக்கிறது என்று கேட்டால், 3 வருடம், 5 மாதங்கள் ஆகியிருக் கிறது என்பதை நான் சொல்வேன். கெய்வார் கமிட்டி ரிப்போர்ட்டைக் கொடுத்தது அக்டோபர் மாதத்தில். ஆனால் எந்தத் தேதி என்று சொல்ல வில்லை. 1978 அக்டோபர் மாதத்தில் என்றால், 1982 ஏப்ரல் 2 என்று சொல்கிறபோது அதற்கு ஒரு நாளையும் குறிப்பிட்டுச் சொல்லி விடலாம். ஆனால் அக்டோபர் 1ஆம் தேதியா என்று தெரியவில்லை. ஒன்றிரண்டு மாதங்கள் இடையிலே கழிக்கப்பட வேண்டும். அப்போது நாங்கள் ஆட்சியில் இல்லை. ஆக, மொத்தத்தில் பரிசிலனை செய்ததில் 3 ஆண்டுகள்தான் வருகிறது. இந்த 3 ஆண்டுகளுக்குள் எவ்வளவு செய்திருக்கிறோம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். மொத்தம் 105 என்றால் இனி 4, 5தான் இருக்கின்றன. 7, 8 பரிந்துரைகளுக்கு ஒன்றும் செய்ய வேண்டியதில்லை: ஆக, 4 அல்லது 5 தான் இனி பாக்கியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் பேசுகிறபோது நான்கைந்நாள் சொன்னார்கள். அப்போது அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள் 'லென்டிங் ரேட்' என்கிற வகையில் வியாபாரிகளுக்கு வட்டி என்று போடாவிட்டால், அவர்கள் அரசுக்கு பணத்தை ஒழுங்காகக் கொடுக்க மாட்டார்கள். இன்றைக்கு வங்கிகளில் 19½ பெர்சன்ட் வட்டிக்குப் பணம் தருகிறார்கள். அப்படி பணத்தை வாங்க வேண்டுமென்றால் வங்கி நடைமுறைச் செலவுக்கு மற்றும் செலவுகளுக்குப் பணம் செலுத்த வேண்டும். அதோடு டெபாசிட் கட்ட வேண்டும். இவற்றை யெல்லாம் கணக்கிட்டுப் பார்த்தால், 22 சத விகிதம் வரும். ஆனால் அரசைப் பொறுத்தவரையில், 18 சதவிகிதம் என்று இருக்கிறது. வங்கிகளில் 19½ பெர்சன்ட் என்றால் வித்தியாசம் 1½ சதவிகிதம் வருகிறது. அப்படியென்றால், அவர்கள் இந்தப் பணத்தைத் தற்காலிகமாக அரசுக்குச் செலுத்தாமல், அதையே முதலீடாக வைத்துக்கொண்டு வியாபாரம் செய்ய ஆரம்பித்து விடு வார்கள். வியாபாரிகளுக்காக மட்டும் இது கொண்டு வரப்படவில்லை.பெரிய பெரிய தொழில்கங்கள் கூட இதில் சம்பந்தப்பட்டிருக்கின்றன. வங்கியில் 19½ சதவிகித வட்டி என்றும், அரசைப் பொறுத்தவரையில் 18 சதவிகித வட்டி என்றும் இருந்தால், அவர்கள் கட்ட வேண்டியதை அரசுக்குக் கட்டாமல்

அதையே முதலீடாக வைத்து தொழில் நடத்துவார்கள் என்று நான் கருதி னேன். இப்படி அதிகப்படுத்தியதை இங்கே தவறு என்று சொன்னாலும்கூட நானும் எல்லாவற்றையும் யோசித்துப் பார்த்துத்தான் இதைக் கொண்டு வந்திருக்கிறேன். இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்தபோது, அரசுக்குக் கட்ட வேண்டியதைக் கட்டாமல் அதையே முதலீடாக வைத்து தொழில் நடத்தக் கூடிய வாய்ப்பு இருப்பதால், அதைத் தவிர்க்கத்தான் இதைக் கொண்டு வந்திருக்கிறேன்;

THIRU A. R. DAMODARAN: Sir, if the Hon. Minister says that the lending rate is 19.5 per cent, I would request him to pay the same rate of interest. If the Government collect excess amount and if he is prepared to pay 15 per cent interest which is the rate of interest given for Fixed Deposits, then I am prepared to accept this.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இப்போது 19½ சதவிகிதம் என்கிற நிலைமை வந்தபோது அதையும் நாங்கள் ஏற்றுக்கொண்டோம். அவர்கள் வங்கிக்குச் செல்லாமல் இதையே முதலீடாக வைத்து விடுவார்கள். இங்கு 18 சதவிகிதம் தான் இருக்கிறது. ஆகவே வங்கிக்குச் செல்ல வேண்டாம் என்கிற நிலையில் இருந்து விடுவார்கள். 'பட்ஜெட் கொண்டு வருகிறோம். ஆயிரம் கோடி ரூபாய்க்கு பட்ஜெட் தயாரிக்கிறோம் என்று சொன்னால், ஆயிரம் கோடி ரூபாயையும் நாம் ரிசர்வ் வங்கியில் போட்டு வைப்பதில்லை. வருகிற ஆண்டில் இவ்வளவு பணம் வரும் என்கிற கணக்கை வைத்துக்கொண்டுதான் அதைத் தயாரிக்கிறோம். மாதா மாதம் சம்பளம் கொடுப்பதுகூட அந்த அடிப்படையில்தான் நடைபெறுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, சேல்ஸ் டாக்ஸ் கமிட்டியை அடிக்கடி கூட்ட வேண்டுமென்றும், வருடத்திற்கு ஒரு முறையாவது நடத்த வேண்டுமென்றும் மாண்புமிகு உறுப் பினர் திரு. தாமோதரன் சொன்னார். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். தற்போது தாமதப்படுத்தப்பட்டு கூட்டம் நடந்தாலும்கூட, வருகிற காலத்தில் வருடத்தில் 2 அல்லது 3 தரம் நடக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்வேன். இன்னொன்றையும் மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் சொன்னார். ஆனால் எனக்குப் பிடிக்காது. கன்சல்டேஷன் தேவை என்கிறார்கள் அது மிக மிகத் தேவை. அது இல்லையென்றால், எந்த காரியமும் நடக்காது. அவரவர்கள் இஷ்டப்படி நடப்பார்கள். என் மனதுப்படி நான் செய்வதாக இருந்தால், தவறு நடக்க அது காரணமாக இருக்கும் ஒரு ஜனநாயக அமைப்புக்கு 'கன்சல்டேஷன் அன்ட் அக்காமடேஷன்' என்ற வார்த்தை

மிகவும் முக்கியமானது. இது தேவையும் கூட. ஒரு ஜனநாயக அரசு நடை
பெறுகிறது என்று சொன்னால், அதற்கு 'கன்சல்டேஷன் அன்ட் அக்காம
டேஷன்' என்ற வார்த்தை முக்கியமானது என்று பேரறிஞர் அண்ணா
அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதனால்தான் மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் இந்த வார்த்தையைக் குறிப்பிட்டதும் அந்த ஞாபகம் எனக்கு
வந்தது.

மற்றொன்றையும் இங்கே சொன்னார்கள். 'ஒரு லட்சம் வரம்பு இருக்
கிறது' என்று சொன்னார்கள். அதை உயர்த்த வேண்டுமென்றும் சொன்னார்
கள். அதை அரசு தன்னுடைய பரிசீலனையில் வைத்துக் கொண்டிருக்கிறது.
பரிசீலனையில் இருக்கிறபோது, அதைப்பற்றியெல்லாம் இந்த அரசு
ஆலோசனை செய்யும்.

பொதுவாக மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்ன
கருத்துக்கெல்லாம் என்னுடைய விளக்கங்களைச் சொல்லியிருப்பேன் என்று
கருதுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் பேசுகிறபோது
ஒன்றைச் சொன்னார்கள். நான் சொன்ன விளக்கத்தை அவர்கள் சரியாக
அப்போது கேட்கவில்லை என்று நான் கருதுகிறேன். மாதம் 1½ பெர்சன்ட்
என்று இருந்ததை நாங்கள் 2 சதவிகிதமாக ஆக்கியிருக்கிறோம். இது 24
பெர்சன்ட் வருகிறது. இதிலே பாதகம் என்று சொன்னால், நான் உறுப்
பினருக்கு ஒன்றைச் சொல்வேன். அபராதம் என்று இருந்ததை வட்டி
என்று மாற்றம் செய்திருக்கிறோம் என்கிற பொருள்பட அவர் சொன்னார்.
அபராதமாகப் போட வேண்டுமென்றும் சொன்னார். இதுவரை அரசு வசூல்
செய்கிறபோது, அதிகமாக வசூல் செய்துவிட்டோம் என்றால், அதை
அதிகாரிகள் திரும்பிக் கொடுக்கும்போது அவர்களுக்கு இருக்கக்கூடிய வேலைப்
பளு காரணமாக திரும்பிக் கொடுப்பதிலே காலதாமதம் ஆகிறது.
ஆதலால்தான் இப்போது அப்படி திரும்பிக் கொடுப்பதைப் பொறுத்த
வரையில், 3 மாத காலத்திற்குள் திரும்பிக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி
யிருக்கிறோம். அப்படி இந்தக் காலத்திற்குள் திரும்பிக் கொடுக்கவில்லை
யென்றால், அரசு அதற்கு வட்டி கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்
கிறோம். வியாபாரிகள் அரசுக்குக் அபராதம் கொடுக்க வேண்டியிருந்தால்,
அதைக் காலா காலத்தில் கொடுக்காவிட்டால், அவர்களுக்குத் தான் அது
பெனல்டி என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் நாம் கொடுக்க
வேண்டிய தொகைக்கு வட்டி கொடுக்கிறோமே தவிர, அபராதம் அல்ல,

அரசின் வருவாயைப் பாதுகாக்கத்தான் இதைக் கொண்டு வந்திருக்கிறோம். இதிலும் அதிகாரிகளுக்குப் பாதகம் ஏற்பட்டால், அவர்கள் அப்பீல் செய்து கொள்ள தடை ஒன்றும் இல்லை.

இங்கே செக்ஷன் 34 பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் எப்போது வேண்டுமானாலும் அப்பீல் செய்து கொள்ளலாம். அதில் யாதொரு தடையும் இல்லை. பல ஆண்டுகளுக்குப் பிறகு அப்பீல் செய்து கொள்ளாமல், காலா காலத்தில் அதாவது 3 ஆண்டுகளுக்குள் அப்பீல் செய்ய வேண்டுமென்று இருக்கிறது.

(முற்பகல் 11-20)

வியாபாரிகள் அப்பீல் செய்வதற்கு அப்பலேட் டிரிபியூனல் போன்று பல அமைப்புகள் இருக்கின்றன. அங்கெல்லாம் சரியான நேரத்தில் அப்பீல் போடாமல் பல ஆண்டுகள் கழித்து 'சூயோ மோட்டோ' என்ற முறையில் அதை 'மிஸ்யூஸ்' செய்ய வாய்ப்பு இருக்கிறது. அதைச் செய்யக்கூடாது என்றுதான் அரசு கருதுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் செக்ஷன் 36 பற்றிக் குறிப்பிட்டார்கள். வியாபாரிகள் அப்பீல் செய்யும்போது, அதை எதிர்த்து துறை வாதாட வேண்டிய நேரத்தில் அசெஸ்மென்ட் ஆர்டரையே பரிசீலனை செய்ய வேண்டும், அசெஸ்மென்ட் குறைவாகச் செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்வதற்கான வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. தற்போது இந்த வகையில் துறை எந்த நடவடிக்கையையும் எடுக்க முடியாது என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். இப்போது எங்களிடம் இருக்கிற அதிகாரிகளையும் நாங்கள் சரி செய்ய வேண்டியிருக்கிறது. சில இடங்களில் மிகவும் குறைவாகப் போட்டுவிடுகிறார்கள். சில இடங்களில் மிக அதிகமாகப் போட்டு விடுகிறார்கள் என்று அவரே குறிப்பிட்டார்.

திரு. க. இராமமூர்த்தி: போடுகிறார்கள் என்று சொல்லவில்லை. இந்தத் திருத்தத்தின் மூலமாக அப்படிப் போடுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. இந்த சட்டத்திருத்தம் அத்தகைய வாய்ப்பை அளித்துவிடும் என்றுதான் தெரிவிக்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: ஒரு அதிகாரி குறைவாக வரி விதிப்பைச் செய்துவிட்டால், அவரிடத்திலேயே அதற்காக அப்பீலுக்குப் போவதில்லை. அவருக்கு மேலே இருப்பவர்களிடம்தான் அப்பீலுக்குப் போகிறார்கள். ஒரு அசெஸ்மெண்ட் ஒரு அதிகாரியால் போடப்பட்டால், அது சரி

யாக இருக்கிறதா இல்லையா என்று அரசு பரிசீலிக்க இப்போது வழி வகை செய்யப்பட்டிருக்கிறது. அவ்வளவுதான். அடிமட்டத்தில் உள்ள சில அதிகாரிகள் குறைவாகப் போட்டுவிட்டார்கள் என்றால், அது குறைவாக இருக்கிறதா இல்லையா என்று மறு பரிசீலனை செய்யும் அதிகாரம் மேல் அதிகாரிகளுக்கும், அரசுக்கும் இருப்பது நல்லதுதான் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். தாமோதரன்: இன்கம் டாக்ஸில்கூட அசெஸ்மெண்ட் அதிகாரி உத்தரவின் மீது டிரிபியூனல் வரை அப்பீல் போகலாம் என்று இருக்கிறது. இப்போது அப்படிப்பட்ட அதிகாரம் சேல்ஸ் டேக்ஸில் இல்லை என்று சொல்லுகிறாரா அமைச்சர் அவர்கள்? இதுவரை டிபார்ட்மெண்ட் அப்பீலுக்குப் போக முடியாது என்ற கருத்தைச் சொல்லுகிறாரா? எதற்காக 36-வது செக்ஷனைப் புதிதாகக் கொண்டு வந்திருக்கிறார்கள்? செக்ஷன் 36-ல் கமிஷனருக்கு 'சூயோ மோடோ' பவர் இருக்கிறது. ஒருவர் அப்பீல் போட்ட பிறகு, எதற்காக நீங்கள் என்ஹான்ஸ்மென்ட் பெட்டிஷன் போட வேண்டும் என்பதுதான் என்னுடைய கேள்வி.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: அப்படி அசெஸ்மென்ட் ஆர்டர் போடுகிறபோது அந்த அசெஸ்மெண்ட் ஆர்டர் சரியாக இல்லை என்று மறு பரிசீலனை செய்யும் அதிகாரம் அரசுக்கு இருக்கிறது. அவ்வளவுதான் மற்றபடி பல்வேறு கருத்துக்களையும் இங்கே தெரிவித்திருக்கிறார்கள்.

* திரு. க. இராமமூர்த்தி: அசெஸ்மென்ட் சரியாகச் செய்யவில்லை என்று விசாரணை செய்யும் அதிகாரி கருதினால், அதைப்பற்றி மறு பரிசீலனை செய்யும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுவல்ல எங்களுக்கு இருக்கிற ஆட்சேபணை. இந்தச் சட்டத்திருத்தம் என்ன சொல்கிறது என்று சொல்ல விரும்புகிறேன். ஒரு அசெஸ்மெண்ட் செய்யப்பட்டவர் அப்பீலுக்கு வருகிறபோது அவருக்கு அசெஸ்மெண்ட் குறைவாகச் செய்திருக்கிறோம், அதை அதிகரிக்க வேண்டும் என்று அரசாங்கத் தரப்பிலிருந்து மனு போடப்படும் என்ற அடிப்படையில் இப்போது புதிதாக ஒரு அதிகாரம் வழங்கப்படுகிறதே அதற்கு என்ன நியாயம் இருக்கிறது என்பதுதான் என்னுடைய கேள்வி. Assess செய்யப்பட்ட எல்லோரும் அப்பீலுக்குப் போவதில்லை. ஓரிருவர் அப்பீலுக்கு வந்தால், அவர்களையெல்லாம் தண்டிக்கிற நிலையில் இப்படி அதை அதிகப்படுத்த வேண்டும் என்று மனுப் போடுவதைத்தான் நான் சரியில்லை என்கிறேன். இது அதிகாரிகளுக்குப் பாதுகாப்பு தருகிற சட்டமாக இருக்கிறதே தவிர வேறல்ல. அதே நேரத்தில் வியாபாரிகள் மிகப்

பெரிய அளவுக்குப் பாதிக்கப்படுகிற அளவுக்குத்தான் சட்டத் திருத்தம் இருக்கிறது. அதாவது இனி அப்பீல் செய்யும் individuals க்கு எதிராக என்ஹான்ஸ்மெண்ட் Enhancement Petition போடுகிற நிலை வருகிறது. எனவே தனிப்பட்ட வியாபாரிகள் தங்கள் குறைகளை எடுத்துத் தெரிவிக்க அஞ்சுகிற கட்டாயம் ஏற்பட்டு விடும் என்பதுதான் என்னுடைய வாதம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: அப்பீல் செய்தால்தான் அதிகரிக்க வேண்டுமென்பதில்லை. எந்த நேரத்தில் வேண்டுமானாலும் குறைவாக அசெஸ் செய்யப்பட்டிருக்கிறது என்று அரசு கருதினாலே, அதை மறு பரிசீலனை செய்யும் அதிகாரம் அரசுக்கு இருக்கிறது.

அடுத்து, இதுவரை மேலவையில் சொல்லாத ஒரு கருத்தையும் தெரிவிக்க விரும்புகிறேன். அதாவது 1980-81 ஆம் ஆண்டில் 1981 பிப்ரவரி மாதம் முடிய வந்த வருவாய் ரூ. 415 கோடியாகும். அதைப் போலவே 1981-82 ஆம் ஆண்டில் 1982, பிப்வரி மாதம் முடிய அரசுக்கு வந்த வருவாய் ரூ. 529 கோடி. ஆக ஒரு வருஷத்தில் சுமார் ரூ. 114 கோடி அதிகமாக வசூலாகியிருக்கிறது என்பதை நான் மிகுந்த மகிழ்ச்சியோடு இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர்கள் சில சங்கடங்களைப்பற்றியும் குறிப்பிட்டார்கள். சட்ட முன்வடிவுகளோடு தங்களுக்குச் சட்டங்களின் பிரதிகளைக் கொடுக்காதிருப்பதால், பல சங்கடங்கள் ஏற்படுகின்றன என்று குறிப்பிட்டார்கள். இனி எதிர்காலத்தில் இப்போது கொண்டு வரப் பட்டிருக்கிற சட்டங்கள் மட்டுமல்லாமல், அரசுச் சட்டங்கள் எல்லாவற்றையும் எல்லோருக்கும் கொடுக்க வேண்டும், மாண்புமிகு உறுப்பினர்கள் அவற்றைப் பற்றி நன்கு தெரிந்திருக்க வேண்டும் என்ற அடிப்படையில் கொடுக்கப்படும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் பேசும்போது வருவாய்த் துறையில் பல சட்டச் சிக்கல்கள் இருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். எனவே இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். எந்தெந்தச் சட்ட முன்வடிவுகள் கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக வந்திருக்கின்றனவோ அவைகள் எல்லாவற்றையும்—வருவாய் துறையையும் இந்தத் துறையையும் சேர்த்துச் சொல்லுகிறேன்—பொறுத்தவரையில், அவைகளுக்கான சட்டங்கள் அச்சடித்து மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும்—மேலவை மற்றும் பேரவை உறுப்பினர்கள் அனைவருக்கும்—கொடுக்க ஏற்பாடு செய்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே விளக்கமாகப் பதிலைச் சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் 36வது செக்ஷனைப் பற்றி அவர்கள் சொன்ன பதில் எங்களுக்கு விளங்கவில்லை என்று சொல்வதைவிட, அது எங்களுக்குச் சரியாகப் புரியவில்லை என்று ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது. எனவே அதைப் புரிய வைக்கும்படி அவரைக் கேட்டுக்கொள்கிறேன். அதிலிருக்கும் வரிகளை நான் இங்கே வாசிக்க விரும்புகிறேன்.

" (3-எ) 31 ஆம் பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவின் கீழ் மேல்முறையீட்டு உதவி ஆணையாளர் பிறப்பித்த ஆணை அல்லது 31-ஏ ஆம் பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவு அல்லது 32 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ் துணை ஆணையாளர் பிறப்பித்த ஆணையை எதிர்த்து மேல் முறையீடு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கும் அறிவிப்பு வரப்பெற்ற நாளிலிருந்து அறுபது நாட்களுக்குள் வரி விதிப்பு அதிகாரி ஒருவர் அல்லது ஒருவர் . . . மேல்முறையீட்டு உதவி ஆணையாளர் அல்லது துணை ஆணையாளரின் ஆணையை எதிர்த்து நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் நிர்ணயிக்கப்பட்ட முறையில் வரி விதிப்பை உயர்த்துவதற்கான மனு ஒன்றைத் தாக்கல் செய்யலாம் . . .

இப்படி வரிவிதிப்பு செய்வது தவறு என்று ஒருவர் அப்பீல் போட்டால், அதை எதிர்த்து போட்டுள்ள வரியையே அதிகரிக்க வேண்டும் என்று துறை அதிகாரி மனு போடலாம் என்று போட்டிருப்பது எப்படி நியாயம் என்று நான் கேட்கிறேன். இப்படி ஜனநாயக மரபுக்கு முரண்பட்டதாக சட்டத்திலே எப்படி இருக்க முடியும் ? அப்படி இருப்பது விரும்பத் தக்கதல்ல. ஜனநாயகத்திற்கு இதைவிட களங்கம் கற்பிக்கும் வேறு எதுவும் இருக்க முடியாது என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். அதை உரிய முறையில் மாற்றும் வரை இந்த விவாதத்தை இதோடு முடித்துவிட்டு நாளைய தினம் துறையினரோடு அமைச்சர் அவர்கள் கலந்து இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொண்டால், நன்றாக இருக்கும் என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1982 ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 62/1981) பரிந்துரை **செய்வதற்காக** ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட **வேண்டும் "**

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது

பரிந்துரை எதுமில்லை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1982 ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 62/1981) திருப்பி அனுப்பப்பட வேண்டும் "

என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(2) தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு பயிர்களுக்குக் கேடு விளைவிக்கத்தக்க பூச்சிகளையும் நோய்களையும் பற்றிய (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 65/1981).

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு பயிர்களுக்குக் கேடு விளைவிக்கத்தக்க பூச்சிகளையும் நோய்களையும் பற்றிய (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 65/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் "

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு பயிர்களுக்குக் கேடு விளைவிக்கத்தக்க பூச்சிகளையும் நோய்களையும் பற்றிய (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 65/1981) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் "

@ 975-980 ஆம் பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.

* திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் முன்மொழிந்திருக்கின்ற இந்தச் சட்ட முன்வடிவின் ஒரு பகுதியை வரவேற்கிறேன். இன்னுமொரு பகுதியை நான் கடுமையாக எதிர்க்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சட்ட முன்வடிவு பெரும்பாலும் சிறிய விவசாயிகளுக்குத் துணை புரிகின்ற வகையிலே இருக்கிறது. இன்றைக்கு நாட்டிலே இதுவரையில் இல்லாத கிருமிகள் எல்லாம் விவசாயத்தில் பாவியிருக்கின்றன. இதுவரையில் அனுபவப்படாத முறையில் பல்வேறு புதிய நவின முறைகளையும், நவின மருந்துகளையும் பயன்படுத்தி அவற்றைக் கட்டுப்படுத்த வேண்டிய கட்டாயத் திற்கு ஆளாகியிருக்கிறோம். இன்றைக்கு நிலவுகின்ற நிலைமைக்குக் காரணம் விவசாயிகள் அல்ல. ஊரில் இருக்கின்ற சூழ்நிலை அல்லது வேறு பல புறச் சூழ்நிலைகளால் பல்வேறு நோய்கள், பல்வேறு கிருமிகள் பரவுகின்ற நிலைமை அதன் விளைவாக, ஆயிரக்களுக்கான எக்கர் பயிர்கள் பட்டுப் போகின்ற, பயனற்றுப் போகின்ற, பூச்சிக்கு இலக்காகின்ற நிலைமை ஏற்படுகின்றது. ஆகவே இத்தகைய நிலைமையிலிருந்து விடுதலை பெறுவதற்கு அல்லது பரி காரம் காணுவதற்கு, இத்தகைய நோய்களை அழிப்பதற்கு, ஒழிப்பதற்கு அரசாங்கம் முன்வந்து, சில நடவடிக்கைகளை எடுக்கிறது என்ற அடிப்படை யிலே இந்தச் சட்ட முன்வடிவை நான் வரவேற்கிறேன்.

ஆனால் இந்தச் சட்ட முன்வடிவின் இன்னொரு பகுதியிலே, இதற்கான செலவை யாரிடமிருந்து பெறுவது என்பதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதற்காகும் செலவை, ஒவ்வொருவருக்கும் இவ்வளவு என்று வகுத்து, அதை விவசாயிகளிடமிருந்து வசூலிப்பது என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். விவசாயிகள் செய்த தவறுகளினால் இந்தப் பூச்சிகள் வந்திருந்தால், அது அவர்களுடைய தவறு என்று சொல்லலாம், அது வேறு. ஆனால் புறச் சூழ் நிலைகளின் காரணமாக இது போன்ற தொல்லைகள் வரும்போது, அரசாங்கம் தான் பாதுகாப்புத் தர வேண்டும். ஏனென்றால் விளையும் பயிர்களுக்கு இன்ஷூரன்ஸ் திட்டத்தை அமுல்படுத்த வேண்டுமென்று நாம் நினைக்கிறோம். இந்த நாட்டின் எண்ணப் போக்கு இந்த நிலையில் இருக்கும்போது, விவசாயி களின் நிலத்தில் பூச்சிகள் வந்துவிட்டன என்ற காரணமாக அதற்காகும் செலவை அவர்கள் தலையிலே சுமத்த வேண்டுமா என்பதைப்பற்றிப் பரி சீலிக்க வேண்டும். பூச்சிகள் வந்துவிட்டன என்றால், அது விவசாயி களுடைய குற்றமல்ல. வேறு பலருடைய குற்றம். கொஞ்சம் வெளிப்படை யாகச் சொல்ல வேண்டுமென்றால், அது அரசாங்கத்தின் தவறு என்றுகூட சொல்லுவேன். இது போன்ற நோய்களுக்கு யார் காரணமாக இருக்க

முடியும்? ஆகவே அரசாங்கம் தான் பொறுப்பு ஏற்றாக வேண்டும். நான் ஒரு ஏக்கர், இரண்டு எக்கர் அல்லது ஐந்து எக்கர் நிலம் வைத்திருக்கிறேன் என்றால், அதிலே பூச்சி வந்துவிட்டது என்றால், இந்த ஆண்டிலே என்னால் செலவு செய்து பூச்சிகளை ஒழிக்கின்ற அளவிற்கு நிதி வசதி இல்லாமல் இருக்க லாம். இந்த ஆண்டு இல்லையென்றால் அடுத்த ஆண்டு, அல்லது அதற்கடுத்த ஆண்டு, பூச்சி ஒழிப்பை, சௌகரியப்படுகிற ஆண்டிலே செய்ய முடியும். அதற்கு மாறாக அரசாங்கமே தலையிட்டு இந்த ஆண்டிலேயே செய்ய வேண்டுமென்று செய்து முடித்துவிட்டு அதன் செலவை என் தலை மேலே கடன் சுமையாகச் சுமத்திவிட்டு, பிறகு ரெவின்யூ ரெக்கவரி ஆக்டின் கீழ் வசூலிப்போம் என்று சொல்லுவது மேலும் கடன் சுமையை அதிகரிப்பதாக இருக்குமே தவிர, வேறு நிலை இருக்காது. போக்குவரத்துக் கழகங்களை ஏற்படுத்தி பஸ்களை விடு கிறோம். அதிலே நஷ்டம் வந்தாலும் பரவாயில்லை, நாட்டு மக்களுடைய நலன் கருதி, அது அவசியம் என்று கருதி அரசாங்கமே ஏற்று நடத்தவேண்டு மென்று சொல்லுகிறோம். அதைப் போலவே மின்சாரம். அதிலே ஓவர்-ஹெட் சார்ஜஸ், over head charges அதிகமாக இருக்கிறது என்றா லும், அந்தச் செலவை அரசாங்கம் ஏற்று நடத்துகிறது. அதைப் போலவே இந்தத் துறையிலும் செய்யலாம். இதில் ஏற்படும் செலவையெல்லாம் பிரித்து தலைக்கு இவ்வளவு என்று விவசாயிகளின் தலையில் சுமத்துவது சரியல்ல. அதிகாரிகளுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டும், நவின முறைக் கருவிகள், இயந்திரங்கள் ஆகியவற்றுக்குச் செலவு செய்ய வேண்டும் என்ற கணக்குகள் இருந்தாலும்கூட, விவசாயிகள் தலையில் அவற்றைச் சுமத்தினால் ஏழை விவ சாயிகள் முன்னேற முடியாத நிலையை ஏற்படுத்தும். இருந்தாலும் பூச்சி களின் மூலமாக ஏற்படும் பயிர் அழிப்பைக் குறைப்பது என்ற முறையில் அரசின் கவனம் திரும்பியிருக்கிறது என்ற அளவிலே மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் இது ஏழை விவசாயி களை நசுக்குகின்ற ஒன்றாக அமைந்துவிடும் என்பதால், இதற்காகும் செலவை அரசாங்கமே ஏற்றாக வேண்டும். விவசாயியின் நிலம் பாதிக்கப்பட்டு விட்டதால், அதற்கு அவன் மட்டும் காரணம் என்ற நிலையிலே அரசாங்கம் கொள்கை ரீதியாக முடிவு எடுத்தால், அந்தக் கொள்கையே தப்பு, விவசாயி கள் தவறாகப் பயிர் செய்தார்கள், தவறான முறையிலே உரங்களை இட்டார் கள், அதனால்தான் தொல்லைகள் வந்தன என்று நிர்மானித்தால், அது வேறு. அப்படியில்லாமல் அவர்கள் கட்டுக்கு அடங்காத சூழ்நிலை காரணமாக, வேறு பல புறச் சூழ்நிலை காரணமாக, அரசாங்கம் கவனிக்க வேண்டிய முறையில் கவனிக்காத காரணத்தால், ஏற்பட்ட அவதிகளுக்கு, விவசாயிகளை ஆளாக்கு

வது நல்லதல்ல. ஆகவே இது விவசாயிகளுக்கு எதிரான ஒன்றாக அமைந்து
விடும் என்பதாலே, இந்தச் சட்ட முன்வடிவை மறுபரிசிலனை செய்ய வேண்டிய
கட்டாயம் இருக்கிறது. இதிலே பல திருத்தங்களை நான் கொடுத்திருக்
கிறேன். திருத்தங்கள் வரும்போது, அதன் மீது பேசுவதற்கான வாய்ப்புகள்
ஏற்படுமென்று கருதுகிறேன். ஆகவே இதை மறுபரிசீலனை செய்ய வேண்டு
மென்று கேட்டுக்கொண்டு, இது ஒரு சிறிய திருத்தமாக இருந்தாலும், இத
னுடைய விளைவுகள் பெருமளவிற்கு தமிழக விவசாயிகளை பாதிக்கும்
என்பதால், இதை பொறுக்குக் குழுவிற்கு அனுப்ப வேண்டுமென்ற கருத்தைத்
தெரிவித்து அமைகிறேன்.

(முற்பகல் 11-40)

THIRU A. R. DAMODARAN: Sir, while speaking on this Bill I would have welcomed it if the Hon. Minister had explained to us why this Bill had become necessary because we were not able to understand what particular insect had come and what particular noxious weed had come out in Tamil Nadu that required a Bill of this nature. If he had explained it possibly we might have been able to understand better. Probably, from the reply, we may be able to know something about it. But, generally speaking as the hon. Member Thiru Ramamoorthy mentioned, the Tamil Nadu Agricultural Pests and Diseases Act was legistered in 1919 when a clonial administration was rulling our country. In those days, if there was an insect ottack a pest-aatack the colonial administration would think only of collecting the cost from farmers. Now under the new dispensation and order of Government, have thought that the destruction of pests and noxious weeds would become the sole and exclusive responsibility of the Government. We are spending crores of rupees on crop development work and on assuring resarch facilities to find out how some of lines insects could be eradicated from our lands. We use also, not the old hand-spray and dust-spray methods, but helicopters and aeroplanes to eradicate pest over a wide area. If the Government expect land holders, persons holding 1-1|2 acres, 2 acres or even 10-acre plots, to subscribe money to the Government for the eradication of what may be considered to be a pest over an entire area' I think that even if they pass this Bill, the Hon. the Minister for Agriculture will never be able to implement it. Even in the supply of pesticides and insecticides, 15 years ago we

were not able to introduce these things in the market because the farmers were not prepared to use any these insecticides and pesticides. So, the Government came out with a subsidy programme and they gave a subsidy of 66 per cent. It was reduced to 50 per cent and then, probably, to 33 per cent. I do not know whether a subsidy exist now. Possibly, in some places it may exist. I am only mentioning this to say that the use of insecticides and pesticides is a modern concept in agriculture and we have spent twenty years trying to educate the small farmer and the middle farmer in the use of these insecticides and pesticides. Therefore, I feel that this Bill, even though it may be proudly placed on the Statute book is incapable of being implemented because the resistance will be enormous Now, the Government are trying to collect from holders of ryotwari lands of 2 acres or 3 acres or 5 acres, some amount and that too, as if the amount would be considered to be land revenue. Now, even the land revenue is not being collected properly because we do not have the Revenue Inspecors to prepare the records. The available Revenue Inspectors are still wandering about our villages to know what sort of records have to be maintained. Then, why impose additional burden on these poor Revenue Inspectors? Therefore, I would make a plea to the Hon. Minister. I have no objection to his placing this Bill on the Statute-book. But, let him not implement it at all for some time because it is going to cause a lot difficulties. However, there are some serious weeds. For instance, there is a thorny plant which was introduced about 20 years ago. We call it 'Velikaathaan' in Tamil and I have forgotten the English name for it. It was introduced to act as a hedge in our villages about 25 years ago. Now, it has become a dangerous and obnoxious weed which is multiplying all over Tamil Nadu without any sort of restriction. To eliminate this weed, the Hon. Minister is going to conduct aerial operation and is going to collect from each one of us who are not responsible for the growth of this weed, as the hon. Member Thiru K. Ramamoorthi has mentioned. I would plead with the Hon. Miniser to consider the various practical difficulties in trying to implement acts of thiis nature. In this modern age I would request him to consider this to be the exclusive responsibility of the Government and to undertake pest control and weed control measures. Otherwise, if the Government are thinking of collecting from the agriculturists, our operations will not be successful.

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, 1919வது ஆண்டு பயிர்களுக்குக் கேடு விளைவிக்கின்ற பூச்சிகளை அழிப்பதற்கான சட்டத்தை மேலும் திருத்துகின்ற இந்த மசோதாவின் மீது எனது கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். தமிழகத்தில் விவசாயத் துறையிலே ஒரு புரட்சியை நாம் தொடர்ந்து பல ஆண்டுகளாக ஏற்படுத்தி வருகிறோம் என்பதிலே ஐயமில்லை. நல்ல முறையில் நல்ல வீரிய விதைகளைத் தேர்ந்தெடுத்து, ஆராய்ச்சி மூலம் கண்டுபிடித்து, அவைகளை விவசாயிகளுக்கு அளித்து அதிக உற்பத்தி செய்கின்ற, அதிகமான பலனைத் தருகின்ற பல்வேறு பயிர்களை நாம் விளைவித்து வருகிறோம். நெல் பயிரானாலும் சரி, மற்ற பயிராயினும் சரி, ஒரு இருபது ஆண்டுகளுக்கு முன்னால் பயிர் ஏற்றிய பயிர்களைவிட இப்போது இந்த வீரிய விதைகளைப் பயன்படுத்துவதன் மூலமாக, திருத்திய முறைகளை மேற்கொள்வதன் மூலமாக அதிக விளைச்சலை நாம் பார்க்கிறோம் என்பதிலே மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. ஆனால் கால நிலைக்கு ஏற்ப இந்தப் பயிர்கள் அதிகமான பூச்சித் தாக்குதலுக்கு ஆளாகியிருக்கிறது. நம் நாட்டிலே இருக்கக்கூடிய இந்தப் புதிய விதைகளுக்கு மாறான வகையில், பழைய 'கன்வென்ஷனல் கிராப்ஸ்' என்பவற்றை, நம்முடைய நாட்டினுடைய விவசாயிகள் விளைவிக்கும்போது, பூச்சிகள் தாக்குதலுக்கு அதிகமாக ஆட்படுவதில்லை என்ற கருத்து இருக்கிறது. இந்த வீரிய விதைகள் மூலம் புதிய முறைகள் மூலம் பயிர்கள் வைக்கின்றபோது, அவை இந்த நாட்டினுடைய தட்ப வெப்ப நிலைக்கு ஏற்றதாக இல்லை. அவைகளுக்கு ஒட்டுப் பயிர்களைக் கண்டு பிடித்ததன் காரணமாக, அந்தப் பயிர்களை ஏற்றுகிறபோது, அந்தப் பயிர்களிலே பூச்சித் தாக்குதல்கள் அதிகமாக இருக்கின்றன என்ற கருத்து விவசாயிகள் மத்தியில் இருக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம். எனவே இந்தப் பூச்சிக் கட்டுப்பாடுகள் மிகத் தேவையாக இருக்கின்றன. இப்போது புதிய ரக பயிர்களால் அல்லது பல்வேறு காரணங்களால் பூச்சி அதிகப்படுகிறது. அதற்கு அரசு பொறுப்பு ஏற்க வேண்டுமென்று சொன்னார்கள். இந்தப் புதிய ரகங்களை அங்கே தந்ததன் காரணமாக பூச்சி அதிகமாக ஆகிறது. எங்கள் பகுதியிலே சம்பா, வால்சிறை மீண்டான் என்று சொல்வார்கள். அதுபோல வேறு பல மாவட்டங்களிலே வேறு பல இருக்கலாம். இப்போது ஐ. ஆர். 20, ஐ. ஆர். 8, பொன்னி இன்னும் எத்தனை எத்தனையோ வகைகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட பயிர்களை எல்லாம் ஏற்றுகிறபோது, நிரம்பப் பூச்சித் தொல்லை ஏற்படுகிறது. கன்வென்ஷனல் கிராப் என்று சொல்கின்ற பயிர் செய்யும்போது, பூச்சியினுடைய தாக்குதலை எதிர்த்துக் கொள்ளக்கூடிய சக்தி, ரெசிஸ்டன்ஸ் பவர் அவைகளுக்கு இருந்தது. அந்தப் பகுதியிலே சம்பா பயிரைப் போட்டால், பூச்சி

மருந்து அடிக்க வேண்டியதில்லை. அந்தப் பயிரை வால் சிறை மீண்டான் என்று சொல்வார்கள். அதைத்தான் வழக்காற்றிவாசிறை மீண்டான் என்று சொல்கிறார்கள். அதற்கு எந்தப் பூச்சி மருந்தும் அடிக்கிறதில்லை. சாதாரண விவசாயி பயிரை ஏற்றுகிறபோது, அதற்கு அதிகச் செலவு செய்யாமல், தன் வீட்டிலே இருக்கக்கூடிய மாட்டைப் பயன்படுத்தி தன் வயலிலே பயிர் ஏற்றிக் கொள்கிறான். முக்கால் மேனி, ஒரு மேனிக்குள் இருக்கக்கூடிய நிலத்தில் இந்தப் பயிரைச் செய்கிறான். நினைத்தால் அந்த கன்வென்ஷனல் கிராப் தான் போடுகிறான், அதற்குப் பூச்சி மருந்து அடிப்பதில்லை. அப்படி பூச்சி மருந்து அடித்தால், அந்த நெல்லைச் சாப்பிடுகிறதில்லை என்று சொல்கின்ற விவசாயியும் இன்னும் இருக்கிறான். அந்த ரசாயன உரத்தைப் போட்டால், அந்த நெல்லைச் சாப்பிடுகிறதில்லை. அது நோய் என சொல்லக்கூடியதாக இருக்கிறது என்று நம்புகின்ற விவசாயியும் இருக்கிறான். 10 ஏக்கர் நிலத்தை வைத்திருக்கின்ற விவசாயி, தன் வீட்டிற்கு சாப்பாட்டிற்கு வேண்டுமானால், சாணி உரத்தைத்தான் போடுகிறான், ரசாயன உரத்தைப் போடுவதில்லை. அதே மாதிரி பூச்சி மருந்தை அடிப்பதில்லை. இவர்கள் புதிய விஞ்ஞான முறைக்குப் பக்கத்திலே வராதவர்கள் என்று நாம் சொல்லலாம். ஆனால் அந்தப் பகுதியிலே பயிரிடுகின்ற செலவுக் கணக்கைப் பார்த்தால், ஒரு ஏக்கரிலே விஞ்ஞான ரீதியாக புதிய ரக நெல் பயிர் ஏற்றுகின்றபோது, புதிய பூச்சி மருந்துகளைக் கலந்து பயிர் ஏற்றுகின்றபோது, புதிய ரசாயன மருந்துகளைப் பயன்படுத்துகின்றபோது, ஒரு ஏக்கருக்கு ஒரு இரண்டாயிரம் ரூபாய் செலவாகிறது. அதே சமயத்திலே கன்வென்ஷனல் பயிருக்கு ஒரு ஆயிரம் ரூபாய்தான் ஆகிறது. இரண்டாயிரம் ரூபாய் செலவு செய்து எத்தனையோ பூச்சி மருந்துகளை அடித்து, எத்தனையோ தொல்லைகளுக்குள்ளாகி பயிரிட்டால், அவனும் கடைசியிலே இரண்டாயிரம் ரூபாய் தான் பெறுகிறான். அதே நேரத்தில் ஒரு ஆயிரம் ரூபாய் செலவு செய்து கன்வென்ஷனல் முறையில் பயிர் செய்தால், அவனும் இரண்டாயிரம் ரூபாய்தான் பெறுகிறான். அதனால் நாட்டிற்குத்தான் நன்மை. விவசாயிக்கு அல்ல. அதிகமான அவுட்புட் இருக்கிறது. அவன் அதிகச் செலவு செய்து என்ன கண்டான்? உற்பத்தி அதிகமாக இருக்கிறது. ஆனால் அதனால் அவனுக்குப் பயன் இல்லை. கன்வென்ஷனல் பயிர் செய்பவன் மணிபர்சில் அந்த ஆயிரம் ரூபாய் செலவாகவில்லை. அவன் வீட்டிலே அந்தப் பணம் இருக்கிறது. 10 கோட்டை உற்பத்தி செய்பவன் 20 கோட்டை உற்பத்தி

செய்கிறான். அதனால் நாட்டினுடைய பொருளாதாரம் சிறப்பாக இருக்கும். நாட்டிலே நெல் அளவு உற்பத்தி அதிகப்படுகிறது. ஆனால் விவசாயிக்குப் பயன் இல்லை. ஆயிரம் ரூபாய் செலவு செய்து பயிர் செய்தவனை எடுத்துக் கொண்டால், அவன் நன்றாக இருக்கிறான். நாளெல்லாம் பூச்சி மருந்து அடித்துக்கொண்டு இருக்கின்ற துன்பங்கள் அவனுக்கு இல்லை: ஆனால் இந்த விவசாயி துன்பப்பட்டு உற்பத்தி செய்கிறான். அந்த நன்மையைப் பெறுவது நாடு. அந்த விவசாயி அல்ல. ஆகவேதான் அந்த விவசாயிகளுக்கு வரி போடக்கூடாது என்பது என்னுடைய கருத்தாகும்.

(முற்பகல் 11-50)

பூச்சி மருந்து தெளிப்பதில் ஏதாவது செலவாகுமென்றால், அரசாங்கமே வரிப் பணத்திலிருந்து கொடுக்க வேண்டும். உற்பத்தியைப் பெருக்க செய்யப்படுகிற இதனுடைய பின் விளைவுகள் நிறைய இருக்கின்றன. பூச்சி மருந்து அடித்து, விளையும் நிலத்திலிருந்து கிடைக்கும் வைக்கோலைத் தின்னும் மாட்டுக்கு எத்தனையோ நோய்கள் வருகின்றன. அது ஆராய்ச்சியில் இருக்கிறது. விவசாயியின் மாடுதான் அதைச் சாப்பிடுகிறது. மேலும் அவர்களுக்கு ஒரு வரி போட்டால் அது அநீதியாகும். வரி போடுவதாக இருந்தால், நாட்டிலுள்ள அத்தனை பேர்களுக்கும் போட வேண்டும். உற்பத்தியை அவர்கள்தான் அனுபவிக்கிறார்கள்: அரசாங்கம் ஒரு முயற்சி எடுத்து, விஞ்ஞான ரீதியில் ஹெலிகாப்டர் மூலம் நாடு முழுவதும் அல்லது நோய் தாக்கியுள்ள வட்டாரம் முழுவதும் பூச்சி மருந்து அடிக்கும் தத்துவத்தை எதிர்க்கவில்லை, ஆதரிக்கவும் இல்லை. ஆனால் அந்தச் செலவை யார் தாங்கிக் கொள்வது ? இதனால் விவசாயிக்கு என்ன நன்மை என்பதைப் பார்க்க வேண்டும். பூச்சி மருந்து என்ன விலை? 90 ரூபாய், 80 ரூபாய் என்றிருக்கிறது. 20 வருடங்களுக்கு முன்னால் ஒரு ஏக்கருக்குப் பூச்சி மருந்து அடித்தால், 10 ரூபாய், 5 ரூபாய் தான் ஆகும். இன்றைக்கு ஒரு ஏக்கருக்கு 70 ரூபாய் ஆகிறது. அரசாங்கம் பூச்சி மருந்து அடிக்க ஆரம்பித்தால், சாதாரணமாக விவசாயி அடித்தால் 1 ரூபாய் என்றால், அரசாங்கம் அடித்தால் 5 ரூபாயாகும். ஐ. ஏ. எஸ். ஆபீசர் ஊதியம் எல்லாவற்றையும் அதில் சேர்க்கிறோம். 50 ரூபாயில் விவசாயி செய்யக்கூடியதை அரசாங்கம் 500 ரூபாயில் செய்யும், 100 ரூபாய்க்குக் குறைந்து பூச்சி மருந்து அடிக்க முடியாது: ஒன்று, உற்பத்திப் பொருள்களை வாங்குபவர்கள் தலையில் அந்தச் செலவைப் போட வேண்டும், இல்லாவிட்டால் வரிப் பணத்திலிருந்து கொடுக்க வேண்டும். விவசாயிகளுக்கு வரி போடுவது என்பது தவறான முன்மாதிரி என்று சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் சொன்னதுபோல, வெள்ளைக்காரன் காலத்தில், வரி விதிப்பதற்கு—1919-ல்—ஒரு கொள்கை வைத்தார்கள். மாண்டேகு சேம்ஸ்போர்ட் சீர்திருத்தம் வந்தது 1919-ல்: அப்போது இவ்வளவு வியாதி கிடையாது. ஒரு வெல்பேர் ஸ்டேட்டில் உணவு தானியங்களை உற்பத்தி செய்வது அரசாங்கத்தின் பொறுப்பு. இந்த நிலையில் விவசாயிகளுக்கு வரி போட்டால், அவர்கள் பயிர் செய்வதை விட்டுவிட்டு வேறு ஏதாவது சவுக்கு போன்றவற்றை வளர்க்க ஆரம்பிப்பார்கள். ஒரு ஏக்கரில் நெல் விவசாயம் செய்தால், 200 ரூபாய் லாபம் கிடைக்கும், சவுக்கு வளர்த்தால் 1,000 ரூபாய் லாபம் கிடைக்கும். உணவு தானிய உற்பத்திக்கு பதில், சவுக்கு உற்பத்தி செய்து, விறகை அடுக்கி வைப்பார்கள். இதை எச்சரிக்கையாகச் சொல்கிறேன். கேரளாவிலே தென்னைப் பயிர்களுக்கு வில்ட் என்ற நோய் உருவாகியிருக்கிறது. கேரளாவிற்குப் பக்கத்திலேயுள்ள கன்னியாகுமரி மாவட்டத்திலே அந்த நோய் தாக்குகிறது. முதலிலே மேலே இருக்கக்கூடிய இலைகள் வெளுத்துப் போகின்றன. 5, 3 வருடக் கன்றுகளில் தண்டிலே திடீரென்று பார்த்தால், சிவப்பாக, பிசு போன்று ஒன்று வடிகிறது. காதை வைத்துக் கேட்டால் இரைச்சல் கேட்கும். 15 நாட்கள் கழித்து தலை சாய்ந்துவிடும். அதைத் தோண்டி எடுத்து, பைரகோன் என்ற மருந்தை வைத்து அடைத்தால் அது செத்துப் போகுமென்று சொல்லுகிறார்கள். அந்த மருந்து கிடையாது. கன்னியாகுமரி மாவட்டத்தில் அந்த நோய் அதிகமாக இருப்பதால் கேரளாவிலிருந்து வாங்குகிறார்கள். பிளாக் மார்க்கெட்டில் மருந்து கிடைக்கிறது. அந்த நோயைத் தடுக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. கேரளாவிலிருந்து அந்தத் தொத்து நோய் பரவுகிறது. அரசாங்கத்தின் பொறுப்பை விவசாயிகள் தலையில் போடுவதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். எனவே இந்தச் சட்டத்தை கொண்டு வரக்கூடாது: "தேவைப்பட்டால் நீங்களே செய்யுங்கள். உங்களுக்கு நிதி வசதி இல்லையென்றால் சப்சிடி பிரைசில் பூச்சி மருந்து கொடுங்கள்". விவசாயம் செய்பவர்களில் சிலர் கன்வென்ஷனல் கிராப் போடுகிறார்கள். அவற்றைப் பூச்சிகள் பாதிக்காது. பொன்னி, ஐ. ஆர். 20 போன்றவற்றைப் பூச்சிகள் தாக்குகின்றன. அவைகளுக்குத்தான் பூச்சி மருந்து அடிக்க வேண்டும். எனவே அமைச்சரவர்கள் இந்தச் சட்ட முன்வடிவை இப்போது நிறைவேற்றினாலும் கூட, அமுல் நடத்தாமல், அப்படியே கோல்ட் ஸ்டோரேஜுக்கு அனுப்ப வேண்டும். அல்லது செலக்ட் கமிட்டிக்கு அனுப்பினால், எதிர்ப்பைப் புரிந்து கொள்ள முடியும். நாட்டிலே செலக்ட் கமிட்டி சுற்றி வரும்போது,

அமைச்சரவர்கள் தலைவராக இருந்து, எதிர்ப்பைப் புரிந்துகொள்ள முடியும்.
அல்லது இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றினால், பூச்சி மருந்து அடிக்க
அரசே வசதி செய்ய வேண்டும். அடித்தால் அரசாங்கச் செலவில் அடியுங்
கள் என்று கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு மேலவைத் துணைத்
தலைவரவர்களே, இந்தச் சட்ட முன்வடிவு மீது மாண்புமிகு உறுப்பினர்கள்
தங்களுடைய கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். அவர்கள் இந்தச் சட்ட
முன்வடிவினுடைய உயர்வான நோக்கத்தைப் புரிந்துகொள்ளத் தவறிவிட்டார்
களோ என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால்
1919-லே உருவான இந்தச் சட்டத்தில் நாம் இப்போது திருத்தங்களைக்
கொண்டு வருவதற்கான காரணம் சட்ட முன்வடிவிலே விளக்கப்பட்டிருக்கிற
தென்று நான் நம்புகிறேன். முக்கியமான நோக்கம், விவசாயிகளுடைய
விளை நிலங்கள் பூச்சியின் தாக்குதலுக்கு ஆளாகும்போது, பழைய சட்டத்
திலே இருக்கிற நடைமுறைப்படி, அதற்கு மருந்து அடிக்க வேண்டுமானால்,
துறை முன் வந்து அந்தப் பணியை மேற்கொள்ள வேண்டுமானால், அங்கே
யுள்ள உள்ளாட்சி நிர்வாகங்களிலே தீர்மானம் போட வேண்டும், ஊராட்சி
ஒன்றியத்தில் தீர்மானம் போட வேண்டும் என்று பழைய சட்டத்திலே இருக்
கிறது. அப்படி ஊராட்சி ஒன்றியங்களிலே தீர்மானம் நிறைவேற்றி, அதற்குப்
பிறகு விவசாயிகளுடைய விளை நிலங்களிலே நாம் மருந்து அடிக்க முயற்சி
களை மேற்கொள்வதற்குள் பயிர்கள் சேதத்திற்கு உள்ளாகும். அதனால்
அந்த நடவடிக்கையை விரைவுபடுத்த வேண்டுமென்று ஊராட்சி ஒன்றியங்கள்
தீர்மானம் நிறைவேற்ற வேண்டியதில்லை, அங்கே பயிர்கள் பூச்சியின் தாக்கு
தலுக்கு ஆளாகியிருக்கின்றன என்று துறைக்குத் தெரியும்போது, ஓர்
அறிக்கையை வெளியிட்டு, நேரடியாக மருந்து அடிக்கும் முயற்சியில் துறை
ஈடுபடலாமென்பதுதான் இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு
முக்கியமான காரணம். இன்னொன்று, பழைய சட்டத்திலே சில பயிர்கள்
தாக்குதலுக்கு ஆளாகும்போது, அந்தப் பயிர்களைக் காப்பாற்ற முடியாது.
மொத்தமாக அழித்தால்தான் பக்கத்திலுள்ள பயிர்களைக் காப்பாற்ற முடியு
மென்ற நிலைமை இருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமைக்கு அந்தப் பயிர்கள்
ஆளாகி, அவற்றை அழிக்கும் முயற்சியில் ஈடுபடும்போது, எந்த விவசாயி
பாதிக்கப்படுகிறானோ அதற்கு நஷ்ட ஈடு கொடுக்க வழிவகையில்லை. மரம்
பாதிக்கப்பட்டால்தான், நஷ்ட ஈடு கொடுக்க வாய்ப்பிருக்கிறது என்ற வகை
யில் பழைய சட்டம் இருக்கிறது. இந்தச் சட்டத்தின் மூலம் வாழை போன்றவை
நோய்களுக்கு ஆளாகும்போது, அவற்றைக் காப்பாற்ற முடியாது. அவற்றை

அழிக்க வேண்டுமென்ற நிலைமை ஏற்படும்போது, அதனால் பாதிக்கப்படும்
விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு கொடுக்க இந்தச் சட்ட முன்வடிவு வகை
செய்கிறது. நெற் பயிர்களைச் சில வைரஸ் போன்ற கொடிய நோய்கள்
தாக்கும்போது, அந்தப் பயிர்களை மொத்தமாக அழிக்கும்போது, விவசாயி
களுக்கு அதற்காக இழப்பீடு தரலாமென்று சட்ட முன்வடிவு வழி வகை
செய்கிறது. மணிலாவிற்கு சிவப்பு கம்பளிப் பூச்சி வரும்போது, அதை
அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டு, இதை அழிக்கும்போது பாதிக்கப்படுகிற
விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு கொடுக்க இந்தச் சட்ட முன்வடிவு வழி வகை
செய்கிறது. பழைய சட்டத்திலே, அரசிதழிலே அந்தப் பகுதி பாதிக்கப்பட்
டிருக்கிறதென்று அறிவித்த பின்புதான், துறை நடவடிக்கை எடுக்கலாமென்
றிருப்பதை, மாற்றியிருக்கிறோம். பழைய சட்டத்தில் நாம் விவசாயிகளைக்
கட்டாயப்படுத்த முடியாது. ஒரு பகுதியிலே பூச்சித் தாக்குதலுக்கு பயிர்கள்
இலக்காகின்றன என்றால், பக்கத்திலுள்ள வயல்களிலும் பரவக்கூடும். ஆனால்
அதற்கு மருந்து அடியுங்கள் என்று விவசாயிகளைக் கட்டாயப்படுத்த
முடியாது. இந்தச் சட்டத்தின் மூலம் மற்ற நிலங்கள் பாதுகாக்கப்பட
வேண்டுமென்றும், அவர்கள் தனிப்பட்ட முறையில் மருந்து அடிக்க முன்வர
வில்லை என்றாலும், கட்டாயப்படுத்தி மருந்து அடிக்க இந்தப் புதிய சட்ட
முன்வடிவு வழிவகை செய்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்வது,
இதற்கான செலவை விவசாயிகளிடமிருந்து வசூலிக்கக்கூடாது என்பதுதான்.
இந்தப் புதிய சட்டத்தின் மூலமாக விவசாயிகளிடமிருந்து வசூலிக்கப் போகி
றோமென்று அறிமுகப்படுத்தவில்லை. பழைய மூலச் சட்டத்தில் பயிர்
களுக்கான பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் அதற்காகும் செலவை
நில வரியில் சேர்த்து வசூல் செய்வது நடைமுறையாக இருந்து வருகிறது.

(நண்பகல் 12-00)

ஆக, சாதாரணமாக இருக்கிற அந்தச் சட்டத்தின், மூலச் சட்டத்தின் அதே
வரிகளைப் பின்பற்றித்தான் விவசாயிகளிடமிருந்து கட்டணத்தை வசூலிக்க
இருக்கிறோம். அதில் ஏதாவது மனக்குறை இருந்தால், இந்த அளவுக்கு
அதிகமாக வரி போட்டு விட்டார்கள் என்று சொல்லி மேல்முறையீடு செய்வதற்
கும் வழிவகை இருக்கிறது.

விவசாயிகளுடைய பயிர்களுக்கு ஏற்படுகிற நோய்களுக்கு, பயிர்களில்
வருகிற பூச்சிக்கு எப்படி விவசாயிகள் பொறுப்பாவார்கள் என்று மாண்புமிகு
உறுப்பினர் திரு. இராமமூர்த்தி கேட்டார். விவசாயிகளுடைய பயிர்களில்

வருகிற நோய்களுக்கு, பூச்சிகளுக்கு யார் பொறுப்பாளி என்று கண்டறிய முடியாது. பிளேக் போன்ற நோய்கள் வருகின்றன என்றால், இத்தகைய வியாதிகள் வெளிநாடுகளிலிருந்து இங்கு வருகின்றன. அப்படி வருகின்ற வியாதி நம்மை பாதிக்கும்போது நாம்தான் அதற்கு மருத்துவம் செய்ய வேண்டும், செலவு செய்ய வேண்டும். ஆக, அந்த அளவு அரசு பூச்சிகளை உற்பத்தி செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் பேசுகிறபோது பழைய பயிர் முறையில் பயிர் செய்தால், பயிர்கள் பூச்சித் தொல்லைக்கு இலக்காவதில்லை என்று இங்கே குறிப்பிட்டார்கள். அவர்கள் அப்படிச் சொல்லியதைக் கேட்ட எனக்கு வீட்டிலே சில நேரத்திலே பெரியவர்கள் சொல்வது நான் என்னுடைய ஞாபகத்திற்கு வந்தது. ஏதோ எங்கள் காலத்தில் தான் விதைகளில் பூச்சி வந்திருப்பது போல் குறிப்பிட்டார்கள். ஆனால் முன்பு பூச்சிகள் பயிர்களை எந்த அளவுக்கு பாதித்து வந்தது என்பதையும், இப்போது அது எந்த அளவுக்குக் குறைந்திருக்கிறது என்பதையும் பார்த்தால், இந்த விஷயத்தில் நாம் அறைகூவல் விடுக்கும் அளவிற்கு முன்னேறியிருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டதுபோல் புதிய விதைகளை எந்த விவசாயிகளிடத்திலும் கொடுத்து கட்டாயப்படுத்துவதில்லை. பல்கலைக் கழகத்தில் இது குறித்து பலவித ஆராய்ச்சி செய்யப்படுகிறது. அதிகப் பலன் கிடைக்கும் என்று தெரிந்த பிறகு தான், இது நடைமுறைக்குக் கொண்டு வரப்படுகிறது. குறைந்த உற்பத்திச் செலவில் அதிக விளை பொருள்கள் கிடைக்கும் என்று திட்டவட்டமாக, உறுதியாகத் தெரிந்த பிறகுதான் இதுகுறித்து முடிவுகள் எடுக்கப்பட்டு விவசாயிகள் பயன்படுத்த அனுப்பப்படுகின்றன. சில மருந்துகளைப் பயன்படுத்துவதன் மூலம் உணவு பாதிக்கப்படுமா, மாடுகளுக்கு வைக்கோலைப் போட்டால் அவற்றுக்கு ஏதாவது வியாதி வருமா என்றெல்லாம் ஆராய்கிறார்கள். உணவுப் பொருளில் நஞ்சுத் தன்மை கலக்கக் கூடும் என்கிற சந்தேகம் வந்தால், அதைத் தவிர்த்து விடுகிறோம். ஆக, இதுகுறித்து ஆராய்ச்சிகள் முறையாக நடந்து கொண்டிருக்கின்றன. இதுகுறித்து அரசு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கிற நிலையில் இருக்கிறோம். அதனால்தான் இதைக் கொண்டு வந்திருக்கிறோம். ஆராய்ச்சியின் முடிவு வெளியிடப்பட்டு, ஊராட்சி ஒன்றியங்களில் எல்லாம் இதுகுறித்து தீர்மானங்கள் கொண்டு வருவதில் கால தாமதமானது. இதை இன்னும் தாமதப்படுத்தினால், விவசாயிகளுக்கு மிக அதிக அளவில்

பாதிப்பை ஏற்படுத்தி விடும். விவசாயிகளுக்கு ஏற்படுகிற பாதிப்பைக் குறைப்பதற்காகத்தான் இதைக் கொண்டு வந்திருக்கிறோம். ஏற்கெனவே மூலச் சட்டத்தில் உள்ளதன் அடிப்படையிலேதான் இதைக் கொண்டு வந்திருக்கிறோம். விவசாயிகளைக் கட்டாயப்படுத்தி அவர்களிடமிருந்து அதிகமாக வரி வசூலிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இதைக் கொண்டு வரவில்லை. விவசாயிகளுடைய சிரமத்தை எந்த அளவுக்குக் குறைக்க முடியுமோ அந்த அளவுக்குக் குறைக்க வேண்டுமென்ற முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்து இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு, பயிர்களுக்குக் கேடு விளைவிக்கத்தக்க பூச்சிகளையும் நோய்களையும் பற்றிய (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 65/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 3 மற்றும் 9, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 4.

THIRU K. RAMAMOORTHY: Sir, I move the following amendment:—

"Delete sub-clauses (3) and (4) of section 8-A.

Delete sub-clause (5) (b) and re-number clause (5) (a) as clause (3)."

THIRU A. R. DAMODARAN: I second it.

* திரு. க. இராமமூர்த்தி: அநேகமாக இதுபற்றி பேசி மாண்புமிகு அமைச்சர் அவர்களும் என்னுடைய திருத்தத்தின் அடிப்படையில் பதில் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் ஒன்றை மட்டும் நான் அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எவ்வளவுதான் அரசியல் வாதியாக இருந்து பொது வாழ்க்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாலும், அமைச்சராக பொறுப்

பேற்றுக் கொண்டதும், அமைச்சர் பதவிக்குரிய சில பலவீனங்கள் பொதுவாக
இப்பதவிக்கு வருகிறவர்களுக்கு வந்து விடுகின்றன. அமைச்சர்கள் உடனே
பெரிய ஆபிசர்களாக மாறி விடுகிறார்கள். They become typical bureaucrats
அமைச்சர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்' உள்ளூர இதிலே இருக்கின்ற
நியாய அநியாயங்கள் பற்றித் தெரிந்திருந்தாலும் கூட, எடுத்த எடுப்பிலேயே
இதுதான் சரி என்று தெரிவிக்கும் அளவில் அவர்கள் மாறி விடுகிறார்கள்.
அந்த அடிப்படையில் தான் இங்கேயும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெகு
அழகாக அதுதான் நியாயம் என்கிற உணர்வை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.
He has defended it. நமக்கு வருகிற நோய்களை நாம் தான்
குணப்படுத்த வேண்டுமென்று இங்கே சொன்னார்கள். அம்மை ஒழிப்பு,
மலேரியா ஒழிப்பு போன்ற நோய் ஒழிப்புத் திட்டங்கள் எல்லாம் நாடு தழுவிய
முறையில் அன்றைக்கு மேற்கொள்ளப்பட்டன R.D. & L.A. ஆர்.டி.எல்.ஏயில்
அமைச்சராக இருந்து இதுபற்றி ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். தனி மனிதன் பால் அனுதாபப்படு
வது என்பது வேறு. தனி மனிதனுக்கு நோய் ஏதாவது வந்தால், அதை
அவரவர்கள் தான் குறைக்க வேண்டும், குணப்படுத்த வேண்டும். அதைத்
தான் எல்லோரும் இன்றைக்குச் செய்து கொண்டிருக்கிறார்கள். புற சூழ்நிலை
என்று பார்க்கிறபோது, அதை ஒழுங்குபடுத்துவது என்கிற பிரச்சினை வருகிற
போது, அதற்குரிய வசதியுடையவர்கள் வீட்டிலேயே கழிப்பிட வசதியை ஏற்
படுத்திக் கொள்கிறார்கள். அப்படி வசதி இல்லாதவர்கள் என்ன செய்வார்
கள்? அவர்களுக்காகத்தான் அரசாங்கம் பொதுக் கழிப்பிட வசதிகளை
ஏற்படுத்துகிறது. அந்த வசதியை நாம் பொதுமக்களுடைய பணத்திலிருந்து
தானே ஏற்படுத்துகிறோம். அதைப்போலத்தான் இந்த நோய்க் கிருமிகளைப்
பொறுத்தவரையில், அவை விவசாயியால் உருவானவை அல்ல. அவன் தவறாக
விவசாயம் செய்ததனால் அல்ல. அவனுக்குத் தெரியாத, கட்டுக்கு அடங்காத
பல்வேறு காரணங்களால் அது நடைபெறுகிறது.
(Envirenmental circumstances) என்விரோன்மென்டல் சர்கம்ஸ்டான்சஸ்
நடைபெறுகிறது. இப்படி நிகழும்போது விவசாயிகளைக் காப்பாற்ற
வேண்டியது அரசின் பொறுப்பு. இப்படி சில நடவடிக்கைகளை எடுத்துத்
தான் ஆக வேண்டும். 'உன்னுடைய பயிருக்கு இன்ன பூச்சி நோய் வந்திருக்
கிறது, ஆகவே நீ பணம் கொடுக்க வேண்டும்' என்று பெயரைக் குறிப்பிட்டுக்
கேட்டார்கள் என்றால், அந்த உணர்வை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது.
ஆனால் பொதுவாக இப்படி கொடுங்கள் என்று கேட்டால், எப்படி? ஒன்றை
இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வேர்க்கடலைக்கு
எல்லாம் சிகப்பு கம்பளிப் பூச்சி நோய் வந்தது. இந்த வருடம் இன்ன

மாவட்டம், அடுத்த வருடம் இன்ன மாவட்டம் என்று ரேடியோ மூலம் குறிப்
பிட்டு, அந்த நோய்பற்றி அறிவித்தார்கள். அதுபோல் சமீபத்தில்
'ஸ்வாம்' என்கிற திரைப்படத்தின் மூலம் இதனால் ஏற்படுகிற தொல்லைகளை
எடுத்துக்காட்டினார்கள். வெட்டுக்கிளிகளின் தன்மையும் அதுபோல் தான்.
இப்படிப்பட்ட நிலைமை வருகிறபோதெல்லாம், அரசு தடுக்க வேண்டும்.
அப்படித் தடுக்காமல் இருந்தால், அரசு தன்னுடைய கடமையிலிருந்து தவறிய
தாகிறது. இதிலே சம்பந்தப்பட்டது இந்த விவசாயிதான் என்று குறிப்பிட்டுச்
சொல்லி நடவடிக்கை எடுக்க முடியாது. எல்லோருக்கும் இதைச் செய்ய
வேண்டுமென்று சொல்லும்போது, விஷயம் எப்படிப் போகிறது என்பதை
எண்ணிப் பார்க்க வேண்டும். மணிலாவைப் பொறுத்தவரையில், 'ஏரியல்
ஸ்பிரே' அடித்து நோயைத் தடுத்தார்கள். ஆனால், அதற்காக யாரிடமிருந்தும்
செலவை வசூல் செய்ய முடியவில்லை. அரசுதான் பொறுப்பேற்று ஹெலி
கேப்டர் வைத்து மருந்து அடித்தது. விவசாயிகள் ஹெலிகேப்டர் வாங்கி
வைத்து அப்படி மருந்து அடிக்க முடியாது. இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில்
அதற்கான பொறுப்பை ஏற்று மருந்தை அடிக்க வேண்டியது அரசின் கடமை.

இன்றைக்கு நாட்டிலே உணவு உற்பத்தியின்பால் அரசு ஆர்வம் காட்டு
கிறது. அதற்காக ஒவ்வொரு விவசாயியிடமிருந்தும் இவ்வளவு தொகை
என்று நிர்ணயித்து பணம் வசூலித்தா (Dams) ஐ கட்டிக் கொண்டு வருகிறார்
கள்? இல்லையே. விவசாயப் பாதுகாப்புக்காக, உற்பத்திப் பெருக்கத்திற்
காக அரசாங்கம் இதனைச் செய்கிறது. அணைகள் கட்டப்படுவது ஒரு
ஊருக்காக அல்ல, ஒரு மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்காக அல்ல. மாநிலம்
முழுமையிலும் உள்ள விவசாயிகளின் நன்மைக்காக என்றுதான் மக்களுடைய
வரிப் பணத்தால் அணைக் கட்டுகள் கட்டப்படுகின்றன. அந்த அடிப்படை
யில் தான் விவசாயிகள் நீர்ப்பாசன வசதி பெறுகிறார்கள். அதற்காக ஒவ்
வொரு விவசாயியிடமிருந்தும் வசூல் செய்வதில்லை. யார் யார் அந்தக் குறிப்
பிட்ட அணையிலிருந்து வருகிற தண்ணீரைப் பயன்படுத்துகிறார்களோ அவர்
களிடமிருந்தெல்லாம் வசூல் செய்யப்படுவதில்லை. அந்த அடிப்படையில்
தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு பயிர்களுக்குக் கேடு விளைவிக்கத்தக்க பூச்சிகளை
யும் நோய்களையும் பற்றிய திருத்தச் சட்ட முன்வடிவு மீது நான் கொடுத்
திருக்கக்கூடிய திருத்தம் மிக மிகத் தேவையானது.

இன்னொன்றையும் சொல்கிறேன். இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்
கள் சொன்னார்கள். "தனக்கு வியாதி வரும்போது அவன் தான் அதை
குணப்படுத்திக் கொள்ள வேண்டும். மற்றவர்கள் குணப்படுத்துவார்கள்
என்று எதிர்பார்க்க முடியாது" என்று சொன்னார்கள். எனக்கு மஞ்சள்

காமாலை நோய் வந்தால், நான்தான் பச்சிலை மருந்தைப் பயன்படுத்தி நோயை குணப்படுத்திக் கொள்ள வேண்டும். அதுவே மாண்புமிகு அமைச்சருக்கு வந்தால், இங்கிலீஷ் மருந்தைப் பயன்படுத்துவார்கள்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : அமைச்சர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் அரசு இலவச மருத்துவ வசதியை வழங்கியிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : அரசு இலவச மருத்துவ வசதியை அளித்திருக்கிறது என்பதை ஒப்புக்கொள்கிறேன். பச்சிலை மருந்தைப் பயன்படுத்தினால், கொஞ்சம் நாட்களிலேயே அந்த நோய் குறைந்துவிடும். ஆனால் அமைச்சர் அவர்கள் ஆங்கில மருந்தைப் பயன்படுத்துவார்கள். அப்படிப் பயன்படுத்துகிறபோது நோய் குணமாக பல நாட்கள் ஆகும். அவரால் ஒரு வேளை ஓய்வில் இருந்துகொண்டு சிகிச்சை பெற முடியும். ஆனால் என்னால் அப்படி பல நாட்கள் சிகிச்சை பெற முடியாது, வசதி கிடையாது. என்னைப் பொறுத்தவரையில், நோய் வந்தால், உடனடி பரிகாரம் காண வேண்டும் என்கிற கொள்கையுடையவன். அதுபோல் அரசின் சில நடவடிக்கைகளில் பல விவசாயிகள் இன்றைக்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். உயர் ரகப் பயிரை யார் கொண்டு வந்தது ? விதை நெல்லை எடுத்து அதில் பூச்சிக் கொல்லி மருந்தை ஸ்பிரே (Spray) பண்ணி அதை ஒரு மணி நேரம் அல்லது இரண்டு மணி நேரம் வெயிலில் காய வை என்று சொல்லிக் கொடுக்கின்றீர்களே, பூச்சிக் கொல்லி மருந்தை விதையில் செலுத்தக் காரணம் விதையிலே பூச்சி உருவாகிறது என்று அரசுதானே சொல்லிக் கொண்டிருக்கிறது. இன்றைக்கு அரசு கொடுக்கிற அப்படிப்பட்ட விதையைத் தானே பல விவசாயிகள் பயிரிட வேண்டிய நிலையில் இருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-10)

அதற்குக்கூட பூச்சி மருந்து போட வேண்டுமென்றால், என்ன அர்த்தம்? அதிலே பூச்சி இருக்கிறது என்றுதானே அர்த்தம். இதற்காகவே நாங்கள் அரசாங்கத்தைத் தண்டிக்க வேண்டும். இப்படி விவசாயிகள் மத்தியில் பூச்சிகளை உலவ விடுவதற்காக நாங்கள் இந்த அரசைக் கண்டிக்க கடமைப்பட்டிருக்கிறோம். இதன் காரணமாக விவசாயிகளுக்கு உண்மையிலேயே நட்டஈடுகூட தர வேண்டும். ஆனால் இன்றைய தினம் விவசாயப் பெருங்குடி மக்கள் Organised) ஆர்கனைஸ்டாக இல்லாத காரணத்தால், அவர்கள் கேட்க முடியாமல் இருக்கிறார்கள். விளையவில்லை என்றால், அதற்காக

நட்ட ஈடு தருகிறோம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே கருத்து தெரிவித்திருக்கிறார். இந்த வகையில் அவருடைய உணர்வுகளைப் பாராட்டுகிறேன், மதிக்கிறேன். எனவே இத்தகைய முறைகளில் ஆகும் செலவினங்களை தயவு செய்து விவசாயிகள் மீது சுமத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

தனிப்பட்ட விவசாயிகள் பாதிக்கப்படுகிறபோது, அவர்களே நடவடிக்கை எடுத்துக் கொள்கிறார்கள். அதற்கான செலவை தனிப்பட்ட விவசாயியே மேற்கொள்ளுகிறார். பஞ்சாயத்து யூனியனிலிருந்து ஸ்பிரேயரை அனுப்பச் சொல்லி அதற்கான பணம் கட்டுகிறார். அல்லது விவசாய இலாக்காவிலிருந்து வந்தால், அதற்கான பணத்தைக் கட்டுகிறார். அப்படித்தான் அவருடைய நிலத்தில் வருகிற பூச்சிகளை அவர்கள் கட்டுப்படுத்துகிறார்கள். ஆனால் எங்களுக்கு விவசாயிகளுக்குச் சம்பந்தமேயில்லாத பூச்சிகளை அரசின் சார்பில் கண்டுபிடித்து அவைகளை ஒட்டு மொத்தமாக அழிக்க வேண்டும் என்று நடவடிக்கை எடுக்கிறபோது, அது தேவை என்று வருகிறபோது, செலவை எங்கள் தலையில் வைப்பது எப்படி நியாயம் என்றுதான் கேட்கிறேன். எங்கள் நிலத்திலிருந்து அந்தப் பூச்சிகள் வரவில்லையே. எங்களுக்குச் சம்பந்தமில்லாத நிலையில் எங்கள்மீது சுமையைப் போடுவது எப்படி நியாயம்? எனவே இப்படிப்பட்ட நிலையில் அனைத்துச் செலவுகளையும் அரசுதான் ஏற்க வேண்டுமே தவிர, எங்கள்மீது சுமத்துவது சரியல்ல, முறையல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, முன்பு ஏரியல் ஸ்பிரே (Aerial spray நடந்தது. அதில் எவ்வளவு பேர்களிடம் வசூல் செய்யப்பட்டது. எந்த அளவுக்கு அரசாங்கம் அதில் 'ரைட் ஆப்' Write off செய்தது? விவசாயிகளுக்கு எவ்வளவு தொல்லை இருக்கிறது என்று அரசாங்கமே ஒப்புக்கொள்கிறது. அவர்களுக்குக் கட்டுப்படியாகிற விலையில் பொருள்களை விற்க நம்மால் உதவி செய்ய முடியவில்லை. அவர்கள் நட்டத்திலேதான் விவசாயத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதையெல்லாம் ஏற்றுக் கொண்டு, அதற்கெல்லாம் எப்படிப் பரிகாரம் காண்பது என்று புரியாமல் அவதிப்படுகிறோம். இந்த நிலையில் சங்கடப்படும் அவர்களுக்குக் கடன் சுமையை அதிகமாக்குவது போல், இந்த நடைமுறையைக் கொண்டு வருவது எந்த வகையிலும் சரியில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எனவே இதை நீக்குவதற்கு ஏற்ற வகையில் என்னுடைய திருத்தம் அமைந்திருக்கிற காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மற்ற பலவற்றில் பிடிவாதமாக இருந்தாலும், இதில் பிடிவாதமாக இருக்கக்கூடாது, இருக்க மாட்டார் என்றுதான் எண்ணுகிறேன். எனவே அவர் இந்தத் திருத்தத்தை ஏற்று சட்ட முன்வடிவை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராமமூர்த்தி அவர்கள் விவசாயிகளிடம் வரியை வசூலிக்கக்கூடாதென்பதற்கான ஒரு திருத்தத்தைத் தந்து அதற்கான விளக்கங்களையும் சொல்லியிருக்கிறார்கள். அவர் குறிப்பிட்டதைப் போலவே, நான் தேவையில்லாத எந்த நேரத்திலும் பிடிவாதமாக இருக்க மாட்டேன் என்பதை முதலில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

விவசாயப் பெருமக்கள் ஒட்டு மொத்தமாகப் பாதிக்கப்படும்போது, சில இயற்கை உற்பாதங்கள் ஏற்படுகிறபோது, வறட்சி ஏற்படுகிறபோது, வெள்ளச் சேதம் ஏற்படுகிறபோது, அல்லது புயல் காற்று வீசி வாழை மரங்களெல்லாம் சாய்கின்ற நிலை வரும்போது, அரசாங்கம் அவர்களுக்கு உதவி செய்கிறது. அவர்களுக்கு ஏற்பட்ட இழப்பை ஈடு செய்யக்கூடிய அளவுக்குச் சில பல வழி வகைகளைச் செய்கிறது. கடன்களைத் தள்ளிப் போடுகிறது, சில நேரங்களில் ஒட்டு மொத்தமாகக் கடனையேகூட தள்ளிப் போடுகிறது.

ஆனால் பூச்சி மருந்து தெளிப்பதென்பது விவசாயத்தில் உள்ள பயிர் பாதுகாப்பு முறையில் ஒரு அம்சம். எப்படி களை எடுப்பது, உழுவது, விதைப்பது என்பதெல்லாம் விவசாயத்தில் ஒவ்வொரு கட்டங்களோ அதைப்போல பூச்சி மருந்து தெளிப்பது என்பது பயிர் பாதுகாப்பையொட்டிய ஒரு கட்டம். பயிர்கள் பாதிக்கப்படுகிற நிலை உருவாகும்போது, அரசாங்கம் தலையிட்டு விவசாயிகளுக்கு உதவி செய்கிறது. அந்த வகையில்தான் இந்தச் சட்டத்தை கொண்டு வந்திருக்கிறோம் துரிதமாக உதவி செய்ய வேண்டும் என்று விவசாயத் துறையே சில நடவடிக்கைகளை எடுக்க முன்வருகிறது. இப்படி உதவி செய்யப் போவதையே ஒரு குற்றமாக்கி செலவுத் தொகையை வசூலிக்க கூடாது என்று சொல்வது சரியான வாதமாக எனக்குப் படவில்லை.

அரசாங்கம் பல வசதிகளைச் செய்கிறது. விவசாயிகளுக்கு டிராக்டர்களைக் கொடுத்து உழுவதற்கு வசதி செய்து தரலாம். அதைப்போலவே இலவசமாக விதைகளைக் கொடுத்து விதைக்கச் சொல்லலாம். பூச்சி மருந்தைக்

கூட அடித்துத் தரலாம். அதற்குப் பிறகு அறுவடையான பிறகு, விவசாயி உற்பத்தி செய்த பொருளுக்கு நல்ல விலையைப் பெற்றுத் தரலாம். இப்படி எல்லாவற்றையும் செய்யலாம் என்றால்கூட, இன்றைய தினம் இருக்கும் சமூக அமைப்பு அப்படி இல்லை. பொதுவுடைமைச் சமுதாயத்தில் வேண்டுமானால் இவைகளையெல்லாம் அரசாங்கம் நிறைவேற்றித் தரலாம். ஆனால் இன்றைக்கு இருக்கிற சமுதாய அமைப்பில் அவர்களுக்கு ஏற்படுகிற செலவில் ஓரளவுக்கு அரசாங்கமே முன்வந்து துணை புரியக்கூடிய வகையில்தான், சில நடவடிக்கைகளை எடுக்க முடியும். விவசாயிகளே முன்வந்து நடவடிக்கைகளை எடுக்க முடியாத நேரத்தில் அவர்களுக்கு உதவி செய்யும் வகையில் அரசாங்கம் முறையாகச் சில நடவடிக்கைகளை எடுக்கிறது. ஆனால் கடுமையான நிலை ஏற்படும்போது, ஒட்டுமொத்தமாக எவ்வளவு உதவி செய்ய முடியுமோ அதைச் செய்வதற்கு அரசு தயாராக இருக்கிறது. வரி விலக்களிப்பது, கடன்களைத் தள்ளி வைப்பது என்பது போன்ற பல்வேறு வகைகளில் அரசு யோசித்து பல நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. முடியாத நிலையில் சில நேரங்களில் கூட்டுறவுக் கடன்களைக்கூட அரசாங்கம் ரத்து செய்துவிட்டு, தன்னுடைய கருவூலத்திலிருந்து விவசாயிகளின் சார்பாகக் கட்டியிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள் என்று கருதுகிறேன். பொதுவாகத் தனி யாருக்கு வியாதி வருகிறது என்றால், அது வேறு விஷயம். ஆனால் காலரா, பிளேக் போன்ற வியாதிகள் வருகிறபோது, அரசாங்கமே அதில் தலையிட்டு காலரா பரவுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. அப்போது பஸ் ஸ்டாண்டுகளில்கூட கையிலே ஊசியை வைத்துக்கொண்டு வருவோர் போவோரை எல்லாம் பார்த்து, ஊசி போட்டுக் கொள்ள வேண்டும் என்று அதிகாரிகள் சொல்வதும் அதைப் பார்த்து பலர் மிரண்டு ஓடுவதுமான நிலைமைகள் நம் அனைவருக்கும் தெரிந்ததுதான். இவைகளையெல்லாம் எப்போதாவது ஏற்படுகிற சூழ்நிலையில்தான் செய்ய முடியும். எனவே அந்த வகையில்தான் இந்தச் சட்ட முன்வடிவும் கொண்டு வரப்பட்டிருக்கிறது. புதிதாக நாம் இந்த வரியை இப்போது வாங்க வேண்டுமென்று அறிமுகப்படுத்தவில்லை. ஏற்கெனவே இருக்கிற சட்டத்தில் சிறு திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். எனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் தமது திருத்தத்தைத் திரும்பப் பெற்றுக்கொண்டு சட்ட முன்வடிவை நிறைவேற்ற ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் தமது திருத்தத்தை வலியுறுத்துகிறாரா அல்லது திரும்பப் பெறுகிறாரா ?

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவசியமானால் பரிசீலிக்கிறேன் என்று பச்சைக் கொடி காட்டியிருப்பதால், என்னுடைய திருத்தத்தை நான் வலியுறுத்த விரும்பவில்லை.

திருத்தம், அவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டது.

பிரிவுகள் 4 முதல் 6 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன.

பிரிவு 7.

THIRU K. RAMAMOORTHY: Sir, I move the following amendment standing in my name, namely:—

"In section 15-A (1) delete the words 'every person who, at the time the offence was committed, was in charge of and was responsible to, the company for the conduct of the business of the company as well as';

Delete sub-section (2) of section 15-A."

திரு. எ. ஜே. தாஸ் : திருத்தத்தை நான் வழி மொழிகிறேன்.

* திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய இந்தத் திருத்தம் மிகவும் தேவையான, மிகவும் அவசிய மான திருத்தம் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். இச்சட்ட முன்வடிவின் 7-வது பிரிவில் 15-ஏ என்கிற பிரிவுக்கு என்னுடைய திருத்தம் அமைந்திருக் கிறது. அதில் வந்திருக்கிற சில வார்த்தைகளை விட்டுவிட வேண்டும் என்று தான் என்னுடைய திருத்தத்தை நான் முன்மொழிந்திருக்கிறேன். சட்ட முன் வடிவில் உள்ள வாசகங்களை நான் முதலில் இங்கே படிக்க விரும்புகிறேன்.

"Where an office under this Act has been committed by a Company, every person who at the time the offence was committed was in charge of and was responsible to the company for the conduct of the business of the company shall be deemed to be guilty of the offence and shall be liable to be proceeded against and punished accordingly."

ஏதாவது சில நிறுவனங்கள் இந்த வியாதிகள் பரவுவதற்குக் காரணமாக இருந்திருக்குமானால், அந்த நிறுவனங்களில் பணியாற்றுகிறவர்கள் மீது கூட நடவடிக்கை எடுக்க இது வகை செய்கிறது. கடலூரில் சூப்பர் பாஸ்பேட் தயாரிக்கும் ஒரு நிறுவனம் இருக்கிறது. அந்த நிறுவனம் மிகவும் தேவை என்று கருதித்தான் அதற்கு அனுமதி அளித்திருக்கிறோம். பிரிமியர் பெர்டிலைசர் என்கிற அந்த நிறுவனம் விவசாயிகளுக்குத் தேவையான பொருளை உற்பத்தி செய்கிறது. ஆனால் அந்தத் தொழிற்சாலை காரணமாக அதன் சுற்றுப்புறத்திலுள்ள அநேகமாக எல்லா பனை மரங்களும் எல்லா தென்னை மரங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. விவசாயமேகூட பாதிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் அங்கே மனிதர்கள்தான் மஞ்சளாக மாறாமல் இருக்கிறார்கள். மற்ற வைகள் அனைத்தும் மாறிவிட்டன. இந்தத் தொழிற்சாலைக்கு நாம்தான் அனுமதி கொடுத்திருக்கிறோம். நடைபெற்றுக் கொண்டிருக்கிற தொழிற் சாலைகளின் எண்ணிக்கையில் இதையும் பெருமையோடு காட்டிக் கொண்டிருக் கிறோம். ஆனால் அந்தத் தொழிற்சாலையால் ஏற்படும் விளைவுகளுக்கு யார் பொறுப்பு? அதைப்போல பல நிறுவனங்களில் தவறு ஏற்பட்டால், நிறுவனங் களைத் தண்டிப்பது அல்லது அத்தகைய நிறுவனங்களிடமிருந்து நட்ட ஈடு கோருவது என்பதுதான் நியாயமாக இருக்க முடியும். ஆனால் அந்த நிறு வனங்களில் பணியாற்றுகிறவர்களைக்கூட தண்டிப்பது என்பது தவறான நடை முறையாகி விடும்.

ஒரு ரிட்டையர்டு அதிகாரி ஒரு மிகப் பெரிய கம்பெனியின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்தார். அவர் ஒரு தவறு செய்தார். அவர் விசாரணைக்கு ஆட்படுகிறபோது "இவ்வளவு பெரிய மனிதர், இவ்வளவு விஷயம் தெரிந்த அதிகாரியாக இருந்த நீங்கள் எப்படி இந்தத் தவறு செய்தீர்கள்?" என்று அவரிடம் கேள்வி கேட்டபோது, அவர் "இது தவறு என்பது எனக்குத் தெரியும். ஆனாலும்கூட அந்த நேரத்தில் அந்த நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்த காரணத்தால், அந்த நிறுவனத்தின் நலன்களைக் காப்பதுதான் என்னுடைய கடமையாக இருந்ததே தவிர, மற்றவைகளல்ல" என்று குறிப்பிட்டார்.

(பிற்பகல் 12-20)

அப்படிப்பட்டவர்களைத்தான் நிர்வாகம் வேலைக்கு வைத்துக்கொள்ள முடியும். நிர்வாகத்தின் நலன் கருதி செயல்படுகிறவர்களைத்தான் வைத்துக் கொள்ள முடியும். அப்படிச் செயல்படுகிறவர்களை தனிப்பட்ட முறையில் தண்டிப்பது என்பது தவறு நிர்வாகம் தவறு செய்திருந்தால், அந்த

நிர்வாகத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டவர்கள் மீது' என்ற அளவிலே இருப்பதால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வாய்ப்பாக அமையும் என்பதால், இது அவசியமில்லை என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

இதிலே இரண்டாவது பிரிவிலே

"Notwithstanding anything contained in sub-section 1, where any such offence has been committed by a company and it is found that the offence has been committed with the consent or connivance of or is attributable to any neglect on the part of any Director, Manager, Secretary or other officer of the company, such Director, Manager, Secretary or other officer shall be deemed to be guilty of that offence and shall also be liable to be proceeded against and punished accordingly".

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எல்லாம் சரியாக இருக்கிறது. ஆனால் ஒன்று மட்டும் எனக்குப் புரியவில்லை. இந்தக் கம்பெனிக்கு யார் லைசன்ஸ் கொடுக்கிறார்கள்? அவர்கள் செயல்படுகிற முறையால் தவறுகள் ஏற்பட்டால் அவர்களுடைய லைசென்சை முடக்க அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. அல்லது உரிமங்கள் வாங்கி, அந்த விதிகளை மீறினால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசாங்கத்திற்கு உரிமை இருக்கிறது. இந்த இரண்டைத் தவிர வேறு தண்டனை என்ற பிரச்சினை எப்படி வருகிறது? ஆகவே அந்த கம்பெனிகளால் தவறுகள், விளைவுகள் ஏற்படுகின்றன என்று அரசு கருதினால், அதை அரசு பரிசீலனை செய்து, முறையாக அவர்கள் நடந்திருந்தாலும்கூட, அதன் விளைவாக சில நிலைமைகள் ஏற்பட்டிருந்தால், அதற்கு அரசு தண்டனை விதிக்க வேண்டுமென்ற நிலை இருந்தால், அந்த கம்பெனிக்கு அனுமதி கொடுத்த அரசாங்கத்தை எப்படி தண்டிப்பது? ஆகவே இந்தச் சட்ட முன்வடிவின் இந்தப் பிரிவு கொஞ்சம் சட்டச் சிக்கலை பின்னாலே உருவாக்கும் என்பதாலே, இந்தப் பிரிவை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதைத் தெரிவித்து அமைகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சுட்டிக் காட்டியதுபோல், ஒரு அதிகாரி நிர்வாகத்திலே பொறுப்பேற்றுக்கொண்டு பணியாற்றுகிற காலத்தில் நிர்வாகத்தின் நல்லவைகளுக்கும், தீங்குகளுக்கும் அவர்தான் பொறுப்பேற்கிறார். ஆகவே அந்த அடிப்படையிலே ஒரு நிர்வாகத்தின் மேல் ஒட்டுமொத்தமாக வழக்கு தொடுக்க முடியாது. பொறுப்பேற்கிற

யாரையாவது ஒருவரைச் சுட்டிக்காட்ட வேண்டும் என்ற வகையிலே நிர்வாகத்தின் இயக்குநர், மேலாளர் ஆனால் நிர்வாகம் அல்ல என்ற வகையிலே இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறார். அவர்தான் நடைபெறக்கூடிய தவறுக்கு பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டுமென்ற வகையிலே அவர்கள் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறார்கள். இது இந்தச் சட்டத்திலே புதிதாக ஏற்படுத்திக் கொண்ட மரபல்ல. ஒரு கம்பெனியின் மேலே குற்றச்சாட்டு என்று வருகிறபோது, கம்பெனி நிர்வாகத்தின் மேலாளர் தான் பொறுப்பேற்க வேண்டுமென்று பல மத்திய மாநில சட்டங்களில் இருக்கின்றன. இதை அடியொற்றி தான் இந்தச் சட்டத் திருத்தம் இங்கே கொண்டுவரப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* திரு. க. இராமமூர்த்தி: "Every person who at the time the offence was committed was in charge of" என்று இருக்கிறது.

But the Board of Directors is there. Are they not in charge of the company? The Chairman and the Board of Directors may be looking after the affairs of the company. That is another thing. The shareholders also are there. Are they not in the General Body? Is not the General Body responsible for it?

ஆகவே ஜெனரல் பாடியை எப்படி தண்டிப்பது? அதனாலே நாம் பதவியின் பெயரைக் குறிப்பிட வேண்டும். அப்படி நிர்வாகத்தினுடைய தலைமைப் பொறுப்பிலே உள்ளவர் என்று சொல்ல வேண்டும். "எவரி பெர்சன்" (Every person) என்று போடுவதன் மூலமாக விரிவான அதிகாரத்தைக் கொடுத்து விடுகிறோம்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: துணைத் தலைவர் அவர்களே, நிர்வாகங்கள் என்பவை எறத்தாழ ஒரே மாதிரியாக இருந்தாலும், நிர்வாக அமைப்பிலே இருக்கக் கூடியவர்களில் ஒரு நிர்வாகத்திற்கும் இன்னுமொரு நிர்வாகத்திற்குமிடையே வேறுபாடு இருக்கிறது. அத்தனையும் உள்ளடக்கிக் காட்ட வேண்டுமென்ற வகையிலே இது கொண்டு வரப்படுகிறதே தவிர, வேறு ஒன்றுமில்லை. ஒருவரை, அதாவது மேலாளர் என்று குறிப்பிட்டால், சில நிர்வாகங்களில் மேலாளர் பெயர் இல்லாமல் வேறு பெயர் இருக்கக் கூடும். ஆகவே நிர்வாக அமைப்பு முறையில் இருக்கின்ற மாறுபாடுகளைக் கண்டுதான் அப்படி கொண்டு வரப்படுகிறது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் தன்னுடைய திருத்தத்தை திரும்பப் பெறுகிறாரா அல்லது வலியுறுத்துகிறாரா ?

திரு. க. இராமமூர்த்தி : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான் சொன்னதை முழுமையாகப் புரிந்து கொண்டிருப்பதால், அதற்கான விதிகளைக் கொண்டு வரும்போது நடவடிக்கை எடுப்பார் என்று கருதி, இந்தத் திருத்தத்தை வலியுறுத்தவில்லை.

திருத்தம், அவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது

பிரிவுகள் 7 முதல் 11 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந் தலைப்பு ஆகியவை அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு, பயிர்களுக்குக் கேடு விளைவிக்கத்தக்க பூச்சிகளையும் நோய்களையும் பற்றிய (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 65/1981) நிறைவேற்றப்பட வேண்டும் ".

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு, பயிர்களுக்குக் கேடு விளைவிக்கத்தக்க பூச்சிகளையும் நோய்களையும் பற்றிய (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 65/1981) நிறைவேற்றப்பட வேண்டும் "

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது

(5) தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப்படுத்துதலும்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 66/1981).

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு, நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப்படுத்துதலும்) திருத்தச் சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 66/1981 ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் "

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு, நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப்படுத்துதலும்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 66/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் "

THIRU A. R. DAMODARAN: Sir, on a point of order. There is a Select Committee which is considering certain amendments to the Urban Land Ceiling Act. May I know how, when the Select Committee is considering, the Hon. Minister is able to bring another Bill asking for some amendments to the Act ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, எந்தப் பொறுக்குக் குழுவானாலும், அரசு சிலவற்றைச் சொல்கிறபோது அதற்கு வரையறை செய்கிறது. நீங்கள் இதை இதை முடிவு செய்ய வேண்டும், இதை இதை ஆராய வேண்டுமென்று வரையறை செய்கிறது. ஆகவே அந்தச் சட்ட முன்வடிவிற்கும், இந்தச் சட்ட முன்வடிவிற்கும் சம்பந்தமில்லை. அதிலே சில விதிகளைக் கொடுத்திருக்கிறோம். அந்த விதிகளை ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். இது அதற்கு சம்பந்தப்படாத விதிகள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : பொறுக்குக் குழுவிற்கு எது வந்திருக்கிறதோ, அதை ஆராயும் நிலைமை இருக்கிறது என்றாலும், அந்த விதிகளைக் கூட பொறுக்குக் குழு, நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி, பொதுவானதொரு பின்னணியின் அடிப்படையிலேதான் பரிசிலனை செய்து கொண்டிருக்கிறது. ஆகவே இந்தச் சட்டத்திற்கு இன்னுமொரு திருத்தம் வருகிறபோது, பொறுக்குக் குழுவின் பரிசிலனைக்குச் செல்லுவதுதான் நல்லது. பொறுக்குக் குழு தன்னுடைய முடிவை அறிவித்த பிறகு, திருத்தம் கொண்டு வருவது

@ 981-982 ஆம் பக்கங்களில் இணைப்பு VI ஆக அச்சிடப்பட்டுள்ளது.

சரியாக இருக்கும். அந்தப் பொறுக்குக் குழு சிபாரிசு செய்கின்ற சிலவற்றை இந்தச் சட்டத் திருத்தம் பாதிக்காத அளவிற்கு இருக்க வேண்டும். அப்படி பாதிப்பது நலமாக இராது. இந்த நிலைமைகளைத் தவிர்க்க, இப்போது இந்தச் சட்டத் திருத்தத்திற்கு இதிலே வேகம் காட்ட வேண்டியதில்லை என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலிலேயே நான் தெரிவித்தேன். சட்டம் என்கிறபோது, அது வும் நகர்ப்புற சட்டம் என்பது ஒரு பெரிய ஓஷன். அதிலே எவ்வளவோ திருத்தங்கள், எவ்வளவோ விதிகள் இருக்கின்றன. எந்தப் பொறுக்குக் குழு வாக இருந்தாலும், குறிப்பிட்ட இதைத்தான் செய்ய வேண்டும் என்று உத்தர விடுவதைப் போல, சட்டமன்றப் பேரவையின் மூலம் அவர்களுக்கு அனுமதி வழங்குகிறோம். அதற்கு வெளியே அவர்கள் போக முடியாது. எந்த விதி முறைகளைச் செய்ய வேண்டும் என்று சொல்கிறார்களோ அந்த விதிமுறை களைத்தான் அவர்கள் செய்ய வேண்டும். அந்த விதிமுறைகளுக்கு அல்லா தவைகளை . . . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : சட்ட முன்வடிவுகளின் மீதான விவாதம் முடியும் வரையில் அவையின் அனுமதியோடு, அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது

(பிற்பகல் 12-30)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : எந்தப் பேரவை அந்தப் பொறுக்குக் குழுவிற்கு அனுமதித்ததோ, அந்தப் பேரவையே அந்தப் பொறுக்குக் குழு எதை ஆராய வேண்டுமென்று சொன்னதோ, அதே பேரவை இந்த விதி முறைக்கும் அதற்கும் சம்பந்தமில்லை என்று கருதித்தான் இதை நிறைவேற்றியிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டுமல்ல, இதிலே உள்ள விதிகளுக்கும் அங்கே இருக்கின்ற பொறுக்குக் குழு விலே இருக்கின்ற விதிகளுக்கும் கொஞ்சமும் சம்பந்தமில்லை என்று சொல்லிக் கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN: Technically, the Hon. Minister is correct. When he introduced the amendment to the Urban Land Ceiling Act, he did not anticipate these amendments at that time. So, this is a new development that has taken place over the past 1½ year. While technically he may be correct. I think that after the formation of the Select Committee to deal with it, it would

have been preferable if the Hon. Minister had referred these amendments to that Committee because heavens are not going to fall if the amendment is not passed today. I would request that at least in future he may adopt the procedure that if a Select Committee is there, all further amendments should also be referred to the Select Committee because nothing is going to be lost.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே தெரிவித்திருக்கின்றபடி, நகர்ப்புற உச்ச வரம்புச் சட்டம் முழுமையாக அந்தப் பொறுக்குக் குழுவிற்குப் போகவில்லை. ஆனால் குறிப்பிட்ட ஒருசில விதிகள் மட்டும்தான் போயிருக்கின்றன என்பதை மாண்புமிகு அங்கத்தினர்களும் இந்த அவையும் ஏற்றுக்கொள்ளும் என்று நான் கருதுகிறேன்.

(மைக்கில் ஒலி வர சற்று தடைப்பட்டது)

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாதம் எடுபட வில்லை.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மைக்கில் ஒலி எடுபடவில்லை அவ்வளவுதான்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு அமைச்சர் அவர் கள் வாதம் எடுபடுவதும், எடுபடாததும், அந்த வாதத்திலே இருக்கின்ற உண்மைகளைப் பொறுத்திருக்கிறது. உற்று நோக்குகின்ற உறுப்பினர்கள் மனதையும் பொறுத்திருக்கிறது. நான் முதலிலே சொன்னபடி, நகர்ப்புற உச்ச வரம்புச் சட்டம் பற்றி முழுமையாக, காம்ப்ரிஹென்சிவ் ஆக அந்தப் பொறுக்குக் குழு ஆராய வேண்டும் என்று அவர்களுக்கு உத்தரவிடவில்லை, ஆணையிடவில்லை. அவர்கள் குறிப்பிட்ட விதி முறைகளை மட்டும்தான் ஆய்வு செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை விட்டு அவர் கள் வெளியிலே போக முடியாது என்பதும் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும். இதை நிறைவேற்றாவிட்டால், என்ன ஆகாயம் இடிந்து விழுந்து விடுமா என்று கேட்டார்கள். நிச்சயமாக, விஞ்ஞானப்படி ஆகாயம் இடிந்து விழுவதில்லை என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் இந்தச் சட்ட முன்வடிவைப் படித்தால் ஒன்று தெரியும். அரசு ஒரு நாள் தாமதப்படுத்தி னாலும், தாமதப்படுத்துகின்ற ஒவ்வொரு நாளும் அதிலே சில இடையூறுகள்

இருக்கின்றன என்பது மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர் களுக்குத் தெரியும். அவர்கள் அதைப்பற்றி முன்னரே படித்திருப்பார்கள் என்று கருதுகிறேன். நான் முன்னுரையாகச் சொல்கின்றபோது, ஒரு நாள், ஒரு நிமிடம் அளவுக்கு அதைத் தாமதப்படுத்தினாலும், அதிலே ஏற்படுகின்ற நன்மை நிமைகளை நான் விளக்குகின்றபோது, அங்கத்தினர்கள் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் அவர்களுடைய உணர்வுகளை நான் மதிக்கிறேன் நான் ஏற்றுக்கொள்கிறேன்.

* திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தச் சட்ட முன்வடிவு 'ஒரு நாள்' காலதாமதம் ஆனாலும்கூட, விளைவுகள் பெரிதாக இருக்கும் என்பதைத் தெரிவித்திருக்கிறார்கள் ஆகவே, அந்த விளைவுகள் எப்படியெல்லாம் இருக்கும், அதுபோன்று அவசியம் என்ன ஏற் பட்டது என்பதைப்பற்றித் தெரிவித்துவிட்டால், விவாதத்திலே பேசுவதற்கு துணையாக இருக்கும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் துணை தலைவர் அவர்களே, இந்த நகர்ப்புற உச்ச வரம்புச் சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றுகின்றபோது சில விதி விலக்குகள் கொடுத்திருக்கிறார்கள். அன்றைக்கு இருக்கின்ற நிலைமையில் அந்த விதி விலக்கு சரி என்று கொடுத் திருக்கிறார்கள். இன்றைக்கு அந்த விதி விலக்குகளினாலே வருகின்ற கெடுதலைப் பார்க்கிறபோது, அவசரச் சட்டமாக இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது. அது தேவைப்படுகின்றபோது, கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டுமென்று அரசு இருக்கிறது. சமுதாய நலம் கருதி கொண்டுவர வேண்டும் என்பது உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். இன்னும் சொல்ல வேண்டுமானால், இதே சட்டமன்ற மேலவையில் ஒரு சட்ட முன்வடிவாகக் கொண்டு வந்து அவசரமாக நிறைவேற்றியிருக்கிறோம் என்பது உறுப்பினர்களுக்கு எல்லாம் தெரியும். தர்ம சொத்துக்களுக்கு எல்லாம் நகர்ப்புற உச்ச வரம்புச் சட்டத்தில் விதிவிலக்கு இருக்கிறது. அந்த தர்ம சொத்துக்களுக்கு மூலச் சட்டத்தில் விதி விலக்கு மட்டும் கொடுத்திருக்கிறார் கள். அதற்குப் பிறகு அவர்கள் வைத்திருக்கின்ற நிலத்தை யாருக்கு வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் விற்கலாம் என்று சொல்லி, அதற்கு 3 மாதம் நோட்டீஸ் அரசுக்குக் கொடுத்துவிட்டு அரசிடத்திலேயிருந்து பதில் வராவிட்டால், அந்தச் சொத்தை யாரிடத் திலும் விற்கலாம், எந்த நோக்கிலும் விற்கலாம் என்பதற்கு மூலச் சட்டத் திலே இடம் இருந்தது என்பதும் உறுப்பினர்களுக்குத் தெரியும். அந்த நிலத்தை விற்கின்றபோது, அதைப்பற்றி அரசு எதுவும் தெரிவிக்காவிட்டால்,

விற்கலாம் என்று இருந்தது. அந்தச் சொத்தை விற்க முயற்சி எடுக்கின்ற போது, அவசரச் சட்டமாக அரசு ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தது. தர்ம சொத்துக்கள் எந்தக் காரணத்திற்காக, எந்த நோக்கத்திற்காக, எந்த அடிப் படையிலே தர்மத்திற்காக எழுதி வைக்கப்பட்டிருக்கிறதோ, அது என்னென்ன காரியங்களுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டுமென்று எழுதி வைக்கப்பட்டிருக் கிறதோ அந்தக் காரியங்களைச் செய்து கொண்டிருக்கின்ற வரையிலே அதை வைத்துக் கொள்ளலாம். அந்தக் காரியங்களைச் செய்யாமல் விற்க வேண்டு மென்றால், அரசுக்குத்தான் விற்க வேண்டுமென்று ஒரு சட்டத்தை, அதுவும் அவசரச் சட்டமாகக் கொண்டு வந்தோம். அதை இங்கே கொண்டுவந்து நிறை வேற்றியிருக்கிறோம் என்பதும் உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். அப்படி கொண்டு வருகிறபோது, தர்ம சொத்துக்களுக்கு மட்டும்தான் கொண்டு வந்தோம். தர்ம சொத்துக்கள் மட்டுமல்ல. அதுபோலவே பல அமைப்புகள் இருக்கின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. கூட்டுறவு வீட்டுச் சங்கம், கல்வி, கலாசாரம் இருக்கின்றன. தொழில் நுட்பக் கல்வி இருக்கின்றது. பதிவு செய்யப்பட்ட சங்கம் இருக்கிறது. வெளிநாட்டு நிறுவனங்கள் இருக்கின்றன. ஐ. நா. சபை இருக்கிறது. சர்வதேச நிறுவனங்கள் இருக்கின்றன. இவைகள் எல்லாம் எவ்வளவு நிலம் வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம். இந்த நகர்ப்புற உச்சவரம்பு சட்டத்திலேயிருந்து அவர்களுக்கு விதிவிலக்கு இருக் கிறது. அதற்குப் பிறகு நான் முதலிலே சொன்னதுபோல, தர்ம சொத்துக் களாக வைத்துக்கொண்டிருந்தால், அரசுக்கு நோட்டீஸ் கொடுக்கலாம். அரசு பதில் சொல்லாவிட்டாலும் விற்கலாம் என்று இருப்பதுபோல இருந்தது. அதற்குப் பிறகு அந்தச் சட்டத்தை ரத்து செய்து, அரசுக்குத்தான் விற்க வேண்டும் என்று ஒரு 'அமெண்ட்மென்ட்' கொண்டு வந்து நிறைவேற்றினோமே அதே போன்ற ஒரு அமெண்ட்மென்ட் தானே தவிர வேறல்ல. அந்தச் சொத்தை யெல்லாம் அவர்கள் தேவையென்றால் வைத்துக்கொள்ளலாம். அவர்கள் எவ் வளவு வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம். அவர்களுக்கு விதிவிலக்கு இருக்கிறது. ஆனால் அவர்கள் அவைகளை விற்கக்கூடாது. விற்கிறபோது இரண்டு பக்க இருக்கிறது. கூட்டுறவுச் சங்கம் என்றால், [illegible] என்றால், அதை விற்கலாம் என்று விதி செய்திருக்கிறார்கள். வீட்டு வசதி வாரியம், கூட்டுறவுச் சங்கம் இருக்கிறது. அவர்களே விற்க வேண்டுமானால், காலி நிலத்தை விற்கின்றபோது வாங்குகின்றவர்கள் நகர்ப்புற உச்ச வரம்புச் சட்டத்திற்கு உட்பட்டு நிலம் வாங்குகின்றவர்களா என்று பார்த்து விற்க வேண்டும். மற்றவர்களுக்கு விற்கக்கூடாது. இதுதான் இந்தச் சட்டத்திலே தெளிவாக இருக்கிறது. இந்தச் சட்ட முன்வடிவை கால தாமதமாகச்

கொண்டு வந்தால், இன்றைக்கு அந்த நிலத்தை அந்த கூட்டுறவுச் சங்கமும்
மற்றவைகளும் அந்த உச்சவரம்புச் சட்டத்திற்குட்பட்டவர்களுக்குத்தான் விற்க
வேண்டும். அதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பதனால்தான் இந்த அவசர
சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றுகிறோம். உச்ச வரம்புச் சட்டத்திற்
குட்பட்டிருக்கின்றவர்கள் யாரோ அவர்களுக்குத்தான் விற்கப்பட வேண்டு
மென்பதற்குத்தான் இந்த அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம்.
இல்லாவிட்டால் அவர்கள் யாரிடத்திலும் விற்றுவிடலாம். அதைப்போல மற்
றொன்றைச் சொல்ல வேண்டுமானால், இங்கேயிருக்கின்ற பல கலாச்சார,
தொழில் நுட்ப நிறுவனங்கள், பதிவு செய்யப்பட்ட சங்கங்கள், வெளிநாட்டு
அரசு நிறுவனங்கள், ஐக்கிய நாடு நிறுவனங்கள், சர்வதேச நிறுவனங்கள் இவை
கள் எல்லாம் இன்றைக்கு எவ்வளவு நிலம் வேண்டுமானாலும் வைத்துக் கொள்ள
லாம். இன்றைக்கு பல கல்வி நிறுவனங்கள் இருக்கின்றன. யார் வேண்டு
மானாலும் விற்றுவிடலாம். வேண்டுமென்றால் அவர்களே வைத்துக் கொண்டு
பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால் யாரிடத்திலும் விற்கின்ற உரிமையை
மட்டும் தடை செய்திருக்கிறது. இதனால் யாருக்கும் பாதகம் இல்லை
அவர்களே வைத்துக்கொள்ளலாம், ஆனால் விற்கக்கூடாது. அப்படி விற்ப
தாக இருந்தால், அரசிடத்திலே கொடுக்க வேண்டும் என்பதைத் தவிர வேறு
அல்ல. இந்தச் சட்டத்திலே வேறு எதுவும் இல்லை. இது ஒரு முற்போக்
கான சட்டம் என்பதை, யாரும் ஏற்றுக்கொள்ளக்கூடியது என்பதை அவர்கள்
அறிவார்கள். ஆகவேதான் இதைக்கொண்டு வந்து நிறைவேற்றுகிறோம்.
இதில் கால தாமதம் ஆகிறபோது, அந்த இடைவெளியிலே யாருக்கு வேண்டு
மானாலும் விற்கின்ற நிலை வரும் மூலச்சட்டம், 1961-வது ஆண்டு நில
உச்ச வரம்புச் சட்டம் வருகின்றபோது, என்னென்ன நடந்தது, எவ்வளவு
முறைகேடாக நில மாற்றம் நடந்தது என்பதும், அந்த முறைகேடான நிலமாற்றத்தை
யாருமே ஒன்றும் செய்யமுடியாத நிலை ஏற்பட்டது என்பதும், இன்றைக்கு
சட்டமன்றப் பேரவையிலும், சட்டமன்ற மேலவையிலும் திருத்தச் சட்டம்
நிறைவேற்றி இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டு கேள்வி கேட்கப்பட்டு திரும்ப
இங்கே வந்திருக்கிறது என்பதும் உறுப்பினர்களுக்குத் தெரியும். வெள்ளம்
வரும் முன்பே கரை போட வேண்டும் என்பதனாலே அந்தத் தடை போடப்
படுகிறது. நோய் வருவதற்கு முன்பே, நோயைப் போக்கடிக்க வேண்டும்
என்பார்கள்

'Prevention is better than cure'

அதுபோல இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறேன் என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்

(பிற்பகல் 12-40)

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்தச்
சட்ட முன்வடிவிலே செய்யப்பட்டுள்ள விதிவிலக்கு குறித்து கருத்துக்கள் கூறு
வதற்கு வாய்ப்பு கொடுத்ததற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்
கிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்தத் திருத்தத்திற்கான காரணங்
களைக் கூறி, இதனுடைய அடிப்படை நோக்கங்களை விளக்கி, மிகத் தெளி
வாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்தச் சட்டம் முற்போக்கான
சட்டம் என்பதால், யாருக்கும் நிச்சயமாக இதில் மாற்றுக் கருத்து இரா
தென்பதைக் குறிப்பிட்டுக் கூறுவேன். இந்தச் சட்டம் எந்த நேரத்திலே,
எவ்வளவு அவசியமான நேரத்திலே வருகிறதென்பதையும், இன்றைக்கு
சென்னை போன்ற நகரங்களிலே இந்தச் சட்டம் வந்ததால் எந்தவிதமான
நிலைமை ஏற்பட்டிருக்கிறதென்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக
அறிவார்கள். இந்தச் சட்டம் வந்ததற்குப் பின்னாலே எப்படி எல்லாம்
ஏமாற்றலாம் என்பதற்கு பல பேர்கள் பல வழி முறைகளைக் கையாண்டு
வந்தார்கள். அவைகளை தடுக்கப்பட வேண்டுமென்பதற்காக, இச் சட்ட
விதி முறைகள் மூலமாக அதைச் செய்ய முடியுமென்பதால், இப்படிச் சில
விதிகளை நிறைவேற்றுவதன் மூலமாக ஏமாற்றுகிறவர்களைக் கண்டுபிடித்து,
அவர்களுக்குத் தடை விதிக்கிறோமென்ற முறையில் துறை விதி ஏற்படுத்தப்
படுகிறதென்று சொல்லும் நேரத்தில், இதை நான் வரவேற்கிறேன். பொது
வாக பல்வேறு திருத்தங்களை நம்முடைய மன்றத்திலே நிறைவேற்றி, பேசிக்
கொண்டிருக்கிறோம். பொதுவாக இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்த
வரையில், இன்று சென்னை மாநகரத்தில் பல கருத்துக்கள் எழ ஆரம்பித்தது.
இன்றைக்கு நிலத்தின் விலை அதிகமானதற்குக் காரணம், இப்படிப்பட்ட
சட்டத்தைக் கொண்டு வந்ததால்தான் என்ற உணர்வு இருக்கிறதென்பதை
நாம் நிச்சயமாக இந்த நேரத்திலே தெளிவாக்க வேண்டும். பொதுவாக
சாதாரண நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்கூட இன்றைக்கு சென்னை
மாநகரத்திலே ஒரு கிரவுண்ட் வாங்க வேண்டுமென்றால், அவர்களுக்குக் கிடைக்
காத நிலைமை இருக்கிறது. பல்வேறு இடங்கள் காலியாக இருக்கின்றன.
ஏன் காலியாகக் கிடக்கிறதென்றால், இந்தச் சட்டத்தின் காரணமாக அவர்கள்
விற்கவும் முடியாது, வாங்கவும் முடியாது என்ற நிலைமையில் பல்வேறு இடங்
கள் காலியாக இருக்கின்றன. நிலத்தை வைத்திருக்கிறவர்கள் சட்டத்தின்
கீழ் வருகிறோமோ என்று தடுமாறுவதும், பல்வேறு அரசியல்வாதிகள் துணை
யைத் தேடுவதும், விற்கத் தயாராக இருக்கிறேன், யாராவது வாங்கத் தயாராக
இருக்கிறார்களா, விதி விலக்கு வாங்கி [illegible] எடுத்துக் கொள்ளுங்கள்

ஏற்பட்டுள்ளதைப் என்று கேட்கும் நிலைமை இந்தச் சட்டத்தின் வாயிலாக ஏற்படுகிற பார்க்கிறோம். நடுத்தரக் குடும்பத்தில் என்ன உணர்வு வாங்க தென்றால், இந்தச் சட்டம் இல்லையென்றால் நிலத்தை சாதாரணமாக இன்றைக்கு முடியும், நமக்குக் கிடைக்கும் என்ற உணர்வு ஏற்படுகிறது. பொறுத்த இருக்கிற நிலைமை என்னவென்றால், சென்னை மாநகரத்தைப் கட்டுகிறவர்கள் வரையில், அதிகமான அளவிற்கு நிலத்தை வாங்கி, வீடுகள் மன்றத்திலே யார் என்றால், வெளி மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்தான். இந்த அவர்கள் பல்வேறு நேரங்களிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி தலை அகில இந்திய ரீதியில் பேசினாலும், இதில் தமிழ் மாநிலப் பற்றோடு, சேர்ந் நகர் பற்றோடு, பல நேரங்களில் பேசும்போது, வெளி மாநிலங்களைச் இடங்களை தவர்கள், வட மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் சென்னையில் சொல்லும்போது, வாங்கி, பல மாடிக் கட்டிடங்களைக் கட்டுகிறார்கள் என்று இந்த எனக்கேகூட மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களுக்கு உணர்வு வருகிறதே என்று நினைத்து மகிழ்ச்சி அடைந்தது உண்டு.

திரு. க. இராமமூர்த்தி : துணைத் தலைவரவர்களே, அந்த உணர்வு மாண்புமிகு உறுப்பினரவர்கள் கட்சியின் ஆட்சிக் காலத்திலே வர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

திரு. எஸ். ஆர். இராதா : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராமமூர்த்தி அவர்கள் பொதுவாகச் சொல்லி விட்டார் கள். எங்களுடைய காலத்தில் அவர்களுக்கு அந்த உணர்வு வர வேண்டு மென்பதுதான் எங்களுடைய நோக்கம். அவர்கள் காலத்தில் அந்த எண்ணம், உணர்வு வராது. அது அவர்களுக்கு வருகிறதென்றால், அதற்கு நாங்கள் துணையாக இருக்கிறோம். அந்த உணர்வு எவ்வளவு நியாயம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி போன்றவர்கள் உணருகிறார்கள். இதிலே தெளிவான கருத்தைச் சொல்லியிருக்கிறோமென்பதை இன்றைக்கு ஏற்றுக்கொள்கிறார்கள். சென்னையில் வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் பல மாடிக் கட்டிடங்களைக் கட்டுகிறார்கள். நாம் பார்த்துக்கொண்டிருக் கிறோம். தமிழ் மாநிலத்தைச் சேர்ந்த ஒரு தமிழன் பம்பாயில் 10, 20 கிரவுண்ட் வாங்கி, அபார்ட்மென்ட் கட்டியிருக்கிறானா என்று தேடிப் பார்க்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். நிச்சயமாக தமிழ் நாட்டுக் காரர்கள் பம்பாய், டெல்லி கல்கத்தா போன்ற நகரங்களில் வாங்கியிருக்கிறா களென்று சொல்லும் நிலை இல்லை. இதிலே கட்சி வேறுபாடு கிடையாது. சென்னை எல்லாக் கட்சிக்காரர்களும் இந்த உணர்விலேதான் பேசுகிறார்கள்.

யிலே க...பபடுகிறது. பல்வேறு இடங்களில் பார்த்தால், வெளி மாநிலத்துக் காரர்கள்தான் கட்டுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. தமிழ் நாட்டைச் சேர்ந்த செட்டியார், முதலியார் கட்டுகிறாரா என்று பார்க்கும்போது, அது குறைந்த அளவிற்குத்தான் இருக்கிறது. அத்தனையும் வெளி மாநிலத்துக் காரர்கள் கட்டுகிறார்கள் என்ற நிலைமைதான் இருக்கிறது. 3 ஆம் மாடிக்கு 2 ல..., 3 லட்சம் ரூபாய் என்று விலை சொல்லும் நிலைமை இருக்கிறது. இந்த நிலைமைகள் தவிர்க்கப்பட வேண்டுமென்பதிலே, இந்த அரசுகூட ஒரு உத்தரவு போட்டிருக்கிறது. இதற்கு வழிவகை காணும் முறையிலே ஒரு முன்னெச்சரிக்கைத் திட்டமாக ... மாடிகளுக்கு மேலே கட்டக்கூடாதென்றும் அதைத் தடை செய்கிறோமென்றும் சொன்னதால், 6, 7 மாடிக் கட்டிடங்கள் அப்படியே நின்றன. அந்த உத்தரவையும் போடவில்லை என்றால், 10 மாடிக்குப் போய் நின்று, 10-வது மாடியை ரூபாய் 1½ லட்சத்திற்குக் கொடுத்து, அங்கே ஏறியவன் இறங்கப் போகின்றானா என்று பார்க்கும் நிலைமை ஏற்பட்டிருக் கும். வெளி மாநிலத்துக்காரர்கள் நிலம் வாங்கக் கூடாதென்று சட்டம்போட இந்த அரசுக்கும் அதிகாரமில்லை. அரசியல் ரீதியில் பேசிக்கொண்டிருக் கிறோம். பெரிய தலைவர்களே இதில் தடுமாறுகிறார்கள். ஒரு நேரத்தில் கேரளக்காரர்களுக்கு ஏன் லைசன்ஸ் கொடுக்கிறீர்கள் என்று கேட்கிறார் கள். இன்னொரு பிரச்சினையில் தமிழ் நாட்டில் உள்ள லேலண்ட் கம்பெனி யில் ஏன் வாங்குகிறீர்கள், அங்கேயுள்ள டாட்டாவில் வாங்கக்கூடாதா என்று கேட்கிறார்கள். இந்த அளவிற்கு ஏன் தடுமாற்றம் வருகிறதென்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஒன்று தமிழ் நாட்டு உணர்வோடு கேரளா, கர்நாடகா வரக்கூடாதென்ற நிலையில் நிற்க வேண்டும். கேரளா வில் இருக்கிறவன் இங்கே வியாபாரம் செய்யக்கூடாது என்று சொல்லும் போது, லேலண்டில் வாங்கக்கூடாது, டாட்டாவில் வாங்க வேண்டுமென்றால், அவர்களுக்கு மாநில உணர்வு இருக்கிறதா அல்லது வேறு உணர்வில் பேசு கிறார்களா என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. வெளி மாநிலத்துக் காரர்கள் நிலம் வாங்கக்கூடாதென்று மாநில அரசு துணிந்து உத்தரவு போட அதிகாரமில்லை. இந்த அதிகாரத்தைப் பெற வேண்டுமென்பதில் மாண்பு மிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி போன்றவர்களுக்குக் கருத்து வேறு பாடு இராது. காரணம், வெளி மாநிலத்துக்காரர்கள் இங்கே ஆக்கிரமிப்பு செய்து கொண்டிருக்கிறார்கள். நாம் இந்தியர்கள், கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை ஒன்றுதான் என்று சொல்லுகிறோம். ஆனால் கன்னியா குமரியைச் சேர்ந்தவன் காஷ்மீரத்தில் வீடு வாங்க முடியாது. அங்கே ½ சென்ட் நிலம் வாங்க லாயக்கற்றவனாக இருக்கிறான். ஆனால் காஷ்மீரத்

ளைச் சேர்ந்தவன் கன்னியாகுமரியில் வீட்டை விலைக்கு வாங்குகிறான் என்றால், அந்த வளர்ச்சி எப்படி ஏற்படுகிறதென்ற சிந்தனைதான், உணர்வு தான் சாதாரண மனிதனுக்கும் வருகிறதென்பதைச் சொல்லியாக வேண்டும். இன்றைக்குப் பார்க்கிற நேரத்தில் பல்வேறு சங்கங்கள், ஹவுசிங் போர்டு, கூட்டுறவு சங்கங்கள் இந்தச் சட்டத்தின் மூலம் விதிவிலக்கு பெற்றிருக்கிறார்கள், பல்வேறு இடங்களில் நிலங்களை வாங்குகிறார்கள். 10 ஆண்டுகளுக்கு அந்த நிலங்கள் அப்படியே இருக்கின்றன. விலை ஏறுகிறதா என்று பார்த்து, விலை ஏறியதற்குப் பின்னால் விற்க வேண்டுமென்று வைத்திருக்கிறார்கள். அப்படி பல இடங்கள் சென்னையில் இருக்கின்றன. அதையெல்லாம் தடை செய்ய வேண்டும். ஒரு காலியிடத்தை வாங்கி, விலை ஏறும்வரை அதை மற்றவர்கள் வாங்காமல் தடுக்கும் நிலைமை ஏற்படுவதால், சென்னையிலே மிகப் பெரிய அளவிற்குப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. அதைத் தடுத்து நிறுத்த வழிவகை காண வேண்டும். அமைச்சரவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். தர்ம காரியங்கள் நடைபெறுகிறதென்று சொன்னார்கள். சொத்துக்களைக் காப்பாற்றத்தான் தர்மம் என்ற நிலை வருகிறதே தவிர, சொத்துக்களைப் பாதுகாத்துக்கொள்ள தர்மம் என்பது இருக்கிறது. ஆனால் அவர்கள் தர்மம் செய்கிறார்களா என்ற சந்தேகம் வருகிறது. தர்மங்களுக்காக சொத்தை வைத்திருக்கின்றவர்கள், ஏதாவது ஒரு தர்ம—ஆஸ்பத்திரி, கல்வி நிறுவனம்—என்று சொல்லி அவர்களே அவற்றை வைத்துக் கொண்டு, அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் அவர்களைக் கேட்க முடியவில்லை. ஆனால் அமைச்சரவர்கள் இந்தச் சட்டத்தின் மூலம் அவற்றை விற்பதாக இருந்தால், அரசாங்கத்திற்கு விற்க வேண்டுமென்று சொல்லுவதால், பல பேர்களுக்குச் சங்கடம் வரும்.

(பிற்பகல் 12-50)

பல பேருடைய தூக்கம் கெடும். பல பேருக்கு இதனால் கஷ்டம் வரும். ஆனால் சாதாரண ஏழையெளியவர்களுடைய நன்மைக்காக சட்டத் திருத்தம் வருகின்றபோது, புதுமையான சட்டத் திருத்தம் கொண்டு வரப்படுகின்ற போது, உள்ளபடியே நான் மகிழ்ச்சியடைவேன். இதன் மூலம் பல நல்ல காரியங்கள் நடைபெறுகின்றன. பல்கலைக் கழகம்பற்றி இன்றைக்கு பல்வேறு பிரச்சினைகள் இருந்தாலுங்கூட, பல்கலைக் கழகத்திலே பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு ஒரு கிரவுண்ட் நிலம் அளிக்கப்படுமென்று இந்தச் சட்டத்தில் இருக்கிற நிலைமையினால், அது குறித்தும் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இப்படி ஒரு கிரவுண்ட் நிலம் கிடைக்கச் செய்கிற வழிவகை இதில் இருப்பதாக பல்கலைக் கழக ஊழியர் சங்கத்தில் உள்ளவர்கள்

சொன்னார்கள். ஆகவே இது குறித்து உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன். அதுபோல் என். ஜி. ஜி. ஓக்களுக்கும், கூட்டுறவு இயக்கத்திலே உறுப்பினர்களாக இருப்பவர்களுக்கெல்லாம் கூட இப்படிப்பட்ட சட்டத்தின் மூலம் ஒரு கிரவுண்ட் நிலம் கிடைத்தால், நான் மிக்க மகிழ்ச்சியடைவேன். அது குறித்து நாம் பெருமையடையலாம். இந்தச் சட்டத்திலும் ஒரு புள்ளி வைத்திருக்கிறார்கள். கணவன் வீடு வாங்கி, மனைவி பக்கத்திலேயே இன்னொரு இடத்தில் வீடு வாங்கினால் அதை இச்சட்டம் தடை செய்கிறது. அது நியாயமான, சரியான ஒன்று. அப்படிப்பட்ட நிலைமை சென்னை போன்ற இடங்களில் வருவது நல்லதுதான். சென்னை நகரைத் தொடர்ந்து இது கோயம்புத்தூருக்கு வந்தால் நான் மகிழ்ச்சியடைவேன். இன்றைக்கு சென்னை நகரில் திடீர் திடீரென்று நிலத்தின் விலையை ஏற்றுவதைத் தடுக்க முடியாத நிலையில் இருக்கிறோம். இந்தச் சட்டத்தில் எந்த ஒரு விதி விலக்கையும் வாங்காமலேயே பல பேர் இன்றைக்கு நிலத்தை விற்றுக் கொண்டிருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் மைலாப்பூரில் லஸ் கார்னரில் இப்படி விதி விலக்குக்கான முன் அனுமதியை வாங்காமலேயே நிலத்தை அதிக விலைக்கு விற்றிருக்கிறார்கள். ரெஜிஸ்டிரார் ஆபீஸில் இது பற்றிக் கேட்டால், அவர்கள் இதைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. எழுதிக் கொடுத்தால் யாரும் வாங்கலாம் என்று அவர்கள் சொல்கிறார்கள். அரசு அதிகாரிகளிடம் போனால், எங்களுக்கு 'அப்படித் தெரியவில்லை' என்று மிகவும் தந்திரமாகச் சொல்கிறார்கள். இதனால் பல்வேறு சாதாரண வியாபாரிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சென்னை நகரைப் பொறுத்தவரையில், இப்போது இருக்கிற ஒரு சட்டத்தின் காரணமாக பெரிய கட்டிடங்கள் கட்ட அனுமதி வாங்க தடை கிடையாது. சென்னை நகரின் வளர்ச்சிக்காக அப்படிக் கட்டிடங்கள் கட்ட அனுமதித்தாக வேண்டும். ஆனால் 50, 60 ஆண்டுகளாக ஓரிடத்தில் இருக்கிற வியாபாரிகளை எல்லாம் திடீர் திடீர் என்று காலி செய்ய வைக்கின்ற அளவுக்கு இப்போது இருக்கிற சட்டத்தில் வழிவகை இருக்கிறது. இப்படிப்பட்ட வியாபாரிகளுக்கு இதனால் பாதுகாப்பற்ற நிலை இருக்கிறது. அவர்களுக்கும் பாதுகாப்பு தர இச்சட்டத்தில் வழிவகை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பு தந்தமைக்கு மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, முடிக்கிறேன்.

THIRU A. R. DAMODARAN: Sir, L.A. Bill No. 66|1981 to amend the Tamil Nadu Urban Land Ceiling and Regulation Act deals with only two sections and I shall not succumb to the tempation to which the hon. Member Thiru Eradha succumbed in giving

[திரு. எ. ஆர். தாமோதரன்] [1982 ஏப்ரல் 2

an serial view of urban land ceiling legislation and the benefits that have accured to the public. I would only like to remind him that in 1977 it was his own Government which sought to amend the Urban Land Ceiling Act because of hardships causes to various members of the Community. In my opinion, the reasons why urban land values are increasing to fantastic limits in Madras City today is only because of the urban land ceiling. Grounds that were selling for Rs. 40,000 per ground in Madras City in 1977 are today selling for Rs. 2-1|2 lakhs or Rs. 3 lakhs per ground only because people have not been able to utilise vacant land to the extent they should have been able to utilise, because of the very stringent provisions of the Urban Land Ceiling Act. However, I would not go into these. I will only deal with the two sections which the Hon. Minister wants to amend today.

As far as the first section is concerned, I have absolutely so difference of opinion that where any land is sold by a Land Mortgage Bank or Housing Society, it should not be sold to a person who already possesses vacant land in excess of the ceiling prescribed under the ceiling laws. If a person has 2-1|2 grounds, naturally, the co-operative society should not sell land to that person It is quite in order and it is in keeping with the principles and the object of the Land Ceiling Act. But, in the next provisions pertaining to educational 'cultural' technical or scientific institutions or clubs, the Hon. Minister has sought to bring about a prohibition whereby he prohibits transfer of excess land or part thereof by way of sale, morgage, gift lease or otherwise.

Any transfer made shall be nullified.

I would like to ask him a very honest question. A club or institution, for example, the ancient Cosmopolitan Club is there. They have got a lot of vacant land and they have to pay a fantastic amount of Rs. 1,20,000a as urban land tax to the very same department which the Hon. Minister is administering. They have accumulated a debt of Rs. 3 lakhs and they are not able to pay because there are no surplus funds. They want to put up a building in front of their vacant land. When they want to put up a building, they must necessarily mortgage the land. Without mortgaging, they will not be able to get an advance from the bankers to the extent of Rs. 30 or 40 lakhs. Unless they enter into an agreement with the Bank saying that they would

1982 ஏப்ரல் 2]

mortgage the land and the building therein, they cannot get funds. if they say "We will construct flats or commercial office buildings. You give me loan", the Banks will agree. By introducing this prohibition, it appears that the Government want the vacant land to remain vacant for perpetuity. What is the objects of the urban land ceiling, apart from the one single object of the Government being able to grab one ground at Rs. 1000 when it is actually worth Rs. 3 and a half lakhs? Apart from that, do the Government want the vacant land to be utilised to the maximum extent possible. There is nothing wrong in the construction of a three-storeyed of four-storeyed building.

The hon. Member Thiru Radha mentioned that the Government had prohibited the construction of flats beyond three or four storeys. I would like to remind him that the said prohibition is only temporary and even the other day, I think the Hon. the Minister for Housing mentioned that the Government were re-considering whether it should not be permitted. We must remember that in Madras City people are living in extremely bad and miserable condition. If we go to a place like Mambalam, T.Nagar, George Town, we find there are about 15 families living in a single tenement, sharing a common bath-room and unless we are able to expand housing to a considerable extent, we will not be able to relieve the miseries of the people. I would, therefore, plead with the Hon. Minister that he should, to the maximum extent possible, encourage the construction of flats, even if it is on vacant land which is now in excess of the urban ceiling so that people may be relieved of housing shortage. Regarding this particular clause, I would like to say that there are certain political parties also having lands in the City. I think both the Congress as well as the D. M. K. parties have got extensive lands in Madras City. I am mentioning the mischief that will be caused by this provision and there will be no sort of development in such land and by that, the Government will be able to strangulate them out of existence. Urban land tax in Mount Road area where we have the Teynampet Grounds as well as the land belonging to the other party will run to lakhs of rupees. The Government are going to revise the value of the urban land as in 1981 and that Bill is closely following this Bill. When it is done, the amount of tax would be about 1 and half, 2 or 3 lakhs of rupees per annum. How are these institutions to pay the tax, unless they are permitted to construt buildings in front and develop their properties and unless they are able to earn

from the said lands ? Without mortgaging the land, they will not be able to construct buildings. I think if the Hon. Minister is going to make this provision applicable to political parties also, he will be strangling the fundamental rights of the political parties to propagate their political theories. I hope that is not the intention of the Hon. Minister and I am sure that he will give a solemn assurance today that the particular land will not be affected. The Government want the sale of the land themselves. I will have no objection to the purchase of the land by the Government, if they are prepared to give compensation according to the Land Acquisition Act. I think some clarification as required as he why the Government have included the word 'mortgage in the provision, because without mortgage we cannot develop the vacant land belonging to clubs and institutions.

I would request him to clarify why he has included mortgage and, if possible, to exclude this so that vacant land can be exploited even by clubs and institutions in putting up new commercial buildings or residential flats if they are having vacant land in residential localities.

Sir, it is possible to talk theoretically of the great benefits of this legislation. In my opinion, this legislation has brought nothing but miserly to carpentences and building workers. The only thing is that the Government are able to grab land at Rs. 1,200|- per ground or at Rs. 50|-per square metre when the going rate is Rs. 3 lakhs or Rs. 3 and half lakhs per ground. It is unfair. Sir. There may be a person, who has not 8 grounds of vacant land which he purchased 25 years ago and he may not be having any other vacant land. To say that he could have only 2 and half ground and to acquire the remaining 5 and a half grounds at Rs. 1,000|-per ground is not fair to that person. It is my personal opinion and I have held [illegible] hat, if you want to take over excess land you must pay the p[illegible] concerned fair compnsation. That is a routine philosophy of [illegible] to which the Hon. Minister does not agree because we have [illegible]ed on agricultural land ceiling and I am sure that we will [illegible] on urban land ceiling also. I only wanted to mention this particular point so that there may not be any difficulty-mortgaging land for development of building work. Thank you.

(பிற்பகல் 1-00)

*திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நகர்ப்புற உச்ச வரம்புச் சட்டத்திற்கான திருத்த மசோதாவைப் பொதுவாக அதன் கொள்கைகளுக்காக நான் வரவேற்கிறேன். இப்பொழுது இருக்கிற சில நடைமுறைச் சிக்கல்களைத் தீர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தச் சட்ட முன்வடிவுபற்றி விவாதம் தொடங்கியபோது, ஆளும் கட்சி மாண்புமிகு உறுப்பினரான திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் மிக அழகான முறையில் ஒரு கருத்தைத் தெளிவுபடுத்தியிருக்கிறார். இந்தப் பக்கத்திலே யிருந்து நான் சொல்லியிருந்தால், அது அவ்வளவு தெளிவாகவும் விளக்கமாக வும் அதே நேரத்தில் அந்த அளவுக்கு அழுத்தந் திருத்தமாகவும் அமைந்திருக்க முடியுமா என்பதுகூட சந்தேகம்தான். ஆனால் ஆளும் கட்சியைச் சார்ந்த அவர் தரப்பிலிருந்து அந்தக் கருத்துக்கள் வருகிறபோது, அமைச்சர் அவர்கள் நாட்டிலே இருக்கிற பிரத்தியட்ச நிலைமை இதுதான் என்பதை ஏற்றுக் கொள்வார் என்றே கருதுகிறேன்.

சென்னை மயிலைப் பகுதியில் நிலங்கள் எப்படி விற்பனை செய்யப்படு கின்றன என்றும், அவை சட்டத்திற்குப் புறம்பாக விற்கப்படுகின்றன என்றும் அத்தகைய பரிவர்த்தனைகளைப் பதிவு செய்ய வேண்டும் என்ற அடிப்படை யில் கண்ணை மூடிக்கொண்டு சட்டத்திற்குப் புறம்பாக எப்படி அதிகாரிகள் பதிவு செய்கிறார்கள் என்றும், மற்ற துறைகளின் அரசாங்க அதிகாரிகளேகூட அத்தகைய பரிவர்த்தனைகளை எப்படி நிறைவேற்றிக் கொடுப்பது என்ற அளவில்தான் செயல்படுகிறார்களே தவிர, சட்டத்தின் நோக்கத்திற்கேற்ப அவைகளைச் செயல்படுத்துவதில் கவனம் செலுத்துவதில்லை, சட்ட நடை முறையைத் தவிர்ப்பதற்கு என்ன வழிமுறை என்று கண்டறிந்து அதைத் தான் செய்கிறார்கள் என்று தெளிவாகக் குறிப்பிட்டார்கள். அந்த வகை யில் இன்றைய அரசாங்கத்தின் நிர்வாகச் சீர்கேட்டை, சீரழிந்து கிடக்கிற நிர்வாக நிலையை இதைவிட வேறு யாரும் தெ[illegible] தெளிவாகவும் ஆணித்தர மாகவும் எங்கள் பக்கத்தில் இருந்து கொண[illegible] சொல்லியிருக்க முடியாது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் [illegible]தக் கருத்தில் கொண்டு செயல் படுவார்கள் என்று கருதுகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் இதையே [illegible]த்திற்கு எடுத்துக்கொண்டு, இந்த ஆட்சியில் நிர் வாகத் தவறுகள் நடைபெற்று விட்டதாகச் சொல்வதாக இருந்தால், அவர்

இந்த மன்றத்தில் பேசுகிற பல கருத்துக்களை நான் திருப்பிச் சொல்ல வாய்ப்பு இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். நான் சொன்னது சட்டத்தை நிறைவேற்றுகிற அதிகாரிகள் சிலர் தவறு செய்கிறார்கள். அதை கவனிக்கத்தான் இந்த அமைச்சரவை இருக்கிறது. அதை இந்த அரசுதான் முறையாகச் செய்து கொண்டிருக்கிறது என்று சொன்னேன். தவறு செய்கிற அதிகாரிகளை நாங்கள் கண்டு பிடித்துக் கொண்டிருக்கிறோம் என்றுதான் குறிப்பிட்டேன். இந்த அரசு வந்த பிறகுதான் அந்தத் தவறுகளைக் கண்டு பிடித்துக் கொண்டிருக்கிறது என்றுதான் குறிப்பிட்டேன்.

*திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் சொன்னதைத்தான் நான் இங்கே திருப்பிச் சொன்னேன். இதிலிருக்கிற நிலைமைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புரிந்து கொள்வார்கள் என்று தான் நம்புகிறேன். வெறும் வாதத்திற்காக நான் இதைச் சொல்லவில்லை. நான் சொல்லும்போது சங்கடமாக இருந்தது. ஆனால் நான் சொல்வதை விட மிகவும் அதிகமான அளவுக்கு அழுத்தந்திருத்தமாக மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் இங்கே சொல்லியிருக்கிறார். அதுவும் ஏதோ ஒரு அமைச்சரின் துறையை மட்டும் சொல்லவில்லை. அதில் ரெஜிஸ்டிரேஷன் துறை (Registration Department) இருக்கிறது, லேண்ட் ரெவின்யூ துறை எல்லாம் இருக்கிறது. இப்படி பல்வேறு துறைகளில் நடைபெறுகிற தவறுகளை 'ஒரு பேர்ட்ஸ் ஐ வியூ' bird's eye view என்கிற வகையில் மிக அழகாக விமர்சித்திருக்கிறார். எனவே நான் மற்றவற்றிற்குள் இப்போது போக விரும்பவில்லை. இந்தக் கருத்துக்களை அவர் சொன்ன காரணத்தால்தான், சொல்ல வேண்டுமென்பதில்லை, எப்போதுமே நான் அவற்றைச் சொல்லிக்கொண்டிருக்கிறேன்.

அதோடு, அவர் இன்னொரு கருத்தைச் சொன்னதற்காகவும் நான் மகிழ்ச்சி தெரிவித்துக்கொள்கிறேன். சென்னை நகரில் இனி மூன்று அடுக்கு மாடி கட்டிடங்களைத் தவிர, அதற்கு மேற்பட்ட மாடிக் கட்டிடங்களைக் கட்டக்கூடாது என்று அரசு அப்படி தெளிவாக உத்தரவு போட்டிருக்கிறது என்பதையும் அவர் சொன்னார். இன்றைய தினம் பலமாடிக் கட்டிடங்களைக் கட்டுவதன் மூலம் எவ்வளவு பேர் தொல்லைகளுக்கு ஆட்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பது நம் அனைவருக்கும் நன்கு தெரிந்த விஷயம்தான். என்வைரான்மென்ட்டல் பொலியூஷன் environmentl pollution என்பதோடு, போக்குவரத்துப் பிரச்சினை, விலைவாசி உயர்வு என்று பல்வேறு வகைகளில் தொல்லைகள் அளித்து வந்ததற்கு ஒரு முடிவு கட்டுகிற வகையில் இது அமையும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள்

திட்டவட்டமாக இங்கே தெரிவித்திருக்கிறார். இதுதான் அரசாங்கத்தின் தெளிவான முடிவு என்பதற்காக நான் மகிழ்ச்சி அடைந்தேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு ஏ. ஆர் தாமோதரன் அவர்கள் பேசும்போது, நான் அதிர்ச்சியடைந்தேன். இந்த உத்தரவு வெறும் 'டெம்பரரியானது' என்று அவர் குறிப்பிட்டார். மூன்று மாடிக் கட்டிடத்திற்கு மேல் கட்டக் கூடாது என்ற உத்தரவு நிரந்தரமானதல்ல. இது வேறு காரணங்களுக்காக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் 7 மாடி, 10 மாடி என்று கட்டப் படத்தான் போகிறது என்று அவர் குறிப்பிட்டார். எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் விரும்புகிற வகையில், அவர் உறுதியாக நம்புகிற வகையில், மூன்று மாடிக் கட்டிடங்களுக்கு மேல் போகாத நிலையில் பார்த்துக் கொள்வார் என்று எதிர்பார்க்கிறேன். அவராலேயே முடியவில்லை என்றால் நாம்தான் என்ன செய்ய முடியும் ?

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள்தான் எல்லா மாடிகளுக்கும் சொந்தக்காரர். அவரே இதைப்பார்த்து கண்ட்ரோல் செய்தால், நன்றாக இருக்கும். அவர்தான் எல்லாவற்றிற்கும் மேலே இருக்கிறார்.

திரு. க. இராமமூர்த்தி : எங்கள் ஆட்சியை எங்களாலே கண்ட்ரோல் பண்ண முடியாது, நீங்கள்தான் கண்ட்ரோல் பண்ண வேண்டும் என்று சொல்விர்களானால், அதற்கான அவசியம் வரும்போது, நிச்சயம் கண்ட்ரோல் செய்வோம்.

திரு. எஸ்' ஆர். இராதா : நீங்களும் சரியாகச் செய்யவில்லை, கண்ட்ரோல் செய்ய முடியவில்லை என்பதால்தான் பல மாநிலங்களை இன்றைக்குக் கலைத்துக் கொண்டிருக்கிறீர்கள்.

திரு. க. இராமமூர்த்தி : இவ்வளவு தெளிவாக நிலைமையை உணர்ந்து சொன்னதற்காக, நான் மகிழ்ச்சியையும், பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அளவுக்கு அவர் உணர்ந்திருப்பதற்காக நான் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நகர்ப்புற உச்ச வரம்புச் சட்டத்தைப் பொறுத்தவரை, ஒன்றை நான் எதிர்பார்த்தேன். ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட்" (Retrospective effect) என்பதைப் பொறுத்தவரை, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் மிகவும் தெளிவான கருத்துப் படைத்தவர். அவசியம் என்றால், தவறான நடவடிக்கைகளைத் தடுப்பதற்காக 'ரிட்ராஸ்பெக்டிவ் எபக்ட்' கொடுப்பதைப்பற்றிக் கவலைப்பட மாட்டேன் என்று அவரே

சொல்லியிருக்கிறார். 1977 ஆம் ஆண்டுக்குப் பிறகு, இந்தத் திருத்தச் சட்டம் வருகிறது. அதற்குப் பிறகு இப்போதுதான் இந்தத் திருத்தம் கொண்டு வரப்படுகிறது. இடையில் ஏற்பட்ட விளைவுகளைப் பொறுத்தவரை, யார் இந்த ஆட்சியின் கையைப் பிடித்துக்கொண்டு தடுக்கிறார்கள் என்றுதான் கேட்க விரும்புகிறேன். 1977 ஆம் ஆண்டு நகர்ப்புற உச்ச வரம்புச் சட்டம் தளர்த்தப்பட்டது. அதன் விளைவாக எவ்வளவு பேர் இதிலிருந்து தப்பினார்கள் ? எவ்வளவு பேர் எப்படியெப்படியெல்லாம் தங்கள் நிலத்தை மாற்றிக் கொண்டிருக்கிறார்கள் ? இது அரசாங்கத்திற்குத் தெரியாதா ? இந்த நிலைமையில் ஒரு நாள் தள்ளிப் போனால்கூட அதன் விளைவு பயங்காமாக இருக்கும் என்று அமைச்சர் அவர்கள் இன்று இந்த அவையில் சொல்லியிருப்பதைக் குறித்து நான் பெருமைப்படுகிறேன். அன்றைக்குக் கொண்டு வரப்பட்ட ஒரு சட்டத்தில் லூப் ஹோல்ஸ் Loopholes இருந்தன. அதை வைத்துக்கொண்டு தப்பிவிட்டார்கள் என்று வேறு ஒரு சட்டத்திற்கு வித்தாரம் பேசுகிறவர்கள் இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரை, ரிட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கொடுப்பதற்கு ஏன் முன்வரவில்லை ?

இந்தச் சட்டத்திற்கும் 1977 ஆம் ஆண்டு 'முதலே 'ரிட்ராஸ்பெக்டிவ் எபக்ட்' கொடுத்தால் என்ன குடியா முழுகிவிடும் ? யாரோ சிலர் தப்பித்துக் கொள்ளும் வகையில், 1977 ஆம் ஆண்டுக்குப் பின்னால் இன்றுவரை காத்திருந்து இன்றைக்குச் சட்டத் திருத்தம் வருகிறது என்கிறபோது, இத்தகைய உணர்வை நாம் எப்படித் தடுக்க முடியும் ? 20 வருஷம் பொறுத்து ஆட்சிக்கு வரும் இன்னொரு அமைச்சர் இந்தக் குற்றச்சாட்டை இன்றைய அமைச்சரவையின் மீது சுமத்த முடியாதா ? 1977 ஆம் ஆண்டுச் சட்டத்திற்கு நீங்கள்தானே திருத்தம் கொண்டு வந்தீர்கள் ? அப்படியானால் ஏன் அதற்கான வகையில் சரியான நடவடிக்கையை எடுக்கவில்லை ? இன்றைக்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், நாளைக்கே அது பாதித்துவிடும் என்று மற்றவற்றிற்குச் சொல்லுகிற இந்த ஆட்சி இத்தகைய அச்ச உணர்வுகளை வெளிப்படுத்திய பிறகும்கூட, ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்றுதான் கேட்க விரும்புகிறேன். 1977 ஆம் ஆண்டுக்குப் பிறகு கண்ணுக்குத் தெரிந்து எவ்வளவு நடைபெற்றிருக்கின்றன ? இத்தகைய நிலைமைகளைச் சீர்படுத்துவதற்கு ஏன் ரிட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கொடுக்கவில்லை ? இப்படிக் கால தாமதமானதற்குப் பல்வேறு காரணங்கள் இருந்தாலும், இன்றைக்காவது இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்ததற்காக

நான் மகிழ்ச்சியடைகிறேன். பலமுறை நான் இதைச் சொல்லியிருக்கிறேன். இதுபோன்ற உச்ச வரம்புச் சட்டம் வர வேண்டும் என்று நானே இந்த அவையில் பலமுறை கருத்துத் தெரிவித்திருக்கிறேன்.

அதோடு இன்னொன்றையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர் தாமோதரன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல், இந்தச் சட்ட முன்வடிவு அரசியல் கட்சிகளின்மீது வஞ்சம் தீர்த்துக் கொள்கிற நடவடிக்கையாக அமைந்து விடக்கூடாது என்றும் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இடையில் குறுக்கிடுவதற்கு வருந்துகிறேன். தவறாகக் கருதக்கூடாது. மாண்புமிகு உறுப்பினர் திருத்தம் கொடுத்திருக்கிறார். பேசும்போது அதையும் சேர்த்துப் பேசிவிட்டால், நான் பதில் சொல்ல வாய்ப்பாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-10)

திரு. க. இராமமூர்த்தி : ஆகவே அந்த அடிப்படையிலே அமைய வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னுமொன்று. நான் கொடுத்திருக்கிற திருத்தத்தைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதுகூட நல்லதுதான். தனியாக இன்னுமொரு முறை பேசுவதைவிட இப்போதே பேசி விடலாம். பொதுவாக திருத்தம் கொடுப்பதற்கு ஒரு காரணம், பேசுவதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படும் என்பதுதான். Minister has always his last say. அமைச்சர் அவர்கள் எப்போது வேண்டுமானாலும் பதில் சொல்ல முடியும். ஏனென்றால் அவருக்கு உடனடியாக அதிகாரிகளிடமிருந்து பதில் வரும். எங்களை எப்படி மடக்க வேண்டுமென்று அவருக்கு பதில் வரும். எங்களுக்கு அந்த வாய்ப்பில்லை

டாக்டர் இரா. சனார்த்தனம் : துணைத் தலைவர் அவர்களே, சில நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் மூலம் அந்த உதவி மாண்புமிகு உறுப்பினருக்கும் கிடைத்துக் கொண்டிருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி : அரசாங்கம் ஒரு பக்கமும், மாண்புமிகு உறுப்பினர்கள் ஒரு பக்கமும் என்பது மாண்புமிகு உறுப்பினர் அறியாததல்ல. The last says is with the Minister concerned. அதைத் தவிர்க்க இந்தத் திருத்தம் கொடுக்கிறோம். திருத்தத்தைப் பொறுத்தவரை

யில், அவசர அவசரமாகக் கொடுக்கும்போது, கருத்துக்கள் மாறுபட்டிருக்க லாம். எங்களுக்கு அவகாசம் இல்லை என்பதால் அவசரத்தில் திருத்தம் கொடுக்கிறோம். சட்ட முன்வடிவை ஒரு நாள் முன்னதாகக் கொடுத்துவிட்டு அல்லது இன்றைக்குக் கொடுத்துவிட்டு, காலையில் கொடுத்துவிட்டு நிறை வேற்றித் தாருங்கள் என்று சொல்லும்போது, நாங்கள் சில திருத்தங்களைக் கொடுத்து எப்படியாவது கருத்துக்களை வெளிப்படுத்துகிறோம். அதற்குப் பிறகு எங்களுடைய கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு இருக்கிறது. இது பெரிய விவகாரம் இல்லை.

The Hon. Dr. H. V. HANDE : If the hon:. Member would not mind by interruption in a light-hearted manner, it was always said by Sir Winston Churchill: "The opposition has always its say. The ruling party has its way."

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே,
என்னோடு பல ஆண்டுக் காலம் அவையாக நின்று He had always
மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவருங்கட்சிக்கு
his say
தோழமை கட்சியிலிருந்தும் He had always his say
அப்போசி
வெறும் அப்போசிசனிலிருந்து I had my say
சனிலிருந்து along with the Ruling party head his say
அந்த அளவிற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல
எங்களாலே சிலவற்றைத் தெரிவிக்க முடிகிறது. கொடுத்திருக்கின்ற சட்ட
முன்வடிவின் அடிப்படையிலே நாங்கள் தெரிவித்த கருத்துக்களின் அடிப்
படையிலே, அமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்துக்கு மாறாக ஏதாவது
தெரிவிக்க அவசியமானால், வாய்ப்பு வேண்டுமே என்ற எதிர்பார்ப்பின் அடிப்
படையிலே இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். ஆகவே அந்தத்
திருத்தத்தை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அதிலே என்ற வார்த்தைகளை
Mortgage and lease or otherwise
நீக்கிவிட வேண்டுமென்று இரண்டாவது பிரிவுக்கு ஒரு திருத்தம் கொடுத்
திருக்கிறேன். காரணம் இன்றைக்கு இருக்கின்ற நிலத்திற்கான மதிப்புகள்
உயர்ந்திருக்கின்றது. மார்க்கெட் வேல்யூ (Market value)
உயர்ந்திருப்பதால், சில இடங்களில் சில மனைகளிலே கட்டிடங்களைக் கட்டு
வதற்காக ஒப்பந்தக்காரர்களிடம் நீண்டகால குத்தகைக்கு விட வேண்டிய
தாக இருக்கிறது. அப்படி அதையெல்லாம் தடுக்கின்ற நிலைமை ஏற்பட்டால்,
மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் குறிப்பிட்டதைப்

போல, சில நிறுவனங்கள் தங்களுக்குத் தேவையான கட்டிடங்களைக் கட்டிக் கொள்ள முடியாமல் போகும். சில உடைமைகளுக்கு மார்க்கெட் வேல்யூ உயர்ந்திருக்கும்போது, அந்த அடிப்படையிலே வங்கிகளில் கடன் வாங்க இயலாமல் போகும். கடன் வாங்கி அதே சொத்தை விரிவுபடுத்த, புதிய கட்டிடங்களைக் கட்டி வருவாயைப் பெருக்க வாய்ப்புகள் இல்லாமல் போகும். நிரந்தரமாக 100 வருஷங்களுக்கு லீஸ் கொடுக்கும் நிலைமை இருக்கிறது. லீஸ் என்று வருகிறபோது "3 ஆண்டுகள்" என்று கொடுத்திருக்கிறேன். மார்ட்கேஜ் என்ற வார்த்தையை விட்டுவிட வேண்டுமென்று சொன்னதற்குக் காரணம், நிலத்தின் அடிப்படையிலே சில மாற்றங்களை உருவாக்கும்போது, தேவை என்ற அடிப்படையிலே கொடுத்திருக்கிறேன். மேலும் இரண்டாவது பிரிவில் "கிஃப்ட்" (Gift) கொடுப்பதை விட்டுவிட வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். என்னுடைய திருத்தம்கூட, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய சட்ட முன்வடிவு எதை விரும்புகிறதோ அதற்குத் துணை செய்யும் வகையிலே அமைந்திருக்கிறது என்று சொல்லி, நகர்ப்புற நில உச்ச வரம்புச் சட்டங்களைப் பொறுத்தவரையில், எவ்வளவுதான் வேகத்தைக் காட்டிப் பேசினாலும்கூட, அந்தக் கருத்துக்களுக்கேற்ப சட்ட முன்வடிவு வர வில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது சட்டமாக ஆக்கப் பட்டாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் குறிப்பிட்டதைப்போல, நோக்கத்திற்கேற்ப நிறைவேற்றுகிற வகையிலே அதிகாரிகள் செயல்படுவதில்லை. அதையெல்லாம் மனதிலே கொண்டு மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் உரிய முறையில் இந்தச் சட்ட முன்வடிவு நிறைவேறி சட்டமாகிய பிறகு நடவடிக்கை எடுப்பார் என்பதை நம்பி இந்தக் கொள்கை களுக்கு ஆதரவு தெரிவித்து, இடையிலே விட்டுப்போன, செய்யத் தவறிய காரியங்களுக்காக எதிர்ப்பு தெரிவிப்பது என்னுடைய கடமையென கருதி கண்டனத்தைத் தெரிவித்து, அமைகிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நகர்ப்புற நில உச்சவரம்பு சட்டத் திருத்த மசோதாவில் எனது கருத்துக் களை நான் சொல்ல விழைகிறேன். நகர்ப்புற நிலங்களுக்கெல்லாம் உச்ச வரம்பு கட்டி, நிலத்தை எடுத்து நிலமற்ற ஏழைகளுக்கு அவைகளைப் பரவ லாக்குகிற திட்டத்தை வரவேற்கிற நிலையிலே திராவிட முன்னேற்றக் கழகத் தின் சார்பிலே எனது கருத்துக்களைச் சொல்லுகிறேன்.

நில உச்சவரம்பை எப்போது ஏற்படுத்துகிறபோதும், அந்த உச்சவரம்பிற் குட்பட்டவர்கள் விதிவிலக்குகளைக் கண்டுபிடித்து, சட்டத்திலே உள்ள ஓட்டைகளைப் பயன்படுத்தி தப்ப வழி காண்பார்கள் என்பது—என்னுடைய

[திரு. ம. சங்கரலிங்கம்] [1982 ஏப்ரல் 2

யூகமல்ல—வரலாறு. அதனாலேதான் 1966 ஆம் ஆண்டில் நில உச்சவரம்பு கொண்டு வந்ததில், எப்படியெப்படி தவறுகள் நடந்தன, அதைக் களைய எப்படியெப்படி முனைந்தார்கள் என்பதையெல்லாம் பார்த்து, மீண்டும் அத் தகைய நிலை வராமல் நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்தைக் கொண்டு வரும்போது, எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்தச் சட்டத்தைக்கூட இந்த அரசு ஆட்சிக்கு வந்த நாளிலிருந்து முன் தேதியிட்டு அமுல்படுத்தினால், முறையாக அமையும் என்பதைச் சொல்லுகிறேன். ஏனென்றால் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறபோது, "ஒரு நாள் பின்னால் சென்றாலும் அதனுடைய விளைவுகள் மோசமாக இருக்கும்" என்று அமைச்சர் அவர்களே சொன்னார்கள். அப்படி உணர்கிற அமைச்சர் அவர்கள், அமைச்சரவையைச் சார்ந்த அனைவரும் இந்த உணர்வை வைத்திருக்கிறோம் என்று காட்டுகிற நிலையில், இந்தச் சட்டத்தை ஆட்சிக்கு வந்த நாளிலிருந்து முன் தேதியிட்டு, ஏற்கெனவே விதிவிலக்குக் கொடுத்திருந்தால், அவைகளும் எடுக்கப்படும் என்று அறிவித்துக் கொண்டு வந்தால் பாராட்டத்தக்கதாக அமையும் என்று சொல்லுகிறேன் அப்படிக் கொண்டு வராமல் இருந்தால், ஒருவேளை வேண்டியவர்களுக்காக முன்பே "1982 ஆம் ஆண்டு ஏப்ரல் 2 ஆம் தேதி கொண்டு வருகிறேன், நீ அதற்கு முன்பே செய்ய வேண்டியதைச் செய்து கொள்" என்று சொல்லி விட்டு கொண்டு வந்திருக்கிறார்களோ என்று வெளியே இருக்கிறவர்கள் சொல்லுவதற்கு வாய்ப்பு இருக்கும். அப்படிச் சொல்லுவதற்கு வாய்ப்பு இல்லாமல் முன் தேதியிட்டுக் கொண்டு வருவது நல்லது அல்லவா என்பதைச் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சட்டத் திருத்தத்திலே இருக்கக்கூடிய சில முறைகளைப் பற்றி எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார் கள். நம்முடைய நோக்கம், வீடு இல்லாத மற்றவர்களுக்கு, சாதாரண நிலை யிலே உள்ளவர்களுக்குக் குறைந்த விலையில் நிலம் கொடுக்க வேண்டும் என்பதுதான். அதற்காக அரசாங்கத்திற்கு விற்க வேண்டுமென்று சொல்லி யிருக்கிறார்கள். அரசாங்கமே அதை ஏற்று நிலமற்றவர்களுக்கு ஒதுக்கீடு செய்கிறது. அதிலே குறை சொல்லவில்லை. அரசாங்கம், யாருக்குத் தேவை என்பதைக் கண்டறிந்து கொடுக்கிற முறையை நான் குறை கூற வில்லை. அப்படிச் செய்கிறபோது பாரபட்சமற்ற நிலையிலே அதிகாரிகளும் சம்பந்தப்பட்டவர்களும் நடக்க வேண்டுமென்று வலியுறுத்திச் சொல்லுவது என்னுடைய கடமை.

1982 ஏப்ரல் 2] [திரு. ம. சங்கரலிங்கம்]

பல தர்ம ஸ்தாபனங்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது முந்திய சட்டத்திலே. அப்படி விதிவிலக்கு அளிக்கப்பட்டவர்களுக்கு இன்னும் சில நிபந்தனைகளை ஏற்படுத்துகிறோம். அவர்கள் விற்கும்போது அரசாங்கத் திற்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். முன்பு கூட்டுறவுத் துறையிலே உள்ள நிலங்களை விற்கலாம் என்று இருந்தது. கல்வி ஸ்தாபனங் கள், கலாச்சார ஸ்தாபனங்கள் என்பதை இன்ஸ்டிடியூஷன் என்று சொல்லியிருக் கிறார்கள். அந்த வார்த்தையிலுள்ள விளக்கத்திலே எல்லாவற்றையும் நிறுத்தலாம். ஆகவே, இன்ஸ்டிடியூஷன் என்று போட்டிருக்கிறார்கள். தெளிவாக கல்சுரல் இன்ஸ்டிடியூஷன், எஜுகேஷனல் இன்ஸ்டிடியூஷன் என்று சொல்லியிருக்கலாம். பொதுவாக ஒரு வார்த்தை விளக்கத்திற்கும், விவாதத் திற்கும் அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும். நீதிமன்றங்களுக்குப் போகிற போது சர்ச்சைக்குரியதாக இருக்கக் கூடாது. இன்னும் என்னென்ன இன்ஸ்டி டியூஷன் நிலம் இருக்கிறது என்று வரையறை செய்திருக்கிறார்கள்.

(பிற்பகல் 1-20)

எந்தெந்த இன்ஸ்டிடியூஷன்கள் சரியாகச் செயல்படாமல் இந்த நிறுவனங் களை தங்களுடைய நலன்களுக்காகப் பயன்படுத்த முனைகிறார்கள் என்று பார்க்க வேண்டும். அப்படி இருந்தால் அதைத் தெளிவாகச் சொல்வது நல்லது என்று இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்கிறேன். மாண்புமிகு ஐக்கியக் கட்சித் தலைவர் திரு. ஏ. ஆர் தாமோதரன் அவர்கள் எடுத்து வைத்த வாதமும் அதையொட்டி நம்முடைய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் கொடுத்த திருத்தமும் அதையொட்டியே இருக்கிறது என்று நினைக் கிறேன். என்னவென்றால் இந்த ஸ்தாபனங்கள் நல்ல முறையில் செயல்படு வதற்கு அவைகளை வளர்ப்பதற்கு, அடமானம் செய்வதற்குக்கூட உரிமை யில்லை என்றால் எப்படி? இப்போதே அர்பன் லேண்ட் டேக்ஸ்கூட கட்ட முடியாமல், ரூபாய் 3 லட்சம், ரூபாய் 4 லட்சம் பாக்கி வைத்திருக்கிறார்கள். அதைக் கட்ட அவர் வாடகைக்கு விட்டு வருமானத்தைப் பெருக்க வேண்டும். அப்படிச் செய்ய வேண்டுமென்றால் கட்டிடங்கள் கட்ட வேண்டும் என்றால், வாடகைக்கு விட்டு வருமானம் பெற வேண்டுமென்றால், அடமானமாவது வைக்க வேண்டும். குறைந்தது விற்காமல் போனாலும் அடமானம் வைக்க, பாங்கியில் லோன் வாங்க வசதி இருக்க வேண்டும். அந்த நிலையைத் தடை செய்து விடுவது தேவைதானா என்று சிந்திக்க வேண்டும் என்று கேட்கிறேன். திருத்தம் மூலமாக அதை விட்டுவிட வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். எனவே, நானும் அதை வலியுறுத்திக் கொள்கிறேன். சட்டத்தின் நோக்கத்தை வரவேற்கிறேன். சட்டம் நெறியோடு அமுல்படுத்தப்பட, எந்த நோக்கத்தோடு

சட்டம் கொண்டு வரப்பட்டதோ அந்த நோக்கத்தில் நிலமற்றவர்களுக்கு, வீடு அற்றவர்களுக்கு அந்த நிலத்தைக் கொடுக்க வழி வகுப்பதற்கு நாங்கள் ஆதரவு தரத் தயாராக இருக்கிறோம். அந்தச் சட்டத் திருத்தம் வருவதற்கு முன்னாலே அதிலே தப்பியவர்கள் இருந்தாலும், அந்தச் சட்ட வரம்பிற்குள் அதைக் கொண்டு வந்து செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். இதிலே அங்கத்தினர்கள் உண்மையான ஆர்வத்தோடு அச்சத்தோடு எழுப்பியிருக்கின்ற ஐயங்களைக் களைந்துகொள்ள, இந்தத் திருத்தத்தை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவு பற்றிப் பேசிய அத்தனை உறுப்பினர்களும், இதைப் பொதுவாக வரவேற்றிருக்கிறார்கள். நான் சொல்கின்ற போது, பொதுவாக வரவேற்றிருக்கின்றார்கள் என்று சொல்வதற்குக் காரணம், அருமை உறுப்பினர் திரு. திண்டிவனம் இராமமூர்த்தி அவர்கள், இது மிகவும் கடுமையாக இருக்க வேண்டும்; தளர்த்தப்பட்டிருக்கிறது என்று சொல்கின்ற போதும், அதை இன்னமும் கடுமையாக்க வேண்டும் என்ற உணர்வும் இருந்தது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள், இது மிகவும் கடுமையாக இருக்கிறது, இதைத் தளர்த்த வேண்டுமென்று சொல்கின்றபோது, பொதுவாக வரவேற்றிருந்தாலும், இன்னும் மாறுபட்ட கருத்து இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரிகிறது. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், இதை இன்னும் நன்றாகக் கொண்டுவர வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் ஒன்றைப் பொதுவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். யார் யாருக்கோ வழிவகைகள் செய்துவிட்ட பிறகு, இது கொண்டு வரப்பட்டது என்று திரு. தாமோதரன் அவர்கள் சொல்லவில்லை. யார் யாரோ என்று சொல்லவில்லை. தனிப்பட்ட நபர்களுக்கு இதை விற்க முடியாது. அது எல்லோருக்கும் தெரியும். எக்சம்ப்ஷன் கொடுத்தது தனிப்பட்ட நபர்கள் யாருக்கும் இல்லை என்பது உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். யார் யாருக்கோ, வேண்டியவர்களுக்கு, கட்சியை வளர்ப்பவர்களுக்கு, சிறிது காலம் விட்டு வைத்து அதற்கு மேலே கொண்டு வந்திருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைச் சொல்கின்ற போது, திரு. தாமோதரன் அவர்கள் மிகத் தெளிவாகச் சொன்னார்கள். அவர்கள் தனிப்பட்டவர்களுக்கு விட்டுக்கொடுத்து இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று சொல்லவில்லை. காரணம் சட்டத்திலேயே இன்ஸ்ட்டிடியூஷன்ஸ், ஷெப்ஸ், எனி அதர் எஜுகேஷனல் இன்ஸ்ட்டிடியூஷன், டெக்னிக்கல் இன்ஸ்ட்டிடியூஷன் என்று சொல்லப்பட்டு, தனிப்பட்ட நபர்கள் யாருக்குமே விதிவிலக்கு

இல்லை என்ற அளவில் சொல்லியிருக்கிறார்கள். மூலச்சட்டத்தில் செக்ஷன் 21-லே தனிப்பட்ட யாருக்கும் விதிவிலக்கு இல்லை. விதிவிலக்கு கொடுக்கப்பட்டதே இரண்டுதான். ஒன்று இப்படிச் சொல்லப்பட்டவைகள். மற்றொன்று 'பப்ளிக் இன்ஸ்ட்டிடியூஷன்', 'சாரிட்டபிள் ஆர் ரெலிஜியஸ் இன்ஸ்ட்டிடியூஷன்ஸ்', ரெலிஜியஸ் நேச்சர் நிறுவனங்கள் அவைகளுக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டைத் தவிர வேறு எந்தவிதமான நிறுவனங்களுக்கும் தரவில்லை இந்த கண்டிஷன்தான் இருக்கிறது.

* **திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்தச் சட்டத்தின் அடிப்படையிலே 1977-க்குப் பிறகு எந்தெந்த இன்ஸ்ட்டிடியூஷன்களுக்கு நிலம் விற்றிருக்கிறார்கள், தனிப்பட்ட நபர்களுக்கு இல்லையென்றால், எந்தெந்த நிறுவனங்களுக்கு விலைக்குக் கொடுத்திருக்கிறார்கள்? யார் யாருக்கு எப்படி கொடுத்திருக்கின்றார்கள்? இந்த இரண்டையும் சொல்ல வேண்டும். If he can place the papers on the table we will he happy

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : நம்முடைய உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் இன்னும் கொஞ்சம் பொறுத்திருக்க வேண்டும். நான் இறுதி வார்த்தைகளைச் சொல்லி முடிக்கவில்லை. எல்லா வார்த்தைகளும் வரவில்லை. குழந்தைகளுக்கு ஏதாவது தின்பண்டத்தைக் கொடுத்து, அது முழுவதும் உள்ளே போகாமல் இருக்கும்போதே தொண்டையைப் பிடித்தால், தின்பண்டம் வெளி வருவதுபோல, வார்த்தைகளை நான் முடிப்பதற்கு முன்னால் கேட்கிறார்கள். குழந்தையின் தொண்டையைப் பிடிப்பதுபோல, நடுவில் பிடித்து விட்டார்கள். நான் பதில் சொல்லும்போது, அதெல்லாம் வந்துவிடும். தனிப்பட்டவர்களுக்கு விதிவிலக்கு கொடுக்கவில்லை. இது வரையிலே கொடுத்திருப்பது, இன்ஸ்ட்டிடியூஷன்களுக்குத்தான் சாரிட்டபில் இன்ஸ்ட்டிடியூஷன்ஸ், இன்ஸ்ட்டிடியூஷன்ஸ் ஆஃப் பப்ளிக் நேச்சர், ரெலிஜியஸ் இன்ஸ்ட்டிடியூஷன்ஸ், எஜுகேஷனல் இன்ஸ்ட்டிடியூஷன்ஸ் இவைகளுக்குத்தான் விதிவிலக்கு கொடுத்திருக்கிறோம். பாரின் இன்ஸ்ட்டிடியூஷன்ஸ், ஐ. நா. சபை நிறுவனங்கள் இவைகள் போன்றவற்றுக்குத்தான் கொடுத்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறோம். அப்படி கொடுப்பதற்குத்தான் இன்றைக்கு வரையறை செய்திருக்கிறோம். வேறு ஒன்றுமில்லை. இதற்கு முன்னாலே இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தபோது, இதை எண்ணிப் பார்க்கவில்லையா என்றார்கள். அதைப்பற்றி எண்ணியதுண்டு. ஆனால் அப்படி எண்ணி கொடுத்தபோது நல்ல எண்ணத்தோடுதான் கொடுத்தோம். ஆனால் அதிலே தவறு நடக்கிறது என்று சொன்ன உடனே இப்படித் திருத்தம் கொண்டு வந்திருக்கிறோம்.

வேறு எங்கேயாவது செய்துவிட்டோம் என்பதெல்லாம் இல்லை. தனிப்பட்ட முறையிலே யாரும் விற்க முடியாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, நம்முடைய திரு. திண்டிவனம் இராமமூர்த்தி அவர்கள் சொல்கின்றபோது, "பதில் சொல்கின்றபோது வாய்ப்பு இருக்கிறது. அப்போது அதைப்பற்றிச் சொல்ல வேண்டும்" என்று சொன்னார்கள் இதுவெல்லாம் சாதாரண சட்ட முன்வடிவல்ல. இது கொள்கையின் அடிப்படையிலே ஏற்கப் பட்டது. இதில் தவறுகள் ஏதாவது இருந்தால், நான் விளக்கங்களைச் சொல் கின்றபோது, அதைத் தவிர்த்துக்கொள்ள சொல்கிறேன். அந்தக் கொள்கை களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்ற அளவில், அந்தக் கொள்கை களை வலியுறுத்திச் சொல்கிறேன். எதிர்க் கட்சி சொன்னால் ஏற்றுக்கொள்ள கூடாது, ஆளும்கட்சியினர் சொன்னால்தான் ஏற்றுக்கொள்வது என்பதல்ல இந்த அரசின் எண்ணம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்தக் கொள்கையின் அடிப்படையிலே சொல்கின்றபோது, அதை எப்படி வேண்டுமானாலும் இடையிலே மாற்றிச் சொல்வதற்கான வாய்ப்புகள் இல்லை என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், இங்கே எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டார்கள். நான் முதலிலேயே தெரிவித்திருக்கிறேன். இப்போது நான் எதுவும் சொல்லத் தேவையில்லை என்ற முறையில், ஒன்றும் சொல்ல வில்லை. ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு இருப்பது இரண்டே இரண்டுதான்: சாதாரணமாக இன்றைக்கு இப்படிச் செய்வதில் 'இம்போஸ்' பண்ணுகின்றபோது கண்டிஷன்களைப் போடுகிறது. அரசிடம் சொல்லிவிட்டுத்தான் விற்க வேண்டும் என்று இதிலே இருக்கிறது. அது மட்டு மல்ல 8 மாடிக் கட்டிடம், 9 மாடிக் கட்டிடம் என்று சொன்னார்கள். அந்த 8 மாடி, 9 மாடி கட்டிடங்களையெல்லாம் அவர்கள் நில உச்ச வரம்புச் சட்டத் திற்குள் உள்ள இடத்தில்தான் கட்டியிருக்கிறார்களே தவிர, வேறு அல்ல. வேறு எதைப்பற்றியும் சொல்வதற்கில்லை என்று சொல்லிக்கொள்கிறேன். இந்த நிறுவனங்கள் யாருக்கு வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் விற்கலாம் என்று இருந்தது. இப்போது விற்கக்கூடாது என்று தடை செய்திருக் கிறார்கள். இன்றைக்கு இருக்கின்ற ஹவுசிங் போர்ட் விற்கின்றபோது, லேண்ட் சீலிங் அர்பன் லேண்ட் லிமிட்டுக்குள்ளே இருப்பவர்களுக்குத்தான் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். மற்றொன்று, கிளப்ஸ், இன்ஸ்டி டியூஷன்ஸ், பாரின் இன்ஸ்டிடியூஷன்ஸ், எஜுகேஷனல் இன்ஸ்டிடியூஷன்ஸ் என்று இருக்கின்ற நிறுவனங்களும் விற்கக்கூடாது என்று வருகின்றது: அவர் கள் விற்பதற்கு முன்பு அரசுக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்பதுதான்

அதுதான் இதிலே உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது வரையிலே சொன்னது எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடியதுதான். இன் னொன்று ஏற்றுக்கொள்ளாதது என்னவென்றால் திரு. தாமோதரன் அவர்கள் சொன்னார்கள். சில சங்கடங்களைத் தீர்ப்பதற்கு வாய்ப்பு இருக்கின்றதா என்று கேட்டார்கள். அவர் சொன்னது உண்மையில்லை.

சாதாரணமாக நிலங்கள் இருக்கின்றபோது, அதிலே கட்டிடங்கள் கட்ட, வேகன்ட் லேண்டாக இருப்பதிலே கட்டடங்கள் கட்ட சில கஷ்டங்கள் இருக் கின்றன என்று சுட்டிக் காட்டி இருக்கிறார்கள். இன்றைக்கு இருக்கின்ற சட்டப் படி, அவர்களுக்கு எந்தவிதமான கண்டிஷனும் அரசு போட முடியாமல் இருக் கிறது. எது வேண்டுமானாலும் செய்யலாம் என்று இருக்கிறார்கள். அந்த நிலை இருக்கிறா. அவர்களிடத்திலே ஒரு கண்டிஷன் போடுகிறார்கள். அவர் கள் விற்பதாக இருந்தால், அரசிடம் கொடுத்துவிட வேண்டுமென்பதுதான்: முன்பே மூலச் சட்டத்திலேயும் இருக்கிறது. செக்ஷன் 21-ஏ யிலே இருக் கிறது: ஹார்ட்சிப், பப்ளிக் இன்ட்ரஸ்ட் பற்றிச் சொன்னார்கள். உதாரண மாக ஒரு மார்ட்கேஜ் பண்ணி வாங்குவதற்கு எஜுகேஷனல் இன்ஸ்டிடியூஷன், கல்வி பற்றிய இன்ஸ்டிடியூஷன்ஸ் இவைகள் எல்லாம் பாங்கியில் கடன் வாங்கு வது என்றால், அவர்கள் என்ன செய்வது என்று கேட்டிருக்கிறார்கள்

(பிற்பகல் 1-30)

அதையும் இந்த அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும். சட்டத்திலே இருக்கிறது. 21-ல் ஹார்ட்சிப் Hardship, public interest, educational institution, clubs, etc. என்பதில் பாதுகாக்கப்படுகிறதென்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னொன்று சொன்னார்கள். திரு. தாமோதரன் அவர் கள் இதை ஏற்றுக்கொள்வார்களென்று கருதுகிறேன்.

திரு. ஏ ஆர் தாமோதரன்: துணைத் தலைவரவர்களே, செக்ஷன் 21-லே கிளப்ஸ், இன்ஸ்டிடியூஷன் எல்லாம் எக்சம்ப்ட் பண்ண முடியாது. அதில் விகலாக வந்து, persons holding cross vacant land, தான் exempt பண்ண முடியும். அதிலே வைத்து மார்ட்கேஜ் பண்ணக்கூடாதென்று, புரொகிபிஷன் ' பாசாகிப் போனால், அவர்கள் , டெவலப்' பண்ண முடியாது. கொடுத்தால் அரசுக்குத்தான் 1,500 ரூபாய்க்குக் கொடுக்க வேண்டும். அவர்கள் அடமானம் வைத்து, கட்டிடம் கட்டி, 'டெவலப்' பண்ண முடியாது: Section 21 will not apply to this at all

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : 'ஹார்ட்சிப்' என்று ஒன்று இருக்கிறது. அதன்கீழ் அவர்களுக்குச் செய்ய முடியுமென்று தெரிவித்துக் கொள் கொள்கிறேன். அவர்களுக்கு வாய்ப்பு இருக்குமென்று தெரிவித்துக் கொள் கிறேன். ஹார்ட்சிப்பிலே கொடுக்க முடியுமா என்பதைப்பற்றி சட்டத் துறையை ஆலோசித்துத்தான் சொல்கிறேன். அப்படி இல்லாவிட்டாலும், செய்து தருகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 'ஹார்ட்சிப்' என்று வருகிறபோது, செய்து தருகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். தாமோதரன் : துணைத் தலைவரவர்களே, ஒரேயொரு கருத்து: இதிலே 'டிஸ்கிரிஷனரி பவர்' வந்து விடுகிறது. டிஸ்கிரிஷனரி பவர் வந்தால், இந்தப் பக்கத்தில் உள்ளவர்கள் அதை மிஸ்-யூஸ் பண்ணுகிறீர் கள் என்று குற்றச்சாட்டு நாளைக்கு கண்டிப்பாகச் சொல்லுவார்கள். இதைத் தவிர்க்கத்தான், இப்போதே இந்த செக்ஷனிலே மார்ட்கேஜ் என்பதை எடுத் தால், இந்தக் குற்றச்சாட்டு நாளை வராதென்று உங்கள் நலத்திற்காகத்தான் நான் சொல்லுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: துணைத் தலைவரவர்களே, பிளாங்க் செக்காக, மார்ட்கேஜ் இல்லையென்றால் அதற்குப் பிறகு அதில் அரசு எந்தவிதக் கண்டிஷனும் போட முடியாது. மார்ட்கேஜ் யார் வேண்டுமானாலும் செய்யலாம். அது நியாயமானதுதானா, உண்மைதானா என்று ஆராய அரசுக்கு அதிகாரம் இல்லாமல் போகிறது. அது எப்படி என்றால், பிளாங்க் செக்கில் கையெழுத்து போட்டது மாதிரிதான். பிளாங்க் செக்கில் கையெழுத்துப் போட அரசு என்றைக்கும் தயாராக இருக்கக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். பிளாங்க் செக்கில் எவ்வளவோ பேர்கள் கையெழுத்து போட்டுவிட்டு கஷ்டப்பட்டிருக்கிறார்கள். எனவே பிளாங்க் செக்கில் கையெழுத்து போடக் கூடாதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களுக்குக் கஷ்டம் இருக் தால், அதை அரசு ஆராயும். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் இதை ஏற்றுக்கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

நம்முடைய எதிர்க் கட்சித் தலைவரவர்கள் யார் யாரோ வாழ வகை செய்துவிட்டு, இன்றைக்குக் கொண்டு வருகிறீர்கள் என்று சொன்னார்கள். யார் யாரோ இல்லை. அப்படிச் செய்வது இன்ஸ்டிடியூஷன்தான். அவர்கள் தான் செய்திருக்க முடியும். இன்ஸ்டிடியூஷன் என்பது உங்களுக்கு வேண்டி யவர்களல்ல, உங்களுக்கும் வேண்டியவர்களல்ல என்பது தெரியும். அதற்குப் பிறகு ஒன்றைச் சொன்னார்கள். அப்படி யாராவது செய்திருந்தால், என்ன செய்வது என்று கேட்டார்கள். முதலிலேயே சட்டத்திலே இருக்கிறது. யார் அப்படிச் செய்திருந்தாலும், நில உச்சவரம்புச் சட்டத்திற்கு அதிகமாக இல்லா தவர்களுக்குத்தான் கொடுத்திருக்க முடியும். நகர உச்சவரம்புச் சட்டத்திற்கு குறைவாக உள்ளவர்களுக்குத்தான் கொடுத்திருக்க முடியும். இந்த நிலத்தை வாங்கிய பிறகு, முதலில் இருப்பதையும் சேர்த்து வைத்துப் பார்க்கிறபோது, நகர உச்சவரம்புச் சட்டத்திற்கு அதிகமில்லாமல் இருந்தால் அது செல்லும், இல்லாவிட்டால் அது செல்லாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது ரெட்ராஸ்பெக்டிவ் எபக்டாக வரக்கூடாதென்று கேட்டிருக்கிறார்கள். எதிர்க் கட்சித் தலைவரவர்கள் கேட்டிருக்கிறார்கள். திரு. இராமமூர்த்தி அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன். அதில் எந்தவிதமான சங்கடமான உணர்வுகளும் கொள்கை அளவில் இல்லை, சட்டத் துறையிலே ஆராயலாம். அது செல்லுமென்றாலும், யார் யார் வருவார்கள் என்றால், இன்ஸ்டிடியூஷன்கள்தான் வரும். அவை 100, 150 இருக்கும். யார், யார் எந்தத் தவறு செய்தார்கள் என்பதை எழுதிக் கொடுத்தால், பரிசீலிக்கத் தயாராக இருக்கிறேன். டைப் அடித்து, மொட்டைக் கடுதாசியாகக் கொடுத்து விட்டாலும், பரவாயில்லை. அதைப் பரிசீலிக்கிறேன். நகர்ப்புற உச்ச வரம்புச் சட்டத்தைப் பொறுத்தவரையில், உறுப்பினர்கள் நான் சொன்ன விளக்கங்களை ஏற்றுக்கொள்வார்களென்று கருதுகிறேன். இதில் பேசிய அத்தனை உறுப்பினர்களுக்கும் அரசு சார்பாக நன்றி தெரிவித்துக் கொள் கிறேன். திரு. இராமமூர்த்தி அவர்கள் கொடுத்துள்ள அமென்ட்மென்டை திரும்பப் பெற்றுக்கொண்டு, இதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு, நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப்படுத்துதலும்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 66/1981) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் ".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2

THIRU K. RAMAMOORTHY: Sir, I move the following amendment—

" (1) In sub-clause (1) (*b*) of clause 2, for the words " mortgage, lease or otherwise ", substitute the words " Lease for more than three years "

[திரு. க. இராமமூர்த்தி] [1982 ஏப்ரல் 2

(2) In sub-clause (2) (4) (a) for the words "mortgage, gift, lease or otherwise" substitute the words "or gift"

THIRU A. R. DAMODARAN: Sir, I second it.

* திரு. க. இராமமூர்த்தி: துணைத் தலைவரவர்களே, இந்தத் திருத்தம் தேவையான முறையிலே அரசின் கவனத்தைத் திருப்பியிருக்கிறது. மாண்புமிகு அமைச்சரவர்களும் இது போன்ற நிலைமைகள் இல்லாமல் செய்யவேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதாக அறிவித்திருப்பதால் திருத்தத்தை நான் வலியுறுத்தவில்லை.

திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மேலவைத் துணைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு, நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப்படுத்துதலும்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 66/1981 நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு, நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப்படுத்துதலும்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 66/1981) நிறைவேற்றப்பட வேண்டும்";

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் நாளை காலை 9-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-37)

அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்

A. Statutory Rules and Orders.

147. Notification issued with G.O. Ms. No. 28, Prohibition and Excise, dated the 12th May 1981 regarding certain amendment to the Tamil Nadu Denaturied Spirit Metrly Alcohal and Varnish (French Polish) Rules, 1959. [Laid on the table of the House under section 54(3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act 10 of 1937)].

148. Notification issued with G. O. Ms. No. 139, Commercial Taxes and Religious Endowments, dated the 3rd February 1982 regarding an amendment to the Tamil Nadu Tax on Luxuries in Hotels and Lodging Houses Rules, 1980. [Laid on the table of the House under section 21(3) of the Tamil Nadu Tax on Luxuries in Hotels and Lodging Houses Act, 1981 (Tamil Nadu Act 6 of 1981).]

149. Notification issued with G.O. Ms. No. 46, Rural Development and Local Administration, dated the 12th January 1982 regarding declaration of Karuppanoothu, hamlet of Vadakku Achampatti Village in Sankarankoil taluk, Tirunelveli District as Gramdhas Village. [Laid on the table of the House under section 28 (4) of the Tamil Nadu Bhoodan Yagna Act, 1958 (Tamil Nadu Act XV of 1958)].

150. Annual Report of the Tamil Nadu Industrial Development Corporation Limited for the year 1980-81 and thhe Annual Report and Accounts of the Tamil Nadu Cements Corporation Limited for the year 1980-81. (Tamil and English). [Laid on the table of the House under section 619(A) of the Companies Act, 1956 (Central Act I of 1956)].

B. Reports Notifications and Other Papers.

* 158. The Tamil Nadu General Sales Tax (Second Amendment) Bill, 1982 (L. A. Bill No. 62 of 1981), as passed by the Assembly.

* 159. The Tamil Nadu Agricultural Pests and Diseases (Amendment) Bill, 1982 (Tamil Nadu Act 65 of 1981), as passed by the Assembly.

* Circulated to all M.L.Cs. on 31st March 1982.

* 160. The Tamil Nadu Urban Land (Ceiling and Regulation) (Amendment) Bill, 1982 (L.A. Bill No. 66 of 1981), as passed by the Assembly.

161. Answers to Unstarred Question Nos. 5 to 8.

162. Thirteenth Report of the Committees on Estimates on Forest Department (Tamil).

163. Twelth Report of the Committee on Public Accounts on the Report of the Comptroller and Auditor-General of India for the year 1976-77 (Revenue Receipts) (Part I) (Tamil).

164. Thirteenth Report of the Committee on Public Accounts on the action taken by the Government on the recommendations contained in the First Report of the Committee on Public Accounts (1977-78) on the Report of the Comptroller and Auditor-General of India for the year 1972-73 (Revenue Receipts) (Part II) (Tamil).

165. Fourteenth Report of the Committee on Public Accounts on the Report of the Comptroller and Auditor General of India for the year 1976-77 (Revenue Receipts) (part II) (Tamil)

166. Fifteenth Report of the Commitee on Public Accounts on the paragraphs pertaining to certain departments on the Accounts of the Government of Tamil Nadu for the year 1976-77 and the Report (Civil) of the Comptroller and Auditor-General of India for the year 1976-77 (Part-I) (Tamil).

167. Nineteenth Report of the Committee on Public Undertakings on the paragraphs pertaining to Tamil Nadu Housing Board in the Reports (Civil) of the Comptroller and Auditors-General of India for the years 1974-75 and 1975-76 (Tamil).

168. Ninth and Final Report of Justice Thiru N. S. Ramaswamy, B.A.B.L., Retired Judge of the Madras High Court, One-Man Commission appointed to inquire into the excesses committed during the pre-emergency period between 1st January 1972 and 31st January 1976. (Tamil).

* Circulated to all M. L. Cs. on 31st March 1982.

இணைப்பு I

(873 ஆம் பக்கத்தில் உடுக்குறியிடாத வினா எண் 8-க்கான விடையைக் காண்க.)

நெருக்கடி நிலையின்போதும் அதற்குப் பிறகும் உழவுத் தொழிலுக்காக நிலம் ஒப்படை செய்யப்பட்ட கொத்தடிமைகளின் எண்ணிக்கையும், அதில் நேரடியாக உழவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள கொத்தடிமைகளின் எண்ணிக்கையும் மாவட்டவாரியாக பின்வருமாறு :—

மாவட்டம்.	நிலம் ஒப்படை செய்யப்பட்ட கொத்தடிமைகளின் எண்ணிக்கை.	நேரடியாக உழவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள கொத்தடிமைகளின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)
கோயம்புத்தூர்	1	1
மதுரை	232	15
சேலம்	8	8
தருமபுரி	10	10
நீலகிரி	51	3
திருநெல்வேலி	..	..
பெரியார்	105	105
திருச்சிராப்பள்ளி	44	27
புதுக்கோட்டை	51	51
தென்னாற்காடு	200	200
மொத்தம் ..	702	420

மதுரை மாவட்டத்திலும், நீலகிரி மாவட்டத்திலும் நிலம் ஒப்படை செய்யப்பட்ட கொத்தடிமைகளின் எண்ணிக்கை அதிகமாகவும், ஆனால் நேரடியாக உழவுத் தொழிலில் ஈடுபட்டவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவும் உள்ளது. இதற்கான காரணங்கள் பின்வருமாறு :

மதுரை மாவட்டத்தில் கொடைக்கானல் வட்டத்தில் 1976 ஆம் ஆண்டில் 232 கொத்தடிமைகள், கொத்தடிமை முறை ஒழிப்புச் சட்டத்தின்படி விடுவிக்கப் பட்டுள்ளனர். அவர்களுக்கு விவசாயம் செய்வதற்காக சராசரி தலா 2.00 ஏக்கர் (இரண்டு ஏக்கர்) நிலம் ஒப்படை செய்து பட்டாக்கள் வழங்கப்பட்டன. அவர்களில் 67 நபர்கள், கொடைக்கானல் பாரத ஸ்டேட் வங்கியின் மூலம் ரூபாய் 3,500 வீதம் கடன் தொகை பெற்று விவசாயம் செய்து வந்தனர். உருளைக் கிழங்கு விவசாயத்தில் நஷ்டம் ஏற்பட்டதால் தற்போது எவரும் விவசாயம் செய்யாமல் பிழைப்புத் தேடி வெளியூர் சென்றுவிட்டனர். எனவே கொத்தடிமைகளின் தலைவர் மூலமாக எல்லோரையும் ஒரே இடத்தில் குடி அமர்த்தி அவர்களுக்கு ஒப்படை செய்யப்பட்ட நிலத்தில் விவசாயம் செய்ய கொடைக்கானல் வட்ட ஆட்சியர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். மேலும் மதுரை மாவட்ட ஆட்சியரின் அலுவலகத்தில் 6—11—1981 ஆம் தேதி நடந்தப்பட்ட (கொத்தடிமைகளின்) மாவட்ட நிலையிலான விழிப்புக் குழு கூட்டத்தில் கொத்தடிமைகள் தொடர்பாக சமூக நலப் பணியாளரும் கொத்தடிமைகளை ஒரே இடத்தில் குடியமர்த்தி அவர்களுக்கு ஒப்படை செய்யப்பட்ட நிலங்களில் விவசாயம் செய்ய ஆவன செய்ய உறுதி அளித்துள்ளார்.

கொத்தடிமைகளுக்கு ஒப்படை செய்யப்பட்ட நிலங்கள் எவருக்கும் குத்தகை விடப்படவில்லை. அவை தரிசாகவே உள்ளன.

நீலகிரி மாவட்டத்தில் விடுவிக்கப்பட்ட 481 கொத்தடிமைகளில் 51 நபர்கள் விவசாயம் செய்ய இசைவு தெரிவித்ததின் பேரில் 51 நபர்களுக்கு தலா 1.50 ஏக்கர் பூமி வீதம் மேற்படி நிலத்தில் நில ஒப்படைப்பு செய்யப்பட்டன. அரசு ஆணை 187, சமூக நலத்துறை, நாள் 7—3—1980-ன்படி மேற்படி 51 நபர்களில் 50 நபர்களுக்கு வீடு கட்டி கொடுக்கவும், கறவை மாடு, கோழிப் பண்ணைகள் அமைத்து கொடுக்கவும் உத்தரவாகியுள்ளது. மேற்படி வீடுகள் இன்னும் கட்டி முடிக்கப்படவில்லை. தற்போது மேற்படி நபர்கள் ஒரே இடத்தில் வசிக்காமல் பல இடங்களில் வசித்து வருகிறார்கள். வீடு கட்டும் பணி இன்னும் முடிவடையாமல் உள்ளதால், மேற்படி நபர்கள் மேற்குறித்த காலனியில் தங்கி தங்களுக்கு ஒப்படை செய்யப்பட்ட பூமியில்

விவசாயம் செய்ய முடியாத நிலையில் உள்ளனர். இருப்பினும் இவர்களில் 3 நபர்கள் மட்டும் தற்போது இக்காலனியில் போது விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். வீடுகள் கட்டி முடிக்கப்பட்டதும் எல்லா நபர்களையும் குடியமர்த்தி திட்ட அலுவலரின்கீழ் கூட்டுறவு முறையில் விவசாயப் பணி மேற்கொள்ளப்படும். இவ்வகையில் 51 நபர்களுக்கு நில ஒப்படை செய்யப்பட்டிருந்தாலும் இவர்களில் தற்போது 3 நபர்கள் மட்டுமே விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். மீதமுள்ள 48 நபர்கள் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டதும், குடியமர்த்தப்பட்டு, மொத்தமாக கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் கூட்டுறவு விவசாயம் செய்வார்கள். மேற்குறித்த 48 நபர்கள் தங்களுக்கு ஒப்படை செய்யப்பட்ட நிலங்களை விற்கவோ அல்லது மற்றவர்களுக்கு ஒப்படை செய்யவோ இல்லை.

இணைப்பு II.

874 ஆம் பக்கத்தில் இனம் 3 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க:)

1. 18—3—1982 அன்று சுமார் மாலை 6-30 மணியளவில் தடம் எண் 45-பி பேருந்து அண்ணா சதுக்கத்திலிருந்து கிண்டி செல்லும் வழியில் தேனாம்பேட்டையில் பாரதிதாசன் சாலை அண்ணா சாலையுடன் சேரும் சந்திப்பின் அருகில் திடீரென ஒரு சைக்கிள்காரர் வால்டாஸ் நிறுவனத்தின் அருகில் உள்ள தெருவிலிருந்து அண்ணா சாலையை கடந்து பாரதிதாசன் சாலைக்குள் செல்ல முயன்றார். அவர் மீது பேருந்து இடித்துவிடாமல் இருக்க பேருந்தினை இடதுபுறம் ஓட்டுநர் ஒடித்து பிரேக் இட்டார். அப்போது ஓட்டுநர் பேருந்தின் கட்டுப்பாட்டை இழந்ததால் பேருந்து இடதுபுறம் உள்ள நடைபாதை மீது ஏற புதிதாக கட்டப்பட்டு வரும் கட்டிடம் ஒன்றின் மதில் சுவர் அருகில் நான்கு சக்கர சைக்கிள் வண்டியில் சுண்டல் வியாபாரம் செய்து கொண்டிருந்தவர் மீதும், அவ்வண்டியின் மீதும், அங்கு நின்று கொண்டிருந்தவர்கள் மீதும் மோதி மதில் சுவரையும் இடித்து நின்றது. வண்டியில் இருந்த மண்ணெண்ணெய் அடுப்பு விழுந்து அடிபட்டவர்களின் மீது தீ காயமும் பட்டது. சுண்டல் விற்பனை செய்தவரும், அருகில் இருந்த மற்ற இருவரும் அதே இடத்தில் மாண்டனர். காயம் பட்டவர்களில் நால்வர் பொது மருத்துவமனையில்

சிகிச்சை பெறுகின்றனர். மூவர் இராயப்பேட்டை மருத்துவ மனையிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர், இம்மூவரில் ஒருவர் நிலை கவலைக்கிடமாகி 19—3—1982 அன்று இறந்து விட்டார். இறந்தவர்களில் ஒருவர் வைத்துக் கொண்டிருந்த நான்கு வயதுப் பெண் குழந்தை பேருந்தின் அடியில் சிக்கிக்கொண்டது.

2. பேருந்து மோதியதில் அங்கு இருந்த மின்கம்பி அறுபட்டதால் பேருந்தின் மீது மின்சாரம் பாய்ந்திருந்தது. மின்சார இலாக்காவிற்கு தெரிவித்து மின் ஓட்டத்தை நிறுத்தியபின், தீ அணைப்பு படையினர் காவல் துறையினரின் உதவியுடன் பொதுமக்கள் உதவியுடனும் பேருந்தினை தூக்கி சாய்த்து குழந்தையைக் காப்பாற்றினர். இதனால் குழந்தை சிறிய காயத்துடன் உயிர் தப்பியது.

3. காவல் துறை அதிகாரிகளும், போக்குவரத்து அதிகாரிகளும், தீ அணைப்பு படையினரும் விரைந்து ஆவன செய்தனர்.

4. இவ்வண்டியில் வேகக் கட்டுப்பாடு பொருத்தப்பட்டு உள்ளது. அத்துடன் இப்பேருந்து அருகில் இருந்த தேனாம்பேட்டை பேருந்து நிறுத்தத்தில் நின்று பயணிகளை ஏற்றியபின் புறப்பட்டு சென்ற சிறிய தூரத்தில் இது நடந்துள்ளதால் வேகம் இவ்விபத்திற்கு காரணமாக இருக்காது என கருதப் படுகிறது. காவல் துறையினர் விசாரணை செய்து கொண்டிருக்கிறார்கள்.

5. இறந்தவர்கள் மற்றும் காயமுற்றவர்களின் பட்டியல் பின்வருமாறு :—

இறந்தே அரசினர் பொது மருத்துவ மனைக்குக் கொண்டு வரப்பட்டவர்கள் :

1. திரு. அலி (ஆண்), 34 வயது, சன்டல் வியாபாரம், தேனாம்பேட்டை சென்னை-18.

2. திரு. சடைச்சாமி (ஆண்), வயது 35, ஆள்வார் பேட்டை, சென்னை-18.

3. அடையாளம் காண முடியாத ஆண், வயது தோராயமாக 20.

இராயப்பேட்டை அரசினர் பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையின்போது 19—3—1982 அன்று இறந்தவர்.

4. திரு. தி. பாலகிருஷ்ணன் (ஆண்), வயது 45, கிழக்குத் தாம்பரம், சென்னை-45.

அரசினர் பொது மருத்துவமனையில் காயங்களுக்காக உள் நோயாளியாக சிகிச்சைபெற்று வருபவர்கள்.

5. திரு. நல்லன் (ஆண்), வயது 55, வள்ளிய தேனாம்பேட்டை, சென்னை-18.

6. திரு. நாகேந்திரன் (ஆண்), வயது 21, காசனித் தோட்டம், சென்னை.

7. செல்வி சசிகலா (பெண்), வயது 4 (திரு. சடைச்சாமியின் மகள்), ஆள்வார்பேட்டை, சென்னை-18.

8. திரு. சாமிநாதன் (ஆண்), வயது 35, தேனாம்பேட்டை, சென்னை-18.

காயங்களுக்காக இராயப்பேட்டை அரசினர் மருத்துவமனையில் உள் நோயாளியாக சிகிச்சை பெறுபவர்கள்.

9. திரு. வேலாயுதம் (ஆண்), வயது 31, மாம்பலம், சென்னை-17.

10. திரு. தங்கமணி (ஆண்), வயது 8, தேனாம்பேட்டை, சென்னை-18.

6. பேருந்து ஓட்டுனர் திரு. ஆர். குமார் பற்றிய விபரங்கள் —இவர் 22 வயதுடையவர். எஸ். எஸ். எல். சி. தேறியவர். 21—3—1981-ல்எல். ட்டி. வி. லைசன்ஸ் பெற்றவர். 22—9—1981-ல் எச்.ட்டி.வி. லைசன்ஸ் பெற்றவர்.

[illegible] சாலைப் போக்குவரத்து நிறுவனத்தில் ஆறு மாதங்கள் தீவிரப் பயிற்சியும், பல்லவன் போக்குவரத்து ஓட்டுநர் பயிற்சிப் பள்ளியில் 15 நாட்கள் பயிற்சியும் பெற்றவர். பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் அவருடைய பணியின் மொத்த காலம் 4½ மாதங்கள். அவர் கண்ட முதல் விபத்து 18—3—1982 அன்றுதான். இவர் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

7. இறந்தவர்களின் குடும்பத்திற்கும் காயமுற்றவர்களுக்கும் சட்டப்படி தக்க நிவாரணம் அளிக்கப்படும்.

இணைப்பு III

876) ஆம் பக்கத்தில் இனம் 3 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

நகராட்சி மற்றும் உள்ளாட்சிகளில் உள்ள இறைச்சிக்கூடங்கள் அவ்வவ் ஆணையாளர்களுக்கென வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களால் கண்காணிக் கப்படுகின்றன. ஊராட்சி ஒன்றியங்களில் ஊராட்சி ஒன்றிய ஆணையர் இறைச்சிக் கூடங்களை குத்தகைக்கு விடுகிறார்.

திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தின் கீழ் மாடப்பள்ளி பஞ்சாயத்தின் அனுமதியில் மாடப்பள்ளியில் ஆதி திராவிட குடியிருப்புக்கு அருகாமையில் ஒரு மாட்டுத் தொட்டி செயல்பட்டு வந்தது. அந்த மாட்டுத் தொட்டி திரு. துரைசாமி என்பவருக்கு 1981-82 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 810-க்கு குத்தகைக்கு பஞ்சாயத்தினரால் விடப்பட்டது. அந்த மாட்டுத் தொட்டியில் சில வியாபாரிகள் வாரம் ஒருமுறை 100 முதல் 120 எண்ணிக்கையுள்ள வயதான எருதுகள் மற்றும் உதவாத காளைகளை வெட்டி லாரி மூலம் வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்வதாகத் தெரிய வந்தது.

மாடப்பள்ளி கிராமவாசிகள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு [illegible] கொடுத்த புகாரின் பேரில் திருப்பத்தூர் கால்நடை மருத்துவ கால்நடை உதவி மருத்துவர் 10—9—1981-ல் மாடப்பள்ளி [illegible] சந்தித்து விசாரணை செய்தார்.

மேற்சொல்லப்பட்ட மாட்டுத் தொட்டி ஏலம் விட்டது குறித்தோ, கால்நடை உதவி மருத்துவர் அதை ஆய்வு செய்யப்பட வேண்டும் என்றோ எவ்வித தகவலும் திருப்பத்தூர் ஊராட்சி கால்நடை மருந்தகத்திலுள்ள கால்நடை உதவி மருத்துவருக்கு இதற்கு முன் கிடைக்கப் பெறாததால் இது பற்றி அவரால் எந்த ஆய்வும் முன்னால் செய்ய இயலவில்லை. மேலும், உதவாத கன்றுகளையும் வயதான எருதுகளையும் குறைந்த அளவே வெட்டுவதால் கால்நடைகளின் எண்ணிக்கை குறைவதற்கு சாத்தியக் கூறுகள் இல்லை எனத் தெரிகிறது.

1—10—1981-க்குப் பின் மாட்டுத் தொட்டி தாற்காலிகமாக மூடப்பட்டு விட்டது. அவ்விடத்தில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் சுற்றுச் சுவர் எழுப்பி ஆதி திராவிடர் குழந்தைகள் விளையாட்டு மைதான மாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

மாடப்பள்ளிக்கு அருகாமையில் உள்ள களரூர் என்ற இடத்தில் மிகவும் வயதான மற்றும் உபயோகமற்ற 60 முதல் 70 வரையிலான கால்நடைகள் கள்ளத்தனமாக 15 நாட்களுக்கு ஒரு முறை வெட்டப்படுவதாக தகவல் கிடைக்கப்பெற்றது. கால்நடைகள் வெட்டப்படுவதற்கு முன்னால் தென்னந் தோப்புகளில் நிறுத்தி வைக்கப்பட்டன. லாரிகள் வந்த விபரம் கிடைக்கப் பெற்றதும் மேற்கூறிய கால்நடைகள் வெட்டக்கூடிய இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு வெட்டி அவைகளை குளிர்பதன கட்டிகள் போட்டு லாரிகள் மூலம் பெங்களூர் மற்றும் கோலாரிற்கு எடுத்துச் செல்லப்பட்டன. திருப்பத் தூரிலுள்ள திரு. முனாப் சாகிப் என்பவர் மேற்கூறிய கள்ளத்தனமாக கால் நடைகளை வெட்டி வெளி மாநிலங்களுக்கு அனுப்புவதில் ஒரு முக்கியமான வியாபாரியாவார் எனத் தெரிய வருகிறது.

?10—3—1982 அன்று திருப்பத்தூர் கால்நடைப் பராமரிப்பு உதவி இயக்கு நர் மற்றும் வேலூர் கால்நடைப் பராமரிப்பு மண்டல இணை இயக்குநர் [illegible] ஆகியோர் சென்று, கள்ளத்தனமாக கால்நடைகள் வெட்டப் படும் இடத்தை ஆய்வு செய்தனர். அப்பொழுது அங்கு 47 கால்நடைகள் திருப்பத்தூரிலிருந்து 6 மைல் தொலைவில் உள்ள வெங்கலாபுரம் கிராம தென்னந்தோப்பில் இருந்ததை கண்டார்கள். அந்த தென்னந்தோப்பு திரு. நாகுல்லா பென்பாய் என்பவருக்கு சொந்தமானது.

வேலூரிலுள்ள கால்நடைப் பராமரிப்பு இணை இயக்குநர் இது குறித்து வட ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு 20—3—1982-ல் ஒரு கடிதம் எழுதி இம்மாதிரி கள்ளத்தனமாக கால்நடை வெட்டுவதில் தரமான கால்நடைகளும் வெட்ட வாய்ப்பு இருப்பதால் இக்கள்ளத்தன கால்நடை வெட்டுதலை உடனே நிறுத்துவதற்கு வேண்டிய ஆணைகளை பிறப்பிக்கும்படியும், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றிய ஆணையர்க்கு தேவையான உடனடியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஆணையிடும்படியும் கோரியுள்ளார். வட ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

இணைப்பு IV

[879 ஆம் பக்கத்தில் இனம் 5 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

L.A. BILL No. 62 OF 1981.

(As passed by the Assembly)

A Bill further to amend the Tamil Nadu General Sales Tax Act, 1959.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-third Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu General Sales Tax (Second Amendment) Act, 1982.

(2) It shall come into force on such date as the State Government may, by notification, appoint.

2. *Amendment of section 17, Tamil Nadu Act 1 of 1959.*—In section 17 of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act 1 of 1959) (hereinafter referred to as the principal Act), after sub-section (3), the following sub-section shall be added, namely :—

"(4) The Government may. in such circumstances and subject to such conditions as may be prescribed, by notification, remit the whole or any part of the tax or penalty or fee payable in respect of any period by any dealer under this Act.".

3. *Amendment of section 20, Tamil Nadu Act 1 of 1959.*—In section 20 of the principal Act, for sub-section (1), the following sub-sections shall be substituted, namely:—

"(1) Every dealer whose total turnover in any year is not less than thirty thousand rupees shall, and any other dealer or person intending to commence business may, get himself registered under this Act.

(1-A) Where a person intending to commence business is a minor or where a minor in herits an existing business or succeds a dealer, the certificate of registration shall be issued in the name of any guardian, trustee or agent of the minor carrying on business on behalf of and for the benefit of such minor."

4. *Amendment of section 21, Tamil Nadu Act 1 of 1959.*—In section 21 of the principal Act,—

(i) for sub-section (1), the following sub-sections shall be substituted, namely :—

"(1) An application for registration shall be made to such authority, in such manner and within such period as may be prescribed and shall be accompanied by a fee of ten rupees for the principal place of business, and in addition a further fee of five rupees in respect of each of his places of business other than the principal place of his business.

(1-A) Where it appears necessary to the authority to whom an application is made under sub-section (1) so to do for the proper realisation of the tax payable under this Act, it may, by order in writing and for reasons to be recorded therein, impose as a condition for the issue of a certificate of registration a requirement that the dealer shall furnish in the prescribed manner and within such time, as may be specified in the order, such security as may be specified for the aforesaid purpose :

Provided that the security shall not exceed one-half of the tax payable on the taxable turnover up to the end of the year as estimated by the applicant himself";

(ii) for sub-section (2), the following sub-section shall be substituted, namely:—

"(2) If the prescribed authority is satisfied that the application is in order and the condition, if any, imposed under sub-section (1-A) has been complied with, it shall register the applicant and grant to him a certificate of registration in the prescribed form specifying all his places of business with copies for each of his place of business other than the principal place of business.";

(iii) after sub-section (2-A), the following sub-sections shall be inserted, namely :—

" (2-B) Where it appears necessary to the authority granting a certificate of registration under this section so to do for the proper realisation of the tax payable under this Act it may, at any time while such certificate is in force, by an order in writing and for reasons to be recorded therein, require the dealer to whom the certificate has been granted, to furnish within such time as may be specified in the order and in the prescribed manner such security or, if the dealer has already furnished any security in pursuance of an order under this sub-section or sub-section (1-A) such additional security, as may be specified in the order for the aforesaid purpose.

(2-C) No dealer shall be required to furnish any security under sub-section (1-A) or any security or additional security under sub-section (2-B) by the authority referred to therein, unless he has been given an opportunity of being heard. The amount of security which a dealer may be required to furnish under sub-section (1-A) or sub-section (2-B) or the aggregate of the amount of such security and the amount of additional security which he may be required to furnish under sub-section (2-B) by the authority referred to therein, shall not exceed one-half of the tax payable, in accordance with the estimate of such authority, on the turnover of such dealer for the year in which such security or, as the case may be, additional security is required to be furnished.

(2-D) Where the security furnished by a dealer under sub-section (1-A) or sub-section (2-B) is in the form of a surety bond and the surety becomes insolvent or dies, the dealer shall, within thirty days of the occurrence of any of the aforesaid events, inform the authority granting the certificate of registration and shall within ninety days of such occurrence furnish a fresh surety bond or furnish in the prescribed manner other security for the amount of the bond.

(2-E) The authority granting the certificate of registration may by order and for good and sufficient cause forfeit the whole or any part of the security furnished by the dealer for realising any amount of tax or penalty payable by the dealer :

Provided that no order shall be passed under this sub-section without giving the dealer an opportunity of being heard.

(2-F) Where by reason of an order under sub-section (2-E), the security furnished by any dealer is rendered insufficient, he shall make up the deficiency in such manner and within such time as may be prescribed.

(2-G) The authority granting a certificate of registration may, on application by the dealer to whom it has been granted, order the refund of any amount or part thereof deposited by the dealer by way of security under this section or, where the security is furnished by the dealer in the form of a pledge, release the pledge, if it is not required for the purpose of this Act, or if in the course of three years the dealer proves himself to be prompt in payment of tax and above reproach in the conduct of his business ";

(iv) sub-section (3-A) shall be omitted ;

(v) for sub-section (5), the following sub-section shall be substituted, namely :—

" (5) The prescribed authority shall have power for good and sufficient reasons to cancel, modify or amend any certificate of registration granted by him. ".

5. *Amendment of section 24, Tamil Nadu Act 1 of 1959.*—In section 24 of the principal Act,—

(i) in sub-section (1), for the words " The tax assessed under this Act ", the words " The tax assessed or has become payable under this Act " shall be substituted.

(ii) in sub-section (2), for the words " Any tax assessed on ", the words " Any tax assessed on, or has become payable by, " shall be subtituted ;

(iii) in sub-section (3),—

(*a*) for the words " tax assessed ", the words " tax assessed or has become payable " shall be substituted;

(*b*) for the words " by way of penalty ", words " by way of interest " shall be substituted ;

(c) for the first and second provisos the following provisos shall be substituted, namely:—

" Provided that if the tax assessed or has become payable under this Act or any instalment thereof is less than one hundred rupees, no interest shall be levied for a period of one month after the expiry of the time specified in the notice of assessment or the order aforesaid :

Provided further that where a dealer or person has preferred an appeal or revision against any order of assessment under this Act, the interest payable under this sub-section, in respect of the amount in dispute in the appeal or revision, shall be postponed till the disposal of the appeal or revision, as the case may be, and shall be calculated on the amount that becomes due in accordance with the final order passed on the appeal or revision as if such amount had been the subject matter of the appeal or revision.

(iv) after sub-section (3), the following sub-section shall be added, namely :—

" (4) where the tax paid under this Act is found to be in excess on final assessment or revision of assessment, or as a result of an order passed in appeal, revision or review, the excess amount shall be refused to the dealer after adjustment of arrears of tax, if any, due from him. Where the excess amount is not refunded to the dealer within a priod of ninety days from the date of the order of assessment or revision of assessment or order passed in appeal, revision or review, the Government shall pay by way of interest, where the amount refundable is not less than one hundred rupees, a sum equal to a sum calculated at the rate of one per cent or part thereof of such amount for each month or part thereof after the expiry of the said period of ninety days.".

6. *Amendment of section 25, Tamil Nadu Act 1 of 1959*.—In section 25 of the principal Act,—

(i) in the marginal heading, for the word " penalty ", the words " penalty or interest " shall be substituted.

(ii) for the word " penalty ", the words " penalty or interest " shall be substituted.

7. *Amendment of section 32, Tamil Nadu Act 1 of 1959*.—In section 32 of the principal Act,—

(i) for sub-section (1), the following sub-section shall be substituted, namely :—

" (1) The Deputy Commissioner may of his own motion, call for and examine an order passed or proceeding recorded by the appropriate authority under section 4-A, section 12, section 12-A, section 14, section 15, or sub-sections (1) and (2) of section 16 and if such order or proceeding recorded is prejudicial to the interests of revenue, may make such inquiry or cause such inquiry to be made and, subject to the provisions of this Act, may initiate proceedings to revise modify or set aside such order or proceeding and may pass such order thereon as he thinks fit ";

(ii) in sub-section (2), for the expression " The Deputy Commissioner shall not pass any order under sub-section (1), if ", the expression " The Deputy Commissioner shall not intiate proceedings against any such other or proceeding referred to in sub-section (1), if " shall be substituted;

(iii) to sub-section (2), the following proviso shall be added; namely:—

" Provided that if the order passed or proceeding recorded by the appropriate authority referred to in sub-section (1) involves an issue on which the High Court has given its decision adverse to the revenue in any other proceedings, and an appeal to the Supreme Court against the order of the High Court is pending, the period of time between the date of the abovesaid order of the High Court and the date of the order of the Supreme Court shall be excluded in computing the period referred to in clause (c). ".

8. *Amendment of section 34, Tamil Nadu Act 1 of 1959*.—In section 34 of the principal Act,—

(i) in the marginal heading, for the words " Board of Revenue ", the words " Joint Commissioner of Commercial Taxes " shall be substituted;

(ii) for sub-section (1), the following sub-section shall be substituted, namely :—

" (1) The Joint Commissioner of Commercial Taxes may, of his own motion, call for and examine an order passed or proceeding recorded by the appropriate authority under section 4-A, section 12, section 12-A, section 14, section 15 or sub-section (1) or (2) of section 16 or an order passed by the Appellate Assistant Commissioner under sub-section (3) of section 31 or by the Deputy Commissioner under sub-section (3) of section 31-A or sub-section (1) of section 32 and if such order or proceeding recorded is prejudicial to the interests of revenue may make such inquiry or cause such inquiry to be made and, subject to the provisons of this Act, may initiate proceedings to revise, modify or set aside such order or proceeding and may pass such order thereon as he thinks fit. " ;

(iii) in sub-section (2), for the expression " The Board of Revenue shall not pass any order under sub-section (1) if ", the expression " The Joint Commissioner of Commercial Taxes shall not initiate proceedings against any such order or proceeding referred to in sub-section (1), if " shall be substituted ;

(iv) to sub-section (2), the following proviso shall be added, namely:—

" Provided that if the order passed or proceeding recorded by the appropriate authority, Appellate Assistant Commissioner or Deputy Commissioner referred to in sub-section (1) involves an issue on which the High Court has given its decision adverse to the revenue in any other proceedings, and an appeal to the Supreme Court against the order of the High Court is pending, the period of time between the date of the above said order of the High Court and the date of the order of the Supreme Court shall be excluded in computing the period referred to in clause (c) ";

(v) in sub-section (4), for the words " the Board of Revenue ", the words " the Joint Commissioner of Commercial Taxes " shall be substituted.

9. *Amendment of section 36, Tamil Nadu Act 1 of 1959.*—In section 36 of the principal Act, after sub-section (3), the following sub-section shall be inserted, namely:—

" (3-A) Within a period of sixty days from the date of receipt of notice that an appeal against the order passed by the Appellate Assistant Commissioner under sub-section (3) of section 31 or an order passed by the Deputy Commissioner under sub-section (3) of section 31-A or sub-section (1) of section 32 has been filed, any assessing authority or his representative appearing before the Appellate Tribunal may file an enhancement petition in the prescribed form and in the prescribed manner against the order of the Appellate Assistant Commissioner or the Deputy Commissioner as the case may be. The Appellate Tribunal may, after giving a reasonable opportunity to the appellant and the representative of the assessing authority of being heard pass such orders on the petition as it thinks fit:

" Provided that the Appellate Tribunal may admit an enhancement petition presented after the expiration of the said period if it is satisfied that the assessing authority or his representative had sufficient cause for not filing the enhancement petition within the said period"

I certify that this is a Money Bill.

Fort St. George,
Madras.
Date 31st March 1982.

K. RAJARAM,
Speaker,
Tamil Nadu Legislature Assembly.

இணைப்பு V

[905 ஆம் பக்கத்தில் இனம் 5 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

L.A. BILL No. 65 OF 1981.

(As passed by the Assembly.)

A Bill further to amend the Tamil Nadu Agricultural Pests and Diseases Act, 1919.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-third Year of the Republic of India as follows:—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Agricultural Pests and Diseases (Amendment) Act, 1982.

(2) It shall come into force on such date as the State Government may, by notification, appoint.

2. *Amendment of section* 2, *Tamil Nadu Act III of* 1919.—In section 2 of the Tamil Nadu Agricultural Pests and Diseases Act, 1919 (Tamil Nadu Act III of 1919) (hereinafter referred to as the Principal Act),—

(1) in the definitions of the terms "Insect pest", "Plant disease", "Noxious Weed" and "Notified area", for the word and figure "section 3". the words, figures and letter "section 3 or 8-A" shall be substituted;

(2) after the definition of the term "Occupier", the following shall be inserted, namely :—

"Company' means any body corporate and includes firm, society or other association of individuals".

3. *Amendment of section* 3, *Tamil Nadu Act III of* 1919.—In section 3 of the principal Act, in sub-section (1), in the opening paragraph, the words "in the Official Gazette" shall be omitted.

4. *Insertion of new section 8-A in Tamil Nadu Act III of* 1919.—After section 8 of the principal Act, the following section shall be inserted, namely:—

" 8-A. *Preventive or remedial measures in emergent cases.*—(1) Notwithstanding anything contained in sections 3 to 8, if the State Government are satisfied that any pest, disease or weed injurious to crops, plants or trees is prevalent or is likely to break out in any local area and that immediate preventive or remedial measures have to be taken, they may, by notification,—

(*a*) declare that such pest, disease or weed is an insect pest, a plant disease, or a notious weed;

(*b*) prescribe such preventive or remedial measures such as ground spraying or dusting as may be necessary in respect of such pest, disease or weed;

(*c*) prohibit or restrict the removal of any plant from one place to another;

(*d*) define the local area within which, and the period during which, such notification shall be in force; and

(*e*) declare that the State Government may cause the prescribed preventive or remedial measures to be carried out in the notified area.

(2) On the issue of a notification under sub-section (1), any inspecting officer appointed under section 19 may enter on any land or water within the notified area and carry out, or cause to be carried out under his supervision, the prescribed preventive or remedical measuries.

(3) Where any preventive or remedial measures are caried out under sub-section (1) or (2), the occupier shall be liable to pay to the State Government towards the cost of such measures, such amount (not exceeding the prescribed percentage of the cost aforesaid) as the inspecting officer may, by order in writing determine and the amount so determined shall be recoverable from the occupier as if it were an arrear of land revenue.

(4) In calculating the cost referred to in sub-section (3), the following shall be taken into account, namely :—

(*a*) the charges for labour material or use implements; and

(*b*) proportionate charges for any special establishment entertained for the purpose.

(5) (*a*) Any occupier may, within thirty days of the date of receipt of the order under sub-section (3), prefer an appeal against such order to the prescribed officer who may make such order as he thinks fit. The decision on such appeal shall be final :

Provided that no such appeal shall lie unless the amount determined under sub-section (3) has been paid.

(*b*) Where the amount paid by the occupier is in excess of the amount payable under any order made in such appeal, such excess shall be refunded to him.".

5. *Amendment of section* 9, *Tamil Nadu Act III of* 1919.—In section 9 of the principal Act,—

(1) for the heading, the following heading shall be substituted, namely :—

"Destruction of trees, plants or crops in execution of remedial or preventive measures and compensation therefor.":

(2) in sub-section (1),—

(*a*) in the opening paragraph, for the words figures and letter " section 5-A or 7 ", the words, figures and letters " section 5-A, 7 or 8-A " shall be substituted ;

(*b*) at the end of clause (*c*), the word " or " shall be inserted ;

(*c*) after clause (*c*), the following clause shall be inserted, namely:—

" (*d*) any crops which are infected with insect pests or plant disease ";

(*d*) in the concluding paragraph, for the words " trees and plants ", the words " trees' plants and crops " shall be substituted ;

(3) in sub-section (2),—

(*a*) for the words " any trees or plants are destroyed " the words " any trees, plants or crops are destroyed " shall be substituted ;

(*b*) before the proviso, the following shall be inserted, namely :—

" for crops destroyed under sub-section (1) (*d*)— their full value;";

(4) in sub-section (3), for the words " tree or plant ", the words " tree, plant or crop " shall be substituted.

6. *Amendment of section* 15, *Tamil Nadu Act III of* 1919.—In section 15 of the principal Act, for the word, figure, brackets and letter " section 3 (*b*) ", the words, brackets, letters and figures " clause (*b*) of sub-section (1) of section 3 or clause (*c*) of sub-section (1) of section 8-A " shall be substituted.

7. *Insertion of new section* 15-*A in Tamil Nadu Act III of* 1919.—After section 15 of the principal Act, the following section shall be inserted in Part II, namely:—

" 15-A. *Offences by companies*.—(1) Where an offence under this Act has been committed by a company, every person who, at the time the offence was committed, was in charge of, and

was responsible to, the company for the conduct of the business of the company as well as the company, shall be deemed to be guilty of the offence and shall be liable to be proceeded against and punished accordingly:

Provided that nothing contained in this sub-section shall render any such person liable to any punishment, if he proves that the offence was committed without his knowledge or that he had exercised all due diligence to prevent the commission of such offence.

(2) Notwithstanding anything contained in sub-section (1), where any such offence has been committed by a company and it is proved that the offence has been committed with the consent or connivance of, or is attributable to any neglect on the part of any director, Manager, Secretary or other officer of the company such director, manager, secretary or other officer shall be deemed to be guilty of that offence and shall also be liable to be proceeded against and punished accordingly.

Explanation.—For the purposes of this section, " director " in relation to—

(*a*) a firm, means a partner in the firm.

(*b*) a society or other association of individuals, means the person who is entrusted under the rules of the society or other association with the management of the affairs of the society or other association as the case may be."

8. *Amendment of section* 19, *Tamil Nadu Act III of* 1919.—In section 19 of the principal Act, for the words, figures and letter " sections 5, 5-A and 6 "; the words figures and letters "sections 5, 5-A, 6 and 8-A " shall be substituted.

9. *Amendment of section* 20, *Tamil Nadu Act III of* 1919.—In section 20 of the principal Act,—

(1) the words " in the Official Gazette ", shall be omitted;

(2) for the words and figures " sections 3 and 21 " the words figures and letter, " section 3, 8-A and 21 " shall be substituted.

10. *Amendment of section 21, Tamil Nadu Act III of 1919.*—In section 21 of the principal Act,—

(1) in the opening paragraph, the words "by notification in the Official Gazette" shall be omitted;

(2) in clause *(d)*, for the words "trees and plants", the words "trees plants and crops" shall be substituted.

(3) in clause *(f)*, after the words "appeals may be made" the words "and the fees to be paid for" shall be inserted.

11. *Addition of new section 22, in Tamil Nadu Act III of 1919.*—After section 21 of the principal Act the following section shall be added, namely—

"22. *Publication of rules, commencement of rules and notifications and placing them on the table of the Legislature.*—(1) *(a)* All rules made under this Act shall be published in the Tamil Nadu Government Gazette and, unless they are expressed to come into force on a particular day, shall come into force on the day on which they are so published.

(b) All notifications issued under this Act, shall, unless they are expressed to come into force on a particular day come into force on the day on which tey are published.

(2) Every rule made or notification issued under this Act shall as soon as possible after it is made or issued be placed on the table of both Houses of the Legislature and if before the expiry of the session in which it is so placed or the next session both Houses agree in making any modification in any such rule or notification or both Houses agree that the rule or notification should not be made or issued the rule or notification shall thereafter have effect only in such modified form or be of no effect as the case may be so however that any such modification or annulment shall be without prejudice to the validity of anything previously done under that rule or notification.

இணைப்பு VI

[929 ஆம் பக்கத்தில் இனம் 5 (3)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

L.A. BILL No. 66 OF 1981.

(As passed by the Assembly.)

A Bill further to amend the Tamil Nadu Urban Land (Ceiling and Regulation) Act, 1978.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-third Year of the Republic of India as follows:—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Urban Land (Ceiling and Regulation) Amendment Act, 1982.

(2) It shall come into force on such date as the State Government may by notification appoint.

2. *Amendment of section 20, Tamil Nadu Act 24 of 1978.*—In section 20 of the Tamil Nadu Urban Land (Ceiling and Regulation) Act, 1978 (Tamil Nadu Act 24 of 1978),—

(1) in sub-section (1),—

(a) in the opening portion, for the expression "sub-sections (2) and (3)" the expression "sub-sections (2), (3) and (4)" shall be substituted;

(b) to clause (v), after the proviso, the following proviso shall be added, namely:—

"Provided further that such land mortgage bank or housing co-operative society shall not transfer any such vacant land or part thereof by way of sale mortgage, lease, or otherwise to any person who already owns a dwelling unit or any vacant land which together with the land to be transferred by such bank or society would in the aggregate exceed the ceiling limit of such transferee;"

(c) to clause (vi), after the proviso, the following proviso shall be added, namely:—

"Provided further that the State Government may while approving such institution or club specify any condition as may be

considered necessary in such general or special order and the vacant land held by such instiution or club shall, be exempt only so long as such condition is complied with ";

(2) after sub-section (3), the following sub-section shall be added, namely:—

" (4) Notwithstanding anything contained in any law for the time being in force,—

(*a*) no authority, institution or organsatiion referred to in clauses (vi) to (x) of sub-section (1) holding any vacant land in excess of the extent of land which excess land such authority, institution or organisation would not have been entitled to hold but for the exemption under this section shall transfer any such excess land or part thereof by way of sale mortgage gift lease or otherwise and any transfer of such excess land or part thereof in contravention of the provisions of this clause shall be null and void;

(*b*) if, at any time, the land held by such authority, institution or organisation referred to in clauses (vi) to (x) of sub-section (1) ceases to be required and used for the respective purpose or purposes referred to therein, the provisions of this Act shall, with immediate effect, apply to such land and accordingly any vacant land in excess of the extent of land which excess land such authority, institution or organisation would not have been entitled to hold but for the exemption under the said clauses (vi) to (x). shall be acquired by the Government in accordance with the provisions of this Chapter.

Provided that the expression " commencement of this Act" in this Chapter shall be construed as the date on which the land ceases to be required and used for the respective purpose or purposes referred to in the said clauses (iv) to (x) ".

INDEX TO

TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES.

SIXTY-FIRST SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

25th, 27th, 29th, 30th March and 2nd April 1982.

VOLUME CLXXXVIII (Nos. 1 TO 5).

A

Pages.

ACCIDENTS—

Bus accident at Teynampet, Madras, near S.I.E.T. College, on 18th March 1982, Minister's attention called to .. .. 874—875

Question *re* Road—, number of buses of Transport Corporations involved in—from 1977 and standing of drivers thereof .. .. 869—871

ADI DRAVIDAR—

Attack on—in Konalam village, North Arcot district over the issue of burial of corpse of—woman, Minister's attention called to .. .. .. 750—752

ADMINISTRATION OF JAILS IN TAMIL NADU—

Policy Note on—, laid on the table 697

AGRICULTURAL PESTS AND DISEASES (AMENDMENT) BILL, 1982—

See Bills.

AGRO INDUSTRIES CORPORATION LIMITED, TAMIL NADU—

Government's review on working of—for 1979-80 and Fourteenth Annual Report, laid on the table .. 697

ANANDAM, Thiru V. V. V.—

Adi Dravidar, calling Minister's attention to attack on —in Konalam village, North Arcot district, over the issue of burial of corpse of Adi Dravidar woman 750, 752

Pages.

A—*cont.*

ANIMAL HUSBANDRY—
Policy Note on—, laid on the table 697

ANIMAL HUSBANDRY DEPARTMENT—
Performance Budget for—, 1982-83, laid on the table .. 697

APPRENTICE TEACHERS SCHEME—
See Teachers.

APPROPRIATION BILL, 1982—
See Bills.

APPROPRIATION (No. 2) BILL, 1982—
See Bills.

ARANGANAYAGAM, The Hon. Thiru C.—
Dhanmul Sowcar Jain High School, Thiruvannamalai, statement *re* non-sanction of posts of teachers to 26, 27, 28
Mid-day Meals, statement *re* stoppage of supply of—to children of Panchayat Union School, Sanarpatti and non-payment of subsidy for—to aided schools in Aruppukkottai Municipal area 748, 749

ARASAN COTTON MILLS, TUTICORIN—
Minister's attention called to relay fast by workers of—protesting against their non-registration .. .. 28—29

ARUMUGAM, Thiru S.—
Policy Note on—
Community Development and Municipal Administration, discussion on .. .. 614—633, 639, 640, 641, 645, 663, 681—682, 683, 684, 688
Industrial Policy and Programmes, discussion on .. 60, 61, 131
Labour in Tamil Nadu, discussion on 454, 457

Pages.

A—*cont.*

ARUNACHALAM, Thiru K.—
Policy Note on Community Development and Municipal Administration, discussion on .. .. .. 607—614

ASSISTANT EDUCATIONAL OFFICERS—
Question *re* number of—working as on 1st December 1981 and wing-wise break-up figures .. 872

ASSURANCES COMMITTEE—
See Committees.

B

BACKWARD CLASSES—
Question *re* Tamil Pandits in—Department, number threatened with demotion as Secondary Grade Assistants .. .. 723—725

BHARATHIAR—
Question *re* production of film about life of .. .. 849—851

BHOODAN YAGNA ACT, 1958—
Declaration of Karuppanoothu, hamlet of Vadakku Achampatti village in Sankarankoil taluk, Tirunelveli district as Gramdhan Village, notification laid on the table 959

BILLS—
Agricultural Pests and Diseases (Amendment) Bill, 1982—
Considered and passed .. .. 905—928
Message from the Assembly *re* .. .. .. 873—874
Message from the Governor *re* 873

Appropriation Bill, 1982—
Considered and returned to Assembly 755
Message from the Assembly *re* 745
Message from the Governor *re* 745

Pages

B—*cont.*

BILLS—*cont.*

Appropriation (No. 2) Bill, 1982—
Considered and returned to Assembly 756
Message from the Assembly *re* 745
Message from the Governor *re* 745

Coimbatore City Municipal Corporation (Amendment) Bill, 1982—
Considered and passed .. .. 694—695
Message from the Assembly *re* 593

Co-operative Societies Bill, 1980, Report of Select Committee on, laid on the table 837

General Sales Tax (Second Amendment) Bill, 1982—
Considered and returned to Assembly .. .. 878—905
Message from the Assembly *re* 873

Madras City Municipal Corporation (Amendment) Bill, 1982—
Considered and passed .. .. 695—696
Message from the Assembly *re* 593

Municipal Councils (Appointment of Special Officers) Amendment Bill, 1982—
Considered and passed .. .. 693—694
Message from the Assembly *re* 592

Urban Land (Ceiling and Regulation) Amendment Bill, 1982—
Considered and passed .. .. 928—958
Message from the Assembly *re* .. .. .. 873—874
Message from the Governor *re* 873

Pages

B—*cont.*

BILLS—*cont.*

BILLS, AS PASSED BY THE ASSEMBLY, LAID ON THE TABLE—
Agricultural Pests and Diseases (Amendment) Bill, 1982 959
Appropriation Bill, 1982 698
Appropriation (No. 2) Bill, 1982 837
Coimbatore City Municipal Corporation (Amendment) Bill, 1982 698
General Sales Tax (Second Amendment) Bill, 1982 .. 959
Madras City Municipal Corporation (Amendment) Bill, 1982 698
Municipal Councils (Appointment of Special Officers) Amendment Bill, 1982 698
Urban Land (Ceiling and Regulation) Amendment Bill, 1982 960

BONDED LABOURERS—
Question *re* number of—assigned lands for cultivation and number of—engaged in direct cultivation .. 872—873

BURNING OF WOMEN—
Question *re* woman burnt alive in Thatharpatti village in Salem district during September 1980, steps to prevent such atrocities .. .. 364—365

BUSINESS ADVISORY COMMITTEE—
See Committees.

C

CATTLE—
Slaughter of bulls and cows in Kalavur near Madappalli in Thiruppathur Panchayat Union, North Arcot district and transport to adjoining States, Minister's attention called to .. .. 875—877

CEMENT—
Question *re* number of applications for—permits pending before Tahsildar, Tindivanam as on 1st March 1981 .. .. 742—744

C—*cont.*

CHAIRMAN, Mr.—

Announcement *re*—

Business Advisory Committee's decision .. .. .. 21—22

Committees. Business Advisory Committee for 1982-83, nomination of Members to 373

Message from the Assembly *re*—

Agricultural Pests and Diseases (Amendment) Bill, 1982 .. .. 873—874

Coimbatore City Municipal Corporation (Amendment) Bill, 1982 593

General Sales Tax (Second Amendment) Bill, 1982 .. 873

Madras City Municipal Corporation (Amendment) Bill, 1982 593

Municipal Councils (Appointment of Special Officers) Amendment Bill, 1982 592

Urban Land (Ceiling and Regulation) Amendment Bill, 1982 .. .. 873—874

Message from the Governor *re*—

Agricultural Pests and Diseases (Amendment) Bill, 1982 873

Urban Land (Ceiling and Regulation) Amendment Bill, 1982 873

Bills—

Appropriation (No. 2) Bill, 1982 .. .. 764, 768, 769, 773, 774, 779, 780, 784, 785, 816

General Sales Tax (Second Amendment) Bill, 1982 .. 878, 879, 880, 883, 904—905

C—*cont.*

CHAIRMAN, Mr.—*cont.*

Policy Note on—

Community Development and Municipal Administration, discussion on 597, 598

Industrial Policy and Programmes, discussion on .. 30

Labour in Tamil Nadu, discussion on 376

Privilege issue *re* statement of Minister for Health *re* selection to M.S. (Ortho.) Course during discussion on Governor's Address .. .. 22—25

Rules Committee, nomination of Members to .. 592

CHICKEN-POX—

Widespread prevalence of—among children in Thanjavur district and death of 15 children in Alathur village of Thirumarugal Panchayat Union over a period of one week, Minister's attention called to .. 593—595

COIMBATORE CITY MUNICIPAL CORPORATION (AMENDMENT) BILL, 1982—

See Bills.

COMMISSION OF ENQUIRY ACT—

Ninth and Final Report of One Man Commission (Justice Thiru N. S. Ramaswamy, B.A., B.L., Retired Judge of Madras High Court) to enquire into excesses committed during pre-Emergency period between 1st January and 31st January 1976, laid on the table 960

COMMITTEE ON DELEGATED LEGISLATION—

See Committees.

COMMITTEES—

Assurances Committee—

Nomination of Members to 745

Presentation of 36th Report of 754

Thirty-sixth Report of—, laid on the table .. 837

Pages.

C—*cont.*

COMMITTEES—*cont.*

Business Advisory Committee—

Decision of .. .. 21—22

Nomination of Members to 373

Committee on Delegated Legislation of the Assembly, nomination of Council Members to serve on .. 753—754

Committee on Delegated Legislation, Second Report of—on action taken by Government on Committee's recommendations, laid on the table 697

Estimates Committee—

Eleventh Report of—on action taken by Government on recommendations contained in Report on Compensation and Assignments to Local Bodies and Panchayat Raj Institutions (1980-82), laid on the table 483

Nomination of Council Members to serve on .. 753

Thirteenth Report, laid on the table 960

Thirteenth Report on Forest Department, laid on the table 960

Twelfth Report of—on action taken by Government on observation contained in Report on Civil Supplies (Part II), laid on the table 837

House Committee, election|nomination of Members to. 747

Privileges Committee, election of Members to .. 746

Public Accounts Committee—

Fourteenth Report on report of Comptroller and Departments on Accounts of Government of Tamil Nadu for 1976-77 and Report (Civil) of Comptroller and Auditor-General of India for 1976-77 (Part I), laid on the table .. 960

Fourteenth Report on Report of Comptroller and Auditor-General of India for 1976-77 (Revenue Receipts) (Part II), laid on the table 960

Nomination of Council Members to serve on 752

PAGES.

C—*cont.*

COMMITTEES—*cont.*

Public Accounts Committee—*cont.*

Thirteenth Report on action taken by Government on recommendations contained in First Report of Committee on Public Accounts (1977-78) on Report of Comptroller and Auditor-General of India for 1972-73 (Revenue Receipts) (Part II), laid on the table 960

Twelfth Report on the Report of Comptroller and Auditor-General of India for 1976-77 (Revenue Receipts) (Part I), laid on the table 960

Public Undertakings Committee—

Nineteenth Report on paragraphs pertaining to Housing Board in Reports (Civil) of Comptroller and Auditor-General of India for 1974-75 and 1975-76, laid on the table .. 960

Nomination of Council Members to serve on 754

Rules Committee, nomination of Members to .. 592

COMMUNITY DEVELOPMENT—

Performance Budget, 1982-83, laid on the table 153

Policy Note on—and Municipal Administration, Discussion on .... 597—692

Laid on the table 153

D

DAMODARAN, Thiru A. R.—

Bills—

Agricultural Pests and Diseases (Amendment) Bill, 1982 .. .. 908—909, 917

General Sales Tax (Second Amendment) Bill, 1982. 886—892, 899, 902

PAGES.

D—*cont.*

DAMODARAN, Thiru A.R.—*cont.*

Bills—*cont.*

Urban Land (Ceiling and Regulation) Amendment Bill, 1982 .. .. 929, 930—931, 939—942, 956, 958

Policy Note on—

Industrial Policy and Programmes, discussion on .. 30, 45—56, 63, 82, 131

Labour in Tamil Nadu, discussion on .. .. 410—418

Small Savings, calling Minister's attention to alleged compulsion and coercive attitude adopted by Government Departments in collection of—from merchants and traders in Tiruchirappalli district .. .. 373—378

DENATURED SPIRIT, METHYL ALCOHOL AND VARNISH (FRENCH POLISH) RULES, 1959—

Amendments to—, notification laid on the table .. 959

DEPUTY CHAIRMAN, Mr.—

Announcement *re*—

Message from the Assembly *re*—

Appropriation Bill, 1982 745

Appropriation (No. 2) Bill, 1982 745

Message from the Governor *re*—

Appropriation Bill, 1982 745

Appropriation (No. 2) Bill, 1982 745

Assurances Committee, nomination of Members to .. 745

Bills—

Agricultural Pests and Diseases (Amendment) Bill, 1982 .. .. 905, 917, 923, 928

Pages.

D—*cont.*

DEPUTY CHAIRMAN, Mr.—*cont.*

Bills—*cont.*

Appropriation (No. 2) Bill, 1982 .. .. .. 761, 763, 807, 810

Urban Land (Ceiling and Regulation) Amendment Bill, 1982 .. .. 929, 930, 931, 957, 958

House Committee, election of Members to 747

Policy Note on—

Community Development and Municipal Administration, discussion on 635, 641, 670, 688

Industrial Policy and Programmes, discussion on .. 66, 131, 132

Privileges Committee, election of Members to 746

DEPUTY INSPECTORS OF SCHOOLS—

Question *re* number of incumbents continuing in the same station for more than three years as on 1st July 1981 872

DOSS, Thiru A. J.—

Bill—Agricultural Pests and Diseases (Amendment) Bill, 1982 924

Policy Note on Industrial Policy and Programmes, discussion on .. .. 71—73

DRAWING MASTERS—

See Teachers.

Pages.

E

ERADHA, Thiru S. R.—

Bill—Urban Land (Ceiling and Regulation) Amendment Bill, 1982 .. .. 935—939, 943—944, 945

Policy Note on—

Community Development and Municipal Administration, discussion on .. .. 619, 633—649

Industrial Policy and Programmes, discussion on .. 56—71, 72, 92, 93, 97, 98

Labour in Tamil Nadu, discussion on 407, 444, 455

ESTIMATES COMMITTEE—

See Committees.

F

FIRE SERVICE DEPARTMENT—

Review of—1981-82, laid on the table 483

G

GENERAL SALES TAX RULES, 1959—

Amendment to—, notification laid on the table .. 696

GENERAL SALES TAX (SECOND AMENDMENT) BILL, 1982—

See Bills.

GOMATHI SRINIVASAN, The Hon. Thirumathi—

Slaughter of bulls cows in Kalavur near Madappalli in Thiruppathur Panchayat Union, North Arcot District and transport to adjoining States, statement *re* .. .. 876—877

Pages.

G—*cont*

GOVERNMENT SCHOOL TEACHERS GENERAL TRANSFER COMMITTEE—

Question *re* representation from Tamil Nadu Graduate Teachers Association to include representatives of Teachers Association in .. .. 10—16

GOVERNMENT SERVANTS—

Question *re* payment of Rs. 10,000 to—and teachers on their retirement, report of Committee to consider. 725—729

H

HANDE, The Hon. Dr. H. V.—

Bills—

Appropriation (No. 2) Bill, 1982 806

Urban Land (Ceiling and Regulation) Amendment Bill, 1982 948

Chicken-pox, statement *re* widespread prevalence among children in Thanjavur district and death of 15 children in Alathur village of Thirumarugal Panchayat Union over a period of one week .. 593, 594, 595

Policy Note on Community Development and Municipal Administration, discussion on 666, 669

Stanley Hospital, Madras, statement *re* hardship caused to patients owing to non-availability of X-ray film in for over three months 595, 596, 597

HANDLOOMS AND TEXTILES—

Performance Budget, 1982-83, laid on the table .. 837

Policy and Programmes of—1982-83, laid on the table. 837

HARIJANS—

Question *re* attack on—of Keelacheluvavoor in Mudukulathur taluk, Ramanathapuram district, by Caste Hindus and other incidents in connection with it. 4—6

Pages.

H—*cont.*

HEAVY TRANSPORT VEHICLES—

Question *re* fitting of speed control equipment in .. 865—869

HIGHWAYS DEPARTMENT—

Question *re*—

Engineers of—with post-graduate qualification, representation *re* grant of special pay and preference in promotion .. .. 579—581

Extension of concessions granted in G.O. Ms. No. 632, Public Works, dated the 14th May 1974 to Engineers of—who acquired higher qualifications prior to 14th May 1974 .. .. 579—581

Non-filling up of vacancies of Superintending Engineers in 584

HOMOEOPATHY—

Question *re* introduction of degree course in .. .. 863—865

HOSPITALS AND DISPENSARIES—

Question *re* number, district-wise, of Panchayat Union dispensaries functioning without Medical Officer for more than a year .. .. 587—591

Stanley Hospital, Madras, Minister's attention called to hardship caused to patients owing to non-availability of X-ray film in—for over three months .. 595—597

HOUSE COMMITTEE—

See Committees.

I

INDUSTRIAL POLICY AND PROGRAMMES—

Discussion on Policy Note on .. .. .. 29—152

Pages.

J

JANARTHANAM, Dr. T. R.—

Bills—

Agricultural Pests and Diseases (Amendment) Bill, 1982 920

Urban Land (Ceiling and Regulation) Amendment Bill, 1982 947

Policy Note on—

Industrial Policy and Programmes, discussion on .. 43, 71, 100

Labour in Tamil Nadu, discussion on 387, 409, 430, 431, 438, 444, 455

JEPPIAAR, Thiru—

Policy Note on—

Industrial Policy and Programmes, discussion on .. 92, 100

Labour in Tamil Nadu, discussion on 449, 455

K

KADUVETTI KANNAPPAN, Thiru—

Policy Note on Labour in Tamil Nadu, discussion on. 380—386, 387—389, 454

KALIMUTHU, The Hon. Dr. K.—

Bill—Agricultural Pests and Diseases (Amendment) Bill, 1982 .. .. 905, 914—917, 922—923, 926—927, 928

Pages.

K—*cont.*

KOLANDAIVELU, The Hon. Thiru P.—

Bills—

Coimbatore City Municipal Corporation (Amendment) Bill, 1982 .. .. 694, 695

Madras City Municipal Corporation (Amendment) Bill, 1982 .. .. 695, 696

Municipal Councils (Appointment of Special Officers) Amendment Bill, 1982 693

Policy Note on Community Development and Municipal Administration, discussion on .. .. .. 598, 617, 618, 623, 626, 640, 653—654, 672—692

Resolution *re* Tiruttani Town Panchayat in Tiruttani Panchayat Union in Chengalpattu district, declaration of area covered by—as township 877

KRISHNASWAMY, The Hon. Thiru K. A.—

Policy Note on Industrial Policy and Programmes, discussion on .. .. 99, 102, 106—124

L

LABOUR—

Policy Note on—in Tamil Nadu, discussion on .. 376—482

LAKSHMIKANDHAN, Thiru C. R.—

Assurance Committee, presentation of 30th Report of. 754

Bill—Appropriation (No. 2) Bill, 1982 .. .. .. 768—775

Policy Note on—

Community Development and Municipal Administration, discussion on .. .. 598—607, 677, 692

Labour in Tamil Nadu, discussion on .. .. 418—424

Slaughter of bulls and cows in Kolarur near Madappalli in Thiruppathur Panchayat Union, North Arcot District and transport to adjoining States, calling Minister's attention to 875, 876, 877

Pages.

L—*cont.*

LAKSHMIKANDHAN, Thiru C. R.—*cont.*

Thanmul Sowcar Jain High School, Thiruvannamalai, calling Minister's attention to non-sanction of posts of teachers to 26, 27

LOANS AND ADVANCES—

Demand No. 56—Policy Note on—by State Government, laid on the table 837

M

M.S. (ORTHO)—

Privilege issue *re* statement of Minister for Health *re* selection to—course during discussion on Governor's Address .. .. 22—25

MADRAS CITY MUNICIPAL CORPORATION (AMENDMENT) BILL, 1982—

See Bills.

MATTER OF URGENT PUBLIC IMPORTANCE—

Adi-Dravidar, calling attention to attack on—on Konalam village, North Arcot district over the issue of burial of corpse of Adi Dravida woman .. 750—752

Arasan Cotton Mills, Tuticorin, calling attention to relay fast by workers of—protesting against their non-registration .. .. 28—29

Bus accident at Teynampet, near S.I.E.T. College on 18th March 1982, calling attention to .. .. 874—875

Chicken-pox, in Thanjavur district, calling attention to —and death of 15 children in Alathur village of Thirumarugal Panchayat Union over a period of one week .. .. 593—595

Midday Meals, calling attention to stoppage of supply of—to children of Panchayat Union School, Sanarpatti and non-payment of subsidy for—to aided schools in Aruppakkottai Municipal area .. 748—749

Pages.

M—*cont.*

MATTER OF URGENT PUBLIC IMPORTANCE—*cont.*

Slaughter of bulls and cows in Kolarur near Madappalli in Thiruppathur Panchayat Union, North Arcot District and transport to adjoining States, calling attention to .. .. 875—877

Small Savings, calling attention to alleged compulsion and coercive attitude adopted by Government Departments in Tiruchirappalli district in collection of—from merchants and traders .. .. 373—375

Stanley Hospital, Madras, calling attention to hardship caused to patients owing to non-availability of X-ray film in .. .. 595—597

Thanmul Sowcar Jain High School, Thiruvannamalai, calling attention to non-sanction of posts of teachers to .. .. 26—28

M.B.B.S. COURSE—

Question *re* delay in publishing list of candidates selected for .. .. 858—863

MEDICAL OFFICERS—

Question *re* grant of risk allowance to—working in Leprosy wing of institutions under control of Director of Medical Education on a par with those working in institutions under control of Director of Public Health and Preventive Medicine .. .. 584—587

MEENAKSHISUNDARAM, Thiru K.—

Bill—Appropriation (No. 2) Bill, 1982 .. .. .. 761, 762—768, 835

Chicken-pox, widespread prevalence among children in Thanjavur district and death of 15 children in Alathur village of Thirumarugal Panchayat Union over a period of one week, calling Minister's attention to. 593, 594

Policy Note on Labour in Tamil Nadu, discussion on. 376—380

Pages.

M—*Cont.*

MEMBERS OF LEGISLATURE—

Returns of Assets of certain Members of Legislative Council, as on 30th June 1980 and 31st March 1981, laid on the table 483

MESSAGE FROM THE ASSEMBLY—

See Bills

MESSAGE FROM THE GOVERNOR—

See Bills

MIDDAY MEALS—

Stoppage of supply of—to children of Panchayat Union School, Sanarpatti and non-payment of subsidy for—to aided schools in Aruppukkottai Municipal area, Minister's attention called to .. 748—749

MIAKHAN, Thiru J.M.—

Policy Note on Industrial Policy and programmes, discussion on .. .. 37—45

MOTOR VEHICLES ACT(S)—

Policy Note on—Administration, 1982-83, laid on the table 483

MOTOR VEHICLES TAX—

Exemption of vehicles belonging to Fish Farmers Development Agency and Small Farmers Development Agency from—notification laid on the table 482—483

MUNICIPAL ADMINISTRATION—

Policy Note on Community Development and—, discussion on .. .. 597—692

Policy Note on Community Development and—, 1982-83, laid on the table 153

Pages

M—*cont.*

MUNICIPAL COUNCILS (APPOINTMENT OF SPECIAL OFFICERS) AMENDMENT BILL, 1982.—

See Bills

MUTHIAH CHETTIAR, Dr. M. A.—

Policy Note on Industrial Policy and Programmes, discussion on .. .. 12[illegible]

MUTHUSWAMY, Thiru S.—

Bill—Appropriation (No.2) Bill, 1982 756—76[illegible]

Policy Note on Industrial Policy and Programmes, discussion on .. .. 74—79

MUTHUSWAMY, The Hon. Thiru S.—

Bus accident at Teynampet near S.I.E.T. College on 18—3—1982, statement *re* .. .. 874—875

N

NALLASIVAN, Thiru A.—

Arasan Cotton Mills, Tuticorin, calling Minister's attention to relay fast by workers of—protesting against their non-registration 28

Bill—Appropriation (No.) Bill, 1982 .. .. 775—786, 824, 826

Bus accident at Teynampet near S.I.E.T., College on 18—3—1982, calling Minister's attention to 874—875

Policy Note on Labour in Tamil Nadu, discussion on .. .. 390—408, 409—410

NEDUNCHEZHIYAN, The Hon. Dr. V. R.—

Bills—

Appropriation Bill, 1982 755

Appropriation (No.2) Bill, 1982 .. .. 756, 810—836

Small Savings, statement *re* alleged compulsion and coercive attitude adopted by Government Departments in collection of—from merchants and traders in Tiruchirappalli District .. .. 373—375

Pages

O

ONE MAN COMMISSION—

Eighth Interim Report of Justice Thiru N.S. Ramaswami, B.A., B.L., Retired Judge of Madras High Court,—appointed to inquire into Excesses committed during Pre—Emergency period between 1—1—1972 to 31—1—1976, laid on the table .. 153

P

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—

Agro-Industries Corporation Limited, Tamil Nadu—Government's review on working of—for 1979-80 and Fourteenth Annual Report 697

Animal Husbandry Department—

Performance Budget, 1982-1983 697

Answers to Unstarred Questions—

Nos. 5 to 8 960

Bill—Co-operative Societies Bill, 1980, Report of Select Committee on 837

Bills, as passed by the Assembly—

Agricultural Pests and Diseases (Amendment) Bill, 1982 959

Appropriation Bill, 1982 698

Appropriation (No.2) Bill, 1982 837

Coimbatore City Municipal Corporation (Amendment) Bill, 1982 698

General Sales Tax (Second Amendment) Bill, 1982 959

Madras City Municipal Corporation (Amendment) Bill, 1982 698

Municipal Councils (Appointment of Special Officers) Amendment Bill, 1982 698

Urban Land (Ceiling and Regulation) (Amendment) Bill, 1982 960

Pages.

P—*cont.*

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—*cont.*

Bhoodan Yagna Act. 1958—

Declaration of Karuppanoothu, hamlet of Vadakku Achampatti Village in Sankarankoil taluk, Tirunelveli District as Gramdhan Village (G.O.Ms.No.46, Rural Development and Local Administration, dated 12th January 1982) .. 959

Committees—

Assurances Committee, Thirty-sixth Report of 837

Committee on Delegated Legislation, Second Report on action taken by Government on Committee's recommendations .. 697

Estimates Committee, Eleventh Report on recommendations contained in Report on compensation and Assignments to Local Bodies and Panchayat Raj Institutions 483

Estimates Committee, Thirteenth Report on Forest Department 960

Estimates Committee, Twelfth Report of—on action taken by Government on observation contained in Report on Civil Supplies (Part II) 837

Public Accounts Committee, Fifteenth Report on paragraphs pertaining to certain departments on Accounts of Government of Tamil Nadu for 1976-77 and Report (Civil) of Comptroller and Auditor-General of India for 1976-77 (Part I) 960

Public Accounts Committee, Fourteenth Report on Report of Comptroller and Auditor-General of India for 1976-77 (Revenue Receipt (Part II) 960

Public Accounts Committee, Thirteenth Report on action taken by Government on recommendations contained in First Report of Committee on Public Accounts (1977-1978) on Report of Comptroller and Auditor-General of India for 1972-1973 (Revenue Receipts) (Part II) 960

Pages.

P—*cont*

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—*cont.*

Committees—*cont.*

Public Accounts Committee, Twelfth Report on the Report of Comptroller and Auditor-General of India for 1976-1977 (Revenue Receipt) (Part I) 960

Public Undertakings Committee, Nineteenth Report on paragraphs pertaining to Housing Board in Reports (Civil) of Comptroller and Auditor General of India for 1974-75 and 1975-1976 960

Community Development—

Performance Budget, 1982-1983 153

Demand No. 42—Policy Note on Pensions and other Retirement Benefits 837

Demand No. 55—Capital Outlay on Public Works, Sanitation and Water Supply, 1982-83, supplement to 697

Demand No. 56—Policy Note on Loans and Advances by State Government 837

Denatured Spirit Methyl Alcohol and Varnish (French Polish) Rules, 1959, amendments to—, (G.O. Ms. No. 28, Prohibition and Excise, dated 12th May 1981) 959

Fire Service Department, review of—,1981-82 .. 483

General Sales Tax Rules, 1959, amendment to—, (G.O. Ms. No. 1350, Commercial Taxes and Religious Endowments, dated 11th December 1981) .. 696

Handlooms and Textiles—

Performance Budget, 1982-83 837

Policy and Programme of—1982-83 837

Motor Vehicles Tax—

Exemption of Vehicles belonging to Fish Farmers Development Agency and Small Farmers Development Agency from—(G.O. Ms. No. 2998, Home (Tr. I), dated 17th December 1981) .. .. 482—483

P—*cont.*

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—*Cont.*

Municipal Administration—

Policy Note on Community Development and—, 1982-83 153

One Man Commission—

Eight Interim Report of Justice Thiru N.S. Ramaswami, B.A., B.L., Retired Judge of Madras High Court, appointed to inquire into Excesses committed during pre-emergency period between 1st January 1972 and 31st January 1976 153

One Man Commission, Ninth and Final Report to enquire into excess committed during pre-emergency period between 1st January and 31st January 1976 by Justice Thiru N. S. Ramaswamy, B.A., B.L., Retired Judge of Madras High Court 960

Policy Note on—

Administration of Jails in Tamil Nadu 697

Animal Husbandry 697

Community Development and Municipal Administration, 1982-83 153

Miscellaneous Relief and Rehabilitation of India Overseas and Refugees and Evacuees 837

Motor Vehicles Acts—Administration, 1982-83 483

Port Department—

Performance Budget on Tamil Nadu—, 1982-83 .. 153

Rehabilitation Department, Performance Budget, 1982-83 837

Returns of Assets of certain Members of Legislative Council as on 30th June 1980 and 31st March 1981. 483

Pages.

P—*cont.*

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—*cont.*

Shipping—

Note on Review of performance of Transport and—Corporations, 1982-83 153

Policy Note on Road Transport Services and—, and Capital Outlay on Road Transport Services and—, 1982-83, ... 153

Tamil Nadu Khadi and Village Industries Board, Annual Accounts for 1971-72 483

Tamil Nadu Industrial Development Corporation Limited, Annual Report and Accounts of Cements Corporation Limited for 1980-81 .. 959

Tamil Nadu Meat Corporation Limited, Progress Review Report for 1981-82 697

Tamil Nadu Poultry Development Corporation Limited, "Activities of—" 1981-82, corrections to Tamil Copies of 697

"Activities of—", 1982-83 .. 697

Sixth Annual Report for 1978-79 697

Tax on Luxuries in Hotels and Lodging Houses Rules, 1981, amendfent to—(G.O. Ms. No. 139, Commercial Taxes and Religious Endowments, dated 3rd February 1982) 595

Town and Country Planning Act, 1971—

Approval of Detailed Development Plan for Karneeswarapuram (G.O. Ms. No. 1437, Housing and Urban Development, dated 30th October 1980) 152

Approval of Detailed Development Plan for Mylapore-Santhome Area Map No. 4 (G.O. Ms. No. 1423, Housing and Urban Development, dated 27th October 1980) .. 152

Approval of Detailed Development Plan for Nandanam area (G.O. Ms. No. 1362, Housing and Urban Development, dated 17th October 1980) 152

Pages.

P—*cont.*

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—*cont.*

Transport—

Note on Review of Performance of—and Shipping Corporations, 1982-83 153

Policy Note on Road—Services and Shipping and Capital Outlay on Road—Services and Shipping 1982-83 153

PENSION—

Question *re* Family—to wives of Teachers of Aided Schools who retired prior to 1st April 1964 as per G.O. Ms. No. 748, Finance (Pay Commission), dated 26th May 1979, payment of .. 370—371

Demand No. 42—Policy Note on—and other Retirement Benefits, laid on the table .. 837

POLICY NOTE ON—

Community Development and Municipal Administration, discussion on .. .. .. 597—692

Community Development and Municipal Administration, laid on the table 153

Industrial Policy and Programmes, discussion on .. 29—152

Labour in Tamil Nadu, discussion on .. .. 376—482

Miscellaneous Relief and Rehabilitation of Indians Overseas and Refugees and Evacuees laid on the table 837

Motor Vehicles Acts,—Administration 1982-83, laid on the table 483

Road Transport Services and Shipping and Capital Outlay on Road Transport Services and Shipping, 1982-83, laid on the table 153

PORT DEPARTMENT—

Performance Budget on Tamil Nadu,—1982-83, laid on the table 153

Pages.

P—*cont.*

PRIVILEGE ISSUE *re*—

Statement of Minister for Health *re* selection to M.S. (Ortho.) Course during discussion on Governor's Address .. .. 22—25

PRIVILEGES COMMITTEE—

See Committees.

PROVIDENT FUND—

Question *re* Accounts of teachers in 'B' Wing Schools in Tirunelveli District, non-credit of contributions till 15th June 1980 736

PUBLIC ACCOUNTS COMMITTEE—

See Committees.

PUBLIC WORKS, SANITATION AND WATER-SUPPLY—

Demand No. 55—Capital outlay on—, 1982-83, Supplement to, laid on the table 697

Q

QUESTIONS AND ANSWERS—

Answers to Unstarred Question Numbers 5 to 8 laid on the table 960

JANARTHANAM, DR. T. R.—

Question *re* Urban Wakf Board Properties Development Scheme, grant of loans under—and number of Wakfs benefited .. .. 741—742

LAKSHMIKANDHAN, THIRU C. R.—

Question *re*—

Assistant Educational Officers, number of—as on 1st December 1981 and Wing-wise breakup figures 872

Bharathiar, production of film about life of .. 849—851

Pages.

Q—*cont.*

QUESTIONS AND ANSWERS—*cont.*

LAKSHMIKANDHAN, Thiru C. R.—*cont.*

Question *re*—*cont.*

Drawing Masters, representation from Tamil Nadu Drawing Masters Association *re* sanction of Graduate Teachers salary to Drawing Masters holding Diploma in Drawing and Selection Grade and Secondary Grade Teachers salary to Drawing Masters holding 'Group Certificate' 365—367

Government School Teachers General Transfer Committee, representation from Tamil Nadu Graduate Teachers Association to include representatives of Teachers Association in 10—16

Headmasters of Higher Secondary Schools, number of—with Post-Graduate qualification and number without Post-Graduate qualification 871

Heavy Transport Vehicles, fitting of speed control equipment in .. .. .. 865—869

Highways Department Engineers with Post-Graduate qualification, representation *re* grant of special pay and preference in promotion 579—581

Highways Department, extension of concessions granted in G.O. Ms. No. 632, Public Works, dated 14th May 1974 to Engineers who acquired higher qualifications prior to 14th May 1974 .. .. 579—581

Homoeopathy, introduction of Degree Course in 863—865

Payment of Rs. 10,000 to Government servants and teachers on their retirement, report of Committee to consider .. .. 725—729

Scout Master, non-payment of Annual Allowance to. 368—370

Special Grade to teachers, award of—on completion of 20 years of service from date of joining service .. .. 6—8

Sub-Divisional Engineer's Office, opening of—at Panruti, South Arcot District .. .. 856—857

Pages.

Q—*cont.*

QUESTIONS AND ANSWERS—*cont.*

LAKSHMIKANDHAN, Thiru C. R.—*cont.*

Question *re*—*cont.*

Sub-Divisional Engineer's Office, opening of—at Ulundurpettai, South Arcot District .. .. 857—858

Sub-Divisional Engineer's Offices, opening of—in all Taluk Headquarters 856

Tamil Language, evolving a simple method to learn—for benefit of people of other States and foreigners .. .. 731—735

Temporary Staff working in private High Schools, non-grant of leave concessions to .. 9—10

Thanthai Periyar, construction of Auditorium at Madras in memory of .. .. 851—854

Leelavathi, Selvi A.—

Question *re*—

Government School Teachers General Transfer Committee, representation from Tamil Nadu Graduate Teachers Association to include representatives of Teachers Association in .. .. 10—16

Graduate teachers in Madras Corporation Schools, non-publication of results of Interview held on 11th March 1980 to fill up vacancies of posts of. 855

Medical Officers working in Leprosy Wing of institutions under control of Director of Medical Education, grant of risk allowance on a par with those working in institutions under control of Director of Public Health and Preventive Medicine .. .. 584—587

Provident Fund Accounts up to 31st March 1981 of teachers and non-teaching staff of Madras Corporation Schools, discrepancies in and non-rendering of annual account-slips for .. .. 582—583

Scout Master, non-payment of Annual Allowance to .. .. 368—370

Special Grade to teachers, award of—on completion of 20 years of service from date of joining service .. .. 6—8

Pages.

Q—*cont.*

QUESTIONS AND ANSWERS—*cont.*

Meenakshisundaram, Thiru K.—

Question *re*—

Family Pension to wives of Teachers of aided schools who retired prior to 1st April 1964, as per G.O. Ms. No. 748, Finance (Pay Commission), dated 26th May 1979, payment of .. 370—371

Government Higher Secondary School, Poolambadi, Tiruchirappalli district, students' strike in November 1979 demanding permanent building and drinking water facilities .. .. .. 729—730

Special Grade to teachers, award of—on completion of 20 years of service from date of joining service .. .. 6—8

Teachers in High Schools taken over by Government from aided managements, non-regularisation of services of .. .. 739—741

Thalaignayiru, Thanjavur district, bifurcation as sub-taluk 6

Muthuswamy, Thiru S.—

Question *re*—

Deputy Inspectors of Schools, number of incumbents continuing in same station for more than 3 years as on 1st July 1981 872

Panchayat Union Teachers, transfer of control from Panchayat Union Councils to Director of School Education .. .. 16—19

Special Grade to teachers, award of—on completion of 20 years of service from date of joining service .. .. 6—8

Teachers Service Council, convening of meeting of —and presiding over by Chief Educational Officer, Coimbatore .. .. .. 19—21

Pages.

Q—*cont.*

QUESTIONS AND ANSWERS—*cont.*

Ramamoorthy, Thiru K.—

Question *re*—

Bonded Labourers assigned lands for cultivation, number of—and number of—engaged in direct cultivation .. .. 872—873

Cement permits, number of applications pending before Tahsildar, Tindivanam, as on 1st March 1981 .. .. 742—744

Road Accidents, number of buses of Transport Corporations involved in—from 1977 and standing of drivers thereof .. .. 869—871

Sankaralingam, Thiru M.—

Question *re*—

Name Boards of Roads in Madras, agitation to erase by tar, the caste names in—during April 1979 and number of persons arrested .. .. 1—4

Panchayat Union dispensaries functioning without Medical Officer for more than a year, number of—district-wise .. .. .. 587—591

Provident Fund Accounts of teachers in 'B' Wing Schools in Tirunelveli district, non-credit of contributions till 15th June 1980 736

Riot at Palacode, Dharmapuri District during August 1979, ex-gratia payment to victims of —and other details .. .. 363—364

Tamil Pandits, Grade II having put in 10 years of service but not possessing General Educational qualifications, non-promotion of—as Tamil Pandits, Grade I, as per G.O. Ms. No. 63, Education, dated 17th January 1974, in Tirunelveli district 367

Women burnt alive in Thatharpatti village, in Salem district during September 1980, steps to prevent such atrocities .. .. 364—365

Pages.

Q—*cont.*

QUESTIONS AND ANSWERS—*cont.*

Santosham, Thiru D.—

Question *re*—

Harijans, Keelacheluvavoor in Mudhukulathur taluk, Ramanathapuram district, attack on—by Caste Hindus and other incidents in connection with it .. .. 4—6

M.B.B.S. Course, delay in publishing list of candidates selected .. .. 858—863

Thomas, Thiru P. R.—

Question *re*—

Higher Secondary Schools, provision of tutorial periods in .. .. 736—739

Tamil Pandits in Backward Classes Department, number threatened with demotion as Secondary Grade Assistants .. .. 723—725

Teachers appointed under Apprentice Teachers Scheme, non-payment of vacation salaries to —during their period of service as Apprentice Teachers .. .. 371—372

Teachers in High Schools taken over by Government from aided managements, non-regularisation of services of .. .. 739—741

Venkatesan, Thiru E. S.—

Question *re*—

Superintending Engineers in Highways Department, non-filling up of vacancies of 584

R

RAGHAVANANDAM, The Hon. Thiru S.—

Question *re*—

Arasan Cotton Mills, Tuticorin, statement *re* relay fast by workers of—protesting against their non-registration 29

Bill—Appropriation (No. 2) Bill, 1982 .. .. .. 783, 784, 785, 786, 800, 809

Pages.

R—*cont.*

RAGHAVANANDAM, The Hon. Thiru S.—*cont.*

Policy Note on—

Community Development and Municipal Administration, discussion on 641, 687

Industrial Policy and Programmes, discussion on .. 82, 126

Labour in Tamil Nadu, discussion on .. .. 456—482

RAJA MOHAMED, The Hon. Thiru K.—

Committee on Subordinate Legislation of the Assembly, nomination of Council Members to serve on .. 753

Estimates Committee of the Assembly, nomination of Council Members to serve on 753

Policy Note on Community Development and Municipal Administration, discussion on .. .. 619, 634, 662, 663, 680—681, 682, 684—685, 688

Public Accounts Committee of the Assembly, nomination of Council Members to serve on. 752

Public Undertakings Committee of the Assembly, nomination of Council Members to serve on. .. 754

RAMALINGAM, Thiru C.—

Bills—Appropriation (No.2) Bill, 1982 807

RAMAMOORTHY, Thiru K.—

Bill—

Agricultural Pests and Diseases (Amendment) Bill, 1982 .. .. .. 906—908, 917—922, 924—926, 927, 928

Appropriation (No. 2) Bill, 1982 .. .. 786—794, 827

Pages.

R—cont.

RAMAMOORTHY, Thiru K.—cont.

Bill—cont.

General Sales Tax (Second Amendment) Bill, 1982 .. 878, 879—880, 885—886, 892—895, 901, 902—903

Urban Land (Ceiling and Regulation) Amendment Bill, 1982 .. .. 929—930, 931, 932, 936, 943, 944—950, 953, 957—958

Policy Note on—

Community Development and Municipal Administration, discussion on .. .. .. 619, 638, 639, 649—672

Labour in Tamil Nadu, discussion on .. .. 424—429, 430—437, 438, 461, 469

Stanely Hospital, Madras, calling Minister's attention to hardship caused to patients owing to non-availability of X-ray film in—for over three months 595, 596, 597

REHABILITATION DEPARTMENT—

Performance Budget, 1982-1983, laid on the table 837

REHABILITATION OF INDIANS OVERSEAS—

Policy Note on Miscellaneous Relief—and Refugees and Evacuees, laid on the table 837

RESOLUTION *re*—

Tiruthani Town Panchayat in Tiruthani Panchayat Union in Chengalpattu disetrict, declaration of area covered by—as Township 877

Pages.

R—cont.

RIOT—

Question *re* ex-gratia payment to victims of—at Palacode, Dharmapuri district during August 1979 and other details .. .. 363—364

ROAD(S)—

Question *re* agitation to 'erase' by tar the caste names in name-boards of—in Madras during April 1979 and number of persons arrested .. .. 1—4

RULES COMMITTEE—

See Committees

RULINGS AND OBSERVATIONS OF THE CHAIR

Privilege issue *re*

Alleged misleading statement of the Minister for Health in regard to admission to M.S. (Ortho) Course—Ruled that no *Prima facie* case of breach of privilege had been made out as no misleading statement had been made by the Minister .. .. 22—26

S

SANKARALINGAM, Thiru M.—

Bills—

Agricultural Pests and Disease (Amendment) Bill, 1982 .. .. 910—914

General Sales Tax (Second Amendment) Bill, 1982 .. .. 895—896, 904

Urban Land (Ceiling and Regulation) Amendment Bill, 1982 .. .. .. 949—952

Policy Note on—

Industrial Policy and Programmes, discussion on 79—106, 124—126, 130, 145, 147, 148, 151.

Labour in Tamil Nadu, discussion on 430

Pages.

S—cont.

SCHOOL(S)—

Question re—

Government Higher Secondary School, Poolanbadi, Tiruchirappalli district, students' strike in November 1979 demanding permanent building and drinking water facilities .. .. 729—730

Graduate Teachers in Madras Corporation Schools, non-publication of results of interview held on 11th March 1980 to till up vacancies of. 855

Higher Secondary—, provision of tutorial periods in 736—739

Teachers in High—taken over by Government from aided managements, non-regularisation of 739—741

Temporary staff working in Private High—, non-grant of leave concessions .. .. 9—10

Thanmul Sowcar Jain High School, Thiruvannamalai, Minister's attention called to non-sanction of post of teachers to .. .. .. 26—28

SCOUT MASTERS—

See Teachers

SEETHAPATHY, THIRU R. D.—

Bill—Appropriation (No.2) Bill, 1982 809

Policy Note on—

Community Development and Municipal Administration, discussion on 647, 662

Industrial Policy and Programmes, discussion on 61—62, 131

Labour in Tamil Nadu, discussion on .. 429, 437—456

SHIPPING—

Note on Review of Performance of Transport and—Corporations, 1982-83, laid on the table .. 153

Policy Note on Road Transport Services and—and Capital Outlay on Road Transport Services and—1982-83, laid on the table 153

pages

S—cont.

SMALL SAVINGS—

Alleged Compulsion and coercive attitude adopted by Government Departments in collection of—from merchants and traders in Thiruchirappalli district, Minister's attention called to .. .. 373—378

SOMASUNDARAM, The Hon. Thiru S.D.—

Bills—

General Sales Tax (Second Amendment) Bill, 1982 .. .. 879, 880—882, 883—884, 885, 897—902, 903, 905

Urban Land (Ceiling and Regulation) Amendment Bill, 1982 .. .. 928—929, 930, 931—934, 947, 952—957, 958

STANLEY HOSPITAL, MADRAS—

See Hospitals and dispensaries

SUB—DIVISIONAL ENGINEERS—

Question re—

Opening of office of—at Panrutti, South Arcot district .. .. 856—857

Opening of office of—at Ulundurpettai, South Arcot district .. .. 857—858

Opening of office of—in all Taluk Headquarters 856

SWAMINATHAN, Thiru G.—

Bill—Appropriation (No.2) Bill, 1982 761

Policy Note on Community Development and Municipal administration, discussion on 611

T

TAMIL LANGUAGE—

Question re evolving a simple method to learn—for benefit of people of others States and foreigners 731—735

pages

T—*cont.*

TAMIL NADU INDUSTRIAL DEVELOPMENT CORPORATION LIMITED.

Annual Report and Accounts of Cements Corporation Limited for 1980-81, laid on the table .. 959

TAMIL NADU KHADI AND VILLAGE INDUSTRIES BOARD—

Annual Accounts of—for 1971-72, laid on the table 483

TAMIL NADU MEAT CORPORATION LIMITED—

Progress Review Report—of—for 1981-82, laid on the table 697

TAMIL NADU POULTRY DEVELOPMENT CORPORATION LIMITED—

"Activities of—", 1981-82, corrections to Tamil Copies of, laid on the table 697

"Activities of—", 1982-83, laid on the table .. 697

Sixth Annual Report for 1978-79, laid on the table 697

TAMIL PANDITS—

See Teachers

TAARA CHERIAN, Tmt.—

Policy Note on Industrial Policy and Programmes, discussion on .. .. 31—37, 84, 127

TAX ON LUXURIES IN HOTELS AND LODGING HOUSES RULES, 1981—

Amendment to—, notification laid on the table .. 959

TEACHERS

Question *re*—

Award of Special Grade to—on completion of 20 years of service from date of joining service .. 6—8

Drawing Masters, representation from Tamil Nadu Drawing Masters Association *re* sanction of Graduate Teachers salary to Drawing Masters holding Disploma in Drawing and Selection Grade and Secondary Grade Teachers salary to Drawing Masters holding Group Certificate .. .. 365—367

pages

T—*cont.*

TEACHERS—*cont.*

Question *re*—*cont.*

Family Pension, Payment to wives of—of Aided Schools who retired prior to 1st April 1964, as per G.O. Ms. No. 748, Finance (Pay Commission) dated 26th May 1979 .. .. .. 370—371

Government School Teachers General Transfer Committee, representation from Tamil Nadu Graduate Teachers Association to include representatives of Teachers Association in .. .. .. 10—16

Headmasters of Higher Secondary Schools, number of—with Post-Graduate qualification and number without Post-Graduate qualification 871

Non-payment of vacation salaries to—appointed under Apprentice Teachers Scheme during their period of service as Apprentice Teachers .. 371—372

Non-regularisation of services of—in High Schools taken over by Government from aided managements .. .. 739—741

Panchayat Union—, transfer of control from Panchayat Union Councils to Director of School Education .. .. 16—19

Payment of Rs. 10,000 to Government servants and—, on their retirement, report of Committee to consider .. .. 725—729

Provident Fund Accounts of—in 'B' Wing Schools in Tirunelveli district, non-credit of contributions till 15th June, 1980 736

Provident Fund accounts up to 31st March 1981 of—and non-teaching staff of Madras Corporation Schools, discrepancies in and non-rendering of annual account-slips for .. .. 582—583

Scout Masters, non-payment of Annual Allowance to .. .. 368—370

Pages.

T—*cont*

TEACHERS—*cont.*

Question *re*—*cont.*

Tamil Pandits, Grade II, having put in ten years of service but not possessing General Educational Qualifications, non-promotion of—as Tamil Pandits, Grade I, as per G.O. Ms. No. 63, Education, dated 17th January 1982, in Tirunelveli district 367

Tamil Pandits in Backward Classes Department, number threatened with demotion as Secondary Grade Assistants .. .. 723—725

TEACHERS SERVICE COUNCIL—

Question *re* convening of meeting of—and presiding over by Chief Educational Officer, Coimbatore .. 19—21

THALAIGNAYIRU—

Question *re* bifurcation of—Thanjavur district as Sub-Taluk 6

THANTHAI PERIYAR—

Question *re* construction of Auditorium at Madras in memory of .. .. 851—854

THIRUNAVUKKARASU, The Hon. Thiru S.—

Policy Note on Industrial Policy and Programmes, discussion on .. .. 29, 30, 97, 126—152

THOMAS, Thiru P. R.—

Bills—Appropriation (No. 2) Bill, 1982 761

Midday Meals, calling Minister's attention to stoppage of supply of—to children of Panchayat Union School, Sanarpatti and non-payment of subsidy for—to aided schools in Aruppukottai Municipal area .. .. 748—749

PAGES

T—*cont.*

TEACHERS—*cont.*

TOWN AND COUNTRY PLANNING ACT, 1971—

Approval of Detailed Development Plan for Karaneeswarapuram, notification laid on the table 152

Approval of Detailed Development Plan for Mylapore Santhome Area—Map No. 4, notification laid on the table 152

Approval of Detailed Development Plan for Nandanam area, notification laid on the table .. 152

TOWNSHIP—

Resolution *re*—, declaration of area covered by Tiruthani Town Panchayat in Tiruthani Panchayat Union in Chengalpattu district as 877

TRANSPORT—

Note on Review of Performance of—and Shipping Corporations, 1982-83, laid on the table 153

Policy Note on Road—Services and Shipping and Capital Outlay on Road—Services and Shipping, 1982, laid on the table 153

U

URBAN LAND (CEILING AND REGULATION) AMENDMENT BILL, 1982—

See Bill(s)

URBAN WAKF BOARD PROPERTIES DEVELOPMENT SCHEME—

Question *re* Grant of loans under—, number of Wakfs benefited .. .. 741—742

V

VEERASAMI, Thiru Arcot N.—

Bills—

Appropriation (No. 2) Bill, 1982 .. .. .. 794—810, 815, 820—821

pages.

V—*cont.*

VEERASAMI, Thiru Arcot N.—*cont.*

Bill —*cont.*

General Sales Tax (Second Amendment) Bill, 1982 .. 882, 884, 886

Policy Note on—

Community Development and Municipal Administration, discussion on .. .. .. 633—634, 635, 645, 676, 679, 680, 682, 686, 688

Industrial Policy and Programmes, discussion on .. 82, 98, 99, 100 102, 103, 111, 112, 130, 143, 145, 147, 148, 149

Labour in Tamil Nadu, discussion .. .. 459—462, 472, 477, 480, 481

VICE-CHAIRMAN (Thiru C. R. LAKSHMIKANDHAN)—

Policy Note on Community Development and Municipal Administration, discussion on 655, 662

VICE-CHAIRMAN (Thiru C. RAMALINGAM)—

Policy Note on Community Development and Municipal Administration, discussion on 617

VIJAYASARATHI, The Hon. Thiru M.—

Adi Dravidar, statement *re* attack on—, in Konalam village, North Arcot district over the issue of burial of corpse of Adi Dravidar woman 750, 751, 752